REGISTERED
7 - APR 1903
MADRAS.

உ

குமரன் துணை.

விவேகபாநு

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

சம்புடம் 2 } 1902௵ டிசம்பர்௴ { இலக்கம் 1

விக்கியாபனம்.

இப்பாரத கண்டத்தின்கண் மாட்சிமை பெற்று விளங்கும் பாண்டி நாட்டில் மாத்திர மல்லாது இப்பூவுலக முழுவதுமே தனது பிரகாசம் பொருந்திய கிரணங்களை வீசி ஆங்காங்குள்ள மனிதர்களின் அகவிருளைப் போக்கி அவரை ஆத்மார்த்த கதியில் நடாத்திவந்த நமது "பாநு" வானது தற்பொழுது ஏறக்குறைய ஒருவருட காலமாய்த் தனது கிரணங்களைச் சுருக்கி நிலை நின்று விட்டதாய்த் தோன்றுவதை நமது நேயர்கள் யாவரும் கண்டு "ஹா! ஹா! இஃதென்ன ஆச்சர்யம்! பூத சூரியனை யொத்து ஞான சூரியனும் இருளால் மூடப்படுதலுண்டோ !" என ஐயமும் வியப்பும் அடைந்திருக்கலாம். நேயர்காள்! சற்றுக் கவனியுங்கள். பூத சூரியனும் ஒரு போதும் இருளால் மூடப்படுதலின்று. நாமே நம்மைப் பராமுக மாக்கிக் கொண்டாற்போல நமது பூகோளம் பராமுக மாக்கிக் கொள்வதா லென்க. அங்ஙனமே நமது 'பாநு' வின் நேயர்களும் பொருளுதவியைப் பின்வலித்தல் என்னும் பராமுகம் அடைந்தமையினாலே அதன் ஒளியைப் பெறா தமைந்தனரே யன்றி மற்றெதனாலும் அதன் ஒளி மறைபட்ட தன்றென் றறிக. இவ்வுலகத்தின்கண் எதுவும் நிலைபெற்ற தன்றாகலின் அவாதத்தகைய நிலையும் நி

லைபெற்றதன்றாகிப் "பொருளுதவுதல்" என்னும் நேர்முகமாகிப் "பாநு" வின் ஒளிவீக்கத்தால் தமது இருதய கமலங்கள் விகசிக்க விரும்புவாராயினர். அவாது விருப்பத்தையும் அதனை நிறைவேற்றுவதால் பொது ஜனங்கள் அடையும் பயனையும் கருதி எமது நண்பர் எம். ஆர். கந்தசாமிக்கவிராயர் என்பார் "பாநு" வின் பணியைத் தலைமேற்கொண்டனராதலின் இது முதல் திருவாலவாயினின்றும் எழா நின்ற இப்பத்திரிகைக்கு அவரே தலைவரென நமது நேயர்கள் யாவரும் அறிவாராக. அவர் கல்வி கேள்விகளிலும் பற்பலமத ஆராய்ச்சியிலும் வல்லவராதலின் இப்பத்திரிகை முன் எம்மால் நடத்தப்பட்டு வந்ததைப் பார்க்கிலும் அதிக மேம்பாடுடைத்தாய் விளங்குமென்பதி லையமின்று. அங்ஙனமே விளங்குவான் சர்வதயாநிதியாகிய எம்பெருமானும் அருள்புரிவாராக.

இதுமுதல் வெளிவரும் சஞ்சிகைகளில் முன்னையதினும் 8 பக்கங்கள் கூடியிருத்தலானும், ரூபா 1 வருஷ சந்தாக் கொண்டு பத்திரிகை நடாத்துதல் அசாத்தியமென அநுபவத்திற் கண்டிருத்தலானும், தற்பொழுது வருஷ சந்தா ரூபா 2 ஆக விதித்தது விகிதமேயென நமது நண்பர் யாவரும் கைக்கொள்வாரென நம்புகின்றோம்.

வள்ளிநாயகம்.

VL
No 1, 2-3

அறிவிப்பு.

செந்தமிழபிமானிகளாகிய கனதனவான்களே !

இவ்விவேகபாநு என்ற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையானது தூத்துக்குடி ஸ்ரீமத் வள்ளிநாயக சுவாமிகளால் 1900௵ செப்டம்பர்௴ தொடங்கி ஒரு வருஷகாலம் மிகவுஞ் சிறப்புடன் நடாத்தப்பெற்றதும், தற்காலத்தில் தன்னிகரில்லாத் தலைமைப் புலமைவாய்ந்த ஸ்ரீமாந் உ. வே. சாமிநாதையரவர்கள் முதலான பண்டித சிகாமணிகளால் கொண்டாடப் பெற்றதும் யாவருமறிந்த விஷயமே,

இங்ஙனஞ் சிறந்து நிகழ்ந்த இதனை இத்தமிழ் நாட்டின் தவக்குறைவால் சிற்சில அசௌகரியங்களைக் கருதி ஸ்ரீமத் வள்ளிநாயக சுவாமிகள் சிலகாலம் நிறுத்தி வேறுயாரேனும் நடத்துவராயின் இதனது முழுச்சுதந்தரங்களையுங் கொடுத்துத் தாமுமியன்றவரை யுதவிபுரிவதாக என்பாலும் எனது நண்பர்கள் பாலுந்தெரிவித்தார்கள்.

இதனை மீண்டும் நடத்தவேண்டுமென்ற பெருவிருப்பத்தால் இதன் சுதந்தரங்களைப் பெற்றுக்கொண்டு சரிவர நடத்திவருவதாக மேற்படி சுவாமிகளிடம் நான் தெரிவித்தேன்.

சுவாமிகள் அகமகிழ்ந்து ஆசிகூறி 'விவேகபாநு' வின் சகல சுதந்தரங்களையும் எனக்குக் கொடுத்தருளினார்கள்.

இவ்விஷயத்தை மேற்படி சுவாமிகள் இப்பத்திரிகையின்கண் வெளிப்படுத்தியிருக்கும் 'விக்கியாபனத்' தால் நன்கு தெரியலாம்.

இங்ஙனமாக இதன் பொறுப்பை யான்வகித்துக்கொண்டு எனக்குத் துணையாய் நின்று வேண்டுமுதவிபுரிந்து வருமாறு சேதுபதி ஐஸ்கூல் போதகரும் தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்தியையே இடையறாது கருதி ஊக்கத்துடன் உழைத்துவருபவரும் ஆத்திசூடி விருத்தியுரை யெழுதியவரும் ஆகிய ஸ்ரீமாந் எஸ். சாமிநாதையரவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்களும் அன்புகூர்ந்து சம்மதிக்கவே யானும் அவர்களும் ஆகிய இருவருமே பத்திராதிபராகவிருந்து இம் மதுரைமாநகரத்தையே நிலைக்களமாக்கி நாளிது டிசம்பர்௴ முதல் பத்திரிகை வெளியிடலாகும்.

பத்திரிகாபிமானிகளே !

பத்திரிகை நடத்தலென்றால் எளிதன்றே. கல்விமான்களிற் பல்லோர் தமதியற்கை வள்ளன்மைக் குணத்தால் இலவசமாகவே விஷயதானஞ் செய்து உலகோபகாரிகளாவாரேனும் சிற்சிலர் விஷய அருமையும், காலச் செலவும், சிரமமு

நோக்கிச் சிறிதளவு பொருளுதவி நாடுவாரு முளரன்றோ? அன்னோர்க்குதவுதல், காகிதக்கிரயம், அச்சுக்கூலி, தபால்கூலி முதலிய பலவழியாக மாதந்தோறும் நூற்றுக்கணக்காக ரூபா செலவிட்டாலன்றிப் பத்திரிகை வெளியாவதில்லை யென்பதை யறியாதார் யாவர்? இங்ஙனம் நேரும் பொருட்செலவுக் கஞ்சி யிடையிற் கைவிடாதிருப்பது கருதியே இப்பத்திரிகைக்கு வருஷ சந்தா இரண்டு ரூபாயாக நியமனஞ் செய்துள்ளேன். உற்று நோக்கி னிதுவு மிகக் குறைந்த சந்தா வாகவே கருதப்படும்! ஆனால் வருஷம் ஒரு ரூபா சந்தாவில் நிகழ்ந்த பத்திரிகைக்குத் திடீரென்று இரண்டு ரூபா சந்தா ஏற்படுத்தியது சந்தாதாரர்களிற் சிற்சிலர்கட்குச் சுமையாகக் காணப்படலாம். இதன் முன்னர் மாதம் 24 பக்கங்கொண்டு வெளிப்பட்ட இப்பத்திரிகையை இப்போது 32 பக்கங்கொண்டு வெளிவரச் செய்திருப் பதையும், மிகக் குறைந்த சந்தா ஏற்படுத்தியதால் நேர்ந்த பொருள் நஷ்டமே சிலகாலம் பத்திரிகை வெளிப்படாதிருக்க முதற் காரணமாயிற்றென்பதையும் நன்கு கவனித்தால் ஒரு போதும் இஃதோர் சுமையாகக் கருதற்பாற்றன்றாம்.

சென்றவருடத்திய சந்தாத்தொகை செலுத்திப் பத்திரிகை பெற்ற சந்தாதார் அனைவரும் இவ்வருடத்தும் அன்பு பாராட்டிப் பத்திரிகை பெற்று இவ்வருஷ சந்தாத்தொகை ரூபா இரண்டும் அனுப்பி ஆதரிப்பார்களென நம்புகிறேன்.

இதன் பழைய சந்தாதார்கள் நாளிது டிசம்பர் மாதப்பத்திரிகையைப் பெற்று அடுத்த 1903௵ ஜனவரி௴ 10உக்குள் சந்தாத்தொகையை மணியாடர் மூலமாவது நேரிலாவது செலுத்தல் வேண்டும்.

அங்ஙனம் செலுத்தாதவர்கட்கு ஜனவரி௴ பத்திரிகை வி. பி. போஸ்டு மூலமாகவே யனுப்பப்படும்; அப்போதாவது இடர்ப் படுத்தாது பணஞ் செலுத்திப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

எக்காரணத்தாலாவது பத்திரிகை பெறுதற்கு விருப்பமில்லாதவர்கள் டிசம்பர்௴ 30உக்குள் தமதபிப்பிராயத்தைத் தெரிவித்துவிடல் வேண்டும்.

இவ்வண்ணம் தெரிவியாதவர்கள் யாவரும் சந்தாதாராகவே கருதப்படுவார்கள்.

இப்பத்திரிகை என்றும் நன்று நின்று நிலவுதற் பொருட்டுப் பத்து ரூபாய்க்குக் குறையாது தம்மாலியன்ற வரையுதவுங் கனதனவான்கள் 'நன் கொடையாளர்' என்று பாராட்டப்படுவார்கள். அன்னவரது முழுப்பெயரும் அவருதவுந் தொகையும் பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தலாகும்.

இப்போது எனக்கு வேண்டும் பொருளுதவி செய்து, "பாநு" வொளி பரவச் செய்தவரும், எனது நட்பாளரும், 'சிவரகசியம், கம்பராமாயணம் ஆரணியகாண்டவுரை, முதலியவற்றை அச்சிடுதற்குத் தக்கவண்ணம் பொருளுதவி செய்தவரும் ஆகிய சேலம் ஜில்லா மானத்தி காட்டுப்பாளையம் மிட்டா ஜமீன்தார் ம-ள-ள-ஸ்ரீ கே. ராஜாக் கவுண்டரவர்கட்கும், எனது வேண்டுகோளுக்கிணங்கித் தம்மையும் நன்கொடையாளரிற் சேர்த்துக் கொள்ளுமாறு அபிப்பிராயங் கொடுத்த ஏனைய உதாரகுண சீலர்கட்கும் இடையறாது நன்றி பாராட்டக் கடமை பூண்டுள்ளேன்.

இவ்வாறாகவே நம் தமிழ் நாட்டின்கண் வசிக்கும் ஏனைய பிரபுக்களும் தத்தமக்கியன்றவுதவி புரிந்து பாஷாபிமானமும் தேசாபிமானமுங் காட்டிப் புகழ் கொள்ளுவார்களெனச் சிந்தித்து ஸ்ரீ குமரக் கடவுள் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

மதுரை 189, வடக்காவணிமூலவீதி 1902௵ டிசம்பர்௴	இங்ஙனம். எம். ஆர். கந்தசாமிக் கவிராயர். புரோப்ரைட்டர்.

நமது பத்திரிகை.

இவ் விவேகபாநு முதலில் ஒருவருஷம் நடைபெற்றதும் தற்போது நாம் கைக்கொண்டதும் இதன்முன்னுள்ள "விக்யாபனத்தாலும்," அறிக்கையாலும் நண்பர்கள்யாவரும் அறிவார்களன்றோ.

முற்கால தற்கால சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமான அரியவிஷயங்களையும், இலக்கிய இலக்கண சம்பந்தமான பாஷா விஷயங்களையும், முடிபுனைவேந்தர் குறுநிலமன்னர் செந்தமிழ்ப்புலவர் முதலிய புகழ்பெற்ற தக்கார் சரித்திரங்களையும் வியக்கத்தக்க நவீனக்கதைகளையும், சிற்பம் சித்திரம் முதலியவற்றால் உணரப்படும் விஷயங்களையும், இதுகாறும் அச்சுவிமானம்ஏறப்பெறாத பழையபுதியநூல்களிற் சிலவற்றையும், அவ்வப்போது தேசநன்மைக்கடுத்த நற்காரியங்களையும், மற்றும்விவேக விருத்திக்கின்றியமையாத பற்பலவிஷயங்களையும் கற்றோரேயன்றிமற்றோரும் எளிதிற் பொருளுணர்ந்துகொள்ளும் வண்ணம் செவிக்கின்பம்பயக்கும் செந்தமிழ்நடையில் ஆங்காங்குள்ள புலவர் பெருமான்களால் எழுதுவித்து உலகங்கொண்டுவக்குமாறு ஒருதமிழ்ப்பத்திரிகை இத்தென்னாடாகிய நற்றமிழ்த்தேயத்துத் தோன்றப்பெறாதிருக்குமோர் பெருங்குறையைத் தவிர்ப்பது வேண்டுமென்னும் விருப்பம் எம்முள்ளத்துள் நெடுநாளாகத் தோன்றிவளர்தலுற்றது.

புதிதாகத்தோன்றுவித்தலினும் பழையவற்றைப்புதுக்குதல் பெரும்பேறுதருமென்ற முதியோர் கருத்தைக்கடைப்பிடித்து ஸ்ரீ குமாரக்கடவுள் திருவருளைச் சிந்தித்து 'பாநு' வைநடாத்தும் இப்பெரும்பொறுப்பை வகித்து முன்வந்தேம். பத்திரிகையினியல்பும், பத்திராதிபரியல்பும் பத்திரிகாபிமானிகளியல்பும் இதனடுத்துள்ள "பத்திரிகையியல்பு" எனப்பெயரிட்டுப் பதிப்பித்திருக்கும் அதனால் நண்பர்கள் யாவரும் எளிதிலுணரலாம்.

ஓஹோ! இஃதென்ன! பத்திரிகையாவது? யாமாவது? நடத்தவாவது? என்று எமக்கே நகைதருமாயினும் நாணநோக்க ஆசையேவென்றமையாலும், முறையே விஷயதானஞ்செய்து வருவதாக வாக்களித்த கல்விமான்களின் நட்புப்பேற்றாலும் கிளம்பிய மனோத்ஸாக வழிப்பட்டு எடுத்தகருமமுடிக்கத்தொடங்கினோம்.

இதுமுதல் இத்திருவாலவாய்த்திருநகரின் கண்ணின்று மாதமொருமுறை 4 பாரம் 32 பக்கங்கொண்ட புத்தகரூபமாகவே இப்பத்திரிகைவெளிப்படும.

சென்றவருடத்தில் விஷயதானஞ்செய்துவந்த உபகாரசீலர்கள் யாவரும் முன்போலவே இனிமேலும் தத்தமது நுண்மதிமாட்சியாற்போதரும் பலனையுலகமறிந்து நலம்பெறும்வண்ணம் விஷயதானஞ் செய்துவருமாறு வேண்டுகின்றனம்.

இங்ஙனம்.

பத்திராதிபர் { எஸ். சாமிநாதையர்
எம். ஆர். கந்தசாமிக் கவிராயர்.

பத்திரிகையியல்பு.

இந்திரன் முதலிய இறையவர்பதங்களும் அந்தமிலின்பத்தழிவில்வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுத்துக்கொள்ளப்பட்ட அறம்பொருளின்பம்வீடென்னும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் பரம்பரையானே பாலிக்கவல்ல முக்கியசாதனமாயுள்ளது கல்வியே. அஃதாவது கற்றற்குரியநூல்களைக் கற்றலாம். அந்நூல்கள் பலதிறப்படினும் எண்ணுமெழுத்துமாகிய இரண்டனுளடங்கும். அவற்றுள் எண்ணென்பது காட்சிமுதலிய பிரமாணங்களால் அர்த்தநிச்சயஞ்செய்யும் தருக்கநூலும், எழுத்தென்பது வழுக்களைக்களைந்து பதநிச்சயஞ்செய்யும் இலக்கணநூலுமாம். இவற்றை "காண்டலனு மானங் கதையருத்தா பத்தியிலை, யீண்டிசைத்த வெண்

ணனவே யெண்" என்றும் "வழுப்பதத்தை வாக்கினுக்கு மாற்றிவா மாக்கு, மெழுத்தெழுவா யைந்து மெழுத்து" என்றும் விளக்கிய பரமத திமிரபாநுத் திருக்குறள்களானுணர்க.

பதநிச்சயமும், அர்த்தநிச்சயமுஞ்செய்யும் ஆற்றலில்லாவழி முதனூற்பொருள்களையுணர்ந்து வீடுபேறெய்தல் கூடாதாகலின் அவ்விருநூல்களும் மாந்தர்க்கு இருகண்போல்வனவாம். அவ்வகைய கருவிநூல்களைக் கல்லாதார் மேற்கூறிய முதனூற்பொருள்களை ஆராயத்துணியின் அது அந்தகன் கோலாற்றடவி நடக்கமுயன்ற வழிக் குழிமுதலியவற்றின்வீழ்ந்து வருந்துவதுமன்றித் தானடையவிரும்பிய தானத்தையும் அடையாவாறுபோலப் பொய்ப்பொருள்களையுணர்ந்து நிரையமுதலியவற்றின்வீழ்ந்து வருந்துவதுமன்றித் தாமுணரவிரும்பிய தத்துவார்த்தத்தையும் உணரமாட்டார். இவற்றை "எண்ணுமெழுத் துங்கண் ணிலையாய்ந்திந் நூற்பயனைக், கண்ணுககாண் பார்நற் கதி" என்றும் "இல்லான்கண் கோலால் வழியியங்கல் போலுமே, கல்லானூ லாயுங் கருத்து." என்றும் அந்நூலாசிரியரே மேலும் விளக்கியிருத்தலானுணர்க.

இத்திறங்குறித்தே "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்று தமிழ்வேதத்திலருளிச்செய்த தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் மேலும், ஒற்றர்கள் அரசர்களுடைய கண்கள் செல்லமாட்டாத இடங்களெங்குஞ்சென்று ஆங்காங்கு நிகழும் நல்லனவுந் தீயனவுமாகிய சொற்களையுஞ் செயல்களையும் கண்டு உணர்த்துதலானும், நீதிநூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாம் சொல்லியுணர்த்துதலானும் இவ்விரண்டனையும் அரசன் தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டு ஒழுகவேண்டுமென்பார், "ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந், தெற்றென்க மன்னவன் கண்." என்று விதந்திருக்கின்றனர். ஆகலின், இவையும் கண்களெனவே கொள்ளற்பாலனவாம்.

அரசர் தந்நாடுசெலுத்துங்காலும் பிறர்நாடுகொள்ளுங்காலும் அவ்வவ்வழி நிகழ்வன அறிந்துகோடற்பொருட்டு ஒற்றரையாளுதல் இன்றியமையாததாக வேண்டப்படுதலின் அதுபற்றி அரசர்க்குக் கண்ணென்றுகூறினும் உறுதிபயத்தற் சிறப்புடைமையின்

ஏனையோர்க்கும் ஒற்றரையாளுதல் வேண்டற்பாலதென்பதே அந்நாயனார்கருத்தெனக்கொள்க. இதனை யாவர்க்கும் வேண்டிய கல்வி கேள்வி அறிவுடைமையாதியவற்றையும் சிறப்புப்பற்றி அரசியலுள்வைத்து ஏனையவரும் தழீஇக்கொள்ளப் பொதுப்படக்கூறுமாற்றானும் தெளிக.

ஒற்றராவார் பகைவர் நொதுமலர் நட்பினரென்னும் மூவகையோரிடத்தும் நிகழ்ந்தனவற்றை அறிந்துவந்துரைக்க வல்லவர். அவர் பிறர் ஐயுறாதபடி அந்தணர் வணிகர் முற்றத்துறந்தார் விரதவொழுக்கினரென்னும் இவர்போன்ற உருவுஞ்செயலுமுடையராய்ச் சென்றாலல்லது உண்மையறியலாகாமையின் அங்ஙனம் மாறிச்சென்று ஆராயுங்கால் பிறரையுற்றுச் சினந்து சாம பேத தான தண்டமென்னும் நால்வகையுபாயமுஞ்செய்து கேட்பினும் தம்மை இன்னவரென வெளிப்படுத்தா திருக்கவேண்டுதலின் அத்தகைய வன்மையுடையரைப் பெறுதல் அரிதாகலானும் பெறினும் அவர் அரிது ஆய்ந்துவந்த இரகசியத்தை ஐயப்பாடின்றியுரைத்தாலல்லது அது பயன்படாமையானும் ஐயப்பாடின்றியுரைப்பினும் அத்தொழிலினர் ஒருவரையொருவரறியின் தம்முட்கலந்துகொண்டு மாறுபடாவண்ணம் ஒப்பக்கூறுவாராகலின் ஒருவரையொருவர் இவரின்னதொழிலினரென் றறியாதபடி ஆளவேண்டுமாகலானும் அவ்வாறாளுங்காலும் ஒருவிஷயத்தைநாடி வேறுவேறு விடப்பட்டவருள் மூவர்சொற்கள் படவொத்தாலன்றித் தெளியக்கூடாமையானும் ஒத்துத்தெளிந்தவழியும் அவ்வாறு தெளிவித்தவொற்றர்க்குச் செய்யுஞ்சிறப்பினைப் பிறரறியச்செய்யின் சிறப்புப் பெற்றவன் யாவனென்றும் இதுபெறுதற்குக்காரணம் யாதென்றும் ஐயுறவேர்ந்து மறைவெளியாமாகலின் பிறரறியாவாறு செய்யவேண்டியிருத்தலானும் இச்செயல் இக்காலத்தில் மிகவும் அசாத்தியமே.

இதுதேர்ந்தே தற்கால இராசாங்கத்தாராகிய ஐரோப்பியர் அமெரிக்கர்முதலியோர் அவ்வொற்றரையாளுதலினும் பத்திரிகையாளுதலையே சிறந்தசாதனமாகக்கொண்டு செல்வப்பெருக்கமுதலியனவெய்திப் பெருநிலவேந்தராய் இவ்வுலகையாண்டுவருகின்றனர். இவ்விராஜாங்கத்தார் யாண்டும் பத்திரிகைகளை அபிவிருத்திசெய்தலில் ஊக்கமுடையவராய்ப் பத்திராதிபர்கட்கு வேண்டும் உதவிபுரிந்து பாதுகாப்பது, தமது சூழ்ச்சித்துணைவர்களாலும்

சாதித்தற்கரிய பெருங்காரியங்களும் பத்திரிகைகளானே சித்தித்துவருதலானன்றோ? அவ்வவ்வுழி நிகழும் சொற்செயல்களை அறிந்துரைத்தலில் ஒருவாறு பத்திரிகை ஒற்றரையொப்பதெனப்படினும் இது அவரினும் எத்தனையோகோடிமடங்கு ஏற்றமுடையதாகும். எதுபற்றியெனின், ஒற்றரோ உலகவியல்புகள் சிலவற்றையே தேர்ந்துரைக்கவல்லவர்; பத்திரிகையோ நால்வகைப் புருஷார்த்தங்களையும் போதிக்கவல்லது. ஒற்றரோ தம்மைப்பேணுந்தலைவர்க்குமாத்திரம் தாமறிந்தவொன்றை அறிவிக்கவல்லவர்; பத்திரிகையோ தம்மைப்பேணுவாரும் பேணாருமாகிய பலதிறத்தார்கட்கும் கவலின்றித் தம்முட்பொதிந்தயாவும் உணர்த்தவல்லது, ஒற்றரோ சென்றுழிநிகழ்ந்தனமட்டும் உணர்த்தவல்லவர்; பத்திரிகையோ சென்றுழியும் செல்லாவுழியும் நிகழ்ந்தனவும் அவற்றிற்குப் பிரதியாசச்செயற்பாலனவும் அவைமுடியும்வகையும் அவற்றிற்குவருமிடையூறும் அவற்றைநீக்குமாறும் நீக்கிமுடித்தவழி எய்தும்பயனுமாகிய இன்னோரன்னவற்றை உணர்த்தவல்லது. இன்னும் இதன்றிறம் விரிக்கிற்பெருகும்.

அங்ஙனமாக, பத்திரிகைகளினியல்பறியாதார் போற்றாதொழிவது புதுமையன்று. அதனியல்பறிந்துவைத்த கற்றோரும் போற்றாதொழிவது புதுமையே. பெரிதும் அவர் போற்றாமைக்குக்காரணம் பிறவுமுளவேனும் முக்கியகாரணமாகச் சில யூகிக்கப்படுகின்றன. அவை: கல்விகேள்விகளால்நிரம்பிய பத்திரிகாசிரியர் நடத்துவதைநோக்கி நிரம்பாதவரும் அவர்போன்று பத்திரிகைகளை நடத்தத்தொடங்குவதும், கற்றவர்களைத தழுவாமையும் ஒவ்வோர்கோட்பாடுபற்றி நடுவுநிலைமையின்றி அவரையுந்தூஷித்தலும், "போற்றினும் போற்றுவர் பொருள்கொடார்விடிற், றூற்றினுந் தூற்றுவர்" என்பதற்கு ஓரோர்கால் இலக்காதலும் பிறவுமாம். இங்ஙனம் சிலபத்திரிகைகள் வெளியாதல்கொண்டே செவ்வியபத்திரிகைகளையும் புறக்கணிப்பது முறைமையன்று. அப்பத்திரிகாசிரியர் ஊக்கங்குன்றாதபடி இயன்றவுதவி செய்வதே முறைமையாம்.

பரோபகாரிகளாகிய பத்திரிகாசிரியர்க்குக் கற்றோரைத்துணைக்கோடல் தாம்மேற்கொண்ட காரியவிர்த்திக்கு இன்றியமையாததொன்றாம். அவ்வியல்பின்மையானன்றே இகல்கொளாத ஏனைப்பத்திரிகைகள் உலகில்நிலவாநிற்கவும் இகல்கொண்டபத்திரிகைகள் சின்னாளும்நிலவாதொழிவது. பத்திரிகாசிரியர் தொடங்குமுன்னரே

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின், னெண்ணுவ மென்பதிழுக்கு" என்பதை ஓர்ந்து தொடங்குவதேநலம். ஓராதுதொடங்கிப் பின்னர் முட்டுற்றுக் கைவிடுவது தகுதியன்று. நடுவுநிலைமை ஜீவகாருணிய முதலியவற்றோடு இடுக்கணழியாமையும் பத்திரிகாசிரியர்க்கு முக்கிய வுத்தமகுணமாம். யாவருள்ளத்தையும் உவக்கச்செயல் கடவுளர்க்குமுடியாதாகலின் ஒவ்வொருவர்க்கும் உவகைபயக்குமாறு பத்திரிகையில் விடயங்களைவரைவது அசாத்தியமே. அங்ஙனமாயினும் இயன்றயட்டுமேனும் பலரும்பாராட்டுமாறு உபகாரமாதற்குரியவிடயங்களை வரைந்துபோதருவதே சால்பு. அங்ஙனமின்றி வசைமொழிகளும் நிரப்பவெழுதுதலை மேற்கொண்டு தம்பத்திரிகையைப் பத்திராபிமானிகள் பாராட்டவில்லையென்றும் வாங்காது இடையே விடுத்தனரென்றும் குறைகூறுவது குணமாமோ? ஒருவர்க்கொருவர் இகல்பூண்டெழுதுபவைகளைத் தனிப்பத்திரிகைகளில் வெளியிடுவதன்றிப் பொதுப் பத்திரிகைகளுள் வெளியிடுவது மரபன்று. பிறமதாபிமானிகளும் வித்துவான்களும் இகலியெழுதுபவைகள் அளவுகடந்துசேறல்காணின் அவற்றிலுள்ள குணகுற்றங்களை நடுநின்றெடுத்துக்காட்டித் திருத்துதல் பத்திரிகையாளர் கடமையாம். இந்நியமமிருப்பின் உலோபகுணமில்லாத உபகாரசீலர்பலரும் மிகப்பாராட்டிவருவராகலின் அன்னவருதவியே பத்திரிகை நடைபெற்றுவருதற்குப் போதுமானதுணையாகும். ஆகலின் பத்திரிகாசிரியர் இத்திறத்தில் பெரிதுங்கவனம்வைத்து நடத்துவரேல் சாலச் சனோபகாரமாம்.

பத்திரிகாபிமானிகளும் பத்திரிகைவாங்குதல் பெருமைக்கேதுவாகுமென்றெண்ணி வாங்காது அதிற்கூறப்படும் நல்லொழுக்கங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருதலைநாடியே வாங்குவது மாண்பு. அங்ஙனம்வாங்கும் உபகாரகுணசீலர் ஏகதேசத்தில் சிலவழுக்களைக் கண்டதுணையானே பத்திரிகையில் அருவையபிறந்து கைவிடுவது மாண்பன்று. ஏகதேசத்தில் வழுவுதல் எத்தகைய மனிதர்க்கு மியல்பேயாகலின் அத்தகையவழு மேலுங்கலவாதபடி தாமுயன்றும் பிறபத்திரிகாபிமானிகளை முயல்வித்தும் பத்திரிகாசிரியர்க்குத் தெரிவித்துச் செவ்விதினிலவச்செய்வது அறிவாம். இவ்வாறன்றி அவ்வற்பவழுவை மிகப்பெரிதாக எடுத்துக்கூறி ஏனையபிமானிகளையும் விசுவாசமறச்செய்து "தாமுமொரு பயன்படார் பயன்படுவோர்தம்மையும் தம்போற்செய்வார்" என்

னும் ஆன்றோர்வாக்கியத்திற்கு இலக்காதல் அறிவன்று. இதுநிற்க.

நாம் நூதனமாக வொன்றைப்பற்றி அதிற்பிரசித்திபெறவேண்டுமென்பதே பெரிதும் இக்காலத்தவர் விருப்பம். அவ்வாறிருப்பவும், முன்னிலவியதொரு தருமம் சிதையநேரின் "தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு, புரிந்தோர்பெறும் புண்ணிய நான்மடங் குறுவார்." என்பதே நூற்றுணிபாகலின், சிதைந்ததொன்றைத் திகழ்விப்பதே பரமதருமமாகுமென்றுதுணிந்து, கல்வியறிவொழுக்கங்களிற்சிறந்தவராய் நன்மதிப்பெய்தியுள்ள இப்பத்திராதிபர் விவேகபானுவென்னும் இப்பத்திரிகையை வெளியிடத்தொடங்கியது மிகுவிம்மிதமே. இவ்வாறுபுரிவது தக்கோர்தகைமையதன்றே? இது முன்னர்ச் சாத்துக்குடியில் ஸ்ரீமத் வள்ளிநாயகசுவாமிகளால் நடத்தப்பட்டு யாவருக்கும் நற்போதனைசெய்துகொண்டு பிரசித்தம்பெற்றிருந்தது பலரறிந்ததே. அப்படிப்பட்ட இப்பத்திரிகை விவேகபானுவென்னும் பெயர்க்கிணங்கவிளங்கி அவிவேகமென்னும் அந்தகாரத்தையோட்டி அனைவர்க்கும் உயிர்க்குறுதிபயக்கும் அரும்பெரும்பொருள்களைவிளக்கி அவரவர் அகக்கமலமும் முகக்கமலமும் அலரமலர்த்திக்கொண்டு நிலவவும், இப்பத்திரிகாதிபர் ஊக்கங்குன்றாது மேலுமேலும் இதனை அபிவிர்த்திசெய்துகொண்டு நீடூழிவாழவும் ஸ்ரீசிற்சபாநாயகர் திருவருள்புரிவாராக. சுபம்.

S. E. R.

வான்மீகரும் கம்பரும்.

ஸ்ரீராமசரித்திரமானது எச்சமயத்தவரும் விரும்பிக்கொண்டாடும் மேன்மைபொருந்திய சாரமுள்ளது. அச்சரித்திரம் இராமாயணமென வழங்கப்படும். இராமாயணமும் பாரதமும் இதிஹாஸமெனப்படும். இதிஹாஸத்தின் தன்மை யாதெனின்:—

யாவர்க்கும் பொதுப்பிரமாணமான வேதத்திலே கூறப்படுந் தருமங்களை விரித்துரைப்பனவே மற்றையநூல்கள். அவை ஆகமம், ஸ்மிருதி, புராணம், இதிஹாசம், என்பனவாம். வேதாகமஸ்மிருதீதிஹாசபுராணமென வழங்கும் வழக்கைநோக்குக. வேதமானது கருமகாண்டம், ஞானகாண்டமென இருபகுதியுடை

யது. கருமகாண்டப்பகுதியிலுள்ள விஷயங்களை விரித்துரைப்பது ஸ்மிருதியும், ஞானகாண்டப்பகுதியிலுள்ள விஷயங்களை விரித்துரைப்பது ஆகமமுமாம். இவ்விருவகை விஷயங்களையும், சரித்திரமூலமாக விளக்குவன முறையே இதிஹாசமும் புராணமுமாம். ஆகவே, வேதத்தின் கருமகாண்டமும், ஸ்மிருதியும், இதிஹாசமும் ஓரினமாகவும், ஞானகாண்டமும், ஆகமமும், புராணமும், ஓரினமாகவும் நிலைபெற்று, ஞானகாண்டத்தின் முன்னர்க் கருமகாண்டம் பூர்வபக்ஷமாகுந் தன்மையால் சித்தாந்தபக்ஷமாகிய ஞானகாண்டமும் அதனினமும் வேறாகவைத்தெண்ணப்பட்டன. வேதாகமபுராணம் என்னும் பெருவழக்கே யிதற்குச் சான்றாகநிற்பது. அன்றியும், வேதம்பொதுவும், ஆகமஞ்சிறப்புமாகுந் தன்மையால் அவ்வாகமத்திலேற்றந்தோன்ற ஆகமவேதபுராணம் என்னும் வழக்கும் மலிந்து வழங்குவதாயிற்று. கருமகாண்டப்பயன், இம்மையின்பம் எய்துவித்தலும், ஞானகாண்டப்பயன் வீட்டின்பமெய்துவித்தலுமாக முடியும். இவ்வுண்மை இதிஹாசங்களையும் புராணங்களையும் உற்றுநோக்குவார்க்கு அவற்றிற்போதருந் தருமவியல்புகளால் நன்குபுலப்படும். இவ்விதிகாசமுதலியகலைகளெல்லாம் வேதப்பொருளை விளக்கியுபகரிக்குஞ் சம்பந்தம்பற்றிப் பிரமாணங்களாகக் கொள்ளப்படும்.

இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணத்தை வடமொழியிலியற்றினவர் வான்மிகிமுனிவர். ஸ்ரீராமர்காலத்திலேயே அவர் அதனைச்செய்ததாகக்கூறுவர். அவ்வாறாயின், செய்தகாலம் ஒன்பது சதுர்யுகத்துக்கு அதிகமாகும்.

இனி அவ்விராமசரித்திரத்தைத் தமிழிற்செய்தவர் கம்பர். இவர் ஸ்ரீரங்கத்திலே தமது இராமாயணத்தை அரங்கேற்றியகாலம் இப்போதைக்கு ஆயிரத்துப்பதினேழு வருடமாகிறது. இவரை மகாகவியெனவும், கவிச்சக்கிரவர்த்தியெனவும் வழங்குவதால் இவர் கல்விப்புலமையும், கம்பசித்திரம், கம்பசூத்திரம், கம்பர் வீட்டுக்கட்டுத்தறியுங் கவிபாடும் என்னும் வழக்கினால் இவர்கவித்திறமையும் விளக்கமாகும். இவரையும் வான்மீகியைப்போல வரகவியென்றே கூறுவர். இவர் தமது நூலாரம்பத்தில் வான்மீகிமுனிவரை மிகவும்புகழ்ந்து கொண்டாடுகின்றார். அவர்கூறியவாறு தாம் தமிழிற்பாடுவதாக வெளியிடுகின்றார்.

இவ்வாறாக, கம்பர் நடையையும் வான்மீகர்நடையையும் பார்க்கிலோ அதிகபேதம் உள்ளது. இப்பேதங்களைப்பற்றி வான்மீகம் வல்லாரிடங்கேட்டாலோ, வான்மீகத்துக்கே மகிமைகற்பிக்கிறார்கள். ஆனால் கம்பருடைய போக்கு எவ்வகையிலும் கம்பீரக்குறைவுபடாமையாலும் வான்மீகத்தின்படி தமிழிற் செய்வதாக அவர் தாம்கூறியிருப்பதாலும், வான்மீகம் என்பது சதுர்யுகத்துக்கு மேற்பட்ட பழமையுடையதனாலும், வான்மீகத்தில் இடைக்கலப்பு ஏதேனும் உண்டாயிருக்கலாமென்று யூகிக்கஇடமுண்டு.

வான்மீகத்தை ஆங்கிலேய பாஷையில் மொழிபெயர்த்துப் பிரசுரித்த வங்காளநாட்டாரொருவர் அநேகஇடங்களில் இடைக்கலப்பு உள்ளன என்றும், சிலசருக்கங்கள் இடைச்செருகுதலாய் உள்ளனவென்றும், பஞ்சாப்முதலிய தேசாந்தரங்களில் வழங்கும் பாடாந்தரங்களிவையெனவும், குறித்திருக்கிறார். அன்றியும் வான்மீகக்கதைப்போக்கிற் சில தளர்ச்சியைக்குறித்து, வியாக்கியானக்காரர்கள் அவ்விடங்களில் மௌனமாகச் செல்கிறார்களென்றும் குறைகூறுகிறார். இவ்வாறு கூறுவது வான்மீகர் அப்படிப்போயிருக்கமாட்டாரென அவர்மீதுவைத்த கௌரவத்தாலல்லாது வேறில்லை. இப்படியிருக்க, குருட்டுத்தனமாக வான்மீகத்திலாவது கலப்பாவது வரலாவது என்று பிடிவாதம்பண்ணுகிற அபிமானிகள் ராமகதாசாரத்தையும் வான்மீகப்போக்கையும் நுணுக்கமாக விசாரியாதகுறையாளராகத்தட்டில்லை. கம்பராமாயணப்பிரசங்கங்கேட்ட ஓர் ஸ்ரீவைஷ்ணவர் மிக ஆச்சரியப்பட்டு வான்மீகத்தைத்தாம் மூன்று ஆவர்த்தி கேட்டிருப்பதாகவும் அதன்போக்கில் கம்பர்போக்கைப்போன்ற கம்பீரம் தாங்காணவில்லையென்றும் பக்ஷபாதமில்லாமல் வெளியிட்டார். இவர் ஓர் பெரிய நியாயவாதியாதலால் இவரது அபிப்பிராயம் சாலப்பெருமையுடையதே. இவ்வாறு துரபிமானமில்லாமல் விசாரிப்பதன்றோ உண்மைப்பொருட் பயன்றுய்க்க ஏதுவாகும்.

வான்மீகர் போக்கே சிறந்தது; கம்பர் இஷ்டப்படி போயிருப்பதால் அங்கீகரிக்கத்தக்கதல்ல எனின், கம்பர் தமது ராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அநேக பெரியோர் முன்னிலையில் அரங்கேற்றியதாக சரித்திரங் கூறுவதால் அவர்கள் ஒப்புக்கொண்டதை வழுவென்பது பெரியோரைத் தூஷிப்பதாகும். ஆயிரம் வருடத்துக்கு

மேலாகிறபடியால் கம்பராமாயணத்தில் அநேக மாறுதல் உண்டாயிருக்கக்கூடுமெனில், அதனினும் முப்பத்தாறு யுகப்பழமைப்பட்ட வான்மீகத்தில் எத்தனை மாறுதல் உண்டாயிருக்கவேண்டும்! அன்றியும் மாறுதல் உண்டாவது மதசம்பந்தமான சந்தர்ப்பங்களிலேதான். நாமிங்கே கதைப்போக்கையும் விவகாரரசத்தையும் பற்றிப் பார்க்கையில் கம்பர் நடைசிறந்து காட்டுகிறதென்று கூறுவதேயன்றி மதசம்பந்தம்பற்றி அன்று.

இன்னுமொரு விஷயம் ஆராய்ச்சிக்குரியது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, காலவகையினானே' என்னும் விதி எல்லா விஷயங்களுக்கும் பொது ஆதலால், முற்காலத்தார்க்குச் சுவை தருவதாயிருந்ததொரு விஷயத்தைப் பிற்காலத்தார்க்குச் சுவைதரும்படி கூறுவது அமைவுடைத்தென்பதே. நமது உணவு, உடை, ஆளும் பொருள்கள் ஆகிய யாவும் காலத்துக்குக் காலம் வேறுபடுவது அநுபவசித்தம். கம்பருடைய நடையானது தற்காலச் சுவைக்கிணங்கச் சுபாவ தரும விரோதமில்லாமல், கூறியது கூறாமல், ஒவ்வொருவருக்குமுரிய தகுதி மாறாமல், செல்லுகின்றது: யாம் முற்கூறியபடி வான்மீகரிடத்திலும், அவர் இராமாயணத்திலும் கம்பருக்குள்ள மதிப்புக்கு நிதரிசனமாக அவர் கூறிய அவையடக்கச் செய்யுளொன்றைக் காட்டுகிறோம்.

"நொய்தி னொய்யசொ னூற்கலுற்றேனெனை
வைதவின் மராமரமேழ் தொளை
எய்த வெய்தவற் கெய்தியமாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே"

என்னும் இதனை நோக்கும்போது கம்பர் காலத்திருந்த வான்மீகந் தான் இப்போது வழங்கிவருவது என்று துணிந்துரைக்க மிகவும் பின்னிடையவேண்டியிருக்கிறது.

இனி யிப்பாடலிலுள்ள பொருணயச் சிறப்பை ஆராய்வோம்:—

மராமரங்களேழும் துளையுறும்படி நிறைமொழி மாந்தர் சபித்த சாபம்போல அம்பெய்த ஸ்ரீராமபிரானுக்குரிய பெரிய கதையை அமைதிபெறச் செய்த வான்மீகி முனிவருடைய காவியமானது பிரபலமாக நிலைபெற்றுள்ள இத்தேசத்திலேயே நானும் மிகவும் அற்பமாகிய சொற்களைக்கொண்டு அக்கதையைக் காவியமாகச் சொல்லத் தொடங்கினேன். இதனாற் பயனென்ன? என்பது திரண்ட பொருள்.

எனவே, வான்மீகம் வழங்காத இடத்தில் என்னூலுக்குச் சிறிது மகிமையுண்டாகலாமேயன்றி அது வழங்குமிடத்தில் இது

சூரியன்முன் மின்மினிபோலு மென்றுரென்பதாம். இதனால் ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டு அவையடக்கங்கூறி வான்மீகத்தினது அருமை பெருமைகளையுங் கொண்டாடினாராயிற்று.

இனி, ஒரு காரியஞ் செய்யப் புகுந்த ஒருவன் இடமுங் காலமுங் கருவியும்பயனுமறியாது செய்தல் பேதைமையாமாதலால், 'நூற்கலுற்றேன் வினை' என்பதற்கு ஈதென்ன பேதைமைச் செயல் என்றும் பொருள்கொள்ளலாம். புண்ணிய கண்டமும் சான்றோர் விரும்பியுள்ளதுமாகிய இடத்தையும், வான்மீகம் பிரபலமாக வழங்கி வருங் காலத்தையும், என்னிடத்துள்ள அற்பச்சொல் தக்க கருவியாகாதென்பதையும், எனது காவியத்தால் எனக்கும் பிறர்க்கும் ஒரு பயனுமாவதில்லையென்பதையும் உய்த்துணராது செய்தலே பேதைமைச் செயலாம். அன்றியும் 'வினை வைதவில் நூற்கலுற்றேன், எனக்கொண்டு, என்னை யொன்றுந் தெரியாதவனென்று வைதுகொண்ட வசைமொழிபோல நூல்செய்தேன் என்றுரெனினுமாகும். எனதறியாமையும் மாட்டாமையும புலப்படுத்தியதன்றி இராம யணம் பாடியதின்று என்றவாறும்.

அல்லாமலும் 'வைதவைவில் மராமரமேழ்தொளை யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை செய்த செய்தவன்' என்பது வேறொரு முக்கிய விஷயத்தை உட்கொண்டு நிற்பதாம். என்னெனில் :—வான்மீகர் ஒருநாள் உச்சிப்போதில் தமசாநதிக்கு நீராடப் போகையில், ஆணும் பெண்ணுமாகக் கூடிக் களித்திருந்த கிரௌஞ்சமென்னும் பட்சிகளில் ஆண்பறவையை ஒரு வேடன் அம்பெய்து கொல்லப் பெண்பறவை கண்டு துடிக்கும் பரிதாப நிலையை முனிவரர் நோக்கி மனம்பொறாமல "மாநிஷாதப்ர திஷ்டாந்தம" என்னுந் தொடக்கத்துச் சுலோகந்தானே தமது வாக்கில் வர அதனால் அவ்வனசரனைச் சபித்துச்சென்று நீராடி மீண்டுவந்த பின்னர் அச்சுலோகத்தின் மேற் சிந்தையோட, அதில் ஸ்ரீராமசரித்திர சங்கிரகப்பொருள் தொனியர்த்தமாக விளங்கக்கண்டு இது என்னையோ எனத் தெளியாது நிற்கையில் பிரமதேவர் அங்கு எழுந்தருளி இராமாயணத்தை உபதேசித்துப் பாடச் சொன்னதாகப் பிரசித்தி வழங்கி வருதலால், அப்பொருளையுங் குறிப்பித்தவாறும்.

இப்பொருளுக்கு 'வைதவைவில் எய்திய மாக்கதை' எனக் கூட்டி, வேடரை வைதவசைமொழியில் மராமரந்துளைத்த ஸ்ரீராமனுக்குத் தொனியர்த்தமூலமாகக் கிடைத்த மகத்துவமான கதையெனப் பொருள்கொள்க. இந்த சுலோகந்தான் முதன்முதலாகச் செய்யுள் வடிவமாக வெளிப்பட்டதென்றும், சோகங் காரணமாக வெளிவந்ததனால் அதற்குச் 'சுலோகம்' என்று பெயராயிற்று என்றும், வான்மீகம் ஆதிகாவியமாமென்றுங் கூறுவர்.

இனி, சரித்திரத்தில் முக்கியமான இடங்களில் வான்மீகர் நடையும் கம்பர் நடையும் அடைகின்ற பேதங்களையும் அவற்றால் சரித்திரப் போக்குக் குண்டாகும் தன்மைகளையும் ஆராய்வாம்.

(இன்னும் வரும்).

சாமி-சரவணப் பிள்ளை.

* ஞானாமிர்தம்.

[நிறைந்த நாயனுர் சந்தானத்தில்வந்த பரமானந்த முனிவரருள்பெற்ற ஸ்ரீவாகீசமுனிவரியற்றியது]

ஞானபாதம்

காப்பு.

நேரிசை வெண்பா.

(1) முக்கட் டிருகவுட்டு நால்வாய்த்து மும்மதத்து
செக்கர்த் தடித்திடித்த செஞ்சடைத்துப்—பக்கத்துப்
பூதத் தருநடத்துப் பொற்பிற்றென் னுள்ளத்து
நாதத்து நின்ற நலம்.

காப்பு.

(2) மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம்பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபா
யிருகவுட்டு முக்கட்டு நால்வாய்த் தென்னுள்ள
முருகவிட்டு நின்ற வொளி.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து

நேரிசை ஆசிரியப்பா.

(1) வெண்டிரைக் கருங்கட லேழும்விண் டோட
வீங்கிய சென்னிச் சிமையமு மோங்கிய
வேழிரும் பொழிலு மெண்ணீங் குயிரு
மளவி லண்டமு முளையின்றி விளைத்த

* All rights reserved to S. Palvanna Mudaliyar, *Secretary*, "Sarasvati Vilas Sabah," Tinnevelly.

† 'நால்வாய்த் தூசகத்து' எனவும் பாடபேதமுண்டு.

மலரோன் றந்தையை வகுத்துந் தளரா
முன்னோரில்லா முன்னோன் பின்னு
மிளமையு மஃதா விளைந்தோன் வளமலி
தோற்ற மீறின் றில்லோன் கூற்றுக்
கிளியே முற்ற வொளிமா டிருநகை
யருளி னங்குழை பரப்பி யிருடீர்
கருணைமானனை யுயிர்ஞிமி றருந்த
மலர்ந்த மாதர் மரகத வல்லி
யந்தி வானத் தணிநிறங் கவர்ந்து
சிந்தை செல்லாச் செழுங்கிரி யொருபால்
வளங்கொளப் படர்ந்த வண்ணம் போல
வறவோளமர்ந்த பாகன் றுறவோர்க்
கெல்லை யாகிய தொல்லோன் றனது
பாமாண் சேவடி பரவ
நாமாண் டுளதா நலங்கொளச் சிறந்தே.

(இதன் பொருள்) வெண்டிரைக் கருங்கட லேழும்வின் டொட
வீங்கிய சென்னிச் சிமையமு மோங்கிய
வேழிரும் பொழிலு மெண்ணீங் குயிரு
மளவி லண்டமு முளையின்றி விளைத்த
மலரோன் றந்தையை வகுத்துந் தளரா
முன்னோ ரில்லா முன்னோன். எ-து.

வெள்ளிய திரையுண்டாகிய பெரியசமுத்திரமேழையும், சுவர்க்கத்தைக் கிட்டவோங்கிய உச்சியையுடைய மகாமேருவைச் சூழ்ந்த அட்டகுலபருவதங்களையும், உயர்ந்தெழப்பட்ட பெரிய இருநூற்றிருபத்து நான்கு புவனங்களையும், எண்ணிறந்த ஆன்மாக்கள் தேகங்களையும், அளவிலாத அண்டங்களையும், வருத்தமின்றிச் சந்நிதிமாத்திரத்தால் சிருட்டி காலத்தில் அரூபமான மாயையிலே தோற்றுவித்தும் திரிகாலத்துத் திதிப்பித்தும், சங்காரகாலத்தில் இம்மாயையிலே ஒடுங்குவித்தும், அந்தப் பிரமாவிற்குத் தாதையாகிய விஷ்ணுவைத் தோற்றுவித்தும், தனக்கோர் அசைவின்றியே நிற்குந் தன்னிற் பழையோரில்லாத பழையோன் ;

விளைத்த எ-து விளைத்து. அந்த எ-து பண்டறிசுட்டு.

பின்னு
மிளமையு மஃதா விளைந்தோன் எ-து.
பின்னும் இளமையும் அத்தன்மைத்தாகப் பொருந்தினேன் ;

வளமலி
தோற்றமீ றின்றில்லோன் எ-து.
வளப்ப முடைத்தாகிய ஜனனமு மரணமு மில்லாதோன் ;

கூற்றுக்
கிளியே முற்ற வொளிமா டிருநகை
யருளி னங்குழை பரப்பி யிருடீர்
கருணை மானனை யுயிர்ஞிமி றருந்த
மலர்ந்த மாதர் மரகத வல்லி
யந்திவானத்தணிநிறங் கவர்ந்து
சிந்தை செல்லாச் செழுங்கிரி யொருபால்
வளங்கொளப் படர்ந்த வண்ணம் போல
வறவோ ளமர்ந்த பாகன். எ-து.

கிருபையென்னு மழகிய தளிரையும் பரப்பிக் குற்றமற்ற கருணையாகிய மகத்தான * மொட்டை ஆன்மாக்களாகிய வண்டுகள் புசிக்கும்படிக் கீடாக மலர்ந்த காதலிக்கப்பட்டதொரு மரகதக்கொடி செக்கர் வானத்தினழகிய தேஜஸைக் கவர்ந்து கொண்டு மனத்தாலு மளவிடுதற்கரிய அழகிய தொருபருவதத்தில் ஒருபக்கத்திலே அலங்கார முடைத்தாகப் படர்ந்த வாறுபோலக் காருண்ணியமே தனக்குச் சொரூபமாகவுடையவளாய் வசனத்துக்கு இளியென்னுமிசை யாசைப்படவுந் திருநகைக் கொளிகெடவு முடைய பரமேசுவரியுடனே கூடினபாகன்.

துறவோர்க்
கெல்லையாகிய தொல்லோன். எ-து.
பற்றற்றோர்க்குத் தன்றன்மையைக் கொடுக்குமுன்னோன் ;

தனது
பாமாண் சேவடி பரவ
நாமாண் குளதா நலங்கொளச் சிறந்தே. எ-து.

பாக்களுக்கழகைக் கொடுக்குந் தன்னுடைய சீர்பாதங்களை வாழ்த்த அழகு கொள்ள மிக்கென்னுடைய வாக்கானது மாட்சிமையுடைத்தா மென்றவாறு ; (க)

* 'தேனை' யென்னும் பாடம்.

விநாயகர்துதி.

(2) திங்கட் கொழுந்தி னன்ன வொண்கே
ழொருமருப் பிருமதக் கடவு ளெண்கழீஇ
யாண்டு பலநிரம்பினு மிளமை யொடுகெழீஇ
ஞான மாமதந் தருக்கி யானை
வினையுகச் சீறு நனைகவுள் வேழத்
தடியிணை யொடிவின்று பழிச்ச
முடிவிலா தெவன் முன்னிய நெறித்தே. எ-து.

(இ-ள்.) திங்கட் கொழுந்தி னன்ன வொண்கே
ழொருமருப் பிருமதக் கடவு ளெண்கழீஇ
யாண்டு பலநிரம்பினு மிளமை யொடுகெழீஇ
ஞான மாமதந் தருக்கி யானை
வினையுகச் சீறு நனைகவுள் வேழத்
தடியிணை யொடிவின்று பழிச்ச
முடிவிலா தெவன் முன்னிய நெறித்தே. எ-து.

இளம்பிறையை யொத்த வடிவையு மொளியையுமுடையதொருகொம்பையுடையனாய் * இந்திரிய மதமொழிந்திரண்டு மதத்தினையுடையனா யெண்ணிறந்த வயதுபலவுண்டாயினு மிளமையோடே கூடி ஞானமாகிய மகத்தான மதத்தாலே கெருவித்து ஆன்மாக்களளவிறந்த கன்மங்களையொழியும்படி சீறுமதத்தாலே நனைந்த கதுப்பையுடைய யானைமுகத்து விநாயகனான யென்கத்தாவின் பாதங்களை யொழியாதே தோத்திரம்பண்ண வபேட்சையான போக மோக்ஷங்களிற் சித்தியாத தியாதென்றவாறு. (உ)

வாகீஸ்வரிதுதி.

(3) விரிகதிர் மதியிற் கதிர்விரி பொகுட்டுத்
தாதரு கடுத்த மேதகு வெண்மடற்
புழற்காற் சரோருகத் தளிக்குல மொலிப்ப
விழைவற வெகுண்டோர் விழைய விழையென
வருட்கதிர் பரப்பி மருட்டுய ரகற்றி
வண்ண மாத்தவி சேறிப்பண் வரக்

* பிரமசரியானப்படியாலே—எனவும் பாடமுண்டு.

கின்ன ராதிக டம்முறை துடங்கப்
பொழுதொடு விப்பிரர் தொழுதனர் நுவல
விமையா மங்கைய ரமையாது பழிச்சத்
தீதற விருந்த வாதி நாயகி
கலைமகள் கழலிணை கருத
நிலைமை நீடுத றலைமையோ வன்றே. (எ-து.)

மிக்க வொளியுண்டாகிய பூரண சந்திரனியல்பையு மிடமுடைத்தாகிய பொகுட்டையுந் தாதோடுசேர்ந்த மேம்பாட்டையுடைய வெண்மடலையும் நாளமுண்டான தாளையும் உடைத்தாகிய வெண்டாமரைப் பூவின் அழகையும் பெருமையையும் உடைத்தாகிய பீடத்தின்மீதே வண்டுவர்க்கமெல்லாம் சத்திக்க சருவ சங்கநிவிர்த்தி வந்தோர் சிநேகிக்க வாபரணமாகக் கிருபையாகிய தேஜசைவிரித்துத் தன்னை யாசரித்தோருடைய வஞ்ஞானத்தால் வருந் துன்பங்களை நீக்கி கின்னரர் கிம்புருடர் முதலாயினோர் தத்தம்முறைமையிலே துடங்கிப் பண்படத் தோத்திரம் பண்ணக் காலங்கடோறும் வேதியர் தொழுது துதிக்கத் தேவத்திரிகளளவின்றியே போற்ற குற்றமற வெழுந்தருளி யிருந்த வாதிநாயகியான வாகீஸ்வரி பாதங்களைத் துதிபண்ணினோர் மோக்ஷம் பெறுதல் ஒருபொருளன்றென்றவாறு. (௩.)

ஆசிரியத்துதி.

(4) அருளு மறிவு மிருடீர் பொறையு
வாய்மையுந் தவமுந் தான மாட்சியு
மன்னுயிர்க் கின்பந் தன்மீக் கூர்தலு
மொழுக்கமும் விழுப்பமு மழுக்கா றின்மையுங்
கண்கால் முதலிய பொறியும் பண்பார்
பூணுந் துகிலும் பாண்விரி பிணையலும்
புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றத்தன்ன வாற்ற லென் குரிசில்
குணப்பொற் குன்றம் வணக்க வாரா
வைம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக்
கருணை வீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முள் ளோங்கின னுறீஇத்

தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி
பரமானந்தத் திருமா முனிவன்
வளமலி சேவடி வழுத்தி
யுளமலி யுவகை யுற்றனம் பெரிதே.

அருளும்—குரிசில் என்பது. சர்வபிராணிகளுடைய இதாகிதங்களும் தனக்குவந்தா லொத்திருக்குங் கிருபையுங் கல்வியினலாய பொருணீதிகளை யறிந்து வாழ்தலும், சகித்தற்கரிய வெகுளியுந் துன்பமும்வந்தால் அசைவில்லாத குற்றமற்ற பொறையுடைமையும், யாதானுமொரு வசனமும் பிறர்க்குத் தீங்கறச் சொல்லுஞ் சத்தியமும், ராகத்துவேஷ நிராகரணத்தாலே பிராணிகளுக்கு இம்சை செய்யாமையாகிய தபசும், தான் தாளாற்றித் தந்தபொருளை நொதுமலர்க்காரணமா யுபகரித்தலும், நித்தியமாகிய ஆன்மாக்களுக்குப் போக மோக்ஷங்கள் தன்னிலும் மிகவுண்டாகவேண்டு மென்னுந் திருவுள்ளமும், சமயாசாரம் வந்தித்தலும், சீர்மையுடைமையும், மனச்சழக்கில்லாமையு மாகிய தசகுணங்களையும், கண் முதலிய பொறி புத்தி இந்திரியங்களும், கால் முதலிய பொறி கன்மேந்திரியங்களாகவும், மக்கட் பண்புடைமையினை மிக்கவாபரணமாகவும், ஆடையாகவும், வண்டுகளாலே தொனியுடைத்தாகிய மாலையாகவும், புண்ணிய மிவையிற்றை அவயவமாகவும், அலங்காரமாகவுங் கொண்டு பூகதமான திருமேனிகொண்ட நிலைமையுடைய என் கர்த்தா.

மனச்சழக்காவது பரஸ்ரீ பொறுமை.

குணப்பொற்குன்றம். எ-து. பெருமையாலும், சுத்ததையாலும் பிறழாநிலைமையாலுங் குணத்துக்கு மகாமேருவை யொப்போன்.

வணக்க வாரா சைவசிகாமணி, எ-து.

அந்தக் கரணமென்னும் பாகரால் வணக்குதற்கரிதாகிய பஞ்சேந்திரியங்களான மதயானைகளின் வெவ்விய தொழிலான ஆசையொழிய கருணையாகிய வீணையை விருப்போடும் வீககிமேல் கொண்டு சாந்தமென்னுங் கூறியதோட்டியை யுறுத்தி தன்வசமாக்கிக் கொண்டு சைவத்துக்கு சிகாமணியாயினேன்.

பரமானந்தத் திருமா முனிவன். எ-து.
பரமானந்தமாகிய ஸ்ரீயினையுடைய மகாமுனிவன்

வளமலி-பெரிதே எ-து.
அழகுடைத்தான ஸ்ரீபாதங்களைத் தோத்திரம் பண்ணியெனக்குப் புத்தி பூர்வமான பிரியம் மிகவும் பெற்றேன். எ-று. (ச)

அவையடக்கம்.

(5) உரைசால் பகுதிப் புரையோர் போலத்
தமிழ்த்துறை நிரம்பாத் தன்மை யேனை
யறத்தின் விருப்புச் சிறப்பொடு நுந்தப்
மாப்புனை யான்மை நோக்கினன் ; வலித்துழி
யெழுதாக் கேள்வியுங் கேள்வி பழிவா
மேனோர் கேள்வியுங் கேள்வி மாறு
வருபடை தாங்கிய கிளர்தா ரகலத்
தெறிவே லிளைஞர் போலப் பொறிவாழ்
புலப்பகை தாங்கிப் பிறப்பற வெறியு
மறப்பேர் வாழ்க்கையும் வாழ்க்கை திறப்பட
விம்மையும் பயவா தம்மையு முதவாது
செச்சைக் கண்டத் தெஃத்தான் போல
வாழ்வோர் வாழக்கையும் வாழ்க்கை தாவா
வொருமைத் தன்றே யாயினுஞ் சான்றோர்க்
கெம்முடைப் புன்சொற் றம்முடைச் சிறப்பே
யதனால் வரினு மளியமற் றியாமே
கவரா வேனோ ரளிக்குத்தா னீறின்றே
(யவரே) தம்பா டெய்த றம்பா லோர்க்கே
யெம்பா டெய்த விருமையு முடைத்தே
யிவ்விரு பகுதியு மெழுத்துச் சொல்யாப்
பவ்வயினடைத்தே பொருட்பாடின்றே.

உரைசால்—நோக்கினன். எ-து. தமிழினியல்பு நிரம்பவறியாத வென்னை தன்மத்தின் மேற்றுற்பரிய மிகவுஞ் செலுத்துதலாலே வசனமாகிய பதினெட்டுப்பாஷையையு முணர்ந்த நல்லோரைப்போல ஒருசாத்திரம் பண்ணுமுறைமையைப் பார்த்தேன்.

வலித்துழி-எ-து. பார்த்தவாறே நினைத்தவிடத்து.
யெழுதாக் கேள்வியுங் கேள்வி பழிவா
மேனோர் கேள்வியுங் கேள்வி. எ-து.

வேதவாக்கியமும் ஒரு சத்தம் பழியுண்டாக வாழும் பாவகாரிகள் வசனமும் ஒரு சத்தம் ஆதலாலும்.

மாறு

வருபடை—வாழ்க்கை : எ-து

அழகுண்டாக வருகிற தூசிப்படையைத் தாங்கி வண்டு கிளரப்படாநின்ற மாலையையுடைத்தாகிய மார்பையுடையராய், சத்துருபக்ஷத்தாரை யெறியும் வேலையுடைய வீரபுருஷரைப்போல சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணமென்று சொல்லப்பட்ட இந்திரியங்களிலே வாழும் புலனாகிய பகைகளைத்தாங்கி, உத்பீசம், அண்டசம், சுவேதசம், சராயுசம் என்னும் நாலுவர்க்கத்துப்பிறப்பையும் அறவெறியும் ஞானவான்கள் திருவுலாச்செய்தலும், வாழ்க்கை, நன்மையுண்டாக இம்மையிலும் தமக்கும் பிறர்க்கும் பிரயோசனமின்றியே மறுமையிலுஞ் சொர்க்க மோக்ஷங்களுககு இடமின்றியே ஆட்டின்கழுத்தின் அதர்போலே உயிர்வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கையாமாதலானும்.

தாவா
வொருமைத் தன்றே யாயினும் எ-து

கெடாத வொருபடித்தன்றியே நன்மை தீமையாயிருந்த பொருள்கள் பிரபஞ்சத்தி லொக்க வியாபரிக்குமாதலால் இத்தச்சாத்திரம் பண்ணவிசைந்தேன், அதுவுமன்றி

சான்றோர்க்
கெம்முடைப் புன்சொற்றம்முடைச் சிறப்பே
யதனால் வரினுமளியமற் றியாமே ; எ-து.

ஞானவான்களுக்கு எம்முடைய புல்லிய சொல்லும் தாமருளிச்செய்தவையிற்றுக்குச் சிறப்பாதலால் நாங்கள்அவரிடத்தும் அனுக்கிரகமுடையேம் ; மற்று அசை.

கவரா வேனோ ரளிக்குத் தானீன்றே ; எ-து.

என்னில் வேறில்லாத வஞ்ஞானிகளிடத்துந் தமக்கு இனமானதாலனுக்கிரகத்துக்கு முடிவில்லை.

யவரே, தம்பா டெய்த றம்பா லோர்க்கே
யெம்பா டெய்த விருமையு முடைத்தே எ-து.

இந்த நல்லோருந்தீயோரும் பெருமை பெறுவது தமக்கு இனமானரிடத்தில். நாமிரண்டு திறவரிடத்தும் அனுக்கிரக முடையேம்.

இவ்விரு பகுதியு மெழுத்துச் சொல்யாப்
பவ்வயி னடைத்தேபொருட்பா டின்றே எ-து

இப்படிச் சொல்லப்பட்ட விரண்டு வேறுபாடும், எழுத்துஞ்

சொல்லும் யாப்பும் அலங்காரமு மென்னும் நாலு வர்க்கத்துக்குமாம். பரமேசுர னருளிச் செய்த திவ்வியாகமத்திற் பொருளாதலால் பொருளினிடத்து ஒரு குறை யில்லை. என்றவாறு. (௫)

நூற்பெயர்.

(6) மந்தர மத்தென நிறுவி நாணென
வைந்தலை யரவு சுற்றி நஞ்சொடு
பணமணி பிதுங்கப் பற்றி யவுணரோ
டமரரு மியக்க வாற்று நாள் செல
முகுந்தன் றனாது முழுவலி யெறுழ்த்தோள்
வருந்த வாங்க வாய்விட் டலறி
நுரைத்தலை விரித்துத் திரைப்பெருங் கையெடுத்
தின்றுங் கூப்பிட வன்றவந் தெழுந்த
துவரி யமிழ்த மென்ப தமிழ்வளர்
குமுதச் செவ்வாய்க் கோமள வல்லி
இமய வல்லி யெழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவு
ளருளின் கொய்பரோ டமரரு முனிவரும்
வெருளின் பிறவி வேர்தணி விமலவென்
றுண தாற்றத் தானினி தருளிய
வாகம மத்தி னருளின் கோலத்
தாசிரி யமலன் பாத பங்கயப்
போதொளி யிலகப்புனைந்து மாதவ
னருளுப தேச வரும் பெறல் நோன்ஞாண்
மதிமாத் தடக்கைக் கதுமெனப் பூட்டி
முறுக வாங்க மறுகுபு கலுழ்ந்து
வல்வினைத் திண்கை மேலெடுத் தொய்யென
வறுவகைப் பித்தை சிறுபுறத் தலையப்
பிறவிப் பேரிட ரலமந் தோலமிட்
டிரியல் போக வருபுல மடிய
வச்சா ஞழி யெற்பட வெழுதலின்

ஞானாஅ வமிர்த மென்ப
வானாச் செல்வி மானூற் பெயரே.

மந்தர—நாள் செல: எ-து: மந்தரபருவதத்தை மத்தாக நாட்டி வாசுகி யென்னும் மகா நாகத்தை நாணாகப்பூட்டி நஞ்சோடு கூடப்படத்திலுண்டாகிய மாணிக்கம் பிதுங்கப் பற்றிக் கொண்டு தேவர்களும் அசுரர்களுங் கூடிப் பேர்க்கப் புக்க விடத்துப் பேராமையாலே நெடுங்காலஞ் செல்ல.

முகுந்தன்— யமிழ்த மென்ப எ-து: முழுவலியை யுடைய விஷ்ணு தன்னுடைய வலிய தோள் வருந்தும்படிக் கீடாகக்கடைதலாலே வாயைவிட்டுக் கதறி நுரையென்னுந் தலையை விரித்துத் திரை யென்னும் பெரிய கையை யெடுத்தன்று கலங்கின வதிர்ச்சி இன்றும் மாறாதே கூப்பிட வந்நாளிலே உப்புக்கடலிலே வந்தெழுந்த தமிழ்த மென்று சொல்லுவர்.

இனி ஞானாமிர்தம் வந்தபடி.

தமிழ்வளர்-ஆகம மத்தின்: எ-து

புகழு மிடத்துத் தமிழுக்குப் பெருமை கொடுக்கிற குமுதம் போன்ற செய்ய வாயை யுடையளாய்க் கோமளக் கோடி போன்றிருக்கப்படா நின்ற இம பருவதத்தில் பரமேஸ்வரியுடனே அழகுண்டாக விளங்கிய நெற்றியிலே விழித்த திருநயனத்தை யுடையனாய்த் தனக்கு உவமனில்லாத கர்த்தாவான பரமாசாரியனை அருளே சொரூபமாக வுடைய இப்பரமேஸ்வரியும் தேவர்களும் இருடிகளும் கூடிப் பயப்படத்தக்க பிறவியை வேரோடே போக்கவேணும் நின்மலனே யென்றமையாதபடி தோத்திரம் பண்ணுதலாலே அவனினிதாக வருளிச்செய்த திவ்விய வாகமத்தை மத்தாக நாட்டி.

அருளின கோலத்-முறுக வாங்க எ-து.

அருளே திருமேனியாக வுடைய ஆசிரியனாகிய நின்மலன் ஸ்ரீபாதமாகிய தாமரைப் பூவை யொளி யுண்டாகச் சூடிக்கொண்டு மகாதபசி பிரசாதித்த உபதேச மென்னும் பெறுதற் கரியவலிய நாணைக் காரணவறிவாகிய மகத்தான பெரிய கையாலே விரையப் பூட்டியுற்றுக் கடைதலாலே.

மறுகுபு கலுழ்ந்து-வானாச் செல்வி மானூற் பெயரே: எ-து

கலங்கித்துக்கப்பட்டு வலிய புண்ணிய பாவமாகிய திண்ணிய விரண்டு கையையு மேலே யெடுத்து விரைய காமாதி பகையாறு மாகிய மயிர் முதுகிலே யலைய பிறவி யென்னும் பெரிய துக்கமானது சுழன்று கூப்பிட்டு நீங்கக் கெடுத்தற்கரிய இந்திரியங்கள் சேட்டையற என்னிடத் துண்டாகிய அஞ்ஞான மென்னும் பெரிய சமுத்திரத்திலே யொளியுண்டான ஞானந் தோற்றி அதினாலே சொல்லப்பட்ட நூலாகலின் அமையாத அழகையுடைய மகத்தாகிய இந்தச் சாத்திரத்துக்கு ஞானாமிர்த மென்னும் பெயராயிற்றென்றவாறு.

மறுகுபு : செய்பு என்னும் வினை யெச்சம். (௯)

(இன்னும்வரும்)

சிருஷ்டியின் அற்புதங்கள்.

பிராணிகளும் சங்கீதமும்

ஜீவசிருஷ்டிகளில் சகலபிராணிகளையும் மகிழச்செய்து உற்சாகப்படுத்தி அவைகளின்மனத்தை வசியப்படுத்துவது சங்கீதமே. ஸ்ரீகிருஷ்ணபகவானது வேணுகானத்தாலும் ஆனாயநாயனாரது பஞ்சாக்ஷரகானத்தாலும் அத்திமுதல் எறும்பீறாகவுள்ள சகலஜீவராசிகளும் ஆநந்தபரவசமடைந்து சிறிதும் அசைவின்றிஸ்தம்பிதமாய் நின்றன வென்பதுயாவரும் அறிந்தவிஷயம். ஒருகால் இவைபுராணவிஷயங்களென்று இக்காலத்தவர்களிற்சிலர் அசட்டைசெய்யலாம். அப்படிப்பட்டவரும், நம்நாட்டிலில்லாமற்போகவில்லை. அவர்களுக்கு இதன் உண்மையைச்சிறிதுவிளக்கிக்காட்டுவோம். மானிடரைப்போலவே மற்றைப்பிராணிகளும் சங்கீத ஆநந்தத்தை அனுபவிக்கின்றன என்பதற்குப் பலதிருஷ்டாந்தங்களுண்டு. ஜீவசிருஷ்டிக

ளில் மானுடனுக்கு அடுத்தநிலைமையிலுள்ளதுமிருகம். மிருகங்களிலெல்லாம் பெரியதுயானை. அவ்யானை சங்கீதத்துக்கு வசப்பட்டு ஆநந்தம் அநுபவிப்பதை பர்மா, சீயம்முதலிய கீழ்நாடுகளிற்காணலாம். அத்தேசங்களில் யானைகளை வாத்தியகோஷத்துக்குத்தக்கவாயாகும் வண்ணம் பழக்கியிருக்கிறார்கள்.

அவை அவ்வாத்திய கோஷங்களைக் கேட்டு ஆநந்தத்தாண்டவமாடுவதைப் பார்க்க வியப்பாக விருக்கும். குதிரை, மாடு, ஒட்டகை, மான், கரடி, குரங்கு, புலி முதலிய மிருகங்களுக்கும் சங்கீதஞானமுண்டு. குதிரைப் பட்டாளம் யுத்தத்துக்குச் செல்லுங்கால் எக்காள முதலிய யுத்த வாத்தியங்களின் கம்பீர ஓசையைக் கேட்டு உற்சாக மடைந்து வேகமாய்ச் செல்லுவது மன்றி இரணகளங்களில் அவ்வாத்திய கோஷங்களைக் கேட்டு மன மகிழ்வதைப் பட்டாளங்களில் அநுபவ முள்ளவரெவரும் அறிவார்கள். மாடுகளை மந்தை மந்தையாய் மலைமேல் மேய்ச்சலுக்கு ஒட்டிக்கொண்டு போகும் கோபாலர்கள் புள்ளாங்குழல் வாசித்துக்கொண்டே முன் செல்ல அவர்கள் பின்னே அம்மாடுகள் அத்தீங்குரலைக் கேட்டு ஆநந்தித்துச் சிறிதும் களைப்புத் தோன்றாமல் மலை மேல் ஏறுவதின் அழகையும் அவ்வாறே சூர்யாஸ்தமனத்துக்கு முன் அவைகள் நானாவித மணிச்சத்தங்களுடன் இறங்கும் அழகையும் இன்றும் மலைப்பிரதேசங்களில் நாம் பார்த்து மகிழலாம்.

பார வண்டிகளிழுத்துச் செல்லும் மாடுகளுக்குச் சிறிதும் தேகச்சிரமம் தோன்றா வண்ணம் வண்டிக்காரர் உற்சாகத்துடன் பாடும் இனிய தென்பாங்குப் பாட்டைக் கேட்டு ஆநந்தத்துடனும் ஊக்கத்துடனும் அம்மாடுகள் செல்வதை யறியாதவருமுளரோ? சிறிதும் புல் பூண்டற்ற மணல் வனாந்தரங்களில் நெடுநாள் அன்னபானாதிகளின்றிப் பிரயாணஞ் செல்லும் ஒட்டகைகள் அராபியர்களின் இனிய பாடல்களைச் செவி சாய்த்துக் களிப்புடன் கேட்டுச் செல்வதுலகப்பிரசித்தம். வனத்தில் வேடர்களாட்டும் மணி யோசையைக் கேட்டுமதிமயங்கிக்கிட்டிச்சென்று அன்னவர் வசப்படும் மான்களும் கானத்துக் கட்டுப்படுகின்றன. புலிமுதலிய துஷ்ட மிருகங்களும்வாத்தியங்களுக்கு வசீகரமாய்ச் சகல துர்க்குணங்களும் நீங்கி நாய்போற்சாதுவாய் நடிக்கின்றன வென்பதை மிருகக்காட்சிச் சாலையிற்ப

ழகுவோர் கூறியிருக்கின்றனர். கரடிக்காரர் கையில் உடுக்கு வைத்து அடித்துக்கொண்டு அக் கரடியை ஆட்டிவைப்பதையும் அவ்வுடுக்கோசையின் இனிமைக்குத்தக்கபடி அக்கரடி நடித்துக்காட்டுவதையும் நாம் பலமுறைபார்த்திருக்கின்றோம். குரங்குகள்பாட்டுக்கேட்டுமகிழ்ந்து சிரக்கம்பம்செய்வதை நாம் தெருக்களில்பார்த்தவண்ணமாயிருக்கின்றோம். இவ்விதம் பற்பல மிருகங்கள் சங்கீத ஞானமுடையன என்பது தெளிவாகின்றது. இனி மிருகங்களுக்கு அடுத்த நிலைமையிலிராநின்ற பறவையினத்தைப்பற்றி ஆராய்வோம். மிருகங்கள் சங்கீதத்தைக்கேட்பதால்மட்டுமே ஆநந்தமடைகின்றனவே ஒழிய, தாம்பாடி பிறரைக்களிப்பித்ததாக நாம் பார்த்தோமென்றாவது கேட்டோமென்றாவது சொல்ல முடியாது. பறவையினங்களோ அவ்வாறின்றித்தாம் பிறர்பாடக் கேட்டு மகிழ்வதல்லாமல் தாமும் இனியகுரலுடன் பாடி மற்றைப் பிராணிகளுக்கும் பரமாநந்தத்தை யுண்டுபண்ணுகின்றன. பெரும்பறவைகளைக் காட்டிலும் சிறு பறவைகளே அழகாய்ப் பாடுகின்றன. அவைகளின் தொண்டை யமைக்கப்பட்டிருக்கிற விதம் அற்புதமானது. குயில் பஞ்சம சுவரத்துடன் இனிமையாய்க் கூவுவதும், வானம்பாடி விடியற் காலம் நிர்மலமான ஆகாயத்தில் மெய்ம்மறந்து பாடுவதும், அன்றில் இணை பிரியா வண்ணம் தன் பேடைக் கூவியழைப்பதும் மனோகரமாயிருக்கும். மேகமுழக்கத்தைக் கேட்ட மட மயிலும் ஆர்ப் பரித்துத் தன் அழகிய கலாபத்தை விரித்து ஆநந்தக் கூத்தாடுவது அற்புத மயிலுக்கும் ஆற்றங்கரை யோரங்களிலுள்ள அழகிய உத்தியான வனங்களிலும், ஓங்கி யுயர்ந்து அடர்ந்து வளர்ந்திருக்கின்ற விருக்ஷஜாதிகளோடு கூடிய வனங்களிலும் பைம் பொழில்கள் செறிந்த மலைச்சாரல்களிலும் பற்பல வர்ணங்களையுடைய பல ஜாதி பட்சிகள் இனிமை யாய்க் கூவிக் குலாவு வதைக் காண மனோரம்மிய மாயிருக்கும். மானுடர் ஆலாபனம் பண்ணும் விதமே சில பக்ஷிகள் இன்குரலோடு நீடித்தநேரம் கூவுவதைக்கேட்டால் பாடகர் பாடுகிறார்களோவென்று மயங்கும் படியாயிருக்கும். பைங்கிளிகளும் குருவிகளும் கூட்டங்கூட்டமாய் மரக்கிளைகளிலுட்கார்ந்துகொண்டு மாலைநேரத்து மஞ்சள்வெயிலில் குதூகலித்து ஆர்ப்பரிக்கின்றதைக் கேட்கக் கேட்கப் பிரமாநந்தமாயிருக்கும். நம் மைனாம்பறவைபாடுவதும் பலருமறிந்தவிஷயம். இளைஞர் அதன்பாட்டைக்கேட்டு

ஆநந்திக்கவே அதனைக் கூட்டிலடைத்து வைத்துக்கொண்டு வளர்ப்பார்கள். நம் நாட்டுக்கவிஞர்கள் அணைமா அல்லது கேகயப்புள்ளென்ற ஒருபறவையைப்பற்றிப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். அதனையே கிஞ்சுகப்புள்ளென்றுங் கூறுவோம். ஜீவசிருஷ்டியில் இப்பறவைபோன்ற நுட்பமான செவியையுடையது வேறொன்றுமில்லை. மலையின் உன்னதப்பிரதேசங்களி லுட்கார்ந்து நல்வீணைதடவி நல்லபண்களை வாசிக்குங்கால் இக்கிஞ்சுகம் பறந்தவண்ணமே ஸ்தம்பித்துக்கேட்டு ஆநந்தித்துக்கொண்டிருக்கும் அது இவ்வண்ணம் வீணாகானத்தின் ஆநந்தத்தில் மூழ்கியிருக்கிற சமயம்பார்த்து அதனைப்பிடிக்கக் கருதிவந்த கொடியர்கள் தம்முடன் கொணர்ந்த பறவையையெடுத்துப் பலமாயடிக்கவே "பறைபடவாழா அசுணமா" என்ற கவிக்கிணங்க அப்பறவை அக்கொடிய ஓசையைப்பொறுக்கமுடியாமற் செத்துக்கீழேவிழும். அதனை அம் மாபாதகரெடுத்துச் சட்டெரித்து அதன் ஊனைத்தின்று தம்மூனைப்பெருக்கிக் கொள்வார்கள். அவ்வளவு கானரசமறியும் அப்பேதைப்புள்ளைக்கொல்ல இப்படுபாவிகளின் மனம் எவ்வாறிசைந்ததோ. அந்தோ! நினைக்கையிலேயே நெஞ்சுருகுகின்றதே! இவ்வறிவிலிகள் தன்னைத் தஞ்சமென்றடைந்த புறாவைத் தன் தசையரிந்து கொடுத்துக்காப்பாற்றின சிபிச் சக்கிரவர்த்தியின் கதையை அறிந்திருந்தால் இக்கொடிய செயல் செய்வார்களா? ஓகோ! கொடிது!! கொடிது!! இப்பாவிகளுக்கு முய்வுண்டோ! நம் நாட்டுப்பறவைகள் அழகிற்சிறந்தவை! ஐரோப்பா அமெரிக்கா முதலிய அந்நியநாட்டுப்பறவைகள் இன் குரலோடு பாடுவதிற சிறந்தவை. ஆங்கிலநாட்டு அன்றில் பறவையென்று சொல்லக்கூடிய நைட்டிங்கேலென்ற பறவையின் இன்குரலைக்கேட்கக் கர்ணாமிருதமாயிருக்கு மென்று ஆங்கிலக்கவிகள் பலவிடங்களிற் புகழ்ந்திருக்கின்றனர். அமெரிக்கா தேசத்துப் பரிகசிக்கும்பறவையோ (Mocking bird) போனகிராப் (Phonograph) வாத்தியப்பெட்டிபோல் எவர்குரலையும் சிறிதும் வித்தியாசமின்றித் தத்ஸ்வரூபமாய்ப் பாடிக்காட்டும் சக்தியுடையது. அப்பறவை அமெரிக்கர் வீட்டண்டை நம் காகமுதலிய பறவைபோல் சாதாரணமாயுலாவித்திரியும். அவைகள் சிலகாலம் நைட்டிங்கேலினுமினிமையாய்ப்பாடுமென்று இவர்கூறுகின்றனர். உத்தியான வனங்களில் உலாவித்திரியும் வண்டுகள் தேன்குடித்து மதர்த்து ரீங்காரம்

பண்ணுவதைக்கேட்க ரஞ்சிதமாயிருக்கும். இவைபோன்ற அறுகாற்சிறுபறவைகளில் கிரிக்கெட்டு (Cricket) வெட்டுக்கிளிமுதலிய சிறுபறவை பாடிக்களிக்கும். நாம்வெறுக்கும் கொசுகுகளின் நுட்பமான குரலும் செவிக்குச் சிலசமயங்களி லின்பத்தைப் பயக்கின்றது. கொசுகுகளும் கானரசமநுபவிக்கின்றன வென்பதற்கு ஹிராம் மாக்ஸிம் (Hiram Maxim) என்ற சாஸ்திரபண்டிதர் ஒரு வியப்பான திருஷ்டாந்தங் கூறியிருக்கின்றனர். அதுவருமாறு 1878-ம் ஆண்டு நியூயார்க் பட்டினத்தில் மேற்கூறிய பண்டிதர் மின்சாரவிளக்குகள் சம்பந்தமாய்ச் சில ஏற்பாடுசெய்து வந்தனர். அவ்விளக்குகளுள் ஒன்றின்பக்கல் பல்லாயிரம் கொசுக்கூட்டங்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. இவ்வாறே விளக்கண்டை மட்டும் இக்கூட்டமிருக்கக் காரணமென்னவென்று சோதித்துப் பார்த்தபொழுது அக்கொசுகுகள் ஆண்கொசுகுகளென்றும் அவ்விளக்கின்கண் கொசுகோசைபோன்ற ஒருநுட்பமான தொனியுண்டாக அத்தொனியை அவ்வாண் கொசுகுகள் தம் நாயகிகளின் இன்குரலென மயங்கிக் குதூகலித்து ஆநந்தபரவசமடைந்தன. அவ்வற்புதக்காட்சியைக்கண்ணுற்ற அப்பண்டிதர் அதனைப்பின்னும் பரிசோதிக்கவேண்டி அம்மாதிரியான நுட்பவோசையுண்டாக்கும் ஒருசிறு கருவியமைத்து இயங்கச்செய்யவே அவ்வோசையைக் கேட்டமாத்திரத்தில் அயலிலிருபது கஜங்களுக்குள்ளிருந்த கொசுகுகளெல்லாம் உடனே கூடிக் குதூகலிக்கத்தொடங்கின. அச்சமயம் அப்பண்டிதருக்கிருந்த ஆநந்தத்தையும் ஆச்சரியத்தையும் அவரவரே ஊகித்துக்கொள்ளலாம். முற்கால கிரேக்கரும் தற்கால சீனரும் 'சிகேடா' என்ற ஓர் சிறு பறவையின் பாட்டைக்கேட்டுக் களிப்புறுவது வழக்கம். நாம் நம் மைனும்பறவையைப்பிடித்துப் பஞ்சரத்திலடைத்துவைத்துப் பாட்டுக்கேட்டு மகிழ்வதுபோல அவர்களும் இச்சிறுபறவையைக் கூட்டிலடைத்துவைத்து பலமுறை அதன்பாட்டைக்கேட்டு மகிழ்வுறுகின்றனர். சீனர்கள் இப்பறவையின் உருவத்தையே சங்கீதத்துக்கறிகுறியாகத் தங்கள் வாத்தியங்களின்மீது அது உட்கார்ந்திருக்கும் பாவனையாய்ச் சித்திரிக்கும் வழக்கத்தை இன்றும் அநுசரித்துவருகின்றனர். சாந்தமே உருவெடுத்து வந்திருக்கிறதென்று சொல்லத்தக்க புறாக்களும் சங்கீதத்தில் பிரியமுடையவை. ஆங்கிலநாட்டின் செஸ்ஷையர் என்ற ஊரில் லீ என்ற ஒருபிரபுவிருந்தார்.

அவர்மகள் ஒருநாள் வாத்தியம்வைத்து வாசித்துக்கொண்டிருக்குங்கால் ஒருபுரு தன்கூட்டினின்றும் வெளியேறி அவ்வீட்டுச்சாளரத்தில் வந்து உட்கார்ந்து அவ்விளமாது வாசித்த ராகத்தைக்கேட்டு ஆனந்தித்தது பாட்டு நின்றவுடனே அது அவ்விடம் நில்லாமற் கூட்டிற்குத்திரும்பியது. அம்மாது அந்தராகம் வாசிக்கும்போதெல்லாம் அப்புருவும் வந்துகேட்டு மகிழும். அவ்வொரேஇராகத்தில்மட்டுமே அதற்குப் பிரியமிருந்ததாகவும் மற்றஇராகங்கள் பாடுங்கால் அது சிறிதும் லட்சியம் பண்ணுகிறதில்லையென்றும் கூறியிருக்கின்றனர். பின்சு (Finch) கனரி (Canary) முதலியவைகள் சாவித்திரிமுதலிய இராஜகன்னிகைகளைப்போல சுயம் வரம் நாடிச்செல்லுங்கால் நன்குபாடக்கூடிய நாயகனையே வரித்துக்கொள்ளுமென்றால், அவைகளுக்குள்ள சங்கீதஞானத்தைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ. அன்னப்பறவையும் தன் ஆயுள்காலத்தில் ஒரேமுறை பாடுமென்றும் அக்காலம் அதன் மரணசமயமென்றும் ஆங்கிலக்கவிஞர் கூறுவர். இவ்வாறு மனிதன் கண்ணுக்கும் காதுக்கும் மனத்துக்கும் பரமசந்தோஷத்தையுண்டுபண்ணுவதன்றி அவன்காரியங்களுக்கெல்லாம் பெருதவிபுரிந்துவரும் பறவைகளை மனிதன் கொல்வது பெருங்கொடுமையன்றோ. வைகறையில் முதலிலெழுந்து நம்மை எழுப்பும் கோழிக்குலம் அக்காலம்கூவிச் சிறகுகொண்டு படபடவென்று அடித்துக்கொள்வதை ஆராயுங்கால் இம்மாபாவிகள் புள்ளினத்துக்குச் செய்யுங் கொடுமையை நினைத்து வயிறெரிந்து ஆங்காரப்பட்டு இக்கொடுமையைச் சகியாமல் வாய்விட்டலறித் தம் சிறகாகிய கைகளால் மடேர் மடேரென்று அடித்துக்கொள்ளுகின்றனவோ என்று கூறினும் குற்றமுறாது. இப்பறவைகளின் அதிர்ஷ்டத்தால் நம்காருண்ணிய இந்திய கவரன்மெண்டார் பறவைகளைக்கொன்று அந்நியநாட்டுக்குக் கொண்டுபோதல் கூடாதென்று சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்களென்பதைக் கேள்விப்படுவது குயிலோசையினும் இனிமையாயிருக்கின்றது. "குயவனுக்குப்பலநாள் வேலை தடிகாரனுக்கு ஒருநாழிகைவேலை" என்று தெய்வசிருஷ்டியாகிய பறவையை இனியாவது கொல்லாமலிருப்பார்களாக.

(இன்னும்வரும்),

எஸ். சாமிநாதையர்.

இப்பத்திரிகையைப் படிப்பவர் தயைசெய்து அடியிற்கண்டவாறு பிழைதிருத்தஞ்செய்து படிப்பாராக.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	27	இதனடுத்து ...	இதனையடுத்து
14	6	என்பது ...	ஒன்பது
15	21	வைதவின் ...	வைதவைவின்
16	30	ச்ராமாயண ...	ராமாயண
17	6	நால்வாய்த்துமும்மதத்து	மும்மதத்து நால்வாய்த்துச்
18	28	திரிகால ...	திதிகால
19	31	நாமான்குளதா ...	நாமாண் டுளதா
20	21	யென் ...	வென்
21	31	கரமுற ...	காமுற
23	5	மாப்புனை ...	பாப்புனை
26	1	ஞானஅ வமிர்த ...	ஞான மிருத
,,	18	கோடி ...	கொடி
28	1	நிலமைலி ...	நிலைமையி
,,	4	வாயாகும் ...	வகையாடும்
29	20	பேடை ...	பேட்டை
,,	22	மயிலுக்குய் ...	மாயிருக்கும்.
30	2	அணைமா ...	அசுணமா
,,	11	பறவையை ...	பறையை

ப—ர்.

REGISTERED
7 - APR 1903
MADRAS

ஜனவரி 1903.

உ

குமரன் துணை.

விவேகபாநு

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

சம்புடம் 2 } 1903ஞ ஜனவரிமீ { இலக்கம் 2

DELHI DURBAR.

டில்லியில் நடந்த முடிசூட்டுக்கொண்டாட்டம்.

பானுவின் ஒளி என்றும் மழுங்காத நம் காருண்ய ஆங்கில அரசாட்சியின் பெரும் பாரத்தைச் சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் 9உ நம் 7-ம் எட்வர்ட் மன்னர் ஏற்றுக்கொண்டு உலகிற்சிறந்த லந்தன் மாநகரில் மிகச்சிறப்புடன் முடிசூடிக்கொண்டது யாவரும் அறிந்த விஷயம். அச்சமயம் இந்நாட்டினின்று பற்பல பதவியுள்ள பல பிரதிநிதிகள் அவ்வற்புதக்காக்ஷியைக்கண்டு களிக்கும் வண்ணம் லந்தன் மாநகருக்குச் சென்றமையாலும் அந்நாட்டினின்றும் பலர் நம் நாட்டுக்கு வந்து போக இயலாமற்போனமையாலும் முடிசூட்டுக் கொண்டாட்டம் ஒரே காலத்தில் எல்லா இடங்களிலும் நடக்கக் கூடாமற்போயிற்று. ஆகையால் அதனை இப்புது வருஷத்தின் முதல் நாளில் கொண்டாடுவதாக நம் இராஜாங்கத்தார் தீர்மானித்திருந்தார்கள். அவ்வண்ணமே நிகழும் ஜனவரிமீ முதல் நாளாகிய வியாழக்கிழமையன்று, சந்திரவம்சத்துப்பல்லரசர்கள் செங்கோலோச்சியதும் தர்மபுத்திராதிகள் இராஜசூயயாகம் நடத்திப்புகழ்பெற்றதும் அக்பர் முதலிய மொகலாயச் சக்கரவர்த்திகள் முடிசூட்டப்பெற்றுப் பல்லாண்டுகளாய் அரசாக்ஷி செலுத்தி வந்ததுமான டில்லிமாநகரத்தில் நம் எட்வர்ட் அரசர் இந்தியச்சக்கரவர்த்தியென்ற பட்டஞ்சூட்டிய

மகோற்சவம் எல்லா வைபவங்களுடனும் மிகச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. சக்கரநெறிநிற்கும் சாந்தகுணமுள்ள 30 கோடி ஜனங்களுக்குச் சக்கரவர்த்தியாகிறதென்றால் அதனினும் உயர்பதவி இப்பூவுலகிலுண்டோ? அக்கொண்டாட்டத்திற்குப் பல்லாயிரம் மைல் தூரத்திலின்றும் மகுடவர்த்தனர், குறுநிலமன்னர், மாகாணக் கவர்னர்கள், லெப்டினெண்ட் கவர்னர்கள், முக்கிய கமிஷனர்கள், பத்திராதிபர்கள், வித்துவான்கள், கனதனவான்களாகிய பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். நாலைந்து மாதங்களாக இம்மகோற்சவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் லக்ஷக்கணக்கான செலவில் நடந்து வந்தன. 12,000 பேர்கள் விசாலமாயுட்காரும் வண்ணம் டில்லிமாநகர்ப்புறத்தின் ஒரு வட்டமான வெளியில் வில்வளைவையும் குதிரைக்குளம்பையும் நிகர்த்த ஒரு வட்ட மண்டபம் கைதேர்ந்த பல்லாயிரம் சிற்பிகளால் மிக அழகாய் நிர்மாணிக்கப்பட்டது. அது விசுவகர்மாவின் சிருஷ்டிதானோவென்று கண்டோர் வியக்கத்தக்கதாயிருந்தது. அதினின்றும் ஐந்து மைல் தூரத்தில் அடிக்கப்பட்ட பல கூடாரங்கள் அம் மைதானத்துக்கு இனிய காட்சியைத் தந்தன. நம் இந்துதேசச் சிற்பிகள் இரவும் பகலும் படாதபாடெல்லாம்பட்டு அதனைப் பலவிதமாய்ச் சிறப்பித்திருந்தனர். இந்திய சிற்பிகளிற் கைதேர்ந்த விற்பன்னர்கள் உலகமுவப்ப மிக நுட்பமாய்ச்செய்த அரியபெரிய வேலைகள் அங்கு ஏற்படுத்தப்பட்ட பொருட்காட்சிச்சாலையை அலங்கரித்தன. அக்கொலுமண்டபம் 500 அடி நீளமும் 50 அடி அகலமுமுள்ள ஒரு மேடையிலமைக்கப்பட்டிருந்தது. எங்கும் வெண்சாந்து தீட்டப்பெற்றாற்போல் வெள்ளைவெளேலென்ற தோற்றமுடையதாய் அம்மண்டபம் மின்னல்போன்ற ஒளி வீசாநின்றது. அதனுச்சியில் ஆங்காங்குத் தங்கமுலாம் பூசின ஸ்தூபிகள் சூரிய கிரணத்தால் ஜொலித்தன. மெத்தை தைக்கப்பட்ட பலகைகளும் நாற்காலிகளும் வரிசைவரிசையாய்ப் போடப்பட்டிருந்தன. இம் மகோற்சவத்தைக் கண்டு களிக்க லட்சக்கணக்கான ஜனங்கள் காலைமுதற்கொண்டே திரள் திரளாய் ஆற்றுவெள்ளம் பெருகியதுபோல் கொலுமண்டபத்தையணுகிச் சென்றுகொண்டிருந்தார்கள். சபாமண்டபத்தைச்சுற்றி 40,000 யுத்தவீரர்கள் காவலாளராக அணிவகுத்து நின்றார்கள். அதனால் ஜனங்கள் வெளியே நிற்கவேண்டி வந்தது. சூரியன் உச்சிக்கு

வருமுன்னமே மகுடாதிபதிகளும் மற்றைய விருந்தினரும் வரத்தொடங்கினார்கள். வரவர அவரவர் நிலைமைக்குத்தக்க ஆசனங்களளிக்கப்பட்டன. 12 மணி சுமாருக்குக் **கன்னாட்கோமகனும்** அவரது உயிர்த்துணைவியும் விஜயஞ்செய்தார்கள். அவர்கள் இராஜபதவிக்குத்தக்க அழகும் அந்தஸ்தும் வாய்ந்த உடுப்புக்கள் தரித்திருந்தனர். 15 நிமிஷங்களுக்குப்பின்னர் இராஜப்பிரதிநிதியவர்களாகிய **கர்ஸன் பிரபுவும்** அவரது சுந்தரநாயகியுடன் மிக்கவிமரிசையாய் வந்துசேர்ந்து அக்கொலுமண்டபத்தின் மத்தியில் இரு பொற்சிங்கங்களால் தாங்கப்பட்ட பொற்பீடத்தில் கம்பீரமாய் வீற்றிருந்தனர். அவர் தரித்திருந்த பொன்மயமான உடுப்புப் பலவர்ணங்களுடன் தகதகவென்று மின்னிக் கண்ணைப்பறித்தது. அச்சமயம் அவ்விசித்திர மண்டபம் தேவேந்திரனது சபையாகிய சுதன்மம்போல் விளங்கிற்று. அவனைப் புடைசூழ்ந்து வீற்றிருந்த கனதனவான்களும் விவேகிகளும் பலவர்ண உடுப்புக்களுடன் சிறிதுஞ்சப்தமின்றி உட்கார்ந்திருக்குங்கால் அனைவரும் இமையாநாட்டம் பெற்றிலம் என்று நினைந்தார்கள். அவ்வின்புற்ற காக்ஷியைக் கண்டுகளிக்கப் பதினாயிரம் கண்களும் போதா. நம் மகுடவர்த்தனர் தரித்திருக்கும் முழுமணிப்பூண்கள்வீசுமொளியும், அவர்களது பட்டாடைகளின் பகட்டொளியும், மின்னார்களது பல்லொளியும், ஏனையோரது கண்ணொளியும் ஒருங்குசேர்ந்து கோடிசூரியப்பிரகாசம்போல் விளங்கின. அவ்வற்புத மண்டபத்தின் படிக்கட்டுக்களில் மின்னலைப்போல் பளீர் பளீரென்றொளிராநின்ற கத்திகளைக் கையிற்றாங்கின பல வீரர்கள் கண்டோர் மனத்தையும் கண்களையும் கவரத்தக்க விநோத உடுப்புக்களுடன் பல பிரதிமைகள் நிற்கின்றனவோவென்று கண்டோர் மயங்கும் வண்ணம் சிறிதும் அசைவின்றி ஒழுங்காய் இருபுறங்களிலும்நின்ற காட்சி நிரம்ப அழகாயிருந்தது. அச்சபாமண்டபத்தைச் சுற்றி 40,000 போர்வீரர்கள் துப்பாக்கி சகிதமாய் அணியணியாய் நிற்கும் அற்புதக்காட்சியும் அருமையாகவே காணப்பட்டது. அச்சேனாசமுத்திரம் நின்ற காட்சியினும் அவர்களனைவரும் ஏககாலத்தில் மண்டியிட்டு வந்தனம்புரிந்து பின்னெழுந்து நின்ற அற்புதக்காட்சியை அம்மம்ம! என்சொல்வது: மனத்தாலும் நினைக்கவொண்ணாதென்றால் எழுத்தாலெழுதவியலுமா? இவ்வற்புத நேத்திரானந்தத்துக்கு நிகராய் சுரோத்திரானந்தம் பயக்கு

ம் வண்ணம் இடையிடையே வாத்தியங்கள் கோஷித்துக்கொண்டிரு
ந்தன. 12½ மணி சுமாருக்கு அங்கியநாட்டுக் காரியதரிசி இராஜப்
பிரதிநிதியின் கட்டளையைச்சிரமேற்கொண்டு அம் மகாசபையைத்
திறந்தனர். நம் சக்கரவர்த்தியினிடமிருந்து வந்த கட்டியக்காரர்
(Herald) இராஜப்பிரதிநிதியின் அநுமதியின்பேரில் நம் சக்கரவர்த்
தியினிடமிருந்து கொணர்ந்த மகுடாபிஷேக மகோற்சவ ஆக்ஞாபத்
திரத்தை வெண்கலக்கடையில் யானை புகுந்தாற்போல் குதிரைமேலி
ருந்தவண்ணமே அழுத்தந்திருத்தமாய்க் கம்பீர தொனியுடன் அனை
வரும் தெளிவாய்க்கேட்டறியும் வண்ணம் படித்து முடித்தனர். உட
னே அண்டசராசரங்களும் அதிர்ச்சியடையும்படி 101 பீரங்கிவெடி
கள் முழக்கப்பட்டன. பார்ப்பவரெல்லாம் தேவலோகத்திலிருந்து
மின்னலுமிடியும் நம் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக கோலத்தைக்
கண்டு களிக்க வந்தனவோவென்று பிரமிக்கலாயினர். 'மின்னுக்கெ
ல்லாம் பின்னுக்குமழை' யென்பதற்கிணங்க நம் இராஜப்பிரதிநிதி
யவர்களும் உடனே யெழுந்துநின்று தம்மைப்புடைசூழ்ந்த மகுடாதி
பதி முதலியோரடங்கிய பெருஞ்சபையைநோக்கித் தமக்குச் சமயோ
சிதமாய்த்தோற்றிய சில கருத்துக்களையும் நம் சக்கரவர்த்தி நம்மீது
கருணைகூர்ந்தனுப்பிய நற்செய்திப்பத்திரத்தின் கருத்துக்களையும்
வெளியிட்டு ஒரு பிரசங்க மாரி பொழிந்தனர். அப்பத்திரத்தின் முக்
கிய விஷயம் வருமாறு :—"இந்தியாவைத் தாம் ஆண்டு நிர்வகிப்பதி
ல் தம் அன்னையினது நெறிகளைப்பற்றுக் கோடாகக்கொண்டுதயவை
யும் நீதியையும் தமது ஆட்சியின் பிரமாணங்களாக மேற்கொண்டு
காலஞ்சென்ற விக்டோரியா பெருமாட்டியார் எவ்வாறு ஜன
ங்களால் பூஜிக்கப்பட்டு வருகிறார்களோ அவ்வாறே தாமும் செய்வ
தாக நிச்சயித்திருப்பதாகவும் தம் குடைநிழலின்கீழ் வாழும் மன்னர்
கள் பிரஜைகள் முதலியோரது சுதந்தரங்களைக் காப்பதும் அவர்களு
டைய அபிவிருத்தியை முற்படுத்துவதும் அவர்களின் உரிமைகளுக்
காகச் சலியாது உழைப்பதுமே தமது அரசாக்ஷியின் இலக்ஷியமென்
றும் வற்புறுத்தி வாக்கருளினர்." இதுநிற்க. நம் சக்கரவர்த்தி சுதேச
மன்னர் பலருக்குக் கௌரதாபட்டங்கள் கொடுக்கும்படி ஆக்ஞை
பிறப்பித்திருக்கின்றனரென்றும் பஞ்சநிவர்த்திவிஷயமாய் இராஜாங்க
த்தாரிடம் கடன் வாங்கியிருந்த சுதேசமன்னரிடம் மூன்று வருஷ

வட்டி கேட்பதில்லையென்றும் குடிகள் விஷயத்தில் செய்ய உத்தேசித்
திருக்கிற நன்மை பின்னர் வெளிப்படுத்தப்படுமென்றுங்கூறி நிறுத்
தினர். பின்னர் கௌரவபட்டங்கள் கொடுக்கப்பட்டன. அதன்
பின்னர் சுதேசமன்னர்கள் ஒவ்வொருவராய் இராஜப்பிரதிநிதியும்
கன்னாட்டுக் கோமகனும் வீற்றிருந்த மேடைமேற்சென்று அவ்விருவ
ரிடமும் வாழ்த்துக்கூறித் திரும்பினர். மன்னர்களெல்லாம் தத்தம்
அந்தஸ்துக்குரிய ஆடையாபரணங்கள் அணிந்து சென்று அக்கொலு
வீற்றிருப்பவரிடம் சிலநிமிஷங்கள் பேசித்திரும்ப, மிக்க விவேகியான
பரோடா மகாராஜா மட்டும் எவ்வித ஆடம்பரமுமின்றிச் சாமான்ய
வெள்ளையுடுப்புத்தரித்துக் கையிற்றடியொன்று பிடித்துக்கொண்டு
மனமொத்த மித்திரர்களுடன் சம்பாஷிக்கும் வண்ணம் சமயோசித
மான ஓரே வார்த்தை சொல்லித் திரும்பினராம். இவ்வரசரது கல்
வித்திறமையும் தாராள சிந்தையும் மனோதிடமும் கம்பீரகுணமும்
மிகச்சிறப்பிக்கத்தக்கன. இது முடிந்த பின்னர் வட்டமண்டபத்தி
னின்றும் மும்முறை "ஜயவிஜயீபவ" என்ற பேரொலி முழக்கம்
செவிடுபடும்வண்ணம் எழுந்ததும் அவ்வொலி எதிரொலித்தாற்போல்
சேனாசமுத்திரமும் முழங்கத்தலைப்பட்டது. பின்னர் எங்கும் வாத்
தியகோஷமுண்டாய்ப் பலர் பலநாள் பாடுபட்டுழைத்து வந்த அம்
மகோற்சவமும் ஒருவாறு 3 மணிக்கு முடிவுபெற்றது. அவ்வைபவத்
தின் முழுச்செலவும் இரண்டுகோடி ரூபாயிருக்குமென்று மதிப்பிட்
டிருக்கிறார்கள். அன்றிரவில் கண்டோர் கண்களைப் பறிக்கத்தக்க
அற்புதமான பாணக்காட்சிநடந்தது. சிலபாணங்களில் நம்சக்கரவர்த்
தியினது உருவமும், அவரது இன்னுயிர்த்துணைவியினது உருவமும்,
வேறு சில பாணங்களில் கன்னாட்டுகோமகனுருவும் அவரது பெருமா
ட்டியினுருவும் மற்றும் சில பாணங்களில் கர்ஸன் பிரபுவினுருவும்
அவர் அருமை மனையாட்டியின் உருவமும் ஆகாயத்தினின்றும் மிக்க
கம்பீரமாய் இறங்கினது பார்க்கப்பார்க்க அழகாயிருந்தது. அவ்
வொப்புயர்வற்ற காட்சிகளையெல்லாம் "காணாத கண்ணென்ன கண்
ணே. கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே."
25 வருஷங்களுக்கு முன்னர் அதே இடத்தில் நடந்த மகோற்சவத்தி
னும் இவ்வுற்சவம் பன்மடங்கு ஆடம்பரமாயிருந்தது என்பதற்குச்
சிறிதுமையமில்லை. ஆனால் அக்காலம் குடிகளுக்குக் கிடைத்த

இராஜவாக்கு மிக்க மேன்மையானது. நம் சக்ரவர்த்தி அதனையே பற்றுக்கோடாகப்பிடித்து நடப்பாரானால் நம்நாட்டுக்குப் பேருபகாரமாயிருக்கும். இம்மகோற்சவம் டில்லிமாநகரத்தின் மாத்திரமன்றி நம் இந்துதேசத்தின் ஒவ்வொரு பட்டணத்திலும் மிக்க குதூகலத்துடன் ஒரே முகூர்த்தத்தில் கொண்டாடப்பட்டது. 16,200 கைதிகள் சிறையினின்றும் விடுதலை செய்யப்பட்டனர். இராஜவிசுவாசமுள்ள கனதனவான்களின் செலவில் ஊரூராய்ப் பல்கோடி ஏழை ஜனங்கள் உண்டி உடை உதவப்பெற்றனர். அவர் செலவிலேயே பள்ளிச்சிறுவர்களும் சிறுமிகளும் பல்வகை ருசியுள்ள பக்ஷணங்கள் வழங்கப்பெற்றனர். அன்று சந்தோஷங்கொண்டாடாதவரொருவருமில்லை. ஒரு சிற்றரசர் தமக்குண்டான பேரானந்தத்தால் 40 லட்சரூபா வரியைத் தம் குடிகளுக்குத் தள்ளிக்கொடுத்து இராஜவிசுவாசத்தை விளக்கினராம். இவர் போன்ற விவேகிகள் நம் நாட்டிற் பலரிருந்தால் குடிகளுக்குக் குறையேது. நம் இராஜாங்கத்தாரும் அவ்விதப்பேருபகாரஞ்செய்தால் குடிகள் அந்நன்றியை என்றும் மறவார்கள். பெருநன்மைகளை இம்மகோற்சவகாலத்தில் எதிர்பார்த்த நம் குடிகள் இராஜப்பிரதிநிதியவர்களது மொழியால் மட்டும் திருப்தி கொள்ளவில்லை. காலத்தாற்செய்த நன்றியன்றோ ஞாலத்தின்மாணப்பெரிதாம். "நாளை வரும் பலாக்காயினு மின்றுவரும் களாக்காயே நன்றன்றோ"? கோலஞ்சிவாழுங் குடிகளது குறை கூடியசீக்கிரங் குறைபடுமென்று எதிர் பார்க்கிறோம். 'குடியுயரக்கோலுயரும். கோலுயரக்கோனுயர்வான்' என்ற அருமை நீதியை நம் இராஜப்பிரதிநிதியவர்களும் பல்லாயிரம் சிவிலியூ உத்தியோகஸ்தர்களும் சிரமேற்கொண்டு நம் குடிகளின் நன்மையை நாடி அவர்களைக் கண்ணினைக் காக்கின்ற இமையிற்காப்பாராக. 'நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை' என்ற நன்மொழி கூறி நாமும் நிறுத்துவோம்.

பத்திராதிபர்.

The Vernaculars and the Universities Commission.

சுதேசபாஷையும் சர்வகலாசாலைக்கமிஷனும்.

நம் காருண்ய கவர்னர்ஜெனரலாகிய கர்ஸன் பிரபு நம்மிந்திய இராஜ்யபாரத்தை யேற்றுக்கொண்டபின் இராஜாங்கத்தில் பல விஷயங்கள் சீர்கேடான நிலைமையிலிருக்கின்றனவென்று அறிந்து அவற்றைச் சீர்திருத்தக்கருதிப் பல விசாரணைச்சங்கங்களை நியமனஞ்செய்தது யாவரும் அறிந்த விஷயம். அவ்வாறு நியமனமான சங்கங்களில் சர்வகலாசாலை விசாரணைச்சங்கமுமொன்று. எழுவரடங்கிய அச்சங்கத்தார் (பின்னொருவர் சேர்க்கப்பட்டனர்) தம் விசாரணையை முடித்துத் தம் கருத்தையும் புத்தகரூபமாய் வெளியிட்டிருக்கின்றனர். அக்கருத்துக்களிற் பல நம் நாட்டாரின் வித்யாபிவிருத்திக்கு அநுகூலமாகத் தோற்றவில்லை. அவற்றுள் சுதேசபாஷா விஷயத்தைப்பற்றி அவர்கள் வெளியிட்டிருக்கும் கருத்தை மட்டுமே இங்கு ஆராய்ச்சி செய்வோம்.

எம். ஏ பரீக்ஷை நீங்கலாக மற்றைப் பரீக்ஷைகளில் சுதேசபாஷாப் பயிற்சியே கூடாதென்றும், ஸம்ஸ்கிருதம், கிரேக், லத்தீன், அரபிக், பெர்ஷியன் முதலிய பழைமையான பாஷைகளின் பயிற்சியே கட்டாயமா யிருத்தல்வேண்டு மென்றும் மற்றைப் பரீக்ஷைகளுக்குச் சுதேசபாஷையில் வியாசமெழுதல், மொழி பெயர்த்தல் முதலியன இன்றியமையாதனவென்றும் அவை இலக்கண வழுக்களின்றி நன்னடையி லிருத்தல்வேண்டுமென்றும் சுதேச பாஷைகள் அபிவிருத்தியாக வேண்டுமென்பதே தங்கள் கருத்தென்றும் அதற்குச் சம்ஸ்கிருதப் பயிற்சியே பேருதவி யென்றும் அக்காரணங்கொண்டே வங்காளம், பம்பாய் முதலிய வடநாட்டுப்பாஷைகள் விருத்தியடைந்திருக்கின்றனவென்றுங் கூறுவர். இவற்றைச் சிறிது ஆராய்வோம்.

சுதேச பாஷைகளை யொழித்துச் சம்ஸ்கிருதமுதலிய பாஷைகள் பயிலல் இன்றியமையாதென்பதுயுக்திக்கும் அநுபவத்துக்கும்பொருந்தாத விஷயம். சுதேசபாஷைகளுக்கெல்லாம் முதன்மையாய் நிற்கும்

நம் தமிழ்ப்பாஷையை யெடுத்துக்கொள்வோம். பெர்ஷியன் பாஷையை யேற்றுக்கொண்ட கமிஷனர்கள் நம் தமிழைத் தள்ளக் காரணமென்ன? இம்மாண்புள்ள பாஷையின் பெருமையை அக்கம்மிஷனர்கள் அறியாததே முதற்காரணமாகும். இப்பாஷையின் பெருமையை யெடுத்துச் சொல்லத் தக்கவர்களை அச்சபையார் விசாரியாதது அடுத்த காரணம். இது விஷயமாய்க் காலஞ்சென்ற பூண்டி அரங்கநாத முதலியார் அவர்கள் போன்ற தமிழ்ப் பயிற்சி நன்குசெய்த ஒரு சிங்கம் அச்சபையை யணுகியிருக்குமானால் தமிழின் நிலைமை இவ்வாறாமோ? தேனினுமினிய நம் தமிழின் பெருமையையும் பழைமையையும்பற்றி என்சொல்வது. கம்பன் கருத்தைக் காண முடியுமா? வள்ளுவர் குறளை விள்ளமுடியுமா? ஔவையைச் செவ்வையா யறிய முடியுமா? கோவையார் பெருமையைக் கூற முடியுமா? தேவாரப் பெருமைதான் தேறமுடியுமா? பாரதப் பெருமைதான் பகரமுடியுமா? அந்தோ! இத்தகைய மாண்புள்ள தமிழை எள்ளித்தள்ளுதல் கொள்ளத்தகுமோ! இஃது நாம் அபிமானத்துடன்கூற வந்ததன்று. அந்நியநாட்டுப் பண்டிதர்களையே இதற்குச் சான்றாகக் குறிப்போம். "மனிதராற் பேசப்படுகின்ற மிகப்பொலிவும் திருத்தமுஞ் சீருமுடைய பாஷைகளுள் தமிழுமொன்று" என்று கனம் டேயிலர் பண்டிதரும் (Revd W. Taylor) "கிரேக்குப் பாஷையிலும் நயமான செய்யுள் நடையுடையது; லத்தின் பாஷையிலும் பூரணமானது" என்று கனம் வின்ஸ்லோ (Dr. Winslow) பண்டிதருங் கூறுவாரானால் அப்பாஷையின் பெருமையை நாமுங் கூறல் வேண்டுமோ? இப்பாஷையை யெள்ளாது ஏற்றுக்கொள்ளப் பிறகாரணங்களுமுண்டு.

அவையாவன:—

1. தமிழ் ஏனைச் சுதேச பாஷைகளைப்போல் நவீனமானதன்று. மிக்க பழைமையானது. பல வருஷங்களுக்கு முன்னரே எழுதப்பட்ட அரிய பெரிய இலக்கிய இலக்கணங்களையும், பக்திப் பிரபந்தங்களையுமுடையது.

2. மலையாளம், கன்னடம், துளு முதலிய பாஷைகளுக்குப் பெற்றோர் நிலைமையிலிருந்து பேருதவி புரிந்த பெருமையை யுடையது.

3. நம் நாட்டுப் பழைய சரித்திர ஆராய்ச்சிக்கும் மதவாராய்ச்சிக்கும் அதன் பழைய பிரபந்தங்கள் இன்றியமையாதன.

4. கல்வெட்டுச் சாசனங்களை யறிந்து உண்மையை விளக்கப் பெருங் கருவியாய்ப் பயன்படத்தக்க மாண்பையுடையது.

5. நீதியையும் இராஜவிசுவாசத்தையும் புகட்டக்கூடிய அரிய நீதிநூல்களடங்கியது.

6. இப்பாஷை பேசும் சற்றேறக்குறைய ஒரு கோடியே இருபத்தாறு லட்சம் ஜனங்களில் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள் படியாதவர்களாயிருப்பதால் ஏராளமான அத்துணை ஜனங்களுக்கும் நம்நாட்டுக் கல்வியறிவையும் அயல்நாட்டுக்கல்வியறிவையும் எளிதாயூட்டத்தக்கது இப்பாஷையேயன்றோ? இத்துணைச் சிறப்புவாய்ந்த பாஷையை யொழித்துப் பேசப்படாததும் கடினமானதும் முக்கியமாய் மதவாராய்ச்சிக்கே பயன்படத்தக்கதுமான சம்ஸ்கிருத முதலிய பாஷைகளிலொன்றைக் கட்டாயங் கற்கவேண்டுமென்பது நம்மாணவர் எல்லோரும் இத்தமிழ்நாட்டைவிட்டு வடநாட்டிற்போய் வாசஞ்செய்யவேண்டுமென்று சொல்வதையொக்குமெனினும் இழுக்காகாது. இதனால் நாம் சம்ஸ்கிருத பாஷையின் உயர்வுக்கு எவ்விதத்திலும் குறைகூற வந்தோமில்லை. அப்பாஷையின் பெருமையைப் பகரொணாது. அதனாற்றமிழடைந்த பெருமையை நாம் சிறிதும் மறக்கொணாது. பலநாட்டுப் பண்டிதர்களுங் கற்றுக்களிக்கத்தக்க பாஷையை எவர்தாம் குறைகூறுவர். அதனால் நம் தமிழை நாம் கைவிடலாமா? ஸ்ரீ சுவாமிநாததேசிகர், ஸ்ரீ சிவஞானமுனிவர் போன்ற தமிழ்ச்சிங்கங்களுக்கு வடமொழிப்பயிற்சியும் பெருமையைத் தந்தது என்பதை யறியாதாருமுளரோ? தமிழைத்தள்ளிவிடுதல் பொருந்தாதென்று கூறவந்தோமேயல்லது வடமொழிபோன்ற பாஷையின் பெருமையைக் குறைகூற வந்தோமில்லை. நம் கம்மிஷனர்கள் நற்றமிழ் ஆராய்ச்சிக்கு வடமொழிப்பயிற்சியுமின்றியமையாதது என்று கூறியிருப்பின் மிகப்பொருத்தமாயிருக்கும். அவ்வாறின்றி முதல் மூன்று பரீக்ஷைகளுக்கும் தமிழை யொருங்கே யொழித்துவிடும்படியான ஏற்பாட்டைச் செய்ததால் நாமிக் குறைகூறவேண்டியிருக்கிறது. காலதேச வர்த்தமானங்களைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் நம் நாட்டு அறிவு விருத்திக்கு மேனாட்டுச் சாஸ்திரப் பயிற்சியும் கைத்தொழிலபிவிருத்திகளும் முக்கிய சாதனங்களென்பது தெளிவாகும். அவ்வறிவினை ஆங்கிலப் பாஷையினின்றே நாமடைதல் வேண்டும். ஆங்கிலங் கற்பது எளிதன்று. புத்திக்கு மிக்க சிரமத்தைத் தரக்கூடியது. அவ்வாறு கஷ்டப்பட்டுச் சம்பாதித்த கல்விப்பொருளைத் தாம் அநுபவிப்பதுடன் 'கிழமைப்படவாழ்' என்றவண்ணம் பலர்க்கும் பகிர்ந்துகொடுத்தல் கற்றோர் கடனாகும். அவ்வாறு செய்தற்குச் சுயபாஷையே எளிதான கருவியாம். இவ்வெளிதிற் பயன்படும் கருவியைக் கைவிட்டுப் புத்திக்குப் பின்னும் கிலேசத்தை யுண்டுபண்ணக்கூடிய வடமொழி முதலிய பாஷையின் பயிற்சியை வற்புறுத்துவது "கையிலுள்ள பழத்தைவிட்டுத் தொரட்டிப்பழத்துக்கு ஆசைப்படு" என்பதை நிகர்ப்பதன்றிக் "குருவி தலையில் பனங்காயை வைத்ததையும்" நிகர்க்கும். ஜர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாகரிகமடைந்த தேசங்களின் அறிவு விருத்திக்குச் சுயபாஷா விருத்தியே முக்கிய

காரணம். அத்தேசத்தார் லத்தீன் முதலிய பாஷையை யொழித்ததே அத்தேசங்களிற் சகல சாஸ்திரங்களும் தழைத்தோங்கக் காரணமாயிற்று. ஆங்கிலம் முன்னிருந்த நிலைமையையும் சென்ற நூற்றாண்டில் அது அடைந்திருக்கிற அபிவிருத்தியையும் உற்றுநோக்குங்கால் சுதேச பாஷையே ஜனாபிவிருத்திக்கும் கல்வியின் விருத்திக்கும் நாட்டுப் பெருமைக்கும் பிரதான காரணமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றிலங்கும். ஜப்பானியர் சென்ற 50 வருஷங்களுக்குள் விருத்தியடைந்ததற்குக் காரணம் அந்நிய நாட்டு அருமை யறிவைத் தங்கள் சுதேச பாஷையில் அமைத்துப் பெரும் பிரபந்தங்க ளெழுதியதே. அம்மாதிரியான விருத்தியை நாமுமடைய வேண்டுவதன்றோ முறைமை. நம் பரீக்ஷைகளிலிருந்து சுயபாஷைப்பயிற்சியை யெடுத்துவிடின் அது எவ்வாறு விருத்தியாகும்? நம் பாஷை நூல்களை ஆழ்ந்து கற்காவிடின் இலக்கண வழுவில்லா நன்னடை வசனங்களில் உயர் கருத்தமைந்த உத்தம நூல்கள் எழுதமுடியுமா? ஆங்கில நல்லிசைப்புலவர்களின் நூல்களைக் கற்காமல் ஆங்கிலத்தில் நன்னடை வாசகமெழுதுவதென்றால் எளிதில் இயலக்கூடியதா? தமிழிற்கும் இக்காரணமே ஏற்குமன்றோ? சிறு பிராயமுதல் வடமொழிப்பயிற்சியே செய்து வந்தவர்களுக்கு தமிழ்ப் பிரபந்தங்கள் வாசிப்பதென்றால் எளிதோ? ஒரு நிர்ப்பந்தமுமில்லாது தமிழ் பயிலு மிக்காலத்தும் நம் வித்தியார்த்திகள் தமிழைச் சரிவரப் படிக்கவும் எழுதவும் தெரியாதிருக்கும்பொழுது இப்பாஷைப் பயிற்சியும் கைவிட்டு வேற்றுப் பாஷைகளையும் பயிலத் தொடங்கினால் நந்தமிழ் தழைத்தோங்க இடமுண்டோ? ஆகையால் தமிழை எள்ளித் தள்ளுவது எள்ளளவும் பொருந்தாது. இவை நிற்க. சம்ஸ்கிருதப் பயிற்சியே சுதேச பாஷாபிவிருத்திக்குக் காரணமென்றும் அதற்கு வங்காளம், பம்பாய் முதலிய வடநாட்டுப் பாஷைகளே சாக்ஷியென்றுங் கூறுவர். சுதேச பாஷாபிவிருத்திக்கு நாம் மேற்கூறிய வண்ணம் சம்ஸ்கிருதமும் ஒரு காரணமாகுமே யொழிய சம்ஸ்கிருதமே முழுக்காரணமென்பது பொருந்தாது. வடநாட்டின் சுதேச பாஷாபிவிருத்திக்கு அத்தேசவளம், குடிவளம், தேசாபிமானம், பிரபுக்கள் அபிமானம் முதலியனவே தக்க காரணங்களாம். அஃதன்றி அப்பாஷைகள் சம்ஸ்கிருதத்தையே பெரும்பான்மை தழுவினவைகள். நம் தமிழரசர்களும் சிற்றரசர்களுந் தழைத்தோங்கிய காலத்து நம் தமிழுந் தழைத்துத் தலைநிமிர்ந்து நிற்கவில்லையோ? இனி சம்ஸ்கிருத மட்டுமே பயின்றவர்கள் தமிழுக்குழைத்துப் புகழ்படைத்ததாகக் காணோம். சம்ஸ்கிருதமுந் தமிழும், அன்றி ஆங்கிலமுந் தமிழும், அன்றித் தமிழ் மட்டுமே கற்றவர் அப்பாஷையை விருத்திசெய்து புகழ்படைத்தவராவர். ஆங்கிலமும் சம்ஸ்கிருதமும் கற்றவர்களிற் சிலர் தமிழில் பிரபந்தங்கள் எழுதியிருக்கிறார்களென்றால்

அவர்களும் தமிழ் பயின்று எழுதியவர்களாகவும் அன்றித் தமிழ் கற்றவர்களின் பேருதவியைப் பெற்றவர்களாயுமிருப்பார்கள். எவ்வாறிருப்பினும் தமிழ்ப்பயிற்சி யில்லாமல் தமிழ்நாடு முன்னுக்கு வருமென்று நாம் கனவிலும் நினைக்கவொண்ணாது. விரிவஞ்சி இதனை இம்மட்டில் நிறுத்துவோம். மேற்கூறிய காரணங்களால் கமிஷனர்கள் சுதேசபாஷா விஷயத்திற் கூறிய யோசனை எவ்வாற்றானும் தமிழுக்குப் பொருந்தாது. நம் இந்திய கவர்ன்மெண்டார் தாம் வெளியிட்ட அபிப்பிராயங்களில் இதனைக்குறித்து யாதுஞ் சுட்டிப்பேசாது விட்டது பெருவியப்பே. நம் சென்னைக் கவர்ன்மெண்டாராவது தங்கள் அபிப்பிராயங் கொடுக்கும்பொழுது இதனைத் தழுவி யெழுதி நம் தமிழ்ப் பயிற்சியை நிலைநிறுத்தும் வண்ணம் மிக்க தாழ்மையுடன் வேண்டுகின்றோம். நம் தமிழ் நாட்டாரும் ஆங்காங்கு இவ்விஷயமாய்ச் சபைகூட்டித் தீர்மானஞ்செய்து நம் சென்னைக் கவர்ன்மெண்டாருக்கும் நம்மிந்திய கவர்ன்மெண்டாருக்கும் அனுப்பிப் பாதுகாப்பார்களாக. மதுரை, திரிசிரபுரம் என்ற இவ்விரு இடங்களில் மட்டுமே தமிழைப்பற்றித் தனிச் சபைகூடித் தீர்மானஞ் செய்ததாகக் காணப்படுகின்றது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டும்." நம் காருண்ய இந்திய கவர்ன்மெண்டாரும் முடிவான தீர்மானம் சொல்லுமுன் நம் தேசக்ஷேமத்துக்கு அநுகூலமான இம் முக்கிய விஷயத்தைப்பற்றி நீள நினைந்து சிறிது மிடையூறின்றி நம் தமிழைக் காப்பாற்றி யருள்புரிவாராக. நம் செஞ்சொற் றமிழும்

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக" என்று

எந்நாளும் ஆசிகூறிநிற்கும்.

பத்திராதிபர்.

வான்மீகரும் கம்பரும்

(தொடர்ச்சி)

ஸ்ரீராமாவதாரம்

வான்மீகத்தில் தசரதர் தமக்குப் புத்திரப்பேறில்லாத குறையை ஒழிக்கத் தாமே அமைச்சர்களுடன் சூழ்ந்து அசுவமேதம் புரிவதாக முடிவு செய்து, புரோகிதர்களையுங் குருக்களையும் வரவழைத்துத் தங் கருத்தை வெளியிட்டு, அவர்கள் சம்மதப்பட்டதன்மேல் யாகந் தொடங்கினதாகக் கூறியுள்ளது.

அன்றியும் சுமந்திரர் இராமாவதார வரலாற்றைச் சனற்குமார முனிவர் ஓர்கால் முனிவர்களுக்குக் கூறியவாறிதுவாமென்று தசரதருக்குக் கூறியதாகவும் சொல்லியிருக்கிறது.

கம்பராமாயணத்தில் தசரதர் தமது குறையைக் குலகுருவாகிய வசிட்டரிடம் விண்ணப்பிக்க அம்முனிவர் தமது யோக திருஷ்டியால் இராவணாதியர் கொடுமை பொறுக்கமாட்டாமல் தேவர்கள் தம்மிடத்தே முறையிட்டபோது ஸ்ரீமந் நாராயணமூர்த்தி தசரத புத்திரனாக அவதரித்து அவர்கள் துன்பத்தை ஒழிப்பதாக அருளிய வரத்தை யுணர்ந்துகொண்டு அரசனை நோக்கிப் புத்திரகாம யாகஞ்செய்து முடிக்கின் சந்தான முண்டாகுமென்றும், அவ்வியாகத்தைக் கலைக்கோட்டு முனிவனை வரித்து நடத்தவேண்டுமென்றும் தெரிவித்ததாகச் சொல்லியிருக்கிறது.

இனி வான்மீகர் போக்கினால் தசரதர் தமக்குள்ள குறையைத் தமது குலகுருவாகிய வசிட்டரிடம் விண்ணப்பித்து அவர் மூலமாகப் பரிகாரந் தேடவேண்டிய முறையை விடுத்து மந்திரிமார்களோடு உசாவி ஓர் முடிவு செய்துகொண்டதாகவும், அம்முடிவிற்குக் குருக்கள், புரோகிதர் இவர்களுடைய அங்கீகாரம் பெற்றதாகவும், எற்படுவது கௌரவ நடையாகுமா என்பதை ஆலோசிக்கவேண்டியது. அன்றியும் சூரிய குலகுரு வசிட்டமுனிவரென்பது பிரசித்தியாயிருக்கவும், அவரைக் கூட்டத்தில் ஒருவராக அவர் பெருமை குறையக் கூறியுள்ளது. பிள்ளைப்பேறில்லாத குறையைப்பற்றி மந்திரிகளோடு ஆலோசிப்பது பொருந்துமா? உபதேசிக்கும் யோக்கியதையும், முடிசூட்டும் அதிகாரமும் பெற்றுள்ள வசிட்டமுனிவர் அப்பிரதானராக நிற்க மந்திரியாகிய சுமந்திரர் தசரதருக்கு ஸ்ரீராமாவதார வரலாற்றைத் தெரிவித்தாரென்பதனால் வசிட்டர் பெருமை குறைந்து காட்டுகிறதன்றோ? யாகத் தொடக்கத்தில் தசரதர் வசிட்டரை மிக வேண்டிக் கொண்டதாகவும் அதன்மேல் வசிட்டருடைய கட்டளைப்படியே யெல்லாம் நடந்ததாகவும் அவ்வான்மீகத்திலேயே புலப்படுகின்றது.

கம்பருடைய போக்கினால் சுபாவதருமமே வெளிப்படுகின்றது. குருவினிடத்தில் அரசர் தம் குறையை விண்ணப்பிக்கும்போது வெளிப்படுகின்ற ஆசாரிய பத்தியும் பரோபகார குணமும் யாவரும் அநுபவிக்கத்தக்கவை யாதலின் அவற்றைக் கீழ்வருங் கவிகளிற் காண்க.

"எங்குலத் தலைவர்கள் இரவி தன்னினும்
தங்குலம் விளங்குறத் தரணி தாங்கினார்
மங்குனர் இல்லென வரம்பில் வையகம்
இங்குன தருளினால் இனிதின் ஓம்பினேன்"

"அறுபதினாயிரம் ஆண்டும் ஆண்டற
உறுபகை ஒடுக்கியிவ் வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறையிலை எற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டரோ"

"அருந்தவ முனிவரும் அந்தணாளரும்
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினார்
இருந்துய ருழக்குனர் எற்பின் என்பதோர்
அருந்துயர் வருத்துமென் அகத்தை என்றனன்".

வான்மீகம் யாகம் முடியும்போது அவிர்ப்பாகம் பெற வந்த தேவர் கூட்டத்தில், இராவணன் கொடுமையைப் பிரஸ்தாபித்து அவர்கள் விஷ்ணு மூர்த்தியை வேண்டி வரவழைத்துத் துன்ப நிவிர்த்திக்காகத் தசரத புத்திரராக அவதரிக்கத் தூண்டியதாகச் சொல்லுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கதைப்போக்கு மிகத் தளர்ச்சிகாட்டுவதை யுய்த்துணர்க.

கம்பராமாயணம், இந்தப் பாகத்தை அதி கம்பீரமாக விளக்கியிருக்கும் வாய்மைப் பாட்டையும், தேவர்கள் முறையிட்டுக்கிரங்கி விஷ்ணுமூர்த்தியானவர் தாமே யாவும் நியமித்து முன்னதாகவே அமைதி செய்த முறைமையையும் அறிக.

புத்திர யாகம் முடிவில் பாயசம் (பாற்சோறு) கொண்டுவந்த பூதமானது தன் வரலாற்றையும், பாயச விநியோகத்தையும்பற்றித் தசரதனை விளித்து வியவகரிப்பதாக வான்மீகங் கூறுகின்றது. யஜமானனாக இருந்து நடத்துகின்ற கலைக்கோட்டு முனிவனை விடுத்து அரசனிடத்தில் அப்பூதம் வியவகரிப்பதென்றால் அம்முனீந்திரருக்குக் கௌரவஹானியன்றோ சித்திப்பது. கம்பரோ

"வைத்தது தரைமிசை மறித்தும் அவ்வழி
தைத்தது பூதம்அத் தவனும் வேந்தனை
உய்த்தநல் லமுதினை உரிய மாதர்கட்கு
அத்தகு மரபினால் அளித்தியால் என்றான்"

என்று கூறியிருக்கிறார். இதனால் முனிவர் பெருமையும், பூதத்தின் மரியாதையும் இயல்புக்கு மாறாமல் அமைந்தமை காண்க.

இனி, பாயச விநியோகத்தைப்பற்றி ஆராய்வாம். பூதங்கொணர்ந்த பாயசத்தைத் தசரதர் தமது பத்தினிமார் மூவருள்ளும் முதலிற் கௌசலைக்குப் பாதியும், சுமித்திரைக்குக் காற்பங்கும், பின்னர் கைகேயிக்கு அரைக்காற்

பங்கும் கொடுத்து மேலும் மிகுந்துநின்ற அரைக்காற்பங்கை மீட்டும் சுமித்திரைக்கே அளித்ததாக வான்மீகத்தாற் பெறப்படுகின்றது. அவதார சந்தர்ப்பத்தில் கௌசலை இராமனைப் பெற்றபின் கைகேயி பரதனைப் பெற்றதாகக் கூறுகின்றது. சுமித்திரைக்குப்பின் பாயசம் பெற்ற கைகேயி அவளுக்கு முன் பிள்ளையைப் பெற்றதெப்படி? பாயசம் பெற்ற முறையைக் கவனிக்கவேண்டியதில்லையோ? சாமாந்ய பாயசமாக எண்ணலாமோ அதனை? கௌசலைக்குப்பின் கைகேயிக்குக் கொடுத்ததாக ஏற்பட்டால் பரதன் இராமனுக்கு நேரிளையானென்பது நிராக்ஷேபமாகப் பெறப்படுமே? ஆயின் சுமித்திரைக்குக் கொடுக்குமுன் அவளுக்கு இளையாளாகிய கைகேயிக்கு எப்படிக் கொடுக்கலாமெனின், கைகேயி சுமித்திரைக்கு இளையாளென்பது எங்கே கூறப்பட்டது.

தசரதருடைய சத்தியப் பெருமையை நோக்காமல் அவர் வரங்கொடுத்ததைக் காமத்தில் மூழ்கி வரங்கொடுத்ததாகக் கொண்டு, அதற்கு இளையாள் மோகமென்று பெயரிட்டு, வியாக்கியாதாக்கள் விபரீதப்படுத்தினதாகத் தீர்மானிக்க வேண்டியதே. ஆனால் அயோத்தியா காண்டத்தில் பரதன் பரத்துவாச முநிவரிடம் கௌசலையாதி மூவரையும் தெரிவிக்கும்போது கைகேயியைக் கடைசியிற் கூறியிருக்கின்றானே எனின், அங்கே கௌசலையைத் தசரதருக்குப் பட்டமகிஷியென்றும், சுமித்திரையைப் பராக்கிரமசாலிகளாகிய லக்ஷ்மண சத்துருக்கனரைப் பெற்றவளென்றும், கைகேயியைக் கூறும்போது நிந்தித்து "இவள் என்தாய்" என்றும் கூறியிருக்கிறது. சுமித்திரை கௌசலைக்குச் சமீபத்தில் வாமபாகத்தில் நின்றாளென்று பிரஸ்தாபிப்பதாலும், சுமித்திரையை இரண்டாவது பத்தினியென்று வெளிப்படையாகக் கூறாமையாலும், எட்டிநிற்கின்ற கைகேயியை அவள் கொடுமை நோக்கி, தசரத பத்நியென்று சொல்லாமல் தன் தாய் என்று கூறியிருப்பதாலும் கைகேயி மூன்றாவது பத்நியென்று ஏற்படாது. பின்னும் ஆரண்ய காண்டம் பதினாறாவது சர்க்கத்தில் இலட்சுமணரிடத்தில் ஸ்ரீராமரானவர் கைகேயியைப்பற்றிச் சொல்லும்போது "மத்திய மாம்பா" என்று கூறியிருக்கிறார். நடுத்தாய் என்று அதற்குப் பொருள். ஆகவே மூவரினும் கைகேயி இரண்டாவது பத்தினி யென்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகின்றது. இவ்விடத்தில் வியாக்கியானக்காரர் "மத்திய மாம்பா" என்பதற்கு உத்தம மத்திமமாகக் கதி கற்பித்திருக்கின்றார். அவ்வாறு கொண்டாலும் கைகேயி கொடுமைக் குணத்தை மத்திமபக்ஷமாகச்கூறுவது போதுமா? அதமாதமம் என்றன்றோ கூறல்வேண்டும். ஸ்ரீராமர் வாக்காகிய இதற்கும் வியாக்கியானக்காரர் உரைக்கும் வெகுதூரமாய் விபரீதப்பிரசங்கமாக முடியுமென்றொழிக. கைகேயியை மூவரினும் இளையாளென்று சங்கற்பித்துக்கொண்டே புகுந்

தமையால் வியாக்கியாதாக்கள் இவ்வாறு முடிக்கவேண்டியதாயிற்று. இன்னும் அவதார சந்தர்ப்பத்தில் வியாக்கியானக்காரர் பாயச உபயோகத்தின் கிரமப்படி இராமனுக்குப்பின் பரதன் கைகேயியினிடத்திற் பிறந்ததாக நியாயங் காட்டுகிறார். ஆகவே சுமித்திரைக்குப்பின் பாயசம் பெற்ற கைகேயி சுமித்திரை யுட்கொள்ளு முன்னமே தான் அதனை யுட்கொண்டுவிட்டதாகக் கொள்ளவேண்டி வருகிறது. கைகேயியைப் பார்க்கிலும் சுமித்திரைக்குள்ள ஆதிக்கியத்தைக் காட்டுவதற்காக அவளுக்கு இரண்டுமுறை கொடுத்ததாகவும் (அரைக்காற்பங்குபெற்ற கைகேயியினிடந் தோன்றிய) பரதன் விஷ்ணுவின் நான்கிலொருபங்கு அமிசம் பெற்றவனென்று வான்மீகர் கூறியிருப்பதற்கு, விஷ்ணுவின் அரை அமிசமாகிய இராமரில் நான்கிலொருபங்கென்றும் அல்லது இராமர் போக மிச்சமாகிய அரை விஷ்ணுவில் நான்கில் ஒரு பங்கென்றும் வியாக்கியானக்காரர் விளக்கியிருக்கின்றார். இவ்வாறு பின்னவியவஸ்தைக்குக் கிரமமெடுத்துக்கொண்ட வியாக்கியானத்தில் கைகேயி சுமித்திரைக்கு முன்னாகப் பிள்ளையைப் பெற்றதற்குக் காரணம் ஏதென்று புலப்படவில்லை. ஆதலால் கைகேயி யிரண்டாம் பத்தினியென்று கொள்வதே பொருத்தமுடையது. இனி கைகேயியை மணம்புரிந்த காலத்தில் நடந்த வியவகாரத்தைப் பற்றிய கதையொன்று வழங்குவதும், வான்மீகத்தில் அதைப் பிரஸ்தாபித்திருப்பதும் உண்டே எனின் அதனாலும் கைகேயி மூவரினும் இளையாளென்று கொள்ளவேண்டிய கடப்பாடில்லையென்க. இக்கதையைப்பற்றி அயோத்தியாகாண்ட ஆரம்பத்தில் நன்று விசாரிப்பாம்.

இனிச் சம்பூர்ணராமாயணத்தைப் பார்ப்போம். அதில் முதலிற் கௌசலைக்குப் பாதியும் பின்னர்க் கைகேயிக்கு மீதியும் கொடுத்துவிட்டுச் சுமித்திரைக்குக் கொடுப்பதற்கில்லாமல் தசரதர் மயங்கி நின்றபொழுது மற்றை யிருவரும் தத்தம் பாகத்திற் சிறிது சிறிது கொடுத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் அமிசப்பிரஸ்தாபமில்லை. இலக்குமண சத்துருக்கனர் முறையே இராம பரதரைப் பிரியாது மருவிநின்று வந்தமைக்கு ஏது சித்திக்கின்றது. கலியாணச் சந்தடியிற் றாலிகட்ட மறந்ததுபோலத் தசரதர் சுமித்திரையை மறந்ததாக ஏற்பட்டாலும், முதலிருவருக்குங் கொடுத்தாரென்பதே முறையாகும். இவ்விடத்தில் வான்மீகர் போக்குப் பொருந்தாமையாலன்றோ அதனை நழுவவிட்டார் சம்புக்காரர். இவர்க்குக் கைகேயி யிரண்டாம் பத்தினி யென்பதே உடம்பாடாதல் பெறப்படும்.

தசரதர் கைகேயிபால் வைத்துள்ள அன்பை இளையாள் மோகம் என்பதேனோ? அவள் குணசீலாக்கியத்தையும், யுக்தி புத்தியையும், தானவ யுத்தத்தில் தமக்கு உதவியதையும்பற்றி அவள்பால் அன்புடையராயிருந்தார் என்று பெருமைகெடாமற் கொள்வதன்றோ முறையாகும். அதனை விடுத்துக்

காமத்தில் மூழ்கித் தமது குடும்பத்தைச் சகளத்திரப் போராட்டத்தில் தள்ளாடவிட்டார் தசரதர் என்பது பொருந்துமா? சகளத்திரக் கலகம் தமது குடும்பத்தில் உள்ளதாகக் கௌசலை வாக்கால் வான்மீகத்திற் பெறப்படுகின்றது. இவ்வாறு சில இடங்களில் வான்மீகத்திற் காணப்படுவது கதையின் கம்பீரத்தைத் தாழ்த்துகின்றது.

வான்மீகத்திற் பெரும்பெயரெடுத்த ஒரு சாஸ்திரியார் ஸ்ரீராமர் தமக்குப் பட்டங்கட்டுவதாகத் தசரதர் தெரிவித்ததைக் கௌசலையினிடத்தில் கூறுகிற சந்தர்ப்பத்தில்

“தசரதர் உன்னை இனிமேல் அலக்ஷியம்பண்ணமாட்டார். உனக்கு வந்துவிட்டது நல்லகாலம். கைகேயி கர்வம் அடங்கிவிட்டது. உன்னை விட்டுப்பிரியார். உன் *தல்பத்தில் வருவார். கட்டியணைப்பார். முத்தமிடுவார். நீ இட்டதே சட்டம்.” என்று விஸ்தாரமாகப் பிரசங்கித்தார். எவ்வளவு அழகிது! பாருங்கள்!! இந்தப்போராட்டக் குடும்பத் தலைவனிடந்தானோ லோகரக்ஷகன் புத்திரனாக உடம்பட்டது!

இனிக் கம்பர் போக்கைப் பார்ப்போம். பிண்டத்தில் முதலிற் கௌசலைக்கோர்கூறும், பின்னர்க் கைகேயிக்கொருகூறும், அதன் பின்னர்ச் சுமித்திரைக்கோர்கூறுங் கொடுத்து, சேஷத்தையும் சுமித்திரைக்கே கொடுத்தார் தசரதர் என்று கூறியிருக்கிறது. அரை, கால், அரைக்கால் என்ற பின்னப்பிரஸம்ஸை கிடையாது. பரதன் முதலிய மூவரையும் முறையே சக்கரம், சேஷன், சங்கம் இவற்றின் அம்ஸமாகக் கூறியுள்ளது. பத்தினியார் முறைமையைப்பற்றி “இளையளைப் பயந்தனள் இளைய மென்கொடி” என்று அவதார கட்டத்தில் கூறியும், பின்னர் “இருவரையும் இவ்விருவரீந் திளையாளும் நன்றெடுத்தாள” என்று (ஜநகரிடத்தில் விசுவாமித்திரர் ஸ்ரீராமர் வரலாறு கூறுமிடத்து) சுமித்திரை மூன்றாம் பத்தினி யென்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறது. இது இயற்கை நடையாய் யாதோராக்ஷேபத்துக்கு மிடமின்றிச் செல்வதென்பது சொல்லவேண்டியதின்றாம்.

ஸ்ரீராம ஜாதகத்தை “மேடமாமதி” என்று தொடங்கி “ஏகாதசர் நால்வருச்சரே” என்று கூறியிருப்பது அதி நுட்பமுடையதாகவும் சோதிடநூல் வல்லார் கேட்டமாத்திரத்தில் ஸ்தம்பித்து நிற்கச்செய்வதாயுமுள்ளது.

யாக முதலிய சடங்குகளின் கிரமத்தை விவரணமாகக்கூறும் வான்

* மஞ்சம்.

மீகம் புத்திர ஜனனமானபோது நடந்தவைகளையும், தசரதர் அடைந்த மகிழ்ச்சியால் உலகுக்குச்செய்த நன்மைகளையும், உபநயனம், வித்தியாப்பியாசம் முதலியவற்றையும் மிகவும் சாமார்த்யமாகக்கூறிச் செல்வதை அவ்வவ்விடங்களிற் கம்பரோடு ஒப்பிட்டு நோக்கி யறிக.

அவதார சமயத்தில் “கௌசலை இராமனைப்பெற்றாள். கைகேயி பரதனைப்பெற்றாள். சுமித்திரை இலக்ஷ்மண சத்துருக்கனரைப் பெற்றாள்” என்று கூறிவிட்டு, நாமகரண சந்தர்ப்பத்தில் வசிட்டமுனிவர் குழந்தைகளுக்கு இராமன் முதலியவாகப் பெயரிட்டாரென்று வான்மீகத்திற் கூறியிருப்பது சிறந்துகாட்டாமை காண்க.

கம்பரோ முன்னர்ப் பெயர் குறியாது பொதுவாகக் கூறியிருத்தலால் நாமகரண சந்தர்ப்பத்தில் சிறப்பில்லாமைக்கு இடமில்லாது போயிற்று. இங்கே இன்னுமொரு விசேடங் கவனிக்கத்தகுந்தது. என்னெனின்?

“கராமலை யத்தளர் கைக்கரி எய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென அந்நாள்
விராவி அளித்தருள் மெய்ப்பொருளுக்கே
இராமன் எனப்பெயர் ஈந்தனன் அன்றே”

என்று கூறியதில் கஜேந்திரன் ஆதிமூலமே என்றழைத்தது விஷ்ணுவையே யென்று பரிஷ்கரித்திருப்பதேயாம். வாலி வதைப்படலத்தில் “மாடுபெற்றி இடங்கர் வலித்திடக் கோடுபற்றிய கொற்றவற்கேயது” என்று கூறியதனாலும் இவ்வுண்மை பெறப்படும். இவ்வாறாகவும், பிற்காலத்தார் இக்கதையைக் *கிலுஷ்டகற்பனம்பண்ணி விஷ்ணுவை யழைத்ததென்பதனாற் பெருமையின்றி முடிவதாகக்கொண்டு பொதுவாக அழைத்ததென்று புதுப்பித்து அதன்மூலமாகச் சிவதூஷணஞ்செய்யத் தலைப்பட்டனர்.

இதிற் றலையிட்டவர் வில்லிபுத்தூராழ்வாரே “பத்தியின் விளைந்து போதுவே இபமழைக்க” எனவும், “வாரணமே போதுவேயொரு பேரிடலுந்தருளும் புயலே” எனவும், பாரதத்திற் கூறியிருக்கின்றார். கம்பர் காலத்தில் இப்படிப்பட்ட விபரீத வியவகாரமில்லையென்பது அவர் வாக்கால் விளங்குவது காண்க.

(தொடரும்.)

சாமி-சரவணப் பிள்ளை.

* பொருந்தாததைச் சிரமப்பட்டுப் பொருத்தி.

ஸ்ரீமறைஞானசம்பந்தர் சரித்திரச்சுருக்கம்.

1902ஆ ஆகஸ்டுமீ வெளிவந்த "சித்தாந்த தீபிகை" யின் பிரசுரத்தில் "சைவசமயநெறி" என்ற தலைப்பின்கீழ் இவ்வாசிரியர் திருவாவடுதுறை மடத்தைச்சார்ந்த சந்நியாசிகளுக்குள் ஒருவரென்று தெரிகிறதைத் தவிர வேறு அதிகமாகவொன்றுந் தெரியவில்லை" என்று கூறப்பட்டிருக்கின்றது. அவர் மேற்கூறியாங்கு துறைசையாதீனத்தைச் சேர்ந்தவரல்லரென்பதையும் அவர் சரித்திரம் இதுவென்பதையும் தெரிந்தமட்டில் சிறிது விளக்குவாம்.

இம்மறைஞானசம்பந்தர்.

"காரூர் பொழிலுஞ் சேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீதுறை தில்லையில்"

அவதரித்துத் தமது இளமைப்பருவத்தில் திருக்காளத்திக்குச் சென்றபோது கிருகத்தாசிரமியாகிய ஸ்ரீ காளத்திப்பண்டாரம் என்னும் ஒரு தேசிகரிடத்து, சமய, விசேட தீக்ஷைகள் செய்துகொண்டனர். பின்பு அவராலேயே சிவபூஜையு மெழுந்தருளப் பெற்றுக்கொண்டு அவரால் அளிக்கப்பெற்ற சிவலிங்கத்தோடு மீண்டுந் தில்லையம்பதிக்கேகி, அங்கண் சிறப்புற்றோங்கிய குகைமடத்தின்கண் சகல பக்த ஜனங்களும் இறைஞ்சி வழிபடுமாறு வீற்றிருந்தருளினர். ஆதலால் இவர் துறைசையைச் சார்ந்தவரல்லர். இவர் வடமொழியினுந் தென்றமிழினும் மிக வல்லுனர். தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஆய்ந்துணர்ந்தவர். சிவாகமங்களையும் அவைகளின் சாரமான சைவசித்தாந்த நூல்களையுங் கற்று நவமிகு நூல்கள் பல தமிழிற் செய்தருளினவர். திருவெண்ணைநல்லூரே தமக்குத் திருப்படைவீடாகக்கொண்ட மெய்ஞ்ஞான பானுவாகிய ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் மீண்டும் இவ்வவனியிடை வந்தாற்போன்றவர் (இவ்வாசிரியர், சந்தானாசாரியரிலொருவரான மறைஞான சம்பந்தரோ வெனமயங்கற்க) இவர் 1. செய்யுள்விளக்கம், 2. ஆதிகைலாய புராணம், 3. சிவதருமோத்தரம், 4. சிவமயம், 5. பதிபசுபாசப்பனுவல், 6. சைவசமயநெறி, 7. பரமோபதேசம், 8. பரமதநிமிரபானு, 9. சங்கற்பநிராகரணம், 10. சகலாகமசாரம் முதலான அரிய நூல்களைத் தென்மொழியில் இயற்றி யருளினர். இந்நூல்கள் யாவுஞ் சிவாகமத்தை விளக்குவனவாம். முதனான்கு நூல்கள் தவிர மற்றைய நூல்கள் குறள் வெண்பாவாலமைக்கப் பெற்றுள்ளன. இவர் மேற்குறித்த குகைமடத்திலிருக்கும்போது இப்பொய்யுலக வாழ்க்கையைக் கண்ணுறுங்காலில் இச்சையுறுமெனக் கருதித் தனது இரண்டு கண்களையும் பரிவட்டத்தாற்சுற்றிக் கட்டிக்கொள்வாராயினர்.

ஆதலால் இவர் இருந்த குகைமடத்திற்குக் கண்கட்டி மடமென்வும், இவ்வாசிரியருக்குக் கண்கட்டி மறைஞான சம்பந்தரெனவும் பெயராயிற்று. நிற்க. ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகளது பிரதம சிஷ்யரும், தென்மொழிக்கடலையும், வடமொழிக்கடலையும் ஒருங்கே மாந்தி, சிவஞான சித்தியாருக்குச் சிவாகமமேற்கோள்கள்காட்டி "ஞானாபரணவிளக்கம்"என ஓர்மாபாடியஞ் செய்தருளினவரும், மாட்சிமை பெற்ற மாதவச் செல்வராய் விளங்கியவருமான தருமையாதீனம் ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் திருக்கைலாய பரம்பரைத் திருவாரூர் ஞானப்பிரகாச ஸ்வாமிகள்பால் அருள்பெற்றோங்கிய தருமையாதீனம் பிரதம குருமூர்த்தியாகிய ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய "முத்திநிச்சயம்" என்னும் சுத்தாத்துவித சைவசித்தாந்த நூலுக்கு, இயற்றிய விருத்தியுரையில் மேற்கூறிய கண்கட்டி மறைஞான சம்பந்தர் சரிதத்தைச் சிறிது குறிப்பித்தருளினர் என்க. பிறபின்.

இங்ஙனம்,
S. பால்வண்ண முதலியார்.

ஸ்ரீ

பகவத் கீதைக் கும்மி.

(முதலாவது சம்புடம் 274-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

இப்பத்திரிகையின் முதற் சம்புடம் 222-ம் பக்கத்தில் 7-ம் கவியின் உரையில் "சிற்றுணையால்" என்பதைச் "சிற்றுணையில்" என்றும் "சமையத்தார்" என்பதைச் "சமயத்தார்" என்றும் 246-ம பக்கத்தில் 11-ம் கவியில் "பறுதி" என்பதைப் "பருதி" என்றும் திருத்தியும், 244-ம் பக்கத்தில் வரும் வியாக்கியானத்தின் கடைசியில் "இதுமுதலாகவுள்ள வியாக்கியானங்களின் கருத்துக்களுள் சில, பழைய வியாக்கியானங்களினின்று தெரிந்தெடுக்கப்பெற்றவை; சில, என் புல்லறிவுக்குப் புலப்பட்டவை; எஞ்சிய சில, இருவகையும் கலந்தவை" என்பதையும், 247-ம் பக்கத்தில் வரும் வியாக்கியானத்தின் கடைசியில் "இன்னும் ஒருவகையில், துரியோதனா! எதிர்ப்பக்கத்துத் தலைவர்களைப் பார்த்துப் பயந்தாய்போலும்: அவர்களையொத்த தலைவர்கள் நமது பக்கத்தில் இலரோ?" என்று துரோணாசாரியர் முகக்குறியாற்கேட்க, துரியோதனன் தன் பக்கத்தலைவர்களை எதிர்ப்பக்கத் தலைவரோடு ஒப்பிடும்படி அவர்கள் பெயர்களைச் சொல்லி, அவர்கள் என் பொருட்டு உயிர் ஈயத்துணிந்தோர் பலவகை ஆயுதமும் பூரணமா உடையோர் போரிலே வல்லோர்" என்று கூற "ஆயின் உன் பயத்துக்கு க்கார

ணம் யாது?" என்று அவர் திரும்பவும் முகக் குறியால் வினாவ, அவன் முதிர்ந்த வயதினராய்க் கௌரவரைப்போலவே பாண்டவரையும் இயல்பாக நேசித்தற்குரியராயுள்ள பீஷ்மர் தன் பக்கத்துச் சேனாதிபதியாயிருக்கக், கௌமார பருவத்தினனும் "கௌரவரெல்லாரையும் நாசஞ்செய்வேனாக' என்ற பயங்கரமான சபதஞ் செய்துள்ளோனுமான வீமன் எதிர்ப்பக்கத்துச் சேனாபதியாயிருத்தலே தன் பயத்துக்குக் காரணமென்று சொல்லக்கருதி அவ்வாறு சொல்வதனால் பீஷ்மருக்கு உண்டாகும் விசனத்தை விலக்க உத்தேசித்து, சேனாபதிகளின் பலாபலங்களைச் சேனைகளின்மேலேற்றிச் "செவ்வையா வீடுமராற்காக்கப் பட்டுள்ளநம் சேனை திறமை சிறுகியதே—அவ்விடம் வீமன் புரந்திடும் சேனை அதிக பலமுள்ளது" என்றுகூற "அதற்கு யாதுசெய்ய வேண்டுமென்கிறாய்?" என்று அவர் மனத்து எழுந்த வினாவை முகங்காட்ட, அவன் "நீங்களெல்லாரும் அவரவர்க்கென்று நியமித்த தானத்தை நீங்காதே—பாங்கரும் பீஷ்மரைச் சூழ்ந்து நம் சேனைப் பகுதியில் நின்று காப்பாற்றிடுங்கள்" என்று விடை கூறினான் என்னலாம் என்பதையும் சேர்த்தும் வாசித்துக்கொள்க.

20, 22-ம் கவிகளின் வியாக்கியானம்:—அருச்சுனன் பகைவரைப் பார்த்து வில்லெடுத்து அவரோடு யுத்தஞ்செய்யக் கருதி இருபக்கத்துச் சேனைகளையும் அச்சேனைத் தலைவர்களையும் தான் தெரிந்தவனாயினும் யுத்தஞ் செய்யு முன்னிலையில் அவ்விருபக்கத்தாரும் அணிவகுத்து நிற்கின்ற நிலைகளையும், யார் யார், யார் யாரோடு எதிர்க்க நிற்கின்றார்களென்பதையும், இருதிறத்தாரது பலாபல தாரதம்மியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படி கருதினான். தன் சேனையில் தான் நின்ற இடத்தினின்றே இரு சேனையையும் பார்க்கக் கூடுமாயினும், அப்படிப் பார்த்தால் ஒரு சேனையைத் தூரத்தும் மற்றொரு சேனையைச் சமீபத்தும் பார்க்கும்படி நேர்ந்து இருபக்கத்தையும் சரியாகப்பார்த்து ஒப்பிடுதல் கூடாதென்று இரண்டு சேனைக்கு மத்தியில் தன் தேரை நிறுத்தும்படி கண்ணபிரானுக்குச் சொன்னான்.

24, 25-ம் கவிகளின் வியாக்கியானம்:—அருச்சுனன் உறக்கத்தை வென்றவன் எனவே சோம்பல் முதலிய தோஷங்களையும் நீக்கினவன் என்றும், வில்லெடுத்து எனவே அம்பும் எடுத்து எனவும் பொருள் கொள்ளலாம்."

மூத்தவராயினும் சாரதித்தொழில் செய்தற்கு உடம்பட்டதனால் கண்ணபிரானை இரண்டு சேனைக்கு மத்தியில் தேரைச் செலுத்தும்படி 21-ம் பாட்டில் அருச்சுனன் ஏவினான். கண்ணபிரான் தாம் தேர்ப்பாகரேயாயினும் தேர்த்தலைவனான அருச்சுனனைக் "கௌரவர்களைப் பார்ப்பாயாக" என்று தமக்கு இளையோனும் மைத்துனனும் ஆன உரிமைபற்றி (25-ம் பாட்டில்) ஏவினார். கண்ணபிரானைப் பரமாத்துமாவாகவும் அருச்சுனனைச் சீவாத்துமாவாகவும் கொண்டால், அவர் அவனை ஏவுவித்தாரும் ஏவினாரும் தாமேயாயினாரெனக் கொள்ளலாம்.

26. அப்பொழு தங்கே தகப்பன்மார் பாட்டன்மார்
ஆசா ரியர்கள் அம் மான்மார்கள்
செப்பும்அண் ணன்தம்பி மார்கள்நன் மைத்துனர்
சேயர்பே ரன்மார் சிநேகிதர்கள்.

27. கைம்மாறெண் ணாஉப காரிகள் மாமன்
களாயிரு சேனை களில்நிரையாத்
தம்மாவி தந்திட நின்றதன் பந்து
ஜனத்தைத் தனஞ்சயன் தான்பார்த்தான்.

(இ—ள்.) கண்ணபிரான் அவ்வாறு சொல்லியபோது, அந்த இடத்திலே (பூரிசிரவஸ்போலத்) தகப்பன் முறையுள்ளவர்களும், (பீஷ்மரைப் போன்ற) பாட்டன்மாரும் (துரோணாசாரியர் முதலிய) குருமாரும் (சல்லியன் போன்ற) தாய்மாமன்மாரும், (சயத்திரதன் முதலிய) மைத்துனர்களும் (துரியோதனன் குமாரன் இலக்குமணன் போன்ற) புத்திரன் முறையுள்ளவர்களும், (அவ் விலக்குமணனது புத்திரர் முதலிய) பேரன்மார்களும், (கிருதவர்மாவையொத்த) சிநேகிதர்களும், பிரதிப்பிரயோசனம் கருதாத உபகாரிகளும், (துருபதராஜன் போன்ற பெண்கொடுத்த) மாமன்மார்களுமாக இரு பக்கத்துச் சேனைகளிலும் வரிசையாய்த் தங்கள் உயிரைக் கொடுப்பதற்குச் சித்தமாய் நின்ற தன் பந்துஜனத்தை அருச்சுனன் பார்த்தான்.

குறிப்பு:—சேயர்-புத்திரர்; கைம்மாறு-பிரதியுபகாரம்; நிரை-வரிசை; தனஞ்சயன்-அருச்சுனன்.

வியாக்கியானம்:—மைத்துனர் என்பது மூலநூலில் இந்த இடத்தில் கூறப்படவில்லையாயினும் இந்த அத்தியாயம் 34-ம் கவியில் கூறப்பட்டிருத்தல் பற்றி இங்கே சேர்க்கப்பட்டது. தம்மாவிதந்திடநின்ற என்பது இந்த அத்தியாயம் 9-ம் கவியில் "உயிர்ஈயத் துணிந்தோர்" என்றதைத் தழுவிக் கூறப்பட்டது.

சாகநின்ற பந்துக்களைப்பார்த்துச் சோகம் அதிகப்பட, அருச்சுனன் கண்ணபிரானுக்குச் சொன்னது.

28. மிக்கதோ ரன்பும் இரக்கமும் மேவிடத்
துக்கம் பொங் கக்கண்ண னுக்குரைத் தான்
தொக்கமர் செய்ய விருப்பொடு நிற்குமிச்
சுற்றத் தவரைக்கண் ணுற்றிடவே.

29. கையொடு கால்கள்சோர் கின்றன வாயும்
கரிந்து புலர்ந்திடு கின்றதுஎன்
மெய்யும் நடுக்குறு கின்றது மேனியின்
மேல்உரோ மம்பொடிக் கின்றதுவே.

30. காண்டீவ மும்கை நழுவிடு கின்றது
காயம் வெதும்புத லுற்றதன்றி
ஈண்டியான் நிற்கவு மாட்டு கிலேன்என்
இதயம் பிரமித் திடுகின்றதே.

(இ—ள்.) (சாகின்ற பந்துமித்திராதியரைப் பார்த்த அருச்சுனன் அவர்கள்பால்) மிகுந்த அன்பும் இரக்கமும் அதிகப்பட, (அவர்களுக்கு வரும் கதியை நினைந்து) துக்கம் மிகுதியாக உண்டாகக் கண்ணபிரானை நோக்கிப் பின்வருமாறு சொன்னான்:—

"யுத்தஞ்செய்யும் விருப்பமுள்ளவர்களாய் இங்கே கூடியிருக்கிற நமது பந்துக்களைப் பார்க்கவே, என்னுடைய கைகால் முதலிய அவயவங்கள் சோர்வடைகின்றன; வாய் கருகி வறண்டுபோகின்றது; தேகம் நடுங்குகின்றது; உரோமம் பொடிக்கின்றது; காண்டீவம் கையினின்று நழுவுகின்றது; உடம்பு சுடுகின்றது; (இவைகளையெல்லாம் சொல்வானேன்) இங்கே (இந்தத்தேரிலே) நிற்பதற்குங்கூடச் சக்தியற்றிருக்கின்றேன்; மனம் பிரமை அடைகின்றது".

குறிப்பு:—மேவிடுதல்—அதிகப்படுதல்; தொக்கு—கூடி; சுற்றத்தவர்—உறவினர்; கண்ணுற்றிட—பார்க்க; புலர்தல்—வறளல்; ஈண்டு—இங்கே—இந்தத்தேரிலே; இதயம்—இருதயம்—மனம்.

(இன்னும் வரும்).

வெ. ப. சு.

உ

சைவ சித்தாந்தம்.

சந்தானாசாரியர்களு ளொருவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த திருவருட் பயனிலுள்ள "ஏகனநேகன்" என்னுங் குறள் வெண்பாவின் விருத்தியுரை.

ஏக னநேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறாதி யில்.

(இதன் பொருள்) ஏகன்-ஒருவனாகிய பதியும், அநேகன்-அளவிலவாகிய பசுக்களும், இருள்-இருள் வடிவமாகிய ஆணவமலமும், கருமம்-நல்வினை தீவினைகளாகிய கரும மலமும், மாயை யிரண்டாக-சுத்தமசுத்தமென்னு மிருவகை மாயைகளுமாகிய இவைஆறு-இப்பொருள்கள் ஆறும், ஆதி இல்-ஆதியில்லை அநாதியாகிய பொருள்களாமென்க. அநேகன் என்பது சாதியொருமை.

சாதியொருமை ஈறுதோன்றிய சாதியொருமை ஈறுதோன்றாத சாதியொருமை என இரண்டு வகைப்படும். "ஈறுதோன்றிய சாதியொருமையும் ஈறுதோன்றாத சாதியொருமையும் என விருதிறப்படு மிருதிணை மருங்கினும்." அவைகளில் அநேகன் என்பது ஈறுதோன்றிய சாதியொருமை சிவிகை பொறுத்தான் என்புழிப்போல.

இவையாறுமென அஃறிணை வாசகங்கொண்டு மிகவினால் முடிந்தது திணை வழுவமைதி. ஆறுமென்னு முற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது.

முற்றுணர்வும், அளவிலாற்றலும், பேரருளும் சுதந்திரமு முதலிய நிரதிசய குணங்களையுடைய முழுமுதற்கடவுள் ஒருவனே யென்பதை அறிவித்தற்குப்பதியை ஏகனென்றும், அளவிறந்த ஆன்மாக்கள் முத்தியடையவும் உலவாக்கிழிபோலப் பின்னும் இவ்வளவென்று அளவுபடுத்தற்கு அரியனவாய் நிற்றலின் பசுவை அநேகன் என்றும், ஒளிவடிவமான சிவத்தினியல்பையும் ஆன்மவியல்பையும் தன்னியல்பையும் ஆன்மாவுக்குக் காட்டாது மறைத்து இந்திரிய விடயங்களையே காட்டி நிற்றலின் ஆணவமலத்தை இருளென்றும், திரோதானசத்தியின் பலத்தை விரும்பிச்செய்கிறபடியால் வினைகளைக் கன்மமென்றும், சுத்த மாயைபோல அசுத்த மாயையும் அநாதியே என்பதை அறிவித்தற்கு மாயையை இரண்டென்றுங், கூறியருளினர்.

இந்நூலாசிரியர் பௌஷ்கர முதலிய ஆகமங்களின் கருத்து நோக்கி நித்தியபதார்த்தம் ஆறெனக்கூறி யருளினர்.

சுவாயம்பு முதலாகிய ஆகமங்களில் பதார்த்தம் ஏழாகவும், பௌட்கர முதலிய வாகமங்களில் பதார்த்தம் ஆறாகவும், பராக்கிய முதலிய ஆகமங்களில் பதார்த்தம் ஐந்தாகவும், சர்வஞ்ஞானோத்தர முதலிய ஆகமங்களில் பதார்த்தம் நான்காகவும், இரௌரவம் மிருகேந்திர முதலிய ஆகமங்களில் பதார்த்தம் மூன்றாகவும் சங்கியாபேதம் சொல்லப்படினும் எல்லாம் பதிபசுபாசமெனத் திரிபதார்த்தத்தில் அடங்குமென்பதுவே சகலாகம சம்மதமென்க.

இந்த ஆறு பதார்த்தத்தில் முதற்கணுள்ள ஏகனாகிய பதியியல்பு யாதெனின்; நால்வகை யோனியுள் ஒருயோனி வாய்ப்பட்டுப் பிறப்பன யாவை அவையெல்லாஞ் சீவவர்க்கம்; அவ்வாறு பிறத்தலில்லது யாது அது பதிப்பொருள். இது ஒன்றே வினைச்செயல்களான் வேற்றுமையறியவாராத அவ்விரண்டற்குந் தம்முள் வேற்றுமையறிய நிற்பதாகலின் வினைத் தேவர் முதலாயினார் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப்படுதலானும், சிவபிரானுக்கு அஃதுண்டென்பது யாண்டானுங் கேட்கப்படாமையானுஞ், சிவபிரானொருவனே உலகிற்கு முதற்கடவுள் என்க.

நித்தியமாய் வியாபகமாய் அப்பிரமேயமாய்த் தனக்கொருவாற்றானும் உவமையில்லாததாய் முதல், ஈறு, கட்டு, வீடு இவைகளொன்றுமில்லாததாய்ப் பெருமையதாய் நுண்ணியதாய்ப் பாசஞான பசுஞானங்களால் அறியப்படுதலின்றிச் சிவஞானத்தால் அறியப்படுவதாய்த் தன்னியல்பினிற்கும் சிவப்பொருளாகிய அம்முதற்கடவுள்.

இருண்ட ஆணவமலத்தின்மூழ்கி உய்யும்வண்ணமறியாத பசுக்களைப் பெருங்கருணைத் திறத்தினாலே அம்மலத்தினின்றும் விடுவிக்கவேண்டு மாற்றான் பஞ்சகிருத்தியஞ் செய்யவெண்ணிச் சிவசத்தியோடு பிரிவின்றி நின்று, சிவம், சத்தி, சதாசிவம், மகேசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களை நிலைக்களமாகக்கொண்டு, இலயபோகவதிகாரமென்னு மூன்றவத்தையினும் முறையே அருவம், அருவுருவம், உருவம், என்னும் மூன்று திருமேனிகொண்டு, சத்தன் உத்தியுக்தன் பிரவிருத்தன் எனவும், சிவன் சதாசிவன் மகேசன் எனவும், பெயர்பெற்றுச் சுத்த மாயையின் கிருத்தியம் ஐந்துந்தாமே செய்வர். அசுத்த மாயையின் கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுவரரை அதிட்டித்து நின்று செய்வர். பிரகிருதி மாயையின் கிருத்தியம் ஐந்தும் ஸ்ரீகண்டருத்திரரை அதிட்டித்துநின்று செய்வர். இந்தப் பிரகாரம் சிவம், சத்தி, விந்து, நாதமாகிய அருவம் நான்கும் சதாசிவமாகிய அருவுருவம் ஒன்றும், பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுவரன் என உருவம் நான்கும், ஆகியமுத்திறத்து ஒன்பது வருக்கத்திலும் நின்று பஞ்சகிருத்தியஞ் செய்வாராயினும், ஞாயிறு தன் சந்நிதிக்கண் சூரியகாந்தக்கல்லின் கண்ணே நெருப்பைக்காலச்செய்தும்,

தாமரையை அலரச்செய்தும், பூமியின்கண் நீரைச் சுவறச்செய்தும், விகாரமெய்தாமைபோலவும், பாம்பினிடத்து விடம்போலவும், அக்கினியிடத்துச் சூடுபோலவும், இந்திரசால வித்தையினிடத்துப் பண்ணுகின்றவர்கள்போலவும், விகாரமின்றி நிற்பர். பஞ்சகிருத்தியஞ்செய்ய இச்சையுடையவர் இலயசிவன். எழுச்சியுடையவர் போகசிவன். கிருத்தியத்தைச் செய்தலுடையவர் அதிகாரசிவன். இன்னும் இலயபோக அதிகாரம் தூலசூக்கும வேறுபாட்டால் பலதிறப்படும். அவையாவன சூக்குமமாகிய ஞானக்கிரியை சேர்ந்து நிருவிகற்பமாய் நிற்கும் அவதரம் சூக்கும லயம். அது சிவம், இச்சாஞானக்கிரியை ஸ்தூலமாக விளங்கி ஸ்தூலமான நிருவிகற்பமாயுள்ள அவதரம் ஸ்தூல லயம். அது சத்தி. பாலுக்குந்தயிருக்கு மத்தியிலுள்ள அவதரம்போலும் போகாவஸ்தை. அது சதாசிவம். அதிகார மிரண்டு வகைப்படும். அவையாவன; சூக்கும அதிகாரம், ஈசுரத்துவம். ஸ்தூல அதிகாரம், சுத்தவித்தை. இந்த ஐந்தும் சிவன், சதாசிவன், மகேசன் என மூன்றுயடங்கும். மகேசுவரமூர்த்தி யிறுவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்திரவடிவமென்றுணர்க. பஞ்சகிருத்தியமாவன சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரக மென்பனவாம். முறையே இவற்றின் இலக்கணங்களாவன ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றும் தனுவாதிகளைத் தோற்றுவித்தலும் நிலைபெறச் செய்தலும் இளைப்பொழித்தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலும், கன்ம ஒப்பினை வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாம்.

இன்னும் இதன் விரிவை ஆசிரியர் சிவஞானயோகிகள் இயற்றியருளிய திராவிட மகாபாடியத்திற் காண்க.

இவ்வாறு துணியப்படும் முழுமுதற்கடவுளுக்கு முற்றறிவும், அளவிலாற்றலும், பேரருளும், தன்வயமும், இயல்பாகவே பாசங்களினீங்குதலும் வரம்பிலின்பமும் ஆகிய ஆறு குணங்களும் இன்றியமையாத இலக்கணங்களாம். இந்த ஆறு குணங்களும் முதற்கடவுளுக்கு இன்றியமையாத இலக்கணங்களாதல் யாங்ஙனமெனின் காட்டுதும். சடசித்துக்களனைத்தையும் ஒருங்கே ஓரியல்பாக அறியும் அறிவு இல்லாத வழி அச்சடசித்துக்களைத் தொழிற்படுத்துதல் கூடாமையால் சருவஞ்ஞத்துவமென்னும் முற்றறிவும், அஞ்ஞானமறைப்பினாலே ஒன்றோடொன்றொவ்வாத அறிவு இச்சை தொழில்களையுடைய அளவிறந்த உயிர்களின் பொருட்டுப் பல வேறுவகைப்பட்டுநின்று தொழில்செய்தல் வேண்டுமாதலால் பூரணசத்தியெனப்படும் அளவிலாற்றலும், சிற்றறிவினையுடைய உயிர்களைப்பற்றிய அஞ்ஞானப்பிணியை நீக்கி

ஆனந்தப் பெருவாழ்வை அவைகளுக்கு அருளுதல் பொறிவாளனுக்குக் கடப்படாதலால் அலுப்தசக்தியெனப்படும் பேரருளுடைமையும் எண்ணியதை இடையூறின்றி எண்ணியபடி முடிக்க வேண்டுமாதலால் சுதந்திரமெனப்படும் தன் வயத்தனாதலும், இயல்பாகவே அஞ்ஞானத்தினின்று நீங்கி விளங்கும் அறிவு தனக்கில்லையாயின் உயிர்களுற்ற அஞ்ஞானத்தை நீக்குதல் செல்லாமையால் அநாதிபோதமெனப்படும் இயல்பாகவே பாசங்களினீங்குதலும், தன்னிடத்துக்குறைவுள்வழி உயிர்களுக்கு ஆனந்த பூர்த்திசெய்தல் கூடாமையால் பூர்த்தி யெனப்படும் வரம்பிலின்பமும் கடவுளுக்கு இன்றியமையாத இலக்கணமாதல் காண்க.

இன்னும் பலவிதமாகக் கூறப்படும் குணங்களெல்லாம் இவற்றுள் அடங்கும். அவற்றை அறிந்து அடக்கிக்கொள்க. இந்த ஆறு குணங்களும் சிவபிரானுக்கு இலக்கணமாதல் பெறப்படவே இவற்றின் மறுதலைக் குணங்களாகிய சிற்றறிவு, சிறுதொழில், செயற்கையறிவு, சிற்றின்பம், பரதந்திரம், பசுத்துவம், பிறப்பு, இறப்பு, ஏகதேசவாச முதலியன எல்லாம் சீவகுணங்களாவனவன்றிக் கடவுட் குணங்களாகா வென்பதுதானே சித்திக்கும். கடவுள் உயிர்கள் எளிதிற்கண்டு வழிபட்டுய்யும் பொருட்டு அருளே வடிவமாய் வெளிப்பட்டருளுதலையுங் குணமாகவேண்டுவென் அதனால் அவன் ஏகதேசப்பட்டுத் துடக்குறான், விகாரப்படுதற்குக் காரணம் பரதந்திரமும், ஏகதேசப்படுதற்குக் காரணம் சிற்றுணர்வு சிறுதொழில்களும், துடக்குறுதற்குக் காரணம் விருப்புவெறுப்புக்களுமாம் இவ்வுபாதிகள் அவனுக்கு இல்லாமையால் இக்குற்றங்களுமில்லை. ஈண்டுக்கூறியவாற்றால் முதல்வனுக்குக் கருணைவடிவமேயன்றி மாயைவடிவமில்லையாயின், ஆகமங்களில் முதல்வனுக்கு அத்துவாக்கள் ஆறையும் வடிவமாகக்கூறுதல் என்னையெனின் நிறைவுற்று அவ்வத்துவாக்கள் முழுதினுங்கலந்து எல்லாமாகி நிற்றலானும் அவையல்லனாய் நிற்றலானும் சடசித்துக்களையெல்லாம் செலுத்தி உடனுமாய் நிற்றலானும் அவ்வியல்புடைய முதல்வனுக்குத்தன்னுடைய திரோதானசத்தியான் அவற்றோடு உளதாகிய இயைபுநோக்கி அத்துவாவையும் உபசாரம்பற்றித்திருமேனியாக ஆகமங்கள் கூறியன.

சாந்தியதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தியாகலைமார்பு பிரதிட்டாகலைகுய்யம், நிவிர்த்திகலை, முழந்தாள்கள் திருவடி, இப்படிப்பஞ்சகலைகள் அங்கமும் புவனங்கள் உரோமமும் வன்னங்கள் தோலும், மந்திரங்கள் உதிரமும் பதங்கள் நரம்பும் தத்துவங்கள் எலும்பும் தசையுமாம், இவ்விதமாக அத்துவாக்கள் ஆறும் சிவபிரானுக்குத் திருமேனியாமுறைமை உணர்ந்துகொள்க.

இந்த அத்துவாவடிவத்துள்ளும் மந்திரவடிவத்தை ஒப்பற்ற வடிவமாக ஆகமங்கள் சிறந்தெடுத்தோதியது யாதுகாரணம்பற்றி எனின், உலகத்துக்கு முதற்காரணங்கள் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என மூன்று. இம்மூன்றுள் மேலாகிய சுத்தமாயையில் தோன்றிய தலைமையாலும் மனத்திற்கு அதீதமெனப்படும் சிவசத்தி சேரப்பட்டு நிற்றலாலும் அச்சிவசத்தி சாதகர் செபிக்குமாறு செலுத்தி செபித்தபின் பயன் கொடுத்தற்பொருட்டு அவற்றை வாயிலாகக் கொண்டுபோக மோக்ஷங்களைக் கொடுத்தலானும் என்க.

மந்திரவடிவுள்ளும் பஞ்சப்பிரம மந்திரவடிவத்தை ஒப்பற்ற வடிவமாகச் சிறந்தெடுத்தோதியது என்னையெனின் ஏனைய மந்திரங்களுக்கெல்லாமுற்படத்தோன்றியதால் என்க. இங்ஙனங்கூறிய அத்துவாமூர்த்தி மந்திரமூர்த்தி பஞ்சப்பிரமமூர்த்திகளெல்லாம் அவற்றைச் செலுத்திநிற்குந் திரோதானசத்திக்கு இசையச்செய்த உபசாரவடிவமென்றுணர்ந்துகொள்க. பஞ்சமந்திரவடிவம், அநுக்கிரகம், திரோதானம், சம்ஹாரம், ஸ்திதி, சிருட்டிகாரணமு(ம்), ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், மூர்த்தா வத்திர இருதய குய்யமூர்த்திகளாகச் சொல்லப்பட்டது.

இனி சிவனெனும் நாமம் நிரதிசயவின்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பதுபற்றிச்சிவபிரான் ஒருவனுக்கே உரியது. மற்றைத்தேவர்கள் அது கொடுக்கும் ஆற்றலில்லாதவர்களாதலால் அவர்களுக்கு உரித்தன்று. இதற்குச்சுருதி "சிவனெனுநாமந்தனக்கேயுடைய செம்மேனியெம்மான்" எனத்திருநாவுக்கரசுசுவாமிகள் கூறியருளிய தேவாரத்தாலுணர்க. சிவபிரானுக்குரிய இயற்கைநாமம் "சிவன்" என்பதே. மற்றவைகளெல்லாம் செயற்கைநாமம்.

இன்னும் வரும்.

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

ஞானமிர்தம்.

(தொடர்ச்சி).

கண்ணுத லண்ணலை விண்ணவர் பணியக்
காள மாண்ட வாளவி ரங்களத்
தெரிமரு ளிருஞ்சடை மதிமுடி முணிந்த
வெம்ப ரீச ரும்பன் வெம்புறு
பிறவிப் பேரிடர்க் கறையுறு பகுவா
யுரகத் தா ரெயி றற வீழ்ந் தறவ
வஞ்சின மளியமென் றமரரு முனிவரும்
வெஞ்சினப் பிறவி நஞ்சுக வளித்த
வருமறை யெவையுந் திருமிகு ஞான
மிலங்கொளி யோக நலங்கிளர் கிரியை
சரியை யென்ற விரிதரு பாதங்
கறையறு மறைமுறை நெறியி
னறை யமற் றரோ வறிகதி லமர்ந்தே

கண்ணுதல் ... ...
வெம்பரீச ரும்பன் ... ... எ-று.

நெற்றியிலே விழித்த திருநயனத்தையுடையனுமாய் வானோர் வந்து தெண்டம்பண்ணுதலாலே நஞ்சைத் தரித்து ஒளிவிளங்கப்படாநின்ற திருக் கழுத்தையுடையனுமாய், அக்கினியைக்கெடுக்கிற வெப்பையும் நீர்மையையு முடைய திருச்சடாபாரத்திலே இளம்பிறையைச் சாத்தி யருளவும்பட்டுத் தேவர்களுக்கு மேலாகிய விஷ்ணுவாதிகளுக்குக் கர்த்தாவாகிய பரமேசுரன்.

... ... வெம்புறு
... ... முனிவரும் எ-று.

தபிக்கப்படாநின்ற பிறவியென்னு மகா துக்கமாகிய நஞ்சுண்டான பெரிய வாயையுடைய சர்ப்பத்தினூர்ந்த தந்தமுருவக் கடித்தபடியாலே தன்மவானே பயப்படாநின்றோம் நின்னாலே அனுக்கிரகிக்கப்பட்ட நாங்க ளென்று தேவர்களும், இருடிகளும் விண்ணப்பஞ் செய்தலாலே

வெஞ்சினப் பிறவி நஞ்சுக வளித்த
வருமறை யெவையும் ... ... எ-து.

வெவ்விய கோபத்தையுடைய பிறவியென்னுஞ் சர்ப்பத்தின் நஞ்சு கெட அருளிச்செய்த திவ்விய ஆகமங்கள் பலவற்றினுஞ் சொல்லுவது

... ... திருமிகு ஞானம்
... ...

அறைய மற்றரோ வறிகதி லமர்ந்தே எ-து.

ஸ்ரீ மிகப்படாநின்ற ஞானமும், இலங்காநின்ற ஒளியுடைத்தாகிய யோகமும், நன்மை கிளர்ந்த கிரியா சரியையுமென்று சொல்லப்படாநின்ற விரிந்த நாலு பாதத்தையுமாதலால், இவையிற்றைக் குற்றமற்ற உபதேசத்தின் முறைமையே நெறியாகச்சொல்லப் புத்திபண்ணி யறிவாயாக என்றவாறு.

மற்றும், அரோவும், இல்லும் அசை.

இது கண்ணுதலண்ணலை யமரருமுனிவரும் பிறவிக்கஞ்சினோமென்று விண்ணப்பஞ்செய்ய வருளிச்செய்த திவ்வியாகமங்கள் சதுர்ப்பாதமாயிருக்கும் இவையிற்றைச்சொல்ல அறிவதாக. என்றவாறு. 7

பாயிர முற்றிற்று.

நூல்.

பிறழா நிலைமைப் பெரும்பெயர் ஞானக்
கறையறு பாத முறையுறக் கழறிற்
பசுபா சத்தொடு பதியாய் பெற்றி
மதியோர் பசுமூ வகையென மதிப்பர்
பன்னிற் கேவலன் சகல னின்னியற்
சுத்தன் கேவலற் சொற்றிடி னித்தன்
மெய்த்தகு குணமிலி வியாபி யொய்த்து
மலநனி புணர மறைவோ னிலனெச்
செய்தியு மறியோன் மையி லமூர்த்தன்
வலியிலி யசேதன னொளியிலி யிறையலன்
மாயா வுதர மரீஇத் தேயாப்

போக நினைந்த சகலர்க் கெய்திய
முரண்மிகு கூற்றை முரித்த வான
தருங்கலை யமர விரிந்திருஞ் சேதன
மடையா விச்சை யடையத் தடையில்
விடையப் பகுதி விரவிப் புடையே
பொங்கி யராகம் புணரத் தங்கா
தாசை யெங்கணு மாசற நிமிர
வெற்பிர தான மொற்கமில் குணத்தொடு
புத்தி முதலிய கோத்தினி துறழப்
பிணித்தலிற் பிணிப்பினன் பசுமற்றிணைத்த
நியதி முன்ன ரியலிரு வினையிற்
பிறழா துறழப் பின்னர்க் குறையாக்
காலங் காலத் தளவை பாலிற்
காட்டத் தொழிலொடு போகத் தாட்டுண்
டரியாத் தத்துவ கலையி னிவ்வணம்
பரியாப் பந்தம் பந்தித் தொருவழி
யறிவு சிறிதமர்ந் தாக மாய
பிரியா மோகினிப் பெரும்போ கத்தைத்
தானென வெண்ணி யானு முன்வினைப்
பயன்பல மாந்தி வியந்துறை காலை
வல்வினை யெல்லை செல்லாக் காலந்
தொல் லனவொப்ப வுயர்பெருஞ் சிவனரு
சத்தினி பாதந் தழைப்ப மெய்த்தகு
குருபரம் பரன தருளின் செவ்வி
வம்புறு சம்பிர தாயத் தஞ்சுட
ருற்ற காலைச் சொற்றொடர் பற்றுத்
தேயா தியாவு மாய்வழி யகன்ற
வாயாச் சிவன தணிகிளர் சீர்த்தி
நின்மலத் தியையும் பின்மலத் தியையா
னந்தமில் பந்தமற் றிவணாஞ்
சிந்துதல் சிந்த தெரியுங் காலே.

சிருஷ்டியின் அற்புதங்கள்.

பிராணிகளும் சங்கீதமும்.

(தொடர்ச்சி)

மிருகங்களையும் பறவைகளையும்போல் ஊர்வனவற்றிலும் கானரசமறிந்தவை சிலவுண்டு என்பதை விளக்குவோம். 'பாம்புச்செவி' என்ற தொடரை எவருமறிவார்கள். அதனை ஒவ்வொருநாளும் உபயோகிக்கிறோம். ஊர்வனவற்றில் பாம்பைப்போல் சங்கீத ஆநந்தம் அநுபவிக்கத்தக்க பிராணி வேறொன்றுமில்லை. நம் சிறுவர் ஊதுகுவித்துச் சீட்டியடித்தலும் அதன் இனிய தொனியைக்கேட்டுப்பாம்புபுதரினின்றும் வெளிப்பட்டுப்படமெடுத்தாடுவதைப்பார்த்திருக்கிறோம். இதனாலன்றோ பெரியோர்கள் இரவில் அவ்வித சப்தம் செய்யக்கூடாதென்று நம் சிறுவருக்குப்புத்திபுகட்டுகின்றனர். வசந்தகாலத்தின் நிர்மலமான இரவில் நிலவெறிக்குஞ்சமயத்தில் காளைப்பருவமுள்ள இளைஞர் கவலையற்று உத்தியானவனங்களின் பக்கலில் உல்லாசமாயுட்கார்ந்து இனிய குரலுடன் பாடுங்கால் கண்ணையே செவியாகவுடைய பாம்பு படமெடுத்தாடுவது பலர் அநுபவத்திற்கண்ட விஷயம். பாம்பாட்டி மகுடிஊதிப் பாம்பு பிடிக்கும் விதம் நம் நாட்டுக்குழந்தைகளும் அறிவார்கள். எத்துணை மூர்க்கமுள்ள நாகமாயிருந்தாலும் பாட்டுக்கு வசப்பட்டுப் படமெடுத்தாடிப் பாடுவோன்வசம் அடிமையாகின்றது. பறவையினங்களில் அசுணமாப்போல் ஊர்வனவற்றிலும் பாம்பே மிக நுட்பமான செவியுடையது. சுண்டெலிகளும் பல்லிகளும் சிலம்பிப் பூச்சிகளும் சங்கீதத்துக்குக் கட்டுப்படுகின்றனவென்பதைச் சிறிது விளக்குவோம். ஒரு காலத்தில் ஓர் உத்தியோகஸ்தன் ஒரு கோட்டையில் சிறையிருக்க நேரிட்டது. அவன் சங்கீத ஞானமுள்ளவன். வாய்ப்பாட்டினும் வாத்தியப் பழக்கத்திலேயே நன்கு தேர்ந்தவன். சிறைச்சாலையில் பொழுது போக்குவது கொடிய துன்பமாகையால் தன் பொழுது போக்கு நிமித்தம் வாத்தியம் வாசிக்க அநுமதி கொடுக்கும் வண்ணம் அக்கோட்டைக்கதிபதியை வேண்டிக்கொண்டனன். அக்கோட்டையாளனும் அகமகிழ்ந்து அநுமதி கொடுத்தனன். ஒரு நாள் அச்சிறையாளி தன் வாத்தியத்தை யெடுத்துச் சுருதிகூட்டி வாசிக்கவே அங்குள்ள ஒரு பொந்திலிருந்து பல சுண்டெலிகள் வெளிவந்தன. சிற்பசாஸ்திர நிபுணருங் கண்டு ஆச்சரியங்கொள்ளும் வண்ணம் மிக அழகு வாய்ந்த தன் நுட்ப நூல்வலையினின்றும் பல சிலம்பிகள் இறங்கி வந்து அச்சிறையாளியைச் சூழ்ந்துகொண்டன. இந் நண்பர் கூட்டத்தைக் கண்ட சிறையாளியும் அடக்கொணா வியப்புற்றுத் தன் வாசிப்பை நிறுத்தினன். அவ்வதிதிகளும் "நாங்கள் உமது வாத்தியத்தின் இனிமையான தொனியைக்கேட்டு ஆநந்திக்க வந்தோமேயொழிய உமது திருமேனியைத் தரிசித்துப்போக வரவில்லை" என்று கூறிப்போனவர்போல் உடனே ஓட்டம்

பிடித்தன. சிலம்பியினிடம் அச்சிறைபாளிக்கு இயற்கையாயிருந்த வெறுப்பால் இரண்டு நாள் வாத்தியத்தைத் தொடவேயில்லை. வ்விடத்தில் பொழுது போக்குக்கு வேறொரு கதியும் இல்லாதிருந்தமையால் மறுபடியும் அவன் வாத்தியத்தையே கையாளவேண்டி வந்தது. கையாளத்தொடங்கினவுடனே முன்னர் கோபங்கொண்டு சென்ற பிராணிகள் முன்னிலும் பெருங் கூட்டத்துடன் தோன்றி அவ்வாத்தியத்தின் இன்னிசையைக்கேட்டு மகிழ்ந்தன. இவ்வண்ணமே வாத்தியம் வாசிக்கும்பொழுதெல்லாம் அவை வந்து பாட்டுக்கேட்டு மகிழ்ந்து செல்வது வழக்கமாம். பார்வைக்கு அருவருப்பான பல்லியும் சங்கீதத்துக்கு வசப்படுகின்றது என்பதற்கு ஒரு திருஷ்டாந்தங் கூறுவோம். ஆப்பிரிக்கா கண்டத்தில் மேடிரா என்ற தேசத்தில் பிரயாணஞ்செய்த ஒருவர் தாம் வாத்தியம் வாசிக்கும்பொழுதெல்லாம் பல்லிகள் தம்மைச் சூழ்ந்துகொண்டதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அத்தேசத்தில் நீகிரோவர் பல்லிகளைப்பிடித்துத் தின்பது வழக்கம். அவர்கள் அவைகளைப் பிடிக்கும் வண்ணம் சீட்டியடித்துக்கொண்டே செல்வார்கள். அவர்களுக்கு முன் செல்லும் பல்லிகள் அவ் வின்னோசையைக்கேட்டுத் திரும்பி அவர்களை நோக்கி வரும். உடனே அப்பாதகர் அவற்றைப் பிடித்துக் கொன்று தின்பார்கள். ஜலத்தில் வாழும் மீன்களும் சங்கீதத்துக்குக் கட்டுப்படுகின்றன. அதனால் செம்படவர் வலையின் நுனியில் நல்லோசை யுண்டுபண்ணும் சிறிய மணிகளைக் கட்டி மீன்பிடிக்க உபயோகிக்கிறார்கள். அவ்வலையை வீசுங்காலும் அதனை இழுக்குங்காலுமுண்டாகும் இன்னோசைக்கேட்டு மீன்கள் கூட்டங்கூடி வலைக்குள் அகப்படுகின்றன. ஸீல் என்ற ஒருவகைப் பிராணி ஒருவர் வீணைகானம்பண்ணக் கேட்டு ஒருங்குகூடிக் களித்தனவாம். பிராணிகளுக்கு நிகரான குழந்தைகளும் தாயின் தாலாட்டின் இன்னோசையைக் கேட்டுக் கண்வளர்கின்றன. மரங்கள் காற்றிலசைந்தாடுங்கால் சில சமயங்களில் இன்னோசை யுண்டாக்கிச் செவிக்கின்பம் பயக்கின்றன. பகவத்சிருஷ்டியில் இன்னும் எவ்வித அற்புதங்களிருக்கின்றனவோ? அவர் மகிமை யாருக்குத்தான் தெரியும். சர்வ பிராணிகளுக்கும் மனமகிழ்ச்சியைத் தரும் சங்கீத ரசத்தை மாநுடன் அநுபவிக்கவேண்டியது இன்றியமையாதது. ஆயினும் அந்த இரசத்தை சாத்துவிக குணத்துடன் தெய்வபக்தி விஷயத்திற் பயன்படுத்தி மன ஆறுதலையடைந்து மகா யோகிகளடையும் பேரானந்தத்தையடைய முயன்றாலல்லது அதுவிரசமாகவே முடியுமென்பதிற் சிறிதுமையமில்லை.

எஸ். சாமிநாதையர்.

குறிப்பு:—9-ம் பக்கம் 32-ம் வரியில் 'தொரட்டி' என்பதை 'துறட்டி' எனத் திருத்திக்கொள்க. ப-ர்.

உ

குமரன் றுணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம் 2 } 1903 ௵ பிப்பிரவரி மீ { இலக்கம் 3

விவேக சிந்து.

நம் பரதகண்டம் மற்றைய நாடுகளினும் வேறு எவ்விஷயத்திற் குறைவுற்றிருப்பினும் மதவிஷயத்திற் சிறப்புற்றோங்கியிருப்பதென்பது உலகமொப்பின விஷயம். நம் தென்னாடு இவ்விஷயத்தில் வடநாட்டினும் பாக்கியம் பெற்றது. நாம் நம் வேதசாஸ்திரங்களை வடநாட்டிலிருந்தே பெற்றோமாயினும் அவற்றின் இரகசியப்பொருள்களை நன்கறிந்து நமக்கு விளக்கிய மகான்கள் இத்தென்னாட்டின்கண்ணேயே பிறந்தவர்கள். ஒப்புயர்வில்லா நம் வேதோபநிஷத்துக்களுக்கும் பிரமசூத்திரத்துக்கும் பகவத்கீதைக்கும் உலகமுவக்கும்வண்ணம் உயர்ந்த வியாக்கியானங்கள் எழுதி நாமுய்யும்விதஞ்செய்த ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள், ஸ்ரீமத் இராமாநுஜாசாரியார், ஸ்ரீமத்துவாசாரியார் முதலிய மகாசாரியர்களும் தமிழ் மறையெனப்படும் திருவாசகம், தேவாரம், திருவாய்மொழிமுதலிய திவ்யப்பிரபந்தங்களைப் பெருங்கருணையுடன் உலகமுவப்பத் திருவாய்மலர்ந்தருளிய திருவாதவூரர், திருஞானசம்பந்தமூர்த்திகள், திருநாவுக்கரசுமூர்த்திகள், திருவாரூரர் முதலிய மகான்களும், நம்மாழ்வார் முதலிய ஆழ்வாராதிகளும் பிறந்து வாழ்ந்தது இத்தென்னாடே. பார்த்தமாத்திரத்தில் பக்தியையூட்டும் பலபரிசுத்த தேவாலய

ங்களும், மடங்களும் செழித்தோங்கி நிற்பது இத்தென்னாடே.
பூலோக வைகுண்டமும், பூலோக கைலாசமுமுள்ளதும் இத்
தென்னாடே. இத்துணைச்சிறப்புவாய்ந்த நந்தென்னாட்டிலுள்ள
வர்கள் மதவாராய்ச்சியிலும் மதங்களை மிகப்பற்றுடன் பேணுவ
திலும் தங்கள் உயிரையும் துரும்பாக மதித்து வேலைசெய்து
வந்திருக்கின்றனர். அவ்வாறு பட்டதபாடெல்லாம்பட்டு அவர்
கள் சேமித்து வைத்திருக்கும் பழைய நூல்களை நாம் சரிவரத்
தேடியறிய முடிந்தாலே நாம் நம் நாட்டுக்கு எத்துணையோ
பேருபகாரிகளாவோம். அந்நிய மதஸ்தரும் அளவிலா ஆவலு
டன் அறிய விரும்பும் நம் அரிய நூல்களை நாம் தற்காலம் பேண
த்தக்க முறை பேணுகிறதில்லை. நம்பழைய ஏடுகள் பார்ப்பவ
ரனைவரும் பரிதபிக்கத்தக்க நிலைமையிலிருக்கின்றன. நாமொரு
கால் மதுரைஜில்லா உத்தமபாளையம் போயிருந்தபொழுது
சில வீடுகளில் பழைய ஏடுகளிருக்கின்றனவென்று எம் நண்ப
ரொருவரால் கேள்வியுற்று ஒரு வீட்டிற்போய்ப் பார்க்கையில்
ஏடுகள் கையிலெடுக்கவும் விளங்காத நிலைமையில் செல்லரித்துக்
கிடந்தன. அத்துன்புற்ற காட்சியைக் கண்ணுறவே எம்மிரு
கண்களினின்றும் நீர்பெருகி இப்பரிதாப நிலைமையைப் பார்க்க
வொண்ணாது என்றாற்போல் எம் பார்வையை மறைத்தது.
உடனே கண்களைச் செவ்விதாகத்துடைத்துக்கொண்டு ஏடுகளைக்
கையிலெடுக்கவே உமிபோல் புலபுலவென உதிர்ந்தன. அவ்
வேட்டினால் யாப்புச்சாகரம், இலக்கணக்களஞ்சியம் என்ற இரு
பெயர்கள் மட்டுமே தெரியவந்தன. மற்றோர் வீட்டிற்போய்ப்
பார்க்கையில் மூன்று பெருஞ்சுவடிகளும் சில பழைய தனியேடு
களும் ஒரு கயிற்றில்கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவை
ற்றை ஆவலுடன்பிரித்துப்பார்க்கையில் ஒன்றில் "விவேகசிந்து"
என்றபெய ரெழுதப்பட்டிருந்தது. அதன் ஏடுகளை ஆராயுங்
கால் அது ஓர் அரிய வேதாந்த கிரந்தமென்று விளங்கியது.
அவ்வரிய நூலின் 82-ம் ஏட்டில்கண்ட விஷயங்கள் வருமாறு:—

வேதபாஷ்யப் பிரகரணங்களை நரசிங்கராயருடைய குமா
ரர் செய்த பாலராசா தெலுங்குபாஷையிலே வியாக்கியா

னம் பண்ணினர். அதை † முகுந்த யோகிகள் மகாராஷ்டர பாஷையில் குருசிஷ்ய சம்வாதமாக விவேகசிந்தென்று பூர்வபாக சிருஷ்டிக்கிரமம் எட்டுப்பிரகரணமும் உத்தரபாகம் சங்காரக்கிரமம் பத்துப்பிரகரணமும் ஆக 18 பிரகரணமாகப் பண்ணினர். அதைத் தமிழினாலே சொன்னோம். "இந்த விவேகசிந்துவைத் தமிழினாலே எழுதுவித்த சுப்பிரமணியகுரு பாதாரவிந்தந் துணை. விய ௵ கார்த்திகை ௴ 25 ௳ பஞ்சமியும் அஸ்த நக்ஷத்திரமும் பெற்ற நாளில் நெற்குன்றம் சொக்கநாத முதலியாரவர்கள் ஏடு மீனாட்சிபிள்ளை மகன் குழந்தைவேலப்பன் எழுதியது."

இதனால் இந்நூல் மொழிபெயர்த்து ஏறக்குறைய 75 வருஷங்களாகின்றன என்பது விளங்குகின்றது. [இது குறைந்தபக்ஷம் சென்ற விய ௵த்துக்கு முன் விய ௵த்தில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பதை ஏட்டின் பழைமையால் ஊகிக்கலாம்.] இவ்வரிய பிரபந்தத்தினின்றும் இரண்டொரு விஷயம் எடுத்துக்காட்டுவோம்.

சற்குரு லட்சணம்.

சம்சாரத்தினின்றும் விடுபட்டவர். ஞானவைராக்கிய உன்னிதர். பிரம்மாசனத்தில் ஆநந்தித்திருக்கிறவரே சற்குரு. காமக்குரோதாதி சூதகமில்லாதவர். பிரம்மசுகத்திலே நிரந்தர நிர்மலராயிருக்கிறவர் விஷய சேஷ்டையில் ஒருகாலுங் கூடாதவர். சுகதுக்கங்களினாலே சித்தசஞ்சலமில்லாதவர். பிரமாதி பிபீலிகாந்தமான சகல பூதஜாதிகளிலேயும் விஷயபாவமில்லை.

---

† 47-ம் ஏட்டில் இட்டபெயர் முகுந்தராஜயோகி யென்று கண்டிருக்கிறது.

47-ம் ஏட்டில் ஸ்ரீமத்சங்கராசாரியர் சொன்ன வேதபாஷ்யத்திலிருந்து அர்த்தம் நாம் "விவரித்துச்சொன்னோம்" என்ற மொழிகள் காணப்படுகின்றன.

அவர் சித்தத்தில் நானொருவன் ஈசுவரனொருவன் என்கிற துவைதபாவமில்லாமல். இந்தப் பிரபஞ்சம் சகலத்தையும் பரமார்த்தமாகவே காண்பார். பிரம்மானந்த மக்னராய்ச் சகல கர்ம நிராசகராய்ச் சங்கற்பமில்லாதவராய்ச் சகலமத சம்மதராயிருப்பார். சொரூபத்திதி ஒருகாலுமறவார். சகல இந்திரியத்துவாரத்திலேயும் சொரூபமாகவே ஆநந்திப்பார். விதி நிஷேதம் பண்ணுவார். விதிநிஷேத விரக்தராயிருப்பார். சகல காரியத்திலேயும் பிரம்மமாகவேயிருப்பார். தள்ளுகிறோமென்றதுமில்லை. தள்ளுகிறோமென்கிறதும் போகிக்கிறோமென்கிறதுமெவ்விடமோ அவ்விடத்தில்தானே ஆநந்தமாயிருப்பார். இந்திரிய வியாபாரம் பிறக்கும். பிறந்தாலும் அகர்த்தவ்வியமாகவேயிருப்பார். இப்படிப்பட்ட மகாத்மாவே பிரமவித்தை கொடுக்கிற உதாரத்துவத்துக்குச் சமர்த்தர். அவரே அவஸ்தாத்திரயமொழிந்தவர். அகண்டபோத சொரூபர். அமூர்த்த பரமானந்தர். நிமிஷாநிமிஷ வியாபாரத்திற்காறலும் சலிப்பார். அந்தரங்க மக்னர். நினைப்புமறப்பு அநுசந்தானமில்லாதவர். இப்படிப்பட்ட மகான்மாவே ஈசுவரசொரூபம் என்று அறிகிறது. சற்குருலட்சணம் சொல்லப்பட்டது. இனி சிஷ்ய பரீக்ஷை சொல்லுகிறோம். (தொடரும்.) ப-ர்.

இஞ்சியும் சுக்கும்.

"சுக்கில்லாக் கஷாயமுமுண்டோ" என்பது நம் நாட்டு வைத்தியர்களுக்குள் வழங்கும் பழமொழி இஞ்சியைப் பக்குவப்படுத்தியே சுக்குச்செய்கிறார்கள். நம் தென்னிந்தியாவில் இதனை உபயோகியாத வீடில்லை. இத்துணை உபயோகமான பொருளை நாம் எவ்வளவு பயிர் செய்ய வேண்டுமோ அவ்வளவு விஸ்தாரமாய் நாம் பயிர்செய்யவில்லையென்பது திண்ணம். இதற்கு முக்கியகாரணம் இது எந்த மண்ணிலும் பயிராகாததே. சரளையில்லா நல்ல செவ்வல் நிலமும் மணற்சாரியான நிலமுமே இப்பயிருக்குத்தக்க இடம். கீழ்ச்சமுத்திரக்கரையோரங்களிலுள்ள நாடுகளில் நன்செய் நிலங்களிலும் மேல்கரை நாடுகளில்

புன்செய் நிலங்களிலும் தோட்டங்களிலும் இதனைப்பயிர்செய்து வருகின்றனர். கீழ்க்கரைக்கு நல்லபட்டம் பங்குனி சித்திரை மாதம். மேல்கரைக்கு மாசிபங்குனி மாதங்கள். இது ஏழெட்டு மாதப்பயிர். நவம்பர்மாதத்தில் இது நல்ல பக்குவத்துக்கு வரும் அப்பொழுது அதன் இலை வாடிவதங்கிக் கருகிப்போம். அச்சமயம் நம் குடியானவர் இஞ்சிக்கிழங்கை வெட்டியெடுத்து தண்ணீரில் நன்றாய்க்கழுவி மேல்தோலைப் போக்கி அதனைப் பகலில் வெயிலிலும இரவில் பனிப்பதத்திலும் ஒருவாரம்வரை வைத்துப் பக்குவப்படுத்துவார்கள். மழையில்லாமற் போனால் இதற்குப் பெருங்கேடு விளைய இடமுண்டு. இதனைக்குடியானவர் பக்குவஞ்செய்யும்விதம் வருமாறு:—இஞ்சியை முதலில் வெயிலில் உலர்த்துவார்கள். அதனால் அதன் பருமன் அரைவரிசை குறையும். பின்னர் அதனை ஒரு தண்ணீர் வார்த்த தொட்டியிலிட்டுச் சிறிது ஊறவைத்துப் பின்காலால் சில நிமிஷங்கள் மிதித்துத் துவைப்பார்கள். பின் அதை எடுத்துக் கூடைகளிலிட்டு நிர்மலமான தண்ணீரில் கழுவிப்புழுக்கும்படியான இடத்துக்குக்கொண்டுபோய் அதனைச் சுத்தப்படுத்தத் தொடங்குவார்கள். ஒவ்வொரு கூடையிலும் பத்துராத்தல் கிழங்குகளிட்டு வரிசையாய் உயர்ந்த அடுப்புகளில் வைத்து அடியிலிருந்து கந்தகப்புகையூட்டி வேகவைப்பார்கள். சிற்சில இடங்களில் வேகவைக்குங்கால் கூடைகளில் இடாமல் அடுப்புக்கு மேல் வைக்கப்பட்ட ஒருவிதத்தட்டில் பரப்புவார்கள். அத்தட்டிலுள்ள சிறு துவாரங்கள் வழியாய் கந்தகப்புகை மேலேறும். ஒரு அடுப்பில் ஒன்றுமுதல் ஒன்றரைக்கண்டி இஞ்சிவரை வேகவைக்கலாம். முதன்முறை சுத்தப்படுத்த 2 பவுண்டு கந்தகஞ்செலவாகும். அதற்கு 3-மணி நேரம் செல்லும். பின்னர் அதனையெடுத்து $1\frac{1}{2}$ நாள் உலர்த்திவைப்பார்கள். பின் அதனையெடுத்து மேற்றோல்போகப்போகச்சுரண்டி சுத்தம்செய்வார்கள். பின் அதனை நிறுத்து நிறுத்துச் சுண்ணாம்பு நீரிலிட்டு அதனையெடுத்து மற்றோர்முறை வேறுவகைச் சுண்ணாம்பிலிடுவார்கள். இரண்டாமுறை சுத்திசெய்யும் வண்ணம் அதனையெடுத்து அடுப்பண்டை கொண்டுபோய் முன்விட்டதில் அரை

ப்பங்கு மாத்திரமிட்டு முன்னிலும் அதிகநேரம் வைத்திருப்பார்கள். பின் அதனையெடுத்து 2 நாள் வெயிலில் உலர்த்துவார்கள். மூன்றுமுறை அதனை நல்ல காரமான சுண்ணாம்பு நீரிலிட்டு முன்போல் அடுப்பில்வைத்துச் சுத்திசெய்வார்கள். இம்முறை முன்னினும் அதிக கந்தகமுபயோகிப்பது வழக்கம் ஓரிரவு முழுவதும் இவ்வாறு வைத்திருந்து பின்னெடுத்துக் காயவைப்பார்கள். அது சேவசுக்கெனப்படும். பின் அதனை வளமைக்கும் பருமனுக்கும் தக்கவண்ணம் நானாவிதங்களாகப் பிரித்தெடுத்து உள்சுண்ணாம்பு பூசிய மாம்பலகைப் பெட்டிகளில் வைத்து வியாபாரத்துக்கு அனுப்புவார்கள். கழிபட்ட சுக்கை உள்ளூர் வியாபாரத்துக்கு உபயோகப்படுத்துவது வழக்கம். நம்நாட்டினின்று வருஷாவருஷம் சற்றேறக்குறைய 20 இலட்சம் பவுண்டு சுக்கு ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகிறதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். 30 வருஷங்களுக்குமுன் ஒரு கண்டிக்கு 40 ரூ. கிடைத்துவந்தது. 10 வருஷங்களுக்குமுன் கண்டி ஒன்றுக்கு 250 ரூ. வரை கிடைத்தது. தற்காலம் 100 ரூ. முதல் 200 ரூ. வரை கிடைக்கின்றது. இத்துணை இலாபம் கிடைக்கும் சரக்கை நம் குடியானவர் பயிர்செய்யும் விதம் அவ்வளவு திருப்திகரமாகவில்லை. பழைய வழக்கத்தையே பெரும்பாலும் பின்பற்றுகிறார்கள். தற்காலம் விருத்தியாகிவரும் சாஸ்திர வழிகளையுணர்ந்து தக்கவண்ணம் சிரமமெடுத்துப் பயிர்செய்வார்களானால் கிழங்கு பருமனாவதன்றி மற்றைய எல்லாக்குணங்களும் விருத்தியடைந்து குடியானவர்களும் அதிக இலாபமடைய வழியுண்டு. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்னுமுதுமொழியைக் கைக்கொண்டு தேசக்ஷேமத்துக்கு இன்றியமையாத வழிகளை யநுசரித்துப் பயிர் செய்வார்களானால் நம் குடியானவர் பெருத்த இலாபமடைவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அடுத்தடுத்து இருமுறை பயிர்செய்த நிலத்தில் எள் முதலிய வேறு பயிர் செய்வதே நிலத்துக்கு நலம். நம் குடியானவர்கள் மட்டும் விவேகிகளாவார்களானால் நம் நாடெங்கும் செழிக்கும். நமக்குக

கேடொன்றுமில்லை. 'பருவத்தே பயிர்செய்' 'பட்டந்தப்பினால் கஷ்டம்' என்ற முதுமொழிகளைக் கவனித்து நடப்பார்களாக.

எஸ். சாமிநாதையர்.

சைவசித்தாந்தம்.

[தொடர்ச்சி.]

இனி நாராயணன் என்னும் நாமம் சிவபெருமானுக்கு அவயவப்பொருள்படுமாறு யாங்ஙனமெனின் கூறுதும்.

நாராதுதொகுதி நாரமென்னுந் தொகுதிப்பொருள்பற்றி அண்விகுதிவருமென்னும் பாணினிசூத்திரத்தால் ணகரவித்தையுடைய அண்விகுதிபெற்றுநின்று, மேலாசாரப்பொருள்பற்றிக் ககர ஙகர வித்துக்களையுடைய யகர விகுதிபெற்று அயல் நீண்டு நாராயவெனநின்று, அதுவும் பகுதித்தன்மைப்பட்டு வினைமுதற்பொருளில் வரும் லகர டகர வித்துக்களையுடைய யுகர விகுதி வந்து அநவெனத்திரிந்து நிற்ப, நாராயநவென நின்று, வினைமுதற்பொருளில் வரும்பெயர் விகுதி நகரம் ணகரமாமென்பதனால் நகரம் ணகரமாகி நாராயணன் எனமுடிந்து நாராதொகுதியை யொத்து நிற்பனென்னும் பொருளில் நாராயணன் என்னும் பெயர் சிவனுக்கு அவயவப்பொருள்படுமாறு கண்டுகொள்க. அற்றாகலினன்றே பெண்பாலில் ஈகார விகுதிபெற்று நாராயணியென உமாதேவியாருக்குத் திருநாமம் போந்தவாறென்க. ஆதலால் முத்தியை விரும்பினவர்கள் சிவபெருமானையே ஆராதிக்கவேண்டும். அவனைமறந்து செய்யுந்தொழில்களெல்லாம் வீண்செயலாம்.

உதாரணம். "அவனடிக்கன்புசெய்கை, மால்பறம், அரன்றன்பாத மறந்துசெயறங்களெல்லாம், வீண்செயல்" எனவும், "மானிடன் விசும்பைத்தோல்போற் சுருட்டுதல் வல்லோனாயி, னீனமில் சிவனைக்காணா திடும்பைதீர் வீடுமெய்து, மானமார் சுருதிகூறும் வழக்கிவை யாதலாலே, யானம ரிறையைக்காணு முபாயமே யறிதல்வேண்டும்"

"அவனேமூன்றுவற்றபரம்பிரமம்புராண
னவனேமுழுதுக்குங்காரணமாந்தேவர்க்கு
மவனேயிறைவன்றொழுவார்க்கருள்வீடளிப்போ
னவனேயெனவோதிவெவ்வேறுமுரைப்பவங்கள்"

"எச்சன்றனக்குமிமையோர்க்குமெவ்வேறியர்க்கு
மச்சங்கரனேயரசன்விசுவாதிகன்சீர்
நச்சும்முனேயின்றருட்பார்வையினேக்கிநல்கு
மெய்ச்சித்துருவென்றறியென்றதிருக்குவேதம்"

"தோலாவகைகாப்பணைடைந்துதரும்புநட்டு
மாலாதிவிண்ணோர்வலிமுற்றவுமாற்றவல்லோ
னாலாலமுண்டோனவனேயகிலங்களுக்கு
மேலாயவேதுவெனவிண்டதுசாமவேதம்"

"வளிதாழ்விசும்பைப்பாந்தோலிற்சுருட்டவல்லோ
ருளரேற்புடைவிங்கியெழுந்துறிரண்டுருண்ட
விளவெம்முலைபங்கனையன்றியுமின்பமுத்தி
யளவிற்பெறலாமெனவிண்டததர்வவேதம்"

எனவுமோதியவாற்றானறிக.

சதாசிவம் விளங்குதற்கு ஏதுவாய் நிற்போன் சதாசிவன் எனவும், மாயையுடையவன் மகேசன் எனவும் காரணக்குறியா மாறுகாண்க.

சரம் அசரங்களாகிய உடம்புகளுக்கெல்லாம் சிவபிரான் உயிராதலாலும், உயிரையின்றி உடம்பு இயங்காமையானும், தனக்கென ஒன்றில்லாதவராகிய சிவபெருமான் தான் போகியாயிருந்து உயிர்களுக்குப் போகங்களை ஊட்டியும், யோகியாயிருந்து உயிர்கள் யோகமாற்றி மெய்ஞ்ஞானம் உற்று உயர்சிவயோகத்தேகமாகி வீடெய்திடச்செய்தும் நிற்பர். நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் யோகிருந்துழி வேட்கைக்குக் காரணமாகிய காமன் இருக்கவும் விட்டுணு முதலிய தேவர்கள் இன்பநுகர்ச்சியின்றி மெலிவுற்றதும், மாயன் அம்மெலிவு கெடும்படி கருதிக்

காமனை ஏவுதல்செய்ய அவனை நெற்றிக்கண்ணை விழித்தெரித்து உமாதேவியைக்கலந்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பத்தை அருளிச்செய்ததுமாகிய இந்நிகழ்ச்சியே இதற்குச் சான்றென்க. இதற்குச்சுருதி.

"போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரிதலோரார்
யோகியாயோகமுத்தியுதவுதலதுவுமோரார்
வேகியானாற்போற்செய்தவினையினைவீட்டலோரா
ரூகியாமூடரெல்லாமும்பரிலொருவனென்பர்."

இவ்வுண்மைகளைச் சிறிதுமறியாது நமது சிவபெருமானை மும்மூர்த்திகளோடு ஒருவனாகவைத்தெண்ணுவோரை நோக்கி

"நம்மவரவரே மூவரென் றேயெம்பிரானொடு மெண்ணிவிண் ணுண்டுமண்மேற் றேவரென் றேயிறுமாந்தென்ன பாவந் திரிதவரே" எனவாதவூரடிகளிரங்கிக் கூறிய திருவாக்குமறிக.

இன்னும் "தேவரிலொருவனென்பர் திருவுருச்சிவனைத்தேவர்
மூவராய் நின்றதோரார்" எனவும்,

"தேவராயுமசுரராயுஞ் சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும விண்ணெரிகாலிரு
மேவராயவிரைமலரோன் செங்கணமாலீசனென்னு
மூவராயமுதலொருவன் மேயதுமுதுகுன்றே" எனவும்,

"மாவையுரித்ததள்கொண் டங்கமணிந்தவனை
வஞ்சர்மனத்திறையு நெஞ்சணுகாதவனை
மூவருருத்தனதா மூலமுதற்கருவை" எனவும்,

"வரியாயமலரானும்வையந்தன்னை
யுரிதாயவளந்தானுமுள்ளுதற்கு
சரியானுமறியாதகள்ளினமேயான்
பெரியானென்றறிவார்கள்பேசுவரே" எனவும்,

"படைத்தளித்தழிப்பருமும்மூர்த்திகளாயினை" எனவும்

"தேவர்கோனறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத்தழிக்குமற்றை மூவர்கோனாய்நின்ற முதல்வன்", எனவும்,

"முந்துநடுவுமுடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச்சேவடியானை" எனவும்,

"முந்தியமுதனடுவிறுதியுமானாய் மூவருமறிகிலர்" எனவும்,

"அரியாகிக்காப்பானயனாய்ப்படைப்பா
னரனாயழிப்பானுந்தானே" எனவும்,

"வீரனயனரியாருமறியாவகை வெங்கனலி சாரிசுகனே"

எனவும் வருந்திருவாக்குக்களானு மோர்ந்துணர்க.

இதுவே சுருதி மிருதி புராணம் இதிகாசம் எல்லாவற்றிற்குங் கருத்தென்பது சிவதத்துவவிவேகமுடையார் சுருதிகளென்னுஞ் சுலோகத்தில் கடாவிடைகளான் விரித்துக்காட்டியவாற்றானறிக. இங்ஙனமாயினுஞ் சிகண்டருத்திரன் அயன்மால் போலச் சகலரின்றிப் பிரளயாகலர்களிற் பக்குவமுடையோராய்க் கட்டு நீங்கி முத்திபெற்ற கடவுளாகலானும், பரமசிவனுக்குரிய வெல்லாப்பெயர்களும் வடிவமுந்தொழிலும் பெற்றுடையவனாகலானும், சைவாகமங்களையறிவுறுக்கும் அயன்மாலிருவர்க்குமேலாய்ச் சைவத்தினையுஞ் சமயதீக்கை பெற்றோரால் வழிபடுகடவுளாயினனென்க.

இன்னும் சிவபெருமான் நிவர்த்திமுதலிய ஐவகைப்பதிகளாயும், இருபத்தைந்து முதலிய வடிவங்களாயும், இன்னும் அநேக ரூபமாயும், விளங்கிநிற்பர்; எனவும் இங்ஙனந் தொழிலான் வேறுபட்டதன்றிப் பொருளால் வேறுபாடிலையெனவு மோர்ந்துணர்க. இவ்வாறெல்லாமடைந்துநிற்றல் ஆன்மாக்கள் பிறவிநீங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.

இங்ஙனங்கூறிப்போந்த சிவமும் சத்தியும் சூரியனுங் கிரணமும்போல தாதான்மியத்தா லிருதிறப்பட்டியைந்து தன்னை

நோக்காது புறப்பொருளை நோக்கிநிற்கு நிலையிற் சத்தியெனவும் பெயர்பெற்று நிற்கும். இனி சத்தியொன்றுதானே காரிய வேறுபாட்டால் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்று ஐவகையாயும், ஆரணி, சென்னி, போதயித்திரி என்று மூன்றாயும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்று ஐவகையாயும் இன்னும் அநேகபேதமாயும நிற்கும்.

பராசத்தியாவது—உயிர்களுக்கு அநுக்கிரகமாத்திரங் குறித்துப் பொதுவகையான அறிந்து மறிவித்து நிற்பதாகிய ஞானமொன்றேயாம். திரோதான சத்தியாவது மலத்தின் வழிநின்று பாகம் வருவித்தற் பொருட்டு மோகமுதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பமேயாம். இச்சா சத்தியாவது—உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளித்தற்கனுளதாகிய கருணையேயாம். ஞானசத்தியாவது—அதற்குச்செய்யக்கடவதாகிய உபாயங்களையெல்லாமறியுமறிவேயாம். கிரியாசத்தியாவது—அவற்றை அவ்வாறே சங்கற்பித்துச்செய்யுஞ் சங்கற்பமேயாம்.

இனி நிவிர்த்திமுதலிய ஐவகைத்திருவருளின் இலக்கணங்களாவன—தாய்தந்தை மனை மக்கண் மண் பொன் முதலிய பந்தங்களினின்று நிவர்த்திசெய்யுஞ் சிவசத்திக்கு நிவிர்த்தியென்று பெயர் அங்ஙனம் நிவிர்த்திபெற்ற ஆன்மாக்களை மீளநோக்காத வண்ணம் பிரதிட்டை செய்யுஞ் சிவசத்திக்குப் பிரதிட்டையென்று பெயர். அங்ஙனம் பிரதிட்டை பெற்ற ஆன்மாக்களுக்கு அனுமான ஞானம் ஆகமஞானமின்றி அனுபூதி ஞானத்தைப் பயப்பிக்குஞ் சிவசத்திக்கு வித்தையென்று பெயர். அங்ஙனம் அநுபூதிபெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்புச் சங்கற்பமுதலிய வெல்லாத்துன்பங்களையுஞ் சாந்தமாகச் செய்யுஞ் சிவசத்திக்குச் சாந்தியென்று பெயர். அங்ஙனஞ்

சாந்தமாய் நின்றதும் ஒழியச்செய்யுஞ் சிவசத்திக்குச் சாந்தியதீதையென்று பெயர்.

இங்ஙனஞ் சிவசத்தியாகிய திருவருட்சத்தியொன்றுதானே காரியவேறுபாட்டால் ஐந்து பேதப்பட்டன இங்ஙனமே சிவமும் நிவிர்த்திபதி முதலியவாக ஐந்து பேதப்பட்டன.

ஆரணி, சென்னி, ரோதயித்திரி என்னு மூன்று சத்திகளும் பிரமா விஷ்ணு உருத்திரன் என்ற மூன்றுபேரையும் அதிட்டித்துச் சிருஷ்டி திதி சங்காரமென்னு மூன்று தொழிலையுஞ் செய்து நிற்கும் இவற்றுள் சங்காரம் ஐவகைப்படும். அவற்றுள் முதலது நிவிர்த்தி கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். இரண்டாவது பிரதிட்டா கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். மூன்றாவது வித்தியா கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். நான்காவது சாந்தி கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். இறுதியது சாந்தியதீதகலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம். ஈண்டு உலகிற்கு முதற்கடவுளென்றது சுத்தமாயாபுவனத்தையுஞ் சங்கரிக்குஞ் சங்கார காரணனாகிய பரமசிவனை. அயன்மாலொடுங்கூட்டக்குணத்துவத்தின்வைகிப் பிரகிருதிபுவனத்தைஞ் சங்கரிக்குங் குணி ருத்திரனையன்றெனவுணர்க. என்னை ? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்கார காரணனன்மையின். இக்கருத்து நோக்கியே,

> "தேவரிலொருவனென்பர் திருவுருச்சிவனைத்தேவர்
> மூவராய்நின்றதோரார் முதலுருப்பாதிமாதா
> ராவதுமுணராராதியரியயற்கரியவொன்று
> மேவுருநிலையுமோராரவனுருவிளைவுமோரார்."

என்று சுருதி கூறிற்று. திருச்சிற்றம்பலம்.

ஏகனாகிய பதியியல்பு ஒருவாறு முடிந்தது. இன்னும் இதன் விரிவையெல்லாம் ஆசிரியர் சிவஞானயோகிகள் செய்தருளிய திராவிட மகாபாடியத்திற்காண்க. ஈண்டுரைப்பிற்பெருகும். இனி அனேகனாகிய பசு இயல்பு வரும்.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.
சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடம்.	இங்ஙனம் சுப்பிரமணியபிள்ளை.

காரியார் நாரியார் பாப் பகுந்துகொண்ட திருவிளையாடல்.

இஃது

வேம்பத்தூர்ச் சங்க வித்துவான்களியற்றிய திருவிளையாடற் புராணத்துள்ளது. இப்புராணத்துள் பரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடற் புராணத்துள்ள கூசு திருவிளையாடல்களில் "வருணன்விட்ட கடலை வற்றச்செய்தது, திருநகரங்கண்டது, மாயப்பசுவை வதைத்தது" என்னும் மூன்று திருவிளையாடல்களுக்குப் பிரதியாக "காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்டது, மூர்த்திநாயனருக்கு அரசளித்தது, புலிமுலை புல்வாய்க்கருளியது" என்னும் மூன்று திருவிளையாடல்கள் காணப்படுகின்றன. இப்புராணம் ஆறுநூற்றெழுபது செய்யுள்களையுடையது.

கற்பமா முன்னோர் நாளிற் காரியார் நாரியா ரென்
றற்புதப் புலவர் நீதி யாசனைக் கவிதை பாடி
உற்றபல் சிறப்பி னோடு முயர்வட நாட்டி னின்றும்
வெற்றியி னணைந்தார் கொற்ற வியன்றமிழ் மதுரை நோக்கி.

வருபவர் நெறி மயங்கி வனத்திடைப் புகுந்து சாலத்
தெருமர லுறுங்கால் கண்டு செந்தமிழ்க் கிளியான் சொக்கன்
நிரைதரு காலி மேய்த்தோ னிடையனாய் நேயங்கூர்ந்து
பொருவரும் புலவர் காணத் தோன்றினன் புகழை வேட்டு. ௨

கனகவொண் குழைசேர் காதிற் களங்கனிக் கொத்த ணிந்து
புளையும்வெண் பாசி பூண்டு பூதிமெய் பூசி யாவு
மனமுரு கிடவாய் வைத்து வரிநெடுங் குழலு மூதித்
தனிநெடுந் தண்டு மூன்றி நின்றனன் றூநூத் தெற்றி. ௩

ஆங்கவர் காணு முன்ன ரதிசயித் தச்ச நீங்கி
ஓங்கிய மதுரை யூர்க்குப் போமவழி யுரைத்தி யென்னப்
பாங்குடைப் புலவீர் நீங்கள் பல்சிறப் பொடு மடைந்தீர்
ஈங்குரை யீர்நு மக்குக் காரிய மென்கொலென்ன. ௪

என்றுமன் றாடி சொல்ல வேடநீ யென்னசொன்னு
யொன்றிய காரி யங்க ளென்றனக் குரைக்க வற்றோ
அன்றுகாண் பரிய வெங்கட் கதாசொலென் றடர்க்கக் கண்டு
நின்றவ னவளைத்து நெறிசொலே னென்று நக்கான். ௫

வேறு.

மென்புலவ ரதுகண்டு வழிவிடுப்பான் மீனவனை
இன்புறநற் கவிபாடி வருகின்றே மெனக்கேட்டு
வன்புலவ ரிருக்கின்ற இடமாகு மதியாது
நன்கவிதை சொன்னேமென் றுரைத்தீரே நாணுது. ௬

அளந்தபுல வீரான தாகவிதை யொருகவிதை
விளம்பிடுமி னெனவிடையன் கொச்சையல னறிவிடமன்
றுளங்கியநன் கவிதைசொன்னா லொழியவழி சொல்லானென்
றுளமபடுமோர் கவிபகர்ந்தா ருயர்புலவர் தாழாது. ௭

அக்கவிதை கேட்டலுமே யழகியது நமக்கென்று
சொக்கனுமங் கணிட்டுத் தொடைதட்டிச் சிரித்தருளி
இக்கவிதை யோநவின்றீ ரேழையீர் யாரறியார்
மிக்ககவி தனைமாடு மேப்பவர்வாய்க் கேட்டிடுமின். ௮

கேட்டிடுமி னெனவுடைவிற் கிளர்வுறவெங் கனுநிறைந்த
காட்டிடையன் பாட்டினைத்துங் கற்றுரைப்ப மற்றவரு
நாட்டிடைய னல்லனிவ னார்கொலென நனிநாணி
மீட்டுரையா தொன்றையுமுன் வெருவுற்று ருடல்வியர்த்தார். ௯

நல்லவடி வனுமாகி யிருக்கின்றாய் நான்மறைகள்
சொல்லரியான் சொல்லினல்லான் மற்றொருவர் சொல்வாரில்
வல்லவனக் கிதுவந்த வாறுரைப்பை யேன்மன்னன்
செல்வமுறத் தந்தவெலாந் தருகின்றே மெனச்செப்ப. ௰

மட்டவிழ்பூம் பொழில்புடைசூழ் மாமதுரை யூர்ப்பொதுவன்
சிட்டர்புகழ் தருமண்டன் சிற்றிடைச்சி மணவாளன
விட்டபசு முட்டாமன் மேய்த்தடக்கிப் பாசத்தாற்
கட்டிவிடு மன்றாடி கான்மாறி யானுகும். ௰௧

பெரும்பொருளி னசையினைப் பெயர்பெரிய சொக்கக்கோன்
பரிந்துளநுங் கவிதைகளிற் பாதியகுத் தென்றன்மேற்
றிருந்தநவின் றிடுவீரேற் சேர்ந்தவழி யானுமக்குப்
பொருந்தவுரை செய்வலெனப் புலவர்களு மியைந்தனரால். ௰௨

ஆங்கவர்க ளிசையாமு னதர்காட்டி யொளித்தருள
ஈங்கவனு மாங்கருள்சே ரிடைச்சிவனே யெனத்தெளிந்து
தேங்குபுகழ் தருமதுரை சேர்ந்தயரா லயத்தணைந்து
தாங்கருமன் பொடுபசுந்து சாற்றினா தமிழ்மாலை. ௰௩

சாற்றியநற் றமிழ்கொண்டு தமிழ்ச்சொக்கன் புவிபோற்றும்
பார்த்திபனே யெனப்பார்த்து விடைகொடுப்பப் பாவலர்கள்
சேர்த்ததமிழ் பாதிகொடு தென்னனையுங் கண்டவினர்
வத்துசிறப் பொடுங்களித்துப் போயினர்தம மியருட்டி. ௰௪

முற்றிற்று.

இதுவும் ஒரு நன்மைக்கே.

கடவுள் பரமகாருணிகர் ஆதலின் அவர் திருவருளால் நடக்கின்ற எல்லாச்செயல்களும் நன்மையையே விளைவிக்கும் சிற்சில சமயங்களில் நேருகின்ற காரியங்கள் நமக்குத்துன்பத்தைத் தருவனவாகக் காணப்படினும் உற்றுநோக்கில் அவற்றால் கடைசியாக ஒரு நன்மையே விளையுமென்பது திண்ணம். ஆனால் அந்த நன்மையானது உடனே தெரியக்கூடிய நிலையிலில்லாமலும் சிலகாலம் சென்றபின் ஊகித்து அறியக்கூடியதாகவும் இருந்தலால், தற்போது துக்கமாக நினைத்து நாம் வருந்துவது அறிவன்று. தட்டான் பொன்னைக்காய்ச்சியடித்துப் புடமிடுதல் எதன்

பொருட்டு? ஒளி விளங்குதற்காகவன்றோ? வன்றான் மணியை வேகவைத்துக் கல்லில அடித்தல் எதன்பொருட்டு? மணியின் அழுக்கு நீங்கி பரிசுத்தமடைதற்கேயன்றோ? இவைபோலவே நமது தீவினையைப் போக்கி நன்மை விளைத்தற்காகவேதான் அத்தீவினைப்பயனாகிய துன்பத்தையூட்டித் தொலைப்பிக்கின்றார் கடவுள். இவ்விஷயத்தையறியாமையால் நாம் துக்கம் வந்தபோது பாவிதெய்வம், பழிகாரத்தெய்வம், கண்கெட்ட தெய்வம் என்று பிதற்றிக் குறைகூறுகின்றோம். இது எவ்வளவு மதியீனம்! நன்றாக ஆராய்ந்து அறியாமையாலன்றோ சுகம் வந்தபோது நமது சாமர்த்தியத்தால் வந்ததாகவும், துக்கம் வந்தபோது கடவுளால் வந்ததாகவும் நினைக்கின்றோம். இனி உற்றுநோக்கில் துக்கம், சுகம் என்ற இரண்டுக்கும் மனமே காரணமன்றி வேறில்லை. நாம் எதைச்சுகமென்று விரும்புகின்றோமோ அதே துக்கமாக முடிகிறது. எதைத் துக்கமென்று வெறுக்கின்றோமோ அதே சுகமாக விளைகின்றது. இவ்விஷயம் மிகவும் பெரிதாதலின் துக்கமும் சுகமும் என்று தலைப்பிட்டு மற்றொரு முறை விரித்துக்கூறுவோம். உலக நடையில் நமக்கு இன்பந் தராமல் வருத்தந்தருகிற செய்திகளை சுகம் என்று கூறுவதற்கு ஒரு கதையுண்டு.

அதாவது.

ஒரு அரசனிடம் அநேக மந்திரிகள் இருந்தனர். அம்மந்திரிகளுள் ஒருவன் ஆழ்ந்த சிந்தையனாகி எப்பொழுதும் தெய்வ பக்தியிற் சிறந்தவனாய் எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் மனஞ்சலிப்பதின்றி கடவுள் எதுவும நன்மைக்கே செய்வார் ஆதலின் "இதுவும் ஒரு நன்மைக்கே" என்று கூறி மகிழ்ச்சி கொள்வது வழக்கமாகவுற்றிருந்தான். அவன் பெயர் கலங்காமதியன் இப்படியிருக்குங்கால் ஒருநாள் வேந்தன் வலக்கரத்துச் சிறுவிரல் கத்திபட்டு இரத்தவெள்ளம் பெருகலுண்டாயது. இதைக் கண்டு அரசனும் சோகமுற்றான். வந்தவர் பலரும் அந்தோ! அந்தோ!! என்று இரங்கி வருந்திக்கூறலாயினர். கலங்காமதியன் வந்து கோமானும் பிறரும் துயருறுவதைக்கண்டு நீங்கள் எல்லாரும் இவ்வண்ணம் துயரத்தில் மூழ்குதல் அறிவன்றே!

இதுவும் ஒரு நன்மைக்கே விளைந்தது, என்று கூறுகின்றான். இதைக்கேட்ட மன்னவன் கண்கள் சிவக்க மீசை துடிக்கக் கடுகடுத்து நோக்கி "யாமடைந்துள்ள வருத்தத்தைக் கவனியாது நீ ஏன்ன மாகப்பேசுகிறாய். ஆதலின் இந்த நிமிஷமே இவ்விடம் விட்டு ஓடிப்போ. பின்னை நமது மந்திரித்தானத்தினின்றும் விலக்கியிருக்கின்றோம்" என்று மிக்க கோபத்துடன் மொழிந்தான். இது கேட்டபோதும் கலங்காமதியன் முகமலர்ந்து "இதுவும் ஒரு நன்மைக்கே விளைந்தது" என்று கூறிச்சென்றான்.

பின்பு சின்னாட்கழித்து ஒருநாள் அரசன் வேட்டைக்குச் சென்று பற்பல மிருகங்களைக்கொன்று ஓர் மானைத்தொடர்ந்து மந்தியும் அறியா மரச்சோலையிற் றனித்துப் புகுந்து களைத்துச் சற்றே யிளைப்பாற இருந்தான். அங்கு தவக்கோலம்பூண்ட இரண்டு கொடும்பாவிகள் உருவிய வாளுடன் போந்து இறைவனை யிழுத்துச்சென்று நீராட்டி மலர்மாலைசூட்டி ஓர் காட்டுத் தெய்வாலய முன்பு நிறுத்தி வாளெடுத்து வெட்டத்தொடங்கினர். தொடங்குங்கால் அவருள் ஒருவன் இவனுக்கு வதேனும் அவயவப் பழுதுண்டோவெனப் பார்த்து வலக்கைச் சிறுவிரல் துண்டிக்கப்பட்டிருப்பதைநோக்கி, நில்! நில்! என்றுகூறித்தடுத்து அவயவக்குறையுடைய இவனைப் பலிகொடுத்தால் நாம் நினைத்தவண்ணம் புதையல் கிட்டாது ஆதலின் வீணாக இவனைக் கொல்வதாற் பயனில்லை விட்டுவிடு என்றான். வெட்டத்துணிந்த தவவேடப் பாவியர் கையினின்றுந் தப்பி சிங்கத்தினிடமகப்பட்டுத் தப்பிவருகின்ற மதயானைபோல வந்த மன்னவன் தனது நகரத்தையடைந்து கத்தியால் விரல் துணிபட்ட நாளில் கலங்காமதியன் 'இதுவும் ஒரு நன்மைக்கே' எனக்கூறியதை நினைத்து மகிழ்ந்து உடனே அந்த மந்திரியையழைத்து நிகழ்ந்தவையனைத்துங்கூறி மதிநுட்பம் வாய்ந்த மந்திரியே எனது விரலற்றபோது நீ கூறியவண்ணம் எனக்கு நன்மை விளைந்தது சரியே. நீ மந்திரித்தானத்தினின்றும் விலக்கப்பட்டபோது 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று கூறினையன்றோ! இப்போது நீ பெற்ற நன்மையை அறிய விரும்புகின்றேன் என்றான்.

மந்திரி புன்சிரிப்புடன் அண்ணலை நோக்கி அரசே யான் அடைந்த நன்மையும் சிறிதன்று தம்மைப்போலவே யானும் உயிர்பெற்றேன் எவ்வாறெனில், தாம் வேட்டைக்குச் செல்லுங்கால் யான் மந்திரிவேலையிலிருந்தால் தமது கூடவே வருவேன் மற்றையர்போலாது ஒரு நிமிஷமேனும் தம்மைவிட்டுப் பிரியாமல் உடன் வருவேன் அப்படி வருமிடத்து உம்மைப்பலியூட்ட நினைத்த கொடும்பாவிகள் உம்மை விட்டவுடன் என்னைப்பார்த்து அவயவக்குறையில்லாதவனென்று கண்டு கொலைசெய்து விடுவார்கள். இக்கொலைக்குத் தப்புதற்காகவே கடவுள் என்னை மந்திரித்தானத்தினின்றும் விலக்கியருளினர் என்று கூறினன்.

இதுகேட்ட இராசன் மனமகிழ்ந்து திருவருளையும், தமது மந்திரியின் மனநிலையையும் வியந்து முன்னிலும் அதிகமான சிறப்பும் உரிமையும் மந்திரிக்குத் தந்தான் என்பதாம்.

நண்பர்களே பார்த்தீர்களா !

நாம் எத்துயர் வரினும் கலங்காது மனத்திருப்தி கொள்வோமாயின் நமக்கு ஒருநாளும் துயரமென்பது சிறிதும் இல்லை. எல்லாம் வல்ல கிருபாசமுத்திரமாகிய கடவுள் நன்மையேசெய்வார்.

சுபம். சுபம்.

சி. இராக்கப்பபிள்ளை.

ஜகத்ஜோதி.

பொழுது புலர்ந்ததும் இரண்டு பிரயாணிகள் ஒரு கொடும்பாலைவனத்தில் பிரயாணம் புறப்பட்டனர். சூரியன் தன் அழகிய பொற்கிரணங்களைப்பரப்பிப் பிரகாசிக்கத் தொடங்கினன். அப்பாலைவனம் புற்பூண்டு சிறிதும் முளையாத ஒரு பெரும் மணற்காடு; மேல் நோக்கின் நிர்மலமான ஆகாயமும், கீழ் நோக்கின் மணல்வெளியுந் தவிர்த்து வேறொன்றும் புலப்படவில்லை. மருந்துக்கும் குளிர்நிழலைத்தரும் மரங்கிடைப்பதரிது. ஆங்காங்கு

இரண்டொரு மரம் தோன்றினும் பட்டுப்போனவைபோலவே நின்றன. ஜீவராசியின் அடையாளமுஞ் சிறிதுமில்லாத அக்கொடிய கானகத்தில் குடிக்க நீர் அகப்படுவது அரிதாயிற்று. தார்த்தாரி தேசவாசிகளான அப்பிரயாணிகள் வைகறைத்துயிலெழுந்து கஷ்ட நிஷ்டூரங்களைச் சகித்துக்கொண்டு நெடுந்தூரம் பிரயாணம் பண்ணினர். அந்நம்பியும் நங்கையும் மனவொற்றுமைப்பட்டு இல்வாழ்க்கையி லமர்ந்தவர்கள். நம்பி பேரழகுடையவன். நற்குடிப்பிறந்தோன். அருள் அன்புமுதலிய நற்குணங்கள் குடிகொண்டவன். அஞ்சாத தீரன். சலியா முயற்சியுள்ளவன். செயற்கரிய காரியத்தையும் செய்துமுடிக்கும் திறமையுடையோன். கோபம் நீங்கிய குணசாலி. பூமாதேவியையும் பொறுமைக்குப்பின் வாங்கச்செய்வோன் நங்கையும் அவன் குணங்களுக்கு எவ்வகையானும் இசைந்தவளாகவேயிருந்தனள். பேரழகுடையவள். அடிசிற்கினியாள். படிசொற்றவறாத பாவை. உறவினர் இவர்களது மணத்தை ஒப்பவில்லை. இவர்கள் அதனைக்கவனியாது தேனும் பாலும்போலவும், மலரும் மணமும் போலவும், எள்ளுமெண்ணெயும் போலவும், நகமுஞ் சதையும் போலவும் சில மாதங்களாகக் கூடி வாழ்ந்து இன்புற்றிருந்தனர். பின் அவர்கள் நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாது மனம் நொந்து கான்வழிப்புறப்பட்டனர். கடுங்கான் புகுந்தகாலை அம்மாது பூரண கருப்பிணி. அவர்கள் பிரயாணம் புறப்படுஞ்சமயம் அவர்களிடமிருந்த உண்டி சிறிதே, அதனையும் புசித்தாய்விட்டது. தோற்பையில் கொண்டுபோன நீரும் பருகியாயிற்று. கடைசியாயிருந்த சொற்ப நீரையும் அவ்வன்பன் தன்னருங்காதலிக்கு அளித்தனன். உண்ணச்சோறும் உட்கொள்ள நீருமற்றுக் கால் நொந்து நொந்து கடுகி வழிநடந்து நெடுந்தூரஞ்சென்றனர், களைப்போ மேலிட்டது, கண்ணோ பஞ்சடைந்தது, கால்கள் அடியெடுத்து வைக்கத்தயங்கின. ஓகோ! கொடிது! கொடிது!! பாவம்! அவர்கள் என்செய்வார்கள்? அவ்விடம் தங்கிவிடின் சாவு நிச்சயம். பிரயாணம பண்ணவோ சக்தியில்லை. போகவேண்டிய வழியோ நெடுந்தூரம். இருதலைக்கொள்ளி எறும்புபோலாயினர் மானுட முகமும்

அரிதாய்விட்டது தங்கள் வழிப்பிரயாணத்துக்குக் கொணர்ந்த ஒரு சிறு குதிரையைத்தவிர்த்து வேறொன்றுமில்லை. அக்குதிரை மீது தன் இன்னுயிர்க்காதலியை ஏற்றி வழிகடந்தான் அவ்வுத்தமன் குதிரையும் ஆகாரமின்றி வாலுந்தோலுமாயிற்று. அடியெடுத்துவைக்கவும் முடியவில்லை. அவன் கண்மணியாகிய அப்பெண்மணிக்கு அச்சமயம் அபாயத்தைப்பற்றிச் சிறிதுந் தெரியாது அப்பேதை உண்டியில்லையென்பதை உணராள். அரிசிமாவடையொன்றுமட்டும் தன் அருங்காதலிக்கென்று அவ்வன்பன் பேணி வைத்திருந்தான். இக்கஷ்டங்களை அவள் காதில் போட அவனுக்கு மனமில்லை. பரம இரகசியமாய் வைத்திருந்தான். ஒருகால் அம்மாது அறியும்பக்ஷத்தில் அவளுக்குப் பிராணபயமுண்டாய்விடுமோ என்று சந்தேகித்தான். இப்பயங்கரமான பிரயாணத்தில் பிராணபயமும் நேரிட்டால் இதனினும் துன்பமுண்டோ? ஆகையால் அவன் சிறிதும் தளர்ச்சியடையாமல் உற்சாகத்துடன் தன் நாயகியின் பக்கலில் மெல்ல மெல்ல நடந்து சென்றான். சமீபத்தில் ஆறுதலடையலாமென்ற நம்பிக்கைமட்டும் அவனுக்கு இருந்தது. கடவுளடியைக் கனவினும் மறவாதவன். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" ரென்பதையும் "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" என்பதையும் அவன் நன்கறிந்தவன் நடுவூருளார்களை நடத்துந்தெய்வம் கடுவழிக்கானகத்திலும் கைவிடாதென்பது அவன் பூரண நம்பிக்கை. அவன்போல் ஆபத்பாந்தவனும் அநாதை ரக்ஷகனுமுண்டோ? சூரியன் உச்சிக்குச் செல்லச்செல்ல உஷ்ணமும் சகிக்க முடியவில்லை. ஒதுங்கவோ ஒரு சிறிது இடமுமில்லை. அடியோ பொடி சுடுகின்றது. முடியோ வெடித்துப்போகும் போலிருக்கின்றது. தன் காதலிபடுங் கஷ்டத்தைப் பார்க்க அவன் மனம் சகிக்கவில்லை. தன்னிடமிருந்த கைக்குடையை விரித்துப்பிடித்துச் சிறிது நிழலுண்டாக்கினன். எந்நேரந்தான் பிடிக்கமுடியும், கையோ இரத்தம் கட்டிப்போயிற்று. அன்பின் மிகுதியால் அவன் அதனையும் பாராட்டவில்லை. இப்படியெல்லாம் பட்டுக்கொண்டே பகற்பொழுதெல்லாங் கடந்தனர். கையிருப்பான அடையும் அருந்தியாயிற்று. இரவும் மெல்ல

வந்தது. இராப்பனி கொடியதென்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதற்காக அவன் ஓர் உபாயஞ்செய்தான். குடையைவிரித்துக் கூடாரமாக்கினான். களைப்பின் மிகுதியால் நெஞ்சுலர்ந்து நாவறண்டு போயிற்று. நாடி படபடவென்று அடிக்கத்தலைப்பட்டது. "யானைவரும்பின்னே மணியோசைவரும் முன்னே" என்ற பழமொழிப்படி கொடிய காய்ச்சலுக்கு வேண்டிய அறிகுறிகளெல்லாம் தெளிவாய்த்தோன்றின. இக்கஷ்டங்களின் நடுவிலும் அக்குணவதி தன் அன்பினைச் சிறிதும் கடிந்துபாராள். முறுமுறுக்காள். நகைமுகவிருந்து அளித்தவண்ணமாயிருப்பாள். அவள் கடைக்கண்பார்வை அவன்தாபத்தையெல்லாம் மறக்கடித்தது. ஆறுதலான மொழியே அன்பனிடம் புகல்வாள். அவ்வன்புள்ள காதலிக்குப் பொறுக்கமுடியாத நீர்வேட்கை யுண்டாயிற்று. பிராணனுக்குப் பெரும்பயம். இதனினும் வேறு யாதிருக்கின்றது? எப்பாடு பட்டாயினும் அக்குணவதியின் இன்னுயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பது அவன் கருத்து. யோசித்து யோசித்துப் பார்த்தான். வகையொன்றுந் தோற்றவில்லை. கடைசியாய் ஒரே யோசனை தோற்றிற்று. உடனே உடைவாளை உருவினான். தன் குதிரையின் பக்கல் சென்றான். சிறிதும் கண்ணோட்டமின்றி அதன் கழுத்தையரிந்தான். அம்மம்ம! நினைக்கவும் நெஞ்சு நடுக்குறுகின்றது! இரத்தத்தை ஒரு பாத்திரத்தில் ஏந்தினான். மெய்ம்மறந்து கிடக்கும் தன் அருங்காதலியைக் கிட்டினான். இதற்குள் அக்குலக்கொடி ஒரு குழவியை ஈன்றிருந்தாள். அச்சமயம் அவன் நெஞ்சிருந்த நிலையை இதனை வாசிப்பவரே ஊகித்து அறிந்துகொள்ளலாம். குழவியைக்கண்டு குதூகலிக்கத்தொடங்கின அவன் மனம் உடனே ஏக்கங்கொண்டது. பிராணனுக்கு அபாயம் நேரிடுமோ என்பது அவனுக்குப் பெருங்கவலையாயிருந்தது. அச்சமயம் என்னாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி அவன் ஏழைநெஞ்சம் புண்ணாகப்போனாலும் பகவானுடைய திருவருளை நினைந்து தான் கூசாமற் கொன்று கொணர்ந்த இரத்தத்தால் தன்னின்னுயிர்த்துணைவியின் உயர்ந்த நாவை நனைத்து சொற்பச் செந்நீரை அவன் வாயில் வார்த்து ஊட்டும்

கொடுத்தனன். உடனே அவ்வுத்தமியும் களைதீர்ந்து கண்திறந்து தன் காதலனை இன்புற நோக்கினள். அந்நோக்கு தன் காதலன் செய்த பேருபகாரத்துக்கு வந்தனம் அளிப்பதுபோல் தோன்றிற்று. அநாதைப் பிரேதம்போற்கிடந்த தன்னுருயிர்த் துணைவியை அசுவமேதஞ்செய்தே பிழைப்பித்தது அருமையன்றோ! "அநாதப்பிரேத சம்ஸ்கார அசுவமேத பலேலவசா" என்ற சுலோகப்படி இதற்கு அவ்வித பலனுமுண்டன்றோ? எவ்விதமிருப்பினும் அதனைப்பற்றி இங்கு நாம் ஆராய்தல் வேண்டுவதில்லை. குழவியும் தாயும் குறைவிலாதிருந்தாற்போதும். எல்லாம் எனையாளுமீசன் செயலன்றோ? [இன்னும் வரும்.[

எஸ். சாமிநாதையர்.

மாலைமாற்று மாலை.

மாலைமாற்று:—மடக்கலங்காரத்தின்பாற்பட்ட சித்திரகவிகளுளொன்று. இது ஒரு செய்யுளை ஈறுமுதலாகக்கொண்டு வாசிப்பினும் அச்செய்யுளே ஆவது.

இம்மாலைமாற்றுச் செய்யுட்கள் சில இலக்கணங்களினும், சிற்சில இலக்கியங்களினும் அருகிக்காணப்படுகின்றன. அவையும் குறள்வெண்பா, வெண்பா, வஞ்சிவிருத்தம் முதலிய எழுத்துக்கள் சுருங்கிய சிறிய பாக்களில் வழங்கப்பெறுதலன்றிக் கலித்துறை முதலிய எழுத்துக்கள் மிக்க பெரிய பாக்களில் வழங்கக்கண்டிலம். அன்றியும் தமிழ்வேதத்தின்கணன்றி ஒரு புலவராவது மாலைமாற்றில் 10 செய்யுளேனும் செய்திருப்பதாக யாம் அறிந்திலம். இங்ஙனம் அருமைவாய்ந்திருத்தலே இக்கவியின் பெருமையை நன்கு விளக்கும்.

மாலைமாற்று மாலை:— இந்நூல் 31 மாலைமாற்றுச்செய்யுளும், 1 யமகமும், 1 திரிபுமாக 33 செய்யுள்மலரால் தொடுக்கப்பட்டது. அன்றியும் இடையிடையே இச்செய்யுட்களில் காதைகரப்பு, கரந்துறை, பாடபேதம் என 12 கவிகளையுட்கொண்டிருப்

பதால் 45 செய்யுட்களையுடையதாகவும் கூறலாம். யாதானும் ஓர் சித்திரகவிசெய்தலே அருமையாக இருக்கவும், சிலகவிகள் மாலைமாற்றாதலுடன், இரட்டைநாகபந்தம், சருப்பதோபத்திரம், கோமூத்திரி, நான்காரைச்சக்கரம், ஏகபாதம் முதலியவாக வெவ்வேறு சித்திர கவிகளாகவும் செய்யப்பட்டிருத்தலின் இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். இது மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்க் கலாசாலைப் போதகராகிய வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ (சோழவந்தான்) அ. சண்முகம் பிள்ளையவர்களாலியற்றப்பெற்றது. ஸ்ரீ குமாரக்கடவுள்மீது புனையப்பெற்றதாகிய இந்நூலுக்கு உரையெழுதி அச்சியற்றி வருகின்றேன். இரண்டுவாரத்துள் வெளியாகும். விலை அணா நான்குதான். நமது விவேகபாநுவின் சந்தாதார்கட்குத் தபால் சார்ஜ் வாங்காமல் விலைமட்டும் வாங்கிக்கொண்டு புஸ்தகமனுப்பப்படும்.

இந்நூலின் முதற்செய்யுள் மாலைமாற்றாகவும், இரட்டைநாகபந்தமாகவும், கரந்துறையாக ஏகபாதமும் மாலைமாற்றுமாகியமைந்த நான்காரைச்சக்கரமொன்றும், காதைகரப்பாக ஐந்து ஏகபாதங்களும் உடையனவாகவும், இருத்தலையறிவிப்பது கருதி இவண் வரையப்பட்டுள்ளது.

வருமாறு.

மாலைமாற்று வெண்பா.

வாலகன மானீயா மாவல வேனீத
நீலன நேசாயா நீயல—மாலய
னீயாசா னேநல னீதனீ வேலவ
மாயாநீ மானகல வா.

இதுவே இரட்டை நாகபந்தம்.



இக்கவியின் பொருட்சிறப்பை நாவிங்கட் கண்டுகொள்க.

எம். ஆர். கந்தசாமிக்கவிராயர்,
விவேகபாநு ஆபீஸ், மதுரை.

ஞானாமிர்தம்.

[தொடர்ச்சி.]

பிறமா ... ... பதியாய் பெற்றி எ-து.
ஞானமென்னும் பெரிய பெயரையுடைத்தாய் ஒரு படித்தான குற்றமற்ற பாதத்தின் முறைமையையறியச் சொல்லில் பசுவும், பாசமும், பதியும் என்னுமூன்றையும் ஆராயுமுறைமையுடைத்து.

மதியோர் பசுமூ வகையென மதிப்பர் ... எ-து.
அறிவுடையோர் பசு மூன்றவத்தையை யுடைத்தென்று சொல்லுவர்.

பன்னிற் கேவலன்........சுத்தன் எ-து.
அவையிற்றைச்சொல்லில் கேவலனென்றுஞ் சகலனென்றுமினிய வியல்பையுடைய சுத்தனென்றும்.

... கேவலற் சொற்றிடில் ... எ-து.
இவையிற்றிற் கேவலனைச்சொல்லில்

... ... நித்தன் எ-து.
அநித்தியப்படான்.

மெய்த்தகு குணமிலி ... ... எ-து.
உடம்புடனே கூடிய முக்குணமில்லாதோன்

... ... வியாபி ... எ-து.
சர்வவியாபியாயிருப்போன்

மொய்த்து........மறைவோன் ... எ-து.
ஆணவமல மிகவுஞ் செறிந்திருத்தலாலே தற்சொருபமறியாதிருப்போன்.

இலனெச் செய்தியும் ... ... எ-து.
தனக்கொரு செயலில்லாதோன்

... ... அறியோன் ... எ-து.
அறிவில்லாதோன்

... ... மையி லமூர்த்தன் எ-து.
குற்றமற்ற அரூபியாயிருப்போன்

வலியிலி ... ... எ-து.
பலமில்லாதோன்

... அசேதனன் ... ... எ-து.
அசேதன மென்னுமையாலே அசேதனம்போன்றிருப்போன்

... ... ஒளியிலி யிறையலன் எ-து.
பிரகாசமுடையனல்லன், ஒன்றுக்குங் கர்த்தாவுமல்லன்.

இனிச்சகலாவத்தை.

மாயா பசு ... ... எ-து.
மாயாகாரியமாகிய தேகத்திலே செழுமியளவிறந்த போகத்தை யுண்ணுகிற சகலரைச் சகலராக்குகைக்குக்கூடித் தன் வலி மிக்கிருக்கப்படாநின்ற கூற்றின் பலத்தை யழித்த பரமேசுரனுடைய, கிட்டுதற்கரிய கலை கிஞ்சித ஞானமுண்டாம்படி நீக்க மகத்தாகிய சைதன்னியம் விரித்து பெறுதற்கரிய வித்தை யடைதலாலே தடுக்க வொண்ணுதபடி விஷயங்களிந்திரியஞ் செலுத்தப் பக்கமே மிக்கு ராகதத்துவங்கூடித் தடையில்லாத ஆசை யெவ்விடத்துஞ் சுற்றமற நிமிர வொளியுடைத்தாகிய பிரகிருதி தத்துவம் ஒதுக்கமில்லாத குணதத்துவத்தோடு புத்தி தத்துவ முதலாகவுள்ள தத்துவ வர்க்கம் இனதாகக்கூடிப் பந்தித்தலாலே பந்திப்புண்டான பசு.

மற்று என்பது வினைமாற்று.

இணைந்த.........காட்ட ... ... எ-து.
இணையாகிய நியதி தத்துவ முற்பவத்தில் செய்து பக்குவப்பட்ட புண்ணிய பாபங்களால் வரும் போசங்களைத் தப்பாதே நியமித்துக் கொடுக்கப் பின்பே முடிவில்லாத காலதத்துவம் புசிக்கக்கடவ வெல்லைகளை முறைமையிலே கொடுக்க

தொழிலொடு.........வியந்துறை காலை எ-து.
உற்சாகத்துடனே போக இச்சையிலே யலையுண்டு நீங்காத் தத்துவாங்கிசத்திலே இவ்வண்ணமே கெடாத பந்தம் பந்தித்துக்காணவழிவு சிறிதுகூடி வியாபினியாயிருக்கிற மாயையினு

டைய காரியமாகிய போகம் புசித்தற்கேதுவாக வந்த தேகத்தைத் தானென்று புத்திபண்ணி அளவில்லாத பூர்வ கன்ம பலங்களைப் புசித்துப் பிரியப்பட்டுச் செல்லச்செய்தே

வல்வினை.........வொப்ப ... ... எ-து.
எண்ணிறந்த காலத்திலே மலபரிபாகப்பட்டு வினையக் கன்ம சமத்துவமாய்

உயர்பெருஞ்.........உற்ற காலை ... எ-து.
உயர்ந்து பெரியவனான பரமேசுரனுடைய சத்திநிபாதமுண்டாய், திருமேனிச் சட்டையோடே யிருக்கிற ஆசாரியனென்னும் பரமனுடைய கடாக்ஷத்துக்குப் பக்குவமாய் அநாதியாய்க் கிட்டுதற்கரிய ஞானவதியான தீக்கையென்னும் அழகிய தேசசு பிரகாசமாங்காலத்திலே

சொற்றொடர்.........இயையான் ... எ-து.
இன்னபடி யிருப்பனென்று சொல்லுதற்கரியனாய் ஒன்றையும் ஆராய்ச்சியற்றிருக்கும் பரமேசுரன் அழகுண்டான கீர்த்தியையுடைய நின்மலனுமவன் பின்னை மலத்திற்கூடான்.

அந்தமில்.........றெரியுங்காலே எ-து.
அளவில்லாத பாசச்சேதம் பண்ணுமியல்பு எப்படியென்று விசாரிக்குமிடத்து இப்படிச் சிந்துதல். என்றவாறு.

மற்று என்பது அசை.

இது பரமேசுரன் ஆகமத்திலருளிச்செய்த சதுர்ப்பாதத்திலும் ஞானபாதமாவது பசு, பாச, பதியென்ற மூன்றையும் ஆராய்கையென்று அவற்றில் பசுவிகாரமாகிய கேவல, சகல சுத்தாவத்தையி லக்ஷணம.

8

காரணங் கழறல் வேண்டுவ லாரண
மறியோ னமல னுதற் கத்த
பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்
கற்றே சொற்ற தநாதி மற்றவர்க்
கெற்றெனி லாதி யினையிற் குற்றமில்
காரணங் கழறுவ லம்ம சீருணங்

திகழொளிப் பளிங்கு போலப் புகழரு
மிறைபுற் கலனுக் கென்றனன் குறைவின்
றறைகழ லருளொளி பரந்த
பொறைவளர் சார லறவ னேனே.

காரணம்—புணர்தற்கு எ-து.

என் கர்த்தாவே வேதசாஸ்திரங்களா லறிதற்கரிய பரமேசுரன் நின்மலனாதற்கும் சிறிதும் அறிவுகெட்ட ஆன்மா அழிய மலபந்தனாதற்கும் காரணம் அருளிச்செய்ய வேண்டுவல்

அற்றே சொற்ற தநாதி ... எ-து.

நீ கேட்கிற பொருளதுதான் சொல்லில் அநாதிகாண்;

மற்று என்பது வினைமாற்று.

அவர்க்கெற்றெனில் ... ... எ-து.

அவர்கள் அநாதியாக இப்படியிருக்க வேண்டுவானே னெனில்

ஆதி.........கழறுவல் ... ... எ-து.

இவர்களுக்கு நின்மலமும் மலமும் ஒருநாளிலே கூடிற்றென்னில் கூடினமைக்குக் குற்றமறக் காரணஞ் சொல்லலாம்.

அம்ம என்பது அஃதிருந்தபடி கேளாய்

சீருணக்.........அறவ னேனே ... ... எ-து.

செம்பிற்குக் காளிதமும் ஒளியையுடைத்தாகிய பளிங்குக்குச் சுத்தமும் முற்பிற்பாடில்லாத வாறுபோல புகழ்தற்கரிய பரமேசுரனுக்கும், ஆன்மாவுக்கும் நின்மலமும், மலமும் அநாதியென்றருளிச்செய்தனன். ஒன்றோடொன்று பொருந்தாத மிருகங்கள் பொருந்திவாழுந் திருமலைச்சாரலில் குறைவற ஆடியருளுகிற திருச்சிலம்பினோசைகேட்டாற் பிழைக்குந் தன்மைத்தான பரமாசாரியன் என்றவாறு.

இது சுத்தாவத்தையில் பசு மலக்ஷயம் வந்து நின்மலத்தைப் பெறுமென்றதனால் பதி நின்மலனாதற்கும், பசு மலபெந்தனாதற்கும், காரணம் வினவ இவர்களுக்கு நினமலமும் மலமும் அநாதி சாதகம். எ-று. [தொடரும்.] 9

எஸ். பால்வண்ணமுதலியார்.

ரம்பத்தூள்.

இவ்வுலகில் எந்தப்பொருளையும் நாம் அற்பமென்று அலட்சியஞ்செய்தல் கூடாது. சிறு துரும்பும் பல்குத்த உதவுகின்றது. ஒருவர் அலட்சியம் செய்யும் பொருள் மற்றொருவருக்கு மிகப்பயன்படுகின்றது. இவ்விதப்பொருள்களில் ரம்பத்தூளு மொன்று மரம் அறுக்குங்கால் விழும் ரம்பத்தூளை நாம் இலட்சியம் செய்கிறதேயில்லை. அதனையே அந்நியர் பலவிதமாப் பயன்படுத்துகின்றனர். நம் நாட்டார் அதனை மரம் அறுக்குமிடங்களிலேயே கிடந்து மண்ணொடு மண்ணுமட்கிப் போகும் வண்ணம் விட்டுவருவது இயல்பு. ஒருகால் அதைப் பயன்படுத்தினலும சாதாரணமாகவே பயன்படுத்துகின்றனர். எருமுட்டைக்குப் பயனபடுத்துவோர் பலர். கணப்புச் சட்டிக்கு உபயோகிப்போர் சிலர். குழந்தைகள் வைத்து விளையாடும் பிரதிமைகள் செய்ய உபயோகிப்பவர் சிலர். இவ்வண்ணம் பயன்படுத்துவோர் கிருஷ்ணா, நெல்லூர் முதலிய ஜில்லா வாசிகளே. ஏழைகளிதனைத் தலையணையில் அடைத்து உபயோகிக்கின்றனர். இவ்வகைகளைத் தவிர்த்து வேறு வகைகளில் நம் நாட்டார் இதனைப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. நம் நாட்டில் வசிக்கும் ஐரோப்பியர் இதனைக் கோணிகளிலடைத்து மெத்தைகளாகத்தைத்துக் குதிரைகளுக்குப் படுக்கைகளாக உபயோகிக்கின்றனர். சிற்சில சமயங்களில் நாய்களுக்கும் படுக்கைகளாக உபயோகமாகின்றன. நாய்கள் இப்படுக்கைகளிற் படுத்தால் ஈக்கடியால் துன்புறுகிறதில்லை.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இதனையுபயோகிக்கும் விதங்கள் அற்புதமானவை. ஜர்மனி தேசத்தில் இதனைச்சிறுகற்களாகச் செய்து கட்டிட அஸ்திவாரங்களில் உபயோகிப்பதுடன் தள்ளுண்ட சில உலோகப்பொருள்களுடன் சேர்த்துச் செங்கல்களாகவுஞ் செய்கின்றனர். அவை ஆலேசாயிருப்பது மன்றி ஈரம் பற்றுகிறதுமில்லை. தீப்பிடிக்கிறதுமில்லை. பலகைகளாகச் செய்து கூரை மூட உபயோகிக்கின்றனர். ஜர்மன் தேசத்தார் இதனைச்சில ரசாயனப்பொருள்களுடன் கலந்து தளம் போடுவதில் உபயோகித்து வருகின்றனர். அடித்தளம் சலவைக்கல்லிட்டதுபோல் உறுதியாகவும் வழவழப்பாகவுமிரு

க்கும். அதில் நீர் சுவறாது. தீப்பற்றாது. நெடுநாள் வெடிப்புக்காண்பதுமில்லை. ஈரம்பற்றிய நிலைமையில் உபயோகித்தால் இரண்டு நாட்களில் கற்போலிறுகிவிடும். ஜர்மன் தேசத்து ரசாயன சாஸ்திரி ஒருவரும் இதினின்றும் சாராயமிறக்கும் வகையைக் கண்டுபிடித்தனர். ரம்பத்தூளைக் குழந்தைகள் விளையாடுங்கால் சர்க்கரையென்று சொல்வது வழக்கம். இரசாயன சாஸ்திரிகள் (Chemists) இதினின்றும் உண்மையிலேயே சர்க்கரை செய்கின்றனர். இது இந்திரஜாலவித்தையோ அல்லது உண்மைதானோ என்று ஐயமுற வேண்டாம். ஜர்மனிதேசம் போனால் நேரிற் கண்டுகளிக்கலாம். இவை நிற்க. இதினின்றும் ஒருவகை நேர்த்தியான பட்டும் காகிதமும் கோந்தும் குதிரைக்கு உபயோகமாகும் மர பிஸ்கோத்தும் செய்கின்றனராம். கனடாநாட்டில் இதினின்றும் ஒருவகை வாயு உற்பத்திசெய்து அதனை விளக்குவெளிச்சத்திற்குப் பிரதி உபயோகிக்கின்றனர். அதனை உபயோகிப்பதில் செலவு குறைவாகிறதாம். தூரதேசங்களுக்கு அனுப்பப்படும் பனிக்கட்டி, பழவர்க்கங்கள் முதலியன ரம்பத்தூளுக்குள் பொதிந்து வைக்கப்படின் நெடுநாள் கெடாமலிருக்கும். நகைகள் சுத்தஞ் செய்வதற்கும் இத்தூள் பயன்படுகின்றது. தோதகத்தி மரத்தின் தூள் மயிர்த்தோல்களை (Firs) சுத்தஞ்செய்யும். கழிபட்ட தாரெண்ணெயுடன் சேர்ந்து இது எரிப்பதற்கு நல்ல எரிகருவியாகும். தூரதேசங்களுக்கு அனுப்பப்படும் மீன்முதலிய மாம்சவர்க்கங்களைக் கெட்டுப்போகாவண்ணம், பனிக்கட்டிக்குப் பிரதி இத்தூளையே குளிர்ச்சியாக்கி உபயோகிக்கின்றனர். இளமரங்களுக்கு ரம்பத்தூள் நல்ல எருவாகும். இத்தூள் வீழ்ந்த இடங்களில் செடிகொடிகள் செழிப்பாய் வளர்வதைப் பலர் அநுபவத்திற் கண்டிருப்பார்கள். கள்ளிக்கோட்டையில் இதனை மலத்துடன் சேர்த்துச்சுட்டெரித்து சிறந்த எருவாக உபயோகிக்கின்றனர். இவ்வெரு ஒரு ரூபாவுக்கு 50 கிரோஸின் தகரம் வாங்கலாம். இதனைச் சுயமாய்ச் சுட்டெரித்த சாம்பலும் உயர்ந்த எருவே. கலங்கின நீரை வடிகட்ட இதன் கரி மிகப்பயன்படும். சாராயத்திலுள்ள அருவருப்பான துர்க்கந்தத்தைப் பிரான்சு தேசத்

தார் இத்தூளில் வடிகட்டிப்போக்கி வருகிறார்களாம். இதனைக் கார்பாலிக் ஆஸிடுடன் (carbolic acid) சேர்த்து உலர்த்தி மெல்லிய துணியிற்கட்டிப் புண்களில் ஒத்தினால் அவற்றிலுள்ள சீழ்முதலிய துர்நீரைச் சுலபமாய் வெளியேற்றிவிடலாம். இத்தூளை உபயோகமாகும்பொருளை, நம் நாட்டார் வீண்படுத்துவது மிக விசனமுறத்தக்கது. நம நாட்டிலுள்ள விஸ்தாரமான காடுகளினின்றும் ஆண்டாண்டு அளவில்லாத மரங்கள் வெட்டுண்டு அறுக்கப்படுகின்றன. ஊர்தோறும் மரக்கடைகள் அதிகரித்து வருகின்றன. அக்கடைகளில் குவியும் ரம்பத்தூளுக்கு அளவில்லை. ஏன் நம் நாட்டாரும் இதனை வீணாக்காமல் பயன்படுத்திப் பெருத்த லாபமடைதல் கூடாது? மரவியாபாரிகளும் மற்றையோருமிதனை நன்காராய்ந்து இனியாவது இதனை வீண்படுத்தாமல் ஐரோப்பிய நாட்டாரைப்போல் உபயோகித்து இலாபமடைய வகைதேடுவார்களென்று நம்புகிறோம். இத்துண்ணிய கருமத்தையும் எண்ணித்துணிந்தால் நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் இலாபமடைந்து நம நாட்டார் க்ஷேமமடைய இடமுண்டு. "பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்" என்பது உலகநீதி. நம் நாட்டு வியாபாரிகள் இதனைக்கூர்ந்து கவனித்துத் தக்கவண்ணம் இத்தூளை உபயோகித்துப் பெரும்பேறு பெறுவார்களாக.

"சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார்."

ப-ர்.

நமது விவேகபாநுவுக்கு வந்த புத்தகக்குறிப்பு.

சித்தாந்தவசன பூஷணம்:—இந்நூல் சைவசித்தாந்த சாத்திரப் பொருளை விளக்குவது மகா-ள-ள-ஸ்ரீ அஷ்டாவதானம் பூவை கல்யாணசுந்தர முதலியாரவர்களால் வசனமாகச் செய்யப்பட்டது. பதி, பசு, பாசம், சத்தசத்து, தசகாரியம், அவத்தை, உணர்த்துமுறை, தீக்ஷை, சாதனம், ஞானம், ஞானிகள், அத்துவிதமுத்தி ஆகிய 12 இலக்கணங்களைக் கூறுவது. ஒவ்வொரு விஷயமும் வினாவிடையாக விளக்கப்பட்டமையால் கற்போர்க்கு மிகவும்

பயன்தருவது. ஒள்ளிய பொருள்களைத் தெள்ளிய நடையில் விரிப்பது. நல்ல கடிதத்தில் பெரிய எழுத்துகளால் பதிக்கப்பட்டு உறுதியான பயிண்டு செய்யப்பெற்றது. விலை ரூபா 1.

சேயூர்முருகன் பிள்ளைத்தமிழ்:—இஃது சிறப்புற்ற பண்டைத்தமிழ் வித்துவான்களுள் ஒருவரான அந்தகக்கவி வீரராகவ முதலியாரவர்களால் சேயூரிலெழுந்தருளிய ஸ்ரீ முருகக்கடவுள்மீது பாடப்பட்டது. சொற்சுவை பொருட்சுவையாகிய இனிமை நிரம்பவுடையது. இதனை அரிதின் முயன்றுதேடிப் பரிசோதித்துப் பதிப்பித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ கல்குளம் குப்புசாமி முதலியாரவர்கள் பி. ஏ. இதன்கண் முகவுரை, பிள்ளைத்தமிழிலக்கணம், நூலாசிரியர் வரலாறு, நூல், செய்யுண் முதற்குறிப்பகராதி, அநுபந்தம ஆகிய ஐந்து பொருளடக்கங்களும், மஹாவித்வான் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் முதலிய 10 தமிழ்ப்பண்டிதர்கள் கொடுத்த சிறப்புப்பாயிரங்களும உள்ளன. விலை அணா 4.

பாரதசாரம்:—இஃது ஆங்கிலமொழியில் அனிபெஸண்ட் அம்மையார் செய்த மகாபாரதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாயது. ஆயினும் தமிழின் கொள்கைக்கிணங்கவே ஆங்காங்கு சிலவற்றை விளக்குவது. பெரும்பாலும் நீதி ஒழுக்கங்களை நன்கு புலப்படுத்திக் கதையையும் இனிது நடத்துவது. நமது பெண்மக்களுங் கற்றுப் பொருள்தேறும் வண்ணம் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டது. இதன் முதற்பாகத்தில் ஆதிபருவமும், சபாபருவமும் அடங்கியுள்ளன. இரண்டாம் பாகத்தில் ஆரணிய பருவம், விராடபருவம், உத்தியோக பருவம், பீஷ்ம பருவம் என்னும் 4 பருவங்கள் அடங்கியுள்ளன. இதனை எழுதுவித்தவர் சூணம்பேட்டு ஜமீந்தார், மகா-ள-ள-ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள். எழுதினவர் மேற்கூறிய கல்குளம் குப்புசாமி முதலியாரவர்களே. மூன்றும் பாகமும் விரைவில் வெளிவருமென்று தெரிந்து பெரிதும் சந்தோஷிக்கின்றேம்.

முதற்பாகம் விலை ரூ 0—10—0.
இரண்டாம் பாகம் விலை ரூ 0—8—0.

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF BOO[KS]
REGISTERED
25 MAY 1903
MADRAS

உ
குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

சம்புடம் 2 } 1903ஆ மார்ச்சுமீ { இலக்கம் 4

விவேக சிந்து

(தொடர்ச்சி)

சிஷலட்சணம்.

ஆலசியன், நிஷ்டூரன், சுவகாரியதற்பரன், குருசேவை வஞ்சகன் இப்படிப்பட்ட சிஷனை ஏற்றுக்கொள்ளலாகாது. சாரணம், மாரணம், வித்துவேஷணம், வசிகரணம், ஸ்தம்பனம், மோகனமென்கிற இந்த ஆறு குணங்களுடையவனைச் சிஷனென்று கைக்கொள்ளலாகாது. விஷபவிச்சையுண்டானவன், பாஷண்டமதயுக்தன், சோம்பலுடையவன், இல்லாமையே சொல்லுகிறவன், ஞானசோரன், சாரவிசாரக்காரன், தன்னிருத்தியந்தப்பி நடக்கிறவன், பாவகாரியமே வாதிக்கிறவன் இவர்களுக்குபதேசிக்கலாகாது. தன்னுடைய மகத்துவஞ் சபையிலே பிரகடிக்கவேண்டுமென்று குருவை யாட்சேபித்துக்கேட்டுத் தன்னுடைய யுக்தியை மக்கினம் பண்ணுவித்தால் கோபங்கொள்ளுகிற சிஷனை நீக்கவேண்டியது. குருவைப் பிரகிருதி திருஷ்டியினாலே பார்த்து வார்த்தைக்கு வார்த்தை தர்க்கிக்கிறவனுக்குப் பிரமவித்தை பலியாது. அந்தக்கரண சுத்தியில்லாதவனுக்குக் குரு கிருபையினாலே உபதேசித்தாலும் அபரோட்சஞானம் உண்டாகமாட்டாது. சம்சாரதாபத்திரயத்திலே அடிபட்டு ஞானவைராக்கிய யுக்தனாய் முன்சொன்ன சிஷதோஷங்களுக்கு வேறுபட்டவனாயிருக்கின்ற சிஷன் உபதேசத்துக்கருகன். சுத்தாந்தக்கரணவிரக்தன், சத்தியவாதி, திடவிரதன், நிச்சயகுருபக்தன், அந்நியகுருபாவகன், குருவினிடத்

திலே சிறிதும் வஞ்சகமில்லாதவன், குருவேதெய்வமாயல்லாமல் அந்நிய தெய்வத்தை யறியாதவன், உதாரத்துவமுடையவன், ஆசாரமுண்டானவன், இப்படிப்பட்டவனே முத்தியடையத்தக்கயோக்கியதையுடையவன்; இப்படிப்பட்ட சிஷருக்கே உபதேசிக்கவேண்டும். அவர்களே பிரமரசத்துக்குக் குகையாயிருப்பவர். ஞானரத்தினத்துக்குப் பெட்டகமாயிருக்கப்பட்டவர். இப்படிப்பட்டவருக்கே போதிக்கவேண்டும். பரிசவேதி சன்னிதானத்திலே உலோகம் பொன்னானாற்போல் அந்தட்சணமே பிரமசொரூபமாவார்கள். இப்படிப்பட்ட சிஷருக்கு உபதேசிக்கிற குருவுக்கு ஆயாசமில்லை. முன்சொன்ன அதிகார சிஷரும் மோட்ச இச்சையுண்டாகி வந்தால் அவர்களையும் குரு *லட்சிக்கவேண்டும். அதெப்படியெனில், மந்திரோபதேசமும் அஷ்டாங்கயோகமும் பண்ணுவித்தால் சித்தநிர்மலமாம். அன்றி குரு சேவை பண்ணுவிக்கவேண்டும். அப்பொழுது சித்தநிர்மலமாய்க் குரு கிருபையினால் ஞானப்பிராப்தியுண்டு. அஷ்டஉலோகமும் பரிசவேதியினாலே பொன்னாமென்றுசொல்லப் பாஷாணம் அவதாதுவென்று விட்டுவிடுவார்கள். ஒரு சமர்த்தன் பாஷாணத்தையெடுத்து அக்கினி முகத்திலே இரும்பாக்கிப் பரிசவேதிமுகத்திலே பொன்னாக்கினாற்போல் வைராக்கிய அக்கினியிலேகாய்ச்சி அதாவது விடுவித்துச் சற்சிஷனாக்கின்பிறகு பிரம்மோபதேசம் பண்ணுவார்கள். குருவினுடைய மகத்துவம் பரிசவேதிக்குச் சமன் சொல்லலாகாது. அதெப்படியென்றால் பரிசவேதியினாலே உலோகம் பொன்னாகிறதேயொழிய பரிசவேதியாகமாட்டாது. அந்தப்பொன் பின் ஒரு உலோகத்தைப் பொன்னாக்கமாட்டாது. சற்குரு கிருபையுண்டானவர்களுடைய லட்சணம் ததாகாரமே ஆவது. தம்மை வந்தடுத்தவர்களையும் பிரமமேயாக்கிவிடுவார்கள். இது ஆச்சரியமன்று. மாதாபிதாவும் சம்சார துக்கமூலமேயல்லாமற் சற்குருவைப்போல் பந்தத்தைக்கெடுத்து இரட்சிக்கமாட்டார்கள். ஆகையால் ஆசாரியருக்குச்சரியாகார். பரோபகார சந்தோஷத்தினாலே பாத்திராபாத்திரம் என்றுபாரார். சர்வத்திரஸமமாக உதாரத்தினாலே உபதேசிப்பார். அப்படியானாலும் பாத்திர விசேஷமான இடமின்றி (உபதேசம்) ஸ்திரமாய் நில்லாது.

*லட்சித்தல் = அங்கீகாரம் பண்ணல்.

மேட்டில் தண்ணீர் நில்லாது. இன்னுமொரு யுக்தி. புத்திரன் பதிதனாய்ப்போனால் பிதிர்திரவியத்துக்கு அருகன் ஆகான். சுத்தனானபின்பு அருகனாவான். அதுபோல் ஜகஜ்ஜநகனான ஈசுவரனுடைய பிரமஞ்ஞானம் நிஜதனம். சத்தியசுத்த ஜீவனுக்கே பாகஞ்செல்லும். சித்தத்தில் விஷயசங்கம்விடாத கேவல ஜீவனுக்கு ஞானதனபாகமில்லை. ஆகையால் இதனைக்கூறினோம். சிஷதோஷகுணலட்சணமுஞ் சிறிது கூறப்பட்டது. இனிக்கதா அநுசந்தானஞ் சொல்லுகிறோம். தாபத்திரயங்களென்கிற சூரியகிரணங்களினாலே தக்தமானவனாய்ச் சாதன சதுஷ்டய சம்பன்னனான ஒரு சிஷன் குருவினுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரம்பண்ணி விண்ணப்பஞ்செய்கிறான். ஐயா! "அடியேன் சம்சாரமென்கிற சமுத்திரத்தில் முழுகினேன். தாபத்திரயமென்கிற வடவாக்கினியிலே வெந்துபோனேன். காமக்குரோதாதிகள் என்கிற ஜலசரங்களினாலே பீடையடைந்து அதிக துக்கவானானேன். இந்தச்சமயத்தில் ஞானமென்கிற ஓடத்தின்மேல் என்னையேற்றி உம்முடைய கிருபையென்கிற துடுப்பினாலே தேவரீரே நாவிகனாய் என் பவசாகரத்தைக் கடத்தவேணும். இந்தப்பவாரண்ணியம் என்கிற (அரண்ணியத்தில்) சம்சாரமென்கிற மத்தியானவெயிலில் தாபத்திரயமென்கிற *தாவாக்கினியினாலே வெந்தேன். குருநாதா! உம்முடைய கருணையென்கிற மேகம் உண்டாக்கி ஞானஜலத்தினாலேஎன்னை சாந்திசெய்விக்கவேண்டும். சம்சாரமென்கிறகாவற்கூடத்திலேஅஞ்ஞானமென்கிற விலங்கினாலே பந்தப்பட்ட (என்னுடைய) இந்தப்பந்தத்தை சுவாமியவர்கள் ஞானமென்கிற வாளினாலே அறுத்து இரட்சிக்கவேண்டு"மென்று தைனிய வாக்குகளினால் குருசுவாமிக்குக் கிருபைவரப்பண்ணி அவருடைய பாதபத்மங்களிலே தன்னுடைய சிரசை வைத்திருந்தான். அப்போது குருசுவாமி கருணாகடாக்ஷவீக்ஷணத்தினால் சிஷனைப்பார்த்துத் "தம்பி விருதாசம்சாரத்திலே நொந்துபோனாயல்லவா" வென்று அபயஸ்தங்கொடுத்து "உன்னுடைய பந்தத்தை க்ஷணத்தில் நிவாரணம் பண்ணுகிறோம் சாவதானமாய்க்கே"ளென்று பிரதிக்ஞைபண்ணி சமுகத்தில் வைத்துக்கொண்டு ஹஸ்தத்தைச் சிரசின்பேரில்வைத்துச் சாம்பவிசத்திபாதங்கொடுத்துக் குருசம்பிர

*தாவாக்கினி = காட்டுத்தீ.

தாயக் கிரமத்தினால் சொரூபஞானம் தெரியப்பண்ணினார். அந்தக்கணமே அவரிடத்தில் ஞானசக்தி பிரவேசித்தாள். அஞ்ஞானசக்தி நாசமாயிற்று. சுயம்போதைபிரகாசித்தது. அப்போது சரீரம் ஸ்தம்பித்துப் புளகமாகி வேர்வையுண்டாகி சாத்துவிகபாவம் பிறந்தது. சிஷன் ஞானசாம்பிராஜ்ஜியப் பட்டம் லபித்தாற்போல் இருந்தான். இதுவின ஒப்பான சக்தி நிபாதத்திலே சுவாநுபவத்தினால் கண்டுகொண்ட ஆநந்தநதிவந்து சீஷனென்கிற மடுவை மூடிக்கொண்டு ஓடச்செய்யவே விவேகமென்கிற நீச்சுக்காரன் முழுகிப்போனான். அகங்காரமென்கிற விருட்சம் அடியோடே வேரற்று விழுந்துபோயிற்று. ஆசை முதலான பட்சிக்கூடுகளெல்லாம் கெட்டுப்போயின. இந்திரியாதிக் கிராமங்கள் அமிழ்ந்துபோயின. சுவாநுபூதியென்கிற அரண்மனையிலே சுகமென்கிற ஹம்ஸதூளிகாமஞ்சத்தின்மேல் முக்திகாந்தையை ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு அந்த ராஜயோகி மெய்ம்மறந்தான். முக்திகாந்தையைக் கூடியிருந்தபடியினாலே சகல விஷயங்களும் லயித்துப்போயின. தன் சுவசொரூபத்திலே தானொருவனே நின்றான். சுவசொரூபமென்கிற பர்த்தா நித்திரையிலே எந்த அறிவும் மறந்தான். இதனை வித்துவாங்கிஷாயோக நித்திரையென்று சொல்வார்கள். அந்த போக புருஷன் நினைப்பு மறப்புமில்லாமல் பாவாபாவங்களுமில்லாமல் ஒரு குடைக்கீழ் ஆளுகிற இராஜனானான். சுவர்க்காதிபோகங்களையெல்லாம் சிந்தத்திகையில் ஆலத்திபோல் சுற்றியெறிந்துபோட்டான். அந்தப்பிரமசுகத்திலேயிருக்கிற மகான்மாவை என்னென்று அறிக்கப்போகிறோம். மனத்தினால் அறிகிறோமென்றால் அறியமுடியாது. வாக்கினால் சொல்லுகிறோமென்றால் சொல்லமுடியாது. இது யாருக்கநுபவமாயிற்றோ அவர்களுக்கே தெரியும். இந்திரியாதிக் கிராம வியாபாரத்திலே கூடாமல் பரமாத்மாவாய் அவையெல்லாம் தன்னுடைய ஆதாரத்தினாலே வர்த்திக்கத்தக்கதாக அந்தப்பிரகாசமான இராஜயோகம் லபித்தது. அந்த அனுபூதருக்கு இனிமேல் வருகிற கதையினுடைய லட்சணம் சொல்லுகிறோம். மகாநுபாவராயிருக்கிறபேர்கள் சாவதானமாய்க் கேளுங்களென்று முகுந்தமுனி தத்பிரகரணத்திலே சொன்னார். முதலாவது சொரூபாநுதேசப்பிரகரணம் முற்றும்.

பத்திராதிபர்.

வான்மீகரும் கம்பரும்

(தொடர்ச்சி)

161974

அகலிகை சாபவிமோசனம்.

தமது வேள்வியை ஸ்ரீராம சகாயத்தால் முடித்துக்கொண்ட விசுவாமித்திரமுனிவர் ஜனகராஜன் செய்யும் வேள்வியைக்காணப்புறப்பட்டு மிதிலா நகரத்தையணுகி அதன் சிறப்பை வியந்து செல்லும்போது நகர்ப்புறத்தில் மனுஷரில்லாத ஓர் ஆச்சிரமத்தைக்கண்டு அதன் வரலாற்றை ஸ்ரீராமன் கேட்க, முனிவர் அகலிகைக்குச் சாபம் நேர்ந்ததும் அதற்கு ஒழிவும் கூறி ஸ்ரீராமன் அவ்வாச்சிரமத்துட்புகுந்து அகலிகை சாபத்தை நிவர்த்திக்கும்படி சொல்ல, அவ்வாறே புகுந்தவுடன் அருபியாய்ப்புழுதிபடிந்துகிடந்த அகலியா தேவி பண்டை வடிவம்பெற்று நின்றதாகக்கூறுகின்றது வான்மீகம். அகலிகை கௌதமர் சாபத்தால் கல்லுருவாகிப் பின்னர் ஸ்ரீராமர் பாதஸ்பரிசத்தால் தொல்லுருவாகிய நல்லுருவடைந்தாளென்பது மற்றைய நூல்களால் பிரசித்தம். இந்திரனுக்கு ஆயிரங்கண்களுண்டானமையும் அகலிகையாலேயேயென்பதும் பெருவழக்கம். வான்மீகத்தில் இப்படியில்லை. அன்றியும் அகலிகைக்கு நேர்ந்த சாபவரலாற்றை அது விமோசனமான பின்னர் தெரிவிப்பதே முறைமையாதும். அவ்வரலாற்றை முன்னரே சொல்லிச் சபத்தையொழிக்கும்படி ஏவுவது சிறிதும் சிறவாமை காண்க. ஏனைய சாப விமோசன சந்தர்ப்பங்களையும் நோக்குக.

இனி, கம்பர்போக்கு வருமாறு:—மிதிலைக்கருகில் ஓர் வெள்ளிடையில் கிடந்த கருங்கல்லின்மீது "காகுத்தன் கழற்றுகள் கதுவப், பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான்" என்று சாபவிமோசனமான பின்னர் முனிவர் சாபவரலாறு கூறினதாகத் தெரிவிக்கின்றது. "மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ணலேயுன் கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்" என்று விசுவாமித்திரர் இச்சமயத்தில் ஸ்ரீராமனைத் துதித்ததாகக் கம்பர் கூறியிருக்கும் அருமை யார்க்குத்தான் ஆனந்தம் விளைக்காது.

மிதிலைப்பிரவேசம்.

பெருங்காப்பியமாகிய இராமாயணத்திற்குக் கதாநாயகியாய் விளங்கும் சீதாபிராட்டியார் அவதரித்தருளிய மிதிலா நகரத்தைப்பற்றி ஒரு வர்ணனையுஞ் செய்யாது அந்நகரத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே முனிவர் முதலானோர் "இந்நகரம் மிகச்சிறந்தது" என்று வியந்து சென்றதாகக் கூறுகின்றது வான்மீகம். அயோத்தியா நகரச்சிறப்பைப் பலவிதத்தாலும் புனைந்துரைத்த வான்மீகம் மிதிலாநகரத்தைப்பற்றி யொன்றுங்கூறாது வாளாபோவது ஓர் பெருங்குறையாகத் தோன்றுகின்றது.

ஓட
3ma21, No1VN No1-2-3

அயோத்தியின் சிறப்பை "இவ்வுலகத்தோர் யாவருந் தஞ்செய் தேறுவா ரெனத்தரிக்கின்ற அவ்வுலகத்தோ ரிழிவதற் கருத்தி புரிகின்ற அயோத்தியா நகர்" என்று கம்பீரமாகத்தொடங்கி "நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ" என்பனவாதியாகப் பலபடப்புனைந்து ஏனைய நகரமைதிகளையும் குறைபறக்கூறிப்புகுந்த கம்பர் மிதிலைக்காட்சிப் படலத்தில் "மையறு மலரின் நீங்கி" என்னுஞ் செய்யுளால் மிதிலா நகரமானது "யான் செய்த மாதவத்தால் ஸ்ரீதேவியானவள் இங்கெழுந்தருளியிருக்கின்றாள், அவளை மணக்க நீ விரைந்துவா" என்று தன் கொடிகளாகிய கைகளை நீட்டி ஸ்ரீராமனை அழைப்பதுபோன்றிருந்ததென்று நகரமாடங்களிற் கட்டிய கொடிகள் அசைவதை உத்பிரேக்ஷித்துப்பின்னர், முனிவரும், ஸ்ரீராமலக்ஷ்மணரும் வீதியுட்புகுந்தபோது கண்டகாட்சிகளையும் விஸ்தாரமாக வர்ணித்திருக்கிறார்.

ஸ்ரீராமருஞ் சீதையுஞ் சந்தித்தல்

இந்த விஷயம் வான்மீகத்திற் கிடையாது.

கன்னிமாடத்திருந்த சீதையும் வீதியில் முனிவர்பின்சென்று கன்னிமாடத்தயலில் நின்ற இராமருஞ் சந்தித்து ஒருவர்மேலொருவர் காதல்கொண்டதாகக் கம்பர் கூறுகிறார். சீதையும் இராமரும் பருவம் வந்தவர்களென்பது கம்பர் கொள்கை. வான்மீகத்தில் இக்கொள்கை இல்லைப்போலும்; வனவாசத்திற்குப் புறப்படுகையில் சீதாதேவி தனக்கு வயசு பதினெட்டு, இராமருக்கு வயசு இருபத்தைந்து என்று தெரிவித்ததாகக் கூறுகின்றது வான்மீகம். இதனால் ஏழு வயசு இருவருக்கும் வித்தியாசம். விஸ்வாமித்திரர் அழைக்கவந்தகாலையில் ஸ்ரீராமருக்கு வயசு (ஊனஷோடசம்) பதினாறு பூர்த்தியாகவில்லையென்று வெளியாகின்றது. பதினாறாகக்கொண்டாலும் கல்யாண காலத்தில் சீதாதேவிக்கு ஒன்பது வயசு ஆகும். ஆதலால் சீதை இராமனைக் கண்டாலும் காதல்கொள்ளும் பருவத்தினள் அல்லள் என்றாலோ வேறொரு விஷயம் வாதிக்கின்றது. சுயம்வரத்துக்குரிய பெண்கள் பருவம் வந்தவர்களாயிருத்தலே பொருத்தமுடைத்து. பருவம் வாராதோர் பெண்ணை அரசர் எங்ஙனம் விரும்புவர்? பல அரசர்கள் சீதையைக் காதலித்தும் வில்லை வளைத்தலாகிய பிரதிக்ஞையை முடிக்கமாட்டாது மயங்கினரென்பதனால் பருவம் வந்த நிலையினளே சீதையென்பது துணியப்படும். இதனால் மேற்போந்த வயசு நிலைபொருத்தமிலதாகக் காணப்படுகின்றது. இவ்வாறிருக்க ஸ்ரீராமருக்குக் கல்யாணம் பன்னிரண்டாவது வயசில் என்று பலர் பிரசங்கிப்பதால் அப்போது சீதைக்கு ஐந்து வயதென்று கொள்ளவேண்டிவரும்.

கம்பராமாயணத்தில் வயசுப்பிரஸ்தாபமில்லை. சீதாதேவியைப் (பீனதனத்தவள்) என்னுங் குறிப்பால் பருவமுடையவளென்பது வெளிப்படை.

வான்மீக வியாக்கியானக்காரரொருவர் மகாலட்சுமியின் அம்சமான சீதைக்கு ஆறு வயசிலேயே யேன் பருவம் வரக்கூடாது? என்கிறார். சீதா கல்யாணம் இராமருக்கு பன்னிரண்டாவது வயசிலென்பது இவர்கொள்கை. மனுஷகோலந்தாங்கி வந்தவர்கள் அதற்கேற்ப நடிப்பதொழிந்து இடையே தமது தெய்வச்செயலையுங் கலந்துகாட்டி ஒழுகுதலாற் சிறப்பென்னையோ என்பது ஆலோசிக்கத்தகுந்தது.

கம்பர், இராமருஞ் சீதையுஞ் சந்தித்துக்கொண்ட சந்தர்ப்பத்தில் "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" எனவும், அந்நோக்கும் பொதுநோக்காகாது சிறப்புநோக்காகி யிருவருள்ளத்தும் பெருங்காதலை விளைத்ததெனவும், விதி முன்னின்றுகூட்டச் சந்திப்பு நேர்ந்தமையால் "கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப், பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமோ" எனவுங் கூறியிருக்கிறார். இவர் கூறியிருக்குங் கதை நயம் உசிதமென்பது அறிவுடையார்க்குத் தோன்றாதிராது.

சதாநந்தர் விசுவாமித்திரர் மகிமை கூறல்.

இந்தப் பாகத்தில் கம்பர் போக்கு அதிவிநயமாகக்கொள்ளத்தக்கது. விசுவாமித்திரர் சதாநந்தனை நோக்கி "நின் அன்னை சாபமுடித்தான் ஸ்ரீராமன்" என்று கூறினதால் அம்மொழியைச் சதாநந்தர் தம்மைக் குறிப்பினாற் பரிபவப்படுத்தினதாகக்கொள்ள இடந்தருகின்றது. கௌசிகர் அகலிகை சாபவிமோசனம் பண்ணினான் என்று பொதுவாகக் கூறியிருப்பின் இவ்வாறு கொள்ள இடமிராது. ஆதலால் விசுவாமித்திரர் மகிமையைக் கூறுவதாகிய வியாஜம் மேற்கொண்டு அவர் இடையிடையே செய்தன அடாச்செய்கைகளையும் கலந்து கூறியிருக்கிறார். கௌசிகர் சரித்திரமுழுதும் செவ்விய நெறியிற் செல்லுவதல்லவென்பது பலருமறிந்ததே.

கௌசிகர் ஸ்ரீராம வரலாறு கூறுதல்.

சனகர் இராமலக்குமணர்களைப் பற்றி விசாரித்த காலத்தில் கௌசிகர் கூறுவது மிகச்சுருக்கமாகவும், சமயத்துக்குப் போதாததாகவும் உள்ளது வான்மீகத்தில்.

கம்பரோ இராமனைப்பற்றி அவர் வினவியவளவில் கௌசிகர், இவர்கள் விருந்தினர்கள், நின்னுடைய வேள்விகாண வந்தார், வில்லுங்காண்பார், தயரதன் புதல்வர் எனத்தொடங்கிச் சூரியகுலத்துப் பூர்வபிதிரியோர் வரலாற்றைச் சுருங்கக்கூறி, ஸ்ரீராமாவதார சந்தர்ப்பத்தை விரித்துரைத்து, தாடகைவதம், அஸ்திரப்பேறு, யாகரக்ஷணம், அகல்யா சாபவிமோசனம் இவற்றை முடிவிற் பகர்ந்து இராமலக்ஷ்மணர்களின் ரூபலாவண்யங்களிலே ஈடுபட்டுக்கிடக்கின்ற ஜனகன்மனம் மேலும் பிரமைகொள்ளும்படி ஸ்ரீராமர் வரலாற்றை முடித்ததாகக்கூறியுள்ளார்.

சூரியகுலத்துப்பெரியோர் நாமாவளிவான்மீகத்திற் கல்யாணசமயத்திற் கூறியிருக்கிறது. இரண்டையும் ஊன்றி நோக்கிப் பொருத்தங் கண்டுகொள்க.

வில் வளைத்தல்.

கௌசிகர் ஜநகரை வில்லைக்கொணர்ந்துகாட்டும்படி ஏவினர். அவர் வில்லின் வரலாற்றையும் ஜாநகியார் அவதரித்ததையுஞ்சொல்லி, சீதையைக் காதலித்துவந்த அரசர்கள் உபத்திரவத்தை நோக்கி வில்லை வளைப்பவனே சீதைக்கு நாயகன் என்று நியமிக்க அரசர்கள் ஓடிப்போயினர்; அவ்வில்லைக் காண்பிக்கிறேன் இவர்களுக்கும்; ஸ்ரீராமன் அதனை வளைக்கின் சீதையை மணமூலமாகக் கொடுக்கிறேன் என்றார். கௌசிகர் மீட்டும் அவ்வில்லைக் கொணர்ந்து காட்டச்சொல்ல ஜநகர் ஏவலின்மேல் வில்லிருந்த எஃகுப் பெட்டகத்தைப் பல வீரரிழுத்து வந்து சேர்த்தார்கள். ஜநகர் தசரதகுமாரரை நோக்கி இவ்வில்லை வளைக்க வலியற்று அரசர்கள் பங்கமடைந்தார்கள்; தேவதானவராக்ஷஸாதிகளாலும் முடியாதிருக்க மனிதரால் முடியுமோ? நீங்களே பாருங்கள் என்றார். கௌசிகர் ஸ்ரீராகவனை வில்லைப்பார்க்கச் சொன்னார். இராமன் அதனைப்போய்ப்பார்த்து, கட்டளையானால் வளைக்கிறேனென்றனன். கௌசிகஜநகர் அநுமதிகொடுக்க அநாயாசமாக வில்லையெடுத்து இளையாமல் பல அரசர்கள் நோக்கியிருக்கையில் நாணேற்றியிழுத்து இரண்டுதுண்டாக முறித்தனன். என்பது வான்மீகம்.

இவற்றில் ஒவ்வொரு அம்சத்திலும் வேறுவகை நயத்தோடுபோகின்றது கம்பர் நடை:— கௌசிகர் இராமர் வரலாறுகூறிமுடித்தலும் அவற்றைக் கேட்டும், சூரியனை நேரேகண்டும் களித்த ஜநகர் சீதை மணத்துக்கு இந்த வில்லை என் பிரதிக்ஞையாக வைத்தோம். இவ்விளையோன் ஒருகால் வளைக்காதபோனால் இவனைப்போலத் தகுந்த நாயகன் வேறு கிடைக்கமாட்டானே. வில்வளைக்கவேண்டாது மணமுடிப்பது தகுதியன்று; கலகத்துக்கு இடமாதுமே என்று பலவகைக்கவலைகொண்டு கௌசிகரைநோக்கி "மாற்றம் யாதுரைப்பது மாய விற்கு நான், தோற்றவாறென்மனம் துளங்குகின்றது, நோற்றனள் நங்கையும் நொய்தின் ஐயன்வில், ஏற்றுமேல் இடர்க்கடலேற்றும் என்றனன்" என்று கூறுகிறார். இதில் எவ்வளவு பொருள் நயமுள்ளது? சீதைக்கு விவாகமாகவேண்டுமென்னுங் கவலை யாருக்கு? கௌசிகருக்கா? ஜநகருக்கா? ஜநகருக்கே யாகலின் அவரே வில்லை வரவழைத்ததாகச் சொல்லியுள்ளார். முன்னர்க் கௌசிகர் "வில்லுங்காண்பார்" என்ற குறிப்பே போதுமன்றோ?

(தொடரும்)

சாமி-சரவணபிள்ளை.

சைவ சித்தாந்தம்.

(தொடர்ச்சி)

இனி அனேகனாகிய பசு இயல்பு யாதெனின், கூறுதும்.

நித்தியமாய், அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாய், அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டிருக்கும் இச்சாஞானக் கிரியைகளையுடையதாய், எண்ணிலவாய், பளிங்குபோல எதை எதைப்பற்றியதோ அதன் அதன் வண்ணமாய், சத்தையும் அசத்தையும் பகுத்துணர்தலின் சதசத்தாய், இருளும் ஒளியுமல்லாத கண்ணியல்புபோன்றதாய், சிவபெருமான் அருளால் பாசக்கட்டு நீங்கி முத்தியை அடையுந்தன்மையுடையதாய் உணர்த்த உணருஞ் சிற்றறிவிற் பரிமித இயல்புடையதாய், பசுவெனப்படும் நாலெழுத்தாதலையுடையதாய், விளங்கும் ஆன்மா பந்தவேறுபாட்டால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று மூவகைப்படும். ஆன்மாவென்னுஞ் சொற்குப்பொருள் வியாபகன் என்க. பசுவுக்கு ஆன்மா ஒன்றே இயற்கை நாமம். மற்ற நாமங்கள் உபாதிபற்றி வந்த நாமங்கள்.

விஞ்ஞானகலர் விஞ்ஞானத்தால் கலையற்றவர், பிரளயாகலர் பிரளயத்திற் கலையற்றவர், சகலர், கலையோடுகூடினவர் இவை காரணப்பெயர். இனி விஞ்ஞானகலர் பிரளயாகலர் கலையோடுகூடியும் அகலரேயாவர் என்னும் பவுட்கராகமத்தின் பொருளும் இதுவேயாமென்க.

விஞ்ஞானகலர் ஆணவபந்தமொன்றுமேயுடையர் பிரளயாகலர் ஆணவம், கன்மமென்னும் இரண்டு பந்தமுமுடையர். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றுபந்தமுமுடையர். இனி விஞ்ஞானகலர் அநாதியே மலபந்தமாத்திரமுடைய விஞ்ஞானகலரும், அநுபவத்தாலாதல், விஞ்ஞானத்தாலாதல், யோகத்தாலாதல், சந்நியாசத்தாலாதல், தீக்ஷையாலாதல், இடையே மாயாபந்தம் கன்மபந்தமுழுவதும் நீங்கி அசுத்தமாயையின் மேலுள்ள புவனங்களினுகரக்கடவனவாகிய போகங்கட்கு ஏதுவாய்நின்ற மலபந்தம் ஒன்றே உடையவராகிய விஞ்ஞானகலருமென இரண்டு வகைப்படுவர்.

இன்னும் விஞ்ஞானகலர் பக்குவர், அபக்குவர் என இருதிறப்படுவர். இவர்களுள் பக்குவராவார் மலபரிபாகமிகுதியினாலே சிவனுடைய அநுக்கிரகத்தைப்பெற்றுச் சாயுச்சியத்தை யடைகின்றவர். இனி அபக்குவராவார் மந்தமலபரிபாகத்தினால் சிவன் அவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி யனுக்கிரகஞ் செய்யப்பட்டிருப்பினும் சுத்தாத்துவாவுக்கு அதிகாரிகளாயிரு

க்கையால் அதிகாரமலத்தைப் பொருந்தியிருப்பர். இந்த அபரமுத்திபெற்றவர்கள் யாவரெனின் உத்தமராகிய பிரணவர், சதாக்கியர், சிவர், நித்தர், காரணர், சுசிவர், சூக்குமர், காலர், தேசர், ஐங்கரர் எனக்கூறிய [illegible] பதின்மர். இவர்கள் அதோமாயா புவனத்துள்ளார்க்குப் பக்குவம் வந்தவிடத்து அனுக்கிரகஞ்செய்து சதாசிவ தத்துவத்திற் போகங்களைப்புசித்து அந்தச் சதாசிவமூர்த்தியைச் சூழ சேவித்துக்கொண்டிருப்பர்.

இனி மந்திரமாகிய அட்டவித்தியேசுவரராவார் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டர், ஸ்ரீகண்டர், இவ்வெண்மரு மீசுவர தத்துவத்திலிருந்து மகேசுவரனைச் சூழ்ந்திருந்து மாயையிலுண்டாகிய சிருட்டியாதி கிருத்தியங்களைச் [illegible] செய்பவர்கள் இவர்களுக்கு படைப்பு முதலிய தொழில்கள் எவ்வாறு வந்தனவென்னில் சாந்தமூர்த்தியாயிருக்கிற சதாசிவர் இவர்கள் எண்மரையும் தமது திருமேனியினின்றுந் தோற்றுவிக்கையால் என்க. ஆகவே இவர்கள் எண்மரும் சமத்துவமுடையரோ அன்றி ஏற்றத்தாழ்வுடையரோவென்னில் அநந்ததேவநாயனாரை நோக்க மற்றவர்களுக்கு ஒவ்வொரு கலை குறைந்திருத்தலால் ஒருவருக்கொருவர் தாழ்ச்சியுடையர் என்க. மேற்பட்ட அநந்ததேவநாயனாருக்கு அதிகாரத்தில் வைராக்கியம் பிறந்தால் அவரை சிவன் சங்காரகாலத்தில் மோட்சத்தையடைவிப்பன். அதன்பின்பு அவர்க்கடுத்த சூக்குமர் அவ்வதிகாரத்தைப்பெற்று கிருத்தியங்களை அவரைப்போலச் செய்வர். மற்றவர்களுமிப்படிச்செய்வர் என்க.

இனி பிரளயாகலர் அநாதியே மலகன்மங்கள் மாத்திரமுடைய பிரளயாகலரும் இடையே பரிபக்குவ விசேடத்தால் [illegible] இவ்வினை இரண்டுமுடைய பிரளயாகலருமென [illegible] பிரளயாகலருள் மலபரிபாகமுடையோராய்ப் பரமசிவன் அனுக்கிரகஞ்செய்யப்பெற்றவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர் உளர். இவருள் ஸ்ரீகண்டருத்திரர் அந்த நூற்றுப்பதினெட்டு உருத்திரருக்குந் தலைவராய் மத்தியப் பிரளயமுடிவில் பிரகிருதிதத்துவத்திற்கு மேற்பட்ட தத்துவங்களையும் புவனங்களையுமுண்டாக்கி ஆணவம், கன்மம், மாயை என்று மூன்று மலமுடைய சகலருள் ஞானத்தாலும், யோகத்தாலும், தவத்தாலும், தியானமுதலியவற்றாலும் சிறந்தவரைப் பிரமபதம் விண்டுபதங்களில் இருத்துவர். இந்த ஸ்ரீகண்டருத்திரர் மத்தியப்பிரளயகாலத்தில் அராக தத்துவத்தில் இருப்பர். பின்பு படைப்புக்காலத்தில் அசுத்தாத்துமாக்களைப் படைத்துப் பிரமாவும் விண்டுவும் செய்யும் சிருட்டிகளை அதிட்டித்துநின்று மேற்பட்ட புவனேசுர

ரையும் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் பிரமாண்ட முதலிய அண்டங்களையும் உண்டாக்குவர். முன் சொன்ன உருத்திரருள் நூறு உருத்திரர் பாஞ்சபௌதிகமான பிரமாண்டத்திற்குக் காவலராயிருப்பர். பிரமா விட்டிணுக்களுடனேகூடக் குணதத்துவத்திலிருக்கும் ஸ்ரீகண்ட உருத்திரர் மத்தியப்பிரளயம் வரையும் அதிகாரஞ் செய்துகொண்டிருந்து பின் அந்தப் பிரமா விட்டிணுக்களையும் ஒடுக்கிக்கொண்டு தாம் மிச்சிரத்துவாவில் அராக தத்துவத்திலிருப்பர். இவரோடுகூட வீரபத்திரரும் இருப்பர். கலைமத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். இவர்களோடு முன்சொன்ன ஸ்ரீகண்டர், வீரபத்திரர், சதஉருத்திரருமாக நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் பரமசிவன் அனுக்கிரகத்தால் பரமுத்தியை அடைவர். இந்த நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் மலபரிபாகத்தால் தீக்ஷைபெற்றுப் பரமசிவன் அருளால் பதங்களைப்பெற்றவர். சுத்தவித்தியா தத்துவங்களிலிருப்போர் மலபரிபாகத்தால் பரமசிவன் அருளால் பதம்பெற்றவர். இந்தச் சுத்ததத்துவவாசிகள் சரீரமும் [illegible] சரீரமும் வைந்தவம். நூற்றுப்பதினெட்டு உருத்திரர் சரீரம் மாயேயம். பிரமா விட்டுணு முதலியோர் சரீரம் பிரகிருதிசம்பந்தம். பரமசிவனுடைய எல்லாத்திருமேனியும் நூற்றுப்பதினெட்டு உருத்திரர் வடிவும் வித்தியேசுவரர் வடிவும்போலத் தியானிக்கப்படும். பிரமவிட்டுணுக்கள் சரீரம் பிராகிருதமாகலானும் முன் பரமசிவன் அனுக்கிரகமில்லாமையானும் இவர்கள் சரீரம்போலப் பரமசிவனைத் தியானிக்கலாகாது. பிரமவிட்டுணுக்கள் பதம் பசுத்தானம். உருத்திரபதம், ஈசுரபதம் இரண்டும் பதித்தானம். இனிச்சகலர் தேவர்மக்கள்முதற் பலவகைப்படுவர். விஞ்ஞானகலருக்குரிய புவனங்கள் அசுத்தமாயைக்கும் சுத்தவித்தைக்கும் இடையே உள்ளன. பிரளயாகலருக்குரிய புவனங்கள் அசுத்தமாயை முதல் அராகமீறான தத்துவங்களில் உள்ளன. சகலர்க்குரிய புவனங்கள் மூலப்பகுதிமுதல் பிருதிவி ஈறான தத்துவங்களில் உள்ளன. இன்னும் இம்மூவகை ஆன்மாக்கள் இயல்பெல்லாம் ஆசிரியர் சிவஞான யோகிகள் செய்தருளிய திராவிட மகாபாடியத்தில் காண்க. இனி அநாதியே ஆணவமலத்தின் மறைப்புண்ட ஆன்மா அதன்பின் அசுத்த மாயையின் அனந்ததேவரால் கலக்குண்டபாகமாகிய காரண சரீரத்தைப்பொருந்தி அறிவு இச்சை செயல்கள் பொதுவகையால் சமட்டி ரூபமாய் விளங்கப்பெறும். அதன்பின் அசுத்தமாயா தத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதி முதலிய கஞ்சுக சரீரத்தைப்பொருந்தி அவை வியட்டிரூபமாய்ப் பிரிந்துதோன்றிச் சிறப்புவகையால் விளங்கப்பெறும். அதன்பின்பு அந்தக்கரண முதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப்பொருந்தி அவ்வறிவிச்சை செயல்கள் முன்னர்க் கூறப்படும் இரு சரீரங்களினிடமாகவரும் விடயங்களில் வியாபரிக்கப்பெறு

ம். அம்மூன்றையும் முறையான் அடைந்தபின்பு சூக்குமதேகத்தைப்பொருந்திப் போக்குவரவுசெய்து சூக்குமவினைப்பயன்களை ஈட்டியும் நுகர்ந்தும் தூலசரீரத்தைப்பொருந்திப் போக்குவரவுசெய்து தூலவினைப்பயன்களை யீட்டியும் நுகர்ந்தும் இவ்வாறு அநிசமும் அந்தரப்பட்டிருக்கும். காரணசரீரமுதலிய ஐந்தும் அவ்வாறு மாயையினின்றுந்தோன்றி [illegible] வடிவாய் முறையே ஆனந்தமயகோசமும், விஞ்ஞானமயகோசமும், மனோமயகோசமும், பிராணமயகோசமும், அன்னமயகோசமும் ஆகிய ஐந்து பெயர் பெற்று ஒன்றற்கொன்று தூலமாய் [illegible] மலமாத்திரையாய் நின்ற ஆன்மா இந்த ஐந்து கோசங்களில் அது [illegible] வசிப்புண்டு ஏகதேசியாய்ப் போக்குவரவுசெய்து நிற்கும்.

கேவலத்தில் ஒன்றாயின்றி மலமாத்திரையாய் நின்ற ஆன்மா மாயையில் அனந்தசேவகாயமானால் அம்மாயை கலக்குண்ட [illegible] முற்றப் பொருந்தி அறிவு இச்சை செயல்கள் பெறுமையால் அகமாய் விளங்கப் பெற்றமாத்திரையில் [illegible] ஆனந்தமய [illegible] பெறுதலில் அஃது ஆனந்தமயகோசமெனப்பட்டது. பின்பு ஆன்மா கலைமுதலிய தத்துவங்களைப்பொருந்தி ஞானம் விசேடமாய் விளங்கப்பெறுதலில் விஞ்ஞானகோசமெனப்பட்டது. அதன்பின்பு ஆன்மா மனமாதியைப் பொருந்தி மனமுதலிய கருவிகளால் விடயங்களில் வியாபரிக்கப்பெறுதலில் மனோமயகோசமெனப்பட்டது. பின்பு ஆன்மா பிராணவாயுவை ஆதாரமாகக்கொண்டு விடயங்களை அநுபவித்தலால் பிராணமயகோசமெனப்பட்டது. அதன்பின்பு ஆன்மா அன்னத்தை ஆதாரமாகக்கொண்டு விடயங்களை அநுபவித்து நிற்றலால் அன்னமயகோசமெனப்பட்டது. இங்ஙனம் ஆன்மா [illegible] கொள்ளிக்கட்டைபோல் [illegible] ஐந்து கோசங்களை [illegible] பறவையாகவும் அவற்றை [illegible] முதலிய உறுப்புக்களாகவும் வேதத்துள் உருவகஞ்செய்து உணர்த்தியவாறென்க.

இன்னும் வரும்.

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

நல்லவனும் தீயவனும்.

நன்மை விதைத்தால் நன்மை விளையும்
தீமை விதைத்தால் தீமை விளையும், என்று நம் முதியோர் கூறி வருவதைப் பலகாற் கேட்டிருக்கின்றோம். ஒருவன், மலர்ந்த முகத்தன், குளிர்ந்த நோக்கினன், கனிந்த சொல்லினன், இளகிய சிந்தையன், பிறர் மனையவளைப் பெற்றதாய் எனவும், பிறர் பொருள் எட்டியே எனவும் பிறர் துயர் தன்துயர் எனவும் நினைப்பவன், "இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்துவிடல்" என்ற பொய்யாமொழிக்கு இலக்காகித் தனக்குத் துன்பஞ்செய்தவர்க்குத்தான் இன்பமேசெய்பவன், பரோபகாரப்பயனை நன்கறிந்தவன், தன்னுயிரைக்கொடுத்தும் பிறருயிரைக்காப்பவன், பல படச்சொல்வதிலென்ன? விதிக்கப்பட்ட நல்லொழுக்கங்கள் அனைத்தையும் உடையோன், விலக்கப்பட்ட தீயொழுக்கங்கள் அனைத்தையும் ஒழித்தவன்; இவன் இவ்வாறு நன்மைசெய்தலை தனது தொழிலாகக்கொண்டு ஒழுகுங்கால் அவன் வசிக்கும் நகரவாசிகள் எல்லாரும் அவனை நல்லவனெனப் புகழ்வாராயினர். அப்புகழ் மொழியைக்கேட்டு இப்புகழ்ச்சி நமது நடக்கையால் வந்ததோ? அன்றி உடன் வசிக்கும் மனிதர் அபிமானத்தைப்பற்றி வந்ததோ? என்று தானே சிந்திப்பானாயினன். ஊரார்வசித்தல்பற்றி வந்ததாயின் வெறுக்கத்தக்கதேயாகும். உள்ளபடியே நமது நடக்கையால் வந்த நல்மொழியாயின் மட்டும் பயனுடைத்தாகும். இதனைப் பரிசோதித்தறியவேண்டுமென்று கருதிச் சின்னாளுண்டிக்கு வேண்டும் பொருள் கைக்கொண்டு வேற்றூர் புக்கனன். இவனிவ்வாறிருக்க மற்றொருவன் இவனுடைய நடைக்கு நேர்மாறான நடையுடையன். தீமைமலிந்த சிந்தையாளன், பிறர்பொருள் கவர்தலிற் பேர்பெற்ற தீரன், வஞ்சகச்செயலில் வான்சையிற்குறைவுடையவன், பிறர்க்கிடையூறு பெரிதும் புரிவோன், கொடிய பார்வையன், நெடிய வடிவினன், கடிய சொல்லினன். இவனைக்காணுந்தோறும் நகரவாசிகள் பலரும் வில்லேந்திவரும் வேடனைக்கண்ட பக்ஷிகள்போலப் பரிதபிப்பார்கள். இவன் தீமையைக்கடந்தவர் யாருமில்லை. இவ்வாறிருக்குநாளில் இவன் தன்னை யூரார் இழித்துக்கூறுவதையும் தனது வஞ்சம் பாவி வென்றுவருவதையுங் கண்டு மகிழ்ந்து தனது வஞ்சகவலிமை இந்நகரில்மட்டுந்தான் சித்திபெறத்தக்கதோ? அன்றி எந்நகரத்திலும் புகுந்து சித்திபெறத்தக்கதோ என்று ஆராய்வான். துணிந்து வேற்றூர் புகுந்தான். பண்டைநல்லோனும் இத்தீயோனுஞ் சந்திப்பாராயினர். ஒருவரையொருவர் வரவுவினாவி அளவளாவியிருக்குங்கால் நல்லவன் கைப்பொருளை நயமொழியாற் கவர்ந்துகொண்டு தாகமிகுதியாற் றளர்ச்சிகாட்டி நீர்வேட்கை தணிப்பான்வேண்டி ஜலம் கொ

ண்டிராக்காருகிக் கிணற்றில் இறங்கின அந்நல்லவனைத் திடீரென்று தள்ளி விட்டுக் காற்றினுங் கடுகிச்சென்றான் கூற்றினுங் கொடியதீயன்.

முற்பகற் பிறர்க்கியற்றுந் துன்பம் பிற்பகற் றனக்கு வருதலுணராத பேதைசெய்த இக்கொடுமை காணமாட்டான்போற் சூரியனும் மேலைச் சமுத்திரத்தின் வீழ்ந்தொளித்தனன். இக்கொலைகாரப்பாவி செய்த பாவம் பரவுவதுபோலக் காரிருள் பரந்தது. கயத்திற்றள்ளுண்ட கருணையாளன் ஜலத்திற் மூழ்கிமெலிந்து அருகில் அடர்ந்து படர்ந்த அறுகம்புல் பற்றி நின்று ... பொழுதாக்கழித்து நிற்குங்கால் அண்டையில் நின்ற சில மரப்பொந்தில் நலகோடிவின்று சாபத்தால் வந்து வசிக்கும் 3 வேங்கைகள் பேசிக்கொள்வதை யுற்றுக்கேட்பானாயினன். அது வருமாறு. வேங்கைகள் ஒன்றோடொன்று தான் தான் வசிக்கும் மரத்தின் பெருமையைச்சொல்லத்தொடங்கி, முதல்வேங்கை தானுற்ற மரத்தின் பச்சிலையாற் குருடர்களும் கண்பார்வையடைவார்களெனவும், இரண்டாம் வேங்கை தான் வாழும் மரத்திலையால் இரும்புப் பொன்னாகும் எனவும், மூன்றாம் வேங்கை தான் வசிக்கும் மரத்தினால் பரிசமாத்திரத்தானே கொடிய வியாதியனைத்துந் தீருமெனவும் செப்பிக்கொண்டன. பொழுதுபுலர்ந்தவுடன் நற்குணசீலன் கயத்தினின்று கரையேறிப் பரோபகார சீலனாதலின் பிணிநீக்கும் பச்சிலையைப்பெற்று அடுத்த நகரத்தை யடைந்தான். அவ்வூர் மன்னவன் ஓர் பெருவியாதியால் மெலிந்து அளவற்ற திரவியச்செலவில் எத்தனை அரிய மருந்துகளைச் செய்து அருந்தியும் பிணி தீராது நாளுக்குநாள் முற்பக்க மதிபோல் அதிகப்படுதலால் இனி மருந்து வாங்குவதில்லையென்று பிரதிக்ஞை செய்துகொண்டிருப்பதையறிந்து மன்னனையடுத்து யாதோர் மருந்தும் உட்கொள்ளாத்தவாறு ஒரு பச்சிலையின் பரிசத்தால் உடனே இப்பிணியை நீக்குவேன். பொருளொன்றும் வேண்டிலேன் என்று கூறினான். அதுகேட்ட வேந்தனும் அவைக்களத்துள்ளாரும் இந்நல்லவனைப் பித்தனென்று நினைத்தாராயினும் இவன் கூறுவதைப் பரீக்ஷிக்கக்கருதி இணங்கினாராக உடனே பச்சிலையால் தடவினான். ஒளி தோன்றியவுடன் இருள் மறைவதுபோல் பச்சிலையைக் கண்டவுடன் பறந்தது கொடியபிணி. மன்னவன், மகிழ்ந்து புகழ்ந்து வியந்து நயந்து பயந்து பணிந்து மொழிந்து அருமருந்தளித்த அண்ணலைத் தனது முதன் மந்திரியாக்கி எல்லாச்சிறப்புங்கொடுத்துச் சிறப்புடன் வைத்துக்கொண்டான். நகரவாசிகளோ இவனைத் தெய்வமாகக்கருதிப் போற்றுவாராயினர். இவ்வணமுறுங்கால் இவனைப் பிறைக்காரங்கொண்டு பிடர்பிடித்துக்கிணற்றில் வீழ்த்திய கெடுங்குணக்கொடியனோ தீவினைப்பயத்தால் செம்பொன்னை யிழந்து பிச்சையேற்றாலும் பிடிசோறுகிட்டாததாகமெலிந்து விறகுதலையனாய்

நாயினுங்கடையனாகி யலைவானாயினன். "நன்னெறிச் செல்வார்க்குந் தம்மூரென்றாரில்லை அல்லாக் கடைகட்குந் தம்மூரென்றாரில்லை" என்ற வண்ணம் நல்லவனும் தீயவனும் உள்ளூரினும் அயலூரினும் புகழும் இகழும் இன்பமும் துன்பமுமுற்றுச் சுகித்துவருந்தியுறுங்கால், தீயவன் உச்சிவெயிலில் உள்ளங்கால்நோவ விறகுசுமந்து நடந்து "விறகோவிறகோ" என்று பகர்ந்தான். அத்தொனிகேட்ட நல்லன் இத்தொனி பண்டைய நண்பன் தொனியென்றறிந்து அவனையழைத்து நன்மொழி புகன்று வேண்டுவன தந்து தானடைந்த சிறப்பெல்லாம் அவன் கொடுத்ததாகப் புகழ்ந்தான்; தீயவனோ பொறாமையாற் பீடிக்கப்பட்டு நல்லவன் வாய்மொழியால் வேங்கைகள் கூறிய வரலாறறிந்து அக்கிணற்றை நோக்கிக் குறுகுங்கால் குடிமியில் அடிபட விரைந்தோடிப் பதுங்கியிருந்தான். அற்றைநாளிரவும் அவ்வேங்கைகள் முன்கூறியாங்கே ஒன்றோடொன்று பேசுங்கால் உற்றுக்கேட்ட தீயவன் இரண்டாம் வேங்கை சொல்லியது நன்றாகக்கேளாமையால் "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்ற வண்ணம் படபடத்து "இன்னொருதரம் சொல்லு" என்று வேங்கையொலியினும் ஓங்கி யொலித்தான். இம்மானுடத்தொனிகேட்ட வேங்கை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பிடித்துக் கொன்றது. அந்தோ! அந்தோ! என்று இரங்கி மாண்டனன். நன்றிசெய்தவன் நன்மையடைந்தான் தீங்கு செய்தவன் தீமையடைந்தான். அதிகப்பட்ட பாவபுண்ணியங்கள் இம்மையிற்றானே பலன் கொடுக்குமென்றும் நூற்கருத்தும், முதலிற்கூறிய பழமொழியும் இங்கு அனுபவத்தில் வந்தமையைக் கண்டீர்களா? மறந்தும் பிறர்க்குத் தீங்குசெய்யாது இயன்றவரையும் நன்மையே செய்துவருவோமாயின் இம்மைக்கட்புகழும் இன்பமும் பெற்று மறுமைக்கண் வீடுபேறும் அடைவோம். "நன்றிமறவேல்" என்பது முதுமொழி.

சி. இராக்கப்ப பிள்ளை.

பிரமஸ்ரீ மகாமகோபாத்தியாய

இராஜு சாஸ்திரி அவர்கள்.

பிறப்பதும் இறப்பதும் இயற்கையாயுள்ள இவ்வுலகில் சிலகாலத்துள் எண்ணிறந்த மகான்கள் மரணமென்றும் இயற்கையான பாசத்துட்பட்டு நம்மைவிட்டு அகன்றதைப்பற்றி நாம் அப்போதைக்கப்போது துயருற்றிருந்தபோதிலும் தற்காலத்தில் நம்நாட்டில் பல வருஷங்களாக அஸ்தமனமின்றி எப்பொழுதும் விளங்கிய கிரணங்களுடன் பிரகாசிக்கும் சூரியனையொப்ப அளவிறந்த கல்வி, ஒப்பற்ற விஞ்ஞானம், யாரும் வியக்கத்தக்க நன்னடக்கை இவைகளால் சிறப்புற்று எங்கும் பரவின கீர்த்தியுடன் வாழ்ந்து நமக்கும் நம் [illegible] நாட்டிற்கும் நீங்காத பெருமையை நிலைநிறுத்திவந்த மஹான் [illegible] இராஜு சாஸ்திரிகளென்று பிரதி நாமம் படைத்த மகாவித்வான் மகாமகோபாத்தியாயரென்ற பிரக்கியாதியடைந்தவருமான தியாக [illegible] வைகுண்டத்தை அடைந்தாரென்கிற கேள்வியுற நமக்கு அளவற்ற [illegible]. இம்மகான் பூர்வாசிரமத்திலும் கொர்க்க மணிநிபிளை [illegible] கொண்டிருப்பார்கள் பிரமதத்துவத்தைப் [illegible] மறையோதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வே [illegible] உள்ளவர்க்குரிய அறுதொழிலையும் நன்கு ந [illegible] குருவான ஸ்ரீமான் அப்பைய தீக்ஷிதர் அவர்களுடைய [illegible] பரம்பரையில் தோன்றிய வம்சம் விளங்கும் வண்ணம் இவர் [illegible] சிறப்புற்ற நூல்களையும் பிறர் அடைய [illegible] பெற்று விளங்கிவந்தாரென்[illegible] விஷயம். இக்கா[illegible] பரம்பரையாகப் பாலித்துவந்த கார[illegible]" என்றும் முற்றமானது என்றும் பொருந்தி [illegible] அமைதிற்றதாய், தொன்று தொட்டு வந்த நம் நாட்டின் பெருமையை இப்பொழுதும் [illegible] இவ்வுலகில் நம் முன்னோரினும் நாம் பேரறிவுடையோமென்னும் [illegible] மகாவாக்கியங்களையும் இதர பிரமாண வசனங்களையும் தாம் அர்த்தஞ்செய்துகொண்டு பழமையான முறைகளை நிராகரித்ததும் நம் நாட்டிலுள்ள பெரும்பான்மையோரை வருத்தும் பிணிகளாகச் சமைந்து நிற்கின்றன. தத்துவஞானத்துக்கு அதிகாரமில்லாதவர்களும் சாஸ்திரத்துக்குரிய சில வசனங்களைமட்டும் பொருளறியாது வாயால்மட்டும் கூறிக்கொண்டு பிரமவாதிகள் நாங்களென்று உலகிட்டுச் சிலர் நடிக்கிறார்கள்.

உபாசனை, பக்தி, தியானம், கர்மம் முதலியவை எப்படியும் பயப்படுவையல்லவென்றும் அவை அறிவற்ற சில முன்னோர்களால் கற்பிக்கப்பட்டவையென்றும் ஜாதி வருணாச்சிரம முதலிய நியமங்கள் நம்நாட்டினரைக் கேடுறச்செய்தனவேயன்றி இம்மையிலாவது மறுமையிலாவது ஒரு பயனையும் அளிக்கும் பான்மையுடையன வல்லவென்றும் சிற்சில நவீனவித்வான்களுடைய விபரீதக்கொள்கையாக ஏற்பட்டிருக்கிறது. இந்நிலைமையில் பிரமஸ்ரீ இராஜு சாஸ்திரி அவர்கள் கல்வி, ஞானம், ஆசாரம் வருணாச்சிரம தர்மங்களைப் போற்றல், வைதிக நடையின் சிறப்பு, பொறுமை, தயை, சாந்தி, மிருது பாஷணம், விநயம் முதலிய மேன்மையான குணங்கள் இவைகளால் பரமாசாரியராக இருந்து வெவ்வேறுபத்தில் சந்தேகமுறினும் அதனைத் தன்கூரிய மெய்யறிவினும் நன்காராய்ந்துணர்ந்த சாஸ்திரப் பயிற்சியினும் நிவர்த்திசெய்யும் வல்லமையுடன் நம்நாட்டிலேயும் பல வித்வத்தாரகைகளுக்குள் பூரண சந்திரனைப்போல் பொலிவுடன் விளங்கிவந்தனர். அந்தோ! நம் துர்ப்பாக்கியம் எத்தன்மையுடையது!! துர்மார்க்கமுடையவர்களையும் பிணக்குற்ற அர்ப்ப மதங்களை ஆசரித்து சர்வோத்கிருஷ்டமான நம் மதக் கொள்கையின் பெருமையை ஆக்ஷேபிக்கும் துர்வித்தர்களையும் ஆங்காங்கு சிரஞ்சீவிகளாக இருக்கும்படிவிட்டு இம்மகானுடைய அருமையான உயிரை மட்டும் அபகரிக்க விரும்பிய மறலியின் கொடுங்குணமும் எத்தன்மையுடையது. இம்மகானது மரணத்தினால் நம்நாடு தான் பெற்றிருந்த கல்விச்செல்வத்தை இழந்ததென்கோ! மருளற்ற வருணாச்சிரம விதியைத் தன் அநுஷ்டானத்தினால் பிறருக்கு நிதர்சனம் செய்துகொண்டுவந்த இம்மகான் நம்மைவிட்டகன்றதால் இனி அவ்விதியும் அணுவளவும் நில்லாது அகன்றுவிடுங்காலம் வந்ததென்கோ! நுண்ணறிவுக்கும் எளிதில் புலப்படாத உபநிஷத்து முதலிய பிரஸ்தானங்களின் மெய்ப்பொருளை ஐயந்திரிபின்றி இனிப்பயிற்சி செய்விப்பவரெவர்? வேதநூலை விளக்கிக்காட்டும் கீர்வாணபாஷைக்குப் பிரதிநிதியாக ஆங்கிலேய மொழியும் சம்பக்ஞானம் என்னும் முறைக்குப் பிரதிநிதியாக இரசாயன சாஸ்திரம் (Chemistry), பூதபௌதிக சாஸ்திரம் (Physical science), தர்க்க சாஸ்திரம் (Logic) இவைகளும் சாதன சதுஷ்டயங்களால் மாண்புற்ற ஆசாரியர்களுக்குப் பிரதிநிதியாக நமது ஆசார விரோதிகளாகவும் வேதபாஹ்யர்களாகவும் சணவருணத்தாராகவுமிருப்பவர்களும் ஏற்பட்டிருக்கும் அலங்கோலத்தை நான் இன்றுயிருந்து பாரேனென்று இம்மகான் நம்மைவிட்டகன்றனர் என்கோ! இத்துயரம் எம்முறை நம்மைவிட்டொழியுமோ! பூர்வத்தில் அத்தியாத்ம வித்தையை மாறுபடருக்

குப் புகட்டிய ஸ்ரீமத் சங்கராசாரியார் அவர்களும், அவர்களால் விளக்கப்பட்ட சகுண நிர்க்குண வித்தைகளின் ஐக்கியபாவத்தை நிலைநிறுத்திய ஸ்ரீமான் அப்பைய தீக்ஷிதர் அவர்களும் எவ்வுயர் பதவியில் விளங்குகிறார்களோ அப்பதவிக்கே அவ்விருவருடைய நன்முறைகளைப் பலமுறையும் நிலைநிறுத்திய இம்மகானும் சென்றாரென்பதற்குச் சிறிதும் ஐயமுளதோ! ஞானமென்னும் ஒளியினால் நம்மை உய்யச்செய்துவந்த கல்விப்பரிதி அந்தோ! மேற்கடலில் மூழ்கிற்று. அஞ்ஞானமென்னும் இருளுடன்கூடிய இரவானது நம்மைக் கவருமாப்போல் அச்சுறுத்துகின்றது. கருணாநிதியாகிய பரம்பொருள் "உலகத்தில் எப்பொழுது தர்மங்களுக்குத் தாழ்வு நேரிடுமோ அதர்மங்கள் எப்பொழுது தலையெடுக்கின்றனவோ அப்பொழுது நான் என்னை மானுடனாகச் சிருஷ்டித்துக்கொள்வேன்" என்று முன்னொருகால் வாக்களித்திருக்கும் வண்ணம் மேற்கூறிய மூவரையும் நமக்களித்து நம் நாட்டின் பேறினைப் பாதுகாத்த பரமாத்மா இப்பொழுது நம்மைவிட்டகன்ற மகானுடைய ஸ்தானத்தில் மற்றுமொரு புண்ணிய புருடனை அவதரிக்கும்படி எச்சமயம் கருணைபுரிவரோ? ஆற்றொணாத்துயரத்தால் இதற்குமேல் இச்சமயம் எழுத நம் மனம் எழாவண்ணம் சஞ்சலிக்கின்றது.

"... ... ... இன்னறங்கோ
பூமடந்தைவாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூலிழந்த நாள்" என்று

ஒட்டக்கூத்தர் கம்பனைக்குறித்துக் கூறியதையே நாமும் கூறிநிற்போம்.

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

மதுரை.

ஜகத்ஜோதி.

(86-ம் பக்கத்தொடர்ச்சி).

தன் காதலியின் அன்பிலா நோக்கால் களிப்படைந்த காதலன் சரேலென்று நெருப்புமூட்டித் தான்கொன்ற குதிரையின் ஊனிற் சிறிதுபாகம் பண்ணித் தன் மெல்லியாளுக்குக் கொடுத்தான். அது அப்பெண்ணணங்குக்கு அருவருப்பாயிருந்தது. ஆபத்துக்காலத்தில் என்செய்வது? சென்ற போவர் யுத்தத்தில் அன்னஆகாரமின்றித் தவித்த சேனைகள் சில நாள் குதிரை மாமிசந்தின்றே பிழைக்க நேரிட்டதன்றோ? அவ்வண்ணம் அருந்தவே வரும்பசியும் தாகமுஞ் சிறிது தணிந்தன. அத்தம்பதிகள் காலையில் மறுபடியும் பிரயாணம் புறப்பட்டனர். மகவீன்ற மறுதினமே பயணம் போகிறதென்றால் எவ்வளவு துன்பம்! அக்குலக்கொடி குழவியையும் தூக்கிச்செல்லவேண்டியிருந்தது. இதுவரை குதிரை தூக்கிச்சுமந்த மூட்டை முடிச்சுக்களை அவள் காதலனை சுமக்கவேண்டி வந்தது. இத்துன்ப நிலையில் அவர்கள் என்செய்வார்கள்! மிகத் துர்ப்பலமுள்ள தன் நாயகியைத் தன் தோள் தாங்கலில் மெல்லமெல்ல நடத்திப்போனான் அவ்வன்பன். பொறுக்கமுடியாத கஷ்டத்துடன் அப்பெண்மணியும் தன் நாயகன் நயமொழியாற் சொற்ப ஆறுதலுண்டாக்கிக்கொண்டே சிறிது தூரம் நடந்தனள். அச்சமயம் ஒரு மைல் தூரத்தில் ஓர் அழகிய தடாகம் காணப்பட்டது. அது சூரிய கிரணம்பட்டுத் தகதகவென்று பிரகாசித்ததானது "நல்லோர் வரவால் நகைமுகங்கொண்ட" நண்பன் தோற்றம்போல் விளங்கிற்று. அதன் கரையிலுள்ள மரவரிசைகள் தளிர்த்துத்தழைத்துச் செழுமையாய்ப் பச்சைப்பசேலென்றாச்சரியமாய்த் தோன்றின. அவற்றின் குளிர்நிழலில் வளர்கின்ற இளம்புல்லை எருதுகள் காதையும் வாலையும் அடிக்கடி ஆட்டிக்கொண்டு சுவேச்சையாய் மேய்ந்துகொண்டிருந்தனபோற் காணப்பட்டன. அவைகளிற் சில துள்ளிக்குதித்துக் குதூகலித்து முக்காடிட்டுத் தண்ணீரில் விழுந்து தாராளமாய் நீந்திக்கொண்டிருந்தனபோலவும் தோன்றின. அத்தடாகத்துக்கு அப்பால் ஒரு பெரிய நகரம கோட்டை—கொத்தளங்களுடன் அதிமானுஷ்யமான காட்டில் மிகக்கம்பீரமாய்த் தோன்றிற்று. தள்ளாடித்தத்தளித்து நடந்து செல்லும் அப்பிரயாணிகளுக்கு அவை எவ்வளவோ வியப்பையும் ஆறுதலையும் உண்டாக்கியிருக்கும் என்பது திண்ணம். அத்தம்பதிகள் அவ்வினிய காட்சியைக்கண்டு களிப்புற்றுப் புளகமெய்தினர். அந்நகரை நோக்கி வேகமாய்ச்செல்ல ஆரம்பித்தனர். இதுவரை ஒரு மானுட முகமும் பாராத அவர்களுக்கு அப்பட்டணத்தினின்றும் பல்லாயிரம் ஜனங்கள் புறப்

பட்டு அக்கம்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு அதனையடுத்த மைதானங்களின் வழிச்செல்பவர்போல் தோற்றவே அடக்கொணா ஆநந்தம் பிறந்தது. தாபத்தைத்தீர்க்கத் தண்ணீர் அகப்படுமென்றும் பசிதீரப் பல்வகை ஆகாரம் கிடைக்குமென்றும் படுத்திளைப்பாறப் பலநல்லிடங்கள் வாய்க்குமென்றும் அவர்கள்மனம் நினைக்குந்தோறும் சந்தோஷமடையவே நடையும் வேகமாகத் தொடங்கியது. தன் ஆருயிர் அன்பன் தோளினையே ஆதாரமாகப் பற்றிக்கொண்டு நொந்த சரீரத்துடன் அப்பெண்மணி மெல்லமெல்ல நடந்து சென்றனள். அவ்வின்புற்ற காட்சிகளைக் கண்டுகளித்துக் களைதீர ஆவல்கொண்டு அவ்விருவரும் சிரமப்பட்டு நடந்தனர். அக்காட்சி தொலையிலேயே காணப்பட்டு வந்தது. அந்தோ! சடுதியில் தடாகம் மறையத்தொடங்கிற்று. அந்நகரமும் பனியால் மறைபட்டதுபோல் தோன்றிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் இது ஓர் இந்திரஜாலக் காட்சியோவென்று மதிமயங்கும்வண்ணம் இரண்டும் ஒருங்கே மறைந்தன. மறுபடியும் மணல் வெளியைத்தவிர்த்து வேறு யாதொன்றும் தோற்றவில்லை. ஐயோ! பாவம்! அவர்கள் என்செய்வார்கள். அது கானல் ஜலக்காட்சி. அதனையே கவிகள் பேய்த்தேரென்பர். காதலி கடுந்துயரத்தால் காலடியெடுத்துவைக்கமுடியாமற் கீழே விழுந்தனள். காதலனுக்கும் கட்டோடே மனம் விட்டுப்போயிற்று. காதலிக்குக் காலங்குறுகியதென்றே நினைத்தான். தாய் குழந்தையைச் சுமக்கமுடியவில்லை. குழவிபோனாலும் தாய்தப்பினாற் போதுமென்று அவன் கருத்து. அதற்காகப் பல உபாயங்கள் யோசித்துப்பார்த்தும் ஒன்றும் சரியாகத்தோற்றவில்லை. குழந்தையைக் கைவிடுவதே தக்க சூழ்ச்சியென்று தீர்மானித்தான். இதனைத் தன்காதலிகாதில் போடத்தயங்கினான். பின் சிறிது துணிவுகொண்டான். மறுப்படியும் அவன் மனங்கூசிற்று. இருந்தாலும் ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு தன் யோசனையைக் காதலியினிடம் சொல்லத்துணிந்தான். அம்மொழியைக் கேட்கவே தாயின்மனந்தத்தளித்தது. ஐயோ! என்று ஒரு பெரும் ஓலமிட்டாள். பகவானே! என்று கூவி பெருமூச்செறிந்தாள். பிராணன் போனாலும் என்னருமைக் குழந்தையை அநாதையாய்விடச் சம்மதியேன் என்றாள். "பெற்றமனம்பித்து" என்பதற்கிணங்க அவள் மனம் துடிதுடித்தது. கடைசியாய்க் காதலியின் சம்மதம் ஒருவாறு பெற்று அத்துணிகரமான காரியத்தை முடிக்க முயன்றான். தாயோ குழவியினிடமிருந்த அன்பின் பெருக்கால் அழுதவண்ணமாயிருந்தனள். தலைவன் அவள் கண்ணீரைத்துடைத்துச் சிறிது ஆறுதல்மொழி கூறினான். கூசாமற் குழவியைக் கேட்டான். தாயும் தன் கண்ணீர்ப்பெருக்கத்தால் அக்குழந்தையை மஞ்சனநீராட்டி மார்புறத்தழுவி உச்சிமோந்து முத்தமிட்டுத் தன் தலைவன்கையிற் கொடுத்தனள். தலைவனும் அக்குழவியை ஓர் மரக்

கிளையின்மீது கிடத்திச் சருகுகொண்டுமூடி "பகவானே! இவ் அநாதையை ரட்சிக்கவேண்டுவது உமது பாரமே!

"கருப்பைக்குள் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றவிதளிக்கும் மெய்யனே"

உம்மையே நம்பினேன். கானகத்திலுள்ள அநாதைப்பிள்ளையானாலும் அரண்மனையின்கட் பிறந்த அரசன் குழந்தையானாலும் உமக்குப்பேதமில்லை. இரண்டினையும் ஒரேவித காருணியத்துடன் காப்பவர் நீரே. நீரே ஜகன்மாதா! நீரே பரமபிதா! நீரே பரமதயாளு. உமக்கில்லாதகவலை எனக்கென்ன?" என்று பகவத்தியானம் பண்ணிக்கொண்டு அவ்விடம்விட்டு மனைவிபால் மீண்டான். குழவியைப்பிரிந்த தாய் மனஞ்சகியாதவளாகி "ஐயையோ! குழந்தையைப் பிரிந்த கொடும்பாவியானேனே. பிள்ளையைப்பிரிந்த பெரும்பாவியானேனே. பாலகனைப்பிரிந்த படுபாவியானேனே. கான்முளையைப்பிரிந்த கன்மனத்தாளானேனே. கண்மணியைப்பிரிந்த காதகியானேனே. பைங்கிளியைப்பிரிந்து பைத்தியங் கொண்டேனே. பவளக்கொடிபிரிந்து பாழ்காயில்வீழ்ந்தேனே. ஆருயிரைப்பிரிந்த அநாதையானேனே" என்று அழுவாள், விழுவாள், அயிர்ப்பாள், உயிர்ப்பாள், ஐயோ! தெய்வமே! என்று அரற்றுவாள். இவ்வாறிருக்கும் சமயத்தில் குழந்தையை விட்டுவந்த தலைவன் தலைவிபடும் கஷ்டங்களைக்கண்ணுற்றுக்காணச்சகிக்கவில்லை. "திருத்தப்போய்த் தோற்பறிவளையமாயிற்று" என்ற வண்ணம் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய யத்தனிக்கப்போய் கஷ்டம் அதிகப்பட்டது. கண்மணியே! குழவியைப் பிரிந்தோமென்று மனம்வருந்தாதே. எல்லாம் வல்ல ஈசன் காப்பாற்றுவார். அத்திமுதல் எறும்பீறுகவுள்ள அனைத்துயிரையும் காப்பவன் அவனே. அவனன்றி அணுவசையாது. எழுந்திரு. போவோம் என்றனன்". தாகம் பொறுக்கமுடியவில்லை. தன் காதலனது கனிமொழியைத்தட்டப் பிரியமில்லாதவளாய் எழுந்து தள்ளாடித்தத்தளித்து வழிநடந்தாள் அக்குலக்கொடி. சொற்பதூரஞ்செல்லவே குழந்தையின் ஞாபகம் வந்துவிட்டது. பெற்ற வயிறு எரிந்தது. ஐயோ! என்கண்மணியைக்காணேனே என்று வாய்விட்டரற்றினாள். அப்பாவை எங்ஙனம் சகிப்பாள்! பெரிதும் பாவம்! குழந்தையைத்தூங்கிக் கூசாமற்கொடுத்தேனே" என்று பெருமூச்சுவிட்டுக்களைத்துக் கீழேவிழுந்தாள். "எரிகிற நெருப்பில் நெய்வார்த்ததுபோல் சூரியனது கிரணங்களும் உக்கிரமமாய்ப் பொசுக்கத்தொடங்கின. தலைவியின் தவிப்பைப்பார்க்க அவனால் சகிக்கமுடியவில்லை. கண்ணீர் களகளவென்று இருகன்னங்களிலும் அருவிபோல் பெருகியோடிற்று. காதலிக்குக் களைதீரக் கைக்குடையை நட்டுச் சிறிது நிழலுண்டாக்கிக் கடுஞ்சித்தத்துடன் கைவிட்

ட குழந்தையை எடுத்துவரச்சென்றான் காதலன். மூடியிருந்த சருகுகள் தென்படவில்லை. தூக்கம் மேலிட்டது. என்னாருங்குழவிக்கு என்ன விபத்து நேர்ந்ததோவென்று பார்க்க ஆவலாய் ஓடிவருகையில் ஒரு கருநாகம் மண்டலமிட்டுத் தன்கொடியவாயைக் குழந்தையை நோக்கித் திறந்துவைத்துக்கொண்டிருந்ததைக் கண்ணுற்றான். மனநெக்கு மெய்ம்மறந்து ஆத்திரத்துடன் ஓடினான். அச்சமயம் அவன் மனம் அபாயத்தைப்பற்றிச் சொற்பமும் நினைக்கவில்லை. கார்க்கோடகன்போலிருந்த அக்கருநாகம் தன்னையுங் கடிக்கக்கூடுமே என்பதை அவன் சிந்திக்கவில்லை. "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டன்றோ"? குழவியோ அவனுக்குத்துறி. தெய்வாதீனமாய் அக்கொடிய அரவம் அவனோடிய அரவத்தால் தானிட்ட மண்டலரூபத்தை நீக்கிக் குழந்தைக்கு யாதொரு அபாயமும் செய்யாமல் சமீபத்திலிருந்த மடப்பொந்தில் நுழைந்து மறைந்தது. சரேலென்று பாய்ந்து குழவியை வாரியெடுத்து அணைத்து முத்தமிட்டுக் குதூகலத்துடன் வேகமாய்த் தன் காதலியிடம் கொணர்ந்தான். குழந்தை யேக்கத்தால் அவள் பிராணன் துடித்துக்கொண்டிருந்தது. இதுவரை பிரக்ஞைதப்பிக்கிடந்த அப்பெண்மணி தன்காதலன் குழந்தையைக் கொணர்ந்ததாலே கண்திறந்து பார்த்து மிக்க ஆவலுடன் கைநீட்டி வாங்கி மார்புறத்தழுவி மும்முறை முத்தமிட்டாள். உத்தராயணகாலம் வரும்வரை பாய்ந்த அம்பைக் கையிற்பிடித்துக்கொண்டு பிராணனைக் காப்பாற்றிய பீஷ்மனைப்போல் அத்தலைவி தன் உருமருந்தன்ன குழவியைக் கண்ணுற நிமித்தமே பிராணனை வைத்துக்கொண்டிருந்தாள். முத்தமிட்டவுடன் களைப்புமேலிட்டு மெய்சோர்ந்தாள்.

"குடம்பைதனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்பொடுயிரிடை நட்பு"

என்றவண்ணம் அவள் ஆவியும் கூட்டைவிட்டுப்பிரிய [illegible] "உறவினருக்கஞ்சியன்றோ ஊக்கநீக்காவிற் புறப்பட்டோம். [illegible] யிர்க்காதலியைப் பறிகொடுக்க நேரிட்டதே. தெய்வமே! [illegible]" என்று ஏக்கமுற்றான். அச்சமயம் அவன் காதலி "நாதா! [illegible] கிறேன். என்னை மறவாதேயும். இக்காட்டில் என்னை [illegible] கள் பிடுங்கித் தின்னும்வண்ணம் விட்டுப்போகாமல் ஓர் குழிவெட்டிப்புதைத்துப்போக வேண்டுகிறேன். நல்லோர் ஒருங்குசேரும் சுவர்க்கலோகத்தில் நாமிருவரும் மறுபடியும் சென்றுசேர்ந்து கூடும்வண்ணம் பகவான் கிருபை புரிவாராக. அன்ப! நும் அன்புக்குப் பாத்திரமான பேதையாகவே நான் உயிர்துறக்கும்படியான பெரும் பாக்கியம் பெற்றதை நினைக்க என்மனம் மகிழ்வுறுகின்றது. நீர் விசனமுறவேண்டாம். பரமன் பரிபூரண கிருபை

புரிவாராக" என்று கூறிக்கூப்பித்தொழுதகையுடன் கண்மூடினாள். நம்பிக்கு நாவெழவில்லை. மங்கைக்கரசியை மார்புறத்தழுவினான். கடைமுறையாய் முத்தமுமிட்டான். புன்சிரிப்போடுகூடிய அவளது முகத்தைக் கண்ணுற்றான். களைப்பால் கண்மூடினளோ என்று சந்தேகித்து மூக்கினிடம் கைவைத்து மூச்சிருக்கிறதோவென்று சோதித்தான். அந்தோ! அருங்காதலியின் அருயிரும் அரைநொடியில் அடங்கவே அவனும் யாரும் பெறற்கரிய அருட்பதவி சேர்ந்தனன்.

(முதலாம் அதிகாரம் முற்றுப்பெற்றது).

கள்ள நாணயங்கள்.

கள்ளநாணயங்கள் நமது நாட்டில் இப்போது அதிகமாய் வழங்குகின்றனவென்பது தெரிந்தவிஷயமே. அந்நாணயங்கள் எல்லைமாகாணத்துக்கப்பாலிருந்து நமது நாட்டுக்கு எப்படியோ வந்து சேர்ந்துவிடுவதாகச் சொல்லிக்கொள்ளப்பட்டாலும் அந்நாணயங்கள் நமது நாட்டிலேயே அத்தொழிலைச் சாமர்த்தியமாய்ச்செய்யக் கற்றிருக்கும் சிலரால் செய்யப்பட்டும் வழங்குகின்றன. அப்படிக் கற்றிருப்பவர்களுள் சிலர் இந்தியாவின் வடமேற்கெல்லை முதல் தென்கோடிவரையில் ஊர் ஊராய்ச்செல்லுவதாகவும் தோன்றுகிறது. அவர்களுக்குச் சாபார் பந்துகள் என்று பெயராம். அவர்கள் மகமதியர்களென்றும் பம்பாய் ராஜதானியில் உள்ள பிஜப்பூர் ஜில்லாவைச்சேர்ந்தவர்களென்றும் ரெயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பாபாராவ் நாயுடு அபிப்பிராயப்படுகிறார். அக்கூட்டத்தாரின் தொகை 2000க்கு மேலிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. அவர்கள் மகமதிய பக்கிரிகளைப்போல வேஷம்போட்டுக்கொண்டும் கையில் கப்பறையை யெடுத்துக்கொண்டும் பிச்சைக்காரர்கள்போல் புறப்பட்டுவிடுகிறார்கள். யாரையும் மரியாதையாகத்தான் அவர்கள் கூப்பிடுகிற வழக்கம். அவர்கள் எங்கே போனாலும் தங்களோடு கள்ளநாணயங்கள் செய்வதில் உதவக்கூடிய சாமன்களை எடுத்துக்கொண்டுதான்

செல்வார்கள். மூன்று மணி நேரத்தில் 4 கள்ள ரூபா செய்துவிடுவார்கள். அவர்கள் கள்ளநாணயத்தைப் பிறரிடம் சேர்ப்பதும் வித்தையே. தங்களைச்சேர்ந்தவர்களுள் ஒரு சிறுபையனை அவர்கள் ஒரு ரூபா செம்பு நாணயங்களுடன் ஓர் ஊருக்குப் போகச்சொல்வார்கள். அப்பையன் அவ்வூரில் ரூபாவுக்குச் செம்பு நாணயங்களுண்டாவென்று கேட்டுக்கொண்டே போவான். அப்போது செம்புநாணயச் சில்லறை வேண்டியவர்கள் அவனிடம் நல்ல ரூபாவைக் கொடுத்துவிட்டுச் செம்புநாணயத்தை வாங்கிக்கொள்வார்களானால் அப்பையன் ஒரு நொடிப்பொழுதில் அந்த நல்ல ரூபாவை ஒளித்துக்கொண்டு தன்னிடமுள்ள கள்ளநாணயத்தைத் தன்னிடம் சில்லறை மாற்றவந்தவர்கள் கொடுத்துவிட்டதாகப் பாசாங்குசெய்து, தனக்கு அந்த நாணயம் வேண்டாமென்றுசொல்லி தன்னுடைய கள்ளநாணயத்தை அவர்கள் தலையில் கட்டிவிட்டுத் தான்கொடுத்த செம்பு நாணயங்களை வாங்கிக்கொண்டு போய்விடுவான். இப்படியே அவர்கள் தங்களால் செய்யப்படும் கள்ளநாணயங்களைப் பிறர்தலையில் கட்டிவிடுகிறார்கள். இப்படி ஜனங்களை மோசம்பண்ணுவதும் தவிர அவர்கள் திருவிழாக் காலங்களில் பெருத்த வியாபாரம் நடக்கும் இடங்களுக்குச்சென்றும் தங்களாற்செய்யப்பட்ட கள்ளநாணயங்களை ஜனங்களை மோசஞ்செய்து அவர்கள் தலையில் கட்டிவிடுகிறார்கள். இந்தச் சாபார் பந்து கூட்டத்தாருள் சிலரை விஜயநகரத்தில் கண்டுபிடித்தபோது கண்டுபிடிக்கப்பட்ட நான்குபேர்களும் தலைக்கு ரூபா 300 வைத்திருந்தார்களாம். பேஜவாடாவில் அவர்களுள் சிலர் அகப்பட்டுக்கொண்டபோது ஒவ்வொருவனிடமும் ரூபா 400 இருந்ததாம். இந்தச் சாபார் பந்துகளைச்சேர்ந்த வேறொரு கூட்டத்தார் பிடிக்கப்பட்டு விழுப்புரம் மாஜிஸ்டிரேட்டால் விசாரிக்கப்பட்டு வருகிறார்களாம். இவர்களைத் தவிர வடக்கு பங்காளத்தில் கிச்சக்குகள் என்ற கூட்டத்தாரும் நிஜாமிராஜ்யத்திலுள்ள வாரங்கல் தாலூகாவைச்சேர்ந்த ஸ்ரீரங்கபுரத்துக் கேப்மாரிக் கூட்டத்தாரும் போலி நாணயங்கள் செய்கின்றார்களாம்.

சுதேசமித்திரன்.

போப் லியோ ஆசாரியார்.

கிறிஸ்தவர்களுள் உரோமன்காதலிக் கிறிஸ்தவர் என ஒரு பெரு வகுப்பார் உண்டென்பது உலகப்பிரசித்தம். அவர்களது பரமாசாரியார் ஐரோப்பாவில் பிரசித்திபெற்ற ரோமாபுரியில் வாசம் செய்துவருகிறார். தற்கால ஆசாரிய புருஷரது பெயர் போப் 13-ம் லீயோ. அவ்வாசாரியருக்குச்சமீபகாலத்தில் 25-வது ஆசாரிய அபிஷேக மகோற்சவம் நடந்தது. அக்காலம் 70,000 சிஷ்கணங்கள் கூடியிருந்தனர். அவ்வாசாரியருக்கு வயது 93. அவர் தேகம் தளர்ச்சி யடையவில்லையாம். பெருங்கிழவராயினும் கோலூன்றி யறியாராம். மூக்குக்கண்ணாடி உபயோகிப்பதில்லையாம். நல்ல திடத்துடனிருந்து வருகிறாராம். மகோற்சவகாலத்தில் எல்லோரும் வியக்கத்தக்க வண்ணம் தாமே எல்லாக்காரியங்களையும் பிறருதவியின்றிச் செய்தனராம். அவர் தேகசௌக்கியமும் தேகஉறுதியும் 100 பிராயத்துக்குமேல் வசிப்பாரென்றே தெரிவிக்கின்றனவாம். அவர் மகா பரிசுத்தரென்றும், மதுபானம் சிறிதுமில்லாதவரென்றும், மகா பக்திமானென்றும், ஆசாரிய புருஷர்களெல்லாம் எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு நியமநிஷ்டையுடனிருந்து வருகின்றனர் என்றும் கூறுகிறார்கள். ஏனைய கிறிஸ்தவ வகுப்பினவரும் இவரது சிரேஷ்ட குணங்களைமுன்னிட்டு இவ்வாசாரிய புருஷரிடத்தில் மிகக் கௌரவம் பாராட்டி வருகின்றனர். நம் லோககுருவை நன்கறிந்த நம்நாட்டாருக்கு இது ஒரு அதிசயமாகாதெனினும் உலகத்தில் இவ்வண்ணம் நடக்கும் ஆசாரிய புருஷர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். எம்மதஸ்தராயிருப்பினும் நல்லவர் குணங்களை நாடி யுணர்ப்பதே நம்கடமை.

பத்திராதிபர்.

முடிசூட்டு நன்கொடை.

டில்லி டர்பார் நடந்த காலத்தில் நம் கவர்னர் ஜெனரலாகிய கர்ஸன் பிரபு குடிகளுக்குச் சிறிது நன்மை யளிக்கப்படுமென்றும் அந்நன்மை பின்னர் வெளிப்படுத்தப்படுமென்றும் கூறியதாக நாம் எழுதியிருந்ததை நம் பாநுவை வாசிப்போர் அறிவார்கள். அவ்வாக்கு இச்சமயம் ஒருவாறு நிறைவேறியது. இதுவரை வருஷம் ஒன்றுக்கு 500 ரூபாவுக்குமேல் வரும்படியுள்ளவர்களுக்கெல்லாம் வருமான வரி போட்டுவந்ததை நீக்கி இப்பொழுது 1,000 ரூபாவுக்கு மேற்பட்ட வரும்படியுள்ளவர்களுக்கே அவ்வரி விதிக்கப்படுமென்று தீர்மானமாயிருக்கிறதை அறிய நாம் சந்தோஷமடைகிறோம். இதனால் அநேகருக்கு அநுகூலமென்பதிற் சந்தேகமில்லை. ஆனாலும் உத்தியோகஸ்தர்கள் இனி அநேகரை 1,000 ரூபாவுக்கு மேற்பட்ட வரும்படியுள்ளவர்களென்றே கணக்குக்கொடுக்க முயல்வார்களென்பது திண்ணம். அவ்வித அநியாயங்களுக்கு இடங்கொடாமல் நம் கர்ஸன் பிரபு அவர்கள் ஏதாவது தக்கதோர் சூழ்ச்சி செய்துவிட்டுப் போவார்களானால் இந்நன்கொடை நம் நாட்டுக்கு நன்மையாகவே முடியும். இல்லாவிடில் ஒருவிதமாகக் கேடாகவே கருதப்படும். உப்பு மணங்கு 2½ விற்றதை 2 ரூபாவாகச் செய்திருக்கிறார்கள். அதுவும் சிறந்ததே. உப்பு உபயோகியாத மனுஷன் கிடையாது. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற பழமொழிப்படி நம் ஜனங்கள் இந்நன்றியை என்றும் பாராட்டுவார்கள். இருந்தாலும் இதனால் வியாபாரிகளுக்கு லாபமே ஒழிய ஜனங்களுக்கு அதிக லாபகரமாகத் தோற்றவில்லை. மேலாகப்பார்ப்பவருக்கு மட்டும் ஜனங்களுக்கு இது பெருத்த நன்மையாகத் தோற்றுமே ஒழிய வாஸ்தவத்தில் வியாபாரிகளுக்கே இது பெரு லாபம். ஆயினும் கவர்ன்மெண்டார் நன்மையைக் கருதியே செய்திருக்கிறார்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அவர்களுக்கு என்றென்றும் நம்மவர் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர். நம் குடியானவர்களுக்கு பயிர்த்தொழில் விஷயமாய் ஏதாவது நன்மை கிடைக்குமென்று பலர் எதிர்பார்த்திருந்தனர். இச்சமயங்களில் நிலவரியைச் சில வருஷங்களுக்குத் தள்

ளிக்கொடுத்துக் குடிகளைச் சந்தோஷிப்பிப்பதே நம் பூர்வ மன்னர் அநுசரித்துவந்த வழக்கம் அவ்விதம். நம் இராஜாங்கத்தாரும் செய்திருந்தால் குடிகளின் குதூகலத்துக்கு வரையறையிராது. "தானம் கொடுத்த மாட்டைப் பற்பிடித்துப் பார்ப்பது சரியன்று". கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைய வேண்டியதுதான். இந்நன்கொடையால் கவர்ண்மெண்டாருக்கு 2 கோடிக்குமேல் நஷ்டந்தான். 105 கோடி வரும்படியுள்ள இராஜ்யத்தில் 2 கோடி நஷ்டப்படுவது பெரிதாகமாட்டாது. இந்நஷ்டம் வேறுவிதங்களில் சரிப்பட்டுப்போகும்.

"வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டேரு மெறும்பிக் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று".

நம் ஆங்கில அரசாட்சி நீடூழிகாலம் வாழ்க.

கற்றாழை நார்.

நாம் இருப்புப்பாதை வண்டிகளிலேறிச் செல்லுங்கால் பச்சை கலந்த நீல வர்ணமான ஒருவகைக் கற்றாழையை அடிக்கடி பார்க்கிறோம். அதன் உபயோகம் இவ்வளவென்று நாமின்னும் அறியாமலே இருக்கிறோம். வேலிகளுக்கே பயன்படக்கூடியதென்று நினைத்து வருகிறோம். அதினின்றும் மருளினின்றும் நார் தயார்செய்து வியாபாரம் பண்ணினால் பெருத்த லாபமடையலாம். பம்பாயில் இவ்வித நாரை யேற்றுமதி செய்கிற சில வியாபாரிகளுண்டு. அவர்கள் ஐரோப்பியர்களே. அவர்கள் இவற்றினின்றும் நார் தயாரித்து ஐரோப்பாவுக்கு அனுப்பிப் பெருத்த லாபமடைந்து வருகின்றனர். ஒரு டன் நாருக்கு 20 பவுனுக்குக் குறையாமலே கிடைக்கும். அமெரிக்கா தேசத்தில் இவற்றை விஸ்தாரமாய்ப் பயிர்செய்து

நாரெடுத்துப் பற்பல சாமான்கள்செய்து வியாபாரத்துக்கு அனுப்பி இலாபம் அடைகின்றனர். நம் நாட்டில் சிலர் வாழைநாரை வியாபாரச் சரக்காகச்செய்து இதர தேசங்களுக்கு அனுப்பி இலாபமடைய வகை தேடி வருகின்றனர். அதனைப்போலவே இவற்றையும் கவனித்துப் பயிர்செய்து நாரெடுத்து மேல் நாடுகளுக்கு அனுப்பிவந்தால் பெருத்த இலாபமடையலாம் என்பதிற் சந்தேகமில்லை. இவற்றைப் பயிர்செய்வது கஷ்டமன்று. இவை எந்தக் கல்லாங் காட்டிலும் பயிராகும். வருஷாவருஷம் சிரமப்பட்டு உழுது எருவிட்டுத் தண்ணீர்பாய்ச்சிக் களையெடுத்துக் காவலிருந்து கஷ்டப்பட வேண்டுவதில்லை. நடுகிறதிலுண்டாகிற செலவைத்தவிர்த்து வேறு செலவும் கிடையாது. 12 வருஷம் வரை இவை தாமே வளரும். தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் நல்ல வேலியாகும். நம் குடியானவர்கள் இவற்றை ஏராளமாய்ப் பயிர்செய்து இலாபமடையவேண்டியது இன்றியமையாதது. வியவசாயத்துக்கு வேண்டிய தாம்பு, பூட்டான் முதலியன செய்வதற்கு மிகவும் பயன்படும். ஆகையால் நம் குடியானவர்களும் வியாபாரிகளும் இவ்விஷயத்திற் கண்ணுங்கருத்துமாயிருந்து ஏராளமாய்ப் பயிர்செய்து நாரெடுத்து பெருத்த லாபமடைவார்களானால் நம் தேசத்துக்கு மிகவும் க்ஷேமம் உண்டு. இம்மாதிரியான சிறு கைத்தொழில்களை அலட்சியம் செய்தல் கூடாது. இவற்றினின்றே "பலதுளி பெருவெள்ள"மென அந்நிய நாட்டார் நம் மத்தியிலிருந்துகொண்டு நம் கண்ணெதிரவே பெருத்த லாபம் அடைகிறார்கள். நம்மவரே அவர்களுக்குச் சாதகமாயிருந்து அவர்கள் இலாபம் அடையும்படி செய்கின்றனர். எல்லாவற்றிற்கும் முயற்சியே காரணம். திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச்சேர்ந்த பெரம்பலூர்த் தாலுகாவில் ஓர் வகை கற்காட்டில் ஏராளமாய் அகப்படுகின்றது. அக்கல்லில் நல்ல எருவாகும்படியான ஒரு பதார்த்தமிருப்பதைக்கண்ட ஒரு ஐரோப்பியர் அக்கற்களைச் சேகரித்து ஒரு யந்திரமூலமாய்ப் பொடிசெய்து சாக்கிலிட்டு மூட்டைமூட்டையா வியாபாரம்செய்து வருகின்றனராம். அவற்றை விலைகொடுத்து வாங்கி காப்பித்தோட்டக்காரரும் தேயிலைத்தோட்டக்காரரும் எருவாக உபயோகித்து வருகின்றனராம். அது உயர்ந்த எருவாகிறதையறிந்து இவ்வாறு செய்கின்றனர்போலும். இம்மாதிரி நம் பக்கலிலுள்ள சாமான்களின் தன்மையையறிந்து நாமே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும்படியான விவேகம் இன்னும் நம் ஜனங்களுக்கு வராமலிருப்பது பெரு வியப்பே. இதற்கு முக்கிய காரணம் தற்கால சாஸ்திர அபிவிர்த்தி நம் நாட்டில் பரவாததே. இச்சாஸ்திரங்களைக்கற்ற நம்மவர் இவற்றில் தம்புத்தியைச்செலுத்தி இவற்றின் நன்மையைத் தக்கபடி ஜனங்களுக்கு எடுத்துக்காட்டுவார்களானால் நம் நாடும் ஜப்பான் முதலிய தேசங்களைப்போல் சில வருஷங்களில் அபிவிருத்தியடைந்து நல்ல நிலைமைக்குவர இடமுண்டு. அவ்வாறின்றிச் சுகமாய்ச் சீட்டும் சதுரங்கமும் ஆடிக்கொண்டு துக்கமற்றிருந்து வருவார்களானால் நாம் முன்னுக்கு வருவது இந்த யுகத்திலில்லை. இவற்றை மாத்திரம் நாம் அலட்சியம் செய்யாமல் கூர்ந்து கவனித்து இம்முயற்சியை நடத்திவருவோமானால் "காண்டமே மாநிதியம் வெள்ளத்தின் மேலும்பல" என்று நம் கவி கூறியவண்ணம் நம் தேசத்துக்குப் பெரிது க்ஷேமமுண்டு. குடியானவர்களும் வியாபாரிகளும் இவற்றை நன்குகவனித்து ஊக்கத்துடன் முயற்சிசெய்து நம் நாடு இலாபமடைய வகை தேடுவார்களாக.

1902ஆ டிசம்பர்மீ 20உயில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய தமிழ்ப்பரீட்சையில் 1-வது வகுப்பிற்றேறிப் பரிசுபெறும் மாணாக்கர்களின் விவரக் குறிப்பு.

மாணாக்கர்களின் பெயர்.	கற்ற கலாசாலை.	பரிசுத் தொகை.
பி. ஏ. பரீக்ஷை		
வ. சு. செங்கல்வராயன்	கிறிஸ்தியன் காலேஜ், சென்னை	50
யப். ஏ. பரீக்ஷை.		
ச. வரதாச்சாரியன்	௸	40
வெ. சுப்பிரமணியன்	சர்ச் ஆப் ஸ்காட்லாண்டு மிஷன் காலேஜ், சென்னை	35
தி. சி. கோபாலசாமி நாயுடு	ஆற்காட்டு மிஷன் காலேஜ், வேலூர்	30
அ. நடேசன்	யஸ். பி. ஜி. காலேஜ், திருச்சி	25
மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.		
யன். சுந்தரமையர்	ஹிந்து காலேஜ், திருநெல்வேலி	30
ஸ்ரீராகவன்	சேதுபதி ஹைஸ்கூல், மதுரை	25
கு. நாராயணசாமி	முன்சிபல் ஹைஸ்கூல், மாயவரம்	20
யூ. கெ. ஷண்முகவேலு	கோயம்புத்தூர் ஹிந்து காலேஜ்	15
சே. அனந்தராமையர்	கூடலூர் காலேஜ், கூடலூர்	12

குறிப்பு.

	பி. ஏ.	யப். ஏ.	மெற்றிக்குலேஷன்.	மொத்தம்.
விண்ணப்பம் செய்துகொண்டவர்கள்	54	140	530	724
வந்தவர்கள்	12	31	213	256
1-வது வகுப்பிற்றேறியவர்கள்	1	4	15	20
2-வது ௸	7	36	99	142
பரிசு பெறுபவர்கள்	1	4	5	10
யோக்கியதா பத்திரம் பெறுபவர்கள்	8	40	114	162

1840-ம் வருஷத்து ரூபாக்களை அழித்துவிட்டு 1903-ம் வருஷத்து ரூபா நமது எட்வர்ட் சக்கிரவர்த்தியின் முக உருவத்துடன் வார்த்து வெளியாக்கப்பட்டிருக்கும் நாணயங்கள் ஒரு பக்கம் சக்கிரவர்த்தியின் முக உருவத்தைக்கொண்டிருந்தபோதிலும் மற்றொரு பக்கம் யாதொரு விசித்திரவேலையும் செய்யப்படாமல் வழவழப்பாயிருக்கின்றனவாம். கள்ளநாணயம் செய்பவர்களுக்கு இது சௌகரியமாகுமென்று தோற்றுகிறது.

* * * *

1903–1904ஆ பட்ஜெட்டில் போஸ்டுமாஸ்டர்கள் சம்பளத்தை அதிகப்படுத்துவதற்காக ரூ. 2,90,000 போட்டிருக்கிறார்கள். இது பேருபகாரமே. வருந்தியுழைத்துவரும் போஸ்டுமாஸ்டர்களுக்குச் சிறிது நன்மையுண்டாவது நாட்டாருக்கு ஆநந்தம்.

* * * *

கொசுருகளின் தொந்தரவைப் போக்கடிக்க ஒருவர் ஒரு மருந்து சொல்லுகிறார். அது நம்நாட்டில் விருத்தியானால் நம்தேசத்துக்கே க்ஷேமம்பிறக்குமென்பதிற் றடையில்லை. ஆப்பிரிக்காகண்டத்தின் மேல்கரையில் ஒரு செடி பயிராகிறதாம். அதற்கு ஆஸிமம் விரிடே Ocimum Viride) என்று பெயர் கூறுகிறார்கள். காபா நகரின் ரெஸிடெண்டாகிய காப்டன் லேரிமோர் என்பவர் மேற்கண்ட செடியைச் சட்டியில் வளர்த்து ஒரு அறையில் வைத்தனராம். அந்த அறையில் கொசுரு வரவேயில்லையாம். அவ்வறையில் கொசுருவலையில்லாமலே சௌக்கியமாய்த் தூங்கினாராம். இது மருந்துக்கு உபயோகமாகும்படியான மூலிகையென்றும் நம் துளசிச்செடிபோலிருக்குமென்றும் துளசியின் வாசனை அதற்கில்லையென்றும் கூறுகிறார். நம் வியாபாரிகள் இச்செடியைத்தருவித்துப் பயிர்செய்து இதன் உண்மையைப் பரீக்ஷித்தறிந்து நலமென்று கண்டால் தேச க்ஷேமத்துக்கு மிக்க அநுகூலமாயிருக்கும். அநேகருக்குச் சுகநித்திரையில்லாமலே வியாதியுண்டாகிறது. மலைநாடுகளில் இச்சிறு பிராணியின் தொந்தரவு உயிர்க்கபாயமான காய்ச்சலை யுண்டுபண்ணுகிறது. கொசுருகளே மலைக்காய்ச்சலுக்குப்பெருங்காரணமென்று பிரசித்திபெற்ற வைத்தியர்கள் வாதாடி வருகிறார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். இம்மருந்து உண்மையானால் இதைக்கண்டுபிடித்த புத்திமானைப்போல் லோகோபகாரி ஒருவருமில்லை. எந்த மகான் நம்நாட்டுக்கு இப்பேருபகாரம் செய்யப்போகின்றனரோ அறியோம். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்பது பழமொழி.

சிறுபாசனவேலைகளுக்கு 25 லட்சம் ரூபா மதிப்புத்திட்டம் போடப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் போடப்பட்ட மதிப்புத்திட்டத்தில் 16 லட்சந்தான் செலவானபடியால் இவ்வருஷம் 25 லட்சம் போதுமென்று கருதப்படுகிறது. இப்பாசனவேலைகளை விரும்பவருடைய கஷ்டநிஷ்டூரத்தைச் சிறிது கவனித்திருந்தால் மதிப்பிட்ட பணம் சரிவரச் செலவிடப்பட்டிருக்கும். அவர்களுக்குக் கஷ்டமென்றால் குடிகளுக்கும் கஷ்டந்தான். சொற்ப சம்பளக்காரராகிய அவ்வுத்தியோகஸ்தர்கள் தம் செலவுக்குக் குடிகளையே எதிர்பார்த்து நிர்ப்பந்தப்படுத்த இடமுண்டு. ஆகையால் இதனைக்கூர்ந்து கவனித்து சீர்திருத்தம் செய்தல் நலம்.

* * * *

நம் சென்னை இராஜதானியில் இவ்வருஷம் கரும்புப்பயிர் செய்யப்பட்டிருக்கும் நில விஸ்தீரணம் 100க்கு 10 ஏகர் வீதம் குறைவாகிறதாம். பஞ்சாபிலும் அப்படியே குறைகிறதாம். 'விளைவிற் கனியென்ப நெல்லும் கரும்பும்' ஆதலால் இவ்வாறு குறைவது நல்ல குறியாகமாட்டாது.

* * * *

நட்டால் கவர்ன்மெண்டு பாடசாலைகளில் கற்கும் இந்திய மாணாக்கர்களுக்கு வயது 14-க்குமேலிருக்கப்படாதென்றும் அதற்கு மேற்பட்டவர்களை வித்தியாசாலையினின்று நீக்கவேண்டுமென்றும் நட்டால் வித்தை யிலாகா சூபரின்டெண்டு ஒரு கஸ்து உத்திரவு அனுப்பியிருக்கிறாராம். இது மிகவும் அநீதியே.

* * *

ஐரோப்பாவில் ஜனங்கள் பொதுவாய்ப் பிணங்களைப் புதைக்கிற வழக்கத்தையே இதுவரை கையாடி வந்திருக்கிறார்கள். நம்தேசத்தில் ஹிந்துக்கள் பலர் செய்துவருவதுபோல் தகனம் பண்ணுவதில்லை. இப்பொழுதுதான் அந்நாட்டு வைத்திய சாஸ்திர நிபுணர்களும் சுகாதார சாஸ்திர நிபுணர்களும் புதைக்கும் வழக்கம் தொத்துரோகத்தைப் பரவச்செய்கிறதென்றும் ஆகையால் தகனம் பண்ணுவதே சிறந்ததென்றும் அபிப்பிராயப்பட்டு அவ்வழக்கத்தை அநுசரிக்கும்படி ஏவி வருகிறார்கள். இந்துக்கள் பல்லாயிர வருஷங்களுக்குமுன் கண்டுபிடித்த இவ்விஷயத்தை இந்நிபுணர்கள் இப்பொழுதுதான் சிலாக்கியமென்று கண்டுகொண்டார்கள்போலும். இனியாவது ஐரோப்பியர் இந்நல்வழக்கத்தைப் பின்பற்றுவார்களென்று நம்புகிறோம்.

* * * *

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 20 MAY 1903 MADRAS

உ
குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

சம்புடம் 2 } 1903௵ ஏப்ரல்மீ { இலக்கம் 5

விவேக சிந்து

(தொடர்ச்சி)

2-வது சுவாநுபவநிட்டைப்பிரகரணம்.

குரு கிருபையினாலே அந்த நிலைமையிலே பிரம்மாநந்த சுகமக்கினனான சிஷ்யன் சுவாநுபூதியென்கிற சகிசையோகத்திலிருந்து அதன்பிறகு நிஜதுரியத்திலே நின்று மெல்லப் பிரபோதமாய் நேத்திர உன்மீலனமானான். அப்பொழுது அந்தக்கரண உற்பவமாயிற்று. ஆனாலும் சுவாநுபவம் மறக்கவில்லை. இந்திரியங்களெல்லாம் எச்சரிக்கையாயின. ஆனாலும் பூர்வவாசனையில்லை. திரும்பவும் ஆநந்த ஜலத்திலே மூழ்கினான். அதெப்படியென்றால் பொதி சுமந்து தூரப்பயணம் நடந்து இளைப்பாய் வந்த எருது குளிர்ந்த நிழல் கண்டவிடத்திலே பச்சைப்புல் வயிறுநிறையத்தின்று தண்ணீர்குடித்துப் படுத்துக்கொண்டிருக்கிற வேளையிலே எழுப்பினால் எழுந்திராமலிருக்குமோ அப்படிப்போல் தாபத்திரயாக்கினியிலே தக்கமான இந்திரியங்கள் பிரம்மாநந்த ஜலத்தினாலே சாந்தியடைந்து சுக உபாயமாயிருந்தது. அப்படியிருந்தும் குருவுக்குப் பிரியபூர்வமாய்ச் சம்பாஷணைபண்ணவேண்டிப் பலவந்தத்தினாலே இந்திரிய சகிதனாய் எழுந்திருந்து பிரதக்ஷிணமாக வந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுப் பரமாநந்தபூரணனாய்த் திரும்பத்திரும்பத் தெண்டனிட்டுக்கொண்டு குருவினுடைய முகாரவிந்தத்தையே பார்த்துக்கொண்டு மிகவும் அதிசயிக்கத்தக்க பிரியத்துடனே கைகூப்பிக்கொண்டு சற்குருவினுடனே விண்ணப்பஞ் செய்கிறான். சுவாமி!

அநாதபந்து! கருணாசமுத்திரமான குருசுவாமி! அனாதிகாலசொரூபம் போக்கடித்துக்கொண்டு என்னை நானே திருடிக்கொண்டிருந்தேன். என்னை எனக்கே காட்டிக்கொடுத்தீர். உம்முடைய கிருபாதிருஷ்டியினாலே பரவஸ்துவைக்கண்டேன். இதற்குபமானம் அகில சிருஷ்டியிலுமில்லை. இந்த மகாசுகத்துக்குச் சரியானதொன்றுமில்லை. தேவரீர் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகார மென்னசெய்யப்போகிறேன். செய்யவேண்டுமென்றால் சகல லோகத்திலுமுண்டான வஸ்துக்களையெல்லாங் கொடுத்தாலுஞ் சரியல்ல. பிரம்மமென்கிறது திரிகாலத்திலேயும் நாசமில்லாத வஸ்து. அதைக் கொடுத்தபடியினாலே மற்ற நாசவஸ்துவைக் கொடுக்கிறது சரியன்று. இதற்குத் திருஷ்டாந்தம் கற்பக தருவைக் கொடுத்தபேருக்குக் கன்னாடியிலே பிரதிபலித்த முத்துக்கண்டசரம் கொடுக்கிறேனென்றவன் மூர்க்கனல்லாமல் பிரதியுபகாரியல்லன். அகங்காரமென்கிற மதம் சுவாமியவர்களுடைய பார்வையினாலே அந்தக்ஷணமே அற்றுப்போயிற்று. இப்படிப்பட்ட குருசுவாமிக்குச் சிஷன் என்னசெய்யப்போகிறான். மூடனுக்குக் குருசிங்காசனங் கொடுத்தாற்போலவும் தரித்திரனுக்கு ராஜசிங்காசனம் கொடுத்தாற்போலவும் ஜீவனுக்குத் தத்துவங் கிருபைபண்ணிற்று. ஆனபடியினாலே குருவுக்கு உடல், பொருள், ஆவி மூன்றுங்கொடுத்தாலுங் கிஞ்சித்மாத்திரமாகுமோ அல்லவோ தெரியாது. இப்படிப்பட்ட சற்குருமூர்த்தியை யறிந்து உபதேசமாகியும் அநுதினமும் ஆசாரியப்பிரவர்த்தியில்லாமல் வஞ்சனைபண்ணினவன் அதோகதியாய்ப்போவான். இந்த நாசத்துவமாயிருக்கிற உபசாரபதார்த்தங்களை எவன் குருவுக்கு வஞ்சனைபண்ணுகிறானோ அவன் போகிற அதோகதியை என்ன சொல்லப்போகிறோம். என்னுடைய அவஸ்தையென்கிற அஞ்ஞானம் நிமிஷத்திலே அறுத்துப்போட்டீர். நீர் பவரோக வைத்தியர். நான் பவரோகத்திலே தவித்தேன். தேகப்பிரமைத்திலே இளைத்தேன். இந்தச் சமயத்திலே தேவரீர் வந்து உபசரித்தீர். இது மகா ஆச்சரியம். ஒருவனுக்குப் பிராணஹானிவாராமற் காப்பாற்றினவருக்குப் பிரதியுபகாரமென்ன பண்ணினாலும் சரியன்று. பவரோகமென்கிற கோடானகோடி ஜனனமரணங்களை நிவாரணம்பண்ணி நிஜவஸ்துவைக்கூட்டின குருசுவாமிக்குப் பிரதியுபகார மென்னசெய்கிறது.

அவருடைய சேவைசெய்கிறதே குருகடாக்ஷம். பலிக்கிறதற்கு ஒரு அடையாளமுண்டு. அதென்னவென்று பிரவுடரானபேர் அறியவேண்டும். தினந்தோறும் குருபக்தியே அதிகமாய் வரும். இதுவே அடையாளம். மந்திர யந்திர உபதேசம்பண்ணுகிற குரு வீட்டுக்கு வீடு மிகவும் உண்டு. சமுசாரசமுத்திரத்தைக் கடக்கப்பண்ணுகிற பேரில்லை. ஆனபடியினாலே பரப்பிரம்மசாக்ஷாத்காரஞ் செய்கிற குரு கிடைப்பது மகாகடினம். அந்தச் சற்குருவினுடைய கடாக்ஷத்தினாலே சம்சாரம் அந்தக்ஷணமே தூளியாய்ப்போம். கைவல்யமுடைத்தானவர் தேவரீரொருவரேயல்லாமல் திரிபுவனத்திலுமில்லை. உம்முடைய கிருபாதிருஷ்டியினாலே சம்ஸாரமென்கிற தாரித்திரிய முறிந்து ஓடிப்போயிற்று. குருசக்கரவர்த்தி! சம்சாரபாவ மறந்து மகாசுகத்திலே மக்னனானேன். உம்முடைய அநுக்கிரகமுண்டானபடியினாலே சுவாமி எனக்கு முதலிலிருந்த சுகமே பூரணமாயிருக்க அநுக்கிரகிக்கவேண்டும். நிரந்தரமுமதுவே நானாயிருக்கவேண்டும். சுவாமி! அந்தச் சுகம் அப்படியேயிருக்கச் சம்யக்ஞானத்தினாலே அறிகிறதற்கு உம்முடைய கிருபாபூர்வகமாகக் கட்டளையிடவேண்டுமென்று பிரார்த்தித்த சீஷனைப்பார்த்துக் குருவென்கிற காமதேனு சீஷனென்கிற கன்றுக்கு அமிர்ததாரை வருஷித்தாற்போல அந்த குருசாமி சொல்லுகிறார். அப்பா! நீ பூரணசந்திரன் நம்முடைய போதையென்கிற பாற்கடலை உப்பு என்று சொல்லும்படி பண்ணினாய். உன்னுடைய குணத்துக்கு யானைச் சரியாய் எண்ணுகிறது. இனிச்சொல்லுகிறோம். உன்னுடைய நிஜமானுஷத்திலே திடமாயவதானிக்கவேண்டும். உனக்கு மகாசுகம் லபித்தது. அது குரு சேவையினாலே லபித்தது. அந்தப் பரப்பிரம்ம சுவாநுபவத்தினாலே பார்த்துக்கொள். அந்த அநுபவம் வாக்குமனத்துக்கு மெட்டப்படாதது. பாவனையினாலும் பாவிக்கப்படாதது. சுயம் பிரகாசப் பிரம்மாநந்தம் உனக்கே கிடைத்தது. அது ஸ்தூலமுமன்று. சூக்ஷமுமன்று. மகாசுகசொரூபம். ஈசுவராவதாரம். அதே உன் சொரூபம். அதே பரப்பிரம்மம். அகண்டபரிபூரணம். வேதாந்தத்துக்கும் அசக்கியம். அது அநுபவித்ததின்பேரில் சகல விஷயங்களும் விரசமாய்த்தோன்றும். அதற்கு நித்திரை சாக்கிரமில்லை. கிரியாயோகங்களில்லை. சுகத்திலே சுகம் அநுபவிக்குந் தன்னைத்தானே அவ்விடத்தி

லே நீ நானென்கிறதில்லை. காலத்திரயமுமில்லை. பிரிய நிர்வாணத்தி
லே லயமானாய். உண்டென்கிற மேகம் நிமிஷத்திலேதானே யில்லாமற்
போயிற்று. அந்தச்சிதாகாசநிர்மலம் உனக்குப்பிரகாசமாயிற்று. இ
துதான் மகாவாக்கிய இரகசியம். இது ஜீவேசுவரசமாசம். இந்த
அநுபவத்தினாலே சம்சாரதுக்கம் விஷமாயிருக்கும். இதுவே சிவசக்தி
சையோகம். இதுவே ராஜயோகமென்று சொல்லப்படும். இதனாலே
பவரோக மரித்துப்போம். இது நிர்விகற்பசமாதி. இது பவரோகிக
ளுக்குத் திவ்விய ஔஷதம். விஷயதுக்கமாகிய வியாதி இதிலில்லாமற்
போகாது. இந்த ஔஷதம் கிடையாத லாபம். உனக்கே கிடைத்தது.
அதே பரமாத்மா. இப்படிப்பட்ட பிரம்ம ஸ்திதிக்குத் திடசித்தனாக
வேண்டும். உன்னுடைய அவதான சித்தவிருத்தியில் நீயே அவதா
னித்துப் பார்க்கவேண்டும்; இந்த விஷயத்துக்கு ஓர் உபாயமுண்டு.
எதில் பதார்த்தரூபம் தோன்றுகிறதோ அதுவேது. அதை மித்தியா
ரூபமென்று விட்டுவிடு. முதல் விஷயவிரக்தனாகவேண்டும். சித்தத்
தில் நானாவிகற்பமும் பிறவாமலிருக்கவேண்டும். அநந்திய பாவத்தி
னாலே ஈசுவரபக்தி பண்ணவேண்டும். குருவினுடைய அநுக்கிரக
முண்டான புருஷன் ஏகாந்தமே சேவிக்கவேண்டும். குருநிர்குண
பரமபுருஷசிந்தை பண்ணவேண்டும். தனக்கு எந்த விருத்திராகாத
பந்தோன்றினாலும் அந்தவழி போகாமல் அதற்குத் தடைசெய்யா
மானால் அது கெட்டுப்போம். மனத்தின்வழியே போனால் சம்சார
துக்கம் போகாது. அதைவிட்டுத் தான் வேறானால் அத்தியந்தசுகந்
தப்பாது. அதுநிமித்தியமாய்ச் சங்கற்ப மெந்தவழிபோனாலும் அந்
தந்தவழிபோகாமல் நிராலம்பத்திலே திருஷ்டியை நிறுத்தவேண்டிய
து. எந்தவிஷயந் தன்மனத்திலே தோற்றினாலும் அது மித்தையெ
ன்றே அறியவேண்டும். அப்படியானால் சகல விஷயத்திலேயும் அச
ங்கத்துவம் பிறக்கும். நானிப்படியிருக்கவேண்டுமென்று அந்தமட்டு
க்குப்போனால் அதே சீவாங்குரம். அதை விசாரித்துத் தத்துவம்
நிலவரம்பண்ணிப் பார்த்தால் நிராலம்பத்திலேயிருந்து அந்த ஜீவாங்
குரம் உற்பத்தியாயிற்று என்பது வெளியாகும். அந்த நிராலம்பம்,
நிராகாரம், நிரஞ்சனம், நிர்விகாரமே ஜீவேசுவரர்களுக்கு ஜென்ம
ஸ்தானம். ஆனபடியால் அவ்விடத்திலே லீனமாகவேண்டும்.

பத்திராதிபர்.

வான்மீகரும் கம்பரும்

(தொடர்ச்சி)

அப்பாரமாகிய வில் ஒரு பெட்டியிலிருந்ததென்பது, குடத்துக்குள்ளே
கடலிருந்தது என்பதோடொக்குமாதலால் அவ்வாறு கம்பர் கூறவில்லை.
அன்றியும் அநேகமாயிரம் வலியர் இடையிடையே தண்டுகளை யடுத்து
வில்லைத் தாங்கிக்கொண்டு வருகையில் நகரத்து மக்கள்கூடிப் பலவாறு தமக்
குள் விவகரிப்பதாக விளக்குகிறார். வில்வளைத்தலை மேற்கொண்டு அரசர்
இங்கு வருவது நெடுநாளாக இல்லையாதலால் வில் வெளிவருவதைக்கண்ட
மக்கள் கூட்டங்கூடி விவகரிப்பது சகஜமேயாம். அவர்கள் தம்முட் பேசிக்
கொள்வது வருமாறு:— அரசன் வில்லை ஏன் கொண்டுவரச் சொல்லினன்;
மதிகெட்ட மன்னவர் யாரேனும் வந்திருக்கிறார்களோ?; விதியிருந்தால்
முடிக்கலாம்; சீதைக்கு இவ்வில்லியல்பு தெரியுமோ? (தெரிந்தால் இதனை
வளைக்கும் வலியோன் இல்லையென்று உயிர்விட்டிருப்பாள்). இதுஒரு பொன்
மயமான மலையே யாகலின் வில்லெனபது வஞ்சகம்; இதனை நாணேற்றி
யெய்த வீரன் யாரோ?; இது பிரமன் தபோபலத்தாற் சிருட்டித்ததாக வே
ண்டும்; மேருவைத்திரட்டினதோ: கடல்கடைந்த மந்தரமோ? ஆதிசேட
னோ? வானவில் பூமியில் வீழ்ந்ததோ? இவ்வில்லினின்றும் எவும் அம்பை
எதன்மேற் செலுத்துவது? நமது ஜாகருக்குத் தமதுபுத்திரிமீது அன்பு
இல்லை; (தான் பெருமையால்). சக்ரபதியான திருமாலாயின் நிச்சயமாக
முடியும்; எல்லாம் விதிசெய்த விபரீதம்; என்பதாம்.

நகரத்தார் இவ்வண்ணம் பேசிக்கொள்ள, வில்லைத் தாங்கிவந்தவர்கள்
அதனைக் கீழேவைத்தபோது அதைக்கண்ட வேந்தரெல்லோரும் கைநடுக்கங்
கொண்டு நிற்க அப்போது மத்தகஜம்போன்ற இராமரது கம்பீரத்தையும்,
மனதிற்கு வேதனை தருகின்ற வில்லையும் நோக்கித் தன் புத்திரி ஜானகி கதி
என்னாகுமோ என்று கவலைப்படுகின்ற ஜனகராஜனுடைய இருதயத்தைத் தெ
ரிந்துகொண்டு சதாநந்தமுனிவர் பேசத்தொடங்குவதாகக் கம்பர் கூறுகின்றார்.
எல்லாவற்றையும் ஜனகராஜனே சொல்லுவதாக மேற்காட்டியபடி வான்மீ
கம் கூறுகின்றது. இந்தச்சமயத்தில் சதாநந்தர் பேசுவதே உசிதமும், கவலை
யின் மூழ்கியிருக்கும் ஜனகர் பேசுவது உசிதமாகாமையும் உய்த்துணரத்தக்க
து. அன்றியும் ஸ்ரீராமருடைய வடிவழகாலும், புஜபலபராக்கிரமத்தைக்
கேள்வியுற்றதாலும் இவனே சீதைக்கு மணாளனாகத்தக்கவனென்று கருதியி
ருக்கும் ஜனகர், ஸ்ரீராமரிடத்தில் இந்த வில்லைத் தேவ தானவ ராக்ஷச சாதி
யோராலும் வளைக்கமுடியாதபோது மனுஷரால்முடியுமோஎன்று கூறலாமா?
அவர்க்கு உற்சாகமூட்டிப் பேசுவதன்றோ முறை. அல்லாமலும் வில்லைக்
கொண்டுவந்து காட்டுமுன்னரே அதன் வரலாற்றையும், வலிமையையும் ஜன
கர் கூறுவதால் அதைக்கேட்டு ஸ்ரீராமர் ஒருக்கால் அத்துணை வலிய வில்லைத்

தாம் பார்க்கவிசையாமல் வேண்டாமென்பாரேல் அம்மலைபோன்ற வில்லைக் கொண்டுவரும் சிரமம் மிச்சமாகுமென்றெண்ணினார் என்று கொள்ள இடந்தருகின்றதே!

சதாநந்தர் வில் வரலாற்றையும் பிராட்டி தோற்றத்தையும் பின்னர் நிகழ்ந்தவற்றையும் மிகவிரிவாகக்கூறிக் கடைசியில் "ஒன்றுமினி மணமுமிலை என்றிருந்தோ மிவனேற்றின், நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதாகாதென்று" கூறி முடித்தார்.

இதனால் இந்த மகாபுருஷனுக்கு வில்லை வளைத்தலாகிய நிபந்தனையின்றியே சீதையைக்கொடுக்கச் சித்தமாயிருக்கிறோமென்று வெளிப்படையாகச்சொல்ல வாய்கூசியே "சீதை நலம்பழுதாகா" தெனக்கூறினரென்பது போதரும்.

சதாநந்தர் கூறியவெல்லாம் கௌசிகர் முறையேயெண்ணித்தமது சடைமுடியசைத்துப் போரேறனைய ராகவன் முகத்தைப்பார்த்தார். சடைமுடியசைத்தலாற் குறிப்பிட்டவை யாவையெனின்:—ஐயா சதாநந்தரே உங்களுக்கு மணவிஷயம் அவசரமென்றால் எமக்கென்ன, உங்களவசரத்துக்காக நாங்கள் கௌரவத்தாழ்வான செயலுக்குடம்படமாட்டோம், எங்கள் ரகுகுலதிலகனைக் கண்டபின் உங்கள் நிபந்தனை தளர்ச்சியடைந்து விட்டதோ? ஏனையர் வந்து வில்லை வளைக்க முயன்றாற் பயனென்ன? உரியவன் வந்தாலன்றோ மணமுடியும் என்பனவாதியாகப் பலதாற்பரியங்கள் தோன்றுமாறு காண்க.

இனி ஸ்ரீராமனை யழைத்தாரென்னாமல் "போரேற்றின் முகம்பார்த்தான்" என்றதனால் ராகவனும் முனிவர் எப்போது வில்லைவளைக்கக் கட்டளையிடுவாரென்று கவலையோடெதிர்பார்த்து நின்றமை புலப்படும். கௌசிகர் இராமர் முகத்தைப்பார்த்தபோது பலவிஷயங்களை நினைத்து அவற்றையவர் குறிப்பாலுணர்ந்து கொள்ளவேண்டிப் பார்த்தாரென்பதும் பெறப்படும் இதனை

"வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்"

என்று கூறுகிறார் கம்பர். மாதவத்தோன் (கௌசிகர்) நினைந்தவை யாவையெனின்:—ஸ்ரீராமா! இவ்வில்லை நீ வளைப்பது அதிக ஆச்சரியகரமாக இருத்தல் வேண்டும். சிறிது சிரமப்பட்டுச் செய்யினும் சிறப்பின்று. உன்னையழைத்துவந்த எனக்கும் பெருமையின்று. அன்றியும் தசரதர் என்னை

லேசாக விடார். ஆகவே எல்லாவகையிலும் யாவர்க்கும் பெருமைவரும்படி பார். என்பன வாதியாம்.

சிலையை நோக்கிய ரகுவீரன் விரைந்து குபீரென்று எழுந்தமையை

"பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
யெழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்"

என்று உவமையுணர்த்தியுரைக்கின்றார். அக்கினி முன்னர் எப்பொருளும் அழிவது ஒருதலையாகலின் "கனலென்ன" என்றார். காட்டுத்தீ சமைத்தீ முதலியவற்றினின்றும் இனம் விலக்கி ஓமத்தீ எனக்குறிப்பித்தனர்; மங்கலப்பெருக்கத்திற்கோர் அறிகுறியாகலின். வில்லின் பெருமையைக்கேட்டும் மனத்தே சிறிதும் அச்சமின்றியெழுந்த பெருமிதந்தோன்றப் "பொங்கியெழுந்த" என்றார். நெய்யாகுதி நேருமளவும் கனிந்துகொண்டிருந்த தழல் நேர்ந்த மாத்திரையில் பொங்கியெழுதல்போல முனிவர் கட்டளை பிறக்குமளவும் மூண்டுகொண்டிருந்து பிறந்தவுடன் விரைந்தெழுந்தமைதோன்ற "நெய்யாகுதிவாய்வழிபொங்கியெழுந்த" என்றார்.

இனிக்கதைத்தொடர்ச்சிபற்றி யாதாயின், பிராட்டியாரைக் கண்டு விளைந்த காதலென்னுந்தீயானது ஸ்ரீராமபிரானுடைய இதயமென்னும் குண்டத்திலிருந்து, சதாநந்தர் கூற்றாகிய விறகைப்பற்றி, தனது நினைப்பென்னும் ஊதை தாக்கக்கனிந்து, முனிவர் கட்டளையாகிய நெய்பாலோங்கி யெழுந்ததென்று அமைதியோடு சிறந்துநிற்பது காண்க.

சீதாதேவியால் அன்புடைய பல மங்கையர் அங்குவந்து ராகவனுடைய பேரழகைக்கண்டு மயங்கி நிற்பாராயினர். இத்தகுதியில் ஸ்ரீராமன் ஒருவில்லை முறிக்குமுன்னமே காமன் அநேகவில்லை முறித்தானென்று கூறி ஐயனுடைய அழகின்மிகுதியைக் குறிப்பிக்கின்றார் கம்பர்.

அங்குவந்த மங்கையர் ஸ்ரீராகவனைச் சீதைக்குத்தக்க நாயகனாக்கண்டு பின் வருமாறு கூறுகிறார்:—வில்லோ வளைக்கமுடியாததாயிருக்கிறதே! இப்புண்ணிய புருஷன் பாணிக்கிரகணம் பண்ணாவிடில் சீதைவாழ்வு என்ன வாழ்வு! இந்த வில்லை இப்புருஷன் வளைக்காவிடில் சீதையும் நாமுந்தீயிற்குதிப்பதே முறை; இந்த அழகன் வந்தால் சீதையை மணம்புணர்த்தலைவிட்டு, ருத்திர தனுசை வளைக்கச்சொல்லுதல் பேதைமையாகும்; கௌசிகருக்கு வெட்கமில்லை; ஜநகரிலுங்கொடியாரில்லை; இம்மானவன் வில்லை வளைக்காவிடில் பருவம்வளர்ந்த சீதை (மீனதனத்தவள்) நிர்ப்பாக்கியையே. இவ்வாறு பெண்கள் விவகரிப்பது கதைப்போக்குக்குச் சுவையூட்டவில்லையா?

எழுந்த வீரன் வில்லைநோக்கி நடந்த நடையினது காம்பீரியத்தை

"மாக மடங்கலு மால்விடை யும்பொன்
னாகமு நாகமு நாண நடந்தான்"

என்று வருணித்து, அவ்வில்லையெடுத்த திறத்தை

"... ... சீதை யெனும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை யிதென்ன வெடுத்தான்"

என்று கூறியிருக்கிறார். சீதை தனக்குச்சூட்டும் மெல்லிய மலர்மாலையைக் கசங்காதெடுத்தல்போல, என்று உவமித்தலால் அநாயாசமாக வில்லையெடுத்தமை பெறப்படுவதோடு அவ்வில்லுக்கு ஊனம் வாராதபடி கருதி யெடுத்தமையும் பெறப்படும்; நிபந்தனையை மீறி முறித்துவிட்டால், தான்கண்டு காதல்கொண்டு வருந்தும்படிசெய்த சீதையைக் கொடாது ஜநகன் மறுக்கவுமிடமாமென்று ஸ்ரீராமன் கருதினனென்பது நயம்பயப்பதாகலால் இன்னும் இங்கே காட்டிய உவமையால் வில்லை வளைப்பது நிச்சயமென உய்த்துணரவைத்தலுமாயிற்று.

இனி வில்லைக்கையிலெடுத்ததன்மேல் நிகழ்ந்ததை [illegible] பார்த்திருந்தவர்கள் ஐயன் வளைத்ததையும், நாண்பூட்டியதையும் கா[illegible]; வேகமிகுதியால் ஒருவரும் ஒன்றுமறியார்; மற்றறிந்த[illegible]வெனில், "கையா லெடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்" என்று கூறியிருக்கிறார்.

இங்கே வில்லையிறுத்தது (முறித்தது) என்று கூறாமல், இற்றது (முறிந்தது) என்று கூறியிருக்கிறார். முறித்ததென்றால் சிரமப்பட்டமை தொனிக்கும். முறிந்ததென்றதனால் ஐயன் வலிக்கு நிற்கமாட்டாது முறிந்ததென நயம்பட நிற்கும். பரசுராமன் பின்னே "வெண்மதிப், பாதியான் பிடித்த வில் பற்றப் போதுமோ" எனத் துதித்தமையால் இக்கருத்தே புலப்படும். மற்றையர் கூற்றாகவருமிடங்களிலும் இவ்வாறே கூறியிருக்கிறார்:— வில் விஷயத்தைச் சீதைக்குத் தெரிவிக்கப்போனவள் "வெய்தவை நகைக்குற முறிந்து வீழ்ந்ததே" என்றும், மணவோலைகண்ட தசரதர் "மூவரில், இற்றபே ரொலிகொலன் றிடித்ததிங் கென்றான்" என்றும் கூறியதாகச் சாதித்திருக்கிறார்.

இச்சுவைய நயங்கள் கம்பர் வாக்கில் மிகப்பல. அவற்றையெல்லாம் நுண்ணிதினாராய்ந்து கண்டெளிப்படுத்துவதினிதுவேறில்லை. ஆங்காங்கு எம்மாலியன்றவரையுங் காட்டுதும்.

வில்முறிந்தகாலை, உண்டாகிய அச்சத்தையும், ஜநகன் மகிழ்ச்சியையும் மாத்திரங்கூறியுள்ளது வான்மீகம்.

கம்பர், மூவுலகத்தார்க்கும் உண்டாகிய அச்சத்தையும் தேவர், முனிவர் இன்னோர் மகிழ்ச்சிச் செயலையும், நகரத்துமக்கள் களிப்புக்கைமிகுந்து, மாலையுமிழையுஞ்சாந்துஞ்சுண்ணமும் வாசநெய்யும், வேலைவெண்முத்தும் பொன்னும்காசும் நுண்டுகிலும் வீசிக்கொண்டாடிய களியாட்டையும், ஜநகன் அள்ளியிட்ட தானத்தையும், உசிதமான பிறவற்றையுங் கூறிப்பின்னரும்

"தயரதன் புதல்வன்என்பார் தாமரைக் கண்ணன்என்பார்
புயலிவன் மேனியென்பார் பூவையும் பொருவும்என்பார்
மயலுடைத் துலகமென்பார் மானிடன் அல்லன்என்பார்
கயல்பொரு கடலுள்வைகும் கடவுளே காணும்என்பார்"

"நம்பியைக் காணநங்கைக் காயிர நயனம்வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறுங் குறிசிற்கு மன்னதேயாம்
தம்பியைக் காண்மின்என்பார் தவமுடைத் துலகமென்பார்
இம்பர்இந் நகரிற்றந்த முனிவனை யிறைஞ்சுமென்பார்"

என்று சீதைக்கு வாய்த்த மணாளனைப் பாராட்டும் சிறப்பையும் விரித்திருக்கிறார். இவற்றிலொன்றும் மிகையாகத் தோன்றாமை காண்க.

(தொடரும்)

சாமி-சரவணபிள்ளை.

சைவ சித்தாந்தம்.

(தொடர்ச்சி)

ஆன்மாவின் உண்மை யுணர்தற்கு இவற்றை யிங்ஙனம் பகுத்தறிதலும் ஒரு சாதனமெனக்கொள்க. இன்னும் ஆன்மாச்சார்ந்ததின் வண்ணமாய் வசித்திடவருமாற்றிற்குச் சருவஞானோத்திரத்தில் அவ்வச்சார்பு விசேடப்பற்றிப் பூதான்மாமுதலறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்தும் ஓதியதூஉம் ஈண்டு உய்த்துணர்ந்து உணர்ந்துகொள்க, அஃது எங்ஙனமெனில் கூறு

னும். சருவஞானோத்தரத்தில் பசுவும், பாசமும் அதிகாரஞ்செய்து நிற்பதாகிய பதியும், அதிகாரத்தின் ஒழிந்து தன்னியல்பினிற்பதாகிய சிவமும் எனப்பதார்த்தம் நான்கென்றெடுத்துக்கொண்டு அவற்றிற்குத் தனித்தனி யிலக்கணம் உணர்த்திப் பின்பு அதுகேட்ட அறுமுகக்கடவுளுக்கு அங்ஙனம் அப்பிரமேயமாய் ஒன்றேனும் உவமிக்கப்படாததாய் அதிசூக்குமமாய் வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தை அறியுமாறு எங்ஙனமென்னும் ஆசங்கை நிகழாமைப்பொருட்டுச் சிவப்பொருள் அத்தன்மைத்தாயினும் அதனையறிதற்கு உபாயங்கூறுகின்றாம். அவ்வுபாயம் வாதிகள் எவராலும் அறியப்படாததாய்க் குருபரம்பரையினறியப்படுவது. ஒருவருக்கும் யாங்கூறினேயல்லேம். அதனை நீ கேட்பாயாகவென்று அதன் பெருமை யெடுத்துக்காட்டி அநாதிமுத்தராய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளும் அத்தன்மையுடைய சிவனே நானெனச்சிவோகம் பாவனைசெய்யுமாறும் அவ்வாறன்றித் துவித பாவனை செய்தாற்படுமிழுக்கும் விளங்க விரித்துணர்த்தித் துவிதபாவனையைக் கைவிட்டுச் சிவோகமென அத்துவித பாவனை செய்வோன் ஏகதேசமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுவிளங்கிச் சிவனையறிந்து தான் சிவனேயாவனெனச் சிவனை யறிதற்கு உபாயங்கூறிப் பின்னதுகேட்ட அறுமுகக்கடவுளுக்குமேல் உபதேசங்கூறும் வழியும் இலக்கணம் கூறும் வழியுஞ் சிவனும் ஆன்மாவும் இருபொருளென வைத்தோதுதலிற் சிவனின் வேறாகிய ஆன்மாச் சிவோகமெனப் பாவிக்கும் அத்துவித பாவனையாற் சிவனே தானாக ஐக்கியமாமாறு எங்ஙனமென்று ஆசங்கை நிகழாமைப் பொருட்டு ஆன்மாத் தன்னியல்பை யறியாது பசுத்துவத்தோடுகூடிய வழிப்பசுவாய்நின்றான். அதுபோலத் தன்னையறிந்து சிவத்துவத்தோடுகூடிய வழிச்சிவமாய் நிற்பதற்கு ஐயமில்லை யாதலாற் றன்னையுந் தலைவனையும் பராபரபேதத்தானுந் தூலசூக்கும பேதத்தானும் எப்பொழுதும் பயின்றறிதல் வேண்டுமென்றோதி அற்றேல் ஆன்மாவினியல்பு தனித்து நில்லாது பசுத்துவத்தோடு கூடிய வழிப்பசுவெனவுஞ் சிவத்துவத்தோடுகூடிய வழிச்சிவமெனவும் பலதன்மைப்பட்டு நிற்குமாறென்னையென்று மீளவும் ஐயுறுமைப்பொருட்டு (சுதவா) வென்று எடுத்துக்கொண்டு தெளிவு பிறவாது மீளமீள மயங்குதற்கு ஏதுவாய வார்த்தைகளை விகற்பித்து இங்ஙனம் பலவாய்ச்சொல்லி யென்னையெனக்கூறியொழித்து எல்லாச் சங்கைகளு நீங்கித் தெளிவு பிறத்தற்கேதுவாய்த் தொகுத்தொருவார்த்தையி னுணர்த்துவான் புகுந்து (சர்வேஷாம) என்றருளிச்செய்தார். இதன் பொருள் ஆன்மா அங்ஙனம் இருதன்மைப்படுமாறு என்னையென்று ஐயுறுதவேல். எல்லாப்பொருளின் றன்மைகளும் ஆன்மாவுக்கு உளவாம். அஃதெங்ஙனமெனின் ஆன்மா யாதனை யாதனைப் பற்றினான் அதனதன்சுபாவமே தன் சுபாவமாந் தன்மையுடைமையால் அதுவதுவாயே நிற்பன் என்று இங்ஙனம் ஆன்மாவை யறியுமாறு தொகுத்

துக்கூறினுங்கண்டுகொள்ளென்பதாம். இங்ஙனந் தொகுத்துணர்த்திப் பின்னும் இவ்வாறறியும் ஆன்ம ஞானத்தின் பெருமையும் அதனாற் பெரும்பேறும் அதனை யறிதற்கு உபாயமும் அறிந்தானது பெருமையும் விரித்துக்கூறி யிதற்கு மேற்சொல்லற்பாலது சிறிதுமில்லை யாகலான் மனோவிகற்பங்களை யொழித்து இங்ஙனந் தன்னுண்மையறிந்து உபாயங்களைச் செய்வோனிங்கே சீவன்முத்தனாய் அகம்புறமெங்கும் வியாபித்துத் தற்றுமதருமியாய்த் தற்றுமமெனப்பட்ட முற்றுணர்தல் முதலிய வெண்குணங்களுமுடையனா யங்ஙனஞ் சிவத்துவத்தைப்பெற்றுச் சிருட்டிப்படுந்தன்மை முதலியனவின்றிச் சிவசமமாவன். இத்தன்மையுடையானுக்குத் தவஞ் செபந் தியானம் பூசை முதலியனவொன்றும் வேண்டாம் சத்தியஞ்சத்திய முக்காலுஞ்சத்தியம் இதற்குமேலறியற்பாலன வொரு நூலினுமில்லையென வலியுறுத்திப் பின்னும் ஆன்மாவெல்லாவற்றினு மதுவதுவாய் நிற்குமாற்றைப் பூதான்மா முதல் அறுவகைப்படுத்து விரித்து இன்னுங்கூறுதுங் கேட்பாயாகவென் றெடுத்துக்கொண்டு பூதபரிணாமமாகிய வுடம்பினியல்புகளும் ஆன்மா அவ்வுடம்பைப்பற்றிய வழிப்பூதான்மாவென நிற்குமாறும் அகத்தின்கண்ணவாகிய வாக்குகளினியல்பும் ஆன்மா அவற்றைப்பற்றி அந்தரான்மாவென நிற்குமாறும், சூக்குமபூத முதலிய தத்துவங்களினியல்பும் ஆன்மா அத்தத்துவங்களைப்பற்றிய வழித்தத்துவான்மாவென நிற்குமாறும் அத்தத்துவங்களுள்ளும் ஆன்மா எந்தஎந்தத் தத்துவங்களைப் பற்றினான் அந்த அந்தத் தத்துவமயமேயாய் நிற்பனென்பதூஉம் ஆன்மாப் போத்திருத்துவமெய்திப் புருட தத்துவமென நிற்குமியல்பும் அங்ஙனம் புருட தத்துவமாய் நின்று பிரகிருதி குணங்களைப்பற்றி யின்பத்துன்பங்களை நுகரும்வழிச் சீவான்மாவென நிற்குமாறும் சுரர் நரர் விலங்கு புள்ளுத்தாவரம் எல்லாவற்றிற்கும் அதிதெய்வமந்திரங்களுளவெனவுந் தாவரசங்கமங்களுள் மந்திரங்களான் அதிட்டிக்கப்படாதவுயிர்களில்லை யெனவும் மந்திரங்களை யுச்சரிக்கு முறைமை யிவ்வாறெனவும் இவ்வாறு மந்திரங்களினியல்பும அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மாப் படிகம்போல அவ்வம்மந்திரமயமேயாய் மந்திரான்மாவென நிற்குமாறும் தன்னின் வேறாகியவிவ்வைவகைப்பெயரு நீங்கியவழி மேற்கூறிய அத்துவித பாவனையாற் பரமான்மாவென நிற்குமாறும் விரித்துந்தொகுத்துங்கூறி ஆன்மாச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்குமென மேற்கூறியதனை மீளவும் வலியுறுத்தி இவ்வறுவகையுள் ஏனையவெல்லா முபாதிபற்றிச் செயற்கையாதலும் அத்துவித பாவனையாற் பரமான்மாவென நிற்றல் சித்தென்னுஞ் சாதிப் பொதுமைபற்றிய வியற்கையாதலுந் தெரித்துணர்த்தி யிங்ஙனமாகலா னத்துவித பாவனையுடையோன் ஞானக்கண்ணாற் சிவனை ஆன்மாவிற்கண்டு முழுதும் வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுடையனாய் அவ்வப்பொருளியல்பெல்லாமறிந்து மலவாசனை நீங்கிக் கேவலமாய் நின்று முடிவுகாண்டில்

லாப் பேரின்பத்தைப் பெறுவனென முடிந்தது முடித்துக்காட்டி யிங்ஙனஞ் சிகண்டருத்திரநாயனார் அறுமுகக்கடவுளுக்குச் சருவஞானோத்தரத்தின் ஞானபாதஞ் செவியறிவுறுத்தருளினர். இன்னும் இதனை யீண்டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக்கொள்க.

இன்னும் வரும்.

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

உ
சிவமயம்.

மதுரை திருக்கல்யாண மகோற்சவச் சிறப்பு.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.
திருச்சிற்றம்பலம்.

முத்தின் றாழ்வடமுஞ் சந்தனக் குழம்புநீறுந் தன்மார்பி னின்றுயங்கப்
பத்தியார்கின்ற பாண்டிமாதேவி பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர் மரகத மடுத்தாற்போ
லத்தனு ருமையோ டின்புறுகின்ற வாலவா யாவது மிதுவே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.
திருச்சிற்றம்பலம்.

முளைத்தானை யெல்லார்க்கு முன்னேதோன்றி முதிருஞ் சடைமுடிமேன்
முகிழ்வெண்டிங்கள், வளைத்தானை வல்லசுரர் புரங்கண்மூன்றும் வரைசிலையா
வாசுகிமா நாணாக்கோத்துத், துளைத்தானைச் சுடுசரத்தாற் றுவளநீறாத் தூ
முத்த வெண்முறு வலுமையோடாடித், திளைத்தானைத் தென்கூடற் றிருவால
வாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேனே.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்.
திருச்சிற்றம்பலம்.

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே.

திருச்சிற்றம்பலம்.

அநாதிமலமுத்த நித்தவியாபக சச்சிதானந்த ஷாட்குண்ணிய வாக்குமனாதீத கோசரமாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டுய்யும்பொருட்டுப் பெருங்கருணைத் திறத்தினாலே சகளநிட்கள வடிவமாகிய சுயம்புலிங்கத் திருமேனிகொண் டெழுந்தருளியிருக்கின்ற திவ்விய க்ஷேத்திரங்களுள் மேலானதாயும் விராட்புருடனுக்குத் துவாதசாந்த ஸ்தானமாயுஞ் சிவபிரான் அஷ்டமூர்த்தஸ்தலங்களுள் ஒன்றானதாயும் பராசத்தியினது அறுபத்துநான்கு பீடங்களுள் முதற்பீடமாய் விளங்கப்பெற்றுள்ளதாயும் அண்டங்களின் முடிவிலுள்ள மஹாகைலாசத்தில் விளங்குகின்ற இரசிதசபை, கனகசபை, இரத்தினசபை யென்னு மூன்றையும் பூலோகத்திலுள்ள எல்லா ஆன்மாக்களும் எளிதிற் றரிசித்து முத்திபெற்றுய்யும் பொருட்டுச் சிவபெருமான் பெருங்கருணைத் திறத்தினாலே இக்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளதினால் பூலோககைலாசமென வழங்கப்பெற்றுள்ளதாயும் எல்லாமழியும்படி வருகின்ற மகாசங்கார காலத்தில் வேதாகமங்கள் அழியா திருத்தலைக்கருதிச் சிவபெருமான் ஆணைப்படி இக்ஷேத்திரத்துக்கு வந்து கடம்ப விருக்ஷமும் வில்வ விருக்ஷமுமாய் முறையே திருவுருக்கொண்டு சொக்கலிங்கப்பெருமானுக்கும் மீனாக்ஷிதேவியாருக்கும் நிழலைச் செய்துகொண்டிருக்கப் பெற்றுள்ளதாயும் அடியார்கள்பொருட்டு அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்யப்பெற்றுள்ளதாயும் அரிபிரமேந்திராதி தேவர்கள் பூசித்து வரங்கள் பெற்றதலமாயும் தலவிசேடம், தீர்த்தவிசேடம், மூர்த்திவிசேடமுள்ளதாயும் சைவசமயாசாரிய சுவாமிகள் செய்தருளிய தேவார திருவாசக முதலிய அருட்பாக்களைப் பெற்றுள்ளதாயும் விளங்குகின்ற மதுராபுரியென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் நிகழும் சோபகிருது நாமஸம்வத்ஸரம் மேடரவி கஉ-உ செவ்வாய்க்கிழமை துஜாரோகணம். அன்றிரவு மலையத்துவசன் றமகளிர்களுக்கு அரசாய் விளங்குந்தன்மைக்கிசைய விலங்குகளுக்கரசாய் விளங்குஞ் சிங்கவாகனத்தில் மீனாக்ஷிதேவியாரும், போகமோக்ஷங்களைக்கொடுக்கின்ற தாதா இவரேயன்றி வேறொருவரு மில்லையென்பதை மயக்கமின்றி யாவருமுணரக் கொடைவழங்குங் கற்பகத்தருவில் சோமசுந்தரக் கடவுளும் மாசிவீதி உற்சவங்கொண்டருளுதல்.

கங-உ காலை அம்மை, சுவாமி தங்கச்சப்பரத்தில் ஆரோகணித்து ஷை வீதி யெழுந்தருளுதல். அன்றிரவு அடியார்கள் செய்த குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கைக்கொண்டு அருள்புரிகின்றவள் என்பதை விளக்கும் பொருட்டு ஜலத்தை நீக்கிப் பாலையுண்ணும் அன்னவாகனத்தில் அம்மையும், பூதநாதர் என்ற பெயருக்கிசைய பூதவாகனத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

கச-உ காலை மேற்படி சப்பரத்தில் ஆரோகணித்து வீதிகொண்டருளுதல். அன்றிரவு, ஞானமயமாகிய பாலையூட்டி மலப்பிணியை நீக்கிக்

காக்கின்றவள் என்பதற்கிசையக் காமதேனு வாகனத்தில் அம்மையும், கைலாயத்தை நினைந்து அடையவேண்டுமென்ற விருப்பத்தை யாவரும்கைக் கொள்ளக் கைலாய வாகனத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

௧௯-௳ காலை மாலை யிரண்டினும் சுவர்ணத்தாலாகிய சிவிகையில் ஆரோகணித்து உற்சவங்கொண்டருளுதல்.

௨௰-௳ காலை மேற்படி சப்பரத்தில் எழுந்தருளுதல். அன்றிரவு, வேதம் குதிரையும் அதன் பொருள் சத்தியும் ஆகும் என்பதை யாவரும் எளிதில் உணரும்பொருட்டுக் குதிரை வாகனங்களில் அம்மையும் சுவாமியும் எழுந்தருளி வீதிகொண்டருளி வந்தபின்பு, திருமுருகன்பூண்டியில் சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுச் சிவபெருமான் செய்தருளிய வேடர்பறி என்னும் லீலையை நடாத்துதல்.

௨௰௧-௳ காலை மேற்படி சப்பரத்தில் வீதிகொண்டருளுதல். அன்றிரவு, அடியார் குழாங்களோடு ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான் எழுந்தருளிவர உலகத்திலுள்ள எல்லாப்பொருளும் சத்தியும் சிவமுமா யமைந்திருத்தலுக்கு இசைய வடிவத்தாயும் பருத்தாற்போல தரும விடபத்திலும் விஷ்ணு மூர்த்தியாகிய விடபத்திலும் முறையே அம்மையும் சுவாமியும் எழுந்தருளி ஆடிவீதி தென்பக்கத்திலுள்ள பண்டாரசந்நிதியவர்கள் மண்டபத்துக்கெதிரில் சமணரைக் கழுவேற்றுதலாகிய லீலையை நடாத்தி வீதிக்குச்சென்று அனைவர்க்குங் காட்சி கொடுத்தருளுதல்.

௨௰௨-௳ காலை பிக்ஷாடனர் வீதி கொண்டருளுதல். அன்றிரவு, உலகத்தில் எவ்வளவு கொடிய உயிரையும் காக்கின்றவள் என்பதற்கிசைய யாளி வாகனத்தில் அம்மையும், அடியார்கள் உள்ளக்கமலத்தில் வதிதலேயன்றி வடிவத்தின்கண்ணும் வதிதலை யாவருக்குங் காட்டும்பொருட்டு நந்திகேசுவரர் வாகனத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

௨௰௩-௳ காலை சுவர்ணப்பல்லக்கில் ஆரோகணித்து உற்சவங்கொண்டருளுதல். இரவு, மலயத்துவஜபாண்டிய மஹாராஜா தனது புத்திரியாராகிய தடாதகைப் பிராட்டியாருக்குப்பட்டாபிஷேகஞ்செய்து முடிசூட்டுதலாகிய லீலையை நடாத்தி வீதிக்கு எழுந்தருளுதல்.

௨௰௪-௳ காலை மேற்படி சப்பரத்தில் ஆரோகணித்து வீதிகொண்டருளுதல். இரவு, பொற்றிண்டேரில் தடாதகைப் பிராட்டியார் ஆரோகணித்து திக்குப்பாலகர்களை வென்று ஈசானதிக்கிற்சென்று நந்திகேசுவரரோடு யுத்தஞ்செய்து வென்று நிற்கையில் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளக்கண்

டவெல்லையில் தனக்குள்ள மூன்று தனத்தில் ஒரு தனம் மறையப் பிராட்டியார் யுத்தத்தன்மை நீங்கி நாணி நிற்கையில் "என்றுதொட்டு நீ சயங்குறித்தெழுந்து போந்தனையாமு மன்றுதொட்டு நம் மதுரை விட்டு உனைவிடாது அடுத்து வந்தனம்" உன்னை வேதவிதிப்படி சோமவாரத்தன்று திருமணம் புரிந்தருள எழுந்தருளுகின்றோம். நீ நின்னகர்க்குச் செல்லக்கடவாய் என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய வார்த்தையைக்கேட்டும், காஞ்சனமாலையார் திருமண நிச்சயார்த்தமாகக் கொடுத்தருளிய சீர்வரிசையாகத் திருமலைநாயக்கரவர்களால் ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகின்ற சீர்வரிசைகளை ஏற்றும் கோவிலுக்கு எழுந்தருளுதல்.

௨௰௫-௳ காலை தடாதகைப்பிராட்டியாரும் சோமசுந்தரக்கடவுளும் திருமணக்கோலம் பூண்டருளி கோவிலில் அங்கங்கே அமைக்கப்பெற்றுள்ள மண்டபங்களிற்றங்கி அங்கங்கு செய்யும் உபசாரங்களை ஏற்று மஞ்சள்நீராடி சித்திரைவீதி யெழுந்தருளி வந்து மூத்துராமய்யர் மண்டபத்தில் அமைக்கப்பெற்றுள்ள கன்னியூஞ்சல் ஆடப்பெற்றுப் பின்பு வேங்கடாசலஞ் செட்டியார் குமாரர் இராமநாதன் செட்டியாரவர்களால் செய்யப்பெற்றுக் கண்டவர்கள் யாவரும் இது தேவநிருமாணமேயென்று ஆச்சரியப்படும்படி விளங்குகின்ற கலியாணக் கொட்டகையினுள்ளே பிரவேசித்து அதற்கப்பால் "அங்கமாறுமே கால்களாய் முதலெழுத்தம்பொற்பீடிகையாகித் துங்கநான்மறை நூல்களே நித்திலத்தொடைத்தசைதாம்பாகி யெங்களுயகனெம்பெருமாட்டியோ டிருப்பதற்குருக்கொண்டு தங்கினவென" மஹாராஜாவாகிய திருமலைநாயக்கரவர்களால் திருமணஞ்செய்யப்பெற்று விளங்குகின்ற கலியாண மண்டபத்திலுள்ள பொற்றவிசில் திருப்பரங்குன்றத்தினின்றும் எழுந்தருளி வந்த முருகபிரான் பக்கத்திலுள்ள ஆசனத்தில் எழுந்தருளத் தாமும் எழுந்தருளிப் போகரூபியாயிருந்து எல்லாஆன்மாக்களும் போகங்களை நுகரும்பொருட்டுத் தடாதகைப்பிராட்டியாரைத் திருமணம் புரிந்தருளுதல். பின்பு குண்டோதரனுக்கு அன்னமிடுதல். அன்றிரவு எவ்வுலகங்களையும் ஆணைவழி நிறுத்திச்செங்கோல் செலுத்துகின்றவர் என்பதைக் கா[illegible]ருட்டு அம்மை பல்லக்கிலும் சுவாமி யானை வாகனத்திலும் [illegible] பட்டினப்பிரவேசங்கொண்டருளுதல்.

[illegible] வசந்தோற்சவம்.

௨௰௬-௳ காலை மஹாரதப்பவனியூர்வல் [illegible] தீர்த்தங்கொடுத்து

௨௰௭-௳ காலை பொற்று[illegible] பின்பு தேவேந்திரன் பூசை.
ஆன்மாக்களை அனந்தவாரியில் [illegible] ழுந்தருளிச்சென்று அனைவர்க்குங்காட்சி
அன்றிரவு இடபவாகனங்களில் [illegible] கோயில் பதினாறுகால் மண்டபத்திற் சென்றருளி
கொடுத்தருளியபின்பு நி[illegible]
முருகபிரானுக்கு ம[illegible]ரியாதை செய்து விடைகொடுத்தனுப்புதல்.

திருவிளையாடல் திருமணப்படலம்.

இணரெரித் தேவுந்தானே யெரிவளர்ப் பவனுந்தானே
யுணவுகொள் பவனுந்தானே யாகிய வொருவன்வையம்
புணர்வுறு போகமூழ்கப் புருடனும் பெண்ணுமாகி
மணவினை முடித்தானென்றன் புணர்ப்பையார் மதிக்கவல்லார்.

௨௰௬-௨ காலை அழகர் ஆயிரம்பொன் சப்பரத்தில் ஆரோகணித்து ஆற்றிலிறங்குதல். கிடைத்தற்கரிய இவ்வத்தியற்புத மகோற்சவத்தை அனைவரும் வந்து தெரிசித்துப் பேரானந்தமுற்றுப் போகமோக்ஷங்களை அடையக் கடவர்கள்.

இங்ஙனம்,

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடம்.

அறிவு விளக்கம்

(தொடர்ச்சி).

உற்றதுரைப்போன் :—சகோதரா! உண்மை விரும்பியே 1901ளு ஆகஸ்டு மாதத்தின் தக்ஷிணாயனத்தில் நஷ்டர் திருஷ்டிக்கு விளங்காதொளித்த "விவேகபாநு" 1903ளு உத்தராயணபுண்ணியகாலத்தில் சான்றோர் மனக்குன்றில் உதயமானதற்குண்டான வாநந்தத்திற்களவில்லை யன்றோ? சுத்தப்பிரம்மத்தில் அக்கினியிற் சூடுபோற்றோன்றிய கர்மகாண்டத்திற் சிறியராகிய நம்மிட மூத்த சகோதரர்களான பற்றறுநம்பி, பழமைக்கிரங்கியும், அவ[illegible]ள்முன் "விவேகபாநு" வில் வரையறுத்துக்காட்டிய வாக்கியங்களை பக்தி காண்டத்[illegible]ருக்கும் நீர் பாவிர்பக்தி, அந்தரங்கபக்தி, அநந்யபக்தி என [illegible]ன்றாகப் பிரித்துக்காட்டிய உம்மிட வித்தியா விலாசத்தையும் கேட்டு இலை[illegible] மகிழ்வுற்றனன். நீவிர் மூவரும் வயதிற் பெரி[illegible]யோரும் அறிவிற் சிறியோ[illegible]ப்விட்டதற்காக வாருத்துயர்க்கடலி லாழ்ந்தனன். அஃதேனெனில் விவேக[illegible]வே வடிவான முதியோர் உம்மைப்போல் பக்தியே முத்திதருமென்னுமல் [illegible]காண்ட முளதெனத் தெரிவித்தது வீணே! ஒருக்கால் மறந்து வெளிய[illegible]னரோ? தயவுசெய்து விளக்குமின்.

உண்மை விரும்பி :—அப்பா! உற்றதுரைப்போனே, நீ தெரிவித்த ஞானகாண்டத்தில் வெளியாகும் விஷயமென்ன. அதை அனுஷ்டிக்கும்படி முன்னோர் யாருக்காவது உபதேசித்தனரா அதை நன்குவிளக்குக.

உற்றதுரைப்போன் :—மூத்தோனே! வைஷ்ணவத்தில் இடையறாப் பக்திசெய்த அருச்சுனனுக்கு கிருஷ்ணமூர்த்தி உடனே வைகுண்டபதவி தராமல் பகவற்கீதையில் ஞானோபதேசம் செய்தது நீரறியீரோ. இதுநிற்க சைவத்தில் திரிகரணசுத்தமாய்ப் பக்திசெய்த மாணிக்கவாசக சுவாமிகட்கு சிவம்திருப்பெருந்துறையில் சற்குருசாரூபமாய் எழுந்தருளி அவர்க்கு சிவஞானபோதம் புகட்டினதோவிலதோ? வேதத்தில் பேதசுருதி அபேதசுருதி என இரண்டாகப்பிரிந்துநின்று பேதவாதம் அபேதவாதம் என விரண்டு கற்பனைகள் வழங்குவது உமக்குத் தெரிந்திருந்தும், பேதவாதத்தைச்சார்ந்த கர்மம், பக்தி எனும் காண்டங்களில் ஈடுபட்டு அப்பேதத்தைக் காப்பாற்ற வெகுபாடுபடுகிறாயே? இது நன்றல்ல; "எதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்பதை யுணர்ந்த யான் உன்பொருட்டு உண்மையே வெளியிடுகின்றேன் கேட்பாயாக. ராஜீகதண்டனை தெய்வீகதண்டனை என்பதைக் கேட்டிலையோ? இனிச்சொல்வதைக்கேள். இராஜாங்கத்தில் சொற்பகுற்றஞ் செய்தவனுக்கு பணஅபராதம் முக்கோணத்தடி முதலியதும், அதிக தப்பிதஞ் செய்தவனுக்கு தலைவழித்து, சுல்லாயிட்டு, கம்பளிகொடுத்து சிறைச்சாலையிலிட்டு வருத்துவதும்; கொலை செய்தவனுக்கு பிராணனை வதைத்தல், பரதேசத்திற்கனுப்புதல் முதலிய சட்டம் விதித்திருப்பதுபோல்; தெய்வீகத்தில் பரமாத்மா நித்தியர், உலகமும் ஜீவர்களும் அநித்தியம் அதாவது கயிற்றரவு, கானற்சலம், முயற்கொம்பு, கனவூர்போலொத்தது என்று பெரியோர்கள் சுருதியில் தெரிவித்ததை அறிவாயாக. இதை யுணராதவர்களுக்குக் கீர்த்தனை ரூபமாக இவ்விஷயங்களை யமைத்து அநேக கிரந்தங்களைச் செய்தனர். இவ்விதமாயு முணராதவர்களுக்கு நாடகரூபமாக அநேக புஸ்தகம் செய்தனர். இப்படி பரமாத்துமா நித்தியரென்பதை மேற்படி இயல், இசை, நாடகமெனு மூவகையாலுமுணர சக்தியற்ற மூடர்களுக்கு மேற்படி தத்துவத்தை யுணருமாறு "காஷ்டலோஷ்டேசுமூடானாம்ஞானி சர்வத்ரஸமதரிஸனஃ" எனும் சுருதிவாக்கியப்படி சிலாசாஸனசாஸ்திரம் ஏற்பாடுசெய்து; அதன்படி [illegible]தத்துவம் உணரும்பொருட்டு உன்னுக்கே கொடிமரமென்றும், குய்யமே பலிபீடமென்றும், வயிறே கர்ப்பக்கிரகமல்லது மூலஸ்தானமென்றும்; கல்லினால் கோயில்கள் அமைத்து இருக்கின்றனர். அக்கோயில்களில் சனங்கள் மனதைக்கவரும்படி பஞ்சலோகங்களால் விக்கிரகங்களையமைத்து அவற்றை வஸ்திரபூஷணங்களாலலங்கரித்து, அவற்றினெதிரில் பாணவேடிக்கை, பஞ்சவாத்தியம், மேளதாளவாத்தியங்கள், நடனஞ்செயும் தாசிப்பெண்கள், பலவி

த பிரசாதங்கள் அமைத்து ஜனங்களைக்கூட்டி "உண்ணாக் கென்ற கொடிமா மாமோர் புரஞ் சுந்திர புஷ்கரணி, அண்ணைக் கென்றவ லப்புரத் திற்கண்ட தக்கிணி தீர்த்தமாம் ஞானப்பெண்ணே" என்றும், பீட மிருப்பதும் மையத்தி லேபலி பீடமி ருப்பதுங் குய்யத்திலே, மாடமி ருந்தசி வாலயத் தில்பணி விளக் கிருக்குதாம் ஞானப்பெண்ணே" எனும் பிரமாணங்கள் பெரியோர்களால் விளக்கப்படும். இன்னும் வேதாகசியங்களை அம்மூடர்களுக்குவிளக்க மடங்கள்கட்டி ஸ்தலபுராணங்கள் வாசிக்கத்தகுந்த மடாதிபதிகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்படி கற்பனையாக பல மதங்களையும் பல கடவுள் நாமங்களையும் ஏற்படுத்தி, ஒன்றைவிட ஒன்று பெரிதென்றும் சிறிதென்றும் பேதமூட்டி சிறிய கடவுளைவிட்டுப் பெரிய கடவுளைப் பக்திசெய்தால் முக்தி வருமென்றுபயமுறுத்தி ஆலயங்கடோறும் திரியச்செய்து, ஆங்காங்கு கிடைக்கும் பெரியோர்களால் தேகதத்துவத்தை மேற்கண்டவிதமாக உணரும்படி செய்தனர். இப்படியுமுணராதவர்களுக்கு தலைவழித்தல் குட்டிக்கொள்ளல் முழங்காற்படியச் சேவித்தல் முதலியவைகளால் கர்வபங்கஞ்செய்வித்துத் தடுத்தாட்கொள்ள விரும்பினர். பிறகு உங்கள் சரீரத்தை அநேக யுகங்களாக நிலைக்கச்செய்கிறோமெனும் ஆசையூட்டி "உணவோர் பொழுதேனும் பலவரிசை விடுபுளியா, லூனே கனாதிலா யெய்திடுமுப்பாற் றளர்வெய்து, நிணமாதிகள் வேண்டேலெனவுண வாதிசுகத்தை, நீத்தாரிலை நீத்தாருடலீத்தற் கறுபிரிவாய்க், கனாத நயன்மாலு ருத்திர ஞாதியதேவர், காப்பென் றறுநிலையுந் தருகலையுந் திகழுருவும், குணமூன் றொழிலாதி தெளிமனதிற் படாட்டிக், கூட்டைக் கழிபுட்பா லுயிர்பூட்டைக் கழுவித்தால்" எனும் ஆன்றோர் வாக்கியப்படி மனை, மக்கள், பொருள், உணவு முதலிய சுகங்களை விடச்செய்து, நிராசாபரனாக்கி; பிறகு சித்தர்களுக்குத் தலைவரான விஷ்ணுவே பத்தவதாரத்தில் சரீரத்தைவிட்டு மறுபடி வேறுசரீர மேற்றுக்கொண்டாரெனில் உங்கள் சரீரம் நிலைக்காதெனும் உண்மை தெரிவித்து அதன்பின் அபேதயுக்தியைப் போதித்தார்கள். சொன்னபடி கேட்பவர்களுக்கு மேற்கண்ட சங்கடங்களில் அகப்படச்செய்யாமல் அபேதயுக்தியைப் போதிப்பார்கள் என்றனன்.

உண்மைவிரும்பி:—சகோதரா! சிறுபிள்ளைத்தனத்தைக் காண்பித்தாயே? நீ தெரிவித்த அபேதசுருதியின் கருத்தைப் பிறகு உன்னால் தெரிந்துகொள்கிறேன். பேதசுருதியை அனுஷ்டிப்பவர்களுக்கு மோக்ஷமில்லையென்றும் சொர்க்காதிபதவிதான் உளதென்றும் தெரிவித்த உன் நெஞ்சுறுதிக்கு யான் சந்தோஷிக்கிறேன். அப்பா! என்னுடைய ஆசான் விசிஷ்டாத்வைதி. அவருடைய பெயர் உபயவேதாந்தப்பிரவர்த்தகாசிரியர். அவரே சைவம், பௌத்தம், சமணம், மஹமதீயம், கிறிஸ்தவம் முதலிய பல மதங்களை அடக்கி, அம்

மதஸ்தர்களையும் விசிஷ்டாத்வைதிகளென்று ஒப்பச்செய்து வைஷ்ணவமதமே முதன்மையானதென்றும் பரமான்மா ஜீவான்மா நித்தியமென்றும் கூறி நிலைநாட்டி இருக்கிறார். இவருடைய கொள்கையை அறியாத சிறுவயதுள்ள நீ வாயில்வந்தபடி பிதற்றுவது அழகல்லவென்றனன்.

உற்றுணர்ப்போன்:—மூத்தோனே! யான் அறிவீனனாக என் சுதாவில் யாதொன்றும் யுக்திசெய்து கூறவில்லை. ஆன்றோர்கள் கொள்கையே எனக்கு மேற்கோளாகும். உம்முடைய ஆசிரியர் செய்திருக்கும் தீர்மானத்திற்கு நீரே ஒப்புதற் கர்த்தாவாய் வெளிப்பட்டதால், உம்முடைய ஆசிரியரைத் கேட்க வேண்டிய கேள்வியை உம்மையே கேட்கத்துணிந்தனன். அஃதாவது வேதத்தில் துவிதம், அத்துவிதம் என் இரண்டு பதங்கள் இருக்கின்றவேயொழிய விசிஷ்டாத்வைதமெனும் பதம் காணோம். விசிஷ்டாத்வைதமென்பது கட்டுவிலக்கணமாயின் வேதத்தில் இவ்வாக்கியம் எங்கே கையுபயோகிக்கப் பட்டிருக்கிறது? சாந்தம், சிவம், அத்வைதம் என்று வேதத்தில் கூறியிருக்கும் வார்த்தைகளின் கதியென்ன? ஐயா! விசிஷ்டாத்வைதமென்றாலென்ன? ஜீவன்வேறு உலகம்வேறு ஈஸ்வரன்வேறு என்றுரைக்கும் நீங்கள் ஏன் துவைதிகளெனச் சொல்லிக்கொள்ளுகிறீர்களில்லை, ஜீவேசஜகத்ததிர்வசநியமே பிரம்மமே நித்தியம் என்கிற அத்வைதிகளைப்போல அத்வைதமெனும் சொல்லையும் உபயோகித்துக்கொள்வது ஆணும்பெண்ணுமல்லாப்பேடி ஆண் அணிகலம் தரித்து ஆடவனெனச் சொல்லிக்கொள்வதுபோலல்லவோ இருக்கிறது. அப்படித் தங்களை யாரும் நினையாதிருக்க தாங்கள் தங்கள் மதத்தின் பெயருக்குரிய பொருளை விரிவாய் விளக்குங்கள் பார்ப்போம்.

(இன்னும் வரும்)

பு. ஜயராம்பிள்ளை,
(ஆத்மநேசன்).

தற்காலத்துத் தமிழ்நிலைமை.

பண்டைக்காலந்தொட்டுச் சீருஞ்சிறப்பும்பெற்று விளங்கும் நம் செந்தமிழ்ச் செல்வியின் தனியரசாட்சியில் ஆங்கிலமென்னும் மறுபுலமங்கை மெல்லக்கால்வைத்து நாளடைவில் யாண்டும் பரவித் தன்கொற்றம் நாட்டித் தமிழ்ச்சிறார்கட்கு உத்தியோக பதவி யளித்து மயக்கித் தன்னையே விரும்புமாறு செய்து உன்னத நிலையில் வீற்றிருப்பாளாயினள். 'ஒண்டவந்தபிடாரி ஊர்ப்பிடாரியானதுபோல்' இவட்செய்திய உயர்வையும் தனக்செய்திய தாழ்வையும் நினைக்குந்தோறும் அன்னோ! தமிழ்ப்பாவைநெஞ்சம் எவ்வாறு

பதைப்புறும்! தற்பெறுநர் தவிக்கவும், மாற்றாட்பெறுநர் மகிழவும் காணும் போது அவட்குளதாந்துயர் எத்துணைத்தோ? தன்னுடைய நவரசாலங்காரச் செய்யுட்களை நமது சேயச்சிறுர்கள் அவமதித்து நகையாடும்போது கண்ணிறை நீர்கொண்டு கலங்காநிற்பாள். தன்னை விரும்பிய மூவேந்தரும், அப்போதைய பாவேந்தரும், சங்கமும் போயபின் எவர் நம்மை க்ஷேமம் வினவுவர் எனக்கருதி நெஞ்சு புண்ணுறநெடுந்துயருழப்பாளன்றே! முத்துறும் பெருமறை முனைத்தருள் வாக்கால், அன்பின் ஐந்திணை என்று அறுபது சூத்திரம், கடலமிழ்த்தெடுத்துக் கரையில் வைத்ததுபோல், பொருவில் ஒருவன் பொருண் மரபளிக்கப் பெற்றுயர் ஐக்கிய நற்றமிழ்ப் பாவாய்! அச்சோ நினக்கோ இக்கதி சேர்ந்தது! மணிவாசகப்பிரான் மலர்வாய்க் கோவையும், செந்நாப் போதார்திருவாய்த் தேறலும், கம்பநாதியர் கவின் செறிகவியும், உம்பரும் வியக்குமுடைமை நீயன்றோ! சிந்தாமணியாதிய சுவைப்பொக்கிஷங்கள் பல நின்னாட்டின்டே! வருக்கரிய சொற்பொருள் மாதுரிய முற்றும், தனிக்கவர்ந் நினக்குரிய சீர் கவர்தற்குற்ற, மற்றெருண் றெத்தகைத்தோ! எனயாமிரங்கி அன்னாட்கோர் ஆறுதல் கூறுவேம்.

சந்தமிழ்ச்செல்வியிரங்கல், தேன்மொழிப்பாவாயிரங்கல். மற்றைப் பாஷைகளுந் தலைதூக்காவண்ணம் கடிந்து ஆங்கிலக்கன்னி அரசியற்று மிக்காலத்தும் நின்புகழ் ஆங்காங்குப் பரவாமற்போகவில்லை. நின்கட் கற்பனை நாற்சுவையமைய இலக்கண வரம்புகோலி வைக்கப்பட்டுள்ள நூற்பொருள்களின் அருமைபெருமைகளை அறிந்து மகிழ்நர் ஆங்காங்குள்ளார். நீ நின் பூர்வ நிலையைப் பெறவிடினும் நின்கீர்த்தி மங்குமென்பது கொஞ்சத்திலில்லை. என்னெனில், நினது மாதுரிய சாதுரிய நயநடைகள் புராதன வித்வன்மணிகளால் நன்குவிளக்கப்பட்டுள்ளன. மாணவகா ஆங்கிலத்தோகூட சுதேச பாஷைகளுளொன்றும் கற்கவேண்டுமென்னும் வித்யா இலாகா அதிகாரிகளின் ஏற்பாடு நின் பரிதாப நிலையில் உதவிசெய்கின்றது. நின்னைப் பயிலும் சிறுர் உபாத்தியாயர்கட்கு வருஷந்தோறும் நன்கொடையளிக்கும் நம் துரைத்தனத்தார் நின்வாழ்வைச்சற்றுப்பராமரிக்கின்றனர். இம்மட்டிலும் நீ அதிர்ஷ்டசாலியே யன்றோ? இன்றென்றுகேள், உனது பண்டை இலக்கண கம்பீர நடையை இக்காலத்துப் பெரும்பான்மையோருணர்வரியர். ஆதலின் நின் சொற்கட்டின் முறுக்கு தற்கால நிலையை அநுசரித்துப் பாமர பண்டித ரஞ்சிதமாக மாற்றப்படுவதாகுக. இதைப்பற்றி யடுத்த பாருவில் நின் கவிஞர்கட்கு விண்ணப்பிக்கலாகும்.

(இன்னும் வரும்).

அ. வரதநஞ்சையபிள்ளை.

அறிவின் அபிவிருத்தி.

மானுடராய்ப் பிறந்தபேர் அறிவின் விருத்தியினுலே உண்மையான ஆநந்தத்தை யடையலாமே ஒழிய வேறு எவ்வகையானும் அடைதலரிது. அவ்வறிவைச் சற்குரு மூலமாகவும் பெரியோர்கள் மூலமாகவும் கிரந்தங்கள் மூலமாகவும் அடையலாம். சற்குரு கடாக்ஷமும் பெரியோர்கள் சல்லாபமும் எக்காலத்தும் எவ்விடத்தும் கிடைப்பது அரிது. கிடைக்கும் பக்ஷத்தில் விசேஷமென்பதிற் றடையில்லை. ஆனுல் கிரந்தங்களோ எச்சமயமென்னுளும் சித்தமாயிருக்கின்றன. அவற்றை நாம் உபயோகிப்பதற்குத் தக்கவண்ணம் அவை நமக்குப் பயனைத் தருகின்றன. தற்பயிற்சியால் அறிவை யடைவதற்கு நல்ல நூல்களைப்போல் வேறு சுலபமான சாதனங்கள் கிடையா. ஆகையால் நம்நாட்டார் கிரந்தங்களைச் சேமித்து வைப்பதில் பெருங்கவலை யெடுத்துக்கொள்ள வேண்டுவது இன்றியமையாதது. ஒவ்வொரு பட்டினத்திலும் ஒவ்வொரு பெருங்கிராமத்திலும் ஜனோபகாரமான புத்தகசாலைகளிருப்பது அவசியம். அநேகமாய் நம் பெரும்பட்டினங்களில் இவ்வித புத்தகசாலைகள் ஒருவாறுக ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் அநேகம் குறைவான நிலைமையிலேயே இருந்து வருகின்றன. இருக்கிற புத்தகங்களும் அந்நிய பாஷையாகிய ஆங்கிலேய பாஷையிலிருக்கின்றன. இது விஷயத்தில் அந்நிய நாட்டார் அடைந்திருக்கும் அபிவிருத்தியை அறிவோமானுல் ஆச்சரியத்துக்கு அளவிராது. இங்லாந்து தேசத்தில் 1901-ம் வருஷத்தில் ஜனங்கள் தாராளமாய் வாசிக்கும் வண்ணம் 620 புத்தகசாலைகளிருந்தனவெனக் கணக்கிட்டிருக்கின்றனர். அமெரிக்கா தேசத்திலோ கிராமங்கள்தோறும் புத்தகசாலை யுண்டு. அதனுலன்றே அத்தேசத்தார் அறிவில் முதிர்ச்சியடைந்து மகா அற்புதமான விஷயங்களை யெல்லாம் கண்டுபிடித்திருக்கின்றனர்.

பகவத் சிருஷ்டியாகிய இயற்கைப் பொருளே பெரும் புத்தகங்கள்போல் விரித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையேயானுலும் அவ்விதப் புத்தகங்களைத் தக்கவண்ணம் அறிவதற்குச்

சரியான முன்பழக்கமில்லாவிடில் முடியாதென்பது திண்ணம். அம்முன்பழக்கம் கிரமபூர்வமாகவே அடையவேண்டியிருக்கிறது. ஆகையால் நல்ல நூல்கள் அடங்கிய புத்தகசாலைகள் பலவிடங்களில் ஏற்படவேண்டியது இன்றியமையாதது. அவையிருப்பின் அறிவையடைய ஆவலுண்டாகும். ஆவல்கொண்டு அநேகர்போய்ப் படிப்பார்கள். படித்தால் பலருக்குப் பயன்படும். அதனால நம்நாடு அபிவிருத்தியடைய இடமுண்டு. முன் நாளில் நம் கிராமங்கள்தோறும் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் அநேக கிரந்தங்கள் ஏடுகளிலிருந்து வந்தன. தீப்பிடிக்கும் காலத்தில் நம் முன்னோர் வேறெவற்றைக் கைவிட்டுப்போனாலும் ஏடுகளைச் சேமித்து வந்தார்கள். சில வீடுகளில் அவைகள் பெரிய பலகை அடுக்கிய பரண்களில் வைக்கப்பட்டிருக்கும். ஏணிவைத்து ஏறியே அவைகளை எடுக்கும்படியாயிருக்கும். கிராமாந்திரங்களில் திண்ணைதிண்ணையாய்ப் பலர் எழுத்தாணி வைத்துக்கொண்டு எழுதினவண்ணமாயிருப்பார்கள். அத்துணை சிரமப்பட்டுக் காப்பாற்றின ஏடுகள் இன்றும் கிராமங்களில் சிலவிடங்களில் ஏராளமாய்க் கிடைக்கின்றன. நம் ஜனங்களுக்கு அறிவினிடத்தில் அவ்வளவு ஆவலிருந்து வந்தது. சாகுபடிக்குச் செலவிட்ட நேரம்போக மிஞ்சிய காலக்ஷேபமே செய்து வருவார்கள். தற்காலத்திற் செய்துவருவதுபோல் வீண்பொழுதுபோக்கி வரமாட்டார்கள். அதப்படித்த வித்துவான்களாகிப் பிரசித்தி பெறாவிடினும் அநேகர் கூடியமட்டும் அறிவை விருத்திபண்ணின வண்ணமாயிருப்பார்கள். அவ்வித நல்வழக்கங்கள் அரிதாய்விட்டன. கிராமங்கள்தோறும் வழக்குகளும் சண்டைசச்சரவுகளுமே மேலிட்டன. திண்ணைகள் எங்கும் சீட்டாட்டமும் வம்புமே பெருகிப்போயின. கிராமவாசிகள் தற்காலம் கேட்டையடைந்தவண்ணம் பட்டினத்திலுள்ளவர் அடையவில்லை. உண்மையை ஆராய்ந்து பார்க்கின் பட்டினத்திலுள்ளவர்கள் அதிக அபிவிருத்தியடைந்து வருகின்றார்கள். முன்னாளில் நம்நாட்டு ஆழ்ந்தஅறிவு கிராமங்களிலேயே குடிகொண்டிருந்தது. பிரசித்திபெற்ற வித்துவான்கள் கிராமங்களிலேயே வாசம் பண்ணிக்கொண்டு யோக்கியமாகக் காலத்தைச் செலவிட்டுக்கொண்டு சௌக்கியமாய் வாழ்ந்திருந்தனர். பட்டினங்களுக்கு எப்பொழுதா

வந்து சென்று தம் அறிவைப் பரவச்செய்து பரிசுபெற்று வருவது வழக்கம். பெரும்பாலும் நகரவாசத்தை அவர்கள் நரகவாசமாக எண்ணுவார்கள். தற்காலத்தில் தலைகீழாகிவிட்டது. ஆர அமர இருந்து நூலாராய்ச்சி பண்ணுவதற்குக் கிராமங்களே தக்க இடங்கள். ஆகையால் கிராமங்களில் பிறந்துவளர்ந்தவர்கள் தங்கள் காளைப்பருவத்தில் வெளியேறி சம்பாத்தியத்தில் முயன்றிருந்தாலும், மாலைப்பருவத்திலாவது கிராமங்களைச்சேர்ந்து தங்கள் கிராமத்தார அபிவிருத்திபண்ணுவதற்கு அறிவைப்புகட்டும் அரியகிரந்தங்களைச் சேகரித்துக்கொடுத்து அன்னவர்களை உய்யச்செய்வார்களானால் நம்நாட்டின் அறிவு முன்போல் அபிவிருத்தியடைந்து பிரகாசிக்கும். இல்லாவிடில் வரவரக்குறைவுறும் என்பதிற் சந்தேகமில்லை. "அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார் என்னுடையரேனுமிலர்" என்ற முதுமொழியை நன்குகவனித்து நம்நாட்டின் அறிவைப் பரவச்செய்வதற்குப் பற்பலவிடங்களில் புத்தகசாலைகள் ஏற்படுத்தி நம் நாட்டின் அபிவிருத்தியைத்தேட முயல்வது நம்கடமை. ஒவ்வொரு கோவிலையும் மடத்தையுமடுத்து ஒரு புத்தகசாலை ஏற்படுமானால் மிக்க நலமாயிருக்கும். ஏனைய உலகத்தாருக்குமுன் நாம் சோபிப்பதெல்லாம் நம் பணத்தாலன்று, நம் பலத்தாலுமன்று, நம் அறிவாலும் சாந்தகுணத்தினாலுமே புகழ்பெற்று விளங்குகிறோம். அவ்விதப்புகழ்ச்சிக்குக் காரணமாயிருக்கும் அங்கருந்தனத்தை வரவர க்ஷீணமடைந்து வரும்படி பார்ப்பது தர்மமோ. ஆகையால் நம்நாட்டு அறிவுடையாரெவரும் இதனை நினைந்து நம் அரிய பெரிய பழைய நூல்களைச்சேமித்து வைப்பதுடன் நம் ஜனங்கள் சுலபமாய் அறியும் வண்ணம் பல நூல்களைப் புதிதாய் இயற்றிப் புத்தகசாலைகளை ஏற்படுத்தி அறிவை அபிவிருத்திசெய்து ஆநந்தத்தைத் தேடுவார்களாக. அறிவின் ஆநந்தமே ஆநந்தம். அதனையடையும்படியான சாதனங்களைத் தேடிக்கொடுத்தலே நம் நாட்டுக்கு நாம் செய்யும் பெரும் புண்ணியம்.

பத்திராதிபர்.

மோரின் குணம்.

இந்துக்களைப்போல் மோரில் பிரியமுடையவர்கள் உலகில் எவருமில்லையென்றே சொல்லத்துணியலாம். அதன் அபாரகுணங்களைக்கண்டே நம் பெரியோர்கள் அதனைத் தாராளமாய் நாம் அநுதினம் உபயோகிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்தார்கள் போலும். அதன் தன்மை இன்னதென்று அறியாமலே நாம் அதனைக் கல்யகோடிகாலமா உபயோகித்து வருகின்றோம். மேல்நாட்டார் அதன் குணத்தை இப்பொழுதுதான் கண்டுபிடிக்கலாயினர். ஹெல்த் (Health) என்ற பத்திரிகை இதனைப்பற்றிக் கூறுவதாவது:—"மோரின் புளிப்பு (Lactic acid) இரத்தக்குழல்களில் படியக்கூடிய எவ்வித மண்ணையும் போக்கிவிடும். ஆகையால் அது யாதொரு அடைப்புமின்றித் தாராளமாய் ரத்தம் ஓடும்படி செய்கின்றது. அதனால் கணுக்களைச்சுற்றி யாதொரு கெட்ட பதார்த்தமுந் தங்கி எரிச்சல் முதலியன உண்டாகாமல் பாதுகாக்கின்றது. தசை நார்களில் விஷப்பொருள்கள் யாதொன்றுந் தங்குவதில்லை. இரத்தக் குழல்கள் திமிர்த்துப்போவதாலேயே அநேக வியாதிகள் உண்டாகின்றன. மோரை நாம் தாராளமாய் உபயோகித்து வந்தால் 20, 25 வருஷங்களுக்கு இவ்விதத் திமிர்ப்பு உண்டாகாமற் றடுக்கும். மலச்சிக்கலால் சந்துவாதம் (Gout) உண்டாகிறது. மோரை உபயோகித்தல் இதற்கு நலத்தை உண்டாக்கும். அதன் உபயோகம் நுரையீரல், தோல், பிருக்கம் (Kidney) முதலியவற்றைத் தூண்டுதல் செய்வதே. அது இளைப்பைக்கும் நல்ல செப்பும் சுகமுமான இரத்தத்தைக் கொடுத்துதவுகின்றது. சந்துவாதத்தினால் துன்பப்படுவோர் மாமிசம், தித்திப்பான பண்டங்கள், வாசனைத்திரவியங்கள், ரொட்டி முதலியவைகளைக் கண்ணூற் பார்க்கவு மொண்ணாது. முட்டைகள், புதிதாய்ப்பறித்த பழவர்க்கங்கள், காய்கறிகள் இவை நன்மை பயக்கும். கணுக்களில் வீக்கங்கண்டால் ஒருவன் அன்று கடைந்த மோரை வேண்டியமட்டும் உண்ணுதல் நலம்". புளித்து நாற்றமெடுத்த மோரை என்றும் உபயோகியாமல் நீக்கல் நலம். "நீர்சுருக்கி மோர்பெருக்கி யுண்பவர்தம் பேருரைக்கிற் போமே பிணி" யென்று கூறும் நம் பதார்த்தகுண சிந்தாமணி. "நீரைவிட்டு மோரைப்பெருக்கு" என்பது நம் பழமொழி. ஆகையால் கூழ்போன்ற கெட்டிமோரை உபயோகியாமல் நீக்கல் நலம், எருமை மோர் மந்தத்தை யுண்டுபண்ணக் கூடியதாகையால் பசுவின் மோரே மிக்க நலம்.

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

2-ம் அத்தியாயம்.

பருந்தையும் பார்க்கமுடியாத அப்பாழும் பாலைவனத்தில் தன் பாரியையைப்பறிகொடுத்த துக்கத்தாலும் பச்சைப்பிள்ளையைப் பாதுகாக்க என்செய்வது என்ற ஏக்கத்தாலும் மனம் பதைத்து நெக்கு நெக்குருகி அழுதான் அவ்வன்பன். "ஆண்டாண்டுதோறு மழுது புரண்டாலு மாண்டார் வருவரோ?" சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் மனம் முற்றிலுமாறி பின்வருமாறு சிந்திக்கத்தொடங்கினான். "ஆவாரையாரேயழிப்பர் அதுவன்றிச் சாவாரையாரேதவிர்ப்பர்". இதனை யறியாது நெஞ்சம் புண்ணாக நினைந்துருகுவதிற் பயனென்ன? எல்லாம்வல்ல ஈசனிட்ட கட்டளைப்படியே எதுவும் நடக்குமென்று நினைந்து இச்சம்சாரவாழ்க்கையில் கமலநீர்போல் ஒட்டியும் ஒட்டாமலுமிருப்பதே நலம். வீணில் விசாரப்பட்டுக்கொண்டிருப்பதிற் பயனென்ன? "கற்றூர் முற்றேரன்ருக் கழிவிரக்கம்" என்று மனத்தைத்தேற்றி விசாரத்தை நீக்கியிருத்தலே நலம். நாம் செய்ய வேண்டிய முயற்சியில்மட்டும் தாழ்வு வாராது நடத்தி வருவோமானால் ஈசன் செயற்படி நடப்பது நடக்கும். அதைப்பற்றிக் கவலை கொள்வதிற் பயனென்ன? நான் எவ்விதம் மனத்தைத்தேற்றினாலும் குழவியை நோக்கும்போது பரிதாபமாயிருக்கிறது. பகவானே! நீரே இக்குழந்தைக்கு அன்னையாயிருந்து காப்பாற்றவேண்டும்" என்று கூறி ஒருவாறு தேறுதலடைந்தான். வெயிலின் கொடுமை பொறுக்கமுடியவில்லை. குடைநிழலில் குழந்தை படுத்து மெய்ம்மறந்துகிடந்தது. தனக்கு நேர்ந்த ஆபத்தைப்பற்றி அதற்குச் சிறிதுமுணர்ச்சியில்லை. அந்நம்பி வெயிலிலிருந்த வண்ணமே பகற்பொழுதெல்லாம் சகிக்கமுடியாவிதம் துன்பப்பட்டுக்கொண்டிருந்தான். ஒரு நாழிகைபோவது ஒரு யுகம்போலிருந்தது. குழந்தையைப்பார்க்கப்பார்க்க அவனுக்கு துக்கம்மேலிட்டது. அழுது அழுது அவன் கண் புண்ணாய்ப்போய்விட்டது. தொண்டையும் நாவும் முற்றிலும் வறண்டுபோயின. முகமெல்லாம் கொப்புளங்கள் வெடிக்கத்தொடங்கின. மூச்சுவிடவும் முடியவில்லை. வரவர நெஞ்சும் நாவும் வீங்கத்தலைப்பட்டன. கண்கள் தீமூட்டப்பட்டனபோல் தகதகவென்று எரியத்தொடங்கின. இனி இக்கொடுமைக்குத்தப்ப வழி

யில்லையென்று நினைந்து அந்நம்பியும் சாவதற்குச்சித்தமாயிருந்தான். குழந்தை பாலில்லாமற் குவாகுவாவென்று கதறத்தொடங்கியது. விரைத்துச்செத்துப்போகும்போலிருந்தது. அந்நம்பி தான் மேல் போட்டிருந்த சணற்றுணியைக் கழற்றி அதிற்படிந்திருந்த வியர்வை நீரில் சில துளிகள் அக்குழந்தை நாவிற் பிழிந்தான். இது மகா அருவருப்பான விஷயமாயினும் ஆபத்துக்கென்செய்வது. அத்துளிகள் அக்குழந்தைக்கு ஆயுள் மருந்தாயின. நம்பியின் நாவோ புரட்டமுடியாவண்ணம் வீங்கிவிட்டது. அவன் தன் உதடுகளை ஒன்றுசேர்த்து மடிக்கமுடியவில்லை. சாவது நிச்சயமென்று நினைத்து குழந்தையை இறுகக்கட்டிக்கொண்டான். அச்சமயத்தில் அவன் நா அவனை யறியாது வெடித்து இரத்தம் களகளவென்று வழிந்து தொண்டைக்குள் பாய்ந்து வயிற்றுக்குள்ளும் இரண்டொருமடக்குச் சென்றது. தீபோல் எரிகிற காய்ச்சலுக்கு இது பெருஞ் சாந்தத்தை யுண்டுபண்ணிற்று. பகவான் பரமவைத்தியனன்றோ? அவரது அபார கிருபையை நாமறிவோமா? இவ்வாறு நேரிட்ட தாகசமனத்தால் நம்பிக்குத் தன்னையறியாமல் தூக்கம் வந்துவிட்டது. அயர்ந்து சிறிது கண் துஞ்சினான். இக்கஷ்டங்களையெல்லாம் கண்ணுற்றுப் பார்க்கச் சகியாதவன்போல் சூரியனும் குடதிசைக்குன்றில் மறையத் தொடங்கினான். இதுகாறும் தன் கிரணங்களைப்பரப்பி லோகமெல்லாம் பொசுக்கின சூரியன் இப்பொழுது சகல கிரணங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு பிரகாசமான உருவத்தோடு குடதிசைக்குன்றில் தோன்றியதானது நெடுநாள் இராஜ்யபாரம் வகித்து அலுத்துப்போன ஓர் அரசன் சகல போக போக்கியங்களையும் முற்றுந்துறந்து மலைச்சாரலில் ஒடுங்கியிருந்து தவஞ்செய்யப்போனதுபோலிருந்தது. போகுங்கால் அவ்வரசன் தன் இராஜ்யபாரங்களைத் தன் இளங்குமாரனிடம் ஒப்புவித்துப் போகுமாப்போல் சூரியனும் தன் அரும்புதல்வனாகிய சந்திரனிடம் ஒப்புவித்து மறைந்தான். செக்கச்செவேலென்றிருந்த வானம் சற்றுநேரத்துக்கெல்லாம் ஒரே நீலமாய்த்தோன்றினது ஒரு பெரும் இந்திரஜால வித்தைபோல் தோற்றிற்று. ஆ! ஆ! அம்மாறுதலின் வியப்பைத்தான் என்சொல்லுவேன். சிறிது நேரத்துக்குமுன் நெருப்புத்தழலிற் கால்வைத்தாற்போலிருந்த இடங்கள் இப்பொழுது பனிநீர் தெளித்துப் பாதங்களுக்குக் குளிர்ச்சியா

யிருந்தன. முன் பார்க்கக்கூசிய ஆகாயம் இப்பொழுது வைத்த கண்களை வாங்காமல் பார்க்கும்படி அழகாயிருந்தது. முன் சூனியம்போற் றோன்றின ஆகாயம் இப்பொழுது அமிர்த கிரகங்களைப் பொழிகின்ற சந்திரனாலும் வைரம்போல் பளீர்பளீரென்று ஒளிராநின்ற நட்சத்திரக்கூட்டங்களாலும் பொலிவுற்று மிக்க கம்பீரமாய்த்தோன்றிற்று. கொல்லுலைக்கூடத்தினின்று எழும்பும் தீக்காற்றுக்குச் சமமாய் வீசிய நெருப்புக்காற்று இப்பொழுது பொதியமலைச்சாரலினின்று வீசும் தென்றற்காற்றுக்குச் சமமான குளிர்ச்சிபொருந்தியதாயிற்று. அக்காட்டில் பட்டுப்பட்டென்றெரித்த நிலவை அநுபவிக்கப் பிராணிகள் ஆங்கில்லாதது ஆளில்லாமங்கைக் கழகுபோலாயிற்று. நெட்டுயிர்ப்போடுற்ற பிணம்போற்கிடந்த நம்நம்பிமேல் குளிர்ந்தகாற்றுப் பட்டவுடனே அவனும் களைதீர்ந்து கண்விழித்து அங்குமிங்கும் பார்த்தான். எல்லாம் புதுமையாய்க் காணப்பட்டன. குளிர்ந்த காற்று படப்பட அவன் நாவரட்சியும் சிறிது தணிந்தது. உடனே தன் இன்னுயிர்க்காதலி கடைசியாய்ச்சொன்ன வசனங்கள் அவன் ஞாபகத்துக்கு வந்தன. உடனே தன் உடைவாளைக்கொண்டு மிக்க சிரமப்பட்டு ஓர் பெருங்குழி தோண்டினான். பக்கத்திற் படுத்துத் தூங்குபவள்போற்கிடந்த தன்னருங்காதலியை மெல்ல எடுத்து அக்குழியிலிட்டு மண்ணைத்தள்ளி மூடினான். இளைப்பின் மிகுதியால் அவ்விடத்திலேயே படுத்துக்கண்ணயர்ந்தான். பேயுந்தூங்கும்படியான நடுநிசியில் இரண்டொருமுறை அவன் நாவெடித்து இரத்தம் அவனையறியாது உட்சென்றது. அதனால் அவன் உயிர் பிழைக்க நேரிட்டது. விடியற்காலையில் அவன் மெய்ம்மறந்து தூங்கினான். அச்சமயம் அவ்வழியாகச் சில பிரயாணிகள் மூட்டைமுடிச்சுக்களை ஒட்டகங்கள்மேல் போட்டுக்கொண்டு சென்றனர். பிணம்போல் ஒரு மனிதனும் ஒரு குழந்தையும் படுத்திருப்பதை அவர்கள் கண்ணுற்றுப் பரிதபித்து அவ்விடம் சென்றார்கள். மூச்சிருந்ததைக்கண்டு சந்தோஷித்தனர். பெருங்குரலுடன் கூப்பிட்டுப்பார்த்தும் நம்பி எழுந்திருக்கவில்லை. பலமாய்ப் புரட்டிப்புரட்டி அசைக்கவே ஒருவாறு கண்விழித்துக்கொண்டான். மறுமுறை கண்மூடினான். மறுமுறை அசைத்து எழுப்பினார்கள். எழுந்து ஒரு நிமிஷம் உட்கார்ந்து உடனே படுத்துவிட்டான். திரும்பவும் எழுப்பினார்கள்.

அப்பொழுதும் தொந்திரவு பண்ணாதேயுங்கள் என்று சொல்லிப் படுத்துவிட்டான். அவர்கள் அம்மட்டோடு அவனை விடவில்லை. விஷயங்களை விசாரிக்கவேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு அதிகமாயிருந்தமையால் கடைமுறை எழுப்பி உட்காரவைத்தார்கள். அப்பொழுதுதான் சிறிது தூக்கக்கலக்கம் நீங்கிற்று. கண்களைத்துடைத்து நன்றாய்ப்பார்த்தான். மானுட உருவங்கள் தட்டுப்பட்டன. கனவோ அல்லது உண்மையான தோற்றமோவென்று மறுபடியும் கூர்ந்து பார்த்தான். உண்மையான உருவங்களென்றே உணர்ந்தான். அவர்கள் இவனை நோக்கி "எக்குலத்தாய்? யாதுன்னூர்? யாதுன் பேர்? நீ வருதற்கென்னிமித்தம்? சகல விவரங்களையும் கட்டுரைத்துக்காண்" என்று குசலப்பிரச்சினம்பண்ணினர். உடனே சோறிட்டுத்தண்ணீரும் வார்த்தார்கள். "அன்னதாதா சுகீபவா" என்று மனமுவந்து புகழத்தொடங்கினான் அந்நம்பி. வெள்ளாட்டுப்பால் கறந்து பஞ்சினால் நனைத்துச் சிறிதுசிறிதாய்க் குழந்தையின் வாயிற் பிழிந்தனர். போனஉயிர் ஒருவாறுமீண்டது. நம்பிக்குங்களைதெளிந்து சிறிது திடங்கண்டஉடனே மற்றையப்பிரயாணிகளதுஉதவியால் தன்னருங்குழந்தையையும் தூக்கிக்கொண்டு எல்லோருடனும் லாகூர் நகர்வந்துசேர்ந்தான். அங்கே உள்ள ஓர் சத்திரத்தில் குழவியும் தானும் வாசஞ்செய்துகொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

எஸ். சாமிநாதையர்.

பருத்திக்கொட்டையின் அற்புத உபயோகம்.

இவ்வுலகிலுள்ள தேசங்களில் பருத்தி நன்றாய் விளைகிற இடங்கள் நம் இந்தியாவும், எகிப்தும், அமெரிக்காவுமே. அமெரிக்கர்போல் அவ்வளவு நன்றாய் நாம் பருத்தி சாகுபடி செய்யாவிடினும் கூடியவரை நம் குடியானவர் பருத்தி சாகுபடி செய்வதிற் கைதேர்ந்தவர்களென்றே சொல்லவேண்டும். பருத்தியைப் பறித்தபிறகு எஞ்சிய கொட்டையை நாம் வியாபாரச்சரக்காக உபயோகிக்கிறோம். அதனைக் குடித்தனக்காரர்கள் வாங்கி மாடுகளுக்குத் தீனியாகஉபயோகித்து வருகின்றனர். கறவைமாடுகளுக்கு ஆட்டியும் வண்டிமாடுகளுக்கு ஆட்டாமலும் வைப்பது வழக்கம். பருத்திப்பாலைச் சாதாரண

ஜனங்கள் சாப்பிடுகிறார்கள். இவ்வுலகில் 50 லட்சம் டன் பருத்தி வருஷாவருஷம் சாகுபடியாகிறதாக ஒருவாறு கணக்கிட்டிருக்கிறார்கள். அவற்றில் நூற்றுக்கு எண்பது அமெரிக்காவில் மட்டும்பயிராகிறது. மீதம் 20 பாகம் எகிப்திலும் இந்தியாவிலும் பயிராகின்றது. அமெரிக்கர் இதன் கொட்டையை உபயோகிக்கும் விதம் மிக அதிசயமானது. அவர்கள் அதிலிருந்து எண்ணெயெடுக்கிறார்கள். அந்த எண்ணெயைச் சுத்திசெய்து சமயலுக்கு நாம் நல்லெண்ணெய், தேங்காய் நெய் உபயோகிக்கும் வண்ணம் உபயோகித்து வருகின்றனர். அது வாசனையாகவுமிருக்கிறதாம். சுத்தப்படுத்தாத எண்ணெய்க்கும் சுத்தமான எண்ணெய்க்கும் பச்சையான நிலைமையில் யாதொரு வித்தியாசமும் தெரியாது. சுத்தப்படுத்தாத எண்ணெயைக் காய்ச்சினால் ஓர் வகை துர்க்கந்தம் வீசும். அவ்வித துர்க்கந்தம் மற்றொரு எண்ணெயில் கிடையாது. எண்ணெய் எடுத்தபிறகு மீதமாகிற சக்கைகளைச் சாதாரணமாய் அடுப்பெரிப்பதற்கு உபயோகித்து வருவது வழக்கம். அமெரிக்கர் இப்பொழுது அதனைக் காகிதம் செய்வதில் உபயோகிக்கின்றனர். அதனால் செய்யப்படும் காகிதம் மிக்க வெண்மையாகவும் நாணயமாகவுமிருக்கிறதாம். அமெரிக்காவில் சாதாரணமாய் மரங்களை வெட்டி அதன் சிறு துண்டுகளிலிருந்தே காகிதம் செய்துவருகின்றனர். அவ்வாறுசெய்வதில் செலவு அதிகமாவதன்றி சொற்ப பழுப்புமிருக்கிறது. பருத்திக்கொட்டையின் சக்கையினால் செய்யப்படும் விஷயத்தில் மூன்றில் ஒருபங்குசெலவே பிடிக்கிறதாம். இனிக் காகிதம் விலை குறையும் என்று தோற்றுகிறது. அவ்வாறு வரும்பக்ஷத்தில் லோகத்துக்கே பெரும் க்ஷேமம் உண்டாகும். காகிதம் செய்வதற்காக அமெரிக்கர் தங்கள் காடுகளிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டிக் காடுகளை அழித்து தேசத்தைப் பொட்டலாக்கி வந்தனர். மிக அழகான காடுகளெல்லாம் அழிந்து அதனால் மழை முதலிய வளங்குன்றி நாடு கெட்டுப்போகுமென்று பலர் பயப்படுவதற்கு ஏதுவாயிருந்தது. இனி அப்பயமும் நீங்கிப்போயிற்று. தேசத்துக்குக் காடுகள் எவ்வளவோ நன்மை பயக்கின்றன. சகல பிராணிகளுக்கும் ஆதாரமாயிருக்கும் காடுகள் தேசத்துக்கு அழகையும் ஐசுவரியத்தையும் தருகின்றன. குடித்தனக்காரர்களுக்குக் காடுகளே சாகுபடிக்குப் பெரும் சாதனமானவை. தவசிகள் யோகத்துக்கும் காடேயோக்கியமானது. நம்மிந்தியாதேசம் நம் விசாலமான காடுகளினாலேயே மிகப் பெருமையடைந்து வந்தது. அமெரிக்காவின் காடுகளுக்கு இனி க்ஷேமம்தான். அவர்களது க்ஷேமம் நமக்கும் க்ஷேமத்தைப்பயக்கும் என்பது திண்ணம். நம் குடியானவர்களும் வியாபாரிகளும் இவ்விஷயத்தை நன்கு கவனித்து பருத்திக்கொட்டையை அமெரிக்கர்போல் உபயோகிக்கத்தகுந்த வண்ணம் முயற்சிசெய்து பெருத்த இலாபமடைந்து நாட்டின் க்ஷேமத்தை விருத்திபண்ணுவார்களாக.

பத்திராதிபர்.

இந்திய கவர்னர் ஜெனரல்:—நமது ராஜப்பிரதிநிதியான மாக்ஷிமைதங்கிய கர்ஸன்பிரபு அவர்களின் உத்தியோககால முடிவு சமீபித்துவிட்டது. இவர்கள் இன்னும் ஒரு வருஷம் இவ்வேலை பார்த்துவரும்படி உத்திரவு பெறுவரென்று சில பத்திரிகைகளும், இவருடைய ஸ்தானத்தில் தென்னாபிரிக்காக் கம்மிஷனராயிருந்து வரும் மில்னர்பிரபு அவர்கள் நியமிக்கப்படுவர் என்று வேறு சில பத்திரிகைகளும் கூறுகின்றன. ஆனால் சமீபத்திற்கிடைத்த சீமைத்தந்தியினால் இங்கிலாந்து யுத்த இலாகாக் காரியதரிசியாகிய மிஸ்டர் பிராடரிக்கே இந்திய வைஸிராயாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

* * * *

மற்றோர் மகமதிய ஜில்லா கலெக்டர்:—சிறப்புற்றோங்கிய நமது மாஜி சென்னை மாகாணாதிபதியாகிய ஸர் ஆர்தர் ஹாவ்லாக் பிரபு அவர்களின் ஆளுகையில் சப்கலெக்டராயிருந்த மிஸ்டர் மகம்மது ராஜாகான் அவர்கள் ஜில்லா கலெக்டராக நியமிக்கப்பட்டது யாவரும் அறிந்தவிஷயம்.

இப்பொழுது, ஆம்தில்பிரபுவின் அரசாட்சியில் மூன்றாவது வகுப்பு டிப்டிகலெக்டரான ஒரு மகமதிய கனவான் ஜில்லாக்கலெக்டராக நியமனம் பெறும்பாக்கியம் பெற்றிருக்கின்றனர். இக்கனவான் பெயர் மிஸ்டர் கான்சாஹிபு மகமது அஜிஸ்உடீன் சாஹிபு பகதூர். இவர் தென்னாற்காடு ஹெட்குவார்ட்டர் டிப்டிகலெக்டராயும் கூடலூர் முனிசிபாலிடியின் சேர்மனாயும் இருந்தவர். இவர் தற்காலத்தில் ரஜாவிலிருக்கும் மிஸ்டர் ராஜாகானின் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் மிகவும் வேலைத்திறமை வாய்ந்தவர்போலும்.

* * * *

தர்பாங்கா மகாராஜாவின் நன்கொடை:—தருமகுணமுந் தாராளசிந்தையுமுள்ள தர்பாங்கா மகாராஜா அவர்கள் தாம் லாகூருக்குச் சமீபத்திற்சென்றிருந்தபொழுது ஹிந்துமாணவர்கட்கும் ஸீக்கியமாணவர்கட்கும் தேவாலயம் கட்டுவிக்க 10,000 ரூ. நன்கொடையளித்தனராம்.

* * * *

ஓர் நூதன வெளிப்பாடு:—இம் மதுரை ஜில்லாவைச்சேர்ந்த கண்டப்பநாயக்கனூர் ஜமீன்தாரியில் யதேஷ்டமாய்த் தாதுவர்க்கம் செழித்திருப்பதாகச் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதில் பற்பல லோகங்கள் அகப்படுமென்றும், "இராணி தாதுவர்க்க அபிவிருத்திசங்கம்" என்ற ஓர் ஐரோப்பிய வர்த்தகச்சங்கம் அவற்றில் வேலைசெய்யப்புகுமென்றும அறிய சந்தோஷிக்கிறோம்.

* * * *

அமெரிக்காவும் ஸ்திரீகளும்:—இக்கண்டத்தில் இரணவைத்தியர்களாய் 4555 ஸ்திரீகளும், பிரசங்கிகளாய் 1235 ஸ்திரீகளும், பத்திராதிபர்களாய் 888 ஸ்திரீகளும், நியாயவாதிகளாய் 208 பெண்களும், சிற்பசாஸ்திரிகளாய் 22 ஸ்திரீகளும், இஞ்சினீராய் 127 பேர்களும், சாஸ்திரிபண்டிதர்களாய் 337 பேர்களும் நியாயாதிபதிகளாய் இருவரும் இருக்கின்றார்களாம்.

* * * *

பாஸ்டியூர் நாய்கடி சிகிச்சாசாலை:—இது ஸ்தாபிக்கப்பட்டது முதல் நாளதுதேதிவரையில் இச்சிகிச்சாசாலையில் வைத்தியம் செய்துகொள்ளவந்த சென்னை ராஜதானிவாசிகளின் தொகை 20-க்குக் குறையாதென்றும், இதுகாறும் சென்னை ராஜதானி நன்கொடையாக வருஷா வருஷம் பெற்று வந்த 1,500 ரூ. போதாதென்றும் இதன் கௌரவ காரியதரிசியாகிய லெப்டினண்ட்கர்னல் பாம்பர், ஐ. எம். எஸ். சென்னை ராஜாங்கப்பிரதம காரியதரிசியவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டதன் பேரில் மதிராஸ் கவர்னமெண்டார் இனி 2,000 ரூ. நன்கொடையளித்துவருமாறு உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

* * * *

ஒட்டிக்கொண்டிருக்கும் இரட்டைப்பிள்ளைகள்:—மைசூரைச்சேர்ந்த கனையூரில் முதுகுப்புறத்தினடியில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கும் இரட்டைப்பிள்ளைகள் பிறந்து தற்போது ஜீவியதிசையிலிருந்து வருகின்றன. இப்பிள்ளைகள் தம்பெற்றோரால் அடுத்த நகரங்கட்கு விசேஷகாலங்கட்குக் கொண்டுபோகப்பட்டு

யாவருக்கும் விநோதமும் பெற்றோருக்கு நல்லவரும்படியும் விளைவிக்கின்றனர். ஒரு குழந்தை உணவுகொள்ளும்போது மற்றது மற்றொரு பக்கம் பார்த்துக்கொண்டிருக்குமாம். இங்கொரு விசேஷமென்னவெனில், இரு குழந்தைகட்கும் ஒரே மலத்துவாரமும் ஒரே ஜலத்துவாரமும் இருப்பதாம். முதுகு முழுதும் ஒட்டியிருந்த 18 வயதுப் பெண்களிருவர் சில ஆண்டுக்குமுன் பாரீஸ் நகரில் ரணவைத்தியர்களால் பிரித்தெடுக்கப்பட்டதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்பிள்ளைகளுக்கு ஒட்டியிருக்கும் பாகம் சிறிதாயினும் மலசலத்துவாரம் ஒன்றாயிருத்தலால் ரணவைத்தியர்களால் பிரித்தெடுக்கப்படாபோலும். இதுவும் ஒரு கலிகால விந்தையே.

* * * *

பிரதான மந்திரி ஒருவர்பேரில் சாட்டப்பட்ட குற்றம் :— ஹைதிராபாத்தின் பிரதான மந்திரியாகிய கிருஷ்ணபிரசாத் என்பவர் ஒரு பெரிய குற்றஞ் செய்ததாக சிக்கந்தராபாத்து கண்டோன்மெண்ட் மாஜிஸ்ட்ரேட்டு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டு நிற்கிறார். அதன் விவரமாவது :—எதிரியாகிய மேற்படி மந்திரி கூஸியாபீகம் என்னப்பட்ட ஒரு பெண்ணை துராகிருதமாய் எடுத்துக்கொண்டு போய் நியாய விரோதமான விஷயமென்று தனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி பலவந்தம் செய்ததென்பதே. அந்த மந்திரி ஹிந்து மதஸ்தர். அந்தப்பெண்ணோ தன் பாட்டனாருடைய சவரக்ஷணையிலிருக்கிற மகம்மதிய மதஸ்தளாகிய மைனர் பெண். இப்பொழுது அந்தப் பெண் எதிரியினால் தனது அரண்மனையில் வைக்கப்பட்டிருக்கிறாள். கண்டோன்மெண்ட் மாஜிஸ்ட்ரேட்டு மேற்படி வியாச்சியம் தன் அதிகார எல்லைக்குட்பட்டதல்லவென்று தள்ளிவிட்டபோதிலும் அந்த விஷயம் இன்னும் யாதொரு முடிவும் பெறவில்லையென்று தோற்றுகிறது.

தி—வ.

OFFICE OF THE ... MADRAS.

உ

குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

சம்புடம் 2 } 1903௵ மேயீ { இலக்கம் 6

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தின் தென்பால் வழங்கும் அமிழ்தினுமினிய தமிழ் முதுமொழிக்கு ஈராயிர வருடங்கட்கு முன்னிருந்த சங்கங்கள் மூன்று. அவை முறையே தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப்படும். இங்ஙனம் பேரறிவாளரான புலவர் பெருமக்கள் பல்லோரை ஒருங்குகூட்டித் தமிழை வளர்க்கும் வண்ணம் முதலில் தொடங்கினோர் **காய்சினவழுதி** என்னும் பாண்டி வேந்தரேயாவர். பின்னர் இவர் வழித்தோன்றியோரும் இவர் கொண்ட இந் நன்முயற்சியைத் தாமும் விடாது மேற்கொண்டு நடத்தி வருவாராயினர். இதன்றிறம் விரிக்கிற் பெருகும். இச்சங்கங்களொழிந்தபின் சமணப் புலவர்கள் பற்பல இலக்கிய இலக்கண நூல்களைச்செய்து தமிழ் வளர்ப்பாராயினர். பின்னர் ஆங்காங்குத் தோன்றிய பல்பெரும் புலவரும் ஆதீனத்தவர்களும் சிற்சில சமஸ்தானாதிபதிகளும் இத்தொழிலை மேற்கொண்டு வந்தனர். ஆங்கில வன்மைபெற்ற கிறிஸ்தவப் பாதிரிகளுட் சில்லோரும் தமிழுக்குதவியாயிருந்தனர். ஆயினும் பல்பெரும் புலவர் ஓரிடத்திலிருந்து தமிழ் வளர்ச்சி செய்வான் யோசித்தற்குரிய இன்றியமையாச் சிறப்பிற்றாய **சங்கம்** ஒன்று இல்லாமை அறிஞர் மனத்தைக் கவலைக்கடற்குட் புகுத்திய தென்பதை மறுப்பவர் யாவர்?

உக்கிரப்பெருவழுதி காலத்தே கடைச்சங்கம் ஒடுங்கியது. ஒடுங்கிய இடத்தே தோன்றும் என்னுஞ் சித்தாந்தக் கருத்துப்படி **மதுரைத் தமிழ்ச் சங்கம்** என்னும் பெயர் வாய்ந்த இக்காலத் தமிழ்ச் சங்கமானது சேது

சமஸ்தான வேந்தர் வழித்தோன்றிப் பெரும்புகழ் பெற்றிருந்த ஸ்ரீமாந் பொன்னுசாமித் தேவரவர்களின் அருமைத் தவப் புதல்வரும் பாலவநத்தம் ஜமீந்தாரும் இலக்கிய இலக்கண சாஸ்திர நூலுணர்ச்சியான் மிக்காரும் "இருவேறுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு" என்ற மெய்ம்மொழிப் பொருளை வேறுபடுத்தும் பெற்றிவாய்ந்த பேரறிவாளரும் ஆகிய ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் பரிபாலனத்தே இம்மதுரையம்பதிகண் தோன்றுவதாயிற்று. இது தோன்றி இரண்டு வருடங்களாகின்றன. மாணுக்கர்க்கு உண்டி, உடை முதலியன கொடுத்துச் செந்தமிழ்க் கல்வி கற்பிக்கும் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையும், யாவரும் வந்து எடுத்துப் படித்து மகிழ்தற்குரியவாகத் தமிழ் சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் பற்பல நூல்களைத்தொகுத்து வைத்திருக்கும் பாண்டியன் புத்தகசாலையும், பற்பல நூல்களையும் பத்திரிகைகளையும் வெளியிடுதற்கு இன்றியமையாத சாதனமாகிய மிகப்பெரிய யந்திரங்களா னமைக்கப்பட்ட தமிழ்ச்சங்க முத்திராசாலையும் இச்சங்கத்தின் அங்கங்களாக அமைக்கப்பெற்றுள்ளன. தமிழபிமானிகட்குப் பெரிதும் பயன்படற் பாலதாக செந்தமிழ் என்னும் பெயரால் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை யொன்று புத்தக ரூபமாக சென்ற சுப்கிருதுஹு கார்த்திகைமீ தொடங்கி இச்சங்கத்து நின்று வெளிப்பட்டு வருகின்றது. இதனுள் அரிய பெரிய விஷயங்கள் பல தக்க பண்டிதர்களால் வெளியிடப் பெறுகின்றன. தற்காலத்து ஆங்கில கல்விச்சாலைகளிற் கற்கும் மாணுக்கர் தமது தாய் பாஷையாகிய நம் அருமைத்தமிழை அலட்சியஞ் செய்து வருவதை யாவருமறிவர். அன்னோர் அது செய்யாது ஊக்கத்துடன் விரும்பிக் கற்று நல்வழிப்படுமாறு கருதி மெட்ரிக்குலேஷன், எப். ஏ., பீ. ஏ. வகுப்புத் தமிழ்ப்பாடங்களில் அவரைப் பரீக்ஷித்துத் தேறுமுறைக் கேற்பப் பொருட் பரிசும், யோக்கியதா பத்திரமும் அளிப்பதாக ஒரு சிறந்த ஏற்பாடு இச்சங்கத்தவர் செய்திருத்தல் யாவரும் கொண்டாடற் பாலதே. இப்பரிக்ஷையில் தேறினவர் விவரத்தை நம் பாநுவில் முன்னரே வெளியிட்டிருக்கின்றனம்.

இச்சங்கத்தினது வித்துவக்கழகத்தினர் தமிழ் வித்வான்கள், ஆங்கிலத் தமிழ் வித்வான்கள், சமஸ்கிருத வித்வான்கள், ஆங்கில சமஸ்கிருத வித்வான்கள் என நான்குவகுப்பினராவர். இவ்வாறு தற்போது இங்கு வித்வான்களாயிருப்போர் ஐம்பத்தேழுபேர், இன்னோர் இச்சங்கத்தின் ஒவ்வொரு அப்த பூர்த்தி மகோற்சவகாலத்தும் இம் மதுரையம்பதிக்கண் ஒருங்குகூடி தமிழபிவிர்த்திக்கு வேண்டிய விஷயங்களை ஆலோசித்துத் தீர்மானிப்பர். இம்

முறைப்படி இச்சங்கத்தின் இரண்டாம் வருஷோத்சவக் கூட்டம் நிகழும் 1903ஹு மேமீ 21உ யன்று நிறைவேறிற்று.

அன்று மாலை 3 மணிக்கு மதுரை வடக்கு வெளிவீதியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்ச்சங்கம் முத்திராசாலையில் வித்வான்களும் பிரபுக்களும் வந்து சிற்றுண்டி, பழம், காபி முதலிய உட்கொண்டு யாவரும் அணியணியா யமைக்கப்பெற்ற ஆசனங்களில் அமர்ந்தனர். இத்தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் பாண்டித்துரையவர்க ளெழுந்து தெய்வ வணக்கம் கூறி இச்சங்கத்து வித்துவக்கழகத்தவரு ளொருவரும் திரிசிரபுரம் எஸ். பி. ஜி. கலாசாலைப் போதகரும் ஆங்கில வித்துவப்பட்டங்களு ளுயர்ந்ததான எம். ஏ. பட்டம் பெற்றவருமான கனம் குருராவ் அவர்களை இக்கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியா யிருக்குமாறு வேண்டினார்கள். சபையோர் யாவரும் தமது கரகோஷத்தால் தம் விருப்பும் இதுவேயென்று வெளியிடக் கனம் குருராவ் அவர்களும் அங்கீகரித்து அக்கிராசனம் வகித்தார்கள்.

அநந்தரம் சங்கத்தின் காரியதரிசியவர்கள் இரண்டாம் வருஷோற்சவத்தின் அறிக்கைப்பத்திரம் வாசித்தார்கள். இவ்வறிக்கைப் பத்திரம் (அச்சிட்ட புத்தகம்) அங்குவந்திருந்த யாவர்க்கும் கொடுக்கப்பட்டது. பின்னர் இக்கூட்டத்திற்கு வரமுடியாமைபற்றி ஸ்ரீமாந் பாஸ்கரசேதுபதி மஹாராஜா அவர்கள், பிரமமஸ்ரீ மஹா வித்வான் உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய சிலர் அனுப்பிய விக்யாபனக் கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

இம் மஹோற்சவத்தின் பொருட்டு இங்குவந்திருந்த வித்துவசிரோமணிகளான ரா. அப்புவையங்காரவர்கள், எம். ஆர். ஸ்ரீநிவாசையங்காரவர்கள், அம்பலவாண நாவலரவர்கள், எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள், திருமயிலை சண்முகம் பிள்ளையவர்கள், தி. பா. சிவராம பிள்ளையவர்கள், தரங்கை ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள், முதலியவர்களில் சிலரும் மதுரைமாநகரத்தில் வசிக்கும் வித்துவ சிகாமணிகளிற் சிலரும், சங்க சம்பந்தமாகப் பேசினார்கள். இவருள் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள் தற்காலம் ஆங்கில பாஷையில் வெளிவந்துள்ள அகராதிகளைப்போலத் தமிழில் விரிவான அகராதி யொன்றும், தெரிந்தமட்டில் வித்வான்கள் சரித்திரங்களும், இச்சங்கத்தவரால் எழுதப்பட்டு வெளிப்படவேண்டுமெனவும், தி. பா. சிவராமபிள்ளையவர்கள் தமிழ் நாட்டுப் பல நகரங்களிலு மிருக்கிற தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் கற்கும் மாணுக்கர்களையும் தமிழில் பரீக்ஷித்து அன்னார் தேறுமுறைக் கேற்பப் பரிசும் பட்டமு மளிக்கவேண்டு மெனவும் பேசினார்கள். இவ்விருவர் வேண்டுகோளையும் சங்கத்து அக்கிராசனாதிபதி

யவர்கள் அங்கீகரித்து ஆதராதி வேண்டுவது மிகவும் அவசியமே யெனவும் அது இப்போது யாழ்ப்பாணம் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ அ. குமாரசாமி பிள்ளையவர்களால் எழுதப்பட்டு வருவதாயும் முடிவுபெற்றவுடன் வெளிவருமெனவும், சரித்திரங்கள் சங்க வித்வான்களால் எழுதப்படவேண்டுவது அவசியமே யெனவும், கிராமத் தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கிலக் கலாசாலைகளில் நடக்கிற விதம் ஒரே விதமான பாடங்கள் அமைக்கப்பெறாமல் ஒவ்வொரு நகரத்தும் ஒவ்வொரு பாடங்களை நடத்தலால் பரீக்ஷை நடத்தல் தற்போது அசாத்திய மெனவும் பாடங்களை ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவந்து பின்னர் அம்முறை ஏற்படுத்துவது பற்றி யோசிக்கலாமெனவும் கூறியதுடன் ஏனையோர் பலரும் பேசியவற்றுள் தம்மைப் பேருபகாரியென்று கொண்டாடியதைத் தாம் அங்கீகரியாமல் தாம் ஒன்றுஞ்செய்யவில்லை யெனவும் அங்கத்தவராகிய கல்விமான்கள் செய்யும் உபகாரமே பெரிதெனவும் மிகவும் பணிவுடைமை காட்டிப் பேசினார்கள். இங்கு அக்கிராசனாதிபதியவர்கள் "பெருக்கத்து வேண்டும் பணிவு" "பணியுமா மென்றும் பெருமை" என்றவண்ணம் பேசியதானது யாவர்மனத்தும் நின்று ஒவ்வொரு நிமிஷத்தும் மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருப்பதே. தளர் நிலையில் இருந்த தமிழை உயர் நிலைக்குக் கொண்டுவர முன் வந்து கைகொடுத்த இவ்வள்ளலது வள்ளற் றன்மையைப்பற்றி வியந்து புகழ்ந்து ஏனைப்புலவர் பலரும் பேசியது அன்னார் கடமையேயன்றிப் பிறிதில்லை. முடிவில் அப்போது அக்கிராசனம் வகித்த கனம் குருராவ் அவர்கள் தமது கல்விவன்மையும் வாக்குச் சாதுரியமும் வெளிப்படுமாறு எல்லா விஷயங்களையும் பற்றி இனிது பேசினார்கள். அப்பால் சந்தன தாம்பூல புஷ்பங்களால் சபையோர் பலரும் உபசரிக்கப்பட்டனர். அதன் பின்னர் போனகிராப் வாத்திய மூலமாக தேவார திருவாசகங்களும், சில சங்கீதவான்கள் பாடல்களும், கடவாத்தியம் பிட்டில் இந்துஸ்தானிப் பாடல்களும், புகைவண்டி விகடமும், ஸ்ரீமாந் பாண்டித்துரைசாமியவர்களின் சைவப்பிரசங்கமும் செவிக்கின்பம் பயக்க கேட்பித்தமை சபையோர்க்குப் பெருமகிழ்ச்சி யூட்டியது. பின் வாழ்த்துக் கூறி 6 மணிக்கு அன்று சபை கலைந்தது.

மறுதினம் காலை 8 மணி முதல் 12 மணி வரையில் சங்கத்து அங்கத்தவர்கள் கூடி இவ்வருடத்து நிகழவேண்டும் விஷயங்களைப் பேசினார்கள். மாலையிலும் இச்சபைகூடிற்று. மறுதினம் மாலையில் 5 மணிக்கு சுதேசகலாசாலையில் பொதுக்கூட்டங்கூடிற்று. அங்கு இச்சங்கப் புலவருள் ளொருவரான நாகூர் மகா-ா-ா-ஸ்ரீ வா. குலாம்காதிறு நாவலரவர்கள் பாடியனுப்பிய

புலவராற்றுப்படை அரங்கேற்றப்பட்டது. அப்பால் மகா-ா-ா-ஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்களால் நான்காந் தமிழ்ச் சங்கமாட்சிமை என்ற விஷயம் இனிது பிரசங்கிக்கப்பட்டது. பின்னர் மகா-ா-ா-ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களால் ஏடுதேடும் விஷயம் செவ்விதாகப் பிரசங்கிக்கப்பட்டது. பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் இவ்வெல்லா விஷயங்களையும் பற்றிப் பேசினார்கள். (இவ்விஷயங்களைப்பற்றி அடுத்த பத்திரிகையில் விரித்துக் கூறுவாம்). பின்னர் நடந்த சினிமோடோகிராப் (Cinemotograph) காட்சி வியக்கத்தக்கதே. அப்பால் சபை கலைந்தது. இத்துடன் வருஷோற்சவக் கொண்டாட்டம் குறைவின்றி நிறைவேறின.

நமது பானுவில் வெளியிடப்பட்டுவந்த ஞானாமிர்தம் என்னும் சிறந்த சைவசித்தாந்த நூலானது திருவாவடுதுறை ஆதீன வித்துவானும் இச்சங்கத்துத் தமிழ் வித்வான்களுள் ஒருவரும் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ சேற்றூர் மு. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் பரிசோதனைக்குள்ளடங்கி இச்சங்கத்தினின்று அச்சிட்டு வெளிப்படுத்தப்படும் என்ற விஷயம் செந்தமிழ்ப் பத்திரிகையை வாசிக்கும் நண்பர்பலருமறிவர். இது தமிழ் நாட்டுக்குப் பேருபகார மாகும். இங்ஙனம் வெளிவருதலறிந்தமையானே நம் பானுவில் வெளிப் படுத்தலை நிறுத்தப்பட்டது. இங்ஙனம் இச் சங்கத்தால் நமது தமிழ் நாடு அடையும் பயன் எண்ணிறந்தன. இச்சங்கம் நீடுவாழவும் இங்ஙனம் பெருமுயற்சிசெய்து வரும் ஸ்ரீமாந் பாண்டித்துரைசாமியவர்களும் இதற்குத் தக்க பொருளுதவி செய்த ஸ்ரீமாந் சேதுபதி மஹாராஜா அவர்கள் முதலிய கனவான்களும், தமிழும், தமிழபிமானிகளும் சீருற்றுச் செழிக்கவும் ஆலவாய்ப் பெருமானடிகள் திருவருள் நிறைக.

பத்திராதிபர்.

இச்சங்கத்துப் பதிப்பிடும் புத்தகங்களும் வரவு செலவு முதலிய பிற விஷயங்களும் அடுத்த பத்திரிகையில் பதிப்பிடப்படும்.

ப-ர்.

விவேக சிந்து

(தொடர்ச்சி)

2-ம் பிரகரணம்.

நதி சலம் கலந்தோடினபடியினாலே அதோகதியாய்ப்போயிற்று. உற்பத்தியான இடத்திலே கட்டுப்பட்டு நின்றால் சமஸ்த நதிகளையும் கெர்ப்பீகரித்துக்கொண்டு தான் ஆதாரமாய் நிற்கும். அந்தப்படியே ஜீவனும் தன்னிடத்திலே அசையாமல் நின்றால் மகாதத்துவம் பிரவேசித்து ஜகத்குருவாயிருப்பன். ஆனபடியால் மனத்தினுடைய மூலகற்பனையை நாசம்பண்ணி இந்திரியங்களைச் சங்கரிக்கவேண்டும். அப்போது ஜீவப்பிரமம் என்கிற பேதமில்லை. இந்த அநுபவத்துக்கு ஒரு அடையாளமுண்டு. பிரபஞ்ச சங்காரம் எப்படியென்றால் ஏகாக்கிரசித்தனாய்க் கேள். அந்த விவரஞ் சொல்லுகிறோம். பதார்த்த பாவனை நினைவே மாயாலட்சணம். அதே அவித்தையெனப்படும். மனம் முதலான இந்திரியங்களே சுகதுக்கத்தைக் கொடுக்கின்றன. அந்த அவித்தையிலிருந்து பிறந்த கற்பனையெப்பொழுது நாசமாயிற்றோ அப்பொழுது மாயை அவித்தை சங்காரமாம். அப்பொழுது சகலமான இந்திரிய சேஷ்டையும் மாறிப்போம். அப்பொழுது ஜனனமரணமில்லை. இந்திரிய விஷயங்களுக்கு என்று சொன்ன குரு சுவாமிக்குச் சீஷன் எனக்கு ஒரு சம்சயம் தோன்றுகின்றது. தேவரீர் சதுத்திரமயத் திருவுளம்பற்றவேண்டும். சுழுத்தி அவஸ்தையிலே கற்பனை நிச்சேஷமாய் லீனமாயிருந்தும் ஜீவனுக்கு ஜனனமரணங்கள் போகாமற்போயிற்று என்று விண்ணப்பஞ்செய்த சீஷனுக்குக் குருமூர்த்தி சொல்லுகிறார். தம்பி! கேட்ட சமுசயத்துக்கு உத்தரஞ்சொன்னால் சந்தேக நிவர்த்தி உடனே ஆகவேண்டும், சாவதானமாய்க்கேள். சுழுத்தி அவஸ்தையிலே கற்பனையில்லாவிட்டாலும் அக்ஞானம் தள்ளுபடாதபடியினாலே மறுமை போகாது. ஆத்மாவைச் சுழுத்தி யறியுமோ? அறியமாட்டாது. அறியாமல் அக்ஞானத்தோடுங் கூடிக்கொண்டு எவ்வளவுபரியந்தம் ஆத்மக்ஞானம் இல்லாமலிருக்கிறானோ அவ்வளவுவரை ஜனனமரணந் தப்பாது. குரு மூர்த்தியினுடைய கிருபா திருஷ்டியினாலே அக்ஞானமெங்கிற இருட்டுக் கெட்டுப்போனால் பின் சச்சிதாநந்த பரப்பிரம சொரூபமே பிரகாசிக்கும். சுழுத்தி காலத்தில் அக்ஞானமெங்கிற பெண் ஆத்மாவை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டிருக்குமானபடியால் சம்சாரம் விடாது. நீ கேட்ட சம்சயம் விருதாவாகப் போயிற்று. விருக்ஷாதிகளுக்கு என்னவிதமாய் சுழுத்தி வர்த்திக்கும். அக்ஞான கோப அவஸ்தை பொருந்தியிருக்கும்.·. இதற்கு அநுபவமே அடையாளம். அக்ஞான கற்பனை இந்த இரண்டினுடைய சொரூபந் தான் எப்பொழுது அறிந்தானோ அப்பொழுதே நாசமாம். இது குரு உபதேசத்தினாலே அக்ஞானம் நிச்சேஷமாய் நஷ்டமானாற் கற்பனாதீத பரப்பிரமம் பிரகாசிக்கும். அநுபவ பூமி நான்குண்டு. அது சொல்லுகிறோம். ஏகாக்கிரசித்தனாய்க் கேள். முதற் பூமி ரட்சித்து. இரண்டாம் பூமி கெதாயாத. மூன்றாம் பூமி சுனிஷ்டித. நான்காம் பூமி சுலீனித. இது குரு கிருபையினால் பிராப்தியாம். இதற்கு விவரம். பிரம்மாப்பியாசம் பண்ணச்செய்தே சொற்சொரூபத்திலே சித்தம் சமாசமாம். அதை விட்டுச் சம்சார வியாபாரத்திலே நாடும். மறுபடி சித்தத்தைத் திருப்பிப் பிராம்மாகாரம் பண்ணுமிது ரட்சித்து. சித்தம் சொற்சொரூபத்திலே சமாசமாயிருக்கிறது. அங்கே இருந்து சம்சாரமில்லை. என்னைப்பார்க்கிறது. திரும்பச் சொரூபத்திலே கூடியிருக்கிறது. இதுவே கெதாயத. மனம் சொரூபத்திலே உறைந்துத் ததாகாரமாய் ஆநந்தமே போகிக்கிறது சுனிஷ்டித. சித்தம் நிச்சேஷமாய் லியமாய்ச் சுத்தக்ஞான மாத்திரமே யிருந்து சுகமென்கிற வார்த்தை நிற்கும். இது சுலீனித. இப்படிப் பிரமாப்பியாசம் பண்ண இந்த நான்கு பூமியும் கைவசமாம். அப்புறம் பிரயாசமில்லாமற் பூரண அவஸ்தை வரும் இராஜயோகிக்கு. அது நிமித்தமாய் எங்கே இந்திரியம் பாய்ந்ததோ அங்கே பிடிக்கவேண்டும். அப்படியானாற் சுலீனித கைவல்யமான அவஸ்தை வரும். இல்லாவிடில் அது இந்திரியமோ, விஷயமோ, சத்துருவோ, அக்ஞானிகளுக்கு என்னென்று தெரியப்போகிறது. சிந்தை நிச்சேஷமாய் லீனமான சற்புருடருக்கு இந்திரியாதிகளே தேவதையாவார்கள். இத்தனை விஸ்தாரமேன் சொல்லவேண்டுமென்றால் மந்த புத்திகளாயிருக்கிற பேருக்குத் தெரியவேண்டுமென்று கிருபையினாலே சொல்லவேண்

டிற்று. தீவர புத்தியுள்ளவர்க்கு குரு வாக்கிய மொன்றினாலேயே தெரியவரும். உனக்கு இராஜயோகம் நிரூபித்தோம். இதைச் சதா காலமும் இருதயத்தில் இதே விசாரம்பண்ணி நிறுத்திக்கொண்டவன் மகாபுருஷன். ஒரு நிமிஷமாகிலும் சொற்சொரூபத்திலே சாவதானமாக இருந்தாற் பாவராசிகள் அந்த க்ஷணத்திலே வெந்துபோம். சொற்பனத்திலே கண்ட துரிதங்களெல்லாம் விழித்தவுடன் இல்லாமற் போனாற்போல நிசப்பிரபோதையிலே சமஸ்த பாவமும் தக்தமாய்ப்போம். சித்தை யவலம்பிக்காமல் மனம் நில்லாதென்றால் சகுணப் பிரமத்தைத் தியானிக்கவேண்டும். இருதய கமலத்திலே அஷ்டவித அர்ச்சனை, சோடச உபசாரத்தினாலே அந்நியபாவமாய்ப் பூசை பண்ணவேண்டும். அப்பொழுது சித்தத்தை மூடின இரஜோதமோ குண நிவாரணமாய் நிர்க்குண பக்தியின்மேல் பிரியம் வரும். தனக்குத்தானே அதன் பிறகு அந்த நிர்க்குண பரமபுருட யுக்தமான மகா சுகம் சமரசமாம். அவைகளுங் கூடாவிட்டால் அஷ்டாங்க யோகாப்பியாசத்தினாலே ஆனாலும் பக்திப் பிரசங்கத்தினாலே ஆனாலும் ஜீவ பரமாத்ம தாதாத்மியென்று சொன்ன குரு சுவாமிகளுக்குச் சிஷன் விண்ணப்பம் செய்கிறான். சுவாமி! பிரம்ம மென்கிறது எதற்குப் பெயர்? அதனுடைய விவரமெப்படி? பரமாத்மா சகுணமோ நிர்க்குணமோ? எந்தப் பரமாயிருக்கும்? மாயை யாருடைய சக்தி? எப்படி யிருக்கும்? அதன் சொரூப ஸ்திதி எப்படியிருக்கும்? அவித்தை எந்தப்பிரகாரமாயிருக்கும்? யாரை யநுசரித்துக்கொண்டிருக்கும்? பிரபஞ்சம் யார் நிர்மாணம் பண்ணினார்? எதனாலே நின்றது? ஜீவனென்கிற பதார்த்தம் என்ன? இந்த ஜீவனுக்குச் சொன்ன மரணங்கள் எப்படி வந்தது? சுவாமி! இந்த உத்தரங்களுக்குக் கிரமமாய் அனுக்கிரகித்து என் மனோரதம் ஈடேறப்பண்ணிச் சர்வக்ஞனாக்கவேண்டும் கிருபாசமுத்திரமென்று விண்ணப்பஞ் செய்ததற்குக் குரு சுவாமி திருவுளம் பற்றுகிறார்.

இரண்டாவது சுவாநுபவதிடப் பிரகரணம் முற்றும்.

பத்திராதிபர்.

திருவிளையாடற் காப்பு உரை.

சைவாசாரியராகிய பரஞ்சோதி மகாமுனிவர் அருளிச்செய்த திருவிளையாடற் புராணத்தின் முதற்கணுள்ள "சத்தியாய்ச் சிவமாகி" என்னும் பாட்டின் விரிவுரை:—

சத்தி யாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானை தன் செய்ய பொற்பாதமே.

இதன் பொருள்.

சத்தியாய் சிவமாகி தனி பரமுத்தி யான முதலை துதிசெய—(உயிர்களுக்குப் போகம் ஊட்டுதல் காரணமாக) சத்தியாகியுஞ் சிவமாகியும் (வீட்டைக்கொடுத்தல் காரணமாக) தனித்தலையுற்ற மேலாகிய முத்தித்தானமாகியும் நிற்குமுதல்வனை அவரது திருவிளையாடல்களைக்கூறு மிப்புராணத்தாற் றுதித்தற்கு, சித்தியானை தன் செய்யபொற்பாதம்—சித்திவிநாயகக்கடவுளின் சிவந்த பொன்போலுமரிய திருவடிகள், சுத்தியாகிய சொல்பொருள்நல்குவ—தூய்மையாகிய சொற்களையும் பொருள்களையும் யான் பெறும்வண்ணம் அருளிச்செய்வன என்றவாறு.

உயிர்களின்மீதுள்ள கருணையால் உலகினைப்படைக்குங் காலத்துச் சத்தியும் சிவமுமாய் இயைந்து நின்றே படைத்தலின் "சத்தியாய்ச் சிவமாகி" யெனவும், பாசம்நீங்கித் தனித்தவழி அவ்வுயிர்கள் தன் திருவடிக்கண் எய்தப்பெற்றுத் தான் அவற்றிற்கு இடமாய் நிற்றலின் "பரமுத்தியானமுதலை" யெனவும் கூறினர். "சுத்தியாகிய" வென்பது "குன்றக்கூறன்" முதலிய குற்றமின்றி "சுருங்கச் சொல்லன்" முதலிய குணம் உடையதாய் "அலங்காரமுறச் செய்தற்குக் கருவியாகிய" வெனப் பொருள்படும். ஞானசத்தி கிரியாசத்தி வடிவமாகிய அவரது திருவடிகளிரண்டும் சொல்லினையும் பொருளினையுமுணரும் தனது ஞானத்தினையும் அவற்றினைக் கவியாயமைக்குந் தனது செய்கையினையும் விளக்கமுறச் செய்வித்து சித்தியைத் தந்தருளுமியல்பினையுடையன வென்றற்கு "சித்திவிநாயகன் செய்யபொற்பாதம் சொற்பொருள் நல்குவ" வென்றுங் கூறினர்.

தனிப்பரமுத்தி—"பாசங்க ணீங்கத் தனித்தலை யுற்றமுத்தி"யென்றுதவின் முதனிலைத் தொழிற்பெயர்.

பாதம்—பால் பகா வஃறிணைப்பெயர்.

இனி சிவத்தினை முற்கூறாதுச் சத்தியை முற்கூறியது என்னகாரணம் பற்றியெனின் கூறுதும்; மும்மலமுநீங்கப்பெற்ற ஆன்மா அருளைத் தாரக

-மாகப் பற்றிக்கொண்டு சிவத்தையடையவேண்டுதலின் என்க. 'மெய்யருளாந்தாயுடன் சென்று பின் முறைதயைக்கூடி' யென்ற சுருதியாலும் இதனுண்மை யுணர்க. இன்னும், சிவம் பஞ்சகிருத்தியஞ் செய்யுங்கால் சத்தியால் அதனை இயற்ற வேண்டுதலின் தொழில்பற்றியும், உருவங்கொள்ளுங்கால் சத்தியே உருவமாதலின் வடிவுபற்றியும், சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரமா வென்னும் சிவபேதம் ஒன்பதில் சத்திக்குக்கீழுள்ள சிவபேதங்கள் யாவும் தன்னிடத்தினின்று தோன்றுதலின் உற்பத்தி பற்றியும் சத்தியின்றி யமையாமையின் இங்ஙனம் சிவத்தினது தொழில் வடிவு தோற்றமாகியவற்றிற்குக் காரணமாதற் சிறப்பு நோக்கியும், உயிர்கட்கு மாயை முதலியவற்றைப் பிரேரிப்பித்துப் பெத்தத்தின்கண் தனுகரண புவனபோகங்களைத் தருதலானும், முத்திக்கண் சிவத்திற்கு முற்பட்டு அருளாய்த் தோன்றுதலானும் அவற்றிற்குப் போகமோட்ச காரணமாதற் சிறப்பு நோக்கியும், உலகிற்குச் சத்தியும் சிவமும், மாதாவும் பிதாவு மாகலின் அருள் மிகுதியானும் உரிமையானும் மாதா சிறந்தமையின் "அன்னையும் பிதாவு"மெனவும் "அம்மையோ டப்பனாகி" யெனவும் கூறும் உலகியற் சிறப்பு நோக்கியும், தனக்குரித்தாய்த் தானாண்ட பாண்டிநாட்டரசாட்சியைத் தனக்குப்பின் சிவபெருமான் சுந்தரபாண்டிய மஹாராஜாவாக வெழுந்தருளி யாளும்வண்ணம் அம்மை கொடுத்தருளு மாதிக்கியம்பெற்ற இத்தலச்சிறப்பு நோக்கியும், அறுபத்துநான்கு சத்தி பீடங்களுள் இத்தலம் முதலாவது பீடமாய் எல்லா வுபசாரங்களும் முதற்கண் சத்திக்கு நடந்து பின் சிவத்துக்கு நடக்கு மியல்பு நோக்கியும், கூறியதாமென்றுணர்க.

இங்ஙனம்
சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடம்.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆளுமாறு.

(ஓர் மொழிபெயர்ப்பு).

[இஃது ஆங்கிலமொழியில் ஜெ. ஆர். ஸீலி என்பார் இயற்றிய "இங்கிலாந்தின் பெருக்கம்" என்னும் நூலின் இரண்டாந்தொகுதி உபந்நியாசங்களுள் IV-வது உபந்நியாசம். சென்னை பிரசிடென்சிகாலேஜ் பரிசின்பொருட்டு மொழிபெயர்த்தது].

இந்தியா இங்கிலாந்துக்கு இத்தன்மையான உறவுபூண்டுளதென்பதைப்பற்றி நான் ஆலோசித்து, இவ்வுறவு ஓர் அற்புதமென்பதின்றி எவ்வாறு அமையக்கூடுமென்பதை முந்திய உபந்நியாசத்தில் விளக்கினேன். இனி, நாம் ஓர் படிமேற்போய் அந்த சம்பந்தம் அற்புதமென்பதின்றி உண்டானதுபோல நீடித்துக்கொண்டு செல்ல ஒல்லுமா, அன்றி, ஆங்கிலேயரது இந்திய அரசாட்சி, வெகுநாள் நீடித்திராவிடினும் உள்ள நாள் உள்ளமட்டும் ஓர் வியக்கத்தக்க காரியமாகவேனும், அரசியலில் ஓர் அரும்போராற்றலாகவேனும் கணிக்கற்பாலதோ என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வாம். ஏனென்றால் இந்திய விஷயங்களைக்கற்றுணர்வதில் மாணாக்கனுக்குண்டாகும் பெரிய வருத்தம் யாதெனின், கேட்டுக்கண்டறியாததும் நெடுநாள் இடைகழியப்பெற்றதுமான ஒருவித பெரிய சம்பவங்களால் உண்டாகும் படுபயனேயாம். இதனால் அவன் இந்தியாவில் நடக்குங்காரியங்கட்கெல்லாம் சாதாரணமாய்க் காரணங்களை எதிர்பார்த்தல் அமையாதென்றும், அத்தேயத்தில் எல்லாம் அற்புதச்செயலேயென்றும் எண்ணமிடுகிறான். சரித்திரத்தில் பொதுவாய்க்கையாடப்பெறும் அலங்காரநடையும் இதைத் திரிபுணர்ச்சிக்கு அநுசரணையாயிருக்கின்றது. நிகழும் காரியத்திற்குக் காரணம் காண்டல் தங்கள் கடனின்மைபோலேயும், அதனை முன்னிலும் அதிகமாய்க் காரணம் அறியொணாவகைதோற்றுவித்தல் தங்கள் கடன்போலேயும் இந்தியா ராஜ்யத்தின் புதுமைகளையும் அதிசயாம்சங்களையும் பெரிதும்பாராட்டுவதில் சரித்திரநூலார் விருப்புறுகின்றார்கள்.

இவ்வாறு இந்தியாவில் நமது கை உயர்ந்தது, பொது விதிகட்கெல்லாம் ஓர் விலக்கெனவும், அரசியலில் ஆங்கிலேயருக்குரிய வீரத்தன்மையாலும், ஏற்கெனவே அவர்கட்கு வாய்ந்த ராஜ்ய தந்திர சாதுரியத்தாலும் அரிதிற்படைத்த அற்புதமெனவும் நாம் நினைக்கவருகிறோம். நாம் இக்கொள்கையராயிருக்கும் வரையில் இந்த ராஜ்யம் இவ்வளவுகாலம் கொண்டுசெல்லுமென்பதைப்பற்றி எவ்வித அபிப்பிராயமும் கொள்ளமுடியாது. தொடங்குங்கால் அற்புதமாயிருந்தது ஒடுங்கும்வரை அப்படியே கொண்டு செல்லவுங்கூடும். இயற்கைவிதிகள் இயக்கமின்றி நிறுத்தப்பட்டால், அந்நிலை எவ்வளவு காலம் நிலைக்குமென்று சொல்லவல்லார்யார்? இப்பொழுது நான் நமது அரசாட்சியின் தொடக்கஸ்திதியை அமைதியோடு கவனித்தேன். இந்தியாவை நாம் வெற்றிகொண்ட விஷயத்தை நான் பரிசீலனை செய்து அது நம்முடைய அநுபவம்போலாது இருக்கின்ற அளவில் உள்ளபடியே அற்புதந்தானென்றும், ஆனால் அகாரணமானது அல்லது காரணம் உரைத்தல் பிரயாசையென்னும் பொருளில் அற்புதமல்லவென்றும் கண்டறிந்தேன். இந்தப்பொருளில் நமது இந்திய அரசாட்சி ஓர் அற்புதந்தானா வென்பதைப்பற்றி இப்பொழுது விசாரிப்பாம்.

இந்தியாவை ஓர் ஜெயிக்கப்பட்ட நாடென்றும் ஆங்கிலேயரை அதன் ஜெயங்கொண்டாரென்றும் நாம் கருதுவமேல், அது அற்புதமாய்த்தோற்றுமென்பது ஒருதலை. வெல்லப்பட்ட ஜனங்களின் மனப்புழுக்கத்தை அடக்குவதில் நேரும் அசாத்திய வருத்தத்தை அறியாதாரியார்? வெற்றியாளர் பக்கல் நிச்சயமாய் படைகளின் தொகையும் ஆற்றலும் ஒருங்கே சிறந்திருந்தவிடங்களிலுங்கூட மீட்டும் அது முடியாதகாரியமெனக் கண்டுளேம். கீழ்நாட்டில் ஸ்பானியர்கள் கைபவீக்காதபொழுது, அவர்கள் தலையான போர்வீரர்களாயும், ஸ்பானியாதேசம் கிறிஸ்தவகண்டத்தில் மிகவும் சிறப்புற்றோங்கிய ராஜாங்கமாயுமிருந்தது. என்னை? சுஜனாபிமானத்வம் என்னும் இயலுணர்ச்சி அல்லது மதம் வேறென்னும் இயற்கையறிவு, ஜனங்களுள் போர்வீரர் பகுதிமட்டிலுமன்றி எங்கும் வியாபித்திருப்பதால், வீரம், யுத்தப்பயிற்சி இவற்றைப்பார்க்கிலும் பெரிதும் ஈடு செலுத்துமாதலின் என்க. இத்தலியில் நிகழ்ந்த இதனோடொத்த வோர் சம்பவத்தை நாம் ஒப்புநோக்குவோம். ஆசியா படத்தில் இந்தியா எந்நிலை பெற்றிருக்கின்றதோ அந்நிலையே ஐரோப்பியா படத்தில் இத்தலி பெற்றிருக்கின்றது. இது, கண்டத்தின் தென்றிசைக்கண்ணதாய் மேலே உன்னதமான மலைத்தொடரையும், அதன் கீழ், மேல்கீழாய் இழிந்தோடும் பெரியயாற்றினையுமுடைய இந்தியாபோன்ற ஓர் தீவகற்பம். அது பல்லாண்டுகளாக அயல் நாட்டார் படையெழுச்சிக்கு இரையாயிருந்த அம்சத்திலும் இதனைப் பெரிதும் ஒக்கும். சின்னாண் முன் இத்தலி ஆஸ்திரியாவின் கைக்குத்தோற்று ஒருவாறு அதன் ஆளுகைக்குக்கீழ்ப்பட்டிருந்தது. அதன் குடிகள் ஆஸ்திரியா தேசக்குடிகளைவிட வீரத்தன்மையிற் குறைந்தவர்கள். அதன் சேனைகளோ ஆஸ்திரிய சேனைகளினும் மிகவும பலம் குறைந்தவர்கள். ஆஸ்திரியா இத்தலிக்கு மிகவும் அணித்து. இவ்வளவு பிரதிகூலங்களுடன் போர்புரிந்தும் இத்தலி தன்னைச் சுவாதீனப்படுத்திக்கொண்டது. போர்க்களத்தில் பொதுவாய்த்தோல்வியடைந்ததேனும், சுஜாதிதேச சமயாபிமானப்பற்று அவர்கள் மனதில் ஆழவேரூன்றியிருந்து பிறருடைய தயையைப்பெரிதும் கிரகித்தமையால் அவர்கட்குப் போக்குவழிகிடைத்தது; அயல் நாட்டாரும் ஓட்டெடுத்தனர். இனி ஒவ்வொரு அம்சத்திலும் இத்தலியும் ஆஸ்திரியாவும் ஒன்றற்கொன்று எவ்வித தன்மையில் அமைந்திருந்தனவோ அதனினும் நிரம்ப சௌகரியமாகவே இங்கிலாந்துடன் இந்தியா அமைந்து நிற்கின்றது. இந்தியாவின் ஜனத்தொகை இங்கிலாந்தின் ஜனத்தொகையைப்பார்க்கிலும் ஏறத்தாழ எண்மடங்கிற்று. இந்தியா பூமியின் மற்றைப்பாகத்திலிருக்கிறது. அன்றியும் இங்கிலாந்து யுத்தத்தன்மையான ராஜாங்கமுமல்ல. இவ்வாறிருந்தும் நிதரிசனமாய் இந்தியா அதன் ஆணைக்கு அடங்குகின்றது. குழப்பங்கள் எங்கணும் கேட்கிலேம். இந்தியாவைக்கட்டி ஆள்வதில் நமக்கு சிரமங்கள் உளவேனும் அவைகள் பெரும்பாலும் பொருட்

செலவு விஷயமானவைகள். இத்தலியில் ஆஸ்டிரியாவுக்குண்டான ஆற்றொணுக்கஷ்டம் நாம் இந்தியாவில் அடைகிலேம். வெல்லப்பட்ட ஜாதியார்க்குரிய மனப்புழுக்கத்தை அடக்கவேண்டிய கஷ்டம் நமக்கில்லை. இது அற்புதமல்லவா? இந்தவிஷயத்தில் இயல்பான விதிகளெல்லாம் இயக்கமின்றி நிற்பனபோலத்தோன்றவில்லையா? அன்றேல், இந்தியர்களது அடக்கத்துக்கும் ஆங்கிலேயரது ஆட்சித்திறனுக்கும் ஓர் அளவில்லைபோலும் எனப்புலப்படவில்லையா?

நான் மேற்கூறிப்போந்தவைகளான் இவ்வினாவிற்கு இன்னவிடைதான் அளிப்பல் என்பதைப்பற்றி நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். இந்த ஆசங்கையில் இந்தியா ஓர் சுஜனாபிமானத்துவமுள்ள நாடென்பதும் அந்நாட்டை இங்கிலாந்து வெற்றிகொண்டதென்பதும் உத்தேசம். இவ்விரண்டும் முற்றிலும் ஆதாரமற்றவைகளே.

முதற்கண், இந்தியா ஓர் சுஜனாபிமானத்துவநாடென்பது கேவலம் தப்பபிப்பிராயம். இனைய தப்பெண்ணத்தைக் களைவதே அரசியல் நூலின் முக்கியநோக்கம். வெவ்வேறுபாடைகளைச் சின்னங்களாகவுடைய பல்வேறு சாதியார் உள்ள தேசங்களாகப்பாகுபாடுடைய ஐரோப்பியா படத்தைப்பார்த்துப் பழகிய நாம், பெரிய தப்பபிப்பிராயப்படுகுழியில் வீழ்கின்றோம். எங்கேனும், ஐரோப்பியாவின் அகத்தோ, புறத்தோ ஓர் பெயருள்ள தேசத்தைக் காணில் அதற்கியைய ஓர் சுஜனாபிமானத்துவமும் இருத்தல் வேண்டுமென உத்தேசிக்கிறோம். அதேசமயத்தில் சுஜனாபிமானத்துவம் எனப்படுவதியாது என்பதைப்பற்றித் தெளிபொருள் கொள்ள நாம் மெய்வருத்தம் எடுப்பதில்லை. 'இங்கிலாந்திலுள்ள நம்மை பிரெஞ்சியர் ஆள உடன்படோம். பிரெஞ்சியர் தங்களை ஜெர்மனியர் ஆளவரின் துன்புறுவர்' என்று இன்னோரன்ன எடுத்துக்காட்டுகளால் இந்தியா தேசத்தாரும் தங்களை ஆங்கிலேயர் ஆள்வதில் மிகுந்தபரிபவம் உணர்தல்வேண்டுமென முடிவு கட்டுகிறோம். இவ்வித கோட்பாடுகள் கேவலம் சோர்வாலும் நுண்ணறிவின்மையாலுமே உண்டாகின்றன. மக்களுயிர்ப்பகுதிகளெல்லாம் சுஜனாபிமானத்துவமென்னும் கட்டுப்பாடுடைய ஜாதியாராகாரென்பது சொற்றலே அமையும். நிரூபித்தல் அவசியமின்று. ஆங்கிலேயரும் பிராஞ்சியரும் சாமான்ய ஜனத்தொகுதிகளல்லர். அவர்கள் அசாதாரணவழியால் சில விசேடதத்துவங்களால் கட்டுப்படுத்தப்பட்ட ஜாதியார். இந்தக்கட்டுப்பாட்டுக்கு சாதனமாயுள்ளவைகளுள் சிலவற்றைப்பற்றி ஆராய்ந்து பின் அவைகள் இந்தியர்பாற் காணப்பெறுபவோ என்பதை விசாரிப்பாம்.

(இன்னும் வரும்)

உ. மகாலிங்கம்பிள்ளை,
திருநெல்வேலித் தச்சநல்லூர்.

அறிவு விளக்கம்

(தொடர்ச்சி).

———.

உற்றதுணைப்போன் (தொடர்ச்சி):—சகோதரா! அத்வைதிகளை கிறிஸ்தவர் முதல் எம்மதத்தினரும் "வேதாந்திகள்" அல்லது "அத்வைதிக" ளென அழைப்பதுபோல் உங்களை நீங்களேயன்றி உபயவேதாந்த பிரவர்த்தகாசாரிகளென அழைத்தார், அழைப்பவர், யாவர்? மூத்தோனே! தாங்கள் பாஷியக்காரர் எனப்புகழ்ந்து கூறும் ஸ்ரீமத் இராமானுஜாசாரியர் வேதங்களைச்சார்ந்த உபநிஷத்துகளுக்குப் பாஷியமெழுதியிருக்கின்றனரா? அரங்க இராமானுஜ ஜீயர் என்பவர் எழுதிய பாஷியத்தை யாதாரமாக வைத்துக்கொண்டே கீதைக்குப் பாஷியம் எழுதினரா? அல்லது தாமே முதலிலெழுதினரா? விஷஜந்துவாகிய ஆதிசேடன் தலை வால் தோலெலும்பு முதலிய உறுப்புகளிலொரு அம்சமாக அவதரித்த ஸ்ரீமத் இராமானுஜாசாரியாருக்கும் அவர் மதம் பின்பற்றிய தங்களுக்கும் தங்களைச்சார்ந்தாருக்கும் அரங்க இராமானுஜ ஜீயருக்கும் சுவானுபவமுண்டா? உங்கள் மதம், நம்பிக்கை மதமோ ஆராய்ச்சி மதமோ? ஆராய்ச்சி மதமாயின் என் யுக்தி அனுபவங்களை யொப்புக்கொள்ளேனென்கிறீர்கள்? நம்பிக்கை மதமாயின் நீங்கள் சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளைகளேயாக வேண்டியிருக்க, அனுபவிகளாகிய வேதாந்த அத்வைதிகளை யங்ஙனங்கூறல் பிசகல்லவா? சுவானுபவமில்லார் சத்தசத்தின் இலக்கணத்தைப்பகுத்துக்கூற அதிகாரிகளல்லரென்று பகவத்கீதை யிரண்டாம் அத்தியாயம் 16-வது சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே. இதற்கெது விடை? பகருங்கள். சகோதரா! "நித்யோநித்யானாம்" எனுஞ் சுருதிக்கு ஸ்ரீமத் ஆதிஜகத்குரு சங்கராசாரியாராஞ் சுவாமிகள் பாஷியம் பழுதாக வெழுதினதொன்றதோடு இலக்கணமும் வழுவியிருக்கின்றாரென தங்கள் பட்ச ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதை பின் விளக்குகிறேன். கிருஷ்ணமூர்த்தி 'எல்லாம் யானே' யென அர்ச்சுனனுக்கு உபதேசித்தது தோலென்பு நரம்பு ரோமவுருவ சரீரத்தைக்குறித்தோ? சர்வவியாபகமாகிய அத்வைத ஆத்மாவைக் குறித்தோ? கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக்கு உபதேசஞ்செய்யுங்காலத்தில் அவருக்குடலாகிய அசித்துப்பொருளும், சுகதுக்க மனுபவிக்குஞ் சீவனும், தனுகரணபுவனபோக மனுபவிக்கச்செய்யு மீசுவரனும், இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகிய அத்வைத ஆத்மாவும் அர்ச்சுனனிடத்திருந்ததுபோல் இருந்தனவோ இல்லையோ? முத்திபெற்ற ஜீவன்முத்தர்களாகிய அத்வைதிகள் சித்தசித்து ஈசுவரனென்கிற திரிபதார்த்தமும ஆத்மாவைப்போல சதாமாத்ரமாக இல்லையென்றும் ஆத்மாவேதானென்பதல்லாமல் மற்றவைகளல்லவென்றும் தெரிந்துபதேசிப்பதுபோலவே கிருஷ்ணமூர்த்தியும் கூறினரோ அல்லது வேறோ? சரீரமில்லையெனில் அர்ச்சுனன் இரதத்தில் சாரதியாயிருத்

தல் கூடுமோ? ஜீவனில்லையெனில், பீஷ்மர் கையம்பால் நொந்து சத்தியந்தவறி சக்கரங்கையிலேந்தி சண்டைசெய்வாரா? ஈசுவரசொரூபமில்லையெனில், விசுவரூபம்காட்டுவாரா? இதுநிற்க "நத்வேவாஹம் ஜாதுநாசம்" எனுஞ் சுலோகத்திற்கு இராமானுஜாசாரியார் விருத்தியுரையாகக் கண்டனமெழுதிய அவரது விவேகத்தையும், அதைநம்பி புகழ்ந்து கூறும் உம்மரபினர் புத்தி நுட்பத்தையும, தங்களை யபிமானிப்பவர் வித்தியாவிலாஸத்தையும், யாவருமறிய சங்கராசாரியர் பகவத்கீதையில் விளக்கியிருக்கிறார். முற்றுங்கற்றேனென்னு மொழியொன்றேயல்லது மற்றதை யறியாத மகாத்மாவாகிய உண்மைவிரும்பியரே! தாங்களும் தங்கள் ஆசிரியரும் உலகொடுங்குங்காலத்தில் மண், நீரிலும்; நீர், தீயிலும்; தீ, வளியிலும்; வளி, வானிலும்; ஆகாயம் ஜீவன் முதலிய யாவும் பிரகிருதியிலும் அது நாராயணனிடத்திலும் ஒடுங்க, முடிவில் நாராயணன் ஒருவனே அழியாதவனாகி "அஸ்தி"யென்று கூறப்படுகிறானென்றும்; அக்காலத்தில் உப்பானது ஜலத்தில் கரைந்து உருத்தோற்றாதிருக்குமாறு பிரகிருதியாதிய விருந்து மீளவும் சிருஷ்டிகாலத்துமுறையே வெளிப்படுகின்றனவென்றும் கூறுகின்றீர்கள். தாங்கள் கூறும் உபமானம் பொருந்துமா? எங்ஙனமெனில், உப்பின் அணு இருந்தவிடத்தில் ஜலவணுவிருந்ததில்லை. ஜலவணு விருந்தவிடத்தில் உப்பினணுவிருந்ததில்லை. உப்பதிகப்பட்டு ஜலம் குறையினும் ஜலம் அதிகப்பட்டு உப்புக்குறையினும் ஒன்றனுருதோற்றுவதில்லையென்பது உண்மையேயாயினும் இரண்டும் கண்டப்பொருள்களே யாகின்றமையானும் வேதத்தில் பிரமம் சுஜாதி விஜாதியற்ற அகண்ட பரிபூரண சச்சிதானந்தமென்னும் இலக்கணங்களைப்பொருந்தியதெனக் கூறப்பட்டிருப்பதால் பூரண விலக்கணத்திற்குப் பழுதுவந்து சித்திக்கின்றது. அதனால் பிரமம் கண்டப்பொருளாகின்றது. உலகில் எம்மதத்தினரும் கடவுளைக் கண்டஸ்வரூபியென உரைக்கின்றனரில்லை. பூரணரென கிறிஸ்தவரும் உரைக்கின்றனர். ஆகையால் தாங்கள் சொல்வதுதோஷமே. பிரமவியாபகத்தில் இப்பொழுது ஜீவேசுராதியர் அடங்காதிருக்கின்றனரா? இப்படி யடங்குவதற்கு லயகாலம் ஒன்றுவேண்டுமோ? இதுநிற்க. பிரமத்தில் உலகம் உண்டாவது தாயினிடத்துப் பிள்ளையுண்டாவதுபோலா? விதையினிடத்து விருட்சம் உண்டாவதுபோலா? பால், தயிராவதுபோலா? மண்ணிற் கடந்தோன்றுவதுபோலா? சமுத்திரத்தில் அலை திவலை நுரை உதித்தொடுங்குவதுபோலா? திருமழிசைபிரான் "தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண்டடங்கடல், தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல், நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும், நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்கணின்றதே" எனக்கூறியிருக்கின்றனரே. ஆகையால் ஜலத்தைப்போல் பிரமத்தையும், திவலைகளைப்போல் ஜீவர்களையும், நுரையைப்போல் உலகத்தையும் வைத்தால். உபமானம் பொருந்தும், எப்படியெனில், ஜலத்தையன்றி

அலை திவினை நுரை யென்பவைகளுக்கு எங்ஙனம் வேறு பொருள்களில்லையோ அங்கே சித்தசித்தீசுவரனென்கிற முப்பெயர்களுக்கும் வேறு பொருள்களில்லையென்றாகும். இதற்குநம் முன்னோர்கள், காற்றில்லாமல் சமுத்திரத்தில் அலையாகிய வருமா? அதினால் விசிஷ்டமே. சமுத்திரத்தில் பஞ்சீகரணமில்லையா? அதனால் விசிஷ்டமே. என்றுரைக்கிறார்கள். இவை தங்களைக்கற்றவராக மதிக்கத்தக்க விடையாகுமா? இவை யான்கூறியவற்றிற்கு விடையாகமாட்டா. எங்ஙனமெனில், உவமை ஏகதேசமேயொழிய முற்றுமன்று. ஒருவன் 'முத்தைப்போன்றவை பற்கள்' என உவமை கூறின் வெண்மை நிறத்தைக்கொள்ளாது முத்தைப்போன்று பற்கள் விலையேற்றம் பெறுமா? முத்திலும் பற்களிலும் பஞ்சீகரணமில்லையா? அதனால் விசிஷ்டமேயெனவும்; நீலோற்பலம்போன்ற கண்களென்றவனைப்பார்த்து கண்களுக்குப் பலவிதழ்களும் தண்டும் மணமுமுண்டோ? அன்றியும் குவளை, கிழங்கும் ஜலமுமில்லாமல் உற்பத்தியாகிப் பூக்குமா? அது கண்களுக்கு எப்படி சமதையாகும். கண்களிலும் நீலோற்பலத்திலும் பஞ்சீகரணமில்லையா? ஆகையால் இருபொருள்களும் விசிஷ்டமே என வுரைப்பது ஞாயமாகுமா? இப்படி விடைபகரமூடனும் நாவெடானே கற்றறிந்தவர்தம் பொய்மதத்தைக்காக்க இவ்விடைகளைப் பகர்வது அழகாகுமோ? நான் மேல் விளக்கியதற்குச் சாக்ஷியாக முண்டகோப நிஷத் முதலத்தியாயத்தில், சவுனகர், "எதையறிந்தால் இதை யெல்லாமறிந்ததாகும்" என்றதற்கு, அங்கிரசு பிரம்ம வித்துக்கள், (அதாவது பிரமத்தையறிந்தவர்கள்), "இரண்டு வித்தைகளை யறியவேண்டு"மென்கிறார்கள். அவை "பரவித்தையென்றும் அபரவித்தையென்றும் சொல்லப்படுகின்றன. அதில் அபரவித்தையானது ருக்வேதம், எஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ்ஸு, ஜோதிஷம், இவைகள் தான். பின்னும் அந்த அவிநாசியானது எதனால் அறியக்கூடுமோ அதுதான் பரவித்தை. அதாவது பார்க்கக்கூடாமலும், கிரகிக்கக்கூடாமலும், கோத்திரமில்லாமலும், வர்ணமில்லாமலும், கண்களில்லாமலும், காதுகளில்லாமலும், கைகாலில்லாமலும், நித்யமாயும், வியாபகமாயும், ஸர்வகதமாயும், அதிசூக்ஷமமாயும், அவிகாரியாயும், இருக்கிறது. இந்த பூதயோனியைத்தான் தீரர்கள் பார்க்கிறார்கள்."

(இன்னும் வரும்)

பு. ஐயராமபிள்ளை.

வள்ளமை நீடிய மதுரையின் முன்னொரு கால்
அளவி லன்புடை மூர்த்தியென் றுறையுமோர் வணிகன்
றளர்வில் சுந்தரற் கான்ற சந்தன மென்றே
யுளம்வி ருப்பொடு சாத்துவ னொழிவற நாளும் (க)

துன்னு சேனையிற் றுளங்கிய வெரிகரு நாடன்
மன்ன னன்னாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கள் விழுந்து
முன்னர் நீடிய வைதிக முறைமையை யொழித்தான் (உ)

சாற்று மீசனை யல்லது சமணனை வணிகன்
போற்றி டாதது கண்டுதன் புண்ணிய முடிவால்
வேற்று ளோர்களுஞ் சந்தனம் விற்றிடா வாறு
மாற்றி முன்னது வரும்பெருந் துறைகளு மடைத்தான் (ங)

மிறைகள் செய்யவும் விடாதவ னுங்கது கண்டு
பறித லைச்சமண் பாதகன் மாண்டயர் வேத
நெறிவி ளங்குவ தென்றுகொ லென்றுணர்ந் தொருநாள்
வெறிகொள் சந்தனந் தேடினன் பகலெலா மெலிந்து (ச)

எங்கு முன்கிடை யாதது கொண்டிருட் போதிற்
றுங்க ரும்பயத் தொடிறை கோயிலைச் சார்ந்து
தேய்கொள் சந்தன முட்டிய தாயினுந் தேய்க்கு
மோங்கு செங்கையு முட்டுமோ வென்றுறத் தேய்த்தான் (ரு)

வட்டப் பாறையின் முழங்கையை மணங்கொள்சந் தனமா
முட்டப் பாடற மூளையுஞ் சோரியுஞ் சோர
விட்டுத் தோறசை தேய்வுறத் தேய்க்குமுன் விரைவிற்
கிட்டிச் சார்வுறக் கிளர்ந்தது பரன்றிரு வாக்கு (சு)

வேறு.

அரியசந் தனிந்தே மஞ்ச லய்யனே விடு விடன்பின்
பெருமைகண் டோர மஞ்சல் பேரமண் குண்டர் மன்ன
னிரவிடை மாள்வன் வேந்தா யிவ்வுல கடைவிற் காத்து
மருவிய பணியுஞ் செய்து வரமகிழ்ந் தென்று மொன்டே (எ)

இந்நெறி யானா யத்தி னெழுந்திடா முன்ன ரென்பு
முன்னரு நரம்பு மூனுஞ் சொரிந்தபுண் ணூறி மேனி
மன்னொளி பெற்றா னேவு மண்மகழ தன்றா லில்லுண்
மன்னுமக் கங்குற் றானே தே மாண்டனன் வடுகவேந்தன் (௮)

மற்றது கண்ட மைச்சர் வள்ளலை வியந்து பாண்டிக்
கொற்றவன் வழியி னில்லை யென்செய்கேங் கோவி லாமை
யுற்றதொன் றல்ல வென்று புலரு முன் னேடைக் குன்றைப்
பொற்பமர் கண்ணைக் கட்டி விட்டனர் பூசித் தாங்கு (௯)

பாய்விடை யிறைவன் சொன்ன பகுதியை நினைந்து கொண்டு
கோயிலின் பாங்கர் நின்ற குணப்பெருங் குன்றைத் தாழ்ந்து
போயுல கெங்குஞ் சூழ்ந்து புரவலர்த் தேடி மீண்ட
காயமு துயிழ்கட் குன்றங் கண்டுகைக் கொண்ட தன்றே (௰)

பிடர்மிசை யெடுத்து வைத்துப் பிறங்கமுற் செல்லக் கண்ட
நடமலி யமைச்சர் முன்னா நகர்வலங் கொண்டிழிச்சி
முடிபுனை மண்டபத்து முழவொடு புகுந்தி யாரு
மடிதொழு தார்கடுங்க வரிகொளா சனத்து வைத்து (௰௧)

தடமணிக் குடம்பூ ரித்துத் தந்திர விதியின் முற்றக்
கடனபி டேகஞ் செய்வா னணைவது கண்டு மூர்த்தி
முடிசடை முடிபூ ணெண்ணின் முக்கணன் சாத னங்கள்
சுடரபி டேக நீற்றுத் தானன மல்லா லுண்டோ (௰௨)

வன்சம ணிருள்விட் டேக வைதிகத் தீபமேற்றி
யின்பர சாள்வ லென்ன விசைந்தியா வருமுன் சொன்ன
வன்புறு பகுதி மூன்றுஞ் செய்தருச் சித்தார் போற்றி
முன்பருள் சுரந்த சொக்க மூர்த்தியிம் மூர்த்தி வேந்தை (௰௩)

சடைமுடி முடியா வந்து தனக்கருள் சுரந்த செம்பொற்
சுடர்முடிச் சொக்கன் றன்னைத் தொழுதெழின் மதவே முந்துத்
தடமுழ வொலிப்பக் கற்றைச் சாமரை யிரட்டக் கொற்றக்
குடைநனி நிழற்றப் போந்து குவலய நெறியிற் காத்தான் (௰௪)

மம்மர்சே ரமணற் காய்ந்து வைதிக நெறி விளக்கி
வெம்மைசேர் தெவ்வை மாதர் விருப்பையைம் புலனை வென்று
செம்மையி னூழி வாழ்ந்து சிவனுலக டைந்த பத்தி
மும்மையா வுலகை யாண்ட மூர்த்தியை வாழ்த்தல் செய்வாம் (௰௫)

(முற்றிற்று).

சௌந்தர பாரதி.

வான்மீகரும் கம்பரும்

(தொடர்ச்சி)

வில் முறிந்தமையை ஒருத்தி போய்ச் சீதாதேவிக் கறிவித்தல்.

இந்த விஷயம் வான்மீகத்திலில்லை.

எந்தப்புருஷன் இந்தத்தனுவை வளைப்பானோ? சீதையை மணப்பானோ? பிராட்டி திருமணக்காட்சியை என்று காண்போமோ? என்று ஜநகனைப்போல நகரத்து மக்கள் யாவரும் கவலைகொண்டிருந்தார்கள். அவருள்ளும், பெண்பாலர்க்கு இவ்விஷயத்தில் அதிக ஆசையுங் கவலையும். அவர்களில் ஒருத்தி நீலமாலையென்பவள் வில்முறிந்ததும், இவ்விஷயத்தையும், ஸ்ரீராமனுடைய சௌந்தரியத்தையும் சீதைக்குச்சொல்லவேண்டுமென்று விரைந்துபோய்க் கூறுவதாகக் கம்பர் சொல்லுகிறார்.

முன்னையநாள் மாலையில் இராமனைக்கண்டு மயல்கொண்டு, இரவெல்லா மிகவருந்தி, விடிந்தபின்னர் ஐயனது தோற்றத்தையும் பேரழகையும் நினைந்து நினைந்து, "கண்டபோதே ஓடிச்சென்று தழுவிக்கொள்ளாமல், கைகடக்க விட்டிருந்த கலக்குவ தென்னமதி!" என்று கவலையுள் மூழ்கியிருக்கும் பிராட்டியிடஞ்சென்ற நீலமாலையென்பவள் களிப்பு மிகுதியால் கலையுங் குழலுஞ்சோர வந்தவுடன், சீதையை அடிவணங்காமல் பேரிரைச்சலிட்டு, ஆடியும் பாடியும் நிற்கக்கண்டு, பிராட்டி அவளைச் சாந்தப்படுத்திக்கேட்கப் பின்பு தொழுது சொல்லுகிறாள்.

'நல்லகதை நீளமாயில்லை' என்னும் பழமொழிபோல அவள் சொல்லவந்தகாரியம் பெருவகைக்கேதுவாயிருந்தாலும், "ஓரழகிய புருஷன் வில்லை வளைத்துவிட்டான்" எனச் சுருக்கமாக நிற்றலின் அவ்வரிய விஷயத்தைப் பெருக்கிக்கூறவேண்டி விண்ணப்பிக்கிறாள்:—

"கயரத துரகமாக் கடலன் கல்வியன்
தயரத னெனும்பெயர்த் தனிச்செல் கோமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவு மேன்மையான்

மராமர மிவையென வலிய தோளினான்
அராவணை அமலனென் றயிர்க்கும் ஆற்றலான்
இராமன் என்பதுபெயர் இளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதிவந் தெய்தினான்

பூணியல் மொய்ம்பினன் புனிதன் எய்தவில்
காணிய வந்தனன் என்னக் காவலன்
ஆணையில் அடைந்தவில் லதனை ஆண்டகை
நாண்இனி யேற்றினன் நடுங்கிற் றும்பரே

மாத்திரை அளவிற்றாள் மடுத்து முன்பயில்
சூத்திரம் இதுவெனத் தோளின் வாங்கினன்
ஏத்தினர் இமையவர் இழிந்த பூமழை
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே.''

என்பதே அது.

அதனைக்கேட்ட பிராட்டி,

"கோமுனி யுடன்வரு கொண்டல் என்றபின்
தாமரைக் கண்ணினன் என்ற தன்மையால்
ஆம் அவனேகொல் என்றையம் நீங்கினள்
வாமமே கலையினும் வளர்ந்த அல்குலே''

என்பதனால்,

தான் கண்டு காதல்கொண்ட புருடனே என்று துணிந்தமையும், அதனால் உண்டாகிய மெய்ப்பாட்டையும் விளக்கி, 'அவ னல்லனேல் இறப்பனென் றகத்து ளுன்னினள்' என்பதனால் பிராட்டியின் கற்பினுறுதியையும் புலப்படுத்துகிறது கம்ப ராமாயணம்.

தசரதர் மிதிலைக்கு வருகை.

ஜநகரேவிய தூதர்கள் அயோத்திசென்று தெரிவிக்கத் தசரதர், பொக்கிஷம், புரோகிதர், சேனை, முதலியோரை முன்னனுப்பித் தாம் புறப்பட்டு நாலுதினம் வழியிற்றங்கி மிதிலைவந்து சேர்ந்தாரென்று மிகச்சுருக்கமாகக் கூறுகின்றது வான்மீகம்.

கம்பரோ, தசரதர் கட்டளையால் நால்வகைச் சேனையும் மிதிலைக்குப் புறப்பட்டுப்போகுஞ் சிறப்பைக்கூறி, அச்சேனையின் மிகுதியைக் காட்டத் தயரதன் அயோத்தியினின்றும் 'எழுந்திலன் எழுந்திடைப் படருஞ் சேனையின் கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலை கூடிற்றே' என்று சொல்லி, நகரத்து மக்கள் களிப்புடன் புறப்பட்டுச்செல்வதையும், கௌசல்யாதி மூவரும் செல்லுஞ்சிறப்பையும், வசிட்டர் எழுந்தருளும் மகிமையையும் 'இருவரும் முனி பின்போன இருவரு மென்னப்போனார்' என்று பரதசத்துருக்க

ர் வசிட்ட முனிவர் பின்செல்லுகின்ற கம்பீரத்தையும் உரைத்து, பின்னர்ச்சக்கரவர்த்தி நன் முகூர்த்தத்திலே புறப்பட்டுச்செல்லுகின்ற பெருஞ்சிறப்பையும், சந்திரசைலமென்னும் மலைப்பக்கத்தில் வந்து படமாடங்களில் தங்கினமையுங்கூறி, பின்பு அம்மலையினுடைய காட்சியை விஸ்தாரமாக வர்ணித்து, மற்றை நாட் காலையில் சோலையிற்புகுந்து இருபாலாரும் பூக்கொய்து சூடி மகிழ்தலையும் பின்னர் நீர்விளையாடலையும் அன்றிரவில் மதுப்பருகிக் களிப்புப்பெருகிப் பொழுதுபோக்குகின்ற சிங்காரத்தையும் இனிமையாக வர்ணித்து, தசரதன் கங்கைநதியைக் கடந்து சென்று மிதிலையைச் சமீபிக்கையில் ஜநகன் எதிர்கொள்ளுந் திறத்தைக் கூறத்தொடங்குகிறார். இவ்வாறு விஸ்தாரமாகக் கம்பர் கூறுவதை உய்த்துணருங்கால் பெருங்காப்பிய வுறுப்புகளிற்சேர்ந்த பொழில்விளையாட்டு, நீர்விளையாட்டு, உண்டாட்டு (மதுபானம்), புலவியிற்புலத்தல், கலவியிற்களித்தல், மலைவருணனை, சூரிய சந்திர உதயாஸ்தமன வருணனை, ஆகிய இவை சமயோசிதமாக இடம் பெற்று நிற்பது புலப்படும். இந்த வுறுப்புகள் இராமாயணத்தில் வேறு சந்தர்ப்பங்களில் இவ்வளவு பொருத்தமாக இசையாமையும் உணரத்தக்கது. அன்றியும் இவ்விடங்களில் உள்ள கற்பனைகளும், அலங்காரங்களும், கம்பீரத்தையும் அநுபவித்தற்குரியன. இந்தச் சந்தர்ப்பம் வான்மீகத்திலில்லாதது விசனிக்கத்தக்கதே. வடமொழிவல்லார் சிலர் வான்மீகத்தில் பாலகாண்டம் மிகச் சுருக்கமாகத்தானிருக்கிறதென்றும், முநிவர் கூறியது 'இறந்துபட்டதுபோலும்' என்றும் கூறுவதனால்; ''வந்திக்கு வான்மீகி'' என்னும் பழமொழிப்படி இவ்விஷயங்களில் மனஞ்செல்லாதுபோயினரோ? அன்றேல் காவிய வாரம்பத்தில் கவிகள் விஸ்தாரமாகக்கூறுவது இயல்பாதலால் அவ்வாறு முநிவர் கூறியது இறந்தொழியப் புதியது புகுந்ததோ? என்று பலவாறு கொள்ளக்கிடக்கின்றது.

ஜநகர் தசரதரை எதிர்கொள்ளல்.

ஜநகர் தசரதரை எதிர்கொண்டு உபசரித்து அழைத்துப்போக, சக்கரவர்த்தியாரும் தம்விடுதியிற்றங்கி ராமலக்ஷ்மணர்களைக்கண்டு 'பெருமகிழ்வெய்தினர்' என்று கூறியுள்ளது வான்மீகம்.

கம்பராமாயணத்தில், ஜநகர் தசரதனை எதிர்கொள்ளவருங்கால், அவர் பின்னே ஸ்ரீராமனும் தம்பியுடன் புறப்பட்டுவந்து, ஜநகரோடு அளவளாவி மகிழ்ச்சியுடன் வருகின்ற பிதாவினிடத்தில் 'முன்பிரிவதோர்ஆவி வந்தென்ன வந்து அரசன் மாட்டணுகினான்' என்று கூறியிருக்கிறது. விசுவாமித்திருடன் ஸ்ரீராமபிரானைக் கூட்டியனுப்பினபோது அவர்கொண்ட மனத்துயரம் இப்போது இராமனைக்கண்டு தணியப்பெற்றாரென்பது பெறப்ப-

டது. இராமன் அடிபணிய அவனைத் தழுவிக்கொண்டார். தழுவியபோது பிரிந்த புத்திரனைக்கண்ட மகிழ்ச்சியோடு வில்லிறுத்த அவனது பராக்கிரமத்தையெண்ணி உடம்புபூரித்தார். ஆதலால் 'மனுவெனுந் தகையன் மார்பிடை மறைந்தன, மலைத்தனி நெடுஞ்சிலை யிறுத்தவந் தடக்கிரிகளே' கூறியுள்ளது. பின்னர் இளையகுரிசில் வந்து தந்தையைப்பணிய அவர் தழுவி மகிழ்ந்ததையும், இராமன் தாய்மாரை வணங்கியபோது 'பெற்றதாயரையுமப் பெற்றியிற் றொழுதெழுந் துற்றபோதவர்மனத் துவகையாருரைசெய்வார்? என்று அவர்களிப்பையும்,

உன்னுபே ரன்புபின் கொழுகியொத் தொண்கணீர்
பன்னுதா ரைகள்தரத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் துயிருறப் புல்லினான்
தன்னையத் தாதைமுன் றழுவினு லென்னவே.

என்பதனால் அன்பிற்சிறந்த பரதன் வந்து பணிந்தபோது இராமன் அவனைத்தழுவிக்கொண்ட மகிழ்ச்சியையும், இலட்சுமணன் பரதனையும், சத்துருக்கனன் இராமலட்சுமணர்களையும் பணிந்து களிப்பதையும் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பரவசமுண்டாம்படி கூறியிருக்கிறது.

மிதிலைப் பிரவேசம்.

கம்பரில் இந்த சந்தர்ப்பத்தில் இன்னுமொரு சுதாசயம் விளங்குகின்றது. அதாவது:—சக்ரவர்த்தியா ருத்தரவின்பேரில் ஸ்ரீராமன் தம்பிமார் சூழ்ந்துவர, சேனைகள் முன்னும் பின்னு மொய்த்துவர, பெரியவைபவத்துடன் மிதிலைக்கு முன்னெழுந்தருளி வீதியிற் செல்லுகையில் அந்நகரத்துப் பெண்பாலார் ஐயனைக்கண்டு ஆநந்திக்கும் தன்மையைக் கூறியிருப்பது அங்கே கூறியிருப்பனவற்றிற் சிலவற்றைமாத்திரம் ஈண்டெழுத மனம் வாராமையால் 'உலாவியற்படல'த்தை நோக்குமாறு நமது அன்பர்களை வேண்டுகின்றோம்.

நகரமுழுதும் ஆநந்த பரவசப்பட்டு நிற்கச்சென்ற இராமன் ராஜமாளிகையுட் புகுந்து, வசிட்டருங் கௌசிகரும் எழுந்தருளியிருந்த மண்டபத்தே சென்று முனிவர்களை வணங்கித் தம்பியர் சூழ ஓராசனத்திலிருக்க, தசரதனும் அங்குவந்து மாதவரை வணங்கி ஓராசனத்திலிருக்க, பலதேசத்தரசரும் நிரம்ப, அப்போது வசிட்ட முனிவர் ஜநகனைப்பார்த்துச் சீதாதேவியை அங்கு வரவழைக்கச்சொல்லினர்.

சீதையைக் காணல்.

வான்மீகத்தில் கல்யாண சமயத்துக்குமுன் சீதையைத் தசரதர் முதலியோர் பார்த்ததாகப் பிரஸ்தாபமேயில்லை. சீதா கல்யாணம் முக்கியமாகா

மல் நான்கு கல்யாணத்தையும் ஒருசேர நடத்துவதே பெரிதாகக் காட்டுகிறது. குலமுறை சொல்வதும் பெரிய விஷயமாயிருக்கிறது. அதில் மற்றையோரையெல்லாம் பெயர் மாத்திரையாற் சொல்லிவிட்டு சகரன் கதையை மாத்திரம் சற்று விளங்கக் கூறியிருக்கிறது. இதன் பயன்யாதோ? வம்சாவளி கூறி முடித்த வசிட்டர் 'ஜநகபூபாலா! ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு நும்மிரண்டு பெண்களையும் கொடுக்கும்படி கேட்கின்றேன்' என்று கேட்பதாகச்சொல்லுகிறது. இதனால் வில்வளைத்தாற்கே சீதை யுரியவளென்றது மெல்ல நழுவுகின்றது. தசரதர் வந்தது கல்யாணத்துக்கா? பெண்கேட்கவா? இது நிற்க, பின்பு ஜநகர் தம்முடைய வம்சாவளி கூறி முடித்தலும் வசிட்டரும் விசுவாமித்திரரும் ஜநகர் தம்பியாகிய குசத்வஜர் புத்திரிகளிருவரையும் பரதசத்துருக்கனர்களுக்குக் கொடுக்கும்படி ஜநகரைக்கேட்டு நான்கு திருமணத்துக்கும் ஏற்பாடுசெய்கிறார்கள்.

கம்பர் சீதாகல்யாணத்தை முக்கியமாகச் சொல்லிவிட்டு மற்றையர் மணத்தை "மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார்" என்று முடித்திருக்கின்றார்.

இனி, சீதாதேவி மண்டபத்துக் கெழுந்தருளும் விஷயத்தைக் கம்பர் போக்கின்படி பார்ப்போம்: ஸ்ரீராமனும் பிராட்டியும் இரகசியமாகச் சந்தித்துக்கொண்ட விஷயமிருக்கட்டும். வில்லை வளைத்த நாயகனுக்கும், அன்னான் பிதாவாகிய சக்ரவர்த்திக்கும், வசிட்ட கௌசிகாதி முனிவர்க்கும், கௌசல்யாதி தேவியர்க்கும், சீதையைக் காணவேண்டுமென்றும், ஸ்ரீராமனை மருகனாகவும் சக்ரவர்த்தியைச் சம்பந்தியாகவும் பெற்ற ஜநகராஜனுக்கு அழகுங் குணமுநிறைந்த தன் தபோபுத்திரியை அவர்கள் முன்னிலையிற் கொணர்ந்து காட்டவேண்டுமென்றும், அவா மிகுந்திருக்குமாதலால் இவ்விஷயம் அறிக.

(இன்னும் வரும்).

சாமி-சரவணபிள்ளை.

வாழை நார்.

நாமொருமுறை கற்றாழை நாரைப்பற்றிப் பேசியிருப்பதை நம் பானுவைப் படிப்பவரெவரு மறிவார்கள். அதனினும் நயமான வாழைநாரைப் பற்றி இம்முறை சிறிது பேசுவோம். தென்ஆற்காடு ஜில்லாவைச் சார்ந்த வளவனூர் மகா-ள-ள-ஸ்ரீ வி. டி. வெங்கிடராமையர் அவர்கள் இவ்வாழைநார் விஷயத்தில் மிக்க சிரமம் எடுத்துக்கொண்டு பல பரிசோதனைகள் செய்து நம்நாட்டுக்கு ஒரு பேருபகாரியாகும்படியான முயற்சி செய்துவருவதை

ஆகேகர் அறிந்திருக்கலாம். அவர்போன்ற ஊக்கமுடையவர் ஒருவர் திருவனந்தபுரத்தின் கைத்தொழிற்சாலையில் பல பரிசோதனைகள் செய்து தாம் கண்டு தெளிந்த அநுபவங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவரது பெயர் கே. நாராயண ஐயர். இவ்விஷயப் புத்தகங்களைப் பின்னும் சிலர் தம் புத்திமைத் திரவியங்களிற் செலவிட்டு வருவார்களானால் நம் நாடு மிகச் சுலபமாய் க்ஷேமமடையும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தென்னை பனைகளை நாம் உபயோகித்துவரும் வண்ணம் வேறொரு விருக்ஷத்தை நார்வே ஸ்வீடன் தேசத்தார் பற்பல விதமாய்ப் பிரயோசனப்படுத்தி வருகின்றனர். சீனர் மூங்கிலைப் பலவிதமாய்ப் பயன்படுத்துகின்றனர். வாழையை அவ்விதமே நாம் பல விதங்களில் உபயோகித்து வந்தால் அதன் பட்டைகளை எவ்வாறு உபயோகிக்க வேண்டுமோ அவ்வாறு உபயோகியாமல் வீணாக்கி வருகின்றோம். அப்பட்டையிலிருந்து எடுக்கும்படியான நார் பட்டுப்போல் கெட்டியாயும் நயமுடையதாயு மிருக்கின்றதென்று மேற்கூறிய நாராயணையர் கண்டுபிடித்திருக்கின்றார். 29 வகை வாழைகளைப் பரிசோதனை செய்து பார்த்ததில் 12 வகைகளிலிருந்து நயமான நார் எடுக்கலாமென்றும் மற்றை வகைகளிலிருந்து திரைச்சீலை ரத்தினக்கம்பளம் முதலியன செய்யக்கூடிய முரட்டு நார் எடுக்கலாமென்றும் கண்டுபிடித்திருக்கின்றனர். சாயமேற்றின பிறகும் நார் பட்டுப்போலவே இருக்கின்றதாம். பருத்தி நூலைப்போல் இதனை நூற்கவேண்டியதில்லை. பக்குவப்பட்டவுடனே நெசவுக்கு உபயோகமாகும். பருத்தி நூலில் மூன்றில் ஒரு பங்கு கனத்தானிருக்கிறதாம். தலைக்குட்டைக்கு மிகவும் இலேசாயும் நயமுமாயிருக்கும். நார்மடிகளாகவும் நன்கு உபயோகப்படும். சென்ற டில்லி காட்சி சாலைக்கு இந்நாரினால் நெய்யப்பட்ட ஒரு ரத்தினக்கம்பளம் அனுப்பியிருந்தார்கள். அதனை எல்லோரும் வியந்தார்கள். ஒரு அவுன்ஸ் வாழை நாரின் விலை 1½ அணா. இப்பொழுது தயாராகி வருகிற புது யந்திரத்தால் நீண்ட நார் எடுக்கலாமாகையால் வாழை நாருக்கு இனி ஒரு யோகந்தான். இனி வாழைத்தோட்டக் குத்தகையும் அதிகரிக்கும். தற்காலம் நாம் வாழை நாரைப் பூக்கட்டுவதற்கும் பொடிமட்டை கட்டுவதற்கும் வெற்றிலை கட்டுவதற்கும் உபயோகித்து வருகிறோம். இவற்றைத்தவிர்த்து வேறு கைத்தொழிலில் நாமிதனை உபயோகிக்கிறதில்லை. இனி அயல் நாட்டார் ஆச்சரியப்படும் வண்ணம் பற்பல விதங்களில் இதனைப் பயன்படுத்தி உலகத்துக்கு உபகாரமாயிருக்க வகைதேடுவார்களாக. அற்பமென்று நாம் அழியவிடுகிற பொருள்கள் அளவில்லாத நன்மை பயக்கக்கூடும். ஆகையால் எதனையும் அசட்டை செய்தல் கூடாது.

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

(156-ம் பக்கத் தொடர்ச்சி).

கடுங்கானில் தன் காதலியைப் பறிகொடுத்துத் தெய்வகதியாய்ப் பாலைவனத்தின் கொடுமைகளுக்குத் தப்பிப் பிழைத்துத் தன் அருங் குழவியுடன் லாகூர் நகர் வந்து சேர்ந்த அக்காதலன், ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தானென்று முன் கூறினோம். அவன் செய்கையைச் சிறிது ஆராய்வோம். அவன் பெயர் அய்யாஸ். இனி அப்பெயரையே அவனுக்கு வழங்குவோம். அய்யாஸ் தாயில்லாக் குழவியை எவ்விதம் காப்பாற்றுகிறதென்று ஏக்கமுற்றிருந்தான். பசுவின் பால் வாங்கி ஊட்டி வளர்ப்பதென்றால் முடியாத விஷயம். பச்சைப் பிள்ளையாகையால் சில மாதங்களாயினும் முலைப்பாலுண்டு வளர்தல் இன்றியமையாதது. கையிலொரு காசுமில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை. அறிமுகமில்லாத பெரு நகரங்களில் ஒருவரையொருவர் நம்புவது கஷ்டம். தொழில் தெரிந்தவர்கள் சுலபமாய்ப் பிழைக்க வகை யுண்டாயினும் மானமாய்க் காலங் கழிப்பவர்களுக்குச் சொற்பம் கஷ்டமுண்டு. சேவகாவிருத்தியிற் சிலகாலமிருந்து பிழைக்கலாமென்றால் அவன் மனம் ஒப்பவில்லை. மானம்போய், அடிமையாய்ச் சீவிக்க எண்ணங்கொண்டவர்களுக்கே அது தகுதி. வேலைக்காரன் குலம் குணம் அறிவு முதலியவற்றைச் சீர்தூக்கித் தக்க மரியாதையுடன் நடாத்தும் யஜமான்கள் ஏற்படாவிடின் அச்சீவனம் மிகவும் கொடிது. "தொழுதூண் சுவையின் உழுதூணினிது" என்றபடி தொழுதூண்சுவை சிறப்பாகமாட்டாது. கூடா[illegible] பந்தத்துக்குட்பட்டு ஆயிரம் பொன் சம்பாதிப்பதிலும் சுவே[illegible]யாயிருந்து அரைப்பொன் சம்பாதிப்பதே மேல். ஆகையால் [illegible] தொழில் உதவாது என்று தள்ளிவிட்டான். பின் யாசகமெடுத்துப் பிழைக்கலாமென்றாலோ "ஏற்பதிகழ்ச்சி" என்றபடி அது இழிவான காரியம்.

"பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லிநாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலா மகலவோட்டி மானமென் பதனைவீட்டி
இல்லெலா மிரத்தலந்தோ இழிவிழி வெந்தனூன்றும்"

என்ற வண்ணம் பல இழிவான செய்கைகளுக்கு இடமாய் நிற்குமித் தொழிலையும் மனத்தினாலும் நினைக்கவொண்ணாது என்று தீர்மானித்துக்கொண்டான். இது நிற்க. "போனகமென்பது தானுழந் தூண்டல்" என்பதை நன்கு அறிந்தவன். அவனுக்கு வியாபாரமுறை நன்றாய்த் தெரியும். கையில் முதலில்லாமல் வாணிபம் செய்வதெப்படி? நாணயமாவது இருந்தாலும் பாதகமில்லை. இவன் நாணயம் புதிதாயிருப்பவர்களுக்கு எவ்வாறு தெரியும்? முதலும் நாணயமுமின்றி வியாபாரம் செய்வதெப்படி? கையூன்ற இடமிருந்தாலன்றோ கரணம் போடலாம். அய்யாசுக்கு ஒன்றும் தோற்றவில்லை. குழந்தையைப் பார்க்கப்பார்க்க அவன் மனம் பதைபதைத்தது. கண்கள் நீர் துளித்தன. கன்னத்தில் கைவைத்த வண்ணமாய் என் செய்வதென்று நீள நினைந்துகொண்டிருக்கையில், கையின் சிறுவிரல் மோதிரம் பளீரென்று தோற்றிற்று. திசை தப்பின மாலுமிக்கு ஒரு கரை தட்டுப்பட்டாற்போல் ஆநந்தத்தில் அழுந்தினான். ஒரு வகையும் தோற்றாமற் சஞ்சலப்பட்ட மனத்துக்கு இது ஒரு பெரு ஆறுதலாயிற்று. உடனே குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்திக்கொண்டு கடைவீதிக்குச் சென்றான். அவ்விடத்தில் காசுக்கடை யொன்றைக் கண்டுபிடித்து மோதிரத்தை விலை பகர்ந்தான். அக்காசுக்கடைக்காரனுக்கு இரண்டுமூன்று நாட்களாய்ச் சரியான வியாபாரமொன்றுமில்லை. அந்த நஷ்டத்தை இன்று எடுத்துவிடலாமென்று சந்தோஷித்து நம் அய்யாஸை நல்வரவுகூறி ஆசனமிட்டு உட்காரச் செய்து சகல உபசாரங்களும் பண்ணினான். அய்யாஸோ 'வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர்' என்னும் கபடமற்ற குணமுடையான். தான் வந்த காரியத்தைச் சீக்கிரம் முடித்துப் போக எண்ணி மோதிரத்தைக் கழற்றிக் காசுக்கடைக்காரனிடங் கொடுத்தான். அவன் மிக்க விநயமாய்ச் சிரித்த முகத்துடனும் வணங்கிய சரீரத்துடனும் தன் இரு கைகளையும் நீட்டி ஆசாரியனிடத்தில் சீஷன் அக்ஷதை வாங்கும்வண்ணம் மரியாதையாய் வாங்கி இரண்டு கண்களிலும் ஒத்திக்கொண்டு கையிலிருந்த வண்ணமே தூக்கிப்பார்த்து எடை நிதானித்துப் பின் தன் தராசைத் திருத்தி அதிலிட்டுத் தூக்கிப் பின் உரை கல்லில் உரைக்க ஆரம்பித்தான். காற்பொன்னில் மாப்பொன் எடுத்துவிடும் தட்டானுக்கு இவன் சிறிதுங்

குறைந்தவனல்லன். பேச்சுக் கொடுத்துக்கொண்டே தேய்த்துத் தேய்த்துச் சிறிதுசிறிதாய் மெழுகில் ஒற்றி எடுத்துவிட்டான். அய்யாஸ் புத்தி கூர்மையுள்ளவனானாலும் கவலைக்கடலில் மூழ்கியிருந்தமையால் யாதொன்றையும் கவனிக்கவில்லை. அக்காசுக்கடைக்காரன் ஒன்றுக்குப் பாதியாய்க் கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு மீண்டு சத்திரம் வந்து சேர்ந்தான். குழந்தையின் கவலையே அவனுக்குப் பெருங்கவலை. தன்னருங்காதலிபால் வைத்த அன்பையும் சேர்த்து இக்குழந்தையினிடம் வைத்தவனானபடியால் அவ்வன்பை அவரவரே யூகித்தறிந்துகொள்ளலாம். பால் கொடுக்கக்கூடிய ஒருத்தியைக் கூலிக்குத் தீர்மானஞ்செய்து குழவிக்குச் செவிலித்தாய் ஆக்கினான். தானும் தன் பசிதீரச் சிறிது உண்டி வாங்கி யருந்தினன். மாலையில் மஞ்சள் வெயில் புறப்படச் சிறிதுநேரமிருக்கையில் தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு சற்று உலாவிவரப் புறப்பட்டான். பட்டணத்துக்குச் சிறிது வெளியே வரவே அங்கு இருபுறங்களும் வரிசையாய் வைக்கப்பட்டிருந்த மரங்களின் அழகும் உயரமும் அவனுக்கு வியப்பை யுண்டாக்கி அவன் கவலையைச் சிறிது மறக்கும்வண்ணம் செய்தது. அது, விசாலமாய் வண்டிகள் போகிற பக்கம் ஒரு பக்கமும், மானிடர் நடப்பது ஒரு பக்கமுமாக வகுக்கப்பட்டிருந்தது. முத்துருளும்படியாக அவ்வளவு நேர்த்தியான நிலைமையிலிருந்தது. அதனிருபுறங்களும் பெரிய பசும்புற்றரை மைதானங்களிருந்தன. அவை பெரும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் மிகவும் அழகாய்க் காணப்பட்டன. அவற்றின்மீது மஞ்சள்வெயில் பட்டதானது மரகதத்தட்டின் மத்தியில் தங்கத்தை உருக்கி வார்த்தாற்போல் தோன்றிற்று. காளைப்பருவமுள்ள அவ்வூர் இளைஞர் சிறிதுங் கவலையின்றி அம் மைதானங்களில் விளையாடிக் குதுகலித்து ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தனர். ஒருபுறம் வயிறு நிறைய மேய்ந்துவிட்டு மேய்ச்சற்றரையினின்றும் வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் பசுக்கூட்டங்கள் மணிச்சத்தங்களுடன் கம்பீரமாய்ப் போகின்ற அழகும் அவற்றிற் சில கிடாரிகளைத் துரத்திக்கொண்டு மைலைக்காளைகள் முக்காரமிட்டுச் செல்லும் அழகும் கண்களுக்கு ஆனந்தமளிக்க, ஒத்துக்கு மத்தளங் கொடுத்தாற்போல் அவ்வொலிகளுக்கு இடையிடையே அம் மைதானத்தின் மத்தியில் ஓடாநின்ற தெள்ளிய ஓடையின் சலசலப்

பான சப்தமானது காதுக்கினிமை யுண்டாக்கிற்று. அவ்விஸ்தாரமான மைதானங்களுக்கு மத்தியில் பற்பல உத்தியான வனங்கள் காணப்பட்டன. அவை சமுத்திர மத்தியில் தோன்றும் பசுந்தீவுகளைப்போல் விளங்கின. அவைகளின் அழகை என்சொல்வேம். வரிசை வரிசையாய்ப் பல பழந்தரு மரங்களும் புஷ்ப மரங்களும் சந்தன முதலிய வாசனை மரங்களும் அவைகளின் ஊடே அழகிய சிறு பாதைகளும் காணப்பட்டன. லதாக்கிரகங்கள் ஆங்காங்கு ரம்மியமாய் அமைக்கப்பட்டிருந்தன. செய் குன்றுகளும் பசும்புல் மேடைகளும் பூச்செடிகளுடன் இனிமையாய் விளங்கின. சிற்றநதிகள் வெள்ளைப்பருக்கைக் கற்களுக்கு மத்தியில் சலசலவென்று இனிமையான தொனியுடனே ஓடிக்கொண்டிருந்தன. பற்பல ஜாதிச் செடிகளும் கொடிகளும் பற்பல வர்ணங்களுடைய பூக்களுடன் இனிமையாய் விளங்க அவற்றின் மத்தியில் ஜலயந்திரங்கள் ரம்மியமாய் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றினின்றும் தண்ணீர் ஆயிரமுகமாக ஆகாயத்திற் பல மெல்லிய தாரைகளாகக் கிளம்பி விளையாடிக் களைத்த வாலிபர் போன்று வளைந்து துளித்துக் கீழே விழுவது அற்புதக் காட்சியாயிருக்கும். ஆகாயமளாவி ஓங்கி வளர்ந்திருந்த விருக்ஷங்களில் பறவைகள் கூட்டங்கூட்டமாய்க் கூடிக் குதூகலிப்பது வசந்த விருந்தினைப் பாட்டாலுபசரித்துக் களிக்கச்செய்வதுபோல் விளங்கிற்று. இவ்விநோத காட்சிகளெல்லாம் உட்கார்ந்து கண்டு களிக்கச் சலவைக் கற்களால் உயர்ந்த ஆசனங்களமைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்கருகே இந்திர தனுசில் தோன்றுகின்ற வர்ணங்களைப் பழிக்கும்படியான பற்பல வர்ணங்களையுடைய பலஜாதி வாசனைப் புஷ்பங்கள் தம்மைப் பாராமல் அலக்ஷியம் செய்துபோகும ஆடவர்களையும் மகளிர்களையும் தம் வாசனையாகிற கைகளால் பிடித்திழுத்துப் பரிகாசம்பண்ணி உபசரித்துப் பின் அவர்களை வழியனுப்புமாபோல் சில அவர்கள் மார்புறத் தழுவின வண்ணமாகவும் சில அவர்கள் சிரமேல் அமர்ந்த வண்ணமாயும் மற்றும் சில அவர்கள் கையின் கண்ணே அமர்ந்து சிற்சில சமயங்களில் அவர்களின் கன்னங்களில் முத்தமிட்டு கொஞ்சிக்குலாவும் வண்ணமாகவும் கூடவே சென்றன. பூக்களின் தேன் துளிகளையும் மகரந்தப்பொடியையும் வாரிக்கொண்டு தென்றற்காற்றானது குபுகுபுவென்றுவீசிச் சகல ஜீவராசிகளையும்

சந்தோஷப்படுத்தும் சலவைக்கற்களாகிய படிக்கட்டுகள் நாற்புறமுமமைக்கப்பட்ட சிறு தடாகங்கள் பெரியோர் மனம்போல் தெளிந்தும் குளிர்ந்துமிராநின்ற ஜலத்தால் நிரம்பி கம்பீரமாய் விளங்கின. மனமொத்த மித்திரர்கள் அவரவரிஷ்டப்படி சுயேச்சையாய் உலாவிக்கொண்டும் உட்கார்ந்தும் பரமரகசியங்கள் பேசிக் களித்துக்கொண்டிருந்த காட்சியை அம்மம்ம என் சொல்வது! சில குழந்தைகள் ஓடியாடிக் கூச்சலிட்டுத் திரிவார்கள். சில தாய்மார்கள் தம்மின் புதல்வருக்கு அக்காட்சிகளின் அற்புதங்களை யெல்லாம் விளக்கிக் கொண்டே கற்பித்து மெல்ல உலாவுவர். எப்புறமும் சந்தோஷமும் உல்லாசமும் நிறைந்து அவ்வுத்தியான வனங்கள் அஷ்டலட்சுமியும் நிர்த்தனம் பண்ணுகிற விதமே விளங்கின. இருந்தாற்போல் வானமெல்லாம் ஒரே சிவப்பாய்த்தோன்ற அவ்வனங்கள் முழுவதும் செம்பஞ் சூட்டப்பட்டதுபோல ஒரே சிவப்பாய் விளங்கிற்று. சற்று நேரத்துக்கெல்லாம் அந்நிறம் முற்றிலும் மறைந்துவிட்டது. ஏககாலத்தில் அவ்வுத்தியானவன முழுவதும் மின்சார விளக்குகள் தோன்றின. அது ஒரு இந்திரஜாலக் காட்சிபோலவே இருந்தது. சூரியனும் வெட்கமடைந்து நாமிங்கிருக்க யோக்கியதை யில்லையென்று குடதிசையில் மறைந்தான். அய்யாஸ் இவ்வின்புற்ற காட்சிகளையெல்லாம் கண்ணுற்றுச் சந்தோஷமடைந்தும் தன்னருங்காதலி யில்லாக் குறைவால் சிறிது துக்கித்தான். குழந்தையின் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் அத்துக்கமுமறைந்தது. அவ்வுத்தியான வனத்தினின்றும் புறப்பட்டு தான் தங்கியிருந்த சத்திரம் நோக்கிப் புறப்பட்டான். போகும்வழி பெரியகடை வீதியாயிருந்தது. ஆங்கு நடக்கும் வியாபாரங்களைச் சிறிது கவனித்து சுலபமாகவும் இலாபம் அதிகம் வரத்தக்கதாயுமுள்ள ஓர் வியாபாரம் செய்ய மனத்தில் சங்கற்பித்துக்கொண்டு இருப்பிடஞ்சென்று குழந்தையை உண்பித்துத் தானுமுண்டு அயர்ந்து நித்திரைபோனான். மறுநாட் காலையில் வேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு குழந்தையைச் செவிலித்தாயினிடம் ஒப்புவித்துப் பெரிய கடைவீதி சென்று அரை மணங்கு பேரீச்சம்பழமும் ஒரு சிறு தராசுத்தட்டும் ஒரு நல்ல சிறு தகரப் பெட்டியும் வாங்கி அதில் அப்பழங்களை யிட்டுத் தெருத்தெருவாய் வியாபாரம்பண்ணி வந்தான். ஈக்கள் மொய்த்துப் பழம்புளிபோல்

தோன்றி அருவருப்பாய் நம் தெருக்களில் காணப்படும் விதமில்லாமல் குழந்தைகள் மனத்தைக் கவரும்வண்ணம் சிவப்பாயும் சொளைசொளையாயுமிருக்கப்பட்ட அப்பழங்களை வாங்கித்தின்ன தெருவிலிருக்கப்பட்ட குழந்தைகளெல்லாம் ஓடிவந்து கூட்டம்கூடின. அவனும் சொற்ப இலாபம் கிடைக்கும் வண்ணமே மலிவாய்க் கொடுத்தான். அன்று அவனுக்குப் போட்ட முதலும் பாதி இலாபமும் கிடைத்தது. அதனைக்கொண்டு திருப்தியடைந்து உணவுக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு சத்திரம் போய்ச்சேர்ந்து குழவியை எடுத்துச் சீராட்டிக்கொண்டு அவ்விரவைச் சுகமாய்க் கழித்தான்.

(தொடரும்)

எஸ். சாமிநாதையர்.

சைவ சித்தாந்தம்.

(தொடர்ச்சி)

இவ்வாகமத்துளித்துணை வலியுறுத்திச் சிவனோடொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆன்மஞானமென்றே யப்பிரமேயமாய் ஒன்றோடும் உவமிக்கப்படாது நின்ற அச்சிவனை யறிதற்குபாயமென்றும், அங்ஙனம் பாவிக்கவே யச்சிவனோடொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவனென்றும், அசுத்தப்பொருளோடொற்றுமைப்பட்டு நின்ற ஆன்மாச் சுத்தப்பொருளோடொற்றுமைப்பட்டு நிற்குமாறெங்ஙனமென்னு மையம் நீக்குதற்குத் தொகுத்தொரு வார்த்தையாற் கூறுதுமென் றெடுத்துக்கொண்டு ஆன்மா எதனையெதனைச் சார்ந்தான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாக வதுவதுவாய் நிற்பனென்றும் இங்ஙனமாகலாற் சிவனோடொற்றுமைப்பட்டு நிற்புழிச்சிவன் குணங்களாகிய வெண்குணங்களுந் தன் றன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன் இதுவே சிவத்துவத்தைப் பெறுதலென்றும் இதற்கு மேலதியர்பாலனவொரு நூலினுமில்லை முக்காலுஞ் சத்தியமென்று வலியுறுத்தியும் ஆன்மா எல்லாவற்றினுமதுவதுவாய்நிற்குமாற்றை யின்னும் விளங்கக்கூறுதுமென் றெடுத்துக்கொண்டு பூதான்மா, தத்துவான்மா, மந்திரான்மா, அந்தரான்மா, சீவான்மா, பரமான்மாவென அறுவகைப்படுத்தி அவ்வவற்றிற் கூடியவழி யவ்வப்பெயர் பெற்று அது வதுவாய் நிற்பனென ஆண்டாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும் படிகத்தை யுவமைகூறியும் இங்ஙனம் ஏனையாகமங்கள்போலப் பொருள் கவர்ச்சிப்பதற்கு இடங்கொடாதவண்ணம் அறுமுகக்கடவுண் மாட்டுவைத்த கருணை மிகுதியானங்கையினெல்லிக்கனிபோல ஆன்மாவினியல்பு விளங்க வுணர்த்திப் பலகாலும் வலியுறுத்தி யெல்லா வாகமங்களினு மிது சிறந்ததென்பது தோன்றச் சருவஞானோத்தரமெனப் பெயருமிட்டருளிச் செய்த ஸ்ரீகண்டருத்திரக்கடவுளின்

திருவுளக்குறிப்பிங்ஙனமென்க. இவ்வான்ம இயல்பு திராவிட மகாபாடியத்தில் ஆறுஞ்சூத்திரத்தினின்றுஞ் சுருக்கி எடுத்து எழுதப்பட்டது. இன்னும் இதன் விரிவை அப்பாடியத்திற் காண்க.

ஆன்மா மும்மலங்களு நீங்கி சிவன் குணங்களாகிய எண்குணங்களையும் பெறுதலால் தன்னிடத்தில் சுப்பிரகாசமாய் விளங்குதலென்னுஞ் சிவத்துவபூர்த்தி விளக்கமாகிய சிவானந்தத்தைப் பெறுதலே ஆன்மாவுக்கு சொரூப லக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பு.

ஆன்மா அநாதியே ஆணவமயத்தோடு கூடி அறிவின்றி நிற்றலால் அறிவு விளங்குதற்பொருட்டு சூழ்ச்சித் துணைவராகிய அந்தக்கரணங்களோடு கூடிநின்று சாக்கிர முதலிய ஐந்தவத்தை அடைதல் தடத்த லக்கணமெனப்படும் பொதுவியல்பு ஆக இருவகை யியல்பும் கண்டுகொள்க. புத்தி தத்துவத்திலுள்ளதான சத்துவகுண விளக்கமே சுகமும் ரசோகுண விளக்கமே துக்கமும் தமோகுண விளக்கமே மோகமுமாமென்க.

சம்சாரத்தில் தனக்கு வேறான புத்தி தத்துவத்திலுள்ளதாய்த்தன் மாட்டு விளங்குஞ் சத்துவகுண பூர்த்தியே போகானந்தமல்லது வேறில்லையென்பது சர்வாகம சம்மதம். ஆதலால் முத்தியினும் தனக்கு வேறான அநாதிமுத்த சிவத்திலுள்ளதாய்த் தன்கண் அத்துவித சம்பந்தமாய் விளங்குஞ் சிவசாட்குண்ணிய பரிபூர்த்தியே மோக்ஷானந்தம். இங்ஙனமாகலில் சிவசாட்குண்ணிய சொரூப சிவத்துவம் ஆன்மாவில் அத்துவிதமாய் மேலிட்டு விளங்கும் பொருட்டே தீக்ஷையில் ஆன்மாக்களைப் பிராசாத மார்க்கமாகக் கொண்டு சென்று துவாதசாந்தத்தில் அநாதிமுத்த சிவனிடத்தில் யோசித்து, பின்னர்ச் சிவசாட்குண்ணியங்களை ஆன்மாவில் தலைக்கூட்டப் பண்ணி ஒவ்வொன்றிற்கு மும்மூன்றாகுதி செய்தல் வேண்டிற்று. இவ்வாறன்றி ஆன்மாவிற்கு சிவ சாட்குண்ணியங்களின் வேறாக சாட்குண்ணியந் தனியே யுண்டென்று ஓராகமமும் உரைத்திலது. அத்துவித சொரூபம் சிவஞானமாபாடியத்துள் விஸ்தாரமாக எடுத்துக்காட்டி யுரைக்கப்பட்டது. அதையும் சுருக்கி யுரைப்பாம்.

அத்துவிதமென்னுஞ் சொல்லின் நகரம் அன்மை, இன்மை, மறுதலை என்னு மூன்றனுள் ஒன்று பயக்கும். அவற்றுள் இன்மைப்பொருள்கொண்ட மாயாவாதி இரண்டின்மை யொரு பொருளினன்றி [illegible] முதலியவா யெண்ணப்படும் பொருள்க ளில்லாமையா னத்துவிதமென் [illegible]ஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதே யாமெனவும் ஒரு பொருளாயினுங் குணகுணியின் வேற்றுமைதோன்ற நிற்பின் கேவலம் ஒன்றாதலின்மையின் அத்துவிதமென்பது உபசாரச்சொல்லாய் முடியுமாகலிற் றன்னின்வேறு யொருபொருளுமின்றித் தானுங் குணமுடைப் பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பரப்பிரமப்பொருளென்பது அத்துவிதமென்னுஞ்

சொல்லிற்குப் பொருளெனக் கோடலின் அவர் கேவலாத்துவிதிகளெனவும் வழங்கப்படுவர்.

இராமநுஜர் சிவாத்துவித சைவர் முதலியோரும் அவ்வாறே யின்மைபற்றி யொன்றெனப் பொருள்கொண்டு சத்தி சங்கற்ப முதலிய குணங்கள் பரம் பிரமப்பொருட்கு உளவென்று உபநிஷதங்கூறுதலானும் அவை செயற்கை யென்றற்கு ஓரியைபின்மையானும் பசுபாச வுண்மையு முபநிடதங்களிற் கூறுதலானும் அவையொடு முரணிக் கேவலாத்துவிதமெனக் கோடல் பொருந்தாமையின் தன்னோடு இயைபுடைய பசுபாசங்களானும் தன் குணங்களாகிய சத்தி சங்கற்ப முதலியவற்றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரம் பிரமம் இரண்டில்லை ஒன்றென்பதே யத்துவிதமெனுஞ் சொற்குப் பொருளென விசிட்டாத்துவிதங் கோடலின் அவர் விசிட்டாத்துவிதிகளென வழங்கப்படுவர்.

பேதவாதிகள் மறுதலைப் பொருள்பற்றி யிரண்டன் மறுதலையாகிய வொன்றெனப் பொருள்கொண்டு அங்ஙனங் கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவது முண்டென்றற்கு இழுக்கின்மையின் அத்துவிதமென்பதுந் துவிதமென்னும் பொருளைப் பயக்குமென்று போவர்.

அவரெல்லாம் அச்சொற்கு ஒன்றே பொருளெனக்கொண்டு தத்த மதங்களோடு முரணுமைப் பொருட்டுக் கேவலம் விசிட்டம் மறுதலை யென்னும் அடைகூட்டி யிடர்ப்பட்டுப் பொருள்கொள்வர். அவருள் மாயாவாதி கூறுங் கேவலமும் பேதவாதி கூறும் மறுதலையுந் சுருதியோடு முரணுதலினிடைக் கேலாவாம். ஏனையோர் கூறும் விசிட்டம் பொருந்துமாயினும் அத்துவிதத்திற்குப் பொருள் ஒன்றெனக் கோடல் பொருந்தாது என்னை ஒன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக் கூறவமையும் அவ்வாறன்றி அத்துவிதமென உய்த்துணரவைத் தோதவேண்டாமையானும் ஒன்றென்று பொருள் கொள்ளின் மகாவாக்கியப்பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதமென்றது பற்றி ஆண்டொரு பயன்படாமையானுமென்க மற்றென்னையோ அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெனிற் சித்தாந்த சைவருணர்க்குமாறு காட்டுதும். அது நீயாகின்றுயெனவும் அது நானாகின்றேனெனவும் அது இதுவாகின்றதெனவும் மூவிடம்பற்றி நிகழுந் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களைக் கேட்ட வழி அதுவென்பது ஒரு பொருள். நீயென்பது ஒரு பொருளாகலின் ஒரு பொருள் மற்றொரு பொருளாமாறு யாங்ஙனமென்னும் ஐய நீக்குதற்கு எழுந்ததாகலின் அதுவிதுவாதற்கேதுவாய அவ்விரண்டற்கு முளதாகிய சம்பந்த விசேட முணர்த்துதலே அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளென் றுணர்ந்துகொள்க. (இன்னும் வரும்).

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடம்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
13 JUL 1903
MADRAS.

உ

குமரன்துணை.

விவேகபாநு

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

சம்புடம் 2 } 1903ஞ ஜூன்மீ { இலக்கம் 7

பாபமும் புண்ணியமும்.

இவ்வுலகின்கண் உடல்தாங்கி நடக்கும் பல்வகை உயிர்களுள் மனிதரே மேலான பதவியாகிய மோக்ஷமென்னும் துக்க நிவர்த்தியை இப்பொழுதே இங்கேயே அடையத்தக்க ஆற்றலுடையார் என்பது எவரும் அறியத்தக்கது. என்னை? புருஷார்த்தம் நான்கினுள்ளும் மிகச்சிறந்ததாய வீடென்பது ஞானமொன்றினாலேயே அடையத்தக்கதாயும் அவ்வெதார்த்த ஞானமும் சுத்தாந்தக்கரணத்தினிடமாத்திரம் உதிப்பதாயும் அவ்வந்தக்கரண சுத்தமும் நிஷ்காமியகர்மம் புரிவதால் எய்துவதாயும் அங்ஙனம் புரிவான் கர்ம பலங்களில் நிராசையுண்டாதற்குப் புண்ணிய கர்மாதிக்கமும் பாபகர்மாபாவமும் வேண்டுவதாயும் அவ்விரண்டு முண்டாதற்குப் புண்ணிய கர்மங்களைப் பாபகர்மங்களினின்றும் பிரித்தறியும் சக்தி வேண்டுவதாயும் அச்சக்தியாய பகுத்தறிவு ஏனைய உயிர்களிடத்து அடையப்பெறாது மனிதரிடத்து மாத்திரம் பொருந்தியிருத்தலானுமென்க. துக்க நிவர்த்தி என்னும் வீட்டைத்தவிர மற்றெதுவும் மனிதருடைய பிரேமைக்கு இலக்கல்லவென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆசையென்னும் விருக்ஷத்துக்கு ஆணிவேர்களாயுள்ள மண் பெண் பொன் முதலிய விஷயங்களும் துக்க நிவர்த்தியின் பொருட்டே மோகிக்கப்படுகின்றன. அங்ஙனம் மோகிக்கப்படுதல் காட்டுமிருகங்களால் அவிவேக நிமித்தம் கானலினீர் ஜலமென மோகிக்கப்படுதல் போலுமேயாம். எங்ஙனமாயினும் சுகப்பிராப்தியே மனிதருடைய இலக்கு,

சுகப்பிராப்தியென்பது துக்க நிவர்த்தியே யன்றி வேறொன்றன்றென்றறிக. எங்ஙனமெனின், கூறுதும். ஜீவன் முக்தர்கள் ஒழிந்த ஏனையர் யாவரும் ஜாக்கிர ஸ்வப்பன அவஸ்தைகளில் துக்கத்தையும் சுஷுப்தி அவஸ்தையில் (கவலையில்லாத நித்திரையில்) சுகத்தையும் அனுபவிக்கின்றனர். இவை சற்று பரிசீலிப்போமாக. துக்கம் தோன்றுகின்ற இரண்டவஸ்தைகளுக்கும் அஃதொழிந்த மற்ற அவஸ்தைக்கும் பேதமென்ன? முன்னிரண்டவஸ்தைகளிலும் மனோவிருத்திகளின் பாவமும் பின்னையதில் அவற்றின் அபாவமுமன்றி மற்றொன்றும் காண்கின்றோமில்லேம். ஆதலின் மனோவிருத்தி யுள்ள பொழுது துக்கமும் அஃதில்லாவிடத்து சுகமும் பிராப்தமாகின்றதெனப் பெற்றாம். மனோவிருத்தியில்லாத சுஷுப்தி அவஸ்தையில் உண்டாகும் சுகானுபவம் ஜாக்கிர ஸ்வப்ன அவஸ்தைகளிலுண்டாகும் துக்க நிவர்த்தியின் அனுபவமேயன்றி மற்றல்லவென்பது ஊன்றி நோக்கின் யார்க்கும் புலப்படத்தக்கது. இதுபோலவே சுக வருவாயாகத் தோன்றும் பல்வகை விஷயங்களையும் ஆராயின் அவ்விஷயங்களை அடையுமுன் பிராப்தமாயிருந்த துக்கத்தின் நாசத்தையே சுகமெனக் கருதப்படுகிறதென்பது வெளியாகும். உதாரணமாக:—ஒரு மனிதன் புத்திரபாக்கியம் அடையப்பெறாமலிருந்து தீர்த்த யாத்திரை, நாகப்பிரதிஷ்டை முதலியன செய்து வெகுநாள் வருந்தினதின்பின் ஒரு புத்திரனைப் பெறவும் அவன் பாலியகாலத்தில் யாரோடும் சொல்லாமல் சிறுவர்களுடன் சேர்ந்து தூரதேசத்திற்குப் போய்விடவும் நேர்ந்ததென வைத்துக்கொள்வோம். அங்ஙனமாயின் அப்புத்திரன் போனநாள்முதல் தகப்பனுடைய மனது சலனாவஸ்தையைப் பொருந்துமென்றதற்குத் தடையாதுமின்றன்றே? அவ்வவஸ்தையையன்றோ நாம் துக்கமெனக் கிரகிப்பது. இத்துக்கம் நிவர்த்தியாதல் பின்னர் எப்போதேனும் புத்திரனைக்கண்ட பொழுதன்றோ? அப்பிதா புத்திரனைப் பின்னர்க் கண்டபொழுது அடையாநின்ற மனதின் நிர்சலாவஸ்தையைச் சுகமெனக் கிரகிக்கின்றான். இதுபோலவே ஜாக்கிர ஸ்வப்னாவஸ்தைகளில் மனமானது ஏதேனும் ஓர் விஷயத்தைப்பற்றி காமாதிகள் என்று சொல்லப்படும் அறுவகைக் குணங்களுள் எந்த ஒன்றின் ஸ்வபாவமாயேனும் விகாரப்படுங்

கால் சலனமடைகின்றது. அச்சலனமுள்ளது வரை துக்கப்பிரதீதியுண்டாகிக்கொண்டேயிருக்கின்றது. சுஷுப்தியில் அத்தகைய சலனம் ஒடுங்குவதால் துக்கநிவர்த்தியாகின்றது. ஆகவே சுகமென்பது துக்கநிவர்த்தியேயாம். ஆன்றோர்கள் "துக்கநிவர்த்தி", "மோக்ஷம்" என்னும் இரண்டு பதங்களையும் ஒரு பொருளையே குறிக்கும் பதங்களாகப் பிரயோகித்தார். ஆகவே சகல பிராணிகளுக்கும் மோக்ஷத்தில் அத்தியந்தம் பிரேமை உளவாதல் பிரத்தியக்ஷம். நாம் மேற்கூறியவாறு மோக்ஷப்பிராப்தியே மனோசலன நிவாரணத்திலென்பது சுருதிகளுடையவும் விவேகிகளுடையவும் சித்தாந்தம். மனோசலனமும் பல்வகை உபாயங்களால் நிவர்த்திக்கப்படும். ஆயினும் விவேகம் அல்லது ஞானம் என்று சொல்லப்படுவதொன்றுமன்றி ஏனைய உபாயங்களால் நிவர்த்திக்கப்படாநின்ற சலனம் அத்தியந்த நிவர்த்தியடைவதொன்றன்று. ஆதலின் ஞானமே மோக்ஷசாதனமென்றார் பெரியோர். அத்தகைய ஞானத்தையடைவதற்கு முதற்படியாயுள்ளது புண்ணிய பாப கர்மங்களைப் பிரித்தறிய வேண்டுவதென முன்னர்க் கூறியிருக்கின்றாம். ஆதலின் துக்கத்தின் அத்தியந்த நிவர்த்தியை அபேக்ஷிக்கும் யாவரும் மேற்கூறிய இரண்டு கர்மங்களையும் பிரித்தறிந்து பாப கர்மங்களை நீக்கிப் புண்ணிய கர்மங்களைப் புரியவேண்டுதல் ஆவசியகம். இக்கர்மங்களைப் பிரித்தறியும் சக்தியில்லாதார் எவ்வாற்றானும் ஞானமடைதல் அசாத்தியம், ஆகவே துக்க நிவர்த்தியாகிய அவரது இலக்கும் தப்பிப்போவதொன்றேயாம்.

சாதாரணமாய் ஜனங்களுக்குப் புண்ணியம் பாபம் என்பவை யாவையெனப் புலப்படுவதில்லை. தம்மைப் பார்க்கிலும் கற்றுணர்ந்தவர்களாகக் கணிக்கப்படுபவரோ, சாஸ்திரங்களோ, கூறுபவைகளை மாத்திரம் கேட்டு நடக்கும் சீலமுடையவராயிருக்கின்றார் பலர். தாமே செய்யாது மற்றவருதவியை எதிர்பார்த்திருப்பவர் கொண்டு முடிக்க எத்தனிக்கும் எக்காரியமும் சாதாரணமாய் நிறைவேறுதல் பிரயாசமென்பது எவர்க்கும் அனுபவத்தால் புலப்பட்டிருக்கத்தக்கதொன்று. மனிதனே ஜாக்கிர ஸ்வப்ன அவஸ்தைகளில் இடைவி

டாது கர்மம் செய்துகொண்டிருக்கின்றவனாகின்றான். அவனாற் செய்யப்படும் ஒவ்வொரு கர்மமும் புண்ணியம் பாவம் என்று சொல்லப்படும் இருவகுப்பில் ஒன்றனுள் சேரத்தக்கதாகவே யமையும். இங்ஙனமிருக்கையால் ஒவ்வொரு கர்மமும் செய்வதற்குமுன் மற்றவரோடு ஆலோசித்தோ சாஸ்திரங்களை நோக்கியோ புண்ணியம் அல்லது பாபம் எனத் தெரிந்து செய்தல் ஒவ்வாது. அன்றியும் தான் ஆலோசிக்கும்படி நேர்ந்த மனுஷனும் அஃதின்னதெனப் பிரித்தறிய இயலாதவனாக இருக்கவும்கூடும். சாஸ்திரங்களிலுள்ள புண்ணிய பாப கர்மங்களின் நாமாட்டவணையில் அஃது குறிக்கப்படாததொன்றாக இருக்கவும் கூடும். இங்ஙனம் சம்பவித்தலே பெரும்பான்மை ஒக்கும். அங்ஙனமாயின் எதை ஆதாரமாக வைத்துக் கர்மங்களைப் புண்ணிய மெனவும் பாபமெனவும் முன்னிருந்த பெரியார் பிரித்துள்ளாரென நன்காராய்ந்து அவரது கருத்தை யுணரவேண்டுவது அவசியகம். அவ்விதம் உணர்வோமாயின் நாமே நிதானித்து நீக்கவேண்டுவதை நீக்கிப் புரியவேண்டுவதைப்புரிதல் இலேசாகமுடியும். அப்போது சாஸ்திரத்திலுள்ள பெயரேட்டைப் பார்க்கவேண்டிய அவசியமுமில்லை. மற்றொருத்தரைக் கேட்கவேண்டிய நிமித்தமுமில்லை.

இங்ஙனம் எதார்த்தத்தை யுணர்ந்து கர்மம் புரிவார் எத்தனை பேர் இருக்கலாம்? வெகு சுருக்கமேயாம். ஆதலின் பலர்க் குபகாரமாகுமாறு இவ்விஷயத்தை யெடுத்துக்கொண்டாம்.

இதனை வாசிக்கும் நண்பர்களே! சற்று கவனமாகக் கேளுங்கள். பிராணனுக்கும் சரீரத்திற்கும் எத்தனை சம்பந்தமுளதோ அத்தனை சம்பந்தம் இவ்விஷயத்திற்கும் உங்களுக்குமுள்ளது. சற்று ஊன்றிப்பாருங்கள். சற்று ஊன்றிப்பாருங்கள்.

புண்ணிய பாப கர்மங்களைப் பற்றிப் பேசப் புகுந்தோமாதலின் முதலில் கர்மம் இன்னதென விளக்கிக்கொள்ள வேண்டுவது ஆவசியகமன்றோ? கர்மம் எனின் தொழில் எனப் பொருள்படும். ஆகவே அதற்குச் சாதனமாயுள்ளன மனம், வாக்கு, காயம் ஆகின்றன. இவற்றுள் வாக்கு, காயம் என்பன அகத்திற் செய்யப்பட்ட

கர்மங்களைப் புறத்துப் பயனடையச் செய்வதற்கு ஏதுவாகும் கருவிகளேயன்றி மற்றல்ல. ஆதலின் அக்கருவிகளைப் பிரயோகித்தாலும் பிரயோகிக்காவிட்டாலும் மனம் என்னும் கருவியினால் செய்யப்படும் எத்தொழிலும் செய்ததாகவே முடியும். அஃதொழிந்து செய்யப்படுவன யாவும் கர்மம் அல்லாததாகவே முடியும். அதுபற்றியே

“ஆய மனத்தின் செயல் செயலா மதனு லொழிந்த தொழிற் றுளதாம்” என்றார் வசிஷ்டரும். எக்கர்மமும் தன்னையும் பிறனையும் பாதிக்கத்தக்கது. ஆனால் மனமானது வாக்கினோடோ காயத்தினோடோ அல்லது இரண்டினோடுமோ சம்பந்தப்பட்டுக் கர்மம் செய்யும்பொழுதெல்லாம் அக்கர்மம் பிறனைப் பாதிக்கும் தன்மையில் சீக்கிரமாகவும் அவர்க்குப் பிரத்தியக்ஷமாகவும் நிறைவேறுகின்றது. அங்ஙனமன்றி மனமானது தனித்துச் செய்யும் கர்மங்கள் யாவும் பிறருக்குப் பிரத்தியக்ஷமல்லாவிட்டாலும் சீக்கிரமாக நிறைவேறாவிடினும் பாதிக்காது விடுவதில்லை. இதில் ஓர் இரகசியமுமுளது. அதாவது எக்கருமமும் முதலில் புரிபவனைத் தாக்கியே பின்னர் பிறனைத் தாக்குகின்றது. இவ்விஷயத்தில் அதனைத் துப்பாக்கிக்குச் சமமாகச் சொல்லலாம். துப்பாக்கியிலிருந்து குண்டு எழும்பும்பொழுது பிடித்திருப்பவனை உதைக்காது செல்வதில்லை. கர்மமும் அதுபோலவேயாம். ஆனால் துப்பாக்கியானது மற்றொன்றைத் தாக்கியபின் திரும்பவும் நிறைக்கப்பட்டாலொழிய சக்தியற்றதாகத் தீருகின்றது. மனமோ அங்ஙனமன்று. ஒரு கர்மத்தை ஒருதடவல் செய்யுமாயின் திரும்பவும் திரும்பவும் தன் எஜமான் உத்தரவன்றியிலேயே அதனைச் செய்யவும் சில சமயங்களில் எஜமானனை மீறியும் அதனையே செய்வதற்கு ஆற்றலுடையதாகவுமிருக்கின்றது. மனம், கர்மம் செய்கிறதென்பதைச் சிலருக்குக் கிரகிக்கப் பிரயாசமாயிருக்கலாம். மனம், கர்மம் செய்தலாவது அதன் ஒவ்வொரு நினைப்புமே. நினைப்பைத் தவிர கர்மம் என்பதிலவேயில்லை. ஆகவே ஒவ்வொரு நினைப்பும் மனிதனை மோக்ஷத்திற்கோ அல்லது ஜென்மத்திற்கோ கொண்டு போகத்தக்கவைகளில் ஒன்றாகவே யிருக்கின்றது. நினைப்பே கர்மம் என்பதை ஆதாரமாகவைத்தே மாந்தர் கவப்

னாவஸ்தையிலும் கர்மம் புரிவதாக மேலே கூறினும். சுவப்னாவஸ்தையில் கர்மம் புரியப்படுகின்றதென யாம் இங்கு கூறுவது பலர்க்கு நூதனமாகத் தோன்றலாம். தோன்றினும் அவ்வுண்மை மிகப் பழமையானதும் அனுபவத்திற் கொத்ததுமேயாம். நினைப்பினால் 'வாசனை' யேற்படுகின்றதென்பது பிரத்தியக்ஷம். அந்நினைப்பு ஜாக்கிராவஸ்தையில் நிகழ்ந்ததாகவே இருக்கவேண்டுமென்ற நியமம் எங்குமில்லை. இருப்பினும் யுக்தி அனுபவங்கட்கு விரோதம். ஆதலின் நமக்கதை அங்கீகரிக்கவேண்டிய ஆவசியகமுமின்று.

நாம் மேற்கூறியவாறு எக்கருமமும் தன்னையும் பிறரையும் பாதிப்பதாக இருத்தலின் தனக்கும் பிறருக்கும் நன்மையை விளைப்பவை எவையோ அவைகளையே புண்ணியமெனவும் தனக்கும் பிறருக்கும் தீமையை விளைப்பவை எவையோ அவைகளைப் பாபமெனவும் கொள்வாரானார். ஒரு கர்மம் நன்மையை விளைப்பது தீமையை விளைப்பது என எதை ஆதாரமாகவைத்துக் கணிப்பது என்பதே அறியவேண்டுவது. ஆகவே நன்மையாவது யாது? தீமையாவது யாது? என்னும் கேள்விகள் புறப்படுகின்றன. நன்மை தீமை என்னும் பதங்களின் கருத்தைப்பற்றியாலோசிக்கின் ஹிதமானவை நன்மையென்றும் அஹிதமானவை தீமையென்றும் உணர்கின்றோம்.

சிலர் பணத்தையும் வேறுசிலர் சந்தானத்தையும் மற்றும் சிலர் ஸ்திரீகளையும் இன்னும் சிலர் உத்தியோகத்தையும் இங்ஙனம் அவரவர் தத்தமக்கு அவ்வப்போது வேண்டுவனவாகத்தோன்றும் பற்பல விஷயங்களை ஹிதமாகக் கருதுகின்றனர். அவ்வப்போது அவர்க்கு ஹிதமாகத் தோன்றுவனவற்றிற்கு மாறானவைகளை அஹிதமாகவும் கொள்கின்றனர். உண்மையை நோக்காது அவரவர் அவ்வப்போது கொள்ளும் கருத்துகட்கிணங்கியவாறு ஆலோசிக்கின் அவரவர்க்கு நன்மை தீமைகள் வெவ்வேறாதலும் ஒருவர்க்கே காலபேதத்திற்கிணங்க நன்மை தீமைகள் வெவ்வேறாதலுமாக அமையும். சாதாரணம் இங்ஙனமே கருதி அதததற்காம் கர்மங்களைப் புரிவாராயினர் புலர்.

ஆனால் எதார்த்தம் நோக்கின் அங்ஙனமன்று. மேற்கூறியவாறு எவர்க்கும் துக்கநிவர்த்தியே இலக்காம். அந்நிவர்த்திக்கேது, உலக விஷயங்களாகக் கருதி மோசம் போகின்றனர் அறிவில்லார். எதார்த்தத்தில் அதற்கு ஏதுவானது ஞானமென மேலேயே கூறியிருக்கின்றோம். ஆதலின் துக்கநிவர்த்திக்கேது ஞானமாகவே துக்கத்திற்கேது அஞ்ஞானமெனப் புறப்படுகின்றது. ஆகவே அஞ்ஞானத்தை அடியாகவுடைய சகல கர்மங்களும் துக்கநிவர்த்திக்கு ஏதுவல்லவென்றாதலின் அஹிதமான கர்மங்களெனவும், அதாவது பாபமெனவும், ஞானத்தை அடியாகவுடையன துக்கநிவர்த்திக் கேதுவாதலின் ஹிதமானவை யெனவும், அதாவது புண்ணியமெனவும், கொள்ளக்கிடந்தன. அஞ்ஞானத்தை அடியாகவுடைய கர்மங்கள் யாவை? "யான்" "எனது" என்று சொல்லப்படும் அகங்கார மமகாரங்களே அஞ்ஞானத்திற்கு வித்தென அறியாதார் சுருக்கம். ஆதலின் தனது சரீரத்திலோ அல்லது அது சம்பந்தமான உயிர்ச்சார்பு பொருட்சார்புகளின் மேலோ அல்லது இவை எல்லாவற்றின் மேலுமோ உள்ள பற்று மேலிட்டால் புரியப்படும் கர்மங்கள் பாப கர்மங்களெனவும் அவை யொழிந்து புரியப்படுவன புண்ணிய கர்மங்களெனவும் கொள்ளத்தக்கன. அங்ஙனமாயின் சாஸ்திரங்களினுடையவும் மகான்களினுடையவும் கருத்து இது தானோவென்றும் இதை ஆதாரமாக வைத்துத் தானோ புண்ணிய பாவ கர்மங்கள் அவர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நாம் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டுவதாவசியகமாதலின் அவர்களால் புண்ணியமென்று கணிக்கப்பட்டிருக்கும் ஒரு கர்மத்தை யெடுத்துக்கொள்வோமாக. அன்னதானம் புண்ணியமென்று சொல்லப்படுகின்றது. இதன் கருத்தை ஆலோசிக்கின் மற்றவரையும் தன்னைப்போல் நேசிக்கும் கருத்திலிருந்தே இக்கர்மம் புறப்படுகின்றது. அன்னதானம் செய்வதால் சுயநயப்பற்றுக்கு ஹானியுண்டாகின்றது. அங்ஙனம் செய்து பழகுவதால் தன்னயம் விடவும் பிறர் நயம் கருதவும் மனமானது பழகி "யான்" "எனது" என்னும் அகங்கார மமகாரங்களுக்கு விடைகொடுக்க ஆரம்பிக்கின்றது. அதனால் அந்தக்கரணம் சுத்தமடையவும் முறையே ஞானமெய்தவும் அதனால் துக்கநிவர்த்தியின் பிராப்

திக்கு ஏதுவாகவும் நேரிடுகின்றது. இது தனக்கும் பிறருக்கும் எதார்த்தத்தில் ஹிதமான கருமமன்றோ? அதுபற்றியே அதைப் புண்ணியமென்றுமென்று கிரகிக்க வேண்டுவதன்றோ? இதுபோலவே சாஸ்திரங்களில் கூறப்படும் ஒவ்வொரு புண்ணிய கர்மங்களும் தனக்கும் பிறருக்கும் எவ்வாறாக ஹிதமாயிருக்கின்றதெனக் கிரகிக்கற்பாலதே. இனி அவரால் கூறப்படும் பாபகர்மம் ஒன்றையும் எடுத்துப் பார்ப்போம். நாம் போசனம் செய்துகொண்டிருக்குங் காலத்தில் பிக்ஷைக்கு வந்த ஒருவனுக்கு அன்னமளிக்காதிருத்தல் பாபமென்கின்றனர். எதுபற்றி? இப்பிரவிர்த்தி மற்றவர்பேரில் துவேஷத்தையும் சுயநயம்பற்றில் அழுந்துதலையும் அது காரணமாய் "யான்" "எனது" என்னும் அகங்கார மமகாரங்களின் ஆதிக்கத்தையும் உண்டுபண்ணுகின்றதாலன்றோ? இது அஞ்ஞானத்தையும் துக்கத்தையும் வளர்ப்பதன்றோ? ஆகவே தனக்கும் பிறருக்கும் அஹிதத்தையுண்டுபண்ணுகின்றது. அதனாற்றான் இது பாபமெனக் கணிக்கப்படுகின்றது.

நாம் கூறிய கருத்தை ஆதாரமாக வைத்தே சாஸ்திரங்களிலும் பெரியவர்களாலும் பாபம் புண்ணியம் நிச்சயித்திருக்கின்றதெனத் தெளிவாக ஒருவாறு காட்டினோம். ஆதலின் இனியாகிலும் இவ்வுண்மை யறியாதிருந்த நண்பர்கள் யாவரும் இதன் கருத்தை நன்குணர்ந்து பாபகர்மங்களை கனவிலும் செய்யாமல் விடுத்துப் புண்ணிய கர்மம் புரிதலே தலைவாய்க்கொண்டு படிப்படியாய் உன்னத நிலையான மோக்ஷ பதவியை இங்குத்தானே இப்பொழுதே யடையுமாறு முயல்வார்களென நம்புகின்றோம்.

வள்ளிநாயகம்.

"ஒரு செவிலித்தாய் தன் எஜமானனது குழந்தையைத் தன் சொந்தக் குழந்தைபோலவே நேசிக்கிறாள். ஆனால், அக்குழந்தையைப்பற்றிய சுதந்திரம் எதுவும் தனக்கில்லையென்பது அவளுக்குத் தெரியும். அதுபோலவே, நீங்களும் உங்கள் குழந்தைகளுடைய சம்ரக்ஷணைக் கர்த்தர்களேயாயிர்கள். அவர்களின் உண்மைத் தந்தை கடவுளே" என்பது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசமொழிகளிலொன்று. இவளுக்குக் குழந்தையின்பேரிலுள்ள பற்றெல்லாம் தான் அதனின்றும் விலகுமட்டே. நாமும், நம் மக்களாதியோரிடத்துள்ள பற்றைப் போங்காலத்திலேனும் நீக்குவோமாக. "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதற்கையமும் உளதோ? ப—ர்.

(தொடர்ச்சி)

ஆன்மா பெத்தத்தில் சிற்றறிவும் பரதந்திரமு முடையன் என்றும், முத்தியில் முற்றறிவும் சுதந்திரமு முடையன் என்றும், முத்தியிலும் சிற்றறிவும் பாதந்திரமுமே யுடையன் என்றும், முத்தியில் ஆன்மா பலவிதத்தாலும் அடிமை என்றும், ஆன்மா முத்தியில் சிவனைப்போல எண் குணங்களையும் பெற்று சிவ சமமாவன் என்றுங் கூறுகின்ற சுருதிகளின் தாற்பரியம் என்னையெனின் :

சிவனுடைய ஞானக்கிரியைகளுக்கு சர்வ வஸ்துக்களிலும் முற்றும் வியாபகத்துவம் பிரசித்தம். ஆன்மாவின் ஞானக்கிரியைகளுக்குப் பற்றும் பதார்த்த மாத்திரையே வியாபகத்துவம். ஆதலில் முற்றும் வியாபகமாகுஞ் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்கு முத்தான்மாக்கள் பெத்தான்மாக்கள் சடவஸ்துக்கள் சர்வமும் விடயமேயாம். அங்ஙனமன்றி ஸ்படிகம்போல சார்ந்ததன் வண்ணமாகுந் தற்பாவ பாவமுடைய ஆன்மாவினது சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களுக்குந் தம்மாற் பற்றப்படும் பதார்த்த மாத்திரமே விடயமாம். இனிப் பெத்தகாலே மலத்தாற் றடையுற்றுக் கலாதிகளான் ஏகதேசத்தின்விளங்கி உபாதியோடு கூடினவாய் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கருத்திருத்துவங்களாம். ஆன்மாவின் ஞானக்கிரியைகள் அழுக்குப்போயவழி படத்திலுள்ள வெண்மை, படமுழுவதும் விளங்குமாறுபோல மல நிவர்த்தியான பின்பு ஆன்ம வியாபக முழுவதும் உபாதியில்லனவாய்ச் சர்வதோமுகமாய்ச் சர்வதாபி வியத்தமாய் விளங்கும். இந்த அர்த்தத்தை அபேக்ஷித்துச் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்களும் சமானமேயாம்.

அற்றாயினும் சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவங்கள் முற்றும் வியாபகமாதலின் சர்வ வஸ்துக்களையும் விஷயீகரிக்கும். ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் அவ்வாறன்றி ஸ்படிகம் போலத் தற்பாவ பாவமாய் வியாபிக்கு மாதலின் இவ்வொன்றனையே விடயீகரிக்குமல்லது மற்றை வஸ்துக்களை விடயீகரிக்கமாட்டா. இந்த அர்த்தத்தை யபேக்ஷித்து ஆன்மாவினுடைய ஞானக்கிரியைகள் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவங்களே யாவன வன்றிச் சமானமாக மாட்டா. இங்ஙனமாகலின் முத்தான்ம குணங்கள் சிவ குணங்கள்போல வியாபக மாத்திரையாற் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களெனப்படுவன வன்றி சர்வபதார்த்

தங்களிலும் வியாபகமும் எல்லாப் பதார்த்தங்களையும் அறிதலுமாகிய உபய விதத்தானுஞ் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களெனப்படா. பெத்தான்ம குணங்கள் போல உபய விதத்தானுங் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவங்களெனவும் படா. இவையே தம்முள் வேறுபாடென்று நுண்ணுணர்வாற் கண்டுகொள்க-

அல்லதூஉம் மலத்தினால் வருஞ் செயற்கை அஞ்ஞானமும் தொழிலின்மைகளுமாம். கலாதிகளால் வருஞ் செயற்கை சிற்றறிவு சிறு தொழில்களாம். இவ்வாறே தற்பாவ பாவமாய் அதுவதுவாதலும் உபாதியோடு கூடினதென்பதற்கு ஒரு காரணமுமில்லை. பிரமாணமுமில்லை. ஆகலின் அதுவதுவாய்ச்சார்ந் ததன்வண்ணமாந் தன்மை ஆன்மாவிற்கு உபாதியில்லாத இயற்கையேயாம். அஃதறியமாட்டாது உபாதியோடு கூடினதென்பதெல்லாம் பிராந்திமூலமன்றி வேறு யாதாமென் றொழிக.

சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் முற்றும் வியாபகமுடைமையால் சர்வவஸ்து விடயமாம். ஆன்மாவினுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் தற்பாவ பாவவியாத்திமாத்திரையான் ஏகதேசவஸ்து விடயமாம். எனத் தம்முள் வேறுபாடுடையன வென்பதூஉம், ஏகதேசமாயறிதலுஞ் செய்தலுமுடைய பெத்தான்மாக்களை யபேக்ஷித்துச் சர்வ கர்த்தாவாகு முத்தான்மா. உபயப் பிரகாரத்தானுஞ் சர்வஞ்ஞன் சர்வகர்த்தாவாதலுடைய சிவனை யபேக்ஷித்துக் கிஞ்சிக்ஞன் கிஞ்சித் கர்த்தாவேயாமென்பதூஉம் என்றுணர்க.

இனி சுவாதந்திரியமாவது என்னை? பிறவற்றினுடைய உதவியை அவாவாது இருத்தலுமன்று, 'கருத்தா கருமாநுசாரத்தின்படி செய்கின்றார்' என்றற் றொடக்கத்து வசனங்களானே கர்மாதிகளை யபேக்ஷித்துச் செய்தலின், சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கம் வருமாகலின்.

இனி பிறருடைய இச்சைப்படி நடவாதிருத்தலு மன்று, ஆன்மாவின் இச்சையின்படி பயன் கொடுத்தலின், சிவனுக்கு சுவாதந்திரிய பங்கம் வருமாகலின்

இனி பிறரால் பிரேரிக்கப்படாதிருத்தலு மன்று, விம்பாதிகளில் ஆவாகனாதிகளாற் பிரேரிக்கப்படுதலின், சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கம் வருமாகலின்.

இனி பிறனுக்கு வசியப்படாதிருத்தலுமன்று, சிவன் தியானாதி வசியனாதலின்.

இனி "யாதனை யாங்ஙனம் எண்ணிடும் அதனை அங்ஙனம் பண்ணிடும்" என்னு நியாயத்தான் வேறொன்றோடுஞ் சேராததாய் தன் இச்சைப்படி நடத்தலே சுவாதந்திரியம். அதற்கு எதிர் மறைப்பொருளே பாரதந்திரியம் என்று நுணுகி நாடி யறிந்துகொள்க. ஆன்மாவிற்குச் சிவானுபவ விச்சையொன்றே வேறொன்றோடுஞ் சேராததாகிய சுவேச்சை. அதனோடுங் கூடவிருத்தலாகிய சுதந்தரத் தன்மை ஆன்மாவிற்கு இயற்கையாம். தன் இச்சைப்படி செய்யாதிருத்தலாகிய பாரதந்திரியம் அபரமுத்தி பரியந்த முளதாகுஞ் செயற்கையாம். இவ்வாறன்றிச் சிவசமவாத பிசாசாவேசமுற்றுச் சுவாதந்திரியப் பொருள்பேசிப் பிரலாபிப்பதெல்லாம் சிவனுக்குச் சுவாதந்திரிய பங்கப் பராபவங்களாமென் றொழிக. இந்தச் சுவாதந்திரியமுந் தற்பாவ பாவமாய்ச்சார்ந் ததன்வண்ணமா மியல்புடைய ஆன்மாவிற்கு முற்றும் வியாபகமுடைய சிவபிரானது சுவாதந்திரியத்தை யபேக்ஷித்துப் பாரதந்திரியமே யாகலின், ஆண்டுஞ் சிவன் அனுகூலப் பிரேரகராதல் வேண்டப்படும். அல்லதூஉம், முத்தான்மாக்கள்பாற் சிவனாற் செய்யற்பால தொன்றில்லை யெனின் அறியற்பாலதுமில்லை யெனப்பட்டுச் சிவன் அவர் தம்மை அறியானுமல்லனென்று முடியும். இனி மலமின்மையின் முத்தான்மாக்கள மாட்டு செய்யுந்தன்மை ஒன்றையும் காண்கிலமாலெனின் அது சித்தாந்தக் கண்ணுடையார்க்கன்றி மற்றவர்களுக்கு புலனாகாதென்க. சிவானந்தம் சிவனிடத்தில் உள்ளதாகலின் ஆன்மா அதனை அநுபவிக்கற்பாலனென்று மேற்கூறினுமாகலின் அந்தச் சிவானந்தானுபவத்தில் நிருபாதிக விச்சையுடைய முத்தான்மாவிற்கு அந்த வேறொன்றோடுஞ் சேராததாய்த் தன் இச்சைப்படி நடத்தலாகிய சுவாதந்திரியத்திற்கு அனுகூலமாக அதனைக் கொடுத்தருளா நிற்குங் கர்த்தவ்யதை, முத்தியிலுளதாமாறு, சித்தாந்தக் கண்ணுடையார்க்கு இனிது புலனாமென்றொழிக. பெத்தக காலத்தில் சிவபெருமான் அந்தத் தன் இச்சைப்படி நடத்தலாகிய ஆன்மாவினது சுவாதந்திரியத்திற்கு மலானுசாரியாயிருந்து பிரதிகூலஞ்செய்து போதரலின், ஆன்மா பெத்தத்தில் மலோபாதியினாற் பாரதந்திரனானான். சிவபெருமான் மலோபாதி நீங்கு முத்திக்காலத்தில் அந்தவிச்சைக்குப் பிரதிகூலஞ் செய்தலை விட்டு அனுகூலஞ் செய்து வருதலின் இயற்கையாயுள்ள அந்தச் சுவாதந்திரியம் வியத்தியாய்ச் சிவானந்தானுபவ முற்றுச் சுதந்திரனாம். முத்தியின்கண் சிவன் அனுகூலப் பிரேரகனாகாக்கால் ஆன்மாவிற்கு ஆண்டுச் சுவாதந்திரிய பங்கம் வருமென் றொழிக. சுருதிகளில் முத்தியின்கண் சிவன் ஆன்மாவினிடத்தில் பிரேரகனல்லன், முத்தான்மாவும் பிரேரியனல்லன் என்று கூறியிருக்கின்றனவே யெனின் அந்த வசனங்களுக்கு முத்தியின்கண் சிவன் ஆன்மாவிற்குப் பாரதந்திரியப் பிரயோசகமான பிரதிகூலப் பிரேரகனல்லன். முத்தான்மாவும் பிரதிகூலப்

பிரேரியனல்லனென்பதே நிச்சயப் பொருளென் றறிந்துகொள்க. முத்தான்மாவிற்குச் சிவானந்தத்தினை அனுபவித்தல் வேண்டுமென்னும் இச்சை நிருபாதிகமாய் இடையீடின்றி நிகழ்தலின், அதன்கண் இடையறவுபடாப் பிரவிருத்திமானாகின்றான். இதர விடயங்களில் அவ்விருப்பில்லாமையின் அவைகளிற் பிரவிருத்திமானாகின்றிலன். சிவனுக்கும் பெத்தத்திற் கன்மானுசாரமாகவும், முத்தியில் நிருபாதிகான் மேச்சானுசாரமாகவும், ரக்ஷித்தல் வேண்டுமென்னும் இருப்பையே இடையீடின்றி நிகழ்தலின் அந்தச் சுவேச்சானுசாரமாகப் பிரவிருத்தி செய்தருளா நிற்பன். இக்கருத்து நோக்கியே "வேண்டுவோர் வேண்டுவதே யீவான் கண்டாய்" எனவும் "கருதுவார்க் காற்றவெளியான் கண்டாய்" எனவும் "சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லாலலமில னாடோறு நல்குவா னலன்" எனவும்,

"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு"

எனவும் சுருதிகள் கூறியதுவும் என்க. இங்ஙனமாகலின் சிவனுக்கு முத்தான்மாக்களோடு முற்றொருப்புச் சாமியம் எவ்வாற்றானும் பொருந்தாதென்றுணர்க. சர்வஞ் ஞானோத்தரத்தில் "ஆன்மா தற்றரும தருமீ" எனப்படுதலின் அதுபற்றி முற்றொருப்புச் சாமியம் போல்வதல்லது பொருட் சுபாவத்தானே முற்றொருப்புச் சாமிய மெய்தாதென்றுணர்க. இன்னும் முற்றொருப்பு சாமியமெனின் சிவனைப் பந்திக்கமாட்டாத மலம் ஆன்மாவைப் பந்திப்பது யாங்ஙனம்? இனி ஒரு சூரியனை மறைக்க மாட்டாத அந்தகாரம் மற்றொரு சூரியனையும் மறைக்கமாட்டாது. ஒரு கண்ணினை மறைக்கும் அந்தகாரம் எல்லாக் கண்களையும் மறைத்திடும். இங்ஙனமாகலின் ஆன்மாவிற்கு அநாதி மலபந்தம் இன்று என்றானும் அல்லது சிவனுக்கு அநாதி மலமுத்தி இன்று என்றானும் கூறல்வேண்டும். அற்றன்று தாமிரமும் கனகமும் சமசாதியாகவும் தாமிரத்திற்கே காளிமமுண்டு கனகத்திற்கு காளிமமின்று. இங்ஙனமாகலின் எனின், அவ்விரண்டும் பார்த்திவ விகாரமாகலின் பிறந்த சிலவேறு பாட்டானே அவை அவ்வாறாகா நிற்குமென்று ஆண்டுக்காரண பேதம் உளவென்று எடுத்தோதப்படும். ஈண்டும் அங்ஙனங் காரணபேத முளவென்று எடுத்தோதல் வேண்டும். இனி ஈண்டும் அவ்வாறு காரணபேத முண்டென் றெடுத்தோதலுறின் முற்றொருப்புச் சாமியங் கிடைப்பதின்றாமென்க. அற்றேல் கனக தாமிரங்களுக்குக் காளிமா பாவபாவங்கள் அகாரணங்கள் என்று ஆகமங்கள் எடுத்தோதுபவாலோ வெனின், அது சிலவேறு பாட்டால்

உள்ளதென்பது பிரத்தியக்ஷ சித்தமாகலின் அதனை ஆகமத்தால் அபலாபனஞ் செய்தல் செல்லாமையின் அவ்வாகம வசனங்களுக்குத் தாற்பரியம் அதுவன்று. வேறுண்டென்பது சித்தித்தது. இனி அக்கருத்துச் சித்தாந்த சைவர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படும் பான்மைத்தன்று. இனி இவ்வாறன்றி ஆன்மாத் தன்னுடைய ஞானவிளக்கத்தைத் தானனுபவிப்பனெனின் பிரமாணப்பிரமேய சாங்கரிய தோஷ முதலிய வருமென்றொழிக. இனி நேத்திர படல நீங்கினும் நேத்திரத்திற்கு விஷய தரிசனத்தில் ஆதித்த விளக்கம் ஆவசியம் வேண்டும். அந்தச் சகாயமில்லாதவழி ஆதித்தப் பிரகாசத்தினாற் சத்தி கெட்டடங்கிக்கிடக்கும் அந்தகாரம் மறித்தும் மேலிடேற் கையமின்று. இனி அந்தகாரஞ் சத்தி கெட்டடங்கிக் கிடத்தல் நேத்திரப் பிரகாசத்தினானன்று. தாட்டாந்திகத்தினும் இங்ஙனமாகலின் சர்வப்பிரகாரத்தினானும் மலமறைப்பு நீங்கினும் ஆன்மாவிற்குச் சிவவிளக்க விருப்பு ஆவசியமென்பதூஉம் கண்டுகொள்க.

(இன்னும் வரும்)

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

பகவத் கீதைக் கும்மி.

(2-வது சம்புடம் 2-வது புத்தகம் 22-ம் பக்கத் தொடர்ச்சி)

(31) கேசவனேபல கெட்ட சகுனங்காண்
இன்றனன் கிட்டின பந்துக்களை
நாச முறப்போரிற் கொன்றக னல்வரும்
நன்றொன் றெனினுங்காண் கின்றிலனே.

(32) வெல்ல எனக்கிச்சை யில்லை அரசாட்சி
வேண்டாம் சுகத்தும் விருப்பமில்லை
ஒல்அர சாற்பயன் என்? பலபோகத்தோ
டுயிர்வாழ்வி னாலும்என் னூதியமே.

(33) எவர்பொருட் டாக இராச்சிய போகங்கள்
இன்பங் களைப்பெற இச்சிப்பமோ
அவர்பொருள் ஆவி விடத்துணிந் தேஇவ்
வடுகளந் தன்னை அடைந்துநின்றார்.

(34) அடைந்துநின் றோர்கள் குருக்கள்மார் அப்பன்மார்
அம்மான்மார் மாமன்மார் சம்பந்திகள்
உடன்பாட்டன் மார்பேரன் மார்புத் திரர்க
ளோடுமைத் துனராம் உறவினரே.

(35) ஆனவர் தாம்எனைக் கொல்லுவ ராயினும்
அவரைப் பாதலம் பூமியொடு
வானும் பெறவெ ணுனுங்கொல் லேன்இந்த
மண்ணை பொருட்டாக மாய்ப்பேனோ.

(இ—ள்) அப சகுனங்கள் காணப்படுகின்றன. பந்துக்களைக் கொல்வதனால் வரக்கூடிய சுப பலம் ஒன்றும் தோன்றவில்லை. ஜயத்தை யாயினும் இராச்சியத்தை யாயினும் அடைய எனக்கு இச்சையில்லை. சுகத்தைப் பெறுதற்குங்கூட நான் விரும்பவில்லை. இராச்சியத்தினால் பயன் யாது? பல போகங்களோடு உயிர் வாழ்தலினால்தான் என்ன பிரயோஜனம்? யாருக்காக நாம் இராச்சியங்களையும் போக (சாதன) ங்களையும் சுக (சாதன) ங்களையும் சம்பாதிக்க விரும்புவோமோ, அவர்கள் சகல பொருள்களோடு உயிரையும் துறக்கத் துணிந்து இந்தப் போர்க்களத்திலே வந்து நிற்கின்றார்கள். இவர்கள், குருமார் தகப்பன்மார் அம்மான்கள் மாமன்மார் சம்பந்திகள் பாட்டன்மார் பேரர் புத்திரர் மைத்துனர் முதலிய உறவினர். இப்படிப்பட்டவர்கள் என்னைக் கொல்லுவோரே யாயினும், (அப்படி என்னைக் கொல்ல நின்ற) இவர்களை நான் கொல்வதனால் என் பிராணனைக் காத்துக்கொள்ளலோடு சுவர்க்கமத்திய பாதலமாகிய திரிலோக ராச்சியமும் எனக்குக் கிடைக்குமானாலும் இவர்களைக் கொல்லுதற்குச் சம்மதியேன். (அப்படிச் சம்மதியாத) யான் (அம்மூன்று லோகங்களுள் அதி அற்பமான) இந்த மண் (உலக ராச்சியம்) ஒன்றே பொருட்டாகக் கருதி இவர்களைக் கொல்வேனோ? கொல்லேன்.

குறிப்பு :—கேசவன்-கண்ணபிரான்; நன்று ஒன்று எனினும்-நன்மை ஒன்றானாலும்; காண்கின்றிலனே-பார்க்கின்றேனில்லையே; ஒல்லல்-பொருந்தல்; ஊதியம்-இலாபம்; பொருள் ஆவி-பொருள்களையும் உயிரையும்; வானும்-தேவலோகமும்.

வியாக்கியானம் :— 28, 30-ம் கவிகளிற் கூறியவாறு சோகபரவசனான அருச்சுனனை நோக்கிக் கண்ணபிரான், முகக்குறியால், யுத்தஞ் செய்யவேண்டிய நீ இவ்வாறு அதைரிய மடைதல் தகுதியன்றேயென, பல கெட்ட சகுனங்கள் தோன்றுகின்றனவென, அவ்வபசகுனங்கள் எதிரிகளின் நாசத்துக்கு

அறிகுறிகள். உனக்கு அநுகூலமானவை யுத்தஞ் செய்வாயானால் நிச்சயமாக ஜயமடைவாயென, எனக்கு வெற்றியில் விருப்பமில்லையென, வெற்றிவாயிலாக வன்றோ இராச்சியத்தை அடையவேண்டுமென, அதனிலும் இச்சையில்லையென, இராச்சியத்தினால் சுகம் அடையலாமேயென, அதனையும் விரும்பவில்லை உயிர் வாழ்தலிலேயே ஆசையற்றிருக்கின்றேனென, இராச்சிய முதலியவைகளை ஏன் விரும்புகின்றாயில்லையென, அவைகளை யாருக்காக விரும்புவோமோ அவர்கள் சகல பொருள்களையும் உயிரையும் துறக்கத் துணிந்துவிட்டார்களென, அவர் யாரென, இன்னாரென, நீ யுத்தம் ஒழிவாயாயினும் அவர்கள் உன்னைக் கொல்வார்கள ஆதலால் யுத்தஞ்செய்து அவர்களைக் கொல்வாயாகவென, அவர்கள் என்னைக் கொல்லுவாராயிற் கொல்லுக அவர்களைக் கொல்லுதலால் திரிலோகாதிபத்தியமும் பெறவேனாயினும் கொல்லேன் "மண்ணாள கொன்றின் பொருட்டுக் கொல்வேனோ கொல்லேன் என்றான்" என்று 34, 35 கவிகளில் தொக்கு நிற்கும் பொருளை விரித்துக் கூறலாம். இவ் வியாக்கியானத்தில் ஆரம்பத்தில் வரும் "முகக்குறியால்" என்பதை "தகுதியன்றே" என்பதனோடு பொருத்தலேயன்றி "ஜயம் அடைவாயென இராச்சியத்தை யடையவேண்டுமென" என்பவை முதலிய கண்ணபிரான் கூறியனவாகக் கூறிய யாவற்றோடும் பொருத்திக்கொள்க.

(36) இந்தத் திருதராட் டிரகு மாரரை
யாம்கொன் றெய்துஞ்சுகம் யாதுசொல்வாய்
முந்தித் துரோகஞ்செய் தோரெனி னுங்கொன்றால்
முற்றுபா வம்எமைப் பற்றிடுமே.

(இ—ள்) இதோ நிற்கின்ற துரியோதனாதியரைக் கொன்று யாங்கள் அடையக்கூடிய சுகம் யாதிருக்கின்றது? இவர்கள் முன்பு எங்களுக்குத் துரோகஞ் செய்தவர்களே யாயினும் இவர்களைக் கொல்லுதலால் யாங்கள் பாவஞ்செய்தோரே யாவோம்.

குறிப்பு:—எய்தும்-அடையும்; முற்று பாவம்-அடையும் பாவம்.

வியாக்கியானம்:—முன்பாதிக் கவியில் இவ்வுலக இன்பமில்லை யென்பதும் பின் பாதிக் கவியில் அவ்வுலக இன்பமில்லாது போதலே யன்றிப் பாப பலமான நரகத் துன்பமுண்டென்பதும் கூறப்பட்டன. அருச்சுனன், துரியோதனாதி பந்துக்களைக் கொன்று பெறும் இராச்சியத்தினால் அடையக்கூடிய சுகங்கள், அப் பந்துக்களை யிழந்த துக்கத்தினால் அநுபவிக்க வொண்ணாமல் தடுக்கப்படுமாதலால், அவர்களைக் கொன்று அடையக்கூடிய சுகம் யாதென்றான்; அவர்கள் முன்பு வீட்டில் நெருப்பு வைத்தல் விஷமிடுதல்

முதலிய துரோகஞ் செய்த கொடும் பாவிகளாதலால் அவர்களைக் கொல்வதனால் தோஷமில்லை யென்பதற்கு, அவர்கள் செய்த பாவம் அவர்களை யடையும். அவர்களைக் கொல்வேமாயின் அக் கொலை பாவம் எங்களைப் பற்றுமென்றான்.

(37) ஆதலால் உற்றோர்க ளாம்துரி யோதன
னாதியோர்க் கொல்லல் அடாததுவே
மாதவா பந்துவா னோர்களைக் கொன்றிட்டெவ்
வாறுசந் தோஷமாய் வாழ்ந்திடுவோம்.

(இ—ள்) ஆதலால் பந்துக்களாகிய துரியோதனாதியரைக் கொல்லுதல் பொருந்தாது. பந்துக்களாயுள்ளவர்களைக் கொன்ற பின்பு நாங்கள் எவ்வாறு சந்தோஷமாக வாழ்தல் கூடும்? கூடாது.

குறிப்பு :—ஆதியோர்க் கொல்லல்-ஆதியோரைக் கொல்லல்-முதலானோரைக் கொல்லுதல்.

வியாக்கியானம் :—"ஆயவாழ்வுற்றாருடன்போம்." என்ற ஒளவையார் வாக்கியப்படி, சுக வாழ்வுக்கு இன்றியமையாத பந்துக்களைக் கொன்றபின் இவ்வாழ்வு அசாத்தியமென்று மேற் கவியிற் கூறியதே மீட்டும் வற்புறுத்தப்பட்டது.

(38) ஆசைக்குள் ளாய்அறி வற்ற அவர்குல
நாசத்தி னால்வரு தோஷத்தையும்
நேசத் துரோகத்தால் நீசப்பா வத்தையும்
நெஞ்சால் உணர்ந்தில ரென்றாலும்.

(39) ஐய கோவிந்த குலநாசத் தாலே
அடைந்திடும் பாவம் அறிந்தவியாம்
வெய்ய அப் பாவத்தி னின்றும் விலகி
விடுவதற் கேது தடையுளதே.

(இ—ள்) ஆசை வசப்பட்டு அதனால் அறிவற்றிருக்கிற துரியோதனாதியர், குல நாசத்தாலுண்டாகும் தோஷத்தையும் மித்திரத் துரோகத்தினுள்ள விசுவாச பாதகத்தையும் அறியாவிட்டாலும், அக்குல நாசத்திலுண்டாகும் பாவத்தை யறிந்த யாம் அப்பாவத்தினின்றும் விலகிக்கொள்வதற்குத் தடை யாதிருக்கின்றது.

குறிப்பு :—ஐய-ஐயா-ஐயனே; வெய்ய-கொடிய.

வியாக்கியானம் :—அருச்சுனா! பந்து மித்திராதியரைக் கொல்வது பாவமென்று துரியோதனாதியராகிய எதிரிகளும் அவர்களைச் சேர்ந்த பீஷ்ம த்ரோணாதியரும் தெரியாதவர்க ளல்லரே. அவர்களேன் உன்னைப்போல யுத்தம் ஒழியக் கருதவில்லை? என்பதற்கு, அவன், துரியோதனாதியர்க்கு இராச்சியத்தின் மீதுள்ள ஆசையாலும் பீஷ்மத்ரோணாதியர்க்கு அத் துரியோதனாதியர்பாலுள்ள அபிமானத்தாலும் அறிவுமயங்க, அவ்விருதிறத்தாரும் குல நாசத்தாலும் மித்திரத் துரோகத்தாலும் விளையும் பாவங்களைத் தெரியாதிருக்கின்றார்கள். தெரியாமலே யாமும் யுத்தத்திற் பிரவேசித்தோம். ஆயினும் இப்போது அப்பாவங்களைத் தெரிந்தபின் யாம் எவ்வாறு அப்பாவங்களினின்றும் விலகிக்கொள்ளுதற்குத் தெரியாதிருத்தல் கூடுமென்பது இவ்விரு கவிகளிலும் கூறப்பட்டது.

(இன்னும் வரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல்.

தலம்விளங்க முன்னொருகாற் றண்கடம்ப வனத்தின்கண்
புலிநெருங்கி வெருளபுல்வாய் பொலிவின்றி யுலவுங்கால்
பலவிலங்கோ நிலைப்புல்வாய் பயந்தபுனிற் றிளமறியை
நிலைதுவன்று முதுஞாற்றின் புடையொதுக்கி நீர்வேட்டு (க)

போயெங்கும் புக்குழன்று புற்றீந்த கோடையின்கண்
வாயுலர்ந்தோர் வாவியினுள் வந்துபுனல் பருகுங்கா
னேயமிலா தொருவேட னீங்காம லொளிநிற்பான்
காய்பசியா லதுகண்டு கணைகொண்டு படவெய்தான் (உ)

கணைபடுங்கான் மறியைநினைந் தழுதுகனி கசிந்துவிழுந்
திணையிலுயிர் நீங்கியபின் யாவுக்குந் தாயாகித்
தணிவறவெங் கனுநிற்பான் றரியாது பிரியாத
வணியதொரு புலியைமுலை யூட்டெனமுன் னருள்சுரந்தான் (ங)

பாய்புலியு மிரங்கிமனஞ் சுரந்துமுலைப் பாலளிப்பா
னேயமொடு வரக்கண்டு வால்குழைத்து நேர்வந்து
தாய்வரவு காணமற் றளர்ந்துமறி பயந்தணிந்து
தாயமுலைப் பாலுண்டு துள்ளிவிளை யாடியதால் (ச)

வே று.

மலரய னுணி முன்னர் வரும்விதி யாற்றல் கண்டு
சிலைமலை வில்லான் வல்ல தியார்வல்லா ரென்று சென்று
தலையினால் வணங்கி வாழ்த்தச் சசிபதி யதிச யிப்பப்
புலிமுலை புல்வா யுண்டு பொலிவுற வளரு நாளில் (௪)

பொருளினு மொழுக்கத் தானும் பொருவரும் போதத் தானு
மருளினுஞ் சிறந்து நீண்டோ ரருங்குல வணிகன் போங்கான்
மருமலி மலர்த் தடஞ்சூழ் மாமண வூரி னின்றங்
கருதிய பொருள்கள் மேலுந் தேடுவான் கருதிப் போனான் (௫)

பச்சிம திசையை நோக்கிப் பரிவொடும் யேகி நல்ல
நச்சின தேசம் புக்கு நன்பொருட் டேடி மீண்டாங்
கிச்சையி னடந்து மெல்ல விலங்குதன் பதியை நோக்கி
நச்சமற் றெல்லு மல்லு மதரிடை வருத லுற்றான். (௬)

வே று.

வழிவசத்தினி ருங்கடம்பவ னத்துவந்துழி வணிகனும்
பொழுதுபுக்கது கண்டுவெம்பியு ளம்புலம்புறு காலையி
லெழின்மிகுத்ததோ ரொலியொலித்திட வேதம்விட்டதன் வழியினே
ரொழுகவற்புத மாயிருப்பதோ ருத்தமப்பதி கண்டனன் (௭)

கண்டவன்னகர் தன்னுளன்பொடு கண்டனன்களி றெட்டும்வாழ்
பண்டையாயத லத்தையும்பழு தொன்றிலான்படி வத்தையு
மண்டர்நாயக தொண்டர்நாதவெ னத்துதித்தரு ளாலருந்
தொண்டுசெய்துவ ணங்கியங்கோரி டத்தமர்ந்துது யின்றனன் (௮)

துயில்கொளுந்தனி வணிகனுஞ்செறி தொலைவிலாவிரு டொலையவே
வெயில்விரிந்தபி னனுகரும்பெரு வனமதாகவெ ருண்டெழுந்
தெயிலிலங்கிய கோயில்கண்டுதி கைத்திதென்கொலெ னத்தெருண்
டயிலிலங்குமு ணற்புரத்தர சற்குவந்தறி வித்தனன் (௯)

வே று.

மன்னிய வமைச்ச ரோடும் வணிகன்முன் னவின்ற தெல்லா
முன்னுற நவின்று காண்பா னசையாய் முடுகி யங்கண்
தென்னவ னடைந்தா னென்றுஞ் சித்திராச் சித்தி வாக்குப்
பொன்னகர் மகவான் வந்து போற்றுமா னகரி தன்னுள் (௰).

வே று.

கனமா யிழிந்திங் கிரன்பாவுங் காணுக் கடம்பவ னத்தினையு
மணிசே ரந்த வனத்திலகு மழகா ருயரா லயத்தினையுந்
துணைசே ரந்த வாலயத்து ளிருக்குஞ் சொக்க நாதனையும்
பணிசேர் கோயிற் றென்பாற்பொற் பதுமத்தடமுங் கண்டிறைஞ்சி.

மற்றும் புதுமை பலகண்டு வருவோ னருளா கரனருளாற்
புற்றின் புல்வாய் புலிமுலைப்பா லுண்டு பொருந்தி விளையாடல்
கொற்றந் தருநெஞ் சுறக்கண்டு விசேடநிலமீ தெனக்குறித்துச்
சற்றுந் தாழா தித்தலத்தி லிருப்ப தென்றான் சயங்கூர (௰௧)

இந்தத் தெய்வப் பதிக்கெல்லை யாதோ வென்று மயக்குற்று
சிந்தைக் கினிமை தரும்பரம சிவனை யடைந்து துதிசெய்ய
முந்தைக் கியைந்த மறைநூலின் முறையே சித்த ருருக்கொள்ள
வந்திப் பிறையோ னெழுந்தருளி நடந்தா னெல்லை யடைவாக (௰௨)

எல்லை நடவா வொளித்தலுமே யேத்தி யருளை யதிசயித்துத்
தொல்லை மரபின் மணிமாடங் கூட மஞ்ச தோயிஞ்சி
மல்லல் வீதி தடங்கழனி மற்றுந் திருத்தி மாறின்றி
நல்ல படையும் பலகுடியு நயப்ப வியப்ப வீற்றிருந்தான் (௰௩)

வே று.

சென்னெறித் தானை சூழத் திறைகொணர்ந் தரசர் போற்ற
மன்னம ரேசன் சால வாழ்த்திட வேத்தி நாளுங்
கனனிமால் காளி யீசன் காக்குமா நகரி தன்னுள்
இன்னறீர்ந் திருந்த தென்ன னெண்டிசை விசயஞ் செய்தான் (௰௪)

முற்றிற்று. சௌந்தர பாரதி.

தற்காலத்துத் தமிழ் நிலைமை.

(தொடர்ச்சி).

ஏ! தமிழ் நங்காய்! நம்நாட்டுச்சிறார் நின்மாற்றாளாய ஆங்கில மங்கையை விரும்புவதெல்லாம் உத்தியோக பதவியை அடைய வேண்டுமென்றே யன்றி நின்னினுஞ் சிறந்த சொற்பொருணயம் அங்குண்டென்று நினைத்தல்ல. ஆதலின் அவர்கள்பால் உனக்கு வெறுப்புத்தோன்ற நியாயமில்லை. அன்னாய்! நின் சிறாரை மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பாயாக, தாழ்ந்தோ ருயர்

வதும் உயர்ந்தோர் தாழ்வதும் கால வேற்றுமையானே. ஆகையால் நீயும் அத்தகைய கால பேதத்தின்பாற் பட்டனை. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச் சேனைத்தலைவராய்ச் சென்றோரும், தாங்கொண்ட மலை யானை மாற்றார்கொள வேறாகி வீழ்வரென்னு மிதுசாதமேயன்றோ? வீணே கழிவிரக்கங் கொள்வதிற் பயனில்லை. ஓ! தமிழணங்கே! நீ இந்நிலைமையினின்றும் நன்னிலைமையை யடைய வேண்டுமானால், நின் பண்டித புத்திரர்கள் கால சுபாவத்துக்கேற்ற கடமைகளைச் செய்து நிறைவேற்ற வேண்டுமாதலால், இனி அன்னோர்க்குக் கூறுவ கூறி நிறுத்துவாம்.

முற்காலத்தில் இலை மறை காய்போற் கோப்பியமாக மறைந்துகிடந்த அரிய பெரிய இலக்கண இலக்கிய நூற்களெல்லாம் சொற்ப விலைக்குக் கிடைக்கக்கூடியதான இக்காலத்தில், தமிழ்ப் பண்டித மணிகள் பலர் ஆங்காங்கு காணப்படுகின்றனர். இது நம் தமிழ் நாட்டிற்குச் சாலவும் பெருமைதான். ஆயினும், பெரும்பான்மையோர் தம் கல்வித்திறமையைப் பாத்திரமறிந்து உபயோகிக்காது அவமே செலவிடுகின்றார்களெனறும், அதனால் அவர்கள் நந்தமிழ் நாட்டுக்குப் போலி யுபகாரிகளாகின்றன ரென்றுங்கூறிக் காலரீதிக்கேற்ப அவர்கள் செய்யவேண்டிய கடமைகளின்னின்னவெனறும் எடுத்துக் காட்டுவாம். தமிழிற் சில நூற்களையேனும் ஆசாரியர் சூனிய முன்னரே சுயமாக நூதன கவிகளியற்றிக் கியாதிபடைக்க வேண்டுமெனனும் ஆத்திரத்தால் ஏதோ சில செய்யுட்களியற்றி அந்தமட்டில் அவலடங்கித் தம் ஜனன தேசத்திற்குத் தாம் செய்யவேண்டிய பெருபகார முற்றும் செய்தாயிற்றெனக் கருதிப் பெருவகையுற்றிருக்குங் கவிஞர் பல ரிக்காலத்தில் மலிந்துள்ளார். தமது கல்வித்திறன் கவி யியற்றுவதனாலேயே நிரம்பிற்றெனப தன்னோர் கொள்கை போலும். நம் செந்தமிழ் மாது செய் தவப்பயனால் பூர்வத்திலேயே தெய்வத்தன்மைக் கவிஞர் பலர் தோன்றி கற்பனை, சொற்சுவை, பொருட்பொலிவு, சந்தபேதவின்பங்கள் சிறக்க, நவரசங்களும் சொட்டும் வண்ணம், அறிவினோர்க்குதவுக் கின்றியமையாத லௌகிக வைதிக சம்பந்தமான நுட்ப விஷயங்கள் பலவற்றையும் புராணேதிகாசங்களின் மூலமாக பத்திய (செய்யுள்) ரூபத்தில் செய்தளித்துச் சென்றனர். நம் தமிழ்க் கன்னிக்குத் தன்கட்செய்யுணூற்கள் பலவில்லையே என்றுங்குறை என்றுமில்லை. அங்ஙனமாகவும் மீட்டும்மீட்டும் தமிழாராய்வோர் யாவரும் செய்யுணூற்களே இயற்றப் புகுவதை நோக்குமிடத்து நந்தமிழ்த் தேயமே செய்யுட்களாற் பொதியப்படுமோவென் னையமும், செய்யுளே படிக்கவறியாச் சமானியருக்குத் தமிழிலுள்ள சொற்ப அபிமானமும் எங்கே நீங்கிவிடுமோ என்றொரு பக்கத்திற் பயமும் உதிக்கின்றன. அப்படித் தான் கவி யியற்

றினும், சிந்தாமணியின் நந்தாப்பொருண்மையும், மணிமேகலையின் அணிகெழு போக்கும், சிலப்பதிகாரத் திலக்கியச் செலவும், திருவள்ளுவரின் ஒரு மொழி நயமும், கம்பன கவியின செம்பொருளின்பமும், பத்துப்பாட்டின் வித்தக நடையும், கல்லாடத்தி னெல்லாச் சிறப்பும், இனைஞரன்ன பனுவன் மாண்பும், பல்லூழி காலம் பாடுகிடப்பினும், வருமோ மற்றோர் வாக்கினை வழித்தாய்? வாராதவாராது. வரினும் அவற்றிற் சிறவாது. சிறப்பினும் இக்காலத்தோர்க்குச் சிறிதும் பயனபடாது. நாம் ஊகிக்கிற கற்பனைகளெல்லாம் தொன்னூற்களி லெங்கேனும் காணப்படாதிரா. ஏனெனில் நம் முன்னோர் பூர்ண பண்டிதர். சாரமான கற்பனாதிசயோக்திகளை நம்மைக் கூறச் சொல்லி மீத்து வைத்திரார். அவருடைய மிச்சிற் கற்பனைகளை நாம் நாவாற் கொள்ளாமற் றீராது.

ஆதலின், நமது பண்டித மணிகள், தமக்கும் பிறர்க்கும் பயன்கொடாக் கவிகளை இயற்றுவதிற் காலத்தையும் புத்தியையும் வெறுவாய்ச் செலவிடாமல் பின்கண்ட விதமாகக் காலரீதிக்கேற்ற கடமைகளைப்புரிந்து ஜனன தேசத்துக்கும் ஸ்வய பாஷைக்கும் தருணசகாயம் புரியவேண்டுமாக மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

அக்கடமைகளாவன :—(1) சங்கமருவிய துங்கநூற்களும், அவை போற் சிறந்த தொன்னூற்களும் யாண்டுளவோ என ஊக்கராய்த் தேடிச் சேகரித்து அவற்றின் அருமை பெருமைகளையும் சொற்றொடர்ப் பொலிவையும் அரும்பதப் பிரயோகங்களையும், யாவர்க்கும் விளக்கிக்காட்டி யுரை எழுதுவதிலும் முற்காலக் கொள்கைகளையும், நாகரிகங்களையும் சரித்திரமாகத் தொகுப்பதிலும் தமது பூர்ண கல்வித் திறமையை உபயோகித்துத் தமிழ்நாட்டுக் கோர் பேருபகாரியாய் விளங்கும் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்கள் போலும், தனது கல்விப் பேராற்றலால் "கம்பன் கவி வம்பே" என்று சிறிதும் பொருட்படுத்தாது (வித்வமணிகளுக்குப் பெரிதும் திகைப்பூட்டும் சொற்பொருளாழ்ந்த) ஆரணிய காண்டத்துக்கு விரிவுரை எழுதி, அவ்வாறே உரைபெறாத ஏனைய காண்டங்கட்கும் விரிவாக உரை யமைப்பான் சமைந்த நமது "பானு"ப் பத்திராதிபர் கனம் எம். ஆர். கந்தசாமிக்கவிராயர் போலும், உரைபெறாதனவும் பண்டிதர் பலரும் கொண்டாடத் தக்கனவும், அரிய பெரிய விஷயங்களைக் குறிப்பனவுமாயுள்ள முன்னூற்களுக்கு விரிவுரை எழுதுவது. (இது சாமான்ய பண்டிதர்களா லியலாது).

(2) நீதிமாலினி, தத்துவதரிசனி, ஞானத்திரட்டு முதலிய உத்தம

புத்தகங்களை இயற்றிய "லோகோபகாரி" ப் பத்திராதிபர் வ. நடராஜையர் போல, நீதி, யுக்தி, தெய்வபக்தி, ஞானம் முதலியவற்றை எளிய வசன நடையில் எழுதுவது.

(3) இங்கிலீஷிலுள்ள "நாவல்" களை ஒத்த கற்பனைக் கதைகள் நமது பாஷையில் அநேகமாய் இல்லை யாதலால் கற்போருக்கு சன்மார்க்கம், கடவுள்பக்தி, யுக்தி, ஞானம் முதலியன மேம்படுமாறு செந்தமிழ் நடையில் ரசாலங்காரம் நிறைய முன்பின் முரணுருமல் இக்காலத்தார் நம்பக்கூடிய விதமாகச் செய்வது.

(4) ஏனைய பாஷாந்தரங்களிலுள்ளனவும், இதுகாறும் நம் பாஷைக்கு மொழி பெயர்க்கப்படாதனவுமாயுள்ள இரசாயன, பௌதிக, ககோள, கிருஷிக, கணித சாஸ்திராதிகளை மொழி பெயர்ப்பது. (இது பிறபாஷைகளில் விற்பனமும், சுயபாஷையில் அபிமானமுமுள்ள கல்விமான்களால் மாத்திரம் செய்யக்கூடியது. இதனுளதாம்பயனை அடுத்த பாநுவில் விரிப்பாம்).

(5) சுயபாஷைப் பத்திரிகைகளைப் பல்குவித்துப் போஷிப்பது. உபயோகமுள்ள ஆர்டிகில்களை எழுதி விஷயதானம் செய்வது.

இவைபோன்ற காலரீதிக்கேற்ற கடமைகளை யுணர்ந்து ஜனன தேச சகோதரர்கட்கும் நமது பாஷைக்கும் கண்ணியத்தை யுண்டாக்கும் புண்ணியத்தைக் கையாடுவார்களாக.

அ. வரதநஞ்சையபிள்ளை.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆளுமாறு.

(173-ம் பக்கத் தொடர்ச்சி).

முதற்கண், ஜாதி ஒற்றுமை அல்லது ஜாதி ஒற்றுமையில் நம்பிக்கை. இஃது முதிருங்கால் பாஷா ஒற்றுமையோடு பேதமறக் கலக்கும். ஆங்கிலேயராவார் இங்கிலிஷ் பாஷை பேசுவோர்; பிரெஞ்சியராவார் பிரெஞ்சு மொழி பகர்வோர். இந்தியாவாசிகள் அனைவரும் ஒரேபாஷை பயில்கின்றனரா? விடை: ஐரோப்பிய வாசிகள் ஒரே பாஷை பயில்கின்றனர் என்பதினும் பெரும்பான்மையல்ல, சிறுபான்மையே. வியாகரண நூல் விற்பன்னர்கள் ஆரியமொழிக்கும் ஏனைய மொழிகட்குமுள்ள சம்பந்தங்களை வெருவாய்

விதந்தோதியிருக்கின்றமையான், ஐக்கிய சாதனமாய் நின்று வினைசெய்வது தெள்ளிதில் உணரப்படும் பாஷா ஒற்றுமையேயென்றும் அதற்கிலக்கணமாவது மறைபுணருறவன்று, விளங்கக் கிடத்தலேயாமென்றும் ஈண்டையெடுத்துரைத்தல் அவசியமேயாம். என்னை? இத்தலியர், தங்களுக்கு ஜெர்மன் பாஷை தெரியமாட்டாமையால் ஜெர்மன் இத்தலியன் பாஷைகள் ஒரே இந்து ஐரோப்பியன் பாஷையின்வழி மொழிகள் என்று கொள்ள சிரமமெடுக்காமல் ஆஸ்திரியர்களை அயல் நாட்டாரென மதித்தனராதலின்னக் ஐரோப்பிய பாஷைகளுட்போல இந்திய பாஷைகளுள்ளும் சிலவற்றுள் ஒற்றுமையுண்டு. இந்திய பாஷைகளை மூலபாஷையின் வழித்தோன்றிய காரணத்தால் ஐரோப்பிய "ரோமான்சு" பாஷைகளோடு ஒப்பிடலாம். ஆனால், பெங்காலி; மராதி, குஜராத்தி இப்பாஷைகளின் பரஸ்பர உறவு, அவைகளைப் பேசும் ஜாதியார்களை ஒரே ஜாதியாராக்க ஹேதுவாகாது. இந்துஸ்தானி பாஷையானது முசல்மன் திக்விஜய காரணமாய், அவர்களது பெர்சியன் பாஷையும் சுதேசிகளுடைய இந்தி பாஷைகளும் கலந்து பிறந்தது. ஆனால் நாம் இந்தியாவின் தென்பால் ஐரோப்பாவில் காணப்படும் வேற்றுமை எவற்றினும் விஞ்சிய பாஷா வேற்றுமை காண்கிறோம். எவ்வாறெனின், தமிழ், தெலுங்கு, கன்னடமாதிய தெற்கே வழங்கும் பெரும் பாஷைகள் இந்து ஈரோப்பிய பாஷா வர்க்கத்தைச் சேர்ந்தவைகளல்ல. அவைகள் ஐரோப்பாவில் இந்து ஈரோப்பிய வர்க்கத்தைச் சாராத பாஷைகள் பயிலும் பின்னர்கள், (Finns) மர்சியர்கள் (Majyars). இன்னோரைப் பார்க்கினும் பன்மடங்கதிக மக்களாற் பயில்வுறுகின்றன;

இவ்வுண்மையே, இந்தியா வென்னும் பெயர் சுஜஞ்பிமானத்துவம் அல்லது ஒப்புரவுக்கும் பொருத்தமான் இங்கிலாந்து, பிரான்சு முதலிய பெயர்களொடு ஒருங்குவைத் தெண்ணப்படா தென்பதற்கும், மற்று ஏதோ சில இயற்கைப் பிரிவினல் ஓர் பொதுப்பெயர் வாய்க்கப்பெற்ற பல்வகைச் சாதியார்களின் தொகுதியைக் குறிக்கும் ஐரோப்பா முதலிய பெயர்களுடன் வைத்தெண்ணப்படல் வேண்டும் என்பதற்கும் போதிய சான்றும். 'ஐரோப்பா' என்பதைப்போல அதுவும் ஓர் பூகோள சாஸ்திர சம்பந்தமான பதப்பிரயோகமே. ஆனல் அத்துணையும் 'ஐரோப்பா' வாவது, ஹெரோடெட்டஸ் காலந்தொடங்கி அநேகமாய் ஒரே பொருளில் வழங்கி வருகின்றது; ஆனல் நமது 'இந்தியா' வென்னும் பெயரின் தற்கால பிரயோகமோ அவ்வளவு தொன்மையதல்ல. இமயமலை, சுலைமான் தொடர் என்னும் வான் வரம்பினல் மத்திய ஆசியாவினின்றும் பிரிக்கப்படும் தேயமுழுமைக்கும் ஒரே பெயர் வழங்குதல் நியாயமென இக்காலத்திய நமக்குத் தோற்றுமா

போல அக்காலத்தவர்க்குத் தோன்றவில்லை. கிரேக்கர்கள் இந்தத் தேயத்தைப்பற்றி ஏதோ ஒருவித போலி எண்ணங்கொண்டிருந்தனர். அவர்கள், நெடுநாளாக 'இந்தியர்' என்றால் பதப் பொருளின்படி, இந்துநதி பாயும் மாகாணம் என்றிருந்தனர். அலெக்ஸாண்டர் இந்தியாமீது படையெடுத்தான் என்புழி, அவர்கள் பஞ்சாபைக் குறிக்கின்றனர். பிற்காலத்திலே, அவர்கள் கங்காநதி தீரத்தைப்பற்றிச் சில சேதி அறியலுற்றார். தக்கணத்தைப்பற்றி யொன்றும் தெரிகிலார். இந்த மத்தியில், இந்தியாவிலேயே நமக்குத் தோற்றுமாபோல, முழுத்தேயத்துக்கும் ஏக நாமமிடல் முறையென அவ்வளவாய் அவர்கட்குத் தோன்றிற்றிலது. ஏனென்றால் அதன் வடபாகத்திற்கும் தென்பாகத்திற்கும் பேதம் பெரிதுமுளது. எவ்வாறெனின், ஆரிய மொழி பயின்று, பிராமண மதம் படைத்த பெரிய ஆரியர் குழாம், முதலில் தென்திசை நோக்கி நெடுந்தூரம் செல்லாது, பஞ்சாபினின்றும் கங்காநதி தீரமாகச்சென்று பரவின. பரவவே, இந்துஸ்தானம் என்னும் பெயர் கிரமமாய் இந்த வடபாகத்துக்கே பொருந்துவதாயிற்று. தெக்கணத்தில் அல்லது தீபகற்பத்தில் பிராமண மதம் வியாபித்திருந்தபோதிலும் இதர ஜாதியாரும் அனாரிய பாடைகளும் காணப்படுகின்றன. மொகாலய அரசாட்சி, தன் உச்ச காலத்திலுங்கூட இத் தென்பாகத்தில் அவ்வளாய்ப் பிரவேசிக்க வில்லை.

இதனால் 'இந்தியர்' என்பது ஓர் அரசியற் பெயரல்லவென்றும், 'ஐரோப்பர்', 'ஆபிரிக்கா' வைப்போல பூகோள சாஸ்திரோக்தமான பெயரென்றும் துணியப்படும். அது ஓர் ஜாதி, ஓர் பாஷைக்குரிய பூமியைக் குறியாது பல ஜாதிகள், பல் பாஷைகள் வழங்கும் நாட்டைக் குறிக்கின்றது. ஒப்புரவு என்னும் தத்துவம் ஒளிர்தரும் இத்தலி முதலாகிய ஏனைய தேயங்கட்கும் இந்தியாவுக்கும் உள்ள பிரதான தாரதம்மியம் இதுவே. இந்தியாவும், இத்தலியும் பல ராஜாங்கங்களாகப் பகுக்கப்பட்டிருந்தமையான் அயலாரை எதிர்க்க வலியற்றிருந்தன. ஆனால் இத்தலி, தன் அவயவங்களாற் பிளவுபட்டிருப்பினும் சுஜனாபிமானத்வத்தால் ஒன்றே. அதிற் பயின்ற பாஷையும் ஒன்றே. இந்த பாஷையினின்றும் அந்தத் தீவகற்பத்துக்கெல்லாம் பொதுநிதியமாயிருந்த மகாகாவியங்கள் பிறந்தன. நாம் எடுத்துரைத்தவாறே இந்தியாவானது, ஐரோப்பாவைவிட அதிகமாய் எத்துணையும் பாஷாபந்தத்துக்குட்பட்டிலது.

ஆனால் ஒப்புரவு பல் தத்துவங்களால் ஆக்கப்பட்டுளது. அவற்றுள், சுஜாதி அபிமானம் ஒன்று; பொதுநல வேட்கையும் ஒரு தனி அரசுக்குரிமை பூண்டொழுகும் விரதமும் மற்றொன்று. இதுவுங்கூட இந்தியாவில்,

முற்றிலும் இல்லாதொழிந்திலதேனும் நிரம்ப மலினமாயிருந்தது. தேயம் அளவுக்கு மிஞ்சிப் பெரிதாயிருந்தமையாலென்று அதற்கோர் நியாயம் கூறுப. ஆனால், பூமியின் ஏனைய பாகங்களினின்றும் இந்தியாவைப் பிரிக்கிற எல்லையானது, இந்தியாவின் ஓர் பாகத்துக்கும் மற்றோர் பாகத்துக்கும் இடையுள்ள எல்லையினும் மிகவும் பலமுள்ளதாயிருப்பதால், சாதி சமயபேத உட்பிரிவுகள் உளவேனும், ஒருக்கால் ஒரே ஒப்புரவுச் சாதியார் ஆகலாம் என்னும் ஒருவித அபிப்பிராயம் நெடுநாளாக இருந்துவருகிறது. கஜினிமாமூதுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளில், திம்மனையும் பொம்மனையும், இந்தியா முழுவதையுங் கட்டி யாண்டதாகச் சொல்லுப. முதல் மகமதிய காலத்தில் சரித்திரங்களிற் கூறப்பெற்ற சில அரசர்களின் அரசாட்சியும் ஒடுக்கம். மொகாலய அரசாட்சியும் ஏறக்குறைய எங்கும் வியாபித்திருந்ததெனப்படுகிறது. ஆனால் நாம் மொகாலய அரசாட்சியின் பெருமையைப் பற்றி உயர்த்திப் பேசவாவது, அல்லது ஐரோப்பாவுக்கும், ரோம் அரசாட்சிக்கும் என்ன தாரதம்மியமோ அதுபோலும் இந்தியாவுக்கும் மொகாலய அரசாட்சிக்கும் என்றெண்ணவாவது கூடாது. அது எவ்வளவு சொற்பகாலமிருந்தது பார்மின்! அதன் தொடக்கம், பேபர் லாகூரைப்பிடித்த வருஷமாகிய 1524-ம் வருஷத்துக்கு முற்பட்டன்று. அதாவது, எட்டாவது ஹென்றியின் காலம்.

வாஸ்கோடிகாமா, இந்தியாவிற் கால் வைத்தபொழுது, அது ஏற்படவில்லை; 1707-ம் வருஷம் அதாவது ஆன் (Queen Anne) மகாராணியின் காலத்தில் அது சீரழியத் தலைப்பட்டது. இவ்விரண்டு திதிகளுக்கு மத்தியில் இரு நூற்றாண்டுகளேனுமில்லை. ஆனால், இப்பொழுது, பேபர் இந்தியாவில் பிரவேசித்த நிமிஷமுதல் மொகாலய அரசாட்சி ஏற்பட்டதென்று கொண்டால் அது தவறாய் முடியும். மற்று, மொகாலயர்களது இந்திய சீமை பெருகின காலமுதற்றான் எனக்கோடலே தகுதி. 1559-ம் வருடத்தில் ஆக்பர் பட்டத்துக்கு வந்தபொழுது, அதாவது, எலிஜபத் மகாராணி பட்டத்துக்கு வந்த மறு வருஷம் இந்த அரசாட்சி பஞ்சாபிலும், டில்லி, ஆக்ராவைச் சூழ்ந்துள்ள நாட்டிலு மட்டுமே விளங்கிற்று. 1576-ம் ஆண்டு வரையில் ஆக்பர் வங்காளத்தைச் ஜயித்தபாடில்லை. 1591—1594க்கு மத்தியிற்றான் அவன் சிந்து குஜராத்தை ஜெயித்தான். அவன் அரசாட்சி இப்பொழுது விசாலமாயிற்று. ஆனால் 1524க்குப் பதிலாக, 1594-ம் வருடத்தை மொகாலய அரசாட்சியின் தொடக்ககாலமாகக் கருதுவமேல், அதன் ஆயுள் ஏறக்குறைய, ஒரு நூற்றாண்டென்னும்படி குறுகுமாறு காண்க.

(இன்னும் வரும்)

உ. மகாலிங்கம்பிள்ளை.

அன்னசத்திரம் அறச்செயல் ஆமா?

அன்னசத்திரம் என்பது யாது? தன்னுயிர்போல மன்னுயிர் காக்கும் கருணைகொண்ட தனவந்தர்கள், பொருள் ஈட்டுந்திறமையற்று, ஜனத்தாலும் தனத்தாலும் ஆதரவற்றுப் பசிப்பிணியால் வருந்தும் அங்கஹீனர்கள் பொருட்டும், வேதாகமங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்பொருட்டும் அன்னம் அளிக்கத்தக்க அறச்சாலையாம்.

அன்னதானத்தின் மகிமையானது ஆயிரநாவுடைய ஆதிசேடனாலும் அளவிடப்பாலதொன்றன்று. அதனை ஈசுவரனுடைய அருட்சக்தியென்பதே அமையும். அருட்பெருங்கடலாகிய பரம்பொருளானவர், ஆன்மாக்கள் உய்வது கருதி தனுகரணாதிகளை அளித்தனர். ஆனால் அத்தனுகரணங்களை ஆன்மாக்கள் நெடிதுறச்செய்கை அன்னதானத்தின் பயன் அன்றோ? அத்தகைய அன்னதானம் புரியும் அன்னதாதாக்கள்பால் அமைவுறத்தக்க சற்குணம் யாது? ஜீவகாருண்யம் ஆம். ஜீவகாருண்யம் ஒன்றே ஜென்மமெடுத்ததின் பயனும். எத்துணை கல்வி கற்றிருப்பினும், எத்துணை நற்குணங்கள் அமையப் பெற்றிருப்பினும் ஜீவகாருண்யம் ஒன்றிலதேல் அவையனைத்தும் பயனிலவாம், இஃதொன்றுளதேல் அவை ஒன்றும் இலாவிடினும் அவையனைத்தும் இருப்பதைமானும்.

அத்தகைய ஜீவகாருண்யம் யாது? ஜீவபிராணிகள் வருந்துவதை உணரப்பொழுது அவ்வருத்தத்தை மாற்றுவதோர் செயலாம். உடற்குறு பற்பல பிணிகள் அவரவர் வினைகட்கேற்ப உறுவனவெனினும், பசிப்பிணி ஒன்று உடலெடுத்த ஒவ்வோர் ஜீவனுக்கும் ஒழிவிலாததோர் நோயாம். உயிருளதேற் பசியுமுளது. அத்தகைய பெரும்பிணியை யகற்றலே அறத்தின் தலைநின்றோர் புரிவதோர்தலைப்படும் அறனும். அதுபற்றியே திருவள்ளுவர் 'ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின்' என்றதும். அற்றேல், பசிப்பிணியுற்றோர் அனைவரையும் ஆதரித்தலன்றோ ஜீவகருணையின் இலக்கணமாம். அங்கவீனர்கட்கும் அந்தணர்கட்குமே அமைக்கப்பட்டது அன்னசாலை யென்பதேன்? ஆராய்வாம்.

நல்லறமென்பது ஓர்வினையை நோக்கியோ? அவ்வினையின் பயனை நோக்கியோ? என விசாரிக்கில் பயனை நோக்கியே என்பது புலப்படும். ஒருவனுடைய சிலந்திக்கட்டு முதலியவற்றை அறுப்பதும் திருத்தமுறாத ஓர் குழந்தையை ஒறுப்பதும், செய்கையிற்கொடுமைபோற்றோற்றினும், சுகப்படுவதாகிய பயனை நோக்குங்கால் நல்லறமாகின்றன. அறுத்தல் ஒறுத்தல்

களால் நிகழும் வருத்தத்தைக் காணப்பொழுது அந்நோயாளியையும் குழந்தையையும் அவர்கள் போக்கிலேதானே வளரவிடில் விளையுந்தீங்கு எத்தன்மைத்தோ அத்தன்மைத்தே பாத்திரம் உணராது பசிவருத்தத்தைப் பார்த்த மாத்திரத்தில் அன்னம் படைத்தல் ஆம். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற முதுமொழியின் பயனை உற்றுநோக்குக. பசிப்பிணி ஒன்று சகல ஜீவர்களுக்கும் பொதுப்பட்டதின் காரணம் யாது? அவர்களுடைய நன்மையைக்கருதி கருணாநிதியாகிய கடவுள் அதனை ஒவ்வொரு உயிரின்கண்ணும் அமைத்திருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கற்பாலதாம். நிற்க.

இவ்வுலகத்தின்கட் பிறப்புற்ற ஜீவராசிகள் பராபேட்சையின்றி இருத்தல்கூடாது. எம்மட்டில் ஒரு மனிதன் பிறர்சார்பை நாடாது தன் காலத்தைக் கழிக்கின்றானோ அம்மட்டில் அவனே பெரியவனெனப்படுவான். நம் ஹிந்துமதநூலில் ஞானிகள் நிரத்துறந்தவர்களெனப்படுவதும் இக்கருத்துப்பற்றியேயாம். இது வாய்ஞானமேயன்றி அனுஷ்டானத்திற் காண்பது அரிது. ஞானபதவிகளில் உயர்ந்த நிலையையடைந்த பிரம்மபரிஷ்டர்களுக்கும் போதமுற்ற சமயத்தில் சீடர்கள் அன்னம் ஊட்ட வேண்டுவது அவசியமெனின், பிறர்சார்பை வேண்டாதார் வேறு யாரென்று கூறலாம்! பிறரது உபகாரத்தைப் பிரதிபலனின்றி ஏற்றல் குறையென்றும், அதனையே ருணம் என்றும், அதற்காக மறுபிறப்புற்றாவது அக்கடனைத் தீர்க்கவேண்டுமென்றும் நம் ஹிந்து சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஒருவருக்கொருவர் உதவிபுரிந்தாலன்றி இவ்வுலக காரியம் நிலையுறாதென்பதைக் கொண்டே இக்கொள்கை எழுந்திருக்கலாமென்று தோற்றுகின்றது.

ஒருவர் மற்றவரை நாடுவதற்கு மூலகாரணம் பசிப்பிணியொன்றேயாம். அப் பசிப்பிணி தவிருமாறு ஒருவர் மற்றவருக்கு அடங்கவும், இவர் அவருக்கு இணங்கவும் ஏற்படுகின்றது. அதனால் உலகத்தில் சகல விருத்திகளும் நடைபெறுவனவாகின்றன. முயற்சிக்குக் காரணம் பசியாதல்பற்றி அப்பசியை மாற்றும் வகைதெரிந்து மாற்றவே விவேகிகளாகிய தர்மசீலர்களின் கடனாம்.

இவ்வுலகமானது முயற்சிமயமாய் விளங்குகின்றது. ஆகாரமட்டோ நித்திரையுங்கூட முயற்சியின் பேறாக இருக்கின்றது. ஓர் ஏழையானவன் பசியைத் தீர்ப்பதற்கு ஓர் வேலை புரிவனெனில் ஓர் இராஜனும் உண்ட அன்னம் உடலொடு சாருதற்குத் தேகாப்பியாச முதலிய வினைகளைப்புரிதல் வேண்டும். சரீரத்தின் நிலைமை இங்ஙனமிருப்ப, ஒருவனுக்குச் சிரமமின்றி அன்னங்கொடுத்தால், அவன் முயற்சிபுரியவேண்டிய அவசியமில்லாதவனாகின்றனன். அதனால் சோம்பல் எய்துகின்றனன். சோம்பேறிக்கு வீணாகை

டிருகின்றது. அதனால் தீய சிந்தனைகளிற் சித்தத்தைச் செலுத்துகின்றனன். ஆகவே அவன் எப்பொழுதும் துக்கசாகரத்தில் அழுந்துகின்றனன். இதனால் முயற்சியின்றி வாளா உண்போன் சுகம் எய்தாமைமட்டோ? துக்கத்திற்கே இலக்காகின்றனன்.

அன்றியும் இவ்வுலகமுழுவதையும் ஓர் குடும்பமாகவும், இவ்வுலகத்தாரனைவரையும் ஓர் குடும்பஸ்தராகவும் பாவிப்பாம். ஓர் குடும்பத்திற்கு வேண்டிய ஆகாரத்தை அக்குடும்பஸ்தரனைவரும் ஏதேனும் ஓர் வழியில் முயற்சித்துச் சம்பாதித்தல் வேண்டும். அனைவரும் ஒரே தன்மையுள்ள முயற்சி செய்யவேண்டுமென்பது அவசியமின்று. ஒருவர் முயற்சிசெய்தால் மற்றவர் அம்முயற்சிக்குச் சாதனமாகவாவது இருத்தல்வேண்டும். திருஷ்டாந்தமாக, ஓர் கிரகத்தில் கணவனானவன் வெளியேறிப் பொருள்தேடிக் கொண்டுவருவானேல் மனைவியானவள் அப்பொருளைப்பாதுகாத்து ஆகாராதிகள் அமைத்து ஊட்டுவோளாகின்றனள். அவர்களுடைய குழந்தைகள் அவர்களுடைய முயற்சியின் பயனை நுகர்ந்தபோதிலும் அவர்கள் தளர்ச்சியுறுங்கால் வைப்புப் பொருளைப்போல உபகரிக்கத் தகுதியாகத்தக்க கல்விப்பயிற்சி முதலிய பணிகளை மேற்கொண்டு வாழாநிற்பர். இவ்வாறு ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு ரூபத்தில் முயற்சி புரியாதொழியின் சொற்பகாலத்தில் வறுமையுற்று அக்குடும்பமானது பாழாகுமன்றோ? அவ்வாறே இவ்வுலகமாகிய பெருங்குடும்பத்தில் சிலர் முயற்சி புரியவும், சிலர் வாளா இருக்கவும் ஏற்பட்டால் ஒருசாராரின் பயனை இருதிறத்தினரும் பகிர்ந்துண்பரேல் அப்பயன் நீடுறாதன்றே? இதுவே உலகத்திற் பஞ்சமுண்டாவதின் காரணங்களில் முக்யமானதொன்றாம். பஞ்சத்தினால் பசிப்பிணி மிகுந்து "எல்லாம் பசி வந்திடப் பறந்துபோம்" என்றபடி நல்லொழுக்கம் வேரோடுகெடும். ஒருவன் முதலை மற்றவன் பறிக்கத்தொடங்குவன். அதனால் ஜனங்களுக்குள் கலகம்விளையும். அரசநீதியும் கெடும். பரம்பொருளானவர் கருணையினால் அருளிய பசிப்பிணியின் நன்னோக்கமும் முற்றுறுதென்க.

சுருங்கச்சொல்லின், பாத்திரமுணராது அன்னதானம் இயற்றுவதால், சோம்பேறிகளின் பெருக்கமும், அச்சோம்பேறிகளுக்கே கெடுதியும், சோம்பேறிகளின் பெருக்கத்தால் பஞ்சமுண்டாகவே வெகுஜனக்கேடும், அரசாங்கமுறை பிறழ்தலும், ஆகவே அறப்பெருங்கடலாகிய பரம தயாநிதியின் திருவருணோக்கத்திற்குப் பின்னமும் உண்டாகின்றன. இதனால் ஜீவகாருண்யமுள்ள அன்னதாதாக்கள் அடையும் பயன் யாது? யாசகர்த்துரோகம், வெகுஜனத்துரோகம், இராஜத்துரோகம், ஈசுவரத்துரோகம் இவ்வளவு துரோகங்

களும் எளிதாகப் பெறப்படும். அந்தோ! நல்லெண்ணத்துடன் நல்லறம் செய்யத் தலைப்பட்ட நல்லோர், சிறிது பகுத்தறிவின்மையால், குறித்த துரோகங்களுக்குப் பாத்திரமாவதைப்பார்க்கும் அறிஞருக்கு இரக்கமுண்டாதல் இயல்பன்றோ? இத்தகைமை வாய்ந்த அன்னசத்திரங்களை அறச்செயலென அறிஞர் கூறுவரோ? கூறார் என்க.

அற்றேல் அன்னசத்திரங்கள் அறச்செயல் ஆமாறு யாங்ஙனம்? என்பதை ஆராய்வாம்.

அன்னசத்திரம் தாபிக்கப் புகுவோர் அன்னசாலையுடன் ஔடதசாலை பாடசாலை, பணிபுரிசாலைகளையும் ஒருங்கே அமைத்தல் வேண்டும். முதலில் அங்கவீனர்களையும், அப்பால் அந்தணர்களையும் அச்சாலையில் கூட்டிவைத்தல் வேண்டும். அவரவர்க்குத்தக்க பணிகளைக்கொடுத்து முயற்சியில் மூளச்செய்து அவர்களுக்குப் போதுமான அன்னவஸதிரங்களால் அவர்களை ஆதரித்தல் வேண்டும். இங்ஙனம் புரிதல் இந்துசாஸ்திர விதிகளுக்கு இணங்குமாவெனின், சாஸ்திரங்களின் கருத்தை நன்கு ஆராயின், இதுவே கருத்தாமன்றி வேறின்று. ஒவ்வோர் மதத்திலும் உட்கருத்தொன்றும் புறநடை வேறுமாகவே காணப்படுதல் உலக இயல்பாம். ஆதலால் ஒவ்வோர் அறத்தையும் ஆழ ஆராய்ந்து நடப்பித்தலே அறிஞரின் கடமையாம். இத்தகைய அறச்சாலைக்கும், வணிகரின் தொழிற்சாலைக்கும் வேற்றுமை யாதெனின், அறச்சாலையில் அமர்வோரது தேகசுகமும், மன ஒழுக்கமும் கவனிக்கப்படும். வணிகர் சாலையில் வணிகரது ஊதியமே பெரிதும் கவனிக்கப்படும். அறச்சாலையில் வளர்ந்துவரும் ஊதியத்தை அவ் எஜமான் சுவீகரியாது, அவ் அறமுதலுடன் கூட்டி அவ்வறத்தைச் செழிப்புறச் செய்தல்வேண்டும். வணிகர் சாலையின் வருவாயை அவ் எஜமான் தனக்கே உரிமைப்படுத்துவன். இதனால் அன்னசாலையுடன் தொழிற்சாலை முதலியன ஏற்படுவதால் விசேட புண்ணியமாகுமேயன்றி அறத்திற்கு எவ்வாற்றானும் இழுக்குறாதென்பது துணிபு. இப்படிக்கன்றி அன்னசாலையை மட்டும் தாபித்து அதனை அடுத்தவர்க்கெல்லாம் வரையறையின்றி அன்னம் அருத்துதலானது அறத்தின்பாற் பட்டதென அறிஞர் கொள்ளார்.

இலக்குமணப்போற்றி.

திருநெல்வேலித் தச்சநல்லூர்.

மேனாட்டுக் கலைஞானம்.

முற்கூறு.

---

1. புலன்களும் விஷயங்களும்.

அகில நாயகன் அன்பினால் அருளிய இவ்வுலகத்தில் நாம் உறக்கமின்றி விழித்திருக்கும்போதெல்லாம் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறியின் வழியாய் இப்பிரபஞ்சத்தைப்பற்றி ஏதேனும் உணர்ந்துகொண்டே யிருக்கிறோம். இவ்வைம்பொறிகளுக்குப் பஞ்சேந்திரியங்கள் என்றும் பெயர். இவ்விந்திரியங்களினால் முறையே ஸ்பரிசம், சுவை, ஒளி, நாற்றம், ஓசை யென்னும் உணர்ச்சிகளை யறிகிறோம். இவ்வுணர்ச்சிகளைப் "புலன்கள்" அல்லது "புலப்பாடுகள்" என்று சொல்லுவார்கள்.

இவ்வைம்புலன்களில் ஏதேனும் ஒன்றை நாம் நுகரும்பொழுது சாதாரணமாய் நாம் நமக்குப்புறமாக ஒன்றைக்குறித்து அதை ஸ்பரிசிக்கிறதாகவாவது, சுவைக்கிறதாகவாவது, பார்க்கிறதாகவாவது, முகர்கிறதாகவாவது கேட்கிறதாகவாவது சொல்லுகிறோம். இரும்பை ஸ்பரிசிக்கிறதாகவும், மாங்கனியை சுவைக்கிறதாகவும், யானையைப் பார்க்கிறதாகவும், மல்லிகையை முகர்கிறதாகவும், மணி ஓசையைக் கேட்கிறதாகவும் நாம் சொல்லுகிறோம். இப்படி இந்திரியங்களின் உதவியால் நமக்கு வேறாய் எதை யறிகிறோமோ அதை "விஷயம்" என்றும் "வஸ்து" வென்றும் "பொருள்" என்றும் "பண்டம்" என்றும் "பதார்த்தம்" என்றும் சொல்லுவார்கள்.

2. காரண காரியங்கள்.

மேலும் இவ்விஷயங்களை யெல்லாம் அவையவைகளுக்கு உரித்தாய்ச் சொன்ன புலன்களுக்குக் "காரணங்கள்" என்றும் அப்புலன்களை அந்தக் காரணங்களின் "காரியங்கள்" என்றும் நாம் சொல்லுகிறோம். உதாரணமாக, நாம் ஒரு ஓசையைக் கேட்டால் அந்த ஓசையாகிய புலனுக்குக் காரணம் மணியடிப்பதென்றும் அல்லது அந்த ஓசை மணியடிப்பதின் காரியமென்றும் சொல்லுகிறோம். எரியும் வாசனை யுண்டானால் ஏதோ நெருப்பில் வேகிறதென்றும் இதன் காரியம் அந்த வாசனையென்றும் நம்பி அந்த வாசனைக்குக் காரணமாயிருப்பதைக் கண்டுபிடிக்க அங்குமிங்கும் விரைவாய்ச் சுற்றிப் பார்க்கிறோம். ஒரு விருக்ஷத்தை நாம் பார்க்கும்பொழுது நமது திருஷ்டிக்கு அவ்விதமான காக்ஷியைத் தோற்றுவிக்கும் ஒரு பொருள் நமக்கும் புறம்பாயிருக்கிறதென்று நம்புகிறோம்.

3. முகாந்திரம் என்னவென்பது, துலக்கம் அல்லது விளக்கம்.

எரியும் வாசனை கண்டதும் நாம் சுற்றிப்பார்த்து ஏதோ ஒரு பொருள் அக்கினியில் வேகக்கண்டு நாம் அந்த வாசனைக்குக் காரணம் கண்டுபிடித்தோம் என்றும் அல்லது அந்த வாசனை நமக்குப் புலப்பட்டதற்கு "முகாந்தரம் என்ன" வென்று தெரிந்துகொண்டோமென்றும் அல்லது நாம் உணர்ந்த வாசனைக்குக் காரணத்தைத் "துலக்கிவிட்டோம்" அல்லது "விளக்கிவிட்டோம்" என்றும் சொல்லுகிறோம். அதாவது ஒன்றின் முகாந்தரம் என்னவென்று தெரிகிறதென்றாலும் அல்லது ஒன்றைத் துலக்குகிறது அல்லது விளக்குகிறது என்றாலும் அதன் காரணம் தெரிதல் என்பதே. ஆனால் ஒன்றின் காரணம் வேறொன்றின் காரியமாயிருக்கும். உதாரணமாக எரியும் நாற்றத்திற்கு வைக்கோற் போர் பொசுங்குதல்தான் காரணம் என்று கண்டதும் நாம் உடனே வைக்கோல் போர் பற்றிக்கொள்வதற்குக் காரணமென்னவென்று விசாரிக்கிறோம். விசாரணையில் பொருத்தின தீக்குச்சு வைக்கோல் போரின்மேல் விழுந்து போர் பற்றிற்று என்று வெளியானால் தீக்குச்சு போரின் நெருப்புக்குக் காரணமாகின்றது. மறுபடியும் தீக்குச்சு தானே போருக்குப் போகமாட்டாதாகையால் பின்னும் விசாரித்து அத்தீக்குச்சு போரின்மேல் செல்வதற்குக் காரணம் ஒரு மனிதன் என்றும் அவன் அஜாக்கிரதையினால் போட்டானா அல்லது சற்பனையாற் செய்தானா வென்றும் சற்பனையானால் முன் விரோதமுண்டா வென்றும் உண்டென்றால் என்ன விரோதம் என்றும் இப்படி விசாரித்துக்கொண்டு போக காரணகாரியங்களின் தொடர்பு முடிவில்லாமல் போகும். காரணகாரியங்களின் தொடர்பை விசாரித்துக்கொண்டே எவ்வளவு தூரம் நாம் செல்கிறோமோ அவ்வளவு மிகுதியாய் விளக்கஞ் செய்ததாகச் சொல்லுகிறோம். ஆனால் மனிதனுடைய புத்தி சாதரணமாய் வஸ்துக்களின் ஆரம்ப காரணத்தை நோக்கிச் சொற்ப தூரந்தான் செல்கிறது. ஆகையால் பூரண விளக்கம் கிடைப்ப தரிதாயிருக்கிறது. ஆனால் சிந்தனையும் சோதனையும் செய்யச்செய்ய நாளுக்குநாள் துலக்கமும் அதிகமாய்க்கொண்டுவரும். திருஷ்டாந்தமாக நூறு வருஷங்களுக்கு முன் விஷயங்களைப்பற்றி ஜனங்களுக்குத் தெரிந்திருந்த ஞானத்தைப் பார்க்கிலும் ஐம்பது வருஷங்களுக்குமுன் ஜாஸ்தியாயும் ஐம்பது வருஷங்களுக்கு முன்னிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அதிகமாயும் விருத்தியாயிருப்பது யாவருக்கும் தெரிந்ததே. இன்னும் நாள் செல்லச்செல்ல விஷயங்களின் விளக்கமும் அதிகமாய் வரும் என்பதிற் சந்தேகமில்லை.

(இன்னும் வரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

புத்தகக் குறிப்பு.

திருவாவடுதுறைக்கோவை—இஃது திருவாவடுதுறையில் திருக்கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ மாசிலாமணியீசர்மீது துறைசை ஆதினத்தில் வடமொழிக்கடலுந் தென்மொழிக்கடலும் ஒருங்குண்டிருந்த திராவிட மாபாடிய கர்த்தர் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரான ஸ்ரீ தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரால் இயற்றப்பட்டது. 459 செய்யுட்களையுடையது. அகப்பொருளிலக்கணத்துக்கு இலக்கியமாவது. சத்தச்சுவையும், எதுகைமோனை நயமும், முரண், மடக்கு, யமகம், திரிபு, சிலேடை முதலிய பிறவிசேடங்களும் மலியப்பெற்றது. சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களை யாங்காங்கு விளக்குவது. தமிழறிந்த தக்கார் பலருங் கொண்டாடிப் புகழத்தக்கது. இத்தகைய அற்புதப் பிரபந்தத்தை அச்சிற்பதிப்பித்தவர் கும்பகோணம் கவர்ண்மெண்ட் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களே. இப்புலவர் பெருமான் இந்நூலைப் பதித்திருக்குந் தன்மை மிகவும் வியக்கற்பாலது. முகவுரை, அரும்பதவுரை, நூல் இவற்றைப் பார்க்குந்தோறும் யாம் அடையும் பெருமகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பண்டைத் தமிழ் நூல்களைத் தேடி ஆராய்ந்து வெளியிட்டு உலகுக்குபகரித்தலை தமது கடமையாகப் பூண்டார் இம்மகாவித்வசிகாமணியே. செய்யுண் முதற் குறிப்பகராதியுமுண்டு. ஐயரவர்களால் ஆராய்ந்து பதிப்பிடப்பெற்ற இந்நூலும் நூலாசிரியரும் தமிழ் நாட்டாரும் முற்றவ முற்றன மென்பதற்கு ஐயமுமுண்டோ? இந்நூலின் அமைதியை நோக்கின் இதன் விலை அணா எட்டு என்பது மிகவும் குறைந்ததே. தமிழபிமானிகள் வாங்கிப் படித்து மகிழ்வார்களாக.

பத்திராதிபர்.

OFFICE REGISTERED BOOKS
15 AUG 1903
MADRAS

உ

குமரன்றுணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

சம்புடம் 2 } 1903௵ ஜூலைமீ { இலக்கம் 8

மதுரை ஆவணிமூல மகோற்சவச்சிறப்பு.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற் — றாலவாயிலான்
பாலதாயினார் — ஞாலமாள்வரே. திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம். திருச்சிற்றம்பலம்.

செய்யனின் கமலபாதஞ் சேருமா தேவர்தேவே
மையணி கண்டத்தானே மான்மறி மழுவொன்றேந்துஞ்
சைவனே சாலஞானங் கற்றறி விலாதநாயே
னையனே யாலவாயி லப்பனே யருள்செயாயே.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

நரியைக்குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையா
யரியபொருளே யவநாசி யப்பாபாண்டி வெள்ளமே
தெரியவரிய பரஞ்சோதீ செய்வதொன்று மறியேனே. திருச்சிற்றம்பலம்.

அநாதிமலமுத்த நித்தவியாபக சச்சிதானந்த ஷாட்குண்ணிய வாக்குமனாதி கோசரமாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டுய்யும்பொருட்டுப்பெருங்கருணைத்திறத்

திருலே சகள நிட்கள வடிவமாகிய சுயம்புலிங்கத்திருமேனி கொண்டெழுந்தருளியிருக்கின்ற திவ்யக்ஷேத்திரங்களுள் மேலானதாயும், விராட்புருடனுக்குத் துவாதசாந்தஸ்தானமாயும், சிவபிரானது அஷ்டமூர்த்தஸ்தலங்களுள் ஒன்றானதாயும், பராசத்தியினது அறுபத்தினன்கு பீடங்களுள் முதற்பீடமாய் விளங்கப்பெற்றுள்ளதாயும், அடியார்கள் பொருட்டு அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்யப்பெற்றுள்ளதாயும், அரிபிரமேந்திராதி தேவர்கள் பூசித்து வரங்கள் பெறற்பாலதாயும். இன்னும் அளவிடப்படாத அத்தியற்புதப் பெருமைவாய்ந்துள்ளதாயும் விளங்குகின்ற மதுராபுரியென்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் நிகழும் சோபகிருது நாமஸம்வத்ஸரம் சிங்கரவி ௮௳ புதன்கிழமை துஜாரோகணம். அன்று இரவு முதல் ஆறுதினம்வரை சந்திரசேகரர் உற்சவம்.

௯௳ முதல் மதுரை நாயகர் லீலா விநோதத்தோடு ஆவணி மூல வீதி உற்சவம் கொண்டருளுதல்.

௯௳ காலை கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்து தங்கச்சப்பரத்தில் அம்மை சுவாமி ஆவணிமூலவீதி எழுந்தருளுதல். அன்றிரவு மலையத்துவசன்றா மகளிர்களுக்கு அரசாய்விளங்குந் தன்மைக்கிசைய விலங்குகளுக்கரசாகிய சிங்கவாகனத்தில் மீனாட்சிதேவியாரும், போகமோட்சங்களைக் கொடுக்கின்ற தாதா இவரேயன்றி வேறொருவருமில்லை என்பதை மயக்கமின்றி யாவருமுணரக் கொடைவழங்குங் கற்பகத்தருவில் சோமசுந்தரக்கடவுளும் எழுந்தருளுதல்.

௰௳ காலை நாரைக்குமுத்திகொடுத்து மேற்படி சப்பரத்தில் எழுந்தருளுதல். அன்றிரவு அடியார்கள் செய்தகுற்றத்தை நீக்கி குணத்தைக்கைக்கொண்டு அருள்புரிகின்றவள் என்பதை விளக்கும்பொருட்டு ஜலத்தைப்பிரித்துப் பாலையுண்ணும் அன்னவாகனத்தில் அம்மையும், பூதநாதர் என்ற பெயருக்கு இசைய பூதவாகனத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

௧௧௳ காலை மாணிக்கம் விற்றுக்கொண்டு மேற்படி சப்பரத்தில் எழுந்தருளுதல். இரவு ஞானமாகிய பாலையூட்டி மலப்பிணியை நீக்கிக்காக்கின்றவள் என்பதற்கிசைய, காமதேனுவாகனத்தில் அம்மையும், கைலாயத்தைநினைந்துஅடையவேண்டுமென்ற விருப்பத்தை யாவரும் கைக்கொள்ள கைலாய வாகனத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

௧௨௳ காலை கோங்குதேர் வாழ்க்கை என்னும் திருப்பாசுரத்தைப் பாடியருளித் தன்னைச்சரணடைந்ததருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடலை நடாத்தி ஷை சப்பரத்தில் வீதிகொண்டருளுதல். இரவு எல்லா உலகங்களையும் தன் ஆணைவழிநிறுத்திச் செங்கோல் நடாத்துகின்றவள் என்பதைக்காட்டும் பொருட்டு யானைவாகனத்தில் அம்மையும், மேற்படி சப்பரத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

௧௩௳ காலை அடியார்க்கு நல்லாராகிய வேளாளர்க்கு மன்துன்பங்கெட உலவாக்கோட்டை கொடுத்த திருவிளையாடலை நடாத்தி மேற்படி சப்பரத்தில் எழுந்தருளுதல். இரவு உலகத்தில் எவ்வளவு கொடிய உயிரையும் காக்கின்றவள் என்பதற்கியைய யாளிவாகனத்தில் அம்மையும் அடியார்கள் உள்ளக்கமலத்தில் வதிதலேயன்றி வடிவத்திலும் கண்ணும் வதிதலை யாவருக்கும் காட்டும்பொருட்டு நந்திகேசுவரர் வாகனத்தில் சுவாமியும் எழுந்தருளுதல்.

௧௪௳ காலை மேற்படி சப்பரத்தில் எழுந்தருளிப் புதுமண்டபத்துக்குச்சென்று அங்கம் வெட்டிய திருவிளையாடலை நடாத்தி வீதிகொண்டருளுதல். இரவு அடியார்குழாங்களோடு ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் எழுந்தருளிவர உலகத்திலுள்ள எல்லாப் பொருளும் சத்தியுஞ் சிவமுமாயமைந்திருத்தலுக்கு இசைய வடிவத்தையும் பகுத்தாற்போல இடபவாகனங்களில் அம்மையும் சுவாமியும் எழுந்தருளி ஆடிவீதி தென்பக்கத்திலுள்ள பண்டாரசந்நிதிகள் மண்டபத்துக்கெதிரில் சமணரைக் கழுவேற்றுதலாகிய லீலையை நடாத்தி வீதிக்குச்சென்று அனைவர்க்குங் காட்சிகொடுத்தருளுதல்.

௧௫௳ காலை சுவர்னத்தாலாகிய சிவிகையில் எழுந்தருளி வளையல் விற்றுக்கொண்டு இம்மையில் நன்மைதருவார் கோவிலு

க்குச்சென்றருளுதல். இரவு சுவாமி சோமசுந்தரபாண்டிய மகாராஜாவாகத் திருவுருக்கொண்டு அரசாட்சி பண்ணுங்காலத்தில் அரசர்கள் சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணவேண்டுமென்று வேதவிதியைப் பின்னே வருகின்ற அரசர்கள் கைக்கொள்ளும் பொருட்டுப் பூசைசெய்த ஐதிகத்தை நடாத்தி மேற்படி பல்லக்கில் சுவாமியும் அம்மையும் ஆரோகணித்துக் கோவிலுக்கு எழுந்தருளிப் பட்டாபிஷேகமும் முடிசூடுதலுமாகிய ஐதிகத்தை நடாத்திச் சேக்கைக்கு எழுந்தருளுதல்.

௧௬௳ காலை மேற்படி சப்பரத்தில் ஆரோகணித்து ஆற்றங்கரையிலுள்ள செல்லப்பெருமாள்பிள்ளை மண்டபத்தில் எழுந்தருளியிருத்தல். அன்றிரவு திருப்பரங்குன்றத்தினின்றும் எழுந்தருளிவந்த முருகபிரானும், திருவாதவூரினின்றும் எழுந்தருளிவந்த மாணிக்கவாசகசுவாமிகளும் குதிரைவாகனங்களில் ஆரோகணித்துப் பின்வர வேதக்குதிரையும் அதன்பொருள் சத்தியும் தாமும் என்பதை யாவரும் எளிதாக உணரும்பொருட்டு குதிரைவாகனங்களில் அம்மையும் சுவாமியும் எழுந்தருளி ஆடிவீதி பதினறுகால் மண்டபத்துக்குச்சென்று மாணிக்கவாசக சுவாமிகள்பொருட்டு வனத்திலுள்ள நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டுவந்து அரிமருத்தன பாண்டியமஹாராஜாவினிடத்தில் ஒப்புவித்தல். பின் அக்குதிரைகளை நரிகளாக்குதல் ஆகிய இரண்டு திருவிளையாடல்களை நடாத்தி வீதிகொண்டருளுதல்.

௧௭௳ காலை வந்தியம்மையின் கூலியாளாய்த் திருவுருக்கொண்டு சிம்மாசனத்தின்மேல் சுவாமியும் அம்மையும் ஆரோகணித்துப்பாண்டியா வடிவமாய்த்திருக் கோலங்கொண்ட முருகபிரானும் மந்திரிவடிவினராகிய மாணிக்கவாசக சுவாமிகளும் சிம்மாசனத்தில் பின் எழுந்தருளிவர ஆற்றங்கரைக்குச்செல்லுதல். பின் அங்கே ஆயிரம்பொன் சப்பரத்தில் ஆரோகணித்து அங்கங்கே அமையப்பெற்ற மண்டபங்களில் தங்கி அங்குசெய்யும் உபசாரங்களை ஏற்றுப் பிட்டுத்தோப்புக்குச் சென்றருளி அங்கே நிருமாணஞ்செய்யப்பெற்றுள்ள மண்டபத்தில் எழுந்தருளியிருந்து லீலை நடத்துதல்.

லீலையின் சங்கிரகம் வருமாறு.

கூலியாள் வேடம்பூண்ட சிவபெருமான் ஆத்திமரநிழலில் படுத்திருத்தல். அரிமருத்தனபாண்டியன் அவரவர்களுக்கு அளந்துவிட்ட கரைகளெல்லாமடைபட்டனவாவென்று மந்திரிமுதலானவர்களை வினவுதல். ஓ மஹாராஜாவே எல்லாமடைபட்டன, வந்தியம்மையின் பங்குமாத்திரமடைபடவில்லை, அவ்வம்மையின் கூலியாளாய் ஒருவர்வந்து கணக்கில் பதிவித்துக்கொண்டு வேலை செய்யாமல்பள்ளிகொள்கின்றார், சொன்னதைக்கேட்கின்றாரில்லை அவர்திருமேனிப்பொலிவைக்கண்டு அடிக்க அஞ்சிச்சன்னிதானத்தில் வந்து தெரியப்படுத்தினோமென்று கூற, உடனே பாண்டியராஜன் எழுந்துசென்று கையிலுள்ள பிரப்பங்கோலால் மேற்படி கூலியாள் வேடங்கொண்ட சிவபெருமானது முதுகிலடிக்க அவ்வடி எல்லா உயிர்களிடத்திலும் படும்படிசெய்து தான்விசுவத்திற்கு அந்தரியாமியென்ற வேதவாக்கியப்பொருளை எல்லாரும் எளிதில் உணரும்படிசெய்து ஒரு கூடைமண்ணை உடைப்பிற்கொட்டிக்கரையை யுயர்த்தி மறைந்து ஆகாயத்தில் எழுந்தருளி ஏ! அரிமருத்தனபாண்டியா, உன்னுடைய தருமவழியாக ஈட்டிய பொருளை வாதவூரன் நமக்கும் நமது அடியார்களுக்கும் திருப்பெருந்துறையில் கொண்டுவந்து கொடுத்தான். அதற்கு அனையனைத்தண்டித்தாய். அதைப்பொறுக்காது வனத்திலுள்ள நரிகளைப்பரிகளாகச்செய்தும் பரிகளை நரிகளாகச்செய்தும் வைகையில் வெள்ளம் வரும்படி செய்தும் வந்தியம்மையின் கூலியாளாய் அவ்வம்மையினிடத்துப் பிட்டுவாங்கியுண்டு வந்து உன் கைப்பிரம்பால் அடிபட்டு மண்சுமந்து கரையை உயர்த்தி இடும்பைதீர்த்தும் அவ்வம்மையைச் சிவலோகத்தில் அடையும்படி செய்தும், உனக்கு அறிவுறுத்தியது இம்மாணிக்கவாசகன் பொருட்டேயாம். உனக்கு இம்மையோடு மறுமையுந்தேடித் தந்த உத்தமனான் அவன் பெருமையைச் சிறிது மறிந்தாயில்லை. இனி அவனை இச்சை வழியில் நிறுத்தி மறைவழிநின்று நெடுங்காலம் செல்வவாரியுட் குளித்து வாழக்கடவாயென்று கட்டளையிடுதல் ஆகிய இந்த லீலைகளை நடாத்தி மிக அலங்காரமாயுள்ள இராமநாதபுரம் சேதுபதிமஹாராஜா அவர்கள் மண்ட

பத்தில் எழுந்தருளியிருத்தல். இரவில் அபிஷேகம் நைவேத்தியம் தீபாராதனை முதலிய உபசாரங்களை ஏற்று இடபவாகனத்தில் எழுந்தருளி வந்தியம்மைக்குக் காக்ஷி கொடுத்து முருகபிரானும் மாணிக்கவாசகசுவாமிகளும் குதிரைவாகனங்களில் ஆரோகணித்துவர அம்மையுஞ்சுவாமியும் கோயிலுக்கெழுந்தருளுதல்.

௧௮உ மாலையில் தங்கச்சப்பரத்தில் பாணபத்திரர்பொருட்டு விறகுவிற்றுக்கொண்டு ஆவணிமூலவீதியிலெழுந்தருளுதல் இரவு புதுக்கோட்டை மன்னர் மண்டபத்தினின்றும் முருகபிரானோடும் மாணிக்கவாசகசுவாமிகளோடும் சிம்மாசனத்தில் எழுந்தருளுதல்.

௧௯உ காலை மஹாரதப்பவனியூர்தல், இரவு சத்தாவரணம்.

௨௰உ காலை முருகபிரானோடும் மாணிக்கவாசகசுவாமிகளோடும் வைகைநதிக்கு அம்மையும் சுவாமியும் மேற்படி சப்பரத்தில் எழுந்தருளி தீர்த்தங்கொடுத்து ஆன்மாக்களை ஆனந்தவாரியில் அமிழ்த்தி மண்டபத்தில் எழுந்தருளியிருத்தல், அன்றிரவு இடபவாகனங்களில் எழுந்தருளித் திருக்கோயில் பதினாறுகால் மண்டபத்திற் சென்றருளி முருகபிரானையும் மாணிக்கவாசகசுவாமிகளையும் மரியாதை செய்து விடைகொடுத்தனுப்புதல்.

திருவிளையாடல் நரிபரியாக்கிய படலம்.

கோத்தவிழ்தார் நறுஞ்சாந்தங் கொண்டுசெழும் புகைதீபங் கொடுத்துப் பூசை
பத்திமையாற் செய்திறைஞ்சி யெதிர்நிற்ப வாலவாய்ப் பரனை நோக்கிக்
கைத்தலந்தஞ் சிரமுகிழ்த்து வாழிபெனப் பரிகொடுத்தான் கயிறு மாறி
முத்தொழிலின் மூவராய் மூவர்க்குந் தெரியாத முக்கண் மூர்த்தி

மண்சுமந்தபடலம்.

கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்பு வாங்கி
யண்டமு மளவிலாத வுயிர்களு மாக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடை யோடு
மண்டனை யுடைப்பிற் கொட்டி மறைந்தன னிறைந்த சோதி.

திருச்சிற்றம்பலம்.

கிடைத்தற்கரிய இவ்வத்தியற்புத மகோற்சவத்தை அனைவரும் வந்து தரிசித்துப் பேரானந்தமுற்றுப்போக மோக்ஷங்களை அடையக்கடவர்கள்.

மதுரை திருஞானசம்பந்த
சுவாமிகள் மடம். } இங்ஙனம்
சுப்பிரமணியபிள்ளை.

முற்கூறு.

[223 ம் பக்கத்தொடர்ச்சி.]

4. குணம் — சக்தி.

ஒரு பொருள் எப்பொழுதும் ஒரேவிதமான காரியத்திற்குக் காரணமாயிருக்கக்கண்டால் நாம் அக்காரியத்தை அப்பொருளின் குணம் அல்லது சக்தி என்று சொல்லுகிறோம். சுபாவம், இலக்ஷணம், இயல்பு, தன்மை, சாரம், சீர், வல்லமை, அதிகாரம், பலம், வீரியம், என்றும் குணத்தைச்சொல்வதுண்டு. உதாரணம். மல்லிகைமலர் எப்பொழுதும் ஒரே விதமான வாசனையை வீசுகின்றது. ஆகையால் அவ்விதவாசனையை மல்லிகைமலரின் குணம் என்று சொல்லுகிறோம். அப்படியே கருவங்கத்தையெடுக்கும்போதெல்லாம் ஒருவிதமான கனக்கும் உணர்ச்சியை நமக்கு அது கொடுக்கிறபடியால் காரியத்தின் கனம் அதன் குணம் என்கிறோம். ஓடும் நதி நீரியந்திரத்தை உருளச்செய்கிறபடியால் ஓடும் நதிக்கு நீரியந்திரத்தை இயக்கும் சக்தி உண்டென்கிறோம். சுவர்ணத்தை குகையில்வைத்து அக்கினியில் ஊதும்போதெல்லாம் உருகுகிறபடியால் சுவர்ணத்திற்கு உருகுந்தன்மை யிருக்கிறதென்கிறோம். சர்ப்பந்தீண்டி மனிதன் சாதாரணமா இறக்கிறபடியால் சர்ப்பத்திற்குக்கொல்லும் வல்லமையுண்டு என்றுகூறுகிறோம். ஆகையால் குணங்கள் அல்லது சக்திகள் என்றால் அவைகளையுடைத்தாயிருக்கும் பொருள்கள் உண்டாக்கும் காரியங்களேயாம்.

5. செயற்கைப்பொருள்-இயற்கைப்பொருள்

இந்திரியங்களின் வாயிலாக நமது அறிவைச்சாரும் பொருள்களில் அனேகம் மனிதன் தன்னுடைய வித்தை சாமர்த்தியத்தால் செய்தவைகளாயிருக்கின்றன. மாடமாளிகை கூடகோபுரங்கள் மேசை, குரிச்சி, வண்டி, குளோப்பு, பீரோ, கோப்பை, தவலை, செம்பு முதலானவைகள் மனிதனால் உருப்படுத்தப்பட்டவைகள். இவைகளுக்குச் செயற்கைப்பொருள்கள் என்றுபெயர்.

வேறு அனேகபொருள்கள் மனிதன் செயலுக்குட்படாமல் சுயமாகவேயிருக்கின்றன. இவைகள் மனிதனே இல்லாவிட்டாலும் இப்பொழுது இருக்கிறமாதிரியே யிருக்கும். சந்திர சூரியர்கள், நக்ஷத்திரங்கள், வால்மீன்கள், மேகங்கள், கடல்கள், மலைகள், புல் பூண்டு, செடி கொடி, விருக்ஷங்கள், பக்ஷிகள், விலங்குகள் முதலானவைகள் இவ்வகைப்பொருள்கள். இவைகளுக்கு இயற்கைப்பொருள்கள் என்று பெயர். இவ்வியற்கைப்பொருள்களெல்லாம் ஒன்றுசேர்த்து அல்லது சமஷ்டியாய்நோக்கும் பொழுது சிருஷ்டி என்று சொல்லுவார்கள். இன்னுமிந்த சமஷ்டியை ஜகத் என்றும், சுபாவம் என்றும், பிரபஞ்சம் என்றும், பிரகிருதி என்றும், விஸ்வம் என்றும், மாயையென்றும், மாயா விலாசம் என்றும் கூறுவார்கள். இங்கிலீஷில் இதை "நேக்ஷர்" என்பார்கள். விவகாரத்தில் இயற்கைசெயற்கை இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்று பிரித்துப்பேசுவது மிகவும் இலேசாகவும் வசதியாகவுமிருந்தபோதிலும் முடிவில் பார்க்கும்பொழுது எல்லாப்பொருள்களுக்கும் இயற்கையே காரணமாயிருக்கின்றது. மனிதர்களால் செய்யப்பட்டதாக நாம் சாதாரணமாய்ச் சொல்லும் செயற்கைப்பொருள்களும் வாஸ்தவத்தில் மனிதர்களால் உருவாக்கப்பட்டும் இயக்கப்பட்டும் வரும் இயற்கைப்பொருள்களே. முன்னமேயே ஏதோ வொருரூபமாயிருந்த வஸ்துவைத்தானே மனிதன் வேறு ரூபங்களாகச்செய்கிறானே யல்லது ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து ஒரு பொருளையுண்டாக்க அவனுக்கு முடியவே முடியாது. மேலும் மனிதர்கள் இயற்கைப்பொருள்களின்மேல் தொழில் நடத்திச் செயற்கைப்பொருள்களை உண்டாக்குவதும்கூட இயற்கைப்பொருள்களா யிருக்குந்தன்மையில் தங்களுக்கிருக்கும் சக்திகளினால்தான் என்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். ஆனசெய்தி என்னவென்றால் செயற்கைப்பொருள்கள் என்பனவெல்லாம் நாம் மனிதர்கள் அல்லது மண்பதை என்று சொல்லும்படியான சிருஷ்டி அல்லது இயற்கையின் ஒருபகுதி மக்கட்பிறப்பொழிந்த மற்றப்பகுதியின்மேல் ஒருதொழிலை நடத்தினதாலுண்டானவைகளேயாம். நாம் ஒரு பெட்டியைச் செய்வதாகச்

சொல்வது சரியே. ஆனால் மரமும் ஆணிகளின் இரும்பும் இயற்கைப்பொருள்களே. தங்கம் வெள்ளி முதலாகிய உலோகங்கள், மணல், உவர், கெம்புகள் ஆகிய இயற்கைப் பொருள்களைச் சேகரித்து அவைகளைப்பல வேறுவகையாக உருப்படுத்தி நாம் கடியாரத்தைச்செய்கிறோம். நாம் மேலே தரிக்கும் வஸ்திரத்தை இயற்கைப் பொருள்களாகிய பஞ்சு, பட்டு முதலானவைகளால் உண்டுபண்ணுகிறோம். மேலும் இவைகளையெல்லாம் செய்யும் மனிதர்களும் இயற்கைப்பொருளே. தச்சர், கொல்லர், கொற்றர், கம்மியர், சிற்பர், செம்மார் முதலிய தொழிலாளிகள் எல்லாம் மனிதனுக்கு உபயோகமாகும்படி சிற்சில இயற்கைப்பொருள்களை ஒன்று சேர்த்து உருவாக்கவேண்டிய அளவுக்கு அவ்வியற்கைப்பொருள்களின் குணங்களையும் சக்திகளையும் பிரபஞ்சத்தில் காரண காரியத்தொடர்பையும் தெரிந்துகொண்டு தொழில் செய்யும் மனிதர்களே.

மரத்தின் சக்திகளையும்குணங்களையும் பற்றி யாதும் தெரிந்துகொள்ளாவிட்டால் தச்சன் குரிச்சியைச்செய்யமாட்டான். இரும்பைச்சிவக்கக்காய்ச்சினால் ஒரு உருவமாகும்படி சுலுவாய் அடிக்கிறதற்கு அது இளக்கமாகும் குணமுள்ளது என்று தெரியாதிருந்தால் கொல்லன் குதிரை லாடஞ்செய்யமாட்டான். இப்படியே செங்கற்சுடுவோன் மண்ணின் குணங்களிலனேகந்தெரிந்திருக்கவேண்டும். சயவேலைக்காரன் தன் வேலையைச்செய்வதற்கு மென்மையாயிருத்தலும் குழைதலும் சொற்பச்சூட்டினால் உருகுதலும் சயத்தின் தன்மையென்று தெரிந்திருத்தல் வேண்டும்.

முன் சொன்னவற்றால் ஒவ்வொருதொழில் அப்பியாசத்திலும் பிரபஞ்ச இயல்பின் காரணகாரிய ஞானம் உள்ளது என்று குறிப்பாய் விளங்குகிறது. ஆகையால் தொழில்களும் வித்தைகளும் மேலும் மேலும் வளர்ந்து விருத்தியாகவேண்டுமானால் நாம் இயற்கைப்பொருள்களின் சக்திகளையும் குணங்களையும் மேன் மேலும் அதிகமாய்க்கற்று அப்பொருள்களின் குணங்களையும் சக்திகளையும் அவைக்குள்ள காரண காரியங்களின் சம்பந்தங்களையும் நமது பிரயோசனத்திற்கும் அநுகூலத்திற்கும் எப்படித்திருப்பலாம் என்பதைக்கண்டு பிடிக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

இதைப்பற்றி சென்ற மேயீ விவேகபாநுவில் விரிவாக எழுதியிருக்கின்றோம். நாளது வரை இச்சங்கத்துக்கு சந்தாத் தொகை, தர்ம மகமை, தேவஸ்தானம், ஆபீசு வசூல், செந்தமிழ்ச்சந்தா, சில்லறை வரவு, கடன் ஆகிய வகைகளில் வரவு மொத்தம் ரூ 29723—2—8. இதில் கடன் வாங்கியது ரூ 4500-0-0. இம்மொத்தத் தொகைக்குச் செலவு, கட்டிடம் முடித்தற்காக நிலம்வாங்கிய வகையில் ரூ 6600—10—6. முத்திராசாலைக்கு வேண்டிய யந்திரங்கள் முதலியன ரூ 12212-11-9. தமிழ்ப் பரீக்ஷை வகையில் 421—12—11. செந்தமிழ்க்கலாசாலையில் கற்கும் மாணாக்கர்கட்கு உண்டி உடை, முதலியன 2324—4—9. சிப்பந்திச்சம்பளம் 4412—0—0. ஆபீஸுக்கு வேண்டிய ஸ்டேஷனரி 1176—2—1. நாற்காலி, மேஜை முதலியன ரூ 535—3—6. புத்தகவகை ரூ 391—6—0. மராமத்து, வருடோற்சவம், போஸ்டேஜ் முதலியவகையில் 1431—1—2. இவ்விதச்செலவு போக மிச்சம் இருப்பு ரூ 217—14—10, என்று வரவு செலவு விளங்குகின்றன.

இங்ஙனம் வரவு செலவு மிகவும் திருப்தியாகக் காணப்படுகின்றன. கையொப்பஞ்செய்தவர்களால் வசூலாகவேண்டிய பாக்கி 6427—7—0 என்பது வருத்தத்தை விளைக்கின்றது. பாக்கிதார்கள் இனியேனும் தாந்தாம் செலுத்தவேண்டிய தொகையை விரைந்து செலுத்துவார்களாக.

இச்சங்கம் இரண்டு வருஷமாகப் பற்பல நன்மைகளைப்பயந்து வருதலையறிந்தும் தமிழ் நாட்டுள்ள ஜமீந்தார்கள், மடாதிபதிகள், மிராசுதார்கள் முதலிய தக்கவர்கள் இதற்கு பொருளுதவிசெய்ய முன்வராதது மிகவும் வருத்தமளிக்கிறது. வியாச்சியங்களிலும், வீண் செயல்களிலும் பணத்தை வாரி யிறைத்துக் கேடுதேடுமிவர்கள் இனியேனும் தமிழ் வளர்க்கும் இவ்வரிய தொழிற்கு முற்படுவார்களாக.

பு—ர்.

"சர்வம் பிரமமயம்"

சத்திய வாக்கியங்களுக்கெல்லாம் உயர்தரப்பொருளை யுடையதும் துக்க சாகரத்திற் கிடந்துழலும் பகுத்தறிவுடைய ஜீவர்க்கு மோக்ஷமென்னும் கரைசேர உதவுமோர் புணையாயதும் இவ்வாக்கியமே யெனக் கூறலாம். என்னை? உலகவிஷயங்கள் நானாவாயும் எண்ணிறந்தனவாயும் இருக்கின்றன. அவற்றுட் சிலவற்றில் இராகமும் பலவற்றில் துவேஷமும் மாந்தர்க்குண்டாகின்றன. அச்சிலவற்றுள்ளும் பலவற்றுள்ளும் ஒன்றற்கொன்றில் இராகமும் துவேஷமும் ஏற்றத்தாழ்வாகவு முண்டாகின்றன. இங்ஙனம் ஜீவன் யென்னும் பம்பரமானது இராகமோ துவேஷமோ என்னும் கயிற்றால் விஷயத்தோற்றமுடைய ஜாக்கிர சுவப்நாவஸ்தைகளிற் சுழலாநிற்கின்றது. மனத்தின் சலனமாகின்ற இச்சுழற்சியே துக்கத்திற் கேதுவாம். ஆகவே துக்கசாகரத்தைக் கடத்தற்கு இச்சுழற்சி நிற்றல் ஆவசியகமெனட்பெற்றாம். இச்சுழற்சியோ பலவிதத்தால் நாசமுறும். சுழற்சியின் ஆதிக்கத்தால் மனம் க்ஷீணித்து நிற்றல் ஒன்று. இஃது சுஷுப்தி அவஸ்தையிற் காணப்படும் ஔஷதாதிகளால் நிலைபெறுதல் மற்றொன்று. இஃது குளோரோபார்ம் (Chloroform) என்னும் மருந்தைக் கந்தேந்திரியத்தில் மணப்பிக்குங்கால் உண்டாகக்கூடியதாம். இதுபோன்ற பல ஔஷதங்கள் இருக்கலாம். வாயுநிரோதன மென்னும் யோகப்பயிற்சியாலும் மெஸ்மரிஸம் (Mesmerism) என்னும் மனோசக்தியின் பிரயோகத்தாலும் நாசமுறுதல் வேறொன்று. இஃது யோகிகளுக்கும் மனோசக்திப்பிரயோக கர்த்தர் (Mesmerists) களுக்கும் பிரத்தியக்ஷமாவதாம். இவைபோன்ற பல உபாயங்களால் ஜீவனது சுழற்சி நாசமடையுமேனும் அச்சுழற்சிக்கு அத்தியந்த நாசம் வந்ததன்று. அதான்று அவ்வவ்வவஸ்தை நீங்கிய பின்னர் சுழற்சி திரும்பவும் உண்டாமென்பதேயாம். என்னை? காரணநாசத்தானன்றி காரியம் நசித்தலின்றாதலின் சுழற்சிக்குக்காரணமாய இராகத்துவேஷங்கள் எடுபடாமையினென்க. ஆகலின் இராகத்துவேஷ நீக்கத்தானன்றி மற்றெவ்வாற்றானும் மேற்கூறிய சுழற்சி நீக்கமின்றாதலின் இராகத்துவேஷ நீக்கமே துக்க சாகரத்தைக் கடத்தற்கேதுவென்பது பெறப்படுகின்றது. இராகத்துவேஷங்களோ உலகவிஷயங்களின் உண்மைநிலையறியாப் பொய்யறிவினின்றும் எழாநின்றன. இதனை உதாரணமுகத்தால் விளக்கிக்காட்டுவோம்:—நாடகம் பார்த்தறியாத விடனொருவன் ஒரு நாடகத்தில் ஸ்திரீவேஷமிட்டுக் களிக்கும் பாலிய புருஷனைப்பார்த்துப் பெண்ணென நினைக்குமிடத்தும் அதிபாலியத்திலேயே தன்னை விட்டுப் பிரிந்த மகன் தான் போயிருக்கும் அன்னியநாட்டிற் போந்துதான் செய்யும் வியாபாரத்தையே தன்னிலுமதிக மும்மரமாக நடாத்தக்கண்ட தகப்பன் மற்றவனை மகனென உணராவிடத்தும் முறையே இராகமும் துவேஷமும் உண்டாகின்றன. இவ்விருவர் மனமும் சலனத்தை யடைகின்றது.

அதனால் இருவர்க்கும் துக்கப்பிராப்தியேயாம். இத்துக்கத்திற் கேதுவாய் மனோசலனத்தை மேற்கூறிய பலவித உபாயங்களால் நிறுத்தக்கூடும். அங்ஙனம் நிறுத்தப்படினும் அது சாசுவதமாய் நிறுத்தப்பட்டதன்று. பின்னையோ, தற்கால சாந்தியேயாம். அச்சலனம் திரும்பவும் உண்டாமென்பது யாவர் புத்திக்கும் பிரத்தியக்ஷம். ஆனால் அவ்விருவர்க்குமுள்ள இராகமும் துவேஷமும் எடுபட்டுப்போமாயின் அவ்விருவரது மனோசலனமும் நின்றுவிடுமென்பதும் அவ் இராகமும் துவேஷமும் அவற்றிற்கிலக்காய விஷயங்களின் உண்மைநிலை விளங்குமிடத்துத் தாமே நாசமுறுமென்பதும் யாவர் புத்திக்கும் பிரத்தியக்ஷமன்றோ? அதுபோலவே உலகவிஷயங்களின் உண்மைநிலை உள்ளவாறு தோன்றுமிடத்து இராகத்துவேஷங்களுக் கிடமில்லாதேபோகவும் தன்னிமித்தம் மனோசலனமாகிய சுழற்சியும் அதன்காரியமாகிய துக்கமும் நாசமடைகின்றனவென்பது வெளியாகின்றது. அங்ஙனம் உலகவிஷயங்களின் மெய்ந்நிலையை உள்ளவாறு காட்டும் ஆற்றலுடைய பொருளை இவ்வாக்கியமுடைத்தாதலினென்க.

மேற்கூறிய விஷயத்தில் ஓர் சந்தேகமுண்டாகலாம். அதாவது உலகவிஷயங்களின் மெய்ந்நிலையை உணர்ந்தார் மனம் அங்ஙனம் உணர்ந்ததன்பின்னர் சலித்தலின்றோ? உண்டோ? என்பதேயாம். இச்சந்தேகத்தைத் தெளிவிக்கப்புகின் உண்டென்றும் இன்றென்றும் கூறலாம். உண்டாதலும் இன்றாதலும் மெய்ந்நிலையுணர்ந்தார் மனம் உணருமுன்னர் இருந்த சுபாவத்தைச் சார்ந்ததாம். இதிலும் ஓர் கேள்வி புறப்படலாம். அதாவது உணர்ந்ததன் பின்னரும் சலனமுண்டாமெனின் மெய்ந்நிலையுணர்ச்சியால் உண்டாம் பிரயோஜனமும் ஏனைய ஔஷதாதிப் பிரயோக உபாயங்களால் உண்டாம் பிரயோஜனமும் ஒன்றாமே? என்பதேயாம். இதற்கு விடை கூறுவாம்:— ஒன்றுபோற் றோற்றினும் இரண்டேயாம். எங்ஙனமெனின் மனோசலனம் இருவகைப்படும். அவையாவன:— இராகத்துவேஷங்களைப் படியாகவுடையதொன்று. பரோபகாரம் அடியாகவுடையது மற்றொன்று. முன்னையது அநேகமாய் எவர்க்கும் பிரத்தியக்ஷம்; விஷயங்களின் மெய்ந்நிலையுணராத அறியாமையினின்றும் எழுவது; பிரயோஜனம் துக்கமேயாம். பின்னையதோ ஞானிகளிடத்தில் மாத்திரம் காணத்தக்கது; விஷயங்களின் மெய்ந்நிலையுணர்ந்த ஞானத்தினின்றும் எழுவது; இராகத்துவேஷமின்மையால் சுயப்பிரயோஜனாபேக்ஷையும் பிராப்தியும் இன்று. இவ்விருவித சலனத்தின் பேதத்தை நன்குணர விரும்புவார் உலகவிவகாரத்தில் உலகமயலுடையாரது மனோசலனத்தின் தன்மையையும் நாடக விவகாரத்தில் வேஷக்காரரது மனோசலனத்தின் தன்மையையும் ஊகித்தறிந்து அவற்றிற்குள்ள பேதத்தை உய்த்துணர்வாராக. உலகவிஷயங்களின் மெய்ந்நிலையுணர்வதன் முன்னுள்ள சலனநிலைக்கும் உணர்ந்ததன் பின்னுள்ள சலனநிலைக்கு

குள்ள பேதம் இத்துணைத்து. பின்னையதில் துக்கநிவர்த்தியின் பிராப்தியுளது. அஃதே எவர்பிரேமைக்குமிலக்கு. ஆதலின் பிந்திய சலனம் தோஷமுடையதொன்றன்று. விஷயங்களின் மெய்ந்நிலையுணர்வே துக்கத்தை நிவர்த்திப்பது. அவ்வுணர்வை இவ்வாக்கியம் அளிக்கின்றது.

“சர்வம் பிரமமயம்” எனின் எல்லாம் கடவுளேயெனப் பொருள்படும். இஃது ஆஸ்திகர் யாவருக்கும் சம்மதமான ஓர் வாக்கியம் எனினும் அவரிற் பலர் இவ்வாக்கியத்தின் பொருளையுணராதவராகவே இருக்கின்றனர். பலர் வாயினாற்சொல்வதுண்டு. பொருளில் எட்டிப்பார்ப்பதில்லை. இவரே இங்ஙனமிருப்பின் நாஸ்திகரைக்குறைகூற இடமேது? “எல்லாம்” என்பன இந்திரியங்களுக்குப் பிரத்தியக்ஷப்படும் விஷயங்களெனப்பொருள்படும். ஜாக்கிர சுவப்நாவஸ்தைகளிற்றோன்றும் எவ்விஷயமும் “எல்லாம்” என்பதற்குள்ளடங்கியே இருக்கின்றது. தனித்த நிலையாய சுஷுப்தியவஸ்தையில் “எல்லாம்” என்னும் சப்தத்திற்குப் பொருளில்லை. “எல்லாம்” உள்ள இடத்திலேயே துக்கப்பிராப்தியுமுண்டாகின்றது. எல்லாம் கடவுளாயிருக்க அவ்வுண்மையையுணராக்குற்றத்தானன்றோ பலபொருளாகக்கொண்டு இராகத்துவேஷத்திற் கிடங்கொடுத்துத் துக்கத்தைச் சம்பாதிப்பாராயினர்? “எல்லாம் கடவுள்” என்னும் நிச்சயமுடையாரன்றோ மனுஷ்யரிற் றேவரெனப்படுவார். “எல்லாம் கடவுள்” என்னும் உண்மை ஒவ்வொருவர்க்கும் அனுபவவாயிலாக நன்கு புலப்படத்தக்கதொன்று. எவ்வனுபவத்திற்கும் முயற்சி இன்றியமையாதது. எவ்வனுபவத்திற்காகவும் முயற்சிப்பார் இருதிறத்தினராவரெனக் கூறலாம். தாம்செய்யும் முயற்சியால் அனுபவம் சித்திக்கும் என்னும் மூடநம்பிக்கையை ஆதாரமாகவைத்துப் பிரவர்த்திப்பார் ஒருவகுப்பார். அனுபவம் ஒக்குமென்பதும் அதற்குச்செய்யவேண்டுமுயற்சி இன்னதுதான் என்பதும் யுக்திக்கொத்திருக்கிறதாவென ஆராய்ந்து, ஒத்திருப்பின் அதன்பின்னர் பிரவர்த்திப்பார் மற்றொரு வகுப்பார். இவருள் முன்னையவர் அவிவேகிகள்; பின்னையவர் விவேகிகள். மூடநம்பிக்கை எப்போதும் நிலைநிற்பதொன்றன்று. ஆகலின் புத்திக்கொத்துச் செய்யத்துணிதலே உத்தமம்.

இனி “எல்லாம் கடவுள்” என்பது உண்மைதானா என விசாரிப்பாம். சூக்ஷ்மபுத்தியுடையார்க்கு விளக்கக்கூடிய யுக்திகள் பலவுள. ஆயினும் இங்குச் சாதாரணபுத்தியுடையார்க்கும் உபயோகப்படும் சில யுக்திகளால் விளக்கிக்காட்டுவோம்.

நாம் கடவுளைப்பற்றிப் பேசப்புகுந்தோமாதலின் முதலில் “கடவுள்” என்னும் சப்தத்தைக் குறிக்கப்படும்பொருள் யாதென விளக்கிக்கொள்ளல் ஆவசியகம். இருக் வேதத்தின் மஹாவாக்கியம் **பிரக்ஞானம் பிரமம்** என

ப்படும். பிரமம் எனினும் கடவுளெனினும் ஒக்குமாதலின் அறிவே கடவுளென்பது வெளியாகின்றது. இம்மெய்க்கடவுளையுணராது கடவுளைப்பற்றிக் கூறுவாரெல்லோரும் யானைகண்ட குருடரே போல்வார். அறிவு கடவுளாகவே "எல்லாம் கடவுள்" எனின் எல்லாம் அறிவுமயம் எனப்பொருள்படுகின்றது. எல்லாம் அறிவென்பது எங்ஙனம் ஒக்குமெனின் கூறுதும். சற்று கவனியுங்கள். உங்கள் மனதிற்குடிகொண்டிருக்கும் பழைய எண்ணங்களுக்கெல்லாம் விடைகொடுத்துவிட்டு இவ்விஷயத்தில் உங்கள் மனதைச் சற்று ஊன்றிப்பாருங்கள்.

அறிவின் நிலை இருவகைத்தாம். அவையான:—அடங்கிய நிலை ஒன்று. தோற்றநிலை மற்றொன்று. மூர்ச்சையாதிய வஸ்தைகளில் அறிவின் அடங்கிய நிலை பிரத்தியக்ஷம். ஜாக்கிரமாதிய வஸ்தைகளில் தோற்றநிலை பிரத்தியக்ஷம். முன்னைய நிலையைச் சாமான்யமெனவும் பின்னையதை விசேஷமெனவும் கூறலாம். அறிவின் சாமான்யநிலை அகண்டம். விசேஷநிலை கண்டம். விசேஷநிலை நாசமுடையது. சாமான்யநிலை நித்தியம்.

அறிவின் விசேஷநிலையை இப்பிரபஞ்சமெங்கும் விளக்கிக்காட்டுவோமாயின் அதன் சாமான்யநிலை தானே விளங்குமன்றோ?

உயிருள்ள இடமெல்லாம் அறிவுளதென்பதில் யார்க்கும் சந்தேகமின்று. விருக்ஷாதிகள்முதல் மனுஷியன்வரை உயிரெனக்கொளப்படுதலால் அறிவின் வியாபகம் சம்மதிக்கத்தக்கது. ஆகவே அவையொழிந்த பொருள்களில் மாத்திரம் அறிவின் தோற்றநிலையைக் காட்டவேண்டியிருக்கின்றது. உயிரின் இலக்ஷணம் யாது? என முன்னர் விசாரிப்பாம். ஒருபொருளின் அகத்திருந்து உண்டாம் சலனம் அல்லது அசைவே உயிரின் முக்கிய இலக்ஷணமாம். ஒரு பசுவின்கன்று அசையாமற்கிடக்குமாயின் அது இறந்துபோயிற்றோ அல்லது அதனிடத்து உயிருண்டோ எனச்சந்தேகிக்கின்றோம். நாம் அங்ஙனம் சந்தேகித்து அதைப்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அது தன் காதை அசைத்ததாயின் உயிர் இருக்கிறதென்று நிதானிக்கின்றோம். ஒரு மனிதன் கல்லொன்றையெடுத்துப் பூமியில் உருட்டி எறிகிறான். நாம் கல்லெறிந்த மனுஷனைப்பார்க்கவில்லை. ஆனால் கல் ஓடிவருவதைப்பார்க்கின்றோம். ஆயினும் அந்தக்கல்லினிடத்து உயிர் இருப்பதாக ஒப்புவதில்லை. என்னை? கல்லினிடத்துக் காணப்பட்ட அசைவு அல்லது சலனம் அதனகத்திருந்தல்லாது புறத்திருந்து வந்ததையிலென்க. ஆகலின் நாம் மேற்கூறிய உயிரின் இலக்ஷணம் சரியெனக்கண்டாம். இனி இப்பிரபஞ்சம் முழுவதும் உயிர்க்கூட்டமே யெனத்தெரிப்பாம். இப்பிரபஞ்சம் பூதங்களாலாயதெனவும் அவை யாவும் அணுக்கூட்டமென்பதும் வெள்ளிடை மலைபோற் றெள்ளி

திற்றெளிந்த ஓர் விஷயம். இவ்வணுக்கூட்டங்களுள் ஒவ்வொரு அணுவும் மற்றொன்றைச் சமீபிக்குங்கால் ஓடிநெருங்கவும் வேறொன்றைச்சமீபிக்குங்கால் விலகிஓடவுஞ் செய்கின்றது. இங்ஙனம் நெருங்குகிறவும் (altraction) விலகுகிறவு (Ressulsion) மான சக்திகள் ஒவ்வொரு அணுவினிடத்தும் காணப்படுகின்றன. இஃது ஜடதத்துவ சாஸ்திரிகளும்சம்மதிக்கும் விஷயமே. ஆகலின் இவ்வுண்மையில் ஐயமின்று. அங்ஙனமாயின் ஒவ்வொருஅணுவையும் உயிரென ஒப்பற்கு யாதுதடை? அணுக்களின் சலனம் அகத்திருந்தேயாம். உயிரினிலக்ஷணமும் அஃதன்றோ? அணுக்களிடத்துக் காணப்படும் நெருங்குதல் விலகுதல் ஆகிய சக்திகளே மனிதனிடத்து இராகத்துவேஷமாகக் கூறப்படுகின்றன.

அறிவின் தோற்றம் பலவிதம். அணுக்கூட்டங்களையன்றி விஷயங்கள் இல. அறிவின்தோற்றமில்லை அணுக்களின்று. ஆகலின் அறிவின்தோற்றமில்லாத விஷயங்கள் இன்றெனப்பெற்றோம். ஆகவே உலகவிஷயங்கள் யாவற்றினிடத்தும் அறிவின் தோற்றம் காணப்படுகின்றது. அடங்கியநிலை தோற்றுதன்றோ? சாமாந்ய அக்கினியைக் கண்டவருண்டோ? அதுபோற் சாமாந்ய அறிவென்க. ஆதலின் அறிவின்மயமே உலகமென்பது தெளிவாயிற்று. சாமாந்ய அறிவைச் சமுத்திரமாகவும் விஷயங்களை அலைமொக்குள்களாகவுங்கூறலாம். சமுத்திரமுங் காற்றுங்கூடி எங்ஙனம் அலைமொக்குளாதிகளாகத் தோற்றுகின்றனவோ அங்ஙனமே அறிவும் அதன்சக்தியும்கூடி அணுக்களாகவும் அண்டங்களாகவும் தோற்றுகின்றன. சக்தி சக்தனுக்கன்னியமன்றாதலின் அறிவின்மயமே உலகம் அதான்று சர்வம்பிரமமயம் எனக்கூறினர் ஆனறோர்.

ஒவ்வொருவரும் அறிவாகாயமாக இருந்துபார்க்கின் அனுபவத்தில் பிரத்தியக்ஷப்படும் ஓர் உண்மையே இஃது. இவ்வனுபவம் வருமேல் இராகத்துவேஷாதிகள் நீக்கத்திற்கும் அதன்வாயிலாக துக்கநிவர்த்திக்கும் ஏதுவாகும். ஆகலின் இவ்வனுபவத்திற்கு நடாத்தும்மார்க்கத்திற்சென்று மெய்நிலையடைந்து உய்வான்யாவரும் முயற்சிப்பாராக.

வள்ளிநாயகம்.

பகவத்கீதைக்கும்மி.

[209 ம் பக்கத் தொடர்ச்சி.]

40 குலநாசத் தாலே அநாதிதொட் டுள்ள
குலதரு மம்போம் குலதருமம்
இலதா கிடவே அஞ்சார மேகுல
மெல்லாம் வியாபித் திடுங்கண்டாய்

41 குலத்தில் அனாசார மேவிட வேகுலக்
கோதையர் கற்புக் குலைந்திடுவார்
குலப்பெண்கள் கற்புக் குலைந்திடச் சாதிக்
குழப்பம் உண்டாகிடும் கோவிந்தனே.

42 குலநாசஞ் செய்தோர் தமைக்குலத் தோடக்
குழப்பம் நரகக் குழிவிழுத்தும்
குலநாசர் தங்கள் பிதிர்கள்பிண் டோதகம்
கொள்ளா தளற்றிற் குடிபுகுவார்.

43 சாதிக் கலப்புறு மாறிக் குலாந்தகர்
தாம்செய்பா வத்தினால் சாசுவத
சாதித் தருமங் குலதரு மங்கள்
தமொழி என்றும் குடிபோமே.

44 தருமம் இழந்த வமிசத்து மாந்தர்
சதாகால மும்தாம் தவிராமல்
எரிவாய் நரகிற் குடியா யிருப்பார்க
ளென்றுநாம் கேட் டிருக்கின்றோமே.

(இ—ள்.) குலம் நாசமானால் வெகுகாலமாயுள்ள அக்குலவாசாரங்கள் நசிக்கும். ஆசாரங்கள் நசித்தால் குலமுழுதும் அனாசாரம் வியாபிக்கும். அனாசாரம் ஆக்கிரமித்தால் குலஸ்திரிகள் கற்புக்கெடுவார்கள். குலஸ்திரிகள் கற்புக்கெட்டால் ஒரு ஜாதியோடு மற்றொரு ஜாதி கலக்கும். சாதிக்கலப்பானது குலநாசஞ்செய்தோர்க்கும் அவர் குலத்துக்கும் நரகவாதுவாகும். குலநாசம் செய்தவர்களின் பிதிர்கள் பிண்டோதகக் கிரியைகளைப் பெறாமல் நரகத்தில் வீழ்வார்கள். வருணசங்கரம் உண்டாகும்படி குலத்தைக் கெடுத்தவர்கள் செய்த பாவத்தினால், வெகுகாலமாக நிலைத்திருந்த சாதியாசாரங்களும் குலாசாரங்களும் அழிந்துபோம். ஆசாரம்இழந்த குலத்தோர் எக்காலமும் நரகவாசிகளாவாரென்று கேட்டிருக்கின்றோம்.

குறிப்பு:—இலதாகிடவே—இல்லாததாகவே-இல்லாமற்போகவே; கோதையர்—மாதர்—ஸ்திரிகள்; அக்குழப்பம்— அந்தச்சாதிக்குழப்பும் — அவ்வருணசங்கரம்—அந்தச்சாதிக் கலப்பு; விழுத்தும்—விழும்படிசெய்யும்; குலநாசர்—குலாந்தகர்—குலத்தைக்கெடுத்தவர்கள்; தவிராமல்—நீங்காமல்; எரிவாய்—நெருப்பு அமைந்த;

45. ஐயோ! இராச்சிய போகத்தின் ஆசையால்
அன்புக் குரியநம் பந்துக்களை
மெய்யே கொன்று விடத்துணிந் தேயாம்
மிகும்பாவம் செய்யப் புகுந்தோமே.

(இ-ள்) ஆ! என்ன காரியஞ் செய்யவிருந்தோம்! இராச்சியபோக இச்சையினால் நமது அன்புக்குப் பாத்திரராகிய பந்துக்களையும் கொல்லத் துணிந்து என்ன பெரும்பாவஞ் செய்யத் தொடங்கினோம்!

குறிப்பு:—மெய்யே—மெய்யாகவே—உண்மையாகவே.

46. ஆயுத தாரிய ராம்துரி யோதன
னாதியோர் ஆயுத மின்றியெதிர்
போயெதி ராதுசும் மாவிருக் கும்மெனைப்
பொன்றுவித் திட்டாலும் நன்றெனக்கே.

(இ-ள்) ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கிற துரியோதனன் முதலானோர், நிராயுதனாகவும் எதிர்க்காமலுமிருக்கின்ற என்னைக்கொல்வார்களாயின் அது எனக்கு நல்லதே.

குறிப்பு:—பொன்றுவித்தல்—சாகச் செய்தல்— கொல்லல்; நன்று—நல்லது.

வியாக்கியானம்:—நான் துரியோதனாதியரைக் கொல்லாதிருத்தல் நன்று, எவ்வாறெனில், அதனால் கொலைப் பாவத்தினின்றும் தப்பிக்கொள்கின்றேன்; நான் அவர்களைக்கொல்ல முயலாதிருக்குங்கால் அவர்கள் என்னைக் கொல்லார், கொன்றாலும் அதுவும் எனக்கு நல்லதே, எப்படியோவெனில், இந்த யுத்தத்தில் பந்துமித்திராதியர் இறப்பர், அதனால் எனக்குத் துக்கமுண்டாம். நான் கொல்லப்பட்டு விட்டாலோ, அத்துக்கம் உண்டாக இட

மிராது என்று அருச்சுனன் கூறினான் என்று "பொன்றுவிக்கிட்டாலும் நன்றேனக்கே" என்பதில் உள்ள உம்மைக்கும் நன்று க்கும் பொருள் விரித்துக்கூறுக.

சஞ்சயன் சொன்னது.

47. என்றிந்த வாறு புகன்று விசயன்
எடுத்தவில் அம்பொ டெறிந்துவிட்டே
கன்றும்துக் கத்தால்நெஞ் சம்துடிக் கப்போர்க்
களத்திலே தேரிலுட் கார்ந்தனனே.

(இ-ள்) அருச்சுனன் இவ்வாறு சொல்லி, கையிலெடுத்திருந்த வில்லையும் அம்பையும் எறிந்து துக்கத்தினால் துடிக்கும் நெஞ்சினனாய் யுத்தகளத்திலே தேரிலே உட்கார்ந்தான்.

குறிப்பு:—புகன்று—சொல்லி; விசயன்—அருச்சுனன்;

வியாக்கியானம்:—20-ம் கவியிற் கூறியவாறு, அருச்சுனன் பகைவரைப்பார்த்து அவரோடு யுத்தஞ்செய்ய உத்தேசித்து எடுத்தவில், அவ்வுத்தேசம் முற்றும் கைவிடப்பட்டவுடனே எறிந்து விடப்பட்டது. வீரருள் வீரனான அருச்சுனன் போர்க்களத்து மத்தியிலே எதிரிகளெதிரிலே யுத்த ஆரம்பத்திலே கையில் எடுத்திருந்த வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு, போர்க்கோலம்பூண்டு போர்புரிதற் கேறிய தேரிலேயே சும்மா இருந்த தோற்றம் அதிசயத்துள் அதிசயமானது.

மிக்க உபநிடதம் மேலாம் பிரமவித்தை
தக்க உயிர்யோக சாத்திரம்வீ—டுய்க்குத்
தருகிட்டி ணார்ச்சுன சம்வாத ரூபம்
பகவத்கீ தைநூலாம் பார்.

என்று கூறப்பெற்ற பெருமையுள்ள பகவத்கீதையில் க-வது அருச்சுனன் சோக அத்தியாயம் முற்றியது.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

சைவசித்தாந்தம்.

[தொடர்ச்சி]

இதனால் முடிந்த பொருள் யாதெனின் ஆன்மாவிற்குப் பெத்தத்திற் பதிபாரதந்திரியம். முத்தியில் அப்பாரதந்திரியத்தைய பேக்ஷித்துச் சுவாதந்திரிய மெனப்படுஞ் சிவபாரதந்திரியமென்றறிக, பாரதந்திரியம், தன்வசப்படாது பிறர்வசப்பட்டிருத்தல். இக்கருத்து நோக்கியே

ஆட்டுத்தேவர்தம் விதியொழித்தன்பா
லையனேயென்றுன்னருள் வழியிருப்பேன்
நாட்டுத்தேவருநாடரும் பொருளே
நாதனேயுனைப்பிரிவுறா வருளைக்
காட்டித்தேவநின் கழலிணைகாட்டிக்
காயமாயத்தைக்கழித்தருள் செய்யாய்
சேட்டைத்தேவர்தந் தேவர்பிரானே
திருப்பெருந்துறைமேவிய சிவனே. எனவும்

ஆட்டுத்தேவர்—பஞ்சகிருத்தியஞ் செய்கின்ற பஞ்சகருத்தாக்கள்.

நாட்டுத்தேவர்—புவனபதிகள்.

சேட்டைத்தேவர்—நாதம் விந்து சத்தி சிவம். சேட்டை—பிரேரித்தல்.

பதிபாரதந்திரியத்தினியல்புகூறுவார், ஆட்டுத்தேவர்தம்விதியென்றும், அதன்வசப்பட்டிருத்தல்கூடாதென்பார், ஒழித்தென்றும், சிவபாரதந்திரியத்தினியல்புகூறுவார், ஐயனேஉன் அருள் வழியிருப்பேனென்றுங்கூறியருளினார்.

அதனிலீறிலாவொன்றுபலவாறேதொழும்பாகுமங்கு எனவும்

அவையுடைமையாளாநாமங்கு. எனவும்

எவ்விடத்துமிறையடியை யின்றியமைந்தொன்றையறிந்தியற்றிடாவுயிர்களீசன்றானும், செவ்விதினினுளம்புகுந்துசெய்திடுமெயலாமுணர்ந்துசேட்டிப்பித்தெங்குமாய்ச்செறிந்துநிற்ப, னிவ்வுயிர்கடோற்றும்போதவனையின்றித் தோற்றாவிவற்றினுக் கம்முதலெழுத்துக்கெல்லாமாய்நிற்கு, மவ்வுயிர்போனிலைறிடுவனாதலானுமரனடியையகன்றுநிற்பதெங்கேயாமே. எனவும்

அதனின் ஈறு அலா ஒன்று—அப்பரம் பொருள்போல் அழிவின்றி நித்தமாய உயிர்கள். அங்கு—வீடுபோற்றிலை கண்ணும். பலவாறேதொழும்பாகும்—பலவாற்றானும் பரம்பொருளுக்கு அடிமையாம்—எவ்விடத்தும் என்றது பெத்தமுத்தியிரண்டினும் என்க.

செம்பிரதகுளிகையினாற்களிம்பற்றுப்பொன்னாய்ச் செம்பொனுடன்சேருமலஞ்சிதைந்தாற்சீவ, னம்பனுடன்கூடுமெனிற்பொன்போலல்லனற்குளிகைபோலவரனனுகுமலம்போக்கி, யம்பொனடிக்கீழ்வைப்ப னருங்களங் கமறுக்குமக்குளிகைதானும்பொன்னாகாதாகு, மும்பர்பிரானுற்பத்தியாதிகளுக்குரியனுயிர்தானுஞ் சிவானுபவமொன்றினுக்குரித்தே.

சிவஞ்சீவனென்றிரண்டுஞ்சித்தொன்றுமென்னிற் சிவனருட்சித்தினருளைச் சேருஞ்சித்தவன்றான், பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித்திவற்றிற்படியுஞ்சித்தறிவிக்கப்படுஞ் சித்துமிவன்று, னவன்றனையறியுஞ்சித்தாதலினாலிரண்டுமெனைத்தானுமொன்றாகாதந்நியமாயிருக்கு, மிவன்றானும்புத்தியுஞ்சித்திவனாமோ புத்தியிதுவசித்தென்றிடிலவனுக்கிவனுமசித்தாமே எனவும் சுருதிகள்கூறிய தூஉமென்க.

முத்தியில் உயிர்கள் பலவாற்றானும் அடிமையாதல் யாங்ஙனமெனின் கூறுதும். இருணீங்கிய வழியுங் கண்ணுக்குக்காட்சி ஞாயிற்றை யின்றியமையாதவாறுபோல, மலநீங்கிய முத்திநிலையினும் ஆன்மாவுக்கு அறிவுவிளக்குங் கருவியாய் உடனின்றறிவிக்குமுதல்வனை யின்றியமையாதவாறும், கண் படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன் வண்ணமாயன்றி முதல்வன் போலத் தனித்து நிற்குமியல்பில்லாதவாறும் முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலா முரிமையின்றிச் சிவானுபவ மொன்றி

னுக்கே யுரித்தாயவாறும் சமவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலால் விளக்கொளியுட் கண்ணொளிபோல் முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறு முதலாயினவாம். அற்றேல் முத்திநிலையில் ஆன்மாச் சிவமாமென்னுஞ் சுருதிக்குப்பொருளென்னை யெனின் வியாபகமாகிய வுயிர் அவ்வியல்பிழந்து ஏகதேசப்பட்டுக் கீழேசென்று துன்பத்தை நுகர்தற்குக் காரணமாகிய பாவமும் மேலே சென்று இன்பத்தை நுகர்தற்குக் காரணமாகிய புண்ணியமும் தளையேயாகலின் அவ்வினைத்தளையிரண்டையும் சிவபிரானை அருச்சித்தலென்னும ஞானநூல் ஓதல் ஓதுவித்தல் அந்நூற்பொருளைத்தமது மதிநுட்பத்தால் உணர்ந்து பிறர்க்கு உரைத்தல் ஆசிரியனை வழிபட்டு அந்நூற்பொருளைத்தாஞ் செவ்விதாகக் கேட்டல் சிந்தித்தலென்னும் ஞானபூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதல் உணர்வெனப்படும் அரத்தால் அறுத்துக்காரணமின்மையின் காரியமாகிய பூமி நரக சொர்க்கங்களிற் செல்லுதலாகிய ஏகதேசச்செலவும் இன்றாய் அஃதொழியவே அவர் கரணங்களின் வயத்தராதலின்றி இறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு சீவன்முத்தராய் மாசினீங்கியவழி ஆடையினது வெண்மை ஆடைமுழுவதும் விளங்கினாற்போல தமது வியாபகமெங்கணும் அறிவு விளங்கப்பெற்று முற்றுணர்தன் முதலிய வெண்குணங்களுமுடையனாயங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருஷ்டிப்படுந்தன்மை முதலியன வின்றிசிவனைப்போல பஞ்சகிருத்தியஞ் செய்தலுமின்றி சிவானுபவமொன்றனைமாத்திர மனுபவித்து ஆன்மபோதமுங் கண்ணொளியும்போலத்தம்முளத்துவிதமாய் நிற்றலாமென்க.

இவ்வுண்மைகளைச் சிறிது மறியாது முத்திநிலையில் ஆன்மா, சிவபிரானைப்போல சுதந்திர முடையனாய் பஞ்ச கிருத்தியஞ் செய்வனென்னுஞ் சிவ சமவாதிகள் சிறிதும் பொருந்தாதென்பதை நன்றாய் ஊகித்துக்கொள்க.

(இன்னும் வரும்.)

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள்மடம்.

இங்ஙனம்
சுப்பிரமணியபிள்ளை.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆளுமாறு.

[217-ம் பக்கத்தொடர்ச்சி.]

---o---

இனி இக்காலத்தினுங்கூட அது இந்தியா முழுமையும் உள்ளிட்டதெனல் ஓராற்றானும் அமையாது. அங்ஙனம் நினைத்தல் இந்தியாவை இந்துஸ்தானமென மயங்கலாகும். 1595-ம் வருடத்தில் ஆக்பர் துரைத்தனம் நர்மதை நதி வரையில் நின்றது. இன்னும் அவன் தெக்கணத்தில் கால்வைத்தபாடில்லை. அவன் இந்துஸ்தானாதிபதியே யன்றி இந்தியாதிபதியெனல் ஓராற்றானும் ஒவ்வாது. அவன் தன் கடை நாளில் தெக்கணத்தின் மேற் படை யெடுத்தான். இக்காலந் தொடங்கி மொகலாய ஆளுகையானது தெக்கணத்தை உள்ளிட்டதாகவும், அது பற்றி இந்தியா முழுவதையும் ஒரு குடை நிழற் கீழ் ஏற்படுத்தியதாகவும் ஒருவாறு கொள்ளலாம். ஆனால் அதற்குள்ளாகவே மஹாராட்டியர் கை உயரத்தலைப்பட்டபடியால் தெக்கணத்தை மொகலாயர் அடிப்படுத்தியது சொன்மாத்திரையேதான். எனவே அவ்வரசாட்சியின் காலம் ஒரு கணப்பொழுதெனக்குறுகா நின்றது. மொகலாய மன்னர்கள் தங்கள் பூமியை விஸ்தாரப்படுத்தியது தங்கள் அரசுக்கே கேடாய் முடிந்தது.

இருபத்து நான்கு வருடத்துக்குள் அவ்வரசாட்சி வீழ் நிலையடையத் தலைப்பட்டது. பேராசை மிகுதியாற் படையெடுத்ததுதான் அதற்குக் காரணமென்பது எனது துணிபு. அவ்வரசாட்சிக்கு எப்பொழுதும் போதுமான மூல ஆஸ்பதம் தேவை. அதனை மதிகேடாய் விசாலப்படுத்த முயன்றமையால் அதன் சக்திகள் முழுமையும் விரயமாயின.

மொத்தத்தில் உள்ளபடியே ஆங்கிலேயர் காலம் ஒழிய வேறெக்காலத்திலும் இந்தியா ஒரு குடைக்கீழாம்படி ஒன்று சேர்க்கப்படவில்லை. அவர்களுக்கும் முப்பது வருடத்துக்குமுன் லார்டு டாலவுசி பிரபு காலத்தில் இங்கிலீஷ் ராஜ்யத்தோடு பஞ்சாப், அயோத்தியா, நாக்பூர் இவைகளைச்சேர்க்கும் வரையில் அக்கருமம் முடிவுபெற்றதாகச் சொல்லொணாது.

ஒப்புரவின் மற்றொரு முக்கியாம்சம் **மதவேற்றுமை** இத்தத்துவம் இந்தியாவில் முற்றிலும் இல்லையென்று சொல்லொணாது. பிராம்மணமதம் இந்தியாமுழுவதிலும் பரவினதாயில்லை. இந்தியாவுக்கெல்லாம் அது ஒரு மதந்தானா? அதில் 5 கோடிக்குக்குறையாத முசல்மான்கள் உளர். அதாவது துருக்கிராச்சியத்திலுள்ளதிலும் பன்மடங்கதிகம். மகம்மதியமதமும் பிராம்மணமதமும் ஒரு வகையாய்ப்புணர்ந்து பிறந்த ஓர் மதத்தை அநுட்டித்துவரும் சிக்கு (Sikhs) ஜாதியாரும் சிலருளர். கொஞ்சம் கிறிஸ்துவர்களும் இலங்கையிலும் நேப்பாளத்திலும் பௌத்தர்களும் உண்டு. ஆனால் பிராம்மணமதம் பெரும்பாலாருடைய சமயமாயிருந்துவருகிறது. அதில் நிரம்ப சத்துண்மையால் பன்முறையும் புறச்சமயங்கள் புரிந்த போர்க்குத் தலைதாழாது நிற்கின்றது. புறச்சமயிகளைத் தன்மதப்படுத்தும் மதங்கள் பலவற்றுள்ளும் மிகவன்மையுள்ள **புத்தமதம்** பிறந்தது இந்தியாவிலேயே. அதுவளர்ந்து நாற்றிசையும் பரவிற்று. கிறிஸ்துவுக்கு இருநூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் அது செழித்தோங்கியதற்கும் கிறிஸ்துவுக்குப் பின் ஏழாவது நூற்றாண்டிலும் அது விளக்கமுற்றிருந்ததற்கும் நமக்குச்சான்று உளது. எனினும் அது, பிராம்மணமதத்திற்கு முன் ஆற்றாது தோற்றுப்போய் இப்பொழுதுதான் பிறந்தநாடொழிய ஆசியாவின் ஏனைய பாகங்களில் விளங்காநின்றது. இந்த வெற்றிக்குப்பின் இன்னொரு அதிபலமுள்ள துஷ்ட மதத்தோடு பிராம்மணமதம் எதிர்க்கவேண்டியிருந்தது. அதாவது மகம்மதிய மதம். அம்மதத்தின்முன் ஜொராஸ்டிரிய மதம் முன்னமேயே தலைகுனிந்தது. கிறிஸ்தவமதமும் கீழ்நாட்டில் அதன் முன் நிற்கலாற்றாது பின் வாங்கலாயிற்று. ஆனால் பிராம்மணமதமோ இன்னும் தளராது விளங்காநின்றது என்றும் விளங்கும். முசல்மான் அரசாட்சி இந்தியாவெங்கும் பரவினபோதிலும் ஜனங்களை மகம்மதிய மதத்திற்படுத்த முடியாதாயிற்று.

இனி ஒப்புரவுக்கு இன்றியமையாத அம்சங்கள் யாவற்றினும் தலையாயதூஉம் பேராற்றலுடையதூஉம் **மதம்** என்று புலப்படும். இந்த தத்வம் இந்தியாவில் உளது. இந்தியாவைப்பிராஞ்சு, இங்கிலாந்துக்கு ஒப்பிடுவதினும் ஐரோப்பாவுக்கு ஒப்பிடுதலே சாலுமென்று சொல்லுங்கால், மத்தியகாலங்களில் ஐரோப்பாவானது ஜாதி மதங்களில் அந்நியமான பகைவரால் பலமுறையும் பயமுறுத்தப்பட்டதுபோல, இன்னும் பயமுறுத்தப்படுமேல் கிறிஸ்தவகண்டமெனக் கணிக்கற்பாலதாகிய ஐரோப்பாவில் அந்த நாளிற்போல இந்த நாளிலும் உள்ள ஒற்றுமையானது உடனே புலப்படுமென்பது ஞாபகத்தில் வைக்கற்பாற்று. இந்திய ஜாதியார் எனும் தத்துவம் ஒருங்கால் பிறக்கத்தக்க கருப்பொருள் பிராம்மணமதத்தில் உண்டெனலாம். அது அப்படித்தான் போலும். அங்ஙனமாயின் ஒப்புரவு நெடுநாளைக்கு முன்னரே பிறந்து வளர்ந்து முதிர்ச்சியடைந்திருந்தல் வேண்டுமே. ஏனென்றால் பல்லாண்டுகளாக ஒன்றன் பின்னொன்றாய் வந்த முசல்மான் படையெடுப்பினால் இந்த வித்து முளைந்தோங்கி வளர்தற்குச் சாதகமாயுள்ள உரம் அமைந்திருந்தது. ஏன் பிராம்மணமதம், இஸ்லாம் மதத்தை மட்டும் மேலெழவொட்டாமல் அடக்குவதில் திருப்தியடைந்திருந்தது? ஏன் இந்தியா முழுவதையும் ஒருங்குசேர்த்து எழுப்பி பகைவரோடு போர் செய்யலாகாது? அது அப்படி

ஒருகாலும் செய்திலதே. பிராம்மணர் கையும் இந்தியாவில் எழும்பலாயிற்று. 17-ம் நூற்றாண்டின் மத்தியில் சிவாஜி என்னும் ஓர் தலைவன் தோன்றிப் பம்பாய்க்குப் பின்னாலுள்ள மேட்டுப்புறங்களில் இரண்டொரு மலைக் கோட்டைகளைக் கைவசப்படுத்திக்கொண்டு மஹாராட்டிர அதிகாரத்தை ஸ்தாபித்தான். இது சுயம்பான இந்து சமஸ்தானமே. இதன் பலம் அதிகரிக்க அதிகரிக்க பிராம்மணருடைய செல்வாக்கும் அதிகரித்தது. மொகலாய அரசாட்சியின் தாழ்வு இதன்வாழ்வுக்குச் சாதகமாயிருந்தது. ஆகவே, 18-ம் நூற்றாண்டின் மத்தியில் மஹாராட்டிர சமஸ்தானத்தின் கிளைகள் சற்றேறக்குறைய இந்தியா முழுவதிலும் பரவின. இந்த சமஸ்தான ஒப்புரவின்றான் இந்தியா ஒப்புரவுக்கு வேண்டும் மூல ஆஸ்பதம் இருந்ததென்றும் ஏனைய மதஸ்தர்கள் தங்கள் மதங்களாற் பெற்ற பேற்றை இந்துக்கள் பிராம்மண மார்க்கத்தாற் பெற விருந்தனரென்றும் தோன்றலாம். ஆனால் அத்தன்மையதொன்றும் நிகழ்ந்திலது. பிராம்மண மதம், சுதேசாபிமான மாகவில்லை. அதன் இலகு சமுதாய பாவமானது உள்ளவாறே அதனை ஓர் தனிமதமாகச் செய்யாது, பலமதங்களையும் கேவலம் அபேத பாவனைக்குட்படுத்தி, அவற்றின் ஐக்கிய சாதனமாக நின்று அஃதோர் தனிமதமென்னுங் கொள்கையைப் பலஹீனப் படுத்துகின்றது. எப்படியும் மஹாராட்டிர தர்பாரில், உத்தம நடை, தேசாபிமானம் முதலிய அம்சங்கள் ஒன்றும் காணப்படவில்லை.

அடி முதல் முடி வரை அஃதோர் ஆறலைக்கள்வர் நிலையக் குழாம் போன்றிருந்தது.

இதனால் இந்தியர்பால் ஒரு காலத்தில் சுஜனாபிமானத்துவம் உண்டாகலாமென்று கருதற்பாலதாகிய கருப்பொருள் உளதேனும், ஒப்புரவு இன்னும் இருந்தபாடில்லை. இந்த உண்மைதான் இந்தியாவில் நமது அரசாட்சிக்குச் சாதகமாயிருக்கிறதேயன்றி ஆங்கிலேயர் பக்கமுள்ள உயர்வேனும் பலமேனுமல்ல. இத்தலிக்கொப்பந்தமாய் இந்தியாவில் ஓர் ஒப்புரவு நடபடிக்கை புறப்பட்டால், இத்தலியில் ஆஸ்திரியா அவ்வளவுகூட சமர்புரிய சக்தியில்லாது, இங்கிலாந்தும் உடனே கீழ்ப்படிய வேண்டுவதுதான். ஏனென்றால் யுத்தசமஸ்தானமல்லாத இங்கிலாந்து 25 கோடி ஜனங்களுடைய கலகத்தை எவ்வாறு எதிர்க்கவற்று? முன்னம் ஜெயித்ததுபோல் இன்னும் ஜெயிப்போம் என்பிரேல், முன்னம் ஜெயிக்கவில்லை என்பதை யான் விளக்கியுள்ளேன். நமக்கு வெற்றி அளித்த சேனையில் முக்காலே அரைக்கால்வாசி சுதேசபடை. நாம் இந்தியாவில் சுதேச போர்வீரர்களை நமது போருக்கு ஆட்படுத்தியதற்குக் காரணம் அங்கே சுதேச ஜாதிமதக்கட்டுப் பாடின்மையே. இப்பொழுது கொஞ்சமேனும் சுதர்மாபிமானப்பற்று இருந்திருக்குமேல், அயல்தேயத்தவரைத் துரத்த வேண்டுமென்னும் ஆத்திரம் உண்டாகாவிடினும், அவர் அரசு

புரியநாம் உதவிபுரிதல் தகுதியன்றென்றும் உணர்வு மட்டும் உண்டானாலும் அன்று தொட்டு நமது ஆளுகை இல்லாதொழியும். எப்படியென்றால் கோட்டையில் அரண்செய்துள்ள சேனையில் மூன்றிலிருபங்கு சுதேசிகளே. இத்தலி தேசாபிமானிகள் தாங்கள் துரத்திவிட விரும்பிய ஆஸ்திரிய துரைத்தனத்தார் தங்கள் சொந்தப்படைகள் மேற்சாராது இத்தலிபடைகளை நம்பியிருந்தால் முன்னையோர்க்கு எவ்வளவு சுலபமாயிருக்கும். சுதேச சேனை கலகஞ் செய்தல் கூடவேண்டாம். சுதேசசேனைகளைப் போர்க்கு நமது பக்கல் சேர்க்க முடியாதென்று வைத்துக்கொள்வோம். ஒருநொடிப்பொழுது இந்தியாவை ஆளமுடியாமை நமக்குப்புலப்படும். ஏனென்றால் இந்தியா அதிகிரமமின்றி ஆளப்படல் வேண்டுவது ஓர் நிபந்தனை. அதிகிரமமின்றி இங்கிலிஷ்காரருக்குக்கிடைத்ததுபோலவே வைத்தாளப்படல் வேண்டும். நாம் தேடியதைக்காப்பாற்றுவதில் இலக்ஷம் இலக்ஷமாய் நமது சேனைகளை யிழக்கிலேம். நாம் என்னவோ இந்தியாவைப்பற்றி நினைக்கிறபடி அடிப்படுத்தப்பட்ட சாதியார் என்பதை எந்தநிமிஷத்தில் அது காட்ட ஆரம்பித்ததோ, அந்தநிமிஷமே அதனை நாம் வைத்து நிர்வஹித்தல் அசாத்தியம் என்று தெரியவரும்.

இவ்வாறு இந்த அரசாட்சியைப்பற்றிய அதிசயாற்புத இரகசிய பிரபாவ தேஜசானது அழுந்திய ஆராய்ச்சியின் முன்னர்த் தோன்றாதொழிகின்றது. நாம் அயல்தேயத்தராயிருந்து இந்தியாவை ஆண்டுவருகிறோமாயினும், நாமே தக்க சேனைவலி படைத்துள்ள வெற்றியாளரல்லரென்றும் இந்தியர்களுடைய சம்மதம்பெற்று ஆளாமையால் அவர்கள் மனத்துக்கு விரோதமாய் ஆளல்வேண்டுமென்றும் முற்கோடல், கேவலம் ஐரோப்பியருக்குள்ள தப்பெண்ணமென்று நாம் உணருங்கால், அக்கொள்கை நில்லாது போய்விடும். மக்கள்பாற் சுவாதீன விருப்பம் உண்டாகவேண்டுமானால், அரசியலுணர்ச்சி முன்னரே யிருத்தல்வேண்டும். இஃதில்லாதவழி, அன்னியர் அரசாட்சி செயலொன்றின்றி வாளா ஆலசியம் செய்யப்படும். அத்தகைய துரைத்தனம் அதிகமான ராஜ்யதந்திர சக்தியில்லாமல் நீடூழி வாழலாம். யார் அரசாண்டாலென்னவென்னும் ஆலசிய சுபாவம், அடிக்கடி படையெடுப்பில் அலைப்புண்டு தோல்வியடைந்த தேசத்தார் மனத்தில் வேர்வீழ்ந்திருக்கும். மகா கொடுங்கோலரசுகள் கூடப் பல்லாண்டுகள் நிலைத்திருந்து வந்தன. அவையும் குழப்பங்கள் உண்டானால் அடக்க நிர்வாகமற்றிருந்தபொழுதே. ஏனென்றால் கீழ்ப்படிந்து படிந்து வழக்கமாய்விட்டபடியால் கலகஞ்செய்வது அவர்கள் வழக்கமன்று. 16-ம் நூற்றாண்டின் ருஷியா சக்கரவர்த்திகளது சரித்திரத்தைப் படித்துப்பார்மின்! கொடுங்கோல் ஐவான் (Ivan the terrible) காற் கீழடங்கி அவன் ஆட்டி வைத்தபடியெல்லாம் எண்ணிறந்தோர் ஆடி வந்தனரேன்? விடை வெளிப்படையே. அவர்கள் இருநூற்

ருண்டுகளாக தாழ்ந்தார்கள் காற்கீழ் மிதியுண்டு கிடந்தார்களாகையால் அக்காலத்தில் எது வரினும் பொறுமையாய் அடங்கியிருக்கும் சுபாவம் அவர்களுக்கு உண்டாய்விட்டது.

இனி இந்தியாவிலுள்ள ஜனங்களையும் அதே மனோநிலையில் தானிருக்கிறார்களென்று நாம் எதிர்பார்க்க வேண்டாவோ? சுவாதீனம், பொதுநலச்சாலைகள் இவைகள் உண்டென்று சொல்ல இந்த சரித்திரம் அல்லது கதையின் முழுப்பரப்பிலும் யாதொரு அறிகுறியுங் காண்கிலேம். இத்தாலியர் தங்களுக்கு ஆதரவாக ரோமான் பிரஜாதிபத்தியத்தை உடையராயிருந்தனர். ரீயன்ஜி (Riengi) ஜனங்களைக் கலகத்துக்கு எழுப்பியது அவர்கள் முன் 'லைவி' (Livi) என்னும் நூலைப்படித்ததன்றோ? அது போல இந்து நாவலனொருவன் படிக்க அத்தகைய நூல், யாண்டையாதுளது? இங்கிலிஷ்காரர் வருமுன் எழுநூறுவருடங்களாக இந்திய ஜனங்கள் கொடுங்கோன் மன்னரால், அதிலும் அந்நியதேசத்துக் கொடுங்கோன் மன்னரால் ஆளப்பட்டுவந்தனர். இப்பேர்ப்பட்ட தேசத்தில் அரசு குடிகளுக்காகத்தானிருக்கிறதென்னும் எண்ணமுண்டாகி, அரசு நெறிமுறையில் குணங்குற்றம் நாடவும், அதன் கேடு சூழவும், அல்லது எதிர்க்கட்சி யேற்படுத்தவும் குடிகள் தலைப்படுவரேல் அந்த அரசாட்சி உள்ளபடியே அதிசயந்தான். எச்சாதியாருள்ளும் வழக்கமே பிரதானம். நூதனமாயுள்ள நடபடிக்கைகள் அவர்கட்குச் சுலபத்தில் வாராது. தாங்கள் நிரம்ப சுயபுத்திசாலிகள் என்றெண்ணியக்காலும் தங்கள் முன்னோர் செய்தபடியே செய்துவருகிறார்கள். பிரெஞ்சுதேச கலகங்கூட பிரெஞ்சுதேசசரித்திரத்தின் சில முந்திய அத்தியாயக் காதைகளோடு ஒருவாறு ஒப்புடைத்து என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இத்தலிய சுஜாதி அபிமானத்துவ நடபடிக்கையானது டாண்டி (Dante) காலத்துக்கு முற்பட்டபழமையான இத்தலிய நடபடிக்கைகளை ஒத்துள்ளது. இந்த விதியின்படி, இந்திய ஜனங்கள் நமது துரைத்தனமே போல, கைமேற்போன எந்த அந்நியதுரைத்தனமாயினும், நமது துரைத்தனம்போலாது எவ்வளவு கொடுங்கோன்மையதேயாயினும் மோனமாய்க் கீழ்ப்படிதல் எதிர்பார்க்கத் தக்கதேயாம்.

(இன்னும் வரும்.)

திருநெல்வேலி }
தச்சநெல்லூர். }

மகாலிங்கம்பிள்ளை.

ஜகத்ஜோதி.

(190-ம் பக்கத்தொடர்ச்சி)

அய்யாஸ் பேரீச்சம்பழம் விற்று நல்ல இலாபம் அடைந்து அன்றிரவைச் சுகமாய்க்கழித்தானென்று முன்கூறினோம். அவன் மறுநாள் வைகறைத்துயிலெழுந்து அன்று செய்யவேண்டியதைப்பற்றி யோசித்தான். அவனுக்கு நன்றாய் எழுதப்படிக்கத்தெரியும். தன் ஜன்மதேசமாகிய துருக்கியில் படித்தவர்களுக்கு அவ்வளவாக மதிப்பில்லையாகையால் வியாபாரிகள் மூலமாய் இந்தியாவில் படிப்புக்கு நல்ல மரியாதையுண்டென்று அறிந்து கௌரவமாய்க் காலக்ஷேபம் செய்யலாமென்று வந்தவன். லாகூர் வீதிகளிற் செல்லுங்கால் பலவித்தியார்த்திகள் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து கொண்டிருந்த சப்தம் இவன் காதில் விழுந்தது. ஒருகாசுமில்லாமலிருந்தபடியால் வியாபாரமே இலாபமுள்ளதொழிலென்று ஆரம்பித்தனன். கல்வியினால் ஜீவிக்கலாமென்று நினைந்தும் அது உடனே பணம் சம்பாதித்துக்கொடுக்க முடியாதென்பதை அறிந்து சில நாள் வியாபாரம் செய்தே ஜீவிக்கத் தீர்மானித்தான். சூரியன் உதித்ததும் காலக்கடனை முடித்துக்கொண்டுச் சிறிது உண்டியருந்திக் குழந்தைக்கும் தக்க ஏற்பாடு செய்து விட்டுக் கடை வீதிக்குச் சென்று ஒரு தட்டு நிறைய முதல் தரமான கிச்சலிப்பழம் வாங்கிச் சில நாள் வியாபாரம் செய்துவந்தான்.

அதில் அவனுக்கு நல்ல இலாபம் கிடைத்தது. ஒரு நாள் பழத்தட்டை எடுத்துக்கொண்டு இராஜ வீதி வழியாய்ச்செல்லுகையில் ஒரு பெரிய வீட்டின் முன் புறத்தில் சிலர் காவ்ய ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தனர். அவர் அச்சமயம் வாசித்த பிரபந்தங்கள் பார்சீகதேசத்துக் காளிதாசர்களென்று புகழத்தக்க ஹாபிஸ், ஸாட்டி என்ற மகாகவிகளா லியற்றப்பட்டகவிகள், அவை செம்பாகமான நடையில் எழுதப்பட்டுக் கேட்டபேர் மனத்தைக் கொள்ளை கொள்ளும்படியான கற்பனாலங்காரங் கூடி

யிருந்தன. அவ்வித்தியார்த்திகள் வாசித்து வாசித்து நெஞ்சுலர்ந்து போயிருந்தமையால் கிச்சலிப்பழம் என்ற சப்தத்தைக் கேட்டவுடன் ஆநந்தமடைந்து பழக்காரனாகிய அய்யாஸைக் கூப்பிட்டனர். அய்யாஸ் இப்பழங்களின் ருசியிலும் அக்கவிகள் ருசி பலமடங்கு அதிகமென்று மதித்தவன். அவ்வித காவ்ய சப்தங்கள் அவன் காதில் விழுந்து பலநாளாயிற்று. அவ்வித்தியார்த்திகளைக் கிட்டி அக்காவ்ய ரசங்களை அநுபவிக்கவேண்டுமென்பது அவன் எண்ணம். இச்சமயத்தில் அவ்வித்தியார்த்திகளும் கூப்பிடவே "கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது" என்று நினைந்து அவ்விடஞ்சென்றான்.

ஆளுக்குத்தகுந்த விலை சொல்லி ஆயிரம் பொய்யுடன் மோச வியாபாரம் பண்ணும வியாபாரிகளைப் போலன்றித் தன் சரக்குக்கு ஒரேவிலை பகரும் வழக்கம் அவன்பின்பற்றி வந்தமையால் சீக்கிரமே வியாபாரம் முடிந்துவிட்டது. "அவை என்ன பிரபந்தங்கள் ஐயா!" என்று அவர்களில் ஒரு சிறுவனைக் கேட்டான் அய்யாஸ். அச்சிறுவன் முகமலர்ந்து புன் சிரிப்புடனே "இவை உயர்ந்த காவ்யங்கள்" என்றான். "நீங்கள் இப்பொழுது ஆராய்ச்சி செய்து வந்தது மகா கவியாகிய ஸேடியின் அற்புத காவ்ய மன்றோ" என்று வினவ அச்சிறுவருக்கு அடக்கொணா ஆச்சரிய முண்டாயிற்று. நாம் இவனைச் சாதாரண பழ வியாபாரியென்று நினைத்தோம். கல்விமான் போல் தோற்றுகிறது. சற்று சல்லாபம் பண்ணிப் பார்ப்போம் என்று ஸேடியின் கவியில் ஒன்றையெடுத்து வாசிக்கத் தொடங்கினர். அவர்கள் வாசித்த பாகம் நம் அய்யாஸ் பொகாரா கலாசாலையில் தன் இளம் வயதில் பாடமாகப் படித்தது. உடனே உற்சாகத்துடன் அக்கவியை அய்யாஸ் அழுத்தம் திருத்தமாகச் சொன்னான். அவ்வாலிபர் பிரமித்துப்போயினார். அவர்களுக்குண்டான ஆநந்தத்துக்கோர் அளவில்லை. அக்கவியின் கருத்தைச் சொல்லவேண்டினர். இது தான் தக்க சமயமென்று அய்யாஸ் நவரச அலங்காரத்துடன் கரும்பினின்றும் ரசம் பிழிவது போல அக்கவியின் ரசத்தைத்தெளிவாக எடுத்துக்காட்டிப் பிரசங்கம் செய்யவே அதனால் அவ்வாலியர்களுள் ஒருவனான மந்திரி

குமாரனுடைய மனம் முற்றிலும் கவரப்பட்டது. அவன் அய்யாஸைத் தினந்தோறும் அந்த நேரத்துக்கே 50 பழம் கொண்டு வரச்சொல்லியனுப்பிவிட்டான்.

அய்யாஸும் முகமலர்ச்சியுடனும் வினய சம்பத்துடனும் விடைபெற்றுக்கொண்டு போய் அச்சிறுவர் விருப்பப்படியே தினந்தோறும் 50 பழம் குறித்தகாலத்தில் கொடுத்து வந்தான். ஒவ்வொருநாளும் அவர்களுடன் காவ்யசாஸ்திர. விநோதத்தில் சொற்பகாலம் செலவிட்டு வந்தான். "நாற்றமுரைக்கும் மலருண்மை" என்றவண்ணம் அய்யாவின் கல்வித்திறமை ஊரெங்கும் தெரியத்தொடங்கிற்று. அவ்வூர் வாலிபர்கள் அவனிடம் பாடங்கேட்கத் தொடங்கினர். பிரபுக்களெல்லாம் அய்யாஸின் சல்லாபத்தைவிரும்பினர். இச்சங்கதி அந்ததேசத்து மந்திரிகாதிற்கும் எட்டியது. மந்திரிமிக்க கல்வித்திறமையுடையவர். "கற்றோர் கற்றோர்பெருமையை அறிவார்களே யொழிய மற்றோர் அறிவார்களா"? மந்திரியாகிய அபூல்பாஸில் நம் அய்யாஸைத் தருவித்துச்சிலநாள் சல்லாபம்பண்ணி அவர் கல்வியை வியந்து தக்க சம்மானஞ்செய்தனுப்பினர். சிலநாட்களுக்கெல்லாம் இராஜகுமாரர்களுக்கும் தம்மக்கட்கும் நம் அய்யாஸை வித்தியாகுருவாக நியமித்தனர். அதனால் அய்யாஸ் லாகூரைவிட்டு நீங்கி டில்லிநகரத்துக்குச் செல்லவேண்டியதா யிருந்தது. பாண்டவர்களுக்குத் துரோணர் ஏற்பட்டுக் கல்விகற்றுக் கொடுத்த விதம் அய்யாஸும் அவ்விராஜகுமாரர்களுக்குக் கல்விகற்பித்து வரவே அவர்களும் நாளுக்குநாள் ஞானத்திலும் கல்வியிலும் அபிவிருத்தியடைந்து வந்தனர். செவிலித்தாயினிடம் ஒப்புவித்த குழந்தையின்கதி என்னவாயிற்றென்று பார்ப்போம்.

சொந்தத்தாயினும் பதின்மடங்கதிகமாய் அச்செவிலித்தாய் அக்குழந்தையைப் போற்றிவந்தனள். அதுவும் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்ந்துவந்தது. நாள் ஆக ஆக அக்குழந்தையின் சௌந்தரியமும் தேககாந்தியும் கண்டோர் மனத்தையும் கண்களையும் கவர்ந்தன. அய்யாஸ் லாகூரைவிட்டு டில்லிக்குப்போகுங்கால் அக்குழந்தை பத்துப்பிராயமுள்ள

கன்னிகை அவ்வற்புத அழகுவாய்ந்த அக்கன்னிகையே ஜகத்ஜோதி. தன் பிதாவைவிட்டுச் சிறிதும் பிரிந்திராள். தந்தையும் அவ்வருமைக் குழந்தையைப்பிரிய கணப்பொழுதும் சகியான். ஆகையால் அக்கன்னிகை அவருடன் இராஜ கிரகத்துக்குப்போய் வந்துகொண்டிருந்தாள். அக்கன்னிகையின் பேரழகில் ஈடுபட்டான் இராஜகுமாரனாகிய ஸலீம். சௌந்தரியத்திலும் அக்கன்னிகை கல்வி விநயசம்பத்து முதலியவற்றிற் சிறந்தவள். தன் தந்தை இராஜகுமாரர்களுக்குப் பாடம் சொல்லும் பொழுதெல்லாம் கருத்தாய்க் கேட்பாள். சிற்சில சமயங்களில் அவ்விளைஞருக்குத் தோற்றாத நுட்பமான கருத்துக்களெல்லாம் நம் ஜகத்ஜோதிக்குத் தோற்றும். அவைகளைக் கேள்வியுற்ற தந்தைக்குண்டான ஆநந்தத்துக்கு அளவுமுண்டோ? அதனாலன்றோ,

"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்"

என்று திருவள்ளுவரும் திருவாய் மலர்ந்தருளினார். அய்யாஸனுக்கு வர வர செல்வப்பொருளும் அதிகரித்தது. கஷ்டகாலக்ஷேபம் நீங்கிச் சிலகாலம் சுகமாய்வாழ்ந்தான். ஜகத்ஜோதி அரண்மனைக்கு வரும்பொழுதெல்லாம் இராஜகுமாரன் அவள் பேரிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பான். எவராவது பார்த்துவிடுவார்களோவென்று அடிக்கடி குனிந்தபாவனையாய்ப் பார்ப்பான். இவ்வாறே வெகுநாள் நடந்துவந்தது. அரண்மனைத்தோட்டங்களிலுள்ள பழங்களிலும் புஷ்பங்களிலும் உயர்ந்தவைகளைப் பறித்துத்தன் தோழர்களுக்குக் கொடுப்பதோடு நம் ஜகத்ஜோதிக்கும் கொடுப்பான். அவளுக்குக் கொடுக்கும் பழங்களும் புஷ்பங்களும் முதற்றரமாயிருக்கும். சொற்ப நாட்களுக்குப் பின்னர் ஸலீமின் மனோபீஷ்டம், குறிப்புக்களால் அய்யாஸனுக்குத் தெரியவந்தது. ஜகத்ஜோதியும் மங்கைப்பருவம் அடைகிறதருணம். அய்யாஸ் அவளை வீட்டின்கண்ணே வைத்துத் தான் மாத்திரம் வந்துபோகத் தலைப்பட்டார். இது ஸலீமுக்கு மிக்க துன்பமுண்டுபண்ணிற்று. தான் ஜகத்ஜோதியைப் பார்க்கும்

நிமித்தம் ஸலீம் நண்பர்களிற் சிலரைக் கூட்டிக்கொண்டு குருவின் வீட்டுக்குப்போய் ஏதோ சந்தேகம் கேட்டுத்தெளிகிறவனைப் போல் சில கேள்விகள் கேட்டுப் பின் திரும்பிவிடுவான். குருவும் அவனியற்கையை யறிந்து ஜகத்ஜோதி அவன் கண்ணிற் படாதபடி தக்க ஏற்பாடு செய்திருந்தனர். ஸலீம் தன்கருத்தை எவ்விதமாகவாவது முடிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு ஒரு நாள் தன் தந்தையுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் தன் குருவைப்பற்றி மிகவும் உயர்வாகவே பேசினான். தந்தையாகிய அக்பர் சக்கிரவர்த்தியும் மகன் தன் குருவைப்பற்றிப்புகழ்ந்து பேசியதைக் கேட்டுச்சந்தோஷித்து அவரைப்பார்த்துச் சல்லாபம்பண்ண எண்ணங்கொண்டவனாய் மந்திரியினிடம் தெரிவித்து அக்குருவை வரவழைக்கச்சொன்னான். "எள் என்பதற்கு முன் எண்ணெயென்று" சொல்லும்படியான மகா சுறு சுறுப்புள்ள மந்திரியாகிய அபுல்பாஸில் தக்க மனிதரை அனுப்பி அவரைத்தருவித்தான். மறுநாள் சுக்கிரவாரத்தில் நல்வேளையில் அய்யாஸனும தகுந்த உடுப்புக்கள் தரித்துக்கொண்டு மந்திரியுடன் இராஜபேட்டிக்குச்சென்றான்.

இன்னும் வரும்.

எஸ். சாமிநாதையர்.

புத்தகக்குறிப்பு.

திருப்பறியலூர்ப்புராணம்:—இஃது திருக்கயிலாயபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்து மஹாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ பின்வேலப்பதேசிக சுவாமிகளால் அருளிச்செய்யப்பெற்றது. 655 விருத்தங்களையுடையது. கந்தபுராணம் சங்கரசங்கிதையினின்றும் மொழிபெயர்க்கப் பெற்றது. இவ்வூர் சோழநாட்டின் மாயூரத்தின் கீழ்பாலுள்ளது. அட்டவீரட்டத்தலங்களு ளொன்றாகப் புகழப்படுவது.

இப்புராணம் இனிய செந்தமிழ்ச் சொற்களால் ஆக்கப்பட்டிருத்தலின் படிப்பவர் மனத்தை யுருக்கிப் பரவசப் படுத்தத்தக்கதொன்றும். இதனைப்பரிசோதித்துத் தளமான காகிதத்தில் பெரிய எழுத்தில் சீர்பிரித்து மிகவும் அழகாக அச்சியற்றியுபகரித்தவர் தரங்கம்பாடித்தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை யவர்களே. இப்பிள்ளையவர்களை 15 வருஷமாக யாம் அறிவோம். ஒழுக்கமுதலிய உயர்குணங்களையே பொருளாக்கொண்ட உத்தமர். சரித்திர ஆராய்ச்சியில் மிகவல்லுநர். இந்நூலைப்படனஞ்செய்ய விரும்புவோர் இப்பிள்ளையவர்கள் பால் இலவசமாகவே பெற்றுக்கொள்ளலாம். இதனால் இப்பிள்ளையவர்கட்குத் தமிழ்நாட்டார் மிகவும் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையரோ.

ப-ர்.

ஓர் அற்புதச்செடி.

———o———

தென் அமெரிக்காவில் ஒரு புதுச்செடி கண்டுபிடித்திருக்கிறார்களென்றும் அதினின்றும் சர்க்கரை எடுக்கிறார்களென்றும் சாதாரணக்கரும்பினின்று எடுப்பதைக்காட்டிலும் 20 பங்கு சர்க்கரை எடுக்கலாமென்றும் பெர்லினிலிருந்து ஒரு தந்தி சமாசாரம் எட்டுகின்றது. அது உண்மையானால் நம் தேசத்தில் கரும்பு சாகுபடி குறைவாகிக் குடியானவர்களது கஷ்டம் அதிகரிக்கும். தற்காலம் ஐரோப்பாவிலிருந்து பல வேர்ச்சர்க்கரைகள் வந்து நமக்கு இடையூறாக விருக்கின்றன. மேற்கூறிய சர்க்கரையும் வந்து விட்டால் கரும்பு சாகுபடியே நின்று போனாலும் போகலாம். "நிலத்திற்கனி யென்ற நெல்லுங் கரும்பும்" என்ற முதுமொழியையும் மாற்றவேண்டி வரும். "கண்டோ இவ்வுலகில் புதுமைதானும் கலியுகப்புதுமை இன்னுங்காணலாமே."

ப-ர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 OCT 1903
MADRAS.

உ

குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

சம்புடம் 2 } 1903௵ ஆகஸ்டுமீ { இலக்கம் 9

விவேக சிந்து.

———o———

[168-ம் பக்கத்தொடர்ச்சி.]

மூன்றாவது தத்துவசிருஷ்டிப் பிரகரணம்.

குருசுவாமியானவர் சிஷன் இந்தப்படி கேட்ட உத்தரங்களுக்கு மகாசந்தோஷமடைந்தவராய் "கேளாய் சிஷ்யசிரோமணி உன் வாக்கியங்கேட்டவுடனே மறந்ததெல்லாம் எச்சரித்தாற்போல் ஆயிற்று. நீ கேவலம் பரமபுருடன்" என்று கொண்டாடி "இப்போது நீ கேட்ட உத்தரங்களுக்கு அநுபவ விபரமாக நிரூபிக்கிறோம். அத்தியந்தம் சாவதானமாகக்கேள்" என்று திருவுளம்பற்றுகிறார். சொரூபாகாசநிர்குணத்திலே ஜீவிசுவரரென்று இரண்டு வார்த்தைகள் பிறந்தன. அதைச் சுவாநுபவ விவேகத்தினாலே விசாரிக்கவேண்டும். கல்துளைக்கிற உளியினாலே முத்தை ரந்திரஞ்செய்கிறோமென்று எத்தனம் பண்ணலாகாது. தசதசயுத்திகளைப்பிடியாமற் பிரமசொரூபயுக்திக்கு விவேகசம்பத்தி யுண்டாகவேண்டும். சுவாநுபவ விவேகனைக் கேள். ஞானமாத்திரமான அறிவே நிஷ்களம். அதுவே நிசானந்த நிர்மல பரப்பிரமமென்று அறியவேண்டும். காண்கிறவன், காணுகிறது காணப்பட்ட இந்தமூன்றும் எங்கேலீனமாகிறதோ

அதேபரபிரமம் என்று அறி. இதற்குப் பிரதியில்லை. ஞாதுரு ஞான ஞேயமென்கிற மூன்றுமில்லை. அந்த வஸ்துவினிடத்திலே அப்பிரமேயம் அந்தப்பரப்பிரம மென்று சுவாநுபவத்திலே அறியவேண்டும். ஞானமென்றால் அறிகிறதில்லை. அஞ்ஞானமென்றால் மறக்கிறதில்லை. அபாவமென்றால் அச்சுத்த சைதன்னியானந்தமே தோற்றுகிறது. அப்படிச்சொல்லப்படாதென்றால் சூனியமாம். அந்தச்சூனியவாதி மதம் லோகத்தையெல்லாங்கெடுத்தது. ஆனபடியினாலே ஜகத்திலே பிரமக்கியானவானே தன்னியன். உண்டென்றால் எப்படி வாங்கிக்கொள்ளப்படும்? இல்லையென்றால் எப்படி விட்டுவிடப்படும்? அந்தப்பிரமம் எவனுக்கு அநுபவமாயிற்றோ அவனே அநுபவிக்கவேண்டும். எவன் நித்திரை போகிறவனை எழுப்புவான். எழுந்திருந்தவனை யெச்சரிக்கை பண்ணுவித்தான். எச்சரிக்கையானவனை போதிக்கப் பண்ணுவான். இப்படிப் பண்ணியுந் தான் அக்கிரியனாகவே இருப்பான். படிகபருவதமானது மகா உன்னதமாயும் களங்கமில்லாமலும் பிடித்துப்பார்த்தால் கடினமில்லாமலுமிருந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கும் சைதன்னியமான பூரணப்பிரமம். இன்னம் ஒரு யுக்தி. ஆகாசம்போல் வெளியாய் வியாப்பிய வியாபகங்களுக்கு வேறுபட்டதாய் நிசப்பிரகாசமாய்ப்பிரகாசிக்குந் தானேதானாய்ப்பிரம விஷ்ணு ருத்திராதிகள் தங்கள் தங்கள் வியாபாரம் பண்ணி இளைத்தவிடத்திலே அந்த இளைப்பாறுகிறதற்கு நிசமான இடமே பரப்பிரமம். அவ்விடத்திலே வித்தை அவித்தைகளுமில்லை. உபமானமில்லாமல் தனக்குத்தானே அறிகிறஞானம். அதேகவித்தையான பரப்பிரம்மசொரூபம். அதே நீ. அந்தப்பரப்பிரமமானாலும் நான்நானென்ற அகங்காரமிருந்தால் அவன் அறியான் அதன் பெருமையை. ஆனபடியினாலே அகங்காரம் நாசமாகவேண்டும். அப்படியானாற் சுவாநுபவத்தினாலே பிரம்மம் தெரியப்படும். இப்படிப்பட்ட பிரம்மாண்டங்கள் அநந்தங்களுக்கும் உள்ளும் புறம்புமாய் அப்பாலு மிஞ்சியிருக்கிறதே பரப்பிரம்ம சொரூபம். ஆகாசவீதியிலே மேகசஞ்சாரந் தோன்றுகிறாப்போல் அந்தப் பிரம்மத்திலே மாயாலட்சணங் காண்பிக்கும். அது கெட்டுப்போனாற்

சுயம்பிரகாசமாகியேயிருக்கும். பிரமாதி தேவதைகள் மாயாதேவியுடைய கர்ப்பத்திலே பிறந்த மட்டிலாத பாலகர். அப்படிப்பட்ட மாயாதேவியை ஒட்டாமலிருக்கிறதே பரப்பிரம்மம். தியானமில்லாமலே தியானிக்கவேண்டும். அறிவில்லாமலே அறியவேண்டும். அதே பரப்பிரம்ம நிர்குணம். அதே சர்வேசுவரனுடைய சொரூபம். அதே மூலமாயைக்குப் பூரணசைதன்னியமென்று அறி. இத்தனையும் பிரம்மத்தினுடைய லட்சணம். இது வாக்குமனதுக்கு எட்டப்படாதது. சுருதியாலே சொல்லத்தரமன்று. இனி மாயாலட்சணஞ் சொல்லுகிறோம்.

[இன்னும் வரும்.]

மேனாட்டு கலைஞானம்.

முற்கூறு.

7. சிருஷ்டியில் அனேக பொருள்களும் காரணமாகிய தொடர்புகளும் நமது ஆளுகைக்கு அப்பாலுள.

இப்பொழுது சற்று முன் கண்டபடி நாம் கைப்பற்றிப் பயன்படும்படி செய்யக்கூடியவை இயற்கைப்பொருள்களில் சிலவுள. ஆனால் சிருஷ்டியிலுள்ள அனேக அரும்பொருள்களும் அவைகளைத் தொந்திக்கும் காரணகாரிய தொடர்புகளும் நமது வசத்திற்கு மீறி அப்பாலுள்ளன. சூரியன் தினமும் உதித்து ஒடுங்குகின்றான். சந்திரனும் நக்ஷத்திரங்களும் வானில் தவழ்ந்து செல்கின்றது. காரும் வேனிலும் சீதமும் வெப்பமும் மாறி மாறி வருகின்றன. காற்று ஒருகாலத்தில் விசையாய் வீசி விருக்ஷங்களையும் வீடுகளையும் வீழ்த்திவிடுகின்றது. மற்றொரு காலத்தில் இக்காற்று மெல்லிதாய் வீசி வெப்பத்தை மாற்றி ஆனந்தம் பயக்கின்றது. ஒருகால் சமுத்திரம் பெரும்புயலினால் தத்தளிக்கின்றது. மற்றொருகால் காற்றில்லாமையால் அது அமைதி பெற்றிருக்கின்றது. அளவிறந்த செடி பூண்டு விருக்ஷங்களும் நமது இச்சையின்றியே உண்டாகின்றன. பிரசண்டமாருதம் ஒரு இடத்தைப் பாழ்படுத்துகின்றது. பூகம்பம் பின்னும் ஒரு ஸ்தலத்தை நாசஞ்செய்கின்றது. அக்கினிமலை வெடித்து அனல்வீசி வேறொரு தேயத்தை அற அழித்துவிடுகின்றது. ஒரு நாட்டில் சரியான காலங்களில் மேகங்கள் கிரமமாய் வருஷித்து ஏராளமான விளைவுண்டாய் தனம் சொரிகின்றது. வேறொரு தேசத்தில் நெடுநாளாய் மழையொழிந்து நோயும் பஞ்சமும் ஜீவர்களை வருத்துகின்றன. இப்பொழுது சொல்லிவந்த இவ்வித காரியங்களில் எல்லாம் மனிதனுடைய வல்

லமை நேராக யாதொரு நயமும் பிறப்பிக்கிறதில்லை. மனிதன் அறியாமை யுடனிருக்குமளவும் அவன் மாயையின் பெருஞ்சக்திகளாலலைக்கப்படும் டாவை மாத்திரமாயிருக்கிறான்.

8. சிருஷ்டியின் ஒழுங்கு தற்செயலாய் ஒன்றும் நிகழ்வதில்லை.

ஜகத்தில் உள்ள பொருள்களையும் நிகழும் செயல்களையும் பற்றி மனிதர்கள் ஆதியில் சிந்திக்க ஆரம்பித்தவுடனே முதல் முதல் அவர்கள் தெரிந்ததென்னெனில் சில சம்பவங்கள் நேர் ஒழுங்காய் நிகழ்கின்றனவென்பதும் சிலகாரணங்கள் என்றும் ஒரேவித காரியங்களைத் தோற்றுவிக்கின்றன வென்பதுமேயாம். சூரியன் வானில் என்றும் ஒருதிசையில் உதித்து அதற்கு எதிரானதிசையில் ஒடுங்குகின்றான். சந்திரன் கலைகள் தினமும் ஒரு அளவாகவே குறைந்தும் மறுபடியும் ஒரு அளவாகவே வளர்ந்தும் மாதந்தோறும் ஒரே ஒழுங்காக விகாரப்பட்டு வருகிறான். சில நக்ஷத்திரங்கள் நாம் வசிக்கும் உலகபாகத்தின் அடிவானத்திற்குக் கீழாக எந்நாளும் செல்கிறதேயில்லை. பருவங்கள் ஒன்றின் பின் ஒன்று கிரமமாய் மாறி வருகின்றன. எக்காலத்திலும் நீர் இறக்கத்திலேயே ஓடுகின்றது. நெருப்பு எப்பொழுதும் சுடுகின்றது. பூண்டுகள் வித்துக்களினின்று முண்டாகி அவைகள் பின்னும் வித்துக்களை ஈன்று அவ்வித்துக்களினின்றும் மறுபடியும் அதே விதமான பூண்டுகள் முளைக்கின்றன. சகல பிராணிகளும் யுகங்கள்தோறும் ஒரே விதமாகவே பிறந்து வளர்ந்து முதிர்ந்து சாகின்றன. இவ்விதமாக ஆதியில் சிருஷ்டியின் தோற்றங்களில் சிலவற்றைக் கவனித்து வரவே சிருஷ்டியில் ஒழுங்கு அமைந்திருக்கிறதென்றும் ஜகத்திலுள்ள பொருள்களுக்குள் காரண காரிய சம்பந்தம் என்றும் மாறாத நிலைமையுடைத்து என்றும் எண்ணம் படிப்படியாய் மனிதர்கள் இதயத்தில் புகுந்தது. ஒழுங்கு காணப்பட்ட மட்டிலும் காரியங்களும் செயல்களும் துலக்கப்பட்டதாக அறிந்தார்கள். துலக்கக்கூடாத செயல்களும் காரியங்களும் தற்செயலாக உண்டானதாக எண்ணினார்கள். தற்செயல் என்றாலும் அகஸ்மாத் என்றாலும் குருட்டுவாய்ப்பு என்றாலும் ஒன்றே. அதாவது யாதாமொரு நிகழ்ச்சிக்கும் காரணம் தங்கள் புத்திக்குப் புலப்படாத பொழுது அந்நிகழ்ச்சியை அகாரண சம்பவம் அல்லது தற்செயல் என்று மனிதர்கள் கருதினார்கள்.

ஆனால் பிரபஞ்சத்தில் நிகழும் காரியங்களைநோக்கிக் கவனமாய்ச் சிந்திக்கச்சிந்திக்க எங்கும் ஒழுங்கு வியாபித்திருக்கிறதாகவும் அகாரண சம்பவம் என்பதே கிடையாது என்றும் முதலில் ஒழுங்கீனம்போல் கண்டதெல்லாம் பலகாரணங்கள் கலந்து சன்னல் பின்னலான காரியங்களேயன்றி வேறன்று என்று மனிதர்கள் கண்டார்கள். இப்பொழுது தற்செயலாய் யாதேனும்

நடக்கிறது என்றும் அல்லது காரணமின்றி நிகழும் காரியங்கள் என்று பொருள் படும்படியான அகஸ்மாத்துக்கள் வாஸ்தவமாய் உண்டென்று நம்பும் அவ்வளவு மடமையுள்ள மனிதன் கிடையாது. நாம் இப்பொழுது ஒரு காரியம் தற்செயலாய் நடந்ததென்று சொன்னால் நமது உண்மையான கருத்தெல்லாம் கூடி நமக்கு அச்செய்கையின் காரணம் அதாவது அந்தக்காரியம் நடந்ததற்கு முகாந்தரம் இன்னதென்பது துலங்கவில்லை யென்பதே யொழிய வேறல்ல வென்று யாவரும் இக்காலத்தில் ஒத்துக்கொள்ளுகிறார்கள். தற்செயல் அகாரணம் அகஸ்மாத்தென்பதெல்லாம் அஞ்ஞானம் அல்லது அறியாமை என்பதற்கு மறு நாமங்களே.

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை B. A.

சைவசித்தாந்தம்.

[245-ம் பக்கத்தொடர்ச்சி.]

அற்றேல் முத்தான்மாக்களும் பஞ்சகிருத்தியஞ் செய்திருப்பதாக நூல்களிற் கூறப்படுகின்றனவேயெனின் நன்று கடாயினாய். இரும்பையதிட்டித்து நிற்கின்ற அக்கினி சுடப்பட்டதை இரும்பு சுடப்பட்டது என்றாற்போல முத்தான்மாக்களை யதிட்டித்து நிற்கின்ற சிவபெருமான் செய்தருளிய பஞ்சகிருத்தியங்களை முத்தான்மாக்கள் செய்தனவாகக் கூறப்படுதல் ஆதார இலக்கணை.

அங்கியும் ஒன்றிற்றங்கி னின்றல்லது தன்றொழினடத்தாதாகலின் அதுபோல முதல்வனும் உயிரையதிட்டித்து நின்றே எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க.

இந்தவிசாரமெல்லாஞ் சீவன்முத்தியவத்தையிலேயே. பரமுத்தியிலே சிவமென்றும் ஆன்மாவென்றும் பிரிந்து காணப்படுவதொன்றில்லை ஆகையால் முத்தான்மாக்கள் கிருத்தியம் பண்ணுவார்கள் பண்ணமாட்டார்கள் என்கிற விசாரத்துக்கு இடமில்லை.

இவ்வுண்மை யுணராததூஉ மன்றி விஞ்ஞானதீக்கையின் உடல் பொருள்களோடொப்பச் சற்குரவன் கையிற் றானஞ்செய்

தளித்துந் தானஞ்செய்தளித்த பொருளென்றறியுமறிவு சனியாமைப்பொருட்டு நாளுநாளுஞ் சிவபூசையிற் செபங் கன்மங்களைடொப்பச்சிவோதாதா வென்னுமந்திரமோதி யான்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூசீரோடுந்தானஞ் செய்தளித்துந் தான் சுதந்திரனே சிவனுடைமையல்லனெனப் பிணங்கிப் பரம சர்பாத்திரத்திற்றானஞ்செய்த பொருளை யபகரிக்க நினைக்கு நினைவுடையோரோடு பேசினு முய்தியில்லாதோர் கொடிய பாவமாமென்றறிக.

இனி யுடல் பொருளாவி மூன்றுஞ் ஞானதீக்கையின் முதல்வனுக்கெனத் தானஞ் செய்தளித்தலான் முன்செயற்கையாற்றன்னுடைமையாய் நின்ற விம்மூன்றுந் தானஞ் செய்தபின்னர்த் தனக்கின்றிச் சிவனுக் குடைமையாயவாறு பெற்றாம். பெறவே யாண்டுப்பொருளென்றது உடம்பாலொற்றுமை யுடைத்தாய்த் தன்னானுகரக்கிடந்த உடல் வினையேயன்றி முன்பே தன்னாற்றுறக்கப் பட்டொழிந்த புறப்பொருளன்றென்பது தாமே போந்தருதலானும் அவ்வாறன்றி யாண்டுப்பொருளென்றது எல்லாவற்றிற்கும் பொதுவெனக் கொள்ளினும் உடல் வினையும் அவற்றுளடங்குதலானும் அங்ஙனம் முதல்வனுக்கென்றீந்த வுடல் வினையை மீளவுந் தானுகரக் கருதுவோனவ்வாறு தானஞ்செய்தளித்த வான்மாவை மீளவுஞ் சுதந்திரனாகக் கருதுஞ் சிவசமவாதியோ டொப்பவனு மாகலின் முதல்வனுக்கென் றளித்த பொருளைத் தானுகரக் கருதுதல் பெரியதோர் இழுக்காதலறிக. இன்னுந்தன்னுடம்பே தனக்கின்றி முதல்வனுக் குடைமையாக வீந்தவழி யவ்வுடம்பிடமாக வரும் வினைப்பயனைத்தான் நுகர்தற் கோரியை பின்மையறிக.

இன்னும் தானே தனக்குச் சுதந்திரமன்றிச் சிவனுக் குடைமையாய் வழித்தான் மற்றொன்றனை நுகருமாறியாண்டைய தென்க.

தன்னாலளிக்கப்பட்ட பொருள் மூன்று முதல்வன் என்று கொண்டானென்பது.

அன்றேயென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றேயனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ, இன்றோரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்கணெம்மானே, நன்றேசெய்வாய் பிழை செய்வாய் நானோவிதற்கு நாயகமே. எனவும்,

குறைவிலா நிறைவே கோதிலாவமுதே யீறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே, மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென் மனத்திடை மன்னிய மன்னே, சிறைபெறா நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந் திருப்பெருந் துறையுறை சிவனே, இறைவனே நீயென் னுடலிடங்கொண்டா யினியுன்னை யென்னிரக்கேனே. எனவும்,

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கராவார் கொலோசதுரா, அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேனி யாது நீ பெற்றதொன்றென்பாற், சிந்தையேகோயில் கொண்டவெம்பெருமான் றிருப்பெருந் துறையுறை சிவனே,' எந்தையேயீசா வுடலிடங் கொண்டா யானிதற் கிலனோர் கைம்மாறே. எனவும்,

அவமாய தேவரவகதி யிலழுந்தாமே, பவமாயங்காத் தென்னையாண்டு கொண்ட பரஞ்சோதி, நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து, சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. எனவும்,

என்றவுடற்கன்ம எனவும், என்றவுடற் பழவினைகள் எனவும், என்றவினை எனவும், என்று கொண்டா யென்னை, எனவும், ஓதிய வாற்றானறிக.

தன்னைத்தானஞ் செய்தாலாவது தான் சிவனுக்குப் பாதந்திரனென்றறிந்து அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யானாகி நிற்றலேயா மென்றுணர்க.

அற்றேல் மலவாசனை நீங்குதற் பொருட்டுத் தன்னைத்தானஞ்செய்ததாகப் பாவித்தல் மாத்திரையே யாகவெனது பற்றி

யிழுக்கென்னை யெனின் அங்ஙனமாக. அப்பாவனை போலியோ வுண்மையோவெனக் கடாயினர்க்கு உண்மை யெனிற் பரதந்திர னுதற்கிழுக்கில்லை போலியெனிற் பசித்தவன் உண்டானை போல எத்துணைப் பாவகஞ் செய்யினும் பசி நீங்குதல் கண்டில மாகலி னிது போலப் போலிப் பாவனையால் மலவாசனை நீங்கு மாறின் மையினிது வீண்டொழிலாய் முடியும். இன்னும் பாவனை போலி யென்பார்க்கு பாவனையின் வழியவர் செய்யும் மந்திரங் கிரியைகளும் போலியாய் முடியும். முடியவே பாவனை முதன் மூன்றானு மவர் செய்யுஞ் சிவதீக்கையுஞ் சிவ பூசையுஞ் செபந் தியான முதலிய வெல்லாவாசாரங்களு மங்ஙனம் போலியாய்ச் செய்வது தமக்கானும் பிறர்க்கானும் பயன் படுமாறின்மையின் மாணாக்கரை வஞ்சித்துப் பொருள் கொண்டு தம்முடம்பை யோம்புதற் பொருட்டுச் செய்யு மாரவார மாத்திரையே போலு மென்றொழிக. அற்றேற் கருடபாவனை செய்வோன் கருடனா தல் கண்டிலம். அப்பாவனையால் விடந்தீருதல் கண்டா மாகலிற் போலிப்பாவனையும் பயன்றருமென்பது பெறப்படு மாலெனின் அறியாது கூறினாய், மாந்திரிகன் றன்னுடம்பைக் கருடனாகப் பாவிப்பானல்லன் மற்றென்னையோ வெனின் கருடனுக்கு அதி தெய்வமாகி நிற்கு மந்திரமூர்த்தி யாகத்தன்றன் மாவைப் பாவி ப்பன். அங்ஙனம் பாவித்த வழிச் சார்ந்த தன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய வான்மா ஆண்டு அம்மந்திர ரூபியாய் நிற்றற் கிழு க்கின்மையினதுபற்றி சங்கை யின்மை யுணர்க.

இன்னும் பாவனைகளும் உபாசனைகளுங் கற்பித்துக் கொண்டு செய்யும் போலி யென்றல் மாயாவாதி கூறுங் கூற்றாக லினது சைவ சித்தாந்தத்திற் கேலாமை யறிக.

இனி சாக்கிரமுதல் ஐந்தவத்தையாவன.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என் பனவாம். இவ்வவத்தை அடையு மிடங்களாவன. நுதல், கண்டம், இதயம், நாபி மூலம் என்பனவாம். ஆண்டாண்டு நிற் குங்கருவிகளாவன, முறையே, இந்திரியங்கள் பத்தும் சத்தாதி வசனாதிகளாகிய விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் அந்தக்

கரணங்கள் நான்கும் புருடனொன்றும் ஆகிய கருவிகள் முப்பத் தைந்தும் சாக்கிரத்திலும், இந்திரியங்கள் பத்து நீங்கின மற்ற க்கருவிகள் இருபத்தைந்தும் சொப்பனத்திலும், பிராணவாயுவும் சித்தமும் புருடனுமாகிய மூன்றும் சுழுத்தியிலும், பிராணவாயு வும் புருடனுமாகிய இரண்டும் துரியத்திலும், ∴ புருடனொன்றும் துரியாதீதத்திலும் நிற்கும்.

இந்த ஐந்தவத்தைகளும் கீழ்நோக்கிச் சென்று ஒடுங்கு முறைமையும் மேனோக்கித் தோன்று முறையும் பற்றி இரு வகைப்படும். அவற்றுள் ஒடுங்குமுறையது கன்மார்ச்சிப்புக்கேது வாகலால் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம். இது சகலத் திற்கேவலமெனப்படும். தோன்று முறையது கன்மநுகர்ச்சி க்கேதுவாகலால் பரம்பரையில் பிறவியறுதற்குக் காரணமாய் மேற்படுப. இது சகலத்திற் சகலமெனப்படும். இனி முதலவத் தையாகிய சாக்கிரத்தானத்தின் கண்ணேயும் சாக்கிரமுதல் ஐந்தவத்தையுளவாம். அவைகருவியான் விடயங்களை யறியுஞ் செய்கைதோறும் அதிநுணுக்கமாயிடை யீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள்ளப்படும். இவ்வைந்தனுள் சாக் கிரத்தில், சுத்தவித்தையும், ஈசுரமும், சாதாக்கியமும், சத்தியும் சிவமுமாகிய ஐந்துகருவியும் கலாதிகளைச்செலுத்தி நிற்கும். சொப்பன முதலிய நான்கினும் முறையே அவற்றுள் ஒரோ வொன் றொழித்து ஒழிந்த கருவிகள் கலாதிகளைச் செலுத்தி நிற்கும். [இன்னும் வரும்.]

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடம்.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆளுமாறு

[250 பக்கத்தொடர்ச்சி]

நமது இந்திய துரைத்தனம் இரண்டு அம்சங்கள் பொருந்தியிருப்பின் அற்புதமென்னலாம். ஒன்று: இந்துக்கள் தங்கள்தேயத்தாரால் மட்டுமே ஆளப்பட்டு வந்த அரசாணையை மறுப்பதில் பழகியுள்ளவர்களாயிருந்தால் இது இந்துக்கள் மரபன்று. ஆகவே, தாங்கள் இலகுவாய் அழிக்கக்கூடிய துரைத்தனத்துக்குச் சரித்திரபூர்வமாய் அளவிறந்த ஜனங்கள் பணிவதுபோ

லேயும் சீனர்கள் இந்நாளிலும் தார்த்தார் அதிகாரத்துக்குத் தாழ்வதுபோலேயும், இந்த இந்துக்களை ஆங்கிலேயர் வருமுன் மொகலாயர் கொடுங்கோன்மைக்குக் கீழ்ப்படிந்ததுபோலேயும் நமக்குக்கீழ்ப்படிந்தார்கள். உண்மையில் மொகலாயருக்கு இந்துக்கள் நடந்துவந்த முன்மாதிரியானது அவர்களை நாம் ஆள்வது, அபௌருஷேயமான ராஜ்யதந்திரமெதனாலுமன்று என்பதற்குப் போதியசான்றாம். ஆங்கிலேயதுரைத்தனத்தைப்பற்றிய சரிதங்களிற் எவ்விஷயங்களைக்கண்டு வியப்படைகின்றோமோ அவ்விஷயங்களைக்கண்டு வியப்புறாமல் மொகலாய சரித்திரத்தை வாசித்தல் அரிது. அதாவது, மொகலாயரும் எவ்விதமான நிர்வாகமும் இல்லாமலே வெற்றி பெற்றனர் என்பதாம். அந்தத் துரைத்தன ஸ்தாபகனாகிய **பேபர்** தனக்குப் பின்னணியில் பலத்த சுஜாதிப்படையோடேனும் அல்லது வேறு ஏதாவது பலமிக்க சகஸ்தானுதவியோடேனும் வந்தவனல்லன். மத்தியஆசியாவில் ஒருசிறு தார்த்தார் ராஜாங்கம் அவனுக்குப் பிதிர்வழியாய்க் கிடைத்தும் ஆஸ்பேகல் அவன் மீது படையெடுத்து வந்தபொழுது அதுவும் நழுவிப்போயிற்று. அவன் குடியிருக்க வீடுகூட இல்லாதவனெனச் சின்னாள் அலைந்துதிரிந்து அப்பால் ஆப்கானிஸ்தானத்தில் மற்றொரு சிற்றரசைக் கைப்பற்றினன். மொகலாயதுரைத்தனத்துக்கு மூலகாரணமாயிருந்த இச்சிற்றரசைவிட வேறெதுவும் அவ்வளவு அற்பமாயிராது. காபூலில் அரசாண்டுகொண்டிருந்த இந்தத் தார்த்தாரிய வீரன், ஓர்அரசை ஊன்ற அது எழுபதுவருடத்தில் இந்தியாவிற் செம்பாதியளவு விசாரித்து இன்னும் ஒருநூறு வருடத்தில் இந்தியமுழுமையும் வியாபித்ததென்னும்படி அவ்வளவு வளர்ந்தோங்கிற்று. மொகலாயதுரைத்தனம், பெருமையிலேனும், திண்மையிலேனும் நம்முடையதோடு ஒப்புமை கூறற்பாற்றென்று சொல்லவல்லேனல்லன். ஆனால் நம்முடையதேபோல அதிலும் அதிகமாய் ஆளில்லாமல் ஆக்கப்பட்டதுபோலும். கம்பெனியார்க்காவது இங்கிலிஷ் திரவியமும் இங்கிலிஷ்யுத்தசாஸ்திரமும் அழிபாதஜனக் கட்டுமிருந்தன. **பேபருக்கும்** அவன் பின்னவர்க்கும் இவைகள் யாதொன்றும் கிடையாது. அவர்கள் அரசாட்சி விருத்தியானதற்கு அநுகூலமாயிருந்த காரணங்கள் ஒன்றும் இலகுவிற் புலப்படவில்லை. நாம் சொல்லற்பாலதெல்லாம் மத்தியஆசியாவானது கூலிபெற்றுச் சண்டைக்குச்செல்லும் தேசாந்திரியான யுத்தவீரர்களால் நிறைந்திருந்தமையால், அவர்கள்கூலியின் பொருட்டும் கொள்ளையின்பொருட்டும் **காபூல்** அரசனது கையாளாய்ச்சேர்ந்தனரென்பதே.

இரண்டாவது: இந்தியாவிலுள்ள இருபதுகோடி ஜனங்களும் ஒருதனி ஜாதியென ஒருப்போல எண்ணுபவர்களாயிருந்தால், நமது ஆளுகை அதிசயந்தான். இன்றேல், அதிசயிக்கற்பால தொன்றுமில்லை. சுதர்மாபிமானங்களா

லும் பொதுநல நோக்கத்தாலும் கட்டுப்படாத சாமாந்ய வெறும் ஜனக்கூட்டத்தை, அவர்தம்முள் ஒருவருக்கொருவர் பகைமூட்டியே அடிப்படுத்தலாம். இப்பொழுது இந்துக்களைக்கட்டுப்படுத்தும் பந்தங்கள் எவ்வளவு போதாததாயும் பலஹீனமாயுமிருக்கின்றன வென்பதை வகுத்துரைத்தேன். இவ்வண்ணம் இந்துக்களுக்குள் ஒற்றுமையின்மை நமது ஆளுகைக்குச் சாதகமாயிருந்த தெங்ஙனம் என்று நீவிர் அறியவிரும்பினால் மகாகலகச் சரித்திரத்தைப் (The Great Indian Mutiny) படித்துப்பாரீமின். நமது சுதேசபடைகள் பெருங்கலகஞ்செய்யினும், அல்லது அதிலுங்குறைந்த சிறுகுழப்பஞ்செய்தாலுங்கூட உடனே நமது அரசுக்கு ஆயுள் இறுதிவந்துவிடுமென்று நான் சொல்லுங்கால், அப்பேர்ப்பட்ட கலகம் 1857-ல் உண்மையில் நடந்தும் நமது ஆளுகை இன்னும் விளங்குகின்றதே யென்று நீவிர் நினைக்கலாம். ஆனால் நான் சொன்னது, முதல் ஜனங்களுக்குள் பரவி கடைசியாக சேனையிலும் வியாபிக்கும் சுதேசாபிமான நடபடிக்கை காரணமாக உண்டாகும் கலகத்தை யென்று நீவிர் கவனிக்கவேண்டும். 1857-ம் வருடக்கலகம் இத்தன்மையதன்று. அது, சேனையில் ஆரம்பித்து ஜனங்களால் ஆலசியமாய் விட்டுவிடப்பட்டது. அதற்குக்காரணம் சில குறிப்பிட்ட ராணுவக்குறைபாடுகளேயன்றி, நமது அரசாட்சி அந்நியம் என்பதனிமித்தம் சுஜாதி தேசாபிமானத்தால் உண்டாகும் மனப்புழுக்கத்தாலன்று. இனி அவ்வாறெழுந்த கலகம் அடக்கப்பட்டதெவ்வாறென்பதை விசாரிப்பாம். இங்கிலாந்திலுள்ள அபிப்பிராயம். இங்கிலிஷ்காரருடைய மஹா பராக்கிரமத்தாலும் உயர்வாலுமென்பதே. கர்னல்செஸ்னி என்பார் தாம் எழுதிய "இந்து அரசியல்முறை" என்னும் நூலில் இவ்விஷயமாய்க் கூறியிருக்கும் சில சங்கதியை உங்களுக்கு வாசிக்கிறேன். வங்காளசேனையில் அதிவன்மையான மனோதைரியம் பிறந்தது. பம்பாய், சென்னையிலுள்ள சேனைகள் இக்குழப்பத்தில் சிறிதும் சம்பந்தப்பட்டில. இந்துக்கள், முசல்மான்கள் இவர்கள் ஒருங்கே கலந்ததாகலின் அது கேவலம் ராணுவ சம்பந்தமானதேயன்றி சுஜாதி அபிமானத்துவத்துக்கு உண்மையில் விரோதமானதே. கர்னல் செஸ்னி கூறுவது வருமாறு:—ஒழுங்கீனத்திலும், தங்கள் எஜமான்களோடு பகை கொண்டாடுவதிலும் அவர்களை அடியோடே கெடுத்துவிடத் தங்கள்பால் ஆற்றல் உளதென்னும் நம்பிக்கையினும் இந்துக்களும் முசல்மான்களும் ஒப்பர். இந்தக்கலகம் பிரதிகூல அம்சத்தால் அடக்கப்பட்டதென்பதைப் பற்றி எடுத்துக் கூறப்போகிறார்:— வங்காள ராஜ்யமெனப்படுவது ஒழுங்கான சேனையால் முற்றிலும் அரண் செய்யப்படாதிருந்தது ஓர் நல்லதிருஷ்டம். நேப்பாள் இமயமலைச் சாரல் வாசிகளாகிய நாலு பட்டாளம் கூர்க்கர்கள் சேனையின் மற்றப்பகுதியினின்றும் துண்டிக்கப்பட்டு அதற்குண்டான இன அபிமானத்துக்கு ஆளாகாதவர்களாய் அடங்கி நின்றனர். இப்படைகளுள் ஒன்று பிரிட்டிஷ்காரர் பக்கல் விசுவாசத்துடன் செய்த ஓர் வீரத்தன்மையால் ஆங்கிலேய நேயரது வியப்புக்கா

ளாயிற்று. பஞ்சாபினின்றும் அதன் பக்கத்தினின்றும் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட இரண்டு உபரிப்படைகளும் அசையாது நின்றன. ஆனால் அதிக உதவி "பஞ்சாப் ஒழுங்கீனப்படை" யினின்றும் வந்தது. அப்படை கிரமமான படையைப் போலவே வெகு ஒழுங்காய்ச் சேர்க்கப்பட்டு அதனினும் மிச்சமாய் யுத்தப்பயிற்சி செய்யப்பட்டிருந்தது. இச்சேனை ஆறுகாலாட்படைகளும், ஐந்து குதிரைப் பட்டாளங்களும் உடையது. இத்துடன் பஞ்சாபில் வழக்கமாய் அமைத்து வைத்துள்ள நாலு பட்டாளம் உள்ளூர் சீக்குக் காலாட்படைகளும் சேர்ந்தன. இந்தப்படைகள் அந்த மாகாண அதிபதியின் நேரான ஆணைக்குட்பட்டவைகளாயும் ஒழுங்கான படையின் நன்னடக்கையைக் கெடுப்பதற்கு ஹேதுவாயுமிருந்த மத்தியத்துவ அதிகாரத்துக்குக் கீழ்ப்படாததாயுமிருந்தது.

இப்படைகளாலும் இந்தியாவின் மேல் பாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சொற்ப ஐரோப்பியர்களாலுமே முதலில் இந்தக்குழப்பம் எதிர்க்கப்பட்டது. இந்த மத்தியில் பஞ்சாப் ஜனங்களின் தயவும் அவர்களை ஆள்வோர்க்குக் கிடைத்தது. சமீபத்தில் வெல்லப்பட்ட ஜனங்களாதலால் அவர்களது சேனை குலைந்து போன காரணத்தால், தாங்கள் பயின்று வந்த தொழிலுக்கு இடமில்லாது போயிற்று.

தங்கள் நாட்டிலுள்ள இந்துஸ்தானி படையின் மீது அவர்களுக்கு நல்லபிப்பராயம் இல்லை. ஆதலால் தங்கள் பரம்பரை சத்துருக்களைச் சங்காரம் செய்ய வென்று போர்க் கழைக்கப்பட்டவுடன் அதனை நல் வரவென உவகையோடு ஏற்றுக் கொண்டனர். தேவையான ஜனங்கள் கிடைத்தார்கள். இவ்வாறு தொகுத்த படைகள் விரைவில் யுத்த சன்னத்தராய் நன்கு பயில்விக்கப்பட்டு யுத்த களத்திற்குச் செலுத்தப்பட்டனர். வங்காள சேனை மீட்டும் அமைக்கப்பட்டபொழுது, இந்தப் பஞ்சாப் படைகளே அதன் பெரும் பகுதியோராயினர்.

இப்பொழுது இந்தக் கலகமானது இந்தியாவிலுள்ளவர்களை ஒருவரோடொருவர் சண்டை போடும்படி செய்வித்துப் பெரும்பாலும் அடக்கப்பட்டது பார்த்தீர்களா இது செயற்பாலதாயுள்ள வகையில் அரசாட்சி எப்படியிருந்தபோதிலும் அதில் குணம் குற்றம் நாடவேனும் அதற்கு விரோதமாய்க் கலகஞ்செய்ய எழும்பவேனும் ஜனங்கள் பயிலாதவரையில், இங்கிலாந்திலிருந்து இந்தியாவை ஆளுதல் சாத்தியப்படும். இதில் அதிசயிக்கற்பாலதொன்றுமில்லை. ஆனால் நாம் கூறிய வண்ணம் இந்த காரியாம்சங்கள் மாறுமேல் யாதேனும் ஒரு மார்க்கத்தால் ஜனங்களை ஒரு தனி ஒப்புரவுள்ள ஜாதியாராக்கக்கூடுமேல், நமக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தம் ஆஸ்திரியாவுக்கும்

இத்தலிக்குமுள்ள சம்பந்தத்தை ஏகதேசமாயேனும் ஒக்கவருமேல், அப்பொழுது நமது ராஜ்யத்தைப்பற்றிப் பயப்பட ஆரம்பித்தல் வேண்டுமென்று மட்டுமோ சொல்வேன் அதில் நமக்குள்ள நம்பிக்கை அந்திம தசையடையுமென்பேன். நமக்கு அஞ்ச வரும் அபாயம் ஜனக்கலகமென நினைக்கிலேன். உதாரணமாக சில அச்சக்குறி காட்டும் நூல்களில் "ஜானுடை இந்தியா விஷயங்களைப்பற்றி" என்னும் எலியட் இயற்றிய புத்தகத்தில் ஏழைக் குடியானவனது துயரத்தைக் காட்டும் சோகரசமான படங்களை கண்ணுற்றேன். அதினின்றும் இந்த இடுக்கண் காரணமாக உயிர் போனாலும் பெரிதன்றுஎன்று எல்லாவற்றையும் வெறுத்தவர்களாய் அதி உக்ர போர் செய்ய, அதனால் நாம் ஊரை விட்டோட வேண்டி வருமென்று ஏற்கனவே சித்தாந்தப்படுத்தலாம். இந்த வருணனைகள் உண்மைதானோவென்பதை விசாரிக்க இடம் இதுவன்று. ஆனால் விவகார விஷயத்துக்காக அவைகள் உண்மையென்று வைத்துக் கொண்டபோதிலும் தேச கலகங்களெல்லாம் இந்த மாதிரிதான் உண்டாகின்றனவென்று சரித்திரத்திற் சொல்லப்படவில்லை. பல்லாண்டுகளாய் ஆற்றொணாத்துயரத்தால் அழுந்தி வரும் எண்ணிறந்த ஜனங்களை நான் கண்டுளேன். அவர்களெல்லாம் கலகத்துக்கு எழும்பவில்லையே யென்று வினவில் அற்றதன்று, அவர்கள் வாழ்கிலரேல், மாள்வர் கண்டீர்; வறுமை நோயால் தம் அறிவு மழுங்கியும் ஆசை நொறுங்கியும், சிறிது துணை வாழவல்லுநரேல், அத்துணையே வாழ்வர், கலகம் செய்யும் ஜனங்கள் முன்னுக்குவர எதிர்பார்க்கும் ஜனங்கள் சுயவலி உணர்ந்து நம்பிக்கைகொள்ளும் ஜனங்கள் ஆனால் அவ்விதமான கலகம் உண்டானால், சுதேசப்படைகள் தங்களை இந்துக்களுக்குச் சகோதரரெனவும், இங்கிலீஷ்காரருக்கு அந்நியரெனவும் கருதாமலிருக்கும் வரையும் அப்படைகளாலேயே அடக்கப்படும். ஆனால் இந்த உணர்ச்சி எப்பொழுதேனும் உண்டாயிற்றோ, இந்தியாவானது ஒரு தனிச்சாதியாரென உயிர்ப்பு விட ஆரம்பித்ததோ, (முன்னுள்ள துரைத்தனங்களைப்பார்க்கிலும் நமது துரைத்தனம் இது விஷயம் ஆகக்கூடியது என்னும் படிதான் நடந்து வருகிறது) அப்பொழுது காரணமுளதேனும் உயிரையும்வெறுத்த கலகமொன்றும் அவசியமில்லை. ஏனென்றால் அந்த சுஜாதி அபிமானத்வ எண்ணம் சுதேச படைகள் மனத்திற் குடி கொள்ளும். நாம் கடைசியாய் அவர்கள் மீதுதான் சார்கின்றோம். 1857-ம் வருட மகா கலகம், எவ்வளவோ பெரிதாயிருந்தும், அதனை அடக்க வல்லராயிருந்தோம். ஏனென்றால் அது சேனையின் ஒரு பகுதியில் மட்டுமே வியாபித்திருந்தது. ஜனங்கள் சிரத்தையுடன் அது விஷயமாய் அநுதாபப்படவில்லை. நம் பக்கம் சேர்ந்து யுத்தம் செய்யக்கூடிய சுதேச இந்து ஜாதியார் நமக்குக் கிடைத்தனர். ஆனால் கேவலம் குழப்பம் மாத்திரமே யன்றி **ஒருதனி சுஜாதி அபிமானத்துவ விளக்கம்** என்னும்படியான ஓர் கலகம் நேரிடுமென்று எக்கணத்தில் அஞ்ச வருமோ, அக்கணமே நமது அரசைக்

காப்பாற்றும் ஆசையும் நம்பிக்கையும் அவலமாய்ப் போயொழியும். ஏனென்றால் நாம் வாஸ்தவத்தில் இந்தியாவை வென்றவர்களல்லேம், அதனை வென்றவர்கள் போல ஆளவும் வல்லரல்லேம். அவ்வாறு ஆள எத்தனித்தால் சித்தியடைவோமோ என்று விசாரித்தல் அவசியமன்று. ஏனென்றால் அவ்வித எத்தனத்தால் நாம் பொருள் இழந்து அழிதல் திண்ணம்.

நாலாவது பிரசங்கம் முற்றிற்று.

திருநெல்வேலித் தச்சநல்லூர். } உ. மகாலிங்கம் பிள்ளை.

அறிவு விளக்கம்.

உற்றதுரைப்போன்.—[தொடர்ச்சி.]

பட்டுப்பூச்சி எப்படியானால் சிருஷ்டித்துக்கிரகிக்கின்றதோ, எப்படியானால் பூமியில் ஔஷதிகளுண்டாகின்றனவோ, எப்படியானால் ஜீவித்திருக்கிற புருஷனிடத்திலிருந்து நகங்களும், மயிர்களும் உண்டாகின்றனவோ அப்படியே அக்ஷரத்திலிருந்து பிரபஞ்சமுண்டாகிறது'' எனவும், அதேயுபநிஷத்து இரண்டாவது அத்தியாயத்தில் "இது சத்தியம் நன்றாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற நெருப்பிலிருந்து அதைப்போன்ற கணங்கள் ஸஹஸ்ர விதமாய் எப்படி யுண்டாகின்றனவோ (அதாவது ஒரு தீபத்திலிருந்து அநேக தீபங்கள் உண்டாவது போல) அப்படித்தான் ஓ! ஸவும்யனே அந்த அக்ஷரத்திலிருந்து நாநாவித பாவங்களும் உண்டாய் அங்கேயே போய்ச்சேருகின்றன''. "இவற்றிலிருந்து பிராணனுண்டாயிற்று. மனமும் சமஸ்தமான இந்திரியங்களும், ஆகாயமும், தேயு, வாயு, அப்பு, சர்வசாதாரணமான பிரிதிவியுமுண்டாயின.'' "புருஷன்தான் இந்தப்பிரபஞ்சமும், கர்மமும், தபஸும் உயர்ந்த அமிர்தமாகிய பிரமமும்'' எனவும், மூன்றாம் முண்டகம் முதலத்தியாயத்தில் இரண்டு பக்ஷிகள் எப்பொழுதும் இணைபிரியாமல் துணையாக ஒரே மரத்தில் வசிக்கின்றன. அவற்றில் ஒன்று அரசம்பழத்தை யுண்டுகொண்டும் மற்றொன்று உண்ணாமலே பல பக்ஷங்களைப்

பார்த்துக்கொண்டும் இருக்கின்றன. அதேமரத்திலிருந்துகொண்டு மோகத்திற்காளான புருஷன் முழுகி, சக்தியின்மையால் துக்கிக்கின்றான். மற்றொன்றாகிய மகிமையுள்ள ஈசனைச்சேர்ந்து பார்க்கும்போது சோகத்தினின்றும் விடுபட்டவனாகிறான். எப்போது சுவர்ணவண்ணமாயும், ஈசனாயும், கர்த்தாவாயும், பிரமத்துவாரமாயுமுள்ள புருஷனைக்காண்கிறானோ அப்போது அவன் வித்துவானாகி பாவபுண்ணியங்களைத் துறந்து மாசற்றவனாகிச் சிரேஷ்டமான சாம்யத்தை யடைகிறான் என்றும், "இந்தப் பிராணனானது சகல பூதங்களாலும் விளங்குகிறது. இதை அறியும் வித்துவான் வேறொன்றைக்குறித்தும் பேசுவதில்லை. அவன் லீலை ஆத்மாவில். அவன் இச்சை ஆத்மாவில். பரமஞானிகளுக்குள் அவன் சர்வசிரேஷ்டன். எனவும், ஷெ மூன்றாவது முண்டகம் இரண்டாவது அத்தியாயத்தில் 15 கலைகளும் அதனிடத்தைச்சேர்ந்து அந்தந்தப்பொறிகளும் அதனதன அபிமான தேவதைகளினிடத்தைச் சேர்ந்து கர்மங்களும் ஞானமயமான ஆத்மாவும் நிர்விகாரமான பரதேவதையில் ஒன்றாய்ச் சேருகின்றன. பெருகும் நதிகள் சமுத்திரத்தைச்சேர்ந்து பேரும் உருவும் விட்டு அஸ்தமிக்கின்றவாறே வித்துவானும் (ஞானியும்) பேரும் உருவும் விட்டுப் பெரியோர்க்கும் பெரியோனாகிய திவ்ய புருடனை அடைகிறான். அந்த பரப்பிரமத்தையறிந்தவன் பிரமமாகவேயாகிறான்.'' என்று கூறப்பட்டு இருப்பதினால் காரணமாகிய மண்ணைத்தவிரக் காரியமாகிய குடத்துக்கு எப்படி முக்காலத்தும் வேறு பொருளில்லையோ, அப்படியே பிரம்மத்தைத்தவிர நம்மவர் எடுத்துக்காட்டும் இரண்டு பக்ஷிகளெனும் ஜீவேஸ்வரர்களுக்கு வேறுபொருளில்லையென்று ஆகிறதினால் மண் காரியப்படாமுன் அதிற்குடமிருந்ததும் இல்லை. இடையிலும் மண்ணைத்தவிரக் குடம் வேறாயிருக்கவும் இல்லை. இருக்கிறதெனில் மண் வேறாகக் குடம் வேறாகப் பிரித்துக்காட்டுங்கள். அப்படி நீவிர் மண்ணைத்தவிரக்குடமும், நூலைத்தவிரப்படமும், பிரித்துக்காட்டாதவரை காரணமாகிய பிரம்மத்தைத் தவிரக் காரியமாகிய சித்தசித்தீஸ்வரன் என்கிற முப்பெயர்களும் வேறுவேறான பொருள்களுள்ளனவெனக்கொள்ள நியாய

மில்லையென்று உணருங்கள். சுவாமிகாள்! தங்கள் முன்னோர்கள் தாங்கள் கூறும் குளறல்களாகிய உரையை எவராவது விசாரித்துக் கைவிடப்போகிறாகளென்று பயந்தல்லவோ சொன்னதைக்கேட்டுச் செத்தாப்போற் கிடக்கவேண்டுமென்பது. வேதத்தையாவது அதினுரையையாவது சங்கித்தறிய லாகாதென லேன்? தங்கள் வசைக்கஞ்சி தங்கள் நிபந்தனைக்குட்பட்டு எதைச் சொன்னாலும் அடியேன் அடியேனென மறுமொழி புகலாறு மூடமே மோட்சம் தெளிவே நரகமென நம்பிக் காலங்கழிக்கும் சில அறியா வைணவர்கள் முன், தங்கள் முன்னோர்கள் "நித்யோ நித்யோ நாம் சேதனஸ் சேதனானாம்" என்று சுருதி வாக்கியங்கள் கூறி விசிஷ்டாத்வைத மதம் ஜீவித்து விட்டதாகக் கூறுகின்றனர். அதைச் சற்று விசாரிப்பாம். நித்யோ நித்யானாம் என்பதை நித்யோ அநித்யானாம் எனப்பிரிப்பது கூடாது நித்யோ நித்யோனாம் எனவே பிரிக்க வேண்டுமென்றீர்களே, நித்யமென ஒரு பொருளை யுரைப்பின் மற்றவை யனித்தியமென்றாகாவோ! ஜீவனும் ஈசனும் உலகமும் நித்யமேயாயின் அநித்யமெனவை அல்லதெது? அநித்யமின்றியே நித்யமெனும் பெயர் வந்ததோ? யாவும் நித்யமேயெனில் நித்யமாகிய ஜீவர்கள் நித்யமாகிய ஈசனையும் உலகத்தையும் பத்தில் பகிறொன்றாக மதியாது உயர்த்தித் தாழ்த்திக் கொள்ளவேண்டிய காரணம் யாது? நித்யத்திலும் பெரியது சிறியது என்கிற பேதமுண்டோ? நித்யமாகிய ஜீவர்களுக்கு கர்மமும் ஜனன மரணமும் பிராப்தமான விதமெவ்வாறு? ஒரு நித்யன் தன்னைப்போன்ற மற்றொரு நித்யனைத் தன்னிலுஞ் சிறந்தானென வேற்றுக் கொள்ளுதல் மூடமோ தெளிவோ? ஜீவன் நித்யமாயிருப்பது சுபாவமென அறிந்த நீரும் உங்கள் முன்னோர்களும் கைங்கிரியம் செய்தே நித்யபதவி யடைய வேண்டுமென மூடக்கொள்கையில் முயன்று பலரையும் முயலவைப்பது வேலையற்ற தாசிரியின் வேலையைப்போலல்லவோ பயனற்றதாகக் காண்கிறது.

பு. ஐயராமப்பிள்ளை,

ஆத்மா நேசன்.

I—விசயாலயன்—கி. பி. 890.

2. ஆதித்தன் I. 910.

3 *b*. பராந்தகன் I. 935.

4. *c*. இராஜாதித்தன் 955. 5*d* கண்டராதித்தசோழன் 970. 6. அரிஞ்செயன்

9. மதுராந்தகன் I. 1015. 7. *f* பராந்தகன் II 995.

88 ஆதித்தன் II 1000. *h*. குந்தவை. 10. *g*. ராஜராஜன் 1004.

11. *i*. ராஜேந்திர சோழன் 1018. *j*. குந்தவை.

k. அம்மங்கைதேவி.

12. *l*. குலோத்துங்கன் I. 1064.

13. விக்கிரமதேவகுலோத்துங்கசோழன் 1112

14. ராஜராஜகுலோத்துங்கசோழன் II. 1128

15. வீரதேவராஜராஜ குலோத்துங்கசோழன் 1160

16. விக்கிரமதேவன் 1235

a. காவிரி கரை கண்டவர.

b. வீரநாராயணனென்றும் மதுரை கொண்டகோப்பர கேசரிவர்மா வென்றும் பேர். பாணதேசத்தரசனையும் கொங்குதேச மன்னனாகிய வைதம் பாவையும் இலங்கைக்கோனையும் இராஜசிம்ம பாண்டியனையும் வென்று கேரளதேசத்தரசன் மகளை மணந்து சிதம்பரத்தைக் கனகத்தால் வேய்ந்தவர்.

c. கி. பி. 946 முதல் 957 வரையிலரசு செய்த அமோஹவர்ஷண னென்னுங் கிருஷ்ணராஜனாற் கொல்லப்பட்டார்.

d. திரிசிராப்பள்ளி ஜில்லாவில் காவிரிவடபாற் கண்டராதித்த மென்னும் நகரங்கண்டவர். திருவிசைப்பாவிற் கருவூர்த்தேவர் பாடிய ஆறும்பத்தாற் கங்கைகொண்ட சோளேச்சரம் பாடப்பெற்றதென்றும் ஒன்பதாம் பத்தாற்றஞ்சையி ராஜராசேச்சுரம் பாடப்பெற்றதென்றும், மேலுங் கண்டராதித்தர் பொய்யடிமை யில்லாப் புலவரென்றும், அவர் திருவிசைப்பா எட்டாங்கவி "வெங்கோல்——" என்ற செய்யுளால் தமது தந்தையாகிய பராந்தகன் ஈழமும் பாண்டிநாடும் திறைகொண்டு சிதம்பரம் பொன்னணிந்தாரென்றும் 10-வது செய்யுளால் கண்டராதித்தரோ தஞ்சையிலரசாண்டாரென்றும் கருவூர்த்தேவர் திருவிசைப்பா இரண்டாம் பத்தாற் திருக்களந்தையில் ஆதித்தர் 1 ஆதித்தேச்சரம் என்னுமாலயங் கட்டுவித்தாரென்றும் விளங்கும்.

e. சேவூரிற் போர்வென்ற ராஜேந்திர னென்றும் பேர்.

f. வீரபாண்டியனை இளம்பருவத்து வென்ற கரிகாலனென்றும் பேர்.

g. ராஜகேசரிவர்மா வென்றும் கோனேரி நேமி கொண்டானென்றும் நாமம். அவர் 1004 ல் தஞ்சை ராஜராஜேசுவரங்கட்டிச் சிலதானஞ் செய்திருக்கிறார். 997 முதல் 1003 வரையிலரசாண்ட மேற்குச்சளுக்கு வேந்த னிரண்டாவது வைத்திய நாயனைச் செயித்தவர். 1023-ல் இவர் பட்டத்துக்கு வந்ததாகச் சிலரெண்ணுவர்.

h. இரண்டாவது பராந்தகன் மகளும் ராஜராஜதேவன் அக்காளுமாகிய இவர் பல்லவதேசத்து அரசனாகிய லாண்டைய தேவனை மணந்தார்.

i. இரண்டாவது மதுராந்தகன் என்றும் வீரராஜேந்திர னென்றும் பரகேசரிவர்மாவென்றும் ராஜராஜ னென்றும் கங்கைகொண்டா

னென்றும் பேர். இவரே கங்கைகொண்ட சோளேச்சரங்கட்டி 1018 முதல் 1042 வரையிலரசாண்ட மேற்குச்சாலோக்கிய அரசன். மூன்றாவது ஜயசிங்கனைக்கூடற் சங்கமத்து வென்றார். இவர் மகனொருவன் பட்டத்துக்கு வந்தவுடன் மாண்டுபோனான்.

j. ராஜராஜன் மகளும் ராஜேந்திர சோழன் தங்கையுமாகிய குந்தவை 1015 முதல் 1022 வரையில் அரசு புரந்த கிழக்குச்சாலோக்கிய அரசன் விமலாதித்தனை வேட்டார்.

k. 1022 முதல் 1063 வரையிற் செங்கோலோச்சிய கிழக்குச்சாலோக்கிய அரசன் இராஜராஜனைக் கலியாணஞ்செய்து கொண்டார்.

l. ஜயதரனென்றும் வீரகவிராஜகேசரி வர்மாவென்றும் ராஜராஜேந்திரனென்றும் கோப்பரகேசரி வர்மாவென்றும் கரிகாலனென்றும் பேர். இக்குலோத்துங்கர் யுவராஜனாயிருக்கும் போது சக்கர கோட்டத்தை வென்று விருதராஜனைப்பயமுறுத்தி வெங்கைமண்டலத்தரசனாகிப்பின் சோழமண்டலத்துக்கும் வேந்தாகித் தஞ்சையிலும் காஞ்சியிலும் செங்கோலோச்சி 1113ஷூத்தில் ஜெயங்கொண்டான் எழுதிய பரணியிற் கூறியபடி 1034—1090 க்கும் மத்தியிற்பல்லவதேசத்தரசனுந்தன் சேனாபதியுமாகிய கருணாகரனைக்கொண்டு எழுகலிங்கந் திறைகொண்டு ஐந்து பாண்டியர்களையும் வென்று, 1069—1076 வரையிலரசாண்ட மேற்குச்சாலோக்கிய அரசன் இரண்டாவது சோமேசுரனைத் துங்கபத்திரைக்கருகில் மண்ணை யுத்தத்தில் முறியடித்து வீரபாண்டியன் மகன் விக்கிரமபாண்டியனை ஜெயித்துத் தன் தம்பி கங்கைகொண்ட சோழனுக்குப் பட்டங்கட்டினார். அவன் சுந்தரபாண்டியனென்று மதுரையிலரசாண்டான். ஜயதரன் திருவதிகையைத்தரிசித்துக் கோட்டாறுமயிலை வல்லை இவற்றைவென்று தினசிந்தாமணி, இளைசை வல்லபை, தியாக வல்லியென்னும் மனைவியர் மூவருடனே விளங்கினார். இவருக்கிருந்த திரிபுவனசக்கரவர்த்தியென்னும் பெயரை இவர் பின்னோர் 200 வருஷம் வரையில் வகித்து வந்தனர். வெங்கையை யாண்டபோது இவருக்கு ரஜிகனென்று பேர். இவர் சோழதேசத்தைப் புரக்கவந்தபோது வெங்கையை 1063 1077 வரையில் இவர் சிற்றப்பன் எழாவது விஜயாதித்தனும், 1077 78 வரையில் இவனிரண்டாவது மகன் இரண்டாவது ராஜராஜனும், 1078—1100 வரையில் மூன்றாவது மகன் வீரசோழனும் அரசாண்டார்கள். 1085 ல் வருஷம் எழுதிய விக்கிரமாங்கதேவசரித்திரத்தாலும் தமிழ் நூல்களாலும் ஹூல்சு சாஸ்திரியார் ஸ்ரீ கனக சபைப்

பிள்ளையவர்கள் நூலாலும் பல சாதனங்களாலும் விளங்கும். இச் சோமேசனை 1076-ல் 6-வது விக்கிரமாதித்தன் சிறைவைத்து 1127 வரையிலரசாண்டான்.

விஷேடக்குறிப்பு

கலிங்கத்துப்பரணியில்—சுராதிராஜன் இரண்டு கேசரி நாககன்னியைமணந்த கிள்ளி வளவன், களவழிகொண்டகோச் செங்கண்ணன் பட்டினப்பாலை கொண்டகரிகாலன் என்று மரபட்டவணை கண்டிருக்கிறது. இவ்வமிசாவளிக்கு மூலபுருடனே சுராதிராஜனென்றும் செம்பியனென்றும்பேர் கொண்டான்போலும். கோச்செங்கண்ணனுக்கு முன் கரிகாலனிருந்ததாகவுஞ் சிலசாசனங்களால் விளங்கும்.

விக்கிரமசோழனுலாவில்—பொய்கையார் களவழிகொண்ட செங்கண்ணன், யுத்தத்து 96 வடு ஏற்ற சோழன், சிதம்பரம் பொன் வேய்ந்த பராந்தகன் என்றும் வீரநாராயணன் மலைநாடு வென்ற அபயன், 18 மன்னரை வென்ற ராஜராஜன் கங்கை கடாரம் வென்ற ராஜேந்திரசோழன் (இவன் ராஜராஜன் மகன்) வெங்கையையும் மேற்குச்சாலோக்கிய தேசத்துள்ள கலியாணத்தையும் வென்ற ராஜாதிராஜனென்னும் கோராஜகேசரி வர்மன் கொப்பை வென்ற உடையார் ஸ்ரீராஜேந்திர தேவனென்னும் கோப்பரகேசரி வர்மன் திருவரங்கஞ் சர்ப்பசயனஞ் செய்த செம்பியன், கூடற்சங்கமம் வென்ற கோராஜகேசரி வர்மன் என்னும் வீரராஜேந்திர தேவன், பின் ஓர் வளவன், பாண்டியம் சேரம் சலாய கொங்கணம் கன்னடம் வென்றவன். (கனகசபைப்பிள்ளையவர்கள்) இவன்பேர் உடையார் ஸ்ரீராஜராஜ தேவனென்றும் கோராஜகேசரிவர்மா என்றுங்கூறுகிறார். ஹூல்சுசாஸ்திரியார் 1063-1112 வரையிலரசாண்ட முதலாவது குலோத்துங்கனென்கிறார்) இவ்வுலாவின் கதாநாயகனாகிய விக்கிரம சோழனென்ற உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவனென்னுங் கோபரகேசரிவர்மா (இவன்ராஜேந்திர சோழனல்லன் 1112-1127 வரையிலரசாண்ட விக்கிரமசோழனே என்று ஹூலுசு சாஸ்திரியார் சொல்லுகிறார்) இம்மரபு, வேஷகண்ட வமிசாவலி யோடுமுரணுவாறு கண்டு கொள்ளுக.

தரங்கம்பாடி
14—8—03. } ப. அ. முத்துத்தாண்டவராயன்.

ஜகத்ஜோதி.

[255-ம்பக்கத்தொடர்ச்சி.]

அபுல்பாஸிலோடு சென்ற அய்யாஸ் அக்பர் சக்கரவர்த்தியைக்காணும் பொருட்டு அவரது ஆசாரவாசலை யணுகவே அவனுக்குண்டாகும் ஆநந்தத்துக்களவில்லை. எங்கு பார்த்தாலும் சீருஞ்சிறப்புமாகவே இருந்தது. எதுவும், கண்டவர் மனமுங் கண்ணுங் கவர்ந்திட வனப்பு வாய்ந்திருந்தது. வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ்சோலை, கொண்டன் மீதணவுஞ்சோலை குயிலினங்கூவுஞ்சோலை" என்றபடி உத்தியானவனங்களின் சிறப்பும் அவைகளிலுள்ள அழகிய வாவிகளின் சிறப்பும் பலவர்ணக்கற்களால் சமைக்கப்பட்ட சபாமண்டபங்களின் அற்புதக்காட்சியும் அய்யாஸ் மனத்தைக்கவர்ந்தன. பாரஸீகமகாகவிகளின் அற்புதவர்ணனைகளெல்லாம் அவன் மனத்தில் தோன்றின. அவ்வின்புற்ற காட்சிகளை யெல்லாங் கண்டு களித்து அய்யாஸ் கொலுமண்டபத்தைச் சார்ந்தான். அம்மண்டபத்தைப்பார்க்கப்பதினாயிரங்கண்கள் வேண்டும். அது மிக விசாலமுள்ளதும் பல்லாயிரம்பேர் ஒரேகாலத்தில் ஒருங்குசேர்ந்திருக்கக்கூடியதாகவுமிருந்தது. பலவர்ணங்களையுடைய சதுரச் சலவைக்கற்களால் தளமிடப்பட்டுப் பற்பல விதமாய்ச் சித்திரவேலைசெய்யப்பட்டுப் பார்ப்போர் கண்களைப்பறிக்கத்தக்க நிறங்களோடு கூடிய ரத்தினகம்பளங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அண்ணாந்து பார்க்கின் பலசித்திரப் பட்டாடைகள் விதானங்களை அலங்கரித்தன சுவர்களெல்லாம் பற்பல தேசத்துச்சித்திரக்காரர்தத்தம் சாமர்த்திய முழுவதையுங் காட்டி எழுதிய பற்பல அழகிய படங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஊடே நுட்பமான வேலைசெய்யப்பட்ட பல அழகிய சிலாப்பிரதிமைகளும், சந்தனமரத்தினாற் செய்யப்பட்டு கைதேர்ந்த சிற்பிகளது நுண்ணிய வேலைத்திறமை வாய்ந்த பல மரப்பிரதிமைகளும் மண்டபங்களும் கமகமவென்று பரிமளகந்தங்களை வீசிக்கொண்டு அவ்வற்புதமண்டபத்தைச் சிறப்பித்தன. பெரிய நிலைக்கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருந்ததால் எப்பக்கம் வாசல்

எப்பக்கம் சுவர் என்று அறிய வொண்ணாவிதம் அவை எல்லோரையும் திகைக்கச்செய்தன. காஷ்மீரதேசத்தின் பரிமள ரோஜாப்பூக்களை நிகர்த்த புஷ்பங்கள் போலவும் செந்தாமரை வெண்டாமரைப்பூக்கள் போலவும் மற்றும் பலவித அற்புதப்பூக்கள் போலவும் வெட்டியாலும் பலவர்ணப்பட்டுகளாலும், காகிதங்களாலும் வேலை செய்யப்பட்டு விதானங்களின் பற்பல இடங்களில் தொங்கவிட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தன. பலபிரதிமைகள் மணிவிளக்கைத்தாங்கிக் கொண்டிருந்தன. தூண்களும் விட்டங்களும் மரகதத்தாலும் பவளத்தாலும் செய்யப்பட்டனவோ வென்று பிரமிக்கத்தக்கவாக விளங்கின. சக்கரவர்த்தி கொலுவீற்றிருந்த மண்டபத்தின் விதானங்கள் காஷ்மீர் சால்வைகளாலும் டாக்காமஸ்லின்களாலும் அலங்கரிக்கப்பட்டுத் தேவேந்திரன் சபைபோல் விளங்கிற்று. எல்லூர் ரத்தின கம்பளங்கள் தளத்தை அலங்கரித்தன. மகமல் மெத்தை தைக்கப்பட்டும் கருங்காலிமரங்களிலும் சந்தனமரங்களிலும் நன்றாய் வேலைசெய்யப்பட்ட யானைகளாலும் சிங்கங்களாலும் தாங்கப்பட்டு மிராநின்ற எண்ணிலா ஆசனங்கள் அச்சபாமண்டபத்தை அலங்கரித்தன. சக்கரவர்த்தியின் சிங்காசனம் பளபள வென்று ஒளிவீசா நின்றபத்தரை மாற்றுத்தங்கத்தால் அமைக்கப்பட்டு கோல்கொண்டா முதலிய தேசத்து முதல்தர வச்சிரவைடூரிய மாணிக்கமரகதங்களால் இழைக்கப்பட்டுப் பார்ப்போர் கண்களைப் பறிக்கும் வண்ணம் தேஜோமயமாய் விளங்கிற்று. மெய்காப்போரும் மற்றுமுள்ள காவலாட்களும் அணிவகுத்து நின்றது அற்புதக் காட்சியே. சக்கரவர்த்தியும் சாந்தமும் கம்பீரமுமான குணத்தோடுகூடி மந்திரிகளும் வித்வான்களும் பிரபுக்களும் புடைசூழச்சிங்காசனத்தில் தாரா கணங்களுக்கு மத்தியில் சந்திரன் போல் விளங்கினர். அய்யாஸ் இவற்றையெல்லாம் கண்டு பிரமித்துவிட்டான். பாரஸீககவிகளது வர்ணனையெல்லாம் அவன் ஞாபகத்துக்கு வரவே அவன் அவைகள் சற்றும் இவ்வற்புதக் காட்சிக்கிணையில்லையென்று நீக்கல் தருதி யென நினைந்தான். அடக்கொணு ஆச்சரியத்துடன் அவனும் அபுல் பாஸிலைப் பின்தொடர்ந்து அச்சபாமண்டபத்தை அணுகவே சக்கரவர்த்தி

நீங்கலாக ஏனையோர் அனைவரும் எழுந்து நின்று மரியாதை பண்ணினர்கள். கந்தர்வர்களோ புஷ்பமாரி பொழிந்தார்களோ வென்று பிரமிக்கும்வண்ணம் நாலாபக்கங்களினின்றும் புஷ்பமாரி பொழியத்தொடங்கின. மெல்லிய சரடுபோன்ற பனிநீர்த்தாரைகள் பற்பல அற்புத இயந்திரங்களினின்றும் வீசப்படவே எங்கும் பரிமளம் வீசிற்று. இத்துணை வைபவங்கள் வாய்ந்த அம்மாண்புறு மண்டபத்தின் ஊடேசென்று அய்யாஸ் அக்பர் சக்கரவர்த்தி வீற்றிருந்த சிங்காசனத்தின் பக்கல் சென்று மண்டியிட்டு தலை வணங்கி எழுந்து சக்கரவர்த்தி ஆக்ஞையில் ஆசனத்தில் அமர்ந்தான், அக்பர் சக்கிரவர்த்தியும் அபுல் பாஸிலுடன் இரண்டொரு வார்த்தை பேசிய பின்னர் நம் அய்யாஸுடன் சிறிது அளவளாவத்தொடங்கினர். [இன்னும் வரும்.]

எஸ். சாமிநாதையர்.

நன்னூல்.

"எந்நூல்களினும் இந்நூல் நன்னூல்" என்று புலவர் புகழும் இம்மாட்சிமைபெற்ற இலக்கணம் சனகாபுரம் பவணந்தி முனிவரெனும் சமணரால் செய்யப்பட்டது. இவர் கி. பி. பத்தாம் சகாப்தத்தில் இராமநாதபுரத்துக்கும் மதுரைக்குமுள்ள மத்தியதேசத்தினின்றும் அரசுபுரிந்த சீயகங்கராஜன் காலத்திலிருந்தவர். இவ்வரசன் வேண்டுகோளின்படியே இவர் இந்நூலை எவரும் வியக்க இயற்றினர். இதில் 462 சூத்திரங்கள் உண்டென்பதும், எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல், பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல், எனத் தசவியல்களுள்ளன என்பதும் யாருமறிந்த விஷயமே. இந்நூலுக்கு அகத்தியம், தொல்காப்பியங்களை முதனூலாயினும் ஒழுங்குக்குப் பாணினி முனிவர் செய்த பாணினீயம் என்னும் சமஸ்கிருத இலக்கணத்தின் கிரமத்தையே இவர் பின்பற்றினர். இதில் அனுசரித்திருக்கப்பட்ட ஒழுங்கும், சூத்திரங்களின் பொருட்செறிவும் திட்பநுட்பங்களும் மிகவும் வியக்கத்தக்கவை. போயிஸ், சாமுவேல்பிள்ளையென்ற இருவரால் ஆங்கிலேய பாஷையில் செய்யப்பட்ட இதன் மொழி பெயர்ப்பைப் பிரசட்டன் என்னும் ஆங்கிலேய வித்துவான் ஒருவர் பார்த்தமாத்திரத்தில் உலகத்தின் கண்ணுள்ள எப்பாஷைகளிலுமிருக்கும் இலக்கண நூல்களில் இதற்கொப்பதோர் இலக்கணநூலின்

றென்று கூறிப்பாராட்டினராம். தமிழிலேயே பார்வையிட்டிருக்கும் பக்ஷத்தில் இன்னும்யாது சொல்லியிருப்பாரோ. இந்நூல் மகாமேன்மை பெற்றது என்பதற்கும், ஏனை இலக்கணங்களினும் இதை மிகப்பாராட்டி வந்தனரென்பதற்கும் இதற்கு ஏற்பட்டிருக்கிற ஏழு உரைகளே சான்றாகும். முதல் முதல் இந்நூலுக்கு உரை எழுதினவர் இந்நூல் சிறப்புப்பாயிரஞ் செய்த சமணமுனிவரென்ற இவரது மாணக்கரே. 2-வது ஆசிரிய நிகண்டு செய்த ஆண்டிப் புலவரென்னும் வித்துவான். முதலிரண்டியல்களுக்கு மாத்திரம் உரையெழுதினர். இதற்கு உரையறி நன்னூலெனப்பெயர். 3-வது இலக்கணக்கொத்தைச்செய்த சுவாமிநாததேசிகருக்கு மாணக்கரான சங்கரநமச்சிவாயர் என்பவர் இதற்கு விருத்தியுரை எழுதினர். இது மிகவும் உசிதமானதும், வித்வான்கள் எவருங்கண்டு வியக்கத்தக்கதுமானது. முற்கூறப்பட்ட சமணாசிரியர் உரையைக்காட்டிலும் இது வெகுமேன்மைபெற்றதெனச்சொல்லப்படுகிறது. சுருங்கச்சொல்லில் முன்னதற்கும் பின்னதற்கும் வேம்புக்கும் கரும்புக்குமுள்ள வித்தியாசம் உண்டெனக்கூறப்பட்டிருக்கிறது. 4-வது தொல்காப்பியச் சூத்திரவிருத்தி. இலக்கணவிளக்கச் சூறாவளி என்ற இலக்கணங்களுக்குக் கர்த்தாவாகிய சிவஞான முனிவர் நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயர் எழுதிய விருத்தியுரையைத்திருத்திப் புத்தம் புதிய உரையென ஓர் உரையெழுதினர். இவர் காலமும் கிட்டத்தட்டச் சங்கரநமச்சிவாயர் காலமே. 5-வது காஞ்சிபுரத்தில் பிறந்து யாழ்ப்பாணவட்டகையில் வெகுகாலம் தன் வாழ்நாளைக் கழித்த கூழங்கைத்தம்பிரான் என்னும் வித்வான் ஒரு வியாக்கியானம் எழுதினதாகச் சொல்லப்படுகிறது. 6-வது சில வருடங்களுக்கு முன் சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ்ப்பண்டிதராய் இருந்த விசாகப்பெருமாள் ஐயர் என்ற சைவவேளாளகுலதிலகராகிய இலக்கணவித்வான் இந்நூலுக்குக் காண்டிகையுரையெழுதினர். இவ்வுரைதான் தற்காலம் பள்ளிக்கூடங்களில் வழங்கிவருகின்றது. இக்காண்டிகை யுரையையும் முன்னர்க்கூறப்பட்ட விருத்தியுரையையும் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்கள் புதுக்கி வெகுநேர்த்தியாக அச்சிட்டிருக்கின்றனர். 7-வது இராமநாதபுரம் சமஸ்தானத்திற் பிறந்து முப்பது நாற்பது வருடங்களுக்கு முன் சென்னையில் வசித்த இராமானுஜக் கவிராயர் என்பவர் இதற்கு ஒரு நேர்த்தியான உரையெழுதி "இராமானுஜக் காண்டிகை" எனப்பெயருமிட்டனர். இதனை விருத்தியுரை என்றே சொல்லக்கூடிய அவ்வளவு மாண்பு பொருந்திய உரையென்னலாம். இவரே "தொல்லைவடிவின வெல்லா வெழுத்து மாண்டெய்து மெகரவொகரமெய்ப்புள்ளி" என்ற நன்னூல் விதியை "ஏகார வோகார மெய்ப்புள்ளி" என மாற்றிச்சரியான பொருள் கொண்ட மகானென மிகவியக்கப்பட்டவர். "ஆசிரிய நிகண்டு" படியவரே "ஆசிரிய நன்னூல்" என்று செய்திருப்பதாகக் கேள்வி.

பொசாரியர்.

ஐங்குறுநூறு.

இதுகாறும் வெளிவராத இவ்வரிய சங்கச் செய்யுளை உரையுடன் கும்பகோணம் மகாவித்துவான் ஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள் மிகவும் அழகாயும் அருமையாகவும் 180 பக்கங்களில் லோகோபகாரமாய் அச்சிட்டு வெளிப்படுத்தியதற்கு அவர்களுக்கு நம் தமிழ் நாட்டார் மற்றுமோர் முறை கடமைப்பட்டிருக்கின்றனர். பழைய நூலை வெளிப்படுத்துகிற தென்றால் சாமானியமன்று அதில் உண்டாகும் உழைப்பும் காலச்செலவும் பொருட்செலவும் நூலாராய்ச்சி செய்து பழகியவர்களே நன்கு அறிவார்கள். ஐயர் அவர்கள் எழுதியிருக்கும் முகவுரையும் புலவர் வரலாறுகளும் பல அரிய விஷயங்களை விளக்குவதன்றி அவர்களது புத்தி நுட்பத்தையும் ஆழ்ந்த ஆராய்ச்சியையும் நன்கு புலப்படுத்துகின்றன. நூலின் பின்னர் சேர்க்கப்பட்டிருக்கும் பிரயோக விளக்கமும் அரும்பதவுரையும் அவர்களது அரிய பெரிய உழைப்பையும் மதிநுட்பத்தையும் தெற்றெனத் தெரிவிக்கின்றன. இவ்வரிய நூலின் விலை ரூபா ஒன்றரையே. இதனைக்காலஞ்சென்ற அரிய தமிழ் வித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீதியாகராஜசெட்டியார் அவர்கள் பெயருக்கு உரியதாக்கியது ஐயர் அவர்களது செய்ந்நன்றியறியும் அற்புத குணத்தை அழகாகக்காட்டுகின்றது. இன்னும் வெளிவராத அரிய பழைய நூல்களை ஐயர் அவர்கள் விரைவில் வெளிப்படுத்துவதற்கு உற்சாகம் உண்டாகும் வண்ணம் தமிழ் நாட்டுக் கனதனவான்களும் வித்தியார்த்திகளும் இந்நூலை வாங்கிப்படித்துத் தம்கடமையைச் செய்யத் தவறார்களென்று நம்புகின்றோம். அதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும்.

இவ்வரிய நூலிற் கூறப்பட்ட விஷயங்களை ஐயர் அவர்களது வார்த்தைகளாலேயே கூறுவோம். "ஐங்குறு நூறென்பது கடைச்சங்கப்புலவர்கள் அருளிச்செய்த நூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல்,

கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற எட்டுத்தொகைகளில் மூன்றாவது. சொற்சுவை பொருட் சுவைகளிற் சிறந்தது; பொருள்களின் இயற்கை யழகையும் தமிழ்ப்பாஷையின் இனிமையையும் நன்கு தெரிவிப்பது; இத்தமிழ்நாட்டின் பழையகாலத்தின் நிலைமையையும் சில சரித்திரங்களையும புலப்படுத்துவது; பொருளிலக்கணத்தின் பகுதிகளாகிய அகம்புறம் என்னும் இரண்டனுள் அகத்தின் பகுதிகளுக்கு இலக்கியமாக அமைந்துள்ளது. இதிலுள்ள பாக்கள 501. இப்பாக்கள் 3 அடிச்சிற்றெல்லையையும் 6 அடிப்பேரெல்லையையும் உடையவைகள். 129, 130-ம் செய்யுட்கள் ஒரு பிரதியிலும் காணப்படவில்லை. 416, 490-ம் செய்யுட்களின் இரண்டாமடிகளிற் சீர்கள் குறைந்துள்ளன. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லையென்னும் ஐந்திணையொழுக்கங்களை நற்றிணை முதலியவற்றிலுள்ள பாக்களைக்காட்டிலும் அடிவரையறையிற் குறைந்த நூறு நூறுபாக்களால் தனித்தனியே விளக்குகின்றமையின், இந்நூல் ஐங்குறுநூறென்று பெயர்பெற்றது. இதிற் கடவுள் வாழ்த்துப்பாரதம்பாடிய பெருந்தேவனாராலும்,முதநூறாகிய மருதம்ஓரமபோகியாராலும், இரண்டாநூறாகிய நெய்தல் அம்மூவனாராலும், மூன்றாநூறாகிய குறிஞ்சி கபிலராலும், நான்காநூறாகிய பாலை ஓதலாந்தையாராலும், ஐந்தாநூறாகிய முல்லை பேயனாராலும் இயற்றப்பட்டன. இத்தொகையைத் தொகுத்தார் புலத்துறை முற்றியகூடலூர் கிழார். தொகுப்பித்தார் யானைகட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறையார். இந்நூலின் நயமும் நடையும் பழைய நூல் ஆராய்ச்சிவல்லோர்க்கு நன்குபுலப்படும். இதன் நடை யழகுக்கு ஓர் உதாரணமெடுத்துக்காட்டுவோம்.

"இதுவென் பாவைக் கினியநன் பாவை
இதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்
றலம்வரு நோக்கி னலம்வருஞ் சுடர்நுதல்
காண் டொறுங் காண் டொறுங் கலங்கி
நீங்கின ளோவென் பூங்க ணோளே".

பந்திராதியர்.

சபாபதி நாவலரவர்கள்.

நம் தமிழ்நாட்டுவித்துவ சிரோமணிகளில் ஒருவராகிய இவர் சமீபகாலத்தில் சிதமபரம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் சிவபதம் அடைந்தாரென்பதைக் கேள்வியுற்ற நாம் பெருவியசனமடைந்தோம். நம் தமிழ் வித்துவான்களில் இவரையறியாதார் ஒருவருமிலர். இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த வடகோவை யென்னும் ஊரிற் பிறந்தவர். ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களிடம் கல்வி கற்றுத்தேர்ந்தவர். முதலில் சிதம்பரம் தமிழ்ப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயராயிருந்து பின் திருவாவடுதுறை மடத்து ஆதீன வித்வானாக இருந்தவர். சேதுபதி யவர்களின் பெருங்கொடைக்குப் பாத்திரராய் சில நாள் அவர் சமுகத்திலேயே வித்வத்பிரசங்கமாரி பொழிந்து வந்தவர். இவர் சிதம்பரமே தம் வாசஸ்தலமாகக் கொண்டு தமிழ்ப்பாஷா விஷயமாய் நூல்கள் இயற்றியும் பத்திரிகைகள் பதிப்பித்தும், பாடஞ்சொல்லியும் பிரசங்கங்கள் செய்தும் காலங்கழித்து வந்தனர். சித்தாந்த சாஸ்திர முறைகளையும் மாபாடியத்தையும் மடாதிபதிகளிடம் நன்கு ஓதியுணர்ந்தவர். இவர் ஞானாமிர்தம் என்ற ஓர் செந்தமிழ்ப் பத்திரிகையைச் சில காலம் நடாத்தி வந்தனர். இவரியற்றிய நூல்களாவன:—சிதம்பர சபாநாத புராணம், சிவகர்ணாமிர்தம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரிய சங்கிரகம், ஏசுமதசங்கற்ப நிராகரணம், இலக்கண விளக்கப் பதிப்புரைமறுப்பு, வைதிககாவிய தூஷணமறுப்பு, ஞானசூடாமணி, ஞானாமிர்தம் என்ற வசன கிரந்தம், திருச்சிற்றம்பல வந்தாதி, திருவிடைமருதூர் பதிற்றுப்பத்தந்தாதி, மாவையந்தாதி, சிதம்பர பாண்டிய நாக மும்மணிக்கோவை, வடகோவைச்செல்வ விநா

யகரிரட்டைமணிமாலை, நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், வதரிநகர் தண்டபாணிக்கடவுள் பதிகம், புறவார்பனங்காட்டூர்ப் புறவம்பைப்பதிகம், திராவிடப்பிரகாசிகை முதலிய நூல்களியற்றிக்கீர்த்திபெற்றவர். இவற்றுள் முதற்கூறிய சில வடமொழிக் கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு. திராவிடப் பிரகாசிகையில் பல அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. இவருக்கு வடமொழி வித்பத்தியுமுண்டு. அந்தோ! இவ்வரிய தமிழ் வித்துவான் நம்மினின்றும் நீங்கியது நம் தமிழ்நாடு செய்த தௌர்பாக்கியமே.

சமாசாரக் கொத்து.

துளசிதைலத்தினால் ஈக்களும் மூட்டைப்பூச்சிகளும்இறந்துபோகின்றனவாம்.

ஜூலைமீ 19உ கோயம்புத்தூரில் இரவு 8-மணிக்கு ஒரு வால்நக்ஷத்திரம் காணப்பட்டதாம்.

உலகம் முழுவதிலும் நூற்று அறுபது கோடி ஜனங்களிருப்பதாகக்கணக்கிட்டிருக்கிறார்கள்.

எறும்பின் திறமை:—தன்னிலும் 80-பங்கு கனமுள்ள ஓர் இறந்த வெட்டுக்கிளியை ஓர் எறும்பு இழுத்துச்சென்றதாம். இது ஓர் இறும்பூதே.

எங்கும் ரோஜாக்காடாயிருக்கும் காஷ்மீர தேசத்தில் பெருமழைபெய்து வெள்ளக்காடாய்க்கிடக்கிறதாம். அநேக வீடுகளும் போய்விட்டன.

"மெடோரா" என்னும் ஒரு குதிரையின் விலை 5600-கினி அல்லது 88200ரூ. இது அரசருக்காக வாங்கப்பட்டிருக்கிறதாம். இதன் சக்திதான் யாதோ அறியோம்.

நம் சென்னை இராஜதானியில் மட்டும் 50 இலக்ஷம் பிள்ளைகள் படிப்பில்லாமல் மூடர்களாயிருக்கிறார்கள். இதைக்காட்டிலும் தேசக்ஷேமத்துக்குப் பெரும் தௌர்பாக்கியமென்ன இருக்கிறது.

நமது வைஸிராய் லார்ட் கர்ஸன் பிரபு அவர்கள் இன்னும் 2-வருஷ காலம் வைஸிராயாக இருப்பாரென்று தெரியவருகிறது. இக்காலத்துக்குள் தாம் செய்ய உத்தேசித்திருக்கிற சீர் திருத்தங்களையெல்லாம் செய்து முடிப்பார் போலும்.

பீனசத்துக்கு மருந்து:—சீனக்கார நீரால் தினம் மூன்று முறை மூக்கையலம்பவேண்டும். துளசி ரசம் அல்லது கசப்புச்சுரைக்காயின் சாற்றை வெண்மையான துணியில் தோய்த்து மூக்கில் பிழிந்தால் அதி சீக்கிரத்தில் பீனசம் நீங்கும்.

இவ்வுலக முழுமையும் செலவாகிற நிலக்கரியில் மூன்றில் ஒரு பங்கும், செம்பில் ஒன்பதில் ஒருபங்கும், இரும்பில் எட்டிலொருபங்கும், ஈயத்தில் ஐந்தில் ஒரு பங்கும், வெள்ளியில் ஒன்பதில் ஒருபங்கும், தங்கத்தில் பாதியும் பிரிட்டிஷ் இராஜ்யத்திலிருந்து எடுக்கப்படுகின்றனவாம்.

ருஷியாதேசத்திலுள்ள மஸ்கோவில் பல் வைத்தியர் ஒருவர் விழுந்துபோன பற்களுக்குப் பிரதியாக நூதனமாதிரியான போலிப்பல்கட்டுகின்றனராம். அவை சில நாட்களுக்குள் தசைக்குள் சாதாரணப் பற்களைப்போல் ஊன்றி உறுதிப்படுகிறதாம். இது ஒரு கலியுகப்புதுமையே.

பெரியகுடும்பம்:—சீயம் அரசரது குடும்பமே இவ்வுலகில் பெரிய குடும்பம். அவருக்கு பட்டஸ்திரீகள் இருவரும் வேறு 88 மனைவிகளும் 72 குழந்தைகளுமுண்டு. ஆனால் ஆப்பிரிக்காவில் ஒரு ஜாதி நாட்டாண்மைக்காரனுக்கு 23 பிள்ளைகளும் 29 பெண்களும் 390 பேரப்பிள்ளைகளுமிருந்ததாம்.

அமேரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்தில் 30 மெத்தைகளுள்ள வீடு ஒன்று புதிதாய்க்கட்டப் பட்டிருக்கின்றதாம். அதன் பெயர் எட்ஹு. அவ்வீட்டின் உயரம் தளவரிசைக்கு மேல் 455 அடி. தற்சமயம் உலகத்திலுள்ள வானத்தை யளாவிய கட்டடங்களில் இதே மகா உன்னதமான தென்பதற்கு ஐயமில்லை. த-நீ.

பெரிய மலை:—சாந்த மகாசமுத்திரத்தில் ஞாயிறு தீவு என்ற ஒரு தீவுண்டு. அதில் ஒரு பெரிய மலையிருக்கிறது. அது தரை மட்டத்துக்கு மேல் சிகரம் வரை 30,000 அடி யிருக்கிறது. இதுவே உலகத்தில் பெரியமலை. ஆனால் சலமட்டத்துக்கு மேல் 2000 அடிதான் தெரிகிறது. மற்றைப்பாகம் ஜலத்தில் அமுங்கியிருக்கிறது.

மகா பெரிய வைரம்:—தென் ஆப்பிரிக்காவில் காப்டன் ஜார்கன்ஸென் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட எக்ஸேல்சியர் என்ற நாமம்பூண்ட பேர்போன வைரம் இப்பொழுது ஆம்ஸ்டர்டாமுக்கு வந்திருக்கிறது. இது 971 காரெட் இருக்கிறது. இதுவே உலகத்திலுள்ள வைரங்களிலெல்லாம் பெரியது. இதன் மதிப்பு விலை 10 இலட்சம் பவுன்.

மழை யந்திரம்:—வேண்டியபொழுது மழை பெய்யச் செய்யும் யந்திரமொன்றைப் பாரிஸ் நகரத்தில் முனிசிபல் இன்சினியர்கள் செய்திருக்கிறார்களாம். இந்த யந்திரம் 720 பவுன் விலையுள்ளதாம். இம்மாதிரி யந்திரங்கள் நம் தேசத்துக்கு வந்தால் பஞ்சம் என்பதே அரிதாய்விடும். குடியானவர்கள் பாடு கொண்டாட்டமே. அந்நாள் எந்நாளோ?

திருவனந்தபுரம் விநோத கைத்தொழிற் சாலையில் வாழை நாரெடுக்கும் யந்திரமொன்று வெகு சாமர்த்தியமாய்ச் செய்து முடிவாகி யிருப்பதாயறிகிறோம். அவ்வியந்திரம் ஒன்றுக்கு ரூ 9—8—0 வீதம் அச்சாலையில் வாங்கலாம். ஷை தொழிற்சாலையில் அன்னாசிச்செடியின் நாரையுமெடுத்து நெசவு வேலைக்குபயோகப்படுத்த முயல்கின்றனராம்.

பெரியபூச்சி:—போர்னியோ தீவில் ஒரு வகைப்பூச்சியிருக்கிறது. அது பார்வைக்கு முறட்டுக்கோலின் துண்டுபோலிருக்கும். இதுவே உலகத்திலுள்ள பூச்சிகளிலெல்லாம் பெரியது. இதுவரை தெரிந்த பூச்சிகளில் 13 அங்குலத்துக்கு மேல் மேலான பூச்சிகிடைக்கவில்லை. மரக்கிளையில் தங்கியிருக்கையில் இப்பூச்சிக்கும் கிளைக்கும் வித்தியாசம் தெரியாதாம்.

புதுபோப் ஆசாரியர்:—காலஞ் சென்ற போப்லீயோ ஆசாரியர் ஸ்தானத்தில் கார்டினல் சாட்டோ என்பவர் போப் ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர் 10-ம் பையஸ் என்ற பட்டத்தைத்தரித்திருக்கின்றனர். இது வரை 260 பேர்கள் போப் என்ற பட்டத்தைத் தரித்திருக்கின்றனர். தற்காலபோப் குருவின் பிராயம் 68. இவர் முன் குருவைப்போல் உயர் குலத்தினரல்லராம்.

பெரியகுடை:—ஆப்பிரிக்காவில் ஒரு சிற்றரசனுடைய குடை மகாபெரியதாயிருக்கிறது. அதன் குறுக்களவு 25 அடி. அது நம்கோவில்களிலுள்ள குடைகள் மாதிரி பலவர்ணங்களுள்ளதாம். அதன் பிடிகோல் 15 அடி உயரமாம். அதைப்பிரித்துப் பிடிப்பதற்கு 4 பேர் வேண்டுமாம். யுத்தத்தில் அக்குடைபோய் விட்டால் தளகர்த்தனிடமுள்ள கொடிபோனாற் போல பாவிப்பார்களாம்.

சென்னைப் பிரசிடென்ஸி காலேஜ் தமிழ்ப் புலவராயிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து நமக்குண்டாகும் வியசனத்துக்கோர் அளவில்லை. இவர் வடமொழிப் பயிற்சியும் தென்மொழிப் பயிற்சியும் நன்கு வாய்ந்த புலவர். இரண்டொரு செய்யுட் பிரபந்தமும் வசனப்பிரபந்தமுமியற்றியுள்ளார். இவரது பிரிவு எவர்க்கும் துயரை விளைவிக்கக்கூடியதே.

நம் தேசத்தார் போஜனத்துக்குப் பிறகு தாம்பூலம் தரிக்கிறார்கள். இதைச்சிலர் ஐரோப்பியர் சொற்கேட்டு கேடுள்ளது என்று கூறுகிறார்கள். அதன்குணாகுணத்தை ஆராய்வோம். வெற்றிலையில் தடவும் சுண்ணாம்பு பவளபஸ்மத்தின் குணத்தைக்கொடுத்து ஜீரணசக்தியையுண்டு பண்ணுகிறது என்று வைத்திய சாஸ்திரக்கொள்கை. ஆகையால் தாம்பூலம்தரிப்பது நன்மையே. ஆனால் அடிக்கடி போட்டுக்கொள்ளுதல் கேட்டை யுண்டாக்கும்.

இருகைகளுமில்லாத ஓர் நியாயதிபதி:—தெக்ஸஸ் என்னுமூரில் அம்பிலியனுக் கருகில் பாலடெஸ்மஜ் என்னும் நாமத்துடன் ஒருவரிருக்கின்றனர். இவர் சமீபகாலத்தில் நியாயாதிபதியாயும் நியமிக்கப்பட்டவர். இவருக்கு இரு கரங்களுமில்லை. கைகளால் செய்யவேண்டிய வேலைகள் யாவையும் கால்களால் செய்கின்றார். இவர் தமது கால்களால் கத்தி, முள் கரண்டிகளைக் கொண்டு சாப்பிடுவதையும் சுலபமா யெழுதுவதையும் கண்டவர் அதிசயிக்காதிரார். ஆறு மாதகாலமாய் இவர் மாகாண லிகிதராயிருந்தார். அக்காலத்தில் அவர் கணக்குகளைப் பிழையற வைத்திருந்ததாகவும் எழுத்துக்கள் சுத்தமானவையாயிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

நா. சீ. ஸி.

உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம் 2 } 1903ளு செப்டம்பர்மீ { இலக்கம் 10

விவேக சிந்து.

[தொடர்ச்சி.]

மாயை பிரம்ம விவர்த்தம். அது வேதத்தில் பிரம்ம விவர்த்தமாயை என்று சொல்லப்படும். வேதாந்த சித்தாந்த உபநிஷதவாக்கியங்களிலே மதித்த அர்த்தம் இது பிரமாணசித்தம். வேதவிரோதமான மதம் பாஷண்டமத மென்று விட்டுவிடவேண்டும். அது விருதாகற்பனை. விவர்த்த லக்ஷணம் கேள். பிரம்மம் நிர்விகாரமாய் எப்படி எப்படி யிருக்கிறதோ அப்படியே இருக்கிறது. அதற்கு வேறுபாசமாய்ப் பிரகாசிக்கிறதே பிரம்மம். விவர்த்தம் நிசாகாரம். விசிதமாகாமலே இருக்கும் சூரியப்பிரகாசத்தினாலே கானல் ஜலம் எப்படி வர்த்திக்கிறதோ அப்படி விவர்த்தம் தோன்றும். ஒவ்வொருவேளையிலே பழுதைதானே பாம்பாய்த்தோன்றுகிறாப்போல் மாயா விவர்த்த மில்லாததைக் காண்பிக்கும். ஜீவனுக்கு அறியப்பண்ணுகிற மட்டில் இப்படியென்று ஏகதேச திருஷ்டாந்தம் சொல்லவேண்டியதே யல்லாமல் பிரம்மத்துக்கு உபமானமே யில்லை. பிரம்மத்திலே மாயாவிவர்த்தங் காண்பித்தபடியினாலே அவ்விடத்தில் குணசாமிய முண்டாயிற்று. இந்த வாக்கியானுவர்த்தத்திலே சாங்கிய சிந்தாந்தக்காரன் பிரகிருதிபுருஷனென்று உண்டு பண்ணிக்கொண்டான். இதுகுணத்திரய சமேதம். இதுவே

ஈசுவரனுடைய உன்மணியவஸ்தை. இந்தப்படிசைதன்னியயுக்த மானபடியினாலே அந்த மாயையே மகாமாயை யென்று சொல லவேண்டியதாயிற்று. அந்த மகாமாயையினுடைய லட்சணம் சுத்த சாத்துவிகமென்றறிகிறது. அதே சொற்சொரூபாநு சந்தானம். சொற்சொரூபானுசந்தான மெப்படியென்றால் அந் தப் பரப்பிரம்மம் நானென்கிறதே. இந்தப்படி சத்துவகுணம் மயங்கினபடியினாலே மகாமாயை யென்கிற பேர் உண்டாயிற்று. இப்படியில்லாத ஆபாசமாய்ப் பெரிதானதே பிரம்ம விவர்த்தம். நானே பிரம்மமென்று ஞானப்பிரகாசம் பிறந்தால் புத்திமான்க ளானபேர் அதே மகாமாயையென்று அறியவேண்டும். பிரம்மம் எத்தனை பரிபூர்ணமாய் விளங்கும். மாயாதேவி எத்தனை மகிமை யுண்டாகிவர்த்திப்பள். இதன் மகிமை யாராலே நிச்சயிக்கப்ப டும். மாயா துர்க்கடமே அறியவேண்டுமென்கிற மகான்மாக்கள் கேவல பிரம்மத்திலே பிரகாசிக்கும் சத்துப்போலே இரண்டா யல்லாததே. துர்க்கடமே மாயைக்குப் பூஷணம். தூஷணமன்று. மாயை பிரம்மத்திலே யில்லாததைக் காண்பிக்கிறபடியினாலே இல்லாததே தன்னைத் தோற்றுவித்துக்கொண்டு தன்னுடைய மகத்துவங்காட்டிப் பிரம்மாதிதேவதைகளைக் கக்கத்திலே யிடுக் கிக்கொண்டு கூத்தாடும். சிருஷ்டியாதி வியாபாரம் ஜகதீசுவரர் பண்ணுகிறது. இவர்கள் மாயையிலே விழுந்தவர்களென்றே யறிகிறது. அப்படியல்லாவிடின் இதற்கு உற்பத்திக்காரணமில்லை. மாயை என்ற வாச்சியம் மித்தியா பிராந்தி. வியர்த்தமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். மாயை யென்ற வாச்சியமானது என்னென்று கேட்டால் முன்னுக்குச்சொல்லுகிற அர்த்தத்திலே யறிந்துகொள். மாயை சத்தியமில்லாமல் மித்தையானால் பிரம் மமென்று அறிகிறவர்கள் யார். பிரம்மமென்று சொல்லுகிற வர் யார். பிரம்மம் தானே பிரம்ம மென்று சொல்லுமோ வென் றால் பிரம்மந்தானே தன்னைப்பிரம்ம மென்று சொல்லிக்கொண் டால் தனக்கு என்ன குறை வரும். மாயை யில்லாத காரியம் இந்தப்பிரபஞ்சம் அந்த மாயாமயம் பின்னையும் நிச்சயம்போலே காண்பிக்கும். ஆகாசத்திலே கந்தர்வ நகரம்போலே இல்லா ததைக்காண்பிக்கும். இது மாயாலட்சணம். முன் சாங்கியன்

பிரகிருதி புருஷன் என்று உண்டாக்கிக்கொண்டானென்று தூஷ ணையாய்ச்சொன்னோமே. அதைவிஸ்தரித்துக் கேவல நிர்க்குணத் திலே சகுணமானவகை சொல்லுகிறோம்கேள். இல்லாதமாயை க்கு அதிஷ்டானமான பரப்பிரம்மத்தைச் சாங்கியமதக்காரன் பிரகிருதி புருஷன் என்று உண்டாக்கிக்கொண்டான். இந்த மாயைதானே மூலப்பிரகிருதி. அது பராபர புருஷனுடைய நிசசக்தி. அவனுக்கும் அவளுக்கும் எப்படிக்கூட்டுறவு ஆயி ற்று என்று கேட்டால், எங்கே கடம் உற்பவமாகிறது. அதற்கு முன் ஆகாசம் பிரவேசித்திருக்கிறாப்போல் எங்கே தத்துவம் உற்பத்தியாகிறது. அதற்கு முன் சைதன்யம் வியாபித்திருக் கும். இன்னுமொரு திருஷ்டாந்தம். சமுத்திரத்திலே யலை யுண்டாவதற்கு முதலே ஜலம் வியாபித்திருக்கிறாப்போல். மாயை யெங்கே அங்குரமாய் அதற்குமுன்னே சைதன்னியம் வியாபி த்திருக்கும். மாயையிலே வியாபித்த சைதன்னியமே சகுணப் பிரமம். மாயைக்கு அசேஷமாய் மிஞ்சினதே நிர்க்குணப் பிரம் மம். மாயையுடனே கூடினதே மாயாவுபாதிப் பிரமமென்று சொல்லப்படும். அதே மாயாசபலமென்று சகல சாஸ்திரமும் சொல்லும். அதேபரப்பிரம்மசகுணம். அதே பரமாத்மா. அதே பரமபுருஷனென்று குறிப்புச்சொல்லப்படும். அந்தப்பரமபுருஷ லக்ஷணம் மூலப்பிரகிருதிக்கு பின்னமாயிருக்கும். அதெப்படி யென்றால்சொல்லுகிறோம். மூலப்பிரகிருதியிலே புருஷன் சாக்ஷி ரூபமாயிருந்து அந்தப்பிரகிருதியைத் தன்னுடைய நிஜப்பிரகா சத்திலே அறிவன். அதே ஆகாரம். இவன் நிராகாரன். அதே பிரகாசம். இவர்சுயம்பிரகாசர். இப்படியானாலும் பிரகிருதி புரு டர் அநாதிசகவாசர். பிரகிருதியே யறியப்பட்டது. இவர் அறி கிறவர். அதேதோன்றப்பட்டது. இவர்தோற்றுவிக்கிறவர். இப் படியானாலும் அபின்னமாகவே இருப்பார்கள். பார்க்கிறபோது இரண்டுபேரும் அமூர்த்திகளே. இது மகா ஆச்சரியம். புரு டன் தன் சாவக்ஞத்துவத்தினாலே பிரகிருதியையறிவன். அந் தப்பிரகிருதி புருடனையறிந்து மறியாமலிருக்கும். இது அநாதி சித்தம். பிரகிருதி புருடாள் கூட்டுறவு. ஒருவரில்லாமல் ஒருவ ருக்குத் தொழில் நடவாது. வர்ணமும் ரூபமும் இல்லாதவர்

கள். அவர்கள் சொரூப நிலவரம் தன்னுடைய சுவாநுபவத்திலே யறியவேண்டும். அந்தப்புருடனே பரமாத்துமா. சுவயம் ஜோதி விக்ஞானாத்மா. அவரே ஜீவத்துவம் வகித்துக்கொண்டார். அவரே புருடரென்றறியவேண்டும். அந்தப் பிரகிருதியே காணப்பட்டது. புருடனே காண்கிறவர். ரூபத்தில் அறியும் இந்த (சசிலகம்) அநுபோகிகளே அறிவார்கள். அவரே ஞானவிக்கிரம பரமேசுவரன். சர்வான்ம நிர்விகாரம் அவரே. சுவஸ்வரூப மறப்பு ஒருகாலுமில்லை. பிரவர்த்தி நிவர்த்தி இரண்டும் மாயாகாரியம். இத்தனை பண்ணுகிறதற்கும் சமர்த்தன் அவர் ஒருவரே. ஹரிஹரப்பிரம்மாதிகள் என்கிறது பேச்சுமாத்திரம். இவ்விடத்தில் சகுணப்பிரம்ம லக்ஷணம் சொல்லப்பட்டது. இனிமேல், சிருஷ்டிப் பிரக்கிரகாரமும் அவ்வியாகிருத இரண்யகற்ப விராட் லட்சணமும் தொந்தமாகச்சொல்லுகிறோம். அத்தியந்தம் சாவதானமாய்க் கேள்.

[இன்னும் வரும்.]

பத்திராதிபர்.

மேனாட்டுக் கலைஞானம்.

முற்கூறு.

உதாரணமாய், சாதாரணமாய் உலகில் நிகழக்கூடிய ஒருசம்பவத்தையெடுத்து யோசிக்கலாம். இப்பொழுது நாம் மனைக்குள்ளிருந்து பலகணிவாயிலாகப்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே திடீரென வானம் இருண்டு தாரை தாரையாய் மழைபொழிகின்றது. காற்று விசையாய் வீசுகின்றது. விருக்ஷங்களின் கிளைகள் முன்னும் பின்னும் அலங்கோலமாய் அசைகின்றன. ஒருமரத்தின் கீழ் ஒரு மனிதன்போய் ஒதுங்குகின்றான். ஒரு பெருங்காற்று அடித்து ஒருகிளைமுறிந்து அவன்மேல் விழுந்து அவனுக்குப்பெருந்துன்பம் விளைகின்றது. இதை "அகஸ்மாத்" தென்று சொல்லுவார்கள். அம்மனிதனும் "தற்செயல்" ஆய் தான்வெளியேபோனதாகவும் "தற்செயல்" ஆய் ஒருமரத்தின்கீழ் ஒதுங்கினதாகவும் அப்பொழுது இந்த "அகஸ்மாத்" உண்டானதாகவும் சொல்லுவான். ஆனால் இந்த விஷயத்தில் அகஸ்மாத்தாவது தற்செயலாவது கிடையவே கிடையாது. இக்காற்றும் மழையும் வாயுமண்டலத்தில் அனேகயோசனை தூரத்திற்கப்பாலுமிருக்கலாம். சிலகாரணங்களிருந்து சேட்டித்தால் உண்டாகும் காரியமேயாம். விருக்ஷங்களின் ஒவ்வொரு இலை சலிப்பதும் காற்றின் இயல்பான இயங்கும் சக்தியானது இலையின்மேல் தாக்குதலினாற்றான். கிளைஒடிவதும் காற்றின் சக்தி கிளையின் வன்மைக்கு மிகுந்திருப்பதினாற்றான். கிளை மனிதன்மேல் விழுவதும் திட்டமான வேறு இயற்கைக்காரணங்களின் கிரியையினாற்றான். மனிதன் அக்கிளையின் கீழ் நின்ற நிலையும் அவன் தன் வீட்டைவிட்டுப்புறப்பட்ட காரியத்தின் காரணத்திலிருந்து அம்மரத்தினடியில் அவன்போன காரியத்தின் காரணம்வரை இயற்கை ஒழுங்காக ஒன்றின் பின்னொன்றாய்த்தொடர்ந்து நடந்துவந்த காரணகாரிய சங்கிலிக்கோவையில் முடிவான அவயவமே.

ஆனால் அம்மனிதன்மேல் அக்கிளைவிழுவதற்குநேரிட்ட இந்தநீண்டசிக்குமுக்கான காரண காரிய சங்கிலிக்கோவைகளை யெல்லாம் சிக்கு விடுவித்துத் துலக்குவதற்கு நமக்குப்போதுமான ஞானமில்லாததுகொண்டு நாம் இவ்வித சம்பவத்தை அகஸ்மாத் தென்று கூறுகிறோம்.

9. பிரபஞ்சவிதிகள். விதிகள் காரணங்களாகா.

நாம் பலமுறையும் கவனமாய்ப்பார்த்துப்பார்த்து அதன்மேல் ஒரு காரிய நிகழ்ச்சிக்கு ஏதோவொன்று எப்பொழுதும்காரணமாயிருக்கவும் அல்லது சில சம்பவங்கள் எக்காலத்திலும் ஒரே கிரமவரிசையாய் நடக்கவும் நாம் அறியும்பொழுது இப்படி நாம் கண்டுபிடித்த உண்மையை **பிரபஞ்சவிதி** யென்று சொல்லுகிறோம். ஆங்கிலேயர் தங்களுடைய இங்கிலீஷ் பாஷையில் "லா அவ் நேச்சர்" (Law of nature) என்கிறார்கள்.

உதாரணமாக, கனமானபொருள்கள் ஆதாரமற்றால் எப்பொழுதும் வேற்றுமையின்றிக் கீழே தரையில் வந்து விழவும் சாதாரண இயல்பில் கருவங்கம் எப்பொழுதும் மென்மையுடன் கனமாயிருக்கவும் சக்கிமுக்கிக்கல் எக்காலத்திலும் கடினமாகவும் எளிதில் நொருங்குந்தன்மை யுள்ளதாகவும் இருக்க நாம் நித்தமும் அனுபவமாகக் காண்கின்றோமாகையால் யாதேனும் ஒரு கனமான பண்டம் அதைத் தாங்கிக்கொண்டிருந்த ஆதாரம் நீங்கி விட்டால் உயரத்திலிருந்து கீழே தரையில் வந்து விழுவதும் **பிரபஞ்ச வியல்பின்விதியே.** சாதாரண நிலில் காரீயம் மென்மையாயும் பளுவாயுமிருப்பதும் சக்கை முக்கிக்கல் கடினமாயும் எளிதில் ஒடியுமியல்புடையதாயும் இருப்பதும் **பிரபஞ்ச வியல்பின் விதியே.**

உள்ள காரியம் என்னவெனில் இயற்கைப்பொருள்களின் குணங்களையும் சக்திகளையும்பற்றி நமக்கு என்ன வென்னதெரியுமோ அவைகள் எல்லாவற்றையும் மாயா பிரபஞ்ச வியல்பின் ஒழுங்கைப்பற்றி நமக்கு என்னதெரியுமோ அதையும் பிரபஞ்சவிதி யென்று திருத்தமாய்ச் செப்பலாம். ஆனால் பிரபஞ்ச விதிகள் என்பன பிரபஞ்ச இயல்பின் ஒழுங்கைப்பற்றி நாம் எவ்வளவு தெரிந்துகொண்டிருக்கிறோமோ அதை நாம்கூறும் விதமேயொழிய அவைகள் பிரபஞ்சவியல்பின் ஒழுங்குக்காரணங்கள் அல்லவென்னும் இந்த நாம் அடிக்கடி மறந்துபோகும் உண்மையை கவனத்தில் வைக்கவேண்டியதுஅவசியம். ஜனங்கள் சிலவேளை யோசனையில்லாமல் சொல்லுகிறபடி இப்பொழுது சற்று முன் சொன்ன விதியின் காரணத்தால் கற்கள் மேலிருந்து தரையில் விழுவதில்லை. ஆனால் இவ்விதி யென்னவெனில் இப்புவியிலுள்ள கனமான பண்டங்களாகிய கற்கள் முதலியவைகள் அசைகிறதற்குத் தடை யில்லாமலிருக்கும்பொழுது எப்பொழுதும் வேற்றுமையின்றி உண்டாகும் சம்பவத்தை நாம் சொல்லும் விதத்திலொன்றே. இவ்விஷயத்தில் பிரபஞ்ச வியல்பின் விதிகள் மனிதர்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளவேண்டிய முறைமையைக் காட்டுவதற்குச் செய்யும் சட்டங்களுக்கு உண்மையில் ஒத்திருக்கின்றன. வரிகொடுக்கும் விஷயமாய் சட்டங்களிருக்கின்றன. கொலை களவு முதலிய குற்றங்களை விலக்கவும் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த சட்டம் அல்லது விதியானது ஒரு மனிதன் தனது வரிப்பணங்களையும் தீர்வைகளையும் கொடுக்கவும் அல்லது கொலை களவு முதலிய குற்றங்களினின்று நீங்கவும் காரணமன்று. இந்த விதியானது என்னவென்றால் ஒரு மனிதன் தனது ஆயங்களைக்கொடாவிடினும் அல்லது கொலைகளவு செய்தாலும் அவனுக்கு என்ன உண்டாகும் என்று விளம்பும் அறிக்கை மாத்திரமே. அவன் தான் கொடுக்கவேண்டிய இறைகளைக் கொடுப்பதற்கும் அல்லது குற்றங்கள் செய்வதினின்று விலகி யிருப்பதற்கும் வேறு சிரேஷ்டமான ஏது இல்லாதவரை தவறினால் விளையும் பலன்களின் அச்சந்தான் காரணம். இந்த அச்சமானது அவன் அந்த சட்டத்தின் அறிக்கையை நம்புவதால் உண்டாகும் காரியம்.

மனித விதியானது சில சங்கதிகளில் ஜன சமூகம் அதாவது இராஜங்கம் என்ன செய்யும் என்று நாம் கருதக்கூடுமோ அதைச்சொல்லுகின்றது. பிரபஞ்ச வியல்பின் விதியானது இயற்கைப்பொருள்கள் சில சந்தர்ப்பங்களில் என்னசெய்யும் என்று நாம் எதிர் பார்க்கக்கூடுமோ அதைக்கூறுகின்றது. இவ்விரண்டு விதிகளும் நமது அறிவுக்கு அறிவிக்கும் சங்கதியை அடக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகள் நமது அறிவைத் தாண்டிவிடுமேட்டியொழிய மற்ற விஷயங்களில் வெறும் சப்தமும் எழுத்து மாத்திரமே.

மனித விதிகளுக்கும் பிரபஞ்ச வியல்பின் விதிகளுக்கும் இவ்வளவு ஒற்றுமை இருந்த போதிலும் இவையிரண்டுக்கும் சில முக்கியமான வித்தியாசங்களும் உள. அவைகளை நாம் கவனியாமலிருத்தல்கூடாது. மனித விதியானது சுயேச்சையுள்ள கர்த்தாக்களுக்குச் சொன்ன கட்டளைகள் பொருந்தியுள்ளது. இக்கட்டளைகட்கு அவர்கள் படிந்து நடந்தாலும் நடக்கலாம். அல்லது அவைகளை அவர்கள் மீறி நடந்தாலும் நடக்கலாம். மீறுவதால் இந்த விதி செல்லாமல் பாழாய்ப்போகிறதில்லை. ஆனால். பிரபஞ்ச வியல்பின் விதிகளோ கட்டளைகளல்ல. ஆனால் என்ன வெனிலோ அவைகள் பிரபஞ்ச வியல்பின் பின் மாறாத ஒழுங்கைப்பற்றி விவரிக்கும் கட்டுரைகள். அந்த ஒழுங்கை வெளியாக்கிச் சொல்லவேண்டியவரை மாத்திரம் அவைகள் விதிகளாக யிருக்கின்றன. பிரபஞ்ச வியல்பின் விதியை அதிக்கிரமிக்கிறதென்றாவது தடை செய்தல் என்றாவது சொல்வது சுத்த மதியீனம். அனால் அப்படி நாம் ஒருகால் சொல்வோமேயாகில் அதன் உண்மைக்கருத்து என்னவென்றால் அந்த விதியிலடங்கிய உண்மையானது சில சங்கதிகளில் உண்மையல்லவென்பதேயாம். இதன் நியாயமான தீர்மானம் என்னவெனில் பிரபஞ்சவியல்பின் ஒழுங்கு மாறுபட்டுவிட்டதென்பதல்ல. ஆனால் நாம் அந்தஒழுங்கைச்சொல்வதில் நாம் மோசம் போனோம் பிசகிவிட்டோமென்பது தான். பிரபஞ்சவியல்பின் சரியான ஒரு விதியானது எங்கும் எக்காலத்திலும் மாறுபாடேயின்றிச் செல்லும் சர்வவியாபக பிரமாணமாம். இத்தன்மையால் அந்த விதிக்கு விலக்குகளே அமையமாட்டா.

மேலும் மனிதர் விதிகளுக்கு ஜனசமூகத்தை விட்டு நீக்கி அர்த்தமில்லை. பிரபஞ்சவியல்பின் விதிகளோ ஜனசமூகத்தைக்கோடியில் ஒன்றுக்கும் கீழ்ப்பட்ட அமிசமாக தன்னுளடக்கிக் கொண்டிருக்கும் இப்பெரிய பிரபஞ்சதின் சாதாரண ஒழுங்கைத்தெரிவிக்கின்றன.

[இன்னும் வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

சைவசித்தாந்தம்.

[265-ம்பக்கத்தொடர்ச்சி.]

இனி ஒருவன் ஓர் பொருளை ஓரிடத்துப்போட்டுவிட்டுக் கலங்கி அவ்விடத்தில் மூர்ச்சித்திருத்தல் ஜாக்கிரத்தில் அதீதம். அந்த மூர்ச்சையிற் சற்றே பிராணவாய்வு இயங்குகை ஜாக்கிரத்

தில் துரியம். எவ்விடத்து வைத்தோமென்று ஐயப்படுகை
ஜாக்கிரத்தில் சுழுத்தி. இதில் மனமும் பிராணவாயுவும் இயங்
கும். அப்பொருளை இன்ன இன்ன இடத்தில் வைத்திருக்கலா
மென்று ஐயப்படுதல் ஜாக்கிரத்தில் சொப்பனம். இதில் இரு
பத்தைந்து கருவி தொழிற்படும். அப்பொருளிருக்குமிடத்துச்
சென்று எடுத்தல் ஜாக்கிரத்தில் ஜாக்கிரம். இதில் முப்பத்தா
றும் தொழிற்படும். இனி இதயமுதல் துவாதசாந்தமீறாகிய
தானங்களிற் புறக்கரணம் உட்கரணங்களைப்பற்றியும் பற்றாதும்
பிரத்தியாகார முதலிவகைப்பட்டும் நிகழும் யோகாவத்தையும்
அது போல ஒடுங்கியும் தோன்றியுமவ்வாறே பயன் தருவதன்
றிப்பிறிதன்றென்க. இது சகலத்திற் சுத்தமெனப்படும். யோக
பலத்தால் ஜாக்கிரத்தானத்திற்றான் காணப்பட்ட பிரவிர்த்திக
ளெல்லாமற்று அதின்வழி செல்லாமற் பிரத்தியாகாரத்தினால்
திரும்புதல் ஜாக்கிரம். மனதை வேறொன்றினும் செல்லாமல்
நிறுத்துதல் சொப்பனம். இத்தாரணையில் திடமாக நின்று
தியானம் செய்வது சுழுத்தி. சமாதியிற் றற்சொரூப தரிசனஞ்
செய்வது துரியம். அஃதாவது கேவல மதிவுமயமாயிருத்தல்.
இந்த ஞானத்துக்கு மேலாகிய சிவனைதரிசித்துக் கொண்டிருப்
பது துரியாதீதம். சகலத்திற் சுத்தமெனப்படும் யோகா வவஸ்
தை ஐந்துங் கண்டு கொள்க. இதற்கு வேறொருவிதமாகக் கூறு
தலுமுண்டு. அதாவது:—பீசாக்கரத்தினுச்சாரம் ஜாக்ரம். விந்து
மாத்திரோச்சாரம் சொப்பனம். நாதமாத்திரோச்சாரம் சுழு
த்தி. சத்தியந்தோச்சாரம் துரியம். சிவாநந்தம் துரியாதீதம்.
இதற்கு முறையே தானம் இதைய முதலெனவறிக. இன்னும்
இதனை விரிப்பிற் பெருகும் ஆகமங்களுட்காண்க.

இனி இவையேயன்றி கேவல சகலங்கள் நீங்கிய சுத்தத்தி
னும் ஐந்தவத்தை யுளவாம். அவையாவன:—புறக்கரண முட்
கரணமாகியவிரண்டினுங்கூடியிருக்கிற தன்மை யறிவது நின்மல
ஜாக்கிரம். புறக்கரணத்தை விட்டு உட்கரண வியாபாரத்துடன்
கூடி தன்னை யறிகிறது நின்மலசொப்பனம். அந்த உட்கரண
வியாபாரமும் போகங்களில் விருப்புமின்றி நிச்சலமான மனதுட
ன்கூடியிருப்பது நின்மலசுழுத்தி. அந்த மனத்தையும்விட்டு சித்

தாகிய ஞானத்துடன் கூடியிருப்பது நின்மல துரியம். நிரஞ்ச
னமாய்ப் பாச பசு ஞானங்களுக் கெட்டாததாய் விளங்குகின்ற
சிவ வியாபகத்தில் வியாப்பியமாய்க் கலந்து நிற்றல் நின்மல துரி
யாதீதம். இவைகள் ஒன்றுக்கொன்று சூக்குமமாயிருக்கு
முறைமை சற்குருவினுபதேசத்தால் இனிவிளங்கும். அஃதேல்
சமவியாபக வஸ்துக்களுக்கு வியாப்பிய வியாபகபாவங் கூடுமாறு
யாங்ஙனமெனின் சமவியாபகமாங் கண்ணொளியும் விளக்கொளி
யும் ஸ்தூல சூக்கும வேறுபாட்டால் வியாப்பிய வியாபக பாவ
முடையவாயிருத்தல்போலுமென்க. அற்றேல் இரண்டு வியா
பக வஸ்துக்களுக்குச் சையோக சமபந்தமேலாமையின் ஆண்டுச்
சம்பந்த விசேடம் எஃதெனின் அது ஆசிரியர் சிவஞான
யோகிகளால் சிவஞான மாபாடியத்துள் விரித்துக்காட்டப் பெற்
றுளது. அதையும் சுருக்கியுரைப்பாம்.

அத்துவிதமென்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம்பந்தம்
ஐக்கியமோ தாதான்மியமோ சமவாயமோ சையோகமோ சொ
ரூபமோ வேறோவெனக் கடாயினார்க்கு ஆற்றுநீரும் கடனீருந்
தம்மிற் சேர்ந்தாற்போலவும் குடாகாயமும் மகாகாயமுந் தம்
மிற் சேர்ந்தாற்போலவும் அங்ஙனஞ் சேர்ந்தவழி யொருபொ
ருளேயாகலின் ஒன்றெலவேயமையும் அத்துவிதமென வுய்த்து
ணரவைத்தோதவேண்டாம். அன்றியும் ஒன்றாயவழி அதுவது
வாய் நின்றறிதலாகிய வான்மாவினிலக்கண முத்திக்காலத்தில்லை
யெனப்படு வழுவாமாகலின் அது பொருந்தாமையானும் குண
குணிகட்குத் தம்மின் உளதாகிய சம்பந்தம்போலுந் தாதான்மிய
மெனின் ஆன்மா முதல்வனைப்போலக் குணகுணிப்பொருளாய்
நிற்பதன்றி முதல்வனுக்குக் குணமாகாமையின் அவ்வாறியைதல்
கூடாமையானுந் தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறுஞ்
சமவாயமென்ப தொன்றின்மையானும் விரலும் விரலுஞ் சேர்
ந்து நின்றாற்போலச் சையோகமெனின் அவ்வியாப்பிய விருத்தி
யாகிய சையோகம் வியாபகப்பொருள்கட்குக் கூடாமையானும்
யாதானுமோரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின் அது
மகாவாக்கியப்பொருளை வலியுறுத்துதற் கெழுந்தவத்துவிதச்
சொல்லிற்குப் பொருளாகாமையானுஞ் சொரூபசம்பந்த மாத்தி

ரையாற் சிவாநந்தத்தை யநுபவித்தல் கூடாமையானும் இவற்றின் வேறாயின்ன தென்றறியவாராத வநிருவசனமெனின் அங்ஙனங்கூறுதல் மாயாவாதி கூற்றாய் வழுவாமாகலானும் அவையெல்லாமீண்டைக் கேலாமையின் வேறுவிடுக்குமாறென்னையெனிற் கூறுதும்.

ஒருபொருளே யவயவ வவயவிகளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டிரண்டாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும் அதுபோல விருபொருளே யதுவதுவாயொற்றுமைப்பட்டொன்றாய் நிற்றற்கேதுவாகிய தாதான்யமுமெனத் தாதான்மிய சம்பந்தமிருவகைப்படும். அவற்றுள் முன்னையது தாதான்யமென்றும் பின்னையது அத்துவிதமென்றும் வழங்கப்படும். அத்துவிதமென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறியவாறான் வேறுபொருள் தருமாறின்றி யன்மைப்பொருள்பற்றி யிரண்டென வேற்றுமைப்படாமையை விளக்கிநிற்றலானென்க. இதுவே ஆசிரியர் கருத்தென்பது. அத்துவிதமென்ற சொல்லே யங்கியகாத்தினை யுணர்த்துமாயிட்டென்றதனானும் புடைநூலார் பிரிவருமத்துவிதமாகுஞ் சிறப்பினதாயென்றுடம்பொடு புணர்த்தோதியதனானுமறிக.

இவ்வித்துவிதம் அபேதசம்பந்தமாகிய வைக்கியமுமன்றிப் பேதாபேதசம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப் பேதசம்பந்தமாகிய சையோகமுமன்றிக் கலப்புமுடனாதலும் வேறாதலுமாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி யம்மூன்றற்கும் பொதுவாகக்கூறப்படுமாதலால், அவ்வத்துவிதத்திற்கு ஒரோவிடங்களில் 'அலைகடலிற் சென்றடங்கு மாறுபோல்' எனவும், 'வானத்தில் வர்ணும் மணத்தின் மணம்போலும்' எனவும், அபேதவுவமையும், 'பண்ணையுமோசையும்போலப் பழமதுவுமெண்ணுஞ்சுவையும்போல்' எனவும், 'நீருமிரதமும் போலாங்காணரனூரள்' எனவும், பேதாபேத வுவமையும், இரும்பைக்காந்தம் வலித்தாற்போலியைந்தெனப் பேதவுவமையும் ஒரு புடையொப்புமைபற்றி யெடுத்துக்காட்டுப வாகலின் அங்ஙனந் தம்முண் முரணுவபோல வேறு வேறெடுத்துக்காட்டுதல் பற்றி மலையற்க; இம்மூன்றியல்புந் தன் கட்டோன்ற விவற்றிற்கு வேறாய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக்காட்டப்படுமுவமையாவது ஆன்ம போதமுங்கண்ணொளியுந்தம் முளத்துவிதமாய் நிற்றலாமென்க.

“காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம் போற்கான வுள்ளத்தைக்கண்டு

காட்டலின்” எனவும், “காட்டக் கண்டிடுந்தகைமையுடைய கண்ணுக்கேயுமுயிர் காட்டிக் கண்டிடு மாபோல வீசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்” எனவும், அறிவொளிபோற் பிரிவருமத்துவிதமாம், எனவும் மூன்று நூலாசிரியருஞ் சித்தாந்த முடிபுணர்த்தும் வழி யிதனையே யெடுத்துக்காட்டியவாறறிக. இவ்வித்துவித மேனையோர்போலக் கேவலம் விசிட்டம் மறுதலையென்றாதல் ஒன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதமென வழங்கப்படும். ஈண்டுச் சுத்தமென்றது யாதொன்றானும் விசேடிக்கப்படாது நிற்றலை. அது விசேடசத்தை சுத்த சத்தையெனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானுமறிக. இங்ஙனமொருபொருளிருதன்மையான் வியாபகமும் வியாப்பியமுமாய் வேற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மியம்போல வியாபகமும் வியாப்பியமுமான விருபொருளிருதன்மையா னொற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மிய சம்பந்தமொன்றுண்டெனவு மதுவே யன்மைப்பொருள்பற்றி யத்துவிதமென்னுஞ் சொல்லானுணர்த்தப்பட்டதெனவு மறியமாட்டாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறுப.

இனி ஆன்மா அவ்வாறு நிகழுங் காரியாவத்தைகளையுறுதற்குக் காரணமான அவத்தைகள் யாவையெனின் கூறுதும். அவை கேவலம் சகலம் சுத்தமென மூன்றாம். அவற்றுள் கேவலமாவது தன் இச்சாஞானக்கிரியைகளினிகழ்ச்சிச் சிறிதுமின்றித் தான்மாத்திரையே யுளனாதல். அக்கேவலம் மருட்கேவலமும் சகலகேவலமும் பிரளய கேவலமும் விஞ்ஞான கேவலமும் அருட்கேவலமுமென ஐவகைப்படும். அவற்றை விரிக்கப்புகின் மிகவிரியும். திராவிட மகாபாடியத்திற்காண்க.

சகலமாவது பின்பு தனுகரணாதியோடுங்கூடி அவ்விச்சாஞானக்கிரியை ஒருபுடைவிளங்கு மவதாரமாம். சுத்தமாவது ஆன்மா முற்பிறவிகளிற்செய்த சிவபுண்ணிய முதிர்ச்சியாற் சித்தியாசித்திய விவேகம் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகிய இவைகள் தனக்கு முறையே நிகழ அப்பருவநோக்கி நித்தமுத்த சுத்த சித்தெனப்படுமீசன் குருவடிவங்கொண்டெழுந்தருளி வந்து தீக்கையால் மலங்களைப்போக்கி ஞானத்தை அநுக்கிரகிக்கப் பெற்றுச் சிவானந்தத்தை அடைவதாம்.

இனி சிவபுண்ணிய முதலியவைகளை முறையே விரிக்கத்தொடங்கி முதலில் சிவபுண்ணியத்தினியல்பு இன்னதென்பதை கூறத்தொடங்கினேம்.

[இன்னும் வரும்.]

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

பிரமக்ஞானம். (Theosophy.)

சென்ற சிலவருஷங்களாக நம்முடைய தேசத்தில் தியாஸபி யென்ற
வார்த்தையானது நம்முடைய காதுகளில் அடிக்கடி விழுந்துகொண்டிருக்
கிறது. அது ஒரு சபையாரின் கொள்கையைக்குறிக்கும் வசனமாக ஏற்படு
கின்றது. அதைப்பற்றியும் அதைப் பயின்றுவருகிற சபையைப்பற்றியும் நம்
முடைய பத்திரிகையில் சற்று விசாரிப்போம். தியாஸபி என்ற வார்த்தையா
னது இரண்டு கிரேக்வார்த்தைகள் சேர்ந்த தொடர்மொழி. தியாஸ் (Theos)
ஈசுவரத்தன்மை, பிரமதத்துவம், ஸோபைய (sophia) அறிவு அல்லது
ஞானம். ஆக பிரமக்ஞானமென்று பொருள்படும். இதற்கு தப்துவித்லை
யென்றும் பிரமதத்துவக்ஞானமென்றும் சொல்லினும் பொருந்தும். இது
நூதனமான மார்க்கமன்று. கொள்கையும் அன்று. இவ்வுலகத்திலக்கண் மனு
ஷன் தோன்றின காலமுதல் அவனைச் சன்மார்க்க வழியிலும் ஞானவழி
யிலும் நடத்தவும் அதிலிருந்து மோக்ஷ சாம்பிராஜ்ய பரவிக்குத்தக்கவனாகச்
செய்யவும் ஞானிகளுடைய குழாம் என்று சொல்லக்கூடிய ஒரு மகா சபை
உலகத்தில் இடையறாது இருந்து கொண்டு வருகின்றது. ஷை கோஷ்டியில்
ஜீவன் முக்தர்களும் பல ஜாதியாய்ச் சேர்ந்த யோகிகளும் சித்தர்களும் அங்க
த்தவர்களாக இருந்துகொண்டு அப்போதைக்கப்போது ஜன சமூகத்தில் சத்
தியங் குன்றி அசத்தியம் மேலிடும் காலத்திலும், அல்லது உலகத்தில் ஞான
உபதேசம் செய்வதற்கு வாய்க்கிற காலங்களிலும் தங்களில் ஒருவரை உலகத்
தின் க்ஷேமத்தின் பொருட்டு அப்போதைக்கப்போது அவதரிக்கும் படியாக
செய்வித்து அவர் மூலமாய் எவ்வளவு ஜனங்களுக்கு ஞானத்தைக் கிரகிக்க
சக்தியுண்டோ அவ்வளவு தக்கவாறு ஞான உபதேசம் செய்வித்துப் பின்
மறைவார்கள். இவ்விதமாகவே உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு சமயமும்
ஷை கோஷ்டியாரின் வர்க்கத்தினரால் பரிபாலிக்கப்பட்டு வந்து கொண்டிரு
க்கிறது. ஆனதுபற்றி எல்லா மதங்களின் உட்கருத்துக்களை ஆராய்ந்து பார்
க்குங்கால் தத்துவவிஷயங்களில் வெகுவாய் வித்தியாசங்களிருக்கமாட்டாது.
ஒவ்வொரு மதத்துக்கும் இரண்டு பாகமுண்டு. அதாவது:—மதத்தின்
உயிர்ப்பாகம். அதாவது தத்துவவிஷயம். 2. மதத்தின் உடல்பாகம். அதா
வது தத்துவங்கள் பரிணமிக்கிற கிரியாவிசேஷங்கள். பிற்பட்டதான கிரியா
ரூபம் தேசகால வர்த்தமானத்துக்குத்தக்கபடி வேற்றுமையுடையதாகத் தோன்
றும். உலகத்துள்ள எல்லா மதங்களையும் பக்ஷபாதமின்றி சரியாய் ஆராய்ச்சி
செய்தால் அடியிற்கண்ட பொதுவான உண்மைகள் அல்லது தத்துவங்கள்
வெளியாகும்:—(1) அவ்யக்தமாயும், அநாதியாயும், அசிந்தியமாயும், அக்கி
ராக்கியமாயும், உண்மையாயும் உள்ள வஸ்து ஒன்று உண்டு. (2) அதினின்று
வியக்தப்படுகிற ஈசுவரன் ஒன்றாக வியக்தமாகி அது இருபான்மையதாகி பின்

161974

முப்பான்மையாகி முப்மூர்த்தி ஏற்படுகின்றது. அதாவது பிரம்மா, விஷ்ணு,
ருத்திரரென்று ஹிந்துமதத்திலும், பிதா, பரிசுத்தஆவி, புத்திரன் என்று
கிறிஸ்து மதத்திலும், சத், சித் ஆநந்தமென்று வேதாந்திகளுடைய கொள்கை
யிலும், பதி, பசு, பாசமென்று சைவ சமயத்திலும் இவ்விதமாகவே ஒவ்வொரு
சமயத்திலும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காணலாம். (3) ஷை மும்
மூர்த்திகளின்றும் வியஷ்டிப்பிரபஞ்ச நடைபெறுமாறு தேவர்கள் உண்டானார்
கள். (4) மனிதன் ஈசுவரனுடைய அம்சமுள்ளவன். ஈசுவர ஆபாசம்.
அதாவது பிரதிபிரம்பம். அக்காரணத்தால் மூன்றுதன்மை பொருந்தியவன்
மனிதனிடமிருக்கின்ற தத்துவம் அதாவது ஆன்மாவும் பிரபஞ்சத்துக்குக்
காரண பூதமாயிருக்கின்ற ஈசுவரதத்துவமும் ஒன்றே. (5) அவாவினால் தான்
டப்பட்டு மனிதன் ஜனனமரணாதிகளை அடிக்கடி அடைகிறான். பிறப்பு
இறப்பு என்ற ஸம்ஸாரசக்கரத்தில் சுழல்கிறான். இவ்விதம் தோன்றியும்
மறைந்தும் கர்மங்களின் ஸம்ஸ்காரத்தினால் காலாக்கிரமத்தில் சித்த சுத்
தியை அடைகிறான். பின் ஞானத்தினாலும் தியாகத்தினாலும் அமிர்தத்து
வத்தைப் பெறுகிறான். அதாவது சிறுபொறியாயிருந்த ஆன்மாவானது பந்தங்க
ளினின்றும் விடுபட்டு ஈசுவரத்தன்மையை அமைப்பித்துக்கொள்ளுகிறது.

இதனால் மேற்கண்ட கருத்துக்கள் ஒரு மதத்துக்கும் ஒரு சமயவாதிக்
கும் விரோதமில்லை. ஷை சபையைச்சேர்வதில் சமயவாதிகள் ஒவ்வொரு
வரும் தத்தம் சமயத்தின் உண்மைகளை நன்றாய் ஆராய்ந்துகொள்வதற்குச்
சௌகரியங்களுண்டு. பொதுவான தத்துவங்களிலிருந்து பலவாறாக அநுஷ்
டானங்களில் தத்துவவாதிகள் பிரிந்திருக்கின்றன. அவைகளை ஒரு மதஸ்
தன் மற்ற மதங்களின் முதனூல், வழிநூல், சார்புநூல்களைக்கொண்டு உண்
மைகளைத் தெரிந்துகொள்ள ஏதுப்படுமென்று கருதி எல்லா மதங்கள் சம்பந்
தப்பட்ட சாஸ்திரங்களைச்சேர்த்து ஷை சபையார்கள் அவர்கள் ஏற்படுத்தும்
சபைகளின் மந்திரங்கள் தோறும் அமைத்து வைத்திருக்கிறார்கள். ஷை
சபையாரின் அநுஷ்டானக் கிரமத்தின் முக்கிய நோக்கங்களாவன:—

1. சமயவெளிவேற்றுமையினால் ஒருவருக்கொருவர் துவேஷ புத்தியில்லாமலிருத்தல். ஜன சமூகத்தில் சகோதர வாஞ்சையையும் அன்னியோன்னியத்தையும் அபிவிருத்தி செய்தல்.

2. பற்பல சமயங்கள் சாஸ்திரங்கள் இவைகளின் கொள்கைகளை ஒப்பு நோக்கி ஆராய்தல்.

3. இதுவரை வெளிவராத பிரகிருதி தத்துவங்களையும் ஒவ்வொரு மனிதனிடமும் கருரூபமாய் அமைந்திருக்கும் சக்திகளையும் அப்பியாசங்கள் வழியாய் அபிவிருத்தி செய்தல் முதலியனவாம்.

5L
Zm211,n01NV
N01'2-3

ஷ சபைக்கு எம்மதஸ்தரும் அங்கத்தவர் ஆகலாம். ஷ சபையார்களுடைய விருதாவளியாவது "ஸத்யாந் நாஸ்திபரோதர்ம:" "பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" ஆகவே சத்தியத்தைநாடிச் சத்தியத்தில் நடந்து வருகிறதென்ற நிர்ப்பந்தமான ஒரு கோட்பாடே அங்கத்தினரின் இன்றியமையாத பொது ஒழுக்கமாம். சத்தியத்தையடையும்வழி சிரவணத்தினாலும், மனனத்தினாலும், சுத்த சத்துவத்தினாலும், பக்திசிரத்தையினாலுமேயாம். ஒவ்வொருவனும் தன் முயற்சியாலன்றி பிறர் வார்த்தை நிர்ப்பந்தத்தால் சத்திய பதவியையடையமுடியாது. சாந்தமே அவர்களின் ஒழுக்கம். சத்தியமே அவர்களின் கடைப்பிடி. பிரம்மஞானம் விசுவதோமுகமுள்ளது. அதாவது பார்ப்பவருடைய சக்திக்கும் மனோபாவத்துக்கும்தக்கபடி அனந்தமாகப் பெருகும்தன்மையது. ஒவ்வொருசமயமும் ஆனந்தரூபமாயிருக்கின்ற ஈசுவரனின் ஏகதேச ஏகபாவம். ஆகவே ஒவ்வொரு மதமும் அங்கீகரிக்கத்தக்கது. அறியத்தக்கது. தூஷிக்க தக்கதன்று. அவ்வச் சமயத்தினர்கள் தூஷிக்கத்தக்கவர்களுமல்லர். ஒரு சமயவாதியை மற்றொரு சமயவாதியாக மாற்றும் படியாகச் செய்யும் முயற்சி அக்கிரமமானதாகவும் ஈசுவர சம்மதம் அல்லாததாகவுமிருக்கிறது. சமயவாதிகள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு போராடுவது யானைகண்ட ஐந்து குருடரது தன்மையை யொக்கும். இக்கருத்தினையே கல்வியிற் பெரிய கம்பர் அடியிற் கண்ட செய்யுளின் கண் அழகாயமைத்திருக்கின்றனர்.

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண் டாரை யொத்தார்.

ஓம் தத்ஸத்.

புனர்வசு.

---

* இங்கிலாந்து இந்தியாவின் பரஸ்பர செல்வாக்கு.

முன்னிரண்டு பிரசங்கங்களில் ஆங்கிலேயர் இந்தியாவை வென்று அரசுசெலுத்துவதில் அதிசயிக்கற்பாலதொன்றுமின்றென ஒருவாறாய் நிரூபித்தேம். இந்தியாவில் நந்தேயத்தார் புரிந்த பல அரிய காரியங்களைப்பற்றியும், ராஜரீகம் செய்வதில் அருந்திறமையும் மதிநுட்பமுங்காட்டிய பலரைப்பற்றியும் நாம் சற்றே பெருமையடையலாமாயினும், இந்தியர்களைவிட, நம்மனோர் மிகச்சிறந்தோர் என்பதற்கு நமது அரசாக்ஷியே சாலுங் கரியெனக்கோடல் தவறாம். அத்தகைய மேன்மை யாதொன்றும் உத்தேசியாமலே நமதரசாக்ஷி மேன்மேல் வளர்ந்து கொண்டு செல்லுகைக்குப் போதிய காரணங்காட்ட வல்லேம். ஆகவே, அதிசயம் என்பதற்கு அற்புதம் அல்லது பொதுவான காரண காரிய விதிப்படி காரணங் கருதியுரைத்தல் அருமை என்று பொருள் படுமேல், அது அதிசயமன்று.

* இம்மொழி பெயர்ப்புக் காரணம் யாதுகொலோவெனின், "பாநு"வின் தொகுதி 2. பகுதி 6. பக்கம் 170-ன் அடியில்தீட்டியிருக்கின்றேம் ஆண்டுக் கண்டுகொள்க.

என்றார், ஒரு பொருளில் அது அதிசயமாத்திரமன்று; சாதாரணமாய்ப் பொருள்கொள்வதினும் பன்மடங்கதிக ஆச்சரியகரமானது. அது தன் காரணங்களினும் காரியாம்சங்களால் வியக்கத்தக்கது. அதாவது, அது விசேஷித்த சரித்திரோக்தமான பொருளிற் சிறந்தது. என்னை? நாம்கூறியாங்கே நிரம்பிய விஷயங்களுடைத்தாதல் சரித்திரப் பண்பாதலினென்க. இதைப்பிரமாணமாகக் கொண்டே, இங்கிலீஷ் சரித்திரத்தில் ஒரு சில விஷயங்களும், பெரும்பாலும நாடகரசம் அல்லது காவியச் சுவை யின்மையால் மிகவும் அருகிக் கற்கப்பட்டு வரும் அமெரிக்கா தேச கலக சரிதமும் தாம் உயர்த்தப்பெற்றன. இப்பொழுது நமது இந்திய துரைத்தனம் பிரதம திருஷ்டியிற் பார்க்கினும், உற்றுநோக்குழி எவ்வளவோ அற்புதத்தன்மை குறைந்து தோற்றினும், அதில் கதாரசம் குறைகின்ற அளவுக்களவு சரித்திரச் சுவை பெருகக் காணப்படும்.

ஒரு பெரிய கீழ்தேய ராஜ்யம் இங்கித மானதாயும், விசேட மகத்துவமுள்ளதாயுமிருத்தல் அவசியமன்று. ஒரு கிரேக்கு அல்லது தஸ்கன் நகரபிரஜாதிபத்தியத்தைவிட சரித்திரோக்தமாய் குறைந்த பெருமையுள்ள பல ராஜாங்கங்கள் ஆசியாவில் உள்ளன. அவைகளின் விசாலமும் முதுமையும் அவைகளின் சரித்திரங்களைச் சுவையுடையதாக்குவதில்லை. பொதுவாய் நாம் அவைகளைப் பரிசீலனை செய்யுங்கால் அவைகள் குறைந்த ஒழுங்

குள்ளவைகளாயும் அவைகளின் கொடுங்கோன்மையால் குடிகள் நொறுக்குண்டு ஒரு சுகமும் அநுபவியாது ஒன்றிலும் முன்னுக்குவராது, நினைக்கத்தகுங் காரியம் ஒன்றும் செய்யாதொழிகின்றனென்பது புலனாகும். நமது இந்திய ராஜ்யவிஷயமாய் நாம் முதன்முதல் நோக்குங்கால், அது சாதாரண ஆசியா கொடுங்கோலரசுகளைவிட எத்துணையும் அதிக ரசமுடையதாய்த் தோற்றவில்லை. ஆங்கிலேயரது அபிப்பிராய சக்திக்த வந்தனம் தந்தனம். நமது அரசாக்ஷி முற்சென்ற மொகலாய அரசாட்சியைவிட, மூதவியிலும் தர்மநெறியிலும், பரோபகாரத்திலும் மேம்பட்டு விளங்கலாமென்று நினைக்க இடமுள்ளதேனும் அது ஒரு கெட்ட அரசியல் என்பதற்கு நல்ல உதாரணமென்று தான் எனக்குத் தோற்றுகிறது. மகா பொசலாயர்க்குப்பின் வந்தோமென்று பெருமை பாராட்ட இடமுண்டாம். நமது ராஜரீகத்தின் நலங்கள் பலவுளவேனும் குடிகள் சுகமடைகிறார்களென்பது சந்தேகம். நமதரசாட்சி அவர்களை நாளுக்கு நாள் மேன்மேல் சுகஸ்திதிக்குத் தான் கொண்டு வருமோ, அன்றித் துயரத்தில்தான் அமிழ்த்துமோ தெளிகிலேம். ஒருகால் ஒரு சுயமான ஆசிய அரசாட்சி, அதிலும் இந்துக்களுக்குள்ளிருந்து தோன்றும் சுஜாதி அபிமானத்துவ அரசாட்சி நமமோர விபசாரமில்லாத அந்நிய அரசாட்சியைப் பார்க்கினும் நாகரிகத்திற் குறைந்ததாயிருப்பினும், சாலவும் பொருத்த முடைத்தாகல் பற்றி காளாவட்டத்தில் பெருநலம் பயக்குமென்று உரைக்கலாம். ஆனால் இவ்வாறு எல்லா அரசாட்சியும் விரசமாயிருக்குமென்று எண்ணப்படாது. உதாரணமாக ரோம் ராஜ்யம் அப்படியன்று. இதை நான் அஞ்சாது அறைவேன். எனின் முல சரித்திரங்களைப் பற்றிச் சில்லரைகளாய் நமது அபிப்பிராயம் கொஞ்சம் குறைந்த புறணையாய்க் கொண்டிருக்கின்றது. உரோமன் துரைத்தனமுங் கூட கொடுமையாயும், சிலர் காலத்தில் துன்பமாயும், அர்த்த அசுரத் தன்மையதாயும் இருந்தது பற்றி விரசமாய்க் கணிக்கப் பெற்றிருந்தது. ஒரு தலைமுறைக்கு முந்தி யெல்லாம் சுயாதீனமில்லாத வழி, அரசியலில் ஒரு நலனுமில்லை யென்பது சர்வஜன அபிப்பிராயம். அதற்குத் தக்கபடியே, சுயாதீனம் காணப்பெறாத காலங்களெல்லாம் சரித்திரத்தில் புறக்கணித் தொதுக்கப்பட்டன. இந்த அபிப்பிராயத்துடன் கூட நாம் பாடல்களை வாசிப்பது போல சரித்திரத்தையும் இன்பமிகுதி கருதியே வாசிக்கிறதென்னும் ஓர் வழக்கமும் பரவியிருந்தது. கீர்த்தியும் வியக்குந்தன்மையுமில்லாத ஒரு பருவத்துக்கு வரும்பொழுதெல்லாம் இந்த வழக்கம் புத்தகத்தை மூடும்படி நம்மைத்தூண்டுகின்றது. அந்தக் காலத்தில் உரோமன் அரசாட்சியுங்கூட பழிக்கிலக்காயிருந்தது. உரோம்பிராஜாதிபத்தியம் தன் சுயாதீனத்தினிமித்தம் நன்கு மதிக்கப்பட்டிருந்தது. பழைய உரோம் ராஜ்ய சரிதம் அதில் இன்னும் காணக்கிடைக்கும் சுயாதீன அம்சங்களுக்காகப் படிக்கப்பெற்று வந்தது. ஆனால் இரண்டாவது நூற்றாண்டின் முடிவில் அதற்குப்பின் வரும் சில பத்து நூற்றாண்டுகளும் க்ஷீணமும் கேடுமே போல, நாம் புத்தகத்தை மூடுவது வழக்கமாயிருக்கிறது. அப்பால் சுயாதீன அம்சங்களை இங்கிலாந்திலும் இத்தலிய பிரஜாதிபத்யத்திலும் மீட்டும் காணுமளவும் கதையைப் படிப்பதில் நாம் திருப்தி யடைவதில்லை. இவ்வித கொள்கை இப்பொழுது வழக்கிறந் தொழிந்தது போலும். நாம் இப்பொழுது வாசிப்பது கேவலம் இன்பத்தின் பொருட்டல்ல; மற்று, அரசியல் வளர்ச்சியையும் அதன் பருவ மாறுதல்களையும் பற்றிய விதிகளைக்கண்டறிதற் பொருட்டேயாம். ஆதலால் நாம் படிக்கப்புகும் பருவம் கீர்த்திப் பிரதாபமானதோ அல்லது ஒளிகுன்றியதோ என்று விசாரிக்கிற்கின்றிலம். ஏனைய பருவங்களினின்றும் கற்றறியொணாத கற்பனைகளை அது நமக்குத் தருமேல் அதுவே அமையும். சுயாதீனந் தவிர இன்னும் பல நல் விஷயங்கள் அரசியலில் அடங்கியிருக்கின்றன.

அவையாவன:—சுஜாதி அபிமானத்துவம், நாகரீகம் என்பன. சுயாதீனங் கொடாத ஓர் அரசாட்சி இந்த ஏனைய அம்சங்களை அடைவிக்கச் சாதகமாயும் ஒப்புயர்வற்றதாயுமிருக்கினும் இருக்கும். ஆனதுபற்றி உரோம் அரசாட்சியானது அதன் தொடக்கத்தில்மட்டுமல்ல, 13-ஆம் நூற்றாண்டுவரையுள்ள

அதன் பரிபக்குவத்திலுங்கூட, எவ்வளவோ மூடபக்தி, எவ்வளவோ கொடுமை, எவ்வளவோ துன்பம் இருந்தாலும் சரித்திரங்களிலெல்லாம் சிறந்த இங்கிதமானவைகளுள் ஒன்றென இப்பொழுது மதிக்கப்படுகிறது. ஏனென்றால் இந்த அரசாட்சியினது உட் கட்டில் மேன்மேல் விழுமியது பயத்தலும், கற்பனா சக்தியும், நினைக்கத்தகும் பலன்களும் பொதுளியுள்ளன. தற்கால சகோதரத்துவம், அல்லது நாகரீக ஜாதியாரது பொது நலாபிமான சங்கம் ஆகிய மிகச் சிறந்ததும் அதிசயிக்கத்தக்கதும் எதுவோ அதன் கருப்பொருள் இதிற்காணலாம். ஆதலால் இது பெரிய அரசாட்சியாயிருந்தாலும், கொடுங்கோலரசேயாயினும், அளப்பரிய ஆவலுடனும்கவனத்துடனும் கற்கப்பட்டு வருகின்றது. உரோம் ராஜ்யத்துக்கும், வெற்றியால் ஸ்தாபிக்கப்படும் ஏனைய ராஜ்யங்களுக்குமுள்ள இந்த வித்தியாசம், வெல்லப்பட்டோரினும் வெற்றியாளரது நாகரீக உயர்வு, காரணமாகப் பிறப்பது. வெற்றி பெறுவதிற் சிறந்தோர் ஜாதியானது சாதாரணமாய் நாகரீகத்திற் சிறந்ததன்று. முன்மாதிரியான வெற்றியாளன் யாவனெனின், ஏதோ ஒரு சைரஸ் அல்லது ஜிங்கிஸ்கான். அதாவது வறுமையால் வன்னெஞ்சராக்கப்பட்டு, கொள்ளையால் தூண்டப்பட்ட ஓர் முரட்டு ஜாதியாரின் தலைவன். அப்பேர்ப்பட்ட ஓர் பகைவன் முன்னர் மேம்பட்ட நாகரீகமும் கீழ்ப்படியுமாதலின், சரித்திரத்தில், நாகரீக ஜாதியார் சில வேளை ஒரு கை பார்த்தும், ஆனால் பல முறை தோல்வியடைந்தும் வருவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் சமீப காலத்தில் சாஸ்திர அபிவிர்த்தி காரணமாய் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட நூதன ஆயுதங்களால் பலமடைந்தார்கள். சரித்திர மூலமாய் மகா ஜயங்கொள்ளும் ஜாதியார் அபிவிர்த்தியில் மிகத்தாழ்ந்த ஜாதியார். அவராவார் தூர்க்கோமான்கள். இந்தச்சாதியிலிருந்து தான் யுத்தப்பிரியமுள்ள அரசருக்குக் கூலிப்படை சேர்த்தல். இதிலிருந்துதான் பேபரும் ஆக்பரும் தாங்கள் இந்தியாவை வெல்வதற்குப் படைகள் திரட்டிக்கொண்டது. இதுவே பொதுவிதி. ஆனால் இதற்கு ஒழிபான விஷயம் நேருமேல், வெற்றியால் குறைமதி நாகரீக ஜாதி

யார்மீது சிறந்தநாகரீகம் பரவுமேல், அவ்வாறுண்டான ராஜாங்கம் நிரம்ப விசேடமான சுவையுடைத்து. உதாரணமாக மகா அலெக்ஸாண்டர் கீழ்நாட்டை வென்றது இவ்வியல்பிற்று. எங்ஙனமெனின் மாஸிடோனியர்கள் (Macedonians) கிரேக்கர்களோடுள்ள நெருங்கிய உறவினால் கிரேக்கர்களுக்குரியதெல்லாம் தங்கள் பின் கொணர்ந்தனர். ஆகவே, டையோடச்சி (Dioduchi) ராஜாங்கங்கள் தந்தம்மளவில் தாழ்ந்த தரத்திலுள்ள கொடுங்கோலரசுகளாயிருந்தபோதிலும் கீழ்தேயத்தார் கருத்துடன் கிரேக்கர்கள் கருத்தும் கலந்து அதிவிசேடமானதும் பெறுதற்கரியதுமான பேறுகள் பெறப்பட்டன. உரோம் ராஜ்யத்தால் ஐரோப்பியர் பெற்ற பேறுகள் முன்னையவற்றினும் நெடுநாள் நிலைத்து விளங்கினமையால், இன்னும் அதிக சிலாக்கியமானவைகள். உண்மையில் இந்தப் பெரியவிஷயம் மானிட சரித்திரத்தின் நடுநாயகமெனத் திகழாநின்றது. மனிதரது தற்கால நாகரீகத்துக்கும் இதுவே அஸ்திபாரமாமென்க.

[இன்னும் வரும்.]

உ. மகாலிங்கம்பிள்ளை,
திருநெல்வேலித் தச்சநல்லூர்.

எறும்புகளின் அங்கபரீக்ஷை.

இப்பிரபஞ்சத்தில் கடவுளால் படைக்கப்பட்டுள்ள பல பிராணிகளுள்ளும் உருவத்தில் சிறியவைகளான எளிய ஜந்துக்களே நாம் கண்டு மிகவும் வியக்கத்தக்க இயற்கையுடையவைகளாய் இருக்கின்றன. இதற்கு உதாரணமாய் எடுத்துக்காட்டுவதற்கு ஏற்ற பிராணி எறும்பைப் பார்க்கிலும் மிகச் சிறந்தது வேறில்லை. உருவமைப்பிலாயினும், விவேகத்திலாயினும், செய்கைகளிலாயினும் எவ்விஷயத்திலும் எறும்புகளே உயர்ந்தவைகளாய் இருக்கின்றன. எறும்புகள் செய்யவேண்டிய வியாபாரங்களுக்கு ஏற்ற வண்ணமாய் அவைகட்கு வியக்கத்தக்க விதமாக உருவம் அமைக்கப் பட்டிருக்கின்றன; விவேக விஷயத்திலோ, பிராணி வர்க்கத்தில் தம்மைப்பார்க்கிலும் மிகவும்

உயர்ந்த ஜாதியிற் சேர்ந்த பற்பல ஜந்துக்களையும் அவை அதிசயித்திருக்கின்றன; சில செய்கைகளிகல் அவை மனிதற்கே இரண்டாவதாயிருக்கின்றன. எறும்புகளைப்பற்றிய பற்பல விஷயங்களையும் நாம் கண்டறியத்தக்க தருணம் நமக்கு வாய்ப்பது அசாத்தியமேயாயினும் அவை எல்லாத் தேசங்களிலும் எல்லா விடங்களிலும் சாதாரணமாக வசிக்கின்றவையாதலால், வெகுவாய் அனைவரும் நேராகவே அவற்றின் நடை பாவனைகளைப் பரிசோதனை செய்து அநேகமாய் அவற்றின் பெருமைகளைத் தெரிந்து கொள்ளலாம். அப்படியும் தெரிந்துகொள்ளக்கூடாத விஷயங்களில் பிறர் பார்த்துப் பரிசோதனை செய்து சொன்னவைகளையே நம்பவேண்டும்.

எறும்புகள் சாதாரணமாய்ப் பாறைகளில் கீழ்ப்புறத்திலும், பேட்டு தாக்கான தரைகளிலும், பட்டுப்போன மரங்களிலும், இன்னும் இதரமான மரம் செடிகளிலும் புற்று வைத்து வாசம் பண்ணுவது வழக்கம். அப்படிப்பட்ட இடங்களிற்போய்ப் பார்த்தால் அவற்றின் சொரூபத்தை நாம் செம்மையாய்க் கண்டுகொள்ளக்கூடும்.

எறும்புகளுள் சில சட்டையுள்ளவைகளாயும் சில சட்டையில்லாதவைகளாயும் இருக்கின்றன. அவைகளுக்கு ஆறு கால்களும் இரண்டு தும்பிகளும் உண்டு. பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்த்தால் அவற்றின் உருவமைப்பு நமக்கு வெகு நன்றாய் விளங்கும். மற்றப்பூச்சிகளுக்கு இருப்பது போலவே எறும்புகளுக்கும் உடலானது, தலை, மார்பு, அடிவயிறு என மூன்று முக்கியமான பிரிவு உள்ளதாய் இருக்கின்றது.

எறும்புகளின் தலை ஏறக்குறைய முக்கோணவடிவமாய்ப் பின்புறத்தில் அகன்றும் கீழ்ப்புறத்தில் தட்டையாயும் இருக்கின்றது. முன்புறத்தில் கொஞ்சம் கீழ்ப்புறமாய் வாய் அமைத்திருக்கின்றது. வாயின் இருபுறத்திலும் பற்களோடு கூடிய கட்டையான மேலலகுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிலவற்றிற்கு அவ்வலகு நுட்பமாயிருப்பதுமுண்டு. அந்த மேலலகுகளுக்கு மத்தியிலே மேல் உதடு நின்று கொஞ்சம் கீழ்முகமாய்ச் சாய்ந்து வாயை மறைத்துக் கொண்டிருப்பதுமன்றியில், ஒரு கீலினால் பிணைக்கப்பட்டு வாயைத்திறப்பதற்கும் மூடுவதற்கும் அநுகூலமாயிருக்கின்றது. கீழ் அலகுகள் ஏறக்குறைய முழுதும் மேல் உதட்டினால் மறைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அலகுகள் சிறியவைகளாயும் தோலினாலேயே உருவமைந்தவையாயும் மூன்று துண்டுகள்சேர்ந்து உண்டானவையாயும் இருக்கின்றன. அவ்விடத்திலேதான் உருசியறியும் கருவியான நாக்கு இருப்பதாகத் தோற்றுகின்றது. வாயின் கீழ்ப்புறத்திலே கீழுதடு அமைந்திருக்கின்றது. நாக்கின் கீழ்ப்புறத்தில் அதன் நுனிக்கருகே கெட்டியாய்த் தட்டுப்போன்ற இரண்டு உறுப்புகள்

இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு உறுதியான மயிர் பொருத்தப்பட்டிருக்கின்றது. நாக்கின்கீழ் நீண்டு உறுதியான பற்களின் வரிசை ஒன்று உண்டு. வாயைச் சேர்ந்த இவ்வுறுப்புகளெல்லாம் உருவிற் சிறுத்தவைகளாகி வெகுவாய் மறைந்தேயிருக்கின்றன.

தலையின் முன்புறத்திற்கருகாமையில் இரண்டு தும்பிகள் எறும்புகளுக்கு உண்டு. அவை எறும்பின் உடலுக்கு ஏற்ற பரிமாணத்தோடில்லாமல் அதிகமாக நீண்டிருக்கின்றன.

எறும்புகளுக்குத் தலையின் பக்கங்களில் தும்பிகளுக்குப் பின்னால் தொடர்கண்கள் கொஞ்சம் குவிந்த வட்டவடிவமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன இந்தக் கண்களே இல்லாமலும் சில ஜாதி எறும்புகள் உண்டு. தனிக்கண்களுள்ள எறும்புகள் விசேஷமாயில்லை. சிலவற்றிற்கு மூன்று கண்களுண்டு. ஒரே கண்ணுள்ள எறும்புகளும் சில உள. அவ்வொரு கண் தலையின் மேல் அமைக்கப்பட்டிருக்கும்.

தலைக்குப்பின் மார்பானது மெல்லிய கழுத்தினால் தலையோடு கூட்டப்பட்டு, முன் மார்பு, பின் மார்பு, நடு மார்பு என மூன்று பிரிவுள்ளதாயிருக்கின்றது. இப்படி மூன்று பிரிவுடையதாயிருந்தும் இம்மார்பு பலவகை எறும்புகளில் பலவிதமாயிருக்கின்றது. மார்பின் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு கால்கள் உண்டு. ஒவ்வொரு காலும் சாதரணமாய் எல்லாப்பூச்சிகளுக்கும் இருக்கின்றபடி ஐந்து கணுக்களுள்ளதாயிருக்கின்றது. அவற்றுள் முதல் துண்டு மிகப்பெரியது; நுனித்துண்டிலே இரண்டு நகங்கள் இருக்கின்றன. எறும்புகளுக்குள்ள மூன்று ஜதைக் கால்களுள் ஒவ்வொரு ஜதைக்கும் நீளத்திலே வித்தியாசமுண்டு. முன்னே இருக்கின்ற ஜதை மிகவும் குட்டையானது, கடைசியிலிருப்பது மிகவும் நீளமானது.

அடிவயிறு ஆணெறும்புகளுக்கு ஏழு பிரிவாயும் மற்றவைகளுக்கு ஆறு பிரிவாயும் இருக்கின்றன. சில எறும்புகளுக்கு அவற்றுள் முதற்பிரிவும், வேறு சில வற்றிற்கு முதலிரண்டு பிரிவுகளும் ஒரு தன்மையான அமைப்புடையவாய்த் தனியே பிரிந்து தோன்றும் இடுப்புப்போல் இருக்கின்றன.

இவ்வெறும்புகள் மேற்பார்வைக்கு ஒரே தன்மையனவாய்த்தோன்றினும் உற்றுப்பார்க்குமிடத்து அவற்றுள் பல வேற்றுமைகள் உண்டு. எறும்புகளுள் சாதாரணமாய்க் கட்டெறும்பெனவும் சிற்றெறும்பெனவும் இரண்டு வகை உண்டு. கட்டெறும்புகளுள் சில சட்டையுள்ளவைகளாயிருக்கின்றன. சட்டையுள்ள எறும்புகளுள் சிறுத்திருப்பவை ஆணெறும்புகளெனவும். பெரு

த்திருப்பவை பெண்ணெறும்புகளெனவும் தெரியவருகின்றது. இன்னும் அதிக நுட்பமாய்ப் பரிசோதனை செய்கையில் சட்டையில்லாத எறும்புகளெல்லாம் பெண்ணெறும்புகளெனத் தெளிவாகின்றது.

எறும்புகள் ஆண் பெண் அலியென மூன்றுவிதம். அலியான எறும்புகளெல்லாம் வேலைக்காரரெனப்படும். ஆண் பெண் எறும்புகளுக்குத் தலை முன்புறத்தில் குறுகலாயிருக்கும். வேலை செய்யும் எறும்புகளுக்கோ அகன்றிருக்கும். ஆண் பெண் எறும்புகளுக்குச் சாதாரணமாய்க்கண்களுண்டு; மற்றவைகளுக்கோ இல்லை. பெட்டை எறும்புகளுடைய கண்களைப்பார்க்கிலும் ஆணெறும்புகளுடைய கண்கள் மிகத் தெளிவாய்த்தோன்றும்; பெண்ணெறும்புகளுக்கு ஆண்களைப்பார்க்கிலும் மேலலகுகள் மிகத் தெளிவாயிருக்கும். எறும்புகளுக்குமார்பு ஒரே தன்மையதாயிராமல் ஒவ்வொரு ஜாதிக்கு ஒவ்வொருவிதமாயிருக்கும்.

எறும்புகளுக்கு இறகுகள் நான்கு உண்டு. அவற்றுள் முன்னிருக்கின்ற ஒரு ஜதை மிகவும் நீளமாகி, நடுமார்பின் பக்கங்களினின்றும் முளைத்திருக்கின்றது. மற்றோர் ஜதை பின்மார்புடன் சேர்ந்திருக்கின்றது. இவ்விரண்டு ஜதைச் சட்டைகளும் பெண்ணெறும்புகளைப்பார்க்கிலும் ஆணெறும்புகளுக்கு அதிக உறுதியாயிருக்கின்றன.

அடிவயிற்றிலும் சில விஷயங்களில் ஒன்றுக்கொன்று வேற்றுமை உண்டு. பெண்ணெறும்புகளுக்கும் வேலைசெய்யும் எறும்புகளுக்கும் இருப்பதைப்பார்க்கிலும் ஆணெறும்புகளுக்கு அடி வயிற்றில் ஒரு பங்கு அதிகமுண்டு. எந்த ஜாதி யெறும்புகளுள் வேலைசெய்யும் எறும்புகளுக்குக் கொடுக்குண்டோ, அந்த ஜாதியில் ஆண் எறும்புகளுக்குக் கொடுக்குக் கிடையாது; பெட்டைகளுக்கு மாத்திரமுண்டு. அடி வயிற்றின் நுனியும் பெண்ணெறும்புகளுக்கு ஒரு விதமாயும் ஆணெறும்புகளுக்கு ஒரு விதமாயும் இருக்கின்றது.

இது வரையில் மேற்புறத்தின் அமைப்பை ஒருவாறு விசாரித்தோமே, இனிச் சற்று உட்புறத்தின் சொரூபத்தை விசாரிப்போம். எறும்புகள் மேலலகுகளினாலாயினும் கீழலகுகளினாலாயினும் மென்று ஒரு போதும் இரை தின்பதில்லை; உண்பதற்கு முக்கியமாய் உபயோகப்படுவது நாக்குத்தான். நாய்கள் நாக்கினால் திரவமான உணவுகளை எப்படி நக்கி உட் கொள்ளுகின்றனவோ அவ்வண்ணமே எறும்புகளும் உண்ணும். பூச்சி புழுக்களைத் தின்ன வேண்டுமானால் அவற்றை அலகுகளால் கறித்து அவற்றின் ரசம் முதலிய மெல்லிய பாகங்களை நாவினால் உட்கொள்ளும். நாக்கின் பின்கண்ட நாளமும் அதையடுத்து இரைப்பையும் இருக்கின்றன; அதைத்தொடர்ந்து ரத்த நாடிகளும் இந்திரிய நாடிகளும் இருக்கின்றன.

எறும்புகளின் தும்பியில் பல விதமான அமைப்புண்டு. அவற்றின் உபயோகத்தைத் தெளிவாய்க் கண்டறிவது கடினம். ஆயினும் அவற்றுள் சில பரிசேந்திரியத்தோடும், சில நாசி யென்னப்பட்ட கிராணேந்திரியத்தோடும் சம்பந்தப்பட்டிருப்பவையாகத் தோன்றுகின்றன. பெரிய பிராணிகளுக்குப் பரிசேந்திரயமும் கிராணேந்திரியமும் எவ்வளவு முக்கியமானவையோ, எறும்புகளுக்குத் தும்பி அவ்வளவு முக்கியமாயிருக்கின்றது. தும்பியில் இன்னும் வேறு இந்திரியங்களின் தன்மையும் அமைந்திருந்தாலும் அதைக் கண்டு கொள்ளுவது அசாத்தியமாயிருக்கின்றது. தும்பி போய்விட்ட எறும்புகளுக்குச் செல்ல வேண்டிய வழி தெரிவதில்லை; சத்துரு மித்திரர்களைக் கண்டு கொள்ளும் திறமையில்லாமற்போகின்றது; அதிக சமீபத்திலுள்ள உணவைக்கண்டுகொள்ளவும் வல்லமை யற்றுப்போகின்றது. சில எறும்புகளுக்குப் பார்வை மிகவும் சொற்பம்; வேலைசெய்யும் ஜாதியைச் சேர்ந்த எறும்புகளுக்கு வெகுவாய் நேத்திரமே கிடையாது. அப்படிப்பட்டவைகளுக்கு இந்தத் தும்பி ஒன்றில்லாவிட்டால் உடனே அவை உயிர் இழக்கவேண்டுவது தான்.

எறும்புகளின் அடி வயிற்றைப்பற்றி விசாரிக்கும்போது சில ஜாதி எறும்புகளில் பெண்ணெறும்புகளுக்கும் அலி யெறும்புகளுக்கும் கொட்டுவதற்கு உசிதமான கொடுக்கு இருப்பதாகத் தெரியவருகின்றது. அந்தக்கொடுக்கிலே மிகக் கூர்மையான ஈட்டிபோன்ற இரண்டு முள்ளுகளும் மத்தியில் ஒரு விஷக்குழாயும் இருக்கின்றன. அந்த முள்ளுகள் அடியில் ஒன்றாய்க்கூடி ஒரே குழாய் போலாகின்றன. எறும்பு அந்த முள்ளுகளால் ஓர் இடத்தில் குத்திய உடனே விஷக்குழாய் மூலமாய் அதில் விஷம் போய்ப்பாயும். கொள்ளிக் கோட்டான் என்னப்பட்ட பெரிய எறும்புகளெல்லாம் இப்படிக்கொட்டுகின்றவைகளே.

எறும்புகளுக்கு உரத்துக்கூவ குரலில்லாமற் போனாலும் சில எறும்புகள் ஒரு விதமான சத்தம் உண்டாக்குகின்றன. அடி வயிற்றின் பிரிவுகள் ஒன்றோடொன்று நெருங்கித் தேய்வதினால் அவ்வோசை உண்டாகின்றதென்கிறார்கள். எறும்புகளுக்குக் கோபம் உண்டாகும்போதுதான் அவை அவ்விதமாய்ச் சத்தமுண்டாக்கும்.

இதுவரையில் பெரிதான எறும்புகளின் உருவமைப்பைப்பற்றி உள்ளும் புறமும் ஒருவாறு தெரிந்து கொண்டோமல்லவா? கடைசியாய் அவற்றின் உற்பத்தியைச் சற்று கவனிப்போம். எறும்புகளெல்லாம் முதலிலே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. ஆயின் ஜனங்கள் எறும்பு முட்டையென்று சொல்வது வாஸ்தவத்தில் முட்டையை யல்ல; முட்டையா யிருப்பது மாறி ஒரு வகைப் புழுவாகி புழுக்கூட்டிலிருக்கின்ற நிலையையே

முட்டை என்கிறார்கள். அப்போது அந்தப்புழுக்கூடு சாதாரணமாய் முட்டையிருக்கின்ற பரிமாணத்தைப் பார்க்கிலும் பெரியதாகவேயிருக்கும். முதலில் எறும்பு முட்டையிடும்போது அம்முட்டை கொஞ்சம் நீண்ட வடிவமுடையதாய் வெண்மை நிறம் அல்லது சிறிது மஞ்சள் நிறமுடையதாகித் தெளிவாயிருக்கும். அம்முட்டைகளுள் ஆண் முட்டை, பெண் முட்டை, அலி முட்டை இவைகளுக்குச் சிறிதும் வேற்றுமை கிடையாது; எல்லாம் ஒரே தன்மையனவாயே இருக்கும். எறும்பு முட்டைகளில் மற்றொரு விசேஷம் உண்டு. அதாவது, நாளேற நாளேற அவை உருவம் பெருத்துக் கண்ணாடிபோல மிகத்தெளிவாகி ஒரு முனையில் வளையுள்ளவையாகும். பூச்சிகளுள் எறும்புமுட்டைகள்தவிர மற்றப்பூச்சிகளின் முட்டை இப்படி உருவம் பெருப்பதில்லை. எறும்பு முட்டைகளையெல்லாம் வேலைசெய்யும் எறும்புகளே உணவுகொண்டுபோய்க் கொடுத்துப் போஷிக்கின்றனவென்கிறார்கள்; அவ்வெறும்புகள் உணவை முட்டையின்மேல் உபயோகிக்க, அது கடவுளுடைய விசித்திர சக்தியால் முட்டைக்குள்ளிருக்கும் புழுவை போஷிக்கின்றது. முட்டையிட்டபிறகு குஞ்சு பொரிப்பதற்கு ஏறக்குறைய இரண்டு வாரம் செல்லும்.

குஞ்சுபொரித்தபிறகு சிலநாள் அவை புழுவாகவேயிருக்கும். அப்போது அந்தப்புழுக்களின் உடல் பன்னிரண்டு கட்டு அதாவது பிரிவு உள்ளவையாயிருக்கும்; ஆயின் அவை கண்ணுக்குத் தெளிவாகத்தோன்ற. இப்புழுக்களும் அந்தந்த ஜாதி எறும்புகளுக்கு ஏற்றபடி பலவிதமாயிருக்கும். சில புழுக்கள் இருபுறங்களிலும் தடித்துக் கட்டைபோலிருக்கும்; வேறு சில நுனிப்புறத்தில் குறுகலாயிருக்கும். அப்புழுக்களின் மேல்தோல் ஏறக்குறைய மயிர்கள் அடர்ந்திருக்கின்றது. இப்படிப் புழுவாயிருக்கையிலும் அவை முற்றும் வேலை எறும்புகளுடைய ஸம்ரக்ஷணையிலேதான் இருக்கின்றன. அந்தப் புழுநிலை மாறுவது அந்தந்தக்காலத்தின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடிப் பலவிதமாயிருந்தாலும் ஏறக்குறைய இரண்டுமாதத்தில் அவ்வுருவம் மாறிப்போம்.

இப்படி எறும்புகள் புழுவாயிருந்து வளரும்போது அவற்றின் மேல்தோல் அடிக்கடி மாறிக்கொண்டே வருகின்றதாயினும், இத்தனை தரம் தோலுரிக்கிறதென்பது மாத்திரம் நிர்ணயமாய்த் தெரியவில்லை. எறும்புகட்குச் சுபாவமான வடிவம் வந்து மற்றொரு எறும்பின் உதவியின்றித் தம்மைத்தாமே காத்துக்கொள்ளும்படியான காலம் வருவது ஒரே அளவாயிராமல் ஒவ்வொரு எறும்புகளுக்கு ஒவ்வொருவிதமாய் இருப்பினும், அவற்றைத் தாம் போஷிக்க வேண்டிய காலம் இவ்வளவென்பது வேலைசெய்யும் எறும்புகளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றன. இவ்வண்ணமே இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப்பிரா

ணிகளும் நமது பார்வைக்கு எவ்வளவு அற்புதமாய்த் தோன்றினும், உற்றுப் பார்ப்பவர்களுக்கு அபரிமிதமான ஆனந்தப்பெருக்குண்டாக்கத்தக்க அற்புதமானவகையாய், எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல கருணைக்கடலான கடவுளின் திவ்விய சங்கற்பத்தால், ஆக்கியளிக்கப்பட்டு வருகின்றன. கல்லுக்குள் தேரையையும் முட்டைக்குள் கருவையும் ஊட்டி வளர்க்கும் உத்தம புருஷனுக்கு உலகில் அசாத்தியமானது ஒன்றுண்டோ?

ஐ-வி.

மதுரைத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடும்.

இத்தமிழ்ச்சங்கம ஸ்தாபித்து இரண்டரை வருடமாக முற்பக்க மதிபோலப் பற்பல நன்மைகளைப் புரிந்து வருதல் யாவருமறிந்த தொன்றே. நமது நற்றமிழ் நாட்டில் பரம்பரையாகத் தமிழ் விர்த்தி செய்து வந்த மடாதிபதிகளும், ஜமீந்தார்களும், பிரபுக்களும் இவ்விஷயத்தில் முன் வந்து வேண்டு முதவி புரிந்து ஊக்கமூட்டுங் கடப்பாடுடையர்களேயாகவும் இன்னம் மௌனம சாதித்துள்ளார்கள். தாந்தாமே முழுதுஞ் சிரமமெடுத்துக் கொள்ளற்பாலதாகிய இத்தொழிலை இனிது செய்யுமாறு மனவாக்குக் காய முயற்சி புரிந்து வெளிப்பட்ட இருபெருஞ் செல்வத்தொரு பெருஞ்சரிசிலாகிய ஸ்ரீமாந் பி. பாண்டித்துரைசாமித் தேவரவர்களுக்கு இத்தமிழ் நாட்டுத் தக்கார் மிகவும நன்றி பாராட்டுங் கடப்பாடுடையர்களென்பது சொல்லவும வேண்டுமோ! தாந்தாம் வருந்திச் செயற்பாலதாகிய தொரு தருமத்தை நன்கு நடாத்தக் கங்கணங் கட்டி முன் வந்தவர்கட்குத் துணையாய் நின்றேனும் ஊக்கமூட்ட வேண்டாவோ! தார் வியாபாரங்களிலும வீண் வழக்குகளிலும் எத்தனையோ பொருளை வாரியிறைக்கும இப்புண்ணிய சீலர்கள் திருவுள்ளத்துப் பாஷாபிமானந் தானுந்தோன்றாதது பெரு வியப்பே! தற்போது இத்தொழில் முற்றுஞ் செய்யும் உரிமை பூண்ட மடாதிபதிகள் சற்றுங் கவனியாமை கொடுமை கொடுமை! ஆயின் இம்மடாதிபதிகள் தாம் ஒவ்வொருவரும் பற்பல காரணங்க

ளால் கடன் வாய்ப்பட்டும் விவகாரச்சிக்குண்டும் மெலிந்து வருகின்றமையின் என்செய்வர் என்று சிலர் சிந்திக்கலாம். நன்று நன்று !! வருஷந்தோறும் பல லக்ஷக்கணக்கான தொகை வரும்படி வருதலாலும் வேறுவகைகளில் ஏராளமான பொருள் செலவிடப்படுதலாலும் அச்சிந்தனை செல்லாதென்க. இம்மூர்த்திகள் திருவுள்ளத்து இவ்விஷயமாக நினைப்பு வாராதிருத்தல் காரணமன்றி இவர்கட்குள்ள இடுக்கண் காரணமாவதில்லை. அதுபற்றியே யாம் இங்ஙனம் இப்பாநுவாயிலாகத் தெரிவிக்க முன்வந்தேம். சிலநாளைக்கு முன்னர் இச்சங்கத்து வித்துவான்கள் சிலரைச் சந்தித்தபோது தருமபுரம் ஆதீனத்துச் சின்னப்பண்டாரச் சந்நிதிகளாகிய ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தமிழ்ச்சங்கவிர்த்திவிஷயமாகத் தக்கபொருட்கொடையளிப்பதாகவும், இதுபற்றித் தமக்குளதாகிய மகிழ்ச்சி பெரிதெனவும் அன்பும் அருளுங் கொண்டு கட்டளையிட்டருளியதெனக் கேள்வியுற்றுப் பெருமகிழ்ச்சி கொள்கின்றேம். இயல்பாக உதாரகுணமுள்ள இவர்கள் இவ்விஷயத்தில் முற்பட்டுப் புகழ்பெறுவார்களென நம்புகின்றேம். இங்ஙனமே ஏனைய மடாதிபதிகளும் தங்கள் திருவுள்ளத்துச் சிந்திப்பார்களாயின் தமிழ்நாட்டின் வாழ்த்தும் வணக்கமும் கொள்ளற்குரியராவார்கள்.

தமிழ்நாட்டு ஜமீன்கள் ஒவ்வொன்றிலும் பற்பல தமிழ்வித்துவான்களிருந்துவந்தார்கள். தற்போது பெரும்பாலும் ஜமீந்தாரகட்குத் தமிழ்ப்பாஷாஞானமின்மையோடு அபிமானமுமின்மையால் சில ஜமீன்கள் தவிர மற்ற இடங்களில் தமிழறிந்தவர்களே இல்லை. வித்வத் பரம்பரையில் வந்து சிறிது தமிழாராய்ச்சி செய்துவந்தவர்களும் ஜமீந்தார்கள் பராமுகஞ் செய்யத் தலையிட்டமைபற்றி ஆராய்ச்சியைவிட்டு வெவ்வேறு தொழில்புரிவாராயினர். விடாது கற்றுவந்த சில்லோர் தம்மூர்விட்டு வேற்றூர் புக்குப் பிழைப்பாராயினர் தமிழ்ப் புலவர் என்றால் கேவலம் பிக்ஷைக்காரர்களாக நினைக்கின்றார்கள் இச்செல்வர்கள். அம்மம்ம! என்சொல்லியாற்றுவது? கொடுமை! கொடுமை!! வேட்டையாடுவோர், குஸ்திசெய்வோர், பொய்வெருவியிடுவோர், இச்சகம் பேசுவோர் முதலானவர்களை மிகவும்

அன்போடு பாதுகாக்கின்றனர் சிலர். சிலரோ தம்மைச் சரிகையுடைகளால் அலங்கரித்தும், தமது சேவகர்களையும் அவ்வாறே அலங்கரித்துப் புதிதாய் வருவோர்க்கு ஜமீந்தார் யாவர் என்று ஐயநிகழுமாறு செய்வித்தும், அளவுக்கு மிஞ்சிய பெரும் டாம்பிகமே தமது தொழிலாகக்கொண்டு வாழ்கின்றார்கள். இன்னவர்பாற்புக்க வித்வான்கட்கு உரியகாலத்து நல்லுணவு கிட்டுவதுமில்லை. உணவுமுதலிய சௌகரியாதிகளை யிழந்து காத்திருந்தாலும் பயனொன்றுமில்லை. பாஷாஞானத்துக்கும் இவர்கட்கும் நெடுந்தூரம் நெடுந்தூரம். இவர்கட்கு ஞானமெய்தல் இல்லாயினும் தமிழபிமானமேனும் உண்டாகுமாறு திருவாலவாயுடையார் திருவருள்மல்குக. சிற்சிலர் இவ்வாறிருப்ப அபிமானிகளும் சிலர் உளர் என அறிந்தால் யாவரே மகிழார்? தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந் பாண்டித்துரைசாமியவர்கள் திருக்குற்றாலம் யாத்திரைசெய்து தங்கியபோது ஆண்டு வந்திருந்த தமிழறிவும் அபிமானமும் தெய்வபக்தியும் உதாரஉபகாரகுணங்களும் நிறைந்துள்ள ஸ்ரீமாந் பேரையூர்ஜமீந்தார்அவர்கள் கண்டுகலந்து அளவளாவி மகிழ்ச்சி புரிந்தார்களாம். தமது அரமனையிலுள்ள பழையநூல் சுவடிகளையெல்லாம் சங்கத்துக்குஅனுப்புவதாகவும் மாதந்தோறும் பத்து ரூபாவீதம் சங்கத்து நன்மைகருதித் தாம் அனுப்புவதாகவும் கூறினார்களாம். இன்னம் வேண்டியவாறெல்லாம் துணைநின்றுழைப்பதாகவும் கூறினார்களாம். கனம்பொருந்திய ஸ்ரீமாந் சேற்றூர் ஜமீன்தாரவர்கள் தமிழ்ச்சங்கத்து நன்மைகருதித் தற்போது மூவாயிரம் ரூபா நன்கொடையளிப்பதாகவும் மேலும் மாதந்தோறும் 20 இருபது ரூபாவீதம் அளித்துவருவதாகவும் கையொப்பமிட்டார்களாம். கனம்பொருந்திய ஸ்ரீமாந் தலைவன்கோட்டைஜமீன்தாரவர்கள் தற்போது ஆயிரரூபா நன்கொடையும் மாதம் பத்துரூபாயும் கொடுப்பதாகக் கையொப்பமிட்டனராம். இவ்விருவரும் ஆண்டிலிளைஞராயினும் அறிவின் முதிஞராகி யிவ்விஷயத்தில் இவ்வகைப் பேருபகாரிகளானமைக்குத் தமிழ்நாடு மிகவும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையதே. இவர்கட்கு

நீடிய ஆயுளும் செல்வமும் மேன்மேலும் பெருகுமாறு திருவாலவாயுடையார் திருவருள் புரிவாராக.

அக்கிராசனாதிபதியவர்கள் திரும்பிவருங்கால் கனம்பொருந்திய மகா-௱-௱-ஸ்ரீ சிங்கம்பட்டி ஜமீன்தாரவர்கள் மாதம் பத்து ரூபா சங்கத்துக்குக் கொடுத்துவருவதாகக் கையொப்பமிட்டார்களாம். இவ்வாறே ஏனைய ஜமீன்தார்களும் தங்கள் தங்களால் இயன்ற வுதவியைச் செய்வார்களாயின் தமிழ் வளர்ச்சியாவதுடன் இவர்கட்கும் பெரும்புகழுண்டாகும். தமிழ் நாட்டுள் எத்தனையோ பிரபுக்களிருக்கின்றார்களே இவர்களெல்லாரும் தமிழபிமானிகள் என்று வாய்ப்பறையறைகின்றார்கள் வாய்ச் சொற்கிணங்கச் சிறிதளவாவது பொருளுதவி செய்கின்றார்களா? பலதுளி பெருவெள்ள மன்றோ!

இனியேனும் நந் தமிழ் நாட்டுப் பிரபுக்கள் சிறிது சிந்திப்பாராக.

இது நிற்க, நாட்டுக்கோட்டை நகரத்தாரைப்பற்றிச் சிறிது சொல்லப் புகுகின்றேம்.

இக்காலத்துப் பெருஞ்செல்வமும் பலநாட்டுப் பரவிப் பொருளீட்டலும் தரும சிந்தனையும் பெற்றுள்ளவர்கள் இச்செட்டிப்பிள்ளைகளேயென்பது யாவருமறிந்த விஷயம். ஆயின் இவர்கள் செய்யும் தருமங்கள் பெரும்பாலும் கோவில கட்டுதலும் சத்திரங் கட்டுதலுமேயாம். இவை சிறந்த புண்ணியச் செயல்கள் என்பதில் ஐயமில்லை. இங்ஙனம் செய்வதால் இவர்களிடத்துச் சமயபக்தி விசேடித்துளதென அறிகின்றோம். சமய பரிபாலனத்துக்கு வேண்டிய முதற்கருவி யாதெனில் சமயநூல்கள் நிரம்பிய பாஷையை விர்த்திசெயலேயாம். நமது தமிழ்ப் பாஷையானது கடவுளுக்கும் பெருமை கொடுக்குந்தக்க மேம்பாடுள்ளது. இதனை பாடல் (தமிழ்வேதம்) பெற்ற ஸ்தலங்கள் என்றால் போதரும் பெருமையும் அஃதில்லாத ஸ்தலங்கட்கு அத்துணையின்மையும் கொண்டு எளிதுணரத்தரும் இத்தகைய மேன்மை வாய்ந்த நமது தமிழ் விர்த்தி விஷயத்தில் இவர்கள்

முன்வந்து வேண்டுவன புரியும் கடமையுடையவர்களேயாகவும் கருதாதது ஆச்சரியமே! இந்த நகரத்தார்கள் கவனங்கொள்வார்களானால் இவர்கள் மேற்கொண்ட சமயபக்தி பரவப்பெறும் சிற்சிலர் இவ்விஷயமாகப் பொருளுதவி செய்துள்ளார்களென அறிந்து சந்தோஷிக்கின்றோம். ஏனைய நகரத்தாரும் கருத்துட்கொள்ளுவார்களானால நலமாகும். பொதுவாகத் தமிழ்நாட்டுப் பிரபலமுற்ற செல்வவான்கள் எல்லாருளளத்தும் இவ்விஷயம் பற்றி நலலெண்ண முண்டாகும்வண்ணம் திருவருளைப்பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

தமிழபிமானி.

சமரசபாவனை.

சமரசபாவனையென்பது தன்னுயிர்போல மன்னுயிரையு மெண்ணுதலாம். உலகம் க்ஷேமமாக நடைபெறுதற்கு இன்றியமையாத காரணம் இந்தப் பாவனையல்லாது வேறில்லை. ஒருவன் அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கினுள் முதற்கண்ணிற்கும் பெருமையினதாய், இம்மை, மறுமை, வீடென்னும் மும்மைப்பயனையுந்தர வல்லதாயுள்ள அறமானது இச்சமரச பாவனையாலல்லாமல் உண்டாகாதெனின் இதன் பெருமையை யாவரெடுத்துரைத்து முடிக்க வல்லுநராவர்? இனி அறம் என்பது யாது எனின் 'அறவினை யாதெனிற் கொல்லாமை' என்று தெய்வத்தமிழ்மறை கூறியதனால், அஹிம்சையே யென்பது பெறப்பட்டது. பிறவுயிர்களுக்கு எவ்வகை யிடுக்கணுஞ் செய்யாமையாகிய அஹிம்சையானது அவ்வுயிர்களைத் தன்னுயிர்போல எண்ணுவதாகிய சமரச பாவனை உண்டாகாதபோது ஒருவன் அறஞ் செய்வானாதலும் அதன் பயனாகிய போகமோக்ஷங்களை அனுபவிப்பானாதலும் எப்படி? காரண காரியவுபசார வழக்கால் சமரச பாவனையே அறமாகும். ஜீவகருணை, பூததயை, உயிர்க்கிதம் செய்தல், ஐக்கமத்தியம், ஒற்றுமை முதலியனவாக வழங்குவனவெல்லாம் சமரச பாவனையையே குறிப்பன. இந்த தருமத்தோடு தேச பேதத்தாலும் லௌகிகார்த்தமாயேற்பட்டுள்ள சாமானிய தருமத்தையும் எண்ணிக் குழப்பலாகாது:—ஒரு தேசத்தார் பாதரக்ஷையுடன் ஆலயத்துக்குப்போகிறார்கள்; அது தருமமல்ல

வென்று மறுக்கிறார்கள் மற்றொரு தேசத்தார். ஒரு சாதியார் சிற்றப்பன் மகளை மணம்புரிந்து கொள்ளுகிறார்கள்; விதவையை விவாகம் பண்ணுகிறார்கள்; இவற்றைத் தரும விரோதமென்பர் வேறு சாதியார். இவற்றை விரிக்கிற் பெருகும். குல தருமம், தேச தருமம், கால தருமம் முதலியவற்றில் ஒருவரோடொருவர் பேதப்படுதலால் இவற்றையெல்லாமொழித்து எல்லார்க்கும் பொதுவான தருமம் யாதென்று விசாரிக்கின் கொல்லா விரதமாகிய சமரச பாவனையே முன் வந்து நிற்பது. ஆனது பற்றியே 'அறஞ்செய விரும்பு' எனப்பொதுவாக ஔவைப் பிராட்டியார் அருளிச்செய்தனர். 'கொல்லா விரதங் குவலயமெல்லாமோங்க எல்லார்க்குஞ்சொல்லுவதென்னிச்சை பராபரமே' என்று தாயுமானஸ்வாமிகளும் வெளியிட்டனர். எல்லாச்சமயிகளும் ஒரு முகமாய்ப்போதிப்பதும் இத்தருமத்தையேயன்றி வேறில்லை. இத்தருமத்தை உயிர் நிலையாகக்கொண்டே எல்லா மதங்களும் வர்த்திக்கின்றன. பிறவுயிர்க்கிடையூறு செய்வது தருமமாகும் என்று போதிக்குஞ்சமயமொன்றில்லை.

உலகத்திற் பெருகிப் பரந்துள்ள பல சமயங்களும் இந்தச் சமரசபாவ ஞானத்தைப் படிப்படியாகத் போதிக்கும் சாதனமாகிய படிகளாம். இந்த ஞானத்தை ஒருவன் பூரணமாகப்பெறுவது சுலபமானதன்று. ஒருவன் முதல் முதலாகப் பெற்றாரிடத்தில் அன்புடையவனாகி, பின்பு சகோதரர், மனைவி மக்களிடத்தும், அதன் பின்னர் உற்றாரிடத்தும், விசுவாசமுடையவனாகிறான். மற்றொருவனுக்கிந்த அன்பே கிடையாது, தன்னை மாத்திரம் விசுவாசிக்கிறான். அவனுக்கு பெற்றார், உற்றார், அயலார், ஊரார், நாட்டார் முதலியோரிடத்தும் அன்பு வருவதென்றால் இலேசாக வந்து விடுமா? பிறர் துக்கம் பொறுதவியல்பில்லாமல், அந்நியர் துக்க நஷ்டங்களைக்கண்டு மகிழுமியல்புள்ளவன்கண்ணர்களுக்குச் சமரச பாவனாபூரண ஞானம் சித்திப்பது அதிதுர்லபமென்பது சொல்லவும் வேண்டுமோ? இத்தகைய ஞானமானது சிறிது சிறிதாக அடையத்தக்க தொன்றாதலால் அவ்வாறு போதிக்கும் பல நெறிகளும் பலசமயங்களாய் வழங்கி வருகின்றன. இம்மதங்களெல்லாம் சமரசபாவமாகிய சரீரத்துக்கு அங்கங்களே. இவ்வங்கங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டிருந்தாற்றான் சமரசபாவ சரீரமும் ஆரோக்கியமாயிருக்கும்; சிறிது பிணங்கினும் சுகக்குறைவே. உறுப்புகளெல்லாங்கூடி வயிற்றைப் பகைத்தவென்னுங் கதை யாருமறிந்ததே. பலவகை யுறுப்புகளாகிய மதங்களுக்குரியவர்கள் பலவகை யதிகாரிகள் போல்வர். கிராமாதிகாரி, தேசாதிகாரி, ராஜ்யாதிகாரி முதலினோர் ஒற்றுமையோடு வாழ்வதே நலம். கிராமாதிகாரி, தான் தேசாதிகாரிக்கடங்கி யொழுகுவது முறை. தேசாதிகாரி கிராமாதிகாரியைத் தாழ்வு கூறாமல் பெருமைப்படுத்துவதே முறை. இப்படியே ராஜ்யாதி

காரிக்குங்கொள்க. கிராமம், தேசம், ராஜ்யம் இவற்றுக்குள் தாரதம்யமிருப்பது போல, மதங்களிலுமுண்டு. அம்மததாரதம்யம் அந்தந்த மதத்தில் முடிபொருளாகக்கொண்ட தத்துவப்பகுதிகளின் சிறுமை பெருமைகளை நோக்கிக்கொள்ளத்தக்கது. இதனைத்தெளியவுணர்த்துமிடத்து ஒருவன் பூமியைத் தெய்வமென்றுகொண்டு வழிபடுகிற மதஸ்தன்; ஒருவன் நெருப்பைத் தெய்வமென்று கொண்டவன்; ஒருவன் பூதக்கலப்பின் குணமே ஆன்மா என்பவன்; அதனை மறுத்து ஆன்மா வேறு, அதுவே முடிபொருள் என்பவன் ஒருவன்; இவற்றுக்கெல்லாம் அதீதமாய், இவற்றைக்கூட்டி நடத்துகின்ற பரமாத்மாவொன்றுண்டென்பவன் ஒருவன்; அப்பரமாத்மா விஷ்ணு என்பவன் ஒருவன்; சிவன் என்பவன் ஒருவன்; பரமாத்மா உரு என்றும், அருவென்றும், உருவருவென்றும், அத்வைதமென்பதற்குப்பொருள் ஒன்றென்றும், இரண்டென்றும், ஒன்றிரண்டென்றும் தனித்தனி கூறுவார் பலர்—இவ்வாறு தாம் தாம் விவகரிக்கும் தத்வ விசார பேதத்தாற் பல திறத்தராவர். தேசாதிகாரிகள் பல கிராமாதிகாரிகளுக்குத் தலைவராதல் போல மேலிட்ட தத்வப்பகுதிகளை விசாரித்தவர்கள் கீழிட்ட தத்வங்களை விசாரித்து முடித்தவர்களினுஞ் சிறந்தவராகத் தட்டில்லை. இத்தனை பகுதிகளுடைய மதங்களெல்லாம் ஒருவனே முறையாகத் தன் பரிபாகத்துக் கேற்ப அநுட்டிக்கவேண்டிய சோபானக் கிரமமாம். ஒரு கம்பிச்சட்டத்திலுள்ள பெரிதுஞ் சிறிதுமாகிய துவாரங்களெல்லாம் ஒன்றுக்கொன்று உபகாரமாய் ஒரே கம்பி செல்லவேண்டிய கிரமபந்தியாய் நிற்பது காண்க. இவற்றுள் ஒன்று, மூன்று, ஏழு முதலிய சில வரிசைகளிற் சென்று ஆபரணங்களுக்குப் பயன் படுவனவும், எல்லா வரிசைகளினுஞ் சென்று பயன்படுவனவாகிய கம்பிகளின் பேதம்போலவே சமயபேதங்களும். இவற்றுள் எல்லா வரிசைகளினும் சென்று தீர்ந்த அதிமிருதுவாய், மிக நயப்புள்ளதாய், எவ்வகையாக வளைப்பதற்கும் ஏற்றதாய்ச் சிறந்து நிற்பது காண்க. இந்த நிலையே சமரச பூரண ஞானநிலையாம். இதுகாறுங் கூறியவற்றால் சமரச பாவனாஞானத்துக்கே பலமதங்களும் அநுகூலமாய் நிற்பனவெனவும், அவை ஒன்றுக்கொன்று சாதனசாத்தியமாய் நிற்பவைகளேயெனவும், இவை யெல்லாவற்றையு மறிந்தவர்களுக்கே சமரசஞான பூர்த்தி கைகூடுமெனவும் போந்த வுண்மை காண்க.

இவ்வாறாக இவ்வுண்மையுணர்ச்சி போதாமல் எம்மதமே சம்மதத்துக்குத் தக்க மெய்ம்மதம், ஏனைய எம்மதமும் பொய்ம்மதமென்று மதமேற்கொண்டு கூறுவது பொருந்தாது, பொருந்தாது.

தற்காலத்தில் இம்மதச்சண்டை யாரவார மிக மலிந்துள்ளது. பிறரை நியாயமின்றி வரம்பு கடந்து திட்டித் தாம் பெரியராய் விட்டதாக நினைத்து மகிழ்ச்சியடைவர் சிலர். பிறர் கூறும் நியாயங்களை யறிந்து கொள்ளாமல்

தாம் பிடித்ததையே சாதிக்கவேண்டி அந்நியர்களின்மீது வீணாகத் தோஷாரோபணம் பண்ண வழிதேடிப் பொழுது போக்குவோர் சிலர். பிறர் சொல்லு நியாயத்துக்குத் தாம் உடன்படுவது குறைவென்றுகொண்டு தம் பெருமைக்குப் பாடுபட்டுப் பாழுக்கிரைத்து வாழ்நாள் கழிப்பவர் சிலர். இவர் வகை விரிக்கிற் பெருகும். இவர்களை உலகத்தில் தாம் நடத்தும் குடும்ப வாழ்க்கை நிலைமையை ஊன்றி விசாரியாத குறைவுடையரென்று சொல்வதே தகுதி. 'நமக்கு முன்னே நிகழும் பலவகைப் பொருள்களின இயல்பை நுட்பமாயறிந்து கொள்வதே முக்கிய ஞானம்' என்று ஒரு ஆங்கில பிரபல வித்வான் கூறுகிறார். ஆதலால், நமது குடும்பவாழ்க்கையில் இந்தச் சமரச பாவனை யெவ்வாறு கொள்ளக்கிடக்கின்றதென்பதை ஆராய்வாம்.

நமது வீட்டில் பலபிரிவுகளும் அவ்வவ்வற்றிற்கு ஒவ்வொரு வேலைக்காரருமிருக்கிறார்கள். சமையலறை, பூசையறை, படுக்கையறை, மையிருட்பறை, தோட்டம் முதலிய அப்பிரிவுகளில் எஜமானால் நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் தம்முட் பிணங்கிக்கொண்டு செருக்கோடு வாதிடத்தொடங்கி தத்தம் காவலிடமே சிறந்ததென்றுந் தத்தந்தொழிலே மேலானதென்றும் விவகரிக்கிறார்கள்:—சமைப்போன் மற்றயாரை நோக்கி நான் உண்டி சமைக்காவிட்டால் உயிர்வாழ்வதெப்படி? ஆகலின் எனதொழிலே முக்கியம்; நானே சிறந்தவனென்கிறான். பூசையறையிலுள்ளவன் உண்ணல், உடுத்தலாதி தொழிலெல்லாம் கேவலம் தேக சம்ரக்ஷணத்துக்குச் சாதனம்; பூசை செய்யாது உண்ணுகின்றவன் புழுவை யுண்ணுகின்றான் என்று சாஸ்திர முறையிடுகிறதே! 'உண்பதன் முன் மலர்பறித்திட்டுண்ணாராயின்' என்று பெரியாருங் கூறியிருக்கின்றார்களே என்று தன்னைச் சிலாக்கிக்கிறான். படுக்கையறையிலுள்ளவன் சொல்வது:—நித்திரையானது சரீரத்துக்குண்டான இளைப்பை மாற்றி வேலைசெய்ய உத்சாகத்தைத்தருகின்றது. அது இல்லாவிட்டால் கருவிகரணங்கள் நிலைதடுமாறி அறிவு கலங்கிப் பைத்தியம் பிடித்தாற்போல ஒன்றினும் பற்றில்லாது போய்விடும். நித்திரைச் சுகந்துக்கொத்த சுகமில்லையாதலால் படுக்கையிடமே சிறந்ததென்று தன்னையே புகழ்வது. பொக்கிஷசாலையிலிருப்பவனும் பொருளே யாவற்றிற்கும் காரணம்; அறம்பொருளின்பமென்னும் முறைக்கிடக்கையில் முன்னிற்கும் அறத்தையும் பின்னிற்குமின்பத்தையும் விளைவிப்பது காரணமாகவே பொருள் நடுவிலமைந்துள்ளது. "வையத்துமன்னிய மூன்றில்—நடுவுணதெய்த இருதலையுமெய்தும்" என்று நீதி நூலாருங் கூறினர். அப்பொருட் காவல்பூண்ட என்னிலுஞ் சிறந்தவர் யாவரென்று தன்பெருமை பேசுகிறான்.

[இன்னும் வரும்].

S. S. Perumal.

உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம் 2 } 1903ஆு அக்டோபர்மீ { இலக்கம் 11

விவேக சிந்து.

[தொடர்ச்சி.]

பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்கள் அந்தப்பிரபுவினுடைய அவதாரம். அப்படியானாலும் அந்தப் பரமேசுவரனுடைய ஆக்கினைக்குள்பட்டவர்களே. மாயா குணத்திரயம் பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்கள். அவர்கள் சிருஷ்டியாதி வியாபாரத்திற்குக் கர்த்தரானபேர். அவர்கள் செய்கிற காரியத்துக்கும் அந்தப் பரமேசுவரனே சமர்த்தர். ஆனபடியினாலே அந்தப்பிர்ம்மாதிதேவதைகளுக்கும் அவரே கர்த்தர். சகலமும் சகுணப்பிர்ம்ம மாயையினுடைய சேஷ்டை. ஆனபடியினாலே இனி ஒருவனைச் சர்வேசுவரனென்று சொல்லத்தேவையில்லை. அந்தச்சுவாமி சிருஷ்டிவேண்டுமென்று இச்சையினாலே பார்த்தபடியினாலே மாயையிலிருந்து மகாதத்துவம் உற்பத்தியாயிற்று. மகா மாயையினுடைய சுத்த தத்துவப்பிரதிபிம்பமே மகாதத்துவம். அவ்விடத்திலே தமோ ரசோகுணம் இரண்டும் தெரியாமல் சத்துவகுணத்திலே காப்பிகரித்திருக்கும். அதேசுவரனுடைய காரணதேகமாயிற்று. ருத்திரனாலே சங்காரம் பண்ணுவிக்கிறதற்கு அதே நிலைமை அதே அவ்வியாகிருதம். அவ்விடத்திலே சர்வேசுவரன்வந்து கூடுகையில் திரிவித அகங்காரம் பிறந்தது. அதெப்படியெனில் மாயாகுணசேஷ்டை விசிரும்பித்து சாத்துவீக ராஜஸ தாமத அகங்காரத்திரய யுத்தமாகத் திரிவித சத்திப் பிர

காசம் காண்பித்தது. கிரமமாகவே அதேதென்றால் சாத்துவிக அகங்காரத்திலே ஞான சக்தி, இராசத அகங்காரத்திலே கிரியா சக்தி, தாமத அகங்காரத்திலே திரவியசக்தி விர்த்திக்கும். அநுபோகத்தினாலே பார்த்துக் கொள்ளவும். சர்வேசுவரன் திரவிய சக்தியைப்பார்த்தான். அவ்விடத்திலே தாமத அகங்காரத்திலே ஆகாசம் பிறந்தது அந்த ஆகாசத்திலே வாயு, வாயுவிலே அக்கினி, அக்கினியிலே அப்பு, அப்புவிலே பிருதிவி, இந்தக்கிரமமாய் உற்பத்தி ஆயிற்று. சப்த விஷயம் ஆகாசத்துக்கு. பரிச விஷயம் வாயுவுக்கு ரூபவிஷயம் அக்கினிக்கு. இரசகுணம் அப்புவுக்கு. கந்த குணம் பிருதிவிக்கு. இது காரிய காரணபாவத்திலே பிரவேசித்தது அந்தச்சைதன்னியமே கிரியா சக்தி சமேதராய்க் கூடினார். அவ்விடத்திலே இராஜஸஅகங்காரம் பிறந்தது. பதினைந்து தத்துவத்துடனே கூட அவையெவையென்றால், (சோத்திராதி ஞான இந்திரியம் ஐந்து. வாக்காதிகர்மேந்திரியம் ஐந்து பிராணாதிவாயுக்கள் ஐந்து.) இந்தப்பதினைந்து தத்துவங்களும் பிறந்தன. இராஜஸ அகங்காரத்திலிருந்து அந்தச் சைதன்னியன் ஞான சக்தியைக் கூடினபடியினாலே சாத்துவிக அகங்காரம்பிறந்தது. அதில் அந்தக்கரணங்களும் சூரியாதி தேவதைகளும் உண்டானார்கள். ஒரு அந்தக்கரணமே நான்குவித விருத்தியாயிற்று. மனோ புத்தி சித்த அகங்கார மென்று இது போக்த சாதன மென பேசுக்கொண்டது. கர்த்தா போக்தா (என) இரண்டு பேரும் தத்துவங்களையு மறிந்தவர்கள். இராஜஸ அகங்காரத்திலே பிறந்த சோத்திராதி ஞானேந்திரியங்கள் சாத்திய சாதனங்களென்று சகல விஷயத்திலேயும் சொல்லப்பட்டது. தாமத அகங்காரத்திலே பிறந்த பஞ்ச பூதங்களே போக்கிய சாதகங்களென பேசுக்கொண்டது. காரிய போக்கியமென்று பெயர் வர்த்திக்கும். அகங்காரத்திரய லட்சண மிது. இதில்தத்துவமுற்பத்தியாய்ப்பின்னபின்னமானதே திரிபுடியென்பார்கள் தத்வஞானிகள். ஞாதுருஞானஞேயம் கர்த்தகாரணகாரியம். போக்த போகபோக்கியம். இது திரிபுடி அந்தக்கரணமே போக்தா. இந்திரியங்களே போகத்துக்குச்சாதனம். பஞ்ச பூதங்களே விஷயரூபமான போக்கியம். ஒரு போக்தசாதகத்து

க்கு மும்மூன்றுபெயரைக்கூட்டிச் சைதன்னியநாதன் நிச்சங்கனாய் ஒவ்வொருபூதத்திற்கும் வியாபித்திருப்பான். புறம்பு புறம்பாய் ஆகாச அமிசம் அந்தக்கரண பஞ்சகம். அப்புஅமிசம் விஷயபஞ்சகம். பிருதிவிஅமிசம் கர்மேந்திரியபஞ்சகம். வாயு அமிசம், பிராணபஞ்சகம். அக்கினிஅமிசம், ஞானேந்திரியபஞ்சகம். இவை ஒன்றிலே ஒன்றுகூடினபடியினாலே பஞ்சீகரணக்கதம்பமாயின. அந்தக்கரணம், சமானவாயு ஆதாரமாய்ச்சுரோத்திர இந்திரியத் துவாரத்தினாலே வாக்கோடே கூடின சத்தத்தைக் கிரகிக்கும். ஆகாசத்திலிருந்து மனம் வாயுஆதாரத்தினாலே தொக்கு இந்திரியத் துவாரத்தினால் பாணிஇந்திரிய சகிதமான பரிசவிஷயம் கிரகிக்கும். வாயுவிலிருந்து புத்தி உதானவாயு ஆதாரமாய்ச் சட்சு இந்திரியத்துவாரத்திலேயிருந்து பாத இந்திரியத்தோடே கூடி ரூபவிஷயங்கிரகிக்கும். தேயுவிலிருந்து சித்தம் அபானவாயுவாய் சிக்குவை இந்திரியத்துவாரத்தினின்று குய்யேந்திரியசகிதமான இரசவிஷயம் கிரகிக்கும். அப்புவிலிருந்து அகங்காரம் பிராணனே ஆதாரமாம் ஆக்கிராண இந்திரியத்துவாரத்திலிருந்து பாயுருசகிதமாய்க் கந்தவிஷயங்கிரகிக்கும். பிருதிவியிலிருந்து இந்தப்பிரகாரமாய விஷய ரூப பூதங்கள் நான்குங்கூடி ஒவ்வொன்றுக்கும் அவ்வைந்து ஆயிற்று. பஞ்ச விஷயங்களும் பஞ்ச பூதத்திலிருந்து உற்பத்தியாயின. இது தாமத அகங்கார அமிசம் ஆனபடியினாலே சகல தத்துவங்களும் போய் அங்கே தானே கூடும். ஆதி சூட்சுமமாய்ப் பஞ்ச பூதமே சொரூபத்துக்கு வந்தது. ஒன்றோடொன்று கூடின படியினாலே இந்தப்புறம் புறமான ஐந்து தத்துவங்களும் ஒன்றாய்க் கூடவேண்டுமென்று ஈசுவரன் மாயையில் கூடினான். இந்த லட்சணம் அதி விஸ்தாரமாக நன்றாய்ச்சொல்லுகிறோம் கேளென்று சீஷனுக்குக் குருசுவாமி சொல்லுகிறார். மூன்றாவது தத்துவசிருஷ்டிப்பிரகரணம் முற்றும்.

நான்காவது ஈசுவரதனுத்திரயப் பிரகரணம்.

அந்தப்படி ஈசுவரன் தத்துவத்தையும் மாயையிலே கூட்டிவைத்ததின் பிறகு இரண்யகர்ப்ப உற்பத்தி உண்டாக்கின விதம்.

குருநாதன் சீஷனுக்குச் சொல்லுகிறார். மகாதேவர் மாயையிலே பிரகடித்த அந்தப் பஞ்ச மகா பூதத்தை இரண்டு பாகம் பண்ணி ஒரு பாகத்தை நான்காய்ப் பகுந்து நான்கு பூதங்களிலும் கூட்டிற்று. இதன் விபரம் இனிமேற் சொல்லுகிறோம். நிறுத்தின நிசாம்சத்திலே இந்தக் கூடினவைகளையுங் கூட இருபத்தைந்தும் லிங்க தேகமென்று ஆரம்பித்தது. ஆனபடியால் இந்த இருபத்தைந்துகளையும் இரண்யகர்ப்ப அமிசம். அந்தப் பிரகாசம் ஈசுவரர் அமிசம். இந்த இருபத்தைந்துந் தேகத்துக்கு எந்தெந்த ரூபமாய் வர்த்திக்குமென்றால் கேளும். சோத்திரம் தச திக்கு. தொக்கு வாயு. சிக்குவை வருணன். ஆக்கிராணம் அசுவினி தேவதைகள். வாக்கு வன்னி. பாணி இந்திரன். பாதம் விஷ்ணு. குய்யம் பிரஜாபதி. பாயுரு நைருதி. பிராண பஞ்சகமும் சத்தாதி பஞ்சகமும் விஷய ரூப பூதங்களென்று அவைகளுக்கு அதி தேவதைகளைச் சொல்லவில்லை. இந்தப் பத்து பிரமாண்டத்துக்கும் பிண்ட அண்டத்துக்கும் சரி சொல்லும் அந்தக்கரணமே விஷ்ணு மனம் சந்திரன். புத்தி பிரமதேவன். சித்தன் நாராயணன். அகங்காரம் ருத்திரன். இந்த இருபத்தைந்து குணமும் ஈசுவரனுக்கு லிங்க தேகமான இரண்ய கர்ப்பம். இந்தச் சூட்சும பூதமே ஈசுவரனுக்குச் சூட்சும தேகமென்று வேத சாஸ்திரங்களிலே பிரசித்தமாகச் சொல்லும். இந்தச் சூட்சும தேகமானதின் பிறகு தூலதேகமில்லாமற் சூக்குமமில்லையென்று அதற்குத் தூலதேகம் ஆரம்பிக்கிறார். தூல தேக நிர்மாணம் பஞ்சீகிருத தூலமில்லாமல் ஆகாதென்று பூத பஞ்சீகரணம் பண்ணுகிறார். ஒவ்வொரு பூதமும் ஐந்தாகப் பண்ணி ஐந்தைந்திடத்திலே கூட்டினார். இது மகா பஞ்சீகிருத பிரகாரமென்று வேதத்திலே சொல்லப்படும். அதை விஸ்தாரமாகச் சொல்லுகிறோம். சாவதானமாய்க் கேள்.

[இன்னும் வரும்.]

பத்திராதிபர்.

சமரசபாவனை.

[தொடர்ச்சி.]

தோட்டக்காரனும் ஏனையரை நோக்கி ஐயன்மீர்! நீங்கள் வரம்பில்லாமல் வாயாலளந்து வீண் பிரசங்கம் செய்கிறீர்களே; ஒருவேளை மலசலமோசனத் தடையுண்டானால் என்ன பாடு படுவீர்கள்? உள்ளிடத்திலிருந்து வெளிப்படுத்துகின்ற எவ்வகைக் குப்பைகளையும் போக்கி நான் சுத்திகரிக்காவிடில் உங்கள் உடம்பும் வீடும் நாற்றமெடுத்துப்போமே; இவ்வுண்மையுணர்ச்சியிருந்தாலெனக்கு முன்பாக வுங்களைப் புகழ்ந்துகொள்ள நாவெழுந்திருக்குமா; சற்று சிதானித்துப் பாருங்களென்று அசுவதாட்டியாய்ப் பேசுகிறான்.

இவர்களிவ்வாறு கூறித் தத்தம் பெருமையை எடுத்து விவகரிப்பது வாஸ்தவமேயானாலும், தம்மிட மாத்திரம் வீடாகுமா? என்பதை யூன்றி விசாரியாத குறையாளரென்பதே சித்தம். உணவு பூசை முதலியவெல்லாம் பொருளாலே ஆவனவாயினும், அப்பொருளைப் பல ரூபமாக மாற்றாவிடின் அநுபவிக்கத் தகுதியாகாது. இவர்களில் ஒருவன் பிணங்கி நீங்கிவிடுவானாகில் மற்றவர்களுக்கொரு துன்பமுமில்லை; யஜமானனே சங்கடத்துக்குள்ளாகின்றவன். யஜமானனுக்கு எல்லாரும் ஒருங்கே இணங்கியிருந்தாலன்றிச் சுகபூர்த்தி கிட்டாது. அவன் எல்லாரிடத்துஞ் சமரசபாவனை கொள்ளவேண்டியதன்றி, மற்றவர்களுக்கும் நல்லறிவூட்டி அவர்களை யிணக்கி வைத்துத் தனக்கும் அவர்க்கும் சுகவழி தேடவேண்டியது. யஜமானன் ஒரு சரீரமும் வேலைக்காரர்களெல்லாம் அச்சரீரத்துள்ள பல அவயவங்களும் போல்வாராகையால், ஒருவன் தன் சரீரத்தில் எந்தவுறுப்பு ஒழுங்கீனமடைந்தாலும் கவனித்துச் சீர்ப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருத்தல் போல, சமரசபாவனை சரீரத்துக்கு அவயவங்களாகிய பலவகைச் சமயிகளும் அன்பு பாராட்டி யொழுகுவதே பெருங்கடமையாம். இவ்வொழுக்கந் தவறினால் உண்டாகும் கேடுகளை ஓர் சிறு கதை வாயிலாகக் காட்டுகிறோம். அக்கதை வருமாறு:—

கல்வியுஞ் செல்வமு மொருங்கே மலிந்து நீர்வளத்தாலு நிலவளத்தாலும் பொலிந்து விளங்குங் காஞ்சனபுரி யென்றொரு பட்டணமுண்டு. அதில் எல்லாரும் ஒற்றுமைப்பட்டிருக்க ஒவ்வொருவரும் சுகாநுபவத்தோடு வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறிருக்க, அந்நகர வாசிகளில் குயவன், கருமான், தச்சன் நெய்வோன், ஆகிய இவர்கள் தாம் பிறரோடு ஐக்கியமாயிருந்ததாலுண்டாகிய சிறிது செல்வப் பெருக்கால் 'மூந்திரிமேற்காணி மிகுவதேற்கீழ் தன்னையிந்திரனா யெண்ணிவிடும்' என்றவாறே செருக்கு மேற்கொண்டு, சிறியரே மதி

க்கு மிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே, வழிய புன்செருக்கால் மூடி வாயுளார் மூகராவர்' என்பதற்கிணங்கப் பிறரோடு பேச்சாடலுமின்றி வாயடைத்து, விழித்த கண் குருடராய்த் திரிந்தினர். நம்முடைய தொழிலே நமக்கு வேண்டியதைத் தருவதாயிருக்க ஒருவனுடைய தயவையெதிர் பார்க்க வேண்டியதெற்றுக்கு? என்பதே யவர் கொண்ட மூடக்கொள்கை. இவ்வண்ணத்தோடு கொண்ட மதங்குறையாமல் வாழ்ந்து வரு நாளில் குயவனுடைய மட்கலத்திரிகையிற் பலகையும் கதிராணியும் பழுது பட்டது. அதுகண்ட குலாலன், இதைப்பழுது பார்ப்பதற்காகக் கருமானிடத்தும், தச்சனிடத்தும் நாம் போகிறதா என்னுங் கருவத்தால் தானே பழுது பார்க்க முயன்று கூடாமையால் திரிகையைக் கழற்றி யெறிந்து விட்டு, 'நம்மிடத்தில் உணவுப்பொருளில்லையா? இத் தொழில் செய்யா விட்டால் என்ன நஷ்டம்' என்று கையிலிருந்த பொருளைக்கொண்டு காலங்கழிப்பனாயினன். அணிந்து வந்த ஆடை கிழிந்தது. நெய்வோனிடத்திற் போகிறதா என்று கந்தையைச் சில நாளுடுத்தி வந்தும் சிந்தையிற் புகுந்த அகந்தை ஒழிந்திலது. பின்னர்ச் சில நாள் கோவணத்தோடும் பின்னர் அதுவு மின்றியும் வாழ்ந்து வர நேரிட்டது. வீட்டிலிருந்த மட்கலங்களும் பழமைபட்டுடைந்தன. அவற்றை மீண்டுஞ் செய்து கொள்ள இடமில்லை. திரிகை முன்னரே பழுதாகி விட்டபடியால், மட்பவைஞன் மணவாழ்க்கை மாட்சிமை யிவ்வாறாயிற்று.

கருமான் குடி வாழ்க்கை எவ்வாறாயிற்றெனில்:— சம்மட்டி சுத்தி இவற்றின் காம்பு முறிந்தன. கலசங்குட முதலிய உடைந்து போயின. கட்டியிருந்த வஸ்திரங் கிழிந்தது. தச்சனிடத்தும், குயவனிடத்தும், நெய்வோனிடத்தும் மானங்கெட்டு வலியப்போகிறதா என்று உடுக்க ஆடையின்றிப் படுக்க பாயின்றி, எடுக்க எனமின்றி, அடிக்கச் செம்மட்டியின்றி, கையிலுள்ள உணவுப்பொருள்களைக் கஷ்டப்பட்டு ஆகாரமாகக்கொண்டு காலங் கடத்துவனாயினான். அரைநாணுக்கு ஓரிருப்புக் கம்பியை வளைத்த, ஒரு தகட்டைக் கௌபீனமாகக் கட்டிகொண்டு தன்னை அலங்கரித்து வருகிறான் கருமான்.

தச்சனும், நெய்வோனும் மேற்கூறிய இருவர் நிலைக்கும் சளைத்தார்களில்லை. இவர்களிலும் ஒவ்வொருவனுககும் ஏனைய மூவர் உபகரிப்பு வேண்டுமன்றோ? தொழிலடியோடு நின்று விட்டாலும் எல்லோருமொற்றுமையாயிருந்து ஈட்டிய காலத்து மிஞ்சிய பொருளால் சேகரித்து வைத்திருந்த தானிய முதலிய உணவுப் பொருள்களால் உயிரை மாத்திரம் காப்பாற்றிக்கொண்டு வருகையில் அவ்வுணவுப் பொருள்களும் நாளுக்கு நாள் குறைந்து 'குழிய மணவயிற் புகுமோ ரெறும்பினுக்கு மாங்குணவு கொடுத்தற்கில்லை' என்னும் பரிதாப நிலைமைக்கு வந்து விட்டார்கள். தரித்திர மென்னுங் கடுங்கோடையானது இவர்களுயிராகிய பயிர்க்கு உணவாகிய ஈரமற்றுப்போகப் பசியாகிய

வெயிலை வீச அதனால் வாடி, வறண்டு மெலிந்து தம்முள்ளே தமக்கு நேர்ந்துள்ள கால கதியைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார்கள்.

நாம் சுகமாக உண்டு உடுத்தக் குறைவில்லாமல் வாழ்ந்து வந்தோமே! இப்போதே படுகின்ற கஷ்டத்துக்கோரளவில்லையே! இவற்றுக்குக் காரணமென்னவென்றால் நமது கைத்தொழில் தடையின்றி நடை பெற்று வந்ததேயாம். அத்தொழிலிப்போது தடைப்படுவானேன் எனில், நமக்குள்ள ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருந்து கொண்டு ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலுக்கான கருவிகளை மற்றவர்கள் சீர்ப்படுத்திக்கொடுத்து உபகரித்து வந்ததை மூடத்தனத்தால் விரோதித்து நாமே பெரியவனென்று அகங்காரங்கொண்டு ஐக்கிய மிழந்ததனாலேதான். கையிற் சிறிது பதார்த்தம் (உணவுப்பொருள்) இருந்ததனால் நமது கைத்தொழில் முட்டுப்பட்டும் சில நாள் வரையும் காரணந்தோன்றாதிருந்தது. இனி மேலும் இடையே நம்மைக் கெடுக்க வந்த அகங்காரபுத்தியைத் தொலைக்கா விட்டால் நமது மனைவி மக்களோடு ஐயோ! மரணத்துக்கு ஆளாகவேண்டியதன்றி வேறு பிழைக்கும்வழி கிடையாதென்று ஒவ்வொருவருந்தம்முள் தீர்மானித்து எல்லோரும் கும்புகூடி ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு,

1. துன்பமில்லா வாழ்விற் சுகித்திருந்த நாமெல்லாம்
இன்பந்தெரியாத ஈனராய்ப்போனோமே.

2. உண்ணவுணவில்லை யுடுக்கத்துணியுமில்லை
எண்ணரிய சங்கடத்தில் ஈடழிந்து நின்றோமே.

3. அகங்காரப்பேய் பிடித்தே ஆட்டுவிக்க வாடிச்
சுகங்காணு மார்க்க மறத் துர்ப்புத்தி கொண்டோமே.

4. சௌக்கியமாம் வாழ்வினுக்கு தக்க தொரு மார்க்கம்
ஐக்கியமே என்பதனை ஐயோ! மறந்தோமே.

5. கேடு வரு முன்ன மதி கெட்டு வருமென்பார்கள்
நாடு தனிலந்த வுண்மை நம்மிடத்தே கண்டோமே.

6. ஒருத்தர்க் கொருத்தர் உபகாரியாயிருந்தால்
தரித்திரமாஞ் சத்துருவுந் தானுழைந்து சாடாதே.

என்று பெருங் கூக்கரலிட்டார்கள். அற்பப் பொருள் கையிலே சேர்ந்த மாத்திரத்தில் அகம்பாவ மேலிட்டு அடியோடே கெட்டோமே. நமது தொழிலே மேலானதென்று மதித்தோமே; நந்தொழிலா லீட்டிய பொருளை அப்படியே உண்ணலாமா? உழவு தொழிலாளனன்றோ எல்லார்க்கும் உபகாரி. அவனு

க்குறிய வேளாளனென்னும் பெயரின் பொருளை யறிந்தவர்க்கல்லவோ அவனருமை நன்கு புலப்படும். வேளாண்மை யென்பது பிறருடைய விருப்பத்தை யாளுந்தன்மை, அதாவது பிறரால் விரும்பப்படுந்தன்மை, எனவே உபகாரியென்னும் பொருளை யறியாது வேறுபொருந்தாப்பொருள் கற்பித்துத்தத்தஞ்சாதியே யுயர்ந்ததென விதண்டை பேசும் ஆதர் போல நாமு மெண்ணிக்கொண்டோமே. நமது தொழிலெல்லாம் அப்புண்ணிய வானில்லாவிட்டால் எப்படி நடைபெறும்? நாமெல்லாம் செத்த பாம்பை யடிக்கும் தீர சூரச்சிங்கங்களே. அவன் மரத்தை வளர்த்துக் கொடுத்தாலல்லாமல் தச்சன் றொழில் நடக்குமா? பருத்தியை விளைவித்துக் கொடுத்தாலல்லாமல் நெய்வோன் என்ன செய்வான்? அவன் பெருமை யளவற்றது; அன்ன மயம் பிராண மயம் என்பார்கள். ஆதலாம் அவனே பிராண ரக்ஷகன். ஆதலால் நாம் அவனிடத்தே சென்று அவனைக்கொண்டாடி, சிறிது தானியம் கடனாக வாங்கி வந்து வைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் ஐக்கியமாய் நமது தொழிலை நடத்தி க்ஷேமப் படுவோமென்று தீர்மானித்தார்கள். அப்படியே எல்லோருமொன்று கூடி ஒரு நாளிராத்திரி உழவு தொழிலாளனிடத்திற் போய் 'அப்பனே நீயே பாக்கியசாலி; எல்லாரையும் ரக்ஷிக்கின்றவனை நீயே;' 'உழுகுலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே' எனவும். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாந்—தொழுதுண்டு பின் செல்லுவார்' எனவும் பெரியோர் கூறியது சத்திய மென்றறியாமல் நாங்கள் இறுமாந்து கெட்டோம். நீயே பிரபு என்று புகழத் தொடங்கினார்கள். அதைக்கேட்ட வேளாளன் கோபங்கொண்டு அவர்களைப் பார்த்து 'நீங்களேன் இப்படிப் பொய்யான உபசாரமொழி புகலுகின்றீர்கள். ஒன்றுமென்ன காரியம் முடியும்? நானுழுகின்ற கலப்பையுங் கொழுவும், குடிக்கின்ற கலமும, அணிகின்ற ஆடையும் நானா செய்துகொண்டேன்? எல்லாம் நீங்கள் செய்துகொடுத்தவைகளே. இவையில்லாமல் நான் நாள் கடத்துவதும், தொழில் நடத்துவதுமெப்படியாகும்? நீங்கள் என்னைப் புகழ்வதைவிட்டாலே நீங்கள் கருதிவந்த காரியத்தைக் கேட்பேன் என்றான். அதன்மேல் தச்சன்முதலிய தொழிலாளிகளெல்லாம் தங்கள் விருத்தாந்தத்தைச் சாங்கோபாங்கமாகச்சொல்லி விரும்பிவந்த வேண்டுகோளையும் வெளியிட்டார்கள். வேளாளன் அதைக்கேட்டு மிக்க பரிதாபங்கொண்டு அவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி, ஒவ்வொருவருக்கும் சிறிது தானியம் உபகரித்துப் போக்கினான். அவர்கள் திரும்பிவரும்போது அடங்காமகிழ்ச்சியுடையவர்களாய்க் குடியானவனுடைய உத்தமகுணத்தைக் கொண்டாடிக்கொண்டு கிருகம் வந்து சேர்ந்தார்கள். மற்றைநாட் காலையில் குயவன் முதலியோர் தத்தம் தொழிற்கருவிகளை ஏனையோரால் பழுதுபார்ப்பித்துக்கொண்டு தொழிலை நடத்திப் பொருளைச்சேர்த்து, உழுதொழிலோனுக்குக் கடனையுஞ் செலுத்திவிட்டு அத்தியந்த ஐக்கியத்தோடு வாழ்ந்து வந்தார்கள்.

இச்சிறு கதையை நோக்குங்கால் உழவு தொழிலாளனுடைய வசனத்தால் சமரசபாவனையினைத்தென அகங்கை நெல்லிக்கனி யெனத்துலங்கும். இத்தகைய சமரச பாவனையே எல்லாச் சமயங்களாலும் உபதேசிக்கப்படுவது. அவ்வாறாக இவ்வரியகொள்கையைக்கடைப்பிடித்தொழுகுவதை யறவேவிட்டு ஒருவரோடொருவர் கலாய்த்து முடிவிலொரு பயனு மின்றிக் கிடைத்தற்கரிய வாணாளை வீணாக்கி கடவுளுடைய ஆணையை அசட்டை பண்ணி யொழுகுவது கொடும் பாவமென்க.

சமரசபாவ லக்ஷணத்தை விளக்குந் திருவாக்கு ஒன்றை எடுத்துக் கூறுகின்றோம்.

“ஓது சமயங்கள், பொருளுணரு நூல்கள் ஒன்றோடொன்றொவ்வாமல் உள பலவும், இவற்றுள்—யாது சமயம் பொருள் நூல்யாதிங்கென்னில், இதுவாகும், அது அல்லது, எனும்பிணக்கதின்றி—நீதியினாலிவை யெல்லா மோரிடத்தே காண நிற்பது யாதொரு சமயம் அது சமயம், பொருள், நூல்”

என்று கூறி யிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் ஏனைய சமயக் கோட்பாடுகளெல்லா வற்றையும் பூர்வ பக்ஷம் பண்ணித் தன் தன் கொள்கையையே சித்தாந்தம் செய்திருக்குங் காரணமென்னையோ என்றால், இதனை விசாரித்தறிய வேண்டியது முக்கியமான காரியம். ஒரு மனுஷன் பிறந்து தன் முன்னோர் தழுவிய சமய ஆசாரங்களை யநுட்டித்து வந்து, விவகார ஞானம் வந்த போது தான் ஆசரிக்கும் சமயம் யாது என்று விசாரிக்கத்தொடங்குகிறான். இந்த விசாரமே யில்லாது உண்பது உறங்குவதுமே பயனாக மிருக பிராயமாய் உழைத்துத் திரிவார் மிகப்பலர். மத விசாரத்தில் தலைப்பட்ட சிலர்க்கு, தம்மதத்திற் பற்றுண்டாகுங் காரணமாகவே பரபக்ஷநிராகரணமும் சுபக்ஷஸ்தாபனமுமாக ஒவ்வொரு சமயப் பூர்வீகர்களும் சாஸ்திரங்களைச் செய்திருக்கிறார்கள். தன் சமய சித்தாந்தத்தைப் பார்த்த போது அதுவே சிறந்ததென்று அதனிடத்திற் பற்றுண்டாகும்; உண்டாகவே அந்தச்சாஸ்திரம் விதிக்குந் தருமங்களைச் செய்வதிற் சிரத்தை விளையும். மதாபிமானம் முன்னும், மதவிசாரம் பின்னுமாக வருதலால் இத்தகைய நூல் அவசியம் வேண்டுவதே எந்த மதஸ்தனும் தன் மதத்தை எவ்வளவானாலும் பூஷித்துப்பேசலாம். இதரமத தூஷணமே தோஷமாகும். 'கற்பதுவுங் கேட்பதுவுங் கற்றவற்றைக் கற்றவர்பால்—தர்க்கமிட்டு நாய் போலச் சள்ளெனவோ' உள்ளமடங்கவலவோ?' அடங்காது ஒருவன் வெளிவந்தால் அவனுக்கு நல்லறிவிச்சுடர் கொளுத்தி யடங்கி யொழுகச்செய்வது முறைமையேயாம். பரமத தூஷணம் பண்ணுகிறவன் தன் மதப்பற்றையும் விட்டு இரண்டுங் கெட்டவனாய்த் திரிய வழிகோலுவோனாகிறான். இவற்றை யாராய்ந்து, சமரசபாவ

த்தை விர்த்தி செய்துகொண்டு இறைவன் திருவருளுக்குப் பாத்திரனுவதை
விட்டு சாதியபிமானம், சமயாபிமானம், முதலிய பந்தனையிற் கட்டுண்டு, அந்நி
யரிடத்தில் அசூயை மேலிட்டு உலகங் கெடுவது பரிதாபம்! பரிதாபம்!!

சைவனென்றல் வைணவனுக்குச் சங்கடம்; வைணவனென்றல் ஸ்மார்
த்தனுக்கு வயிற்றெரிச்சல்; எல்லாரையும் பொல்லாதவனென்பான் பவுத்தன்.
இந்த அபிமான அந்தகாரம் சமரசபாவனை ஞானமென்னும் மார்த்தாண்டன்
உதித்தாலல்லாமல் ஒழிந்திடாது. 'சாதிச் சமயச்சழக்கை விட்டேன் அன்
றுத் சோதியைக்கண்டேன்' என்றார் ஒரு பெரியவர். இத்தகைய ட்கி மாதிச
யத்தோடு கூடிய சமரசதுல்ய ஞானமே ஞானமாவது; இதனைப்போதிக்கு
நூல்களே உண்மை நூல்கள்; இவற்றை யுபதேசிப்பவரே பரமாசாரிய
ரென்று யாவரும் ஆசித்து நேசித்து பூசித்து வழிபடுதற் குரியவர்.

இந்தச் சமரசங் குன்றித் துரபிமான மேற்கொண்டவர்கள் விவகாரங்
கள் ஆஸ்ய ரஸத்துக்கு மிக யோக்கியமானவைகளே. ஒரு வைஷ்ணவர்
வியாகரண சூத்திரங்களைப் பார்த்துக்கொண்டு வருகையில், 'அர்த்தாதுப்,
ரகரணது, லிங்காது, ஔஜிதாது' என்று ஒரு சூத்திரத்தைக் கண்ட போது
ஐயோ! லிங்கம் இங்கும் வந்து நுழைந்து விட்டதே! இதென்ன அநியாயம்!
என்று அசூயைகொண்டு, 'லிங்காது' என்பதையடித்து 'சாளிக்கிராமாது'
எனத்திருத்தி மனத்திருப்தியடைந்தார். அந்தோ பரிதாபம்! அச் சூத்திரத்
திற் போந்த லிங்க சப்தமானது சிவ லிங்கம், மகா லிங்கம், இத்தியாதி லிங்க
பேதங்களைக் குறித்ததேயன்று. ஸ்திரீயும், நபும்ஸக லிங்கங்களாகிய பாலி
னது பாகு பாட்டையே குறித்தது. லிங்க சப்தமே யவர்க்கவ்வளவு கோப
த்தை யுண்டாக்கிற்று. க்ஷமணர்கள் யாரேனும் நெற்றியிலே வீபூதி முதலிய
பூசி யிருக்கக் கண்டு விட்டாலோ, 'கண்டு முட்டு' என்றும் சிவ நாம முதலிய
வற்றைப் பிறர் சொல்லக் கேட்டு விட்டாலோ, 'கேட்டு முட்டு' என்றும்
தீண்டற் பட்டதாகப் பிராயச் சித்தம் செய்து கொள்ளுகிறது வழக்கம். இவ
ற்றை யின்னும் விரிக்கிற் பெருகும்

ஆயினும் இன்னும் ஒரு திட்டாந்த மாத்திரம் சொல்லுகிறோம். தஞ்சை
க்கடுத்த மாங்குடி முதலிய இடங்களில் உள்ள பிராமணர்கள் சிவ பத்தி
யழுத்த முடையவர்கள். அவர்களில் ஒருவர் கதையைக் கேளுங்கள்:—
இவர் ஒரு நாள் சமீபத்துள்ள விண்ணாற்றுக்கு நீராடப் போயினர். அங்கு
ஸ்நானத்திற்கு வந்திருந்த ஒரு வைணவர் ஆற்றிலிறங்கி, ஹரி: என்று
சொல்லி மூழ்கினர் அவ்வோசையைக் கேட்ட சிவ பத்தர் மிகச் சினந்து அவ
ரிடத்திற் போய்ப் பளீர் பளீரென்று இரண்டு கன்னத்திலும் அறைந்தார்.
அவர் 'ஏன்காணும் என்னையடித்தீர்' என்று கேட்க, நீ யேன் தகாதபேச்சுப்

பேசினாய்' என்றனர். 'ஹரி: என்று சொல்வதா தகாத பேச்சு' என்ற
வைணவரை 'மீண்டுஞ் சொல்லுகிறாயா' என்று திரும்பவும் அடித்தார்.
அடி பட்டவர் அதிகாரி யிடத்தில் அறிவிக்க, அதிகாரி அடித்தவரை விசாரிக்
கத்தொடங்கினார்:—

அதி—ஏனையா இவரை அடித்தீர்?

சிவ—இவன் தகாத வார்த்தை சொன்னான். அதினாலடித்தேன்.

அதி—என்ன வார்த்தை இவர் சொன்னது?

சிவ—நான் சொல்ல மாட்டேன்.

அதி—அப்படி என்ன சொல்லினார்? சும்மா சொல்லும்.

சிவ—நான் என் வாயாற் சொல்லவே மாட்டேன். வேண்டுமானால்
அவனைக் கேட்டுக் கொள்ளும்.

அதி—நீரென்ன வார்த்தை சொன்னீர்?

வைண—ஐயா, நான் தகாத வார்த்தை ஒன்றும் சொல்ல வில்லை.
ஆற்றிலே ஸ்நானம் பண்ணத்தொடங்கி ஹரி: என்று சொன்
னது தான்;

என்று சொல்லும்போது சிவபத்தர் அவரிடம் ஓடி மீளவும் அடித்தார்.

இத்தகைய கொடும்பற்றையும், அசூயையும் விட்டொழிதல் வேண்டும்.
ஒருவன் எழுதப்பழகிக் கொள்வதற்காக ஆரம்பத்தில் இரண்டு கோடு போட்டு
க்கொண்டு எழுத்துக்கள் கோட்டுக்கு மேலும் கீழும் எல்லை கடந்து போகா
மல் சட்டம் எழுதி வருகிறான். கை படிந்த பிறகு ரூல் தடியைக்கட்டிக்
கொண்டு எழுதும் போதெல்லாம் கோடு போட்டுக் கொள்ள வேண்டிய ஆவ
சியகம் இல்லையே. கை தேர்ந்தபின் கோடு போடச்சொல்லி நிர்ப்பந்திப்பா
ருமில்லை. அது போல ஒரு மதத்தில் பிறந்தவன் அம்மதாசாரங்களை யநுட்டி
க்கவேண்டிய நிபந்தனைகள் சில ஏற்பட்டிருப்பனவற்றில் கட்டுண்டு, அந்நிபந்
தனைகளால் சமரச பாவனை தான் முடிவான தருமமென்று தெளிந்த பின்னர்
அவ்வாசாரங்களில் அழுந்திய பற்று வைத்துக்கொண்டு இதர ஆசாரங்களில்
அசூயைப்படுவது பொருந்தாது. மனம் பரி பாகம் அடைந்தவர்களுக்கு
சொல்லும் செயலும் வேடமும் மிகையாய் முடியுமாறறிக! ஞானிகள் என்று
கொண்டாடப்படுவோரிடத்தில் மத சம்பந்தமான சின்னங்களை எவரும் எதிர்
பார்ப்பதில்லை. சிலர் கீழிட்ட பரிபாகிகளுக்கு நன்மையுண்டாகும்படி மத
சின்னங்களை வர்ஜ்ஜிக்காமல் அணிந்து வருவதும் உண்டு. நிற்க.

மேற்கூறியவாறு அசூயை கொள்ளாமல் ஒழுகுமவர்க்கே, சமரச ஞானப்
பேறு சித்திப்பதாகும். மத சின்னங்களையாவது அம்மதக்கடவுளுடைய நாம

ங்களையாவது கண்டுங் கேட்டும் வெறுக்கலாகாதது போலவே, மதசித்தாந்தங்களிடத்தில் வெறுப்பு வைக்கலாகாது. 'தெய்வமுமநந்தபேதம், திகழ்கின்ற சமயமுமநந்தம்' என்றபடி எல்லாம் முழுமுதற்கடவுளின் அமைப்பே. அங்ஙனமாக ஒருவன் அயலான் மதத்தை நிந்தித்து அவனைத்தான் உத்தமமாகச் சொல்லும் தன் மதத்தைத் தழுவும்படி சொல்வது கடவுள் திருவுள்ளத்துக்குத் திருப்தி யாகாது.

ஒருவன் தன் கைம்முதலுக்குத் தகுந்தபடி பலசரக்கு வியாபாரஞ்செய்து காலங்கழிக்கிறான். அவனினுங் கொஞ்ச முயர்ந்த பொருளுடையவன் ஜவளி வியாபாரம் செய்கிறான். இது போலவே கன்மத்துக்கீடானபடி மதப்பிரவேசம் லபித்திருக்கிறது. ஒருவன் மற்றொருவனைத் தன்னைப்போற் செய்யச் சொன்னால் அவன் முன் செய்து வந்த தொழிலை யார் செய்வது? க்ஷௌரஞ் செய்கிறவனை அவனுடையதொழிலை விட்டுவிடச்சொன்னால் பின்னர் தனக்குத்தானே அத்தொழிலைச் செய்துகொள்ளவேண்டியதாகவன்றோ சம்பவிக்கும்? ஆதலால் ஒவ்வொருவனுந் தன் தன் றொழிலைத் திருத்தமாகச் சிரத்தையோடு செய்யும்படி உபதேசிப்பதை உலக க்ஷேமத்துக்கு ஏதுவாதல்போல் ஒவ்வொரு மதஸ்தனும் தன் தன் மதப்பற்று நெகிழாதபடி போதிப்பதோடு எம்மதத்தாரோடுஞ் சமரச பாவத்துடன் அளவளாவுவதே ஆன்ம க்ஷேமத்துக்கு அடுத்ததாகும். இனி எந்தச்சமயியும் பிற சமயிகளோடு சமரசமின்றிப் போராடுவது கூடாது என்பதற்கேற்ற காரணங்களை விளக்குவாம்.

பலவகைச் சமயிகளும் தந்தம் மதங்களைப்பற்றிப் பிரசங்கிக்குங் காலத்தில் யானை கண்ட குருடர் என்னும் பிரசித்தமான கதையை எடுத்து உதகரித்து மற்றவர்களெல்லாம் குருடராகவும் தாம் ஒருவரே கண்ணுடையராகவும் விவகரிக்கிற விஷயம் யாவரும் அறிந்ததே. தாம் மாத்திரம் கண்ணுடையவராகச்சொல்லிக் கொள்வதேயல்லாமல் தமது கண்ணுடைமைக்கும் ஏனையோர்க்கு அஃதில்லாமைக்கும் உள்ள குண தோஷங்களை விளக்குகிறதில்லை. அவ்வாறு விளக்குவதிலுண்டாகுஞ் சமரசபாவனையைத் தாம் கொண்டொழுகாமல் மற்றையோரைக் குருடரென்று திட்டி விட்டதற்காகத் திருப்தி யடைகிறார்கள். யானை கண்ட குருடர் கதை யாவரும் அறிந்த தொன்றாயினும் அதனைச் சிறிது விளக்குவாம். சில பிறவிக் குருடர் யானையைப் பார்க்க வேண்டுமென்று ஆலோசித்து ஒருவனுக்குச் சிறிது பொருள் கொடுத்து யானையைத் தாங்கள் பார்க்கும்படி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவன் அவர்களை யானையண்டை யழைத்துப்போய்ச் சுற்றிலும் நிறுத்தினான். ஒவ்வொருவனும் ஒவ்வோருறுப்பைத் தடவிப்பார்த்து 'ஓகோ இப்படியாயிருக்கிறது யானை' என்று தனக்குள்ளே முடிவு செய்து கொண்டான். எல்லோரும் திரும்பி வருகையில் இவர்களை அழைத்துப் போனவன் யானை

யெப்படி யிருக்கிறதென்றுகேட்கத் துதிக்கையைத் தடவிப்பார்த்தவன் யானை ஒரு பெரிய உலக்கைபோலிருக்கிறதென்றான். அல்ல அல்ல; யானை முறம் போலிருக்கிறதென்றான் காதைத் தடவிப்பார்த்தவன். இவர்களிருவரும் சொல்வது தப்பு; யானை உரல்போலிருக்கிறதென்றான் காலைத்தடவிப்பார்த்தவன். இவர்கள் சொல்வதெல்லாம் பொய் யானை விளக்குமாறுபோலிருக்கிறதென்றான் வாலைத்தடவிப்பார்த்தவன். ஆகவே உரலும் உலக்கையும் முறமும் விளக்குமாறுமாகிய நெற்குத்துங் கருவிகளாகக்கூறி ஒருவரோடொருவர் கலகமிட்டுக் கடுமொழிமாறிக் கைகலக்கத்தொடங்கினர். அழைத்துப்போன புருஷன் அவர்களைச் சமாதானப்படுத்த, அவர்களில் ஒருவன் அவனைப்பார்த்து யானை உரல்போலிருக்கவில்லையாவென்று கேட்க ஆமென்றான். மற்றொருவன் உலக்கைபோலிருக்கிறதே யென்றுசொல்ல அதற்கும் ஆமென்றான். மற்றவர்களும் முறமும் துடைப்பமும்போலில்லையா என்று தனித்தனி கேட்க அவன் அதற்கும் ஆம், ஆம் என்றான். சற்று முன்னே ஒருவரோடொருவர் சண்டையிட்ட குருடர்கள் அவனை 'உனக்கென்ன பைத்தியமா? அல்லது செவிடா? உரல்போலிருக்கிறதென்று நான் சொன்னாலும், முறம்போலிருக்கிறதென்று மற்றவன் சொன்னாலும் எல்லாவற்றிற்கும் ஆட்டுக்கடாப்போலத் தலையாட்டுகிறாயே! உனக்குக்கண்ணிருந்தும் பயனில்லையே! கண்ணில்லாத நாங்களாவது ஒரு வழியில் நிற்கிறோமே என்று வைது போனார்கள்.

அவன் ஒவ்வொருவனுக்கும் ஆம் ஆம் என்றது அவ்வவன் தடவிப்பார்த்த அவயவத்தைப்பற்றிச் சொல்லுகிறானென்பதை யுட்கொண்டே. குருடர்கள் தம்முள் விரோதிப்பதல்லாமலும், கண்ணுடையவனோடும் தனித்தனி விரோதித்தாலும் கண்ணுள்ளவனுக்கு அவ்வந்தகர்களில் ஒருவனிடத்தும் விரோத புத்தியில்லாமை காண்க.

இதனால் கீழிட்ட பரிபாகிகள் தாந்தாம் கொண்டது கடைப்பிடித்து மற்றெல்லாரோடும் பகைத்தாலும் மேலிட்ட பரிபாகிகள் ஒருவரோடும் பகையில்லாமற் சமரசபாவனை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். 'படிக்கிறது ராமாயணம், இடிக்கிறது பெருமாள்கோயில்' என்றாற்போல வாயினால் மாத்திரம் சமரசபாவனை வேண்டும், ஐக்கியம் வேண்டும் என்று மணக்க மணக்கப் பேசிவிட்டு அநுட்டானத்தில் சிறிதும் பிறரிடத்து அசூயை ஒழியாதிருப்பதிற் பயனென்ன? இப்படிப்பட்டவன் தருமவானாவானா? கடவுள் கருணைக்குப்பாத்திரனாவானா? கடைத்தேறுவானா? தான் கூறுங் கடவுளல்லாது வேறு எந்தக்கடவுள் தனக்கு அந்நியமான சமயிகளைச் சிருட்டித்தார்? அவர்களை நிந்தனை கூறுவது சர்வவியாபி என்று தான் கூறும் தன் கடவுளையே நிந்திப்பதாகவன்றோ முடியும்? இவற்றைக்கூர்ந்து ஆலோசிப்பதல்லவோ புத்திக்கழகு? நிற்க.

மேற்கூறிய குருட்டர் கதையில் கண்ணுடையவனுடைய கொள்கையானது ‘இது ஆகும், அது ஆகாது, எனும் பிணக்கின்றி, நீதியினவையெல்லாம் ஓரிடத்தே காண நிற்பது யாதொரு சமயம், அதுசமயம், பொருள், நூல்’ என்று முன்னர்க்காட்டிய திருவாக்குக்கு ஒத்துநிற்பதால் சமரசம் பூர்த்தியாய் அமைந்துள்ளது.

இந்த உத்தமோத்தம தருமமாகிய சமரச பாவனையை அடைவதற்கு ஒருவன் முதல்முதலாகத் தன் சமயநிலையையும், இதர சமயநிலையையும், தெரிந்துகொண்டு முற்கூறியபடி எல்லா மதங்களும் அப்பரம தருமத்துக்கு அங்கமாயிருத்தலையறிந்து கடைப்பிடிக்கவேண்டும். இழிந்த சமயிகள் சமரசமின்றித் தம்முள் விரோதிப்பது ஒருவாறு அங்கீகரிக்கத்தக்கது அதிக விசாரணை போதாமையால். மேலிட்டவர்கள் அவ்வாறு விரோதபுத்தி கொள்வது பொருந்தாமையால் அவர்கள் விரோதம் பாராட்டாமைக்கேற்ற சில காரணங்களை வெளியிடுவதும் மேலிட்ட சமயிகள் யாரெனில் பிராமணர்கள் தம்முள் பிரிந்திருக்கிற துவைத, அத்வைத, விசிஷ்டாத்வைதிகளாகிய திரிமதஸ்தர்களென்பார்கள். இவர்கள் மாத்வர், ஸ்மார்த்தர், வைஷ்ணவரென்று முறையே பெயர் பெறுவர். ஆனால் துவைதசமயம், அத்வைதசமயம், விசிஷ்டாத்வைதசமயமென்று வழங்குவது இல்லை. விசிஷ்டாத்வைதமாத்திரம் வைஷ்ணவசமயமென்று வழங்குகிறது. அன்றியும் மாத்வர், வைஷ்ணவர் இருவரும் விஷ்ணுவைத் தெய்வமென்று கொண்டவர்கள். ஸ்மார்த்தர்களோ பிரம, விஷ்ணு ருத்திரர்களை அங்கீகரித்தாலும் பாரமார்த்திகத்திலிவர்களை வர்ஜித்துவிட்டுக் கேவலம் பிரமமொன்றையே முடிபொருளாகக் கொண்டவர்கள். இந்தத் திரிமதஸ்தருக்குள் சைவசமயி என்பவரொருவருமில்லை. உலகத்திற் பிரசித்தியாயிருக்கிற ஆலயங்கள் பலவும் பலவகைச் சமயிகளும் தந்தந்தெய்வங்களை வழிபடும் புண்ணியஸ்தலங்களாக விளங்குகின்றன. இவற்றில் சிவாலயங்களின்றொகை மிகவும் அதிகம். அவ்வாறாக திரிமதஸ்தர்களில் ஒருவரும் இந்தச் சிவாலயங்களுக்கு உரியராகாமல் நிற்கும்நிலைமை அதிசயந்தான். சைவர்கள் விஷ்ணுவாலயங்களுக்கும் போவார்கள்; சுவாமி தரிசனம் செய்வார்கள். ராமசாமி, கிருஷ்ணன் இத்தியாதிபெயர்களும் வைத்துக்கொள்ளுவார்கள். ஆனால் வைஷ்ணவர்களோ ‘மறந்தும் புறந்தொழாமாந்த’ ரென்ற கௌரவம் பாராட்டிக்கொண்டு, சிவாலயங்களை நோக்குதலுஞ்செய்யாது, சிவநாமதாரணமும் செய்யாது, துளசி, அரிசி என்று சொல்லிவிட்டால் வந்துவிட்டது பாபமென்று அவற்றைவெளிப்படையாகச்சொல்லாது, சிவன்கோயில் சுடுகாட்டுக்குச்சமமென்று கூசாதுபேசுவர் ஸ்மார்த்தர்களிற் சிலர் ‘அரியுஞ் சிவனும் ஒண்ணு’ என்று கூறிக்கொண்டு இரண்டு ஆலயங்களுக்கும் போவர். வேறு சிலர் சிவத்வேஷிகளாய் விஷ்ணுவைப் பூஜித்தும் மற்றுஞ் சிலர் சிவேதரமான தெய்வங்கள் சிவனைப்போற் சர்வோத்தமமான வைக

ளல்லவென்றும் விளம்புவர். ஆயினும்தம்மைச் சைவரென்று சொல்லிக்கொள்ளப் பின்னிடுவர் இவர்களெல்லாம். ஆனால் இவர்களுக்கு விபூதி, ருத்ராக்ஷதாரணம் பெரும்பாலும் அங்கிகாரம் என்றாலும் முற்கூறியபடியே பாரமார்த்திகத்திற் சிவன் முதலியோரைப் பொய்யென்று கொண்டவர்களே. இவர்களெல்லாரும் வேதத்திற் பிரஸ்தாபிக்கப்பட்ட ‘அத்வைத’ சப்தத்துக்குப் பொருள் கொண்டதிற் பேதப்பட்டவர்களே அத்வைதத்துக்கு ஏகமென்றும் துவைதமென்றும் விசிட்டாத்வைதமென்றும் அதாவது ஒன்று, இரண்டு, ஒன்றிரண்டு முறையே பொருள் விரித்துள்ள ஸ்ரீ சங்கரர் மத்துவர், இராநுஜர் ஆகிய பிரமசூத்திர பாஷியக்காரர்களைப் பின் பற்றினவர்களா[illegible]கள். இவர்களில் ஒவ்வொருவரும் தாம் தாம் கூறும் பொருள் மெய்ப்[illegible]ளென்று கூறி ஏனையோரை மறுப்பர். இதனால் நேரும் அனர்த்தம் [illegible]கும் பெரிது. உண்மையை நோக்கின் தாம் பிறரை மறுக்கவும் அதனால் [illegible]ளக்தம் விளைவிக்கவுமிடமிராது. ஒரு பெரிய மலையினது வடிவத்தை விய[illegible]ப்புகுந்தால் ஒரு வகை முடிவு கிடைக்க மாட்டாது. ஏனெனில் ஒவ்[illegible] திசையிலிருந்து பார்ப்பவருக்கு அம்மலை வெவ்வேறு வடிவமாகத் தோ[illegible]மாதலால் பல திசையினின்றும் பார்த்தவரும் தாந் தாம் கண்டவடிவமே [illegible]யினுடைய யதார்த்த வடிவமென்று கொள்வது ஒருவாறு பொருந்துமே[illegible]ள். முழுவதுவும் பொருந்தாது. ஒரு திசையிலிருந்து பார்த்தவருக்கு மலை [illegible]ன். கோண வடிவினதாகத் தோன்றுகிறது மற்றொரு திசையார்க்கு சதுரவ[illegible]மாகத் தோற்றுகின்றது வேறொருதிசையார்க்கு அர்த்தசந்திர வடிவாகக்[illegible]கிறது. தனித்தனி இவ்வடிவம் மலையினது உண்மை வடிவமென்று துணி[illegible]துரைத்தல் கூடுமோ? ஒரு திசையிலிருந்து பார்த்தவருக்கு ஒரு வடிவந்தான் தோன்றும். ஆதலால் அவர்நின்ற இடத்திலிருந்து பார்த்தவர்க்கு அவர்கூறும் வடிவம் அங்கிகாரமாகும். அதுபோல அத்வைதமென்பதற்கு ஒன்று, இரண்டு, ஒன்றிரண்டு என்று கூறுவதும் ஒவ்வோரம்சமாக அங்கிகரிக்கத் தக்கதே வாஸ்தவத்தில் இம்மூன்றும் தனித்தனி அத்வைதத்தின் பொருளல்ல. அவ்வாறாக, அத்வைதத்துக்குப் பொருள் ஒன்றுதான், இரண்டுதான், என்று முடிபு கூறி மற்றையோரை மறுக்கப்புகுவது பொருந்துமா பொருந்தாதா என்பதை விவேகிகள் கவனிக்க வேண்டியது. இப்படிக்கு ஊன்றி விசாரியாமல் அத்வைதத்துக்கு ஒரே பொருளைச் சாதித்துப் பிற பொருளைக் கண்டித்தலாற்றான் பிரமாதம் விளைவதற்கிடமாகின்றது. இதுகாறுங் கூறியவற்றால் அத்வைதத்துக்கு ஒரு பொருள் கூறுவது பொருந்தாதென்பதும் உண்மையில்

அது இம்மூன்று பொருளுமாகியும் அல்லாதாகியும் நிற்பதென்பதும் விளக்கமாயிற்று. தேகத்துக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தத்தையும், ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள சம்பந்தத்தையும் அத்வைதமென்றபோது அதன் பொருளை 'ஒன்றல்ல இரண்டல்ல ஒன்றிரண்டல்ல' எனவும், 'ஒன்றாகாமலிரண்டாகாமல் ஒன்றிரண்டுமின்றாகாமல்' எனவும் போந்த அநுபூதி வாக்கியங்களால் அறிவதே மரபாம். ஒவ்வொரு பொருளையே கொள்வாமெனில் அவ்வாறு கொள்ளுங்கால் அத்வைதத்திற்கு இது ஒரு பொருள் என்னாமல் இதுவே பொருளென்றால் சமரசபாவத்துக்கு அபாவ நேரிடுமாதலால் கொள்ளலாகாதென்க. எச்சமயமானது, ஒன்று, இரண்டு, ஒன்றிரண்டு ஆகிய ஒருவகை பேதம், பேதம், பேதா பேதம் என்னும் மூவகைச் சித்தாந்தத்தையும், அதீத தெரிந்த தயும் அங்கிகரிக்குமோ அதுவே சமரச சித்தாந்தமென்பது துணியப்படும். அங்கமாய

மின்றித் இன்னும் கடவுள் வடிவத்தை தனித்தனி உரு வென்பவரும், அருவென் த்ரனை போர் அருவுரு வென்பவருமாக சொரூபலக்கணங் கூறுவோர் முத்திறத்த ஷ்பொருந்தா அன்றியும் கடவுளை ஆணென்பாரும், பெண்ணென்பாரும் நபும்ஸக நெளை வெள் பாருமாக மூவகையோரு முண்டு. இவற்றையும் அதீதத்தையும் ஒப்புக் மபிரிந்திருந்தாலல்லது சமரசம் பூர்த்திகட்டாது. னென்ப

பெயர் இதனால் அதீதமென்பது இன்னதென்று அறியவும் கூறவும் படாததே சமயமெது தானே. இது வொரு இலக்கணமா? எனின் நன்று கூறினீர். அவ் சமயமெக்கணந்தான் முடிந்த இலக்கண மென்பதை யறிந்தார் வாய்க்கேட்டுய் விஷ்ணுக. பரப்ரமத்தின் இலக்கணமென்ன? 'உருவன் றருவன் றுளதன் றில விஷ்ணு றிருளன் றொளியன் றெனவின் றதுவே' மறைமுகத்தாற் கூறப்பட்டத்துவின்று. இதனையு நும்மதிகொண்டு மறுக்காதென்செய்வீர்! கணிதத்தில் இதுபெரிய தாகைபின்னது, சிறியபின்னமிது என்று கூறமாட்டுவீரா? வட்ட வடிவுக்களவை வரையறுத்துச்சொல்ல வல்லீரா? கண்ணாடியின் வர்ணம் இன்னதெனக் கழறுகிற்பீரா? நடந்தான், நடந்தது, என்னுமுற்றுச்சொல் லுக்கன்றி நடவென்னுந்தாது இன்னலிங்கமென்று நவையசைப்பீரா? இவை எல்லாம் அகோசரமாகிய அதீத நிலையையே குறிப்பனவென்றறிந்தடக்குவீராக.

இத்தகையவிசாரம் புரிவார்க்கே சமரசஞானசித்தி யெய்தற்பாலதாம் பதியாகிய பரம்பொருள் எல்லாமாயல்லவுமாய் நிற்பதுபோல இந்தச்சித்தாந்தமும் நிற்குநிலையையறிந்து சமரசபாவஞானப்பேறெய்தி யுலகம் வாழ்வதாக. சுபம். சுபம்.

S. S. Perumal.

மேனாட்டுக் கலஸஞானம்.

முற்கூறு.

10. தத்துவஞானம் அனுஷ்டான நடைக்கு வழித்துணை.

ஒன்றும் தற்செயலாய் அல்லது அகஸ்மாத்தாய்ச் சம்பவியாமல் பிரபஞ்சத்தின் சகல காரியங்களும் திட்டமான ஒழுங்கைத் தொடர்ந்து நடந்தேறுவதாலும் பிரபஞ்ச வியல்பின் விதிகள் எனின் ஜகத்காரிய ஒழுங்கைப்பற்றி நாம் தெரிந்து கொண்டதைத் திருத்தமாய்ச் சொல்லலாகையாலும் பிரபஞ்ச வியல்பின் விதிகளைக்கொண்டு நமது ஒழுக்கத்தைச் சீராக்கும் பொருட்டு அவ்விதிகளில் எத்தனை நாம் தெரிந்துக்கொள்ளக் கூடுமோ அத்தனையும் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது.

ஒரு தேசத்தில் வசிக்கத்துணியும் யாவனாயினும் அத்தேசத்தின் சட்டதிட்டங்களைப்பற்றி அவன்முன் தெரிந்துக்கொள்ளாவிடின் அவன் வெகு துரிதத்தில் துன்பத்திற்குட்படுவான். அவன் தண்டயிறுக்கினும் அல்லது சிறைக்களம் புகினும் அல்லது சிரச்சேதமடையினுங்கூட புத்திமான்கள் அவனுக்கு வந்த விதி அவன் மடமையினால் என்று கருதுவார்கள்.

இதுபோலவே பிரபஞ்சவியல்பின் விதிகளைக் கவனியாமல் இப்பூதலமீது உயிர்வாழ எத்தனிக்கும் புருஷன் யாவனாயினும் மிகவும் அற்பகாலந்தான் இத்தரைமீது உயிர்வாழ்ந்திருப்பான். அந்த அற்பகாலத்திலுங்கூட பெரும்பான்மை மட்டுமிஞ்சின சஞ்சலத்திலேயே கழியும். மனிதனால் ஸ்திரபிக்கப்பட்ட சட்டதிட்டங்களையும் பிரபஞ்சவியல்பின் விதிகளையும் உற்றுநோக்கிப் பார்க்குங்கால் பிரபஞ்சவியல்பின் விதிகள் பலன் தருவதில் ஒரு புதுமை தோன்றும். அது என்னவெனில் ஸம்மன்ஸ் என்னும் நியாயஸ்தல கட்டளைப் பத்திரமின்றியும பிராஸிக்யூஷன் என்னும் வழக்கு நடத்துகையின்றியும் அவைகள் பலனைக்கொடுத்து

விடுகின்றன. உண்மையில் பிரபஞ்ச வியல்பின் விதிகளில் சிலவற்றைக் கவனித்து நடவாமல் அரைநாட்கூட உயிர்வாழ்ந்திருத்தல் எவனுக்குங் கூடாதகாரியமேயாம். நமது ஜனங்களில் ஆயிரக்கணக்காய் தினமும் மரணமடைந்துகொண்டும் அல்லது இடுக்கண்பட்டு ஜீவித்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஏனெனில் இன்னும் மனிதர்களுக்கு பிரபஞ்சவியல்பின் நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளப் போதுமான வைராக்கியமும் ஆவலும் உண்டாகவில்லை.

நமது சகலவித்தைகளும் தொழில்களும் நாம் எடுத்து ஆளக்கூடிய இயற்கைப்பொருள்களின் குணங்களையும் சக்திகளையும் நாம் அறிந்துகொள்வதைப் பொறுத்து நிற்கின்றனவென்று நாம் முன்னமேயே கண்டோம். மிகமகத்தான இயற்கைப் பொருள்களையும் பிரபஞ்சத்தில் காரண காரியங்களின் படிப்படியான பொதுத்தொடர்ச்சியையும் நமது வசத்துக்குக்கொண்டு வந்து நாம் ஆளக்கூடாவிட்டாலும் இப்பொருள்களின் குணங்களையும் சக்திகளையும் உலகத்தில் சம்பவிக்குங் காரியங்களின் வழக்கமான ஒழுங்கையும் நாம் தெரிவோமாகில் நமக்குக் கெடுதியானவைகளினின்று நீங்கி நமக்கு நலமுள்ளவைகளைக் கொண்டு நாம் பயன்பெறலாம்.

எவ்வாறெனில், மனிதர்களுக்குப் பருவங்களைமாற்றவும்செடி பூண்டு விருக்ஷங்களில் வளரும் போக்கை வேறுபடுத்தவும் எவ்விதத்திலுங் கூடாதாயினும் இவ்விஷயங்களில் பிரபஞ்சவியல்பின் ஒழுங்கை யறிந்துகொண்டு அவைகளுக்கேற்றபடி விதைக்கவும் நாற்றுப்பாவவும் அறுக்கவும் ஏற்பாடுசெய்கிறார்கள். அவர்களுக்குக் காற்றுவீசும்படி செய்யமுடியாது. ஆனால் காற்று வீசும்பொழுது முன்னமே தெரிந்துகொண்ட அதன் சக்திகளையும் எப்பக்கம் வீசும் என்று உத்தேசிக்கிறார்களோ அத்திக்கையுங்கொண்டு அவர்கள் கப்பல்களை ஓட்டவும் காற்றியந்திரத்தைத் திருப்பவும் செய்கிறார்கள். அவர்களுக்கு இடிவிழ்வதைத் தடுக்க முடியாது. ஆனால் "கண்டக்டர்" (Conductor) என்று சொல்லும் சபலாகருஷணி அல்லது மின்சத்துவதாரைக் கருவியினால் அவ்விடியானது தீங்குசெய்யாமலிருக்கும்படி அவர்கள் செய்யக்கூடும். இந்தக் "கண்டக்டரை" இசைத்ததற்கு மின்னலையும் இடியையும்தோற்றுவிக்கும் "எலெக்ட்ரிஸிடி" (Electricity) என்றுசொல்லும் மின்தாது அல்லது ஆம்பரியம்என்னும் சக்தியின் விதிகளைத் தெரிந்திருத்தல்வேண்டும். "முன்னெச்சரிக்கை முன்னாயுதந்தரிக்கை" யென்பது பழமொழி. பிரபஞ்சவியல்பின் விதிகளின் அறிவு, நாம் இயற்கைப்பொருள்களுடன் சம்பந்தித்துப் பழகும்பொழுது என்னவாகும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கு முன்னெச்சரிக்கையாகும்.

(தொடரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

திருவாசகத்தின் திருவுள்ளக்கிடை.

திருச்சிற்றம்பலம்.

* சிவ புராணம்—சிவனது அநாதி முறைமை, எ-து:—சிவனது அருவ நிலை கூறுதல். கீர்த்தித்திருவகவல், சிவத்தின் புகழ்ச்சி, எ-து:—சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை. திருவண்டப்பகுதி, திருவுள்ளக்கிடை, எ-து:—சிவனுடைய ஸ்தூல சூக்குமத்தை விகற்பித்தது. போற்றித் திருவகவல், செகத்தினுற்பத்தி எ-து:—பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தல். திருச்சதகம், பத்தி வயிராக்கிய விசித்திரம், எ-து:—பத்து வகையாக இரட்சித்த முறைமை. எப்படியென்னில் முதல்வகை மெய்யுணர்தல்,

* இது இன்னவரால் எழுதப்பட்டதென அறியப்படவில்லை. மிகவும் பழமையான ஏட்டுப் பிரதியொன்றில் கிடைத்தது. இருந்தபடியே பதிப்பித்திருக்கின்றோம். இவ்வேடு கோயமுத்தூர்ஜில்லா வீராட்சிமங்கலம் வித்வான் தி. சிவன்பிள்ளையவர்கள் வீட்டிலுள்ளது. இத்திருவுள்ளக்கிடையானது சுருங்கச்சொல்லி விளங்கவைத்துச் செல்லும் நயமுடைத்தாதலால் நண்பர்கள் பலரும் அறிந்து மகிழ்ச்சிகொள்ளக் கருதியே பானுவில் வெளியிடப்பட்டது. ப-ர்.

மெய்யுணர்தலென்றது தேகாதி பிரபஞ்சங்களைக் கண்டு நீங்கல். இரண்டாவது அறிவுறுத்தல், எ-து:—பொறியோடே கூட்டுதல், அருள் தரிசனம், குருதரிசனம். மூன்றாவது கூட்டறுத்தல், எ-து:—தன்செயலறுத்தல். நான்காவது ஆன்மசுத்தி, எ-து:—அநுபவத்தழுந்தல். ஐந்தாவது கைம்மாறு கொடுத்தல், எ-து:—தன்னைச் சிவனிடத்தே கொடுத்தல். ஆறாவது அநுபவசுத்தி எ-து:—சுகமேலீடு. ஏழாவது காருண்யத்திரங்கல், எ-து:—சிவனுடைய வெற்றிப்பாட்டிரங்கல். எட்டாவது ஆநந்தத்திலழுந்தல், ஒன்பதாவது ஆநந்தபரவசம், பத்தாவது ஆநந்தாதீதம். இப்படியே கண்டுகொள்க.

நீத்தல் விண்ணப்பம்—பிரபஞ்ச வயிராக்கியம். திருவெம்பாவை—நவசத்திகளை விகற்பித்தது. நவசத்திகளாவார்:—அம்பிகை, கணாம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி. திருவம்மானை ஆநந்தக்களிப்பு, எ-து:—சுகமேலீடு. திருப்பொற்சுண்ணம், ஆநந்த மனோலயம், எ-து:—தானன்றி நிற்றல். திருக்கோத்தும்பி, சிவனோடைக்கியம், எ-து:—சிவனுடன் இடையறாது நிற்றல். திருத்தெள்ளேணம், சிவனுட்செலவு, எ-து:—சிவனுடனே சென்று கூடுதல். திருச்சாழல், சிவனுடைய காருண்யம், எ-து:—சிவனுடைய அருட்சத்தி விளையாட்டு. திருப்பூவல்லி, மாயாவிஷய மறுத்தல், எ-து:—மாயையினுடைய பலத்தையறுத்தல். திருவுந்தி, ஞான வெற்றிப்பாடு, எ-து:—அருட்சத்தியினுடைய சாமர்த்தியம். திருத்தோணோக்கம், பிரபஞ்ச சுத்தி, எ-து:—ஆன்மாக்களைச் சுத்திகரித்தல். திருப்பொன்னூசல், அருட் கூட்டம், எ-து:—அருளோடே கூடுதல். திருவன்னைப்பத்து, ஆன்மசம்பூர்ணம், எ-து:—ஆன்மாவினுடனே நிறைதல். குயிற்பத்து, ஆன்ம விரக்கம், எ-து:—சிவனைக்கண்டிரங்கல். திருத்தசாங்கம், பத்து வகையாக அடிமை கொண்டது, எ-து:—பக்தடையாளம். திருப்பள்ளியெழுச்சி, திரோதானசுத்தி, எ-து:—ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலநீக்குதல். கோயின்மூத்ததிருப்பதிகம், சிவாநந்தத்தில் திகைப்பு, எ-து:—சிவாநந்த மளவறுக்கவொண்ணாமை. கோயிற்றிருப்பதிகம், அநுபவலட்சணம், எ-து:—சிவாநுபூதிக்கு அடை

யாளம். செத்திலாப்பத்து, சிவாநந்தமலைவு, எ-து:—சிவாநந்தமனுகிச் செயிக்கப்படாமை. அடைக்கலப்பத்து, வஸ்து நிர்ணயம், எ-து:—வித்தும் அங்குரமும்போல என்றல். ஆசைப்பத்து, ஆன்ம இலக்கணம், எ-து:—ஆன்மரூபத்தையறிதல். அதிசயப்பத்து, முத்தியிலக்கணம், எ-து:—மோட்சத்தின் அடையாளம். புணர்ச்சிப்பத்து, அத்துவிதானந்தவிலக்கணம், எ-து:—ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்குதல். வாழாப்பத்து, முத்தியுபாயம், எ-து:—பிரபஞ்சத்தைவிட்டுப் பரபோகத்தைக் கூடுதற்குபாயம். அருட்பத்து, மஹா மாயாசுத்தி, எ-து:—மாயையைச சுத்திபண்ணுதல். திருக்கழுக்குன்றம், சற்குருதரிசனம், எ-து:—பசுத்துவங்கெட்ட இடம். கண்டபத்து, பரமாநந்தம், எ-து:—பரமாநந்த நிர்த்த தரிசனம். பிரார்த்தனைப்பத்து, கேசமுத்தி, எ-து:—ஆன்மாக்களுக்கு முத்தி நிச்சயம்பண்ணுதல். குழைத்தபத்து, குழைத்தல், எ-து:—நேயத்தோடே யொன்றலாது, உயிருண்ணிப்பத்து, சிவாநந்த மேலீடு, எ-து:—நேயமேலிடுதல். அச்சப்பத்து, ஆநந்தமுற்றுதல், எ-து:—நேயத்திலேயொன்றுபட்டுச்சிக்கென அழுந்தினது. திருப்பாண்டிவிருத்தம், சிவாநந்த விளைவு, எ-து:—சுக மேலீடு. பிடித்தபத்து, முத்திக்கலப்புரைத்தல், எ-து:—மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது. திருவேசறவு, சுட்டொழிதல், எ-து:—தன் செயலறநிற்றல். திருப்புலம்பல், சிவாநந்த மிடி, எ-து:— சிவாநந்தம்பெறு இச்சை. குலாப்பத்து, அநுபவமிடையறாமை, எ-து:—விட்டுப்பற்றுமலொரு தன்மையாயது. அற்புதப்பத்து, அநுபவ மாற்றமை, எ-து:—அநுபவ முற்றுதல் பெருமை விம்முதல். சென்னிப்பத்து, சிவ விளைவு, எ-து:—சீவனுக்கு நிச்சயப்படுதல். திருவார்த்தை, அறிவிக்கவறிதல், எ-து:—உன்னலறியப்படாததுணைக்கவறி என்றது. எண்ணப்பதிகம், ஒழியாவின்பத்துவகை, எ-து:—தேக முதலாகிய ஆசையையறுத்தல். யாத்திரைப்பத்து, அநுபவாதீதம், எ-து:—அநுபவத்தின் அதீதப்பட்டுப்போனது. திருப்படையெழுச்சி, பிரபஞ்சப்போர், எ-து:—மலவிளைவறறது. திருவெண்பா, அணைந்தோர்தன்மை, எ-து:—பரிசவேதிபோல வென்றது. பண்டாயநான்மறை, அநுபவத்திற்குக் கைம்மாறின்மையுரைத்தல், எ-து:—இப்படி ரகசிக்

கப்பட்ட ஆசரியருக்குக் கைம்மாறில்லையென்றது. திருப்படையாட்சி:—பிரபஞ்சத்தில் சீவவுபாதி யொழித்தல். அச்சோப்பதிகம், அநுபவவழியறியாமை, எ-து:—அநுபவ சததிசயம்.

இந்தத் திருவுள்ளக்கிடையின் வழித்தான வுண்மையைச் சற்குரு கடாக்ஷத்தாலே தரிசித்து வழிபடுவதான திருவுள்ளக்கிடை முடிந்தது.

ப-ர்,

நம்நாட்டுச் செல்வரும், நாகரீகமும்.

ஐரோப்பா, அமெரிக்காக்கண்டங்களின் பலதேசங்களிற்போல மகதைசுவர்யசம்பன்னர்கள் அநேகர் நம்தேசத்திலில்லாவிடினும், சாதாரணமாய், சிற்றரசு, பாளையப்பட்டு, ஜமீன், மிட்டா, சுரோத்திரியம், என்னும்பல்வேறுவகுப்பில், தனிகர்கள்பலரிருக்கின்றனர். மேல்நாட்டுப்பிரபுக்களோடு நம்நாட்டுச் செல்வர், நடையுடைபாவனைகளில் வெகுவாய்ப்பேதப்பட்டிருக்கிறார்களென்பதும், இவ்வித வித்தியாஸம் தத்தம் தேச மதாசார பூர்வீக வழக்கங்களை யொட்டியிருக்கவேண்டுவது கிரமந்தானென்பதும் யாவருக்கும் ஒப்ப முடிந்தவை. ஆயினும், ஒரு துறையில், மேல் நாட்டுப் பிரபுக்களோடு நம் சீமான்கள் ஒத்திருக்கவேண்டுவது அத்யாவசியமென்று கூறி அஃதின்ன தென்றுங் குறிப்பாம்.

நாகரீக முதிர்ந்த மேனாட்டுச் செல்வர்கள் தமக்கும் பிறர்க்கும் பயன்படு மார்க்கங்களில் தம் பொருளை உபயோகிப்பதில் நிகரற்ற வல்லமைசாலிகள். அவர்கள் கண்ணும், கருத்தும், சுதேச நலத்திற்கும், ஸ்வயமத, பாஷாபி விருத்திக்கும் சதா உழைக்கின்றன. இவ்விஷயங்களில் பொருளைப் பொருட்படுத்தாமல் செலவிடும் ஒப்பற்ற உதாரத்வமும், ஜன சமுதாயத்துக்குப் பாதகமான சட்ட திட்டங்களைத் திக்கரித்துப் பார்லிமெண்டோடு மன்றாடி நிர்வகிக்கும் சுதந்தரமும் கல்வியாற்றலும், ஜனன தேசப் பாஷைகளில் பத்திரிகைகளையும், சிரேஷ்ட கிரந்தங்களையும், பல் குவிக்கும் ஆவலும், சிரத்தையும், ஆங்காங்கு சபைகளும் சங்கங்களும் கூடி இராஜாங்க விஷயமாகவோ, பொது ஜன நன்மைக்கின்றியமையாத மற்றைத் துறைகளைக் குறித்தோ, அவ்வத் துறையில் பெரிதும் அநுபவமுடைய பண்டிதர்களை உபந்யசிக்கச் செய்து யுக்தாயுக்த மறிந்து நடக்கும் விவேகமும், இதோடு பொருளை அதி சீக்கிரத்தில்

விருத்திபாய்ப்பத்தக்க, சுலப மார்க்கங்களில் மிக்க அநுபவமும், அவர்களின் யசஸுக்கு ஆணிவேர்களாகி, ஜனன தேசமத பாஷைகளில் அவர்களுக்குள்ள அபிமானத்தை நமக்கு வெட்கமும் வியப்புமுண்டாகும்படி காட்டி, நாகரிகர்களென்னும் பட்டப்பெயரை அவர்கட்குச் சூட்டுகின்றன.

ஆதலினை அத்தேசங்கள் சீரிய நாகரிகமுடையன வென்று உலகப்பிரசித்தமாயின.

மேனாட்டுப் பிரபுக்களின் நாகரிகப் பெருக்கும் பொது நலப்பிரேமையும் இங்ஙனமாக, நம் தேசப்பிரபுக்கள் நம்தேசத்தை நாகரிகப்படுத்த என்னசெய்து கொண்டிருக்கிறார்களோ பார்ப்போம்.

உண்மையாகவே, நம் தேசச் செல்வர்கள், இத்தகைப் பொதுக் காரியங்களில் சிரத்தையும் அபிமானமும் குன்றினவர்களென்பது பலருமறிந்த விஷயம். நம் நாட்டில் சுதேச பாஷைப் பத்திரிகைகள் க்ஷீணிப்பது ஒன்றினாலேயே, நாம் கூறியது உண்மைதானென்பது போதரும். மேல் நாட்டுப் பிரமுகர்களின் குண விசேடங்கள் எப்படி அளவிடப்படாவோ அவ்வாறே நம் தேசத்தனிகர்களின் மௌடீகத் தன்மைகள் அளவிடப்படா. என்றாலும் நம்மவர்களின் குண மாறுதல்களிற் சிலவற்றை எடுத்துக் கூறாமல் விட என் மனம் ஒவ்வவில்லை. நமது தனிகர்களிற் பெரும்பான்மையோர் ஒவ்வொருவரும் தம்மைப்போல கோடீசுவரர் ஒருவர் பிரம சிருஷ்டியிலேயே இல்லை என்று கருதும் செருக்கும், அதனால் உண்டாகும் தற்புகழ்ச்சியும் டாம்பீகமும் ஜாயான்பவரோடு பேசுவதும், அவர் சொல்வதைக் கேட்பதும், அவர்களைப் பார்ப்பதும், தங்கௌரதைக்குக் குறைவென்றெண்ணும், தலைக்குறும்பும், சேஷ்டையும், விவாக முதலிய விசேஷ காலங்களில் தாசிகள் சதிர்க் கச்சேரிகளுக்குக் கண்மூடித்தனமாகச் செலவிடுவதும்; சதா தாசிலோலராய்த் திரிவதும், துர் வியாஜ்ய விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டு எந்நேரமும் கோர்ட்டு வாசலில் காத்துக்கொண்டிருப்பதும், தங்களுக்கு அநேக காரியங்களைச் சாதித்துக் கொடுக்கிற சாமர்த்தியசாலிகள் போல் நடிக்கிற, வாயரட்டைப் பிரஜாத மூர்த்திகளுக்கு வாரிக்கொடுப்பதும், ஏழை, எளியோர்களுக்கு ஒன்றுங் கொடாமல் துரத்தும் சௌரியமும், ஆகிய இவ்வகைச் செயல்களில் கைதேர்ந்தவர்களாகவிருக்கின்றனர். ஐயோ! மூட மதித்தனிகர்கள் பூர்வ புண்யத்தால் கிடைத்த அரும் பொருளை உபயோகிக்கும் விதமறிந்து தமக்கும் பிறர்க்கும் பயன்படுமார்க்கங்களில் செல்லவிடாது அவமே தொலைக்கின்றதும், இவ்வாறு தொலைத்துச் சில தனிகக்குடும்பங்கள் பெருங்கடனில் முழுகித்தலை சாய்ந்துநிற்பதும், எவ்வளவு பரிதாபமானது! இப்படி நிஷ்பிரயோஜனமாகச் செலவிடும்பொருளில் ஒருபாகம் ஜனசமுதாய நன்மைக்காக உபயோகிக்கப்பட்டிருந்தால் அதனால் எத்தனை புண்ணியமும், புகழும் உண்டாயிருக்கும்!

"அழக்கொண்டவெல்லா மழப்போமிழப்பினும் பிற்பயக்கு நற்பாலவை" என்னும் அருமைத்திருவாக்கின் உண்மை இவர்களுக்கெட்டியிருந்தால் அநியாய வழிகளில் பொருளீட்டவும் அதை அக்கிரமமார்க்கங்களில் செலவிடவும்மாட்டார்களே! நம்நாட்டில் பெரும்பான்மையான செல்வர்கள், இப்படியிருக்க, "வினோத நாகரீகச்செல்வர்கள்" என்ற மற்றொரு வகுப்பினருண்டு. அவர்களை பூதக்கண்ணாடிகொண்டு பார்த்தாலுங்கூட அங்கிலேயரோ, இந்தியர்களோ என்று யாரும் நிச்சயமாய்ச்சொல்லத்துணியார்கள். மிஷனெரிகளின் கலாசாலையில் அரைகுறையான இங்லீஷ்படிப்பைக்கற்றுக்கொண்ட மாணாக்கர்களிற் பலர் இவ்வகுப்பிற்சேர உரியவர். இவர்களுடைய சித்தாந்தம், ஆங்கிலேயர் உடுக்கும் நானாவித விசித்திர உடுப்புகளிலும், காப்பி, தேயிலை, பீர், பிராந்தி, முதலிய பானங்களிலும், ரொட்டி, மாம்ச போஜனங்களிலும், சுயபாஷையை அறவேமறந்து எதற்கும் இங்கிலிஷிலேயே வார்த்தையாடுவது, சுயமத கிரந்தங்களையும், பூர்வீக ஆசாரங்களையும்பழிப்பது, ஜாதி வித்தியாசம் பாராட்டாமைமுதலிய செய்கைகளிலுமே நாகரிகம் புகுந்துகொண்டிருக்கிறதென்பது. அந்தோ! முற்கூறிய வகுப்பினரினும், இவ்வகுப்பாரால் நம் நாட்டுக்குளதாம் தீங்குகள் மிகப்பல. "துப்பாக்கி வயற்றில் பீரங்கி பிறந்தாற்போல்" அவிவேகதனிககுடும்பங்களில் தோன்றி, இங்லீஷ் அப்பியாசத்திற்காக அரதேசத்திற்கனுப்பப்படும், செல்வச்சிறுவர்களின் தன்மையும் இப்படியானால், எப்படி நம்நாடும், பாஷையும், மதமும், தலையெடுத்துயர்வது? இத்தகை தேசாபிமானசூன்யப்பிரபுக்களால் நமது தேச, மத, பாஷை, கவனிக்கப்படாமல் க்ஷீணஸ்திதியை அடைய நேர்ந்தும், இவ்வாபத்துக்களுக்கிடையில் அவைகள், ஒருவாறு நன்னிலைமையில் உயர்ந்துகொண்டேவருகிற அற்புதத்தை என்சொல்வது. ஆ! இந்தியமாதாவே! ஓ! ஆர்ய மதமே! சுதேசபாஷைகளே! மிகத்தாழ்மையான இந்தஸ்திதியிலுங்கூட உங்களின் ஜகத்பிரசித்தமான, கீர்த்தியிலும், மதிப்பிலும், குன்றாமல் நிர்வகித்து, ஜ்வலிப்போடு நீங்கள் இருக்கும் நிலைமைக்கு வியவாதார்யாரே! "இடுக்கண் வருங்கால் நகுக" என்னும் பொய்யாமொழி உங்கள் தேசத்தில் உங்கள் மதத்தில் உங்கள் பாஷையிலிருக்கிற ஒரு வீரத்தாலன்றோ நீங்கள் சலியா நிலைமையில் விளங்குகின்றீர்கள். நீங்கள் இத்துணிகரமுடையீர்களானதற்கு வேறோர்காரணமிருக்கலாமென ஊகிக்கின்றேன். ஓ! ஓ! ஞாபகத்துக்குவந்தது, சுதேசாபிமானவேசத்தோடு பார்லிமெண்டு சபையில் ஏழை இந்தியாவின் உத்தாரணார்த்தம் மன்றாடும், மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியும், கனம், சுரேந்திர நாதபானர்ஜிமுதலிய காங்கிரஸ் அபிமானிகள் சிலரும், ஆரியமதமே மற்றை மதங்களின் சிரோரத்னமெனப் பலவிடங்களிலும், உபதேசிக்குங்கடமைபூண்ட மிஸ். அனிபெஸண்டு அம்மாள் முதலிய தத்வஞானசிரோன்மணிகள் சிலரும், நம் தீந்தமிழையாதரிக்க 4-ஞ் சங்கத்தை ஸ்தாபித்த ஸ்ரீமான் பாண்டித்துரை, சேதுபதிமன்னர்

முதலிய கல்வியும் செல்வமுமொருங்குபெற்ற சில புருஷ சிரேஷ்டர்களும், நம்மவர்கட்குச்சுதேச பாஷாபிமானமூட்டத்துணிந்த, நமதரிய தமிழ்ப்பத்திராசிரியர் பலரும் உங்களுக்கு கைகொடுத்துத்தருணசகாயம் புரியவிருக்கின்றார்களென்னும் ஒரு துணைவலிகொண்டன்றோ! நீங்கள் இடுக்கணழியாமைபூண்டீர்கள்! உங்களை முதலில் சீர் திருத்திய மகரிஷிகளின் ஆசீர்வாத பலமும், உங்களது சமய தெய்வங்களின் பூர்ண கடாக்ஷ பலமும் பெற்ற உங்களுக்கோர் குறையும் வருமோ? வரினும், அதுகொண்டு நீங்கள் அஸ்தமனமடைவீர்களோ? இதே வீரத்தன்மையோடு இன்னும் சிலகாலம் நிர்வகியுங்கள் கூடியசீக்கிரத்தில் விமோசனமுண்டாகும். இப்போதுதான் நம் நாட்டாருக்கு உண்மையான நாகரிகம் இன்னதென்று புலப்படுகிறது. ஆங்காங்கு, புஸ்தகசாலைகளும், உபந்யாசஸ்தலங்களும் ஏற்படுகின்றன, சுயமதத்தின் மேன்பாடுகளை ஆங்கிலேயர் முதலிய அன்னியரிடத்துக்கேட்டுணர்ந்து நம்மவர்கள் தூங்கின கண்ணைத் துடைத்துக்கொண்டெழுகிறார்கள்! நானும், என் அபிமதத்தைப்பின்பற்றும் நண்பர்கள் சிலரும், இப்பானுபத்திரிகையின்வாயிலாக உங்களின் அபிவிருத்தியைக்கோரி, ஆர்டிகில்கள் எழுதிக்கொண்டு வருகிறோம். இன்னும் அடுத்தபானுவில் பொதுநன்மையைக்குறித்த கடமைகளை எழுதும்போது உங்களின் அபிவிருத்தியைக்கருதி மறவாமல் எழுதுவேன். இனிமேல்வரைந்தால் பத்திராதிபர் இடங்கொடார். நிறுத்துகிறேன். சுபம்.

இங்ஙன்

கிராம்பூர்.
22—7—03.

அ. வரதநஞ்சையபிள்ளை.

சைவசித்தாந்தம்.

சிவபுண்ணியம் பத்துவகைப்படும். அவையாவன, அபுத்திபூருவ சிவபுண்ணியம், புத்திபூருவ சிவபுண்ணியம், உபாயச்சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானமென்பனவாம். உபாயச்சரியைமுதலாகக்கூறப்பட்ட எட்டும் சரியையிற்சரியை, சரியையிற்கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என ஒரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டுவகைப்பட்டு விரியால் இன்னும் பலதிறப்படுமென்றுணர்க.

அபுத்திபூர்வசிவபுண்ணியமாவது, இது சிவபுண்ணியமென்று மனதிற் சிந்தியாதுசெய்வது. புத்திபூர்வ சிவபுண்ணியமாவது, இது சிவபுண்ணியமென்று மனதிற்கருதிச்செய்வது. உபாயச்சரியைமுதலிய நான்கும் பத்திகாரணமாதலின்றி புகழ்முதலிய உலகப்பயனைநோக்கிச்செய்வனவாம். உண்மைச்சரியைமுதலிய நான்கும், பத்திகாரணமாகத் திருவடிப்பயன் ஒன்றையே கருதிச்செய்வனவாம். அவற்றுள், திருக்கோயில் அலகிடல்முதலியன சரியையிற்சரியை. இருபத்தைந்து மூர்த்திகள் விநாயகக்கடவுள்முதலிய ஆவரணமூர்த்திகளில் ஒரு மூர்த்தியைப்பூசித்தல் சரியையிற்கிரியை, நெஞ்சின்கண் உருத்திரக்கடவுளைத் தியானஞ்செய்தல் சரியையில் யோகம், அத்தியானபாவனையின் உறைப்பினால் ஓரனுபவவுணர்வு நிகழ்தல் சரியையிஞ்ஞானம். சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாஞ் செய்துகொள்ளுதல் கிரியையிற் சரியை, சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச்சுத்தி முன்னாகச்சிவலிங்கவடிவிற்செய்யும் பூசனை கிரியையிற்கிரியை. அகத்தேபூசை, ஓமம், தியானம் மூன்றற்கு மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம் கிரியையில் யோகம். அவ்வந்தரியாகவுறைப்பின்கணிகழும் பேரனுபவவுணர்வு கிரியையில்ஞானம். இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமும், தாரணையும், யோகத்திற்கிரியை. தியானம், யோகத்தில் யோகம். சமாதி, யோகத்தில் ஞானம். இந்த யோகஞ் சகளநிட்களங்களைப்பற்றி நின்றுசெய்யுஞ் சாலம்பயோகமும், நிட்களத்தைப் பற்றி நின்றுசெய்யு நிராலம்பயோகமுமென் றிருவகைப்படும். இனிக் கேட்டல்முதலிய நான்கனுள், கேட்டல், ஞானத்திற் சரியை. சிந்தித்தல், ஞானத்திற் கிரியை. தெளிதல், ஞானத்தில் யோகம். நிட்டைகூடுதல் ஞானத்தில் ஞானமென்றுணர்ந்துகொள்க.

இனிப் புகழ் முதலிய வுலகப்பயனை நோக்கிச் செய்யுமுபாயச் சரியையிற் சரியைமுதல் உபாயஞானத்தின் ஞானமீறாகிய பதினாறு வகையினினும் பல வேறுவகைப்பட விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பக்காலாக்கினி யுருத்திரர் புவனமுதல் குணதத்துவ மத்தகத்திற் சீகண்ட ருத்திரர் புவனத்தின் கீழுள்ள வுருத்திரர்களான அவ்வப்புவனபதிகளுலகத்திற் சாலோக முதலியவற்றைப் பெறுதலாம். பத்திகாரணமாகச் செய்யப்படு முண்மைச் சரியையிற்சரியை முதலுண்மை யோகத்தின் ஞானமீறாகிய பன்னிருவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பச் சீகண்ட புவனமுதற் சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகமுதலிய வபரமுத்திகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற் சரியைமுதலிய மூவகையினின்றும் பல வேறுவகைப்படுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பச் சுத்தவித்தை முதலிய அதிகார

த்துவ போகதத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச்சாலோக முதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். இனிப் பலவேறுவகைப்பட விரியுஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயனென வுணர்ந்துகொள்க.

சரியை முதலியவற்றினியல்பாவன யாவையெனின்? கூறுவாம். அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான் பரிபக்குவமுடைய உயிர்கள் சோபான முறையினால் உணர்ந்து வழிபட்டு உய்யும்பொருட்டு உருவம், உருவாருபம், அருவம் என்னு மூன்று திருமேனிகொண்டருளி அத்திருமேனிகளில் வழிபடுமுறைகளையும் வேதாகமங்களில் வகுத்தருளிச்செய்தான். இம்மூவகைத்திருமேனிகளுள் புறத்தொழின்மாத்திரையானே உருவத்திருமேனியைநோக்கிச் செய்யும் வழிபாடு சரியையெனப்படும். அவ்வழிபாடியாவையெனின்? சிவபெருமானுடைய திருக்கோயிலின்மாட்டுத் திருவலகிடுதல், திருமெழுக்குச்சாத்துதல், திருவிளக்கேற்றல், அழகிய நந்தனவனங்கள்வைத்தல், திருப்பள்ளித்தாமங்கள் எடுத்தல், இங்குத்திருப்பள்ளித்தாமம் என்றது பூமாலை. மலர்களால் இண்டைமுதலிய கட்டி சிவபிரான் திருமேனியில் பொலிவுறும்வண்ணம் சாத்துதல், முதல்வனுடைய கீர்த்திகளை வாயாரவாழ்த்துதல், சிவனடியார் திருவேடத்தைக் கண்ணுற்றவளவில் அடியேனாற் செய்யத்தக்க குற்றேவல்யாது அதனை யருளவேண்டுமென்றுவணங்கி அவர் அருளிச்செய்யும் பணிவிடைகளைச்செய்தல்முதலியனவாம் இச்சரியையினை அனுட்டித்தோர் சிவசாலோகமாகிய பதமுத்தியைப்பெறுவர். சிவசாலோகமாவது அவ்வப்புவனபதியுலகங்களிலெய்தி யொருவர்மனையிற் பணிசெய்யுமகத்தொண்டர்க்குளதாகிய வுரிமைபோல அவ்வவுலகத்துள் யாண்டுந்தடையின்றி யியங்கி யவ்வப்போகங்களை நுகர்ந்துவாழ்வது. இவ்வுரிமை விசேடம்பற்றி இவர்க்குத்தொண்டரென்றும் இதையடைவிக்குநெறியாகிய சரியைக்குத் தாதமார்க்கமென்றும் பெயர் கூறப்படும்.

இனிப்புறத்தொழிலகத்தொழிலென்னு மிரண்டானும் அருவுருத்திருமேனியைநோக்கிச்செய்யும் வழிபாடு கிரியையெனப்படும். அவ்வழிபாடியாவையெனின்? புதிதாகிய வாசனையுடைய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுதுமுதலிய பூசோபகரணங்களெல்லாந்தேடி அமைத்துக்கொண்டு பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, ஆன்மசுத்தி, இலிங்கசுத்தி என்னும் பஞ்சசுத்திகள்செய்து சிவாசனமூர்த்திமூலங்களாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச்செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து நிருமலமாகிய மெய்யன்பினால் அருச்சனைசெய்து விருப்பத்தோடு துதித்து வழிபாடியற்றி நித்தியாக்கினிகாரியமுஞ்செய்து முடிப்பதாம்.

பரஞ்சோதியைப்பாவனைசெய்து ஆவாகித்தலாவது? முதலில் புட்பாஞ்சலியை மூலாதாரத்தில் வைத்து

"அண்டமாரிருளூடுகடந்தும்ப
ருண்டுபோலுமோரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே"

என்னுந் தேவாரத்தைத்தியானித்துக்கொண்டு பின்பு கிரமமாக வுயரக்கொணர்ந்து இருதயஸ்தானத்தில் சற்றுநேரம் நின்று மூலமந்திரத்தின் அகாரத்தைவிட்டு அதனால் பிரமத்தியாகஞ்செய்து மேற்கண்டஸ்தானத்தில் நின்று உகாரத்தைவிட்டு விட்டுணுத்தியாகஞ்செய்து மேல்தாலுஸ்தானத்தில்நின்று மகாரத்தைவிட்டு உருத்திரத்தியாகஞ்செய்து மேல்புருவநடுவில்நின்று விந்துவைவிட்டு ஈசுவரத்தியாகஞ்செய்து மேல்பிரம்மரந்திரத்தில்நின்று நாதத்தைவிட்டுச்சதாசிவத்தியாகஞ்செய்து மேல்துவாதசாந்தத்தில் நின்று உன்மனியந்தத்தில் அனேககோடி சூரியப்பிரகாசமாய் விளங்கும் பரமசிவனிடத்தில் சோகம் பாவனையினாலே யொருமையடைந்து ஆன்மாவும் சிவமும் சோதிருபமாகிய சிவத்தோடு இரண்டற்றதாகத்தியானித்து பின்பு புட்பாஞ்சலியைக் கீழேகொணர்ந்து புருவநடுவில் சற்றுநேரம் நின்று சகளவடிவங்கொண்டதாகப்பாவித்துப் பின்பு வலதுநாசிவழியாக இருதயத்தையடைந்து பின்பு புட்பாஞ்சலியையடைந்ததாகத்தியானித்து பின் இலிங்கத்தில் ஆவாகனஞ்செய்ய வேண்டும். ஆவாகனமாவது சிவமந்திரத்தினாலே சிவனை பூஜாநிமித்தம் வரவழைத்தலாம். ஆனால் முன்னமே எங்குமிருப்பதால் வியாபகவஸ்துவை ஆவாகனஞ்செய்வது எப்படி கண்டவஸ்துவை அல்லவோ வரவழைக்கவேண்டும் ஆகையால் சிவனை ஆவாகனஞ்செய்யில் வியாபகத்துக்குப்பங்கம் வருமென்னில், ஆகாது. காட்டத்தில் எங்குநிறைந்த நெருப்பானது கட்டையிலுற்கடைய ஓரிடத்தில் பிரகாசிக்கும் அதுபோல எங்குநிறைந்தவஸ்துவை ஓரிடத்தில் பிரகாசிக்கச்செய்வதே ஈண்டு ஆவாகனமெனப்படும்.

"விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன்மாமணிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே"

என்னும் சுருதியாலும் இதனுண்மை உணர்ந்துகொள்க.

ஆவாகநம், மானதவியாபாரம். அஃதாவது, ஒப்பற்ற சிரத்தையாகும். சிரத்தையுடன் மூலமந்திரத்தைச்சொல்லி சிவனையழைத்து அபிமுகமாகச் செய்தலாம். அந்த ஆவாகநம் ஆலயங்களில் பிரதிட்டா காலத்தில் இலிங்காதிகளில் ஜீவவியாச ரூபமாகச்செய்வதாகிய சித்பிரகாச ஆவாகநமும் நாடோறும் பூஜாகாலத்தில் அபிமுகமாகச்செய்கிற ஆவாகநமுமென இரண்டுவகைப்படும். அப்படி அபிமுகமாகச் செய்தலும் ஐந்துமுகங்களுள் ஊர்த்துவமுகமாகிய ஈசான முகத்துக்கேயாகும். எந்த திக்கில் துவார மிருக்கின்றதோ அதைக் கிழக்காகச் செய்ய வேண்டும். அவ்விடத்தில் தற்புருட முகமும் ஈசான முகமும் அபிமுகமாகும். ஊர்த்துவமுகத்தினாலேயே சமமுகார்க்கியமும் பராமுகார்க்கியமுங் கொடுக்க வேண்டும்.

ஸ்தாபநமாவது, என்னை யநுக்கிரகிக்கு நிமித்தம் கருணாநிதியாகிய பகவான் இங்கே இலிங்காதியில் எழுந்தருளி யிருக்க வேண்டுமென்று பத்தியுடன் பாவிக்கும் மனோ பாவனையேயாம்.

சந்நிதானமாவது, சமீபித்த சம்பந்தம். அஃதாவது, பூச்சியராகிய சுவாமிக்கும் பூஜகனாகிய தனக்கும் அநுக்கிரகிக்குந் தன்மையும் அநுக்கிரகிக்கப்படுந் தன்மையுமாகிய சம்பந்தம். இந்தச்சம்பந்த பாவனையே சாந்நித்தியஞ் செய்தலாகும்.

சந்நிரோதனம், பகவானை எப்போதுமென்னிடத்தில் அநுக்கிரக வைத்திருக்க வேண்டுமென்னும் பிரார்த்தனையேயாம்.

நிரோதனம்—தடுத்தல். அதாவது பூசை முடியும் வரை இலிங்கத்தில் எழுந்தருளி யிருக்க வேண்டுமென்ற பிரார்த்தனை.

அவகுண்டனமாவது, சிவனுடைய முகங்களிற் பிரத்தியக்ஷமாகப்பிரகாசஞ்செய்தலாகும்.

அவகுண்டனமாவது, சிவனுடைய இருதயாதிஸ் தானங்களில் இருதயாதி மந்திரங்களைக் கவசஞ் சுற்றுவது போல நியாயஞ் செய்வது.

தேனு முத்திரா—சுரபி முத்திரை.

முத்—சந்தோடம். திரா—விரைந்து செல்லுதல்.

தேவதைகளைச் சந்தோடப் படுத்துகிறதினாலும் அசுரர்களைத் துரத்தலாலும் முத்திராவெனக் காரணப் பெயராயிற்று.

[இன்னும் வரும்.]

சுப்பிரமணிய பிள்ளை.

மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

வானவில்—(RAINBOW)

வானவில்லையறியாதார் இவ்வுலகத்தில் ஒருவருமிலர். இத
னையே இந்திரதனுசென்றும் சொல்லுவார்கள். சூரியனுக்கு
எதிரில் மழைபெய்யுங்காலத்தில் சூரியரஸ்மிகள் ஜலத்துளிகளி
ன்மீதுவிழ அதிக்அற்புதமானதும் மனத்துக்கு ரமியமான
தும சப்தவர்ணங்களுடன் கூடினவில்போன்ற ஓர் உருவம் ஆகா
சத்தில் அடிவானத்துக்குச்சமீபத்தில் தோன்றும். உற்றுநோ
க்குங்கால் ஒன்றன்மேலொன்ருக இரண்டுவானவில் தோன்றும்.
உள்வானவில்லின் வர்ணரேகைகளின் அமைப்பானது தெளிவா
யும் பிரகாசமாயுமிருக்கும். அதற்கு மேல்சொற்பம் இடைவி
ட்டுத்தோன்றும். மற்ருென்றின் வர்ணரேகையின் அமைப்பா
னது வர்ணங்களின் நிலைமை முறைமாறி அவ்வளவு பிரகாச
மின்றி மங்கின நிறமுள்ளதாய்த் தோன்றும். சூரியன் அடி
ானத்திலிருந்து நாற்பத்தைந்து டிக்கிரிக்கு மேல் உயர்ந்திரு
தால் வான வில் கண்ணுக்குத்தோன்ருது. அதாவது கண்ணு
தத் தோன்றும் ஆகாச வளைவை நான்கு பாகமாகச் செய்யுங்
ல் அடிவானத்திலிருந்து மேற்கிலும்கிழக்கிலும் கால் பாகம்
நக்கு மிடத்திற்குள் சூரியன் இருந்தால் இந்திர தனுசுவின்
தாற்றம் நம் கண்களுக்குத் தோற்றும். இதற்குக் காரண
மென்ன? சூரியனிடமிருந்து பார்க்கிற மனிதனுடைய கண்
ணுக்கு நேர்கோடு இழுத்து அந்தக் கண்ணினிட மிருந்து
சூரியனுக்கு எதிர்ப்புறமாக 45 டிக்கிரி யுள்ள ஒரு கோணத்தை
ஏற்படுத்தினல் அந்தக் கோணத்தின் மேற்கோட்டின் எல்லைக்
குள் பிரகாசமான வான வில்லானது தோன்றும். ஆகவே
எல்லா மனிதர்களும் ஒரு உயர முள்ளவர்களாகவும் ஒரே இட
த்திலிருந்து பார்க்கக் கூடாத வர்களாயு மிருப்பதால் உண்மை
யில் 45 டிக்கிரியுள்ள கோணங்கள் பல உண்டாகின்றன. அத
னல் யதார்த்தத்தில் பார்க்கிறபேர்கள் எத்தனைபேர்களோ அத்
தனை வானவில் ஆகாசத்தில் ஏற்படும். அவனவன் பார்ப்பது
ஒரு வானவில்லாயினும் அவனுடைய உயரத்துக்குத்தக்கபடி
அவன் ஒன்றைப்பார்க்கிருன். மற்ருெருவன் தானிருக்கிற இட
த்திலிருந்து பார்க்கையில் மற்ருென்றைப்பார்க்கிருன். ஆகவே

எல்லோரும் உண்மையில் ஒரே வானவில்லைப் பார்க்கவில்லை.
ஆனல் பலபேர்கள் வானவில்லைப்பார்க்குங்காலத்தில் ஏறக்கு
றைய ஒரேயிடத்தில் ஒரேவானவில்லைப்பார்ப்பதுபோலவே நினை
க்கிருர்கள். எல்லோரும் ஒரேகுறிப்பிட்ட இடத்தை நோக்கி
இதோ வானவில் தோற்றுகிறதென்று சுட்டிக்காட்டுகின்று
ர்கள். இதற்குக்காரணம் என்னெனில் சூரியன் மிக்கதூரத்தி
லிருக்கிறபடியாலும் (9,20,00,000 மைல் தூரம்) பற்பல
மனிதர்களுடைய உயரத்தின் அளவு மிகச்சொற்பமாயிருப்ப
தாலும் அல்லது அடிக்கணக்குகளாயிருப்பதாலும் மேற்கூறிய
வித்தியாசங்களிருந்தும் தோற்றத்தில் இல்லாமல் பொய்த்துப்
போகின்றன. இன்னும் ஆராயின் சூரியனுடைய ரஸ்மிகள்
ஒன்றன்பின் ஒன்ருய்வருகின்ற ஜலத்துளிகளின் பிரவாகத்தின்
மேல்பட்ட ஒவ்வொரு ஜலத்துளியும் ரஸ்மிகளைப்பிரித்துச் சித்தி
ரம் எழுதினற்போல் ஆகாசத்தில் தோற்றத்தையுண்டுபண்ணு
கின்றது. ஒருவிநாடியில் பார்த்த ஜலத்துளிகள் கீழேவிழுந்து
ஜலத்துளிபிரவாகங்கள் வந்துகொண்டேஇருக்க வானவில்லில்
யாதொரு கீற்று அல்லது பிளப்பு இல்லாமல் சித்திரப்படம்
போல் கோணுமற் குறுகாமல் இடைவிடாமல் வானவில்லின்
தோற்றத்தைப்பார்க்கிரேம். இதற்குக்காரணமென்ன வெனில்
பார்க்கிற நம்கண்ணில்உண்டாகும்பிம்பம் ஒவ்வொன்றும் அரை
க்கால் விநாடி கால அளவு தங்கிப்பின் மறைகிறது. ஒருபிம்பம்
கண்ணில் பதிந்து அதுமறைகிறகாலத்திற்குள் அதேமாதிரி
யான மற்ருெருபிம்பம் ஒன்றன்பின் ஒன்ருய்த்தொடரும்பக்ஷத்
தில் ஒரே பிம்பத்தைப் பார்க்கிறதுபோலவே நமக்குத்தோ
ன்றும்.

இதைச்சிறுஉதாரணங்களால் நன்ருய்த்தெரிந்துகொள்ளலாம்
புஸ்தகம் வாசிக்கும்போது கண்கொட்டின போதிலும் எழுத்
துக்கள் ஒரே வரிசையாய்த்தோற்றுகின்றன. கொள்ளிக்கட்டை
யைச்சுற்றுங்கால் ஒரே கொள்ளிவட்டம் தோன்றுவது யாவரும்
அறிந்ததே. வாயில் ஜலம் விட்டு சூரியனுக்கு எதிரே துப்பும்
பக்ஷத்தில் வானவில்கள் போன்ற உருவங்கள் தோன்றுவது
பிரத்தியக்ஷம். நாம் வஸ்திரம் சுத்திபண்ணுங்காலத்தில் கல்

வில் ஓங்கி அடிக்கையில் ஜலத்துளிகள் சிதறுங்காலத்தில் வானவில்லுகள் தோன்றுவதும் சகசம். சினிமிடோகிராப் காட்சியில் (அதாவது வஸ்துக்கள் உண்மையில் யியங்குவனபோல் உயிர்ப்பித்துக்காட்டும் படங்களைக்கொண்டு காட்டும் காட்சி) கண்ணின் இந்தச்சக்தியை ஆதாரமாகக்கொண்டு நடமாடும் வஸ்துக்களின் பலநிலைமைகளின் புகைப்படமெடுத்து அவைகளைச்சக்கரத்தில் வைத்து விரைவாக அதனைச்சுற்றி ஒருதுவாரத்தின் வழி பார்த்தால் பின்னம்பின்னமாய்ப் புகைப்படங்கள் ஏற்பட்டிருக்கின்ற ஒருவஸ்துவின் பல அவயவங்கள் கண்ணின் சக்தியால் ஒன்று சேர்க்கப்பட்டுப் பலவிதமாயும் இயங்கும் வண்ணம் நாம் பார்க்கிறோம். இன்னும் அநேக வித்தைகளில் ஷை கண்ணின் சக்தியைப்பிரயோகித்து விசித்திரமான வேடிக்கைகள் செய்கிறார்கள். இந்தவானவில்லின் தோற்றத்தைக் காசிமாநகரில் வேணுகாவனத்தில் பகவான் கௌதமபுத்தர் சில சிஷர்களுடன் சம்பாஷணை பண்ணுங்கால் "சம்சாரமென்று ஒருபிரவாகம் இந்த யானவில் தோற்றத்தைப்போல" என்று திருவாய் மலர்ந்தருளினார். ஜலத்துளிகளின் பிரவாகம் ஓடிக்கொண்டிருக்க வானவில்லினது நிலைமைசத்தியம்போல் எப்படித்தோன்றுகின்றதோ அப்படியே பிரபஞ்சம் என்றபிரவாகமானது தோன்றியும் மறைந்தும் தோன்றியும்மறைந்தும் ஓடிக்கொண்டிருக்க நிலைத்திருக்கிறது போல் நாமும் எண்ணுகிறோம்.

மெய்யுல கென்பர் விகாரப் பொருடனை மெய்யறியார்
மெய்யெனின் யாது மணுவணு வாவெங்கு மேவலவன்
மெய்யென்பர் பொய்யை யிதுவேன் றறியார் மிகப்படித்தும்
மெய்யெனன் ஞானமேன் றேயுணர்ந்தோதிடும் வேதமதே.

புனர்வசு.

உ
குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம் 2 } 1903ஞு நவம்பர்மீ { இலக்கம் 12

விவேகசிந்து.

[முன்தொடர்ச்சி.]

கரன் ஆகாசத்தைப்பார்த்து ஐந்துவிதம் பண்ணி அந்
க்கரனை நிசாமிசத்தை நிறுத்தி மற்றைய நான்கையும் நான்கு
பூதத்திலே கூட்டினார். வாயுவைப் பார்த்து நிசாமிசமான
வியானவாயுவை நிறுத்தி மற்றைய நான்கும் நான்கு பூதங்
களிலே கூட்டினார். அக்கினியைப்பார்த்து நிசாம்சமான சட்
சுவை நிறுத்தி மற்றைய நான்கும் நான்கு பூதங்களிலே கூட்டி
னார். அப்புவைப்பார்த்து நிசாம்சமான ரசத்தை நிறுத்தி மற்
றைய நான்கும் நான்குபூதத்திலே கூட்டினார். பிருதிவியைப்
பார்த்து நிசாம்சமான பாயுருவை நிறுத்தி மற்றைய நான்கும்
நான்குபூதங்களிலே கூட்டினார். அந்தப்படி கூட்டச்செய்யவே
அதிலிருந்து விசேஷகுணங்கள் பிறந்தவிவரம்சொல்லுகிறோம்.

ஆகாசபஞ்சிகிருதம். ஆகாசத்துக்கு நிஜகுணம் அந்தக்
கரணம். வாயுவிலே கூடினது சமானவாயு. அக்கினியிலே
டியது சுரோத்திரம். அப்புவிலே கூடியது சத்தம். பிரு
வியிலே கூடியது வாக்கு. வாயுபஞ்சிகிருதம். வாயுஆகாசத்
திலேகூடி மனம். அப்புவிலேகூடிப் பரிசம். பிருதிவியிலேகூடி
ணி. இனி அக்கினிபஞ்சிகிருதம். அக்கினி ஆகாசத்திலே
புத்தி. வாயுவிலேகூடி உதானன். நிஜகுணம் சட்சு. அப்

புவிலேகூடி ரூபம். பிருதிவியிலேகூடி பாதம். இனி அப்பு பஞ்சீகிருதம். அப்பு ஆகாசத்திலேகூடிச் சித்தம். வாயுவிலே கூடி அபானன். அக்கினியிலேகூடி ஜிம்வை. நிஜகுணம் ரசம். பிருதிவியிலேகூடிக் குய்யம். இனிப்பிருதிவி பஞ்சீகிருதம். பிருதிவி ஆகாசத்திலேகூடி அகங்காரம். வாயுவிலேகூடிப்பிராணன். அக்கினியிலேகூடி ஆக்கிராணம். அப்புவிலேகூடி கந்தம். நிச குணம் பாசஉரு. இது பஞ்சீகிருதப் பிரகாரம் இந்தப் பஞ்ச பூதங்கள் முதற்குண தர்ம கர்மத்தினாலே பிறந்தவை. அவை சொல்லுகிறோம். ஆகாசத்துக்குச் சத்தமேகுணம். நிர்மலமே தர்மம். இடங்கொடுக்கிறதே கர்மம். வாயுவுக்குச் சத்தப்பரிசமே குணம். சஞ்சலமே தர்மம். உலர்த்துகிறதே கர்மம். அக்கினிக்குச் சத்தப்பரிசரூபமே குணம். உஷ்ணமே தர்மம். தகிக்கிறதே கர்மம். அப்புவுக்குச் சத்தப்பரிச ரூபரசமே குணம். சயித்தியமே தர்மம். அறுத்துக்கொண்டு போகிறதே கர்மம். பிருதிவிக்குச் சத்தப்பரிசரூபரசகந்தமே குணம். கடினமே தர்மம். தரிக்கிறதே கர்மம். காரண பூதத்தினுடைய குணம் காரிய ரூபமாய் நடக்கிறதென்றறியத் தண்ணீரிலே பிறந்த சயித்தியமே அலையிலிருக்கிறது போல் ஒவ்வொரு பூதத்திற்கு ஒவ்வொரு குணமே முக்கியமாக இருக்கும். அதெப்படி யென்றால் ஆகாசத்துக்குச் சத்தமே குணம். தபோலோகம் நெற்றி. உச்சி சத்தியலோகம். அதுவே பிரமலோகம். இந்திரலோகமே இரண்டு கைகளும். தச திக்கே கர்ணத்துவாரம். நேத்திரமே சந்திரசூரியர்கள். அதே மண்டலமே கண்கூடு. புத்திரமித்திர களத்திராதி சிநேகமே பல்வரிசை. இயமனே கன்னக்கதுப்பு. நாக்கு வருணன். பிரஜாபதி லோகமேகுறி. நாகலோகம் குதத்தானம். மழை வருஷிக்கிறதே ஈசுவரனுடைய சிறுநீர். ஒரு தேகத்திலே கிருமிகிடக்க கூட்டம் சம்பூரணமாயிருக்கிறது போல் எண்பத்து நாலு லட்சம் ஜீவபேதங்களும் பிரமாண்டத்திரிபுவனத்திலே வேதபுராண ஸ்மிருதியோடே கூடவிருக்கும். இப்படிப் பட்ட பிரம்மாண்ட கோளம். இது பஞ்ச பூத நிட்களம். இத்தப்பூகோளத்துக்குப்பத்தத்தனை யதிகம் பிருதிவியாவர

இந்தப் பிருதிவிக்குப்பத்தத்தனை அதிகம் அப்பு ஆவரணம். இதற்குப்பத்தத்தனைப் யதிகம் ஆகாச ஆவரணம். இதற்குப் பத்துக்குணம் அதிகம் மகதகங்காரம். இதற்குப் பத்துக்குணமதிகம் மகத்தத்துவம். இந்தலட்சணமேழும் சத்தாவரணம். இந்தச் சத்தாவரணமுங்கூடி பிரம்மாண்டமென்று சொல்லப் பட்டது. பிண்டாண்டத்துக்குச் சத்ததாது மூடிக்கொண்டிருக்கிறதுபோலே பிரம்மாண்டத்துக்குச் சத்தாவரணமும் மூடிக் கொண்டிருக்கிறது. இது இரண்டும் ஒருபிரகாரம். இப்படிப் பட்ட பிரம்மாண்டங்கள் மாயாதேவி கற்பத்திலே உற்பத்தியானது. இந்தத் தத்துவ சிருஷ்டி விவரித்துச் சொன்னோம். இந்தப் பிரமாண்டம் ஈசுவரனுடைய தூல சரீரம். இதுவேயுக்தமாகச் சொன்னோம். இந்தத்தத்துவசிருஷ்டி உற்பத்தியே சாக்கிர அவஸ்தை. பிரம்மா அபிமானி. அகாரமே பிஜாட்சரம். அந்த அக்ஷரம் சகலத்தையும் கர்ப்பீகரித்துக் கொண்டிருக்கும். சூட்சுமதேகமே இரண்யகற்பம். அதுவேலிங்கதேகம். அதுவே ஈசுவரனுக்குச் சொற்பனவஸ்தை. இரண்யகற்ப லிங்கதேகத்துக்குத் திதியவஸ்தை. அபிமானி விட்டுணு. உகாரம் பிஜாட்சரம் இத்தனையும் கற்பீகரித்துக்கொண்டிருக்கும். ஈசுவரனுடையகாரணதேகமே அவ்வியாகிருதம். பிரளயமே சுழுத்தியவஸ்தை அபிமானி ருத்திரன். இதற்கு மகார பிஜாட்சரம். இந்த தனுத்திரயத்துக்கும் இது ஆதாரமாயிருக்கும். இந்த அட்சர மூன்றும் பிரணவத்திலே திரிமாத்திரை. சகலமும் ஓங்கார வித்தாரமென்று அறிந்து சுகமாயிரு. விராட்டு இரணியகற்பம் அவ்வியாகிருதம். ஈசுவரனுடைய தனுத்திரயம். உற்பத்தி திதி பிரளயம் அவஸ்தைத்திரயம். பிரம்ம விஷ்ணு ருத்திரர்கள் அபிமான தேவதைகள். அகாரம் உகாரம் மகாரம் மாத்திரைத்திரயம். ராஜஸ சாத்வீக தாமஸம் குணத்திரயம். சகல மாயா மய வித்தாரமும் சொன்னோம். காரண உபாதி சர்வேசுவரன் இவ்வித்திலே சகலமும் வர்த்திக்கும்.

[இன்னும் வரும்.]

பத்திராதிபர்.

மேனாட்டுக் கலைஞானம்.

முற்கூறு.

11. கலை: என்பது பார்த்தல் சோதித்தல் யுத்தித்தல் என்னும் தொழில்களால் அடையும் அறிவு.

நமக்கு உலகிலுள்ள பொருள்களின் அறிவு ஐம்பொறிகளின் வாயிலாக வருகின்றது என நாம் இவ்விஷயத்தையாரம்பிக்கும்பொழுதே செப்பினோம். இவ்வைம்பொறிகள் செய்யுந் தொழிலுக்குப் பொதுவாய் பார்த்தல் என்று கூறுவார்கள். கண் ஒன்றற்கே பார்த்தல் தொழில் உரித்தாயிருக்க மற்றப் பொறிகளுக்குப் பார்த்தல் எங்ஙனம் பொருந்துமெனில் நாம் சாதாரணமாய்ப் பேசும்பொழுது "சுவைபார்த்தேன் வாசனைபார்த்தேன்" எனச் சொல்வதை யுதாரணமாக இவ்விடத்தில் குறிப்பதேபோதுமானது. உலகில் மனிதர்கள் பொதுவாய்ப்பொருள்களைப்பற்றியறியும் அறிவுக்கும் கலை அல்லது சாஸ்திர சம்பந்தமாயுண்டாகும் அறிவுக்கும்வரையறுத்து வித்தியாசஞ் சொல்ல முடியாது. அப்படியே பொதுவாய் மனிதர்கள் செய்யும் யுத்தி அல்லதுயூகம் என்னும் தொழிலுக்கும் கலைப்பயிற்சியில் செய்யும்யுத்திக்கும் வேறுபாடு கூறமுடியாது. கண்டிப்பாய்ப் பேசுமிடத்து தேற்றமான அறிவு எல்லாம் கலை என்னப்படும். நேர்மையான யுத்தி யெல்லாம் கலைவழித்தான யுத்தியேயாம். கலை ஞானம் அடைவதற்கு முதலில் பார்த்தல் வேண்டும். அப்பால் சோதனை செய்யவும் வேண்டும். கலை ஞான சாஸ்திரங்களில் முடிவு கண்டு சொல்லியிருக்கும் உன்னதமான சித்தாந்தங்களும் விநோதக் காட்சிகளும் தொழில்களும் **பார்த்தல் சோதித்தல் யுத்தித்தல்** ஆகிய தொழில்களை நடத்தித்தான் பெறப்பட்டன. கலைப் பயிற்சியில் பார்க்கவும் சோதிக்கவும் உண்டாகிய வழியும் இவ்வுலகத்து மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் நாள் தோறும் பல பொருள்களையும் பார்க்கவும் சோதிக்கவும் உபயோகிக்கும் சாதாரண வழியும் ஒன்றேயன்றி வேறல்ல. ஆனால் கலை வழிக்கும் சாதாரண வழிக்கும் வித்தியாசம் என்னவெனில் கலைவழி சுத்தமும்தெளிவும் திருத்தமுமுள்ளது. நமது சிறுவர்கள் விளையாடும் பண்டங்களைப் புதிதாய்ப் பெற்றால் அவர்கள் அப்பண்டங்களின் குணா குணங்களைக் கவனித்து நிதானித்துப் பார்த்து அவைகளை யுருட்டியும் ஓட்டியும் எறிந்தும் வீசியும் சுற்றியும் பிரித்தும் இன்னும் பலவாகச் செய்தும் அவைகளின் சக்திகளையும் செயல்களையும் குணங்களையும் சோதிக்கிறதை நாம் தினமுங் காண்கிறோம். நாம் எல்லோரும் ஒவ்வொரு நாளும் ஒரு பொருளை விட்டால் மற்றொரு பொருளைப் பார்க்கவும் சோதிக்கவுமா

யிருக்கிறோம். ஆனால் சாமானியமாய் மனிதர்கள் பார்ப்பதிலும் சோதனை செய்வதிலும் மேலுக்கு மேலாய்ப் போய்விடுகிறார்கள். திருத்தமாய்ப் பார்த்தல் சுளுவான காரியமேயல்ல. பார்த்தல் செய்ய அப்பியசிக்கும் பொழுது தான் அதன் கஷ்டம் தெரியும். அநுபவமில்லாதவர்கள் திருத்தமாய்க் கவனித்துப் பார்க்கமுயலும் பொழுது அப்படிப் பார்த்தல் எவ்வளவு வருத்தமான காரியம் என்பது கண்டு தெரிந்து பிரமிப்பார்கள். சாதாரணமாய் மனிதர்கள் பார்க்கும் செயல் எல்லாம் உண்மையாகப் பார்த்தல் அல்ல. இக்காரணங் கொண்டே மகாத்மாக்களாகிய சித்தர்கள் எல்லாமதங்கள் நூல்களில் "பாரப்பா" "பாரப்பா" வென்றே கூக்குரலிட்டிருக்கிறார்கள். சர்வ சாதாரணமாய் சிறிய காரியத்தைக்கூட முற்றுந் திருத்தமாய்ச் சொல்ல முடியாவிடினும் கிட்டினமட்டும் ஏகதேசமாயாவது நேர்மையாய்ச் சொல்லக் கூடிய மனிதர்கள் நூற்றில் ஒருவனுங் கிடைப்பதரிது அரிது. அதாவது எப்படியெனில் சம்பவித்த காரியத்தை விவரித்துக்கொண்டுவரும் பொழுதே ஏதாவது முக்கியமான பாகத்தை அஜாக்கிரதையாய் விட்டாலும் விடுவார்கள் அல்லது தாங்கள் வாஸ்தவமாய்க் கண்டபாகத்தை ஒரு விதமாக நடந்திருக்கக் கூடுமென்று தங்கள் மனதில் தங்களையறியாமலே யுத்தி செய்து கொண்டு தாங்கள் எண்ணிச் சொல்வது போலவே வாஸ்தவமாய் நடந்திருப்பதாகப் பொருள் படும்படியாவது அல்லது அப்படிப்பட்ட எண்ணம் எழும்படியாவது வசனிப்பார்கள். எப்பொழுதும் உண்மையையே பேசும் இரண்டு சாக்ஷிகள் ஒரே காரியத்தைப் பற்றி ஒருவர்க்கொருவர் மாறுபட நியாயஸ்தலத்தில் சொல்லுவார்களேயாகில் இவ்விருவர்களில் ஒருவனாவது அல்லது இருவருமாவது தாங்கள் வாஸ்தவமாய்க் கண்டதைத் தாங்கள் பார்த்ததினின்றும் அநுமானித்து மனதில் நிதானித்துக் கொண்ட தீர்மானங்களோடு குழப்பிப் பேசுகிறார்கள் அதனால் தான் இவ்வித மாறுபாடு உண்டாயிற்று என்று சாதாரணமாய் நாம் யூகிக்கிறோம். உதாரணமாக. கந்தன் எப்பொழுதும் உண்மையையே பேசுவோன். நியாயஸ்தலத்தில் அவன் நின்று தான் தரித்திருக்கும் அங்கியின் பையிலிருந்த பணத்தை சாத்தன் அப்பைக்குள் கைவிட்டு அபகரித்துக்கொண்டானென்று பிரமாணஞ் செய்கிறான். ஆனால் வாஸ்தவமாய் நடந்ததெல்லாம் கூடி கந்தனுக்கருகில் சாத்தன் நின்று கொண்டிருந்தபொழுது அங்கிப்பையில் ஒரு கைநுழைந்த உணர்ச்சி மாத்திரம் கந்தனுக்கு உண்டானதென்றும் உண்மையில் சாத்தன் திருடினவனல்லன் என்றும் கந்தனுடைய பார்வைக்குப் படாமல் இன்னொரு பக்கல் நின்று கொண்டிருந்த கொற்றன் தான் வாஸ்தவத்தில் திருடினவன் என்றும் நியாய விசாரணையில் வெளியாகின்றது. இவ்விடத்தில் கந்தன் சொல்லவேண்டியதெல்லாம் என்னவெனில் தான் நின்றிருந்த பக்கல் சாத்தன் நின்றிருந்ததாகவும் வேறயாராவது இருந்தார்களோ இல்லையோவென்பதைத் தான் கவனிக்கவில்லையென்றும் அச்சமயத்தில்

ள் ஒரு மைநுழைந்த உணர்ச்சி தனக்குப்பட்டதாக தன் அங்கியின் பைக்குச் சோதிக்க பணத்தைக் காணவில்லை யென்பதுமே. வும் உடனே பையை சாத்தன் பக்கலிருந்ததினாலும் வேறொருவரையும் தான் அறைவிட்டு அவனாலும் சாத்தன் தான் எடுத்திருக்கவேண்டுமென்று தன் மன காணவில்லாததுங்கொண்டு அதை உண்மையுடன் குழப்பி விட்டான். பார்ப்பதில் திறானிசியில்லாதவர்கள் தாங்கள் பார்க்கும் விஷயங்களுடன் தங்கள் மனதில் அநுமானங்களைக் கலவரித்து ஒன்றுபடுத்தி மிகவும் ஆச்சரியத்தைத் தின்டுக்கும்படி குழப்பிவிடுவது சாதாரணம். பார்ப்பதில் அப்பியாசமும் விழிப்பும் உள்ளவர்களும் சில சமையங்களில் இவ்விதமான பிசகில் விழும்படியான அபாயத்திற்குள்ளாகிறார்கள்.

உலகில் உள்ள பொருள்களையும் நிகழும் சம்பவங்களையும் பார்க்கும்பொழுது தன்னையறியாமல் மனதில் உதிக்கும் அனுமானங்களைக் கவனிக்காமல் திருத்தமாயும் பூரணமாயும் கவனித்துப் பார்க்கிறதற்குத்தான் “கலாபார்வை’ அல்லது கலைவழிப்பார்த்தல் என்று கூறுவார்கள். இப்படிப் பார்ப்பவர்களுக்கே பார்ப்பவர் அல்லது பார்ப்பார் என்று பெயர்.

இயற்கைப் பொருள்களை வேண்டுமென்று கூட்டியாவது பிரித்தாவது அல்லது அவைகளின் நிலைமைகளை மாற்றியாவது நாம் நடத்தி அப்பொழுது நிகழும் நிகழ்ச்சியைப் பார்த்தல் செய்வதற்கு சோதனை அல்லது சோதித்தல் என்று பெயர். இதைத் திருத்தமாயும் பூரணமாயும் செய்தலுக்குக் கலாசோதனை அல்லது கலைவழிச்சோதித்தல் என்று பெயர்.

சீதள தேசங்களில் சில காலங்களில் நீர் உறைந்து கட்டியாய் விடுகிறதைச் சாதாரணமாய்ப் பார்க்கிறோம். இது சாதாரண பார்வை அல்லது சாமானியபார்வை. நீரை யெடுத்து அத்துடன் ஏதாவது சேர்த்தாவது அதன் சீரை மாற்றியாவது வேறு யாதாயினும் ஒரு தொழிலை அதன்மேற் செலுத்தியாவது செய்து எந்தத்திட்டமான பொருத்தங்களில் நீரானது பனிக்கட்டி அல்லது கனோபலம் அல்லது இமம் ஆக மாறுகின்றது என்று நாம் ஆராய்ந்தறியும்பொழுது அந்தச் சாதாரணப் பார்வை கலாபார்வையாகின்றது. மரங்களை நீரில்போட்டு சோதனையாய்ப் பார்க்க அவைகள் மிதக்கின்றனவென்று அறிகிறோம். இச்சோதனை சாதாரண சோதனை. இதனால் மரங்கள் நீரில் மிதக்கும் என்பதுமாத்திரம் தான்தெரியும். கலாசோதனையோ மரமானது நீரில் மிதக்கும் பொழுது அம்மரத்தின் கனம் அல்லது எடை எவ்வளவோ அவ்வளவு எடையுள்ள நீர்பெயர்ந்துவிடுகின்றது என்று நமக்குத் தெரிகின்றது. இதைத்தப்பற்றிப் பின்னால் விவரிப்போம்.

கலா பார்வை சோதனைகள் சாதாரண பார்வை சோதனைகளினின்று எவ்விதமாகப் பேதிக்கின்றனவோ அவ்விதமாகவே கலாயூகமும் சாதாரண யூகத்தினின்றும் பேதிக்கின்றது. அதாவது கலா யூகமானது நேரொழுங்கையும் திட்டத்தையும் நோக்கி முயல்கின்றது. நேர்மையாயும் திட்டமாயும் பார்த்தல் எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் நேர்மையாயும் திட்டமாயும் யூகித்தலும்.

கலாயூகம் அல்லது யுக்தியில் அனேகவிஷயங்களைத் தனித்தனியாய்க் கவனித்துப்பார்த்து இப்படி ஆராய்ந்தறிந்த தனிவிஷயங்களைக் கொண்டு பொது விதிகள் சேகரிக்கப் படுகின்றன. இப்பொது விதிகள் நிலைநின்ற பொழுது அவைகளினின்று முடிவான தீர்மானங்கள் கிரகிக்கப் படுகின்றன. ஒருசிறுவன் “கோலி குண்டுகள் கடினமானவை,, “யென்று சொல்லும்பொழுது அவன் தான் தொட்டுப் பார்த்து அனுபவிக்கும் பல கோலிகளினின்றும் உலகிலுள்ள எல்லாக் கோலிகளின் விஷயமாயும் பொதுவான ஒரு சித்தாந்தம் வருவித்துச் சொல்லுகிறான். அதாவது பார்த்த பல கோலிகளின் தனித்தனி அனுபவத்தைக் கொண்டு கோலியின் இனத்துக்கு எல்லாம் அனுமானஞ் செய்து ஒரு சித்தாந்தத்தை நாட்டுகிறான். அதாவது அவன் நியாய சாஸ்திர பரிபாஷையில் வேதனம் என்று சொல்லும் விதமாய் நியாயிக்கிறான். இப்படியுத்தித்தலுக்கு வேதனுமானம் என்று பெயர். இச்சிறுவன் அக்கோலியைப் பல்லினாற் கடித்து உடைக்க மறுத்தால் அவன் மறுக்கிறதற்குக் காரணமென்னவெனில் அவன் மனதறிந்தோ அறியாமலோ முன்சொன்ன வேதனம் என்னும் மனோகிரியைக்கு மாறான கிரியையாகிய அனுமானம் அல்லது அனுமிதம் என்னும் தொழிலை ‘கோலிகள் கடிக்கமுடியாத கடினமுள்ளவை’ என்னும் பொது விதியினின்று செய்கிறான். ஆங்கிலத்தில் வேதனத்திற்கு “இண்டக்ஷன் (Induction) என்றும் அனுமானத்திற்கு “டிடக்ஷன்” (Deduction) என்றும் கூறுவார்கள்.

தர்க்கசாஸ்திரம் கற்கும்பொழுது நியாயிக்கும் தோரணியைப்பற்றி விபரமாய்த்தெரியலாம். தர்க்கசாஸ்திரத்திற்கு நியாயசாஸ்திரம் என்றும் அளவைநூல் என்றும் இங்கிலீஷில் “லாஜிக” (Logic) என்றும் சொல்வார்கள். இச்சாஸ்திரம் யுத்திக்கும் தோரணியைப்பற்றிப் பூரணமாய்ச் சொல்லும். இவ்விடத்தில் பிரபஞ்சவியல்பின் விதிகள் என்றால் எண்ணிறந்தபார்வை சோதனைகளினால் இயற்கைப்பொருள்களின் நடத்தைகளைப் பற்றிச்சேகரித்த பொதுவிதிகள் என்றுமாத்திரம் தெரிந்திருப்பது போதுமானது. அதாவது வேறுவிதமாய்ச் சொல்வோமாயின் பிரபஞ்சவியற்பின் விதிகளானவை பார்வைகளினின்றும் சோதனைகளினின்றும் கிரகிக்கும்வேதனங்களேயாம். கலையின்பயன்களாக வந்திருக்கும் சித்தாந்த முடி

வுகளும் பிராணிகளுக்கு உபயோகமாக அநுபவத்தில் உண்டாயிருக்கும் பொருள்களும் விநோதங்களும் இப்பொதுவிதிகளினின்று அநுமான யுக்தி செய்வதனால் விளையும் பலன்களேயாம்.

ஆகையால் கலையும் மனிதப்பரப்புக்குப் பொதுவாயுள்ள இயற்கையறிவும் ஜனங்கள் சில சமயங்களில் எண்ணுகிறபடி விரோதமானவைகளல்ல. ஆனால் கலையென்பதென்னெனில் முதிர்ந்துதேர்ந்த கசடற்ற இயற்கையறிவேயாம். கலையூகம் அல்லது யுத்தியென்பது மிக்ககவனிப்புள்ள இயற்கையூகமே. இயற்கையறிவு தெளிவாயும் பூரணமாயும் வளர வளர கலையறிவாக ஓங்குகின்றது.

ஆகையால் கலைக்குப்பாதை இயற்கையறிவின் வழியாகத்தானிருக்கின்றது. கவனிப்பாய்ப்பார்த்தலாலும் சோதித்தலாலும் அந்த இயற்கையறிவை விசாலப்படுத்தி நமது ஆராய்ச்சியின் பலன்களைப்பொதுவிதிகள் என்னும் பிரபஞ்சவியல்பின் விதிகளாகத்திருத்தமாய்ச் சொல்லும் வகையை நாம் கற்கவேண்டும். முடிவாக கசடறச்செவ்வையாகவும் திட்டமாகவும் நியாயிக்கும் வழியை நாம்கற்று அதன்மேல் சிருஷ்டியில்காணும் தோற்றங்களின் சரியான முகாந்தரங்களையும் காரணங்களையும் நமது வாழ்க்கைக்கு அநுகூலத் துணையாயிருக்கவேண்டிய அளவு காணவேண்டும்.

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

பிரமஞான சங்கம்.

அமெரிக்கா ஐரோப்பா முதலிய * குடநாடுகளின் சரிதங்களை ஆராய்ச்சிசெய்து வரும்பொழுது இப்பொழுது சென்றுபோன கிறிஸ்து மதசித்தாந்தப்படி பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் அத்தேசங்களில் வைதிக ஒழுக்கங்களும் ஈஸ்வரபக்தியும் மதாசாரமும் பரலோகசாதனங்களும் பதிஞானமும் மிகவும் மலினமடைந்தும் கூடாவொழுக்கங்களும் பாசஞானமும் லௌகிக சாதனங்களும் போலிநாகரிகமும் உடலநுகூலசீர் திருத்தங்களும் ஓங்கிப்பிரபலமடைந்தும்

* குடக்கு—மேற்கு

இருந்ததாக விளங்குகின்றது. பின்னர் அந்நூற்றாண்டின் வயது ஏறஏற பரஞானம் குன்றிக்கொண்டே வந்து கடைசியாக அந்நூற்றாண்டின் மத்தியவயதில் பரவிஷயமான பேரறிவு இல்லையென்னும்படி அரிதாகி பாச உணர்வுமாத்திரம் தலையெடுத்தோங்கிப் பார்க்கும் யாவரும் பிரமிக்கும்படி நண்பகல் ஆதித்தனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. எங்குபார்த்தாலும் பிரபஞ்ச ஞானத்தையே பயின்று அதிலேயே சிந்தையைச்செலுத்தி உழன்று மயக்கும் மாயைக்குள்ளாகி மாலடைந்த கலைஞர்கள் நிறைந்திருந்தார்கள். அவர்கள்செய்துவிடுத்த பிராகிருதநூல்கள் புற்றிலிருந்து கிளம்பும் * ஈசலைப்போல் புறப்பட்டு பரவியிருந்தன. இக்கலைஞர்கள், பூதங்களும் அவைகளின் விகுதியாகிய பௌதிகப் பொருள்களுந்தான் உள்ளனவென்று சித்தாந்திக்கும் பௌதிகவாதத்தையும், பிரகிருதி ஒன்றுதான் உள்ளது இப்பிரகிருதியின் அணுக்களின் இயக்கங்களும் சையோகங்களும் பிரபஞ்சத்திற்கும் அதிலுள்ள ஜீவராசிகளுக்கும் காரணம். இவையன்றி இவைகளுக்கு வேறாக ஈசுவரனாவது ஆத்மாவாவது வேண்டியது இல்லையென்னும் பிரகிருதிவாதத்தையும், ஈசுவரனும் ஆத்துமாவும் இல்லை. எல்லாம் சுபாவமே யென்னும் நாஸ்திகவாதத்தையும், ஈசுவரன் உண்டோ இல்லையோ தெரியாது. இருப்பதுசந்தேகம். அதைப்பற்றி விசாரிப்பதும் அவசியம் இன்று என்னும் ஐயவாதத்தையும், மனிதனுடைய அறிவு பிரத்தியக்ஷமாய் இந்திரியங்களால் அநுபவிக்கக்கூடிய அநுபவ எல்லைக்குட்பட்டதேயன்றிக் காரியானுபவத்தைத் தாண்டிச்செல்லாது. நித்த சுத்த நிரஞ்சன நிராமய அகோசரமான பரமார்த்தப்பொருள் ஒன்று உளதானாலும் அது நமதநுபவத்திற்குட்பட மாட்டாதாகையால் அப்பொருளைப்பற்றி வசனிக்கவும் விவகரிக்கவும் சிந்திக்கவும் நமக்குச்சுதந்தரமில்லை. ஆகையால் கடவுள் ஆத்துமா ஆதிகாரணம் இவைகளைப்பற்றி எப்பொழுதும் தெரியமாட்டாது. தெரிந்துகொள்ளவுமுடியாது என்னும் அஞ்ஞான வாதத்தையும், இன்னும் பலவிதமான பொய்ச்சித்தாந்தங்களையும், எழுதியும் போதித்தும் பிரசங்கித்தும் வந்தார்கள். மெஞ்ஞானிகள்

* ஈயல் என்பது:—ஈசல், எனவழங்குகிறது. இதன் சரியான பெயர் ஈரேல் எனவும், பறத்தலால் ஈயின்றன்மைவாய்ந்த செல் என்பது பொருளெனவும் சிலர் கூறுவர்.

அரியரானார்கள். முற்காலத்தி லுண்டான மெய்ஞ்ஞானநூல்களும் தேடுவாரில்லாமையால் இருந்தவிடந்தெரியாமல் ஒழிந்தன. கற்றோர் அநுஷ்டானத்தைக் கல்லாதாரும் தொடர்வதியல்பாதலால் பொதுவாக ஜனங்கள் எல்லோரும் ஈசுவரபத்தியில் சிரத்தையின்றி உலகவிச்சையில் மூழ்கி ஒழுகிவந்தனர்.

குடநாடுகள் இப்படியிருக்கக் * குணநாடாகிய நம் இந்தியாதேசம் எந்தநிலைமையில் இருந்ததென்று பார்ப்போம். இங்கும் ஜனங்களுக்குள் பரஞானமும், வைதிக நடையும், ஜீவகாருணியமும், பொதுநல உழைப்பும், தானதருமங்களும், வைராக்கியமும் குறைந்து உலகியல் ஞானமும், கள்ளவொழுக்கமும், பொய்ப்பக்தியும், போலியாசாரமும், கபடபுத்தியும், இரக்கமின்மையும், தன்னயதிருஷ்டியும், † அழுக்காறும், அவாவும், ‡ வெகுளியும், வேற்றுமையும் விரவியிருந்தன. இச்சமயத்தில் குடநாட்டார் இத்தேசத்தைக் கைப்பற்றிக்கொண்டு தங்கள் ஆளுகையைநாட்டி நம்மவர்களுக்குக் கல்வி கற்பிக்கப் பல விடங்களிலும் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஸ்தாபித்து அவைகளில் தங்கள் பாஷையையும் கலைஞானசாஸ்திரங்களையும் கற்பித்துவந்ததில் இவ்விடத்திலும் மாணாக்கர்களுக்குள் நிரீஸ்வரக்கொள்கையும் பௌதிகவாதக் கொள்கையும் பிடிபட்டுவிட்டன. இந்நாஸ்திக நோய் மாணாக்கர்களினின்றும் மற்றவர்களுக்கும் பரவத்தலைப்பட்டுவிட்டது. இன்னும் கொஞ்சகாலத்திற்கு இப்படியே விட்டிருந்தால் உலகமெங்கணும் தர்மம் நசித்து அதர்மம் பரவியிருக்கும்.

உலகத்தில் இப்படியானது இது ஒரு தடவையன்று. உலகந்தோன்றியது முதல் பல முறைகளிலும் இம்மாதிரி தர்மம் குறைந்து அதர்மம் மேலிட்டு நடந்தன. இத்தருணங்களில்தான் அதர்மத்தைப்போக்கித் தர்மத்தை நிலைநிறுத்த அவதா

* குணக்கு கிழக்கு குணநாடு கீழ்த்தேசம்.
† அழுக்காறு—பொறாமை.
‡ வெகுளி—கோபம்.

ரங்களும் மகாத்துமாக்களும் ஆசாரியபுருஷர்களும் தோன்றுவது. பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு அடியில்வருமாறு சொல்லுகிறார்

சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா
னாவிவ் வுலகுபடு மழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினான் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும்.

இதனால் அஞ்ஞானமும் அதர்மமும் பூமியில் நிரம்பி உலகுதுயரடையும்போது மகாவிஷ்ணு அவதாரஞ்செய்கிறார் என்பது பெறப்பட்டது. ஆனால் இப்படி அவர் அவதரிப்பது மகாத்துமாக்கள் ஆசாரியர்கள் முதலியவர்களால் தீர்க்கக்கூடாதபடி அதர்மமேலிடும் பொழுது தான். உலகில் தோன்றுதொட்டு மனிதர்களை நல்லொழுக்கத்திலும் ஞானவழியிலும் நடத்தவும் பக்குவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து மோக்ஷகதி கூட்டுவிக்கவும் ஞானிகள் சித்தர்கள் ரிஷிகள் முனிவர்கள் சேர்ந்தகுழாங்கள் இருந்துகொண்டே வருகின்றன. இக்குழாங்கள் பல மலைகளிலும் இருப்பதாகச் சாஸ்திரம் சொல்லுகின்றது. உலகத்திலுள்ள ஜீவராசிகள் தாங்கள் பெற்றபேறு பெறவேண்டும் என்றும் அதற்காகவே தாங்கள் இருந்துகொண்டு ஈசுவரன் நியமித்த வழிப்படி உலகம் சீக்கிரம் செல்லவேண்டி உழைத்துவரும் மகாத்துமாக்களின் கூட்டங்களுக்கு "சுவேதக்குழாங்கள்" என்று பெயர். சித்திபெற்றவர்களில் சிலர் உலகத்தை ஈசுவரன் நியமனப்படி செல்லத் துரிதப்படுத்தாமல் இடைஞ்சல் படச்செய்பவர்களா யிருக்கிறார்கள். இவர்கள் குழாங்களும் சில விருக்கின்றன. இக்குழாங்களுக்கு "அஞ்சனக்குழாங்கள்" என்று பெயர். அஞ்சனம் என்றால் கறுப்பு. சகல ஜீவராசிகளையும் திரட்டி தங்கள் கருணைக்குள் வைக்காதவர்களானபடியால் அவர்கள் மனத்தில் மாசு சற்றிருப்பதினால் அவர்களுக்கு இப்பெயர் வந்தது. இக்குழாங்களினால் உலகத்திற்கு ஒரு பிரயோசனமுமில்லை அது மட்டோ கெடுதியுண்டு.

சுவேதக்குமாரங்களில் ஒன்று இமயமலையிலிருக்கின்றது. அதற்கு இமயகிரி சுவேதக்குமாரம் என்று பெயர். மற்ற சுவேதக்குமாரங்களுக்கெல்லாம் இது பெரியதென்று சொல்லுகிறார்கள். இந்தக்குமாரம் உலகத்தில் குடநாடுகளும் குணநாடுகளும் சற்று முன் சொன்ன பரிதாபநிலைமையிலிருந்ததைப் பார்த்து, அத்துயர் நீக்கக்கருதியதால் இப்பொழுது தமிழில் பிரமஞானசங்கம் என்றும் இங்கிலீஷில் "தியசாவிகல் ஸோஸைடி" என்றும் சொல்லும் சபை ஏற்பட்டது. இக்குமாரத்தைச் சேர்ந்த மகாத்துமாக்கள் பலரிருக்கின்றனர். அவர்களில் இருவர் மாத்திரம் இவ்வுலகத்திற்கு நன்மைதர ஏற்பட்ட இந்த பிரமஞானசங்கத்தின் விஷயமாக தங்கள் கருணாநோக்கத்தைச் செலுத்த ஏற்பட்டுக்கொண்டார்கள். மற்றவர்களுக்கு இதன்மேல் அபிமானமில்லையென்பதன்று. இந்தக்குமாரத்தின் முழுஎண்ணமும் இத்தருணத்தில் உலகைச்சீர்திருத்த வேண்டுமென்பதே. ஆனால் இச்சங்கத்திற்கு இருமகாத்துமாக்கள் முதன்மையாயிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சிஷ்யவர்க்கத்தில் ஒருத்தியாகிய ஹேலேனம்பாள் என்னும் மாதுசிரோமணியை நோக்கி நாஸ்திகமும் கூடாவொழுக்கமும் உலகத்தில் அதிகப்பட்டு வருகின்றனவே யென்று குறிப்புக்காட்ட அந்த ஞானசிகாமணி அவர்கள் குறிப்பையுணர்ந்து தான் மனிதர்களுக்குட் சென்று அவர்களுக்கு ஞானவழியைக்காட்டுவதாக ஒப்பினாள். அதன்மேல் அம்மகாத்துமாக்கள் அப்பெருமாட்டியை அனுப்பினார்கள். அவர்கள் ஆணையின்படி தன்னுடைய சுகஸ்தானத்தைவிட்டு உலகநன்மையின் பொருட்டு நமக்குள்வந்து அமெரிக்காதேசம்போய் அவ்விடத்தில் கர்னல் ஆல்காட் என்னும் பிரபுவைச் சேர்த்துக்கொண்டு இவ்விருவருமாக கிறிஸ்து மதசித்தாந்த எண்ணிக்கையின்படி 1875-ம் வருஷம் நவம்பர் மாசம் 17-ம் தேதி சாயந்திரம் கல்வித்திறமையும் நன்னடைக்கையும் உயர்ந்த பதவியும் பொருந்தினசிலர் முன்னிலையில் இச்சங்கத்தை ஸ்தாபித்தார்கள். அப்பால் இச்சங்கத்திற்குக்கிளைகளாக ஒவ்வொரு ஊரிலும் ஒருகிளை ஏற்பட்டு இப்பொழுது உலகமெல்லாம் இச்சங்கம் பரவியிருக்கின்றது. இச்சங்கத்தின் பிரதானஸ்தலம்

சென்னை, அடையார். இச்சங்கத்தின் முக்கியநோக்கங்களை சென்ற செப்டம்பர்மாசத்தின் பத்திரிகையில் 'பிரமஞானம்' என்னும் தலைப்பில் காணலாம்.

அடுத்து ஹேலேனம்பாளுடைய சரித்திரத்தை யெழுதுவாம்.

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

முத்திரைகளினிலக்கணமாவது:—இருகையும் அஞ்சலியாகச்சேர்த்து இரண்டாமிடைவிரல்களி னடிக்கணுக்களில் இரண்டங்குட்டங்களையுஞ் சேர்த்துக்காட்டுவது ஆவாகன முத்திரையெனப்படும். இதையே அதோமுகமாய்ச்செய்தல், ஸ்தாபன முத்திரையாகும். இருகையு முட்டியாக மூடிக்கொண்டு இரண்டங்குட்டங்களையும் உயரத்தூக்குதல் சந்நிதானமுத்திரை. அந்தமுட்டிகளையே அங்குட்டங்களையுள்ளடக்கிப் பிடித்தல் சந்நிரோதன முத்திரை. இரண்டு முட்டிகளையும்பிடித்து தர்ச்சனி விரல்களை மாத்திரம் நீட்டி மண்டலாகாரமாகச்சுற்றுவது அவகுண்டன முத்திரை. பசுவின்முலைபோற் சேர்ப்பது தேனுமுத்திரை. இக்கிரியையினை அநுட்டித்தோர் சிவசாமீபமாகிய பதமுத்தியைப்பெறுவர். சிவசாமீபமாவது, அவ்வளவினன்றி மைந்தர்க்குளதாகிய உரிமைபோல அவ்வப்புவன பதிகளுக்கு அணுக்கராய் வைகி அவ்வப்போக விசேடங்களை நுகர்ந்து வாழ்வது இவ்வுரிமை விசேடம்பற்றி இவர்க்கு மைந்தரென்றும் இதையடைவிக்கு நெறியாகிய கிரியைக்குச் சற்புத்திர மார்க்கமென்றும் பெயர்.

இனி அகத்தொழில் மாத்திரையானே அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகமெனப்படும். அவ்வழிபாடு யாவையெனின் கூறுதும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென வெட்டுவகைப்படும். அவற்றுள் இயமமாவது கொல்லாமை, சத்தியம், அத்தேயம், பிரமசரியம், தயை, ஆர்ச்சவம் க்ஷமை, திருதி, மிதாகாரம், சவுசம் எனப்பத்துவகைப்படும். அவற்றுள்,

க. கொல்லாமையாவது, வேள்வியாதிகளிற் செய்யுங்கொலைதவிர மற்றையுயிர்களைக் கொலைபுரிய மனத்தும் நினையாமையோம். உடல், பொறி,

நீங்கும். மூழுக்கன்று பகல் நித்திரை அபத்திய போசனம் சம்போகமா திய நீக்கிவிடவேண்டியது. நெடுநாளித் தைலத்தையே முழுகினவர்கள் சாளேசுரத்தால் பீடிக்கப் பட்மாட்டார்கள்.

கர்ப்பூராதிச் சூரணம்.

ஆலாத்திக்கர்ப்பூரம், பச்சைக்கர்ப்பூரம், கோஷ்டம், கற்பூரசலாசத்து, சிறுநாவற்பூ, நற்சீரகம், வேப்பீர்க்கு, கருஞ்சீரகம், சடாமாஞ்சில், பெருநாவற்பூ, கொத்துமல்லி, மரமஞ்சள், சீந்திற்கொடி, யானைத்திப்பிலி, மூங்கிலுப்பு, கூகைநீர், குங்குமப்பூ, கோரைக்கிழங்கு, இலவம்பிசின், அமுக்கலான்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, மெழுகுசீர்க்கின் விரை, இதின்வேர், யானை நெருஞ்சின்முள், சந்தனம், நீர்முள்ளிவிரை, தாமரைக்கிழங்கு, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், பிரண்டை, பூனைக்காலிவிரை, நிலப்பனைக்கிழங்கு, சீந்திற்சர்க்கரை காட்டுப்பூசனிக்கிழங்கு, பூமிச் சர்க்கரைக்கிழங்கு இவை வகைக்குப் பலம் க(1) இலைகளிற் கொடி வேர் கிழங்குகளைச் சிறுகாறுக்கி நிழலிலுலர்த்தி இடித்தும் ஆலாத்திக்கர்ப்பூரத்தை மாத்திரம் (ஒருவாயகன்ற பாத்திரத்தை மெல்லிய வஸ்திரத்தால் கட்டி இவ்வஸ்திரத்தின்மேல்) பொடித்துத் தூவி அதனை ஓர் அகன்ற தட்டத்தால் மூடி அத்தட்டின்மேல் தழலைக்கொட்டிச் சற்றுப் பொறுத்துத் திறந்து பார்த்துக் கர்ப்பூரமெல்லாம் பாத்திரத்தையிறங்கினவுடன் தட்டத்தை யெடுத்துவிட்டுப் பாத்திரத்துள்ளிருக்குங் கர்ப்பூரத்தை மறுபடியும் முன் மாதிரியே வைத்து நெருப்பிடவும். இவ்வகையாக மடக்கி மடக்கி மும்முறை செய்து இடித்தும் எல்லாவற்றையும் ஒன்றாக்கி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து இதற்குச் சமம் சீனிச்சர்க்கரை கலந்து காலை மாலை வேளைக்கு மூன்று வராகனெடையாக எடுத்துச் சாப்பிட்டுவர. மண்டலத்தில், நீர்க்கடுப்பு, நீர்ச்சிறுப்பு, வெள்ளைவிழுதல், வெட்டை, மிகுமூத்திரம், கடுப்பின்றி அடிக்கடியிறங்கும்நீர், நீரடைப்பு, சக்கரைமேகம் மதுமேகம் தந்துமேகம், இன்னும் நீரைப்பற்றிவரும் எல்லாரோகங்களுக்குஞ் சொஸ்தமாகும், நீரிழிவுள்ளவர்கள் இம்மருந்தைச்சாப்பிட்டால் அவர்களுக்கிருக்கும் அதிதாகம் நீங்கிவிடும். நாட்பட்டநீரிழிவுரோகிகள் இம்மருந்தையே நெடுநாட்சாப்பிட்டுவருவதும அன்றித்தாகமிருந்தால் இடைக்கிடையே விளாம்பழப்பானகஞ் சாப்பிட்டுவந்தால் நாட்செல்லச் செல்லக்கிரமமாக வியாதியின்கொடுமையுங் குறைந்துகொண்டேவந்து கடைசியில் இவ்வியாதியால் மிகஇளைத்துக்களைத்த தேகமும் பழையபடி பலப்பட்டுத்தேறிவிடும். இவையன்றி பிரிச்சரம், நீர்த்தாரையிலும் பக்கங்களிலுமுண்டாகும் நமைச்சலுங்குணமாகும்.

முன்னர் பிரமேக ரோகத்தால் பீடிக்கப்பட்டுப் பலவாகிய மருந்துகளையுண்டோர் அதுதீர்ந்து பின்னர் தங்களுக்குவேண்டிய தாதுபலத்தை

யிழந்து சோம்பல் மேலிட்டவர்களாயுள்ளோரும். இயற்கையாய்த் தாதுவிர்த்தியில்லாதவர்களும் இம்மருந்தைச் சாப்பிடுவார்களாயின் போதுமான தாதுவிர்த்தியுண்டாவதிற் றடையில்லை.

சூதகவாயுவென்னும் வியாதியால் பலநாட் கருப்பமின்றி வருந்தும் பெண்கள் ஒருமண்டலம் இம்மருந்தைச் சாப்பிட்டால் கருப்பமடைவார்கள்.

எந்த வியாதியாளர் இம்மருந்தை யெடுத்துக்கொண்டாலும் இச்சா பத்தியமா யிருந்தாற் போதுமானது. பிரமேக ரோகிகளும் நீரிழிவாளரும் சம்போகத்தை மறந்துவிடவேண்டியது. வியாதி தீர்ந்துவிட்டதென்று நன்றாய்த் தெரிந்தபின் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம்.

கவனிப்பு:— மேலே காட்டுப்பூசனிக் கிழங்கென்றது மலையடிவாரங்களிலும் அதனை யடுத்துள்ள காடுகளிலும் விசேஷமாய் "நாமென்றும் பார்த்து வருகிற பூசனிக் கொடிபோன்று" காய்மாத்திரம் தேங்காயளவுகாய்த்து சற்றுக் குறுமையாய்ப் படர்ந்திருக்கும் பூசனிக்கொடியின் கிழங்குதான். இக்கிழங்கை மலசர், படுகர், முதலியவர்கள் சமைத்துச் சாப்பிடுவது வழக்கம், காய் கசந்து சாப்பிட வுதவாது.

பாலரோக சஞ்சீவியெண்ணெய்.

மஞ்சள், கிராம்பு, வெள்ளையேலம், சாதிக்காய், மாச்சக்காய், தான்றிக்காய், கடல்நுரை, திப்பிலி, காசுக்கட்டி, கொட்டைப்பாக்கு, காவிக்கல், சிற்றரத்தை, சுக்கு, சிறுநாவற்பூ, அதிவிடையம், சாதிப்பத்திரி மிளகு, கடுக்காய், அதிமதுரம், இவைவகைக்கு விராகனெடை 2(உ) வெள்ளைப்பூண்டு, பலம் 3 (௩) ஈரவெங்காயம் படி 1 (க) கடைச்சரக்குகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும். பூண்டுகளிரண்டையும் மேல் தோல்நீக்கி, சிறுதுண்டுகளாய் நறுக்கிக்கொள்ளவும். வெள்ளையிண்டின் கொழுந்துசுமார் ஒருதேங்காயளவு இதனை நன்றாயிடித்துக்கொள்ளவும் வறுத்தாற்றிய (முத்தைப்பக்குவமாயூற்றிய) எண்ணெய்படி கஉ (1½) பசுப்பால்படி ஐ (¾) இந்த விளக்கெண்ணெயையும் பாலையும் ஒரு பழக்கின மட்பாண்டத்திலூற்றி மேலே சொன்னசுரக்க திரவியங்களை யெல்லாம் நன்றாய்க் கலந்து பிசைந்திட்டு அடுப்பேற்றி மெழுகுபதமாம்படி காய்ச்சி வடித்துச் சூடு ஆறுமுன் நல்லகஸ்தூரி விராகனெடை இ (½) கோரோசனை விராகனெடை 2 (உ) இவ்விரண்டையுங் கொஞ்சம் வடித்த எண்ணெய் விட்டு நன்றாயரைத்து வழித்துக் கலந்து வைத்துக்கொண்டு கீழே குறிப்பிட்டபடி அவ்வவ்வியாதிகட்கு உபயோகித்து வரவேண்டியது.

உபயோகம்:— 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளின் பிணிகளுக்கே இவ்வெண்ணெய் ஏற்றதாகும்.

ஒரு நேரத்திற்குக் கொடுக்கவேண்டிய அளவு சாதாரணமாய் எங்கள் வீடுகளில் வழங்கி வருகிற சிறிய எண்ணெய்க்கரண்டியில் 1 கரண்டியளவு தான் அல்லது எல்லாக்கடைகளிலும் விற்கப்பட்டுவருகிற தேக்கரண்டியில் 1 கரண்டி.

இரண்டு வருஷத்துக்கு மேற்பட்ட குழந்தைகட்கு ஒரு கரண்டி எண்ணெய்கொடுக்கலாம். இரண்டுவருஷத்திற்குட்பட்டகுழந்தைகட்கு முறையே அரை, கால், அரைக்கால்கரண்டி யளவாக மூன்றுமாதக் குழந்தைவரையுங் கொடுக்கலாம்.

மாந்தம், வலிப்பு, வீச்சு, கணை, பிரளி, உரம், எங்கலிளைப்பு, மூச்சுமுட்டல், சளி, பலவகை வயிற்றுப்போக்கு, உப்புசம், தோஷம் இவை முதலாகிய எல்லாப்பிணிகளுக்கும் உபயோகித்துக் குணங்காணலாம்.

பிறந்ததுமுதல் சளி சளியென்றே கூச்குரலிடுகிற தாய்மார்களின் கஷ்டத்திற்கு இச்சஞ்சீவிதான் ஏற்றபரிகாரம்.

பாலியர்கட்கு பஸ்பம், குளிகை, சூரணம், லேகிய முதலாம் பல மருந்துகளிலும் எண்ணெய்ப் பிரயோகந்தான் மிக மேலானது. இது அநேக வைத்திய நிபுணர்கள் சித்தாந்தம்.

பத்தியம்:— புளி, நெய், தயிர், கரப்பன் பதார்த்தம் இவை கூடாதன. குழந்தைகளைப் பத்தியத்தில் வைப்பதுமன்றிப் பாலூட்டுந் தாய்மார்களும் பத்தியங்காக்க வேண்டியது.

கொடுக்குங்காலம்:— நாட்பட்ட பிணிகளாயிருந்தால் பிணி நீங்கும் வரையும் இடைவிட்டாவது தொடர்ச்சியாயாவது கொடுக்கலாம். நவீன வியாதிகட்கு 1, 2, வேளையாவது 3 நாள் 6 வேளையாவது கொடுக்கலாம். குழந்தைகட்கு மருந்து புகட்டிய நாட்களில் ஸ்நானஞ்செய்விக்கலாகாது. சன்னி, எங்கலிளைப்பு, வலிப்பு, சளி, சுவாசம் இவைகளுக்கு எண்ணெய் புகட்டிய நாட்களில் கண்டஸ்நானங்கூடச் செய்விக்கலாகாது. மற்ற வியாதிகளிற் கண்டஸ்நானந் தேவையானாற் செய்விக்கலாம்.

இஞ்சிச்சூரணம்.

மேல்தோலைச் சீவிக் கழுவிச் சிறுக அரிந்து பசுநெய்விட்டுப் பொன்னிறமாய் வறுத்துப் பொடித்த இஞ்சிச்சூரணம் பலம் ௰ (10) விரை நீக்கிய கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இம்மூன்றின் தோல் ஏலம் சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, ஓமம், வாலுழுவையரிசி, சாதிக்காய், யானைத்திப்பிலி, சீரகம், அதிமதுரம், குரோசாணியோமம், கசகசா, இலவங்கப்பத்திரி, கொத்துமல்லி, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், (விரைநீக்கிச்சேர்க்கவும்.) அமுக்கலாங்கிழங்கு, (இதனைச் சிறுக அரிந்து பசுப்பாலில் வேகவைத்து வெய்யிலிலுலர்த்திக் கூட்டுக) இவ்விருபத்தொருவகைச்சரக்குகளையும் இளவறுப்பாய் வறுத்துப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து இஞ்சிச்சூரணத்தையும் கலந்து சீனிச்சர்க்கரை பலம் ௰ (10) கூட்டி நன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு வெருகடியளவாகக் காலை மாலை சாப்பிட்டு வரவேண்டியது.

தீரும் வியாதிகள்:— மந்தம், அக்கினிமந்தம், உஷ்ணவாயு, பித்தம், பித்தவாயு, சீரணமின்றி அடிக்கடிப் போகும் மலப்போக்கு, பசிபோல் ஓர் வேளை தோன்றி உடனே மந்தித்துப் பொருமல்போல் காணுகிற உப்பிசம் நாவிற்கு ருசிதோன்றுமை நெஞ்செரிவையுண்டாக்கும் ஓர்வகை வாயு அரோசகம் இவை முதலியவைகள் நீங்கும்.

காப்பிக்கஷாயமாவது தேயிலைக்கஷாயமாது உபயோகித்து வருவதால் சிலருக்கு இடைக்கிடையே அன்னத்துவேசமுண்டாகிறது. அப்படிப் பட்டகாலங்களில் இந்தச்சூரணத்தைச் சிலவேளை யெடுத்துக்கொண்டால் குணமாய்விடும். இந்த மருந்திற்கு நல்லபசியை யுண்டாக்குகிற சக்தி யிருக்கிறது. பாலர் முதல் விருத்தர் வரை யாவருக்கும் எந்த நேரத்திலும் கொடுக்கலாம்.

கர்ப்பஸ்திரீகளில் சிலருக்கு வாந்திரோகஞ் சிலமாதவரை யிருக்கப் பார்க்கிறோம். இவர்கள் இம்மருந்தை வெருகடியளவெடுத்துப் பசுநெய்யில் கலந்து சாப்பிட்டு வந்தால் கொஞ்ச நாளில் மெதுவாக நின்று விடுகிறது. சிறுவர்களுக்கும் நெய்கலந்து உபயோகிப்பதுதான் நன்மை. பத்தியமில்லை.

நான் எழுதிவரும் முறைகளிலுள்ள அளவைகளின் விபரம்.

விராகனெடை 1-க்கு 9-பணவெடை.
பலம் ... 1-க்கு 3-ரூபாயெடை.
படி ... 1-என்பது 72-ரூபாய்நிறைப்படி.

இங்ஙனம்.

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியன்.
காட்டம்பட்டி, நெகமம்போஸ்டு,
பொள்ளாச்சித்தாலூகா.

வான்மீகரும் கம்பரும்.

[183-ம்பக்கத்தொடர்ச்சி.]

சீதாதேவியைக் கொண்டுவரும்படி வசிட்டர்கூறவே ஜநகர் சிலபெண்களையேவ அவர்கள் போய்ப்பிராட்டியை அலங்கரித்து அழைத்துவருகிறார்கள். இங்கே கம்பர்கூறும் அலங்காரச்சிறப்புமிகவும் வியக்கற்பாலது.

பெண்கள்புடைசூழ எழுந்தருளிவந்தபிராட்டி மன்னரிருந்தமண்டபத்தே அடைந்தபோது இராமபிரான் தான்கண்ட கன்னியே என்றுதெளிந்து களிகொண்டான். வசிட்டர் இவள் திருமகளேயென்று மகிழ்ந்தார். தசரதர் இன்றுதான் பாக்கியசாலியானேனென்று பரவசமடைந்தார். அம்மணிசமீபித்தபோது ஸ்ரீராமனும், மாதவரும் நீங்க மற்றையோர்கைகள் தலைமேற்குவிந்தன. தாமரைக்கோயிலைவிட்டு அரசமாளிகைபுகுந்த பிராட்டியானவள்,

"மாதவரை முற்கொள வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி சோருந்
தாதையரு கிட்டதவி சிற்றனி யிருந்தாள்"

இந்தச்சந்தர்ப்பம் எவ்வளவு ஆநந்தத்தைவிளைப்பது பாருங்கள்! ஜநகரை "கண்கள்பனிசோருந்தாதை" என்றதனால் இனிமணமேயில்லையென்றிருந்தமையொழிந்து மணம்வாய்த்ததும், மணவாளன் ஸர்வோத்கிருஷ்டகுண காம்பீரியனாயமைந்ததும், சக்கரவர்த்தியாகிய தசரதர் சம்பந்தியாக நேர்ந்ததும், வசிட்டாதி முநிபுங்கவரும் பிறரும்கூடிய அந்தக்கோஷ்டியைப் பார்க்கப்பார்க்க அவருடையவுள்ளத்தே கரைபுரண்டுபெருகிய ஆனந்தப்பெருக்கை விளக்குகின்றன.

வசிட்டர் பிராட்டியின்பேரழகைநோக்கி இந்தப்பெண் கிடைப்பது என்று தெரிந்தால் நமது ரகுவீரன் இந்த வில்

ஒன்றோ சப்தகுலாசலங்களையும் நிர்த்தூளிசெய்யமாட்டானோ? என்று நினைத்தார். (பிராட்டியும் பெருமானும் சந்தித்துக்கொண்டரகசியம் அவர்க்குத்தெரியாது.)

பிராட்டியானவள் கைவளைதிருந்தும் வியாஜமாக ஸ்ரீராமனைக்கடைக்கண்ணாற்பார்த்து அமுதுண்டவரையொத்து உடல்பூரித்தாள்.

மற்றைநாள் மணவினைக்குரியதென்று நிச்சயித்து விட்டு தசரதரும் பிறரும் தத்தம் விடுதிசேர்ந்து ஜநகர் செய்த வுபசாரத்தால இவ்வுடம்போடு சுவர்க்கம் புகுந்து போகமனுபவிப்பவரையொத்தார்கள். அன்றிரவு பிரானும் பிராட்டியும் ஒருதலைக்காமத்தால் வருந்துநிலையை வருணிக்கிறார் கம்பர். பின்னர் ஸ்ரீராமர் திருமணக்கோல வருணனை மிகவினியது. அதில் ஒன்று எடுத்துக்காட்டுவாம்.

"இனிப்பரந் துலகினை யளப்ப தெங்கெனத்
தனித்தனி தடுப்பன போலுஞ் சால்பின
நுனிப்பரு நுண்வினைச் சிலம்பு நோன்கழல்
பனிப்பருந் தாமரைப் பாதம் பற்றவே"

இது திருவடிக்குச்சிலம்பணிந்தமை கூறிற்று. இத்திருவடி முன்னொருகால் விரிந்து உலகெல்லாம் மூடிற்றாதலால் அதனைத் தடுக்கவேண்டித் தடையிட்டதுபோல்வது சிலம்பணியென்க. இப்போது தடையிடவேண்டிய கடப்பாடு என்னையெனின் வாமனாவதாரத்தில் மாவலி கரக நீர்வார்த்தமாத்திரத்தில் திருவடிவிரிந்ததாதலினாலும் இப்போதும் ஜநகர் கரக நீர்வார்க்கவேண்டிய சந்தர்ப்பமாதலாலும், இந்தஅவதாரத்துக்கு வாமனாவதாரம் மிகச்சமீபித்ததானதாலும் பழையஞாபகம் மேலிட்டு நிற்குமோ எனக்கருதியென்க.

மணச்சடங்கு நிறைவேறியபின் முனிவரையும் பிதாவையும் நமஸ்கரித்துத் தாய்மாரைவணங்கும் போது.

"கேகயன் மடமகள் கேழ்கிளர் பாதந்
தாயினு மன்பொடு தாழ்ந்து வணங்கா
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாழ்தொழ லோடும்"

என்பதற் பெற்றதாய்க்கும் முன்பாகவே கைகேயிக்கு நமஸ்காரங்கூறியிருக்கிறார். ஸ்ரீ ராமனிடத்துக் கைகேயிக்குள்ள அன்பும் அவள்பால் ஸ்ரீ ராமன் வைத்திருக்கும் அன்பும் அளவுகடந்தவென்க. கூனியானவள் கைகேயிபாற் சென்று அவள் மனத்தைக்கலக்க எண்ணித் தூங்கிக்கொண்டிருந்த அவளையெழுப்பி 'அடி உனக்குக் கேடுவந்துவிட்டதே' என்றபோது "இராமனைப்பயந்த எற்கு இடருண்டோ". என்று கூறியதனால் இராமனைத்தான் பெற்ற புத்திரனாக எண்ணி அன்புகொண்டுள்ளதன்மை வெளிப்படை. கௌசலையோ பரதனைத்தன்புத்திரனாக அபிமானித்ததாகப்பின் கதைப்போக்கால் வெளிப்படுவது காண்க. இதனைக்கம்பர் குறிப்பிட்டிருப்பது பிந்தியகதைப்போக்குக்கு மிகவுசிதமாகுந் தன்மை உய்த்துணரத்தக்கது. இக்கல்யாண சமயம்போல ஸ்ரீ ராமன் வனம்போகும்போதும் திரும்பிவந்தபோதும் கைகேயிக்கு முதல் நமஸ்காரம் செய்வதாகக்கம்பர் கூறுவதுங்கண்டு களிக்க.

குறிப்பு—: இந்தக்காண்டத்தில் வான்மீகத்திற் கூறப்படாத விஷயமாகிய ராமரும் சீதையும் சந்தித்தல் பெறப்படுகின்றது. இதனைக் கிட்கிந்தா காண்டத்தில்

"முன்னை நாண் முனியொடும் முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீண் மாலையான் வேள்விகா ணியசெல
அன்னமா டுறையுளுக் கருகுநின் றுளையக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய்"

என்பதாலும் அறிக.

பாலகாண்டம் முற்றிற்று.

இங்ஙனம்.
சாமி. சரவணபிள்ளை.

மாதரியல்பு.

பூர்விகத்தில் மிகுந்தநாகரீகத்தால் பெயர்பெற்ற கிரேக்கு தேசமானது செல்வப்பொருளிலும் கல்விப்பொருளிலும் மிகவும் செழிப்புற்றோங்கியிருக்குங்காலையில் சிமோனிடேஸ் என்ற திருநாமம்பூண்ட ஒருபிரபலமான கவியிருந்தார். இவர்திரம்ப முற்றுகைக்கு 400 வருஷத்திற்கு முன்பு மகாகவியாகிய ஈஸ்கிலஸ் காலத்திலிருந்தவர். இவருக்குவசைபாடும் திறமைமிகுதி. இவர்பாடிய அநேகம் கவிகளில் சிலகவிகள் தவிர மற்றவைகள் எல்லாம் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டன. அவைகளில் ஒன்றில் அவர் ஸ்திரிகளின் குணகுணங்களைப் பலவாறாக வகுத்துக்கூறியிருப்பது மிகவிநோதமாயிருக்கும். இதைக் கிரேக்கு பாஷையிலிருந்து ஜோசப் அடிசன் என்னும் பிரபலமான அங்கிலேய வித்துவான் இங்கிலீஷில் மிகவும்சாதுரியமாய் மொழிபெயர்த்திருக்கிறார். அவ்வாங்கிலேய பாஷையிலிருப்பதை யாடோ சிற்சில பழமொழிகளும் சாதுரியச்சொற்களும் சேர்த்து புல்லறிவையுடைய நான் ஏதோ என் சிற்றறிவின் உதவியைக்கொண்டு திராவிடத்தில் மொழிபெயர்த்திருப்பது "புலியைப் பார்த்து நரிசூடுபோட்டுக்கொண்ட" மாதிரிதான். நான் அவ்வளவாகமொழிபெயர்க்கும் விஷயத்தில் தேர்ந்தவனையல்லவென்று எனக்கே நன்றாய்த்தெரிந்தவிஷயமானாலும் என்னைப்பற்றியிருக்கும் பேராவலானது என்னைமொழிபெயர்க்கத்துணியச்செய்தது. ஆகையால் கல்விக்கேள்விகளில் மிக்கத் தேர்ச்சியையுடைய பெரியோர்கள் இதில் ஏதேனும் பிழைகள் காண்பாராயின் அவைகளைப் பொறுப்பதுடன் எனக்குமன்னிப்பும் தருவார்களென்று நம்புகிறேன்.

கடவுள் ஆதியில் ஸ்திரீகளுடைய ஆத்துமாவை நானாவிதப் பொருள்களிலிருந்து அவைகளினின்றும் வித்தியாசமான ரூபத்துடனே சிருஷ்டித்தார். அவையாவன:—

1. ஒருவித ஸ்திரீகளுடைய ஆத்துமாவை பன்றியினுடைய அம்சங்களிலிருந்து உண்டாக்கினார். ஆகையினாலே இவ்

வகுப்பு ஸ்திரீ மிகவும் சீர் கெட்டவளாயும் "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்ற ஔவையார் வசனத்திற்கு முற்றிலும் விரோதமாய்ப் பெருந்தீனிக்காரியாயும் மிகுந்த அசுத்தநேகத்தையுடையவளாயும் "கந்தையானாலும் கசக்கியுடுத்து" என்ற நீதிச்சொல்லை முற்றுமறியாதவளாய் எப்பொழுதும் அழுக்குடுப்பைதரிப்பவளாயும் வீட்டைக்குப்பை மேடு என்று சொல்லும்படி மிகுந்த அசுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பவளாயுமிருப்பாள்.

2-வது வகுப்பு ஸ்திரீகளைக் குள்ளநரியின் சில அம்சங்களினின்றும் படைத்தார். ஆகையாலிவ்வகுப்பு ஸ்திரீ மிகவும் அதிசயிக்கத்தக்க ஊக்கத்தையுடையவளாயும் நன்றோ தீதோவென்று ஒவ்வொரு வஸ்துவையும் கூர்மையாய்ச் சோதிக்கிறவளாயுமிருப்பாள். இவர்களில் சிலர் உத்தமிகளாயும் சிலர் கனிஷ்டைகளாயுமிருப்பார்கள்.

3-வது வகுப்பு ஸ்திரீகள் நாயின் அம்சங்களிலிருந்துண்டாக்கப்பட்டார்கள். இவர்கள் தான் நாம் வாய்ப்பட்டியென்று சொல்லப்பட்டவர்கள். இவர்கள் தாங்கள் எந்தப்பிராணிகளின் அம்சங்களிலிருந்து உண்டாக்கப்பட்டவர்களோ அந்தப் பிராணிகளைப்போல் எப்பொழுதும் குரைத்துக்கொண்டும் எதிரில் காணப்பட்டவர்களைப்பார்த்து உறுமிக்கொண்டும் இடைவிடாமல் சச்சரவு செய்துகொண்டுமிருப்பார்கள்.

4-வது வகுப்பார் மண்ணினின்றும் சிருஷ்டிக்கப்பட்டார்கள். இவர்கள் தான் எப்பொழுதும் சோம்பற்றனத்திலும் அறியாமையிலும் குளிர் காய்வதிலும் பொழுது போக்குகிறவர்கள். சாப்பாட்டைத்தவிர வேறொன்றிலும் கொஞ்சமேனும் உற்சாகமில்லாதவர்கள்.

5-வது வகுப்பார் கடலினின்றும் படைக்கப்பட்டார்கள். இவர்கள் பலவிதகுணங்களையுடையவர்கள். சில சமயங்களில் மிகவும் கொதிப்புள்ளவர்களாயும் வேறு சில சமயங்களில்

சாந்தமாயும் சந்தோஷமாயுமிருப்பார்கள். அறிமுகமில்லாத ஒருவன் அவள் சாந்தமும் சந்தோஷமுமாயிருக்கிற சமயத்தில் பார்த்தால் சற்குணமே உருவெடுத்து வந்திருக்கிறதென்பான். சடுதியில் அவளுடைய பார்வையும் பேச்சும் அவனுடைய அபிப்பிராயத்தை முற்றிலும் மாற்றி விடுகின்றன. அவள் அச்சமயத்தில் ஒரு பெரும்பிடாரியேயொழிய வேறல்லள்.

6-வது வகுப்பினவர்கள் சுமைபெடுக்கும் கழுதையின் சில அம்சங்களிலிருந்து நிர்மாணிக்கப்பட்டார்கள். இவர்கள் இயல்பாகவே மிகச்சோம்பலுள்ளவர்கள். ஆனால் கணவனுடைய அதிகாரத்துக்குட்பட்டு அற்ப உணவைப் புசித்துக்கொண்டு அவனைச்சந்தோஷப்படுத்த எல்லாவேலையும் செய்வார்கள் இப்படியிருப்பினும் அவர்களுக்குக் கலவித்தொழிலில் பிரியமில்லாமல் போகிறதில்லை. அதினால் அவர்கள் ஒருபொழுதும் ஆண்களை வெறுக்கிறதில்லை.

7-வது ஸ்திரீகளை பூனையிலிருந்து படைத்தார். அவர்கள் துக்கமுள்ளவர்களாயும் வெடுவெடுப்புள்ளவர்களாயும் ஊதிதமற்ற குணமுடையவர்களாயும் ஆசையினிடத்தில் வெறுப்புள்ளவர்களாகி புருஷன் இல்வாழ்க்கைக்குரிய காதலுடனே சமீபிக்கும்பொழுது அவன் கண்ணெதிரவே ஓடுவார்கள். இவர்கள் சொற்ப கபடத்திற்கும் மோசத்திற்கும் சோரத்திற்கும் உள்ளாகிறதுமுண்டு.

8-வது உழைப்புள்ளவேலைகள் எதையும் செய்யப் பழக்கப்படாதவும் வழிந்தோடுகிற பிடரிமயிருடனே கூடிய பெட்டைக்குதிரையிலிருந்து எட்டாவதுவகுப்பு ஸ்திரீகளைப் படைத்தார். இவர்கள் "கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருடன்" என்று மதிக்கவேண்டியிருக்கக் கொஞ்சமேனும் புருஷர்களை மதியாமல்

"குஞ்சியழகுங் கொடுந்தானைக்கோட்டழகும்
மஞ்சளழகுமழகல்ல"

என்று நாலடியிற் கூறியிருக்கும் நற்போதனையை நன்

குணராத நிர்மூடிகளாய் மஞ்சள் அரைத்துப் பூசிக்குளிப்பதிலும் அலங்காரமாக உடைகளைத் தரிப்பதிலும் அத்தர் பனிநீர் புழுகு ஜவ்வாது முதலிய பரிமள சுகந்தங்களை மேல் பூசிக்கொள்வதிலும் தங்களுடைய பொழுதை யெல்லாம் போக்கித் தங்களுடைய சிகைகள் சுருட்டையோடு கூடி மிகவும் அலங்காரமாய்த் தோன்றும்படி சம்பங்கி முதலான வாசனைத் தைலங்களைத்தீட்டிச் சீவிமுடித்து அதின்மேல் ஜாதி சம்பகம், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி முதலிய மலர் மாலைகளைச் சூடிப் பார்ப்பவர்களுடைய கண்களைப் பறிக்கும்படி செய்வார்கள். இப்படிப்பட்ட பெண் இம்மாதிரியான அலங்காரத்தை மிகவும் விருமபுகிற ஒரு இராஜ குமாரனுயிருந்தாலொழியக் கொண்ட புருஷனுக்குக்கும்மட்டியொத்த கசப்புள்ளவர்களாயும் அயற் புருடருக்கு அமிர்தம்போல்பவளாயுங்காணப்படுவாள்.

9. வாலில்லா வானரத்திலிருந்து 9-வது வகுப்பைச் சிருஷ்டித்தார். இவர்கள் அழகென்பது அற அற்றவர்களாகி அவலக்ஷணத்தோடு அவகுணமும் சேர்ந்தவர்கள். மற்றவர்களிடத்தில் தங்களிடத்தில் உள்ள குணத்தைப்போல் காணுவார்களாகில் அவைகளை எப்படியாவது தேடிப்பிடித்துப் பகடி பண்ண முயல்வார்கள்.

10. கடைசியாகிய 10-வது வகுப்பு ஸ்திரீகளைத்தேவியினின்றும் படைத்தார். இவ்வகுப்பைச்சேர்ந்த புண்ணியவதியை மனைவியாக அடைகிறவர் பாக்கியம் பெற்றிருக்க வேண்டும். அவள் கொஞ்சமேனும் களங்கமில்லாதவள். அவள் குடும்பத்தை வெகு சீராய் நடத்தி வருவதினல் அக்குடும்பம் செழித்துச் சிறப்புற்று மேன்மேலும் விருத்தியடைந்து வருகின்றது. தான் புருஷனை மிகவும் நேசிக்க அவனும் தன்னை நேசிக்கப் பெற்றவளாய் அழகும் சற்குணத் தோடுங்கூடிய குழந்தைகளைப் பெறுவதுமன்றி தன்னைப் போலொத்த பெண்களுக்குள் நட்சத்திரங்களின் மத்தியிலுள்ள சந்திரனைப்போலப் பிரகாசிப்பாள்.

அவள் எல்லாவிதக் கிருபா கடாக்ஷத் தோடும் கூடியவள். அவள் ஒரு பொழுதும் சீர் குலைந்த ஸ்திரீகளுக்கு மத்தியில் உட்காரவும் மாட்டாள். அல்லது அவர்களுடன் கூடிக்கலந்து உல்லாசமாய்ச் சம்பாஷித்துக் காலத்தை வீணய்க் கழிக்கிறதுமில்லை. அவள் பதிவிரதா தருமத்தில் அருந்ததி. ஞானத்தில் சரஸ்வதியே. கடவுள் ஒருமனிதனுக்குக் கொடுக்கக் கூடிய சற்குணமுள்ள மனைவி இவளையும் விட வேறு ஒருத்தி உண்டோ?

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

ஒருவன் பெறும் பேற்றுக்குள் கற்புள்ள மனைவியைப் பார்க்கிலும் எவை யிருக்கின்றன.

எஸ். சாமிநாதையர்.

I

ஈசுவரதத்வமும் புலனறிவு சாஸ்திரமும்.

"பாலின்கண் நெய்போல் பரந்தெங்கும் நிற்குமே
நூலின் கணீசனுறைந்து" என்ற

ஔவையாரது அருமைக்குறளின்படி அந்தர்யாமியாகிய பகவான் பாலின்கண்நெய்போல் சாஸ்திரங்களில் நுழைந்து பரவியிருக்கின்றனர். அதாவது சாஸ்திர ஆராய்ச்சிசெய்து தத்துவங்களையறிந்தாலொழிய ஈசுவரசொரூபத்தையறிய வேறுமார்க்கமில்லை. சாஸ்திரங்களிலும் பலவிதங்களுண்டு. அவைகளில் ஒவ்வொன்றும் ஒருகருவிபோல்வது. புலனறிவு சம்பந்தப்பட்ட சாஸ்திரங்கள் நம்தேசத்தில் அநேகமாய்ப்பரவவில்லை யென்றும் அதன் ஆராய்ச்சி இல்லையென்றும் சொல்லலாம். கடோபநிஷதத்தில் "மனிதனுடைய குலங்களை வெளிநோக்காய்ப்பிரம்மா சிருஷ்டித்த பிரயோஜனம் விஷயப்பிரவாகங்களில் அவர்கள் மனத்தைமூழ்கச்செய்து அவைகளிலேஉழன்றுகொண்டிருக்கிறதற்காகவாம்" என்று கூறப்பட்டிருக்கிறது. இது பொது

வாகச்சாமானியஜனங்களின்சுவபாவமாயிருக்கிறது. ஏகதேசத்தில்கோடியில் ஒருவன் மனத்தைப்புலன்களின் வழியேவிடாமல் தடுத்துஉள்நோக்கி ஆத்மாவாகிய தன்னையறியும் திறனுடையிருப்பானோ இல்லையோ என்று சொல்லும் வண்ணம் இக்காலத்தில் உலகம் நடைபெறுகிறது. ஆயினும் புலனறிவுகளாலேயே விஷயசம்பந்தங்கள் ஏற்படுக்காமிகளாக உலகசுகங்களை இச்சிக்காமல் புலனறிவினால் அறியும் அநுபவத்தைக்கொண்டு ஏகனாயிருக்கின்ற ஈசுவரனே பலவாறாக நாமரூபங்கள் அடைந்து இருக்கிறான் என்ற தத்துவத்தைப்புலனறிவு சாஸ்திரங்களாலேயே அறியக்கூடும். இக்கருத்தினையே மாணிக்கவாசக சுவாமிகள் அடியிற் கூறப்பட்ட திருச்சதகப்பாட்டில் விளக்கியிருக்கின்றனர்:—

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே."

இக்கருத்துக்களையுடையதான புலனறிவுசாஸ்திரங்கள் ஒவ்வொன்றிலும் அது அது ஒரு ஏகத்தன்மையை (Unify) நோக்கிப்பயில்கின்றது. உதாரணமாகப்பூதபௌதிக சாஸ்திரத்தில் (Physical sceince) பலசக்திகளின் வேற்றுமைகளெல்லாம் (Forms of force) ஒருசக்தியின் மாறுபாடு என்ற சித்தாந்தம் கைக்கொள்ளப்பட்டிருக்கின்றது. உயிர்சாஸ்திரமாகிய (Biology) சராசரங்களின் ஒரேபிராணன், அதன்மூலகோசமாகிய ஜீவபரம அணு (Protoplasm) என்ற அவயவத்தின் வெவ்வேறான வேறுபாட்டின் காரியங்களென்று சித்தாந்தமாகின்றது. ஆகவே புலனறிவுசம்பந்தப்பட்டசாஸ்திரங்களாலும் ஈசுவரதத்துவத்தையறிகிறதற்கு வழியேற்படுகின்றது.

II
சாஸ்திர மொழிபெயர்ப்பும் சங்கேதமொழிகளும்.

ஆங்கில பாஷையிலிருக்கின்ற சாஸ்திரங்கள் முதலியவைகளைத் தமிழில் மொழிபெயர்க்குங்கால் சங்கேதமொழிகள் ஒவ்வொன்றுக்கும் சரியான பிரதிபதங்கள் தமிழ்ப்பாஷையில் கிடைப்பதரிது. அதனால் பல தமிழ்மொழிகளைக்கொண்டு ஒரு சங்கேத மொழிக்குக் கற்பனைசெய்யும் பக்ஷத்தில் அனேகசமயங்களில் முடியாமற்போவதுந்தவிர விபரீதபாவங்கள் உண்டாவதற்கும் இடமேற்படுகின்றது. இதுநிற்க. ஐரோப்பாதேசம் முழுவதிலும் பிரெஞ்சு, ஜர்மன், இங்கிலீஷ்முதலிய பற்பலபாஷைகள் வழங்கினாலும் சாஸ்திர சங்கேதமொழிகள் எல்லாப்பாஷைகளுக்குந் தலைமைப் பாஷைகளாய் விளங்கும் லத்தின், கிரீக்பாஷைகளினின்றே எடுத்தாளப்

படுகின்றன. ஆனால் அவைகளின் விஷயங்கள் அவைகளின் சம்பந்தா சம்பந்தங்கள் தர்மங்கள் அந்தந்தத்தேச பாஷைகளில் நடைபெறுகின்றன. இவ்விதம் சங்கேத மொழிகளை எல்லாத்தேசங்களுக்கும் எல்லாப்பாஷைகளுக்கும் ஒரே மாதிரியாய் வைத்துக்கொள்வதால் ஒரு பெரும்பயனுண்டு. அஃதென்னவெனில் உலகத்தில் சாஸ்திரஞான அபிவிருத்தியின் நோக்கத்தையுடைய வித்வத்சமூகத்தில் சங்கேதமொழிகள் வேறுபாடின்றி நடைபெறும்பக்ஷத்தில் பாஷாவேற்றுமையால் வரும் விபரீத குற்றங்கள் நேரிடா. இதுபற்றியே நவீன பாஷைகளாகிய பங்காளி, ஹிந்தி பாஷைகள் ஆங்கிலபாஷைகளிலிருந்து தத்தம்பாஷையில் மொழிபெயர்க்கும் நூல்களில் சங்கேதமொழிகளை எவ்வித வேறுபாடுமின்றி அவ்வவ்வாறே உபயோகிக்கின்றன. இதனை நம் தமிழ்நாட்டாரும் நன்குணர்ந்து தமிழ்ப்பாஷையிலும் இவ்வழக்கத்தையனுசரித்து நடத்தல் நலம். தமிழ்ப்பாஷையில் எவ்வளவோ திசைச்சொற்களும் சாஸ்திரசம்பந்த வடமொழிப்பதங்களும் வழங்கி வருகின்றன. ஆகையால் காலத்துக்குத்தக்கவண்ணம் பாஷையும் மாறி மாறி வரவேண்டுவது இயல்பே.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்ற நன்னூல் சூத்திரத்தையும் காண்க. சங்கேத மொழிகளெல்லாம் காரண இடுகுறிகளே.

ஒரு சிறு திருஷ்டாந்தத்தால் சங்கேத மொழி மேற்கூறிய வண்ணம் இருத்தலின் பயனை மதுரை நகர் வாசிகளாகிய நாம் எளிதில் அறியலாம். நம் வீட்டு வாசல்களில் போடும் இறப்புத்தாழ்வாரத்துக்கு *"கவர்னர் தட்டி" என்ற பெயர் வழங்குவதை யாவரும் அறியலாம். அவ்விதமான வழக்கச் சொற்களை உபயோகியாமல் "இறப்புத்தாழ்வாரம்" என்று எந்த இடத்திலும் போடக்கூடிய தாழ்வாரத்துக்கு உபயோகப்படக்கூடிய பொது மொழிகளை உபயோகித்ததால் இவ்வூர் முனிசிபாலிடியில்ஒரு பெருஞ் சங்கடம் நேர்ந்து விசாரணைக்கும் வரநேரிட்டது ஆகையால் எல்லோரும் சந்தேகமின்றி எளிதில் அறியக்கூடிய சங்கேதமொழிகளை உபயோகித்தே மொழி பெயர்ப்புச் செய்தல் நலம்........

* [கவர்னர் தட்டி:—இம்மதுரை மாநகருக்கு நம் இராஜதானிக் கவர்னராயிருந்த ஸர். சார்லஸ். டிரெவிலின் என்ற பிரபு பல வருஷங்களுக்கு முன்விஜயஞ்செய்தகாலத்தில் இராஜவீதிகளிலுள்ள வீட்டின் வாசற்படிக்கடுத்த இடங்களில் அலங்காரார்த்தமாகத் தட்டிப்பந்தல் போட்டுக்கொள்ளும் வண்ணம் அக்கால முனிசிபல் அதிகாரிகள் உத்தரவளித்தார்கள்: அன்றுமுதல் இக்காரண இடுகுறிப்பெயர் வழங்கத்தலைப்பட்டது.]

ப. நாராயண அய்யர்.

வாகச்சாமானியஜனங்களின்சுவபாவமாயிருக்கிறது. ஏகதேசத்தில்கோடியில் ஒருவன் மனத்தைப்புலன்களின் வழியேவிடாமல் தடுத்துஉள்நோக்கி ஆத்மாவாகிய தன்னையறியும் தீரனாகியிருப்பானோ இல்லையோ என்று சொல்லும் வண்ணம் இக்காலத்தில் உலகம் நடைபெறுகிறது. ஆயினும் புலனறிவுகளாலேயே விஷயசம்பந்தங்கள் ஏற்பட்டுக்காமிகளாக உலகசுகங்களை இச்சிக்காமல் புலனறிவினால் அறியும் அநுபவத்தைக்கொண்டு ஏகனாயிருக்கின்ற ஈசுவரனே பலவாறாக நாமரூபங்கள் அடைந்து இருக்கிறான் என்ற தத்துவத்தைப்புலனறிவு சாஸ்திரங்களாலேயே அறியக்கூடும். இக்கருத்தினையே மாணிக்கவாசக சுவாமிகள் அடியிற் கூறப்பட்ட திருச்சதகப்பாட்டில் விளக்கியிருக்கின்றனர்:—

“ வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.”

இக்கருத்துக்களையுடையதான புலனறிவுசாஸ்திரங்கள் ஒவ்வொன்றிலும் அது அது ஒரு ஏகத்தன்மையை (Unity) நோக்கிப்பயில்கின்றது. உதாரணமாகப்பூதபௌதிக சாஸ்திரத்தில் (Physical sceince) பலசக்திகளின் வேற்றுமைகளெல்லாம் (Forms of force) ஒருசக்தியின் மாறுபாடு என்ற சித்தாந்தம் கைக்கொள்ளப்பட்டிருக்கின்றது. உயிர்சாஸ்திரமாகிய (Biology) சராசரங்களின் ஒரேபிராணன், அதன்மூலகோசமாகிய ஜீவபரமஅணு (Protoplasm) என்ற அவயவத்தின் வெவ்வேறான வேறுபாட்டின் காரியங்களென்று சித்தாந்தமாகின்றது. ஆகவே புலனறிவுசம்பந்தப்பட்டசாஸ்திரங்களாலும் ஈசுவரதத்துவத்தையறிகிறதற்கு வழியேற்படுகின்றது.

II

சாஸ்திர மொழிபெயர்ப்பும் சங்கேதமொழிகளும்.

ஆங்கில பாஷையிலிருக்கின்ற சாஸ்திரங்கள் முதலியவைகளைத் தமிழில் மொழிபெயர்க்குங்கால் சங்கேதமொழிகள் ஒவ்வொன்றுக்கும் சரியான பிரதிபதங்கள் தமிழ்ப்பாஷையில் கிடைப்பதரிது. அதனால் பல தமிழ்மொழிகளைக்கொண்டு ஒரு சங்கேத மொழிக்குக் கற்பனைசெய்யும் பக்ஷத்தில் அனேகசமயங்களில் முடியாமற்போவதுந்தவிர விபரீதபாவங்கள் உண்டாவதற்கும் இடமேற்படுகின்றது. இதுநிற்க. ஐரோப்பாதேசம் முழுவதிலும் பிரெஞ்சு, ஜர்மன், இங்கிலீஷ்முதலிய பற்பலபாஷைகள் வழங்கினும் சாஸ்திர சங்கேதமொழிகள் எல்லாப்பாஷைகளுக்குந் தலைமைப் பாஷைகளாய் விளங்கும் லத்தீன், கிரீக்பாஷைகளினின்றே எடுத்தாளப்

படுகின்றன. ஆனால் அவைகளின் விஷயங்கள் அவைகளின் சம்பந்தா சம்பந்தங்கள் தர்மங்கள் அந்தந்ததேச பாஷைகளில் நடைபெறுகின்றன. இவ்விதம் சங்கேத மொழிகளை எல்லாத்தேசங்களுக்கும் எல்லாப்பாஷைகளுக்கும் ஒரே மாதிரியாய் வைத்துக்கொள்வதால் ஒரு பெரும்பயனுண்டு. அஃதென்னவெனில் உலகத்தில் சாஸ்திரஞான அபிவிருத்தியின் நோக்கத்தையுடைய வித்வத்சமூகத்தில் சங்கேதமொழிகள் வேறுபாடின்றி நடைபெறும்பக்ஷத்தில் பாஷாவேற்றுமையால் வரும் விபரீத குற்றங்கள் நேரிடா. இதுபற்றியே நவீன பாஷைகளாகிய பங்காளி, ஹிந்தி பாஷைகள் ஆங்கிலபாஷைகளிலிருந்து தத்தம்பாஷையில் மொழிபெயர்க்கும் நூல்களில் சங்கேதமொழிகளை எவ்வித வேறுபாடுமின்றி அவ்வவ்வாறே உபயோகிக்கின்றன. இதனை நம் தமிழ்நாட்டாரும் நன்குணர்ந்து தமிழ்ப்பாஷையிலும் இவ்வழக்கத்தையனுசரித்து நடத்தல் நலம். தமிழ்ப்பாஷையில் எவ்வளவோ திசைச்சொற்களும் சாஸ்திரசம்பந்த வடமொழிப்பதங்களும் வழங்கி வருகின்றன. ஆகையால் காலத்துக்குத்தக்கவண்ணம் பாஷையும் மாறி மாறி வரவேண்டுவது இயல்பே.

“ பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே”

என்ற நன்னூல் சூத்திரத்தையும் காண்க. சங்கேத மொழிகளெல்லாம் காரண இடுகுறிகளே.

ஒரு சிறு திருஷ்டாந்தத்தால் சங்கேத மொழி மேற்கூறிய வண்ணம் இருத்தலின் பயனை மதுரை நகர் வாசிகளாகிய நாம் எளிதில் அறியலாம். நம் வீட்டு வாசல்களில் போடும் ஏற்றுத்தாழ்வாரத்துக்கு *“கவர்னர் தட்டி” என்ற பெயர் வழங்குவதை யாவரும் அறியலாம். அவ்விதமான வழக்கச் சொற்களை உபயோகியாமல் “ஏற்றுத்தாழ்வாரம்” என்று எந்த இடத்திலும் போடக்கூடிய தாழ்வாரத்துக்கு உபயோகப்படக்கூடிய பொது மொழிகளை உபயோகித்ததால் இவ்வூர் முனிசிபாலிடியில்ஒரு பெருஞ் சங்கடம் நேர்ந்து விசாரணைக்கும் வரநேரிட்டது ஆகையால் எல்லோரும் சந்தேகமின்றி எளிதில் அறியக்கூடிய சங்கேதமொழிகளை உபயோகித்தே மொழி பெயர்ப்புச் செய்தல் நலம்......

* [கவர்னர் தட்டி:—இம்மதுரை மாநகருக்கு நம் இராஜதானிக் கவர்னராயிருந்த ஸர். சார்லஸ். டிரெவிலின் என்ற பிரபு பல வருஷங்களுக்கு முன்விஜயஞ்செய்தகாலத்தில் இராஜவீதிகளிலுள்ள வீட்டின் வாசற்படிக்கடுத்த இடங்களில் அலங்காரார்த்தமாகத் தட்டிப்பந்தல் போட்டுக்கொள்ளும் வண்ணம் அக்கால முனிசிபல் அதிகாரிகள் உத்தரவளித்தார்கள்: அன்றுமுதல் இக்காரண இடுகுறிப்பெயர் வழங்கத்தலைப்பட்டது.]

ப. நாராயண அய்யர்.

சமாசாரக்கொத்து.

இவ்வருஷம் பொருட்காட்சி சாலை மைசூர் மகாராஜா அவர்கள் திறப்பார்.

தூற்றுக்குடிக்கு நல்ல தண்ணீர் ஏற்படுத்தும் விஷயமாய் கவர்ன்மெண்டார் 1,17,780 ரூ கொடுப்பதாகச் சம்மதித்திருக்கிறார்கள். இது அவ்வூருக்கு ஒருநல்ல காலமே.

நாளது மீ 20உ காலை 3-மணிக்கு திருவனந்தபுரம் கடைவீதியில் தீப்பிடித்து 4 கடைகள் முற்றிலும் எரிந்து விட்டன. போலீஸ்காரரும் இராணுவவீரர்களும் வந்து உதவிசெய்து 6-மணிக்குள் முழுவதும் அணைத்து விட்டார்கள். நஷ்டம்இவ்வளவென்பது துலங்கவில்லை.

நம் சென்னைக் கவரன்மெண்டார் தங்களுக்கு வேண்டிய பல வகைக்கடிதங்களை இந்தியன் மில்லுகளிலிருந்தே வாங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்குமுன் இவ்வியாபாரம் இந்தியா ஆபீசில் டைரக்டர் ஜெனரல் மூலமாக வாங்கிவந்தனர். அதை நிறுத்தி இவ்வழக்கம் அனுசரிக்கத் தொடங்கியது இலாபகரமே.

பங்காளி வித்தியார்த்தி ஒருவர் ஜப்பானுக்குப் போய் சோப்புச் செய்கிற விதம் கற்றுக்கொண்டு இப்பொழுது அக்கைத்தொழில் தம் சுதேசத்தில் நடத்திவர ஏற்பாடு செய்திருக்கிறார் என்று கேள்வியுற மிகவும் சந்தோஷிக்கின்றோம். இவ்வித கைத்தொழில்கள் அபிவிருத்தியானால் மட்டுமே நம் தேசத்தின் வறுமை தொலையும்.

வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பாலாற்றில் அதிக மழையால் பெரிய பிரவாகம் வந்து ஏரி குளங்களை யெல்லாம் உடைத்து புலங்கள் கிராமங்களை யெல்லாம் முழுகச்செய்து குடியானவர்களை யெல்லாம் மனைவிட்டு ஓடிப்பிழைக்கும்படி செய்து வெகு கேட்டையுண்டாக்கிவிட்டது. வெகு ஜனங்கள் மாண்டும் போனார்களாம். 1868-ம் வருஷம் முதல் இதுவரை இந்தமாதிரியான மழை அங்கே பெய்யவேயில்லையாம். பெரிய ஏரிகளில் 6-ம், சிற்றேரிகளில் 10-ம் உடைந்துபோயினவாம். சர்க்காருக்கு வெகு நஷ்டம். அக்குளங்களையும் மற்றைய உடைப்புகளையும் மராமத்துச்செய்ய குறைந்தபக்ஷம் 5 அல்லது 6 லட்சரூபா பிடிக்குமாம். ஐயோபாவம்! மானம்பார்த்த சீமைக்கு இவ்வளவு கேடு வந்தால் குடிகள் என்ன செய்வார்கள். குடிகளது குறையைக் கவனித்துக் கூடிய சீக்கிரம் கவர்ன்மெண்டார் அவைகளை நீக்க முயல்வார்களென்று நம்புகிறோம்.

ஒரு பெருங்கோடை:—ஒரு ஸ்திரீ ரத்தினம் பைபில் சங்கத்துக்குப் பதினாயிரம் பவுன் தானம் செய்திருப்பதைக் கேட்டு ஆனந்தமடைகிறோம். அச்சீமாட்டி தன் பெயரை பயிரங்கப்படுத்தவில்லை. பக்தியின் பேரில் கொடுப்பவர் இவ்விதமே கொடுப்பது யாவரும் அறிந்த விஷயம். நம் நாட்டில் எத்தனையோ கைம்பெண்கள் ஏராளமான சொத்துக்களை வைத்துக்கொண்டு அவைகளைக் காப்பாற்றவும் வகையறியாமல் பங்காளிகளும் தாயாதிகளும் சூறையிட்டுக்கொண்டுபோக விடுகிறார்கள். ஏன் அவ்வித சொத்துக்களை அவர்கள் மேற்கூறிய கம்பீர குணமுடைய சீமாட்டி செய்த வண்ணம்பெரும் பாடசாலைகளுக்கும், வைத்திய சாலைகளுக்கும், சங்கங்களுக்கும், புத்தக சாலைகளுக்கும் தானம் செய்து தேசத்து நன்மையை அபிவிருத்தி செய்தல் கூடாது. நம்மவர் முற்காலத்தில் இவ்வித தனங்களைக் கோவிலுக்கும், குளத்துக்கும், மடத்துக்கும் தடத்துக்கும், சத்திரத்துக்கும், சாவடிக்கும் தானம்செய்து 32 தர்மங்களும் குறைவற நடத்தி வந்தனர். ஆதிகாலம் தொடங்கி நம்மவர் பிறதேசத்தாருக்கு எவ்வித தர்மத்துக்கும் வழி காட்டியிருக்

தனர். அந்தோ அவ்வித ஒழுக்கங்களெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போயினவே நம் தேசம் ஏழைத் தேசமாகையால் அவ்வித தர்மங்களில்லாவிடில் ஏழைகள்பாடு பெரும் பாடே. இதனை நம் நாட்டார் கவனித்துத் தம்மைச் சேர்ந்தவர்களுக்குஇவ்வித தர்மம் செய்யும்படி நற்புத்தி புகட்டுவார்களாக. "அறஞ்செய விரும்பு" "ஐயமிட்டுண்" என்று சொல்வது நம் நாடே.

எச்சரிப்பு.—மதுரை புதுத்தெருவில் கவர்ன்மெண்டாரால் மெடலபெற்ற கே. ஆர். ரங்கநாதம் பிரதர்ஸ் அவர்கள் ரப்பர் ஸ்டாம்புகள் மிகவும் நேர்த்தியாகவும் சுலபமாகவும் செய்து கொடுப்பதுடன் நயமான புளு பிளாக் இங்கிப்பௌடர்கள் தயார் செய்து கொடுக்கிறார்கள். இவர்கள் இங்கிப் பௌடருக்கு மீனாக்ஷி இங்கிப் பாக்டரி என்று பெயருமிட்டிருக்கிறார்கள். இந்த இங்கியைப் பல டாக்டர்கள் பரீக்ஷித்து நல்ல சர்ட்டிபிகேட்டுக் கொடுத்திருக்கிறார்கள். நாமும் பலதரம் வாங்கிப் பார்த்துத் திருப்தியடைந்துள்ளோம். இவர்கள் எந்த வேலையையும் மிகத்திறமையாகச் செய்து நல்லபேர் பெறவேண்டுமென்றதே விருப்பமாக வுடையவர்கள். நல்ல உழைப்பாளிகள். இப்படியிருக்க இப்போது மேல் பார்வைக்கு இவர்கள் இங்கிப் பௌடர்ப் பொட்டணம் போலவே கட்டி மடக்கி வேறு சிலரும் தயார் செய்து கடைகளில் விற்பனைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் நாம் வாங்கிப் பார்த்தோம். அத்தனை சிறந்ததாகக் காணப்படவில்லை. நம் சுதேசிகளுக்குள் இந்தக்கெட்ட வழக்கம் மிக உண்டு. ஒருவர் ஒருதொழிற் செய்து பெரும் லாபமும் எடுத்தால் பிறரும் அதே தொழிலைப் பற்றித் தாமுங் கெட்டுப் பிறர்க்கும் கேடு செய்வதேதான். இது மிகவும் கேவலமானதே. ஒவ்வொருவரும் பிறர்க்குக் கேடு செய்யாது தாம் தாம் உரிய முயற்சிகளைச் செய்தால் நலமுண்டாகுமன்றோ. "தாங்கெடினுந் தக்கார்கேடெண்ணற்க" என்ற முதுமொழியைக் கூறி நிறுத்துகிறோம்.

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF [illegible] REGISTERED 6-JAN 1905 MADRAS

உ

குமரன் துணை.

விவேகபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

மூன்றுவது வால்யம்.

பத்திராதிபர். { எஸ். சாமிநாதையர். / எம். ஆர். கந்தசாமிக்கவிராயர்.

புரொப்ரைட்டர் எம். ஆர். கந்தசாமிக்கவிராயர்.

வருஷ சந்தா ரூபா இரண்டுதான்.

1904.

ஸ்ரீ மீனும்பிகை பிரஸ், மதுரை.

விவேகபாநு 3-வது வால்யத்தின் பொருளடக்கம்.

விஷயங்கள்.	விஷயதானம்செய்தோர்.	பக்கம்.
அட்டமிப்பிரதக்ஷணவைபவம்.	சுப்பிரமணியபிள்ளையவர்கள்	463.
அநுதாபம் ...	...பத்திராதிபர்	396.
அன்பு...	...வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள்	154.
ஆலயம்	...பொ. மு. முத்தையபிள்ளையவர்கள்	163.
இன்னிசை இருநூறு...	...அ. ஷண்முகம்பிள்ளையவர்கள்	69, 114, 153, 193, 222, 266, 303, 386, 418, 455.
ஈகை வெண்பா உண்மை	...வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள்	18, 183.
உருத்திராக்ஷப்பூனைகள்	...கே. ஆர் எம். அவர்கள்	211.
ஹெலெனாம்பாள் ...	...தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் பீ.எ.	12, 65, 99, 131, 177, 292, 348, 377, 430, 475.
ஓஷதிசாஸ்திரம் ...	...ப. நாராயணையரவர்கள் பீ. ஏ. பீ. எல்.	44, 81, 466.
கல்வெட்டுசாசனம் ...	...பத்திராதிபர்	275.
கலிவெண்பா ...	...பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள்	389.
குடியின்கேடு ...	...நன்மைநாடுவோன்	73.
ஜகத்ஜோதி ...	...எஸ். சாமிநாதையர்	76, 85, 124, 203, 353, 405.
சமாசாரக்கொத்து ...	...பத்திராதிபர்	37, 159, 197, 236, 276, 315. 356, 394, 478.
சாமிசரவணபிள்ளை, சேது பதிமஹாராஜாஅவர்கள்	பத்திராதிபர்	32.
சித்திரகவி	அ. குமாரசுவாமிபிள்ளையவர்கள்	89.
சிவசரித்திர உபந்நியாசம்	சு. சாமியய்யாதேசிகரவர்கள்	244.
சூது	...முருகவேள்	30.
செந்துருக்கை ...	...ஜி. ராஜகோபாலநாயுடுகாரு	453.
சேரிடமறிந்துசேர்...	...பத்திராதிபர்	201.
சைவசித்தாந்தம் ...	...சுப்பிரமணியபிள்ளையவர்கள்	23, 49, 151, 188, 217, 269, 285, 327, 391, 408.

விஷயங்கள்.	விஷயதானம் செய்தோர்.	பக்கம்.
சோதனைக்கிருஷித்தொழில்	...பத்திராதிபர்	312.
சோதிடம் ...	...ஆறுமுகப்புலவரவர்கள்	27.
தர்மிலோபிசம்வாதம்	...சே. கு. விசாகப்பெருமாள் முதலியாரவர்கள்	110, 147. 185, 215, 246, 331, 416.
தமிழ்ச்சங்கத்தனிக்கூட்டம்	...பத்திராதிபர்	3.
தனிமையிரக்கம்	...ஸி. சுப்பிரமணியபாரதிகள்	273
தேனும்தேனீயும்	...எம். கோபாலகிருஷ்ணையரவர்கள்	372, 413, 459.
தோப்புப்பாதுகாப்பு	...ஜி. ராஜகோபாலநாயுடுகாரு	370.
நமதுபத்திரிகை	...பத்திராதிபர்	1.
நற்பவளம் ...	...எம். கோபாலகிருஷ்ணையரவர்கள்	253, 306.
நன்கொடையாளர்	...பத்திராதிபர்	438.
நிலவளத்திற்குஅவசிய மான இந்திரியவஸ்து	வி. கே. சுப்பராவுஅவர்கள், பீ. ஏ.	178.
நீதிமொழி ...	...திருவண்ணாதக்கவிராயரவர்கள்	19.
பஞ்சவிம்ஸதிவிக்கிரகம்	...அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்	241.
பஞ்சாக்கரம்	...பொ. மு. முத்தையபிள்ளையவர்கள்	336.
படிற்றொழுக்கம் ...	...முருகவேள்	288.
பத்திரிசாபிமானிகட்கு விஞ்ஞாபனம்	பத்திராதிபர்	249.
பத்திரிகைவரவு ...	...ஷை.	317.
பரிகசிக்கும்பறவை ...	...எம். கோபாலகிருஷ்ணையரவர்கள்	208.
புத்தகக்குறிப்பு ...	...பத்திராதிபர்	35, 156, 196, 355, 393, 433, 480.
பொருட்காட்சியும்காங்கிரசும்	...பத்திராதிபர்	5.
போஸ்டல்சேவிங்ஸ்பாங்கி	...ஷை	444.
மண்ணுண்ணல் ...	...விஸ்வேஸ்வரன்அவர்கள்	445.
மதுரைத்தமிழ்ச்சங்கத்து மூன்றாம்வருஷோற்சவம்	பத்திராதிபர்	161,

விஷயங்கள்.	விஷயதானம் செய்தோர்.	பக்கம்.
மனஏகாக்கிரம்	வள்ளிநாயகசுவாமிகள்	324, 366, 423, 449.
மனிதனது எழுகூறு	...தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் பீ. ஏ.	15, 58, 105, 134, 169, 229, 263, 298, 341, 383, 427, 469.
மனோன்மணிபூசைக்கு மது மாம்ஸம் அவசியமா	ஷை	141.
மானிடர் எழுபருவம்...	...எம். கோபாலகிருஷ்ணையரவர்கள்	334.
மேனாட்டுக்கலைஞானம்	...தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் பீ. ஏ.	9, 53, 93, 129, 172, 225, 259, 345, 473.
வாதவூரடிகள் மகோற்சவ வைபவம்	சுப்பிரமணியபிள்ளையவர்கள்	274.
வித்தியாவிஷயமாய்க்கவர்ண்மெண்டாரது தீர்மானங்கள்	பத்திராதிபர்	121.
வித்தை	...ஷை	41, 281, 321, 361, 401, 441.
வைத்தியம்	...வி. சா. ஐயன்பிள்ளையவர்கள்	39, 119, 199, 239, 279, 319, 359, 399, 440.

இங்கிதமாலையுரை:—திருவருட்பிரகாசவள்ளலார் என்னும் ஸ்ரீமந் இராமலிங்கசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாவின் இரண்டாந் திருமுறையின் ஒருபகுதியாகிய இங்கிதமாலை என்பது தாருகாவனத்து முனிவர் மகளிர்கள் சிவபிரான் பிக்ஷாடனமூர்த்தியாகவந்தபோது மயங்கி வினவியவினாக்களும் அவற்றிற்கு இருபொருள் பயப்பச் சிவபிரான் அளித்தவிடையும் அமைந்தவாறு விளக்கிச் செல்வது. நன்கு கற்றவர்களுக்கன்றிப் பொருள் விளங்காதது. மிகவும் விம்மிதமுறச் செய்வது. 165 கவிகளால் அமைந்தது. இதற்கு மிகச் சிறந்த உரையொன்றெழுதிச் சுத்தப்பிரதியாக அச்சிட்டுபகரித்த சென்னைப் பச்சையப்பன் காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ க. வ. திருவேங்கடநாயுடு அவர்கட்கு யாம் மிகவும் நன்றிகூறுகின்றோம். மிகக்கடினமான இந்நூலுக்கு இவர் உரை மிகச்சிறந்து தோன்றுகின்றது. இதன்விலை அணா 10.

சென்னை கலாரத்நம்பிரஸிலும் மதுரை புதுமண்டபம் புஸ்தகக்கடை இராம. குருசாமிக்கோனாரிடத்தும் விலைக்குக்கிடைக்கும்.

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED ... MADRAS.

உ

குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 | 1904ஞு ஜனவரிமீ | புத்தகம் 1.

நமது பத்திரிகை.

—:o:—

நம் விவேகபாநு இரண்டாவது வால்யூம் இனிது நிறைவேறுமாறு கருணைசெய்த சர்வேசுரன் திருவடிமலர்கட்கு உளளன்புடன் வந்தனமளிக்கின்றேம். சாமதாய், வருந்திக்கற்று ஆராய்ந்தறிந்திட்ட அரிய விஷயங்களை யுலகறிந்து மகிழுமாறு பாநுவுக்கெழுதிவந்த பேருபகாரிகள் பலர்க்கும் இடையறாது நன்றி கூறுகின்றேம். இன்னோர் செய்யும் பேருதவியே பாநுவுக்கு முதற்கருவியாயுள்ளது. பாநுவின் அபிவிர்த்தியைக்கருதி நன்கொடையளித்து ஆதரித்த உதாரகுணசீல உத்தமப்பிரபுக்கள் பலர்க்கும் மனதார வந்தனமளிக்கின்றேம். உரியகாலத்தே சந்தாத்தொகையனுப்பி யுபகரித்த கையொப்பக்காரர்களிடத்து நன்றிபாராட்டல் எமது கடமைகளுளொன்றே. ஈசன்திருவருளைச் சிந்தித்தும், ஏனையோர் உதவியின்னும் பெறுவாமென நம்பியும் பாநு 3-வது வால்யூம் மிக்க மகிழ்ச்சியுடன் உதிப்பதாயிற்று.

பத்திராபிமானிகளே!

முதல் வால்யூம் மாதம் 24 பக்கம்கொண்டு வந்தது. இரண்டாவது வால்யூம் மாதம் 32 பக்கங்கொண்டு போந்தது. 3-வது வால்யூம் மாதம் 40 பக்கம்கொண்டு வருகின்றது. இதனால் ஆண்டுதோறும் அபிவிர்த்தியடைந்து விளங்குவது வெள்ளிடையே. 2-வது வருஷத்தில் ஏற்பட்ட சந்தாதொகையே இவ்வருடத்தும் ஏற்பட்டுளது. இதனால் நம் தமிழ்நாட்டார் ஆதரவுபெறுதற்கு இதுவே

பாத்திரமாவது. இப்போதுள்ள தமிழ்ப்பத்திரிகைகளுள் புத்தகரூபமாக வரும எந்தப்பத்திரிகையும் நம் பாநுவைப்போல் குறைந்த சந்தாவுக்கு வெளிப்படவில்லை. தமிழ்த் தேயத்தார் பலரும் எளிதில் பெறுவது கருதியே சுலபமான சந்தா விதிக்கப்பெற்றது. சிறுவர்களும் பொருளறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தாலேதான் விஷயங்களெல்லாம் மிகவும் எளிய நடையில் எழுதப்படுகின்றன. நம் பாநுவைபெற்றுந் தமது பத்திரிகைகளைப் பாநுவுக்கீந்தும், பாநுவின் ஆக்கத்தை விரும்பியும், பாநுவில் வெளிப்பட்ட விஷயங்களைப் பாநுவின் பெயரால் வெளியிட்டும் வரும் ஏனைப்பத்திராதிபர்கள் பலர்க்கும கடமைபூண்டுள்ளேம்.

முக்கிய குறிப்பு.

சென்ற வருஷத்துச் சந்தாப்பொருளீந்த சந்தாதார்கள் அனைவரும் இவ்வருஷச் சந்தாவை பிப்பிரவரி௴ 1உக்குள் மணியார்டரனுப்பி யுதவிசெய்யும்படி பிரார்த்திக்கின்றேம். இங்ஙனம் அனுப்பாதவர்கட்கு பிப்பிரவரி௴ பாநுவை வி. பி. போஸ்டிலேயே யனுப்பலாகும். அப்போதாவது இச்சொற்பத தொகையைப் பெரிதாக நினைந்து எமக்கு நஷ்டமுண்டாக்காமல் பொருள்செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேம்.

பல மாதகாலம் பத்திரிகையைப் பெறுவதும் வி. பி. வந்தால் தேவையில்லை என்றுசொல்லிப் பத்திராதிபர்கட்குப் பெருநஷ்டமுண்டாக்குவதும நம்நாட்டாருட் சிலர் சுபாவமாக இருக்கின்றன. இது மிகவும் அநீதியான காரியமாம். நண்பர்கள் இவ்விஷயத்தை நன்றாய்க் கவனிக்கவேண்டும். பத்திரிகையை வி. பி. வழி யனுப்பும்படி கடிதம எழுதிய சில கனவான்கள் யாம் வி. பி. செய்த பத்திரிகைகளைத் திருப்பி யனுப்பினர். இவருட் சிலர் தக்க செல்வமுடையவர்களே. அம்மம்ம! இவரைப்போன்ற கொடியவர் யாவர்? சென்ற வருஷத்து இக்கொடியார் சிலரால் யாம் நஷ்டம் அடைந்துள்ளேமாதலின் இத்துணையும் கூறற்கு ஒருப்பட்டேம். இனியேனும் இவ்வாறு ஏனையரும் நஷ்டப்படுத்தாதிருப்பதுவே எமதுபிரார்த்தனை.

பத்திரிகை பெற விருப்பில்லாதவர் முன்னரே தெரிவித்தல் அழகாகும். புத்தகரூபமாக வெளிப்படுவதால் முன்பணம் செலுத்

தாதவர்கட்குப் பாநுவனுப்பல் முடியாது. தமிழபிமானமிக்க நண்பர்களே! தயவுகூர்ந்து சந்தாத்தொகையை யனுப்புவீர்களாக.

2-வது வால்யூம் 1902௵ டிசம்பர்௴ முதல் 1903௵ நவம்பர்௴ வரை 12 சஞ்சிகையோடு முடிவுற்றது. சில சௌகரியங்களைக்கருதி டிசம்பர்௴ பாநுவை நிறுத்தி 1904௵ ஜனவரி௴ முதல் 3-வது வால்யூம் தொடங்கலாயிற்று. சுபம். சுபம்.

பத்திராதிபர்.

தமிழ்ச்சங்கத் தனிக்கூட்டம்.

:0:

இச்சங்கத்து வித்துவான்களுட் பலர் அநேக விஷயங்களைப் பற்றிக் கனம் அக்கிராசனாதிபதியவர்கட்கு எழுதியிருந்தார்கள். அவ்விஷயங்களை ஆராய்ந்து முடிவுசெய்தற்பொருட்டு 1903௵ டிசம்பர்௴ 21உ மதுரை சேதுபதிஹைஸ்கூலில் அங்கத்தினரின் தனிக்கூட்டம் கூடிற்று. மதுரையிலுள்ள வித்துவான்களும், திருநெல்வேலி கனம் நெல்லையப்பன் கவிராஜரவர்கள், கனம் மே. சோ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், கனம் எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் கனம் ரெ. அப்புவையங்காரவர்கள், கனம் ஆர். ஸ்ரீநிவாசையங்காரவர்கள், இராமநாதபுரம் கனம் ரங்கசாமி ஐயங்காரவர்கள், திரிசிரபுரம் கனம் டி. சவரிராயபிள்ளையவர்கள், தஞ்சை கனம் சாமிநாதமுதலியாரவர்கள், சென்னை கனம் பூவை அஷ்டாவதானம் கலியாணசுந்தர முதலியாரவர்கள், கனம் நா. கதிர்வேற்பிள்ளையவர்கள் ஆகிய பதின்மரும் வந்திருந்தார்கள்.

மாலை 3 மணிக்குச் சரியாக எல்லாரும் வந்து சிற்றுண்டி காப்பி உட்கொண்டு 4 மணிக்குச் சபை கூடினார்கள். நெல்லை, திரிசிரபுரம், சென்னை, பெங்களூர் முதலிய இடங்களினின்று வந்திருந்த ஆராய்ச்சிக்குரிய கடிதங்களையெல்லாம் படித்து அவ்வவற்றிற்கேற்ற முடிவுசெய்தார்கள்.

அன்று எஞ்சிநின்ற சில விஷயங்களைப்பற்றி யோசித்தற்பொருட்டு மறுதினம் காலை 8 மணிக்கு அதே இடத்தில் மறுபடியும் கூடினார்கள். எல்லா விஷயங்களையும் ஒழுங்குற முடித்துவிட்டு 12 மணிக்குச் சபை கலைந்தது.

முக்கியமான சில தீர்மானங்கள்.

1. செந்தமிழ்ப் பத்திரிகைக்கு விஷயதானம் செய்பவர்க்கு வருஷமுடிவில் அவ்வவர் எழுதிய விஷயங்களைக் கணக்கிட்டு ஒரு பக்கத்துக்கு (அச்சில்) அரை ரூபா விகிதம் கூடும் பொருளைக் கொடுத்துவரவேண்டும்.

2. கனம் அக்கிராசனாதிபதியவர்கள் குறிப்பிடும் இரண்டு வித்துவான்கள் அங்கீகரித்தபின்னரே எல்லா விஷயங்களும் செந்தமிழில் இடம்பெறத்தக்கன.

3. சங்கவித்துவான்கள் சங்கத்தின் நன்மையை விரும்பி எல்லாவுதவியும் செய்யவேண்டியவர்களாதலின் வருஷமொன்றுக்கு ஒவ்வொருவரும் ஆறு ரூபா செலுத்திவரவேண்டும். அவர்கட்குச் செந்தமிழ்ப்பத்திரிகையும சங்கப்பதிப்புப் புத்தகங்களும் பிரதியாகச் சங்கத்திலிருந்து அனுப்பிவரவேணடும.

4. புதிதாகச் சேர்க்கப்படுகிற வித்துவான்கள் முதலில் பிரவேசதனமாக 5 ரூபாவும் வருஷசந்தாவும் கொடுக்கவேணடும.

5. புதிதாக ஒருவனை வித்துவக்கூட்டத்தில் சேர்க்கவேண்டுமானால் முன்புள்ள வித்துவான்களில் இருவர் அபிப்பிராயங் கொடுக்கவேண்டும.

6. மே௴ 24௳ மதுரையில் கூடும் வருஷோத்சவக்கூட்டத்திற்கு வருகின்ற வித்துவான்கட்கு இதுவரை வருதல்போதல் இருவகைச்செலவுக்கும் பொருள கொடுத்ததுபோலல்லாமல் இனிமேல் வருகிறபோது நேரிடும் செலவு வித்துவான்களே செய்துகொள்ள வேண்டும். போதற்கு நேரிடும செலவுமட்டுமே சங்கத்தினின்று கொடுக்கப்படவேண்டும்.

7. சங்கத்திலுள்ள பழைய நூல்களில் எதையேனும் பிரதி செய்துகொள்ள விரும்புவோர் கனம அக்கிராசனாதிபதியவர்களுத்தரவு பெற்றால் பிரதிசெய்துகொள்ளலாம.

இவைபோன்ற இன்னும் சில தீர்மானங்களுமுண்டு. இத்தவிக்கூட்டத்தார் செய்த முடிவுகள் யாவும் எல்லார்க்கும் மகிழ்ச்சியைத் தரத்தக்கனவேயாம்.

பத்திராதிபர்.

சென்ற டிசம்பர்௴ 26௳ சென்னைப்பொருட்காட்சிசாலை திறக்கப்பட்டது. மாட்சிமைதங்கிய மைசூர் மகாராஜா அவர்கள் குறித்தகாலத்தில் வந்துசேர்ந்தனர். கொச்சி மகாராஜா அவர்களும் காங்கிரஸ் பிரதிநிதிகளாகப்பல இடங்களிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான ஜனங்களும் ஆங்கிலேய ஸ்திரீ புருஷர்களும் சென்னை நகரிலுள்ள பிரபல கனவான்களும் வந்து கூடினர்கள். இக்காட்சிசாலைக்கமிட்டியின் பிரஸிடெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் சங்கரன் நாயர் மைசூர் மகாராஜா அவர்களின் நல்வரவைப்பற்றி சில உபசார வார்த்தைகள் கூறினர். மகாராஜா அவர்கள் அதிபாலியராயிருப்பினும் அவையஞ்சாமல் யாவரும் மெச்சுமாறு சம்பீர தொனியுடன் அவையடக்கங்கூறி, "இந்தியாவில் தொழில்கள் இப்போது பரிதாபமான நிலையிலிருப்பதைப்பற்றியும், பிரிடிஷ் ஆட்சியின் பலனாக தேசம் க்ஷேமப்பட்டு வந்தபோதிலும் ஆதிகாலத்தொழில்கள் மறைந்துபோவது பரிதாபமானதென்றும், படித்தவர்களுக்கு இப்பொழுது ஜீவனோபாயங்களில்லாமல் ராஜாங்க உத்தியோகங்களையாவது வக்கீல் தொழிலையாவது தேடுகிறார்களென்றும், தொழிற்படிப்புச்சொல்லுவிப்பதில் இப்போது அங்கங்கு சில ஏற்பாடுகள் நடந்துவந்தாலும் அவைகள் சரியானவைகளல்லவென்றும், தொழிற்படிப்புக்கற்பவர்கள் தொழிலாளிகளாகவே யிருக்கவேண்டுமென்றும், தமது சமஸ்தானமாகிய மைசூரில் சிலவழிகளில் இம்மாதிரி முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும், அவைகளைப்போல தேசத்தில் எல்லாப்பாகங்களிலும் நடக்கவேண்டுமென்றும்" பேசிமுடித்து இவைபோன்ற வேறு கருத்துக்களையுந்தெரிவித்து பின்னர் அக்காட்சி மண்டபத்தின் கதவைத்தன் கையால் திறந்து பரிவார சகிதம் உட்சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள பற்பல காட்சி சாமான்களையும் பார்த்து மகிழ்ந்தார். மைசூரிலிருந்து புத்திநுட்பத்தைக் காட்டத்தக்க மரம், சந்தனக்கட்டை, தந்தம் முதலியவற்றால் செய்யப்பட்ட பலவகைப் பொருள்களும் நேர்மையான கல், நார் முதலிய பல பொருள்களும் வந்திருந்தன. கல்கத்தா, பரோடா முதலிய புறநாடுகளிலிருந்தும் சென்னை ராஜதானி 21 ஜில்லாக்களிலிருந்தும் கொண்டுவந்து அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொருள்கள் அளவிறந்தன. இவைகளைக்கண்ணுற்ற ஒவ்வொருவரும் இந்தியாவில் இக்காலத்திலும் இப்படிப்பட்ட புத்திநுட்பமுற்ற வேலைக்காரர்களும் இத்தகைய பெருஞ்சிறப்புற்ற பொருள்களுமிருத்தலைப்பற்றி மிக வியந்தனர். தினமும் அலக்ஷியமாய் எறிந்துவிடும் பல பொருள்களைக்கொண்டு கூரிய புத்தியுடையவர்கள் பல்லாயிரக்கணக்கான பொருள் சேர்க்கலாமென்பதை இப்பொருட்காட்சி சாலை நன்கறிவிக்கும். வாழைநாரின் உபயோகத்தைப்பற்றி நாம் முன்பொருமுறை கூறியிருக்கிறோமல்லவ

அது இப்பொழுது பிரத்தியக்ஷமாக யாவரும் கண்டு மகிழும்படி வாய்த்தது. மைசூரிலிருந்து வந்த கற்களின் பளபளப்பையும் நேர்மையையும் பார்த்தால் பரமலோபியும் பெரும்பொருள் கொடுத்தும் பெறத்துணிவான். நம்முன்னோர்கள் "கல்லில் நார்உரித்தாற்போலும்" என்று முடியாத காரியத்தைக் கூறுவர். இச்சாலையில் வந்திருந்த ஓர் வகைக்கல்லானது நாரைப்போல பதமிடக்கூடியதாயிருந்தது. அன்றியும் அப்படி யெடுத்த நாரைக்கொண்டு ஆடை தயாரித்து லண்டன் நகரத்தில் சில ஆட்டக்காரர்கள் தரித்துக்கொள்ளுகிறார்களாம். இவ்வாடை நெருப்பால் வேகிறதில்லையாம இதுவுமோர் ஆச்சரியமே! நெல்லூரிலிருந்து அப்பிரகங்கள் பாறை பாறையாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. வந்து பார்த்தவர்கட்கு இப்பொருட்காட்சிசாலையால் நேரும் நன்மைகள் இவையென்றும் இச்சாலையமைத்த ஏற்பாடு மிகச்சிறந்ததென்றும் நன்கு புலப்படும். நம் தேசத்து இயற்கையாய்க் கிடைத்திருக்கும் பற்பல பொருள்களைகொண்டு பலவிதமான தொழில் செய்து பெரும்பொருள் சேர்க்கக்கூடுமென்பதையறிந்தும், கைத்தொழிலைக்கருதாது வறுமையால் வருந்துவது நம்மிந்தியா வாசிகட்குச் சகஜமாயிருக்கிறது. இனியேனும் இவர்கள் கைத்தொழிலைக்கொண்டு கௌரவமடையும்படி கடவுள் கருணைபாலித்திடுவாராக.

இச்சாலை 15உ வரை திறந்தே வைத்திருக்கப்பட்டது. தினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் திரள்திரளாகக்கூடிச் சென்று பார்த்திடுகின்றார்கள். பார்க்கவருகிறவர்கள் சிறிது தொகை கொடுத்துச் சீட்டுப்பெற்றுத்தான் உள்ளே பிரவேசிக்கலாம். இச்சீட்டுக் கொடுப்பதையொருவர் 10,000 ரூபாய்க்குக் கண்டிராக்டு ஒப்புக்கொண்டாராம். அவர்க்கு இதுவரை இரட்டிப்பு லாபமுண்டாம் இப்படியானால் பார்க்கவருபவர்களையொருவாறு மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

19-வது காங்கிரஸ்.

18 வருஷ காலமாக இந்தியாவின் பல இடங்களிலும் கூடிவருகிற காங்கிரஸ் மகா சபை 4-வது முறையாகச் சென்னையில் டிசம்பர்மீ 28உ கூடிற்று. கல்கட்டா மிஸ்டர் லால்மோகன்கோஸ் அக்கிராசனம் வகித்தார். காங்கிரஸ் கொட்டகையானது கடந்த 3 தடவைகளில் போடப்பட்டிருந்ததிலும் இம்முறை மிகப்பெரிதாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்தது. பலமாகாணங்களிலுமிருந்து வந்த பிரதிநிதிகளும் வேடிக்கை பார்க்க வந்தவர்களும் அதிகமே முதலில் காங்கிரஸ் அபிமானிகளில் சிறந்தவரும் உபசரணைக் கமிட்டித்தலைவருமாகிய மிஸ்டர் நவாப் சயித் மகமது பகதூர் சபைக்கு வந்திருக்கிற பொதுஜனோபகார சிலர்களுக்கு நல்வரவு கூறும் வந்தனோபசாரங்கூறி முடித்தார். பின்பு அக்கிராசனாதிபதி முன்னரே யெழுதி

வச்சிட்டு வைத்திருந்த உபந்நியாசத்தை வாசிக்கத்தொடங்கினர். சர்வகலாசாலை மசோதா, ராஜாங்க ரகசிய மசோதா இவற்றைப் பற்றியும், இந்தியர் பொருளாதாரம், ராஜாங்கத்தார் வீண்செலவு, அவரது கவலையின்மை, டில்லி தர்பார், ராஜாங்கத்தாரால் இந்திய அரசர்கள் அவமதிக்கப்படுதல், இவைகளைப்பற்றிப் பேசினர். இடையில் தமது உபந்நியாச முற்றிலுந் தாமே வாசிக்கமுடியாமற் களைப்புற்று மற்றொருவரைக்கொண்டு வாசிக்கச்செய்தார். கடைசிப்பாகத்தைத் தாமே வாசித்துப் பூர்த்திசெய்தார். அனாலும் ஜனங்கள் எதிர்பார்த்தவண்ணம் திருப்தியடையவில்லை. இசனோடுமுடிந்தது முதனாள்.

அடுத்த நாளாகிய 29உ பகல் 12 மணிக்கு இச்சபை மறுபடி கூடிற்று. சபை தொடங்கியவுடன் லார்ட் ஸ்டான்லி ஆப் ஆல்டார்லி, வி. எஸ். கெயின், இராமநாதபுரம் மகாராஜா ஆகிய மூவரும் காலஞ்சென்றமைக்காகச் சபையார் சிறிது நேரம் துக்கங்கொண்டாடினர்கள்.

பின்னர் L. F. வாச்சா என்பவர் எழுந்து இந்தியர்கட்குப் பெரிய உத்தியோகங்கள் கிடைக்கிறதில்லையெனவும், இது துரைத்தனத்தாரின் சுசாதியபிமானத்தால் நேர்வதெனவும், ரயில்வே டிப்பார்ட்டுமெண்டிலுங்கூடப் பெரிய உத்தியோகங்கள் இந்தியர்கட்குக் கிடைக்கிறதில்லையெனவும் பேசினர். பின்பு ஜி. சுப்பிரமணியய்யர் பீ. ஏ. அதை யனுசரித்துப் பேசினர் இவர் பேசத்தொடங்கிய விஷயத்தை முடிக்குஞ் சமயத்தில் மழை ஆரம்பித்துக்கொண்டது. மழையின் முழக்கத்தால் இவர் பேசியது பல ஜனங்கட்குக் கேட்கவில்லை. மழையோ வர வர அதிகமாயிற்று. முன்னர் கொட்டகையின் அழகையும் விஸ்தீரணத்தையும் சொன்னோமல்லவா, இக்கொட்டகை வெயிலைத்தடுக்கப்போட்டிருந்ததுபோலும். எங்கும் ஒழுகத்தலைப்பட்டது. சிலர் குடைகளைப் பிடித்துக்கொண்டார்கள். ஒருவர் பிடிக்குங்குடையால் சுற்றியுள்ள நால்வர் அதிகமாக நனைய நேரிட்டது. ஜனங்கள் இதனால் அமைதியுடனிருக்க முடியவில்லை. எங்கும் மழைமுழக்கமும் ஜனங்களின் ஆரவாரமும் அதிகரித்தன. இந்த இடையூற்றினால் காங்கிரஸ் கிரமப்படி நடவாமல் நிற்கத்தலைப்பட்டது. இதுகண்டு மனம்பொறாது வருந்தி பாபு சுரேந்திரநாத் பானர்ஜி எழுந்து ருத்திராவேசங்கொண்டு பேசத்தலைப்பட்டார். கடல் முழக்கம்போலவும் இடிமுழக்கம்போலவும் பேசினர். இவர் பேசிய தொனியால் ஜனங்கள் யாவரும் அதிக அமரிக்கையடைந்தனர் ஆனாலும் மழை விடவில்லை. இவர் பேசியதெல்லாம் வங்காளத்தில் நடக்கும் அநியாயங்களைப்பற்றியேயாம். பிரி லால் கோஸ் என்பவர், இதைத்தழுவித்தாமும் சிலபேசினர்.

அப்பால் இந்தியாவில் சாசுவதமான நிலவரி ஏற்படுத்தவேண்டுமென்றும், இதுவும் விரைவில் நடத்தப்படவேண்டுமெனவும் சட்டசபையார் கவனம் இவற்றில் வரவேண்டுமெனவும் சிலர் பேசினர். நம் விவசாயிகள் வறுமைப்படைகின்றார்களென இராஜாங்கத்தாரே ஒப்புக்கொண்டு கூறியும்

அவ்வறுமையை நீக்கக்கூடிய வழிகளுள் முன்னதாகிய நிலவரி விஷயத்தில் கருணைபாராட்டாமை அநியாயமெனவும் பேசினார்கள்.

பின்பு தென் ஆபிரிகா முதலிய இடங்களில் குடியேறிச்செல்லும் இந்தியர்களை ஆங்குள்ள ஆங்கிலேயர்கள் அடிமைகளைப்போல நடத்துவதைப்பற்றிச் சிலர் பேசினர். இன்னுஞ்சில பேசிவருகையில் மழையும் வரவரப் பலப்பட்டுவிட்டது. ஆனதால் மறுதினம் 11 மணிக்கே கூடுவதாக தீர்மானித்துச் சபை கலைந்தது.

மூன்றாம்நாள் 30உ யன்றும் மழை விடாமையால் 11 மணிக்குச்சபை கூடவில்லை. காங்கிரஸ் கொட்டகையில் மேலே ஒழுகுவது மட்டுமல்ல தரையிலும் ஜலம் பெருகிவிட்டது ஆனதால் கொட்டகையில் சபை கூடமுடியாதுபோயிற்று. காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குத்தனியாக வைத்திருந்த பங்களாவில் கூடிற்று. இக்கூட்டத்திற்கு அநேகர் (மழையால்) வரவில்லை. இதில் சாவகலாசங்கவிஷயமாகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். இவ்வருஷ காங்கிரஸ் சிறப்புக்கு மழையே ஏழரைநாட்டுச்சனியாயிருந்தது. சற்றும திருப்திகரமாக நடக்கவில்லை. ஏதோ ஒருவிதமாக காங்கிரஸ் கூடி முடிவுற்றது என்று சொல்லும்படி தான் நடந்தது. அடுத்த முறை காங்கிரஸ் பம்பாய் நகரத்தில் கூடுமாம். இதனை யறிவித்து அக்கிராசனாதிபதியவர்கள் முதலானவர்க்கு வந்தனங்கூறிச் சபை கலைந்தது. காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கென்று ஏற்படுத்தப்பெற்ற போசனசாலை, படுக்கையறை, நீடிக்கும் முதலிய இடங்களெல்லாம் மழையால் ஒழுக்குண்டு நீர் பெருக்கெடுக்கப் பெற்றனவாம். அந்தோ! தேசநன்மை நாடி நெடுந்தூரத்திலிருந்து வந்த உபகார குணசீலர்களான பலரும் இம்மழையால் பெருந்துயருற்றாரெனக் கேட்டு மிகவருந்துகின்றோம். சென்னை நகரில் சில தெருக்களில் வண்டிகள் செல்லமுடியாத விதம் வெள்ளம் பெருகிற்றாம். ட்ராம் வண்டியும் நிறுத்தப்பட்டதாம். பல குடிசைகள் வருணனுக்கிரையாயினவாம. "ஒன்று நாமொன்னத் தெய்வமொன்றெண்ணியது" என்றவாறு முடிந்தது. இவ்வருஷம் காங்கிரஸ், பொருட்காட்சி, அடையாற்றில் மாதுசிரோமணி அன்னிப்பெஸண்ட் அம்மையார் பிரசங்கம் முதலிய பல விசேடங்கள் ஒருங்குகூடியதால் சென்னைக்குவந்த அயலூர் ஜனங்களைக் கணக்கிடமுடியாது. ஒவ்வொருவரும் பலவகையான சந்தோஷங்களையடையலாமென்றே பெரும்பொருள் செலவு செய்துசென்னைக்கு வந்தார்கள். வந்தென்ன? மழையால் வந்த ஒரே வித சங்கடத்தைத்தான் யாவரும் அநுபவித்தார்கள். ஆனால் இப்பெருங்கூட்டங்கூடிய சமயத்தில் தொற்று வியாதித்துன்பம் இல்லாமல் செய்து யாவரையும் காப்பாற்றிய கடவுள் பெருங்கருணைக்கு நாம் எல்லாரும் வந்தனமளிக்கவேண்டியதே.

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

பத்திராதிபர்.

மேனாட்டுக்கலைஞானம்.

முற்கூறு.

(இரண்டாம் பாகம்).

சென்ற மாதத்தின் பத்திரிகையுடன் இம் முற்கூற்றின் முதற்பாகம் முடிவு பெற்றது. அதில் எக்கலையையாயினும் பழகத்தொடங்குவதற்குமுன் அறியவேண்டிய பரிபாஷைகளின் பொருள்களையும் கலாவிசாரணையின் போக்கையும் விவரித்துக்கூறினோம். இனி இரண்டாம்பாகத்தில் சில பொருள்களையெடுத்துக்கொண்டு அவைகளைப்பற்றிய விதிகளைச் சித்தமாய்த்தெரிந்துகொள்ள அவைகளைப்பார்த்துச் சோதித்து யூகிக்கும் வகையை விவரிப்பாம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் இதில் சொல்லியவண்ணம் தொழில் நடத்திப்பார்த்தால் தான் அவர் புத்தி விலாசப்படும், உண்மையும் அநுபவமாய் விளங்கும். மேனாட்டுப்புலவர்கள் எல்லாம் ஒவ்வொன்றையுஞ் சோதித்துப்பார்த்தேதான் இப்பொழுது யாவரும் அதிசயித்துப் பிரமிக்கத்தகும்படியான அற்புதக்காக்ஷிகளையும் சாதனங்களையும் யாவருக்கும் பயன்படும்படியாக உண்டுசெய்திருக்கிறார்கள். நமது கீழ்நாட்டு வித்வான்களுக்குத் தாங்கள் கேட்ட ஒன்றை உடனே சோதித்துப்பார்க்கும் இயல்பு சற்றுக்குறைவு. நமது காவியங்களில் அடிக்கடி அநேக உபமானங்கள் சொல்லியிருப்பதை வாசிக்கின்றோம். நீலோற்பலம்போன்ற கண்ணென்றும் குமுதம்போன்ற வாய் என்றும் கொவ்வைக்கனிபோன்ற இதழ் என்றும் வஞ்சிபோன்ற இடை யென்றும் கவிவாணர்சொல்லுகிறார்கள். இவைகளை வாசிக்கும்பொழுது புத்தகத்திலுள்ளபடி உபாத்தியாயர்கள் சொல்லிக்கொடுத்துவிட்டு திருப்தியடைந்து விடுகிறார்கள். அவ்வஸ்துக்களை அவர்கள் மாணாக்கர்களுக்குக் காண்பித்து எவ்விதத்தில் உபமான உபமேயங்களுக்கு ஒற்றுமையிருக்கிறதென்று விளக்குகிறதுமில்லை. மாணாக்கர்களாவது அவைகளைப் பார்த்துப் புத்தியைத் தெளிவுபடுத்திக்கொள்வதுமில்லை. எல்லாம் ஏட்டுச்சுரைக்காயாயிருக்கிறது. நீலோற்பலம் முதலியவைகள் எப்படியிருக்கும் என்று கேட்டால் உபாத்தியாயர்கள் கண்டதில்லை யென்கிறார்கள். இம்மாதிரியான சுபாவம் நமக்கிருப்பதினாற்றான் நாம் எத்தொழிலிலும் மேம்பாடு அடைகிறது அரிதாயிருக்கின்றது. மேனாட்டுப்புலவர்களும் மாணாக்கர்களுமோ நம்மைப்போலல்ல. அவர்கள் உடனே ஒவ்வொருவஸ்துக்களையும் பார்த்து நூதனநூதனமாய் அழகுகளையும் சிறப்புகளையும் அறிகிறார்கள். மேலும் உபாத்தியாயர் செய்துபார்த்துச்சொல்லுகிறாரே அவர் பொய்சொல்லுவாரா அவர் சொல்வது சரியாய்த்தானிருக்கும் நாமும் செய்துபார்க்க வேண்

காலம் கழிப்பானேன் என்று எண்ணி சும்மா கேட்டது போதுமானது என்று மேனாட்டு மாணாக்கர்கள் இருப்பதில்லை. ஒவ்வொருவரும் செய்துபார்ப்பதில் ஒருவருக்குத்தோன்றாத புதுமை மற்றொருவருக்குத்தோன்றும். ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தைச் செய்வதினால் உறுதிப்பாடும் தேற்றமும் ஞான விலாசமும் உண்டாகும். ஆகையால் இனி இந்த இரண்டாம் பாகத்தில் சொல்லும் சோதனைகளை ஒவ்வொருவரும் செய்துபார்த்தல் அவசியம்.

II. அசித்துப்பொருள்கள். (1) தாதுவர்க்கம்.

12. இயற்கைப்பொருளாகிய நீர்.

நீரானது உலகிலுள்ள சாதாரண இயற்கைப்பொருள்களுள் மிகவும் சாதாரணமான ஒருபொருள். அதைத்தினமும் ஒவ்வொருவரும் பலவிதத்திலும் உபயோகிக்கிறார்கள். அதை உபயோகிக்காத பிராணியேகிடையாது. ஒவ்வொருவரும் அதைப்பற்றித் திட்டமுந் தெளிவுமின்றிக் கலந்து தளர்ந்த அறிவை அதாவது சாதாரண அறிவை ஏராளமாய் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அனேகர் தங்களுக்கு நீரைப்பற்றி இருக்கும் அறிவில் பெரும்பாலும் தங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கமாட்டார்கள். நீரைப் பற்றி எவ்வளவு தெரிந்துகொள்ளக்கூடும் என்று அறிய எப்போதும் முயலாதவர்கள் அந்நீருக்குள்ள சக்திகள் குணாதிசயங்களில் பலவற்றையும், அது விளக்கிக்காட்டும் பிரபஞ்ச வியல்பு விதிகளில் அனேகங்களையும் தெரியாமல் மடமை பொருந்தியிருப்பார்கள் என்பது உண்மையே. ஆதலால் மிகவும் சுலபமாய் விளங்கச்சொல்லக்கூடிய அனேக சங்கதிகளை நியாயஞ் சொல்லித்துலக்க அவர்கள் அசக்தராயிருப்பார்கள். ஆகையால் முதலில் நாம் நீர் என்னும் பொருள்மேல் நமது புத்தியை நாட்டி அவதானித்து அதன் கேள்வியுடன் கலை துவக்கஞ்செய்தல் நலமாகும்.

13. ஒரு நீருள்ள கிண்ணம்.

அரைத்திட்டம் நீர் நிறைந்த ஒரு பளிங்குக்கிண்ணம் எடுத்துக்கொள்வோம். இந்தப்பளிங்குக்கிண்ணமானது செயற்கைப்பொருள் அதாவது சில இயற்கைப்பொருள்களை ஒன்று சேர்த்துக்காய்ச்சி உருக்கினதால் பளிங்குண்டாயிற்று. இந்தச் செய் பளிங்கை இக்காலத்தில் அதன் இங்கிலீஷ் பெயராகிய "க்ளாஸ்" என்று சாதாரணமாய்ப் பெண்கள்கூடச்சொல்லுவார்கள். தொழிலாளிகளால் இச்செய்பளிங்கு கிண்ணமாக உருப்படுத்தப்பட்டது. அந்தக் கிண்ணத்திலுள்ள நீரோ இயற்கைப்பொருள். அந்நீர் நதி, குளம், குட்டை, ஏரி, ஊற்று, கிணறு முதலியவைகளிலிருந்தாவது அல்லது மழை பெய்து கூரைமேலிருந்து ஓடிவந்து விழுந்த நீரிலிருந்தாவது வந்திருக்கலாம்.

இனி அந்த நீரைக்கவனிக்கலாம். அதற்கு அனேக தன்னியல்புக்குணங்களிருக்கின்றன. உதாரணமாக அது தெளிவானது அதனால் அதற்குள் பார்க்கலாம், அதாவது நமது பார்வை அதற்குள் தட்டுதலில்லாமல் ஊடுருவிப்பாய்ந்து அப்பாலுள்ள பொருள்களைக்கவரும். அது குளிர்ச்சியானது, அது தாகத்தைத்தணிக்கின்றது, சர்க்கரையையும உப்பையுங்கரைக்கின்றது. ஆனால் நீரைப்பற்றியறிய ஆரம்பித்தற்கு மிகவும் வசதியான இலக்ஷணங்கள் இவைகளல்ல.

14. நீர் இடங்கொள்ளுகின்றது, தடை கொடுக்கின்றது, இடையுள்ளது, தான் பெற்ற இயக்கத்தை வேறொன்றுக்குச் செலுத்தவல்லது; ஆகையால் அது பூதத்திரவியங்களில் ஒன்று.

நாம் முன் எடுத்துக்கொண்ட கிண்ணத்தின் உட்பதியில் அரைத்திட்ட உயரத்திற்கு நீர் நிற்க நாம் காணுகிறோம். ஆகையால் அந்த நீர் அவ்வளவு இடம் கொண்டிருக்கின்றது. அதாவது அவ்வளவு காத்திரம் அல்லது பருமை அல்லது மொத்தம் அல்லது பருப்பம் உள்ளது. இக்கிண்ணத்திற்குச் சற்றுக் குறைந்த அதாவது அதற்குள் நெருங்கிச் செருகிக்கொண்டு புகும்படியான வேறொரு கிண்ணத்தையெடுத்து இக்கிண்ணத்திற்குள் விட்டால் இச்சிறு கிண்ணத்தின் பாதம் நீர் மட்டத்திற்குப்போனதும் அந்த நீர் இக்கிண்ணம் இன்னுங் கீழ்ப்போகவொட்டாமல் தடைகொடுக்கிறதைக் காணலாம். கிண்ணத்திலுள்ள நீரில் கொஞ்சம் வெளியிற் போகாவிட்டால் சிறுகிண்ணத்தின் பாதம் கீழே போகமாட்டாது. உயரத்திலிருந்து நீரில் யாராவது குதித்தாலாவது, விழுந்தாலாவது, உறைப்பான அதிர்ச்சி அல்லது தாக்கு அல்லது அடி நீரைச்சேர்ந்ததும் அவன் பெறுவதை அனுபவமாகக் காண்டான். ஆகையால் நீர் தடை அல்லது எதிர்நோக்கு கொடுக்கின்றது.

கிண்ணத்தினின்றும் நீரைக்கவிழ்த்துக் கொட்டிவிட்டால் அக்கிண்ணம் நீரிருந்த போதைப்பார்க்கிலும் இலேசாக விருப்பதைக்காணுவோம். ஆகையால் நீர் இடை அல்லது கனம் அல்லது பாரம் உள்ளது.

கடைசியாக பூமியில் ஊன்றியிராமல் மேலாகவிருக்கும் யாதேனும் ஒரு பொருள் மேல் அந்தக்கிண்ணத்தின் நீரை வீசினால், அந்நீர் அப்பொருள் மேல் தாக்கி அப்பொருளைப் புரட்டி வீழ்த்திவிடும். அதாவது நாம் வீசினதினாலுண்டான இயக்கம் அல்லது சலனத்தைப் பெற்ற அந்த நீர் தன்னுடைய சலனத்தை வேறொரு பொருளுக்குச் செலுத்தும் வல்லமை பொருந்தியிருக்கின்றது.

இத்தோற்றங்கள் எல்லாம் காரியங்கள். பிரபஞ்சத்தில் நிகழும் சகல காரியங்களையும் தோற்றங்கள் என்பார்கள். இப்பொழுது நாம் கண்ட தோற்றங்களுக்கெல்லாம் நீரானது அந்த அந்த சந்தர்ப்பங்களில் குறித்த நிலையால் காரணமாயிருந்தது. ஆகையால் இத்தோற்றங்களை நீரின் சுபாவங்கள் அல்லது குணங்கள் என்று சொல்லலாம்.

ஒரு இடம் அல்லது உருவங்கொண்டும், எதிர்த் தாக்கு அல்லது தடை கொடுத்தும் இடை அல்லது நிறைபொருந்தியும் வேறு பொருள்களைத்தாக்கும்பொழுது அவைகளுக்குச் சலனம் அல்லது அசைவைத்தந்தும் உள்ள சகல பொருள்களைப் பிரகிருதிப்பொருள்கள், ஜடபதார்த்தங்கள், பூதவஸ்துக்கள், பூதத்திரவியங்கள், ஜடவஸ்துக்கள், பிரகிருதிதத்துவம், என்றும, அல்லது சும்மா ஜடம், திரவியம், பூதம், தத்துவம், பாசம், பிரகிருதி என்றும் சொல்லுவார்கள். ஆங்கிலேயர்கள் "மாட்டர்" (matter) என்பார்கள். ஆகையால் நீரானது ஜடப்பொருள்களில் ஒன்று. அது ஜடம்.

(இன்னும் வரும்).

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

"அறியவற்றுளெல்லாமரிதேபெரியாரைப் பேணித்தமராக்கொளல்."

இக்காலத்தில் "தியாசாவிகல் ஸொஸைடி" யென்று எங்கும் வழங்கும் பிரமஞான சங்கத்தைத் தனது குருமூர்த்தியின் ஆணையைச்சிரமேற்கொண்டு கர்னல் ஆல்காட் என்னும் புகழ்பெற்ற துரைமகனை உதவியாக வைத்துக்கொண்டு உலக நன்மையின்பொருட்டு ஸ்தாபித்த பெருமாட்டியானவள் ஹெலெநாம்பாள் என்ற பெண்ணரசியென்று சென்ற பத்திரிகையில் பிரமஞான சங்கத்தின் உற்பத்தியைப்பற்றிச் சொல்லும்பொழுது கூறினோம். இப்பொழுது அப்புண்ணியவதியின் சரித்திரத்தைப் பார்க்கலாம். இந்த நமது இந்தியா தேசத்தில் அலகபாத் நகரத்தில் இங்கிலீஷ் பாஷையில் பிரசுரமாகும் பையோநீர் (Pioneer) என்னும் பத்திரிகையின் பத்திராதிபராயிருந்த எ. பி. ஸிந்நெட் (A. P. Sinnett) என்னும் பிரபல வித்துவான் ஹெலெநாம்பாள் கூட சிலகாலமிருந்து பழகியும் அவள் பந்துக்களிடம் விசாரித்தும் அவள் சரித்திரத்தைப்பற்றி யெவ்வளவு அறியக்கூடுமோ அவ்வளவையுமறிந்து எழுதியிருக்கின்றனர்.

இம்மாது சிரோமணி நமது தேசத்தில் வந்து பிரமஞான சங்கத்தை ஸ்தாபித்து இருக்கும் நாளில் நமது இராஜாங்கத்தார் அவளை ருஷியா

தேசத்தாரால் வேவுபார்க்க அனுப்பப்பட்டவள் என்று சந்தேகித்து அவள் செல்லும் இடங்களுக்கெல்லாம் பின்தொடர்ந்து அவளையறியாமற்போய் அவள் செயல்களையெல்லாம் கவனித்துப்பார்த்து வரும்படி போலீசாரை இரகசியமாய் ஏற்படுத்தியிருந்தார்கள். இந்தம்மாள் சிம்லாவுக்குப்போனபோது அவ்விடத்தில் ஸிந்நெட் என்பவர் சந்தித்து அவளுடன் வார்த்தையாடியும் பலநாள் கவனித்துப்பார்த்தும் இராஜாங்கத்தார் அவள்மேல்கொண்டிருக்கும் சந்தேகமானது விபரீதமேயன்றி வேறொன்றுமல்லவென்று மனப்பூர்த்தியாகத் தெரிந்துகொண்டு ருஷியா தேசத்தின் சக்கரவர்த்தியின் காரியதரிசிகளில் ஒருவராகிய ஜெனரல் வாடீவ் (General Fadeef) என்னும் இவ்வம்மணியின் மாதுலனுக்குக் கடிதம் எழுதி இவள் வரலாற்றைச்சற்று அப்பொழுது தெரிந்து விளம்பரஞ்செய்து இராஜாங்கத்தாருடைய சந்தேகத்தை நீக்கினார்.

இப்புண்ணியவதி கிறிஸ்துமத சித்தாந்தப்படி 1831ளு ஜூலை 31உ. (மற்ற தேசங்களில் இது ஆகஸ்டு 12உக்கு ஒக்கும்) சுக்கிரவாரம் அதிகாலையில் ருஷியாதேசத்தின் தென்பாகத்தில் நீபர் (Dnieper) என்னும் நதிக்கரையிலிருக்கும் ஒரு பட்டினத்தில் ஜனனமானாள். இப்பட்டினத்தின் பெயர் எகாதெரிநோஸ்லாவம். இவள் தகப்பன் கர்னல் பீடர் ஹான் என்னும் பிரபு. பாட்டன் ஜெனரல் அலெக்ஸிஸ் ஹான்வான் ராட்டென்ஸ்டேர்ன் ஹான் என்பவர். இவர்கள் ஜெர்மனி (Germany) தேசத்து மிக மாட்சிமையான பிரபு வமிசத்தார்கள். இவள் தாயார் ஹெலெநே வாடீவ் என்னும் உத்தமி. இவள் பாட்டியானவள் ஹெலெநே டால் கொரோளகியென்னும் இராஜகுமாரத்தி. ஆகவே இவ்வம்மணி மேன்மையான குலத்துப்பெண்.

இவள் உதிக்குங்காலத்தில் இவள் தகப்பன் ருஷியா சக்கரவர்த்தியின் இராணுவத்தில் உத்தியோகஸ்தராயிருந்தார். பிறந்தபோது சிசு மிகவும் மெலிந்தும் பார்ப்பதற்கு இவ்வுலகத்ததல்லதுபோலும் இருந்தது. ஆகையால் உடனே மரித்துவிடுமோவென்று சந்தேகித்தார்கள். கிறிஸ்துமதஸ்தர்களில் இப்பகுப்பார் "பாப்டிஸம்" (Baptism) என்னும் நீராட்டுக்கிரியையின்றி இறந்துபோகிறவர்களுக்கு நல்லகதி கிடையாதென்று கொண்டிருக்கிறார்கள். ஆதலால் சிசு இறந்து போவதற்கு முந்தி நீராட்டுக்கிரியை நடத்தி விடவேண்டுமென்று பெற்றோரும் மற்றோரும் துரிதஞ்செய்தார்கள். இக்கிரியையின்போது ருஷியா தேசத்தின் வழக்கம் சகலரும் எரியும் மெழுகுவர்த்திகளைக்கையில் பிடித்துக்கொண்டு கிரியை முடியும்வரை நின்றுகொண்டேயிருக்கவேண்டும். இக்கிரியை நடத்துவதற்கு இவர்கள் அரண்மனையில் ஏற்படுத்திய அறையானது மிகவும் பெரிதே. ஆனால் பார்ப்பத

ந்து வந்திருந்த கூட்டமோ இன்னும் பெரிதாயிருந்தது. கிரியை நடக்கும்பொழுது மெழுகுவர்த்தி பிடித்துக்கொண்டு நின்றிருந்த ஒரு குழந்தை மிகவும் அலுத்துப்போய் ஒருவருக்குந்தெரியாமல் தரையில் உளுக்கார்ந்துவிட்டது. தன் கையிலிருந்த மெழுகுவர்த்தியை இப்படியும் அப்படியும் வீசி விளையாடிக்கொண்டிருந்ததில் பக்கல் நின்றுகொண்டு கிரியை நடத்திவந்த ஆசாரியனுடைய நீண்டு பாதம்வரை விழும் உடுப்பில் தீப்பற்றிக்கொண்டது. இதை ஆரம்பத்தில் ஒருவரும் கவனிக்கவில்லை. அதிகமாய்ப்பிடித்து எரியும்பொழுதுதான் எல்லோருக்கும் தெரிந்தது. அனேகர் இதில் சுடப்பட்டார்கள். முக்கியமாய் அக்கிழ ஆசாரியன உடம்பில் அதிகமாய் சுட்டு காயமாய்விட்டது. ருஷியா தேசத்தார் நம்பிக்கைப்படி இது கெட்ட சகுனம். அன்றையதினமுதல் அப்பட்டினத்திலுள்ள சகலரும் ஹெலேநாம்பாள் ஆயுளுடனிருந்தால் அவள் வாழ்நாளெல்லாம் அலைசலும் ஆபத்தும் சஞ்சலமுமாயிருக்கும் என்று எண்ணினார்கள். இந்த எண்ணத்தைவைத்துத்தான் சிறுபோதிலேயே அவள் பாட்டனும் பாட்டியும் மற்ற பந்துக்களும் அவளுக்கு மிகவும் செல்லங்கொடுத்து வந்தார்கள். அதனால் அவள் தன்னிஷ்டப்படி நடக்கவும் கருதியதெல்லாம் பெறவும் தனக்குமேல் யாரும் பெரியவர்களில்லையென்று எண்ணி ஒழுகவுமாயிருந்தாள்.

இவள் குழந்தையாயிருக்கும்பொழுதே இவள் தாயார் பரலோகஞ்சென்றாள். தாயார் இறந்தபிறகு இவளைப்பாட்டி வளர்த்துவந்தாள். இவள் பாட்டன் "சாரட்டோ" (Saratow) என்னும் பட்டினத்தில் கவர்னராயிருந்தபடியால் இவளும் அவ்விடத்திற்குக் கொண்டுபோகப்பட்டாள். குழந்தையில் இவள் தேகஸ்திதி எப்பொழுதும் நன்றாகவே யிருந்ததில்லை. எப்பொழுதும் நோயாளியாயும் மரணம் சம்பவித்தவள்போலும் இருந்தாள். அவளிடத்தில் சில நூதனமான செயல்களும் நிகழ்ந்துவந்தன. இவைகள் பேயின் குணமென்று மற்றவர்கள் எண்ணி அவள்மேல் தீர்த்தங்கள் தெளித்ததும் அவளுக்கு மந்திரித்ததும் கணக்கேயில்லை. இவளே பின்னால் தன்பேரில் தெளித்த தீர்த்தங்களையெல்லாம் கூட்டினால் ஒரு கப்பலை அதில் மிதக்கவிடலாம் என்றும் கோவிலாசாரியர்கள் தனக்கு மந்திரித்ததின் பயனெல்லாம் அவர்கள் காற்றுடன் பேசினால் எவ்வளவு பயனுண்டாகுமோ அவ்வளவு பயன் தனக்கு உண்டுபண்ணிற்றென்றும் சாதாரணப்பேச்சுகளில் சொல்லுவாள். இவள் குணாதிசயங்களைப்பற்றி இவள் சகோதரியும் அத்தையும் சேர்ந்து பின்வருமாறு சொல்லுகிறார்கள்.

(இன்னும் வரும்).

கி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழா அ ரெனின்."

மனிதனானவன் கலப்பற்ற ஒரே கூறுள்ள தனி வஸ்துவல்லன், அவன் பல கூறுகள் கலந்துள்ள பிராணி. இக்கூறுகளில் சில அழிவனவும் சில அழியாதனவுமாயிருக்கும். மனிதனைப்பற்றி முழுமையும் நன்றாய் அறியவேண்டின் அவனுடைய பல கூறுகளையும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளல் அவசியம். மனிதனை உண்மையாய் அறிந்துகொண்டால் தான் அவனுக்குத் தலைவனாயிருக்கும் கடவுளை யறியலாம்; அதனால் தொன்றுதொட்டுத் தொடரும் துன்பத்தையும் நீக்கிக்கொள்ளலாம். ஆகையால் மனிதன் என்னும் பொருளில் கலந்திருக்கும் பல கூறுகளையும் செவ்வையாய் விசாரித்தறிதல் யாவருக்கும் அவசியமேயாம்.

இந்த ஞானத்தைச் சீவர்களுக்கெல்லாம் போதிப்பதற்காகவே நமது பெரியோர்கள் பெருங்கருணையுடன் எண்ணிறந்த சாஸ்திரங்கள் செப்பி வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் இச்சாஸ்திரங்களில் மனிதனது கூறுகளைப் பலவிதமாய்ப் பிரித்துச் சொல்லியிருக்கின்றார்கள். முப்பத்தாறு தத்துவங்களாகவும், தொண்ணூற்றாறு தத்துவங்களாகவும், மூன்று தேகங்களாகவும், பஞ்சகோசங்களாகவும் பிரித்துக் கூறியிருக்கின்றனர். இதனால் கற்போர் மனங்கலங்கி உண்மை இதுவோ அதுவோ என்று மயங்கித் தெளிவு அடையாமல் சஞ்சலப்பட்டு கற்க ஆரம்பித்ததை உடனே விட்டுவிடுகிறார்கள். ஆனால் கருணாநிதிகளாகிய ஞானிகளும், ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும் நம்மைக் கலவரப்படுத்தி நாம் உண்மை யறிவதற்கு வழியின்றித் தியங்கச்செய்ய எண்ணி அவர்கள் அப்படிப் பலவிதமாய்ச் சொல்லவில்லை. உலகத்தில் உள்ள ஜனங்கள் பல பக்குவமுள்ளவர்களாயிருக்கிறபடியால் அவரவர்கள் பக்குவத்திற்குத்தகுந்தபடி எப்படிச்

சொன்னால் அவர்கள் அறியார்களோ அப்படிப் பலவிதமாய்ப் பிரித்துச் சொன்னார்களே தவிர வேறல்ல. நாம் இப்படிப் பலவிதமாயிருக்கும் சாஸ்திரங்களைக் கவனமாய் வாசித்துச் சிந்தித்தால் கலவரமுண்டாகமாட்டாது.

பலவிதமாய்ச் செப்பியிருப்பதில் முக்கியமானவைகள் மூன்று கூறாகவும் ஐந்து கூறாகவும் சொல்லியிருப்பவையாம். பெரியோர்கள் மனிதனுடைய கூறுகளைத் தங்கள் மனதுக்கேற்றபடி பிரித்ததாகவும் நாம் கருதப்படாது. ஒரு விதியை யனுசரித்தே பிரிவினை செய்திருக்கிறார்கள். பிரிவினை எத்தனை விதமாயிருந்தாலும் முடிவு ஒன்றே.

இலக்கங்கள் பிரபஞ்சத்தை ஆளுகின்றனவென்பது ஆன்றோர் வாக்கியம். பிரபஞ்சத்தை நோக்குங்கால் அதன் காரியங்களும் செயல்களும் பொருள்களும் இலக்கத்தொகை முறையாக நடை பெற்றிருத்தலைக் காணலாம். சில முத்தொகுதியாகச் செல்கின்றன. மும்மூர்த்தி, முத்தொழில், மும்மண்டலம், முப்புரம், முத்தீ, முச்சுடர், முக்காலம், முக்குணம், முப்பால், முப்பாழ், மும்மலம், முச்சந்தி, முத்தானம், முக்காண்டம், முப்பிணி, முப்பேதம், முப்பொறி, முப்பகை, மூவிசை, மூவிடம், என்பவைகளைக் காண்க. சில ஐந்தைந்தாக நடக்கின்றன. ஐம்பொறி, ஐம்பூதம், ஐங்கணை, ஐங்குரவர், ஐங்குழு, ஐந்தரு, ஐந்திணை, ஐந்தொழில், ஐம்புலன், ஐம்பொன், ஐம்பொழுது, ஐந்திலக்கணம், ஐம்படை, ஐம்பால், ஐந்தியாகம், ஐவகைவினை, பஞ்சாங்கம், பஞ்சாக்கினி, பஞ்சாவஸ்தை, பஞ்சமூர்த்தி, பஞ்சகௌவியம், பஞ்சபக்ஷி, பஞ்சபாதகம், பஞ்சசுத்தி, பஞ்சகலை, பஞ்சதீர்க்கம் என்பவைகளை நோக்குக. இக்காரணம் கொண்டு தான் மனிதனை ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் என மூன்று கூறாகவும், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என ஐந்து கூறாகவும் பிரித்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

இன்னும் நாம் பார்க்கும் பொழுது பிரபஞ்சத்தில் சில எழுசேர்ந்த கூட்டங்களாகவிருக்கின்றன. எழுகன்னிகைகள், எழுபர்வதம்,

எழுசமுத்திரம், எழுஸ்வரம், எழுதாது, எழுதாளம், எழுதீர்த்தம், எழுதீவு, எழுமண்டலம், எழுலோகம், எழுவாரம், எழுமேகம், எழுமருத்துக்கள், எழுரிஷிகள், எழுஞானபூமி, எழுஅஞ்ஞானபூமி, எழுபுரி, எழுபருவம், எழுபிறப்பு, எழுநரகம், எழுபாதாளம், என்பவைகளைக் காண்க. இம்மாதிரியே மனிதனுடைய கூறுகளையும் எழாகப்பிரித்துச் சில சாஸ்திரங்கள் சொல்லும். இதை யனுசரித்தே இப்பொழுது சென்னைநகரத்தின் ஒரு பாகமாகிய அடையாற்றில் வேரூன்றி வளர்ந்து தன் கிளைகளை உலகமெங்கணும் பரவும்படி செய்து அந்நிழலைச் சார்ந்தோர்க்குச் சித்தசாந்தியையும் பரமானந்தத்தையும் கொடுக்கும் பிரமஞானசங்கம் என்னும் வடவாலவிருக்ஷத்தின் வித்தை ஊன்றிய ராஜயோகபூஷணியான ஹெலேநாம்பாள் என்னும் பெருமாட்டி மனிதனுடைய கூறுகளை எழாகப்பிரித்து உபதேசித்தாள். பின்னால் அச்சங்கத்தவர் பலரும் இப்பிரிவினையையே கைக்கொண்டு போதித்தும் எழுதியும் வருகின்றார்கள். இதைக் கற்பதில் மனிதனுடைய சொரூபம தெளிவாய் விளங்குவதுடன் மற்றப் பகுப்பின்படியுள்ள கூறுகளைச் சிந்திப்பதில் தோன்றும் மயக்கமும் நீங்குவதால் மனிதனது எழுகூறு என்னும் சித்தாந்தத்தைப் படிக்க ஆரம்பஞ்செய்வாம்.

மனிதனுடைய எழுகூறுகளாவன.

1. திண்பூதவுடல்.
2. நுண்பூதவுடல்.
3. பிராணன்.
4. காமவுடல்.
5. மனசு.
6. புத்தி அல்லது அறிவு.
7. ஆத்துமா.

இனி இவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்வாம்.

(இன்னும் வரும்).

டி. எம். சுந்தரம்பிள்ளை.

ஈகை.

இல்லார்க் கிரங்கியுட னீவதுதா னீகையில்லார்
அல்லார்க் களிப்பதது வன்றாகும்—அல்லாமல்
ஈவதனா னற்புகழு மீயாமை யாலிழிவும்
ஆவதுன்னி யீவதுமஃ தன்று. 1.

இல்லார்க்கொன் றீவதுவே யீகையதா மெக்காலு
மல்லார்க்கொன் றீவதுதா னாங்குவிலை—சொல்லாமல்
வாங்கிவைத்த வாங்குகின்ற வாங்கநின்ற மாபொருட்கு
வாங்குகைய வென்றளிக்கு மாற்று. 2.

இல்லார்க்கு வேண்டுவதொன் றீயுங்கா லேற்றிடுமவ்
வில்லார்க்கு மீபவர்க்கு மேனையர்க்கு—மெல்லார்க்கு
மின்பமது தானுமிக்கு மில்லாரல் லார்க்கீயி
னின்பமது லேசமுமே யில். 3.

ஈதலினால் வீடதனை யெய்துவசென் றான்றோர்முன்
னோதினரா லவ்வுரையி லுண்மையுறற்—கேதுளதஃ
தெத்தன்மை யென்றுன்னி னீதலினாற் சாருநமைப்
பத்தின்மை யன்புடைமை பார். 4.

ஈயுமவை மண்பெண்பொ னெல்லாமா மாதலினான்
மாயு மவற்றினபி மானமெலா—மாயமன
மாசொழிந்த வாடியைப்போன் மாறாது மெய்காட்டித்
தேசொளிருஞ் சின்மயமாந் தேர். 5.

யாவர்க்கு மீதலினால் யாரிடத்து மன்புண்டாம்
யாவர்க்கு மாதார மான்மாவே—யாவதினா
லான்மாவை நேசித்த தாமதனா லம்மனந்தா
னான்மாவே யாகு மறி. 6.

இக்கா ரணம்பற்றி யீதலின்வீ டெய்துமென்றா
ரிக்கா ரணமதனை யெண்ணும—லெக்காலுங்
கீர்த்தியையே நாடிக் கிளர்விலையை நல்குதல்போற்
பேர்த்ததனை யீயினுமென் பேறு. 7.

ஓர்பயனு மோர்மாற்று முன்னா துதவுவரேற்
சார்வினைக ளில்லென்பார் தக்கோர்கள்—சார்வினைக
ணீங்கிடவா காமியமு நீங்குமதன் மேற்பிறப்பு
மேங்கியழி யுங்காண்பா யீங்கு. 8.

ஆனதொரு சஞ்சிதமு மாகா மியமொழியப்
போனவழி தோன்றாது போயழியு—மேனெனினீ
யெத்தனைதான் செல்வ மிருப்பினுமேற் றேடாயே
லத்தனையும் போம்போ மறி. 9.

பல்லோர்க்கு மீதலினாற் பற்றொழிந்த மன்புதித்தும்
பொல்லா வினையிரண்டும் போயொழிந்து—நல்லறிவால்
வல்லார்சேர் முத்திபெற்று வன்பிறப்பி னீங்குதலா
லில்லார்க் கிரங்கியுட னீ. 10.

இங்ஙனம்,

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

நீதிமொழி.

அறிவை உயிரினும் அரிதென ஓம்புக
ஆகும் பொருளை அழிக்கினும் அழியா
இன்பமும் துன்பமும் யாவர்க்கும் உள்ளவே
ஈதலிற் சிறந்தது இரவா திருத்தல்
உற்றதை உரைத்துத் தப்புவது அறனும்
ஊதியம் தேடாது உறுபொருள் செலவிடேல்
எண்ணித் துணிதல் எவர்க்கும் நலனே
ஏதம் வருமாறு இழிபு உரையாதே
ஐயம் பாத்திரம் அறிந்திடல் நன்மை
ஒத்துடன் வாழ்தல் உத்தமர்க் கழகாம்
ஓதலின் நன்றும் அதின்படி ஒழுகல்
ஔவியம் தன்னை அழிக்கும் பெரும்படை

அஃகம் குறையினும் அறத்தொழில் மறவேல்
கல்லா தவரும் நல்லார் அறிவுறில்
ஙகரம் போலினம் நண்புறத் தழுவு
சகமெலாம் வசமாம் சாற்றுமின் மொழிக்கே
ஞெண்டைக் கருப்போல் நஞ்சினம் நமைக்கொலும்
டம்பமென் றொன்றும் நன்மையை நல்கா
இணரூழ்த் தென்னும் ஏர்வினை இலாமலர்
தரம்அறிந் தியற்றுதல் தகுதியாம் எவர்க்கும்
நல்குரவு உறினும் நல்குவர் மேலோர்
பயனில் மொழியைப் பகருதல் நவையே
மலையினும் பெரிதாம் வள்ளலின் சீர்த்தி
இயன்ற அளவில் இரவலர்க் கீவாய்
இரப்போர்க் கென்றும் ஈவோர் தெய்வம்
இல்லதை உள்ளதா என்றும் உரையேல்
வருமுன் காவான் வாழ்க்கை அறக்கெடும்
அழகாற் செருக்குற்று அவமதிப் படையேல்
இளமையும் யாக்கையும் என்றும் நிலையிலா
அறம்ஓர் இரண்டினும் அகவறம் விழுமிது
அனந்தமும படைப்போர்க் காட்பட முயல்வாய்
கசடறக் கூறுதல் கற்றவர்க் கழகாம்
காணி நசையினால் கோடி பொருள்கெடும்
கிழமையர் என்போர் வறுமையிற் பிரியார்
கீர்த்திப் பொருளைச் சேர்த்திட முயலுக
குணமே நல்ல குலத்தினும் உயர்ந்தது
கூடுமுன் ஆய்ந்து கொளபின் பிரியேல்
கெடினும் நீபிறர் கெட நினையாதே
கேடு தனைச்செய் வோரைக் கெடுக்கும்
கைதருவ போதே கரவா தறஞ்செய்
கொண்டோன் உயிர்க்கொரு கூற்றுறை கொளாமனை
கோடாக் கற்பினள் கொழுநற் கறநிலை
கௌரவம் எவர்க்கணும் காட்டாது ஒழிக

சற்சனர் சங்கம் சார்ந்துறல் நலனே
சாகா திருத்தல் ஆகா தெவர்க்கும்
சிறுமை பெருமைதன் செயலால் வருமே
சீடற் குபதே சிப்பவன் தெய்வம
சுருதி யுக்தியொடு அனுபவம் வேண்டும்
சூதால் நளன் அறன் தோன்றல் பட்டமைஅறி
செய்வன நன்மை தீர்வன தீமை
சேயே எனினும் செயுமுறை திறம்பேல்
சையெனப் பிறர்சொலச் செய்வன தவிர்வாய்
சொல்வதிற் சிறந்தது சொற்படி புரிதல்
சோர்வெப் பொழுதும் துயர்தரு விதையாம்
சௌரியம் வயவர் தமக்கின்றி அமையா
தந்தைதாய் குருவுரை மந்திரம் ஆகும்
தாய்போற் பிறவுயிர் தனைக்காப் போன்இறை
திருவொடு கல்வி சேரினும் செருக்குறேல்
தீபகை கடன்இவை சேடம் வையாதே
துன்புறு பொழுதும் புன்றொழில் புரியேல்
தூய்மை யெவற்றினும் சுகத்தை விளைக்கும்
தெருளுறக் கற்பினும் அருளறம் வேண்டுமே
தேசமும் காலமுந் தெரிந்துநீ ஒழுகு
தைரியம் நோயினும் தளர விடாதே
தொன்மை நட்பாளரும் துறப்பர் வறுமையில்
தோம்சிறி தறிலுயிர் துறப்பர் பெரியோர்
நன்னெறி ஒழுகுவோர்க் கண்மை பரகதி
நாயும் பிறர்புரி நன்மையை மறவா
நிலைதடு மாறிற் பலதுயர் வருமே
நீதியே அரசை நிலைபெறச் செயுந்துணை
நுட்பமா உறுவன நுவல்வோன் அமைச்சன்
நெருப்பினும் சுடுமே நீத்தோர் சினச்சொல்
நேரார் வழக்கினும் நீதி திறம்பேல்
நைதல் தருமொழி நவில்வதை ஒழிவாய்

தொந்தவர் தமைநன் மைந்தர்போற் பாவி
நோய்தரும் உணவை நுகரல் ஆகாது
பழிபடும் ஓரம் பகரார் சான்றோர்
பார்த்திபன் எனினும் பகைக்கிடம் வையேல்
பிறர்மனை யவளைப் பெற்றதாய் எனஎண்
பீடிலார் நட்பிற் பெரும்பகை நன்றே
புறத்துறுப் பால்என் அகப்பண் பிலர்க்கே
பூணும் எவர்க்கும் பொறைஅறி வொழுக்கம்
பெய்மழை முகிற்குப் பிறிதென் புவிசெயும்
பேணும் பொருளிற் பெரும்பொருள் கல்வி
பைதல் உறினும் பழிப்பிடத் துண்ணேல்
பொய்யே அனைத்தையும் பொன்றப் புரிபடை
போதக் குருமொழி பொன்னினும் போற்றுக
மனம்வாக் கிரண்டினும் மாசிலார் பெரியோர்
மானேர் விழியார் மையலிற் சுழலேல்
மின்புரை வாழ்வை விரும்பிக் கதிவிடேல்
மீதூண் உறக்கமும் சோம்பலும் விளைக்கும்
முன்னவன் அருளூறில் முடியாப் பொருளிலை
மூடர் கேண்மை முற்றும் துயர்தரும்
மெய்யே அகத்தை விளக்கும் பேரொளி
மேற்குலம் கல்வி மெய்யறிவு உடைமை
மைந்தரில் வாழ்வு மாண்புள தன்றே
மொய்ம்பினன் ஆயினும் முன்சமர்க் கேகேல்
மோனம் பகைமுதல் சார்ந்திடும் முனைவாள்
மௌட்டிகம் உடையரை மதியார் மதியார்
வறுமையிற் பெரும்பிணி மக்கட் கில்லை
வாழ்வும் வறுமையும் வரும்போம் நிலைநிலா
விருந்தைவிட் டருந்தல் வேண்டார் மருந்தும்
வீழ்நாள் படவாழ் நாள்கழி யாதே
உள்ளிய பெறுவர் ஓவா முயற்சியர்
ஊறு பிறர்க்குற ஒன்றும் புரியேல்

வெட்டெனும் உறவர்சொல் கட்டம் தவிர்க்கும்
வேண்டார் இன்மொழி விடத்தினிற் கொல்லும்
வைப்பிற் றுணையாம் வருந்தினர்க் குதவல்
ஒறுத்தார்க் கில்லை ஒண்புகழ் என்றும்
ஓரா துரைக்கில் மாறாத் துயர்தரும்
வெளவா தொழிவாய் மற்றோர் பொருளை.

நீதிமொழி முற்றிற்று.

இஃது எட்டயபுரம் சமஸ்தானம் சம்புலிங்கபுரம் வீரராகவக் கவிராயர் குமாரர் திருவண்ணாதாதக்கவிராயரவர்களாலியற்றப் பெற்றது.

சைவ சித்தாந்தம்.

(முன் தொடர்ச்சி)

நியமம்.

நியமமாவது தவம், சந்தோஷம், ஆத்திக்கியம், தானம், ஈஸ்வரபூசை, சித்தாந்தசிரவணம், இலச்சை, மதி, செபம், விரதம் எனப் பத்துவகைப்படும் அவற்றுள்,

க. தவமாவது, முதல்வன் திருவடிகளைச் சிந்தித்து வேதவிதிப்படி சாந்திராயணம், கிருச்சிரம் முதலிய விரதங்களை அநுட்டித்து உடம்பை வருத்துவதாம். பந்தம் எனக்கு எவ்விதம் வந்தது எம் முதல்வனது திருவடியிற் பத்தி செய்தால் இப்பிறவி யொழியும் யான் ஜீவன்முத்தனாவது எப்பொழுதென்றும் முத்திமுடிபு ஏது என்றும் ஆராயுந்தொழிலுந்தவமாம்.

உ. சந்தோடமாவது, உலகத்தில் நீங்காது எழுகின்ற ஆசையை ஒழித்துக் கிடைத்த பொருளைக்கொண்டு மகிழுந்தன்மையாம். விட்டுணு, பிரமா, இந்திரன் முதலிய தேவர்களுடைய பெரிய போகங்களை மனதில் சிறிதுஞ் [illegible]யாது சிவபெருமானது திருவடிகளை இடையறாது சிந்தித்துக்கொண்டு [illegible]வும் சந்தோடமென்று வேதம் கூறும்.

[illegible] ஆத்திக்கியமாவது, வேதம், ஆகமம், மிருதி முதலிய நூல்கள் சொல்லும் [illegible]வில் தினந்தோறும் மிகுந்த விசுவாசமுடைமையேயாம்.

௪. தானமாவது, தருமவழியாக நின்று தேடிய பொருளை சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் இடையறாது சிந்தித்துக்கொண்டிருக்கும் மனத்தையுடைய அடியார்களுக்கு உவகையோடுங் கொடுத்தலாம்.

வேதாகமமார்க்கங்களைக் கைவிட்டவர்களும் சிவபெருமானது திருவடிகளை மனதில் சிந்தியாதவர்களும் அடியார்களைப்போலப் பாவித்துத்திரிகின்றவர்களும் பிறப்பிறப்பிற்குப் பயப்படாதவர்களும் வன்கண்ணருமாகிய இவர்களுக்குப் பொருள்களைக் கொடுத்தல் பரிசுத்தமாகிய அவியைச்சாம்பரிடைச் சொரிதல் ஒக்கும், சிறிதும் பயனில்லை என்று சுருதி கூறும்.

௫. ஈசுவரபூசையாவது, அருவம், உருவம் ஆகிய இரண்டுக்குங் காரணமாகிய சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்தலாம். குற்றம் பொருந்திய இராகாதி குணங்கள் நீங்கி உண்மை வசனங்களையே எப்பொழுதுஞ்சொல்லி நல்லொழுக்கமும் கொல்லாமையுமாகிய விரதங்களை அனுட்டித்தலும் ஈசுவரபூசையாம்.

௬. சித்தாந்த சிரவணமாவது, பிரமன் விட்டுணு முதலிய தேவர்களுக்கு அறியக்கூடாதவன், மெஞ்ஞானமே திருமேனியாக உடையவன், நித்தியன் முத்தன், ஒப்பிலான், சிவன், சம்பு, சங்கரன், பவன் முதலாகிய நாமங்களை எடுத்துச்சொல்லுகின்ற வேதாந்தத்தெளிவை எப்பொழுதுஞ் சிரவணஞ் செய்தலாம். மகாதேவராகிய சிவபெருமானது புராணங்களை எப்பொழுதுங் கேட்டுக்கொண்டிருத்தலும் சித்தாந்த சிரவணமாம்.

௭. இலச்சையாவது, வேதாகமமார்க்கங்களில் கூறிய விதிக்கு மாறுக ஒழுகுதலாகிய கிரியையில் நாணமுண்டாதலாம்.

௮. மதியாவது, சிவபெருமான் திருவடிப் பத்தியோடு சொல்லுகின்ற வைதிகக்கிரியையில் உண்டாகின்ற சிரத்தையாம்.

௯. செபமாவது, குற்றமில்லாத ஆசாரியர் உபதேசம்பண்ணிய மந்திரத்தை அன்போடு விதிப்படி செபித்தலாம். வேதாகம மார்க்கங்களுக்கு விருத்தமான நூலின் விதியைத் தழுவி ஒழுகினால் நிஷ்பலமே. ஆதலால் பொருத்தமில்லாத பலதருமங்களைச் செய்தலினும் வேதாகம மார்க்கங்களிற் சொல்லிய சிவபுண்ணியங்களைச் சிறிதேனுஞ்செய்தல் மிகவிசேடமென்று அறிவுடையோர் கூறுவர். வேதாகமங்களிற்கூறிய மந்திரங்களையே எழுதுஞ் செபித்தவால்வேண்டும். அந்தச் செபமும் வாசகம், மாநிருவகைப்படும். வாசகமும் உச்சம், உபாமிசு என்று இரண்டு மானதமும் மனனம், தியானம் என இரண்டு வகைப்படும்.

வாசிகத்திலும் உபாமிசு ஆயிரமடங்கு ஏற்றமுடையது. அதனினும் ஆயிரமடங்கு ஏற்றமுடையன மனனதியானங்கள். உச்சம் எப்பலனையுங் கொடுக்குமாயினும் நீசர் முதலியோர் செவிகளில் வீழ்ந்தால் நிஷ்பலமென்று பெரியோர் கூறுவர். எந்த மந்திரங்களைச் செபித்தாலும் அந்த மந்திரங்களுக்குரிய இருடி, சந்தசு, தெய்வம் ஆகிய இவைகளை முதலிற்றியானித்தே பின்பு மந்திரங்களைச் செபித்தல்வேண்டும். மந்திரமென்பதற்குப் பொருள் நினைப்பவனைக் காப்பது மந் நினைப்பவன் திர காப்பது ஆகவே மந்திரமென்னும் பெயர். நினைப்பவனைக்காக்கும் இயல்புடைய வாச்சியமாகிய சிவத்துக்கும், சிவசத்திக்குஞ் செல்லும் ஆயினும் வாச்சியத்துக்கும் வாசகத்துக்கும் பேதமில்லாமைபற்றி உபசாரத்தால் வாசகத்துக்குஞ்செல்லும் எனவே மந்திரம் வாச்சியமந்திரம், வாசகமந்திரம் என இருதிறப்படும் என்றபடியாயிற்று. இனி உச்சமாவது அருகிலிருக்கும் பிறர்செவிக்குங் கேட்கும்படி செபித்தலாம். உபாமிசு தன் செவிக்குமாத்திரங் கேட்கும்படி நாநுனி உதட்டைத் தீண்ட மெள்ளச்செபித்தலாம். மனனமாவது நாநுனி உதட்டைத்தீண்டாமல் ஒருமை பொருந்திய மனதினாலே செபித்தலாம். தியானமாவது செபிப்பவனாகிய ஆன்மாவும் செபிக்கப்படும் பொருளாகிய சிவமும் ஒன்றுபட்டுச் சிவமாயே நிற்றலாம்.

௰. விரதமாவது, ஆசாரியர் சொல்லியபடி உபவாச முதலிய கிரியைகளைச் செய்தலாம். பரிசுத்தமாகிய விபூதி உருத்திராக்கங்களை விதிப்படி அணிந்து சிவபூசையை இடையறாது செய்துவருதலும் விரதமாம்.

நியமம் முடிந்தது. இனி ஆசனம்.

ஆசனமாவது நூற்றெட்டு வகைப்படும். அவற்றுள் ஒன்பதாசனம் சிறந்தன. அவையாவன சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், சிங்கம் பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என்பனவாம்.

சுவத்திகாசனமாவது, வலப்புறத்துக் கணைக்கால் தொடை இவைகளின் நடுவில் இடப்புறத்துப் பாதமும் இடப்புறத்துக் கணைக்கால் தொடை இவைகளின் நடுவில் வலப்புறத்துப் பாதமும் ஒக்குமாறு சேர்த்து சமம்பொருந்திய தேகமுடையவனாயிருத்தலாம்.

கோமுகாசனமாவது, இடப்பாகத்து அணையில் வலத்தாளினது கரட்டினையும் வலதுபக்கத்திலுள்ள பிருட்ட பாரிசத்தில் இடத்தாளினது கரட்டினையும் பொருந்தும்படி சேர்த்துக்கொண்டிருத்தலாம்.

பதுமாசனமாவது, இடது தொடையின்மேல் வலது தாளையும் வலது

தொடையின்மேல் இடதுகாலையுஞ் சேர்த்து இரண்டு அங்குட்டங்களையும் பொருந்த இரண்டு கைகளால் மாறியுறப்பிடித்திருத்தலாம். இந்தப் பதுமாசனம் சகல ரோகபயம் எவற்றையு நீக்கும்.

வீராசனமாவது, இடதுபாதத்தின் கரட்டை வலது தொடையின்மேல் வைத்து சரீரம் துவளாவின்றி சமத்துவம் பொருந்த இருப்பதாம்.

சிங்காசனமாவது, இடதுபாதத்தின் கரட்டை வலதுபக்கத்திலுள்ள அண்டத்தின்கீழும் வலதுபாதத்தின் கரட்டை இடதுபக்கத்திலுள்ள அண்டத்தின்கீழும் வலிமையோடுஞ்சேர்த்து இரண்டு கையையும் முழந்தாளிரண்டின் மேல் விரல் நிமிரும்படிவைத்துக் கண்ணை நாசிநுனியில் வைத்திருத்தலாம்.

பத்திராசனமாவது, இரண்டு பாதங்களின் கரட்டினை இரண்டு பக்கத்திலுள்ள அண்டங்களின்கீழ்வைத்து இரண்டு தொடையினும் இரண்டு கையை யூன்றினவனாயிருப்பதாம். இது விடரோகம் பயம் முதலியவற்றை நீக்கும்.

முத்தாசனமாவது, இடதுபாதத்தின் கரட்டை அண்டத்தின்கீழேவைத்து அதன்கீழ் வலப்பாதத்தின் கரட்டை பொருந்த வைத்திருப்பதாம். குறியின் மேல்பாகத்தில் இடத்தாட்கரட்டினைவைத்து அதன்மேற்றன்னிட வலத்தாட்கரட்டினை வைத்திருத்தலும் அது.

மயூராசனமாவது, கூர்ப்பரங்களின் நுனிகள் நாபியைப்பொருந்த இரண்டு கையையு நிலத்திலூன்றி அடிசென்னி இவைகள் பூமியிற் பொருந்தாது மேலே எழுப்பி இருத்தலாம். இது சகல பாதகங்களையும் போக்கும்.

சுகாசனமாவது, ஒருவனுக்கு எந்தவிதத்தினாலே சுகமும் தைரியமும் உண்டாகின்றதோ அவ்விதமாயிருத்தலேயாம். இது அசத்தர்கள் அனுஷ்டிக்கத்தக்கது.

ஆசனவிதி முடிந்தது. இனிப் பிராணாயாமம்.

பிராணாயாமமாவது இரேசகம், பூரகம், கும்பகம் என்று மூவகைப்படும். இம்மூன்றும் முறையே அகாரம், உகாரம், மகாரம் ஆகிய இவற்றின் சொருபமாகும். இந்த மூன்றக்கரமும் ஒன்றாய்க்கூடின் பிரணவமென்று பெயர். பிராணாயாமம் இந்தப் பிரணவசொருபமாகும். நாடிகள் பத்து வகைப்படும் அவற்றுள் இடதுநாடி, வலதுநாடி, சுழுமுனைநாடி ஆகிய மூன்றும் சிறந்தன. அவற்றுள்ளும் சுழுமுனை சிறந்தது. முதலில் அகாரதியானஞ்செய்துகொண்டு இடது நாசியால் வாயுவை அழைத்து பதினாறு மாத்திரையளவு பூரகமும் உகாரதியானஞ்செய்துகொண்டு வலது நாசியால் அங்ஙனம் பூரித்த வாயுவை

அறுபத்துநான்கு மாத்திரையளவு கும்பகமும், மகாரதியானஞ்செய்துகொண்டு இடது நாசியால் அங்ஙனம் கும்பகஞ்செய்த வாயுவை முப்பத்திரண்டு மாத்திரையளவு இரேசகமும் செய்தல் முறைமையாகும். கும்பகமாத்திரம் வலிமையுள்ளவரை செய்யலாம். இதுதான் பிராணாயாமம் என்று பெயர்.

சந்நியாசிகள் அநுட்டிக்கவேண்டிய முறைமையாவது, மகாரமூர்த்தியாகிய சிவபிரானைத் தியானஞ்செய்துகொண்டு பிங்கலை நாடியால் பதினாறு மாத்திரையளவு பூரகமும், உகார சொருபியாகிய விட்டுணுவைத் தியானஞ்செய்துகொண்டு அவ்விதம் பூரித்த காற்றை அறுபத்துநான்கு மாத்திரையளவு கும்பகமும், அகார சொருபியாகிய பிரமதேவனைத் தியானஞ்செய்துகொண்டு முப்பத்திரண்டு மாத்திரையளவு இரேசகமுஞ் செய்யவேண்டும். பிரமசாரி, இல்லறத்தார், வானப்பிரஸ்தர், ஆகிய இவர்கள் பிராணவாயுவை வயிற்றில் பூரகஞ்செய்து பிரணவம் பொருந்திய வியாகிருதிகளோடு காயத்திரி மந்திரத்தை மூன்று சந்தியிலும் மும்மூன்று தரஞ்செபிக்க வேண்டுமென்று சுருதி கூறும். அரசர் விரத்தியுடைய வைசியருககும் இவ்விதி பொருந்துமென்று வேதங்கூறும். சூத்திரருக்கும் பெண்களுக்கும் நமோந்தமாகிய ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் செபித்தல் விதியாகும். இப்பிராணாயாமம், ஒரு தினத்துக்குப் பதினாறுகாலஞ்செய்தல் விதியாகும். ஒருவன் ஒருமதி இவ்வாறு அனுட்டித்தால் கொலை முதலிய பாவநீங்கும். ஆறுமதி அனுட்டானஞ்செய்யில் ஞானம் உதிக்கும். ஒரு வருடம் அனுட்டிப்பானாயின் பிரமஞானியாவன்.

(இன்னும் வரும்),

சுப்பிரமணியபிள்ளை.

மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

சோதிடம்.

பொருள்கள், தானேயறியும் பொருள், பிறிதொன்றறிவிக்க அறியும் பொருள், அறிவில் பொருள் என மூவகை.

அவற்றுள் தானேயறியும் பொருளை வினையினீங்கி விளங்கிய முற்றறிவினையுடைய பரமான்மாவென நூலோர் கூறுவர்.

அறிவிக்க அறியும்பொருளை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர், என அறுவகையாகப் பகுப்பர்.

அறிவில் பொருளை நிலம், நீர், தீ, காற்று, விசும்பு, முதற் பல்வகைப்படுத்துக்கூறுவர்.

இம்மூவகையுள் பரமான்மாவாகிய ஈசன் முற்றறிவினனாதலின் நிமித்தம் யாதொன்றுமின்றி யெல்லாமறிவன். அவனறியாதது ஒன்றுமில்லை. நிமித்தமின்றி இயற்கையானறிதலின் அவ்வறிவு மறைதலுமில்லை. அறிவிக்க அறியும்பொருளாகிய சீவான்மாக்கள் தாமேயறியும் இயல்பில்லாதனவாதலிற் பரமான்மா உள்ளிருந்தறிவிக்க யாதானுமொரு நிமித்தம பற்றியே யறியும் அவ்வறிவு இயற்கையானன்றிச் செயற்கையானெய்தியதாதலிற் பிறிதொரு காலத்து மறைதலுமுண்டு.

இவ்வியல்புடைய சீவான்மாக்களுள் ஆறறிவுயிரொழிந்த ஏனைய வுயிர்கள் ஆராய்ச்சி செய்யும் மன அறிவுடையன வல்லவாதலின் ஐம்பொறிவாயிலாக நேரில் நிகழ்வன அறியுமன்றி இறந்த காலத்துச் சென்றவற்றையும் எதிர்காலத்து வருவனவற்றையும் அறியா.

மக்கள் ஆறறிவுடையராதலின் அவரே ஐம்பொறிவாயிலான் நிகழ்ந்தன அறிதற்கும் நிமித்தங்கொண்டு ஆராய்ந்து சென்றன வருவன அறிதற்குமுரியராவர்.

இவ்வியல்புடைய மக்கள் தாமுன்னர்ச் செய்த இருவினைக்கீடாக இன்பதுன்பநுகருமிடத்து இன்பத்துட்களித்து நன்றென விரும்பியும் துன்பத்துட்கவன்று தீதென வெறுத்தும் அவற்றை யநுபவத்திற்கண்டு இன்பத்தை யாக்குதற்கும் துன்பத்தை நீக்குதற்கு முயல்வராதலின் அவர் பொருட்டு எல்லாவுயிர்களுக்கும் அவ்வவ்வுயிர்களின் பருவத்துக்கேற்றவாறு எல்லா நன்மையுமளிக்கவல்ல ஈசன் அவ்வின்பதுன்பங்கள் உளவாதற்குக் காரணமுணர்ந்து துன்பத்தினீங்கி இன்பத்தைப்பெறுமாறு பலவழிகள் அநாதியேயமைத்தான்.

அவற்றுட் சோதிடமுமொன்று. சோதிடமென்பது முக்காலத்துமுளவாகும் நன்மைதீமையும் அவற்றின் காரணமும் அறிதற்கு நிமித்தமாயுள்ளது.

அச்சோதிடம் ஆதியில் தானே தலைவனாகி நின்ற ஈசனை வழிபட்டு அவனருளாலே தலைவராகிய பலமுனிவர்களால் வெளிப்பட்டது.

அம்முனிவர்கள் நிறைமொழி மாந்தராதலின் அவரநுபவத்திற்கண்டு கூறியனவெல்லாம் எக்காலத்தும் பொய்யாத வியல்பினவென்பதே தேற்றம்.

அவர்கள் நாளுங்கோளும் புள்ளுஞ்சொல்லும் கனவினுநனவினுங் காணுங்காட்சியுமேதுவாக முன் நடந்தவற்றையும் பின் நடப்பவற்றையுமறியுமாறு பலநூல்கள் செய்து நமக்களித்தனர்,

அந்நூல் கற்றுப் பின்னுள்ளோரும் தாந்தாமறிந்தவாறு வழி நூல் பல செய்தனர்.

அந்நூல்களிற் சொல்லிய கோள் முதலிய நிமித்தங்கள் நன்மையறிவிப்பனவும் தீமையறிவிப்பனவும் நன்மை தீமையென்னுமிரண்டற்கும் பொதுமை யறிவிப்பனவுமென மூவகை.

அவற்றுள் நன்மை நிமித்தம் ஒன்பது பத்துக்குடையார் சம்பந்தம் ஒருவனுக்கு இறந்தகாலத்தேனும் எதிர்காலத்தேனு முரித்தாகிய இராஜயோகத்தை யறிவித்தாற் போல்வன.

தீமை நிமித்தம் எட்டுப்பதினொன்றுக்குடையார் சம்பந்தம் இராஜயோகபங்கத்தையறிவித்தாற் போல்வன. பொது நிமித்தம் ஒருவன் பிறந்தகாலத்தையும் இறக்குங்காலத்தையு மறிவித்தாற் போல்வன. புள் நிமித்த முதலிய ஏனையவும் அத்தன்மையவே.

அம்மூவகையுள் நன்மை நிமித்தமாகவேனும் தீமை நிமித்தமாகவேனும் பொதுமை நிமித்தமாகவேனுங் கலப்பின்றிக் காணலரிது.

அதனாற்கலப்பின்றிக் கண்டநிமித்தம் மந்தர் கூறினும் தவறாது.

கலப்புடைய நிமித்தம் கூரியர்கூறினும் சிலபோழ்து தவறும்.

அத்தவறு நூலின்குற்றமன்று அந்நிமித்தத்தின்கூறுபாட்டை இத்துணை நன்மைக்கு இத்துணைத் தீமையிருப்பினும் அந்நன்மை கெடாதெனவும் இத்துணைக்குமேலிருப்பிற் கெடுமெனவும் அந்நூல் கூறிய நெறிக்கணின்று ஆராய்ந்து கூறுமையாற் சொல்வோரது குற்றமேயாம்.

அங்ஙனமாயிற் றவறுறாது யாவர்க்குஞ்சொல்ல லரிதோவென்னின் முனிவர்கள் சோதிடஞ்சொல்வோர் இன்னஇன்ன ஒழுக்கத்தினிற்றல்வேண்டுமென விதித்தாராதலின் அவ்வாறொழுகினோர்க்கு அவரது மனத்தின் நன்மைக்கேற்றவாறுமுற்றத் தவறாது கூறுவாருஞ் சிலருளர். முனிவர்கள் நிறைமொழிமாந்தராதலின் உலகநிலைமாறினும் அவருரைத்தன யாவும் பொய்யாவியல்பினவே. நடப்பன நடந்தேவிடுமன்றே இச்சோதிடங்கற்று பின்நடப்பன இவையென உண்மையுணரினும் அதனாற் பயனில்லையெனக் கூறுவாருமுளர்.

பெரியோரது முடிபு அப்படியன்று. முயற்சியான் ஊழையும் வெல்லல் கூடுமென்பதே அவர்கொள்கை இஃது.

"ஊழையுமுப்பக்கங்காண்பர், கூற்றங்குதித்தலுங் கைகூடும்" எனத் தேவர் கூறுமாற்றானுமுணரப்படும்.

இக்கருத்தற்றே சோதிடநூலும் துன்புறுங்காலத்தை முன்னரறியும் நெறிகூறி அதனைக்கடத்தற்குபாயமுங்கூறிச் செல்கின்றது.

இதுவன்றி அந்நூல்கற்று உண்மையுணரின் நமக்கெய்தும் துன்பத்தின் காரணமறிந்து அக்காரணமின்றேல் இக்காரியமாகிய துன்பமுமில்லையென நிச்சயவுணர்வுதோன்ற அதனானே அக்காரணம் இனிமேலு முளதாகாது தடுத்தற்குமேதுவாகும். இம்மட்டோ நமக்கன்னியமாகக் காணப்படுகின்ற நாளும்கோளும் புள்ளுஞ்சொல்லு முதலியன நமக்கு அன்னியமாகாத நன்மைதீமை யுணர்த்தற்கேதுவாதலை யுய்த்துணர்வார்க்கு எல்லாம்வல்லஇறைவனது மாட்சியும் நன்குவிளங்கும்.

(இன்னும்வரும்)

ஆறுமுகம்.

சூது.

சூது என்பது சீட்டாடல், சொக்கட்டான் பாசியுருட்டல் முதலிய பல வகைப்படும். இது தொன்றுதொட்டு வந்த தீச்செயல்கள் பலவற்றுள் ஒன்று. கள், காமம் என்பனபோலத் தன்னைப்பற்றியோர்மனத்தைத் தன்வசப்படுத்துக்கொள்ளும் வலிமையுற்றது. வறுமையை யழைத்தற்குத் தூதுசென்று தவறாது கூட்டிவைப்பது. மானமாகிய விருக்ஷத்தை வேரோடுகளையும் வச்சிராயுதமாவது. காலத்தைக்கொள்ளைகொண்டு சீலத்தை யழிப்பது. முயற்சியைத் தடுத்து அயர்ச்சியைக்கொடுப்பது. மோகத்தைவிளைப்பது. சோகத்தை அழைப்பது. கௌரத்தை ஒழிப்பது. முற்றச்சொல்லமுடியாத பல பெருங் கேடுகளையும் ஒருங்கே சேர்ப்பிக்கவல்லது.

நம்நாட்டின் முற்காலத்தும் தற்காலத்தும் இதனால் கேடுற்றவர் பல்லோர். இதனை யறியாதார் யாவர்? அறிந்துமென்ன? நம்மவர் பல்லோர் முன்னைப் புண்ணியபலனாகப் பெருஞ்செல்வத்தை யுடையராகி யாதோர் தொழிலுமின்றி விலாப்புடைக்க வுண்பதும் வீணர்களைக் கூட்டிவைத்துச் சூதாடுவதுமாகக் காலத்தைப் போக்குகின்றார்கள். இக்கூட்டத்தவர்க்குச் சாதி, மதம், வயசு, கல்வி, ஒழுக்கம் முதலிய உயர்வு தாழ்வு கிடையாது. சூதாட்டத்தால் பலநாள் அடைந்த பொருள் நஷ்டம் இவர்க்கு வருத்தந்தருவதில்லை. ஒருநாள் சிறிதுபொருள் இலாபம்பெறின் இவர்க்குறுமகிழ்ச்சி கடலினும் பெரிதாகும். இதுபற்றியன்றே,

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு"
"வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று"

என்று தெய்வப்புலமையாளர் திருவாய்மலர்ந்தருளினர்.

இச்சூதாட்டத்தைப்பற்றியொரு சிறு கதையுண்டு. அதாவது ஒருவன் சூதாடிக்கொண்டிருக்கும்போது அவன் தாய் மரணமடைந்தனள். இத்துக்கத்தைக்கூறி யழைத்தபோது சூது விருப்பத்தால் பெற்றதாய் பிரிவையும் கருதாது எல்லாக்காரியங்களும் நடக்கட்டும் இதோ வந்துவிடுகிறேன் என்று கூறியனுப்பினன். உத்தரக்கிரியைக்கு வேண்டுவன எல்லாந்தயாரானபின் ஜலம்கொண்டுவரப்போதற்கு வந்தழைத்தனர் அப்போதும் எழுந்துசெல்ல மனமில்லானாய்த் தன் தம்பியை வைத்துக்கொண்டே எல்லாம் நடத்தி மயானத்துக்கு எடுத்துக்கொண்டு வரும்படியாகக்கூறி இந்நாவழிநானேவரும் அப்போது சேர்ந்துகொள்கிறேன் என்றானாம். பின்னரும் சென்றிலனாம். இக்கதைப்பொருளையடக்கிச் சூதாடுவோர்கள் இந்நாவழிநானேவரும் என்று சங்கேதமாக இன்னுங்கூறுவதுண்டு. பாண்டவசிரேஷ்டரான தருமர் சூதினாலடைந்த துயரத்துக்கு எல்லையுண்டா? நளமகாராஜன் இதனால் பட்டபாடு கொஞ்சமா? அந்தோ! இக்கொடும்பிணியாற் பற்றப்பட்டார்க்கு உய்யுநெறியேயில்லை. பொய், களவு, கொலை முதலியவைகட்கு இச்சூதே யீன்றதாயாகும்.

"உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்" என்று கூறும் விஷயத்தைப் பிரத்தியக்ஷமாகக்காணலாம். சகலவித நற்குணங்களும் நிறைந்துள்ள தருமபுத்திரர் செல்வமுற்றுஞ் சூதிற்றோற்று மனைவியையும் பந்தயப்பொருளாக்கினரென்றால் இனிச்சொல்வது என்னுளது? வயது முதிர்ந்து அறிவு பொதிந்து காரியநிர்வாகிகளான பெரியோர்கள் இத்தீச்செயல் செய்வதால் அவர்கட்கு நேரும் கேடு ஒன்றோ அவரையடுத்துள்ள புத்திராதிச் சிறியோரும் அப்பழக்கமேகொண்டு கெடுவாரென்பதை மறப்பவர் யாவர்? காலக்கேடு, பொருட்கேடு, மானக்கேடு முதலிய பற்பல கேடுகளையுண்டாக்கும் இச்சூதாட்டத்தைவிட்டு அதிற்போக்குங்காலத்தை வேறு நல்வழிகளிற்போக்கினால் அநேகவித லாபங்கள் உண்டாகலாமன்றோ? தீவினையகற்று என்பது மூதாட்டி மொழியாகும்.

"அடியும் ஆண்மையும் வலிமையும் சேனையும்
அழகும் வென்றியும் தத்தம்
குடியும் மானமும் செல்வமும் பெருமையும்
குலமும் இன்பமும் தேசும்
படியு மாமறை ஒழுக்கமும் புகழும்முன்
பயின்றகல் வியும் சேர
மடியுமால் மதி யுணர்ந்தவர் சூதின்மேல்
வைப்பரோ மனம் வையார்"

"சூதும் வாதும் வேதனை செய்யும்" என்னும் அருமைத் திருவாக்குப் பலவுள. நம்மவர்காள! சூதாட்டத்தைத் தொடாமலிருப்பதுமட்டோ அக்கூட்டத்தாரோடு சேரலாகாது. சூதாடுமிடத்து நிற்கவும்கூடாது. சூதாட்டம் என்ற சொற்கேட்டால் யமனைக்கண்டதுபோன்று அஞ்சியொதுங்க வேண்டும். சுபம் சுபம்.

இங்ஙனம்,

முருகவேள்.

ஸ்ரீமாந் சாமி சரவணபிள்ளையவர்கள்.

இவர் சிறந்த தமிழ் வித்துவான்களிலொருவர். மஹா வித்வானென்று பெரும்புகழ் பெற்ற திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் மாணாக்கர்களிலொருவராகிய திருவீழிமிழலை சாமிநாதக்கவிராயரவர்களது தவப்புதல்வர். சேலம் முனிஸிபல் காலேஜில் 17 வருடகாலமாகத் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர். ஆங்கிலோ பாஷாவிற்பத்தியும், சங்கீதஞானமும் உற்றவர். எம்பிரானாகிய முருகக்கடவுளிடத்து இடையறாத மெய்ப்பத்தி வைத்தவர். நல்லொழுக்கத்திற் சிறந்தவர். நட்புக்கோர் அணிகலமானவர். சைவசித்தாந்த நூலுணர்ச்சி பெரிதுமுடையர். பாமரபண்டித ரஞ்சிதமாம்படி பிரசங்கிப்பதில் மிகவல்லுநர். பெரியபுராணம், கம்பர் இராமாயண முதலியவற்றைப் பிரசங்கித்துப் பல இடங்களில் புகழ்பெற்றவர். நமது பாநுவுக்கு "வான்மீகரும் கம்பரும்" என்ற விஷயதானஞ்செய்து வந்தவர். நம்மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவருள்ளொருவர். இன்னதன்மை பலவாய்ந்த பண்டித சிகாமணியை 1903௵ டிசம்பர்௴ 31௳ மாலையில் இழந்துவிடப்பெற்றேம். சிலமாதங்களாக வாதரோகத்தால் பீடிக்கப்பெற்றிருந்தனர் என்பதை யறிந்து எமது மனம் புண்ணாகியிருந்தது. புண்ணில் இடிப்புகுந்தாற்போன்று இத்துக்க சமாசாரம் காதில்பட்டவுடன் மிகவும் வருந்துகின்றேம். 15 வருஷகாலமாக மனக்கலப்புடன் பழகிய எமது ஆருயிர்த்தோழர் பிரிவையுணர்ந்து யாங்கொண்டுள்ள பெருந்துயரக்கடலுக்கு கரைகாணுங் காலமெதுவோ? அந்தோ! "விதிவலியொருவரால் விலக்கலாகுமோ" என்ப வண்ணம் முடிந்ததிது. யாம் பெற்ற பெருந்துயரத்தை இப்பாநு வாயிலாக நம் தோழரது அருமை மனையாட்டியார் முதலானவர்க்கு இரங்கிக்கூறுகின்றேம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமாந் பாஸ்கரசேதுபதி மகாராஜா அவர்கள்.

சேது சமஸ்தானாதிபதியாகிய இம்மன்னர் பெருமான் உலகமுழுவதும் புகழ்பெற்றவர். சிவநேசச்செல்வர். ஆங்கிலபாஷையில் எப். ஏ. பட்டம் பெற்றவர். தமிழிலக்கிய இலக்கண சாஸ்திர வல்லுநர். ஆங்கிலத்தும் தமிழிலும் பிரசங்கிப்பதில் மிகச்சிறந்தவர். பிரசங்கிப்பதில் வலிமையுற்றவர் எவராயினும் இவர் பிரசங்கங்கேட்டவுடன் மூக்கின்மேல் விரல்வைத்து நின்று பிரமிப்பார். சமயோஜிதமாகக் கற்பனைசெய்து பேசுவதில் அதிசமர்த்தர். உதாரத்வத்தில் ஒப்புயர்வற்றவர். நாம் காதாரக்கேட்டு ஐயப்பாடெய்தும் வள்ளல்கள் சரிதங்களை மெய்யென்று காட்டும்படி வரையாது கொடுத்தவர். தென்னாட்டுத் தேவாலயங்களில் இவர்பொருள் புகாதவை மிகச்சொற்பமே. இவர்பாற் பரிசுபெறாத புலவர் இருப்பாரென்று தோன்றவில்லை. இத்தகைப் பெருநிலவேந்தர்திலகர் சிலமாதமாகத் தென்னாடுசென்று குற்றால முதலிய சிவக்ஷேத்திர யாத்திரைசெய்து கல்லிடைக்குறிச்சியிலுள்ள துறைசை ஆதினத்தைச்சார்ந்த மடாலயத்தில் வசித்துவந்தார். ஒருவாரமாக ஓர் சிறு சிரங்கினால் வருந்தினர். 1903௵ டிசம்பர்௴ 26௳ காலையில் சிவபதமடைந்தனர். அந்தோ! இவ்வரசர் பிரிவு தமிழ்நாட்டை மிகவும் வருத்துவதாயிற்று. அன்று பகல் 1 மணிக்குக் கல்லிடைகுறிச்சியிலிருந்து ஸ்பெஷல்ரயில் வண்டியிலேற்றி இரவு 9 மணிக்கு மதுரைக்குக் கொண்டுவரப்பட்டார். இவ்வண்டி வருகையறிந்து மதுரைவாசிகள் ஆயிரக்கணக்காகத்திரண்டு ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில்கூடித் தங்கள் துயரத்தையும் அன்பையும் வெளியிட்டனர். 10 மணிக்கு மதுரைவிட்டுப்புறப்பட்டு இரவு 1 மணிக்கு இராமநாதபுரம் சேர்க்கப்பட்டார். மறுதினம் காலையில் ராஜபரிவாரங்களும் நகரவாசிகளும் ஆங்கில உத்தியோகஸ்தர்களும் புடைசூழ வெகு விமரிசையுடன் எடுத்துச்சென்று தகனஞ்செய்யப்பட்டனர்.

"முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப லாவது இன்னம்" என்றவண்ணமே முடிந்தது.

இவ்வரசர் செய்த சற்கருமங்களுட் டலைமைபெற்று நிற்பது நம் மதுரைத் தமிழ்ச்சங்கமே. இப்பெரும்புகழ் மன்னர்க்கு இப்போது வயது 36. இரண்டு குமாரரையும், ஒரு குமாரியையும், மூன்று பாரியையும், எனையுறவினரையும், புலவர்களையும், நட்பாளரையும் பரிதபிக்கவிட்டுப் பரமபதஞ் சார்ந்தனர். இவர் பிரிவு நம் தமிழ் மொழிக்குப் பெரிதும் நஷ்டந்தரத்தக்கதே.

இத்துக்கசமாசாரங்கேட்ட காங்கிரஸ் மகாசபையார் பெரிதும் வருந்திச் சில நிமிஷப்வரை எல்லோரும் எழுந்து மௌனமாக இருந்தனராம். அப்பெருஞ் சபையில் கனம்பெற்ற சிலர் இத்துயரைப்பற்றிப் பரிந்துபேசினராம். இவற்ருல் இவ்வரசர் புகழ்ச்சியை யொருவாறறியலாம். யாம்கொண்ட அநுதாபத்தை இப்பாநுவாயிலாக வெளியிட்டு நிறுத்துகின்றேம்..

உருக்குருகக் கல்லுருகக் கல்லாதா ருளமுநனி யுருகச் செந்தேன்
பெருக்குநிகர் பிரசங்கம் புரிவாயாய் சிவநேசப் பெரியாய் முல்லை
மருக்கமழு மாலிகையாய் மன்னர்பணி கழற்காலாய் வாணர் போற்றுந்
தருக்கரத்தாய் பாற்கரரா சேந்திரநீ யெங்கொளித்தாய் சாற்ருய் சாற்ருய் 1.

தொடையடுக்கு மதுரரசச் சொன்மாலை சூட்டிவந்து சூழ்பா வல்லார்க்
கிடையடுக்கும்இரப்பொழித்தாம்பொன்மருந்தால் இங்குவலிந்திவர்தம்பக்கங்
கடையடுக்கும் இறப்பொழிப்பாம் விண்மருந்தால் எனச்சுரருர் கலந்தாய் கொல்லோ
படையடுக்கும் பாற்கரபூ பாலாநின் சமுகம்என்று பார்ப்போம் அந்தோ 2.

தாயிலார்க் கனையாகித் தந்தையிலார்க் கீன்ருனுய்ச் சடத்தோ டாவி
நோயினுர்க் கருமருந்தாய் வறுமையுளார்க் கிருநிதியாய் நுவல வாழ்ந்தாய்
போயினுய் புவிவிடுத்துப் புகுந்துளாய் பரமனடி புரையில் நின்சீர்
வாயிலார் புகழாதார் பாற்கரபூமா தமிழு மறந்தாய் கொல்லோ 3.

நமதுபெயர்க் கியையும்வகை குணக்கடலா முகவையிடை நன்கு தோன்றித்
தமமகற்றி யிசையொளியிப் புவிக்கணெங்கும் பரப்பிவந்த தன்மைக் கேற்பச்
சிமையமடுத் தொளித்துமென்ரே பொதிகையடுத் தொளித்தனையென் செய்வே மந்தோ
கமைமிகுத்துப் புவிபுரந்த மகராஜ பாற்கரனுங் கருணைக் கோவே 4.

உலகிடத்து மழைக்குரவி யுற்பவகா ரணமெனவே யுரைத்தற் கேற்பப்
பலவிடத்தும் பிரசங்கம் பிரசங்கம் பொழிந்ததெனப் பாரித்தாங்கே
யிலகுறப்பொன் மாரிபெய்தா யியற்றமிழ்ப்பைங் கூழ்வளர்த்தா யெவருன் போல்வார்
வலன்மிகுத்த பாற்கர மாமகிபா நின்புக ழூழி வாழி வாழி.

பத்திராதிபர்.

புத்தகக்குறிப்பு.

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சுன்னுகத்தில் வடமொழி தென்மொழிப் புலமையிற்சிறந்து வித்துவசிகாமணியாகி விளங்கும் ஸ்ரீமாந் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களியற்றிய மேகதூதக்காரிகை, இலக்கணசந்திரிகை, சூடாமணிநிகண்டு ஒன்று இரண்டு தொகுதிகளின் உரை, கலைசைச்சிலேடை வெண்பாவுரை, மாவைப்பதிகம், இரட்டைமணிமாலை, விநோதச்சித்திரவிநுவுத்தாக்கவிகள் என்னும் புத்தகங்களைப் பெற்றேம்.

இவற்றுள் மேகதூதக்காரிகையென்பது வடமொழியினின்று மொழிபெயர்க்கப்பட்டது. 121 கட்டளைக் கலித்துறைகளையுடையது. போஜ, காளிதாச சரித்திரச் சுருக்கமாகிய வரலாறும், அருஞ்சொற் பொருள்கோளும் சேர்த்து அழகாகப் பதிப்பிடப் பெற்றது. ஒவ்வொரு செய்யுளும் சொல்லணி பொருளணி மிகமலிந்து ஆக்கியோர் கல்விவன்மையை விளக்குந்தன்மை வாய்ந்தது.

இலக்கணசந்திரிகை :—இது வடசொல்வேறுபாடு, எழுத்தொருப்பாடு, உபசருக்கக்கூறுபாடு, இடைச்சொற்கூறுபாடு, தத்திதாந்தப்பாகுபாடு, பெயர், வினை, உரிச்சொற்பாகுபாடு என எண்வகைத்து. ஒவ்வோர் வகையுள்ளும் கூறும் எல்லா விஷயங்கட்கும் உயர்ந்த நூல்களினின்றே உதாரணங்கள் பல காட்டப்பட்டுள்ளன. நன்னூல் கற்றபின்பே இந்நூல் கற்றல் வேண்டும். தமிழ் கற்கும் மாணுக்கர்களுக்கே யன்றிக் கற்றுப்புலவர் பண்டிதர் முதலிய பெயர் பூண்டுள்ளார்க்கும் இன்றியமையாதது. இதனுற் பெறும்பயனை முற்றுங்கூற இங்கு இடம் பற்ருதென்றே நிறுத்துகின்ரும்.

நிகண்டு செற்பொருள் :—இதில் முதலிருதொகுதிகளிலுமுள்ள எல்லாச் சொற்கட்கும் பொருள் இனிது விளங்க எழுதியிருப்பது மிகப்பாராட்டற்குரியதே. இதுகாறும் இங்ஙனம் பொருள் விளங்க உரையெழுதப்படவில்லை. யாம் நிகண்டு கற்குங்கால் இங்ஙனம் ஓர் உரையின்மைபற்றி மிக வருந்தியதுண்டு. இவ்வுரைநூல் ஒவ்வொரு தமிழ் மக்கள் கையிலுமிருத்தல் அவசியம். மற்றத்தொகுதிகட்கும் இதுபோலவே நல்லுரை யெழுதி வெளியிடுமாறு பிள்ளையவர்களைப் பிரார்த்திக்கின்றேம். இப்பிள்ளையவர்கள் பால் தமிழ் நாட்டார் மிகவும் நன்றிபாராட்டுங் கடமையுற்றவர்களேயாவர். தமிழ் மக்கள் நிகண்டு கற்றலாலடையும் பயனை யினிச்செவ்விது பெறுவரென்பது திண்ணம்.

கலைசைச்சிலேடை வெண்பாவுரை :—இரண்டாமடிகளெல்லாம் இரண்டுமூன்று பொருள்தரும் சிலேடையாகவும், ஈற்றிரண்டடிகளும் ஙமகதி

புகனாகவும் செவிக்கினிமைபயப்பச் செஞ்சொற்களாற் றொடுக்கப்பெற்ற 100 வெண்பாக்களையுடையது இந்நூல். இப்பழைய நூலுக்கு பதப்பிரிப்பும் அருஞ்சொற்பொருளும் எழுதிச் சேர்த்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

மாவைப்பதிகம் :—இது மாவைப்பதியிலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முருகக்கடவுள்மீது தோத்திரமாகக் கூறப்பட்டது. காப்பு வெண்பா ஒன்றும் ஆசிரியவிருத்தம் பத்தும் கொண்டுள்ளது. விருத்தங்கள் விழுமியபதச்செறிவுடன் பொருட்சிறப்பும், இனிய ஓசையும், கம்பீரநடையுங்கொண்டுள்ளன. இரட்டைமணிமாலை பதிகத்தையடுத்துள்ள இது. அக்கடவுள்மீதே வெண்பாவும் கலித்துறையும் மாறிமாறிவரும் 20 பாடல்களாற் றொடுத்து அணியப்பெற்றது. கலித்துறையிலோர் காப்புச்செய்யுளுமுண்டு. பதிகம்போன்று எல்லாச்சிறப்பும் பெற்றது.

விநோதச்சித்திரவினு வுத்தரக்கவிகள் :—இது 14 வெண்பாவும், 2 கட்டளைக்கலிப்பாவும், 4 கட்டளைக்கலித்துறையும், 1 விருத்தமும் கொண்டுள்ளது. ஒவ்வொரு கவியும் வெவ்வேறு விஷயங்களைப்பற்றியது. பிள்ளையவர்களது புலமைத்திறத்தை நேரிலறியார்க்கு ஒருவாறு தெரிவிப்பது. கவியியற்றும் வல்லுநரால் மிக மதிக்கற்பாலது. இதன்தன்மை விரித்தற்கு இடம்பற்றாமைக்கு வருந்துகின்றேம். இவைகளன்றியும் இப்பிள்ளையவர்கள் செய்த நூல்கள் பலவுள்ளன. நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தமிழ் வித்துவான்களுள் இப்பிள்ளையவர்களும் ஒருவர். செந்தமிழ்ப்பத்திரிகைக்கண் பல அரிய விஷயங்களை யெழுதிவருகின்றார்கள். நமது தாய்மொழியாகிய தமிழுக்கு இவர்கள் செய்துவரும் உபகாரத்தைக்குறித்து நம் தமிழ்நாட்டார் பலரும் இடையறாது நன்றிகூறும் கடப்பாடேற்றவர்களே.

உசிதசூடாமணி :—இது ஊற்றுக்குழி சமஸ்தானம் சிதம்பரக்கவிஞரால் இயற்றப்பட்டது. புரவிபாளையம் ஜமீந்தார் ஸ்ரீமான் ஜகமண்டலாதிபதி கோப்பண மன்றாடியாரவர்கள் வேண்டுகோட்கிணங்கி இதைப்பரிசோதித்து அச்சிட்டவர் திரிசிரபுரம் சோடசாத்துவயாவதான வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ இராமலிங்கம்பிள்ளையவர்களே. இந்நூல் சற்றேறக்குறைய 100 வருடத்துக்கு முற்பட்டதாம். பாயிரம், தேவசரித்திரம், வருணாச்சிரம ஒழுக்கம், ராஜசின்னம், காமசின்னம், எழுவகைப் பெண்பருவம், எழுவகை ஆண்பருவம், எண்வகை மணம், புணர்ச்சிவகை, புணர்த்தற்குறி, பிரிவின்வகை, பெண்விரகம், புருடவிரகம், விரகப்பெண்புலம்பல், [illegible], புருட

வுவமை, முப்பொருள்வகை, உதாரணவொழிபு எனப் பதினெட்டுத் தொகுப்பாக 194 விருத்தங்களையுடையது. விருத்தங்கள் செம்பாகமாக நன்கு செல்கின்றன. யாப்பறிந்து செய்யுளியற்றுவர்க்கிந்நூல் தக்கதுணைசெய்யும். இந்நூலை வெளியிடுவித்த புரவிநகர்ச் சமீந்தாரவர்கட்கும் வெளியிட்ட அவதானியார்க்கும் நமக்கனுப்பிய பொள்ளாட்சி ஸ்கூல்மாஸ்டர் மகா-ா-ா-ஸ்ரீ ஐயாக்கண்ணு முதலியாரவர்கட்கும் அன்புடன் வந்தனமளிக்கின்றேம். இதன் விலை மூன்றணாவே.

பத்திராதிபர்.

சமாசாரக்கொத்து.

இப்புதுவருஷமுதல் தந்தி ஜாஜ் மூன் 8 அணாவாக இருந்தது நாலணாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

பிரனீஸ் மலையடிவாரத்திலுள்ள அண்டோரா என்னுங் குடியரசுத் தலைவருக்கு வருஷமொன்றுக்கு மூன்று பவுண் சம்பளமாம்.

சென்னை ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தார் சொந்தக்காரர் இல்லாமல் தெருவில் அலைந்துதிரியும் நாய்களைப் போஷிப்பதற்கு ஓர் இடம் அமைத்துக்கொள்ளும்படி துரைத்தனத்தார் ரூபா இரண்டாயிரம் கொடுத்திருக்கின்றார்கள்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் 22—11—1903ல் கருவேல அறையிலிருந்து 10,000 ரூபா பெறுமான திருவாபரணங்கள் திருட்டுப்போயினவாம். கோவிற்பூசை தேவர்க்கஞ்சாது.

கோயமுத்தூரில் பிளேக்வியாதி மிகவும் பரவியிருக்கின்றது. அமார் 30,000 ஜனங்கள் ஊரைவிட்டு வேற்றிடம்புக்கார்கள். பூட்டப்பட்ட வீடுகளிலுள்ள சொத்துக்களைத் திருடர் கொள்ளையிடுகின்றனராம். இவ்வூர்க்குவந்த இக்கொடியநோய் பழநி. திண்டுக்கல், ஸ்ரீரங்கம் முதலிய சில நகரங்களிலும் எட்டிப்பார்க்கத் தலைப்படுகின்றதாம். இவ்வியாதி வராது தடுப்பதற்காக சமீபத்தில் மதுரை திருமலைநாயக்கர் மாலில் மிஷ்டர் டிஸ்திரிக்டு ஜட்ஜி துரையவர்கள் அக்கிராசனாதிபத்தியத்துடன் ஒரு சபை கூடிற்று.

சனம் கொச்சி ராஜா அவர்கள் மதுரைக்குவந்து ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுரர் தெரிசனைசெய்து இராமேசுரத்திற்குச் சென்றார். இவர் வருகையால்நேர்ந்த ஆரவாரத்தால் மதுரைத் தேவாலயத்தில் 2 தினம் மற்றவர்கட்குத தரிசனங்கிட்டல் மிகக்கஷ்டமாக இருந்தது.

தென்இந்தியா இருப்புப்பாதையில் உடைப்புகள் :—சென்ற சிலதினங்களாகப்பெய்த மழையினால் செங்கற்பட்டுக்கு எட்டுமயில் தூரத்துள்ள பட்டாளத்திலும், விழுப்புரத்தையடுத்த சேந்தனூரிலும், செங்கற்பட்டு அரங்குன்றம் கிளையில் வில்லியம்பாக்கத்திலும் உடைப்புகள் எடுத்தன. இப்போது தூற்றுக்குடியிலிருந்து சென்னைக்கு நேராக வண்டிகள் செல்வதில்லை. சென்னைக்குப் போகிறவர்கள் ஈரோட்டுமார்க்கமே செல்கின்றனர். பெண்ணையாற்று வெள்ளத்தால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் மிகுதியாக வுண்டென்றும் கெடிலம் அணைக்கட்டு உடைந்துபோயிற்றென்றும் சில கிராமங்களையும் பறைச்சேரிகளையுய வெள்ளம் அழித்துவிட்டதெனவும் தெரியவருகிறது.

சர்க்கரை தண்ணீரில் கரைவதுபோலவே தண்ணீரில் கரையும் தேயிலையானது சிலோனிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதாம்.

திவான்பகதூர் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் காலஞ்சென்றனர். இவரால் கவர்ன்மெண்டாருக்கு அநேகநன்மைகளுண்டு.

மாட்சிமைதங்கிய கொச்சி மஹாராஜா அவர்கள் சேதுயாத்திரையை முடித்து 7வ மாலை மதுரை வந்தார்கள். 8வ காலை 9மணிக்கு **தமிழ்ச்சங்கத்துக்கு** விஜயஞ்செய்து பாண்டியன் புத்தகசாலை, அச்சாபீஸ் முதலிய எல்லாவற்றையும் பார்த்துக்களிப்புற்றார்கள். அப்போது கனம் அக்கிராசனாதிபதியவர்கள் வெகு விமரிசையாக வரவேற்று உபசரித்தார்கள். இச்சமயத்தில் சரஸ்வதியிருப்பிடமாகிய தமிழ்ச்சங்கம் மகாலட்சுமியிருப்பிடமாகவும் விளங்கிற்று. ஒருமணிநேரமிருந்துவிட்டு அப்பால் துவயதுரகரதாருடராகி மால் முதலிய பிற இடங்களைப்பார்ப்பதற்குச் சென்றார்கள்.

பத்திராதிபர்.

வைத்தியம்.

தாதுபுஷ்டி லேகியம்.

சாலாமிசிரி, நிலப்பனங்கிழங்கு, சாரப்பருப்பு, கிராம்பு, பொஸ்தகக்காய், விலாமிச்சன்வேர், பூமிச்சர்க்கரைக்கிழங்கு, மூங்கிரிகை, நாட்டுநிலையாவிரையிலை, சாதிப்பத்திரி, பன்னீர்மொக்கு, குல்கந்து, கருஞ்சீரகம், சாதிக்காய், ஆலின்வித்து, அரசின்வித்து இவை வகைககுப் பலம் க (1) அபின் பலம் வ (¼) இவற்றைச் சூரணித்துக்கொண்டு செவ்விளநீர்ச்சலம் படி இ (½) ஒரு பாத்திரத்தில் ஊற்றி இதில் சீனக்கற்கண்டாவது சீனிச்சர்க்கரையாவது பலம் உ௰ (20) சேர்த்துப் பாகாக்கி நல்ல பாகுப் பக்குவத்தில் முன்சூரணத்தைச் சிறுகச்சிறுகத் தூவிக்கிளறி நெய், தேன் வகைக்குப் பலம் சுஇ (6½) சேர்த்து மறுபடியும் நன்றாய்க்கிளறி யெடுத்துவைத்துக்கொண்டு இரவில் மாத்திரம் போசனத்திற்கு ஒரு நாழிகையின்முன் தேகசுபாவம்போல் கொட்டைபாக்குப் பரிமாணமுதல் புன்னைக்காயளவுவரை உயர்த்திச் சாப்பிட்டு வந்தால் தாது விருத்தியாவதுமன்றி பித்தம் மிக்க மாதர் போகத்தால் இடைக்கிடையே சிலருக்குண்டாகுஞ் சிறுகபம், தொண்டைவலி, கண்சிவப்பு, வாந்தி, அபானஎரிவு, நித்திராபங்கம், இவை முதலியவைகளும் நீங்கும்.

நந்தேயச் செல்வக்காளையருட்பலர் காலையிற் றுயினீத்தெழுந்தவுடன் நிமிர்ந்து நடக்கமுடியாமற் சற்றுக் குனிந்த நடையினராய் ஏப்பமிட்டுக்கொண்டு 10 மணிவரை மிகச்சோம்பித்திரிவதை நாம் பார்க்கின்றோம். இதற்குக் காரணம் தேகசுபாவத்திற்கு மிஞ்சிய மாதர் சேர்க்கையேயாம். இச்சேர்க்கை அதிகரிக்கவே அரிதாகக்கிடைத்த தேகத்தில் மேகவாய்வு குடியேறித் தங்கள் சொந்தக்காரியந் தீர்ந்தபின்னுள்ள நேரத்திலும் நல்ல நித்திரை வரவொட்டாது தடுத்து இடைக்கிடையே வாய்பிதற்றதலுங் கனவு காணலையுமுண்டாக்கி நித்திராபங்கஞ்செய்து காலையிற் பக்கங்களை பிழுத்துக்கொள்வதாலன்றோ நவீனநடையைப் பழகிக்கொள்ளவேண்டியிருக்கின்றது.

இப்பிணிக்கூட்டத்தி லகப்பட்டோர் இந்த தாதுபுஷ்டி லேகியத்தைச் சிலகாலம் முறையாய்ச் சாப்பிட்டு வருவாராயின் அரோகதிடகாத்திர தேகிகளாவதற்கோ ரையப்பாடுமில்லை.

செல்வர்கள் இந்த லேகியத்தை முடித்துச்சாப்பிட விரும்பின் இதற்குச் சொல்லிய அளவு நெய்யில் தமக்கேற்ற சுவர்னரேக்கையிட்டுருக்கி லேகியத்தில் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொண்டு புசிப்பாராயின் மிக்க நலம். சுவர்னரேக்கில்லாமலுஞ்செய்து சாப்பிடலாம். இச்சாபத்தியம்.

சுகபேதிச் சூரணம்.

சூரத்துநிலாவிரையிலை, ரேவல்சின்னி, சுக்கு, கடுக்காய்த்தோல், நற்சீரகம், வாலுழுவையரிசி, கருவாப்பட்டை, சுற்ருமரைக் கிழங்கு, இவற்றைச் சமமாயெடுத்துச் சூரணித்து இதற்குச் சமம் சீனிகூட்டி வைத்துக்கொண்டு தேகசுபாவம்போல் கால்விராகனிடை சூரணத்திலிருந்து உயர்த்திக் கொடுக்கலாம். இதனைப் பேதிக்கெடுத்துக்கொள்வதால் வாதபித்த சிலேட்டுமமென்னும் மூன்று வகையான நீர்களும், மலக்கட்டும், மலபந்தமும், கிருமிகளும் நீங்கிச் சுகமடையலாம்.

பித்தஹரச் சூரணம்.

கல் உமி போக்கிய சீரகம், பலம் ௰ (10) கொத்துமல்லி, அதிமதுரம், சதகுப்பை, முற்றியவேம்பின் பட்டை வகைக்குப் பலம் 2 கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல் இவைகளின்மேல் தோல் வகைக்குப் பலம் ௧ (1) இந்துப்பு பலம் ௨ (½) இவற்றைச் சூரணித்து மொசுமொசுக்கைத்தழை, கீழ்வாய் நெல்லிசமூலம், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், நார்த்தம்பழம் இவற்றின் ரசத்தால் ஒவ்வொருநாளும் தனித்தனிப்பிசைந்து நிழலிலுலர்த்திச் சிறிய கட்டிகளும் உடையும்படி மறுபடியும் இடித்து வஸ்திரகாயஞ்செய்து இதற்குச்சமன் சீனிகூட்டிப் புதிய கலயத்திலிட்டு வைக்கவும்.

உபயோகம்:—வேளைக்கு ஒரு விராகனிடை சூரணத்தை வாயிலிட்டு உமிழ்நீரை மெதுவாய் விழுங்கி கரையக்கரையச் சற்றுத் தாமதமாய்ச் சாப்பிட்டு வரல்வேண்டும். இப்படிச் சாப்பிட்டு வருவதால் 40 வகைப்பித்த ரோகங்களும் குணமாகும்.

குறிப்பு:— நாக்கில் கொப்புளங்கள் கண்டு தடிப்பாயும் இனிப்பாயும் நீர் சுவறிக்கொண்டிருக்கிற மதுரபித்தத்திற்கும் வாய் நாக்கு உலர்ந்து தேகமெல்லாந் தினவெடுத்துத் தடிப்பை யுண்டாக்குகின்ற தத்துரு பித்தத்திற்கும் வாயில் சிறு கொப்புளங்கள் கண்டு உடைந்து துர்க்கந்தம் வீசி மார்பில் சகிக்க வொண்ணு வெரிச்சலை யுண்டாக்குகின்ற ஆசியாப்பக பித்தத்திற்கும் இச்சூரணத்தைப் பிரயோகிப்பதிற் பயனில்லை. இதுவன்றிப் பித்தரோகங் குடிகொண்டு தேகத்தில் சிறிதும் பெரிதுமான ரணங்களையுண்டாக்கி வருத்தப்படுத்திய பின்னர் இதனையுபயோகித்துக் குணங்கண்டதில்லை. இதனை ஆரம்பத்திற் சாப்பிட்டால் தப்பாது குணங்காணலாம்.

(இன்னும்வரும்)

வீ. சா. ஐயன்பிள்ளை.

1-MAR1904
MADRAS.

ஶ்ரீ துணை.

விவேகபாநு.

ஒரு மாஸாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904௵ பிப்பிரவரி௴ { புத்தகம் 2.

வித்தை:—முற்கால தற்கால நிலைமை.

இவ்வுலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் அறிவை அபிவிருத்தி பண்ணினவர்களில் இந்துக்களே முதன்மை பெற்றவர்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற விஷயம். இருக்கு வேதமே இவ்வுலகின் கணுள்ள நூல்களிலெல்லாம் பழமையானது. அதற்கு முன் ஒரு நூலும் இவ்வுலகில்வழங்கி வந்ததாகப்புலப்படவில்லையென்பது கல்விமான்களின் துணிபு. இக்கொள்கை எச்சாதிக் கல்விமான்களுக்கும் உடன்பாடானதே. அநாதியாய் இந்துக்களைப் போல் கல்வியைக் கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தவர்கள் அரிதென்றே சொல்லலாம். ஏனைய சாதியாரெல்லாம் கல்வியை மிக்க ஊக்கத்துடன் காப்பாற்றி வந்தவர்களானாலும் அவரெல்லாம் பிற்காலத்தே அவ்வாறு செய்து வந்தனர். இந்துக்களே கல்வியை முதல் முதல் தெய்வமாகக் கொண்டாடி வந்தவர்கள். சரஸ்வதி தேவதையை என்றும் போல் இன்றும் பூஜித்து வரும் வழக்கம் அவர்களிடமே குடி கொண்டிருக்கிறது. "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று குருவைக் கடவுளுக்குச் சமமாய்ப் பூஜித்து வரப்பட்ட ஜாதியார்களும் அவர்களே. வித்தியாப்பியாசத்தை ஒரு பெரும் மதச்சடங்காகக்கொண்டு அச்சடங்கைச் சீரும் சிறப்புமாய்ப் பெரும் பொருட் செலவில் நடத்தப்பட்ட ஜாதியார் இவ்வுலகில் வேறொருவரிருக்கிறார்களோ என்பது சந்தேகமே. எப்படிப்

பட்ட ஏழையும் தன் குழந்தைக்கு க்ஷராப்பியாசம் தொடங்கு நாளில் குறைந்த மட்டில் அரைக்கால் ரூபாவாவது செலவு செய்து தெய்வ வழிபாடு செய்து தொடங்குவான். இவ்வித வழக்கம் நம் இந்து தேசத்திலேயே தொன்று தொட்டு வழங்கிக்கொண்டு வருகிறது. செல்வவான்கள் இவ்விஷயத்தை ஆயிரம் ஐந்நூறு செலவிட்டுச் சிறப்புற நடத்துகிறார்கள். ஒரு சிறு கல்யாணம் போலவே கொண்டாடுகிறவர்களும் அநேகர் இன்னும் நம் தேசத்தில் இருந்து வருகின்றனர். "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" என 'மதிக்கும் நாடு இதுவே. அவ்வாறு மதித்து வந்த நம்மவர் அக்கல்வியை எவ்வாறு தொடங்கி அபிவிருத்தி செய்து வந்தார்களெனப் பார்ப்போம். ஸ்ரீமத் இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்கள் இவ்விஷயத்தில் நமக்குச் சில உண்மைகளை வெளியிடுகின்றன. அவையாவன. பாலசிக்ஷையானது தக்க அறிவு முதிர்ந்த பெரியோர்களால் நடத்தி வரப் பெற்றதென்பதும், தொட்டி முதல் தொண்டை மான் வரை தங்கள் குழந்தைகளைக் குருகுல வாசம் செய்வித்து வந்தார்களென்பதும், கல்வி பயிற்றுங்கால் "ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" எனவும் "ஒழுக்கமுயர் குலத்தினன்று" எனவும் மொழிந்த மூத்தோர் சொற்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு நடத்தி வந்தனர் என்பதும் இன்னுமிவை போன்ற சிற்சில விஷயங்களுமே. அவ்வழக்கங்கள் இக்காலத்தில் முற்றிலும் மாறி விட்டன. சிறுவர் கல்வி பெரியோர் கையினின்றும் வழுவி மிகச் சீர் குலைந்துவிட்டது. குருகுலவாசம் கூட்டோடே கைலாசம்போய்விட்டது. ஒழுக்கமென்பதோர் இழுக்கமடைந்தது. ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்துருக்கனர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தவர்கள் மகான்களாகிய வசிஷ்டரும் விசுவாமித்திரரும். பாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் கற்பனாசிரியர்கள் கிருபாசாரியாரும் துரோணரும் பீஷ்மாசாரியருமே. ஸ்ரீ கிருஷ்ண பகவான் குசேல முனிவருடன் கல்வி பயின்றது சாந்தீப முனிவரிடம். இவ்வுத்தம ஆசிரியர்கள் கல்வி கரை கண்ட மகான்கள். இக்காலத்திலோ நம் நாடு இவ்விஷயத்தில் சீர் குலைந்திருப்பதை உற்று நோக்குங்கால் அம்மம்ம ! மயிர்க்குச்செறிக்கின்றதே.

"தடியெடுத்தவனெல்லாம் தண்டற்காரன்" என்ற வண்ணம் எவரும் இலகுவில் போதகாசிரியராய் வந்துவிடலாம். ஒரு வேலையும் கிடைக்கவில்லையென்றால். "ஏன் சும்மா குந்தியிருக்கிறாய்? ஒரு வாத்தியார் வேலைகூட உனக்குக் கிடைப்பதரிதாய்விட்டதா? நார்மலஸ்கூலுக்காவது போனால் நான்கு ரூபா சம்பளம் கிடைக்குமே. ஏன் வீணில் முழங்காலைக் கட்டிக்கொண்டு சும்மாகுந்தியிருக்கிறாய்?" எனச் சாமான்யஜனங்களுஞ் சொல்வதைக்கேட்டு நம்காது செவிடுபட்டுப்போயிருக்கிறது. நேடாலுக்குப் போகக்கூலியாள் பிடிப்பதுபோல் போதனாமுறைப்பாடசாலைகளுககு ஆள்பிடித்து அனுப்பி அன்னவர்களுக்கு ஆண்டுநிறைந்தவுடன் ஆசிரியர்முத்திரைபோட்டு அனுப்பிவிடுகிறார்கள். அவர்களேநம் சோமசன்மாக்களும் துரோணருமாய் வழங்குகிறார்கள். ஆசாரிய அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் போலவே அவர்களும் தங்களுக்குநிகர் இவ்வுலகில் ஒருவருமில்லையென்றுதான் நினைக்கிறார்கள். கட்டிடத்துக்கு அஸ்திவாரமே முக்கியம். அதனிடம் கண்ணுங்கருத்துமாயில்லாமல் மேற்கட்டிடம் எத்துணைசிறப்பாய்க்கட்டியுமென்ன? பயனற்றதாகவே முடியும். அவ்விதமே பாலசிக்ஷையைச்சரிவரக்கண்ணோக்காமல் உயர்தரக்கல்விக்கு இலக்ஷக்கணக்காய்ச்செலவிட்டும் யாது பயன்? குழந்தைப்பருவத்தில் தக்க அநுபவமுள்ளவர்களால் அக்குழந்தைதக்கவண்ணம் போஷிக்கப்பட்டு மிகக்கருத்துடன் வளர்க்கப்படாவிடின் வயது சென்ற பிறகு எத்துணை போஷணைகள் செய்தும் பயன்படுமா? ஐந்திலவளைப்பது எளிதாமேயன்றி ஐம்பதில் வளைப்பது எளிதாமோ? இது விஷயத்தில் நம் தேசத்தார் நீள நினைந்து செய்யவேண்டிய கடமைகள் பலவுள. அவைகளை அவ்வப்போது நம் பத்திரிகை வாயிலாய் விளக்கி வருவோம். அவிவேகம் என்னும் அந்தகாரத்தை நீக்கி விவேகம் என்னும் விண்மணியை விளக்கஞ் செய்வதே நம் பத்திரிகை பூண்ட முதற்கடமை என்பது நம் பத்திரிகையின் பெயராலேயே புலப்படும். "அறிவுடையார் எல்லாமுடையர்" என்பது பொய்யா மொழி.

பத்திராதிபர்.

ஓஷதி சாஸ்திரம். (Botany)

1—புஷ்பங்களும் அவைகளின் அமைப்பும் தொழிலும்.

ஓஷதிகள் அணுப்பிரமாணமுதல் ஆகாயத்தில் அளாவும் பெரிய விருக்ஷங்கள் ஈறாகப்பலவகைப்பட்டு இருக்கின்றன. அவைகள் பொதுக் குணங்கள் நோக்கியும் சாமான்ய தர்மங்களைநோக்கியும் புஷ்பிக்கிறவர்க்கமென்றும் புஷ்பியாத வர்க்கமென்றும் இருவகைப்படும். இதுபற்றியே "பூவாதேகாய்க்குமரமுமுள" வென்று நம் ஒளவையாரும் கூறியிருக்கின்றனர். புஷ்பிக்கிறவர்க்கம் (1) இரட்டைப்பருப்புள்ளவைகளென்றும் (Cotyledons) (2) ஒற்றைப்பருப்புள்ளவைகளென்றும் இருவகையாம். அவரை, துவரை, கடலைமுதலியவர்க்கங்களும் புளியம்விதை, பாகல், புடல், வெள்ளரிமுதலியவைகளும் இரட்டைப் பருப்புள்ளவகைக்கு உதாரணங்களாம். அரிசி, கோதுமைமுதலிய தானியங்களும் தென்னை, பனை முதலியனவும் ஒற்றைப்பருப்புள்ள ஓஷதிகளுக்குஉதாரணங்களாம். பருப்புக்களின் பயன். குழந்தைகளுக்குப்பால்யாவஸ்தையிலிருக்குங்கால் கடினமான அன்னமுதலியவஸ்துக்களைஉண்டுஜீரணிக்கும் சக்திகிடையாது. அதனால் ஈசுவரன் தாயினிடம் பாலையுண்டுபண்ணி அக்குழந்தைகளைப்போஷிக்கிறார். முட்டைகளில் குஞ்சாகக்கூடிய மஞ்சள்கருவானது விருத்தியடைவதற்கு அதனுள்ளேயே வெள்ளைக்கருவை அதற்கு உணவாக ஈசுவரன் அமைத்திருப்பது யாவரும் அறிந்தவிஷயம். இதனாலன்றோ "கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்றமுதளிக்கும் மெய்யன" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். அக்காரணங்கொண்டே வித்தில் சூட்சுமமாக இருக்கின்ற சருக்கள் செடியாகவும் மரமாகவும் உண்டாகின்றன. ஜலசத்தையும் வாயுசத்தையும் கிரகித்துத் தன்மயமாக்கும் யோக்கியதை அவைகளுக்கு இல்லாதிருக்கும் ஆதிநிலைமையில் அவை பூமிக்குள் வேரூன்றவும், மேல் முளைகிளம்பவும், இரண்டு இலையாவது விடவும் யோக்கியதை உண்டாகும்படி ஈசுவரன் உணவை அவைகளுக்குப் பருப்பிலேயே அமைத்திருப்பதின் அற்புதத்தை என்சொல்வது. மேற்கூறிய ஒவ்வொரு வகுப்பிலும் ஓஷதிகள் சில சாமான்யதர்மங்களின் ஆதாரத்தின்மேல் குடும்பங்களாகவும் உட்பிரிவுகளாகவும் பலவாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றிப்பின்னொருசமயம் எடுத்துரைப்போம். தற்காலம் ஓஷதிகளின் ஒரு பாகமாயமைந்து கண்டவர் மனமும் கண்ணும் கவர்ந்திட வனப்புவாய்ந்த புஷ்பங்களைப்பற்றிச் சிறிது விசாரிப்போம்.

அவைகளின் அமைப்பு. (1) இன்றி அமையாத உறுப்புக்களென்றும், (2) உபஉறுப்புக்களென்றும் இருவகைப்படும். இன்றியமையாத உறுப்புக்களாவன:—சுக்கிலம் (ஆண்சத்து) உள்ளகரணங்கள். சுரோணிதம் (பெண்சத்து)

உள்ளகரணங்கள். அவைகளை முறையே ஸ்டேமன்ஸ் (Stamens) என்றும் பிஸ்டில்ஸ் (Pistils) என்றும் ஆங்கில சாஸ்திரிகள்கூறுவர். பெரும்பாலும் ஒருபுஷ்பத்தின்மத்தியிலிருப்பது சுரோணிதகரணமென்றும் அதனைச் சுற்றியவட்டம் சுக்கிலகரணங்களுள்ளதென்றும் அறிக. உப உறுப்புக்களாவன:—வர்ணஇதழ்களென்றும் (Carolla) அவைகளைத்தாங்கும் அடிமடல்களென்றும் (Calyx) இருவகைவட்டரூபங்களாம். இந்நால்வகை உறுப்புக்களுமுள்ள புஷ்பத்தைப் பூரணபுஷ்பமென்றும் இவைகளில் ஏதேனும் ஓர் அங்கம் குறைந்திருக்கும்பக்ஷத்தில் அங்கவீனபுஷ்பம் (அங்கம் குறைந்தபுஷ்பம்) என்றும் கூறுவார்கள். சுக்கிலசுரோணிதகரணங்கள் ஒரேபுஷ்பத்தின்கண் இல்லாமல் சுக்கிலகரணமுள்ள புஷ்பமென்றும் சுரோணிதகரணமுள்ள புஷ்பமென்றும் வெவ்வேறு புஷ்பங்களாக ஒரேசெடியில் அமைந்திருப்பதையும் காணலாம். மனிதர்களிலும் மற்றஜீவராசிகளிலும் அமைந்திருப்பனபோலவே இப்புஷ்பங்களும் ஆண்பெண்களாக வெவ்வேறாய் அமைந்திருக்கின்றன. உதாரணமாக பரங்கி, பூசணி, புடல், பாகல், பீர்க்கு, இவைகளை எடுத்துக் கொள்வோம். இவற்றில் நம்மவர் கொட்டை அல்லது காயில்லாப் பூவை ஆண்பூவென்றும் கொட்டையுள்ள பூவைப் பெண்பூவென்றும் கூறுவது வழக்கம். சிலசமயங்களில் ஆண்பூ ஒரு செடி, கொடி அல்லது மரத்திலும், பெண்பூ வேறு செடி கொடிமரத்திலும் இருப்பதுமுண்டு. உதாரணமாகப் பனைமரத்தைப்பார்க்கலாம். ஓஷதிகளெல்லாம் ஜீவரூபங்களே. இக்கொள்கை நம்மவரிடத்தும் ஆங்கிலசாஸ்திரிகளிடத்துமுண்டு. புஷ்பிக்கிற வர்க்கங்களெல்லாம் அநேகமாய்ச் சுக்கில சுரோணிதகரணங்கள் சம்பந்தப்பட்டு அதன்மேல் கருத்தரிக்கின்றன. ஒரே புஷ்பத்தில் ஆண் பெண்கரணங்கள் அமைந்திருக்கும்பக்ஷத்தில் அவைகள் சம்பந்தமுண்டாகிக் கரு உற்பவிக்கும். அவ்வாறின்றி வேறு புஷ்பங்களில் அல்லது வெவ்வேறு மரங்களில் ஆண் பெண் கரணங்கள் வேற்றுமைப்பட்டிருந்தால் சுக்கிலசுரோணிதங்கள் எவ்வாறுசேரமுடியும்? சேராவிடின் எவ்வாறு கருத்தரிக்கும்? பூந்தோட்டங்களில் காலையிலும் மாலையிலும் புஷ்பிக்கின்ற புஷ்பங்களைப் பார்ப்போமானாலும் புஷ்பிக்கின்ற நெற்பயிர்களைப்பார்போமானாலும் பற்பல வர்ணங்களுள்ள அழகான வண்டுகள் பூச்சிகள் நூல்யந்திரசாலையில் நூல் பாவோடும்வண்ணம் சுறு சுறுப்பாய் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இவை யாதொரு வேலையுமின்றித் திரிந்துகொண்டிருக்கிற நம் சோம்பேறிகளைப்போல் வீணாய்த் திரிந்துகொண்டிருக்கிற பிராணிகளல்ல. இரண்டுகாரியங்கள் செய்து முடிக்கின்றன. ஒவ்வொருவண்டும் அல்லது ஈயும் உணவு தேடும்பொருட்டுப் புஷ்பங்கள் தோறும் போய் ஒவ்வொரு புஷ்பத்தின் அடிக்குழலில் நுழைந்து அங்கிருக்குந் தேனைக்குடித்து மெழுகுக்குவேண்டிய சத்தைக் கிரகித்துக்கொண்டு தன்

தன் இருப்பிடத்துக்குச் செல்கின்றது. இஃது அது அறிந்துசெய்யுங்காரியம். அவ்வண்டு அறியாமல் ஈசுவரப் பிரயத்தனை பூர்வமாய்ச் செய்யப்பட்ட காரியம் மற்றொன்று. அஃது ஒரு பெரு ஆச்சர்யமான காரியம். அக்காரியம் நிறைவேறும் பொருட்டே முன் ஆண்டுதலாக ஈசுவரன் புஷ்பங்களில் தேன், வாசனை மகரந்தங்கள் முதலியவைகளை யமைத்திருக்கிறார். வண்டானது பூவினிடஞ் சென்று அப்பூவின் மையத்தைச்சுற்றியிருக்கின்ற ஆண் கரணங்களைச் சார்ந்து உள் நுழைந்து பூவின் அடிப் பக்கத்திலுள்ள தேனைக் குடிக்கப் புகுங்கால் அவ்வாண் கரணத்திலுள்ள சுக்கிலடடங்கிய பூந்தாதுகள் (pollen grains) அவ்வண்டின் மூக்கில் படிந்து ஒட்டிக் கொள்கின்றன. அவ்வாறு மூக்கில் பூந்தாதுகளுடன் செல்லும் வண்டு மறுபடியுந் தேனை நுகர எண்ணி சுரோணித கரணமுள்ள பெண் பூவிற்குச் செல்லுங்கால் மூக்கிற்படிந்த சுக்கில தாதுக்கள் சுரோணித கரணங்களைத் தீண்டுகின்றன. அச்சமயம் அப்பூந்தாதுகள் அவைகளில் படிந்து ஒட்டிக் கொள்ளுகின்றன. இப்பெண் பூக்களிலுள்ள சுரோணித கரணத்தினுடைய மேற்பாகம் ஒட்டிக்கொள்ளும் படியான தைல சத்துள்ளதாய் அமைக்கப் பட்டிருக்கிறது. அதனால் சுக்கிலதாதுகள் படிந்தவுடன் சுரோணித கரணங்கள் அவற்றை வெளியில் விடாமல் தம்முள் கிரகிக்கும் சக்தியுள்ளனவாகின்றன. சில புஷ்பங்களுக்கு மேற்கூறிய தைல சத்து இல்லை. ஆனால் வலை வலையாயிருக்கின்ற ஒரு கவசம் சுரோணித கரணத்தின் நுனியில் அமைந்திருக்கின்றது. அதனால் மகரந்தப்பொடிகள் சுரோணித நுனியில் படிய வலையிலகப்பட்ட மீன்போல் ஆய்விடுகின்றன. அவ்வாறு அவை அமைந்தபின் பூந்தாதின் வெளிக்கவசம் நீண்டு, நுண்ணிய குழல் ரூபமாகி புஷ்பத்தின் அடிப்பாகத்திலிருக்கின்ற சுரோணிதப்பையை எட்டுகின்றது. அக்குழல் மூலமாய் சுக்கிலசத்து சுரோணிதப்பையில் சம்பந்திக்கவே, பை வெடித்து இரண்டு சத்தும் ஒன்றுபடுகின்றது. இதைத்தான் கருத்தரிக்கின்றதென்று நாம் கூறுகிறோம். இதுவே காலக்கிரமத்தில் வித்தாகவிளைகின்றது. அனேகமாய் உலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் (மனுஷன்முதல் ஓஷதிகள் ஈறாக) மேற்கண்டவிதம் பல்கிப் பெருகுகின்றன. ஓஷதிகளில் வேறுபாடுள்ள எத்தனையோ வித்துக்கள் இருக்கின்றன. மற்ற ஜீவராசிகளில் எத்தனையோ ஜீவ வகுப்புக்களிருக்கின்றன. ஒவ்வொரு ஜீவ வகுப்பிலும் வெவ்வேறான உட்பிரிவுகளுண்டு. அவை எல்லாவற்றிலும் உண்டாகும் மூலக்கருக்களை உயர்ந்த பூதக்கண்ணாடியினால் பரிசீலனை பண்ணிப்பார்ப்பதில் ஒன்றுக்கொன்று யாதொரு வித்தியாசமுமிருப்பதாகப் புலப்படவில்லை. "மானுட மூலகருவின் வளர்ச்சியைப்பார்க்கின் முதல் முதல் சுக்கில சுரோணித சம்பந்தம் நேர்ந்து கண்ணுக்குப் புலப்படாத சிறு அண்டமாய் உற்பவிக்கும்போது செடிகளின்கருக்களுக்கும்

அதற்கும் சிறிதும் வித்தியாசமில்லையென்றும் நாளடைவில் வித்தியாசம் சொற்பம் சொற்பமாய் உண்டாகிப் பிராணிகளின் சொரூபம் அமைந்தும் பின் பிராணிகளின் பதவி படிப்படியாய் ஏறி ஏறிப் பரிணமித்துக் கடைசியாய் மனிதவடிவத்தை அடைகின்றது என்றும் ஓர் ஆங்கில பண்டிதர் கூறுகிறார் ஆதியில் வெளிப்படையாய் வித்தியாசங்கள் ஜீவகோடிகளின் மூலகருக்களிலில்லாமலிருந்தாலும் பின்னர் வித்தியாசங்கள் பலவாறாக உண்டாகிறபடியால் இவ்வித்தியாசங்களுக்கு ஆஸ்பதம் சூட்சுமமாகக் கருக்களில் அமைந்துதானிருக்க வேண்டும். அந்தச்சூட்சும வித்தியாசங்களை மனோகற்பனாசக்தியால் ஆய்ந்து பார்க்குங்கால் ஈசுவரனது இச்சாரூபமான மனச்சலனமே அவ்வவ் வித்தியாசங்களாகப் பரிணமிக்கதென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஈசுவரனே பிரபஞ்சமாகி அதில் மறைந்திருக்கிறானென்ற வேதக்கருத்தை ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமானும்:—

" பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி" என்றும்,

" நிறைந்த ஆகாய நீர் நிலந்தீகால் ஆயவையல்லாய்
ஆங்கேகரந்த தோர் உருவே" என்றும்

திருவாய்மலர்ந்தருளினார்.

சுக்கிலசுரோணித பாகுபாடுகளில்லாமல் அபிவிருத்தியாகும் ஜீவராசிகள் சில வுண்டு. அவைகளைப்பற்றி வேறுசமயத்திற்கூறுவோம்.

வெவ்வேறு புஷ்பங்களிலிருக்கும் சுக்கில சுரோணித சத்துக்கள் சேரும் வண்ணம் வண்டுகள் துணைக்கருவிகளாக இருக்கின்றனவென்று முன் கூறினோம். புஷ்பங்களிலுள்ள தேன், மகரந்தம் இவைகள் மட்டுமே வண்டுகளுடைய மனத்தைக் கவர்ச்சி செய்யும் சாதன உபாயங்களாக மாட்டா. வேறு சாதன உபாயங்களுமுண்டு. புஷ்பங்கள் பற்பல அழகான வர்ணங்களாயமைந்திருக்கின்றன. தாமரை, ரோஜா முதலிய பூக்கள் இன்பமான சிவப்பு வர்ணமுள்ளவைகளாகவும், நீலோற்பலம் காயாம்பூ, முதலிய புஷ்பகள் அழகிய நீலவர்ணமுள்ளவைகளாகவும், கொன்றை, மந்தாரை, மகிழ், சம்பங்கி, சண்பகம் முதலிய புஷ்பங்கள் மஞ்சள் நிறமுள்ளவைகளாகவும், அந்திமந்தாரை பகட்டான ஊதா வர்ணமுள்ளதாகவும், சாதிமல்

விகை, முல்லை, இருவாக்ஷி, பனிநீர், தும்பை முதலியன வெண்மை நிறமுள்ளவைகளாகவும், பாரிஜாதம், பவளநிறமும் வெண்மையும் கலந்ததாகவும் இருக்கின்றன. இவைகளெல்லாம் மனிதன் மனத்தையும் கண்களையும் மட்டும் களிப்பிக்கச் சிருஷ்டிக்கப்பட்டனவா? அல்லது வேறு காரணம் பற்றியுமோ? மனிதன் செருக்குக்கொண்டு தன்னிமித்தமே ஈசுவரன் புஷ்பங்களைச் சிருஷ்டித்ததாகக் கூறி மனமகிழ்ச்சி கொள்ளட்டும். ஆனால் அவரது உட்கருத்து உண்மையிலேயே வேறு என்பதிற் சிறிதும் ஐயமில்லை. பற்பல வர்ண இதழ்களோடு கூடிய இப்புஷ்பங்களைச் சிருஷ்டித்ததின் முக்கிய நோக்கம் வண்டு முதலிய பூச்சிகள் அந்நிறங்களால் கவரப்பட்டு அம்மலர்களை நாடவும் அதனால் அவை அம்மலர்களிலுள்ள பூந்தாதுகளை வேறு மலர்களில் கொண்டுபோய்ச் சேர்த்து ஓஷதிகளை அபிவிருத்தி செய்வதுமே. பகட்டான வர்ணங்களையுடைய புஷ்பங்களுக்கு வாசனை அநேகமாயிருப்பது துர்லபம். வாசனையுள்ள புஷ்பங்களுக்குப் பகட்டான நிறமிருப்பது அபூர்வம். வண்டுகளின் கண்களைக் கவரும்படி புஷ்பங்களில் பகட்டான வர்ணங்களையும் அவைகளின் மூக்கைக் கவரும்படி அவற்றில் இனிமையான வாசனையையும் அமைத்திருக்கும் ஈசன் செயல் அம்மம்ம! அதி ஆச்சரியமானது. இவைநிற்க. வர்ணப்பூக்களெல்லாம் வெகுவாய்ப் பகற்காலம் மலருமியல்பையுடையன. இரவில் மலர்ந்தால் வண்டினம் அவைகளைப் பார்க்கமுடியாமற் போய்விடும். மலர்ந்தவுடன் பூந்தாதுகளை வண்டுகள் கொண்டுபோய்ப் பெண் புஷ்பங்களில் சேர்ப்பிக்காமற் போனால் பூந்தாதுகள் உதிர்ந்து வீணாகுமன்றி அவற்றின் சக்தியும் சிறிது குறைவுபடும். இக்காரணங்கொண்டே எல்லாம் வல்ல ஈசன் புஷ்பங்கள் மலரவும், உடனே வண்டினங்கள் நாடவும், பூந்தாதுகளை எடுக்கவும், அவைகளைப் பெண் பூக்களில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் அதனால் ஓஷதிகள் பல்கிப் பெருகவும் இம்மாதிரி எல்லாத்தொழிலும் தொடர்ச்சியாய் கணப்பொழுதில் நடக்கும்படி ஏற்படுத்தியிருக்கிறார். இராக்காலங்களில் மலர்கின்ற புஷ்பங்கள் அநேகமாய் வெண்மைநிற முடையன. அவை அநேகமாய் வாசனை யமைந்தவையாதலால் வண்டுகளைப் புஷ்பித்தவுடன் வரும்படியான சக்தியுடையன வாகின்றன.

[இன்னும் வரும்]

ப. நாராயணய்யர்.

சைவசித்தாந்தம்.

[தொடர்ச்சி.]

காற்றை வயிற்றில் ஆகருடணஞ் செய்து பூரித்தல் பூரகமென்றும் நீர் நிறைந்த குடம்போலச் செறிதர வாயுவை வயிற்றிற் றரித்தல் கும்பகமென்றும் வயிறு கலந்த காற்றை அவ்வயிற்றினின்றும் வெளியே விடுத்தல் இரேசகமென்றும் கூறப்படும். இந்தப் பிராணாயாமத்தைச் செய்திடுங்கால் வேர்வையுண்டாகில் அதமம். நடுக்கம் உண்டாகில் மத்திமம். உத்தானம் உண்டாகில் உத்தமம். உத்தமமாகிய இது கிடைப்பளவும் அவ்விரண்டையும் தவிரற்க. ஒருவனுக்கு இந்தப்பிராணாயாமத்தினால் சித்த சுத்தியும் அதனால் மனம் சிவத்தில் திடமுறப் பற்றுதலும் அதனால் பரசிவக் கலப்பிலுற்று ஒளிர்ந்திடுதலும் அதனால் பரமுத்தியும் சித்திக்கும். இப்படியன்றி இரேசக பூரகங்களை நீக்கி கும்பகத்தையே நிலையுறச் சாதனஞ் செய்யில் பாதகங்களெல்லாம் நீங்க ஞானத்தை விரைவிலடைவான். மேன்மையோடுங் கூடிய இந்தப் பிராணாயாமத்தை யெப்பொழுதும் அப்பியாசஞ் செய்வோனுக்கு யாதொரு குற்றமும் உண்டாகாது. கிடைத்தற்கரியன எவ்வுலகத்தினு மில்லை. ஆதலால் சர்வ முயற்சியாலும் அந்தப் பிராணாயாமத்தை அப்பியாசம் பண்ணி வரவேண்டும். அப்பியாசம் பண்ணத் தக்க காலங்களாவன:—சந்தியா காலங்கள், பிராம முகூர்த்தம், நண்பகல் முதலியனவாம். காற்றை ஆகருடணஞ் செய்து வயிற்றில் பூரித்து நாசிநுனியினும் நாபி மத்தியினும் பாதத்திற் பொருந்திய அங்குட்டத்தினும் தாரணம் பண்ண வேண்டும். இவ்வாறு அனுட்டிப்போன் சகல ரோகங்களுமின்றி நூறாண்டு ஆசையோடு சீவித்திருப்பானென்று வேதங் கூறும்.

தாரணத்தை நாசி நுனியிற் செய்யில் அவனுக்கு வாதம் வசப்படும். நாபி மத்தியிற் செய்யில் நோய்களெல்லாம் நீங்கும். பாதத்திலுள்ள அங்குட்டத்திற் றரித்தால் சரீரம் கனமின்றி இலகுவாகும். நாவினால் காற்றை ஆகருடணஞ் செய்து நலமுற அமிர்த பானம் பண்ணுவானேற் சகல ரோகங்களும் நீங்கும். நாவினால் காற்றை ஆகருடணம் பண்ணி நாவடியினில் அமைதரச் சித்த தாரணம் பண்ணி அமிர்த பானஞ் செய்யில் தேவர் புகழும் இன்பம் பல உண்டாகும். இடகலையால் ஆகருடணஞ் செய்து காற்றைப் புருவ மத்தியில் தாரணஞ் செய்து அமிர்த பானஞ் செய்வானாகில் வியாதிகளெல்லா நீங்கும். இடகலை பிங்கலைகளால் காற்றை இழுத்து நாபியிற் றரித்தாலும் ரோகங்களெல்லா நீங்கும்

ஒரு மாதம் மூன்று சந்தியினுந் தடையின்றிக் காற்றை நாவினு லிழுத்துச் சித்தத்தைத் தன் நாபியின் பக்கத்திற் றரித்தால் வாதமே முதலாகச் சொல்லுகின்ற பல தோடங்களு நீங்கும். இரண்டு நாடிகளால் காற்றை ஆகருடணஞ் செய்து இரண்டு நேத்திரங்களினும் சிரத்தினும் காதுகளினும் தாரணஞ் செய்தால் அந்த அந்த இடங்களி லுள்ள பிணி நீங்கும். சுவத்திகாசனத்தி லிருந்து குற்றமில்லாத மனதை யுடையவனாய் அபான வாயுவை மிருதுவாக பிரணவத்தோடும் இழுத்து அங்குட்டத்தால் செவியை மூடி தற்சனியினால் கண்ணை மூடி மத்திமையினால் நாசியை மூடிக் கொண்டு ஆனந்தந் தோன்று மளவும் சிரத்தில் பொலிவுறத் தாரணஞ் செய்க. அப்பொழுது பிராண வாயுவு பிரமரந்திரத்தைப் பொருந்தும். அக்காலையில் நாத மொன்று உண்டாகும். அது பத்து விதமான தொனியோடுங் கூடி ஒலிக்கும். அவையாவன:— கிண்கிணி, சிலம்பு, மணி, சங்கம், யாழ், தாளம், வேய்ங்குழல், பேரி, மத்தளம், முகில் என்பனவாம். வாயுவின் தாரணை சென்னியின் மத்தியில் பொருந்துங் காலையில் ஆன்மா மலையினின்றும் இழிகின்ற அருவிபோன்று கீழ்முகமாய்த் தோன்றும். அப்பொழுது மெய்ஞ்ஞானம் உதிக்கும். அது உதிக்கவே முன்னையுள்ள சமுசார பந்தம் யாவுங் கழிந்தொழியும். முத்தாசனமாகவிருந்து பரமசிவனையும் யானைமுகக் கடவுளையுந் தியானஞ்செய்து மூலாதாரத்தில் சிவந்த கேசரங்களையுடைய தாமரை மலரில் பிரணவத்தை மனதில் தியானித்துக்கொண்டு எவ்வளவு வரை மனோலய மாகுமோ அதுவரைக்கும் வாயுவை நிரோதஞ்செய்க. அந்த யோகத்தினால் அபான வாய்வு அக்கினித் தானத்தையடையும். அந்த அக்கினியோடு அபான வாய்வையும் பிராண வாயுவையும் அழல்சய முறுமளவும் பிரணவத்தை மனதில் தியானஞ் செய்துகொண்டு பொருந்தத் தாரணஞ் செய்யவேண்டும். அக்கினி சயமாகியபின் அக்கினி மண்டலத்திற்கு மேல்பாலில் நாபிக்குக்கீழ்பாலில் இதழ்களெல்லாம் வளப்பத்தோடுகூடி விளங்குகின்ற சுவாதிட்டான கமலமலரில் விளங்கிடும் பிராணவாயு அடானவாயுக்களை விளங்குகின்ற தீயோடும் ஏற்றி பிரணவத்தைத் தியானித்துக்கொண்டு நாபியினைக் கண்ணுற்பார்த்து மனோலயம் எவ்வளவுவரை ஆகின்றதோ அவ்வளவு வரைக்கும் காற்றை நிரோதஞ்செய்க. சுழுமுனையானது முதுகினடுவில் வீணாதண்டம்போலப் பொருந்திய எலும்போடுகூட சிரத்தினடுவேவந்து புருவமத்தியமளவுநிற்கும். நாபியிலுற்ற கந்தத்திற்கு இரண்டங்குலத்தின் கீழ் காந்தியோடு குண்டலிசத்தி பாம்பின்வடிவமாய் தன்படத்தால் சுழுமுனைத்துவாரத்தை மறைத்துக்கொண்டு அந்தச்சுழுமுனாநாடியைக் கண்டபாகத்தால் எட்டுச்சுற்றோடு பொருந்தச்சுற்றி ஒளிபொருந்திய் உடலை சுழுமுனாநாடியின்வழியே மேற்கொண்டுபோய் வாலால் பிரமரந்திரத்தை

மறைத்துக்கொண்டிருக்கும். சுழுமுனைத்துவாரம் மறைக்கப்பட்டிருத்தலால் காற்றும் அன்னாதிசாரமும் அதற்குள் நுழையப்பெறாவென்று சுருதி கூறும். ஆதலால் வாயுவைத்தீயோடும் மேலே ஏற்றுங்காலையில் இமைப்பொழுதில் குண்டலிசத்தி சுறுசுறுப்பையடையும். பின்பு நாபிக்குழியினின்றுங் கவித்த தன்படத்தை வாங்கும். அக்காலையில் சுழுமுனை மாட்சிமை பொருந்தவிளங்கும். அங்கே விளங்குகின்ற அக்கினியோடு காற்றைப் பிரணவத்தைத் தியானித்துக்கொண்டு சுழுமுனாநாடிவழியாகச் சிரமளவுஞ் செலுத்தித் தாரணத்தைச் செய்யவேண்டும். அக்கினியோடு காற்றால் சரீர முழுவதும் பூரிக்கப்பட்ட அக்காலையில் சிரசில் ஆன்மா ஆகாயத்தில் விளங்குஞ் சூரியனைப்போலப் பிரகாசிக்கும். இவ்விதமாக அப்பியாசம் பண்ணுகின்றவனுக்குக் காற்று வசப்படும். காற்று வசப்பட்டதற்கு அடையாளமாக வேர்வைமுதலியசில சின்னங்கள் உண்டாகும். பரிசுத்தமாகிய இந்த யோகத்தைச் செய்பவனுக்கு திரிலோகத்தினும் சமானம் வேறில்லை. மூலரோகம் பவுந்தரம் மற்று முள்ள நோய்கள் யாவும் நீங்கிவிடும். பாவமும் நீங்கும். அதனால் சித்தசாந்தி உண்டாகும். அதனால் பிரமதேவர் விஷ்ணு இந்திரன் ஆகிய இவர்கள் வாழ்க்கையெல்லாம் ஓர் துரும்புபோல மதிக்கும்படியாக வயிராக்கியமுண்டாகும். அதனால் சிவஞானம் உண்டாகும். அதனால் பாசப்பிணிப்பு அறும். அதனால் முத்தியுண்டாகும். இந்த ஞானசாதனத்தைவிட்டு எப்பொழுதும் மாயையில் மூடப்பட்டு பூமியில் மனிதர்கள் பாசபந்தத்தில் சுழலுகின்றார்கள் என்ன ஆச்சரியம். அப்படிச்சுழலுதல் கிருமிகள் மலத்தில் மூழ்கி மனமகிழ்ந்திடுதலை ஒக்கும். இக்கருத்துநோக்கியே தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவரும், "செயற்கரியசெய்வார் பெரியர் சிறியர் செயற்கரியசெய்கலாதார்" எனவும், "தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்" எனவும் கூறியதூஉ மென்க. திவ்வியஞான சாரத்தை அனுட்டிக்கின்றவர்கள் இப்பிரபஞ்ச வாழ்க்கையைச் சிறிதும் சிந்தியாது சிவபெருமானது உபயபாதங்களைப்பற்றி முத்தியைப்பொருந்தி வாழ்வார்கள். சிவபெருமானது திருவடிஞானத்தைப்பெற்றவர்கள் சகத்தை ஞானவடிவமாகக் காண்பார்கள். சமுசாரமாகிய பந்தத்தில் மூழ்கியிருக்கின்றமூடர்கள் அநித்தியமாகிய பொருள்வடிவமாகக் காண்பார்கள். சிவபெருமானது திருவடியையடைதற்கு ஏது பலவிதமாகக்கூறுவர். தானப்பேற்றால் போகங்கள் உண்டாகும். யாகாதி கிருத்தியங்களால் தேவலோக முதலிய பதவிகள் சித்திக்கும். தவங்களைச்செய்தலால் பிரமபதவி விஷ்ணுபதவிமுதலிய பதவிகள் சித்திக்கும். ஆதலால் மெஞ்ஞானம் ஒன்றே மோக்ஷத்துக்கு ஏது. கூர்மையாகிய அறிவினையுடைய பெரியோர்கள் இதனுண்மையை உணர்வார்கள். மூடர்கள் இதனுண்மையைக்கட்டுரைக்கினுங் கொள்ளார்கள். கருமத்தால் முத்தியையடைதல்கூடாது. கருமத்தையன்றி ஞான

முஞ்சித்திக்காது. ஆதலால் சற்கருமத்தைக்கொண்டு ஞானத்தைப்பெற்று முத்தியையடையாது கருமத்தையிகழ்ந்து கூறும் மூடர்கள் என்னசெய்வார்களோ அறிந்திலேன். இரவி தோன்ற இருள்கழிதல்போல ஞான உதயமாகுங்காலத்தில் பாசம் நீங்கும். தற்போதமுஞ் சஞ்சிதமும் ஒழியும். சிவபெருமானது திருவடியடைதலுஞ் சத்தியமேயாம். இவ்விதமாகக் கூறப்பட்ட பிராணாயாமம் ஈறெட்டுவகைப்படும். அவற்றை எல்லாங்கூறப்புகின் மிக விரியுமென்றஞ்சி விடுத்தாம். ஆகமங்களுட் காண்க. பிராணாயாமம் முடிந்தது. இனி பிரத்தியாகாரம்.

பிரத்தியாகாரமாவது:—அறிவின்வலியால் விடய நுகர்ச்சியிற் செல்லுமிந்திரியங்களை அதிற் செல்லவொட்டாது தன்வசப்படுத்தலாம். தினந்தோறுஞ் செய்துவருகின்றதொழில்களை எல்லாம் ஈசுரச்செயலென்று நினைந்திருத்தலும் அது காற்றை ஆகருஷணஞ்செய்து தந்தமூலத்திலும் பின்பு கண்டத்திலும் பின்பு இருதயத்திலும் பின்பு நாபியிலுற்றகந்தத்திலும் பின்பு குண்டலிசத்தியிடத்திலும் பின்பு மூலாதாரத்திலும் பின்பு அபானத்தானத்திலும் பின்பு கடியிடத்திலும் பின்பு கவான்நடுவிலும் பின்பு முழந்தாளிரண்டிடத்திலும் பின்பு கணைக்காலிலும் பின்பு பாதாங்குட்டத்திலும் நிறுத்தல்வேண்டும். ஓரிடத்தில் காற்று நிறையுமளவும் சித்தத்தை நிறுத்திப் பின்பு மற்றொருதானத்தில் செலுத்தலாகிய இதுவுமது. நித்திய நைமித்திக காமியங்களைச் செய்து சிவப்பிரீதிசெய்தலும் அது.

சுவத்திகாசனத்திலிருந்து இடைபிங்கலையால் வாயுவை ஆகருஷணஞ்செய்து பாதமுதல் சிரசுவரை மாட்சிமைபொருந்தப் பூரித்து பின்பு இருதாள் மூலாதாரம், நாபி, இருதயம், கண்டம், நாக்கு புருவநடு, நுதல், சிரம் ஆகிய ஒன்பது இடங்களும் சயமடைந்தபின் பின் ஒருதானத்தில் சித்தத்தை நிறுத்தி அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் ஆகிய ஐந்தெழுத்தை உச்சரித்தலும் அது.

உடல், கரணம் வினை ஆகிய இவைகளை ஆன்மாவென்று கூறும் ஞானத்தை ஆகருஷணஞ்செய்து சிவபெருமானிடத்து நிறுத்துதலுமது. பிரத்தியாகாரம் முடிந்தது. இனித்தாரணை.

தாரணையாவது:— சரீரத்தின் நடுவெளியிலும், பிராணவாயுவிலும், உதராக்கினியிலும், ஜலத்தின்பாகத்திலும், பிருதிவியின்பாகத்திலும் முறையே ஆகாயத்தையும், காற்றையும், தீயையும், நீரையும், பூமியையும், பேதமின்றித்தாரணை செய்து பிரணவத்தைச் செபஞ்செய்தலாம். முழங்கால்வரை பிருதிவியின்பாகம். குதம்வரை நீரின்பாகம். இருதயம்வரை அக்கினியின்

பாகம். கண்டம்வரை காற்றின்பாகம். சிரம்வரை ஆகாசபாகம். இவ்வைந்து தானங்களில் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய இவர்களைப்பாவித்தலும் அது. மனதில் சந்திரனும், காதுகளில் திக்குகளும், வாக்கில் அக்கினியும், கையில் இந்திரனும், அடிகளில் உபேந்திரனும், அபானத்தானத்தில் கதிரும், குய்யத்தானத்தில் பிரசாபதியும், தொக்கில் காற்றும், நேத்திரத்தில் சூரியனும், நாக்கில் வருணனும், மூக்கில் அசுவினிதேவரும், உயிரில் சிவபெருமானும் அமர்தரத்தாரணை செய்தலும் அது. பிரமாதி சொரூபங்களை எல்லாம் அவ்வக்காரணங்களிலே பொருந்த ஒடுக்கி எல்லாவற்றுக்கும் மூலகாரணமாய் பேசுதற்கும் எட்டாததாய் சடமாயிருக்குமாயையைச் சிவபெருமானிடத்து ஒடுக்குதலுமது. ஐம்புலன்களையு மனதினாற் கவர்ந்து சிவபெருமானது திருவடியிலே வைத்தலும் அது. விட்டுணுமுதலியதேவர்களது மாண்பும் வாக்கு மனதுக்கு எட்டாது விளங்குகின்ற சுயஞ்சோதிப்பிழம்பாகிய சிவபெருமானது புகழும் காலங்களின் பகுதியும் மனிதர்கள் அனுட்டிக்கத்தக்க விதியும் இன்னும் விரித்துரைக்கப்படும் எவையும் குறைவறக்கூறுதலினாலும் சிவபெருமானது திருவாக்காதலினாலும் வேதாகமங்களைத்தவிர வேறொருநூல் உலகத்தில் இல்லையென்று மதித்தலுமது. தேவர்முதலிய யாவர்களும் தேகாதிப் பிரபஞ்சங்களும் யானென்று யானும் சிவபெருமானின் வேறல்லன் என்று சிந்தித்து சோகம் பாவனை புரிதலும் அது. தாரணை முடிந்தது. இனித்தியானம்.

[இன்னும் வரும்.]

இங்ஙனம்
சுப்பிரமணியபிள்ளை,
மதுரை, திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

மேனாட்டுக் கலைஞானம்.

முற்கூறு II.

15. நீர் அப்புமயம்.

நீரானது இடங்கைக்கொண்டாலும் அது தனக்கெனக் குறிப்பான ஒரு உருவம் உடையதல்லவென்றும் ஆனால் அது தான் நிற்கும் பாத்திரத்தின் உருவத்திற்குச் சரியாய்ப் பொருந்திக்கொள்ளுகிறது என்றும் எளிதில் காணலாம். "டய்ளர்"

அல்லது கிண்ணமானது படிகளைப்போல ஸ்தம்பாகாரமாயிருந்தால் அதிலுள்ள நீரின்மேல் பரபபின் சாயலானது அந்த "டம்ளர்" உச்சமாய் அதாவது நேராய் நிற்கும்பொழுது வட்டரூபமாயிருக்கும். டம்ளரை ஒருபுறமாகச் சாயத்தால் வரவரக் கிஞ்சித்தும் இடைவெளியாவது அல்லது தடையாவது இல்லாமல் அந்த நீரின் மேல்பரப்பானது முட்டையின் ஆகிருதியாகிய நீண்ட வட்டரூபத்தைஒத்துவரும். நீர் நிற்கும் பாத்திரம் என்ன உருவமாயினும் அந்தப்பாத்திரத்தின் பக்கங்கள் போனவழியெல்லாம் நீரும் சென்று தொட்டுக்கொண்டு நீரின் பக்கங்களும் பாத்திரத்தின் பக்கங்களும் சரியாய் ஒத்திருக்கும். நீருக்குள் நாம் விரலைவிட்டால் தடையின்றி நீரிற்குள் விரல் புகுந்து செல்லும். ஏதேனும் தடையிருப்பதாக உணராமலே விரலை எல்லாப்பக்கங்களிலும் ஒட்டலாம். விரலை வெளியே எடுத்துவிட்டால் நீரில் துவாரம் காணமாட்டாது. விரல் இருந்தவிடத்தை எல்லாப்பக்கங்களிலும் நீர் சரேலென்று பாய்ந்து ஓடிமூடிக்கொள்ளுகின்றது. கைநிரம்ப நீரைஎடுக்க முடியாது. ஏனெனில் விரல்களின் சந்துகள் வழியாய் அது ஒழுகி ஓடிவிடுகின்றது. அதை மொத்தமாக ஒரு கட்டியாய் மேலெடுக்க முடியாது. இவையெல்லாம் நீரின் பகுதிகள் அல்லது துளிகள் ஒன்றின்மேலொன்று வெகு இலகுவாய் நழுவி ஓடுகின்றனவென்று வெளிப்படுத்துகின்றன. இதையே இனி பொருவிதமாயும் திருஷ்டாந்தப் படுத்தலாம். கிண்ணத்தை யொரு பக்கமாய்ச் சாய்த்தால் நீரின்மேல் பரப்பின் மட்டமானது டம்ளரின் ஒரு பக்கத்தின் விளிம்பு அல்லது ஓரத்திற்கு உயர்ந்து எழும்புகின்றது. ஆகையால் இந்த ஸ்தானத்தில் நீரானது டம்ளரினால் சற்று ஆதரவு பெறாமல் நிற்கின்றது. பிறகு நீர் தாரையாய்ச் சொரிந்து பூமியில் விழுந்து அவ்விடத்தில் பரவிப் பள்ளத்தாக்குகளிருந்தால் அவ்விடத்திலிருந்து ஓடி விடுகின்றது. இல்லாவிடின் பூமியின் * கமர்களில் ஊறிச் சுவறுகின்றது.

* கமர்—நிலப்பிளப்பு, வெடிப்பு.

நீரின் பகுதிகள் இவ்விதமாக ஒன்றின் மேலொன்று பொருந்த வழுக்கி நழுவி இயங்கினாலும் அவைகள் தங்களுக்குள் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கும் குணம் ஒருவித அளவில் பொருந்தி யிருக்கின்றது. நீரின்மேற் பரப்பைப் பட்டும் படாமலும் விரலினால் தொட்டால் அந்நீரில் கொஞ்சம் விரலில் ஒட்டும். அப்பால் விரலை வெகு ஜாக்கிரதையாயும் மெதுவாயும் மேலெடுத்தால் பக்கத்திலிருக்கும் நீர் நூலிழை போன்று மெல்லிய கம்பமாக எழும். இக்கம்பம் நாம் பார்க்கக் கூடிய அளவு நீண்டு வந்து அப்பால் ஒடிந்துவிடுகின்றது. இப்படியே பனிக் காலங்களில் அதி காலையில் புல் பூண்டு செடிகளைப் பார்த்தால் இலைகளின் நுனிகளில் உண்டை வடிவாக நீர்த்துளிகள் தொங்குவதைக்காணலாம். இத்துளிகளின்பகுதிகள் அல்லது அணுக்கள் ஒன்றுசேர்ந்து இருகத்தழுவிப்பிடித்துக்கொண்டிருக்கின்றனவென்று உண்டைவடிவால் விளங்கும்.

தாங்கள் நிற்கும் பாத்திரங்களின் பக்கங்களுக்குச்சரியாய் ஒத்து நிறகும்படி பகுதிகளை உடைத்தாய் ஆதரவில்லாதபொழுது ஓடும் குணமுள்ள பிரகிருதிப்பொருள்களுக்குச் சலிலங்கள் என்று பெயர். இங்கிலீஷில் "வ்ளுயிட்" (Fluid) என்று சலிலத்தைச் சொல்லுவார்கள். ஒன்றினின்றும் ஒன்று பாரந்து எவ்வளவு தூரமானாலும் ஓடிவிடாமல் நீரின்பகுதிகளைப்போல் சற்று இருகப் பிடித்துக்கொண்டிருக்கும் குணம் பொருந்திய பகுதிகளுள்ள சலிலங்களுக்குச் சலங்கள் அல்லது அப்புகள் என்றுபெயர். இங்கிலீஷில் சலம் அல்லது அப்புவை "லிக்விட்" (Liguid) என்பார்கள்.

ஆதலால் நீர் என்னும் பொருள் அப்பு அல்லது சலம். இப்படியே பால், மோர், எண்ணெய் முதலியவைகளும் அப்பு அல்லது சலம்.

16. நீரானது அதிகமாய் அமர்த்தக்கூடாதபொருள்.

மற்ற எல்லாப்பிரகிருதி வஸ்துவைப்போலவே நீரும்

தான் கைக்கொண்டு இருக்கும் இடத்தில் வேறொரு வஸ்து நுழைந்திருத்தலுக்குத் தடை கொடுக்கின்றது என்று நாம் முன்னமேயே கண்டோம். அதாவது ஒரே காலத்தில் ஒரேயிடத்தில் நீரும் வேறொருவஸ்துவும் இருக்கமாட்டா. ஆனால் அனேகவஸ்துக்கள் தடைகொடுத்தாலும், அவைகளின் பருப்பம் சிறுகும்படி அவைகளை நெருக்கிநசுக்கலாம். அதாவது அமர்த்தலாம். என்றாலும் நீருக்கு இது பொருந்தாது. மற்றஅப்புக்களைப்போலவே நீரும் அதிகமாய் அமர்த்தக்கூடாத பொருள். அதாவது அதன் பருப்பத்தை மதிக்கக்கூடிய அளவு குறையும்படிசெய்ய ஏராளமான தாக்குதல் அல்லது அமுக்குதல் வேண்டியது. மிக இணக்கமுள்ளதாகக்காணும் நீரைப் போன்ற ஒரு வஸ்துவானது பின்னும் நெருக்கி இறுக்கி அமர்த்த அது அவ்வளவு இரும்பையொத்து மிகவும் கஷ்டத்தைக்கொடுக்கும் என்பது அதிசயமாயிருக்கும். ஆனால் நீர் வெகு இலகுவாய்த் தன்னுடைய உருவத்தை மாற்றுவதினாற்றான் அது மிகவும் இணக்கமுள்ளதாகத் தோற்றுகின்றது. அதின் உருவத்தை மாற்றவிடாதபடி நாம் தடுத்துவிடுவோமாயில் அதின் பகுதிகள் இப்பொழுது உள்ளதைப்பார்க்கிலும் மிக நெருங்கி பருப்பம் குறையும்படிசெய்தல் மிகவும் கஷ்டமாயிருக்கும். நீரை எப்பக்கமும் போகாமல் அடைத்து அப்பால் ஒரு சதுர அங்குலத்திற்குப் பதினைந்து பவுண்ட் * (Pound) விழுக்காடு தாக்கம் கொடுத்தால் இருபதினாயிரத்திற்கு ஒரு பாகம் அதன் பருப்பம் குறையும். "ஸிரிஞ்ஜ்" (Syringe) என்று வழங்கும் பீச்சாங்குழல்-ஒன்றை யெடுத்துக்கொள்வோம். இதன் பாகங்களின் பெயர்களை முன் கற்போம். நீரை உள்ளே உருஞ்சுவதற்காக இழுக்கும் குச்சுக்கு "பிஸ்டன்" (Piston) என்றும் நீரையிழுக்க நீரில் வைக்கும்பாகம் அல்லது பீச்சும்பொழுது நீர்போகும் பாகத்திற்கு மூக்கு என்றும் குச்சு அல்லது பிஸ்டன் போக்குவரவாயிருக்கும் ஸ்தம்பாகிருதி பிஸ்டனை இழுக்கவும் தள்ளவுமாகிய வளையமும் கம்பியும் சேர்ந்தபாகத்திற்கு கை என்றும் பெயர். இவையெல்லாம் சேர்ந்த பூரண உருவத்திற்கு ஸிரிஞ்ஜ்

* ஒருபவுண்ட் என்பது நாற்பதுரூபாயிடை.

அல்லது பீச்சாங்குழல் என்று பெயர். ஸிரிஞ்ஜின் ஸிலிண்டரில் சந்துவிடாமல் சரியாய் நெருங்கி இயங்குகின்றதாவென்று முதல் பார்த்துக்கொண்டு மூக்கை நீரில் வைத்து பிஸ்டனை மேலிழுத்து ஸிலிண்டரில் நீரை நிரப்பி அப்பால் மூக்குமேல் நோக்கும்படி ஸிரிஞ்சைப்பிடித்து அதில் நீரைத்தவிர வேறு ஒன்றுமில்லையென்று திண்ணபட்ட பிஷ்டனை உள்ளே கொஞ்சம் தள்ளி நீர் சற்று பீச்சும்படி செய்துகொண்டு அப்பால் மூக்கின் அவாரத்தில் விரலைவைத்து வெளியே ஒரு துளி நீராயினும் போகாதவண்ணம் திடமாய் அழுத்திக்கொண்டு அப்பால் பிஸ்டனை உள்ளே தள்ளிப்பார். மிகுந்த விசையின்றி பிஸ்டனை அசையச்செய்யக்கூடிய காரியமல்லவென்று நீ காண்பாய். பிஸ்டன் கனிசமாய் இயங்குமாயின் பிஸ்டன் பக்கங்களிலிருந்து சற்று நீர் வெளியே தப்பிப்போனதினாற்றான் அந்த இயக்கமுண்டாகக் காரணமாயிற்று என்பது வெளியாகும். பிஸ்டன் ஒரு சதுர அகலப்பரப்பிருந்து சற்றும் நீரை வெளியில் போகவிட இடமில்லாமல் திட்டமாய் ஸிலிண்டரைப் பொருந்தியிருந்து ஸிலிண்டரிலுள்ள நீர் பத்து அங்குலம் உயரமிருந்தால் அப்பொழுது பிஸ்டனை ஒரு அங்குலம் உள்ளேபோகும்படி செய்ய முப்பதினாயிரம் பவுண்ட் நிறையுள்ள தாக்கம் கொடுத்து பிஸ்டனைத் தள்ளலவேண்டும் என்று சோதனையினால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

I. திண்பூதவுடல்.

திண்பூதவுடல் என்பது சகலமனிதர்களின் கண்களுக்கும் புலப்பட்டுக்கொண்டிருக்கும். இந்தகனத்துத்தடித்து மொத்தமாயிருக்கும் சரீரம். இதற்கு ஊனுடல், ஊன்பொதிந்தகாயம், சோற்றுச்சுவர், மாமிசபிண்டம், புழுமலக்கூடு, புழுமலக்குரம்பை, ஊன்பொதிந்தசுவர் என்றும் இன்னும் பலவிதமான பெயர்கள் உண்டு. இது பிரகிருதியின் ஸ்தூல அணுக்களால் கட்டப்பட்டு மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளையும் வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்களையும் உயிர் நீடித்து இருப்பதற்கு நடக்க வேண்டிய தொழில்களையெல்லாம் செய்வதற்கான பல உறுப்புகளையும் மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பொருந்தியிருக்கின்றது. இவைகளின் கட்டுப்பாடுகளையும் செயல்களையும் விவரமாய்த் தெரிவதற்கு அங்காதிபாதம் (Anatomy) சுகரணவாதம் (Physiology) என்னும் சாஸ்திரங்களைப் பார்த்தல் வேண்டும். இவ்விடத்தில் விவரித்துச்சொல்ல முயன்றால் முக்கியமாய்த் தெரியவேண்டிய மற்றக்கூறுகளின் விளக்கம் தடைபடும். மேலும் நாம் எடுத்துக்கொண்ட காரியத்திற்குப் பிணமாய் இவ்வுலகில் விழுந்துபோகக்கூடிய இத்திண்பூதவுடலின் பூரணவிவரம் அவசியமன்று. ஆதலால் நாம் இப்பொழுது எடுத்துக்கொண்டகாரியத்திற்கு அவ்வுடலின் இலக்ஷணத்தைப்பற்றி நமக்கு எவ்வளவு தெரியவேண்டுமோ அவ்வளவுமாத்திரம் விசாரிப்பாம். இதற்கு உலகிலுள்ளபொருள்களின் பலவிதநிலை அல்லதுசீர்களைப்பற்றி நாம் முன்சொற்பம் தெரிவது அவசியம்.

நாம் வசிக்கும் இப்பூவுலகத்தில் தோன்றும்பொருள்கள் எண்ணிறந்தவிதங்களானவை. தாதுப்பொருள், மூலப்பொருள், ஜீவப்பொருள், வன்பொருள், மென்பொருள், ஒடியும்பொருள், வளையும்பொருள், ஒளியுள்ளபொருள், மங்கலானபொருள், இனிக்கும்பொருள், கசக்கும்பொருள், நிறமுள்ளபொருள், நிறமில்லாப்பொருள், நயமுள்ளபொருள், நயமில்லாப்பொருள் என்று இன்னும் பலவகைகளாயிருக்கின்றன. இவ்வளவு குழப்பமிருந்தாலும் நமது புலன்களுக்ககப்பட்ட சகலபொருள்களையும் மூன்று முக்கியமான வகுப்புகளுக்குளடக்கலாம். சிலவஸ்துக்கள் கல், மண், மணல், மலை, குன்று, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், நாகம், மரம், பளிங்குமுதலியவைகளைப்போல கடினமானவைகளாயிருக்கின்றன.

இவ்வகையில் முக்கியலக்ஷணமென்னவெனில் இப்பொருள்களின் உருவங்களை வேறு உருவங்களாகமாற்ற நாம் மிகுதியான சக்தியை யுபயோகிக்க வேண்டும். இவ்விதமான இயல்புக்கு உரத்துத்தரிக்குமியல்பு என்று பெயர். அதாவது இந்நிலைப்பொருள்கள் வேறுபலமான சக்திகளால் தாக்கப்படாதவரை தாங்கள் பெற்றநிலைமையிலேயே தரித்துநிற்கும். ஒரு தங்கக்கட்டி அல்லது இரும்புக்குண்டு எந்நாளாயினும் அப்படியேயிருக்கும். தங்கக்கட்டியின் நீளத்தையாவது அகலத்தையாவது அதிகப் படுத்தவேண்டுமானால் சுத்தியினால் அடித்துத்தட்டி நீட்டவேண்டும். அல்லது அகலப்படுத்தவேண்டும். இரும்புக்குண்டையும் அப்படியே தீயில் செவக்கக்காய்ச்சி சம்மட்டிகொண்டு பலமாயடிக்கவேண்டும். இவ்விதநிலைமைபெற்ற பொருள்களுக்கெல்லாம் சாதாரணகுறியானது மண் அல்லது பிருதிவி. ஆதலால் இவ்விதமான பொருள்களுக்குப் பிருதிவுநிலைப் பொருள்கள், பிருதிவு இயற் பொருள்கள், புவிநிலைப் பொருள்கள், பூவியற் பொருள்கள், பாரியற் பொருள்கள் என்றும் அல்லது சும்மா பிருதிவுகள் என்றும் சொல்லுவார்கள். புவி, பூ, பார் என்றால் மண் அல்லது பிருதிவு. இயல் என்றால் நிலை அல்லது சீர். ஆதலால் ஒருபொருளைப் பற்றிப் பிருதிவு என்றாலும் பார் என்றாலும் அப்பொருளின் உரத்துத்தரித்து நிற்கும் நிலைமையைக்குறிக்கும். இந்நிலையை இங்கிலீஷ்பாஷையில் "ஸாலிட்" (Sol d) என்பார்கள்.

சிலபொருள்கள் ஜலம், பாதரசம், பால், இரத்தம், எண்ணெய், கள், தேன், பாகுமுதலியவைகளைப்போல பாத்திரங்களிலேயேயிருக்கக்கூடியவையாயும், பாத்திரங்கள் உடைந்துபோனால் ஓடிப்பரவக்கூடியவையாயும், பாத்திரங்களின் ரூபம் எவ்வகையாயினும் எல்லாப்பாத்திரங்களிலும் புகுதக்கூடியவையாயும் இருக்கின்றன. இன்னும் ஒரு இலக்ஷணம் இப்பகுதிப்பொருள்களுக்கு உண்டு. அவைகளிருக்கும் பாத்திரங்கள் எவ்விதக் கோணல்களுள்ளவையாயினும் அப்பாத்திரங்களின் பக்கங்களையும் அடியையும் இப்பொருள்கள் தொட்டுக்கொண்டு அந்தக்கோணலான ரூபங்களைத் தாமும் பெற்றிருக்குமேயல்லது மேல்பாகம் எப்பொழுதும் மட்டமாகவேயிருக்கும். இவ்விதப்பொருள்களின் குணத்திற்கு நெகிழ்ச்சி, நெகிழ்வு, சலிலம், என்று பெயர். இவ்விதப்பொருள்களில் மிகவும் சாதாரணமானது ஜலம் அல்லது நீர் அல்லது அப்பு. ஆதலால் அப்புவைக் குறியாகவைத்து இவ்விதப்பொருள்களை அப்புநிலைப் பொருள்கள், நீரியற் பொருள்கள், சலிலங்கள், என்றும், சிலவேளை சும்மா அப்புகள், நீர்கள், ரசங்கள், என்றுஞ் சொல்லுவார்கள். இங்கிலீஷில் "லிக்விட்", (Liguid) என்பார்கள். இன்னும்சிலபொருள்கள் காற்றைப்போல் விம்முந் தன்மையையுள்ளனவாயிருக்கின்றன. சாதாரணமாய் எல்லோருக்கும் காற்று என்பது ஒன்றுமட்டுந்தான்தெரியும்; ஆனால் இவ்வகைப்பொருள்கள் பலவிருக்கின்றன. நமது உடம்பில் பத்து வாயுக்

கள் அல்லது காற்றுகள் இருப்பதாகச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இரசாயன சாஸ்திரத்தில் பலவித வாயுக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதப் பொருள்களின் முக்கியகுணம் என்னவெனில் நீரியற்பொருள்கள் மேற்பாகத்தில் ஒருமட்டமாய் அல்லது சமமாயிருப்பதுபோலல்லாமல் இவைகள் பூரணமாய் எவ்விடமும் விம்மும். இவைகளுக்கு சலிக்கும் குணமுமுண்டு. நமது நூல்களில் வாயுவுக்குச்சலித்துத் திரட்டல் என்னும் குணம் சொல்லியிருக்கின்றது. இதற்குத்தொழில் விம்முதல் என்று சொல்லியிருக்கின்றது. அதாவது ஒருபாத்திரத்தில் காற்றைவிட்டு வாயுந்தெரியாமல் நாலுபக்கமும் நன்றாய் மூடிவிட்டால் இக்காற்று அப்பாத்திரத்தில் விம்மிப்பறந்து எல்லாப் பக்கங்களையும் தொட்டுக்கொண்டு பூரணமாய் நிறைந்திருக்கும். இப்பாத்திரத்திலுள்ள இவ்வளவுகாற்றையே இன்னும் சிறியபாத்திரத்திலும் அடைக்கலாம். பெரியபாத்திரங்களிலும் அடைக்கலாம். எப்பருமனுள்ளபாத்திரங்களையும் ஒரே அளவானகாற்று விம்மிப்பறந்து நிறைக்கும். வாயுக்களில் பெரும்பான்மையானவைகள் கண்ணுக்குத் தெரியா. ஆனால் நிறமுள்ள வாயு கண்ணுக்குத்தெரியும். நாம் சாப்பிடும் உப்பில் ஒருவாயுஇருக்கின்றது. அதற்கு "க்ளோரின்" (Chlorine) என்று சொல்லுவார்கள். இந்தவாயு ஒரு மஞ்சள்கலந்த பச்சை வர்ணமுள்ளது. அது அந்நிறமாய்க் கண்ணுக்குத் தெரியும். இவ்விதமான பொருள்களுக்கு வாயுநிலைப் பொருள்கள், நீலியப் பொருள்கள், வாயுக்கள், நீல்கள், மலனங்கள். என்று செப்புவார்கள். நீல் என்றால் வாயு. நீலியல் எனவே வாயுத் தன்மை அல்லது காற்றுநிலையெனப் பொருள்படும் இங்கிலீஷில் இதற்கு "காஸ்" (Gas) என்பார்கள்.

இப்பொழுது மேற்சொன்னபடி நமதுபுலன்களுக்குட்பட்ட பொருள்கள் எல்லாம் இம்மூன்றுவித நிலைகளி லடங்கிவிட்டன. இவ்விடத்தில் முக்கியமாய் கவனிக்கவேண்டியதென்னவெனில் இம்மூன்று பெயர்களும் பொருள்களின் நிலை, தன்மை, சீர், இருக்குமியல்பு, என்பதைக் குறிக்கின்றனவல்லாமல் பொருள்களின் வஸ்து வித்தியாசத்தைக் குறிப்பதன்று. ஒரு பொருளே இம்மூன்று நிலைகளிலு மிருக்கலாம். உலகத்தின் சாதாரண நிலைமையில் சில பொருள்கள் பிருதிவு நிலையிலும் சில பொருள்கள் அப்பு நிலையிலும் சில பொருள்கள் வாயு நிலையிலு மிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு பொருளையும் தான் சாதாரணமாயிருக்கும் நிலையை விட்டு வேறு நிலைகளுக்கு மாறும்படி செய்யலாம். ஜலம் சாதாரணமாய் நீர் நிலையிலிருக்கின்றது. அது குளிர்ச்சியினால் உறைந்து பனிக்கட்டியாகின்றது குளிர் தேசங்களில ஜலம் கட்டியாய் உறைந்து போவது அனுபவம். நீலகிரி மலையில் குளிர் காலங்களில் நீர் உறைந்துபோயிருப்பது அங்குப் போன

வர்கள் கண்டிருக்கலாம். ஜலம் பனிக்கட்டியான போது பிருதிவு நிலைக்கு வந்துவிட்டது. ஜலத்தை அக்னியில் காய்ச்சினால் அது ஆவியாய்ப் போகிறது. அதாவது அது வாயு நிலைக்குப் போய்விட்டது. நீராவியானது குளிர்ந்தால் மறுபடியும் நீர் நிலைக்கு வரும். நமது மூச்சில் ஜலம் வாயு ரூபமாயிருக்கிறது. ஸ்லேட் அல்லது கண்ணாடிமேல் நமது மூச்சு பட்டாலும் அல்லது நாம் ஊதினாலும் அந்த ஸ்லேட் அல்லது கண்ணாடியின் குளிர்ச்சியினால் மூச்சிலுள்ள நீராவியும் குளிர்ந்து ஜல நிலைக்கு வந்துவிடுகிறது. இது அனுபவத்தில் காணலாம். தங்கம் சாதாரண இயல்பில் பிருதிவு நிலை. அதைக் குகையில் வைத்து அக்னியில் ஊதினால் உருகி நீர் நிலையடைகின்றது. இன்னும் அதிக உஷ்ணம் தாக்கினால் அது வாயு நிலைக்குவரும். பனிக்கட்டி அல்லது ஆலங்கட்டியும், ஜலமும், நீராவியும், வஸ்துவில் ஒன்றே. நிலையில் வேறு. இது போலவே எல்லாப் பொருள்களின் நிலைகளையும் மாற்றலாம். நம்மைச் சுற்றியிருக்கும் வாயுவை மேனாட்டுக் கலைஞர்கள் நீர் நிலைக்கும் பிருதிவு நிலைக்கும் மாற்றியிருக்கிறார்கள்.

சகல பொருள்களும் அணுக்களின் கூட்டம் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஒவ்வொரு அணுவும் பல பரமாணுக்கள் சேர்ந்துள்ளது. ஒரு அணுவென்பது கண்ணுக்குத்தெரியாத மிகவும் நுட்பமானதாயினும் அதிற் சேர்ந்திருக்கும் பரமாணுவை நோக்கும்பொழுது ஒரு அணுவானது ஒரு சிறிய குன்றுபோலும். பிருதிவு நிலையில் அணுக்கள் ஒன்றின்மேலொன்று நழுவக்கூடாதபடி செறிந்து நெருங்கியிருக்கின்றன. ஆகையால் தான் அந்நிலைப் பொருள்கள் உரந்துத் தரித்திருக்கின்றன. அப்பு நிலையில் அணுக்கள் சற்று விலகி ஒன்றின்மேலொன்று நழுவி நெகிழ்ந்து புரளுந் தன்மையில் இருக்கின்றன. பிருதிவு நிலைப்பொருள்களுக்கு உஷ்ணம் கொடுத்தால் அணுக்கள் விலகி அணுக்கள் மத்தியிலுள்ள இடம் சற்று விசாலமாகின்றது. ஆகையால் நீர் நிலைக்கு வருகின்றன. வாயு நிலையில் அணுக்கள் இன்னும் அதிகமாக விலகுவதுடன ஒவ்வொரு அணுவும் பிரிந்து பல கூறுகளாகின்றன. அதாவது ஒரு பொருளின் ஒரு அணு அப்புநிலையில் ஆயிரம் பரமாணுக்கள் சேர்ந்து திரண்டதாயிருந்தால் வாயுநிலைக்குப் போகும்பொழுது இந்த அணு நான்கு அல்லது பத்து அல்லது இன்னும் பெரிய எண்ணாகப் பிரிந்துவிடும். அதாவது வாயு நிலையில் ஒரு அணு அப்புநிலையில் ஒரு அணுவைப் பார்க்கிலும் சிறிதாகும். நான்காய்ப் பிரித்தால் ஒவ்வொரு அணுவிலும் 250 பரமாணுக்கள் சேர்ந்திருக்கும். பத்தாய்ப் பிரித்தால் ஒவ்வொரு அணுவில் 100 பரமாணுக்கள் சேர்ந்திருக்கும். வாயுநிலையிலுள்ள அணுக்கள் இன்னும் பிரியும்பொழுது அதற்குமேல் நிலைக்கு அப்பொருள் செல்லும்.

நமது சாஸ்திரங்களில் அப்புவுக்கும் வாயுவுக்கும் மத்தியில் தேயுநிலை யென்று ஒரு நிலை சொல்லியிருக்கின்றது. ஜலத்திற்கு உஷ்ணம் கொடுத்தால் அது தேயுநிலைக்குப்போய் அப்புவும் வாயுநிலைக்குப் போகின்றது. தேயுநிலைக்கும் வாயுநிலைக்கும் வித்தியாசம் புலன்களுக்குத் தெரிவது அரிதாயிருக்கின்றமையால் மேனாட்டுப்புலவர்கள் தேயுநிலையை வாயுநிலையி லடக்கி அப்புநிலைக்கு அடுத்தநிலை வாயுநிலையாய்க்கருதி வசனித்துவருகிறார்கள்.

மேனாட்டுக்கலைஞர்கள் வெகுகாலமாய் பொருள்களுக்கு மூன்றுநிலைதா னுள்ளது என்று இருந்தார்கள். பின்னால் பல நூதன சத்திகளையும் சங்கதிகளையும் கண்டு பிடித்து இவைகள் இம்மூன்று நிலைகளிலும் நிகழக் கூடாமையால் நான்காவது நிலையொன்று பொருள்களுக்கு உள்ளது என்று யூகித்து அந்நிலைக்கு "ஈதர்" (Ether) என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். நமது சாஸ்திரங்கள் இந்நிலையை ஆகாசம் என்றும், வான் என்றும் சொல்லும். அதாவது வாயு நிலையின் ஒரு அணு பலவாய்ப் பிரிந்தால் இந்நிலை வருகின்றது.

நமது பெரியோர்கள் பொருள்களின் நிலைகள் எழுமூன்று சொல்லியிருக்கிறார்கள். ஈதர் அல்லது ஆகாசம் அல்லது வான்நிலைக்குமேல் மூன்று நிலைகளிருப்பதாகக்கூறுகிறார்கள். அந்நிலைகள் நமது புத்திக்கு எட்டக் கூடியவையாயில்லாதபடியால் அவைகளைப்பற்றி அவர்கள் சூசனையாய்ப் பேசியொழித்தார்கள் விரிவாய் விவகரிக்கவில்லை. ஆகையால் அவைகளுக்குப்பெயர் நூதனமாய்க் கற்பித்தல் செய்யவேண்டும். நான்காவது நிலையை ஆகாயம் அல்லது வான் அல்லது விசும்பு என்று சொல்லிவிளைச். இதற்கு அடைகொடுத்து மற்ற மேல் மூன்று நிலைகளுக்குப் பெயர்கள் உண்டுசெய்வது சுலபம். இந்நிலைக்கு அடுத்தநிலையை இரண்டாவது ஆகாயம் அல்லது துவிதாகாயமென்றும், இதற்கு அடுத்தநிலையை மூன்றாவது ஆகாயம் அல்லது திரியாகாசம் என்றும், இதற்கு அடுத்ததை நான்காவது ஆகாயம் அல்லது சதுராகாயம் என்று பேசுவாம்.

இதுகாறும் சொல்லிவந்தவைகளைச் சங்கிரகிப்போம். நாம் வசிக்கும் இப்பூவுலகில் பலவிதமான எண்ணிறந்த பொருள்களிருக்கின்றன. இப் பொருள்கள் எல்லாம் அணுக்களின் திரள் அல்லது கூட்டம். அவைகள் எண்ணிறந்த விதங்களாயினும் எல்லாம் ஏழுநிலைகளுக்குள்ளிருக்கின்றன. இவ்வேழு நிலைகளாவன:—

7. சதுராகாயம்:— இந்நிலையில் சகலமும் பரமாணுரூபம். இந்தப்பரமாணுவுக்குச் சிறிய ரூபம் இப்பூவுலகில் கிடையாது. பரமாணுக்களில் வித்தியாசமே கிடையாது. அதாவது உலகிலுள்ள சகலவிதப் பொருள்களும் இந்நிலைக்குப் போகும்பொழுது அவைகள் எல்லாம் ஒரேவிதமாயிருக்கின்றன. தங்கம், வெள்ளி, மரம், கல், நீர், இரத்தம், வாயு என்னும் வித்தியாசம் எல்லாம் அணுக்கள் திரண்டு சேரும் பல வேறுவகைகளினாலல்லது வேறல்ல. அதாவது தங்கத்தின் பரமாணுவுக்கும், வெள்ளியின் பரமாணுவுக்கும், செம்பின் பரமாணுவுக்கும் இன்னும் மற்றபொருள்களின் பரமாணுக்களுக்கும் வித்தியாசங்களே கிடையாது. பரமாணுக்கள் எல்லாம் ஒன்றே.

6. திரியாகாசம்:— இதில் ஒரு அணுவானது பல பரமாணுக்கள் சேர்ந்துள்ளது. பரமாணுக்கள் ஒரே தொகையாய்ச் சேரவேண்டிய அவசியமில்லை. இரண்டு பரமாணுக்கள் சேர்ந்து ஒரு அணுவாகவும், மூன்று சேர்ந்து ஒரு அணுவாகவும், பத்து சேர்ந்து ஒரு அணுவாகவும் இப்படிப் பல தொகைக்கூட்டங்களாக பரமாணுக்கள் சேர்ந்து அணுக்கள் உண்டாகும். ஆதலால் இதில் வித்தியாசங்கள் சற்றுதோன்றும். இவ்விடத்தில்தான் வித்தியாசம் அல்லது விகாரம் ஆரம்பம்.

5. துவிதாகாயம்:— இதில் திரியாகாசத்தின் அணுக்கள் பல தொகைகளாகச் சேர்ந்து அணுக்கள் உண்டாகும். இதில் வித்தியாசங்கள் இன்றுமதிகமாயிருக்கும்.

4. ஆகாயம்:— இதில் துவிதாகாய அணுக்கள் பல தொகைகளாகச்சேர்ந்து அணுக்கள் உண்டாகும். இதில் வித்தியாசங்கள் இன்னும் அதிகப்படும்.

3. தேயு—வாயு:— இதில் ஆகாய அணுக்கள் பல தொகைகளாகச் சேர்ந்து தேயு—வாயு அணுக்கள் உண்டாகும். இவ்விடத்தில் வித்தியாசங்கள் தெளிவாய்த் தெரியும். பலவித வாயுக்கள் அணுக்களின் கூட்டுறவின் வித்தியாசத்தினால் தான்.

2. அப்பு:— இதில் தேயு, வாயு அணுக்கள் பல தொகைகளாகச் சேர்ந்து அப்பு அணுக்கள் உண்டாய் பல வேறுவகைப்பட்ட நீர்மயமான பொருள்கள் தோன்றும்.

1. பிருதிவு:— இதில் அப்பு அணுக்கள் பல தொகைகளாகச் சேர்ந்து பிருதிவு அணுக்களாய் அவைகளின் கூட்டுறவுகளினால் எண்ணிறந்தகோடிவிதப் பிருதிவுப் பொருள்கள் தோன்றும்.

நமது சாஸ்திரங்களில் ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவும் தோன்றியதாகச் சொல்வதின் காரணம் இதனால் வெளியாகும்.

சில தத்துவஞானிகள் பஞ்ச பூதங்கள் ஆகாயம், தேயு, வாயு, அப்பு, பிருதிவு என்னுங் கிரமத்திற்சொல்லி ஆகாயத்திலிருந்துதேயுவும், தேயுவிலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவும்தோன்றினதாகச் சொல்லுவார்கள். இம்முறையில் தேயுவென்பது முன் சொன்ன முறையில் ஆகாசத்திற்கும். ஆகாசமென்பது தவிதாகாசத்திற்கும் ஒக்கும். அப்பொழுது சதுராகாசம் என்பது இம்முறையிலில்லாமல் திரியாகாசத்தோடு ஒரு நிலையாகும். அப்பொழுது தேயுவேறு நிலையாயிருக்கும், முன் சொன்னபடி வாயுவிலடங்காது.

இம்முறைப்படி ஏழுநிலைகளும் அடியில் வருமாறு காண்க.

7. திரியாகாசம்.
6. தவிதாகாசம்.
5. ஆகாசம்.
4. தேயு.
3. வாயு.
2. அப்பு.
1. பிருதிவு.

வாயுவுக்கு மேல் உள்ள நான்கு நிலைகளையும் ஒன்று சேர்த்து சங்கிரகமாய் மேனாட்டுக்கலைஞர்கள் "ஈதர்கள்" (Ethers) என்பார்கள். நாமும் அதை அநுசரித்து "ஆகாசங்கள்" என்று மொத்தமாய் வாயுவுக்கு மேலான நான்கு நிலைகளையும் கூறுவோம்.

இனி நாம் இன்பூதவுடலின் இலக்ஷணத்தை படிக்கப் புகலாம்.

(இன்னும் வரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

[தொடர்ச்சி.]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

" அவளுடைய சுபாவத்தில் வன்மம் என்பதேகிடையாது. அவள் தனக்குத் தீங்குவிளைத்தவர்மேலுங்கூட மனதில் நீடித்த குரோதம் வைப்பதேயில்லை. அன்பே உருவெடுத்து வந்தஅவள் இதயத்தில் குழப்பங்கள் தோன்றினும் அவை பற்றில்லாது க்ஷணத்தில் மறைந்துபோம்." அவளுடைய அத்தையும் இன்னொருபந்துவும் சேர்ந்து சொல்வதாவது:—"இப்பொழுது வயது முதிர்ந்திருக்கும் ஹெலெநாம்பாளை நன்றாய்த்தெரிந்த நாங்கள் அவளைப்பற்றிக் கண்ணிற்கண்ட அத்தாட்சியுடன் பேசக்கூடும். வீணர்கள் பிதற்றும் வெறும் வார்த்தையைக் கேட்டுமாத்திரம் சொல்வதன்று. அவள் இளம்பிராயம் முதல் மற்றெந்தமனிதர்களையும் போலவேயிருக்கவில்லை. சிறுவயதிலேயே மிகுந்த உற்சாகமும் அதிக சாமர்த்தியமும் பொருந்தியும், நளினமும் சித்திரப்பேச்சுகளும் நிறைந்தும், எவர்களும் பிரமித்து அதிசயிக்கத்தக்க துணிகரமும் தைரியமும் வாய்ந்தும் இருந்தாள். அவளுடைய தன்னிச்சையான வெகு பராக்கிரமம் பொருந்திய துணிவான செயல்களைக் கண்ட யாவருக்கும் ஆச்சரியத்தையும் பிர்மிப்பையும் உண்டுபண்ணிக்கொண்டே யிருந்தாள். திருஷ்டாந்தமாக அவள் அதி இளம்பருவத்தில் கலியாணம் ஆகியும் ஆகாமலுமிருக்கிற சமயத்தில் ஒரு கோபக்குணத்தினால் அவளுடைய பந்துக்களுக்குத்தெரியாமலும் அவள் வயதைப்போல் மூன்றுபங்கதிக வயதை யுடையவராய் அவளுக்கு எவ்விதத்தினும் பொருத்தமில்லாதிருக்கும் துர்ப்பாக்கியம் நிறைந்த அவள் கணவனுக்குத் தெரியாமலும் தனது சொந்தநாட்டைத் துறந்து சென்று ஒளிந்துகொண்டாள். குழந்தைமுதல் அவளைத்தெரிந்திருந்தவர்கள் முப்பது வருஷத்திற்குப் பிந்தி அவர்கள் பிறந்திருப்பார்களாயின் இவளை மற்றக்குழந்தைகளைப்போலவே பாவித்து நடத்தல் கேடு விளைக்கும் குற்றமேயாகு

மென்று அறிந்திருப்பார்கள். எப்பொழுதும் கேட்டிராததும் பெண்பிள்ளைகளுக்கடுக்காததுமான குறும்புகள் செய்யும்படி விடுக்கின்ற (அவளது) ஓய்வற்றுப்படபடத்துத்திரியும் குணமும், முக்கியமாய் அந்தகுழந்தைப் பருவத்திலேயே ஒருகாரணமுமின்றி இறந்த மனிதர்கள் மேல் அவளுக்கிருந்த கவர்ச்சியும், கூடவே உடனே தோன்றும் அச்சமும், சாதாரணமாய்த் தெரியாமல் மறை பொருளா யிருக்கும் எவற்றையும், * மந்தணமாயும் இந்தஸ்தூல உலகியற்கு அப்பாற் பட்டும் மனோகற்பனைகளே யென்று சொல்லும்படியான விநோத விசித்திரமாயும் இருக்கும் விஷயங்களையே நாடும் அளவில்லா அவாவும் அவைகளை ஆராய்ந்து அறியவேண்டு மென்று அவளுக்கிருந்த அதிவேக விருப்பும்; எல்லாவற்றிற்கும் முதன்மையாகத் தற்சுதந்திரமாகவும் ஒருவர் கட்டுப் பாட்டுக் குள்ளாகாமல் தன்னிஷ்டப்படியே தொழில்கள் நடத்த வேண்டு மென்று எவற்றாலும் யாவராலும் அடக்கி யாள முடியாத தேட்டமும், மனோ கற்பனா சக்தியின் செழிப்பும், மதர்ப்பும் அதி யற்புதமான உணர்ச்சியும் மானமும் ஆகிய இவை யெல்லாம் சேர்ந்து அவள் மற்ற மனிதர்களைப் போன்றவளல்லள்; அவள் தனித்த விசேஷப் பிறவியே; அவளைக் கொண்டு செலுத்தும் முறையும் மற்றப் பிள்ளைகளை நடத்தும் முறையைப் போலல்லாமல் வேறு தனித்து விசேஷமான முறையாகவே தானிருக்க வேண்டும் எனவும், அவளுடைய பந்துக்களும் சிநேகிதர்களும் எச்சரிப்பாய்த் தெரிந்திருக்க வேண்டி யிருந்தன. அவளை அற்பமும் எதிர்த்து யாதாயினும் சொன்னால் உடனே அவளுக்கு கோபாக்கினி மூண்டு எழும்பிவிடும். இதனால் அநேக சந்தர்ப்பங்களில் தேகங்குலுங்கி வலிப்புகளும் அவளுக்குக்காணும். அவள் இஷ்டப்படி செய்யப்போகும் செயல்களைத் தடுக்கவாவது அவள் சுபாவப் போக்குகளை மாற்றவாவது நிறுத்தவாவது முயன்று அவளுடைய சுபாவப்போர்க் குணத்தைக் கோபமூட்டி யெழுப்பி விடவாவது அவள் அருகில் ஒருவருமின்றி அவளைத்தனியே விட்டு விட்டால் அப்பொ

* மந்தணம்—இரகசியம்.

ழுது அவள் தனியாய் ஒரு இருண்ட மூலையில் போயிருந்துகொண்டு மற்றவர்கள் அவள் தனக்குத்தானே பேசிக்கொள்ளுகிறாள் என்று எண்ணவும் யாரும் அவளருகிலில்லாமலிருக்க யாரிடத்திலோ அவள் பேசுவது போலும், ஒளி வீசும் நக்ஷத்திரங்களிலும் இவ்வுலகத்திலன்றி வேறு உலகங்களிலும் சஞ்சரித்து யாத்திரைகள் செய்யும் அதியற்புதமான கதைகளைச் சொல்லிக்கொண்டே மணிக்கணக்காகவும் நாட் கணக்காகவும் காலம் கழிப்பாள். அவளுடைய *செவிலித்தாய் ஆனவள் இக்கதைகளைப் "பயனற்ற சிந்தைப் பிதற்று" என்று கூறுவாள். ஆனால் செவிலித்தாயானவள் குறிப்பாய் இதைச் செய் அதைச் செய் யென்று ஒரு உத்தரவு செய்தாற் போதும் உடனே அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமலே எதிர்ப்பதுதான் அவள் முதல் வேலையாயிருக்கும். ஒரு காரியத்தைச் செய்யாதே யென்றால் போதும் அதை என்னவரினும் சரி செய்தே தீர்ப்பாள். அவளுடை தாதியானவள் குடும்பத்திலுள்ள மற்றப் பந்துக்களைப் போலவே இக்குழந்தையை "ஏழுகலகப்பேய்கள்" பிடித்திருக்கிறதென்று உண்மையாக நம்பியிருந்தாள். அவளுடைய செவிலித்தாய்கள் எல்லோரும் அவர்கள் வேலைகளில் இவளால் பிராண கஷ்டமடைந்தார்கள். அவர்களுக்கு இவளது வீரம் பொருந்திய பிடிவாதமான முரட்டுமனதைத் திருப்பி வளைக்கவாவது இவளது அடங்காத பிடிவாதமுள்ள கொஞ்சமேனும் பயம் என்பதே யறியாத சுபாவத்தை அன்பும் ஆதரவும் நயமுந்தவிர வேறெந்த விதத்தினும் அதிகாரஞ் செலுத்தி வசப்படுத்தவாவது முடியவேயில்லை.

அடிமைகள் முதலிய அடுத்தோர்கள் செய்யும் ஸ்தோத்திரத்தினாலும், ஆதரவற்ற தாயில்லாப் பிள்ளையே யென்று சகலமும பொறுத்து மன்னித்து வந்த பந்துக்களின் மிகுந்த அன்பினாலும் குழந்தைப் பருவத்திலேயே செல்லமடைந்து கெட்டு அவள் பின்னால் பெண் பருவமடைந்த பொழுது அவளுடைய தன்னிச்சையாய் நடக்கும் குணமானது இனக் கட்டுப்பாட்டின் நடவடிக்கைகளுக்கு நேர் விரோதமாய் நடந்து கலகம்

* செவிலி—இங்கிலீஷில் "கவர்னஸ்" Governess.

செய்யும்படி அவளை விடுத்தது தன் கருத்திற்கு மாறாக ஜனங்களது பொதுக் கருத்தைப் பேணிப்போலி நடிப்பு நடிப்பதற்கும் அல்லது ஒன்றைச் செய்தால் ஜனங்கள் என்னவென்னுவார்களோவென்று அஞ்சி ஒழுகுவதற்கும் அவள் உடன்படாள். அவள் பத்து வயதில் குதிரைச் சவாரி செய்தது போலவே பதினைந்து பிராயத்திலும் கூசாமல் ஆண்பிள்ளைகள் போட்டு ஏறும் சேணம் போட்டு ஏறிச் சவாரி செய்வாள். செய்யக் கூடாத காரியம் என்று ஜனங்கள் தப்பெண்ணம் கொண்டிருக்கும் காரியத்தைத் தான் செய்யவும் வெகு காலமாய் நீடித்து நடந்து வந்த வழக்கத்தைக் கைவிடவும் அவள் எப்படி பின் வாங்காளோ அது போலவே அவள் யாரையும் தலை குனிந்து வணங்காள். அவள் எவரையும் நிகரில்லாமல் எதிர்த்து வீரம் பேசுவாள். அவள் குழந்தைப் பருவத்திலிருந்ததைப் போலவே பெரிய பெண்ணானபோதும் அவளுடைய அனுதாபங்களும் பற்றுகளும் தாழ்ந்த நிலைமையுடைய மனிதர்பாற் சென்றன. குழந்தையில் அவள் எப்பொழுதும் தனக்குச் சமான அந்தஸ்துள்ளவர்களின் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதைப் பார்க்கிலும் தனது அடிமைகளுடைய குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடவே பிரியப் பட்டவளா யிருந்தாள். வீதிகளில் கந்தைத் துணிகள் கட்டித் திரியும் கடைச்சாதிச் சிறுவர்களுடன் சிநேகஞ்செய்ய அரண்மனையை விட்டு வெளியே போய் விடுவாளே யென்ற பயத்தினால் அவள் குழந்தையா யிருக்கும் பொழுதே அவள் மேல் சதா திருஷ்டி வைக்கவேண்டி யிருந்தது. அப்படியே அவள் வாழ்நாளில் பிந்திய காலத்திலும் தன்னைப் பார்க்கிலும் தாழ்ந்த நிலைமையி லிருந்தவர்க ளிடத்திலேயே அனுதாபத்தால் அவள் ஈர்க்கப்பட்டு இருந்தாள். தான் பிரபு வம்சத்திற் பிறந்தவளா யிருந்தும் பிரபுக்கள் சேகரத்தின் மீது தாழ்ந்தவர்கள் மீது எவ்வளவு பட்சம் காண்பித்து நடந்தாளோ அவ்வளவு கண்டிப்பான உபேக்ஷை காட்டி ஒழுகினாள்.

[இன்னும் வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

இன்னிசை இருநூறு.

இந்நூல் மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான் சோழவந்தான் மகா-ா-ா-ஸ்ரீ அ. சண்முகம்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. பண்டைக்காலத்துத் தமிழ் நூல்களைப்போலவே பெரும்பாலும் வேற்றுமொழிகள் கலவாமல் தனித்தமிழ் மொழிகளானே நிரம்பியது. நாலடியார் முதலிய நீதி நூல்களைப்போல் ஒவ்வொரு கவியும் நீதியையே கூறுவது. பிள்ளையவர்களது சங்கநூற்பயிற்சியை நன்குவிளக்கிச்செல்வது. இவர்கள் அவ்வக்காலத்துத் தம்மனத்துட்டோன்றும் நீதிகளைப் பற்றி இன்னிசைவெண்பாவாக 200 செய்யுள் செய்துள்ளார்கள். அவற்றைப்பார்த்து என்மனதுட்கிளம்பிய ஆர்வத்தால் இப்பாநுவில் வெளியிடத்துணிந்தேன். ஆனால் நூலாசிரியர் ஆகிய பிள்ளையவர்களே அதிகாரப்பாகுபாடு செய்திருப்பின் மிகநன்றாயிருக்கும். இப்போது அவர்கள் தொல்காப்பியத்துக்குத் தமதுபெயரானே சண்முகவிருத்தி யென ஓர் விரிவுரையெழுதுவதைமேற்கொண்டு காலமுழுதும் அதிற் செலுத்திவருகையால் யானே என்சிற்றறிவிற் கெட்டியமட்டில் 20 அதிகாரமாகப் பகுத்து வெளிப்படுத்துகின்றேன். ஆதலிற்சிலகவிகள் அதிகாரஅமைதிக்கு வலிந்துகொள்ளக்கிடப்பினும் அறிவுடையோர் பொறுத்தருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

எம். ஆர் கந்தசாமிக்கவிராயன்.

நூல்.

1 அதிகாரம் வாழ்த்து.

நன்னெறி முன்*னீரின் அறிவென்னும் நாழியான்
இன்னிசை வெண்பா || முகந்திசைப்ப எண்ணுதூஉம்.
பொன் $னிறத்து மால்விடைப் புத்தேள் இடம்பிரியா
அன்னை சிறுவர் அடி.

* முன்னீர்—கடல் || முகந்து—மொண்டு || நிறம்—மார்பு

2\. போற்றுதூஉம் தன்கண் உயிரெல்லாம் பூத்தொடுங்கத்
தோற்றம் அழிவின்றித் தோன்றும் * துகளிலியை
ஊற்றுங்கோல் என்ன உயிர்த்துணை ஆகறன்
ஆற்றிப் பிறப்பறுக்கும் ஆறு.

* துகளிலி—குற்றமில்லான்.

3\. அங்கண் விசும்புமுதல் ஐந்தொடு பல்லுயிரைச்
செங்கதிர்ச் செல்வனைத் திங்களைப் போற்றுதூஉம்
எங்கும் நிறைந்தொளிர் ஈறில் இறைவற்குத்
துங்க வடிவாத் துணிந்து.

4\. நாமகட் போற்றுதூஉம் நாமகட் போற்றுதூஉம்
$ தோமில் இறைவன் அடிப்புணையால் துன்பமெனும்
‡ நாமக் கடல்நீந்த நல்லறிவு மீகானை
|| ஏமம் எனஈத லின்

$ தோம்-குற்றம் ‡ நாமம்-அச்சம் || ஏமம்-காப்பு

5\. நூலினைப் போற்றுதூஉம் நூலினைப் போற்றுதூஉம்
காலம் கருதாது காயம் † இறுவரையும்
வாலறிவன் நற்றாள் வணங்கிப் பிறப்பறுக்கச்
சாலத் துணையா தலான்

† இறுவரையும்—அழியுமளவும்

6\. நீத்தாரைப் போற்றுதூஉம் நீத்தாரைப் போற்றுதூஉம்
நேத்திரம் என்ன உலகை நெறி§ நிறீஇ
மூத்த அறிவினுன் நூற்பொருண் முற்காட்டி
ஆத்தனையும் காட்டிவிட லான்

§ நிறீஇ—நிறுவி $ ஆத்தன்—கடவுள்

7\. தூய மலர்தூய் இறைஞ்சுதூஉம் தொண்டியற்றித்
தாய்தந்தை ஆசான் இவர்தம்மைச் சார்பாய
காயமும் நல்லறிவும் ஈந்து கடவுளை
ஆயத் துணைநிற்ற லான்.

8\. வானம் பரவுதூஉம் வானம் பரவுதூஉம்
ஞான முதல்வன் அருள்போல * ஞாலக்குப்
பானமும் ஆகி வளமும் பலஅளித்துத்
தானே துணையா தலான்.

* ஞாலக்கு—ஞாலத்துக்கு.

9\. சிந்தித்து வாழ்த்துதூஉம் சிந்தித்து வாழ்த்துதூஉம்
* நந்தா அறத்தை இறைவனை நாடுயிர்க்கு
முந்துறத் தன்னையும் ஏனைய $மூன்றையும்
தந்தே துணையா தலான்.

* நந்தா—அழியாத. $ மூன்று—பொருளின்பம்வீடு.

10\. அன்பினைப் போற்றுதூஉம் அன்பினைப் போற்றுதூஉம்
அன்பும் § அறிவனும் வேறென்ப ஆய்விலார்
அன்பே வடிவாய் அறிவன் அமர்தலின்
அன்பே உயிர்காத்த லான்.

§ அறிவன்—கடவுள்.

முதலதிகாரம் வாழ்த்து முடிந்தது.

இரண்டாவது அதிகாரம் அறம்.

11\. மெய்யறிவன் நூலின் விதித்த விலக்கிய
செய்தலும் செய்யா விடலும் திகழறன்
மைதீர் மனநாவாற் காயத்தால் வாய்ப்பன
செய்களஞ் ஞான்றும் தெரிந்து.

12\. ஞானியெனத் தேவனென நல்லனெனச் செல்வனெனக்
கோனெனப்பல் கோடி கொடுக்கும் சிறப்பினையும்
ஈனும் மறந்தால் இடர்பலவும் ஈனுமால்
* ஆறுது செய்க அறன்.

* ஆறுது—குறையாமல்.

13\. சிவாநினக்கே * ஓவா தறவினை செய்வேன்
அவாவேன் பிறஅன் பளியெனல் வேண்டும்
உவாமதி பாம்போ டுறுவது போலும்
அவாவொடு கூடும் அறன்

* ஓவாது—இடையறாது.

14\. ‡ சினகரம்போய்த் தீர்த்தம்போய்ச் செய்யினும்நன்மை
வினைவேறு சிந்தையும் வேறுகும் ஆயின்
மனநற் * றளியொளிர் வாலறிவற் காணார்
தினையளவும் நீங்கார் திருக்கு

‡ சினகரம்—ஆலயம். * தளி—கோவில்.

15. நன்றென்ப கண்ணப்பர் செய்கருமம் நாடுங்கால்
அன்றென்ப தக்கனார் செய்த அறவினை
ஒன்றும் மனத்தியல்பாற் சொல்லும் உறுவினையும்
என்றிவை மாறல் இயல்பு.

16. சொல்லுழவர் வித்திடா தெய்ப்பிற் * றுகளெய்தும்
$ செல்வறப்பிற் கேடுறினும் சேரா பழிவற்கு
நல்ல வினைதொடங்கல் நம்கடனும் முற்றுக்கால
இல்லையே நிந்தை எமக்கு

* துகள்—குற்றம். $ செல்—மேகம்.

17. தினையளவும் ஈசன் செயல்கடப்பார் யாரே
மனையே பொருளே மகவேயா தானும்
வினையால் இழப்பினும் மேவினும் பன்னேய்
*இனையா தறனியற்றல் இன்பு.

* இனையாது—வருந்தாமல்.

18. இயமாதி நோய்தரினும் எய்ப்பின்று செய்க
† முயல்கடை போயின் முடியாப்பே ரின்பப்
பயனெய்தும் காமாதி இன்பம்போற் பற்றும்
இயல்பினநீக் காமை இடர்.

† முயல்—வினை.

19. மலைத்துணைப் பஞ்சுமொரு தீப்பொறியான் மாயும்
தலைப்பட்ட நல்லறம்பல் கோடியும் சாயும்
நிலைப்பட்ட சான்றோர்க்கோர் தீங்கியற்றின் நீள்வான்
தலைபட்டுச் சாய்நகுடன் சான்று.

20. பேய ரொடுபோலர் பித்தரென மெய்யறிவில்
தூயர் * வழீஇ நடப்பிலும் சூழற்க
ஆயுங்கால் அவ்வா றொழுக அவாவல்நரி
$ சீயவினை மேற்கொள் செயல்.

* வழீஇ—வழுவி. $ சீயம்—சிங்கம்.

2-வது அதிகாரம் அறம் முடிந்தது.

[தொடரும்.]

அ. சண்முகம் பிள்ளை.

குடியின் கேடு.

உலகத்தில் வழங்குகின்ற முக்கிய கேடுகளில் சாராயங்குடித்தலு மொன்று. அதனையும் நல்லதென்று சாதிப்பவர்களுமுண்டு. அவர்கள் கூறுங்காரணங்களாவன. (1) சாராயம் வேலைக்காரர்களுக்கு மிக்க ஊக்கத்தையும் பலத்தையும் தருகின்றதென்றும் (2) மருந்து சாதன மாகிறதென்றும் (3) சக்தி பூஜைமுதலிய தேவதா பூஜைகளுக்கு உபயோகமாகிறதென்றும் ஆக இம் மூன்றுமே. (1) அநுபவத்தில் குடி சற்றுமில்லாதவனே அதிக பலமுள்ளவனாகவும், அதிகவேலை செய்பவனாகவும், நெடுநாள் ஜீவித்திருப்பவனாகவுங்காணப்படுகிறான். (2) மருந்துசாதனமென்றால் பெரிய பெரிய வைத்தியர்கள் அதனை வெறுத்துத் தள்ளுவார்களா? ஹிந்துவைத்தியசாஸ்திரங்களில் வியாதிக்குப் பத்தியம் சொல்லுங்காலத்தில் இதனை முற்றிலும் நீக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறதே. மேலும் மருந்தாக எடுக்காதிருப்பார்களா? (3) பொய், கொலை, களவு, காமம் முதலிய மகா பாதகங்களோடு சாராயக் குடியையுஞ்சேர்த்த சாஸ்திரம் தெய்வப் பிரார்த்தனைக்கு ஏற்படுத்தியிருக்குமா? அல்லது அதற்குக் கொடிய தண்டனை ஏற்படுத்தியிருக்குமா? "பாகல்காயைப் பூனைகொண்டு போய்விட்ட" தென்றால் கேட்பார்க்கு மதி எங்கே போயிற்று? கிறிஸ்தவமதம் இதனை அவசியமென்று கூறுமென்றால் தங்கள் மதத்தில் மிக்க பக்தியுள்ள பாதிரிகள் வெளிப்புறப்பட்டுக் "குடி மகா கேடுள்ளது" என்று கதறிப்பிரசங்கம் செய்வார்களா? மகமதியர் கோரானிலும், பௌத்தமதக் கிரந்தங்களிலும், சமணருடைய மதப்பிரபந்தங்களிலும் குடியின் கேடுகளைப்பற்றி நன்றாய்க் கண்டித்துப் பேசியிருக்கின்றனர். இவ்வாறு சர்வமத விரோதமான விஷயம் தெய்வ பூஜைக்கு எப்படி உபயோகமாகும். குடி வெறியர் மதம் பிடித்து ஏற்படுத்திய கட்டுப்பாடென்று இதனை முற்றிலும் ஒழிக்கக் கடவோம். இவ்வித காரணங்களால் மேலே சொல்லப்பட்ட முகாந்திரங்கள் ஆதாரவற்றவைகளாகின்றன. இக்குடிகேடு நம் தேசத்தில் பூர்வகாலம் இருந்ததென்றாலும் மிகவும் ஈனஜாதியாரிடம் மாத்திரம் இருந்து வந்தது. உயர்ந்த ஜாதியாரோ இதனைக் கண்ட மாத்திரத்தில் யமனைக்கண்ட உயிர் போலவும், புலியைக்கண்ட மான் போலவும் நடுநடுங்கிப் பதைபதைத்துத் துடிதுடித்து வெகு தூரத்துக் கப்பாலேயே வெறுத்து விலகி வந்ததுமன்றிக் குடியர்களைச் சாதி மதாசாரங்களை விட்டு விலக்கிக் கொடிய தண்டனைகளுக்கு உள்ளாக்கியும் வந்தார்கள். "கள் விற்றுக் கலக்காசு சம்பாதிப்பதிலும் கற்பூரம் விற்றுக் கால் காசு சம்பாதிப்பதே மேல்" என்ற பழமொழியாலேயே ஜனங்கள் இதனை எவ்வளவு இழிவாக நினை

ஜகத்ஜோதி.

[தொடர்ச்சி.]

அக்பர் சக்கரவர்த்தி அய்யாஸுடன் சொற்பகாலம் பழகி அவரது மதி நுட்பத்தையும் விநய சம்பத்தையும் கம்பீர குணத்தையும் கண்டு பெரு மகிழ்ச்சி யடைந்து அவருக்குத் தகுந்த மரியாதை செய்ததுமன்றி அப்படிப்பட்ட சிரேஷ்டமான மனிதன் தம் இராஜாங்கத்தி லிருப்பது அவசியமென்று நினைந்து அவருக்குத் தகுந்த வேலை யொன்று கொடுக்கவும் நினைந்தார். நினைத்த மாத்திரத்தில் நியமனஞ் செய்து நினைத்த மாத்திரத்தில தள்ளிவிடுகிற நம் ஜமீன்தார்களைப் போலன்றி ஆய்ந்தோய்ந்து பார்த்தே சகல காரியங்களையும் செய்கின்ற அக்பர் சக்கரவர்த்தி இக்காரியத்தில் தம் மந்திரி அபுல்பாஸிலைக்கலந்ததும் அவ்வாலம்வீழ்போலமைச்சனும் ஒத்துக்கு மத்தளம் சேர்ந்ததுபோல் அக்பர் கருத்தை அங்கீகரித்தனர். அச்சமயம் நம் அய்யாஸினது அதிர்ஷ்டவசத்தால் அரசிறைமந்திரிக்கு ஒரு உதவி உத்தியோகஸ்தர் வேண்டியிருந்தது. அரசிறைமந்திரியாகிய ராஜாடோடர்மல் மகா உத்தமபுருஷர். இராஜவிசுவாசத்தில் அவருக்கு மேம்பட்டவர் இல்லையென்றே சொல்லலாம். ஹிந்துவாயிருந்தும் அக்பர் அவரது உத்தம குணத்தையும் சாமார்த்தியத்தையும் வியந்து அவருக்கு இவ்வுயர்பதவியையளித்தனர். யாதொரு வரையறையும் இல்லாது முறை பிறழ்ந்து கிடந்த நிலங்களையெல்லாம அளந்து ஒழுங்குபடுத்தித் தரவரிசையேற்படுத்திக் குடிகளுக்குச் சௌகரியமான வரி யேற்பாடு செய்த மகான் இவரே. இவரது தெய்வ பக்தி மிகச்சிறப்புற்றது. ஒருகால் இவர் அக்பர் சக்கரவர்த்தியுடன் ஓரூருக்குச் சென்றிருந்தபொழுது தாம் நியம நிஷ்டையுடன் செய்யப்பட்ட சாளக்கிராம பூஜையைத் தம்முடன் எடுத்துப் போக மறந்துவிட்டார். சென்ற வேலைமுக்கியமானதால் மூன்று நாள் அவ்வூரிலேயே தங்கும்படிநேரிட்டது. அம்மூன்றுநாளும் தண்ணீர்கூட அருந்தாமல் பட்டினியாகவேயிருந்தனராம். இதனையறிந்த அக்பர்சக்கரவர்த்தி இவரிடம் வந்து சிற்றுண்டியா

வது உண்ணும்படி பலவாறாக வேண்டியும் அவர் சிறிதும் இணங்கவில்லை. இப்படிப்பட்ட மகான்கள் பெரும்பதவியிலிருப்பதல்லவோ பேரழகு. குடிகளுக்கும் க்ஷேமம். நாட்டுக்கும் நன்மை. இராஜாங்கத்துக்கும் பெருமை. ஊர்திரும்பி வந்தபின்னரே பூஜைமுடித்துப்பின் உண்டி உட்கொண்டனராம். அப்படிப்பட்ட உத்தம குணமுள்ளவரிடத்தில் அய்யாஸுக்கு வேலைகிடைத்தது அவன் பூர்வஜன்மத்துப் புண்ணியத்தின் பயனே. அய்யாஸ் வர வரத் தம் வேலையில் பேரும் புகழும்பெற்றனர். அவருக்கு இராஜக்கிரகத்தில் பெருஞ் செல்வாக்கும் மதிப்பும் உண்டாயின. அவன் கண்மணியாகிய ஜகத்ஜோதியும் மங்கைப்பருவத்தை யடைந்தனள். தக்க வரன் சம்பாதித்துப் பெண்ணை மணம்புரிந்துகொடுக்கவேண்டிய பாரம் அய்யாஸுக்கு உறைக்கத்தலைப்பட்டது. இவ்வுலகத்தில் ஒரு தந்தைக்கு இதனினும் பெரியகவலை வேறொன்றுமில்லை. குலம், குணம், கல்வி, அழகு, சம்பத்துமுதலிய எல்லாப்பாக்கியங்களும் பொருந்திய மணமகன் கிடைப்பதென்றால் எளிதோ? நம் ஜகத்ஜோதியோ தாயில்லாப்பெண். ஆகையினால் அன்பும் ஆதரவுமாய் வைத்துக்கொள்ளும்படியான நற்குடிப்பிறந்தோனைத்தேடிக்கொடுப்பது இன்றியமையாதது. எது எப்படியிருப்பினும் ஜகத்ஜோதியின் மனமும் சிறிதும் கோணக்கூடாது. ஆகையால் அய்யாஸ் அருமை மகளின் உள்ளக்கருத்தை நாளிடையில் பல உபாயங்களால் அறியலானார். அப்பெண்ணணங்கின் மனம் ஷியர்ஆப்கன் என்ற ஒரு வீரன்மீது பொருந்தியிருப்பதாக அறிந்தனர். தாம் நினைந்தவண்ணம் மேற்கூறப்பட்ட சகலகுணங்களும் அவ்வீரனுக்குப்பொருந்தியிருந்தன. அக்காலத்து வீரர்களுக்குள் அவனே கீர்த்திபெற்றவன். அவன் அங்க அழகும், அதனினும் அழகான அவன் குண அழகும், ஜகத்ஜோதியின் பேரழகுக்கும் குணத்துக்கும் பொருத்த முடையனவாகவே இருந்தன. ஷியர் ஆப்கனும் அப்பெண்மணியைமணம்புரிய மனங் கவிந்தான். இஃது இங்ஙனமிருக்க இராஜகுமாரனாகிய ஸலீம் நம் ஜகத்ஜோதியைக் கண்ணுற்கண்ட காலமுதற்கொண்டே நேசம் பாராட்டினதாகச் சொன்னோம். அவ்வெண்ணம் அவன்

மனத்தினின்றும் சிறிதும் நீங்கவில்லை. அவன் ஜகத்ஜோதிக்குத் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அவள் அதற்கிசையவில்லை. "ஆசை வெட்கமறியாது" என்றவண்ணம் ஸலீம் தன் எண்ணத்தைத் தன் தந்தையினிடமும் தெரிவித்தான். தந்தை அவன் கருத்துக்கிணங்கவில்லை. இராஜபுத்திரருக்கும் மகம்மதியர்களுக்கும் அந்தரங்க நேசத்தையுண்டுபண்ணி அதனால் இராஜ்ய க்ஷேமத்தை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்பது அக்பரின் கருத்து. கல்யாண சம்பந்தமே தாம் கொண்ட கருத்தை நிறைவேற்றச் செய்யக்கூடியது என்பதை நன்கறிந்த மதியூகி அவர் ஆகையால், தம் புத்திரன் விழைவை வைத்து மனமுடைந்து கெட்டுப்போகாவண்ணம் அய்யாஸ் மனோபீஷ்டப்படி ஷியர்ஆப்கனுக்கே நம் ஜகத்ஜோதியைமணம் புரிவிக்கத் தக்க ஏற்பாடுசெய்து முடித்தனர். தம் அருமை மகள்மீதுள்ள வாஞ்சையால் அய்யாஸ் தம் அந்தஸ்துக்குத்தக்க கௌரவத்துடன் கல்யாண சம்பிரமங்களை நடத்தினார். சீராய் நடத்தியபடியால அநேக வீண்செலவுகளை விலக்கினர். அக்கல்யாண சம்பிரமங்களையும் அதன் சீரும் சிறப்பையும் பற்றிப் பேசாதவர் ஒருவருமில்லை. மணப்பந்தரில் மங்களவாத்திய கோஷங்களுக்கு நடுவே அத் தம்பதிகளை மகிழ்ந்து புகழாதவரெவருமில்லை. அவர்கள் நீடூழி இன்புற்று வாழும் வண்ணம் அனைவரும் அகமகிழ்ந்து ஆசீர்வதித்தனர். தெய்வ கிருபையாலும் இஷ்டபந்துக்கள் முதலியோருடைய பேருதவியாலும் யாதொரு இடையூறுமின்றிக் கல்யாணம் மிக்க விமரிசையாய் நடந்தது. அய்யாஸ் கொண்ட மனக்கவலையும் முற்றிலும் ஒழிந்தது. எல்லோரும் ஆனந்தக் கடலில் அழுந்தினார்கள். இராஜகுமாரனாகிய ஸலீம்மட்டுமே துன்புற்றிருந்தான். "கிட்டாதாயின் வெட்டென மற" என்பதை உணரவில்லை "எட்டாப்பழத்துக்குக்கொட்டாவி விட்டாவதென்?" தந்தைசொல்லைத்தவிர்க்க முடியவில்லை. என் செய்வது "தாரமும் குருவும் தலைவிதியின் படியல்லவோ முடியும்" அக்பர் தன் மகனுக்கு மிக்க அழகு வாய்ந்தவளும் ராஜபுத்திரிகளில் உயர்குலத்தைச் சார்ந்தவளுமான ஜோட்பாயைக் கல்யாணம்பண்ணினான். ஸலீம் மனம்

முற்றிலும் ஜகத்ஜோதியை விட்டகலவில்லை. அதனால் ஷியர் ஆப்கனைக் கண்ணால் பார்க்கவும் சகியான். அவன் பெயரையும் பிறர்சொல்லக் கேட்க அவனுக்குப் பிரியமில்லை. அவன்மேலிருந்த வெறுப்பால் அவனைக்கொல்லவும் தீர்மானஞ்செய்தான். அக்பர் ஷியர் ஆப்கனுடைய வீரதீரத்தை வியந்து அவனை மேலாகமதித்து வந்தபடியால் ஸலீம் யாதொருகேடும் அவனுக்குச்செய்யமுடியவில்லை. தன்னாற் கூடுமானகேடுகளைப்பிறர் மூலமாய்ச் செய்யத் தொடங்கினான். அரண்மனையைச்சார்ந்த பிரபுக்களுக்கெல்லாம் ஷியர்ஆப்கனிடம் வெறுப்புண்டாகும்படி செய்தான். அவர்களிடம பொறாமைக் குணத்தை மேன்மேலும் விருத்திசெய்தான். அரண்மனைகளில் இவ்வாறான விஷயங்கள் மிகச்சுலபமாய் நடக்கும். ஒருவர்மேல் அவதூறு சொல்லிப் பிழைப்பதே அங்கிருப்பவர்களுடைய முக்கியகுணம். தங்கள் காரியத்தைக் கைகூடச்செய்வதற்கு எதையும் சொல்வார்கள். நல்லோர்கள் ஆங்கு பழகுவது பெருங்கஷ்டம் "வெளுத்ததெல்லாம் பால் கருத்ததெல்லாம் தண்ணீர்" என்றிருப்பவர் நிர்மலமான மனமுடன் ஆங்கு பழகுவது அசாத்தியமானகாரியம். சமயத்துக்குத்தக்கபடி காக்கை வெளிதென்பாரும் தாய்க்கொலை சால்புடைத்தென்பாரும் பலர் நடமாட்டமாயிருப்பாராகையால் நல்லவர்களுக்கும் நாகரீகமுடையவர்களுக்கும் அவ்விடம் பழகநேரின் நாகப்பாம்பினிடத்தும் நெருப்பினிடத்தும் பழகுவார்போல் சர்வஜாக்கிரதையாய்ப் பழகல் வேண்டும். அவ்விடங்களில் விருப்பும் வெறுப்பும் சக்கரம் போற் சுழன்று கொண்டேயிருக்கும். சுயகாரியத்தை முன்னிட்டு மேலான காரியத்தையும் கெடுத்து என்றும் முகமன் இயம்பியவண்ணமாகவே ஒழுகுவோரைத் தவிர்த்து ஏனையோர் சிறப்புறுதல் கஷ்டம். அக்பர் சக்கரவர்த்தி இத்தீக்குணங்களுக்குச் சிறிதும் இடங்கொடாத மகானாயினும் அவர் அரண்மனையிலும் இவைமுற்றிலும் ஒழியவில்லை. ஆகையால் ஸலீம் கொண்ட எண்ணம்சிறிதும்தடையின்றி நிறைவேறும்படியாகவேயிருந்தது. ஷியர் ஆப்கன் மகா புத்திமானாகையால் இவற்றை தன் மதிநுட்பத்தால் நன்கறிந்து அவைகளுக்குட்படாமல் காலங்கழித்துவந்தான். பாம்பொடு பழகுவதென்றால் சாமான்யகா

ரியமா? எவ்வளவு புத்திமானுக்கும் அரிதன்றோ? ஷியர் ஆப்கனுக்கு வரவர மனங்கசந்தது. அரசன்மதிப்புக்கு அவன் கொண்ட ஆசையையெல்லாம் அடக்கிவிட்டான். அரசகுமாரன் பகையையறிந்து இனி அரண்மனையை அணுகினால் ஆயுளுக்கே மோசம் வந்தாலும் வருமென்று உணர்ந்தான். கண்காணாத இடத்துக்குப்போய் "இனிது இனிது ஏகாந்தமினிது" என்று வசிப்பதே யோக்கியமென்று தன் கட்டழகியையுமிட்டுக்கொண்டு பங்காளம்போக நினைந்தான. அந்தேசத்தையாளுகோன் அக்பர சக்கிரவர்த்திக்கு அடங்கிய சிற்றரசன். ஷியர் ஆப்கனிடம் பேரன்பு வாய்ந்தவன். அதனால் அங்கவன்கீழ் ஓர் அதிகார ஸ்தானம்பெற்று நீர்வளமும் நிலவளமும்பொருந்திய பர்ட்வான் என்னும் திவ்விய தேசத்துக்குச்சென்று சுகமாய்க் காலங்கழித்துவந்தான். பழுதறுகிர வாசத்திலும் இனிமையாயிருந்தது கங்காதீரவாசம். எங்குப்பார்த்தாலும்நிர்மலமாய்த் தோன்றும் கங்கைநதிக்கரைக்கண் ஓர் உத்தியானவன நடுவில் ஓர் அழகிய மாளிகை சமைத்துக்கொண்டு தன் அருங்காதலியுடன் போகபோக்கியங்களை அநுபவித்துக்கொண்டும் பேரும் புகழும் உண்டாகும் வண்ணம் இராஜகாரியங்களை நடத்திக்கொண்டும் தன் சௌக்கியத்திலும் குடிகளது சௌக்கியத்தைப்பல்லாயிரம் பங்கு மேலாக மதித்து அவர்களுக்குத் தன்னாலியன்ற நன்மைகளைத் தக்ககாலங்களில் செய்துகொண்டும் இனிமையாய்க்காலங்கழித்து வந்தான். அவனைக்கொண்டாடாத குடிகளில்லை. அவன் இனிய குணமும் தர்ம சிந்தையும் அன்பும அருளும் எவரையும வசியப்படுத்தின. இவ்வாறு இன்புற்று வாழுநாளில் ஜகத்ஜோதி ஒரு குழவி ஈன்றனள். அக்காதலர் அக்குழவியை நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்த்துவந்தனர். இவ்வாறு ஷியர் ஆப்கன் இல்லறவாழ்வின் நலமெல்லாம் நன்கு அநுபவித்துச் சுகமுற்று நெடுநாள் வாழுங்கால் தன்பால் அந்தரங்க அன்புபாராட்டிய அக்பர் சக்கிரவர்த்தி காலஞ்சென்றார். அது ஆற்றொணுத்துயரத்தை விளைவித்தது. தேசமெங்கும் ஒளி மழுங்கி அந்தகாரம் மூடிக்கொண்டதுபோல் தோற்றிற்று. நாடெல்லாம் நைந்துருகியது. நல்லோரும் நலிவுற்றார்கள். ஐம்பது ஆண்டு அமரர் அதிபதி போல் ஆண்டுவந்த அக்பர் அரசாட்சியின் ஆனந்தத்துக்கு அளவுமுண்டோ?

[இன்னும் வரும்.]

எஸ். சாமிநாதையர்,

உ

குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904௵ மார்ச்சு மீ { புத்தகம் 3.

ஓஷதி சாஸ்திரம். (Botany)

புஷ்பங்கள் பற்பல வர்ணமுள்ளனவென்றும் அவ்வர்ணங்களால் கவரப்பட்ட வண்டினங்கள் அப்பூக்களின்கண் உள்ள சுக்கில சோணித கரணங்களை ஒன்று சேர்த்து ஓஷதி வர்க்கங்களைப் பல்கிப் பெருகச் செய்கின்றன வென்றும், பகட்டான வர்ணமில்லாத தூய வெண்மையான பூக்கள் அநேகமாய் வாசனையுள்ளவை யென்றும், அவ் வாசனையினாலேயே வண்டுகள் கவரப்படுகின்றனவென்றும், அவ்வித புஷ்பங்கள் அனேகமாய் இரவில் மலர்கின்றனவென்றும் இருட்டுக்கு மத்தியில் அவைகளை யறியும்படி வெண்மையாகவும் பகவான் படைத்திருக்கின்றனரென்றும் கூறினோம். இன்னின்ன மலர்கள் இன்னின்ன காலத்தில் புஷ்பிக்கின்றன வென்று நம் முன்னோர்கள் பல அழகான சுலோகங்களாலும் பாடல்களாலும் கூறியிருக்கின்றனர். 'மல்லிகையே வெண்சங்கா வண்டூத' என்ற நளவெண்பாச் செய்யுளால் மல்லிகை மாலைப் பொழுதில் மலருமென்றும், 'பிடகைப் பெய்த செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து அவ்விதழ் அவிழ் பதங்கமழப் பொழுதறிந்து இரும்பு செய்விளக்கின் ஈர்ந்திரிக்கொளீஇ' (பூந்தட்டிலே இட்டுவைத்த பசிய காலினையுடைய பிச்சியினுடைய அலருஞ் செவ்வியையுடைய அரும்பினது அழகிய இதழ்கள் பகற் பொழுதைக் கடந்து விரியுஞ் செவ்விமணக்கையினாலே அந்திக்காலமென்றறிந்து இரும்பாற் செய்த தகளியிலே நெய் தோய்ந்த திரியைக் கொளுத்தி) என்ற நெடுநல்வாடைப் பாட்டினால் வெண்ணிறமுள்ள

பிச்சி மலர்தலும் அந்திக்கால மென்றும் அறிகிறோம். குறிஞ்சிப்பாட்டில் 'வள்ளிதழ் ஒண் செங்காந்தள்' தொடங்கி 'பரேரம்புழகு' (-செம்பூ, அல்லது மலை பெருக்கம்பூ) ஈறாக ஏறக்குறைய நூறு பூக்கள் 35 அகவலடிகளில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் நள்ளிருள் நாறி என்று ஒரு பூ கூறப்பட்டிருக்கிறது. அது இருவாட்சிப்பூ. (நெருங்கிய இருளில் வாசனையுடையது) என்பது அதன் பதப்பொருள். அம்மலர் நல்ல இருட்டில் புஷ்பிக்கும் என்று விளங்குகின்றது.

புஷ்பங்கள் இவ்விவ் காலத்தில் மலர்கின்றன வென்பதை நன்கறிந்த ஒரு ஜர்மானிய ஓஷதி சாஸ்திரியார் தம்முடைய தோட்டத்தில் ஒரு புஷ்பகடிகா யந்திரத்தை யமைத்தனர். ஒரு நாளை 24 மணி நேரங்களாக வகுத்து பூமியில் ஒரு பெரிய வட்டம் கீறி அதை 24 பாகமாகச் செய்து இலக்கமிட்டு ஒவ்வொரு இலக்கத்திலும் அது குறிப்பிக்கிற காலத்தில் புஷ்பிக்கின்ற பூஞ்செடியை அமைத்து புத்திசாதுரியமான நுட்ப வேலை செய்யப்பட்ட ஒரு புஷ்ப கடிகாரத்தை அமைத்தார். அதனைப் பார்த்து நேரம் சொல்லும்படியாயிருந்தது. இதுவும் ஒரு பேரதிசயமே! இன்னின்ன மணிக்குரிய மலர் இன்னது என்பது போல இன்ன ருதுவுக்கு இன்னபூ, இன்ன அயனத்துக்கு இன்னபூ உரித்தானது என்றும் நாம் அறிகிறோம். இவை நிற்க.

அநேகமாய்ச் சிறு புஷ்பங்களில் சுக்கில சோணித கரணங்கள் ஒன்றிலேயே அமையப்பெறும். அவ்வாறு அமையப் பெறாத சிறு புஷ்பங்களும் உண்டு. அவைகளுக்குச் சுக்கில சோணித சம்பந்தம் காற்றினாலும் வண்டு முதலிய பிராணிகள் மூலமாகவும் நேரிட வேண்டியது. சிறு புஷ்பங்களாயிருப்பதால் வண்டுகளைக் கவரும்படியான சக்தி அவைகளுக்குக் கிடையாது. அதை உத்தேசித்தே ஒரே தண்டின் நுனியில் பல புஷ்பங்கள் அடுக்கடுக்காகவும் வட்டம் வட்டமான வைகளாகவும் செண்டாகவும் அமைக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக 'பல்பூந்தணக்கம்,' (பல பூக்களையுடைய தணக்கம்பூ) 'பல்இணர்க்காயா' (பல கொத்துக்களையுடைய காயாம்பூ)'

தோந்து உந்தூழ் (கொத்தினையுடைய பெரு மூங்கிற் பூ) என்று குறிஞ்சிப் பாட்டில் கூறிய செண்டுப் பூக்களைக் காண்க. ஐக்கிய பத்தியத்தின் கௌரவத்தை நம்மவர்களுக்கு புஷ்பங்கள் அறிவுறுத்தியும் நம்மவர் கவனிப்பதில்லை. இதனை நன்கு விளக்கச் சூரியகாந்திப் பூவை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். சாஸ்திர ரீதியாய் அஃது ஒரு புஷ்பமன்று; பல புஷ்பங்களின் தொகுதி. அவைகள் இரு பகுதிகளாய்ப் பிரிந்திருக்கின்றன. சுற்றி யிருக்கின்ற புஷ்பங்கள் சூரிய ரஸ்மி போன்ற புஷ்பங்கள் என்றும் (Rayflorets) சூரிய மத்திய வட்ட புஷ்பங்களென்றும் (Disc florets) பேர் பெறுகின்றன. விளிம்பில் இருக்கின்ற புஷ்பங்களெல்லாம் அநேகமாய் ஆண் புஷ்பங்கள். மத்தியிலுள்ளவைக ளெல்லாம் பெண் புஷ்பங்கள். சூரியகாந்திப்பூ ஒரே காலத்தில் நாலா பக்கங்களிலும் மலர்கிறதில்லை. விளிம்பு புஷ்பங்கள் கங்கண கிரகணம் போல் ஒரு பகுதி மலர்ந்து பின் மற்றைப் பகுதிகள் ஒன்றன் பின் ஒன்றாய் வட்டம் வட்டமாய் மலர்கின்றன. சூரியகாந்தி புஷ்பத்தில் சிறு புஷ்பங்கள் ஒன்றோடொன்று அடர்ந்து சேர்ந்திருக்கின்றன. அவ்வண்ணமின்றி ஒரு தண்டின் நுனியில் தனித்தனியாய்ப் புஷ்பிக்கும்பூக்களைப் பார்க்கலாம். அவை அம்பெல் (umbel) அல்லது குடை வடிவுள்ள புஷ்பத் தொகுதி யென்ற பெயர் பெறும். இவையே பல தொகுதிகள் ஏற்படின் குடைக் கூட்டங்கள் (compound umbels) என்ற பெயரால் வழங்கும். சில சமயங்களில் புஷ்பங்கள் ஒரு தண்டில் ஒன்றன்மேல் ஒன்றாய் அணி அணியாய் அமைகின்றன. உதாரணமாக துளசி, விபூதிப் பச்சை, மருக்கொழுந்து, கதிர்ப்பச்சை முதலியவற்றைக் காணலாம். பின்னும் சிலதண்டுகள் அடுக்கடுக்காய்க்கிளைத்து ஒவ்வொருசிறுகிளையிலும் அணிஅணியாய்ப்புஷ்பங்கள் அமைகின்றன. சரக்கொன்றை முதலியன இவைகளுக்குஉதாரணமாம். இவைபோல் புஷ்பங்களின் அமைப்பு இன்னும் பல வகுப்புக்களாயிருக்கின்றன். இவ்விதமாய்த் தொகுதிகளாயிருப்பதற்கு முக்கியகாரணம் வண்டுமுதலிய ஜீவராசிகளின் கண்களைக் கவர்ச்சிசெய்வதுதான். தனித்தனியாய் அங்குமிங்கும் புஷ்பிக்

கும்பகூஷத்தில் வண்டுகள் கண்களுக்கு அச்சிறுபூ புலப்படாது. அதனால் சுக்கில சோணித சம்பந்தம் நிகழாமலேபோய்விடும்.

ஓரங்களில் முதலில் புஷ்பித்துப் பின் அடுத்திருக்கிற புஷ்பங்கள் மலர்ந்து கடைசியில் நடுவிலுள்ள புஷ்பங்கள் மலரும் என்று கூறினோம். அவ்வகுப்புக்கு ஸெண்ட்ரிபீடல் (Centripetal) அல்லது உள் நோக்கிப் புஷ்பிக்கிற புஷ்பமென்றும் மையத்தில் அல்லது சிகரத்திலிருக்கின்ற புஷ்பங்கள் முதலில் புஷ்பித்துப் பின் அதனை அடுத்திருக்கிற புஷ்பங்களும் கடைசியில் ஓரத்திலிருக்கிற அல்லது அடியிலிருக்கிற புஷ்பங்களும் பூக்கும். இவ்வகுப்பு மலர்களுக்கு ஸெண்டிரிப்யூகல் (Centifugal) புஷ்பங்கள் என்று பெயர். இவ்வாறான புஷ்பங்களில் எவ்வித புஷ்பங்களாயிருந்தாலும் முதலில் மலர்கின்றது அநேகமாய் ஆண் பூவாகவே இருக்கும். பின்னரே பெண் பூக்கள் மலரும். இதன் காரணம் உய்த்துணரத்தக்கது.

ஈசுவர சிருஷ்டியிலுள்ள ஆண் பெண்களில் ஆண் உருவங்களினும் பெண் உருவங்களின் அமைப்பு அதிக பதார்த்தங்கள் சேர்ந்து ஆகவேண்டியிருக்கின்றது. ஆகையால் சரீர வளர்ச்சி ரீதியாகவே ஜந்துக்கள் அமைகின்றன. தேன் ராட்டுக்களில் விதிவசத்தால் அந்த ராட்டுக்குக் காரணபூதமாயிருக்கின்ற தாய்த்தேனீ மரணமடைந்தால் மற்றைத் தேனீக்களெல்லாம் யோசித்து முட்டைகளில் வளமையான முட்டையைத் தெரிந்தெடுத்து அது குஞ்சு பொரித்தவுடன் சிசுவுக்கு நல்ல ஊட்டம் கொடுத்துத்தாயினுடைய ஸ்தானத்தில் அதை வைத்துக்கொள்ளுகின்றன. பசு முதலிய பெண் மிருகங்களை அதிக உழைப்புக்கு உள்படுத்தினால் ஆண் கன்றுகளையே ஈனும். உழைப்பில்லாத அவ்வித மிருகங்கள் பெண் கன்றுகளையே ஈனுகின்றன. மனுஷன் விஷயத்திலும் இஃது உண்மையே. செல்வவான்களுடைய வீட்டு ஸ்திரீகளுக்குப் பெண்கள் அதிகமாய்ப் பிறக்கிறதும் ஏழை ஜனங்களுக்கு ஆண் சந்ததிகள் விருத்தியாகிறதும் இயல்பே.

[இன்னும் வரும்.]

ப. நாராயணய்யர்.

ஜகத்ஜோதி.

அக்பர் சக்கிரவர்த்தியின் தேகவியோகத்தால் அய்யாஸ் ஆஸ்ரெளுத் துயரடைந்தானென முன் கூறினோம். அச்சக்கிரவர்த்தியின் மகன் ஸலீம் உடனே பட்டத்துக்கு வந்தான். 'உலகம் ஜயித்தோன்' என்ற பொருள்கொண்ட ஜிஹாங்கீர் என்ற பட்டப்பெயர் தரித்தான். அவன் பதவிக்குநிகர் ஒன்றுமில்லை. அவனுக்கு யாதொரு தட்டுத்தடையில்லை. மனம்போனபோக்கெல்லாம் போகலாம். நினைத்ததெல்லாம் சட்டமே. இவ்வாறான உன்னத பதவிக்குவந்தும் அவன் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்டான். ஜகத்ஜோதியின் ஞாபகம் அவன் மனம்விட்டு நீங்கவில்லை. அவளை அடைவதற்கு வேண்டிய வழிவகைகளைத் தேடினான். ஷியர் ஆப்கனுடன் சமாதானம் பண்ணி முயன்றுபார்த்தான். "பிராணனை விட்டாகிலும் மானத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதே அவன்கருத்து. ஜகத்ஜோதியும் அந்தரங்க நேசமுடையவளாயிருந்தபடியால் ஸலீம் யாதொன்றும் செய்யமுடியவில்லை, கடைசியாய் ஷியர் ஆப்கனை நேரில் இராஜதானிக்கு வரவழைத்தால் அச்சமயம் ஏதாவது யோசனைசெய்துக்கொள்ளலாமென்று நினைத்து அவனை வங்காளத்தினின்றும் உடனே வந்துசேரும்படி உத்தரவு பிறப்பித்தான். ஷியர் ஆப்கனும் அக்கட்டளையைக் கண்ணுற்றவுடனே இடிகேட்ட நாகம்போலாகி பின்வருமாறு சிந்திக்கத் தொடங்கினான்.

"பார்யாரூபவதிசத்ரு" என்று பெரியோர் கூறுவது சரியே. இவ் இராஜ ஆஞ்ஞையைத் தள்ளவொண்ணாது. போகவேண்டியது இன்றியமையாதது. ஜகத்ஜோதியைக் கூட்டிப்போதல் சங்கடமாகவே முடியும் ஆகையால் அவளை இங்கேயே நிறுத்திவிட்டு நான்மட்டிலும் போவதே யுக்தம். "விதியின் பயனே பயன்" என்றும் "எழுதியவாறுமென் றிராமடநெஞ்சே, கருதியவாறுமோகருமம்." என்றும் தனக்குள்ளே சமாதானம் பண்ணிக்கொண்டு ஜகத்ஜோதிக்கு வேண்டிய புத்திகளைக்கூறி சாவதானமாயிருக்கும்படி கட்டளையிட்டு இராஜதானிபோய்ச்

சேருப்பொருட்டு 'திக்கற்றவருக்கு தெய்வமே துணை.' 'எல்லாம் எனையாளும் ஈசன்செயல்' என்று தைரியப்படுத்திக் கொண்டு புறப்பட்டான்.

அவனோ மகாசூரன். ஜனரஞ்சிதன். பேரும் புகழும்பெற்றவன். ரூபலாவண்ய சௌந்தரியமுடையவன். வெகுகுணசாலி. ஆகையால் ஜனங்களெல்லாரும் அவனை நேசித்தார்கள். இந்தபலங்களைக்கொண்டே தைரியத்துடன் அவன் சக்கிரவர்த்திசமுகம் சென்றான். சக்கிரவர்த்தி தனக்குக்கேடுசெய்யாமலிரார் என்பது அவன் நம்பிக்கையானாலும் மனோதைரியமொன்றையே கடைப்பிடித்துச்சென்றான். சக்கிரவர்த்திசமுகம்சென்றதும் அவர்மிக்க மரியாதையோடு நல்வரவுகூறி அவனைப் பலவிதமாய் உபசரித்தார். அவ்வாறு செய்ததற்குக்காரணம் அவனுக்கு யாதொரு சந்தேகமும் தோற்றாமலிருக்கும் வண்ணமே. ஷியர் ஆப்கனும் "வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர்" என்று இருப்பவன். "வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை" என்ற மூதாட்டியின் மொழி இவன் விஷயத்தில் உண்மையாயிருந்தது. தனக்கு இயல்பாயுள்ள கம்பீரகுணத்துடன் தான் ஒன்றும் வேற்றுமையாக நினைக்கவில்லை. சக்கிரவர்த்தியும் இவனது பேரும் புகழையும் உத்தேசித்து உடனே ஒன்றும்செய்யத் துணியவில்லை. ஷியர் ஆப்கன் என்றபெயருக்கே சிங்கசங்காரன் என்பது பொருள். அவன் ஒரு சிம்மத்தை எதிர்த்து யுத்தஞ்செய்து அதைக்கொன்றதால் அவனுக்கு இப்பெயரிடப்பட்டது. ஆகையால் அவன் தைரியமும் மனோவலிமையும் பகைவரையும் வணங்கச்செய்தது. ஜிஹாங்கிர் ஒருநாள் தன்னுள் யோசனைசெய்ததாவது "ஷியர் ஆப்கனோமகாசூரன். ஜனமதிப்பு உள்ளவனானபடியால் இவனுக்குக் கேடுசெய்தால் நமக்கே கேடாய்முடிந்தாலும் முடியும். ஆகையால் வேறு உபாயம் செய்தே இவனைத் தொலைக்கவேண்டும். இவன் உயிரோடிருக்கும் வரை ஜகத்ஜோதியை நாம் அடையமுடியாது. அவ்வணங்கை அடையாவிடின் நம்மாசைதீரப்போகிற தில்லை. ஆகையால் இவனை வேட்டைக்கு இட்டுப்போகிற பாவனையாய் எல்லோருடனும் காட்டுக்குச்சென்று அச்சமயம் இவனைக்

கொல்ல வகைதேடுவதே தக்கசூழ்ச்சியாகும். வேறு எவ்வித யோசனைசெய்வதிலும் பயனில்லை" என்று தீர்மானித்து வேட்டைக்குப் போவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய மந்திரிக்குக் கட்டளையிட்டான், எல்லாம் அன்றே சித்தமாயின. மறுநாள் சக்கிரவர்த்தி பலபிரபுக்களும் வீரதீரர்களும் தம்மைப் புடைசூழக்கத்தி, கேடயம், ஈட்டி, பாலா, ஜமுதாடு முதலிய சகல வேட்டைக் கருவிகளோடும் மகாசூரர்களான வேட்டைக்காரர்களோடும் கஜதுரகபதாதிகளோடும் பட்டணம்விட்டுப் புறப்பட்டார். கருமலைகள்போற் தோன்றும் யானைகள், பொன்வெள்ளியால் செய்யப்பட்டு நவரத்தினங்கள் இழைத்துப் பட்டுப்பட்டாடைகளாலும் பலவர்ணக் குஞ்சங்களாலும் அலங்கரிக்கப்பட்ட விதானங்களுடன் சுவர்ண மண்டபங்கள் போல் விளங்கும் பெரிய அம்பாரிகள் தாங்கி அணியணியாய் ஆயிரக்கணக்காய்ப் புறப்பட்டது அற்புதகாட்சியாயிருந்தது. நம் டில்லிமாநகரில் சென்ற வருஷம் நடந்த நம்மன்னர் எட்வர்ட் சக்கிரவர்த்தியின் மகுடாபிஷேக மகோற்சவ காலத்தில் நடந்த இவ் யானைக்காட்சியும் இதற்குநிகரோ என்று சந்தேகிக்கும் வண்ணம் அவ்வளவு கம்பீரமாயிருந்தது. வேட்டைக்குப் புறப்பட்ட அந்த விமரிசையை என்சொல்வது. பட்டணமே சகல ஜனங்களுடன் நகர்ந்து செல்வதுபோலத் தோன்றிற்று. ஜீஹாங்கிர் சக்கிரவர்த்தி தமக்கு அடுத்து ஷியர் ஆப்கனது யானை வரும்படி கட்டளையிட்டு மரியாதை செய்தது மன்றி ஒவ்வொருசமயமும் வேட்டைக்கு வேண்டிய யோசனைகளை யெல்லாம் அவனையேகேட்டுவந்தார். இவ்வாறு செய்வதால் பிரபுக்களுக்கு அவன்மேல் பொறாமையுண்டாகட்டும் என்பது அவர் கருத்து. ஷியர் ஆப்கனும் மகா மதியூகியாகையால் எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாதவன்போல் விநயசம்பத்துடன் தன் பர்த்தாவின்முன் பணிவுடன் நடக்கும் உத்தமநாயகிபோல் மிகவும் விநயசம்பத்துடன் நடந்தான். 'ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு' என்ற வண்ணம் சர்வ ஜாக்கிரதையுடன் பழகி வந்தான். சக்கிரவர்த்தியோ ஒவ்வொரு நிமிஷமும் அவனைக்கொண்டாடி அவன் சௌரியத்தைப்பற்றிப் புகழ்ந்தே பேசி உற்சாகப்படுத்தி வந்

தார். தமரேயும் "தம்மைப்புகழ்ந்துரைக்கும் போழ்தில் அமராது அதனை அகற்றலே வேண்டும்" என்ற வெண்ணம் ஷியர் அப்கன் இதனைச் சிறிதும் லட்சியம்பண்ணாமல் விநயசம்பத்துடன் விலக்கியே வந்தான். வெகுதூரம் பிரயாணம்பண்ணி வேட்டையாட வேண்டிய காடுவந்து சேர்ந்தார்கள். அது பார்வைக்கே பயங்கரமாயிருந்தது. சூரியவெளிச்சத்தையே பார்த்திராத இடங்கள் அநேகமிருந்தன.

மரங்கள் ஆகாயத்தை அளாவிக்கொண்டு கூடாரம் அடித்தாற்போல் காணப்பட்டன. சருகுகள் உதிர்ந்து நடப்போர்காலுக்கு மெத்தென்றிருந்தன சிலவிடங்கள். கால் வைக்க இடமில்லாமல் முள்ளும் கல்லும் கரடுமுரடுமாயிருந்தன சிலவிடங்கள். ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கும் விருக்ஷங்களுக்கு இடையே பற்பலவிதமானகொடிகள் பின்னிப்பிணைந்து கொண்டிருந்ததானது கூத்தாடிகள் ஒருஸ்தம்பத்துக்கும் மற்றொருஸ்தம்பத்துக்கும் மத்தியில்கட்டும் கயிறுபோல் தோன்றிற்று. சிலமரங்களில்கொடிகள் நுனிமுதல் அடிவரையில் கூடாரம்போல் அழகாய்நாலாபக்கமும் படர்ந்திருந்தன. அவைகளில் பலவர்ணப்பூக்கள் கொத்துக்கொத்தாய் புஷ்பித்திருந்தது கண்டோர்கண்களைக் கவரும்படியாய் விளங்கின. சூரியகிரணங்களில் தோன்றும் வர்ணங்களினும் வேறுவர்ணங்களுமிருக்கும் போல் தோன்றுகிறது என்றுகண்டோர் பிரமிக்கும்படி பற்பல வர்ணங்களையுடைய தழைகளுடனும் பூக்களுடனும் விருக்ஷங்கள் மிகவும் கம்பீரமாய்விளங்கின. கண்ணாமையாக்காடு என்றால் அதற்கேதகும்.

(இன்னும் வரும்)

எஸ். சாமிநாதையர்.

சித்திரகவி.

மாலைமாற்று மாலை.

தமிழ்மொழியிலே வழங்கப்படுங் கவிகள் ஆசுகவி எனவும், மதுரகவி எனவும், சித்திரகவி எனவும், வித்தாரகவி எனவும் நான்குவகைப்படும்; எழுத்தானாவது சொல்லானாவது பொருளானாவது அணியானாவது கவிவகையானாவது பிறர்கேட்டவாறே விரைந்து பாடி முடிக்கப்படுவது ஆசுகவியாகும். ஆசு - விரைவு. சுவையமைந்த சொற்களும் பொருள்களும், சிறப்பமைந்த மோனை, எதுகை முதலிய தொடைகளும், அணிகளும் மிக்கு விளங்குமாறு பாடப்படுவது மதுரகவியாகும். மதுரம் - இனிமை. சித்திரம்பொருந்தி விளங்குமாறு பாடப்படுவது சிததிரகவியாகும். சித்திரம் - அதிசயம், பலவிதம், சித்திரரேகை- தொடர்நிலைக் கவிகளாகவாவது பலவடி கொண்டு விரிந்த தனிக்கவியாகவாவது பாடப்படுவது வித்தாரகவியாகும். வித்தாரம் - அகலம். இவைகளுள்ளே சித்திரகவி இலகுவிலே எவராலும் பாடத்தக்கதன்று. மகாப்பிரயாசத்தோடும் பாடுதற்குரியது. சித்திரகவிகள் பலவகையாக வடமொழியலங்காரங்களிலே விரித்துச் சொல்லப்படுகின்றன. வடமொழியிலுள்ள சில காப்பியங்களிலுஞ் சித்திரகவிகள் பாடப்பட்டிருக்கின்றன. சிசுபாலவதம், கிராதார்ச்சுனீயம், நளோபதம் முதலிய காவியங்களிலே சிலசில சித்திரகவிகள் காணப்படுகின்றன. தென்மொழியிலுஞ் திருஞானசம்பந்தசுவாமிகளுடைய தேவாரம், சிவதருமோத்தரம்' காஞ்சிப்புராணம் முதலியவைகளிலே சிலசில சித்திரகவிகள் காணப்படுகின்றன. இலக்கண விளக்கநூலார் சித்திரகவிகளிலே இருபதுவகை கூறினர்.

இலக்கண விளக்கம்.

கோமூத்திரியே கூட சதுர்த்தம்.
மாலை மாற்றே மாத்திரைச் சுருக்கம்

மாத்திரை வருத்தன மெழுத்து வருத்தனம்
ஒற்றுப் பெயர்த்தல் வினாவுத் தரமே
நாக பந்த முரச பந்தம்
திரிபாகி திரிபங்கி பிறிதுபடு பாட்டு
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதக நிரோட்டிய மென்ன
முறைபெற வகுத்த மிறைக்கவி யிருபது
மறிவுறக் கிளந்த வவற்றின் பால.

யாப்பருங்கலகாரர் பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, நாகங்கொளல், வாவன்ஞான்று, சித்திரப்பா, விசித்திரப்பா முதலியனவாக வேறும்பல சித்திரகவிகள் கூறினர். வடமொழியிலே சரசுவதி கண்டாபரணகாரர் கோமூத்திரிகையைப் பாதகோமூத்திரிகாபந்தம், அர்த்தச்சுலோககோமூத்திரிகை, விபரீதகோமூத்திரிகை, பிராகிருத கோமூத்திரிகை, அர்த்தகோமூத்திரிகை, கோமூத்திரிகாதேனு முதலியனவாக விரித்துக்கூறினர். சக்கரத்தினையும் சடாசக்கரபந்தம், துவிதீய சடாசக்கரபந்தம், துவிசதுஷ்க சக்கரபந்தம், துவிசிருங்காடக சக்கரபந்தம், விவடிதசக்கரபந்தம், வியோமபந்தம் முதலியனவாக விரித்துக்கூறினர். முரசபந்தத்தினையும் ஏகாக்கரமுரசபந்தம், முரசப்பிரத்தாரம் முதலியனவாக விரித்தார். அட்டதல கமலபந்தம், சோடசபத்திர கமலபந்தம், துரங்கபதபந்தம், சரயந்திரபந்தம் முதலியனவாகப் பின்னும் அவர் கூறிய சித்திரவகைகள் மிகப்பல. இவைகளையெல்லாம் தமிழிற்பெயர்த்துச் சித்திர கோட்டங்களிலமையுமாறு கவிகளாக்கி விளக்குதல் பெரிதும் பிரயாசமேயாம். இலக்கண விளக்கத்திலே சொல்லப்பட்ட இருபது வகைகளுள்ளும் கோமூத்திரிகை, மாலைமாற்று, நாகபாதம், முரசபந்தம், சருப்பதோபத்திரம் என்பன அதிகிருச்சிரத்தோடுஞ் செயப்படுவனவாம்.

இவைகளை முன்னோர் சிலர் செய்தாராயினும் இரண்டுமுதலிய பலவாகக்காணும்படி செய்தாரல்லர். சிவதருமோத்தரத்

திறுதியிலே மாலைமாற்றாக ஒரு செய்யுள் வருகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகளுடைய தேவாரத்திலே "யாமாமா" முதலியனவாகப் பதினொரு செய்யுள் வருகின்றன. இவை அருட்கவிகளாதலின் பிறவற்றொடு சேர்க்கப்படுவனவல்ல.

இவையெல்லாம் நிற்க. இப்போது முற்றுஞ் சித்திரகவியாக அமைந்த ஒரு பிரபந்தங் கிடைக்கப்பெற்று வாசித்தோம். அதன் பெயர் "மாலைமாற்றுமாலை" என்பது. அது செந்தமிழருமையறியுஞ் சீமானும், செந்தமிழ்ப் பரிபாலகரும், பிரபுசிகாமணியுமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள் அவைக்களத் தரங்கேறியது. அதன்கண் கலிவிருத்தமும், வெண்பாவுங் கட்டளைக் கலித்துறையும் பிறவுமாக முப்பது கவிகள் மாலைமாற்றாகப் பாடப்பட்டிருக்கின்றன. மாலைமாற்றுவது இறுதியினின்று வாசிக்கும்போதும் முதலினின்று வாசிக்கும்போது முடிந்தவாறு முடியும்படி எழுத்துக்களமைத்துப் பாடப்படுஞ்செய்யுள். மாலைமாற்றினை வடநூலார் கதப்பிரத்தியாகதம் என்பர்.

நூலின் முதற்கவியாகிய "வாலகன" என்னும் வெண்பா மாலைமாற்றாக அமைக்கப்பட்டிருத்தலன்றிக் காதைகரப்புங் கரந்துறையுமாக ஏகபாதங்கள் நான்காரச்சக்கரம், சருப்பதோபத்திரம் முதலியனவும் இரட்டைநாகபந்தமும் பிறவுமமைந்திருக்கின்றது. வேறுஞ் சில கவிகள் மாலைமாற்றாக அமைந்திருத்தலன்றி யமகம், திரிபு, துவிபங்கி, கோமூத்திரிகை, சர்வயமகம் முதலியனவாகவு மமைந்திருக்கின்றன. இவைகளை வாசிக்கும்போது எட்டாரச்சக்கரத்தி லமைந்துநிற்கும் ஒருகவியாய் நின்று, தன்னிடத்தே கூடசதுர்த்தம், காதைக்கரப்பு, சர்வயமகம், இரண்டடிப் பாடகமடக்கு, கோமூத்திரிகை, சுழிகுளம் முதலிய பிறகவிகளும் பிறவுங் கொள்ளுமாறமைந்து வீரசோழியத்திறுதியிலே காட்டப்பட்டிருக்கின்ற சக்கரகவியையும் நினைத்தேம். அது சுவரூபம் பிறழ்ந்துகிடக்கின்றது.

சித்திரகவிகளைப் பாடுதல் எத்திறப் புலவர்களுக்கும் அருஞ் செயலாகும்! சித்திரகவிகளுள்ளும் கோமூத்திரிகை மாலைமாற்று முதலியன பாடுதல் அதனினும் அருஞ் செயல்! கட்டளைக் கலித்துறையிலே மாலைமாற்றமைத்தலும், மாலைமாற்றுடனே சக்கரம், கோமூத்திரிகை முதலிய பிற சித்திரங்களுமமையுமாறமைத்தலும், அதனினும் அருஞ்செயலாகும்! மாலைமாற்றாக முப்பது செய்யுள்வரையிலே அமைததல் அதனினும் அருஞ் செயல்.

இவ்வாறருஞ் செயலமைந்த இப்பிரபந்த கர்த்தாவின் புலமை புலவர்களாற் பெரிதும் பாராட்டற்பாலது இப்பிரபந்தஞ் செய்தவர் இப்பொழுதை மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய சோழவந்தான் நகரத்து ஸ்ரீமான் அ. சண்முகம்பிள்ளையவர்கள். உரையின்றிப் பொருளுணர்தற்கரியனவாகிய இக்கவிகளுக்கெல்லாம் பதவுரையுஞ் சிறப்பமைந்த விசேடவுரையும் எழுதப்பட்டிருக்கின்றன. பலநூற்றுறைபோய பண்டிதரன்றிப் பிறர் இவைகட்குரைசெய்தல் கூடாது. இதன்கணுள்ள வியங்கியப்பொருளும் ஆக்கியோன் வரலாறும் பிறவும் விளங்குமாறு ஒரு முகவுரையும் எழுதப்பட்டிருக்கின்றது. முகவுரை, உரை என்னும் இவ்விரண்டினையும் எழுதினவர் சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவானும் விவேகபாநு பத்திராதிபருமாகிய ஸ்ரீமான் எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்கள். இவர் புலமையும் பாராட்டற் பாலதேயாம். இவர்கவிகள் சொற்சுவையும் பொருட்சுவையும் பெற்று விளங்குதலைப் பனசைவிசுவலிங்கநாதர்பதிகம், அரிமளப்பெருமாள் பதிகம் முதலியன படித்தோர் இனிதுணர்வர்.

யாழ்ப்பாணத்துச்சுன்னாகம்
சோபகிருது ௵ தை௴

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

மேனாட்டுக் கலைஞானம்.

[தொடர்ச்சி.]

[பிழை திருத்தம்—சென்ற பிப்ரவரி௴ 2 நிர். பாநு 56-வது பக்கம் 30-வது வரியில் "ஸ்தம்பாகிருதி" என்பதற்குப்பின் "யாகிய குழலுக்கு ஸிலிண்டர் என்றும்" என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம். ப-ர்]

17. நிறை என்பதின் அருத்தம்.

நிறை, எடை, கனம், பாரம், தூக்கு, என்னும் சொற்களெல்லாம் ஒரு பொருளையே பயக்கும். நிறையென்பதின் சொரூபத்தை இனி நாம் ஆராய்வாம். யாதாயினும் ஒரு பொருளைத் தரையிலிருந்து தூக்க முயலும் பொழுதாவது அல்லது அதைக் கையில் தாங்கும் பொழுதாவது பிரயாசம் அல்லது பிரயத்தனம் என்னும் உணர்ச்சி நமக்குண்டாயின் அந்தப் பொருள் நிறையுள்ளது அல்லது பாரமானது என்று நாம் சொல்லுகிறோம். இன்னும் நிலத்திற்குமேல் உயரத்தில் ஒரு ஆதரவின் பேரில் நிற்கும் யாதேனும் ஒரு பண்டம் அந்த ஆதாரம் நீங்கவும் கீழே தரையில் விழுமாயின் அப்பண்டம் கனமுள்ளது என்று சொல்லுகிறோம். தரை யென்பது பூமியின் மேற் பரப்பு. ஒரு ஆதரவினால் தரைக்கு அப்பால் வைக்கப் படாமலிருக்கும் பொழுது கனமுள்ள சகல பண்டங்களும் பூமியின் மேற்பரப்பாகிய நிலம் அல்லது தரையின்மேல் நேரே வந்து விழுவதினால், கனமுள்ள எல்லாப் பொருள்களும் இம்மாதிரி விழுவதற்கே பார்க்கின்றனவென்று நாம் கூறலாம். பூமியின் மேற் பரப்பில் எந்த இடத்தில் நாம் சோதனை செய்தாலும்சரி சகல வஸ்துக்களும் தரையை நோக்கியே வந்து விழுகின்றன. மழையானது ஜலத்துளிகள் சேர்ந்தது. நாம் வசிக்கும் இவ்வூரிலாயினும்சரி அல்லது அமெரிக்கா தேசத்திலாயினும்சரி காற்று இல்லாமல் மழை பெய்யும் பொழுது நாம் கவனித்துப்

பார்த்தால் மழைத்துளிகள் தரையை நோக்கி * இலம்பமாய் வந்து விழுகின்றதைக் காணலாம். இப்பொழுது தென் அமெரிக்கா தேசமானது இந்த உருண்டை வடிவாகிய உலகத்தில நமது பாதத்திற்கு நேராய் அப்புறத்தில் அதாவது நமக்குப் பாதலத்தில் இருக்கின்றது என்று பூகோள சாஸ்திரம் வாசிப்பதால் தெரியும். அதாவது நாமிருக்கும் தேசமானது உருண்டை வடிவான உலகத்தின் மேல் புறம் என்று சொல்வோமானால் தென் அமெரிக்கா தேசமானது இந்த உலக உருண்டையின் கீழ் புறத்தில் நமது பாதத்திற்குச் சற்று ஏறக்குறைய நேர் கீழே இருக்கின்றது. இன்னொரு விதமாய்ச் சொல்வோமானால் இந்த இந்தியா தேசத்தில் நிற்கும் நமது உள்ளங்காலும் தென் அமெரிகா தேசத்தில் நிற்கும ஜனங்களின் உள்ளங்காலும் மத்தியிலிருக்கும் பூமியானது இல்லாமற் போய்விடுமேயாகில் தொட்டுக் கொண்டிருக்கும் அதாவது அப்பொழுது சர்கஸ் விளையாட்டில் தரையில் தலையும் மேல் ஆகாசம நோக்கிக் காலுமாக ஒருவன் இருக்கவும் அவன் பாதத்தின் மீது வேறொருவன் தன் பாதத்தை வைத்து நேராகச் சுபாவத்தில் நிற்பது போல் நிற்கும் காக்ஷியைப் போலிருக்கும். ஆகையால் நமது தேசததிலும் தென் அமெரிக்கா தேசத்திலும் ஒரே காலத்தில் மழைகள் பெய்யுமானால் இந்த இரண்டு மழைகளின் துளிகள் எதிர் நோக்கிச் செல்லும்படி அதாவது அவைகள் சந்தித்துக் கொள்ளும்படி எதிர் எதிராக வந்து விழும். அதாவது இந்த இரண்டு துளிகளும் தங்களுக்கு இடையில் இருக்கும் பூமியின் மையத்தை நோக்கிச் செல்ல வேண்டும். உருண்டை வடிவாயுள்ள ஒரு பந்து அல்லது எலுமிச்சம் பழத்தை யெடுத்து நூலில் கோர்த்துத் தரையில் படாமல் தொங்க விட்டு நிறுத்தி மேல் பாகத்தை நமது தேசமாகவும் கீழ் பாகத்தைத் தென் அமெரிக்கா தேசமாகவும் பாவித்து இரண்டு பக்கமும் ஆகாயத்திலிருந்து மழைத்துளிகள் விழுவதாகக் கருதி நோக்கினால் இது தெளிவாய் விளங்கும். உண்மையில் கனமுள்ள சகல பண்டங்களும் பூமியின் மையத்தை நாடித் தான்

* இலம்பமாய்-செங்குத்தாய் அலலது கோடியாய்.

விழப்பார்க்கின்றன. அதாவது வேறொன்றும் அவைகளைத் தடுக்கவாவது தாங்கிக் கொள்ளவாவது இல்லாவிடில் அவைகள் பூமியின் மையத்தில் போய் விழும். நாம் கனம், எடை, நிறையென்று சொல்வதின் அருத்தம் பொருள்கள் பூமி மையத்தை நோக்கி விழப் போகும் குணத்தைக் குறிக்கின்றது. ஒரு பொருள் கனமாயிருக்கிறதென்று சொல்லுவதும் மத்தியில் ஒரு தடையும் இல்லாவிட்டால் அப் பொருள் தரையில் வந்து விழும் என்று நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கிறோம் என்று சொலலுவதும் அல்லது அப்பொருளை நாமே தடுத்து ஏந்திக் கொண்டால் நாம் பிரயத்தனம் அல்லது முயற்சி அல்லது பிரயாசம் என்னும் உணர்ச்சியையடைகிறோம் என்று சொல்லுவதும் ஒன்றே.

18. திண்மைக்கவர்ச்சி கிரமம்.

ஆதியில் மேனாட்டுக் கலைஞர்கள் உலகம் என்னும் இப்பூமி ஒன்றுமே மற்ற பொருள்களைத் தன்னுடைய மையத்தை நோக்கிச் செல்லும்படி இழுக்கும் சக்தி யுடைத்தாயிருக்கிறதென்று எண்ணினார்கள். ஆனால் அவர்கள் பின்னால் செய்த பல விதமான சோதனைகளும் அநேக கவனமான பார்வைகளும் மழைத்துளி பூமியை நோக்கி விழுவது போலவே ஒவ்வொரு பிரகிருதிப்பொருளும் மற்ற ஒவ்வொரு பிரகிருதிப் பொருளை நோக்கி அணுகிச் செல்லப் பார்க்கின்றது அதாவது எந்த இரண்டு தத்துவப் பொருள்களை யெடுத்துக் கொண்டாலும் சரி அப்பொருள்களின் தத்துவம் எவ்வித சுபாவமாயினும் சரி அவ்விரண்டு பொருள்களும் தங்கள் செயலைத் தடுக்க வேறு ஒன்றும் இல்லாவிட்டால் ஒன்று மற்றொன்றை நோக்கிச் செல்லும் என்னும் பொது விதி அல்லது பிரகிருதி இயல்பு விதியை ஸ்தாபித்தன.

இவ்விதியை இன்னும் தெளிவாய் விவரிப்பாம். இப் பிரபஞ்சத்தில் இரண்டு உருண்டையான நீர்த்துளிகள்தான் உள்ள பிரகிருதிப் பொருள்கள் வேறு ஒன்று மில்லை யென்றும்

இந்த நீர்த்துளிகள் ஒவ்வொன்றும் ஒரு அங்குலம் குறுக்களவு உள்ளது என்றும் நாம் எண்ணிக் கொள்வோம். இவ்விரண்டு நீர்த்துளிகளும் ஒரே காத்திரம் உள்ளவைகளாக விருக்கும். அதாவது ஒவ்வொரு துளியில் அடங்கி யிருக்கும் வஸ்துவின் அளவு சமமாகவேயிருக்கும். ஏனென்றால் இரண்டு துளிகளும் ஒரே குறுக்களவுள்ள உருண்டைகளானதால் இப்பொழுது இந்த இரண்டு துளிகளுக்கும் மத்தியில் உள்ள தூரம் எவ்வளவு விரிவானதாயிருந்தாலும் இவ்விரண்டு துளிகளும் ஒன்று மற்றொன்றை நோக்கி அணுகிச்செல்ல ஆரம்பிக்கும். அப்பால ஒவ்வொரு துளியும் வரவர அதிகரித்த வேகத்துடன் ஓடி கடைசியாக அவைகள் முதலிலிருந்த தூரத்துக்குச் சரிமத்தியமான இடத்தில் இரண்டுதுளிகளும் சந்திக்கும். திருஷ்டாந்தமாக, அந்த இரண்டு துளிகளுக்கும் இடையேயுள்ள தூரம் 1000 மைல் ஆனால் ஐஞ்நூறுவது மைலில் அவைகள் சந்திக்கும். ஆனால் ஒருதுளி மற்றதுளியைப் பார்க்கிலும் பெரிதானல் பெரியதுளியானது சிறியதுளியைப் பார்க்கிலும் மெதுவாய் ஓடிச்சென்று அவைகள் சந்திக்குமிடம் அவைகள் ஓடும்விசைக்குத் தகுந்தபடி பெரியதுளி இருந்த இடத்துக்குச் சமீபமாயிருக்கும். உதாரணம், பெரியதுளியானது சிறியதைப்பார்க்கிலும் 999 பங்கு பெரிதானல் பெரியதுளி ஒருமைல் தூரமோடியும் சிறியதுளி 999 மைல் ஓடியும் சந்திக்கும். அதாவது பெரியதுளி யிருந்த இடத்திலிருந்து ஒன்றுவதுமைலிலும் சிறியதுளி யிருந்த இடத்திலிருந்து 999 வது மைலிலும் அவைகள் சந்திக்குமிடமிருக்கும். பெரியபொருள் நமது உலகமாயின் அது செல்லுந்தூரம் மனதினலும் மதிக்கத்தகாத அவ்வளவு சிறிதாயிருக்கும். ஏனெனில் மழைத்துளியைப் பார்க்கிலும் நமது உலகமானது அனேக லக்ஷம்பங்கு பெரியது. மேலும் மழைத்துளிகள் உண்டாகும் மேகங்களிருக்குமிடத்திற்கும் நமது பூமிக்கும் மத்தியில் உள்ள தூரம் மிகவும்சொற்பமானது. ஆகையால் வாஸ்தவமாய் நமது உலகம் மழைத்துளியை நோக்கிச்சென்றலும் சென்றதூரம் மிகவும் நுண்மையானதால் நமது பார்வைக்குப் பூமியானது சற்றுமசையாமல்

இருந்த இடத்திலேயே யிருந்து சிறியதுளியைத் தன்னிடத்திற்கு இழுத்துக்கொண்டது போலக் காணப்படும்.

சாதாரணமாய் மேகங்கள் பூமிக்கு மேல் ஒரு மைல் இரண்டு மைல் தூரத்தில் தானிருக்கின்றன. மேகத்திலிருந்து ஒரு துளி விழுந்தால் பூமி மையத்தையும் அந்தத் துளியின் மையத்தையும் சேர்க்கும் நேர் கோட்டின் மேல் பூமியும் துளியும் நகர்ந்து செல்கின்றன. ஆனல் பூமியும் துளியும் இந்தக் கோட்டின் மேல் செல்லும் தூரங்களானவை அவைகளிலுள்ள திரவியங்களின் மொத்தங்களுக்கு மாறு வீதம் அல்லது விலோம வீதமாயிருக்கும். அதாவது மொத்தம் அதிகமாகஆக செல்லும் தூரம் குறையும். ஆகையால் இப்பொழுது நமக்குத் திரயராசிகக் கணக்கு ஒன்று கிடைக்கின்றது. மேகம் ஒரு மைல் தூரத்திலிருப்பதாக எடுத்துக் கொண்டு அதிலிருந்து விழும் துளியானது ஒரு மைல் சென்று பூமியின் மேல் விழுந்தானல், கணக்கு என்னமாயிருக்கு மென்றல், பூமியிலுள்ள திரவியத்தின் மொத்தத்திற்கும் மழைத் துளியின் திரவியத்தின் மொத்தத்திற்கும் என்ன வீதமுண்டோ அது மழைத் துளி ஓடிச் சென்று விழ்ந்த ஒரு மைல் தூரத்திற்கும் பூமி துளியை நோக்கிச் சென்ற தூரத்திற்கும் உள்ள வீதத்திற்கு ஒத்து இருக்கும். (இந்தமாதிரியான வீதத்திற்கு மாறு வீதம் என்றும் விலோம வீதம் என்றும் பெயர். ஆங்கிலத்தில் இந்த வீதத்தை "இன்வெர்ஸ் ப்ரோபோர்ஷன்" (Inverse proportion) என்பார்கள். பூமியின் மொத்தத்திற்கும் துளியின் மொத்தத்திற்கும் உள்ள வீதம் பூமிசெல்லும் தூரத்திற்கும் துளி செல்லும் தூரத்திற்கும் உள்ள வீதத்திற்கு ஒத்திருக்குமானல்இந்த வீதத்திற்கு நேர்வீதம் என்றும் ஆங்கிலத்தில் "டைரெக்ட் ப்ரோபோஷன் (Direct proportion) என்றும் பெயர்.) இந்தக்கணக்கைப் பூர்த்திசெய்து பார்த்தால் இந்த வீதத்திற்கு நான்காவது இடத்திற்கு வரும்தொகை மனதினலும் மதிக்கக் கூடாத சிறிய பின்னத்தொகையான அங்குலமாகவரும். ஆகையால் உலகத்திலுள்ள பொருள்கள் உலகத்துடன் ஒத்துப்பார்க்

கும்பொழுது அற்பத்திலும் அற்பமான காத்திரமுள்ளவையானதால் சாதாரண அனுசரிப்பிற்கு நமது பூமி அதில் வந்து விழும்பொருள்களை நோக்க ஸ்திரமாய் அசையாமலிருக்கிறது என்றே நாம் எண்ணிக்கொள்ளலாம்.

நீருக்குள்ளதைப்போலவே நமக்குத்தெரிந்தமட்டில் சகல பிரகிருதிப்பொருள்களுக்கும் உண்டு. ஒரு பொருள் மற்றப் பொருளை இழுக்கும் சக்திக்குத் திண்மைக்கவர்ச்சி அல்லது கரிமம் என்று பெயர். ஆகையால் எல்லாவிதமான பிரகிருதி வஸ்துவும் திண்மைக்கவர்ச்சி உடைத்தாயிருக்கிறது பிரகிருதி இயல்பின் விதியென்று நாம் சொல்லுகிறோம். அதாவது யாதாயினும் இரண்டுபொருள்களில் ஒன்று மற்றொன்றை நோக்கிச்செல்கின்றது. இவைகளில் அதிகமான திரவியமுள்ள பொருள் கொஞ்சதிரவிமுள்ள பொருளைப்பார்க்கிலும் மெதுவான வேகமாய்ச் செல்லுகின்றது; இந்த வேகம் அந்தஇரண்டு பொருள்களும் நெருங்க நெருங்க அதிகமாய்க் கொண்டுவருகின்றது பிரபஞ்சவியல்பின் இந்தவிதிக்கு திண்மைக்கவர்ச்சிவிதி என்றும் மையவீழ்ச்சிவிதியென்றும் மையக்கவர்ச்சிவிதி என்றும் கரிமவிதி என்றும் ஆங்கிலத்தில் "லாஅவ்கிராவிடேஷன்" (Low of gravitation என்றும் சொல்லுவார்கள்.

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை

ஹெலெநாம்பாள்.

[தொடர்ச்சி.]

" அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கோளல். "

நான்கு வயது முதற்கொண்டு ஹெலெநாம்பாள் நித்திரையில் எழுந்து நடந்து போவதும் நித்திரையில் பேசுவதுமுள்ள சுபாவம் பொருந்தியிருந்தாள். மற்றவர்கள் கண்களுக்குக் காணப்படாதவர்களுடன் அவள் தூக்கத்தில் நீண்ட சம்பாஷணை நடத்திக் கொண்டிருப்பாள். அவள் படுக்கையைச் சுற்றியிருக்கும் ஜனங்களுக்கு நித்திரையில் அவள் செய்யும் சம்பாஷணைகளில் சில விநோதமாயும் சில அறிவு புகட்டுவதாயும் சில வெருட்டுவதாயுமிருக்கும். ஜனங்கள் பார்வைக்கு அவள் சாதாரணத்தூக்கத்திலிருப்பதாய்க்காணும் அனேக சந்தர்ப்பங்களில் அவள் கையைப்பிடித்துக்கொண்டு களவுபோன சொத்துக்களைப்பற்றியும் பின்னால் என்னவருமோவென்று சஞ்சலம் உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் விஷயங்களைப்பற்றியும் கேள்விகள் கேட்போர்களுக்கு ஆவேசமடைந்து குறிசொல்லும் குறிகாரியைப்போல் விடையளிப்பாள். சில காலங்களில் அவளுடைய அறையிலிருந்து திடீரென மறைந்துவிடுவாள். தேடிப்பார்க்க அரண்மனையில் வெகுதூரத்திலுள்ள வேறு அறையிலாவது அரண்மனைக்கு வெளியிலுள்ள தோட்டத்திலாவது அவளது கனவாழ்வின் கூட்டாளிகளுடன் விளையாடிக்கொண்டும் பேசிக்கொண்டுமிருப்பாள். வெகுகாலம் வரை தான்சந்திக்கும் அன்னியர்களுக்கும் தன் அரண்மனைக்கு வரும் உறவினர்களுக்கும் சினேகிதர்களுக்கும் அவர்கள் முகத்தைச் சற்றுக்கூர்ந்துபார்த்துக் குறிப்பாய் இன்னகாலத்தில் அவர்கள் இறந்துபோவார்கள் என்றும் பின்னால் அவர்களுக்கு இன்னதுன்பங்கள் ஆபத்துகள் தத்துகள் சம்பவிக்கும் என்றும் குழந்தை விளையாட்டுத்தனமாய்ச் சொல்லி அவர்களுக்குத் திகில் உண்டுபண்ணிவிடுவாள். அவள்சொல்லுவதுபோ

லவே உண்மையாகப் பின்னால் நடந்துவந்தனவாதலால் வீட்டார்க்கும் வெளியார்க்கும் அவள் திகிலையுண்டுபண்ணி வந்தாள்.

இவள் பாட்டன் சாராடாவ் என்னும் தேசத்திற்கு அதிபதியாய் நியமிக்கப்பட்டு முன் பலதலைமுறைகளாக அத்தேசாதிபதிகளாக இருந்துவந்த வமிசத்தாரால் கட்டப்பட்ட வெகு பழைய பெரியகட்டிடமாகிய அரண்மனையில் வசித்து வந்தார். இவ்வரண்மனையில் நிலவறை மாளிகைகளும் உபயோகத்திலில்லாத நீளியவான நடைகளும் சிகரங்களும் மிகவும் மருட்சிமயக்கஞ்செய்யும் மூலைமுடக்குகளும் நிரம்பியிருந்தன. ஹெலெநாம்பாள் பாட்டன் போவதற்குமுன் இவ்வரண்மனையின் விசாரணைத் தலைவனாயிருந்த மனிதன் கொடுமைக்கும் குரூரத்திற்கும் பிரசித்தி பெற்றவன். அவன் சகலவித தீமைகளும் ஒருங்குசேர்ந்த பெட்டகம். அவன் பெயர் சொன்னாலே தீமை யென்று பொருள்படும். இக் கொடும்பாவியால் கொலையுண்டு இறந்தவர்களும் காற்றுச் செல்லாமல் இருண்ட நிலவறைக் குகைகளில் மாதக்கணக்காய் சிறையில் வைக்கப்பட்டு வருந்தித் துடித்து மாண்ட அடிமைகளும் பலர். இந்த மாபாதகனுடைய மூர்க்கச் செயல்களையும் கோரத் தன்மைகளையும் பற்றித் தொன்று தொட்டுச் சொல்லிக்கொண்டுவரும் கதைகளானவை கேட்போர் நெஞ்சில் திகிலைச் செலுத்தி உடம்பைச் சிலிர்க்கும்படி செய்யும். பாட்டன் சவரக்ஷணையில் இந்த அரண்மனையில் ஐந்து வருஷம் வளர்ந்துவந்த காலத்தில் ஹெலெநாம்பாளுக்குச் செவிலியாய் ஏற்பட்டவள் முன் அதிபதிகளாயிருந்தவர்களின் குழந்தைகளுக்கு மூன்று தலைமுறைகளாகச் செவிலியாயிருந்த பெய்னோர் என்பவள். இந்தச் செவிலியானவள் கொலையுண்டு மாண்டவர்களின் பேய்கள் இரவில் தாங்கள் போட்டிருக்கும் விலங்குகளுடன் உலாவுவதாகவும் இம்மாளிகையில் வசித்துவந்த வயதுமுதிர்ந்த அதிகாரிகளின் காம இச்சைக்கு இசையாது கொலையுண்ட சிறுபெண்களின் பேய்கள் மாலைமசக்கத்தில் திரிந்துகொண்டிரு

161974

ப்பதாகவும் கதைகள்சொல்லிவருவாள். இக்கதைகளைக்கேட்ட பிள்ளைகள் அவ்வரண்மனையில் இருட்டறைகளின் வழியாய்ப் போகவேண்டியிருந்தால் திகிலடைந்து நடுநடுங்கிப்போவார்கள். ஆனால் ஹெலெநாம்பாளுக்கோ அவ்விதமான இடங்கள் தான் மிகவும் விருப்பத்தைக் கொடுப்பவைகளாயிருந்தன. இவ்விடங்களில் தனியாய்ப்போய்த் தான்படிக்கவேண்டிய பாடங்களைப் படியாது தப்பித்துக் கொள்வதற்காகப் ஒளித்துக்கொள்வாள். அவள் ஒளிப்பைக்கண்டுபிடிக்க வெகுகாலஞ் செல்லும். பின்னால் அவள் காணாவிட்டால் பல திடகாத்திரமுள்ள ஆண்பிள்ளைகளாகிய வேலைக்காரர்களை அதிபதியின் கொலுமண்டபத்திலுள்ள ஒரு பெரிய மனிதனுடனனுப்பி அவளைத்தேடச் சொல்லுவார்கள். பலவந்தமாய் அவளை வெளியே கூட்டிவருவது அடிமைகளாயும் வேலைக் காரர்களாயுமுள்ளவர்களாலும் அவளுக்குப் பயப்படுகிறவர்களாலும் முடியாத காரியமாதலால் ஒரு பெரிய மனிதனையும் அனுப்ப வேண்டியது அவசியமாயிருந்தது அவள் பழைய ஒடிந்த குரிச்சிகளையும் மேசைகளையும் சுற்றி வைத்து மத்தியில் மறைந்து இருந்துகொண்டு "சாலமன் ஞானம்" என்னும் புஸ்தகத்தை மணிக்கணக்காகப் படித்துக் கொண்டிருப்பாள். சில வேளைகளில் அவளைத்தேடி வரும் ஜனங்களுக்கு மறைந்து கொள்ள எழுந்து ஓடிச்சுற்றுசுழற்சி வழிகளில் வழிதப்பிப்போய் அவள் எப்பொழுதுமிருக்கும் இடத்தில் அகப்பட மாட்டாள். இதற்கெல்லாம் அவள் கொஞ்சமேனும் பயப்பட்டவளல்லள். கேட்டால் தான் அவ்விடங்களில் தனியாயே யிருப்பதில்லை யென்றும் தன்னுடன் எப்பொழுதும் சில சீவர்கள் இருந்து கொண்டேயிருப்பதாகவும் உறுதி சொல்வாள். இச்சீவர்களைச் சிறு ,,சன்கள்" என்றும் கூட்டாளிகள் என்றும் அவள் கூப்பிடுவது வழக்கம். இரவில் சில காலங்களில் தூக்கத்தில் அவள் யாரும் எதிர் பார்க்காத இடங்களில் போயிருப்பாள். அப்பொழுது அவளைத் தூக்கிக் கொண்டுபோய்ப் படுக்கையில் வைப்பார்கள். உதாரணமாக அவள் பனிரெண்டு வயது நிறைவதற்கு முந்தி அவள் சயன அறையில் ஒரு இரவில்

காணாமலிருந்தாள். அவ்வறையிலிருந்தவர்கள் காணோமே யென்று கூக்குரலிட ஜனங்கள் தேடிப்போய் அவளை நிலவறையில் ஒரு நீண்ட பிரகாரத்தில் மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் அவளுக்கு மாத்திரம் தெரியும் யாரோ ஒருவரிடத்தில் ஆழ்ந்த சம்பாசணை செய்து உலாவிக் கொண்டிருக்கக் கண்டார்கள். குறும்புகள் செய்யும் தருணம் போய் படிக்க ஆரம்பித்தாலோ பெரிய வித்துவான்களிலும் கூட அவளைப்போல கருத்தாயும் ஊக்கமுடனும் படிப்பவர்களிருக்க மாட்டார்கள். படிக்க எண்ணம் வந்துவிட்டால் இரவும் பகலும் புஸ்தகத்தை யார் சொன்னாலும் விடாள். அவளுடைய பாட்டனுடைய பெரிய புஸ்தகசாலை அவள் படிப்பின் தாகத்திற்குப் போதுமானதாகக் காணவில்லை.

அவள் பாலியத்தில் மணிக்கணக்காக இருந்துகொண்டு அவளுக்கு இளையவர்களுக்கும் மூத்தவர்களுக்கும மிகவும் அற்புதமும் விநோதமும் பொருந்திய நம்பத்தகாத கதைகள் பலவற்றை அணுவளவேனும் விகற்பமின்றி சாந்தமாய்க் கண்ணிற் கண்டவர்கள் சொல்லும் திடத்துடன் சொல்லுவாள். அவளுக்குப் பிரபஞ்ச முழுதும உயிருள்ளதாய்க் காணப்பட்டது. கல் மண் முதலானவைகளுக்கெல்லாம் அறிவுண்டு என்று கூறுவாள். சுற்றிலுமுள்ள காடுகளில் தீபங்கள் போட்டுக் கொண்டு இரவில் ஒன்பது மணி முதல ஒன்று அல்லது இரண்டு மணி வரை அரண்மனையிலுள்ள ஆண் பெண் பிள்ளைகள் எல்லாம் சுற்றுவது வழக்கம். அப்பொழுது கூடவே பெரியவர்கள் பலர் துணைக்கு வருவார்கள். இரவில் பறக்கும் அழகிய இறகுகளுள்ள பூச்சிகள் விளக்கு வெளிச்சத்திற்கு வந்து தீபத்தில் விழுந்து மாளும். அப்பொழுது ஹெலெநாம்பாள் அவைகளைத் தீபத்தில் வந்து விழாதபடி பிடித்துத் தடுத்துக் காப்பாள்.

அந்தி சந்திகளில் தனக்குச் சிறிய பிள்ளைகளைக் கூட்டி வைத்துக்கொண்டு மிகவும் விந்தையான கதைகளைச் சொல்லி அவர்களை ஸ்தம்பித்துக் கேட்டுக் கொண்டிருக்கும்படி செய்

வது அவளுக்கு ஒரு ஆனந்தமாயிருந்தது. தன்னைப் பற்றியே மனதினாலும் நினைக்க ஆச்சரியமான கதைகளைச்சொல்லுவாள். ஒவ்வொரு இரவும் தான் பலவிடங்களுக்குச் சென்று யாவரும் கேட்டிராத துணிகரமான செயல்கள் செய்வதாகக் கதைகள் கூறுவாள். அரண்மனையில் ஒரு பெரிய பக்ஷி பஞ்சு திணிக்கப் பட்டு வைத்திருந்தது. அதைப்பற்றி அவள் அனேக காலங்களுக்குமுன் அது மனிதனாயிருந்ததாயும் அநேக கொடிய செயல்களும் கொலைகளும் அவன் செய்ததனால் ஒரு பெரிய பூதமானது அவனைப் பக்ஷியாய் மாற்றி விட்டதாகவும் சொல்லுவாள். மனிதர்கள் மிருகங்களாக மாறிக் கொள்ளவும் வேறு எந்த ரூபமும் எடுக்கவும் கூடும் ஆனால் அந்த இரகசியம் தெரிந்து கொள்ளவேண்டும் என்று சொல்லுவாள். ஆகாய கமனமும் செய்யலாம் என்றும் கூறுவாள். முன் காலங்களில் அப்பேர்க்கொத்த மகான்களிருந்தார்கள் என்றும் இக்காலங்களிலும் அப்படிப்பட்ட மகான்கள் உளர் என்றும் ஆனால் அவர்கள் பக்குவர்களுக்குத்தான் தரிசனம் கொடுப்பார்கள் என்றும்மற்றவர்கள் கண்களுக்குக் காணமாட்டார்கள் என்றும் உறுதியுடன் கூறுவாள்.

திருஷ்டாந்தமாக அடுத்த வனத்தில் ஒரு குகையில் வசித்துக் கொண்டிருந்த நூறு வயதுக்கு மேற்பட்ட ஒரு கிழவரைச் சுட்டிக் காண்பிப்பாள். ஜனங்களும் அவரை ஒரு பெரியவர் என்று எண்ணி யிருந்தார்கள். அவர் நன்மைக்கே தன் சக்தியையுபயோகப்படுத்தும் புண்ணியர். நோயாளிகள் யாவராயினும் அவரிடத்தில் போய்க் கேட்டுக் கொண்டால் அவர்களை மிகவும் சந்தோஷத்துடன் சவுக்கியப் படுத்துவார். மூலிகைகளின் குணா குணங்களை நன்றாய்த் தெரிந்தவர் என்றும், வருங்காலத்தைச் செவ்வையாய் அறிந்தவர் என்றும் பிரசித்தி பெற்றவர். அனேக தேனீக் கூடுகள் அவர் வைத்திருந்தார். அவருடைய குடிசையைச் சுற்றி நூற்றுக் கணக்காய் தேன் கூண்டுகளிருந்தன. வசந்த காலத்தில் சாயந்திரம் அவர் வெளியே உலாவும் பொழுது அவர் சிரமுதல் பாதம் வரை நீங்

காரஞ் செய்துகொண்டு தேனீக் கூட்டங்கள் நிறைந்துவரும். அவர் கொஞ்சமேனும் கூசாமல் தேன் கூண்டுகளில் கையை நுழைத்து செவிடுபடும்படி அவைகள் செய்யும் சத்தங்களை உற்றுக்கேட்டு அவைகளுடன் பேசுவார். அவைகள் ரீங்காரஞ் செய்து கொண்டிருக்கும் பொழுது மற்றவர்களுக்கு அருத்தமாகாதபடி ஒரு வித முணுமுணுத்த இராக சத்தத்துடன் அவைகளைச் சும்மாவிருக்கச்சொன்னதும் அவைகள் ரீங்காரஞ் செய்வதை நிறுத்திவிடும். பார்ப்போர்களுக்கு இவர் அவைகளின் பாஷை தெரிந்தவர் என்றும் அந்தப்பாஷை பேசுகிறார் என்றும் தோன்றும். ஹெலெநாம்பாளுக்கு இது விஷயத்தில் சந்தேகமே கிடையாது. இவர் ஹெலெநாம்பாளிடத்தில் மிகுந்த பற்றுதலுடையவராயிருந்தார். இவர் மனம் தடுக்கக் கூடாதபடி குழந்தையாகிய அவள் மேல் கவிந்து சென்றுகொண்டே யிருந்தது ஹெலெநாம்பாளும் சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் அவரிடத்திற்குச் செல்வாள். அவர் மற்றவர்களிடத்தில் ஹெலெநாம்பாளைப் பற்றி இம்மாதிரி அன்புடன் அடிக்கடி சொல்லுவர். "இந்தச் சிறு அரிவை உங்களையெல்லாம் விட வேறு. பின்னால் அநேக பெரிய காரியங்கள் அவளால் நடக்கப்போகின்றன. நானிருந்து அவைகளையெல்லாம் பார்க்க மாட்டேனே யென்று நினைந்து விசனிக்கிறேன். ஆனால் நான் சொல்லும்படி அவைகள் எல்லாம் நடக்கவேபோகின்றன."

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

I. திண்பூதவுடல்

இவ்வுடலைப்பற்றி விவகரிக்க ஆரம்பிப்பதற்குமுன் பிரகிருதிவஸ்துவின் எழுநிலைகளைச் சொல்லும் இன்னொரு விதத்தையும் இவ்விடத்தில் கூறுவது அவசியம், மேனாட்டுக்கலைஞர்கள் சொல்லும் "காஸ்" (gas) என்பது தேயுவேயன்றி வாயுவல்ல, வாயுவென்பது அவர்கள் சொல்லும் ஈதர் என்னும் நிலைக்குத்தான்பொருந்தும், ஆகாசத்திற்கு மேலுள்ள இரண்டு நிலைகளாவன அநுபாதகநிலையும் ஆதிநிலையுமாம் என்று சிலர் சொல்லுவார்கள். இக்கருத்தின்படி எழு நிலைகளின் பெயர்களையும் அவைகளுக்குப் பொருந்தின இங்கிலீஷ் பெயர்களையும் அடியிற் காண்க.

7. ஆதிநிலை. } நான்கு ஈதர்கள்.
6. அநுபாதகநிலை.
5. ஆகாசநிலை.
4. வாயுநிலை.
3. தேயுநிலை—காஸ் (Gas)
2, அப்புநிலை—லிக்விட் (Ligvid)
1. பிருதிவிநிலை—ஸாலிட் (Solid)

இக்கருத்தையே இனிமேல் நாமும் அநுசரிப்போம்.

நாம் வசிக்கும் இந்த வுலகம் பிரமாண்டத்தில் பிருதிவி மண்டலத்திலுள்ளது. நமது உலகம் முழுமையும் பிருதிவியே. இந்த எழு நிலைகளும் உட்பிரிவு நிலைகள். அதாவது பிருதிவியில் ஆதி, பிருதிவியில் அநுபாதகம், பிருதிவியில் ஆகாசம், பிருதிவியில் வாயு, பிருதிவியில் தேயு, பிருதிவியில் அப்பு, பிருதிவியில் பிருதிவி என்பவாம்.

இவ்வேழுபூதங்களில் அடிமூன்று பூதங்களாகிய பிருதிவி, அப்பு, தேயுக்களைத்திண்பூதங்கள் என்றும்; வாயு, ஆகாசம், அநுபாதகம், ஆதியென்னும், ஈதர்களாகிய மற்றமேல் நான்கு பூதங்களை நுண்பூதங்கள் என்றும் சொல்லுவார்கள்.

தடித்துமொத்தமாயிருக்கும் இந்தவுடல் பிருதிவி, அப்பு, தேயுக்களாகிய திண்பூதங்கள் கலந்து ஆக்கப்பட்டதால் இதற்குத் திண்பூத வுடல் என்னும் ஒருபெயர்வந்தது. எலும்பு, பல் முதலிய கடின பாகங்கள் பிருதிவியின்கூறு. இரத்தம், சுக்கிலம், மூத்திர முதலியவை அப்புவின் கூறு. சதவாயுக்கள் தேயுவின் கூறு. மொத்தத்தில் எலும்பு

பிருதிவியானாலும் அதில் அப்புவும் தேயுவும் கலந்திருக்கின்றது. எப்படியெனில் ஒருகட்டையைப்போலாம். மரக்கட்டை மொத்தத்தில் பிருதிவியானாலும் அது எரியும்பொழுது ஒரு வித திராவகம் ஒரு பக்கம் தோன்றுவதாலும் அதினின்றும் புகைமேலெழும்பிச் செல்கையாலும் அதில் அப்புவும் தேயுவும் கலந்திருக்கின்றன வென்பதுசித்தம். இப்படியே எலும்பைப்பிரித்துப்பார்க்கும்பொழுது அதில்பிருதிவி, அப்பு, தேயு மூன்றும் கலந்திருக்கிறதாகத்தெரியவருகின்றது. இதுபோலவே அப்புவின்கூறாகிய இரத்தம் மூத்திரம் முதலியவைகளிலும் தேயுவின்கூறாகிய வாயுக்களிலும் மற்ற இரண்டுபூதங்களும் கலந்திருக்கின்றன. எப்பூதமிகுந்திருக்கின்றதோ, மொத்தத்தில் அப்பூதமாகக் காணுகின்றது. மனிதனுடைய கூறுகளைப் பஞ்ச கோசங்களாய்ச் சொல்லும் முறையில் இத்தத் திண்பூதவுடலானது அன்னமய கோசமாம்.

இத்திண்பூதவுடலைச் சோதித்துப் பார்க்கும் பொழுது அது பல கோடி சிறிய துகள்கள் அல்லது பொடிகள் சேர்ந்து கட்டப்பட்டதாகக் காணுகின்றது. பல செங்கல்கள் அடுக்கி வீடானது போல் பல துகள்கள் அடுக்கி உடலாகிய கட்டடம் ஆயிற்று. இந்தத்துகளுக்குக் கண்ணறை யென்று பெயர். இங்கிலீஷில் “ஸெல்” (Cell) என்பார்கள். ஒரு கண்ணறையை யெடுத்து “மைக்ரோஸ்கோப்” (Microscope) என்று வழங்கும் பூதக்கண்ணாடியால் அல்லது அணுதரிசனி யென்னும் கருவியால் பார்க்கும்பொழுது அது ஒரு கண் அல்லது புள்ளியும் இக்கண்ணைச் சுற்றி ஒரு வித வஸ்துவும் இவையிரண்டையுஞ் சூழ்ந்து அடக்கிக்கொண்டு இருக்கும் ஒரு மெல்லிய ஜவ்வினாலாகிய சுவரும் பொருந்தியிருக்கின்றது. இந்தக் கண்ணை இங்கிலீஷில் “நூக்ளியஸ்” (Nucleaus) என்பார்கள். இக்கண்ணறையை இன்னும் பிரித்துச் சோதிக்கும்பொழுது அது எண்ணிறந்த அணுக்கள் சேர்ந்து ஆனதாயிருக்கின்றது. இந்த அணுவைப் புழுவென்றும் சொல்வதுண்டு. வாஸ்தவமாய் அணுவானது நுண்ணிய புழுவேயாம். இப்புழுக்களுக்கு இங்கிலீஷில் “மைக்ரோப்” (Microbes) கள் என்று சொல்லுவார்கள். மைக்ரோப் என்றால் நுண் புழு அல்லது சிறு உயிர் அல்லது நுண்மையான பிராணியென்றுபொருள். இதை பூதக்கண்ணாடி யென்னும் கருவியால் பார்க்கும்பொழுது புழு ரூபமாகவே யிருக்கின்றது. ஞானிகள் ஞான திருஷ்டியினால் பார்க்கும்பொழுது அவர்களுக்கு இதன் சொரூபம் தெரிகின்றபடி இதற்குப்புழுவென்றும் பெயர் கொடுத்தார்கள் இப்புழு ஒரு க்ஷணமும் சும்மாவிராமல் எப்பொழுதும் ஓய்வின்றி முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டே யிருக்கின்றது. இந்த ஆட்டத்திற்குச் சலனம் என்றும் ஸ்புரணம் என்றும் சொல்லு

வார்கள். கண்ணறையானது பல் கோடி நுண் புழுக்கள் சேர்ந்து கட்டப்பட்டிருப்பதால் அதுவும் ஒரு பெரிய புழு. பலகோடி கண்ணறைகள் அடுக்கப்பட்ட கட்டடம் நமது திண்பூதவுடலானபடியால் அதைப் புழுமலக்கூடு என்றும் பெரியோர்கள் கூறுவார்கள். மலம் என்றால் பந்தம். புழுமலக்கூடு என்பதற்குப் புழுக்களால் கட்டப்பட்டு ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் குகை யென்று பொருள். இறந்தமேல் தேகம் புழுத்துப் போவதினாலும் வியாதியினால் வயிற்றில் கிருமிகள் உண்டாவதினாலும் குடலில் மலந் தங்குவதாலுமே இப் பெயர் வந்ததல்ல.

இந்தநுண்ணியபுழுக்களை ஒன்றுசேர்த்து அவைகள் ஏகோபித்து நிற்கும்படிசெய்வதுபிராணனது நிர்மாணசக்தியாம். இந்தசக்திக்குப்பிராண இணக்கசக்தியென்றும் பெயர். இச்சக்தியினால் தான் உடல்என்னும் உருவம் நிற்கின்றது. இச்சக்தியானது இவ்வுடலுக்கு ஓடிச்செல்லாமல் நின்றுவிடுமாயின் இந்தநுண்புழுக்கள் எல்லாம் ஏகோபித்துக்கூடியிருப்பதை விட்டுத் தலைவனிழந்த சேனைகளைப்போலத்தனித்தனியே தலைவிரிகோலமாய் ஆடிப்பிரியும். இதனாற்றான் இறந்தபிறகு இத்தவுடல் அழுகிப்பொடிப்பொடியாய் உதிர்ந்துபோகின்றது. பிணமானவுடலிலும் அதில் அடுக்கப்பட்டுள்ள புழுக்கள் தனித்தனியே உயிருள்ளவைதான். அவைகள் உயிரில்லாதவைகளானால் அவைகள் வேறு வேறாய்ப் பிரியமாட்டா. உடலும் சிதைந்துபோகமாட்டாது. உயிரில்லாத பொருளே உலகில் கிடையாது. சகலமும் உயிரே. அணுக்கள் எல்லாம் உயிர்களே. செத்தபொருள் அல்லது வஸ்துவென்பதே கிடையாது. ஆனால் பிணமான தேகத்தில் என்ன நீங்கிற்றென்றால் சிறு உயிர்களாகிய நுண் புழுக்களை யெல்லாம் ஏகோபித்து ஒரு வழியேயிருக்கும்படி வைத்துக் கொண்டிருந்த பிராணனது இணக்கசத்தி மாத்திரம் தேகத்தை விட்டு நீங்கிற்று. நுண்புழுக்கள் எல்லாம் பலகோடிமனிதர்கள் கூடியசேனைபோலும். பிராணனது இணக்கசத்தியானது சேனாதிபதிபோலும். மூன்றாவது கூறாகிய பிராணன் என்பதைப்பற்றிப்பேசும்பொழுது இதன்அர்த்தம் தெளிவாகும்.

பலகோடிமனிதர்கள் கூடியசேனையில் மனிதர்கள் தனித்தனியாய் பல காரணங்களால் நீங்குவதுபோலும் ஒவ்வொருக்ஷணமும் நமதுதேகத்தில் கட்டியிருக்கும் நுண்ணிய புழுக்கள் உதிர்ந்துகொண்டேயிருக்கின்றன. அப்புழுக்கள் கண்களுக்குப்புலப்படாதபடி மிகச்சிறியவைகளா யிருப்பதால் நமக்கு அவைகள் உதிர்ந்துபோவது தெரிகிறதில்லை. நாம் வேலைகள் செய்யும்பொழுது அவைகள் அதிகமாய்உதிர்கின்றன. நாம்மூச்சுவிடும்பொழுதும் இப்புழுக்கள்வெளியே போகின்றன. சேனைகளில் மனிதர்கள் நீங்கநீங்க சேனாதிபதியாகிய தலைவன்வேறு மனிதர்களைச்சேர்த்து சேனையி

ன்பலம் குறையாமலிருக்கும்படி வைத்துக்கொண்டிருப்பதைப்போல் நாம் புசிக்கும் அன்னத்தினின்றும் பிராணனானது வேறுபுழுக்களை உதிர்ந்துகொண்டேயிருக்கும் புழுக்களுக்குப்பதிலாக எடுத்துச்சேர்த்துக்கொண்டேயிருக்கின்றது. ஆகையால் தேகக்கட்டடத்திலுள்ள புழுக்களுக்கு ஆதாரம் நாம் உட்கொள்ளும் ஆகாரமேயாம். ஆகையால் புழுக்களின் குணமும் ஆகாரத்தின் குணம்போன்றிருக்கும். நல்ல ஆகாரத்தினால் நல்ல புழுக்கள் தேகத்தைக்கட்டும். அசுத்தஆகாரத்தினால் அசுத்தபுழுக்கள் தேகத்தைக்கட்டும். ஆகையால் தேகம் சுத்தமானதாகவிருக்கவேண்டுமானால் அசுத்த ஆகாரத்தை நீக்கி சுத்த ஆகாரமே உட்கொள்ளவேண்டும். அசுத்தபுழுக்கள் தேகத்திற்குப் பலவிதநோய்களையுண்டுபண்ணும். தேகத்திலிருந்து உதிர்ந்துகொண்டேயிருக்கும் புழுக்கள் ஆகாயத்திலுலாவிக்கொண்டிருக்கின்றன. நாம்மூச்சு உட்கொள்ளும் பொழுதெல்லாம் அவைகள் உள்ளே செல்லுகின்றன. அசுத்த உணவினாலுண்டாகும் புழுக்களால் நம்முடையதேகம் கட்டப்பட்டால் ஆகாயத்திலுலாவும் பலவித அசுத்தப்புழுக்களுக்கும் நமக்குள் செல்லும் பொழுது இனம் இனத்தைச்சேருமென்றபடி தேகத்தில் அவைகள் தங்கிவிடுகின்றன. நோயாளிகள் தேகத்திலிருந்தும் மூச்சினின்றும் வெளிவந்து ஆகாசத்தில் பரவிக்கொண்டிருக்கும் புழுக்களானவை நாம் சுவாசம்உட்கொள்ளும் பொழுது கூடஉட்சென்று தேகத்தில் தங்கிவியாதியை நமக்கும் உண்டுபண்ணுகிறது. இக்காரணத்தினால்தான் அசுத்தஉணவுஉட்கொள்ளும் ஜனங்களுக்கு காலரா(cholera)வென்றுவழங்கும் விஷபேதி, பிளேக்(Blague) என்னும் மகமாரி முதலிய கொடியவியாதிகள் உலவுங்காலத்தில் அதிகமாய் அபாயம் உண்டாகின்றது. சுத்தஆகாரங்களால் உண்டாகும் அணுக்கள் அல்லது நுண்புழுக்களால் நாம் தேகமானவீட்டைக் கட்டிக்கொண்டிருந்தால் அசுத்த புழுக்களும் அவைகளுக்கு உறவாகிய நோய்ப்புழுக்களும் மூச்சு உள்வாங்குவதினாலும் மற்றக்காரணங்களாலும் நமதுதேகத்தில் செல்லும் பொழுது சுத்தபுழுக்கள் அவைகளை அங்கீகரிக்காமல் மறுபடியும் வெளியேதள்ளிவிடுகின்றன. ஆகையால் தான் புலால்முதலிய அசுத்த ஆகாரங்களை யெப்பொழுதும் நீக்கி சுத்த ஆகாரங்களைப் புசித்துக்கொண்டிருக்கும் ஜனங்களுக்கு நோய்பரவியிருக்கும் காலங்களில் அபாயம் மிகவும் குறைந்திருக்கின்றது. சுத்தபுழுக்கள் தேகத்தில் எவ்வளவு ஜாஸ்தியாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமாய் தேகத்திற்கு நோய்ப்புழுக்களை அங்கீகரிக்காமல் தள்ளிவிடும்சக்தியிருக்கின்றது. இந்தத்திண்பூதவுடலின் சுத்தம் நாம் உட்கொள்ளும் ஆகாரத்தைப்பொறுத்து மாத்திரமல்லாமல் நமக்குள்ள மற்றசரீரங்களினது சுத்தத்தையும் பொறுத்திருக்கின்றது. ஆகையால் ஆகாரமாத்திரம் சுத்தமாயிருந்து மற்றதேகங்களை அசுத்தமாய்வைத்திருந்தாலும் இந்தத்திண்பூதவுடல் முழுவதும் சுத்தமாயி

ராது. ஆனாலும் சுத்தஆகாரத்தினால் திண்பூதவுடலும் பெரும்பான்மை சுத்தமாயிருக்கும். "நோய்க்கிடங்கொடேல்" என்ற ஔவையின் வாக்கியத்திற்கு ஒருபாகமான அர்த்தம் அசுத்தபானங்களும் உணவுகளுமாகிய மதுமாமிசங்களைப்புசியாதே யென்பதாம்.

கண்ணறைகளுக்கும் அணுக்களாகிய புழுக்களுக்கும் அறிவு அல்லது பிரக்ஞையுண்டு. இந்த அணுக்களின் பிரக்ஞையானது கலப்பற்றுத்தனிமையான ஸ்தூலப்பிரக்ஞை. இதைத்தேகப்பிரக்ஞையென்றும் சரீரப்பிரக்ஞையென்றும் தேகஅறிவு அல்லது சரீரஅறிவு என்றும் சொல்லுவார்கள். கண்ணறைகள் இரத்தத்தினின்று தங்களுக்குவேண்டியதைத்தெரிந்து பிரித்தெடுத்து வேண்டாததைத் தள்ளிவிடும்படியான தொழில் இந்தஸ்தூல அறிவு அல்லது தற்போதத்திற்கு ஒருதிருஷ்டாந்தம். நம்முடைய இச்சை அல்லது பிரக்ஞையின் உதவியில்லாமலே உடலுக்குவேண்டியதை இரத்தத்தினின்றும் பிரித்து எடுத்துக்கொள்ளும்படியான தொழில் நடந்துகொண்டேயிருக்கின்றது. இந்த ஸ்தூல அறிவின் ஞாபகத்தைத்தான் சுகரணவாதிகள் * (Physiologyists) உணர்ச்சியற்ற ஞாபகம் என்று தங்கள்சாஸ்திரங்களில் விவகரிக்கிறார்கள். உண்மையில் இந்தஸ்தூல அறிவு நமதுஅறிவில் இல்லைத்தான். கண்ணறைகள் செய்யுந்தொழில் நமதுஅறிவில் தெரிகிறதில்லை. சாதாரணமாய் நமதுபிரக்ஞை அல்லது அறிவு நமதுமூளையில் தொழில் செய்துகொண்டிருக்கிறது. நமக்கிருக்கும் சாதாரணஅறிவு மூளையறிவு. இந்தமூளையறிவைக் கண்ணறைகளுக்குக் கொண்டுபோய்ச்செலுத்தினால்மாத்திரம் நமக்கு ஸ்தூலப்பிரக்ஞையின் ஞாபகம்தெரியும். கண்ணறைகளின் உணர்ச்சிநமது உணர்ச்சியல்ல. கண்ணறைகளின் அறிவு நமது அறிவு அல்ல. ஒரு இரணம் அல்லதுகாயம் உண்டானபோது பிறக்கும் வலி நமக்குத்தோன்றுவது மூளையறிவில். நமதுதேகத்தில் வெட்டுக்காயம்பட்டு சதைபிளவுபடும்பொழுது தேகமாகியகட்டடத்திலுள்ள புழுக்களாகிய அணுக்களையும் அணுக்கூட்டங்களாகிய கண்ணறைகளையும் அவைகளின் அறிவு அல்லது பிரக்ஞையானது காயத்தைச் சீர்செய்து பிளவைக்கூட்டிவைக்க விரைந்துசெல்லும்படி நடத்துகின்றது. பிளவுபட்டசதையைக் கூட்டுவிக்க ஆரம்பித்துத்தொழில் செய்துகொண்டுவரும் புழுக்களின் ஞாபகம்

---

* சுகரணவாதம் என்பது உயிர்ப்பிராணிகளின் கருவிகளையும் அவைகளிலே நடந்துவரும் சுகத்துக்கடுத்த செய்கைகளையும் பற்றிய பிரமாணங்களையும் விவரிக்கும் சாஸ்திரம். இந்தசாஸ்திரத்தை ஆராய்ச்சிசெய்வோரும் விவரிப்போரும் சுகரணவாதிகள். இங்கிலீஷில் இந்த சாஸ்திரத்திற்கு "விஸியாலஜி" (Physiology) யென்றும் இந்தசாஸ்திரங்களுக்கு "விஸியாலஜிஸ்ட்ஸ்" (Physiologists) என்றும் பெயர்.

பிளவுசரியாய்க்கூடிப் பொருந்திப்போய் மேலும் வேலை அவசியமில்லாமற் போனபிறகுங்கூட அப்புழுக்களைத்திருப்பித்திருப்பிச் செய்ததொழிலையே செய்யும்படி செய்கின்றது. இதனால்தான் தழும்புகள் அல்லது வடுக்கள் காயங்கள்மேல் காணப்படுகின்றன. தழும்புகள் உயர்ந்து மேடாகவிருக்கும். காயத்தின் பிளவில் தேகத்தின் மற்றபாகத்தின் அளவுவரை மாத்திரம்வரும்படி புழுக்கள்மண்போட்டு நிரப்பிநிறுத்திவிட்டால் தழும்புகள்காணப்படா. அப்படிச்செய்யாமல் செய்ததொழிலின் ஞாபகத்தால் பிளவின்பள்ளம் நிரவிப்போனமேலும் மண்ணை அவ்விடத்தில் அதிகமாய்ப்போட்டுவிடுவதால் தான்சரீரத்தின் மேற்பரப்புக்குமேலாக உயர்ந்து மேடாகத்தழும்புகள் உண்டாகிவிடுகின்றன.

அடக்கியாளும் பிராணசத்தி தின்பூதவுடலைவிட்டுப்பிரிந்து சிற்றுயிர்களாகிய நுண்புழுக்களைத் தங்களிஷ்டப்படி போகவிடும்பொழுது இவ்வுடலுக்கு மரணம் அல்லது சாவுவருகின்றது. அப்பால் இந்த எண்ணிறந்த சிற்றுயிர்கள் தங்களை ஒற்றுமைப்படுத்திச்சேர்த்து வைத்திருந்தபிராணசத்தி நீங்கவே தலைவனையிழந்த சேனையைப்போல பலதிக்குகளிலும் பிரிந்து ஓடத்தலைப்படுகின்றன. அப்பொழுது இவ்வுடலாகிய ரூபத்திற்குச்சிதைவுஅல்லது அழிவு ஆரம்பிக்கின்றது. ஒற்றுமையாயிருந்த காலத்தில் உயிருள்ளபுழுக்களின் ஒருமித்த உயிர்ச்சத்தியினால் கட்டுவாய்ந்து நிலைபெற்றிருந்த சரீரத்தின் உருவமானது அதேஉயிருள்ள புழுக்களின் தனிஉயிர்வேகத்தினால் குலைந்துபோகின்றது. ஆகையால் மரணம்என்பதும் உயிர்நிகழ்ச்சியின் ஒருவிதகாக்ஷியே. ஒருஉருவத்தின் அழிவு இன்னொரு உருவங்கட்டப்படுவதற்கு ஆரம்பமேயாம்.

(இன்னும்வரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை

தர்மி லோபி சம்வாதம்.

"தர்மபுரி" யென்றவோர் பட்டணத்தினின்று "நியாயபுரி" யென்றவோர் பட்டணத்திற்கு விநோதகாட்சிகளைக்கண்ணுற்று அனேக நியாயவழிகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுத் "தர்மி" என்ற நன்னாமங்கொண்டவொருவன் போயிருந்தான். அக்காலையில் "உலோபபுரி" என்றவோர் பட்டணத்தினின்று "உலோபி" என்றவொருவன் ஸ்திரீ லோலனாகப் பிதுரார்ச்சிதமாயிருந்த நூறாயிரம் பொன்னில் சிலவற்றைக் கையிலெடுத்துக்கொண்டு சில துஷ்டர் சேர்க்கையுடன் "மூடபுரி," "அஷ்டபாலன

புரி" 'காமபுரி' 'யென்ற பட்டணங்களிலுள்ள துஷ்ட சஹவாசம்' மதனகேளி விலாசம் முதலியன கொண்டு கடைசியாக ஊரின் பெயர் முன்னால் தெரிந்து கொள்ளாமல் 'நியாயபுரி' யினூர்ப்புறத்தே யிருந்த வோர் குளக்கரையினருகே யுட்கார்ந்தான். அப்பொழுது அத்தடாகத்திற்கு நீராடச் சென்றிருந்த 'தர்மி' என்பவன் 'உலோபி' என்பவனை நோக்கி நீர் யாவர்? எவ்வூர்? உமது பெயர் யாது? இப்போதெங்கிருந்து வருகின்றீர்? எவ்விடஞ் செல்கின்றீர்? யாதுகாரணமாகப் புறப்பட்டீர்? தயைசெய்து சவிஸ்தாரமாகச் சொல்லல் வேண்டுமென, யானோ மதனகேளி விலாசதுரந்தரன், உலோபபுரியில் வசிப்பவன், 'உலோபி' என்பது எனது பெயர், காமபுரியினின்றும் வருகின்றேன், கணிகாபுரிக்குச் செல்கின்றேன், வாராங்கனா விலாசமாடப் புறப்பட்டேன், எனச்சொல்லி முடித்துவிட்டு, உமது பெயர் யாது? எவ்வூர்? இப்பொழுதெங்கிருந்து வருகின்றீர்? எவ்விடஞ் செல்கின்றீர்? யாதுகாரணமாகப் புறப்பட்டீர்? அன்புகூர்ந்து யான் கூறியதைப்போல விவரமாகச் சொல்வீராக வென்று வினவிய உலோபியைப் பார்த்துத் 'தர்மி' என்பவன், எனதுபெயர் தர்மி, தர்மபுரி வாசி எனது ஊரிலிருந்தே வருகின்றேன், இவ்வூரிற் சின்னாட்டங்கியிருந்து சில விவேகிகளை யடுத்து நன்னெறிகளைத் தெளிவுற்றுப் பின்னர் மீண்டும் எனதூர்க்கே செல்லுவேன் என விடை கூறினன். அதன் பிறகு இருவர்க்கும் நடக்கும் சம்பாஷணை வருமாறு:—

உலோபி, (த) முதலாகவுள்ள பெயருடையவரே! நீர் சொல்லியது யாவும் விந்தையினும் விந்தையே.

தர்மி, உலோபி! யான் கூறியவற்றில் வித்தியாசமொன்றுமில்லையே.

உலோபி, உமது பெயரைச் சொல்லவே யென்போலியர்க்கு நாவெழாதே, உமக்கு இப்பெயர் யாவர் வைத்தனர்? உமது தந்தையாலிடப்பட்ட பெயர் போலும், அவர் யோசனையின்றி விரசமான பெயரிட்டனர். அதுதான் போகட்டுமென்றாலோ உமதூரின் பெயருமப்படியே யிருக்கின்றது, அப்பெயர் எக்காலத்து யாவராலிடப்பட்டதோ, இவ்வூரின் பெயரும் முன்பே தெரிந்திருந்தால் இவ்வூருக்குட் பிரவேசித்திருக்கவே மாட்டேன், இவ்வூரில் சின்னாட்டங்கி யிருந்து சில விவேகிகள் * குழாத்தையடுத்து நன்னெறிகளைத் தெளிவுற்றுப் பின்பு நும்மூர்க்குச் செல்வதாயுரைத்தீர். விவேகிகளாவது நன்னெறியாவது என்னகாணும் வேடிக்கையாயிருக்கின்றது சபாஷ்.

---

* கூட்டத்தை

தர்மி, ஆ! ஆ!! அப்படியா, எனது பெயரும் எனதூர்ப் பெயரும் நும்போலிபராற்றினை சொல்லப்படாதவைகள், அதனாற் குறைவேயில்லை. என் போலியர் மொழிவரன்றோ? அதுவே போதும், நும்மைப் போன்றவர் இயம்பக்கூடா தென்பதே யெனது பிரார்த்தனை, கற்றோராகிய விவேகிகளைக்கண்டு நீர் ஓடவேண்டுவதில்லை, அவர்களே, தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் தமது திருக்குறளிற் கூறிய "இரப்பனிரப்பாரை யெல்லா மிரப்பிற் கரப்பரிரவன்மினென்று,, என்ற முதுமொழியைக் கடைப்பிடித்து உமது பெயர் செவியுறு முன்னரே ஓட்டம் பிடிப்பர். இது திண்ணம்.

உலோபி, என்னகாணும், ஏதோவொரு பாட்டைச் சொன்னீரே, அதன் அர்த்தமென்ன விளங்கச் சொல்லும் டார்ப்போம்.

தர்மி, 'யாசகரைக் கண்டு ஒளிந்துகொள்ளும் பரம லோபியினிடத்து யாசகார்த்தமாகச் செல்லாநிருக்கின்றன், யாசகர் யாவரையுமிரந்து கேட்டுக்கொள்கிறேன்' என்பது சாற்றுந்து இது தெரியவில்லையா? இதனால் நீர் படித்தவரேயல்லரென உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாயிற்று.

உலோபி, என் தகப்பனார் உலக வழக்கம் போலப் பாடசாலையில் ஐந்தாம் வயதில் வைத்தனர். ஆனால் அவர் நான்பதினைந்தாம் வயதில் நான்காம்பாடம் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் இறந்துபோய் விட்டனர். அப்பால் அவர் நூறுயிரம் பொன் ஆஸ்தியாக வைத்திருப்பதனாற் கவலையற்றுக் கல்வி அநாவஸ்யமென தெளிவுற்றுப் பாடசாலையை விட்டு எனக்குரிய சிநேகிதர் சேர்க்கையைக் கைக்கொண்டு மாதர் கூடற் சாலையையடைந்து உல்லாசமாய்த் திரியத் துணிந்தேன்.

தர்மி, ஏன்காணும், பதினைந்தாம் வயதிற்றானே நான்காம் பாடம் படிக்கத் தொடங்கினீர்? அழகா யிருக்கின்றது.

உலோபி, ஆம், அழகென்ன, பாடசாலையை வேம்பாய் நினைத்துக் காடுகாடா யலைந்து விளையாடிக் கொண்டு பாடசாலைக்குள் மழைக்காலிருட்டிலும் ஒதுங்க மனந்துணியாமல் என் தந்தையார் நிர்ப்பந்தத்திற்காக மாத மும்முறை பாடசாலைக்கு ஏகுவது தூர்லபமாய் விட்டது. அப்படியிருக்கப் பதினைந்தாம் வயதில் நான்காம் பாடம் படித்தது ஆச்சரியமன்றோ? அழகா யிருக்கின்றது என்று பரிகாசம் பண்ணுகின்றீரே போங்காணும் போம், உம்மைப்போ லிருக்கவில்லை யென்கிறீர் போலும்.

தர்மி, ஏன்காணும் கல்வியினருமை உமக்குத் தெரிந்திருந்தால் கரும்பாகவே நினைத்திருப்பீர். 'தாயோடறு சுவையோம் தந்தையொடு கல்விபோம், சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ், வுற்றாருடன் போம் உடற்பிறப்பாற் றோள்வலி போம், பொற்றாலி யோடெவையும் போம்' அதாவது (தாய்போனால் அறுசுவை யுண்டியிழக்கவும், தகப்பன் போனால் கல்வியை யிழக்கவும், தான் பெற்ற பிள்ளை போனால் செல்வத்தை யிழக்கவும், பந்துக்கள் போனால் உண்டான வாழ்வனைத்து மிழக்கவும், சகோதரர் பொனால் புஜபலமிழக்கவும், மனைவி போனால் மேற்கூறிய யாவுமிழக்கவும் நேரிடும்') இந்த முதுமொழியின் வண்ணம் உமது தந்தையை யிழந்ததனால் கல்வியை யிழந்து போனீர். கல்விக்கிணையானது உலகிலெதுவேனு முண்டோ? "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்,, அதாவது (கற்றவர்களே கண்களுடையவராகப் பாவிக்கப்படுவர், கல்லாதவர்கள் முகத்திலிரண்டு புண்ணுடையவராகப் பாவிக்கப் படுவர்), தொட்டனைத் தூறு மணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறு மறிவு,, அதாவது (மணலூற்றானது தோண்டின அளவாக நீரூறும், மனிதற்குக் கற்ற அளவாக அறிவு ஊறும்), "யாதானு நாடாமல் ஊராமல் என்னொருவன், சாந்துணையுங் கல்லாதவாறு,, அதாவது, (கற்ற ஒருவனுக்கு எந்த நாடும் தன்னுடைய நாடாம், எந்த ஊருந் தன்னுடைய வூராம், அப்படியிருக்க, ஒருவன் சாகுமளவும் கல்வி கற்காத காரணம் யாது) என்பனவாகப்பல நியாயங்கள் கல்வியைக் குறித்து நாயனார் முதலாயினோர் கூறி யிருக்கின்றனர். உலக இயல்பும் கடவுளியல்பும், கடவுள் வழிபாடு முதலிய இயல்பும் தெளிவது கல்வியினாலன்றோ? நீர் பிரதானமாகக் கைக்கொண்ட செல்வப் பொருளை நியாயமார்க்கத்திற் சம்பாதிப்பதற்கும், அதனைக் காப்பாற்றுவதற்கும், நல்வழி தெரிந்து செலவிடுதற்கும், ஆதாரமாயுள்ளது கல்விதானே. அதனை அலட்சியமாயெண்ணிக் கல்லாமற்போன காரணத்தினாலன்றோ இத்தகைய தூர்க்குணம் கொண்டலைகின்றீர்.

உலோபி, நல்லது காணும், நீர் சகல கலாவிற்பன்னராயிற்றே. செல்வப்பொருளினருமை தெரிந்திலீர் போலும். நாலடியாரில், "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த இரு தலையு மெய்தும், நடுவண தெய்தாதானெய்து முலைப்பெய், தடுவது போலுந்துயர்" என்று கூறப்பட்டிருக்கின்றதே. இது தெரியாதோ?

தர்மி, ஆம், கூறப்பட்டிருப்பதுண்மையே. அப்பாட்டில், புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கில் குற்றமற்ற இவ்வுலகத்திற்கு வேண்டிய முதல் மூன்றில் நடுவிலிருக்கின்ற பொருளை ஒருவன் அடைவானாகில் முதலிலுள்ள அறத்தையும் கடை

யிலுள்ள இன்பத்தையும் அடைவான்; அப்பொருளை அடையாதவன் (கொல்லன்) உலையிலிட்டு ஒன்றைக் காய்ச்சுவதுபோன்ற துன்பத்தை யடைவான், என்று சொல்லப்பட்டிருப்பதனால், கல்வி கற்றிருப்பினும் செல்வப்பொருளை அலட்சியஞ் செய்து சம்பாதியாமலிருக்க வொண்ணாது. அது இல்லறத்திற்கு வேண்டிய சகல விஷயங்களையும் நடத்தத்தக்க கருவியாயுள்ளதெனினும் நன்குணர்ந்து நடத்தத் துணைக்கருவியாயுள்ளது கல்வியே. செல்வப் பொருளைப் பங்கிடுவதற்கு ஞாதியர், சூதர், கள்ளர், தீயர், வேசியர், அக்கினி பகவான், வருண பகவான், முதலாயினோருளர். கல்விப்பொருளைப் பங்கிட எவராலும் முடியாது. தேசமழியினும் ஜனனங்கடோறும் போயுதவும். நாயனார் தமது குறளில் 'ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற், கெழுமையுமேமாப்புடைத்து' அதாவது (ஒருவனுக்கு ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழு பிறப்பினுஞ் சென்று உதவுதலையுடையது) என்றாராகலின். செல்வப் பொருளை மேற்கூறிய பங்காளிகளில் ஞாதியர், அக்னி பகவான், வருண பகவான் இம்மூவர் தவிர மற்றையர் பங்கிடக் கல்வியறிவுள்ளதேலஃதிடங்கொடாது. நல்லதிருக்கட்டும். நான்காம் பாடம் படித்த வுமக்கு நாலடியாரிற் கூறிய செய்யுளைப் படித் தெரிந்தது சோல்லும் பார்ப்போம்.

[இன்னும் வரும்.]

இங்ஙனம்,
சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்,

இன்னிசை இருநூறு.

[தொடர்ச்சி.]

3-ம் அதிகாரம் இல்வாழ்க்கை.

விருந்தோம்ப றென்புலந் தெய்வம் விரும்பன்
மருந்தா னொக்க லுட னுண்டு மகிழ்தல்
பெருந்தவ ராதியோர்ப் பேணலிவை யில்லத்
திருந்தார்க் குரிய வியல்பு (௧.)
ஒக்கல்-சுற்றம்

நல்ல குடிப்பிறந்து நாற்குணமு மேற்கொளீஇ
யெல்லைகடவா வியற் கற்பினண் மனையா
வில்லற மேயினோ ரேனை யறத் தாற்றிற்
செல்லாதுஞ் சேர்வர் சிறப்பு
கொளீஇ-கொண்டு (ஏனையறம்-துறவறம்) சிறப்பு-வீடு) (௨.)

இல்லாளுந் தானு மனத்தா னிரண்டென
வில்லா தறஞ் செய்துநிற்க துறவிற்பிள்
வெல்லாப் புலமைந் தவித்த விழுமியோ
ரல்லார்க் கிளமை யரில்
அரில்-துன்பம் (௩.)

தூய்ய புகழ்க் கற்பாற் றொழப்படுவாண் மெய்ஞ் ஞான
மெய்து மருந்தவத்தோர் தேவ ரெவரானுந்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

தவத்தோராலுந் தேவராலுந் தொழப்படுவாளும் தெய்வந் தொழாளுங் கொழுநற்றொழுதெழுவாளுமாகிய பெண் பெய்யென மழை பெய்யுமெனக் கூட்டுக (௪.)

பறழ்பல பன்றி பயப்பினு மென்மன்
களிறையடி சுட்டுறுங் கன்றொன் றீன்றாலும்
பிறைபோ லறிவு பெருகு மகவொன்
றுறினுறுவ வேறென் னுள (௫.)
பறழ்-குட்டி. பயப்பினும்-பெற்றாலும். களிறையடி-யானை. சுட்டு-மதிப்பு.

பேதமை மக்கட் பெறலிற் பெருமையாற்
றீதின் றவமதிப்பு மின்னாவுஞ் சேரா வாம்
நீதிநெறி நின்றார் பெறுர்துன் னெறியொழுகி
வாதை தரு பேதை மகவு. (௬.)

மன்னுயிரைத் தன்போன் மதிக்கு மருளாளே
துன்னு முயிர் வீடெனினு மஃதுந் தொடர்பின்கண்
முன்னுறு மன்பான் முளைத்தெழூஉ மஃதின்றே
லென்ன பய னென்றுனு மில் (௭.)

உடையானை யுள்ளத் துடையா னொன் றானு
முடையான் பசிகுளிர் கண் டுள்ளத் துடையா
னுடையானா னாற்றா னுறவதுடை யானன்
புடையா னுடையா னுயிர்.

(பதவுரை) உடையானை-இறைவனை. உள்ளத்துஉடையான்-உள்ளத்துச் சிந்திக்குமொருவன். ஒன்றானும் உடையான்-ஒருவகையானும் அழியான். பசிகுளிர் கண்டு-பிற உயிரின் பசியையுங் குளிரையுங் கண்டு. உள்ள-அவ்வுயிர் தன்னை நினையுமாறு. துடையான்-அத்துன்பத்தை நீக்காதவன். உடையான்-ஊனான். தான்-உறவ. துடையான்-உடையானும் ஊனானுந் தான் பின்னர் எய்துந் துன்பத்தை நீக்காதவனாவான். ஆதலின், அன்புடையான்-உயிருடையான். அன்புடையானே-உயிருடையானாவன் என்றவாறு. (அ)

இன்ன லுருமேபே ரின்பந் தருநெறி
யுன்னி னுளதா லுனற்ற லரி தன்று
லெந்நல மேனு மிழப்பிலஃ தெவ்வுயிருந்
தன்னுயிர் போற் காணு றாஞ் சால்பு.

(குறிப்பு) இழப்பு இல்—இழத்தலில்லை. அஃதுஇன்பந்தருமந் நெறி. (கூ.)

பாத்தூ ணறிந்து பகைவெல்ல னீராட
னீத்த றுயில்காலை பிறனி னினையாமை
சீர்த்த முயற்சியிவை காக்கையினைச் சிற்றெறும்பைப்
பார்த்துங் கொள்ளாமை பழி.

(குறிப்பு) அறிந்து-காலமிட முதலியன அறிந்து. காலை நீராடல் காலை துயில் நீத்தலெனக் கூட்டுக. பிறனில் நினையாமை-பிறன் மனை விழையாமை யிவ்வைந்துங் காக்கைக்கு இயற்கை. சீர்த்த முயற்சி யெறும்பினியற்கை. (ய)

ச-ம் அதிகாரம் கூடாவொழுக்கம்.

தமதிற்பிறர் தொடினுந் தாம் பொறா ரென்னே
வமைவின் றயலாடோட் சோற் கமர்வர்
நமனுல கெய்தி நலிவெய்தற் கன்றே
சுமையா விவர்தோன்றி னார். (க.)

அறநெறியா னஞ்சா தடைதலே யின்பம்
புறநெறியா னஞ்சியயல் புக்கென் பெறுங்கொ
லிறுமுயிர்கால் கையிழக்கு மெய்தும் பழியும்
அறைபோந் திருவோ டறன்.

(குறிப்பு) புறநெறி-பாவநெறி. அயல்—அயலான்மனைவி. உயிர் இறும்—கால்கையிழக்கும் பழியு மெய்தும் (உ.)

பிறன்மனை வேட்டொழுகு பேதைநீ டூழி
மறலி யுலகத்து வைகிப்பின் வந்தே
பிறனலந்தன்மனை பெட்டுத்தற் பேணா
துறனோக்கி நோதலுறும் (ந.)

வேட்டு-விரும்பி. மறலி-யமன். பெட்டு-விரும்பி.

பிறனில் விழைந்த பொழுதே பிறங்கு
மறிவு மழுங்குமா லாணுமா லச்சங்
குறையுமா லாண்மை குடிபுகுமால் வஞ்சம்
புறம்புறுமா னட்புப் புகழ் (ச.)

செல்லாம லிச்சைவழிச் சிந்தை யிறையினிறீஇ
நல்லநாட் பூப்பின்பி னாடிக் கவலின்றி
யில்லா ளிடத்துமன்பா னன்மக்கட் பேறெண்ணி
னல்லான் முயக்க மவம்

(குறிப்பு) இச்சைவழிச்செல்லாமற் சிந்தையை இறைபாணிறீஇ பூப்பின்பின்நல்லநாள்நாடிக் கவலின்றி நன்மக்கட்பேறெண்ணின் அல்லால் இல்லாளிடத்தும் முயக்கம் அவம் என்க(ரு.)

கொண்டானிற் றீர்ந்தபலாற் கூடி யொழுகுவாட்
கண்டாலும் பாவ மிருமரபுங் காய்கதிரோ
னுண்டா மளவு முறும்பழியாங் காணேமிப்
பெண்டே போற்றிய பிறப்பு
(குறிப்பு)உறும்பழி-பழியுறும். யாம்காணேம் எனப்பிரிக்க(௬.)

தாக முறினுமழை தன்வாய்ப்பட் டாலன்றி
யாகாப் பிறநீ ரருந்தலிலே சாதகப்புட்
டேகமுறு வேளெனினுஞ் செல்லாள்பெண் கொண்டான்பாற்
போக மறினும் புறன்

(குறிப்பு ஆகாப்பிறநீர். சாதகப்புள் தான் ஆகாதென்று கொண்டதாகியபிறநீர். அது-மழைநீரல்லாத ஆற்றுநீர்முதலிய பிறநீர், பெண், வேளெனினும் புறன் செல்லாள் (௭.)

ஆழி விரற்றுணையா வாக்குப வங்குலியை
யாழியள வாக்கா ரஃதொப்ப வாடேத்தான்
வீழு மவளைத்தன் னிச்சைவழி வீழ்த்தலன்றித்
தாழுமோ பெண்மனம்போற் சாய்ந்து (௮.)
அங்குலி-விரல். வீழ்தல்-விரும்பல்.

தொழுநோய் முதற்பல சூழு நிரப்பா
மிழுதை யென் றெள்ளுவ ரீன்றருங் கற்புப்
பழுதுறு மாமனைக்குப் பண்புடை யாள
ரொழிகபொருட் பெண்டீ ருறவு (௯.)
(நிரப்புஆம் தரித்திர முளதாகும்)

கன்னி விலங்கு கலன்கழிந் தாரிவர்த்
துன்னி முயங்கிய தீயவர் தோய்ந்தெழாஅர்
மன்னு நிரயம்பல் லூழிபின் மாழ்குவர்
நன்னரில் பேடா நடித்து (௰.)
4-ம் அதிகாரம் முடிந்தது.

அ. சண்முகம்பிள்ளை.

வைத்தியம்.

[தொடர்ச்சி.]

முக்கியமாய், வாயில் நீரூரல், கசப்பு, புளித்த எப்பம், அன்னத்துவேசம், நெஞ்செரிவு, தலைசுழற்றல், கிறு கிறுப்பு, இரைப்பை ஜீரணசக்தியை இழத்தல், எந்தவஸ்துவைச் சாப்பிட்டாலுங் கசந்திருத்தல், நித்திரையின்மை, நித்திரையில் அதிக வியர்வை யுண்டாதல், காலையில் படுக்கையினின்றெழும்பப் பிரியமின்மை, காலையில் வாந்தி, அடிக்கடி மறதி, சரீரவலி, நித்திரையிற் பிதற்றல், வெய்யிலில் மஞ்சணிறத்து வஸ்துக்கள் தோன்றல், நடந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று கீழே வீழ்த்தி வியர்வையையுண்டாக்கலாதியவற்றிற்குச் சஞ்சீவி.

இப்பித்தரோகங்களோடு வாதமாவது, சிலேஷ்மமாவது சேர்ந்தால் அந்த ரோகங்கட்கு இச்சூரணத்தைத் தனியாயுபயோகிக்காது பின்னர் என்னாற் குறிக்கப்படும் செந்தூரம் பஸ்ப முதலியவற்றைக் கூட்டி யுபயோகித்துக் குணங் காணுக. அவ்வியோக முறைகளைப் பின்னர் வரைவல் இச்சாப்பத்தியம்.

கூவிளத்தைலம்.

வில்வ வேர் பலம் 100 இதனை மேல்மண் போக்கிச் சிறுக நறுக்கி மட்பாண்டமொன்றிலிட்டு 8 வள்ளச் சுத்த சலம் வார்த்து அடுப்பேற்றிக் கமலாக்கினியா யெரித்து ஒரு வள்ளமாகக் குறுக்கி வடித்த கஷாயத்தில் வெள்ளேலம் பலம் 10, அதிமதுரம், தேவதாரம், சிற்று முட்டி வேர், பேராமுட்டி வேர், செம்முள்ளி சமூலம் வகைக்குப் பலம் 8. இவற்றையிடித்து 8 படி சுத்த சலத்திலிட்டு ஒரு படியாய்க் குறுக்கிய கஷாயத்தையும் 2 படி நல்லெண்ணெயையும் 2 படி பசும்பாலையும் விட்டு இக் கூட்டில் மிளகு, சீரகம், அதி மதுரம், நெல்லி வற்றல், பூஞ்சாந்துப் பட்டை, கிளியூரம்பட்டை வகைக்கு பலம் இ ($\frac{1}{2}$) இவற்றைப் பசுப் பாலாலரைத்துக் கரைத்து அடுப் பேற்றி முதலில் கமலாக்கினியாகவும் பின்னர் தீபாக்கினியாகவும் எரித்து அடிக்கடி கிளறிக் கொடுத்துக் கொண்டிருந்து மெழுகுபதத்தில் வடித்து விநாயக பூசை செய்து 40 நாள் தானிய புடம் வைத்தெடுத்துக் கொண்டு வாரம் இருமுறை முழுகி வர வேண்டியது.

தீரும் வியாதிகள்:—பித்தம் 40, கபரோகம் 96, மேகம் 21, சுவாசரோகங்கள் மீளாத இருமல் ரோகங்கள் முதலிய அநேக பயங்கர ரோகங்களும், தேக முற்றும் வேரூன்றி நிலைத்த சொறி, படர்தாமரை, புண்கள், அறிவு கெடல், மறதி, வாய்வு, பிதற்றல் முதலிய எல்லா ரோகங்களும் நாசமாகும்.

பத்திபத்திற்கேற்பன:—அவரைப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, தூதுளங்காய், மணத்தக்காளிவற்றல், பொன்னாங்காணிக்கீரை, சிறுகீரை, கறிவேப்பிலை, துவரை, பாசிப்பயறு, (சிறுபயறு) சீரகம், வெந்தயம், மிளகு, கிராம்பு, இலவங்கப்பட்டை, சாதிக்காய், பசுநெய், ஏலம், சர்க்கரை, கவுதாரி, காடை, உடும்பு, இவைகளுத்தமம். பீர்க்கம்பிஞ்சு, புடலைப் பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, நெல்லிக்காய், முயல், ஏரிமீன், அயிரை, தேளி, சுறு, சருவாலி, காட்டெலி, வெள்ளாடு, இளங்கீரைத் தண்டு, பெருங்காகாயம், உப்பை வெடிக்கும்படி வறுத்துக் கொட்டிய மட்பாண்டத்திலூற்றி முறித்த மோர், சிறிய புளி தாம்பூலமாகிய இவைகள் ஒருவாறு சேர்க்கப் படுவன.

பத்தியத்திற்கேலாதன:—நண்டு, மீன், கோழி, ஆடு, பன்றி, மான், சாம்பற்பூசணிக்காய், பறங்கிக்காய், மாங்காய், தேங்காய், முற்றியகீரைத் தண்டு, சேம்பு, அறுகீரை, அகத்திக்கீரை, பாகற்காய், முற்றியகத்திரிக்காய், கொத்தவரைக்காய், பழவர்க்கங்கள், பலகாரவகைகள், மொச்சை எள், கொள், கடலை, உழுந்து, வெங்காயம், கடுகு, மிகுந்தபுளி, பா, தயிர், கசப்புவஸ்துக்கள், ஆவிபுகையிலிருத்தல், வெல்லம், மழையில்நனைதல், பகல்நித்திரை, வெய்யில், காற்றிற்றிரிதல், இவைமுதலியனவாம்.

குறிப்பு:—கீழேவரையப்போகும் எல்லாவகையான உயர்ந்த தைலங்கட்கும் பத்தியம் இதனையே அநுட்டிக்கவேண்டியது. ஆங்காங்கு வரைவதாற் சிரமமும் நந்தவப்பயனுவிலங்கும் பாறுவிளங்கத்தைப் பழுதாக்கலுமாமென றஞ்சிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சுரத்திற்கு ஓமாதி மாத்திரை.

ஓமம், சுக்கு, சிற்றரத்தை, வாய்விளங்கம், அதிமதுரம், கோஷ்டம், குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, கிராப்பு, பேய்புடல், பற்படகம், சிறுதேக்கு, சிறுகாஞ்சொறி, சிந்தில், நன்னாரி, முத்தக்காசு, தேவதாரம், இவை வகைக்குப்பலம் இ$(\frac{1}{2})$ ஆடாதோடையிலை, ஆடுதின்னாப்பாளைவேர், கண்டங்கத்திரிவேர், வகைக்குப்பலம் வ $(\frac{1}{4})$ கஸ்தூரிவிராகனெடை 1 எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு விஷ்ணுசார்திக்கஷாயத்தால் ஒருநாளும், சீமைநிலவேம்புக் கஷாயத்தாலொருநாளும், கற்பூரவல்லித் தழைரசத்தாலொருநாளும், நன்குயரைத்துக் கல்வத்திலே புலரும்படி விட்டிருந்து மறுபடி பொடித்துத் தேன்விட்டரைத்துக் குன்றுமணியளவாயுருட்டி வைத்துக்கொள்ளவேண்டியது.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன் பிள்ளை.

உ.

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904ஞு ஏப்பிரல்மீ { புத்தகம் 4.

வித்தியா விஷயமாய்க் கவர்ன்மெண்டாரது தீர்மானங்கள்.

சென்ற பிப்பிரவரிமாதப் பத்திரிகையில் வித்தியாவிஷயமாய் நம் தேசத்தார் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றனவென்றும் அவற்றைக் குறித்து நாம் அப்போதைக்கப்போது நீளநினைந்து எழுதுவோமென்றுங் கூறினோம். நம் காருண்ய இந்தியா கவர்ன்மெண்டாரும் வித்தியா விஷயமாய் இச்சமயம் சில தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். அவற்றை நாம் நன்கு ஆராயவேண்டுவது முக்கியம். அவ்வாராய்ச்சி செய்யுமுன் நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவுண்டு. அவையாவன. நம் இந்தியாதேசம் தொன்றுதொட்டுக் கல்வியபிவிருத்தியை நாடி வந்திருக்கின்றது. இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் நம்மவர் கல்வியைக் கைவிடாமற் காப்பாற்றி யபிவிருத்தியடைந்து வந்திருக்கின்றனர். ஆனால் சென்ற ஐம்பது வருஷத்துக்கு முன்னிருந்த படிப்புக்கும் தற்கால படிப்புக்கும் வித்தியாசமுண்டு. "மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி" யென்ற வண்ணம் வித்தையானது நம் தேசத்தில் ராஜாங்கத்தை அநுசரித்தே பெரும்பாலும் வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது. ஹிந்து இராஜாக்கள் நாளையில் ஹிந்துபாஷைகளே அபிவிருத்தியாயின. அவர்களுள்ளும் தமிழ் அரசர்களாகிய சேர சோழ பாண்டியர் நாளில் தமிழும், தெலுங்கு இராஜாக்களாகிய நாயு

கர் அரசாட்சியில் தெலுங்கும், மகாராஷ்டிரர் அரசாட்சியில் மகாராஷ்ட்ரமும் மகமதியர் நாளில் பெர்ஷியனும் ஹிந்துஸ்தானியும் ஜனங்கள் கற்கும் பாஷைகளாக இருந்து வந்திருக்கின்றன. நம் காருண்ய ஆங்கில கவர்ன்மெண்டார் காலத்தில் ஆங்கிலம் கற்கின்றோம். அவ்வவ் விராஜாங்க காலத்தில் அவரவர் பாஷையைக் கற்றுக் கொண்டாலும் நம் நாட்டார் தங்கள் சாஸ்திரப் பயிற்சியிலும் தங்கள் வித்தியா ஊக்கத்திலும் என்றும் தாழ்வடைந்ததில்லை. ஆங்கிலேயர் முதல் முதல் நம் நாட்டுக்கு வந்தபொழுது நம் கல்விப் பயிர்ச்சியையும் நம் வித்தியா சாமார்த்தியத்தையும் கண்டு பிரமித்து அவ்வித்தை யாதொரு இடையூறுமின்றி அபிவிருத்தியாகும்படி ஜனங்களுக்கு வேண்டியபொருளுதவிசெய்துவந்ததுமன்றி பண்டிதர்களுக்குத் தக்கவேலைகளையும் இராஜாங்கத்தில் கொடுத்து வந்தனர். அதனால் ஹிந்துக்களுக்குள்ளும் மகம்மதியர்களுக்குள்ளும் அவரவர் கல்வி பாவி அபிவிருத்தி யடைந்தது. அவ்வாறிருக்க கி. பி. 1835-ம் வருஷத்தில் நம் கவர்ன்மெண்டார் வித்தியா விஷயமாய் ஒரு சங்கம் கூட்டி அவ்வித்தையை எவ்விதம் தக்கபடி அபிவிருத்திபண்ணலாம் என்று ஆலோசிக்கலானார்கள். அச்சங்கத்துக்குத் தலைவராயிருந்த மெகாலே என்ற ஆங்கில நிபுணர் ஆங்கிலமே ஜனங்களை உயர் பதவிக்குக் கொண்டுவரத் தக்கது என்றும் ஜனங்களின் சொந்த பாஷைகளைக் கொண்டு கல்வியபிவிருத்தி செய்வது அசாத்தியமான காரியமென்றும் மேனாட்டுக்கலைகளுக்கடுத்த ஞானங்கள் பரவவேண்டுவது இன்றியமையாததென்றும் அதற்கு ஆங்கிலமே தக்க கருவி யென்றும் எவரும் வியந்து பிரமிக்கும் வண்ணம் தம் வாக்குவல்லபத்தால் வற்புறுத்தி நிலைநாட்டினர். அதுமுதல் சுயபாஷைப் பயிற்சி குன்ற ஆங்கிலம் தலையெடுக்க ஆரம்பித்தது. அதற்கு 20 வருஷங்களுக்குப் பிறகு நம்மை ஆண்ட கோர்ட் ஆப் டைரக்டர்ஸ்கள் வித்தியாவிஷயமாய்த் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர். அவற்றுள் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அத்தீர்மானங்களே நம் முக்கிய வித்தியாசட்டமாம். அச்சட்டத்தை அனுசரித்து சர்வகலாசாலைகள்

1857-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. அவ்வருஷம் முதலே நம்நாட்டில் ஆங்கிலம் அபிவிர்த்தியாகத்தொடங்கிற்று. ஏறக்குறைய சென்ற ஐம்பதுவருஷகாலமாய் நட்நாட்டில் இக்கல்வி உலாவிவருகின்றது. இதனாலுண்டான நன்மைகள் பலவாயினும் தீமைகளும் இல்லாமற்போகவில்லை. இதன் நன்மைகளாவன, நாம் நம் இராஜாங்க நடவடிக்கைகளை நன்கு அறிந்து நம் சுகத்தை விருத்திபண்ணிக்கொள்ளலானோம். உலகத்தின்கண் தினே தினே அபிவிருத்தியடைந்துவருகிற சர்வசாஸ்திரங்களையும் சுலபமாய் அறிந்து அவற்றால் உண்டாகும் ஆனந்தங்களை அனுபவிக்கலானோம். நம் வியாபாரவிஷயங்களும் நம் அந்நியநாட்டுறவும் அபிவிருத்தியடையத்தொடங்கின. நம்மவர் கவரன்மெண்டாருடைய அபிமானத்துக்கும நம்பிக்கைக்கும் பாத்திரமுள்ளவர்களாகி உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்று அதனால் நம் தேசத்தாருக்குப் பலவிதத்தில் நன்மைசெய்யச் சக்தியுடையவர்களானார்கள். அந்நியஜாதியார் நம் நடையுடைபாவனைகளை அறியாமல் நம் நாட்டாருக்குச் செய்துவந்த அநியாயங்களினின்றும நம்நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளலானோம். நம்மை ஆள்பவருக்கும் நமக்குமுள்ள சிநேக சம்பந்தங்கள் பலப்பட்டன. நம் விருப்பங்களை நம் கவரன்மெண்டாருக்குத் தாராளமாய்த் தெரிவித்தும் அவர்கள் கருத்தை அப்போதைக்கப்போது நாம் நன்கு அறிந்தும் பல சௌக்கியங்களைத் தேடிக்கொண்டோம். அவர்களது சட்டதிட்டங்களை நன்கு அறியலானோம். நம் வித்தையின் மகிமை அந்நியநாட்டார் அறியும்படியாகவும் அதனை அவர்கள் ஆவலுடன் கற்கும்படியாகவும் வாயத்தது. நாம் நம் அதிகாரிகளின் முன்னர் நம் பல்லைக்காட்டிக் கெஞ்சி நம்மைத் தாழ்வுபடுத்திக்கொள்ளாமல் கம்பீரமாயும் சுவேச்சையாயும் வாழும்படியான பாக்கியம் பெற்றோம். இன்னும் இவைபோன்ற நன்மை அநந்தமுண்டு. இவை நிற்க அதனால் நம்தேசத்துக்குண்டான தீங்குகளைப்பற்றி அடுத்த முறை எழுதுவோம்.

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

[முன் தொடர்ச்சி]

அத்தி ஆல் புங்கு புளி பூவரசு நெல்லி
ஆச்சா கருங்காலி குங்குமங் கொன்றை
இத்தியம ராத்தி கடுக்காய் மசோகு
ஈந்து பேரீந்து மலைவேம்பு மஞ்சாடி.
உத்தம எலுமிச்சை சீனி நாரத்தை
ஓடை உசிலை மா பலா வெட்பாலை வெள்வேல்
முற்றினசண்பகம் சந்தனங் கோங்கு
மூங்கில் கூந்தற்பனை தேங்கு சாதிக்காய்
மெத்தெனத் தேக்கரசு நறுவிலி தணக்கு
விளா வாகை பெருநாவல் பராய் வெட்சி உழிஞ்சில்
சித்திரச்சிலை பாலை மாவிலங்கெட்டி
தேவதாரு சம்பு காகை பூவந்தி
பத்திராட்சம் வில்வம் மாதுளை மருதம்
பாதிரி புன்னை மகிழ் பனிநீர்சார் வன்னி
வித்திலவு முள்ளிலவு வெண்ணொச்சி தேத்தான்
வேங்கை யோமை யிலுப்பை யிலந்தை பனை
துத்தியொடனிச்சை கடம்போடகில் காயா
துரிஞ்சுகு தான்றி செருந்தி செவ்வந்தி
நெத்துக்களா சேர்கொய் யாவுடன் சீதா
நேர்வானம் அருநெல்லி நிகரிலாப் பூகம்

என்ற பல விருக்ஷங்கள் வெகு அழகாய் விளங்கின.

அக்காட்டில்

யானை சிங்கங் கரடி ஒட்டகம் புல்வாய்
யாளி காண்டாமிருகம் காட்டாடழுங்கு
சினமட்டம் அச்சுமட்டந்துரங்கம்
செம்மறியாடு வெள்ளாடு குறும்பாடு
மான் மரை கவரிமான் மரநாய் சிறுத்தை

மந்திசேர் குரங்கு சிவிங்கி கடமை
பூனை சிறும்பன்றி முட்பன்றி வேங்கைப்
புலி பசு பொலிபெருது எருமைக் கடாக்கள்
கூன்முயற் குழிமுயல் வெருகு நரியோடு
கோவேறுகழுதைகள் ஓநாய்கள் செந்நாய்
கடுவாய்கள் முயிறுகள் கழுதைக்குடத்தி .

என்ற பற்பல மிருகங்களால் அக்காடு எதிரொலிக்கும்படி பற்பல விதமான சப்தங்களுடன் உலாவித்திரிந்தன. சிலீம் அக்காட்டுக்கு வந்ததின் முக்கியநோக்கம் முன்னமே கூறினோம். அவன் அவ்வனத்தின் அழகுகளைக் கண்ணுறக்கண்டு களித்துச் சிறிதுகாலம் மெய்ம்மறந்தான். வனங்களின் வனப்பே வனப்பு. அதனைப்பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். "வனத்துக்கு வால்மீகி" யென்றவண்ணம் வான்மீகி மகரிஷியே அதன் அழகை வர்ணிக்க வல்லவர். சிலீம் பற்பல காட்சிகளைக் கண்ணுற்று ஆநந்தத்தை அநுபவித்துக் கொண்டு வனத்தின்மத்தியிற்சென்றான். அதுகொடும்புலிவாழு மிடம். புலி என்றால் சாமான்ய நாய்களும் தாவிப்பாய்ந்து பிடிக்கத்தக்க சிறுத்தைப்புலி யன்று. அல்லது சிறுமனிதனும் தன் கைக்கோலால் வெருட்டியடிக்கும்படியான கழுதைப் புலியுமன்று. அல்லது பூனைபோன்ற சிறிய சரீரமுடைய அழகிய சிவிங்கியுமன்று. பூனை எலியைக்கொண்டு பாய்ந்தோடும் விதம் பெரிய காட்டெருமையைத் தன் வாயிற் கவ்விக்கொண்டு சுலபமாய்ச்சிற்றாறுகளையும் அலட்சியமாய்த் தாண்டிச்செல்லும் பதினாறடி வேங்கைப்புலி வாழும்படியான இடம் அது. காட்டுமிருகங்களில் சிங்கத்தடுத்த பலமுள்ளது புலியே. புலி போல் கொடியமிருகம் வன விலங்குகளிற் கிடையாது. பார்வைக்கே பயங்கரமாயிருக்கும்படியானது. அதன் கண்கள் தீக்குழல்போல் பிரகாசமானவை. அதற்கு திருப்தியென்பதே கிடையாது. எந்தச்சமயத்திலும் தன்னெதிர்ப்பட்ட பிராணிகளை யடித்துக் குகையிற்கொண்டுபோய்ச் சேர்க்கும். அது யானையையும் தாக்கும். வனவிலங்குகள் அதனைக்கண்டு நடுநடுங்கும். அதன் நகங்களும் பற்களுமே அதற்குக் கடவுள்

அமைத்த ஆயுதங்கள். அப்படிப்பட்ட கொடும்புலிகளை வேட்டையாடும் வண்ணம் வந்த அரசன், கொம்பு தம்பட்டை முதலிய வேட்டைச்சின்னங்களை முழக்கச்செய்தான். இப்பேரரவங்களைக்கேட்டுப் புலிகள் குகைகளில் பதுங்கிக்கொண்டன. வேட்டையாளிகள் நாலாபக்கங்களிலும் சுற்றிப்பார்த்து புலியைக் கலைக்கத்தொடங்கினார்கள். வெகுநாள் வாடிவதங்கிப்போய் மழை முதலியவற்றால் பலவித வர்ணங்கள் படிந்து கிடக்கின்ற மரத்துண்டுகளைப் பார்த்து இதோ புலி தெரிகிறது என்று பரமரகசியமாய் அடுத்து நிற்பவர் காதில் ஓதுவார்கள் சிலர். அதோ ஆங்குக்குமுறல் கேட்கின்றது என்று பதுங்க ஆரம்பிப்பார் சிலர். காய்ந்த சருகுகளில் சிறு ஜெந்துக்கள் போவதால் உண்டாகும் சலசலப்பைக்கேட்டு இதோ புலிவந்தது குத்துகிறேன் பார் என்று தம் கைபாலாவைக்கொண்டு அந்தரத்திற் குத்திப்பாய்ந்து ஏமாந்துபோவார் சிலர். புதர்களுக்கு இடையில் தழலைப்பழிக்கின்ற கண்களோடு கூடிய வெருகு பதுங்கியிருப்பதைக் கண்ட ஒருவன் இதோ இருக்கிறது புலி என்று பலரையும் ஏவி ஈட்டிமுனையைத் தயாராய் வைத்துக்கொண்டு சூழ்ந்து தூரத்தில் நிற்கும்படிசெய்து தான் போய்க்கலைத்துவிடும் சமயத்தில் அவ்வெருகு குபீரென்று பாய்ந்து தேடிச்சென்றவன் முகத்தைப் பறண்டிக்கொண்டு எல்லோருக்கும் மேலாகத் தாண்டிக்கொண்டு மனோவேகத்திலும் கொடியவேகமாய் ஓட அவ்வாண்மகன் முகமெல்லாம் செம்பஞ்சுக்குழம்பு தடவினதுபோல் குருதிவெள்ளம் கொப்பளிக்க அதனைக்கண்டவர் முதலில் தம்மால் அடக்கமுடியாமல் குலுங்கக்குலுங்க வயிறுபுண்ணாகப்போகும்வண்ணம் நகைத்துக்கொக்கரிக்கச் சிலர் அன்னவர்களைக் கடிந்து இரக்கமுற்ற மனத்துடன் அந்நண்பரிடம்சென்று அவனுக்கு ஆறுதல் கூறி அவன் முகத்தைத் துடைத்துத்தைரியப்படுத்தினர். கடைசியாய் ஒரு விசாலமான மரத்தடியில் ஒரு பெரிய வேங்கை படுத்திருப்பதைக்கண்ணுற்றான். ஒரு வேட்டையாளி தான் முதலில் ஓடிப்போய் அரசனிடம் தெரிவித்தால் தனக்குத் தக்க பரிசு கிடைக்குமென்று நினைந்து ஓடினான். அதனைக்கண்ணுற்ற

எல்லோரும் சர்வஜாக்கிரதையாயிருந்தார்கள்... அரசனும் அக்கொடிய வேங்கையை அம்பாரியிலிருந்தவண்ணமே கண்ணுற்றான். உடனே பக்கத்தில் நின்ற பிரபுக்களை நோக்கினான். "கண்ணிற் சொலிச்செவியினோக்கு மிறை" பார்த்தமாத்திரத்தில பலர் திகிலடைந்தனர். எல்லோரும் பிரமித்து நின்றார்கள். உடனே அரசன் இவ்வளவுதானா உங்கள் வீரம் என்றான். உடனே சிலருக்கு ரோசம் பிறந்து 'மகராஜ்' இதோ கணப்பொழுதில் எங்கள் வல்லமையைப் பாருங்கள் என்று முன்னோக்கிவந்து மண்டியிட்டு சலாம்செய்து புலி தாக்குவதற்கு உத்திரவு கொடுக்கும்படி வேண்டினர். இதனைக் கண்ணுற்ற நம் ஷியர் ஆப்கனுக்கு உற்சாகம் பிறந்தது. சிங்கத்தைக் கொன்ற புகழுக்கு ஒரு கால் குறைவு நேரிடுமோ என்று ஐயமுற்றுச் சற்றுச் சிந்தித்தான். இதற்குள் அப்பிரபுக்கள் துடிதுடித்து நின்றார்கள். உடனே உத்தரவு அளிக்கும் பக்ஷத்தில் அவ்வேங்கையைக் கிழித்து இழுத்து வருவதாகச் சொன்னார்கள். "இனிக்காரியம் மோசம் போய்விட்டாலும் விடும். சும்மா இருப்பதிற் பயனில்லை". என்று உடனே முன் வந்து சில மொழிகளைக்கூறினான். ஷியர் ஆப்கன் "மகராஜ் பகவான் எல்லாப்பிராணிகளையும் படைத்தபொழுது அததற்கு வேண்டிய பலமும் கருவிகளும் கொடுத்து உதவியிருக்கின்றனர். அப்புலிக்குக் கை, கால், நகம், பல் முதலிய ஆயுதங்களிருக்கின்றன. மனிதனுக்கும் அவ்வித ஆயுதங்களை அமைத்திருக்கின்றார் பகவான். அதற்கு தேக வன்மை அதிகமாய்க் கொடுத்திருந்தால் இவனுக்குப் புத்தி வன்மை அதிகமாய்க் கொடுத்திருக்கின்றனர். அவ்வாறிருக்க மானுடன் மட்டும் அப்புலியைத்தாக்குங்கால் ஆயுத முதலிய உபகரணங்களை அதிகரித்துக்கொண்டு அதை மேற்கொள்ள வகை தேடுவது நியாயமா? உண்மையான பலசாலியாயிருந்தால் நிராயுதமாய் அப்புலியைத் தாக்குவதே உத்தமம். அவ்வாறு முடியாதவர்கள் வீண் வீரங்கூறுவதிற் பயனென்னும். தர்மயுத்தத்தின் தன்மையையறிந்தவர் நிராயுதமாகவே அதனைத்தாக்க வேண்டியது. இல்லாவிடில் வீரம் பேசாது பின் வாங்கி வாய் புதை

த்து நிற்க வேண்டியது" என்று கம்பீரமாய்ச் சொன்னான். இதைக் கேட்ட சலிமுக்குப் பெருமகிழ்வுண்டானாலும் அங்கீகாரம் பண்ணாததுபோல் பாசாங்கு பண்ணினான். "நாம் நெடு நாள் நினைத்தகாரியம் இன்று நிறைவேறிவிடும். ஷியர்ஆப்கன் புலிக்கிரையாவது நிச்சயம். நம்மனோபீஷ்டம் இன்று நிறைவேறிவிட்டது. ஜகஜோதி நம் கைவசமாவதிற்றடையில்லை. எல்லாம் சிறிது நேரத்தில் தெரிகிறது. ஏன் அதற்குள் ஆத்திரப்படவேண்டும்' என்று தன்னுள் சிந்தித்துக்கொண்டு பிறகு ஷியர் ஆப்கனைப் பார்த்து 'நிராயுதமாய்ப் போய்த்தாக்குதல் அபாயத்துக்கிடமாம். ஏதாவது இரண்டொரு ஆயுதமாவது எடுத்துப்போதலே நலமெனத்தோற்றுகிறது' என்றான்.

நம் ஷியர்ஆப்கன் 'அது வீரத்தன்மையன்று இதோ க்ஷணப்பொழுதில் எல்லாவற்றையும் தாங்கள் பிரத்தியக்ஷமாய் காணப் போகிறீர்கள்' என்று சொல்லி தான் ஏறிவந்த குதிரையை விட்டுக் குதித்துக் கர்ச்சித்து கம்பீரநடையுடன் புலி படுத்திருந்த மரத்தினிடம் சென்றான். அவன் வரும் கம்பீர நடையையும் பெருந்தன்மையையும் மனோதிடத்தையும் அறிந்து அப்புலி தன் தைரியமெல்லாம் இழந்து மரத்தோடு மரம் ஒடுங்கிப் பதுங்கிக்கொண்டது. அவன் கிட்டப் போனவுடன் அதற்குள்ள சுபாவத்தின்படி தலையை கோணவைத்துக் கொண்டு கண்களைச் சாய்த்துச் சிறிது உறுமிற்று அவன் சீறினான் அது சும்மா இருந்தது.

உடனே அவன் அதன் பின்புறம்போய் வாலைப்பிடித்திழுத்தான். அப்பொழுதும் அது எழுந்துபாயவில்லை. தன் இடதுகாலால் அதன் விலாப்புறத்தில் ஒரு உதை கொடுத்தான். முதல் உதையை லட்சியம் பண்ணவில்லை. பின் பலமான மற்றொரு உதை கொடுக்கவே ஆவேசத்துடன் எழுந்து நின்று உறுமிப்பின் கீழே படுத்துவிட்டது.

[இன்னும்வரும்.]

எஸ். சாமிநாதையர்.

மேனாட்டுக் கலைஞானம்.

[தொடர்ச்சி.]

19. நிறையின் காரணம், சக்தி.

பொருள்கள் ஒன்று ஒன்றை வலிக்கின்றனவென்பது மாத்திரம் நாம் காண்கின்றோம். வலிக்கிறதென்றாலும், கவர்கிறதென்றாலும் ஒன்றே. அவைகள் கவர்கிறதைக்கண்டு எப்படி அவைகள் கவர்கின்றன அதாவது எவ்விதமாய் ஒன்றை நோக்கி மற்றொன்று செல்லுகின்றது என்றும், என்ன வேகமாய்ச் செல்லுகின்றதென்றும் நாம் அறியலாம். ஏன் அவைகள் அப்படிக் கிட்டிச் செல்லுகின்றனவென்று நாமறிய முடியாது. திண்மைக்கவர்ச்சி விதி (Law of gravitation) யின் நிமித்தம் பொருள்கள் கீழே விழுவதில்லை. இவ்விதியானது பொருள்கள் எப்படிக் கிட்டுகின்றனவென்பதைச் சொல்லும் கட்டுரையேயன்றி ஏன் பொருள்கள் கிட்டுகின்றன நிறையுடைத்தாயிருக்கின்றனவென்று காரணம் விளக்குகிறதில்லை.

திண்மைக்கவர்ச்சியென்பது ஒரு சக்தியென்று சாதாரணமாய்க் கூறுகிறார்கள். சக்தி என்றால் என்ன? ஒருவன் ஒரு பொருளைத் தள்ளியாவது இழுத்தாவது அதை ஒரு இடத்தை விட்டு வேறு இடத்திற்கு நகரும்படி செய்தாவது அல்லது அப்பொருள் அமுங்கும்படியாவது நெருங்கும்படியாவது அழுத்தினாலும் அவன் தன் சக்தியைச் செலுத்துகிறான் என்று சொல்லுகிறோம். ஒரு மல்லயுத்தனுடைய சக்தியானது அவன் பிடிக்கும் பிடிப்பினால் தெரிகிறது. பந்து விளையாடுவோனுடைய சக்தியானது அவன் வீசும் பந்து ஓடும் வேகத்தினால் தெரிகிறது. எப்பொருளையாவது இயங்கும்படி அதாவது இடம்விட்டு வேறு இடம் பெயருமபடியாவது அப்படிச் செய்ய ஏதுவாயாவது இருப்பதற்குச் சக்தி யென்று பெயர். ஒரு பொருள் வேறு ஒரு பொருள்மேல் வைத்தால் மேலிருக்கும் பொருள் அடியிலிருக்கும் பொருளை அழுத்துகின்றது.

இதைத் தாங்கிக்கொள்ள ஆதாரம் இல்லாவிடில் அது இயங்கும். மேலிருக்கும் பொருள் அடியிலுள்ள பொருளுக்கு அமுக்கம் அல்லது தாக்கம் கொடுக்கிறது என்று சொல்லுவார்கள். இந்த அமுக்கமும் சக்தி தான். ஆகையால் திண்மைக் கவர்ச்சியானது ஒரு சக்தி யென்பதன் அருத்தம் என்னவென்றால கனமுள்ள பொருள்களை நாம் தாங்கினால் நாம் உணரும் அமுக்கத்திற்கும் தடையொன்றுமில்லாவிடில் அப்பொருள்கள் பூமி மையத்தை நாடிச் செல்லும்படி செய்வதற்கும் காரணமாயிருப்பதென்பதே.

திண்மைக்கவர்ச்சி யென்பது அண்டங்களிலுள்ள சகல பொருள்களுக்கும் உள்ள இந்த உண்மைக்குப் பொதுவான பெயர். நாம் வசிக்கும இந்தப் பூலோகத்திலுள்ள பொருள்களைப் பற்றிப் பேசும்பொழுது இந்த உண்மைக்கு நிறை என்று சொல்லுகிறோம். இப்படி இயக்கங்கள் அமுக்கங்கள் உண்டாவதற்கு நமக்குத் தெரியாமல் சூக்ஷமமாயிருக்கும் காரணத்திற்குச் சக்தி யென்று சொல்லுகிறோம்.

20. நீரின் நிறை அதன் காத்திரத்திற்கு ஏற்றது.

வெறுங்கிண்ணத்தைப் பார்க்கிலும் நீர் உள்ள கிண்ணம் கனமாயிருக்கின்றது. ஏனென்றால் நாம் இவைகளைத் தூக்கினால் முன்னதைப்பார்க்கிலும் பின்னது அதிக பிரயாசம் கொடுக்கின்றது. கிண்ணத்தில் நீர் அதிகமாக ஆக தூக்குவதில் பிரயாசம் அதிகமாகின்றது. ஒருசெம்பு நீர் இன்னும் அதிகப் பிரயாசம் கொடுக்கின்றது. ஒருகுடம் இன்னும் அதிகமான பிரயாசம் கொடுக்கின்றது. ஒரு அண்டாவில் நிறைய நீர் இருந்தால் அதை அசைப்பதுவுங்கூட கஷ்டமாயிருக்கும். வெறும் அண்டாவை மிகவும் இலேசாகத் தூக்கிவிடலாம். ஆகையால் நீரின் மொத்தம் அதிகமாக ஆக அதன்கனமும் அதிகமாகின்றது. அதன் மொத்தம் குறையக்குறைய அதின் கனமுங்குறைகின்றது. ஆனால் ஒருதுளி நீரை நமது உள்ளங் கையில் வைத்துப் பார்த்தால் அதற்குக்கனமே யில்லைபோல் காணுகிறது. ஆனபோதிலும் அது தடையின்றி கீழே சரே

லென்று விழுகிறபடியால் அதற்கு நிறையிருக்கவேண்டும். மேலும் கிண்ணத்திலுள்ள நீர் பலதுளிகள் சேர்ந்தது. ஆயிரம்துளிகள் சேர்ந்தால ஒருசிறிய கிண்ணத்தை நிறைத்துவிடும். ஆயிரம்துளிகள் சேர்ந்த ஒருகிண்ண நீருக்கு இடையிருந்தால் ஒருதுளிக்கு அந்த இடையின் ஆயிரத்தில் ஒருகூறு இருக்க வேண்டுமல்லவா? கையில் தூக்கிப்பார்க்கும்பொழுது ஒரு துளிக்கு நிறையில்லாததுபோ லிருப்பதற்குக் காரணம் நமது கை சிறுபொருள்களைத் தூக்குவதால் உண்டாகும் பிரயாசத்தை நமக்குத்திட்டமாய் அறிவிக்கிறதில்லை. ஆகையினால் கைத்தூக்கத்தினால பொருள்களின் நிறை உத்தேசமாகத் தெரியலாமேயன்றித் திட்டமாகத் தெரியமுடியாது. சகலவிதமான பொருள்களின் நிறைகளையும் திட்டமாய்த்தெரிவதற்கு நிறைகளைச்சரியாய் அளப்பதற்காக இயற்றியிருக்கும் ஒரு கருவியை நாம் அனுசரித்துக்கொள்ளல் வேண்டும். அக்கருவியின் இலக்கணத்தைப் பின்கூறுவாம்.

இன்னும்வரும்

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

" அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கோளல். "

1844ம் வருஷம் அவள்தகப்பனார் அவளைத் தம்முடன் தேச சஞ்சாரஞ்செய்ய கூட்டிக்கொண்டு போயினர். இப்பொழுது அவள் 14 வயதுப்பெண். இப்பொழுது கூட அவளை வைத்து நடத்துவது பிரயாசையாயிருந்தது. பாரிஸ் நகருக்கும் லண்டனுக்கும் போனார்கள். லண்டனுக்குப்போனதின் ஒரு காரணம என்னவெனில் அவளுக்கு இயற்கையாகவே சங்கீதத்தில் பிரியமிருந்ததாகத் தெரிந்தபடியால் அவ்வித்தையை அவளுக்குப் பயிற்றுவிக்கவேண்டு மென்பதேயாம். இங்கி

லாந்தில் இருக்கும்பொழுது பாத் என்னும் நகரத்தில் ஒரு வாரம் தங்கினார்கள் · இவ்விடத்தில் இவளுக்கும் இவள் தகப்பனுருக்கும் ஒரு சச்சரவு உண்டாயிற்று. குதிரையின்மேல் ஆண் பிள்ளைகள் சவாரி செய்வதுபோல் சவாரிசெய்யவேண்டுமென்றனள். இவள் தகப்பனார் அது வழக்கத்துக்கும் நாகரீகத்திற்கும் ஒழுக்கத்திற்கும் மாறுபாடானதினால் கூடாதென்றனர். இந்தச்சண்டை பெருங்கூத்தாயிருந்தது. திரும்பி அவளை அவ்ள தகப்பனார் கூட்டிவந்து விட்டனர்.

மணம்.

அவளுக்குப்பதினேழுவயதானபொழுது அனேகர் அவளை மணம்புரிய விரும்பியிருந்தார்கள். யௌவனமாப்பிள்ளைகளையெல்லாம் தள்ளிவிட்டாள். அவளைக்கேட்டுவந்த மிகவும் சிறந்த மாப்பிள்ளைகளுக் கெல்லாம் அவள்நடந்துகொண்ட விதமானது பொறுக்கக்கூடாததாயிருந்தது. ஆகையால் எல்லோரும்வந்து சும்மாபோயினா. கலியாணம் செய்துகொள்ள வேண்டுமோ அலலது வேண்டாமோவென்ற விசாரமே அவளுக்கில்லை. ஒருநாள் அவளுடைய செவிலி அவளைநோக்கி "உன்னைமணம்புரிய விரும்பிவரும் தகுந்த யௌவன புருஷர்களையெல்லாம் உன்னுடைய மூர்க்கநடையினாலும் ஒருவர் கட்டுக்குள்ளடங்காக்குணத்தினாலும் வெறுத்து ஓடும்படி செய்கிறாய். இனி உன்னை மணமுடிக்க வருவர் யார்? எதோ இனி உன்னை விவாகஞ்செய்ய விரும்பி வரக்கூடிய ஒரு மனிதனைக்காட்டிப்போடு பார்ப்போம்" என்று அறைகூவி இன்னும் அவளை உறுத்தி இடிக்கும்படி அவள் அறுபது வயதுக்கு மேற்பட்ட கிழவனாகிய ஜெனரல் ப்ளவாட்ஸ்கி (General Blavatskey) என்னும் பிரபுவைச் சுட்டி "நீ குரூபி அந்தங்கெட்டவன் சிறகிழந்த அண்டங்காக்கை யென்று கண்டபோதெல்லாம் சொல்லிச் சிரிக்கும் அந்தக்கிழவன் கூட உன்னைக்கட்டமாட்டான்போ" வென்று இகழ்ந்து இடித்துச் சொல்லினாள். இப்படிச் செவிலி கூறிய மூன்று தினங்களுக்குள் ஹெலெநாம்பாள் அந்த ஜெனரல்ப்ளவாட்ஸ்கி தன்னை வந்து விவாகஞ்செய்து கொள்ளுமாறு கெஞ்சும்படி செய்துவிட்டாள். விளையாட்டில் இப்படி அவள் செய்தது வினையாய் முடிந்தது. ரஷ்ஷியா தேச வழக்கப்படி ஒருவன் கேட்டுத் தானும் சம்மதித்து விட்டால் கலியாணம் செய்தே தீரவேண்டும். தட்டப்படாது. சட்டமுமப்படியே. அவளுக்குத் திகில் பிடித்துக்கொண்டது. கலியாணம் நிச்சயமாய்விட்டது. கோவிலுக்குக் கலியாணத்திற்காக அழைத்துக்கொண்டுபோகப்பட்டாள். ஜெனரல் ப்ளவாட்ஸ்கி மணக்கோலத்துடன் கோவிலுக்குவந்தார். கோவில் குருக்கள் விவாகசடங்கை நடத்தி வழக்கம்போல் கடைசியாக ஹெலெநாம்பாளை நோக்கி "உனது புருஷனை உபசரித்து அவருக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து நடத்தல்வேண்டும்" என்றவுடனே அவளது இளமுகம் கடுஞ்சினத்தினால் இரத்தம் பொங்கினதுபோல் செவந்து பின்னால் சாமூஞ்சிபோல் வெளுத்து விட்டது. அவளும் பல்லைக்கடித்துக்கொண்டு "உண்மையாகவே நான் மாட்டேன்" என்று பதில் அளித்தனள். உண்மையாகவே அவள் சொன்னபடியே செய்தாள். உடனே ஜெனரல் ப்ளவாட்ஸ்கி அவளை மனையாட்டியென்று வாயினால் சும்மா அழைப்பதற்கும் கூட சந்தர்ப்பங்கொடாமல் அவரைவிட்டு ஓடி ஒளித்தனள். மேனாட்டு வழக்கம் புருஷன் பெயர் பெண்களுக்குக் கலியாணமானபின் வைத்தழைப்பதானபடியால் நமது ஹெலெநாம்பாள் அம்மணிக்கு இப்பால் ப்ளவாட்ஸ்கி அம்மணி யென்று பெயர் வந்தது. ஆனால் இப்பெயரால் இவளையழைப்பது இவட்குப்பிரியமில்லாமலே யிருந்தது. ஹெலெநாம்பாள் என்று எல்லோரும் சொல்வதில்தான் விருப்பம்.

இப்படிப் பதினேழாவது வயதில் கலியாணம் ஆகியும் ஆகாமலிருக்கும் பொழுது தன் தேசத்தைத் துறந்து சென்று பத்து வருஷம் மத்திய ஆசியாவிலும் இந்தியாவிலும் தென்னமரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் மூலை முடங்குகளெல்லாம் சென்று சஞ்சரித்தனள்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

[தொடர்ச்சி.]

I. திண்பூதவுடல்

ஒவ்வொரு க்ஷணமும் திண்பூதவுடலினின்றும் அணுக்கள் அல்லது புழுக்கள் உதிர்ந்துகொண்டேயிருக்கின்றனவென்று முன் நாம் சொன்னோம். அவைகள் உதிரும் விதப்படியே உதிர்ந்துகொண்டு வேறு நூதன அணுக்கள் வந்து சேராமலிருக்குமானால் இவ்வுடலிலுள்ள அணுக்கள் எல்லாம் உதிர்ந்து போவதற்கு ஏழு வருஷங்கள் செல்லும் என மேனாட்டுக் கலைஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகையால் அசுத்த ஆகாரங்களால் கட்டப்பட்ட வுடலானது சுத்தமாகவேண்டுமானால் அசுத்தவுணவை முற்றும்நீக்கிச் சுத்தபோஜனமாய் ஏழுவருஷம் புசித்துக்கொண்டுவரல்வேண்டும். அப்பொழுது இத்தேகத்திலுள்ள அசுத்த அணுக்கள் எல்லாம்போய்ச் சுத்த அணுக்களாகவிருக்கும். நமது பெரியோர்கள் தேகசுத்தம் மனச்சுத்தம் எல்லாவற்றிற்கும் சேர்த்து பனிரெண்டுவருஷம் வேண்டியிருக்கிறதென்று, தான் உபதேசம்பெறுவதற்குமுன் பனிரெண்டுவருஷம் குருகுலவாசம்பண்ணும்படியாய் விதித்திருக்கிறார்கள். இதனாற்றான் ஞானநூல்கள் எல்லாம் "பனிரெண்டுவருஷங் காத்திரு" வென்று கூறும். தீபமேற்றி வெளிச்சமுண்டுபண்ண வேண்டுமானால் தகழி, திரி, எண்ணெய் மூன்றும் சுத்தமாயிருக்கவேண்டும். அப்பொழுது சுடரைத் திரியினிடம் காண்பித்தவுடன் திரி பற்றிக்கொண்டு தெளிவாய் எரிந்து பிரகாசிக்கும். அப்படியின்றித் தகழி விளக்கப்படாமல் களிம்பேறியும் எண்ணெய் தூசி நிறைந்தும் திரி அழுக்குப்படிந்தும் இருந்தால் சுடரை நெடுநேரம் திரியினிடம் காட்டவேண்டும். திரியில் பற்றினும் மங்கி மங்கி எரிந்து சற்றுநேரத்திற்கெல்லாம் சுடர்கெட்டுப்போய்விடும். இதுபோல் எல்லாதேகங்களும் சுத்தமானபிறகு குரு உபதேசித்தால்தான் ஆத்துமப்பிரகாசம் மங்காமல் மேலும் மேலும் ஓங்கும்.

இந்ததேகம் சுபாவத்தில் சுத்தமாவதற்கு ஏழுவருஷம் சென்றாலும் சில மூலிகைகளாலும் ஔஷதங்களாலும் தேகத்தின் அணுக்கள் மிகவும் துரிதமாய் உதிர்ந்து போம்படி செய்யலாம். இதற்குக் கற்பம் சாதித்தல் என்று பெயர். குருவானவர் தன்னையடைந்த சிஷ்யன் மிருந்த பரிபக்குவமுள்ளான் என்று கண்டால் அப்பொழுது அவனுக்குச் சில கற்பங்கள் உள்ளே கொள்ளும்படி கொடுத்து தேகத்தை விரைவில் சுத்தம் செய்து விடுவார்கள். கற்பங்களினால் ஆறுமாதத்திலும் ஒரு வருஷத்திலும் தேகம் பூரணமாய்ச் சுத்தியாய் விடும். கற்பஞ்சாதித்துச் சட்டை கழட்டல் என்பது இது தான்.

II. நுண்பூதவுடல்.

இவ்வுடலுக்கிட்டிருக்கும் பெயரினாலேயே இந்தத்தேகத்தைக்கட்டும் அணுக்கள் மேல் நான்கு நிலைகளைச் சேர்ந்தனவென்று விளங்கும். இத்தேகம் திண்பூதவுடலின் உருவம் என்னவோ அந்த உருவம் தான் இந்த நுண்பூதவுடலும். நமது ஐம்புலன்களுக்கும் தெரியாமல் சூக்ஷமமாயிருக்கும் மேல் நான்கு நிலைகளாகிய ஆகாசங்கள் அல்லது ஈதர்கள் நிலையிலுள்ள தத்துவத்தால் ஆகியது இந்த சரீரம் ஆயினும் பிருதிவிதத்துவத்தைச் சேர்ந்ததே. அதாவது திண்பூதவுடலைக்கட்டும் கீழ் மூன்று நிலைப்பிருதிவிதத்துவத்தை நீக்கி மேல் நான்கு நிலைப்பிருதிவிதத்துவத்தினால் கட்டப்பட்டது நுண்பூதவுடல். இங்கிலீஷில் இந்தவுடலை "ஈதரிக் டபில்" (Etheric Double) என்பார்கள். இதன்பொருள் ஈதர்நிலைத் தத்துவத்தினாலாய சாயல் அல்லது நகல் அல்லது பிரதி என்பதே. இவ்வுடல் திண்பூதவுடலை ஒட்டியிருக்கின்றது. ஆயினும் அதினின்றும் வேறாய்ப் பிரியக்கூடியது. ஆனாலும் இது திண்பூதவுடலைவிட்டு வெகுதூரம் செல்லமாட்டாது. அதை ஒட்டியும் அடுத்துமே யிருக்கும். நோயின்றிச் சுகமான சரீரம்பொருந்திய சாதாரண மனிதர்களில் திண்பூதவுடலும் நுண்பூதவுடலும் பிரிதல் மிகவும் கடினம். ஆனால் பேய்பிடித்தோர் என்றும், பேய்கொண்டோர் என்றும் பேயுருக்கொண்டோர் என்றும் பேயுறைந்தோர் என்றும் காற்று சங்கைகொண்டோர் என்றும் பலவிதமாய்த் தமிழிலும் * இங்கிலீஷில் இக்காலத்திற் "மீடியங்களா" (Mediums)

* கிறிஸ்து மதசித்தாந்தப்படி 1846 வருஷத்தில் அமெரிக்காதேசத்தில் வாக்ஸ் (Fox) என்பவன் குடும்பத்தில் முதல் ஒரு விநோதம் நடந்தது. வீட்டில் எங்கும் பட பட வென்று தட்டும்படியான சத்தம் உண்டாகிக்கொண்டிருந்தது. இந்த சத்தம் எப்படி, யாரால் உண்டாகின்றது என்று தெரியக்கூடவில்லை. சிலகாலத்திற்குப்பின் இந்த சத்தத்திற்குக் காரணம் அறிவுள்ள ஒரு சீவன் என்றும் நாம் எபப்டி எப்படி சத்தம் உண்டாக வேண்டுமென்று எண்ணினோமோ அவ்விதமாகவும் சத்தங்கள் அந்த சீவன் பிறப்பிக்கும் என்றும் கண்டுபிடித்து இத்தனை தட்டுக்கு இன்னவெழுத்து என்று ஒரு குறி ஏற்படுத்திக் கொண்டு கண்களுக்குத் தெரியாமலிருக்கும் அந்தச் சீவன் கொஞ்சகாலத்திற்கு முன் கொலையுண்ட ஒரு சிறு வியாபாரி என்று தெரிந்தது. பின்னால் சாதாரணமாய் இறந்துபோன பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொண்டு சம்பாஷிக்கக் கூடும் என்றும் அது ஒரு விதமான கட்டுப்பாடுடைய தேகம் உள்ளவர்களால் கூடும்என்றும் ஒரு கொள்கை பிறந்து இப்பொழுது அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இப்படிப்பட்ட தேகமுள்ளவர்கள் பலர் கிளம்பி அனேகவிதமான தோற்றங்களைக் காண்பிக்கின்றார்கள். இவர்களுக்கு மீடியங்கள் (Mediums) என்று

என்றும் சொல்லும் மனிதர்களில், இந்த நுண்பூதவுடலானது பிரயத்தனமன்றிக் கழன்று வெளிவருகின்றது. திண்பூதவுடலினின்றும் பிரிந்து

பெயர். மீடியம் என்றால் ஏது அல்லது உபகரணமென்று பொருள். இவர்கள்மூலமாய் இறந்துபோனவர்களுடைய உயிர்கள் மற்ற ஜனங்களுடன் சம்பாஷிக்கவும் உலகத்தில் மற்றவர்கள் பார்க்கும்படியாய் அனேக விநோதங்கள் காட்டவுமாயிருக்கிறபடியால் அவர்களுக்கு மீடியம் என்று பெயர் வந்தது. இவ்விதமாகிய ஜனங்கள் பெரும்பாலும் ஸ்திரீகளாயிருக்கிறார்கள். ஆண்பாலாரும் சிலருண்டு. நாம் காற்றுசங்கை கொண்டவர்கள் என்றும் பேய்பிடித்தவர்கள் பிரமராக்ஷசி பிடித்தவர்கள் என்றும் சொல்லும் ஜனங்களும் இப்படிப்பட்டவர்களே. இவர்கள் மூலமாய் இறந்தவர்களிடமிருந்து பலவிதமான கேள்விகளுக்கு விடைபெற்று அதன்மேல் ஒருவிதமான மதக்கொள்கையும் உண்டாயிற்று இம்மதக்கொள்கைக்கு "ஸ்பிரிசுவலிஸம்" (Spiritualism) என்றும் இம் மதத்தையனுசரித்தோர்க்கு "ஸ்பிரிசுவலிஸ்டு" E (Spiritualists) என்றும் பெயர். இப்பதங்களுக்குச்சொல்லருத்தம் என்னவென்றால் பரலோகத்திலுள்ள உயிர்களுடன் சம்பாஷிக்கக்கூடும் என்று சித்தாந்திக்கும் மதம்என்றும் அப்படிசித்தாந்திப்போர் என்றுமாம். தமிழில் இந்த சித்தாந்தத்தைப்பரமியம் என்றும் சித்தாந்திகளைப்பரமியர் என்றும் இனியழைப்பாம். மீடியம் என்பதைத்தமிழில் அப்படியே மீடியம்என்றும் அல்லது உபகரணி யென்றும் கூறுவாம், உபகரணியை வைத்துக்கொண்டு பரமியர் கூடிக் கேள்விகள் கேட்பதற்கும் விநோதங்கள் உண்டாவதைப்பார்க்கவும் கூடி உட்காருதலுக்கு "ஸெயான்ஸ்" (Seance) என்று பெயர். ஸெயான்ஸ் என்பதற்கு உட்காருதல்கொலு வென்று அருத்தம். தமிழில் இதற்குப் பரமியகொலு வென்றும் இப்படிக்கூடுமிடத்திற்கு பரமியகொலுமண்டபம் என்றும் சொல்லுவாம். ஸெயான்ஸ்களில் அரூப உயிர்கள் மீடியங்களில் ஆவேசித்துப் பேசுவதும் விநோதங்கள் உண்டாக்குவதுமன்றி சில காலங்களில் மீடியங்களைவிட்டு விலகித் தனியாய் ரூபமெடுத்துக்கொண்டு பார்க்கும் பலருக்கும் தோன்றுகின்றன. அப்பொழுது உயிர்கள் உருவெடுத்தன வென்றும் உருவாகின வென்றும் உருபிகரித்தன வென்றும் விக்கிரகமாயின வென்றும் விக்கிரகித்தன வென்றும் சொல்லலாம். இங்கிலீஷில் "மெடீரியலைஸிங்" (Matiralısing) என்று சொல்லுகிறார்கள் இச்செயலை.

நிற்கும் பொழுது இவ்வுடலானது † தெளிநோக்கர்களுக்குத் திண்பூதவுடலின் சரியான நகல் அல்லது பிரதியாகவும் அவ்வுடலுடன் மிகவும் மெல்லிய நுண்மையான நூலிழையால் இணைந்திருப்பதாயும் தெரிகின்றது. இவ்விரண்டு தேகங்களுக்கும் உள்ள சம்பந்தம் மிகவும் நெருங்கியது. நுண்பூதவுடலில் ஏதாயினும் ஒருவடுச்செய்தால் அது திண்பூதவுடலிலும் காயமாகத் தோன்றும்படி அவ்வளவு அந்நியோந்நியமான சம்பந்தம் இரண்டுக்கும் உளது. அதாவது நுண்பூதவுடலுக்குச் செய்த கெடுதி திண்பூதவுடலிலும் தாக்கும். இப்படித்தாக்குவது கலைஞர்கள் எதிர்த்தாக்கம் அல்லது உதைப்பு என்று சொல்லும் விதத்தினால் உண்டாகின்றது. இந்தமாதிரி நிகழ்ந்ததற்கு அநேக திருஷ்டாந்தங்கள் அனுபவத்தில் உள. அடால்வேடி ஆஷியர் (Adolphe D' Assier) என்னும் நாமந்தரித்த பிரபல கலைஞர் ஒருவர் சூக்ஷ்ம சரீரங்கள் உளவா இறந்த பின் மனிதன் உளனுவென்னும் விஷயங்களை அனுபவமாய்க்காணவேண்டித் தீர்க்

† தெளிநோக்கர்-தெளிவான பார்வையுடையவர் அல்லது சூக்ஷ்மக்கண் திறக்கப்பட்டவர் ஞானக்கண் திறக்கப்பட்டவர். இங்கிலீஷில் (Clair Voyants) என்று சொல்லுவார். இவர்கள் தூரதேசத்தில் நடக்கும் சங்கதிகளையும் ஊனக்கண்களுக்குத் தெரியாமல் மறைவான இடங்களிலிருக்கும் பொருள்களையும் மனதில் நிகழும் சங்கதிகளையும் அறியவும் பார்க்கவும் கூடும். இந்தச்சக்தி யோகாப்பியாசத்தினால் சாதாரண மனிதர்களுக்கு உண்டாகின்றது. சிலருக்குப் பூர்வ ஜன்மங்களில் செய்து விட்டகுறை அப்பியாசங்களினால் இப்பொழுது சுபாவமாக சிறு வயது முதல் இந்தச் சக்தியிருக்கின்றது இவர்களைப் பிறவித்தெளி நோக்கர் என்பர். இந்தப் பார்வைக்குத் தெளிநோக்கு என்று பெயர். இங்கிலீஷில் "க்ளேர் வாயன்ஸ்" (Clair Voyance) என்பர். திண்பூதவுடல் நீங்க மற்ற உடல்களின் கண்கள் திறந்து சூக்ஷ்ம உலகங்களையும் தேகங்களையும் பொருள்களையும் பார்க்கும் சக்திக்குப் பொதுவாய்த் தெளிநோக்கு என்றும் சூக்ஷ்ம நோக்கு என்றும் பெயர். காரண சரீரத்திற்கும் அதற்கு மேற்பட்ட சரீரங்களுக்கும் உள்ளபார்வையால் பார்த்தற்கு ஞானப்பார்வை ஞான நோக்கு ஞானக்கண் என்றுபெயர். மனோமயகோசத்தின் கண்களால் பார்த்தற்கு மனக்கண் பார்வை யென்று பெயர். ஒரு சரீரத்தின் கண்ணால் அந்தச் சரீரத்தையும் அதற்குக் கீழ்ப்பட்ட சரீரங்களையும் தத்துவங்களையும் பார்க்கக் கூடுமேயல்லாது அதற்கு மேலான சரீரங்களையும் தத்துவங்களையும் பார்க்க முடியாது. நுண்பூதவுடலின் கண்ணால் நுண்பூதவுடலையும் அதற்குக்கீழ்ப்பட்ட திண்பூதவுடலையும் இவ்வுடல்களுக்குப் பொருந்திய தத்துவங்களையும் காணலாம். மேலான காமவுடல் மனவுடல் முதலிய தேகங்களைக்காணலாகாது. ஞானக்கண்ணால் எல்லா தேகங்களையும் தத்துவங்களையும் காணலாம்.

கமாய் ஆராய்ச்சி செய்து தான் கண்ட அனுபவங்களை 'இறந்தபின் வெளிவந்த மனிதர்' (Posthumdus Humavity) என்று பெயர் கொடுத்து ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் நுண்பூதச்சாயல் தேகத்திற்குச் செய்த கெடுதி திண்பூதவுடலுக்குத் தாக்கின திருஷ்டாந்தங்கள் இரண்டு சொல்லுகிறார். அவையாவன.

1. ஹென்றி ஜோன்ஸ் (Henry Jones) என்பவனுடைய சிறு குமாரனாகிய ரிச்சர்ட் (Richard) என்பவன் ஜேன் ப்ரூக்ஸ் (Jane Brooks) என்னும் மாந்திரியமாது ஒருநாள் தொட்டு சினேகிதவாஞ்சையிற் செய்வது போல அவன் கையைப்பிடித்து அப்பால் அவன் உடம்பில் ஒரு பக்கத்தை நீவிவிட்டு அவனுக்கு ஒரு ஆப்பிள் பழம் கொடுத்தாள். அப்பையன் உடனே அப்பழத்தைக் கொண்டுபோய்ச் சமைத்துச் சாப்பிட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அவனுக்குக் கடினமான ஒரு வியாதி வந்து தொடர்ந்து கொண்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை இந்தப் பையன் மிகவும் வருத்தப் படுகையில் அவன் பக்கத்தில் அவன் தகப்பனும் கில்ஸன் (Gilson) என்னும் ஒரு சினேகிதனும் இருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். சுமார் மத்தியான நேரத்தில் அந்தப்பையன் திடீரென்று "அதோபார் ஜேன் ப்ரூக்ஸ் (Jane Brooks)," என்றான். அவர்கள் "எங்கே எங்கே" என்றார்கள். அதற்குப்பையன் விரலைச் சுட்டிக்காட்டி "அதோ சுவர் அருகில். அதோ விரலுக்கு நேராய் உங்களுக்குத்தெரியவில்லையா?" என்றான். இந்த மாந்திரியக்காரிக்குத் திண்பூதவுடலைத் தன் வீட்டில் விட்டு நுண்பூதவுடலில் வேறு இடங்களுக்குப் போகவும் சுவர்களுக்குள் புகுந்து செல்லவும் சக்தியிருந்தது. இந்தப்பையன் கண்ணுக்கு மாத்திரம் அவள் காணப்பட்டாள். மற்றவர்களுக்குத் தெரியவில்லை. ஆயினும் பையன் காட்டின பக்கம் கில்ஸன் (Gilson) குதித்தோடி ஒரு சத்தியினால் வீசினான். உடனே இந்தப் பையன் "அப்பா, ஜேன் (Jane) கையில் கில்ஸன் (Gilson) காயம் பண்ணிவிட்டான். அவள் உடம்பெல்லாம் இரத்தமாய் விட்டது" என்றான். க்ஷணத்தில் தகப்பனும் கில்ஸனும் போலீஸ் சேவகன் வீட்டிற்கு ஓடினார்கள். அந்தச் சேவகன் இவர்கள் சொன்னதை முழுவதும் சாவதானமாய்க் கேட்டு உடனே இவர்களுடன் குற்றஞ்சாற்றப்பட்ட ஜேன்ப்ரூக்ஸ் வீட்டிற்குச் சென்றான். அம்மூவரும் ஒன்றும் நிதானியாமல் சரேலென்று உள்ளே நுழைந்தார்கள். ஜேன் ஒரு நாற்காலியில் தன் ஒரு கையை மற்றொருகையால் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். சேவகன் "தாயே சுகமா?" வென்றான். அவள் "அவ்வளவு நன்றாயில்லை, ஐயா," வென்றுபதிலளித்தாள். சேவகன் "ஒரு கையை இன்னொரு கையினால் ஏன் மூடி மறைத்துக்கொண்டிருக்கிறாய்?"

அவள் "ஓ, நான் எப்பொழுதும் அப்படித்தான் இருக்கிற வழக்கம்' சேவகன் "அந்தக்கையில் ஏதோ வலி யிருக்கிறது போலும்" அவள் "இல்லை, சுத்தமாய் இல்லை." சேவகன் "அதில் என்னமோ இருக்கத்தான் வேண்டும், ஏதோ பார்க்கலாம்."

இப்படிச்சொல்லிக்கொண்டே அவள் தடுக்கத்தடுக்க அவள் கையைப் பிடித்துவிலக்கிப்பார்க்க முழுதும் இரத்தமயமாயிருந்தது. குழந்தை ரிச்சர்ட் சொன்னபடியே காயம் சரியாய் இருந்தது. அப்பொழுது அவள் "ஒரு பரும் ஊசிபட்டு இப்படி கோரமாய்க் கிழித்து விட்டது" என்று கதறினாள். இவ்விதமான தீய காரியங்கள் கொள்ளை கொள்ளையாய் இப்பாதகி செய்திருப்பதாகப்பின்னால் அநேக சாக்ஷிகள் கூறினார்கள். அதன்மேல் 1658 ம் வருஷம் மார்ச்சு மாதம் 16 ம் தேதியில் கோர்ட் (Court) என்று இப்பொழுது வழங்கும் நியாயஸ்தலத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை நடந்து அவள் தண்டனையடைந்தாள். உடனே குழந்தை ரிச்சர்ட் பட்டுக்கொண்டிருந்த பாடும் அவதியும் நின்று விட்டன. இந்தக் கேஸ் Case விசாரித்தவர்கள் ராபர்ட் ஹண்ட் (Robert Hunt), ஜான்க்யாரி (John Carry) என்னும் இரண்டு பிரபலமான ஜட்ஜிகள்.

2. ஜூலியானா காக்ஸ் (Jnliana Cox) என்பவள் எழுபது வயது சென்ற கிழவி. அவள் பிச்சைக்கு வீடு வீடாய்ப்போய் வரும்பொழுது ஒரு வீட்டில் ஒரு நாள் கதவைத்தட்டினபொழுது அந்த வீட்டு வேலைக்காரப் பெண் கதவைத்திறந்து கடுகடு சிடுசிடுவென்று முகங்காட்டி விரட்டினாள். அப்பொழுது கிழவி "நல்லது குழந்தாய் நல்லது இன்று சாயந்திரத்திற்குள் பார் தெரியும்" என்று சொல்லிக்கொண்டு போயினள். அன்றிரவே இந்தப்பெண்ணுக்கு மிகவும் பயங்கரமான வலிப்பும் இழுப்புங் கண்டன. துடி துடித்துக்கொண்டிருந்தாள். சற்று வலிப்பும் இழுப்பும் சுமாரான போது அவள் அந்த வீட்டுச் சனங்களை யெல்லாம் உதவிக்கு வரும்படி கூவி "பாருங்கள் பாருங்கள் இந்தச் சண்டாளப் பழிகாரி இந்தப் பிச்சைக்காரி என்னைத் துரத்திப்பிடிக்கிறாள்" என்று சொல்லிக்கொண்டே விரலைச் சுட்டிக் காட்டினாள். அங்கு மற்றவர்கள் கண்ணுக்கு ஒன்றுந்தெரியவில்லை. "அவளுக்கு ஏதோ பிரமை, பயித்தியமோ பேய்க்குணமோ உளறிப்பிதற்றுகிறாள்" என்று அவர்கள் போய் விட்டார்கள். ஆனால் அந்தப் பெண்ணுக்கு வலிப்பு வந்து கொண்டே யிருந்தது. முன் போலவே கூவிக்கொண்டிருப்பாள்.

ஒரு நாள் வலிப்புத்தொந்தரையும் சற்று நின்ற காலத்தில் அவளது நல் வேளையானது கத்தி யெடுத்துத் தயாராய் வைத்துக்கொண்டிருக்கும்படி

அவன் மனதில் தோன்றிற்று. வழக்கம் போல் ஜூலியானா காக்ஸ் (Juliana Cox) சாயா ரூபத்தில் தோன்றினாள். அப்பொழுது இந்தப்பெண் கையிலிருந்த கத்தியினால் மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் இவள் விரோதியாகிய அந்தப்பிச்சைக்காரியின் ரூபத்தின் மேல் வீசினாள். அவ்விடத்திலிருந்த ஜனங்கள் எல்லாம் பளிச்சென்று கத்தி மின்னினதையும் உடனே இந்தப்பெண் படுத்திருந்த படுக்கையின் மேல் இரத்தம் சிந்தினதையுங் கண்டார்கள். கத்தி அந்தப்பிச்சைக்காரியின் மாயா ரூபக் காலின் மேல் பட்டுக் காயமானதாக அந்தப்பெண் சொல்லி "வாருங்கள் போய்ப்பார்க்கலாம்" என்றாள். உடனே அவளும் சில ஜனங்களும் ஜூலியானா(Juliana) வீட்டுக்குப் போனார்கள். அவர்கள் போனதின் காரணம் என்னவெனில் உண்மையாய்க் காயம் தேகத்தில் பட்டிருக்கிறதாவென்று நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதே. வீட்டுக்கு வந்ததும் கதவைத் தட்டினார்கள். கதவு திறக்கவில்லை. கதவை உடைத்துத்திறந்து கொண்டு உள்ளே விரைவாய் நுழைந்தார்கள். ஜூலியானா காலில புதிதாய் அப்பொழுதுதான் கட்டு கட்டியிருந்தது. அவிழ்த்துப்பார்க்க அந்தப் பெண் சொன்னவிடத்திலேயே காயமிருந்தது. மேலும் அந்தக் காயம் கத்திக்கு ஒத்திருந்தது. ஆனால் இந்தப் பெண்ணுக்கு வலிப்பும் ஜூலியானாவின் சாயா ரூபம் வந்து தொந்தரை செய்வதும் நிற்கவில்லை. பின்னால் ஜூலியானாவைப் பிடித்துக் குற்றஞ் சாட்டினார்கள் கோர்ட்டில் விசாரணை நடந்து அவள் மேல் குற்றம் ருசுவாய் அவள் தண்டனையடைந்தாள். அப்பால் அப்பெண்ணின் வருத்தமும் நீங்கிற்று.

இவ்விரண்டும் இங்கிலாந்து கோர்டு ரிக்கார்டுகளிலிருந்து எடுத்து எழுதப்பட்டன.

சூனியம் செய்கிறவர்கள் இந்த நுண்பூதவுடலைத்தான் தாக்குகிறார்கள் சாதாரணமாய்த் திண்பூதவுடலினின்றும் நுண்பூதஉடல் பிரிந்தால் திண்பூதவுடலில் பிராணி களை மிகவும் குறைந்து இந்த குறைவுக்குத் தகுந்தபடி நுண்பூதவுடலில் ஜீவகளை அதிகப்படுகின்றது. கர்னல் ஆல்காட் (Colonel Olcott) மேலே சொன்ன இரண்டு திருஷ்டாந்தங்கள் எடுத்தெழுதி புஸ்தகத்தில் அடியில் வருமாறு குறிப்பு எழுதியிருக்கிறார்.

"நுண்பூதவுடலைப்பிதுக்கி வெளியே செலுத்தப் பழகித்தேர்ந்த சமர்த்தனுங்கூட, நுண்பூதவுடல் பிரிந்தபொழுது திண்பூதவுடல் ஒளிமங்கித் திமிர்த்தது போலும் மனம் அதிக ஆழ்ந்த சிந்தனையில் கவலைகொண்டது போலும், கண்ணொளி மயங்கிச் சீவனில்லாதது போலும், இரத்தாசயம் சுவாசாசயம் இவைகளின் செயல்கள் மிகத் தளர்ந்தும் மெலிந்தும் பெரும்

பான்மை தேகச்சூடு மிகக்குறைந்தும் இருக்கின்றன. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் திடீரென உரத்த சத்தம் செய்வதும் சரேலெனச் சந்தடியுடன் அந்த அறைக்குள் விரைந்து புகுவதும் மிகவும் அபாயம் விளைவிக்கும். ஏனெனில் இப்படிச் செய்யும்பொழுது சடிதியான எதிர்த்தாக்கத்தினால் நுண்பூதவுடல் திண்பூதவுடலுக்குள் அவசரமாய திடீரென நுழையப்போவதில், இரத்தாசயமாகிய இருதயமானது அதிர்ந்துகுலுங்கிக் குலுங்கித் திக்குத் திக்கென அடித்துக் கொள்ளுகின்றது அதனால் மரணமும் சம்பவிக்கக்கூடும்."

[தொடரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனோன்மனிபூஜைக்கு மதுமாமிசம் அவசியமா?

சென்ற பிப்பிரவரிமாதப் பானுவில் "குடியின்கேடு" என்னும் விஷயத்தில் கட்குடி நன்மையைத்தருவது என்று சாதிப்பவர்கள் கூறுங் காரணங்களில் சக்திபூஜை முதலிய தேவதாபூஜைகளுக்கு மது உபயோகமாகிறதென்பது ஒன்று என்று கூறி அப்பால் "பொய், கொலை, களவு, காமம், முதலிய மகாபாதகங்களோடு சாராயக்குடியையும் சேர்த்த சாஸ்திரம் தெய்வப்பிரார்த்தனைக்கு ஏற்படுத்தி யிருக்குமா? அல்லது அதற்குக் கொடிய தண்டனை ஏற்படுத்தி யிருக்குமா?" என்றவினவி கட்குடியர் கூறுங் காரணம் ஆதாரவற்றதென காட்டியிருக்கின்றது. ஆனால் உண்மையில் சில சாஸ்திரங்கள் அகிலமெல்லாம் ஈன்றருளிய அமலையாகிய எமதம்மையின் அருச்சனைக்கு மது மாங்கிஷம் வைத்து நிவேதனஞ்செய்தல் அவசியம் என உறுதியாய்க் கூறுகின்றன. உதாரணமாக வராகியமாலையில் 71-வது செய்யுள் முன்னிரண்டு அடிகளில்

"மதுமாங்கிஷானந்தி பாதா ரவிந்தத்தை மாலயனும்
மதுமாங்கிஷங்கொண்டுநாள்தோறும் போற்றி வணங்கி நிற்பார்"

என்றும், 72-வது செய்யுளில்

"மதுமாங்கிஷமன்றி வாராகி பூஜைக்கு வண்மையில்லை
மதுமாங்கிஷமென்று மத்திமம் பேசுவர் மாமறையோர்
மதுமாங்கிஷம் விட்டு மாலயன் தேவரும் வாழ்வதில்லை
மதுமாங்கிஷங்கொண்டு நாள்தோறும் போற்றி வணங்குவரே."

என்றும், 73-வது செய்யுளில

"மாதங்கி பூஜையை ஆகாதெனச்சொல்லு மாந்தரெல்லாம்
பாதங்கி ஆகிப் பீளா நரகில் பதை பதைத்துப்
பேதங்கமாகிப் பின் கைகால் குறைந்து பெருமை கெட்டு
வாதங்கமாகி விழுவார் நரகில் வருந்துவரே."

என்றும் கூறியிருக்கின்றது. இப்பாக்களினால் மதுமாங்கிஷம் மஹேஸ்வரியின் பூஜைக்கு இன்றியமையாதது எனத் தெளிவாய் விளங்குகின்றது. சித்தர்கள் நூல்களிலும் சக்தி பூஜைக்கு மதுமாங்கிஷம் வைத்து நிவேதித்தலைப்புகழ்ந்து கூறியிருக்கின்றது. இப்படிப்பட்ட சாஸ்திரங்களின் ஆதரவு கொண்டே குடி விரும்பிய குடிகேடர்கள் தேவி பூஜைக்கு சுராபானமும் மாங்கிஷ பக்ஷணமும் அவசியம் என்றும் அவையில்லாவிடில் தேவி பிரசன்னமாகாள் நற்கதி கூட்டாள் என்றும் நுட்பமதியில்லாத பேதைகள் பலருக்கும் போதித்துத் தங்கள் கெட்டது மல்லாமல் அவர்களையும் படுகுழியில் விழும்படி செய்கின்றார்கள். சற்று புத்தியை யூன்றி விசாரித்தாலோ அன்பர் அறிவில் அமர்ந்து நின்று அருள் ஆனந்த ஆடல் புரியும் அமல அம்பிகைதானோ மதியை மாய்க்கும் மதுவை மனமகிழ்ந்து மேவுவள்? ‡ஆலையாகிய ‡மூலம் அருந்தி அகத்திலிருந்து அறிவை யோட்டும் ‡அஞ்ஞனது †அஞ்சனம் அடர்ந்து ஆபாச மிகுந்த உளத்தில் நின்று தாண்டவம் ஆடுவள்? கருணையே வடிவாயமைந்த சித்தர்களும் முனிவர்களும் மகரிஷிகளும் அறிவை அழிப்பது ‖அயர்வை *அளிக்கும் ‡அம்மியத்தை ‡அருந்தவும் பஞ்சமாபாதகத்தில் ஒன்றாகிய கொலையினால் வரும் மாங்கிஷத்தைப் புசிக்கவும் சொல்லுவார்களா கனவிலும் எண்ணுவார்களா? என்பது யாவருக்கும் விளங்கும். கள் வைத்துப் பூசித்தும் கள் உண்டும் கருணையம்பாளைக் காணக் காதலித்தல் †மறலிகைப் படுத்தும் §மலினம் நிறைந்த *மருளேயாம். ஆனால் இத்துர் வழக்கம் வருவதற்குக் காரணம் சாஸ்திரங்களைப் பூரணமாய் வாசித்து ஊன்றி விசாரியாத குற்றமென்றே விளங்குகின்றது. மேற்சொன்ன சாஸ்திரங்களே மதுமாங்கிஷம் என்பதற்குப் பொருள் இன்னதெனவிளக்குகின்றன. எல்லாப் பாஷைகளிலும் ஒரு சொல்லாயிருந்து பல வேறு பொருள்களைத் தரும்படியான அநேக வார்த்தைகள் உள. காவியங்களிலும் சம்பாஷணையிலும் இப்படிப்பட்ட சொற்கள் வரும் பொழுது முன் பின் சந்தர்ப்பத்தைப்பார்த்து யோசித்துப் பொருள் கொள்ளல் வேண்டும். இல்லாவிடின் விபரீதம் விளையும்! உதாரணமாக புட்கரம் என்னும்

‡ஆலை—கள்.
‡மூலம்—விஷம்.
‡அஞ்ஞன்—அறிவிலான்.
†அஞ்சனம்—இருள்.
‖அயர்வு—மயக்கம்.
*அளித்தல்—கொடுத்தல்.
‡அம்மியம்—கள்.
‡அருந்தல்-புசித்தல்.
†மறலி—யமன்.
§மலினம்—குற்றம்—மாசு.
*மருள்—மயக்கம், அஞ்ஞானம்.

ஒரு சொல் வாளாயுதம்—வாளுறை—வாத்தியம்—நீர்—தாமரைப்பூ—வெனப்பல பொருள் பயப்பதாயிருக்கின்றது. எதிரி படையெடுத்து வந்துவிட்டதாய்க்கேட்ட ஒரு அரசன் "எதிரி மேல் போர் புரியப் போதல் வேண்டும் புட்கரம் கொண்டுவா" வென்றால் வாளாயுதத்தைக் கொண்டு கொடுப்பதேயன்றி தாமரைப்பூவையும், வாத்தியத்தையுங் கொண்டுபோய்க் கொடுத்தால் அரசனுக்குக் கோப மூண்டெழுந்து விடுமன்றோ? பகைவனைப் போரில் வென்று மீண்டு வாளாயுதத்துடன் வந்த அரசன் புட்கரம் கொண்டுவா வென்றால் வாளுறை கொண்டு கொடுத்தல் தகுதி. பூஜைமுகத்தில் புட்கரம் கொண்டுவா என்றால் தாமரை மலர் என்று அருத்தங்கொண்டு அம்மலரைக்கொணர்ந்து கொடுத்தல் வேண்டும். அப்படியன்றி வாளாயுதத்தைக் கொண்டு போய் கொடுத்து நாம் சரியானபடி செய்கின்றோம் தகுந்த வெகுமதி கிடைக்கும் என்று எண்ணி நிற்கும் பேதையை யாருக்கு ஒப்பிடலாம்? போஜனத்தின் போது புட்கரம் கேட்ட அரசனுக்குச் சலத்தைக் கொடாமல் தாமரை மலரையாவது வாளாயுதத்தையாவது கொண்டு போய் நீட்டும் கசடனுக்கு எவ்விதப் பிரயோசனம் அரசனால் கிடைக்கும்?

ஒரு விஷயத்தின்மேல் பற்றுவைத்தவர்கள் ஒருநூலில் ஒரு செய்யுளைப் படித்துவிட்டுத் தங்கள் எண்ணத்தின்படி ஒரு பாட்டிருப்பதைக் கண்டுவிட்டால் உடனே மயக்கம்கொண்டு தங்களுக்கு ஆதாரம் கிடைத்துவிட்டதென்று எண்ணிக் குதிப்பது உலகத்தில் வழக்கமாயிருக்கின்றது. அவர்கள் அர்த்தப்பாட்டுடனே நின்றுவிடுவார்கள். மேற்சென்று பார்ப்பதில்லை. மேற்சென்று படித்தாலும் தாங்கள்கொண்ட எண்ணம்போல் கூறும்பாட்டை நிட்டத்தில் பார்த்து அதனால் கொண்ட மகிழ்ச்சியானது அவர்கள் புத்தியைச் சூரியனை மறைத்த மேகத்தைப்போல மூடிப்பின்னால் சொல்லியிருக்கும் விளக்கத்தை அவர்கள் அறிவினின்று மறைத்துவிடுகின்றது இக்காரணத்தினால்தான் தேவிபூஜைக்கு மதுமாங்கிஷம் அவசியம் என்ற சுருதிக்குக் கள்ளும் ஊனும் என்று பொருள்படுத்திக்கொண்டு கள்ளும் ஊனும் காதலித்த கசடர்கள் கதியிழந்து திரிகின்றார்கள்.

மேற்சொன்ன வராகிமாலையை நிதானித்துப் பூரணமாய் வாசித்தால் மதுமாங்கிஷம் என்பதற்குப் பொருள் வேறு என்று தெளிவாய் விளங்கும். இது செய்யாமல்தான் நற்கதி சம்பாதிக்கவேண்டி செய்யப்போன *சக்தி பூஜையில் நரகத்தைப்பயக்கும் கள்ளையும் ஊனையும் அனுசரிக்கும்படியாய் விட்டது.

முன் சொன்ன வராகிமாலையில் 71-வது செய்யுளின் பின்னிரண்டு அடிகளில்

"மதுமாங்கிஷந் தின்று மாமறையோர் சிலர் மயக்கங்கொண்டு
கதிதானிழந்து நரகெய்துவாரவர் கள்ளர்களே."

என்றும், 74-வது செய்யுளில்

"மதுவாகிநின்றது விந்துவதாகும் அதுதனிலே
கதுவாகிநிற்கின்ற மாங்கிஷம் நாதங் கலந்தொன்றாய்ப்,
பொதுவாகிநிற்கின்ற வஸ்துவைக்கூட்டிப் பொதிந்துநின்று
மதுமாங்கிஷானந்தி பாதாரவிந்தத்தை வாழ்த்திடுமே."

என்றும், 75-வது செய்யுளில்

"மதுமாங்கிஷமுடன் வஸ்துவுமூன்று வடிவெடுத்தால்
பொதுவாகி அண்டங்களாயிரத்தெட்டும் பொருந்திநின்று
பதியாய்ப் பலவுலகீரேழு மோடிப் பரந்துநின்று
மதுமாங்கிஷானந்தப் பேரொளியாகி வளர்ந்ததுவே."

என்றும் சொல்லியிருக்கிறது.

இச்செய்யுள்களால் மதுவென்பது விந்துதத்துவம் என்றும் மாங்கிஷம் என்பது நாததத்துவம் என்றும் தெளிவாய்த் தெரிகின்றது. நாத தத்துவத்திலிருப்பது சிவம். விந்து தத்துவத்திலிருப்பவள் சக்தி. நாதம் ஆதிதத்துவம். நாததத்துவத்தினின்றும் விந்து தத்துவம் உண்டாகின்றது. விந்துதத்துவத்தில் உள்ளும் புறமும் நாததத்துவங்கலந்திருக்கும் அவசரம் வஸ்துவென்று பெயர். விந்துதத்துவம் தனியாயிருக்கமாட்டாது. அதனோடு நாதம் கலந்தேயிருக்கும். விந்துதத்துவத்தில் பிரஞ்ஞையை நாட்டி ஆராதித்தால் சர்வசராசரங்களையும் ஈன்ற சக்தியைக் காணலாகும். இதைவிட்டுக் கள்ளையும் மாமிசத்தையும் வைத்துப் பூசித்தால் நமக்கும் தாழ்ந்த நிலையிலிருக்கும் பேய் பிசாசு பூதங்களைக் காணுவதேயல்லாது உலகமாதாவைக் காணுவதே யில்லை யில்லை இது சத்தியம்.

இந்த ஊனக்கண்களுக்குத் தெரியாமல் சூக்ஷ்மமாயிருக்கும் உலகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள ஜீவராசிகளையும் பொருள்களையும் பார்க்கும் வல்லமையை யோகத்தினால் அடைந்த நாதாக்கள் மது மாமிசங்கள் விற்கும் இடங்களில் பூதப் பிரேத பிசாசுகள் கூட்டம் கூட்டமாய்க் கூடிக் களித்திருக்கின்றன வென்றும் அந்த நாற்றத்திற்கும் அவைகளுக்கும் கவர்ச்சியிருக்கின்றனவென்றும் மேற்படி வஸ்துக்களைப் புசிப்பவர்களைச் சுற்றியும் அவர்கள் தேகத்திற்குள் பூரணமாயும் அரைகுறையாயும் படிந்துதொங்கிக்கொண்டும் இருக்கின்றனவென்றும் குடியர்கள் தேகத்தில் அவைகள் தொடுத்துக்கொண்டும் தொங்கிக்கொண்டும் இருப்பதைப் பார்க்க மிகவும் கோரமாயிருக்கிறதென்றும் கூறுகின்றார்கள். மதுமாமிசங்கள் வழங்கும்

இடங்களில் தங்குவதும் அவ்விடங்களுக்குச் சும்மாவாயினும் செல்வதும், அவைகளை புசிப்பவர்களிடத்தில் இணங்குவதும் சம்பாஷிப்பதும் பெருங் கேட்டை விளைப்பதேயல்லாது வேறு பிரயோசனந்தருவதேயில்லை. மிருகங்களைப்பலிகொடுக்கும் கோவில்களில் தெய்வம் விட்டு நீங்கி பூதப், பிரேத பிசாசுகளும் இன்னும் பலவித மிகத்தாழ்ந்த துஷ்ட கணங்களும், தங்குகின்றனவென்றும் அவிடங்களில் தெய்வகளையே கிடையாது என்றும் தேவர்களிருப்பதாக எண்ணுவது முழு மூடம் என்றும் சூக்ஷ்ம தேகங்களையும் சூக்ஷ்ம உலகங்களையும் எப்பொழுதும் ஞான விழியில் பார்த்துக் கொண்டிருக்கும் சித்தர்களும் முனிவர்களும் ஞானிகளும் விளம்புகின்றனர். உலகில் மனிதர்களுக்குத் தெய்வத்தின் பெயர்களில் ஒன்றை வைத்து அழைப்பது வழக்கம். அப்பெயர் வைத்தமாத்திரத்தினாலேயே அவன் அத்தெய்வமாவனா? சுப்பிரமணியம் என்று ஒரு மனிதனுக்கு நாமம் வைத்தமாத்திரத்தில் அவன் சுப்பிரமணியக்கடவுளாவானா? சிவகாமியென்று ஒரு பெண்ணையழைத்த மாத்திரத்தினாலேயே அவள் அகில நாயகியாவாளா? அது போல், உயிர்ப்பலி நடக்கும் கோவில்களிலுள்ள பூதங்களை மஹேஸ்வரியின் நாமங்களாகிய துர்க்கை யென்றும், காளி யென்றும் சொன்ன மாத்திரத்தில் அக்கோவில்களிலுள்ளவைகள் தெய்வமாகி விடமாட்டா. மது மாங்கிஷம் நாற்றம்பட்ட மாத்திரத்தில் தெய்வம் அவ்விடம் விட்டு ஓடிப்போய் விடும். தெய்வகளை தங்கி யிருக்கும் கோவில்களில் மதுமாங்கிஷம் சென்றால் தெய்வம் அவ்விடத்திலிருந்து நீங்கி விடும். ஆகையால் பலி நடக்கும் கோவில்களுக்குப் போவதும் கும்பிடுவதும் பிரயோசனமே யில்லை. பிரயோசனமில்லாமற் போவது மாத்திரமா? முடிவில் கெடுதியும் விளைவிக்கும் கீழ்மக்களையும் துஷ்டர்களையும் சார்வோருக்கு நற்பிரயோசனம் கிடைப்பதுண்டா? தற்காலத்திற்கு அனுகூலமாயிருப்பது போலிருந்தாலும் முடிவில் துன்பமே விளையும். இக் கோவில்களில் போய் ஆராதனை செய்வது குளிக்கப்போய்ச் சேற்றை பூசிக்கொண்டது போலும். நற்கதி தேடியே கோவில்களிற் சென்று ஆராதிப்பது. இவ்விதக் கோவில்களிலுள்ளவை ஈஸ்வரன் ஈஸ்வரி நாமங்களைத் தரித்துக் கொண்டிருப்பினும் பூதங்களே யாகையால் அவைகளுடைய கதிகளைத்தான் அவைகளை யண்டினவர்களுக்கும் கொடுக்கும். ஐயோ இவ்வுண்மையறியாமல் நாட்டோராயன் கோவிலுக்குப் போய் கொலை செய்து கும்பிடுவோர்கணக்கேயில்லையே. உயர் குலத்தவராகிய பிராமணரும் சைவரும் இக் கோயில்களுக்குச் சென்று ஆராதனை செய்கின்றார்களே. கேட்டால் தாங்கள் ஆடு கோழி வாங்கி பூசாரியிடத்தில் கொடுத்துப் பலியிடச் சொன்னதேயன்றி தங்கள் கையால் வெட்டவில்லை அதனால் தோஷமில்லை யென்று கூறுகிறார்கள். இதை விட மதியீனம் வேறுண்டா? தாங்கள் இன்னொருவனைக் கொண்டு கொலை செய்வித்

தால் தாங்கள் செய்ததல்லவா? அக் கோவில்களுக்குத் தாங்கள் போய் பலி முதலிய கொடுக்காமல் சும்மா கும்பிடுவதும் அறிவீனர்களாகிய கீழ் மக்களுக்கு இக்கோவில்களில் சென்று தாங்கள் பலி கொடுப்பது சரி யென்று எண்ணும்படி செய்வதால் தாங்கள் உடந்தைக்கு உள்ளாகாமற் போவார்களா?

மேலும் ஜனங்கள் ஆகார நிமித்தமாகவும் ஆராதனை நிமித்தமாகவும் கொலை செய்யும் எண்ணிறந்த பிராணிகளின் உயிர்கள் சூக்ஷ்ம லோகத்திற் சென்று அவ்விடத்திலிருந்து தங்களை வருத்தின இந்தக்கொடிய உலகத்தின் மீது பழியான எண்ணங்களையும் சாபங்களையும் மழை வருஷிப்பது போல் வருஷிப்பதினால் இவ்வுலகத்தில் கொடிய வியாதிகளும் கஷ்டங்களும் ஆபத்துக்களும் அடிக்கடி தோன்றுகின்றன வென்றும் கொலை ஒன்று மாத்திரமே உலகத்தினின்று நீங்கினால் மிகுந்த க்ஷேமம் உலகத்திற்கு உண்டாகும் என்றும் மகாத்துமாக்கள் முறையிடுகின்றார்கள். இக்காரணம் கொண்டல்லவா தாயுமானவரும்

கொல்லா விரதம் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

கொல்லா விரதத்தைக் கொண்டோரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆகையால் மது மாங்கிஷ பக்ஷணம் நீங்கும்பொருட்டு நாம்பாடுபடுதல் நமது கடமையாகும். சாஸ்திரவிசாரணையில்லாத உயர் குலத்தவர்களும் போட்டிபோட்டுக்கொண்டு சாராயக்கடை கள்ளுக்கடைமீன் குத்தகைஏலங்களில் அழியும்படியான பொருள் லாபத்தை மாத்திரம் கருதி அவைகளின் இழிவைப்பாராது கூசாமல் ஏலங்கூறும் இக்காலங்களில் இவ்விஷயத்தைப் பற்றி சதாபிரசங்கிப்பதும் எழுதுவதும் இவ்விரண்டு கொடுமைகளும் உலகை விட்டு நீங்கவேண்டி சதாஈஸ்வரனைப்பிரார்த்திப்பதும் நல்லோர் கடனும்.

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

தர்மி லோபி சம்வாதம்

தர்மி, என்காணும், கல்வியினருமை உமக்குத் தெரிந்திருந்தால் கரும்பாகவே நினைத்திருப்பீர். “தாயோ டறுசுவை போம் தந்தையொடு கல்விபோம், சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ், வுற்றாருடன்போம் உடற்பிறப்பாற் றோள்வலிபோம், பொற்றாலியோ டெவையும் போம்” அதாவது. (“தாய்போனால் அறுசுவையுண்டி யிழக்கவும், தகப்பன் போனால் கல்வியையிழக்கவும், தான் பெற்றபிள்ளை போனால் செல்வத்தை யிழக்கவும், பந்துக்கள் போனால் உண்டான வாழ்வனைத்துமிழக்கவும், சகோதரர்போனால் புஜபலமிழக்கவும், மனைவிபோனால் மேற்கூறிய யாவுமிழக்கவும் நேரிடும்”) இந்த முதுமொழியின் வண்ணம் உமது தந்தையையிழந்ததனால் கல்வியை யிழந்துபோனீர். கல்விக்கிணையானது உலகிலெதுவேனுமுண்டோ? “கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்” அதாவது (கற்றவர்களே கண்களுடையவராகப் பாவிக்கப்படுவர், கல்லாதவர்கள் முகத்திலிரண்டுபுண்ணுடையவராகப்பாவிக்கப்படுவர்,) “தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறுமறிவு” அதாவது, (மணலூற்றானது தோண்டின அளவாக நீரூறும், மனிதர்க்குக் கற்ற அளவாக அறிவு ஊறும்,) “யாதானு நாடாமால் ஊராமால் என்னொருவன், சாந்துணையுங் கல்லாதவாறு” அதாவது, (கற்ற ஒருவனுக்கு எந்நாடும் தன்னுடைய நாடாம், எந்தவூரும் தன்னுடைய ஊராம், அப்படியிருக்க, ஒருவன் சாகுமளவும் கல்விகற்காத காரணம் யாது) என்பனவாகப் பல நியாயங்கள் கல்வியைக் குறித்து நாயனார் முதலாயினோர் கூறியிருக்கின்றனர். உலக இயல்பும் கடவுளியல்பும், கடவுள் வழிபாடு முதலிய இயல்பும் தெளிவது கல்வியினாலன்றோ? நீர் பிரதானமாகக் கைக்கொண்ட செல்வப் பொருளை நியாயமார்க்கத்திற் சம்பாதிப்பதற்கும், அதனைக் காப்பாற்றுவதற்கும், நல்வழி தெரிந்து செலவிடுதற்கும், ஆதாரமாயுமுள்ளது கல்விதானே. அதனை அலட்சியமாயெண்ணிக் கல்லாமற் போன காரணத்தினாலன்றோ இத்தகைய துர்க்குணம் கொண்டலைகின்றீர்.

உலோபி, நல்லதுகாணும், நீர் சகலகலா விற்பன்னராயிற்றே. செல்வப்பொருளினருமை தெரிந்திலீர் போலும், நாலடியாரில், “வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணதெய்த இருதலையு மெய்தும், நடுவணதெய்தாதா னெய்துமுலைப் பெய், தடுவதுபோலுந்துயர்” என்று கூறப்பட்டிருக்கின்றதே, இது தெரியாதோ?

தர்மி, ஆம், கூறப்பட்டிருப்பதுண்மையே. அப்பாட்டில், புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு, என்றநான்கில் குற்றமற்ற இவ்வுல

கத்திற்கு வேண்டிய முதல் மூன்றில் நடுவிலிருக்கின்ற பொருளை ஒருவன் அடைவானாகில் முதலிலுள்ள அறத்தையும் கடையிலுள்ள இன்பத்தையும் அடைவான் அப்பொருளை அடையாதவன் (கொல்லன்) உலையிலிட்டு ஒன்றைக் காய்ச்சுவதுபோன்ற துன்பத்தையடைவான், என்று சொல்லப்பட்டிருப்பதனால், கல்விகற்றிருப்பினும் செல்வப்பொருளை அலட்சியஞ்செய்து சம்பாதியாமலிருக்க வொண்ணாது. அது இல்லறத்திற்கு வேண்டிய சகல விஷயங்களையும் நடத்தக் கருவியா யுள்ளதெனினும் நன்குணர்ந்து நடத்தத் துணைக் கருவியாயுள்ளது கல்வியே. செல்வப்பொருளைப் பங்கிடுதற்கு ஞாதியர், சூதர், கள்ளர், தீயர், வேசியர், அக்கினிபகவான், வருணபகவான், முதலாயினோருளர். கல்விப்பொருளைப் பங்கிட எவராலும் முடியாது. தேகமழியினும் ஜன்னங்கடோறும் போயுதவும். நாயனார் தமது குறளில் "ஒருமைக் கட்டான் கற்றகல்வி யொருவற், கெழுமையுமே மாப்புடைத்து." அதாவது (ஒருவனுக்கு ஒரு பிறப்பின்கண் கற்றகல்வி எழு பிறப்பினுஞ்சென்று உதவுதலையுடையது) என்றாராகலின் செல்வப்பொருளை மேற்கூறிய பங்காளிகளில் ஞாதியர், அக்னிபகவான், வருணபகவான் இம்மூவர் தவிர மற்றையர் பங்கிடக் கல்வியறிவுளதே லஃதிடங்கொடாது. நல்லதிருக்கட்டும். நான்காம்பாடம் படித்தவுமக்கு நாலடியாரிற் கூறியசெய்யுளெப்படித் தெரிந்தது சொல்லும் பார்ப்போம.

உலோபி, செல்வப்பொருளையே மேன்மைப்படுத்திக் கூறவெண்ணிக் கற்றோனொருவனைக் கண்டு உபசரித்து உயிர் போவதுபோலக் கவலையுடன் மனதைத் தேற்றிக்கொண்டு மூன்று ரூபாதந்து மேற்கண்ட செய்யுளுடன் அதற்கிணங்கிய நாலைந்து செய்யுட்களை யெழுதிக்கொடுக்க நாலைந்து மாசம் நெட்டுருப்பண்ணித் தெரிந்துகொண்டேன். இருக்கட்டும் நீர் கூறிய செல்வப்பொருட்குரிய பங்காளிகளில் சூதர், வேசியர் இருவரையும் குறிப்பிட்டீரே. அவர்கட்கு உதவவேண்டுவது அவசியந்தானே. ஏனெனில், சூதர், பொழுது இனிதாய்க் கழியுமாறு விளையாடவேண்டுமன்றோ? அதனை உத்தேசித்துத் தானே சொக்கட்டான் முதலிய விளையாட்டுக் கருவிகள் முற்காலத்திலேயே யேற்பட்டிருக்கின்றன. முற்காலத்து அரசரும் விளையாடி யிருக்கின்றனராமே. வேசியர் மன்மதாவஸ்தையை யினிதாக நிவாரணம் செய்யக்கூடியவரன்றோ? செல்வமிருப்பது எதற்காக? இச்சரீரமெடுத்ததின் பிரயோஜனம் இஷ்டமான விளையாட்டுகள் பகற்பொழுதில் விளையாடி யிரவில் மனோரஞ்சிதமான சுகமனுபவித்தலன்றோ? நீர் இது தெரியாமல் கெட்டழிந்து அநியாயபுரியாகிய இந்நியாயபுரியில் சில விவேகிகள்பால் நன்னெறிகளைக் கைக்கொள்ளுமாறு வந்தனனென்கிறீர். அதனால் நீர் அடையும் இலாபமின்னதென்று அறிகிலேன்

உமக்குப் பைத்தியம் பிடித்ததுபோலும்; தேடிய பொருளை மற்றை யாவருக்குத்தான் உதவவேண்டும்? சொல்லும் பார்ப்போம்.

தர்மி, தேடியபொருளைத் தேவாலய முதலிய திருப்பணிகளுக்கும் சங்கீதசாஹித்ய வித்துவான்களுக்கும், இதிகாச புராணாதி பிரசங்க தீரர்க்கும், ஏழைகட்கும் உதவல்வேண்டும். அப்படிச் செய்வதால் இகத்தில் கீர்த்தியும் பரத்தில் புண்ணியமும் கிட்டும். இது தெரியாமல் வாயால் வந்தபடி யெல்லாம் பிதற்றுகிறீர். "கல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்" என்பதுபோல எனது பெயரைச் சொன்னாலே ஓட்டிக்கொள்ளுமென்று (த) முதலாகவுள்ள பெயருடையவரே யென்று விளித்தீர். நீர் இந்தமானிடப் பிறவி யெடுத்ததற்கு ஜன்மசாபல்யந் தப்பாதுகிட்டும். யோசிக்காதீர். முற்காலத்தரசர்கள் சூதாடியிருக்கின்றனராமே யென்றீர். .... அதனாலவர்கள் பட்ட பாட்டை மட்டும் கேட்டறிந்திலீர் போலும்.

உலோபி, என்காணும், தேடியபொருளைத் தேவாலயத்திற்கும் வித்துவான்களுக்கும் ஏழைகளுக்கும் உதவல் வேண்டுமென்றும், அதனால் இகத்திற் கீர்த்தியும் பரத்திற் புண்ணியமும் உண்டென்றுமுரைத்தீரே. உமக்கு யாவர் இவ்விதம் போதித்தனர். நன்றாய்ச் சொன்னீர்.... ஏதோ கற்றிருப்பதாய்ப் பாவனைகாட்டுகிறீரே யொழியப் பொருள் விஷயமாய் முன்னோர்கள் கூறியவற்றை உணர்ந்திலீர்போலும் "ஆனமுதலி லதிகம் செலவானால், மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை, எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனாம் நாடு," எனவும் "கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை, யில்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்," எனவும் தெய்வப்புலமை ஒளவையார் கூறியிருக்கின்றனரே. அங்ஙனமிருக்கப் பற்பலவிதமாய்ப் பேசுகிறீர். வித்துவான்களென்றால் யார்க்காகக் கல்விகற்றுக்கொண்டார்கள். செலவுக்கு வேண்டுமானால் பாடுபட்டுத் தம்மாலியன்றவோர் தொழிலைச்செய்து ஜீவிக்கட்டுமே. தேவாலயமென்றீர் தேவனாவது, ஆலயமாவது, தேவனென்ற ஒருவனிருக்கின்றானா? அவனைக் கண்டோர் யாவர்? கண்ணால் காணாத ஒன்றை உண்டென்று நீர்தாம் சொல்லிக்கொள்ளலாம்.

[இன்னும்வரும்.]

இங்ஙனம்

சே. கு. விசாகப்பெருமாள்முதலியார்.

சைவசித்தாந்தம்

இனித்தியானமாவது:— புருவமத்தியில் நிருமலமான ஆகாயத்தில் பிரகாசமும் ஒப்பில்லாத குளிர்ச்சியும் பொருந்தி விளங்குகின்ற சந்திர மண்டலத்தை முதலில் தியானஞ்செய்து அதன் மத்தியில் பேரானந்தமே சொரூபமாகியும், பரையை ஒருபாகத்தில் உடையவராகியும், பிறையை யணிந்தசடைமுடியும் தேவர்களைக்காத்தநீலகண்டமும் முக்கண்ணும் நான்கு தோளும் உடையோராகியும், ஆதிமத்யாந்தமில்லாத அருட்பொருளாகியும் எழுந்தருளியிருக்கின்ற சோதியை இடையறாது சோகம்பாவனை செய்தலே யாம். இன்னும் பரிசுத்தமாகிய ஆகாயத்தில் இலக்ஷயோசனை விசால முடையதாயும், பூரண பிரகாசம் வாய்ந்துள்ளதாயும் விளங்குகின்ற சூரிய மண்டலத்தின் மத்தியில் சுவர்ணமொத்த திருவுருவும் முகரோமங்களும் மாலையையணிந்த சிகையும் செவ்விதாகிய முகமுமுடையவனாய், எல்லா உலகங்களுக்குங் காரணனாய், உமாதேவியை ஒருபாகத்திலுடையவனாய், காளகண்டம் திரிநேத்திரம் சதுர்ப்புயம் உடையவனாய், நிருமலனாய், இன்னெருதேவனைக்குறித்துக் குவியாத கையையுடையவனாய் விளங்குகின்ற பரம்பொருளை இடையறாது சோகம்பாவனை செய்தலுமாகும்.

இன்னும் அணிமாதிமுதலிய எட்டுச்சித்தாகிய தளங்கள் வாய்ந்து வித்தியாதத்துவமாகிய கேசரங்கள் பொருந்தி ஞானமாகிய நாளத்தைப் பெற்று மகதத்துவமாகிய கந்தம் படைத்து விளங்குகின்ற இருதயதாமரையின் மத்தியில் பலகுவாலைகளையுடையதாய் பாதமுதல் சிரசளவுந் தபிப்பதாய் வாயுவில்லாத இடத்தில் பிரகாசிக்குந் தீபம்போல சொலிப்பதாகி நீலமேகத்தின்மத்தியில் பிரகாசிக்கின்ற மின்னலைப்போல விளங்கும் அக்கினியை யுள்ளத்தில் தியானித்து அதன்மத்தியில் சுயம்பிரகாசனாய் விளங்குகின்ற பரமசிவத்தைச் சோகம்பாவனை செய்தலுமது. இவ்விதமாக வேதச்சிகைகூறும்.

இன்னும் மூலாதாரமாவது குதத்துக்கு இரண்டங்குலத்துக்குமேல் இலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழ் என அறிக. இதற்கு வடிவு முக்கோணமாயிருக்கும் செந்தாமரை யிதழ்கள் நான்கு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் வகரமுதலான நான்கு. இவ்விதழ்களுக்கு அதிதேவதைகளாவன:—விநாயகன், வைரவன், க்ஷேத்திரபாலன், சண்டன், என நால்வர். சுவாதிஷ்டானமாவது:—இதற்குத்தானம் இலிங்கமூலம். இதற்கு வடிவு அறுகோணம். அனேககாந்தியினையுடைய ஆறிதழ்த்தாமரை இதி னிற்கும் அக்கரங்கள் மூன்றாவது மகரமுதல் லகரம் இறுதியாக ஆறு. இவ்விதழ்களில் நிற்கும் அதிதேவதைகள், பிரதிட்டை, சுத்ததயிரினி, பாவனை, இருடி, பத்மனி, பத்மயோநி என்றறுவர்.

இனி, மணிபூரகம்:—இதற்குத்தானம், நாபி. இதற்குவடிவு மூன்று வட்டம். இரத்னப்பிரபை போன்ற பத்மதளங்கள் பத்து. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் இரண்டாவது டகரமுதல் இரண்டாவது பகரம் இறுதியாக பத்து. பத்மதளங்கள் பத்துக்கு அதிதேவதைகள், தூலாராக்ஷி, நீலாராக்ஷி, கைலாசனி, புலங்கினி, உபாகி, உட்டினிகை, வாசினி, நேத்திரகரி, தவரி, நவனி எனப்பதின்மர்.

இனி அநாகதமாவது:—தானம், இருதயகமலம். வடிவு, முக்கோணம் இதற்குப் பொற்கென்ற நிறத்தினையுடைய இதழ்கள் பன்னிரண்டு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் முதலாவது ககரமுதல் இரண்டாவது டகரம் இறுதியாகப் பன்னிரண்டு. இவைகளில் நிற்கும் அதிதேவதைகள் கபினி, பரதனி, சோஷி, காலோணினி, வேணி, ஆக்ஷணி, சாமுண்டி, விராடி, தூர்க்கா, சேடிகா, ஆரணி, சுரணி எனப்பன்னிரண்டுபேர்கள்.

இனி விசுத்தி:—இதற்குத்தானம், கண்டம். வடிவு அறுகோணம் இதில் சுவேத பத்மதளம், பதினாறு. இவைகளில் நிற்கும் அக்கரங்கள் உயிர் பதினாறு. இவைகளில் நிற்கும் அதிதேவதைகள் மாண்டி, புட்படி, திரி, சிருங்கி, சுவரா, அசனி, இராத்திரி, தாமக்ஷாணி, சாயா, அம்பாசி, நிகாராக்ஷி தூலலாசினி, யூபா, சாரினி, காலாசி, கமலா எனப்பதினாறுபேர்.

இனி ஆக்கினை:—இதற்குத்தானம், புருவமத்தியம். வடிவம், வட்டம். செந்தாமரைத்தளங்கள் இரண்டு இவைகளில் நிற்கும் அக்கரங்கள் ள க்ஷ என இரண்டு இவைகளில் நிற்கும் அதிதேவதைகள் சுந்தரி, ஆனந்தி என இருவர். இவைகள் எல்லாவற்றையு மாதனமாகப் பண்ணிக்கொண்டு அதற்குமேலாகிய பிரமரந்திரத்தில் ஆயிரந்தளத்துடன் கூடியபதுமதளத்தின்மேல் அநேககோடி சூரியப்பிரகாசம்போன்ற பரமசிவன் எழுந்தருளியிருப்பர் அவரை இடையறாது சோகம்பாவனைபுரிதலுமது.

இன்னும் விசுத்திக்குமேல் கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி இம்மூன்றும் மூன்றுமண்டலம். அஃதொவ்வொன்றுக்கு பதினாறுதளமும் அதில் லகாரமுதலிய எழுத்துப்பதினாறும் இவற்றிற்குமேல் விந்துநாதங்களுடன்கூடி பிரமரந்திரம் இதில் பத்மதளம் முன்னூற்றறுபதுடன்கூடிய கமலம் பராசத்திமயமாயிருக்கும் அதில் பரமசிவனை பாவிக்கில் முத்தியடைவர். இவைகளெல்லாம் ஆகமபேதம்பற்றிக்கூறப்படும்.

இன்னும், பூமியின்கண் புண்ணியன் நானேயென்று பாவனை பொருந்தப்பண்ணித் தன் இருதயத்தின்மத்தியில் பாவனைக்கு எட்டாதவனாகியும், பலவற்றுக்கும் சான்றாகியும், வேதசிகையில் வீற்றிருப்போனாகியும் உள்ள பரம்பொருளைச் சோகம்பாவனைகொண்டு தியானஞ்செய்யவேண்டும்.

இன்னும், சச்சிதானந்தசொரூபமாகியும், நித்திய நிமலனாகியும், நிகரறுமுதல்வனாகியும், தத்துவாதீதனாகியும், சருவவாதாரனாகியும், அப்ரமேயனாகியும், திரிசியமுள்ளோனாகியும், திரிசியமில்லோனாகியும், புறம்பும் உள்ளும் வியாபித்து நிற்போனாகியும் அரியதில் அரியோனாகியும், அரியன அறிந்தோனாகியும், துரியமுங்கடந்தோனாகியும், சுயம்பிரகாசனாகியும் மூலம் ஈறு இகந்தோனாகியும், முத்தனாகியும், காலகற்பனை கடந்த காரணப்பொருளாகியும், சூக்குமப்பொருளாகியும், விளங்குகின்ற பரமசிவத்தை இரண்டறத் தியானஞ்செய்யவேண்டும். இப்படிஇரண்டறத் தியானஞ் செய்கின்றவனைச் சிவனே யென்று கூறுதற்குச் சந்தேகமில்லை. அவனுக்கு எல்லாப்பாவமும் ஒழிந்துவிடும். அவனே முத்திக்கு உரியவன். இந்தப்பிரகாரம் தியானஞ்செய்வனாகில் ஞானத்தைஅடைவான்

தியானம் முடிந்தது. இனிச்சமாதி. சமாதியாவது:—சுத்தமெஞ்ஞானந்த சுயம்பிரகாசமாகி விளங்குகின்ற சிவத்தில் அத்துவிதமாகக்கலந்து இன்பத்தை அனுபவித்தலேயாம். துவிதபாதனைசெய்தால் பிறவி யொழியாதென்று வேதங்கூறும்.

இன்னும், சரீரம் பிராணவாய்வு, பொறி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், பஞ்சபூதம், மாயை இவைகளை நானென்று கூறும் உணர்ச்சியை ஒழித்துத்தன் உண்மை உணர்ந்து ஆனந்தஉருவமாகிய சிவத்தில் ஒன்றாய்க் கூடுமாறு எண்ணுதலுமது.

இன்னும் விவேகமாகிய அக்கினியைக்கொண்டு பஞ்சபூதத்தினாகிய அண்டங்களைப் பூதமாத்திரமேயென்று கருதுகின்ற புத்தியைத்தகித்து அந்தத்தூலபூதத்தை சத்தாதியாமெனக்கருதும் விவேகத்தைத்தகித்து அச்சூக்குமபூதத்தை மாயாசொரூபமெனக்கருதும் விவேகத்தைத்தகித்து அம்மாயையை அருட்சார்பினின்று தேயும்படிதகித்து எல்லாவற்றையும் ஆனந்தசொரூபமாகக்கருதி அதின்மூழ்கியிருத்தலுமது.

[இன்னும்வரும்]

மதுரை திருஞானசம்பந்தமூர்த்தி மடம்,
சுப்பிரமணியபிள்ளை.

இன்னிசை இருநூறு.

[தொடர்ச்சி.]

5-ம் அதிகாரம் நல்வினையாட்சி.

1. செல்வமுங் கல்வி இலையேற் சிறப்பிலை
கல்வியும் நுண்ணறி வின்றேற் கணிப்பில்லை
எல்லாம் இருப்பினும் நல்லொழுக்கம் இல்லாயின்
வல்லார்க்கும் இல்லை மதிப்பு.

2. வஞ்சத்தாற் செய்த சிறுநன்றும் வானளவின்
எஞ்சா தெனமறவா தின்னுயிரும் † ஈபவே
விஞ்சு பயனறிந்த மேலோர் விழுச்சான்று
o மஞ்சார்கை மத்திரத்தார் மன்

† ஈவார்கள். o மேகத்தையொத்தகையையுடைய சல்லியன்.

3. இன்சொற் பிறர்சொலிற்றும் இன்பமுறல் மெய்யதனால்
என்பொருளும் எஞ்சாவே ‡ என்பு மனம்வருந்தா
அன்புறுவர் ஒன்றாரும் அச்சோ அஃதறிந்தும்
வன்சொலுரைப் பார்க்கென் வரவு.

‡ உடல்.

4. செய்யாமற் பேருதவி செய்தார்கொன் றன்ன இடர்
செய்தார் அயலார் எனுந்திறன் தேராமே
எய்துவ கேடெனினும் ஆக்கமென் றெண்ணிநடு
எய்தலே மேலோர் இயல்பு.

5. உண்ணும் சுவையுணர்ந்தும் ஓதலிலா நாப்போல
எண்ணில் பொருள்கண்டும் என்கொல் பயனின்றே
புண்ணே எனப்படூஉம் போந்தாருள் நோக்கறிந்து
கண்ணோட்டம் செய்யாத கண்.

6 புள்ளிலங்கின் உள்ளும் பொருளுணர வல்லவுள
விள்ளுங்கால் கண்முகம் நோக்கி விளைவுணரின்
ஒள்ளிய மக்களாம். அஃதின்றேல் ஊர்ந்துயிர்ப்புக்
கொள்ளுமரம் என்றே கொளல்.

7. உள்ளம் பொறிநா ஒடுங்கலுறிற் பள்ளம்போம்
வெள்ளமென நாற்பொருளும் மேவும் பிறஅடக்கம்
கொள்ளான் எனினுமொரு நாவடக்கம் கொள்கதப்பிற்
கொள்ளும் அளப்பில் குறை.

8. இறத்தலெஞ் ஞான்றும் இலையாயின் ஆவி
துறத்தல் ஒழிக துறந்தபின் மானம்
இறத்தல் கடந்தார் எவர்கூற்றான் மாய்விற்
சிறத்தலுறும் சீர்ப்பொருட்டான் மாய்வு.

9. ⁰ எச்சநீர் ஆவிற்கீ கென்னினும் நன்றாகா
எச்சிறுமை யானும் இரவற்க இல்லறத்தார்
பிச்சையேற் றுண்கை துறந்தார்க்கே பெற்றியாம்
இச்சைவெறுப் பில்லாமை யின்.

⁰ உண்டு மிஞ்சிய நீர்.

10. செல்வம் விரும்பிற் பிறர்க்களிப்பத் தேடுக
கல்வி விரும்பின் நெறிநிற்பக் கற்கமன்
அல்லலிலா இன்பமுற எண்ணி அருநெறியில்
செல்வினிடர் நோன்றல் செயல்.

அ. சண்முகம்பிள்ளை.

முற்றிற்று.

அன்பு.

எவரையுந் தன்னுயிரென் றெண்ணிநள்ளல் அன்பன்றிச்
சாவரையும் நேசிக்குந் தாய்தந்தை—யாவருடன்
பெண்டுபிள்ளை சுற்றங்கள் பேணுபொருள் தம்மைமட்டுங்
கண்டுநள்ளல் அன்பன்று காண். (1)

யாவரையுந் தன்னுயிரா யாதரித்தல் அன்பாகும்
தேவரையும் ஞானியையுஞ் சீலகுண—எவரையும்
ஆதரித்தல் பத்தியாம் அன்னைதந்தை யாதியரை
ஆதரித்தல பாசமே யாம். (2)

ஆதரித்தல் என்ற தஹிம்ஸைசெய் வாரையன்றித்
தீதிழைக்குந் தீயவரைச் செப்பவில்லை—தீதிழைக்கும்
பாவிகளை யெந்நாளும் பல்விதத்தில் தண்டித்தும்
ஆவிகளைந் தும்வாழ்தல் அன்பு. (3)

பாசமதிற் பத்தியதிற் பண்புமிக்க தன்மையென்பல்
பாசமது மேன்மேலும் பந்தநல்கும்—மாசுகஞ்சேர்
பத்தியதும் அன்பிலொரு பாகமதாம் ஆதலினால்
முத்திபெற அன்பே முதல். (4)

எவருமே தன்னுயிரென் றெண்ணிநள்ள வேறன்றி
யாவருமே தன்னுயிரா யாயிடுவர்—மேவிடுந்தன்
பக்கமகல் அன்னியத்தைப் பாரான்பின் இவ்வுலகில்
துக்கமதும் உண்டோ சொலாய். (5)

அன்னியத்தை யாருயிரென் றாதரிக்கச் சீவனெனுந்
தன்னினுள பற்றொழியுஞ் சாற்றினனென்—தன்னினுள
பற்றொழிய நெஞ்சமது பாசமலம் நீங்கியுண்மை
முற்றுவிளங் கச்செய்யும் முன். (6)

தன்னுடைநன் மெய்ச்சொரூபம் சச்சிதானந்தமென்றும்
அன்னியம்போற் றோன்றுமெலாம் அஃதென்றுந்-தன்னையுறுந்
துக்கமுமே கானலினீர்த் தோற்றமென்றுங் கண்டுணர்ந்து
துக்கமின்றி வாழ்வான் சுகித்து. (7)

துக்கமுற்றும் நீங்கிச் சுகம்பெறுதல் முத்தியென்றுந்
துக்கமற்ற தன்மை சுகமென்றுந்—தக்கமறை
கண்டோ ருரைத்தார்கள் காணவதை யன்பன்றி
யுண்டோ பிறிதுவழி யோர். (8)

அன்பா வதியார்க்கும் ஆருயிரின் மிக்கதுவாம்
இன்பாம் அதன்சொரூபம் என்றென்றும்—என்பான
தன்றியுடல் என்னும் அதுபோல வேயன்பும்
அன்றியுயிர் என்னும் அறி. (9)

எவருமே தன்னுயிரென் றெண்ணிநள்ள எல்லோரும்
தூவுடையோர் தன்னுயிராய்த் துக்கமற்றுப்—பூவிலுதி
யாவரையுஞ் சின்மயமென் றின்புருவென் றுய்தலினால்
எவரையுந் தன்னுயிரென் றெண். (10)

வ. உ. சிதம்பரம்.

புத்தகக்குறிப்பு.

சங்கீத சந்திரிகை:—இப்பெயர் புனைந்த அரிய சங்கீத நூலை இயற்றியவர் சேலம் ஜில்லா சங்ககிரியில் வசிக்கும் வர்த்தகர் எஸ் மாணிக்கமுதலியாரவர்கள். இயல் இசை நாடகம என்ற முத்தமிழ் நூல்களில் இசை நூல்கள் முற்காலத்திருந்தனவாகத் தெரிதலன்றி இக்காலத்துக்காண்பதரிது. இசை நுணுக்கம், பெருங்குருகு, பெருநாரை, முதலிய பல நூல்களைப்பற்றி சிலப்பதிகார முதலிய சில பழைய நூலுரைகளால் மட்டுமே தெரியக்கூடும். தற்காலம் தமிழில் சங்கீத நூல்கள் இல்லையென்றே சொல்லலாம். இரண்டொன்று வெளி வந்திருப்பினும் மிகச்சிறியனவேயாம். அவைகளை நூல் என்ற பெயரால் அழைத்தலும் ஒண்ணாது. சங்கீத சாஸ்திரம் விரிவாகத்தமிழில முதல் முதல் வெளிவந்தது இந்தச்சந்திரிகை வாயிலாகவேயாம். இது 3 பாகங்களையுடையது. I பாகம் ஸ்வரப்பிரகரணம். 129 பக்கம். II பாகம் தாளப்பிரகரணம், 63 பக்கம். III பாகம் பாடப்பிரகரணம், 177 பக்கம். சங்கீதசாஸ்திரம் சிறிதும் தெரியாதவர்களும் இந்நூலிற் கூறப்பட்ட நுட்பமான விஷயங்களை நிதானமாய் அப்பியசிப்பார்களானால் சங்கீதசாஸ்திர வல்லவராவாரென்பதிற் றடையில்லை. ஸ்வரம், இராகம், தாளம் என்பவற்றின் அரிய பெரியநுட்பங்கள் பலவும் இச்சந்திரிகையில் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளன. இவ்வரிய விஷயங்களைப் பல வருஷமாகப் பெருமுயற்சிசெய்து பலசாஸ்திரங்களையாராய்ந்து ஒருங்கு திரட்டி எல்லாரும் ஆனந்திக்கும் வண்ணம் வெளிப்படுத்திய பேருபகாரியான மகா-ா-ா-ஸ்ரீ எஸ் மாணிக்கமுதலியாரவர்கட்கும், இவரது சேஷ்ட சகோதரரும் தமிழ்ப்புலவர் நட்பே பொருளாகக் கொண்டவரும் சங்கீத விற்பன்னரும் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ எஸ். மாரியப்ப முதலியாரவர்கட்கும் நம் தமிழ்நாட்டார் பெரிதும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்நூலின்மாண்பை மகாவித்வான் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய பண்டித சிகாமணிகள் வியந்து பேசிச்செய்யுளாக நற்சாட்சிப்பத்திரம் அளித்திருப்பதால் நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. வீணைவாசிப்பவர் இதிற் கூறப்பட்ட விஷயங்களை நன்கு கவனித்து அப்பியசித்தால் தாமாகவே வீணைகற்று வல்லவராகலாம். இந்நூலாசிரியர் 48 தமிழ்ப்பிரபந்தங்களிலிருந்து 647 பாடல்களையெடுத்து அவைகட்கு ஸ்வரம் தாளம் அமைத்து III பாகத்தில விளக்கியிருப்பது மிகச்சிறந்தது. இதனால் சங்கீதசாஸ்திர ஆராய்ச்சியின் பயன் பக்திவிஷயத்தில் உபயோகப்படுத்துவதே யென்பதுவிளங்கும். சாமகானத்தாலன்றோ பரமேசுவரன் மனமுருகுகின்றார். ஆகையால் நம்மவர் தற்காலம் செய்துவருவண்ணம் சங்கீதப்பயிற்சியை சிற்றின்பத்துறையி

லேயே முக்கியமாகப்பயன்படுத்தாமல் பக்திரசத்திலேயே பயன்படுத்தினால் பெரிதும் நன்மையடைவார்கள். கானரசமறியாதவன் சர்வஜிருஷ்டிக்கும் கடைப்பட்டவனே. இப்புத்தகம் மிகவும் நேர்த்தியான உயர்ந்த கடிதத்தில் வெகுஅழகாக அச்சிடப்பட்டிருப்பதையும், இந்நூலாசிரியர் இதையெழுதுதற்குக் கொண்டபிரயாசையையும் நோக்குங்கால் இதற்கு ஏற்படுத்திய விலை ரூ 5 என்பது மிகக்குறைந்ததென்றே சொல்லலாம். தமிழபிமானிகள் பலரும் இந்நூலைவாங்கியறிந்து மகிழ்வார்களென நம்புகிறோம்.

தென்னை:—இச்சிறுநூல் மயிலாப்பூர் கிருஷி இலாகா இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ இராஜகோபால நாயுடு அவர்கள் இயற்றியது. ராயல் 75-பக்கங்கள் கொண்டது. சிற்சில முக்கியபடங்களையுடையது. தென்னை ஏராளமாய்ப் பயிர் செய்யப்படும் நம் நாட்டிலுள்ளவர்களுக்கும் இலங்கைத் தீவார்க்கும் இந்நூல் மிக்க பயன் உண்டாக்கத்தக்கது. நம் குடித்தனக்காரர் அறியவேண்டிய பல அரிய விஷயங்கள் இச்சிறுநூலில் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலாசிரியர் மிகவும் பிரயாசைப்பட்டு தென்னைப் பயிர்செய்து போற்று முறைகளையும் அது பலன் கொடுக்கும்படி செய்யும் முறைகளையும் நன்கு எடுத்துக்காட்டியதற்கு நம் நாட்டார் அவருக்கு மிகவும் நன்றிபாரட்டல் வேண்டும். இச்சிறுநூலை ஏனைய திராவிட பாஷைகளிலும் மொழிபெயர்த்தால் நலமாயிருக்கும். திருவாங்கூர் சமஸ்தானத்திலும், மைசூர் சமஸ்தானத்திலும் அவ்வச் கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுசெய்து மொழிபெயர்ப்பார்களானால் ஜனங்களுக்குப் பேருதவியா யிருக்கும்.

தமிழ்நாட்டார் முத்து எடுக்குமிடம் 20 என்பர். தென்னையிலிருந்தும் முத்து எடுக்கபபடுகிறது என்பது இப்பொழுதுதான் இந்நூலால் தெரியவருகிறது. இதன முத்து ஒன்று சீமையில் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறதாம். ஆகையால் இதனைக் கற்பகவிருக்ஷமென்று கூறுவது மிகவும் பொருத்தமானது.

தென்னையில் 32-வகையுண்டு. சிலமரங்கள் 4 அடி உயரமே இருக்கும். குடித்தனக்காரர் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கிப் படித்தால் இந்நூலாசிரியர்க்கு மிக்க ஊக்கத்தையளித்து இம்மாதிரி உபயோகமானபுத்தகங்கள் பல எழுத ஏதுவாகும். இதன்விலை ரூபா ஒன்று. எல்லாவிஷயத்திலும் இந்நூல் மிகவும் அருமையானதே. தமிழ்பாஷைக்கே இதனால் ஒரு நல்லநூல் புதிதாகச் சேர்ந்ததாக நாம் மதிக்கவேண்டியது நம் கடமை.

மரங்களும் அவைகளின் உபயோகங்களும்:—

இவ்வரிய நூல் முசிரி மைனர் இரிகேஷன் ஓவர்சியர் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். அமிர்தலிங்கமையர் அவர்களியற்றியது. கட்டிட சாஸ்திரங்கற்க விரும்புவோர்க்கு இந்நூல் இன்றியமையாதது ஒவ்வொரு மேஸ்திரிகையிலும் இப்புத்தகமிருத்தல் அவசியம். ஜில்லா போர்டார்களும் என்ஜினியர்களும் இப்புத்தகத்தை ஏராளமாய் வாங்கி மேஸ்திரிகளுக்குக் கொடுத்துதவுவார்களானால் பேருபகாரமாயிருக்கும். கட்டிடங்களுக்கு மரங்கள் உபயோகிக்கும் முறைகளைப் பல படங்கள் மூலமாய் இந்நூலாசிரியர் இனிது விளக்கியிருக்கின்றனர். இவ்விஷயம் தமிழின்கண் முதல் முதல் ஏற்பட்ட நூல் இதுவே. இவ்வண்ணம் பல சாஸ்திரக்கொள்கைகள் தமிழிலேயே பலரும் அறியும்படி தெளிவான இனிய நடையில் மேனாட்டு முறைகளையநுசரித்து எழுதப்படுமானால் நம் முறைகள் நாட்டிக்குப் பேருபகாரமாயிருக்கும். இந்நூலாசிரியர் இன்னுமிவைபோன்ற அரிய முயற்சியில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைக்கும் வண்ணம் பகவான் இவருக்குத்தேகசுகத்தையும் புத்திவன்மையையும் அருள் புரிவாராக, இதன் விலை சரசமே.

திருக்கூடற்சித்தமான்மியம்:—இந்நூலை யியற்றிய வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ திருமயிலை சண்முகப்பிள்ளையவர்களே. திருக்கூரி லவதரித்து இப்போது திருவானைக்காவில் வசிக்கும் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகளது அற்புத சரித்திரத்தைப் பற்றிக் கூறுவது இந்நூல். நூலாசிரியரையும் கதாநாயகரையும் தமிழ் நாட்டார் பலரும் நன்கறிவர். ஆதலின் யாம் விசேடித்துக் கூறவேண்டுவதில்லை. சிறந்த வித்துவான்கள் பலர் சாற்றுக்கவி கொடுத்துள்ளார்கள். இது மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலையில் பதிப்பிடப்பட்டிருப்பதால் மிக அழகாயிருக்கிறதென்பதும் சொல்லாமேயமையும். சித்த மூர்த்திகளைப்பற்றி சமயம் வாய்த்தபோது மற்றொரு முறை பேசுவாம்.

பரப்பிரம்மப்பதிகம்:—இச்சிறுநூல் மதுரைஜில்லா இளையான்குடி ஸ்பெஷல் மேஜிஸ்திரேட் மகா-ா-ா-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தரவர்க ளியற்றியது. இதுவும் தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பே. பல சிறந்த தமிழ் வித்வான்கள் சிறப்புப்பாயிரமுங் கொண்டுள்ளது. இந்நூலாசிரியர் மகமதியராயிருந்தும் தமிழின்கண் தமிழரினும் அருமை பாராட்டி இதுபோன்ற பலநூல்களியற்றி யிருத்தல் வியக்கத்தக்கது. இவரது பாடல்கள் கம்பீர தொனியும் இனிமையும் உருக்கமும் கொண்டு சிறந்து விளங்குவன. இவர் இன்னும் பல பெருநூலியற்றிப் புகழ்பெறும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

சர்வஜ்ன மித்திரன்:—இப்பெயர் கொண்ட தமிழ்ப் பத்திரிகையொன்று சிகழும் ஏப்பிரல்மீ 2வ முதல் பாளையங்கோட்டையிலிருந்து வாரம் இரு முறை வெளிப்பட்டு வருகின்றது. தென்னாட்டில் நல்ல சமாசாரப்பத்திரிகையொன்று இல்லாத குறையை இது வந்து நீக்கிற்றென்னலாம். இதனை முன்னின்று நடாத்துவோர் தக்க கௌரவமுள்ள மகா-ா-ா-ஸ்ரீ வேதமூர்த்தி முதலியாரவர்களே. இவர் விடாமுயற்சியும் பொது நலப் பிரியமும் உடையர். இன்னும் தமிழபிமான சிலர் பலர் இதற்குத்துணை புரிய முற்பட்டுள்ளார்கள். ஆதலின் இது நீடித்து நன்கு நடைபெற்று நம் நாட்டுக்கு பல நன்மைகளைச் செய்யும் என்பது நிச்சயம். இதற்கு வருஷ சந்தா ரூ ஐந்து தான். பத்திரிகையில் வெளிப்படும் விஷயங்கள் இனிய நடையில் தெளிவுபெற்றுள்ளன. தமிழ் நாட்டார் அவசியம் அறிந்துகொள்ளத்தக்கன. எமக்கு வந்த பத்திரிகை நம்மனத்தை மிகவும் மகிழச்செய்தது. தமிழ் நாட்டுக்கனவான்கள் பலரும் இதனைப்பெற்று ஆனந்தமடையுமாறு வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

அறிவிப்பு:—நமது பாநுவின் பாக்கிசந்தாதார்கள் பெருங்கருணை செய்து இவ்வருஷசந்தாவை மணியாடர் அனுப்பவேண்டுகிறோம். ஒவ்வொருவருக்கும் தனித்தனிகடிதமனுப்புவது எமக்கு சிரமமும் பொருட்செலவுமாகின்றது. சந்தாதார்கள் மௌனம் சாதிக்காமல் தயவுசெய்து சந்தாத்தொகையை அனுப்புவார்களானால் மிகவும் உபகாரமாகும். நமது நண்பசிகாமணிகளான சிலர் பாநுவின் ஆக்கங்கருதி பற்பல சந்தா சேர்த்து அனுப்பிவருகிறார்கள். இவர்களுக்கு இடையறாது நன்றி பாராட்டி வந்தன மளிக்கின்றோம். அன்னவருபகார வன்மையைப்பற்றி இந்த வால்யூம் முடிவில் விளக்குவோம். இன்னுஞ் சிலர் நம் நேரில் விஸ்தாரமாகப் பேசிவிட்டுத் தமது சந்தாவையும் இன்னும் அனுப்பாமல் தாங்களும் எம்மீது பேரன்புடையவராகவும் தமிழபிமான மிகவுடையராகவும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னோர் தமது சந்தாப் பாக்கியையேனும் அனுப்புவார்களானால் அதுவே எமக்கு நன்றியாய் முடியும். சற்றே கவனிப்பாராக.

பத்திராதிபர்.

சமாச்சாரக்கொத்து.

சீனாவில் ஐம்பது லட்சம் கூலியாள்கள் பட்டுவேலை செய்வதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள்.

*   *   *   *   *

இவ்வுலகில் பெண்களே இல்லாத நகரம் ஒன்று ருஷியாவுக்கருகில் உண்டு. அதன்பெயர் மெய்வாட்சின்.

நேர்ட் பட்டணத்தில் நாய்கள் போலீஸ்காரர்கட்கு உதவியாக இராக்காலங்களில் உலாவித்திரிகின்றன. அப்பட்டணத்தில் அதனால் திருட்டுத்தனம் குறைந்திருக்கின்றதாம்.

* * * * *

மலீதரின் உரோமத்தால் மிகவும் அழகான படங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் அவ்வாறான படங்கள் செய்தற்கு மிக நாட்செல்லுகின்றன. அவற்றின் விலையுமதிகமே. விக்டோரியா படம் செய்தற்கு 200-பவுன் செல்லுமாம்.

* * * * *

கைரோ பட்டணத்தில் மரப்பிரதிமை யொன்றிருக்கிறது. அது ஸிகமோர் என்ற மரத்தால் செய்யப்பட்டது. அது அங்கு ஆறாயிர வருஷங்கட்குமே லிருப்பதாகவும் இன்னும் உறுதியான நிலையிலிருப்பதாகவும் தெரியவருகிறது.

* * * * *

ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட பலநாடுகளில் பிஜிதீவுமொன்று இந்த ஒரு ஊராரிடத்தில் மட்டுந்தான் கவர்ன்மெண்டார் தங்கள் வரியை முற்காலத்தரசர்களைப்போல தானியமாகப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். முக்கியமாய்த் தேங்காய் வாங்கப்படுகின்றன.

* * * * *

வடசமுத்திரத்தில் கில்டைன் என்ற ஒரு தீவு உண்டு. அதில் மிக அற்புதமான ஒரு ஏரியிருக்கிறது. அந்த ஏரியின் மேல்பரப்பிலுள்ளது நல்லஜலம்; அதில் சுத்தஜலத்தில் வாழும் பிராணிகளிருக்கின்றன. அதன் அடிப்புறத்தில் இருப்பது கடல்நீர் போன்ற உப்புஜலம்; அதில் சமுத்திரத்தில் வாழும் ஜந்துக்கள் வசிக்கின்றன. ஈசுர சிருஷ்டியின் அற்புதத்தை அளவிட யாவராலுமாகாது.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவும் தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு ... ரூ 35
2. மகா-ா-ா-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு. ... ... ரூ 25
3. மகா-ா-ா-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ... ரூ 10
4. மகா-ா-ா-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமீந்தார்தேவிகோட்டை வரவு... ரூ 25

இவர்கள் 1903 வருஷத்திலும் 25ரூ நன்கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

5. மகா-ா-ா-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதும்பை. சிலோன் வரவு ... ரூ 25

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 JUN 1904
MADRAS

உ
குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904௵ மேமீ } புத்தகம் 5.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மூன்றாம் வருஷோற்சவம்.

நிகழும்மேமீ 24உ மாலை $3\frac{1}{2}$மணிக்கு மதுரை சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியாஹாலில் இவ்வுற்சவம் கொண்டாடப் பெற்றது. இதன்பொருட்டு மதுரையிலிலுள்ள பிரபுக்களும், வித்துவான்களும், சென்னை, தஞ்சை, திரிசிரபுரம், கோயமுத்தூர், திருநெல்வேலி, முதலிய இடங்களிலுள்ள வித்துவான்கள் சிலரும் வந்து கூடினார்கள். இச்சங்கத்தின் வைஸ்பிரஸிடெண்டு மகா-ா-ா-ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். காரியதரிசியவர்களால் அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. கனம் இராமலிங்கச்செட்டியாரவர்கள், பீ. ஏ., கனம் கோபாலாசாரியாரவர்கள், கனம் நா. வேதாசலம்பிள்ளையவர்கள் இம்மூவரும் அறிக்கைப்பத்திரத்தால் அறிந்தவிஷயங்களைப்பற்றி வியந்துபேசி ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்கள் ஊக்கத்தையும், வள்ளற்றன்மையையும் ஏனைக்குணங்களையும்பற்றி நன்கெடுத்துக்கூறினார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் இவ்வெல்லாவற்றையும் பற்றி அரைமணிநேரம் செவ்விது பேசிமகிழ்வித்தார்கள். அப்பால் போனகிராப் வாத்தியப்பெட்டியால் யாவருக்கும் களிப்பூட்டப்பட்டது. சந்தனதாம்பூலாதிகளால் உபசரிக்கப்பெற்றுச்சபைகலைந்தது.

மறுதினம்காலை $8\frac{1}{2}$ மணிக்கு அந்தஇடத்தில் சங்கஅங்கத்தினர்கள் கூடினார்கள். ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்கள்

அக்கிராசனம்வகித்தார்கள். தமிழில் அகராதியொன்று எழுதுவதற்கு எல்லாவித்துவான்களும் முயலவேண்டுமென்றும், இன்னின்னார் இன்னின்ன நூல்களிலுள்ள அரும்பதங்களையொழுங்குற எழுதிவரவேண்டுமெனவும் முடிவுசெய்யப்பட்டது. இவ்வருஷத்தில் நடத்தவேண்டிய பரீக்ஷைக்கு அதிகாரிகள் நியமித்தல் முதலியவற்றை ஏற்படுத்துமாறு 9 வித்துவான்கள் அடங்கிய சப்கமிட்டி ஏற்படுத்திச்சபைகலைந்தது.

அன்றுமாலை $4\frac{1}{2}$ மணிக்கு மீட்டும் சபைகூடிற்று. இச்சபையின் தோற்றச்சிறப்பைப் பின்னாட்களில் பலரும் கண்டுகளிக்குமாறு புகைப்படம் எடுக்கப்பட்டது. கனம் பி. குருராவ்அவர்கள் மொழிபெயர்த்த சாகுந்தலமும், கனம் சாமிநாத முதலியாரவர்களியற்றிய மங்கையர்க்கரசியார் சரித்திரவெண்பாவும் வாசிக்கப்பட்டன.

மூன்றுநாள்காலை $8\frac{1}{2}$ மணிக்கு சப்கமிட்டி 9 பேர்களும் கூடினார்கள். ஆங்கில கலாசாலை மாணவகர்களைப் பரீக்ஷிக்கும் முறைகளெல்லாம் விதித்ததுடன், நாகர் கோவிலையும் பரீக்ஷை நடத்தற்குரிய இடமாக்கினார்கள்.

மாலை 4-மணிக்கு வித்துவக்கழகம் கூடிற்று. டிஸ்திரிக்டு முன்சீபு கனம் நல்லசாமிபிள்ளையவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்தார்கள். யதார்த்த பாஸ்கரன் பத்திராதிபர் கனம் விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள் பி. ஏ. ஆங்கிலத்தில் சர்வசமய சமரசம் என்பதைப்பற்றி யுபந்யசித்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் தமிழபிவிர்த்தியைப்பற்றித் தமிழில் பிரசங்கித்தார்கள். இவ்விரு பிரசங்கங்களையும் பற்றிச் சபாநாயகர் ஆங்கிலத்தில் வியந்து பேசிமுடித்தார்கள். காரியதரிசியவர்களெழுந்து எல்லாருக்கும் வந்தனோபசாரங் கூறினர். இவ்வாறாக இந்த வருஷோற்சவம் மிகச் சிறப்புடன் நிறைவேறிற்று. தமிழ்ச்சங்கம் நீடுவாழுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

(சர்வஜன மித்திரன்)

"ஆலயம்" என்னும் சப்தார்த்தம் இன்னதென்பதூஉம் ஆலயம் இத்தனை வகுப்புடைய தென்பதூஉம், ஆலயத்தை வழிபடற்குரியார் இவரென்பதூஉம், ஆலயவணக்கமே முத்தியடைதற்குச் சிறந்த சாதனமா மென்பதூஉம், நமது பெரியோர்களாகிய ஞானிகளும் ஆலய வழிபாடுசெய்துள்ளாரென்பதூஉம், ஒரு சிறிது விளக்குவாம்.

"ஆலயம்" என்னும் சொல் "ஆ"—"லயம்" எனப்பிரிந்து பசு [ஆன்மா] வின் ஒடுக்கம் எனப்பொருடரும். தாவே ஒடுக்கத்துக்கு நிலைக்களமாயொன்று வேண்டும். அது சிவம் (பிரமம்). ஆகவே ஆன்மா சிவத்திலொடுங்குதல் [கூடஸ்த பிரமஐக்கியம்] ஆலயம் என்னுஞ் சொல்லின் உண்மைப் பொருளாமென்க.

இனி அவ்வாலயம் அண்டாலயம், பிண்டாலயம், மானதாலயம், பிரதிட்டாலயம் என நான்கு வகைத்து. இவற்றுள் அண்டாலயமாவது யாதெனின், பஞ்சபூதங்களும் ஐந்து திருமதில்கள், குண்டலினி சத்தி தூலலிங்கோபுரம், ஆவரண சத்தி பலிபீடம், விக்ஷேபசத்தி துவஜஸ்தம்பம், ஜீவன் நந்தி, முக்குண அராகதத்துவம் சூக்குமலிங்க உட்கோபுரம், மூலமலம் துவாரபாலகர், வித்தியாதத்துவம் காரணலிங்கம், போதானந்த பரவசசாந்த ஞானாக்கினியே மகாகாரணலிங்கம். நாததத்துவம் சுப்பிரமணியர், விந்துதத்துவம் கணபதி, சுத்தவித்தை சண்டிகேசுரர், சர்வஸ்திதிசத்தி விஷ்ணு, சர்வசிருஷ்டிசத்தி பிரமதேவர், சர்வபிராப்திசத்தி உற்சவமூர்த்தி, சர்வஞானசத்தி தக்ஷிணாமூர்த்தி, சர்வதியாகசத்தி பிக்ஷாடனமூர்த்தி, சர்வவித்தை கலைக்கியானசத்தி சரஸ்வதி, சர்வமங்களசத்தி லக்ஷ்மி, பஞ்சகிருத்திய விருத்திக்கிரம அசைவு பார்வதி. பஞ்சகிருத்திய விருத்திலயசத்தி தியாகேசர். பஞ்சகிருத்திய ரகசியவிராட் ஈஸ்பரசத்தி நடராசர், அநாதிநித்திய சத்தி சிவஐக்கியம் சிவலிங்கம் இவையே அண்டாலயமென்க.

இனி, பிண்டாலயமாவது யாதெனின், ஐந்துவித சரீரம் அல்லது கோசம் திருமதில்கள். குண்டலினித்தானம் தூலலிங்கோபுரம், உந்தித்தானம் பலிபீடம், இருதயத்தானம் துவஜஸ்தம்பம், கண்டத்தானம் நந்தி, வாக்குத்தானம் சூக்குமலிங்கவுட்கோபுரம், நாசித்தானம் துவாரபாலகர், நாசிகாந்தத்தானம் உள்நந்தியாகிய காரணலிங்கம், புருவமத்தியத்தானம் மகாகாரணலிங்கம், இடதுநேத்திரத்தானம் சுப்பிரமணியர், வலது நேத்திரத்தானம் கணபதி, இடது காதுத்தானம் சண்டிகேசுரர்" இதற்குத்

தக்ஷிணபாகம் விஷ்ணு, உத்தரபாகம் பிரமா, இதற்கும் உத்தரபாகம் உற்சவமூர்த்தி, வலது காதுத்தானம் தக்ஷிணாமூர்த்தி, இதற்கு உத்தரபாகம் பிக்ஷாடனமூர்த்தி, இதற்கும் உத்தரபாகம் சரஸ்வதி, தக்ஷிணபாகம் லக்ஷுமி, மஸ்தக இடதுபாகத்தானம் பார்வதி, மஸ்தகவலதுபாகத்தானம் தியாகேசர், மஸ்தகமத்தியத்தானம் நடராஜர். பிரமரந்தரத்தானம் சிவலிங்கம், இவ்வாறாகப் பிண்டத்தில் விளங்குவதே பிண்டாலயமாமென்க.

இனி, மானதாலயமாவதியாதெனின், திருமதில்கள், கோபுரங்கள், பலிபீடம், துவஜஸ்தம்பம், நந்தி, மூர்த்தி முதலியனவெல்லாம் மனதினாற் பாவித்துக் கொள்ளுதலாம் என்க.

இனி, பிரதிட்டா ஆலயமாவது யாதெனின், திருமதில்கள், கோபுரங்கள், பலிபீடம் துவஜஸ்தம்பம், நந்தி, உள்நந்தி, சிவலிங்கம், பார்வதி, ஏனையமூர்த்திகள், முதலியனவெல்லாம் உருவமாக மந்திரம், கிரியை பாவனைகளால் அமைக்கப்பெற்று இப்பூமியின் கண் விளங்கும் ஆலயமாம் என்க. இவ்வாலயமும் இதில் நாடோறும் நடக்கும் ஆராதனைகளும் அண்டாலய, பிண்டாலயங்கட்குக் கூறியதத்வார்த்தங்களாகவே அமைக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் ஈண்டுவிரிக்கிற் பெருகுமென்றஞ்சி விடுத்தாம்.

இனி, இவ்வாலயங்களை வழிபடற்குரியர் யாவரெனின், ஞானிகள் அந்தர்முகத்தில் அண்டாலயத்தையும், பகிர்முகத்தில் ஏனைய ஆலயங்களையும், சித்தர்கள் அந்தர்முகத்தில் பிண்டாலயத்தையும், பகிர்முகத்தில் ஏனைய ஆலயங்களையும், யோகிகள் அந்தர்முகத்தில் மானதாலயத்தையும் பகிர்முகத்தில் பிரதிட்டா ஆலயத்தையும், கிரியைசரியையாளர்கள் அந்தர்முகத்திலும், பகிர்முகத்திலும் பிரதிட்டா ஆலயத்தையும், வழிபடற்குரியாரென்க. கிரியையாளர் செய்யும் அந்தரியாக பூசையானது யோகிகளின் வழிபாட்டையொத்ததாம்.

இனி, ஆலயவணக்கமே முத்தியடைவதற்குச் சாதனமாமென்பதை விளக்குதும். இவ்வாலயம் நான்கனுள் அண்டாலயமே வேதாந்த சித்தாந்த நூல்களிற் கூறப்பட்டுள்ள ஒப்புயர்வில்லா மெய்ப்பரம்பொருளின் உண்மைநிலை. இந்நிலையை எய்துவதற்கு சித்தருக்கும், யோகியருக்கும் முறையே பிண்டாலய, மானதாலயவழிபாடு சிறந்தசாதனமாகும். அத்தகைய நிலையையுடையதாய் சர்வ உலகங்களும், சர்வ அண்டங்களும், சர்வ ஆன்மாக்களும், தனது சிதாகாச வியாபகத்தின்கண்ணே மடங்கி அடங்கிக் கிடப்ப அவற்றின்மேல் விரிந்துசென்று முடிவிடமறியப்படாத வியாபகம் உடையதாய், ஞானமங்கள சொரூபமுடையதாய், சர்வ சத்தியையுடையதாய், ஆனந்தம் நிரம்பித்ததும்பும் திப்பியசாகரமாய், பரமகருணாநிதியாய், விளங்கும் முழுமுதற்கடவுளை சிறுகிய அறிவும், சிறுகியதொழிலும், சிறுகி

யறிந்ததனையும் மறந்து மறந்து அறிதலும், மயங்கி அறிதலுமுடைய, கிஞ்சிஞ்ஞராகிய ஆன்மாக்கள் (ஜீவர்கள்) உணர்ந்து உபாசித்து உய்யும்பொருட்டு ஒரோர்காலங்களில், ஒரோரிடங்களில், ஒரோரன்பருக்குக் கன்றை நினைந்துவரும் புனிற்றாப்போலவும், விறகின்கட்பிறந்த தீப்போலவும், மோரின்கட்டிரண்ட வெண்ணெய்போலவும், வித்தின்கட் பிழிந்தெடுத்த எண்ணெய் போலவும் வெளிப்பட்டு அநுக்கிரகஞ்செய்த அருட்கருணைத் திருக்கோலங்கள் எழுந்தருளப்பெற்றிருக்கும் பிரதிட்டா ஆலயத்தை வழிபடல்வேண்டும் வழிபடவே சித்தசுத்தியுண்டாம். உண்டாகவே நித்திய அநித்திய உணர்வு தோன்றி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் ஞானகுருவைத் தேடவரும். வரவே இதுகாறும் உண்ணின்றுணர்த்திய பரம்பொருளே முன்னின்றுணர்த்தக் குருவடிவாயெழுந்தருளி ஞானோபதேசத்தைச் செய்து முத்தியிற் சேர்க்கும். இவ்வாலயவழிபாடு சித்தசுத்தியைத்தருமென்றல் யாங்ஙனமெனின்; ஆலயத்துட்சென்று பிராகாரம்வருதல் சரீரங்களைக் கடந்ததாகவும், பலிபீடம் துவஜஸ்தம்பம், நந்தி இவைகளை வணங்கி உட்செல்லல் ஆவரண, விக்ஷேபம், பசுத்துவமாதியவற்றைக் கடந்ததாகவும், சிவலிங்கப்பெருமானை வணங்குதல் ஆன்மா சிவத்துடன் லயமானதாகவும் கருதி வழிபடுதலாமென்க. இவ்வுண்மையை யறியாது வழிபடினும் சர்க்கரை என்பது அறியாது நாவிலிட்டாலும் தித்திக்கல் ஒருதலையேபோல சிவபுண்ணியமுண்டாம். உண்டாகவே முத்தியடைவார்க்குரிய உத்தம குணங்களெல்லாம் ஒருசேரவரும். வரவே மேற்சொல்லிய சித்தசுத்தி முதலியனவந்து ஞானகுருவை அடையப்பெறுவன். இதுபற்றியே

"மூர்த்தி தலந்தீர்த்த முறையாய்த்தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனத்தாயுமான சுவாமிகளும்,

"சரியை கிரியாயோகப்பதத்தின் முற்றிச்
சாதனங்க ணிறைந்தவர்க்கே சாற்றல்வேண்டும்" எனவும்,

"சிங்காமலிதுதனை நீ தெளிவளவும் நாலுபுயத்தேவையேத்து"

எனவும் ஞானவாசிட்டத்தினும்,

"பத்திபுரியின் மூவடிவிற் பண்டார் வினைகள் சமமாகும்"

என மகாராஜ துறவினும்,

"ஆலயந்தொழுவது சாலவுநன்று"

என ஔவைப்பிராட்டியாரும்,

"தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன்கோயிற்
றலமலகிட்டிலகு திருபெழுக்குஞ்சாத்தி"

எனச்சிவஞானசித்தியாரினும் கூறியவாறுகாண்க. இன்னோரன்ன பிரமாணங்களினும்பலவுள. அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

இனி, ஞானத்தை அடைய விரும்புஞ் சாதகரன்றி அடைந்துள்ள ஞானிகட்கும் இப்பிரதிட்டா ஆலயவணக்கம் வேண்டற்பாலதே. என்னுக்கெனின்; பிரமவித்து, பிரமவரன், பிரமவரியான், பிரமவரிட்டன் என முத்தர்கள் நால்வகையினர். இவருள் பிரமவரிட்டனாகிய பரமுத்தனுக்கு எவ்வாற்றானும் பாஹ்யவுணர்ச்சிநிகழ்வதில்லை. ஜீவன்முத்தராகிய ஏனைய மூவர்கட்கும் உடம்புளதாகலின் அதுநிற்குமளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப்பற்றி நிற்றலான் அஃதவர்க்கு ஒரோவழிவாசனைவயத்தான் இங்குளிவாங்குங்கலம்போலவந்து தாக்கும். அவ்வழிப் பிறசெயாதநுபவிப்பதின்றாகலின் அதுசார்வாக விருப்பு, வெறுப்புகளுளவாம். அவையுளவாகவே பரமேபார்த்திருப்பார்க்கு நிலமுதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும். படவே அவற்றைச்சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்து பிறவிக்கு வித்தாம். இவ்வாறு விருப்பு, வெறுப்பு ஏகதேசப்பொருள் காட்சி, விபரீத உணர்வு ஆகிய மூன்றும் அறிவுற்றம்பார்த்து இம்முறையானே வந்துதலைப்படும். இவை சிவபோகப் பெருவாழ்வை இழப்பித்தலின் மெஞ்ஞானிக்காகா. எனவே ஞானிகளுக்கும் புறத்துச்செயல் நிகழ்ந்துழி அச்செயல் நானகாவதாகச் சொல்லப்பட்ட பிரதிட்டா ஆலய வழிபாட்டினிகழச்செய்தல் வேண்டும். அங்ஙனம்செய்வார்க்கு வாசனைபற்றி நிகழுங்குற்றங்கள் வந்து தாக்காது. இதுபற்றியே

'ஆலயந்தானு மரனெனத்தொழுமே'

என சிவஞானபோதத்திலும், "வாசனாக்ஷயத்திற்குப் பிரதிகூலவாசனையின் பழக்கஞ்சாதன" மென சீவன்முத்திப்பிரகரணத்தினும் கூறியவாறு காண்க. மேற்கூறியவழிபாடு சீவன்முத்தர்க்குத் தாமே யுளவாமிலக்கணமாதலின் விதியாக வைத்தோதியதெற்றுக்கெனின்! உயிர்க்குயிராகிய முதல்வன் உயிர்ப்பொருள், உயிரில்பொருளெல்லாவற்றினும் கலப்பானதுவதுதானாகியும் பொருண்மையா லல்லனாகியும், நிற்பனாகலான் அதுவதுதானாய்க் காணுங்காட்சிபற்றி எய்தியவழிபாடு அல்லனாய் நிற்றலைக்காணுங் காலெய்தாது. அவ்வழியும் எய்துவிக்க ஆலயவழிபாடு இன்றியமையாது, வேண்டற்பாலதாதலின்என்க. இங்ஙனம் ஞானம் வருவதற்கும், வந்தபின் சலியாது நிறுத்துவதற்கும் பிரதிட்டா ஆலயவழிபாடு ஞானிகட்கும், ஏனையோர்க்கும் இன்றியமையாது வேண்டப்படுஞ்சிறந்த சாதனமாம்

இனி நமது பெரியோர்களாகிய ஞானிகளும் ஆலயவழிபாடு செய்துள்ளார்களென்பதை விளக்குதும். பசுவினது சரீரமுற்றும் நிறைந்துள்ள பால் கறப்பார்க்கு முலைக்காம்பின் வழித்தாய்ச் சுரத்தல் போல உலகமுற்றும் நிறைந்த சிவம் வழிபடுவார்க்குப் பிரதிஷ்டா மூர்த்தியின் வழித்தாய் அருள் செய்யுமென்பது சுருதி, யுக்தி, அநுபவப் பிரமாணங்களால் நிறுத்

தப்படுவதொன்றாம். இன்னோரன்னவற்றானன்றே ஸ்ரீ ஞானசம்பந்தராகிய பரமாசாரிய மூர்த்திகள், ஸ்ரீ பட்டினத்து அடிகள் முதலிய சிவஞானச் செல்வர்களெல்லாம் பிரதிட்டா ஆலயங்டோறும் சென்று பாடியாடித் துதித்து வழிபடுவாராயினர். இன்னும் வேதாந்தத்துக்கு முதலாசிரியராகிய ஸ்ரீ ஆதிசங்கராசாரியஸ்வாமிகளும் சந்திர மௌலீசுரரை வைத்துப் பூசை செய்ததூஉம், மற்றும் பிரதிட்டா ஆலயங்டோறுஞ் சென்று வழிபாடியற்றியதூஉம், அப்பரம்பரையிலுள்ளார் இன்னும் அங்ஙனம் வழிபாடு செய்து வருவதூஉம், உலகப்பிரசித்தமானதன்றே. இன்னும் கொங்கணர் தாஞ்செய்த கடைக்காண்டம ஐநூறில்

"—பூசிப்பார்பொற் றகட்டில் விக்கிரகத்தில்
பூமேருகொண்ட கையில் சாளக்கிராமம்,
பூசிப்பாரிதற்கெல்லா மனமுரைத்தால்
புகட்டலாம் புருவமையம் புகட்டலாமே"

என்று கூறியுள்ளாராதலின் அவர்க்கும் இயந்திர பூசை, விக்கிரக பூசை, சாளக்கிராம பூசை உடன்பாடென்பது பெற்றாம். அம்மட்டோ இப்பூசைகளில் மனம்உரைத்தார்க்கே பிண்டாலய வழிபாடு கூறல் வேண்டுமென்பதூஉம் குறிப்பித்துள்ளார். இனி அகத்திய மகா முனிவர்பால் ஹாலாஸ்ய மகாத்மியங்கேட்ட வசிட்டாதி முனிவர்கள் கூடற்பிரானையர்ச்சித்து வழிபடற்காசையுடையோமென்ன அதற்கு அகத்திய மகா முனிவர் மகிழ்ந்து அவரோடு தென்றிசை நோக்கி எழுந்து வருமார்க்கத்திலுள்ள பல சிவாலய வழிபாடு செய்து கூடற் க்ஷேத்திரத்தையடைந்து ஆலய வழிபாடு செய்தமையைத் திருவிளையாடற் புராணம் அருச்சனைப்படலத்துள்ள அடியில் வருஞ்செய்யுட்களானும், ஏனைய செய்யுட்களானும் தேறுக. அச்செய்யுட்கள் வருமாறு:—

"கோட்டஞ்சிலை குனித்தகூடற்பிரானுடல்
கேட்டஞ்செவிபடைத்தபேறடைந்தேங்கேட்டபடி
நாட்டங்களிப்ப நறுமலர் தூஉய்க்கண்டிறைஞ்ச
வேட்டங்களியாங்களென வோதினர் மெய்த்தவரே."

"என்றவறவோரெதிரே முகமலர்ந்து
குன்றமடக்குங்குறு முனிவன் கூறுவா
னன்று முனிகாளிதனை நானுள்ளத் தெண்ணியாங்
கொன்றமொழிந்தீரென்றான் பின்னும் வியந்தோதுவான்."

"அஞ்செவியினூறுபடக் கேட்டபடியாலவாய்ப்
பஞ்சமுகச்சோதிப்பரனைப் போயர்ச்சித்து
நெஞ்ச நெகக்கண்டு நினையாவழி நினைந்து
வஞ்சவினை வேர்களைவான் வம்மின்களென்றானே."

அன்றியும் கல்வியில்லாத ஒருவனுக்கு அதைக் கற்பிக்கத் தொடங்குகையில் அவனுக்கு முதலில் அக்ஷராப்பிராசஞ் செய்விக்கவேண்டும். அங்ஙனஞ் செய்விக்குங்கால் முதல் அந்த அக்ஷரங்களை எழுதிக் காட்டிப் பின்பு உச்சரித்துக்காட்டல் வேண்டும். கண்ணினாலே பார்த்தும், வாயினாலே உச்சரித்தும் அறிந்துகொண்ட எழுத்தையே பின்பு மனதிற் பதித்துக்கொண்டு ஒருவன் அநுஸந்திக்கிறான். கண்வாய்களுக்கு அது விஷயமாகாதபோது மனதுக்கும் விஷயமாகாது. கண்ணுக்கு விஷயமானதை வரிவடிவென்றும், வாக்குக்கு விஷயமானதை ஒலி வடிவென்றும், மனதுக்கு விஷயமானதைத் தியான வடிவென்றும் அறிந்த அக்ஷர லக்ஷணத்தை அங்கீகரிக்குமாபோல பரனை விக்கிரகமாகத் தெரிசிப்பது சொரூப ஆராதனமென்றும், சந்திரசேகராதி மூர்த்தங்களைப் புகழ்வது நாமார்த்த வைபவமென்றும், அவனது சொரூப வாணங்களையும் அவனது நாம வைபவங்களையும் உள்ளத்திற் கொண்டு மகிழ்வது தியான வைபவமென்றும் அங்கீகரித்து மேலோரனுஷ்டித்து வருகின்றார்கள். எழுத்தினது வரி வடிவை வேண்டாத போது அதனது தியான வடிவு கைகூடாது; அதுபோல பரனது விக்கிரக வடிவை வேண்டாதபோது அவனது தியான வடிவு கைகூடாது. இன்னும் ஆங்கில நாட்டுப் பிரதம பண்டிதராயிருந்த மாக்ஸ் மூலர் ஜர்மானிய தொழிற்சாலை சிதர் துண்டுகள் முதற் புத்தகம் (Chips from a German work-shop Vol. 1.) முகவுரையில் பரதகண்டத்துள் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே. ரோம் முதலிய தேசங்களில் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே. முன்னையதிற் பரமான்மாவின் சரீரங்களாக வணங்கப்படுகின்றன; பின்னையதில் விக்கிரகங்களே அவ்வாறு வணங்கப்படுகின்றன. இங்ஙனமாயின் இந்து மக்களை நாம் குறை கூறுதலென்னை? என்னும் பொருள் தருமாறு எழுதுவாராயினர். இவை போன்ற பிரமாணங்களின்னும் பலவுள. அவற்றை யாம் பின்னரெழுதும் "விக்கிரகாராதனம்" என்னும் விஷயத்திற் கண்டுதெளிக.

இது காறுங் கூறிய வாற்றாற் போந்த தொகைப் பொருளாவன:— அண்டாலயம், பிண்டாலயம், மானதாலயம், பிரதிட்டா ஆலயம் என நான்கினுள் அண்டாலயமே பரம்பொருளின் மெய்ந் நிலையமென்பதூஉம், ஏனைய மூன்று ஆலயங்களும் இது வருவதற்குச் சாதனமென்பதூஉம், அவற்றுள்ளும் ஞானம் வருவதற்கும், வந்தபின் சலியாது நிற்றற்கும் பிரதிட்டா ஆலய வழிபாடு சிறந்த சாதனமென்பதூஉம், இவ்வாலய வழிபாடு ஞானிகளுஞ் செய்துள்ளாரென்பதூஉமென்க. சுபம்!

பொ. மு. முத்தையபிள்ளை.
சப்காரியதரிசி,
சைவசித்தாந்தசபை, மேலவூர், தூத்துக்குடி.

மனிதனது எழுகூறு.

இவ்வுண்மையை "இறந்தபின் வெளிவந்த மனிதர்" என்னும் நூலில் கூறியிருக்கும் எமிலிஸாகீ என்பவளது விருத்தாந்தம் நன்கு விளக்கும்.

மாணக்கர்களுக்கு புத்தகவித்தையுடன்கூட நல்லொழுக்கமும், நற்சிந்தையும், நற்புத்தியும் நற்குண சம்பத்தும், மனோதிடமும் படியவேண்டுமானால் அவர்கள் எப்பொழுதும் உபாத்தியாயர்களுடைய மேற்பார்வையிலும் சவரக்ஷணையிலும் இருந்து வாசிக்கும் காலத்தில் வாசித்தும் விளையாடுங்காலத்தில் அவர்களுடன் விளையாடியும் போஜனத்தின்போது அவர்களுடனிருந்து போஜனமுஞ்செய்தல் வேண்டுமென்று மேனாடுகளில் இதற்குத்தகுந்தபடி மாணக்கர்களும் உபாத்தியாயர்களும் வசிக்கவும் படிக்கவும் ஒரேயிடமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்களுக்கு "போர்டிங்ஸ்கூல்" (Boarding School) என்று பெயர். இப்பள்ளிக்கூடங்களில் தாய் தகப்பன்மார்கள் பிள்ளைகளையனுப்பி அவர்கள் படிப்புக்கும் உணவுக்கும் உடைக்கும் வேண்டிய திரவியம் பள்ளிக்கூட அதிகாரிகளுக்குக் கட்டிவிடுவார்கள். பெண்களுக்கும் இவ்விதப்பள்ளிக்கூடங்கள் உண்டு. அவைகளில் உபாத்திகளெல்லாம் பெண்களேதாமிருப்பார்கள். 1845ம் வருஷத்தில் இப்படிப்பட்ட பெண்பள்ளிக்கூடம் ஒன்று லிவோனியா என்னும் ஊரில் இருந்தது. இப்பள்ளிக்கூடத்தில் 42 பெண்கள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லாம் பிரபுவம்சத்தைச் சேர்ந்தவர்கள். இதில் உதவி உபாத்திகளில் ஒருவள் எமிலிஸாகீ என்பவள். அவள் வயது 32 தேகசவுக்கியம்பொருந்தியவள். ஆனால் மிகவும் கூச்சமுள்ளவள். அவள் பள்ளிக்கூடத்து வேலையிலமர்ந்து சில வாரங்களுக்கப்புறம் அவளிடத்தில் விநோதம் ஒரு விநோதம் வெளியாயிற்று. ஒரு பெண் இவ்வுபாத்தியை ஒருவிடத்தில் கண்டதாகச் சொன்னதும் இன்னொருபெண் அதேகாலத்தில் அவளை வேறு இடத்தில் கண்டதாகச்சொல்லுவாள். ஒருநாள், பள்ளிப் பெண்கள் எல்லாம் திடீரென ஒரேசாயல் பொருந்தி ஒரேவிதமான அங்கசேஷ்டைகள் செய்யும் இரண்டு எமிலிஸாகீ ரூபங்களைக்கண்டார்கள். ஆனால் ஒரு வித்தியாசமாத்திரங் காணப்பட்டது. ஒரு உருவம் கையில் "சாக் பென்ஸில்" (Chalk Pencil) என்னும் சீமைச்சுண்ண எழுதுகோல்பற்றியிருந்தது மற்றதில் இல்லை. வேறொருகாலத்தில் "ராங்கல்" (Wrangel) என்னும் பிள்ளை உடையணிந்துகொள்ள எமிலிஸாகீ பின்னால் முதுகு பக்கம் உடுப்பின் கொளுவிகளைப் பூட்டிக்கொண்டிருந்தாள். இச்சிறியள் திரும்பி கண்ணாடியைப்பார்த்தபோது அதில் இரண்டு எமிலிஸாகீகள் பின்

ளுல்நின்று கொருவிக்கொண்டிருக்கக்கண்டு பயந்து மூர்ச்சையடைந்து விழுந்துவிட்டாள். சிலவேலைகளில் இந்த உபாத்தி மேஜையின்மேல் அந்நாட்டார்வழக்கப்படி உணவுகளைவைத்து குரிச்சியிலுட்கார்ந்து அவள் சாப்பிடும்போது அவயவங்களிலுண்டாகும் அசைவுகளைப்போலவே அவளது நுண்பூதவுடல் குரிச்சிக்கும் பின்புறம்நின்று பாவனை காட்டும். ஆனால் நுண்பூதச்சாயலின் கைகளில் கத்தியாவது முள்ளாவது இருக்கிறதில்லை. சிலகாலங்களில் எமிலிஸாகீ குரிச்சியிலிருந்தெழுந்திருந்தால் அவள் நுண்பூதச்சாயல் உட்கார்ந்தேயிருக்கும். ஒருநாள் எமிலிஸாகீ வியாதியுடன் படுத்திருந்தபோது ''ராங்கல்' (Wrangel) என்னும் பெண் அவள் பக்கலிருந்து அவளுக்கு ஏதோ படித்துக்கொண்டிருந்தாள். திடீரென எமிலி விளர்த்தும் விறைத்தும் சற்றுநேரத்திற்குள் மூர்ச்சைபோய்விடுவள்போல் காணப்பட்டாள். "ராங்கலீ" என்னும் பெண் தேகத்துக்கு அதிக வருத்தமாயிருக்கிறதோ வென்றுகேட்டாள். எமிலி இல்லையென்றனள். ஆனால் அவள் தொனியானது மிகவும் மெலிந்திருந்தது. சிலவினாடிகளுக்கப்புறம் எமிலியின் நுண்பூதச்சாயல் அந்த அறையில் மேலும் கீழும் உலாத்திக்கொண்டிருக்க "ராங்கலீ" தெளிவாய்ப்பார்த்தாள்.

ஒருநாள் அந்தப்பள்ளிக்கூடத்திலுள்ள நாற்பத்திரண்டு பெண் மாணாக்கர்களும் ஒரு அறையிலிருந்து சித்திரத்தையல் வேலை செய்துக்கொண்டிருந்தார்கள். அந்த அறையின் நான்கு வாசல்களும் எதிரில் பூந்தோட்டத்தை நோக்கியிருந்தன. இந்தத் தோட்டத்தில் அப்பொழுது எமிலி புஷ்பங்கள் கொய்து கொண்டிருக்க மாணாக்கர்கள் கண்டார்கள். அதே காலத்தில் அந்த அறையிலிருந்த சாய்ப்புக்குரிச்சியில் அவள் இருப்பதாகவும் தெரிந்தது. மாணாக்கர்கள் உடனே மறுபடியும் தோட்டத்தை நோக்கினார்கள். அவடத்திலும் எமிலியைக்கண்டார்கள். ஆனால் தோட்டத்தில் எமிலியின் மிகவுந் தளர்ந்த நடையையும் அவள் ஏதோ வருத்தப்படும் சாயலையும் மாணாக்கர்கள் கண்டார்கள். அதாவது அவள் சோம்பலாயும் தெளிவற்றும் மிகவுங்களைத்தவள் போலும் காணப்பட்டாள். மாணாக்கர்களில் மிகவுந் தைரியமான இருவர்கள் அவடம் சென்று அந்த எமிலியின் சாயாரூபத்தைத் தொட்டுப்பார்க்க முயன்றார்கள். அந்த ரூபத்தில் சற்று தடைதட்டுவதாக உணர்ச்சிக்குத் தெரிந்தது. ஒரு மஸ்லின் என்னும் துணியைத் தொட்டால் கைக்கு எப்படியிருக்குமோ அப்படி யிருந்ததென்று அவர்கள் ஒப்பிட்டுச் சொன்னார்கள். அவர்களில் ஒரு பெண் அந்த ரூபத்தின் ஒரு பாகத்தில் புகுந்து சென்றனள். அவள் புகுந்து போனபிறகும் சற்று நேரம் அந்தச் சாயாரூபம் அப்படியே கலையாமல் இருந்து பின்னல் படிப்படியாய் கரைந்து போனது போல் போய் விட்டது. எமிலி அந்தப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயிருந்தவரை அதாவது ஒன்றரை வருஷமும் இம்

மாதிரி தோற்றங்கள் மாணாக்கர்கள் கண்டுகொண்டேயிருந்தார்கள். மேலும் நுண்பூதச் சாயல் எவ்வளவு தெளிவாயும் தொடுவதற்கு மொத்தமாயும் இருந்ததோ அவ்வளவுக்குத் திண்பூதவுடலானது மெலிந்து களைத்துத் தளர்ந்து சோர்ந்தும் வருத்தமடைந்தும் இருந்தது என்று நன்றாகக் கவனிக்கப்பட்டது. இதற்கு மாறாக நுண்பூதச்சாயலின் தோற்றம் பலயீனமானபோது திண்பூதவுடலுக்குப் பலம் வந்தது. எமிலி தன் நுண்பூதச்சாயல் இப்படி வெளி வருவதை உணர்ந்ததில்லை. மற்றவர்கள் சொல்லத்தான் அவளுக்குத்தெரியும். எமிலியில் நிகழுந் தோற்றங்கள் மாணாக்கர்களின் பந்துக்களும் தாய் தகப்பன்மார்களும் கேட்டுப்பயந்து தங்கள் பிள்ளைகளை நிறுத்திக்கொண்டார்கள். பள்ளிக்கூடமும் ஒன்றரை வருஷத்தில் கலைந்து போய் விட்டது.

இக்காக்ஷி புதுமையாயினும் யோக சாஸ்திர ஆராய்ச்சியுள்ளவனுக்கு புதுமையேயன்று. திண்பூதவுடலின் ஜீவகளை அல்லது உயிர்க்களைக்கு நுண்பூதச்சாயலானது உபாதி அல்லது வாகனம் என்றும் நுண்பூதச்சாயல் திண்பூதவுடலை விட்டு அரைகுறையாய்ப் பிரிந்தாலும் கூட திண்பூத அணுக்கள் மேல் ஆடும் ஜீவகளையின் சக்தி அல்லது வேகம் குறைந்து போகும் என்றும் அவனுக்குத்தெரியுமாதலால் அவனுக்கு இவ்விதத்தோற்றங்கள் கலவரத்தைக்கொடாமல் பூரணதெளிவைக் கொடுக்கும்.

பிரவோர்ஸ்ட் பார்ப்பினி (Secress of Prevorst) முதலியவர்களைப் போன்ற தெளிநோக்கர்கள் கை கால் முதலியஉறுப்புகள் அறுபட்டுப்போன மனிதர்களின் உடலில் அந்தந்தஸ்தானத்தில் நுண்பூதக் கை கால் முதலிய உறுப்புகள் சேர்ந்திருப்பதைத் தாங்கள் பார்ப்பதாகச் சொல்லுகிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி டீஆஷியர் (D' Assier) பின் வருமாறு சொல்லுகிறார்.

" சுகரணவாதப்படிப்பில் நான் முழுகியிருந்தபொழுது ஒரு நூதனமான காரியம் அடிக்கடி எனக்குத் தட்டுப்பட்டுக்கொண்டேயிருந்தது. கையாவது காலாவது இழந்த மனிதன் விரல்களில்லாதிருக்கவும் விரல்கள் நுனியில் சில உணர்ச்சிகள் உணரும்படி சில வேலைகளில் உண்டாகின்றது. இதற்குச் சுகரணவாதிகள் அம்மனிதன் உணர்ச்சியாவது ஞாபகமாவது தலை கீழாய் மாறிப்போய் விட்டது என்று ஒரு சித்தாந்தத்தை வருவித்துக் கொண்டு அப்பால் தறிபட்ட முண்டத்தில் உள்ள நாடி மாத்திரம் தாக்கப்பட்டிருக்கவும் அம்மனிதனது விபரீதப்பட்ட உணர்ச்சியும் ஞாபகமும் கையிலும் காலிலும் உணர்ச்சியிருப்பதாக எண்ணும்படி செய்விக்கின்றதென்று சொல்லி இந்த நூதனத்திற்குப்பரிகாரஞ்செய்கிறார்கள். இப்படி விளக்கஞ்

சொல்வது வேதனைப்பட்டு வற்புறுத்திக்கொள்ளும் விளக்கமே யென்று எனக்கு எப்பொழுதும் தோன்றிற்று. அவ்விளககம் எனக்குத் திருப்தி கொடுக்கவே கிடையாது. மனிதன் இரண்டாய்ப் பிரியும்படியான தோற்றங்களை நான் பின்னால் ஆராய்ச்சி செய்தபொழுது, கை கால் தறிபட்ட மனிதர்களுக்குண்டான உணர்ச்சியின் விஷயம் என் மனதில் மறுபடி உதித்தது. நுண்பூதவுடல் மிகவும் நுட்பமாய் ஆகாயத்தைப் போன்றால் கத்தியினால் அறுபடாமல் தப்பித்துக்கொண்டு அவயவங்கள் அவ்வுடலில் பூரணமாயிருக்கவும் திண்பூதவுடல் உறுப்புகள் மாத்திரம் அறுபட்டன ஆகையால் நுண்பூதவுடலின் கை கால் விரல் நுனிகளின் உண்டாகும் உணர்ச்சியைத்தான் கை கால் இழந்த மனிதன் உணர்ந்தான் என்று சொல்வது நேராயும் சுளுவாயும் இருக்கிறதல்லவா என்று நான் எனக்குள்ளே கேட்டுக்கொண்டேன்."

[இன்னும்வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மேனாட்டுக் கலைஞானம்.

21. நிறை அளத்தல் தராசு.

ஒவ்வொரு பலசரக்குக் கடைகளிலும் நாம்காணும் தராசு இவ்விதக்கருவியாம். துலை, தூக்கு, நிறைகருவி, கோல், என்னும் தராசுக்குப்பெயருண்டு, சாதாரணதராசின் பல பாகங்களாவன. முதலில் ஒரு நீண்டகோலிருக்கிறது. இது மரத்தினாலாவது உலோகங்கள் யாதாயினும் ஒன்றினாலாவது செய்யப்பட்டிருக்கும். இதற்குத்துலாக்கோல் என்றுபெயர். இந்த துலாக்கோல் மத்தியில் ஒருமுளை அல்லது ஆணிமேல் நின்று மேலும்கீழும் சுலபமாய் ஆடும். அல்லது கோலின் மையத்தில் உள்ள ஒருதுளைக்குள் ஒருமுளையில்முடிச்சுள்ளகயிர் சென்று அந்தக்கோல் அந்தமுடிச்சின்மேல் நின்றும் மேலும் கீழும் ஆடும். இந்தமுளை அல்லது ஆணிக்கு சுளியாணி, முளையாணி, முள், முனை, நா, சூசி, யென்றுசொல்லுவார்கள். இங்கிலீஷில் பிவட் (Pivot) என்பார்கள். துலாக்கோலின் இரண்டுநுனிகளினின்றும் இரண்டு தட்டங்கள்தொங்கும். இவ்விரண்டுதட்டங்களிலும் ஒன்றுமில்லாவிடின் துலாக்கோலானது நேராய் ஒத்துநிற்கும் அதாவது சமநிலையாய் நிற்கும்.

ஆனால் ஒரு தட்டத்தில் கனமுள்ள ஒரு பொருளை வைத்தால் அந்தத்தட்டம் கீழும் மற்றத் தட்டம் மேலும் போகும். மேலேசென்ற வெறுந்தட்டத்தை இழுத்தாலும் அல்லது விரல்வைத்து அழுத்தினாலும் அது கீழே வரும். இவ்விதமாய் துலாக்கோலை சமநிலைக்குக்கொண்டுவரலாம். நாம் ஒரு தட்டத்தில் வைத்த பொருளின் கனம் அதிகமாக ஆக வெறுந்தட்டத்தைத்தள்ளும் பிரயாசம் அதிகமாகின்றது. ஒரு ரூபாயைவைத்தால் மற்றத் தட்டத்தை விரலினால் வெகுசுளுவாய்த்தள்ளி துலாக்கோலை நேராக்கலாம். நூறுரூபாய் வைத்தால் நாம் அதிகபலம் செலுத்தவேண்டும். ஆயிரம் ரூபாயிருந்தால் இன்னும் அதிக பலம் உபயோகப்படுத்தல்வேண்டும். இலக்ஷம் ரூபாய் வைத்தால் மற்றத்தட்டத்தைத்தள்ளவே முடிகிறதில்லை. வெறுந்தட்டத்தை இப்படிக்கையினால் அழுத்தி துலாக்கோலை சமப்படுத்துவதற்குப்பதிலாக அதிலும் மற்றத்தட்டத்திலுள்ள பொருளின் கனத்துக்குச்சரியான கனமுள்ள பொருளைவைத்தாலும் துலாக்கோல் சமநிலையடையும். இதன் அருத்தம் என்னவெனில் ஒருதட்டம் பூமியின் மையத்தை நோக்கிச்செல்ல எவ்வளவு நாடுகின்றதோ அவ்வளவே மற்றதட்டமும் பூமிமையத்தை நோக்கிச்செல்ல நாடுகின்ற தென்பதையாம். ஒன்றுகீழே போகமுயலும்பொழுது மற்றதை மேலேதள்ளுகின்றது. இதுபோலவே மற்றதும் கீழே செல்லமுயலும் பொழுது முன் தட்டத்தை மேலே தள்ளுகின்றது.

ஆகையால் ஒவ்வொன்றும் பூமி மையத்தை நோக்கி செல்ல முயல்வதில் மற்றதை அதே விசையாய் மேலே தள்ளுவதினால் ஒன்றின் விசை மற்றதின் விசையை யடித்துவிடுகின்றது. அதனால் இரண்டும் சமநிலையில் இருக்கின்றன. சமபலமுள்ள இரண்டு சிறுவர்கள் எதிர் எதிராய் இழுத்துக்கொண்டால் இருவர் இழுப்பின் விசையும் சமமாயிருக்கும் வரை இருவரும் தாங்களிருந்த இடத்தை விட்டு அசையவே

மாட்டார்கள். ஆனால் ஒருவன் பக்ஷத்தில் கொஞ்சமேனும் பலம் அதிகப்பட்டால் அவன் மற்றவனை இழுத்து விடுவான், தராசின் இரண்டு தட்டங்களும் இச்சிறுவர்களைப்போல் செயல் செய்கின்றன.

22. சீர்கள் எல்லாம் ஒன்றாயிருக்க ஒரே காத்திரமுள்ள நீரின் இடை எப்பொழுதும் ஒன்றே.

இங்கிலீஷ் ஷாப்புகளில் திராவகம் முதலியவையளக்கிறதற்காக சிறிதும் பெரிதுமாய்ப் பல கோடுகள் வரைந்து அக்கோடுகளுக்கு நேராக இன்ன அளவைக் குறிக்கும் கோடுகள் என்று தெரிவதற்காக கால், அரை, முக்கால், ஒன்று இரண்டு முதலிய எண்ணங்கள் எழுதியிருக்கும் பளிங்குக் கிண்ணங்கள் காணலாம். இக்கிண்ணங்களுக்கு பகுப்பு வரைந்த அளவு கிண்ணங்கள் என்று பெயர். இக்கிண்ணங்கள் இரண்டு எடுத்து ஒரு தட்டத்தில் ஒன்றும் மற்றத்தட்டத்தில் ஒன்றும் வைத்து துலாக்கோல் சமநிலையாயிருக்கும்படி இடை கட்டிக்கொள்வோம். தராசு நுட்பமானதாயிருந்தால் ஒரு கிண்ணத்தில் ஒரு துளி நீர் விட்டாலுங்கூட அந்தத் தட்டம் கீழ் நோக்கும். அதாவது அந்த ஒரு துளி நீருக்கும் நிறை அல்லது கனம் இருக்கின்றது என்று தெரிவிக்கின்றது. இவ்விரண்டு கிண்ணங்களிலும் பகுப்பு வரைகள் சரியாய் வரையப்பட்டிருந்தால் ஒரு கிண்ணத்தில் எந்தப் பகுப்பு வரை மட்டும் நீர் விடுகிறோமோ அந்த இலக்கமுள்ள பகுப்பு வரை மட்டுமே மற்றக்கிண்ணத்திலும் துலாக்கோல் சமநிலையாயிருப்பதற்கு நீர் விடவேண்டும். இதன் அருத்தம் என்னவெனில் ஒரே பருமம் அல்லது காத்திரம் உள்ள நீர் ஒரே சீரில் எப்பொழுதும் ஒரே நிறையாயிருக்கின்றது என்பதாம்.

ஒரு பொருள் எவ்வளவு இடங்கொள்ளுகின்றதோ அது அப்பொருளின் காத்திரத்தைக் குறிக்கின்றது. உதாரணமாக ஒரு பொருள் ஒரு அடி நீளமும் ஒரு அடி அகலமும் ஒரு அடி உயரமுமிருந்தால் அப்பொருள் எடுத்துக்கொள்ளும் இடமானது $1 \times 1 \times 1 = 1$ கன அடியாம். ஒரு பொருளின் நீளம் அகலம் உயரம் இவைகளைப் பெருக்கினால் அப்பொருள்

கொள்ளுமிடம் அல்லது காத்திரம் கிடைக்கும். அதன் நிறை அல்லது கனம் வேறு. அது பூமி மையத்தை நோக்கிச் செல்ல முயலுவதால் அது கீழ் நோக்கிச் செலுத்தும் வேகம் அதன் கனத்தைக்குறிக்கும். ஒரு பொருளின் காத்திரம் எவ்விதமாய் மாறினும் அதன் கனம் மாறாது.

முன்னமே 18 இலக்கமிட்ட பகுப்பில் பொருள்கள் ஒன்று ஒன்றை நோக்கி அவைகளிலுள்ள தத்துவமொத்தம் அல்லது பிரமாணங்களுக்கு விலோமவீதமான வேகத்துடன் செல்லுகின்றனவென்று சொன்னோம். ஆனால் தத்துவப்பிரமாணத்தை அளக்கும் விதம் எப்படி? ஒருபொருளின் காத்திரத்தை ஒட்டி அதன் தத்துவப்பிரமாணத்தைத் தீர்மானிக்கிறதா? அல்லது அந்தப்பொருளின் நிறையை ஒட்டி அதன் தத்துவமொத்தத்தைத் தீர்மானிக்கிறதா? பொருள்களின் காத்திரங்கள் அப்பொருள்களின்மேல் மற்றப்பொருள்கள் செலுத்தும் அமுக்கங்களினாலும் முக்கியமாய் சீதோஷ்ணநிலைமைகளினாலும் இடைவிடாமல் மாறிக்கொண்டிருக்கின்றனவென்று நாம் சடுதியில் பின்பு தெரிவோம்.

ஆனால் பூமியின் மேற்பரப்பின் ஒரே இடத்தில் ஒரு பொருளின் நிறையானது எப்பொழுதும் மாறாமல் ஒரே நிலையாயிருக்கின்றது என்று நாம் சோதனைகளினால்காண்போம். ஆகையால் பொருள்களின் நிறையையே அப்பொருள்களின் தத்துவமொத்த அளவைக்காட்டும் குறியாக நாம் எடுத்துக் கொள்ளல் வேண்டும். இதனால் நிறைமாறாமலிருக்கவும் ஒரு பொருளின் காத்திரமதிகமாக ஆக அதன் காத்திரத்திற்குப் பிரமாணவீதப்படி தத்துவம் குறைகிறதென்றும் காத்திரம் சிறுகச் சிறுகத் தத்துவச்செறிவு அதிகமாகிறதென்றும் பெறப்படுகின்றது. ஒருகன அடிகாத்திரமுள்ள ஒரு பொருள் ஒரு வீசை நிறையுள்ளதானால் பலவிதங்களினால் அதன் காத்திரம் 2 கன அடியாக பெரிதாயினும் அல்லது அரைகன அடியாகச் சிறிதாயினும் நிறை ஒரு வீசையாகவேயிருக்கும். இரண்டுகன அடியாகப் பெருத்ததினின்றும் அரைக்கன அடியாகச் சிறுத்ததினின்றும்

கால்கன அடியெடுத்துக்கொண்டுபார்த்தால் அவைகளின் தத்துவச்செறிவின் வித்தியாசம்தெரியும். ஒன்று அரைக்கால் வீசையாயும் மற்றொன்று அரைவீசையாகவுமிருக்கும். ஒரு பொருளின் காத்திரத்திற்கும் நிறைக்கும் உள்ள தரம் அப்பொருளின் செறிவு அல்லது திண்மையைக்குறிக்கும்

"உலகத்திலுள்ள பலபொருள்களும் அவையவைகளுக்குத் தகுந்தபடி பலவிதமாய்த் திண்மைகளைப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக 1000 கனஅடிகாத்திரமுள்ள பஞ்சும், நீரும், இரும்பும், ஈயமும், பித்தளையும், வெவ்வேறு நிறையாயிருக்கும். பஞ்சு மிகவும் குறைந்த நிறையுள்ளதாயிருக்கும். 1000 கன அடியுள்ள பஞ்சை ஒருதராசுத்தட்டில் வைத்தால் சமன் செய்ய மற்றத்தட்டில் 100 கனஅடிகாத்திரமுள்ள நீராவது 10 கனஅடிகாத்திரமுள்ள இரும்பாவது வைத்தால் போதுமானதாயிருக்கும். இதனால் இரும்பில் உள்ள தத்துவச்செறிவு அல்லது திண்மை அதிகமென்றும் நீரில் திண்மை குறைவென்றும் விளங்குகின்றது. கடைகளிலும் ஷாப்புகளிலும் நிறைகள் என்று வைததிருப்பவைகள் குறித்தகாத்திரமுள்ள நீருக்குத் தகுதியான நிறையுள்ள இரும்பு அல்லது பித்தளை அல்லது ஈயக்குண்டுகளாம். ஒருகாலன் நீர் பத்துப்பவுண்ட் நிறையும் ஒருபைண்ட் நீர் ஒன்றேகால் பவுண்ட் நிறையும் உள்ளது.

(இன்னும் வரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரப்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

[தொடர்ச்சி]

"அரியவற்றுளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

ஹெலெநாம்பாள் கான்ஸ்டாண்டிநோபில் (Constantinoble) போய்ச்சேர்ந்து அவ்விடத்தில் ருஷியா தேசத்து ஒருபிரபுவின் மனைவியைச்சந்தித்து இருவரும் சேர்ந்து எகிப்த்து, கிரீஸ், ஐரோப்பாவைச்சேர்ந்த மற்ற கிழக்குத்தேசங்களில் சஞ்சரித்தார்கள். எகிப்த்தில் யோகாப்பியாச மார்க்கங்களில் சில தாழ்ந்த அப்பியாசகங்களைத்தெரிந்தாள். அக்காலத்தில் கேயிரோ (Cairo) வென்னும்பட்டணத்தில் பிரசித்திபெற்ற ஒரு கிழ யோகியிருந்தனர். அவரைப்பற்றி ஜனங்கள்சொன்ன கதைகள் மயிர்க்குச்செறியும்படியானவைகள். ஹெலேநாம்பாள் அவரையடைந்து அவருடன் சற்றேறக்குறைய மூன்றுமாதமிருந்து சில சங்கதிகள் கற்றுக்கொண்டாள். இவள் இருப்பிடத்தைப்பற்றியும் சஞ்சரிக்கும் தேசங்களைப் பற்றியும் இவள் தகப்பனுக்கு மாத்திரம் தெரிவித்துக்கொண்டிருந்தனள். மற்றபந்துக்கள் யாவருக்காயினும் தெரியாது. தகப்பனும் இவள் செலவுக்குப்பணம அனுப்பிக்கொண்டுவந்தனர். இவள்புருஷன் ஜெனரல் ப்ளாவாட்ஸ்கியானவர் இக்காலத்தில்தனக்கும் இவளுக்கும் விவாகமானது பேருக்கேயன்றி வேறொன்றுமல்ல இருவரும் ஒருக்காலும் கூடியேயிருக்கவில்லையென்று விவாகவிமோசனம் (Divorie) பெறப் பிரயத்தனப்பட்டார். ருஷியா சட்டமானது அக்காலத்தில் இதற்கிடங்கொடுக்கவில்லை.

[இன்னும்வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

நிலவளத்திற்கு அவ்சியமான இந்திரியவஸ்து.

ORGANIC MATTER.

செடிகளும் பிராணிகளும் அழிந்து மட்குவதால் கருநிறமான ஒருவஸ்து உண்டாவது யாவரும் அனுபவத்திற் கண்டிருக்கலாம் அந்தவஸ்துவுக்கு இங்கிலீஷில் "ஹியூமஸ்" என்றும் 'வெஜிட்டெபிள்மோல்ட் என்றும் பெயர். அதற்குத்தமிழில் இந்திரியவஸ்து என்று பெயர் இடப்பட்டிருககிறது தாவரஜீவவர்க்கப்பொருள்களைச்சுட்டால் முதலில அவைகள்கறுத்துப்பின்னால் சிறிது சாம்பலாவது யாருக்குந்தெரிந்தவிஷயமே. செடிகளின் உறுப்புக்களும் பிராணிகளின் உறுப்புக்களும் மட்கினால் வெகுநிதானமாய்ச் சுடப்பட்டவைகளைப்போலவே முதலில் கறுத்து பெரும்பாலும் ஆவியாய் ஆகாயத்தில் சேரக்கடைசியில் சாம்பலைப்போலவே சிறிது தாதுப்பொருள் மாத்திரம் மிஞ்சும். உஷ்ணதேசங்களில் அழிந்து போன செடிகளும் பிராணிகளும் வெகுசீக்கிரத்தில் மட்கிப்போவதால் அத்தேசங்களிலுள்ள நிலங்களில் இந்திரியவஸ்து வெகு சொற்பம். சீதளதேசங்களின் நிலங்களிலும் உஷ்ணதேசங்களில் உன்னதமான குளிர்ந்த மலைச்சிகரங்களிலும் உள்ள நிலங்களிலும் இந்திரியவஸ்து ஏராளமாய்உண்டு.

நிலத்தில் உள்ள இந்திரியவஸ்துவின் முக்கியபிரயோஜனம் என்னவென்றால்:—

1. நமது கண்களுக்குப்புலப்படாமல் எப்போதும் ஆகாயத்தில் ஆவிரூபமாயிருககும் ஜலத்தைக்கவர்ந்து நிலத்திலுள்ள பயிருக்கு ஈரத்தை ஊட்டும்.

2. மழைஜலத்தையும் பாய்ச்சப்பட்டஜலத்தையும் விசேஷமாய்க் கிரகித்து அதிக ஆழத்தில் வீணாய்ச்சுவறிப்போகாதபடி நிலைநிறுத்திக்கொண்டு பயிருக்கு ஈரத்தை ஊட்டும்.

குளிர் தேசங்களிலுங்கூடப் பெரும்பாலும் இந்திரியவஸ்து அதிகமாயுள்ள நிலம் சிரேஷ்டமாக மதிக்கப்படுகிறது.

அத்தேசங்களின் சில பாகங்களில்மாத்திரம் இந்திரியவஸ்து அபரிமிதமாய் இருப்பதால் நிலம் சாகுபடிக்குத்தகுதியாயில்லாமல் இருக்கும். உஷ்ணதேசமாகிய இப்பரதகண்டத்தின் கீழ்நாடுகளில்உள்ளநிலங்களில் இந்திரியவஸ்துஎவ்வளவு இருக்கிறதோஅவ்வளவுக்கவ்வளவு நிலங்கள் சிலாக்கியமாய் இருக்குமேயல்லாமல் தீங்கு உண்டாகும்படி அபரிமிதமாய் ஒருக்காலும் இராது. நிலத்தில் செத்தைமுதலானவைகளை மட்கச்செய்து இந்திரிய வஸ்துவைக் கூடியவரையில் அபிவிர்த்தி செய்வதில் குடியானவர்கள் கண்ணுங்கருத்துமாய் இருக்கவேண்டும்.

ஒரு கொல்லைநிலத்தில் எவ்வளவு இந்திரியவஸ்து இருக்கிறதென்பதைப் பின்வருமாறு கண்டுகொள்ளலாம்.

சமமாயும் கொல்லைக்கெல்லாஞ் சரியானமாதிரியாயுமிருக்கப்பட்ட பத்து அல்லது இருபது இடங்களில் அரையடிநீளம் அரையடி அகலம் அரையடி ஆழம் குழிவெட்டி அந்தக்குழிகளின் மண்ணையெல்லாங்கலந்து ஒரு சிறு கூடைநிறைய மண்ணை எடுத்து நிழலில் முற்றிலும் உலர்த்தியபிறகு அதில் நாலுரூபாஎடை மண்ணை எடுத்து ஜலத்தில் மிதக்கத்தக்க ஒரு சிறுபாத்திரத்தில் போட்டு ஒருபோகணியில் உள்ளஜலத்தில் மிதக்கவிட்டு அப்போகணியை அடுப்பின்பேரில் வைத்துக்காய்ச்சவேண்டும். கொதிக்கும் ஜலத்தில் சூட்டினால் மண்ணில் உள்ள ஈரம் ஆவியாய்ப்போவதினால் மண்ணெடை குறையும். இரண்டுமூன்று மணிக்கொருதரம் மண்ணை எடைபோட்டு எவ்வளவு குறைகிறதோ பார்த்துக்கொண்டு மறுபடியும் பாத்திரத்தில் போட்டுக் காய்ச்சவேண்டும். இப்படியே அடிக்கடி எடைபோட்டுக்கொண்டுவந்தால் கடைசியில் மண்ணின் எடையினும் குறையாமல் எவ்வளவு காய்ச்சினாலும் நிலையாய்நிற்கும். எவ்வளவு காய்ச்சியும் 95 ரூபா எடைக்குக்குறைவுபடவில்லையென்று உத்தேசிப்போம். அப்படியானால் 100 ரூபா எடையில் 5 ரூபா எடை ஈரம் உண்டென்று தீர்மானிக்கலாம் இவ்வாறு முற்றிலும் ஈரம் நீங்கினமண்ணை ஒரு இரும்புக்கெடாயில் போட்டு நெருப்பில் அந்தக்கெடாயைப்பழுக்கக்காய்ச்சி அடிக்கடி எடைபோட்டுக்

கொண்டுவந்தால் மண் சற்று எடைகுறைவதாய்த்தெரியவரும். கடைசியில் எடை பின்னும் குறையாமல் நிலையாய் நிற்கும். ஈரம் நீங்கின 95 ரூபா எடையுள்ள மண் 92½ரூபா எடைவரையில் குறைவுபட்டு பின்னுங்குறைவுபடாதபட்சத்தில் மண்ணில் இந்திரியவஸ்து 95, 92½ அதாவது நூற்றில் இரண்டரைப்பாகம் இருக்கிறதென்று சொல்லலாம். சாதாரணமாய் இத்தேசத்து நிலங்களில் இந்திரியவஸ்து நூற்றில் இரண்டரைப்பாகத்திற்குக் குறைவாகவே இருக்கிறது. சீதளதேசங்களிலுங்கூட இந்திரிய வஸ்து நிலத்தில் நூற்றில் பதினைந்து பாகம் இருக்கவேண்டுமென்று அத்தேசங்களில் குடியானவர்கள் அபேட்சிக்கிறார்கள்.

இத்தேசத்துக் கரிசல் நிலத்தின் கருநிறம் இந்திரியவஸ்துவைச்சார்ந்ததென்றும் ஆகையால் அந்நிலத்தில் இந்திரியவஸ்து ஏராளமாய் உண்டென்றும் அநேக சாஸ்திரிக்ஞர்கள் ஊகித்திருந்தது தப்பென்று டாக்டர் லெதர் என்னும் ரசாயன சாஸ்திரியார் பரிசோதனைசெய்து கண்டறிந்தார். கரிசல் நிலத்தில் இந்திரிய வஸ்து நூற்றில் இரண்டு மூன்று பாகங்களுக்கு மேற்படாவிடினும் செவ்வல் முதலான நிலங்களைக் காட்டிலும் இந்திரியவஸ்து அதிகமாய் உள்ளதென்று ஏற்பட்டிருக்கிறது. ஆட்டெரு, மாட்டெரு குப்பை கூளங்கள் பிண்ணாக்கு முதலான எருக்களை எவ்வளவு வரையில் நிலத்தில் சேர்க்கிறோமோ அவ்வளவு வரையில் நிலத்தில் இந்திரியவஸ்து அபிவிர்த்தியாகி நிலத்தில் ஈரத்தைக்காக்கச் செய்கிறது. இந்த எருக்கள் இந்திரிய வஸ்துவை அபிவிர்த்தியாக்குவதுடன் எப்பயிருக்கும் வேண்டிய பற்பல உணவுகளையும் நிலத்திற்குச் சேர்க்குமானாலும் பயிருணவு அபிவிர்த்தியைக் காட்டிலும் இந்திரிய வஸ்து மூலமாய் ஆகாய ஈரத்தை நிலம் கவரும்படிக்கும் மழை ஜலத்தையும் பாய்ச்சப்பட்ட ஜலத்தையும் விசேஷமாய்க் குடித்து அந்த ஜலம் வீணாய் அப்புறப்பட்டுப் போகாமல் நிறுத்தும்படி செய்வது பிரதானம்.

சாணியை எருமுட்டையாக்கி எரிப்பதினால் பயிருக்கு முக்கியமானதும் சுலபத்தில் பயிருக்குக் கிடைக்காததும் சகல

பிராணிகளின் மாம்சத்திற்கும் மூலாதாரமானதுமாகிய இங்கிலீஷில் "நைடிரஜன்" (Nitrogan) என்று பெயர் வழங்கும் சர்வோத்தமமான பயிருணவு வீணாய்ப் போவதுமல்லாமல் இந்திரியவஸ்து நிலத்திற்கு வாய்க்காமற் போவது மிகவும் பரிதாபமானது. குடியானவன் கூடியபட்டில் குப்பை கூளங்களை எரிக்காமல் செம்மையாய் மட்கவைத்து நிலத்திற்குச்சேர்த்து இந்திரிய வஸ்துவை அபிவிர்த்தி செய்யவேண்டியது.

நெற்கழனிகளுக்குப் பற்பல விதமான தழைகளைப் போடுவது இந்திரியவஸ்துவை அபிவிர்த்தி செய்வதற்காகத்தான். நஞ்சை நிலத்திற்கே இந்திரியவஸ்து அவசியமானால் புஞ்சை நிலத்திற்கு இன்னும் அவசியமென்று தெரிந்து கொள்ளவேண்டியது. கோயமுத்தூர் ஜில்லா அநேக பாகங்களில் ஏக்ரா ஒன்றுக்கு இருபத்தைந்து ரூபா வரையிலும் பெறுமான கொளிஞ்சித்தழையைப் போட்டுவருகிறார்கள். தோட்டக்கால் நிலங்களில் சோளம் முதலான பயிர்களுக்கும் கூட கொளிஞ்சித்தழையை நறுக்கிப் போடுகிறார்கள். வெகுதூரக் காடுகளிலிருந்து கொளிஞ்சி முதலான பற்பல விதமான தழைகளைச் சேர்ப்பது வெகு பிரயாசத்தையும் செலவையும் உண்டாக்கும். நிலத்தில் இந்திரியவஸ்துவை அபிவிர்த்தியாக்க சுலபமான ஒரு விதம் உண்டு. அதற்குப் பசுந்தாள் எரு என்று சொல்லலாம். அதாவது எதாகிலும் ஒரு பயிரை அறுவடை செய்யும்போது பயிரை அறுத்துக்கொண்டிருக்கையிலேயே பின்னால் நிலத்தை ஒரு சால் உழுது விதையை விதைத்தால் அது சொற்பம் மட்டிலும் பயிராகும், புஷ்பித்தவுடனே அதாவது விதைத்து இரண்டரை மாசத்திற்குள்ளாக அதை நிலத்தில் மடித்து உழுதல் நிலத்தில் இந்திரியவஸ்துவை அபிவிர்த்தியாக்கிக் கொழுக்கச்செய்யும்.

தானிய மாசூல் எடுக்கப்போதுமான மழை யில்லாவிட்டாலும் தழை விசேஷமாய் உண்டாகும்படி கொள்ளும் பயிர் வளருவதற்குப் போதுமான ஈரம் நிலத்தில் இருந்தாலாவது அல்லது மழை பெய்தாலாவது பசுந்தாள் எருவை உற்பத்தியாக்கலாம். கோதாவரி ஜில்லாவில் கரும்பு பயிருக்கு முதல் களை

கொத்தும் சமயத்தில் குடியானவர்கள் சணப்பு விதையைப் பயிருக்கிடையில் விதைத்து இரண்டு மாசப் பயிரானவுடன் அதைப் பிடுங்கி நிலத்தில் எருவாகப் புதைக்கிறார்கள். அதனால் கரும்புப் பயிர் அதிக கொழுமையடைகிறது. இந்த ராஜதானியின் பற்பல விடங்களில் கொளிஞ்சி, ஆவிரை, புன்கு முதலான பற்பல விதமான தழைகளைக் கரும்புப் பயிருக்கு இடையில் போட்டு உழுது மறைக்கும் வழக்கம் இருக்கிறது. இதனால் கரும்புப் பயிருக்கு இந்திரியவஸ்து எவ்வளவு முக்கியம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திரிசிராப்பள்ளிஜில்லா லாலுகுடி டிவிஷன் சிலபாகங்களிலும் தஞ்சாவூர்ஜில்லாவின் சிலபாகங்களிலும் அவுரியைப்பயிரிட்டு நிலத்தில் உழும்வழக்கம் இருக்கிறது. பல்லாரிஜில்லா ஹொஸ்பேட்டைதாலூக்காவில் துங்கபத்திரா நதிதீரத்தில் மொச்சைக்கொட்டையைப் பயிராக்கி தானியத்தை எடுத்துக்கொண்டு செடிகளை நிலத்தில் மடக்கியுழுது விடுகிறார்கள். கொள்ளு, மொச்சை, அவுரி, கொளிஞ்சி, தட்டைப்பயிர், அல்லது காராமணி, சணப்புமுதலிய முதிரைப்பயிர்களின் பசுந்தாள் எருவுக்கு உத்தமமானவை. இப்பயிர்களின் வேர்களில் கண்ணுக்குப்புலப்படாத வெகு சூட்சுமமான கிருமிகளோ அல்லது செடிகளோ குடிகொண்டு நிலத்தில் வியாபித்திருக்கும் காற்றிலிருந்து சர்வோத்தமமான பயிருணவென்று முன் சொன்ன கைடிரஜன் என்னும் வாயுவைக்கிரகித்து பசுந்தாள் பயிரில் சேர்க்கும் அந்தப்பசுந்தாள் பயிரை நிலத்தில் மடக்கியுழுதல் ஏக்ரா ஒன்றுக்கு இருபதுவண்டி சிரேஷ்டமான மாட்டெரு போட்டால் எவ்வளவு உரஞ்சேருமோ அவ்வளவு உரம் கொடுக்குமென்று ரசாயனசாஸ்திரிடாக்டர் லேதர் என்னும் துரையவர்களால் கண்டறியப்பட்டிருக்கிறது பசுந்தாள் எருவையுழுதாலும் உழலாம். அல்லது ஆடு மாடுகளை அவைகளின் மூல மூத்திரங்களை அப்பால்போகவொட்டாமல் நிலத்தில் இடைமடக்கி மேயவிட்டால் இந்திரியவஸ்துகுறைவுபடாமலும் அதுவும் மற்றபயிருணவுகளும் பயிர்களுக்கு இன்னும் செம்மையாய் வாய்க்கத்தக்கவைகளாகும் ஆடுமாடுகளுக்குத் தீனியு

மாகும் நிலத்திற்கு உரமும் ஆகும். இப்படியே அடிக்கடி நிலம் பாழாய்க்கிடப்பதற்குப் பதில் ஈரம் வாங்குகிற வரையிலும் மேற் சொன்னபயிர்களைச் சுமார் இரண்டு அல்லது இரண்டரை மாசம் வளரவிட்டு நிலத்திற்குச்சேர்த்துக்கொண்டு வந்தால் நிலம் கருநிறம் அடைந்து ஈரத்தை ஆகாயத்திலிருந்து அவாவும் மழைஜலத்தையும் பாய்ச்சும் ஜலத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளவும் தக்கதாகும். கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களில் நெல் அறுக்கப்பதினைந்து நாள் இருக்கவே சணப்புவிதையை விதைத்து நெல் அறுத்து பிறகு அதைவளரவிட்டு இரண்டு அல்லது இரண்டரைமாசத்தில் சிலபாகத்தை மாட்டுக்குச் செத்தையாக உபயோகித்து மீதத்தை நிலத்தில் ஜலம் பாய்ச்சி மட்கச்செய்து உரமாக்கிக்கொள்ளுகிறார்கள். களர் நிலத்தில் விசேஷமாய்த் தழை முதலானதுகள் போட்டுச் சீர்திருத்தலாம். செடிகளும் ஜெந்துக்களும் அழிந்து சிதைந்துபோவதினால் உண்டாகும் இந்திரியவஸ்துவை இத்தேசத்துக்குடியானவர்கள் மேன்மேலும் அபிவிர்த்தி செய்துகொண்டுவருவார்களேயானால் நிலவளம் விசேஷமாய் அதிகரிக்கும் என்பது திண்ணம்.

வி. கே. சுப்பராவு.

உண்மை.

(1) உண்மைதனை யென்றும் உரைப்பதுவும் உன்னுவதும்
உண்மையன்றி யாதாம் உடைமைபெற—வண்மையுறப்
புன்மையறத் துன்பமறப் புந்தியுன்னி மெய்யுரைத்தல்
அன்மையுண்மை யென்றே யறி.

(2) நன்மைதனை யாக்குவதும் நல்லின்பம் நல்குவதும்
புன்மைதனைப் போக்குவதும் பூதலத்தில்—வன்மையுடன்
உள்ளதையே சொல்லுவதும் உண்மையென்றார் நீதிமுறை
யுள்ளாகலே யுள்ளு[illegible]ரோர்ந்து.

(3) மெய்யுரைக்கப் பெற்றிடுவன் மிக்கவறம் செல்வமின்பம்
மையறுக்கும் ஞானவழி மாண்வீடு—பொய்யுரைக்கச்
சொல்லியவெல் லாமழிந்துதொன் னரகில் வீழ்வனெனச்
சொல்லினரே யான்றோர் தொகுத்து.

(4) காதல் கவருடல் கள்ளுண்ணல் நற்பொருட்குச்
சேதம் விளைக்கும் திரிபடையாம்—நீதுநல்கிம்
முக்குணங்கள் மெய்யுரைக்க முன்னழிந்து பின்பெருகும்
பொக்கிஷங்கள் சேர்ந்துறையும் பொன்.

(5) பொன்வளரக் கல்விமிகும் புத்திமிகும் பண்டிதரும்
நன்மன்றரு ரும்வந்து நள்ளுவரே—பின்வளரும்
நல்லறம நல்லின்பம் ஞானமிவற் றூற்பெறுவன்
அல்லலறும் வீடதுவே யாம்.

(6) எண்ணுவதும் பேசுவதும் எப்பொழுதும் மெய்யென்றால்
நண்ணுவது நல்லின்பம் நம்மனதில்—எண்ணுவதும்
பேசுவதும் பொய்யென்றாற் பின்பதனை நாடுதற்கு
யோசனைகள் துன்புறுத்தல் உண்டு.

(7) என்றென்றும் உள்ளதுவாய் இன்பமய மாயறிவாய்
என்றென்றும் ஒன்றதுவாய் எவ்விடத்தும்-நின்றொளிரும்
வத்துவொன்றே மெய்யென்றார் மற்றவெலாம் பொய
அத்துவித நூலுணர்ந்தோ ராங்கு [யென்றார்

(8) மெய்யுரைக்க மெய்யாகி வீடதனை மேவிடுவன்
பொய்யுரைக்கப் பொய்யாகிப் புன்னரகம்—எய்திவளர்
துக்கமறி யாமைநிதம் சூடுவனப் போதிவனைப்
பக்கருளர் துப்புவரோ பார்த்து.

(9) ஓரிடமும் இல்லெனவும் ஒருருவும் இல்லெனவும்
நேரிடமும் இல்லெனவுந் தேர்ந்தாலும்—ஓரறிவா
யுள்ளவொன்றை யுன்னுதலால் உள்ளமெனச் செப்புவ
கள்ளமன இன்செயலைக் கண்டு. [ரே

(10) உள்ளதொன்றை யென்றும் உரைத்திடவும் உன்னிடவும்
உள்ளிநின்ற செல்வ மொடுவீடும்—எள்ளநின்ற
உண்மையல வற்றை யுரைக்கா கும்பெறலின்
உண்மைதனை யென்று முரை.

வ. உ. சிதம்பரம்.

தர்மி லோபி சம்வாதம்.

ஏழைகள் விஷயமும் தத்தமக்கானதொழில்களைச்செய்து பிழைப்பதே. இவ்விஷயங்களில் செலவிடுவதால் சரீரத்திற்குச் சுகமேதேனு முண்டோ? சூதர் விளையாட்டால் மனதுக்கு உல்லாசத்தை விளைவிக்கிறார்கள். வேசியரோ மன்மதன்போரில் வெற்றிக்கொள்ளச் செய்கின்றனர். ஆதலின் இத்தகையர்க்கேபணம் செலவிடல் உத்க்ருஷ்டமானது. இதனைக்கடைப்பிடியும்.

தர்மி. நீர் நல்லபுத்திமான். இவ்வளவு தெரிந்துகொண்டிருக்கின்றீரே. இது யாவர் அறியமாட்டுவர்? நல்லது, தேவனாவது, ஆலயமாவது, தேவனென்ற ஒருவனிருக்கின்றானா? அவனைக்கண்டோர் யாவர்? கண்ணாற்காணாதவொன்றை உண்டென்று நீர்தாம் சொல்லிக்கொள்ளலாம் என்றீரே. காற்றின் உருவத்தை நீர் கண்டிருக்கின்றீரா? மரத்தின் கிளைகளும் இலைகளும் அசைவது எதினாலென்றிருக்கிறீர்? அவை அசைவதால்காற்றென்னும் ஒரு பொருள் உண்டென்று ஒப்புக்கொள்வீரன்றோ? காற்றின்சப்தத்தையும், ஸ்பரிசத்தையும்நீர் உணரலாமேயொழிய உருவத்தைக்கண்டறியமுடியுமா? கண்டோர்யாருமிலர். அது போலவே, உலகத்தில்கடவுளை ஒருவரும்காணவிடினும் ஜீவராசிகளைக்காணுவதால் அவைகளை உண்டாக்கினவர் ஒருவருண்டென்றுநினைப்பீராக. அப்படிஉண்டாக்கினவர்தான் கடவுள். கடவுளின் மகிமையைவேதங்களாலும் தேவராலும்முனிவராலும் மற்றெவராலும் அளவிட்டுச்சொல்லவொண்ணாது. அக்கடவுள்விஷயமாய்ப் பின்னர்விவரிக்கின்றேன். அதுநிற்க. வித்துவான்கள் யார்க்காகக் கல்விகற்றுக்கொண்டனரென்றும் சொன்னீர், நீர்யார்க்காகப்பொருளைவைத்திருப்பதாய் நினைத்தீர். நீராவது உமது தந்தையாவது இப்பிறப்பில் பாடுபட்டுச்சாமர்த்தியத்தால் பொருள் தேடினீர்களோ? இல்லையில்லை பின்னையென்னையெனின், நீவிர் இருவரும் முற்பிறப்பில் செய்த தர்மமுதலிய நன்மையாலே கடவுள் கருணைகூர்ந்து இப்பிறப்பிலும் உம்மை ஐசுவரியத்திற்கு உள்ளாக்கினர். (திருநாவுக்கரசு சுவாமிகள்) "இறப்பவர்க்கீயவைத்தார் ஈபவர்க்கருளைவைத்தார், கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார், பரப்புநீர்க் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார், அரக்கனுக் கருளைவைத்தார், ஐயனை யாறனாரே" எனத் தேவாரத்தில் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் கடவுள் யாசகர்க்குக் கொடுத்துதவ வைத்தார். அவரருளால் கிடைத்தபொருளைக் கொடுத்தவர்க்கு மேன்மேலும் அருளை வைத்தனர். அப்படிக் கொடாமல் யாசகரைக் கண்டு ஒளிப்பவர்க்குக் கடுமையான நரகத்தை அளிப்பர். திண்ணமாய் நினையும். சூதர்க்கும் வேசியர்க்கும் உதவப் பொருளையளிக்க

வில்லை. இப்பிறப்பில் பரமலோபியாயிருக்கும் நீர் மறு பிறப்பினும் மானிடப்பிறவியில் ஒருக்கால் பிறப்பினும் அதி தரித்திரத்தில் அழுந்துவது நிச்சயம். உம்மைப்போல் பரம லோபி யாயிருப்பவரை உத்தேசித்தே "ஏற்ப திகழ்ச்சி" என ஔவையார் கூறினர். நன்றாகக் கற்றவரும், கற்றவர்பால் முதுமொழிகளைக் கேட்டவரும், தமயந்தியானவள் சநீச்வரனைக் குறித்து, "அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத், திறம்பிழைத்தார் தெய்வமிகழ்ந்தார்—புறங்கடையில், சென்றார் புகுநரகில் சேர்வாய்கொலென்றழியா, நின்றாள் விதியை நினைந்து" அதாவது, தருமத்தை ஒழித்தவரும், பொய் சொன்னவரும், கருணையைக் கெடுத்தவரும், கௌரவத்தின் மேன்மையை யிழந்தவரும், தெய்வத்தை நிந்தைசெய்தவரும், (ஆகிய இவர்களுடைய) வாசலில் (யாசகமார்க்கமாய்ச்) சென்றவர்கள் போகின்ற நரகத்தை அடையக்கடவாயென்று சொல்லி விதியை யெண்ணி மனம் வருந்திக்கொண்டிருந்தாள், எனக்கூறியுள்ளதை மனதில் நினைந்து பயந்து உம்மைப்போன்ற லோபியர்முதலிய தீயரிடத்தில் பொருட்சகாயம்பெற வரவேமாட்டார்கள். கனவிலும் நினையார்கள். அஞ்சாதிரும். நீர் வசனித்ததைக் கவனித்துக்கொண்டு வந்ததில் உம்மைப்பார்க்கிலும் பரமலோபியின் கதையொன்று ஞாபகத்திற்கு வந்தது, அதனைச்சொல்லுகிறேன் கேட்பீராக அதாவது:— ஒருகாலத்தில் நாரதமகாமுனிவர் கைலையங்கிரிக்கு ஸ்ரீ சிவபெருமானைத்தரிசிக்கச்சென்று வணங்கிப்பலவாறாகத் துதித்து நிற்க, சிவபெருமானவர் அவரை ஆசீர்வதித்து, நாரதரே? நீர் திரிலோகசஞ்சாரியாயிற்றே, பூவுலகின்கண் ஏதேனும் அதிசயமுண்டோ சொல்லுமென, நாரதர் சுவாமி, மண்ணுலகமுழுவதும் சுற்றிப்பார்த்தேன், காசிமாநகரத்திற்றான் ஓர் அதிசயங்கண்டேன் அதாவது, "தனபாலன்" என்றவோர் தனிகனிருக்கின்றான், அவனோ நவகோடிக்கதிபதி. அப்படியிருந்தும், தேனீயைப்போலத்தானும் சுகபோஜனம் செய்யான், பிறர்க்குங்கொடான், வாகனமொன்றுமின்றி மூக்காதவழியானாலும் நடந்தே பிரயாணம்போவான். மகாபாவி. குங்குமம் சுமந்த வேசரிபோலப்பணத்தாலனுபவிக்கும் வகையறியாமல் பணங்காத்த பேயென நடைப்பிணம்போல் உலாவுகின்றனன். மொட்டத்தலைச்சிக்குக் "*குந்தளாம்பாள்" எனவும் தாலிகட்டின தினமே அறுத்தவளுக்கு "மங்களம்" எனவும், உடல் நாற்றமுடையவளுக்குப் "பரிமளவல்லி" எனவும், தாகத்திற்கு ஜலம் கொடாதவளுக்குக் "காவேரி" கங்காபாய், பாகீரதி, கோதாவரி, கிருஷ்ண, எனவும், எச்சில்க்கையால் காக்கை ஓட்டாதவளுக்கு "அன்னபூரணி" எனவும், தன் பெயரையும் எழுதத்தெரியாதவளுக்கு "சரஸ்வதி" எனவும், குரூபமுடையவளுக்கு "ரூபாவதி" எனவும், கரிநிறமுடையாளுக்கு "சந்திரவதன" எனவும், கழுதைக்குரலா

* பெண் மயிர்.

ளுக்கு "கோகிலம்" எனவும், தாய்க்கு ஒருமுழத் துணிவாங்கித் தராதவனுக்கு "மானபூஷணன்" எனவும், விரூபமுடையானுக்கு "சுந்தரம்" எனவும், பெயர் அமைவது போல அவனுக்கு "தனபாலன்" என்னும் பெயர் அமைந்திருக்கின்றது. அப்படிப்பட்டவனிடத்திற்கு யான் வீணகானம் செய்துகொண்டு போனேன். அப்பொழுது அவன், நான் யாசகார்த்தமாக வந்திருக்கக்கூடுமென்று நினைத்து, சுவாமீ எனது பெயரோ தனபாலன், அதாவது, தனத்தை யிரட்சிப்பவன், என்னிடத்தில் எப்படிப்பட்டவரும் ஓர் காசேனும் எதிர் பார்க்க வொண்ணாது. கானம் என்பதில் ஞானமும், தானம் என்பதில் தியானமும், கிடையாது. ஆகையால் தயைசெய்து பெருமையைச்சூடி, வந்த வழி நாடி, நில்லாமலோடி, மற்றவரைத் தேடி, சுதியுடன் கூடி, இனிதான தோடி, பாட்டுகள் பாடி, ஆனந்தமாடி, உறைவிடம் *நேடி, யேகவே கோடி, வந்தனம் முந்த அன்புடன் தந்த தனிகனமிந்த ஆண்மையான் சொந்தமதுரம் நிறைந்த மொழிகள் பொருந்தக்கொண்டே வருந்தலின்றிச் சிறந்தகுணமே பொலிந்த வண்ணந்துறந்த வகையையான்காணச் செய்வீராகவென மொழிந்தனன். அதன் பேரில் உலகத்தில் இப்படிப்பட்டவனுமிருக்கிறானன்றோ என ஆச்சரியப்பட்டுக்கொண்டு இவ்வதிசயத்தைத் தமதிடம் சொல்லத் துணிந்து நேராகவே யிவண்வந்தனன், அவனிடம் எத்தகையோராலும் ஒரு காசேனும் வாங்குவது கூடாத விஷயம் என்று சொல்லினர். அதுகேட்ட சிவபெருமானவர் அந்தப் பரமலோபியிடத்தில் நான் போய் ஒரு காசாவது வாங்கிவருகிறேன் பாருமென்ன நாரதர், சுவாமி அப்படிப்பட்ட உலோப குணத்துடன் ஜனித்துப் புவியின்கண் யாருக்கும் ஒருகாசும் கொடாமல் காலங்கழித்துக் கடையாகக் கொடிய நரகத்தை யனுபவிக்கும்படி நீரே விதித்திருப்பதனால் அவனிடம் காசுவாங்க முடியுமா? உம்மாலு மாகாத விஷயமென்றே நினைக்கின்றேன், வீண் பௌருஷம் கூறுதீர் என்றனர். சிவபெருமான், நாரதரே! நீர் சொல்லியது யாவும் உண்மையே, ஆயினும், சர்வ சத்தித்துவ குணம் யானடைந்திருப்பது நீர் அறிந்த விஷயந்தானே. அப்படியிருக்க, என்னாலாகாதது ஒன்றுண்டோ? எவ்வகையிலாயினும் அப்படிப்பட்டவனை நல்வழிக்குக் கொண்டுவருகிறேன், பார்ப்பீராக என்று திருவாய்மலர்ந்தருளினர்.

[இன்னும் வரும்.]

இங்ஙனம்,
சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்.

* தேடி.

சைவசித்தாந்தம்.

இன்னும் பிரணவசொரூபியாகிய பரமசிவத்தை நாதத்தோடு அகரம், உகரம், மகரம் ஆகிய இவற்றின்சொரூபமாக தியானித்து, பின்பு அகரம், உகரம், மகரம், நாதம் ஆகிய நான்கையும் முறையே இருக்கு, யசுர், சாமம், அதர்வணமாகவும், பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுவரனாகவும், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயம், சம்வர்த்தமாகவும், பிருதிவி, அந்தரம், சுவர்க்கம், சந்திரலோகமாகவும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியமாகவும், நாபி, இதயம், கண்டம், தலையாகவும், பூதம், பவுடியம், வர்த்தமானம், சாதாரணமாகவும் கருதி, அவ்வை உவ்விலும் உவ்வை மவ்விலும், மவ்வை நாதத்திலும் நாதத்தை மாயையிலும் மாயையைத் தன்னிடத்திலும் தன்னைப் பரமசிவனிடத்திலும் கிரமமாக ஒடுக்கி சிவமாய் நிற்றலும் அது. இன்னும் கடலின்கண் திரையானது நுரை திவலை குமிழிகளைத்தோற்றி ஒடுக்குதல்போல வாக்குமனோதீதமாயிருக்கின்ற பரப்பிரமமாகிய கடலின்கண் விட்டுநீங்காத பராசத்தியாகிய திரையானது, ஈஸ்வரனும் நாததத்துவமுதல் பிருதிவிதத்துவம் ஈறாகிய சகங்களும் சராசரங்களாயுள்ள உயிர்களும் என்றுசொல்லப்பட்ட நுரை திவலை குமிழிகளைத்தோன்றச்செய்து ஒடுக்குமென்று நான்கு வேதங்களும் கூறுமெனின் அக்கடற்றிரையிற் றோன்றிய இப்பிரபஞ்சத்தினுள் எதனையெமதென்று பிடிப்பம் எதனை எமது அன்றென்றுவிடுப்பம் இங்ஙனம் பற்றுதற்கும் விடுப்பதற்கும் அப்பிரமத்தைவிட வேறின்மையால் நிச்சயஞானத்தால் எல்லாவற்றையும் ஆனந்தசொரூபமாகக்கருதுதலுமது.

அற்றேல் ஆகமங்களுள் பிரபஞ்சம் மாயையினின்றுந் தோன்றி ஒடுங்குமென்றுகூறவும் வேதத்துள் இவ்வண்ணங்கூறுதல் மாறுகொளக் கூறலாகாதோவெனின் ஆகாது.

என்னை முதல்வன் மாயைக்கு ஆதாரமாய் நிற்றல்பற்றி வேதம் அப்படிக்கூறுகின்றதாதலின் ஆண்டு ஐயப்பாடின்மை உணர்க. இது கிழங்கினின்றுந்தோன்றுந்தாமரையைப் பங்கயமென்பது போல்வதோர் உபசாரவழக்காமென்க. மாயைக்குத்தாரகமாய் நிற்றல்பற்றியே யவ்வாறுரைத்ததென்பது உணர்ந்துகோடற்கே நீரிற்றோன்றியொடுங்கு நுரைமுதலியவற்றை நீர்க்கிடனாகியகடலிற்றோன்றி யொடுங்குதல்போலென்று உவமைகூறினதென்க. கடலென்றது நீர்க்கிடங்கொடுத்து நிற்குமாகாயத்தை நின்ற திருத்தாண்டகத்தும்பிறவிடங்களினும் "இருநிலனாய்த்தீயாகி எம்மடிகணின்றவாறே" என்பதுமுதலாக எழுந்ததமிழ்வேதத்திருவாக்குக்களும்" "அறிவானுந்தானே யறிவிப்பான்றானே, யறிவாயறிகின்றான்றானே-யறிகின்ற-மெய்ப்பொருளுந்தானே விரிபொருழில் பாராகாய, மப்பொருளுந்தானேயவன்" என்னும் அம்மை திருவாக்கும் "நுரையுந் திரையுநொய்யுறு கொட்பும் வரைவில்சீகரவாரியுங்குரைகடற் பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவதோன்றி யெண்ணில்வாகி யிருங்கடலடங்குந் தன்மைபோலச் சராசரமனைத்து நின்னிடைத்தோன்றி நின்னிடையொடுங்கும்" என்னும் பட்டினத்துப்பெருமான் திருவாக்கும் "உலகெலாமாகி வேறாயுடனுமாய் முதல்வன் நிற்றல்" பற்றியாகலின் ஆண்டு ஆசங்கையின்மையுங் கண்டுகொள்க. இவ்வாறன்றிமுதல்வன் மாயைபோல முதற்காரணமாவனெனின் அது மேற்கூறிய குற்றத்துக்கு இடனாதலன்றியு நிருவிகாரி யென்னுஞ்சுருதிகளோடு முரணுதலு முடைத்தென்க.

சமாதி முடிந்தது. சிவபுண்ணியத்தி னியல்பு முடிந்தது.

நித்தியா நித்திய விவேகமாவது:—இது நித்தியப்பொருள் இது அநித்தியப்பொருள் என்பதை அறிவினால் நிச்சயித்துணர்ந்து அநித்தியப்பொருளில் விருப்பத்தை ஒழித்து நித்தியப்பொருளில் விருப்பத்தைவைத்தல்.

இருவினையொப்பாவது:—ஒருவன் ஒரு கூத்தியார்க்கு வீடும்போசிப்பும் வேண்டிய ஆடையாபரணங்களுங் கொடுத்து அவள் வீட்டிலே பதினைந்துநாளுங் குடியிலுள்ளவளுக்கு வீடும்போசிப்பும் வேண்டிய ஆடையாபரணங்களுங்கொடுத்து அவள் வீட்டிலே பதினைந்துநாளுமாகப் போசித்து வாழ்ந்திருக்குமிடத்து இல்லறநூல் கேட்டவிடத்திலே கற்புடைய மனைவியோடுகூடி யில்லறஞ்செய்கிறதே முக்கியமென்றறிந்து கூத்தியாரைவிட்டு நீங்கி யில்லாளோடுங்கூடி இல்லறஞ் செய்துகொண்டிருக்கையிலே துறவுநூல்கேட்டு துறவறமே முக்கியமென்றறிந்து குடியிலுள்ள இல்லாளையுந் தீங்கென்று கூத்தியாரைப்போலக்கண்டு நீங்கினபின்பு இரண்டுபேரிடத்திலும் விருப்பும்வெறுப்புமில்லாததுபோல ஒருவன் பாவமும்புண்ணியமுஞ் செய்துகொண்டு வருகையில் அறநூல் கேட்டுப்பாவந்தீங்கென்றும் புண்ணியமேமுக்கியமென்றறிந்து பாவத்தைவிட்டுநீங்கி நெடுங்காலம் புண்ணியஞ் செய்துகொண்டுவருகையில் ஞானசாத்திரத்தைக்கேட்டுப் புண்ணியமுஞ் செனன மரணத்தைக்கொடுக்கையினாலே புண்ணியத்தையும் பாவத்தைப் போல தீங்கென்றுவிட்டு நீங்கினபின்பு இரண்டினிடத்திலும் விருப்பு வெறுப்பின்றி நிற்றலேயாம்.

இன்னும் புண்ணியமும் பாவமும் தராசுமுள் தராசுநுனிபோல சமத்துவப்பட்டு அனுபவிக்கவருஞ் சமயமும் அதுவாம்.

இன்னும் சரியானவலியும் விரோதமான பயனுமுள்ள இரண்டு நல்வினைகள் அல்லது இரண்டு தீவினைகள் அல்லது நல்வினையொன்று தீவினையொன்று இவை ஒரேகாலத்தில் பயன்கொடுக்கநோக்குகையாகும் இதுதிரோதான சத்தியைமறத்து அதின்வழியே அனுக்கிரகசத்திபதிதற்கேதுவாகும் ஆதலால் அதிகாரிக்குவேண்டுமென்றது. கன்மங்களுக்கு வலி சரியாகாமலும் பயன் விரோதப்படாமலுமிருக்குமாகில் அதின் பயனை அனுபவிக்கவேண்டியது அவசியமாதலால் திரோதான சத்தியை நீக்கமுடியாதென்று சரியானவலியென்றும் விரோதமான பயனென்றும் விசேஷணஞ் சொல்லியதெண்க. இன்னும் முன்செய்த சஞ்சிதமும் மேற்பிறவிக்கு வித்தாகிய ஆகாமியமும் ஆகிய இரண்டும் ஒத்து அநுபவித்தலுமதுவாம்.

மலபரிபாகமாவது:—மலநீங்குதற்குரிய காரணங்கள் ஒருங்கு நிகழ்தலாகிய சமயம்.

சத்திநிபாதமாவது:—சத்தியினது வீழ்ச்சி அதாவது திருவருள் மறைதலின்றி பிரகாசித்தலாம் உதாரணம். அவளது பார்வை அவனிடத்து வீழ்ந்திருக்கின்றது என்று சொல்லுதல்போல என்க. இந்தச்சத்திநிபாதத்திற்கு அடையாளமாவது சமுசாரத்தில் வெறுப்பும் முத்தியில் விருப்பும் சிவபத்தி முதலானவையுமாம். இந்தச்சத்திநிபாதம் நான்கு வகைப்படும். அவையாவன நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்பனவாம். நிவிர்த்தி சத்திபதிந்தபொழுது மந்தம் என்றுபேர் அப்பொழுது நித்தியா நித்திய விவேகந்தோன்றி விடயங்களில் விரத்திவரும். பிரதிட்டாசத்தி பதிந்தபொழுது மந்ததரம் என்றுபெயர். அப்பொழுது நித்தியா நித்திய விவேகமும் விரத்தியும் உண்டாகும். வித்தியாசத்தி பதிந்தபொழுது தீவிரசத்திநிபாதம் என்றுபெயர் சிவஞானப்பிரகாசம்சாந்திசத்தி பதிந்தபொழுது தீவிரதரம் என்று பெயர். நிர்விகார ஞானத்தால் உபசாந்திவரும். இந்தச்சத்திகளுக்குச் சத்திமானுயிருக்கின்ற சிவனுடையநாமமும் நிவிர்த்தீசன், பிரதிஷ்டேஷன், வித்தீசன், சாந்தீசன் என்று பேசப்படும். இந்த ஈசுவரசத்தி பதிந்தமாத்திரத்தில் ஆணவமலத்தினாலே ஆன்மாவை விஷயோன்முகமாகப் பண்ணுவிக்கிற திரோதான சத்தியானது மலத்தைச் செலுத்தாமல் விடும். அந்தத் திரோதான சத்தி நிவிர்த்தியான ஆன்மாவுக்குத் துக்கசாகரமான சமுசாரத்தில் சடிதி வைராக்கியமுண்டாகும் கண்ணைப்பெற்றவன் காட்சியை யிச்சிக்குமாறுபோல ஞானதிருஷ்டியைப் பெற்ற ஆன்மா சிவனுடைய பாதாரவிந்த தரிசனத்தில் இச்சையுண்டாகி எப்பொழுது தரிசிப்பேன் எப்பொழுது பந்தத்தினின்றும் முத்தனாவேன் யார் அவரைத்தரிசிப்பிக்கிறவரென்று புத்தியுடையவனாய் இவ்வாறு சமுசாரத்தில் பயப்பட்டிருக்கிறவனை ஆசாரிய மூர்த்திமானாகிய சிவன் சத்திநிபாதானுகுணமாக அநுக்கிரகம் பண்ணுவன் சத்திநிபாதாநுகுணமாக அநுக்கிரகமாவது

மந்ததரசக்திநி பாதத்தை யுடையவனுக்கு நிவிர்த்திகலையி லுண்டான புண்ணிய பாவங்களைச் சோதித்து பிருதிவியாதி ஆகாசபரியந்த முண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி யுபதேசித்து பிரமாண்டமேலுள்ள உலகங்களில் கூட்டுவது. மந்தசத்திநி பாதமுடையவனுக்கு நிவிர்த்தி பிரதிட்டை இரண்டுகலையிலுண்டான புண்ணிய பாவங்களைச் சோதித்து பிருதிவியாதி பிரகிருதி பரியந்தம் உண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி உபதேசித்து புருட தத்துவத்துக்கு மேலான தத்துவங்களில் பிரளயாகலனாக விருக்கும்படி கூட்டுவது. தீவிரசத்திநிபாத முடையவனை நிவிர்த்தி பிரதிட்டை சாந்தி என்னு மூன்றுகலையுஞ் சோதித்து பிருதிவியாதி மாயாந்தந்தரிசித்து நீங்கும்படி உபதேசித்து சுத்தவித்தையாதி அபரமுத்திஸ்தானமாகிய சுத்தாத்துவ வாசியாகப் பண்ணுவது தீவிரதர சத்திநிபாதமுடையவனைப் பஞ்சகலையுஞ் சோதித்து நாமரகிதமும் நிராதாரமும் காட்சி அநுமான முதலிய பிரமாணங்களால் அறியக்கூடாததும் முப்பத்தாறு தத்துவாதீதமும் அகண்டாகார சச்சிதானந்த சொரூபமுமாயுள்ள பரமசிவத்திலே வேறறத்ததாகாரமாம்படி செய்வது.

சிவன் தானே ஆசாரிய முகூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருவாரென்பதற்குப் பல குற்றங்களுண்டு அவையாவன ஒரு ஆசாரியரான ஆன்மாவானது பிதாவினுடைய உதரத்திலே இரண்டு மாதங்கட்டுப்பட்டுக் கிடந்து பிதாவானவன் தன்னுடைய மனைவியோடு சையோகஞ் செய்கிற காலத்திலே குய்யவழியே புகுந்து மாதாவினுடைய வயிற்றிலே கருப்பாசயக்குழியிலே பத்து மாதங்கட்டுப்பட்டுக் கிடந்து பின்பு பூமியிலே பிறந்து மலமூத்திராதிகளையளைந்து கிடந்து வளர்ந்து ஒரு வித்தியா குருவையடைந்து தண்டனைப்பட்டு அட்சர அப்பியாசம் பண்ணிப் பின்பு ஒரு வித்வானிடத்திலே போய் அவனுக்கேவல் செய்து வித்தியாப்பியாசம் பண்ணிப்பின்பு ஒரு ஆசாரியரையடைந்து சமய விசேட நிருவாணம் ஆசாரியபிஷேகம் பண்ணிக்கொண்டு இன்னான் மகனின்னானென்றிருந்து சயங்குட்டஞ் சலக்கழிச்சல் முதலாயின வியாதிகளையடைந்து மரண மாதல் முதலான தன்றியுமாயா வொருவன் மாயா வுருவினையே யானேனக்ரவரெம்மனோரேயென்றிருக்கிற படியினாலே பிறவா முதல்வன் பிறந்தானென்றும் உணர்வாய் நின்ற ஞானக்கூத்தன் ஒரு மூர்த்தி கொடு குறுகியென்று மன்[illegible]மருட் குருவாகி வந்தென்றுமிருக்கிற வசனங்களுக்கெல்லாம் விரோதமுண்டெனிற் கருத்தா ஆசாரிய முகூர்த்தமாய்த்திருமேனி கொண்டு வருதலாவது சுத்தான்ம சைதன்னியமே தனக்குச் சொரூபமாகக் கொண்டு தயிரினெய்போல ஆண்டு விளங்கி நின்று உணர்த்துதலால் இக்குற்றங்கள் ஒன்றும் அவனுக்கு இல்லையென்ற

றிக. இது ஆவேச பக்கம். ஏனை அதிட்டான பக்கங் கொள்வார்க்கு ஏனைச்சமய குரவருங் குரவராவார் சேறலின் அஃது ஈண்டைக்கமை வுடைத்தன் றென்பதாம்.

இனி ஆசாரியர் தீக்ஷை செய்து மலங்களை நீக்குதலாவது தீக்ஷையில் நாலு வருணத்தாரும் அனுலோமர் முதலிய அறுவரும் அதிகாரியாவர். அனுலோமர் சவர்ணன் முதலானவர். அவர்களில் பிராமணனுக்கு க்ஷத்திரியப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் சவர்ணன். வைசியப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் நிஷாதன். சூத்திரப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் பார்சவன். க்ஷத்திரியனுக்கு வைசியப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் மாகிஷயன். சூத்திரப் பெண்ணினிடத்துப் பிறந்தவன் தௌஷ்யந்தன். வைசியனுக்குச் சூத்திரப்பெண்ணினிடத்துப் பிறந்தவன் உக்கிரன். இந்தப்பத்துப்பேர்களைத்தவிர மற்றவர் தீக்ஷையில் அதிகாரிகளாகமாட்டார். ஆகவே நாலு வருணத்தாரும் அனுலோமர் முதலிய அறுவருந்தவிர மற்றவருக்கு ஆகமம் ஓதுதலில் அதிகாரமில்லையாம் போது அதற்கு அங்கமாகிய தீக்ஷையிலும் ஆதிகாரமில்லையாகும். ஆனால் மூன்று வருணத்தாருக்கும் தீக்ஷையில் அதிகாரமுண்டு. சூத்திரருக்கில்லையென்று ஆகமங்களில் விலக்கியிருந்தபோதிலும் கட்குடியாமை மாமிசம்புசியாமை சௌசாசாரக் கிரியையில் அன்புடைமை முதலிய இலக்கணம் வாய்ந்துள்ள சிவபத்திரான சூத்திரருக்கு தீக்ஷையிலதிகாரமுண்டு மற்றவருக்கில்லையென்று பிரமாணமிருப்பதால் விலக்கியது மற்ற அசற் சூத்திரரை யென்றறியவேண்டும் ஆகையால் சற் சூத்திரருக்கே தீக்ஷையிலதிகாரமுண்டு.

இங்ஙனம்
சுப்பிரமணிய பிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

இன்னிசை இருநூறு.

[தொடர்ச்சி]

6-வது அதிகாரம் தீவினை அச்சம்.

1 பிறர்பொருள அன்னார் உணராது பெட்பின்
சிறிய கொளினுமவை நஞ்சினும் தீய
இறைவன் ஒறுக்கும் பிழைப்பினும் என்றும்
உறைப இருள்சேர் உலகு.

2 * ஆறலைத்தல் கொள்ளை அதிகாரம் பொய்வஞ்சம்
சீறி வெருட்டல் குறைமுடிப்பல் செய்வவினிப்
பேறெனல் இன்ன பிறாறிய வெளவினும்
வேறல்ல கள்ள வினை.

* வழிப்பறி.

3 பயனில் பொருள்நற் பயன்படும் ஆறும்
நயனில் கடுமுதல நல்லுயிர் மாயாது
உயவும் குறித்தோர்ந் தானுடையார் கொள்ளிற்
செயிர்தீர் அறமாஞ் சிறந்து.

° திருடினால்.

4 மன்னுயிர்க்குத் தூய நலந்தருஞ்சொல் வாய்மையே
இன்னா விளைக்குஞ்சொல் பொய்யே இஃதுணர்ந்து
தன்னெஞ் சறிவது பொய்யாமைச் சாற்றலுறின்
என்னபிற இல்லெனினும் என்.

5 ஒழுக்கம் பிழையாரைப் பொய்சொற்றும் ஓம்பல்
விழுப்பமாம் அவ்வுரையால் வெய்யரைக் காத்தல்
இழுக்காம் உயர்ந்தார் பொருட்டும் இயம்பார்
வழுக்கியும்பொய் சான்றா வரின்.

6 மற்றோர்பாற் சொல்லேனென் றேற்ற மறைமொழியைப்
பிற்றைப் பிறர்போய்ப் பெரிது வருத்தினும்
உற்ற துரைப்பது பொய்யாம் உதுமறைத்து
மற்றொன்று கூறல் வழக்கு.

7 பிறர்தம்மின் மேலா இணையாப் பிறங்கிற்
பொறாதிழிபு கண்டக்காற் புன்மை மகிழ்ப
சிறுமை உறுங்கால் அழுங்கிச் சிறந்தால்
உறுபவே சான்றோர் உவப்பு.

புத்தகக்குறிப்பு.

ஈச்சுர நிச்சயம்:—இந்நூல் யாழ்ப்பாணம் கச்சேரிப்பிரதான முதலியாராக இருக்கின்ற ஸ்ரீமாந் குகதாசர் ச. சபாரத்தினபிள்ளையவர்களாலியற்றப்பெற்றது. உலோகாயதம், நிரீச்சுரசாங்கியம் முதலான நாஸ்திகர் கொள்கைகளையெல்லாம் மறுத்து ஆஸ்திகக்கோட்பாடான கடவுளுண்மையைத்தாபித்து முடிக்கப்பெற்றுளது. இதுபொதுவியல், சிறப்பியல் என்னும் இருபகுப்பிற்று. பொதுவியல் இருசூத்திரமும், சிறப்பியல் மூன்று சூத்திரமாக ஐந்து சூத்திரங்களையுடையது. முதற்சூத்திரம் 8 அதிகரணங்களையும் 2 ம் சூத்திரம் 2 அதிகரணங்களையும், 3 ம் சூத்திரம் 2 அதிகரணங்களையும், 4 ம் சூத்திரம் 8 அதிகரணங்களையும், 5 ம் சூத்திரம் 5 அதிகரணங்களையும் உடையன. (1) நாம் கடவுளுண்டென்னும் கோட்பாடு கொள்ளும் கடமையுடையேமெனவும், (2) கடவுளில்லையென்பதினும் உண்டென்பதே யுக்திக்குப் பொருந்துவதென்பதும், (3) கடவுளுண்மை சிறப்பு வகையால் விசாரஞ் செய்யின் நையாயிகதர்மத்துக்கேற்ப நன்கு காட்டப்படும் என்பதும் (4) அக்கடவுளுண்மை ஐயந்திரிபின்றி இன்றியமையாச் சிறப்புற்றதென்று உணரற்பாலதென்பதும், (5) கடவுளுண்மைக்கு மாறு கூறும் ஆக்ஷேபங்கள் சமாதானஞ் செய்யப்படும் என்பதும், ஆக இனிமை நிறைந்த செந்தமிழ் நடையில் அமைவுற்று நிற்பது. நாம் இந்நூலைப் படிக்கும்போது பெரிதும் களிப்புற்றேம். தமிழ் மக்கள் பலரும் இந்நூலை வாசித்தால் மனக்களிப்புறுவதொருதலை. இந்நூலாசிரியர் சைவசித்தாந்த சாஸ்திர உணர்ச்சியும், ஏனை நூலுணர்ச்சியும் நன்கு பெற்றுள்ளார். நுணுகிய அறிவினர். நன்னெறியொழுக்கினர். இந்நூலின் இரண்டாம் பாகமாக சமய நிச்சயம் என்றதொருநூலும் இவர்களே எழுதுவதாக அறிந்து அக மிக மகிழ்ந்தேம். அதனை விரைவில் முடித்துதவுவான் வேண்டி யாமும் பிரார்த்திக்கின்றனம்.

யதார்த்த பாஸ்கரன்:— இப்பெயர் பூண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை சென்னையினின்றும் மகா-ா-ா-ஸ்ரீ விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள் B. A. யால் நடைபெற்று வருவது. ஆங்கிலமுந்தமிழும் கலப்புறக் கொண்டது. சிறுவர் சிறுமியர் அறியுமாறு அரிய விஷயங்களைச் சுலப நடையோடு எழுதப்பெற்று வருவது. தமிழ் நாட்டிற்கு இப்பத்திரிகையால் பல நன்மையுண்டென்றே நினைக்கிறோம். இதற்கு வருஷ சந்தா ரூ. 3—8—0.

இரத்ந மாலிகை:—இச் சங்கிரகத்தை இயற்றியோர் யதார்த்த பாஸ்கரன் பத்திராதிபராகிய முதலியாரவர்களே. இது பிரமஸ்ரீ U. V. ரமணையரவர்கள் M. A. F. L. S. ஆங்கிலத்தில் யாத்த அரிய முகவுரையோடு கூடியது. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும், தமிழுலகத்தைப் பெரிதும் கடமைப்படுத்தியவருமான ரெவரெண்ட் டாக்டர் போப்துரையவர்களுக்கு அவரது தமிழபிமானத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேதாந்த விசாரணை செய்ய விரும்புவோர்க்கு இன்றியமையாதது. சர்வசமய சமரசத்தோடு கூடியது. இனிய செந்தமிழ் நடைப்போக்குள்ளது. இதன்விலை ரூபாய் ஒன்றே.

சாவித்திரி:— ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள் இயற்றிய நூல்களில் இதுவும் ஒன்று. இதன்கண் ஆசிரியர் காலதேச வர்த்தமானத்திற்கேற்பத் தாமே சிலதருமங்களைத் தொகுத்துள்ளார். இதுவும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. அழகாகப்பதிப்பிடப்பட்டது. கற்பவர் மனதைக் கவரத்தக்கது. இதன் விலை அணா பத்து.

பத்திராதிபர்.

சமாச்சாரக்கொத்து.

ஒருவாரத்தில் ஒரு அங்குலத்தில் பத்தில் ஒருபாகம் தாடி வளருமாம். 84-வயது ஒருவன் வளரவிட்டிருந்தால் 2764-அங்குல நீளம் வளருமாம்.

* * * * *

கடுதாசியினால் சுருட்டுச்செய்கிறார்கள். கடிதத்தைப் புகையிலை ரசத்தில் தோய்த்து நன்றாக ஊறினபிறகு இலைகள் மாதிரி கத்தரித்துச் சுருட்டிவைக்கிறார்களாம். சாதாரணச் சுருட்டுப் போலவே வாசனையிருக்கிறதாம்.

* * * * *

ஒரு முட்டையின் நீளம் 12-அங்குலம். அகலம் 10-அங்குலம். அதன் தோடு கால் அங்குல கனமுள்ளது. அது கல்போல் கெட்டியாயிருக்கின்றது. ஆறு நீக்குருவியின் முட்டை அல்லது 148-கோழிமுட்டையின் கருக்களைக் கொள்ளக் கூடியதாம். அதன் பருமனை அவரவரே யூகித்தறியலாம்.

* * * * *

அமெரிக்காவிலுள்ள கொலரேடோ வனாந்திரங்களில் பலமான மழைபெய்யுங்காலத்தில் ஒரு துளியும் பூமியில் விழுகிறதில்லையாம். மேகத்தினின்றும் மழைபொழியும் ஆனால் அவைகட்குச்சிறிது கீழேயிருக்கப்பட்ட வறட்சியான ஆகாயமுள்ள பிரதேசத்துக்கு வரும்பொழுது அம்மழையை அவ்வறண்டகாற்றுக் குடித்துவிடுகிறதாம். அதனாற்றான் மழைத்துளி பூமியில் விழுகிறதில்லையாம்.

* * * * *

பூமியின்கணுள்ள சுரங்கங்களினின்றும் எடுக்கப்படும் எண்ணெயை "மண்ணெண்ணெய்" என்றுநம்தேசத்தார் கூறுவர். அதற்குப் "பெட்ரோலியம்" என்றும், "கிரோஸின் ஆயில்" என்றும் பெயர் வழங்கும். அமெரிக்காவிலுள்ள காலியோர்னியாவுக்குச் சமீபத்திலிருக்கிற ஸம்மர்லான்ட் என்ற இடத்தில் கடற்குள் 200-க்கு மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகளுள்ளனவாம். முதன் முதல் அவைகளைப்போய்ப் பார்ப்பவர்க்கு அவை மிகவும் அதிசயமாகத் தோற்றுமாம். அவை ஜலத்தில் 15-முதல் 25-அடி வரையுள்ள ஆழத்திலிருக்கும். கரையினின்றும் அவ்விடங்கட்குப் போக மரப்பாலங்கள் உண்டு. அக்கிணறுகளினின்றும் ஒரு தினத்துக்கு 200 பாரல் எண்ணெய் எடுக்கிறார்கள். அங்கு வற்றாமலிருப்பதாகத் தெரியவருகிறது. எண்ணெயைத் தண்ணீரில் படாவண்ணம் மிகச்ஜாக்கிரதையுடன் எடுக்கிறார்கள். இதுவும் ஒரு அற்புதமே.

* * * * *

மரணம்:—கோடீசுவரரில் ஒருவரும் பரமதாதாவுமாகிய கனம் தாதா அவர்களை இந்தியா. அன்றியும், இப்பாரஸீக சிகாமணி பம்பாய் நகரில் பஞ்சாலைகள் நெசவுயந்திரங்கள் முதலியவற்றையும் இந்த தேசத்திலுள்ள எல்லா மில்லுகளிலும் மிகப்பெரிதாய்ச் சிறந்தோங்கும் "எம்பிரஸ் மில்" லையும் ஸ்தாபித்தவர். 30 லக்ஷரூபாய் செலவிட்டுப் பொதுஜன நன்மைக்காகத் தாஜ்மஹால் ஹோட்டல் கட்டியவர். இந்திய மாணவர்கள் இங்கிலாந்து ஜப்பான் முதலிய விடங்களில் சென்று கைத்தொழில் தேர்ச்சியும் வித்வத் திறமையும் பெற்றுத்திரும்ப தக்க உபகார சம்பளம் உதவியவர். கலாசாலைக் கல்விமுடிந்தபின் தொழிற்றுறைகளுக்குத் துணையாய் நிற்கும் ஆராய்ச்சி அறிவும் சாஸ்திர நுட்பத்திறமையும் இத்தேச மாணவர் எய்த 30 லக்ஷரூபாய் கொடுத்து ஓர் ஆராய்ச்சிக் கலாசாலை யேற்படுத்த முன் வந்தவர். இவரது மரணத்திற்காக யாம் மிகவும் விசனமடைகிறோம்.

பத்திராபதிர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவும் தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு . ரூ 35
2. மகா-௱-௱-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு. ... ... ரூ 25
3. மகா-௱-௱-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ... ரூ 10
4. மகா-௱-௱-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமீந்தார் தேவிகோட்டை வரவு... ரூ 25

இவர்கள் 1903 வருஷத்திலும் 25ரூ நன் கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

5. மகா-௱-௱-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதம்பை. சிலோன் வரவு ... ரூ 25

பத்திராதிபர்.

வைத்தியம்.

[120-ம் பக்கத் தொடர்ச்சி]

உபயோகம்:—பாலருக்குக் காணுஞ் சுரங்களுக்கு மூலைப்பாலில், 3 நாள் காலை மாலை, 6, குளிகை கொடுக்கலாம்.

சிறுவர்கள் சுரத்திற்கு:—தொண்டைக் கட்டு சளி இருமல் ஏங்கலிளைப்போடு கூடிய சுரமானால், கற்பூரவல்லியை வாட்டிப் பிழிந்த ரசம், கண்டங்கத்திரியை வாட்டிப்பிழிந்த ரசம், துளசி யிலையை வாட்டிப் பிழிந்த ரசம், சிற்றரத்தைக் கஷாய முதலிய ஏதோ ஓரனுபானத்தில், 3 நாள், 6 வேளை கொடுக்கலாம்.

பெரியவர்கள் பித்த சுரத்திற்கு:—எலுமிச்சம்பழத்தோல், நாரத்தம்பழத்தோல், இவைகளின்இலை, வெற்றிலை, வேப்பிலை, கறிவேப்பிலை, நுணாவிலை, வகைக்கு ஓர் பிடி யெடுத்துப்புதிய மட்பாண்டத்திலிட்டுக் கருக வறுத்துப்பின்னர், 8 படி தண்ணீர் விட்டு, சுக்கு, கொத்தமல்லி, சீரகம், இரா

ம்பு, மிளகு வகைக்கு விராகனிடை, 2. தட்டிப்போட்டு, முக்காற் படியாய்க் குறுக்கிவைத்துக்கொண்டு வேளைக்கு விசப்படி கஷாயத்தை வடித்து மாத்திரையை உரைத்துக் கலந்து சுரம் நிற்கும்வரை 4, 5 நாள் சாப்பிடலாம்.

வாதசுரத்திற்கு:—இஞ்சிச்சுரசம் செய்முறை வேளைக்கு 4 ரூபாயெடை இஞ்சியை நன்றாய்க்கழுவி மேற்றோலைப்போக்கி மறுபடியும் வெந்நீர்விட்டுக் கழுவிச் சுத்தமான அம்மியில்வைத்துத்தட்டி வெள்ளைவஸ்திரத்தில் வைத்துப்பிழிந்து மறுபடியும் அந்த இஞ்சியைக் கொஞ்சம் வெந்நீர் தெளித்துத் தட்டி முன்போற் பிழிந்து பாத்திரத்தை அசையாமற் சற்றுநேரம் வைத்திருந்தால் அச்சாற்றிலுள்ள சுண்ணாம்பு பாத்திரத்தில் வண்டலாகப் படிந்துகொள்ளும்; இதை அழுக்கின்றித்தேய்த்த இரும்புக்கரண்டியை நெருப்பில் நன்றாய்க்காய்ச்சித் துடைத்து அதில் ஊற்றினால் பொங்கும். நொறியடங்கினவுடன் மருந்துண்ணும்பாத்திரத்தில் வடித்து மாத்திரையை உரைத்துக் கலந்துண்ணவேண்டியது. சுரசம்-நல்லரசம், சு-நல்ல.

இரசமில்லாத காய்ந்தவஸ்துக்களிலிருந்து சுரசமெடுக்க வேண்டுமானால் வெந்நீர்விட்டரைத்து முன்போற்செய்து கொள்ளுக.

சிலேஷ்ம சுரத்திற்கு:—இஞ்சிச்சுரசம், சிற்றரத்தைச்சுரசம், தேன்; கருப்புச்சர்க்கரை, பனைவெல்லம் இவைகள் அனுபானமாகும்.

3-வயதுக்குட்பட்ட பாலர்கட்கு அளவு அரைமாத்திரை.
3-வயதுக்குமேல் 12-வயதுள்ளவர்கட்கு 1 மாத்திரை.
12-வயதிற்குமேற்பட்டவர்கட்கு 2 மாத்திரை.

இம்மாத்திரை முறையில் பாஷாணவர்க்கமாவது நஞ்சின்றன்மையுள்ள மூலிகைகளாவது சேராமையால் பாலர், விருத்தர், கர்ப்பிணிகளென்னும் எவ்வகைத்தேகிகட்கும் பயமின்றிக் கொடுக்கலாம்.

பத்தியம்:—பாலர்க்குக்கொடுத்தால் தாயார் பத்தியமாயிருக்கவேண்டியது. எத்தனைநாள் மாத்திரை சாப்பிடப்படுகிறதோ மறுபடியும் அத்தனை நாள் பத்தியங்காக்கவேண்டும். அதாவது 2 வேளைமருந்தில் சுரம் நின்றுவிட்டால் 2 நாள் பத்தியம்.

புளி, நெய், தித்திப்பு வஸ்துக்கள் குளிர்ச்சியானவஸ்துக்கள் மந்தவஸ்துக்கள் பனிக்காற்றிலிருத்தல் முதலியவை கூடாதன. மருந்துசாப்பிட்டநாள்முதல் 7-வது நாளில் ஓமத்தண்ணீர்விட்டுக்கொள்ளவும். (ஓமத்தைப்பாலாவது பசுமோராவது விட்டரைத்துக் காய்ச்சித்தேய்த்து ஸ்நாநம் பண்ணுதல்) சுரரோகத்திற்கு மருந்துட்கொண்டவர்கள், 3-மாதவரை சம்போகத்தை விலக்கியிருந்தால் நலம்.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை.

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 6 } 1904வருஷ ஜூன்மீ { புத்தகம் 6.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
9 - JUL 1904
MADRAS.

சேரிடமறிந்துசேர்.

நற்றமிழ்த்தேயத்து உத்தமப் பெண்கள் சிகாமணியான ஒளவைப்பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய இச்சிறுவாக்கியம் எவ்வளவு பொருளாற்றலுடையது. இவ்வாக்கியார்த்தத்தை ஆழ்ந்து சூழ்ந்து அறிந்து, அறிந்தவாறே ஒழுகுவோமாயின் யாம் பெறுதற்கரியபேறுமுளதோ? அறிவென்பது மக்கட்கு இயற்கையே யமைந்துளதாயினும் அது விளக்கமுறுதற்கு இன்றியமையாத்துணையாவன கல்வியும், பழக்கமுமாம். விரித்துக்கூறின் அறிவு நெருப்பை யொக்கும். கல்வி, திரியை யொக்கும். பழக்கம் நெய்யை யொக்கும்.

ஒரு விளக்கு ஒளிவிட்டு எரிதற்கு நெருப்பு. திரி, நெய் மூன்றும் வேண்டப்படுவனவேனும் இவற்றுள் இன்றியமையாததும் எப்போதும் வேண்டப்படுவதும் ஆகிய சிறப்பினையுடையது நெய்யேயாகும். நெய் இல்லையேல் எரியானது திரியையும் அழித்துத்தானும் அழியும். நெய் தானிருக்கும் துணையும் எரியையும் திரியையும் பாதுகாக்கும். இவ்வாறே அறிவாகிய எரியும், கல்வியாகிய திரியும், பழக்கமாகிய நெய்யிருக்குங்காறும் விளக்கமுறும். பழக்கமாகிய நெய்யற்றவிடத்து அறிவே கல்வியையும் மலினப்படுத்தித்தானும் மலினமுறும். நெய் எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு

எரி விளக்கு ஒளிவிட்டுப்பிரகாசிக்கும். நெய் அசுத்தங்கலந்து கெட்டதன்மை பெற்றதாயின் எரியும் ஒளிகுன்றிக்குன்றிக் கெட்டுப்போம்.

இங்ஙனம் பழக்கம் நல்லதாக அமையின் அறிவும், கல்வியும் நன்கு பயன்படும். பழக்கம் தீயதாக அமையின் அறிவுங், கல்வியும், கேடுபயக்கும். ஆதலின் அறிவு விளக்கமுற வேண்டினால் அறிஞர் பழக்கமுறவேண்டுமென்பது பெறப்பட்டது. இது பற்றியன்றே

“ நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு,, என்றார் தேவரும்.

ஒருவன் நூலறிவு கொள்ளானேயாயினும் நல்லோரிணக்கம் பெறுவானேல் எல்லா நலமும் எய்தப் பெறுவான். எத்துணை நூல்களைக் கற்றுள்ளானாயினும், சிற்றினம் சேர்ந்துறுவானாயின் யாதொருபயனும் பெறான். அதுமட்டோ? சகலதீமையும் எய்தப்பெறுவான். நூலுணர்ந்து பெற்ற அறிவு பழக்கத்தின் சிறுமை பெருமைகட்குத்தக்கவாறு தீங்கும் நலமும் பயப்பதாக மாறும். பழக்கத்தால் பெறும் அறிவோ ஒருநாளும் பிறிதொன்றால் மாறக்கூடியதன்று. ஆதலின் எப்போதும் நாம் பழகுதற்கு உரியாரை நன்கு தெரிந்து பின்பே பழகல் வேண்டும். நல்லொழுக்கமும், தெய்வபக்தியும், இடித்துக் கூறலும், பரதுக்க துக்கமும், பரோபகாரமும் ஆகிய நற்குண நற்செயலுடையாரே பழக்கத்துக்குத் தக்கவராவர். நம் கண்ணுக்கெதிரில் தீயவர் பழக்கத்தால் பொருளைச் சிதைத்து அருளைவதைத்துப் பழிக்குடம்பெடுத்த பாவிகளாகி வருந்தி நொந்துள்ளாரைத்தினமும் காண்கின்றோம். சாது சங்கப் பழக்கத்தால், முன்னைய தாழ்ந்த நிலையை விட்டு உயர் நிலைக்கு வந்துள்ளாரையும் காண்கின்றோம். இவ்வகைகட்குப் புராணேதிகாசமுகத்தால் அறியப்படும் உதாரணமும் பலவே.

இன்னும் இப்பழக்கம் எவ்வளவுக்கெவ்வளவு இளமைப் பருவத்தில் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நிலைத்து

நிற்கும். ஆதலின் நாம் நற்பழக்கங்கொண்டு வாழ்தலுடன் நமது பிள்ளைகளையும் இந்த விஷயத்தில் முக்கியமாய்க் கவனித்து வரல் வேண்டும். பழக்கத்தாலே ஒழுக்கமுளதாகும். ஒழுக்கமோ குடிப்பிறப்பினும் கல்வியினும் கோடி பங்கு அதிகச் சிறப்பினையுடையது. உயிரினுஞ் சிறந்தது. ஒப்புயர்வற்றது. இவ்வொழுக்கத்தின் சிறப்பைப்பற்றிப் பின்னொரு முறை விரிப்பாம். இதற்கு ஆதாரமாகிய நல்லோர் பழக்கத்தையே யெப்போதும கவனத்துடன் கைக்கொள்ளல் வேண்டும். தீயார் பழக்கத்தைக் கனவிலும் விடல் வேண்டும். இப்பழக்கத்தின் வலிமையை முற்றப்பகரவொண்ணாது. தற்காலத்து உயர்குடிப்பிறந்த மக்கள் பல்லோர் கட்குடி மக்களாகித் திரிகின்றனர். கலைவல்லவரான பல்லோர் கொலைவல்லவராகிக் கெடுகின்றனர். நன்னிதி படைத்திருந்த பல்லோர் எந்நிதியுமில்லாராகி ஏங்குகின்றனர்.

“ ஆயிரஞ் சொன்னாலு மறியாத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடிற் பிழைகாண் பராபரமே”

என்ற அருமைத் திருவாக்கைச் சிந்தித்து நற் பழக்கம் பெற்று வாழ்வதே வாழ்வாகும்.

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

[128-ம்பக்கத் தொடர்ச்சி]

மறுபடியும் அதற்குக் கோபம் வரும்படியாய் இரண்டொருபலமான உரைகள் கொடுக்கவே அவ்வேங்கையும் தன் சொரூபத்தைக்காட்டவேண்டியது இன்றியமையாதது என்று தீர்மானித்து எழும்பத்தொடங்கிற்று. எழும்பவே எல்லோரும் வெகுதூரம் பின்வாங்கினார்கள். அங்குநின்றவர்களிற்பலர் “புலிக்குப் பயந்தவர்கள் என்மீது படுத்துக்கொள்ளுங்கள்” என்றுசொல்லத்தக்க தைரியசாலிகள். எல்லோரும் ஒதுங்கிப்போனதைக் கண்ணுற்ற சக்கரவர்த்திக்கு அளவற்ற ஆனந்தமுண்டாயிற்று. ஷியர்ஆப்கனது முடிவை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நாம் என்ன நினைந்தாலும் தெய்வசங்கற்பத்தின்படியே முடியுமென்பது உண்மையே. ஷியர்ஆப்கனும் அப்புலியை எதிர்த்தான். அது தன் கொடியகைகளால் அவனை அறைய எண்ணிப்பாய்ந்தது. அவன் சிறிது ஒதுங்கிக்கொடுத்தான். குறிதப்பி வெகுதொலையில்போய்விழுந்தது, மறுபடி ஆவேசங்கொண்டு முன்னிலும்வேகமாய்ப்பாயத்தொடங்கிற்று. அதற்கும் அவன் அகப்படவில்லை. ஆனால் இச்சமயத்தில் அது அவன் அருகில் விழுந்தது. உடனே அவன் திரும்பி அதன் பின்னங்கால்களைப் பலமாய்ப் பிடித்து பீமசேனன் கீசகனைச்சுற்றியவிதம் கரகரவென்றுசுழற்றி எறியவே அதற்குண்டான கோபத்திற்கு அளவில்லை. அது ஒரேபாய்ச்சலாய்க்கிளம்பி இவன் சமீபத்துக்குவந்து அவன் கழுத்தைப்பிடித்துக்கொண்டது. தன் கூரியநகங்களை அவன் கழுத்தில் அழுத்த ஆரம்பிக்கவே ஷியர்ஆப்கனும் சரேலென்று உட்கார்ந்து அதன் விலாவைப் பிடித்து நெருக்க அது தான் பிடித்தபிடியைவிட்டுக்குனிந்து தன் கூரியபற்களால் அவன் தோட்பட்டையைக் கடிக்கத்தொடங்கிற்று. உடனே அவன் இடக்கையை அதன் கழுத்தில்கொடுத்துத்தள்ளிக்கொண்டு வலக்கையால் அதன் பின்கால்களில் ஒன்றைப்பற்றிஇழுக்கவே அவ்வேங்கை முதுகுப்புறமாய் தொப்பென்றுவிழுந்தது. உடனே ஷியர்ஆப்கன் அதன் வயிற்றில் முழந்தாளையடித்து அழுத்திக்கொண்டு இடக்கையைத் தொண்டையில் கொடுத்து வலக்கைமுஷ்டியால் பலமாய்க் கண்புறத்தைப்பார்த்து இரண்டு குத்துக்குத்தவே அது அவன் கையைக்கடிக்கவும் அவனைப்புறட்டித்தள்ளவும் தன்னால் கூடியமுயற்சி செய்தும் விழலுக்கிறைத்ததாயிற்று. மறுபடியும் ஷியர்ஆப்கன் அதன் முன்னங்கால்களைப்பற்றிக் கரகரவென்றுசுழற்றிவீசி எறியவே அப்புலி வெகுதூரஞ்சென்று ஒருமரத்தில்தாக்கி அறையுண்டுவிழுந்தது. அதன் சப்பை மரத்தில்மோதினமையால் பலமான அடிபட்டு மூர்ச்சித்து ஒரு ஓரத்தில்போய்விழுந்தது. அதற்கு இப்பொழுது கண்ணும் தெரியவில்லை. எழுந்திருக்கவோபலமும் இல்லை. அதன்பிராணன் அதன் நெஞ்சில் துடித்துக்கொண்டிருந்தது. இதுகண்ட நம் ஷியர்ஆப்கன் காலதாமதமின்றி அதனிடஞ்சென்று அதன் விலாப்புறத்தில் பலமாய் இரண்டொரு உதைகொடுக்கவே அப்புலி பகாரோஷங்கொண்டு அவனைக் கடிக்க எண்ணி வாயைத்திறந்து அங்குமிங்கும்புரண்டுகொடுக்கவே பக்கத்திலிருந்த ஒரு இளமரத்துண்டை ஷியர்ஆப்கன்தொடையென்று கருதிப் பலமாய்க்கடித்தது. அதனால் அதன் பற்கள் வலியெடுத்து அத்துன்பத்தாலும் வேறுதுன்பங்களாலும் அது புரண்டு புரண்டுகொடுத்துக் கால்களை விலுக்கு விலுக்கென்று உதைத்துக்கொண்டு உயிர்துடித்துக்கொண்டிருந்து கடைசியாய் இரண்டுகைகளால் ஓங்கிப்பூமியில் அறைந்து உறுமிக்கொண்டு இரத்தத்தைக் கக்கிக்கொண்டு பிராணனைவிட்டது. புலிகிளித்த காயங்களால்

அவன் மேலெல்லாம் இரத்தம் ஆறாய்ப்பெருகிற்று. அவன் அதைச்சிறிதேனும் லட்சியம் பண்ணவில்லை. உடனே அவன் அப்புலிக்குச்சமீபத்தில் சென்று ஒருக்கால் உயிரிருக்கிறதோ என்று சந்தேகத்துடன் உற்றுப்பார்த்தான். ஜீவஅடையாளம் யாதொன்றும் தோற்றவில்லை. உடனே அதன் வாலைப்பிடித்திழுத்துப்பார்த்து சந்தேகம்தெளிந்து அதன் பின்னங்காலைப் பிடித்து அதைப்பரபரவென்றுஇழுத்துவந்தான். உடனே ஓடிவந்து அவன் இரத்தத்தைத்துடைக்க விருப்பங்கொண்டார்கள் சிலர். அவன் சூரத்தைப் புகழ்ந்து அவனை ஆலிங்கனம்பண்ண நினைந்தவர்பலர். அவனைச்செங்குத்தாய்த்தூக்கி சக்கரவர்த்தியிடம் ஓடிக்கொண்டுபோய்விடவேண்டுமென்று நினைந்தவர்சிலர். அவன் புண்களைப்பார்த்துப் பரிதபித்தவர்சிலர். அவன் தோள்வலிமையைப் புகழ்ந்தவர்சிலர். அது பெரிதில்லையென்று அவன் தாள்வலிமையை வியப்பார்சிலர். அவன் முஷ்டிபலத்தைப்புகழ்ந்து ஆனந்திப்பார்சிலர். அவன் மனோதைரியத்தையும் கீர்வத்தையும் மெச்சுவார்பலர். அவன் சரேலென்று உட்கார்ந்து அப்புலியின் கால்களைப்பற்றி கரகரவென்று சுற்றிய (அவன்) சாமார்த்தியத்தை ஆச்சரியத்துடன் புகழ்ந்து பேசுவார் பலர். அவன் களைப்பைத் தீர்க்கத்தண்ணீர் கொண்டுவரும்படி கூவுவார்கள்சிலர். அதற்காக ஓடுவார்கள் பலர். இவ்வாறெல்லாம் நிகழும்சமயத்தில் ஸலீம் அம்பாரியிலிருந்து கீழிறங்கி ஷியர்ஆப்கனைக்கொண்டாடி அவன் சமீபத்தில்வந்து பல உபசாரவார்த்தைகள்சொல்லி அவன் மேலெல்லாம் வழிந்தோடுகிற இரத்தத்தைத் தன்வஸ்திரத்தால் துடைத்து உண்டியும் பானமும் உடனே கொணர்வித்து அருந்தச்செய்தான். ஷியர்ஆப்கனும் சக்கரவர்த்தியின்வேண்டுகோளுக்கிணங்கிச் சிறிது உட்கொண்டனன். பின் எல்லோரும் கூடாரத்துக்குப்போனார்கள். புலியை இழுத்துக்கொண்டுவந்து கூடாரத்தின் வெளியில்போட்டான் ஒரு வேட்டையாளி. எல்லோரும் குதூகலத்துடன் புலிவேட்டையைப்பற்றியும் புலியின் குணகுணங்களைப்பற்றியும் பலவாறு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் கோழைமனமுள்ள ஒருவன் இக்கதைகளைக் கேட்டு மனநடுங்கிக்கொண்டிருந்தான். எல்லோரும் உண்டாடிக்களித்தப்பின் கண்துஞ்சினார்கள். நடுநிசியில் "ஐயோ அப்பா" புலி! புலி!! என்று கூடாரத்தில் ஒருசப்தம் திடீரென்று உண்டாயிற்று. எல்லோரும் திடுக்கிட்டு எழுந்திருந்து அங்குமிங்கும் ஓடத்தொடங்கினார்கள், பலர் பதுங்கக்கூடிய இடங்களில் ஓடி ஒளிந்தனர். நம்ஷியர்ஆப்கனோ சக்கரவர்த்தியின் பக்கல் நின்று தைரியங்கூறிப் புலிவந்தாலும் லட்சியம் செய்யவேண்டுவதில்லையென்றான். சிறிது ஆர அமரக்கூர்ந்து பார்க்கவே ஒருமூலையில் ஒருமனிதன் சொற்பனத்தில் கிலிபிடித்து உளறுகிறதாக அறிந்தான். உடனே அவன் சமீபஞ்சென்று தட்டி எழுப்பவே அவன் திடுக்கிட்டு "ஐயோ

"அப்பா!! புலி புலி" என்று சொல்லிக்கொண்டே எழுந்து ஓடத்தொடங்கினான். உடனே பக்கத்தில் நின்றவன் அவனைப்பிடித்துக்கொண்டு "என்னடா உளறுகிறாய்" என்றுசொல்லவே அவன் புத்தி தெளிந்து எல்லோருடனும் சிரிக்கஆரம்பித்தான். கிலி இவ்வளவு பாடுபடுத்திற்றென்ற உண்மையை அறியவே ஓடி ஒளிந்து கொண்ட அனைவரும் ஒருவர் ஒருவராய் வந்து தத்தம் சாமர்த்தியத்தைச்சொல்லிக் கொண்டார்கள். இவ்வாறான வைபவங்களையும் ஆனந்தங்களையும் அநுபவித்துக்கொண்டு இரண்டொரு தினம் அங்கே தங்கி நின்று பின் இராஜதானிக்குச் திரும்பினார்கள்.

போகிறவழியில் ஓர் ஆறுகுறுக்கிட்டது. அது காடுகள் அடர்ந்தஇரண்டு சரிவான மலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தாக்கிற்சென்றது. அதன்நீர் பெரியோர்மனம்போல் குளிர்ந்தும் தெளிந்துமிராநின்றது. அரைக்கால்மைல் அகலமுள்ள அவ்வாறு அவ்விருமலைகளுக்கிடையில் ஓடினது மிகவும் ரம்மியமாயிருந்தது. ஆழ்நீர் மடுக்கள் பல அவ்வாற்றின் பற்பல இடங்களில் இருந்தன. எல்லோரும் அவ்வாற்றைக் கடக்கப் பிரயத்தனஞ்செய்தார்கள். இச்சமயம் சிறிது தூரத்தில் பெருங்கூச்சல் கேட்டது. அதென்னவென்று எல்லோரும் செவிசாய்த்துக்கேட்கவே ஒருயானைக்கூட்டம் வருவதாக அறிந்தார்கள். உடனே எல்லோரும் நிஸப்தமாயிருக்கவேண்டுமென்று உத்தரவுபிறக்கவே எல்லோரும் யோகிகளதுமனநிலைபோல் சஞ்சலமற்றுநின்றனர். நெடுநாளாய் அக்காட்டுக்கரிகளின் கூட்டத்தைக்கண்டு களிக்கவேண்டுமென்றிருந்தசக்கிரவர்த்திக்குஅன்று தக்கசமயம்வாய்க்கவே அந்நேத்திரானந்தத்தை நன்கு அநுபவிக்கக்கருதி அக்கூட்டம் வந்திறங்கும்படியான துறைக்குச் சிறிது தூரத்தில் எல்லோரும் ஒதுங்கிநிற்கும்படி கட்டளையிட்டனர் எல்லோரும்ஆவலோடு கூட்டத்தின்வரவை இமையாநாட்டத்துடன் எதிர்பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவைகள் அம்மலைச்சரிவில் இறங்குங்கால் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்குக் காட்டெருமைக் கூட்டம்போல் காணப்பட்டன. முதல் முதல் அநுபவமுள்ள பெரிய கொம்பானை ஒன்று வழிகாட்ட அதனைத் தொடர்ந்து பல பெரிய களிறுகளும் பிடியானைகளும் பின் செல்ல அவைகளைத் தொடர்ந்து சிற்றானைகளும் கன்றுகளும் ஏராளமாய் வந்துகொண்டிருந்தன அவைகளைத்தொடர்ந்து பல பிடியானைகளும் களிறுகளும் பல வழிச்செல்லும் இந்திரியங்களையடக்கியாண்டு ஒருவழிப்படுத்தி நிறுத்தும் யோகிகளைப்போல் சிதறிச்செல்லும் அச்சிற்றானைகளை ஒருவழிப்படுத்திச் செலுத்த முயன்றன. சில தாய் யானைகள் வழிதப்பிச் செல்லும் தம் கன்றுகளைத் தம் துதிக்கைகொண்டு நையப்புடைத்து இழுத்துக் கூட்டத்திற் சேர்த்து அவைகளின் பக்கலில் செல்லும். சில பெரியயானைகளின் மீது செடிகள் முளைத்திருந்தன. முதலிற் சென்ற யானை நீர் ஓரத்தில்

வந்து நின்று நாலா பக்கமும் சுற்றிப்பார்த்து நிர்மானுஷியமாயிருப்பதையறிந்து சந்தோஷித்துத் தன் துதிக்கையை மேல்தூக்கி வீறிட்டுப்பிளிறிப் பின் அத்துதிக்கையை நீரில் அமிழ்த்திக் குடு குடுவென்று சப்தம் செய்து தன் தலையைத் திருப்பி சந்தோஷக் கூச்சலிட்டுப் பின்னோக்கவே எல்லாம் அக்குறிப்பறிந்து அவ்வியானைபோனவழியே செல்லத் தொடங்கின.

சிறிது தூரம் செல்லவே ஆழம் அதிகரித்ததைக்கண்டு அக்கொம்பன் நின்றுவிட்டது. அதுகண்டு எல்லாம்நின்றுவிட்டன. உடனே அது ஒரு ஒலிக்குறிப்புச்செய்யவே அங்குநின்ற கன்றுகளைத்தாய் யானைகளும் அவைகளின் களிறுகளும் தம் துதிக்கையால் தாங்கிநீந்திக்கொண்டு அந்நீர்நிலையைக்கடந்து அக்கரைசேர்ந்தன. இவ்வின்பமான காட்சியைக் கண்ணுற்ற சக்கரவர்த்தியும் ஏனையோரும் அடைந்தசந்தோஷத்துக்கு எல்லையில்லை. இவ்வாறு எல்லாயானைகளும் நீந்திக்கரையேறின. முதற்சென்றயானை அக்கரையின் கண்ணுள்ள குன்றேறிச் சிறிதுதூரஞ்சென்று எல்லாயானைகளும் கரை சேர்ந்தனவா வென்று கண்ணுங்கருத்துமாய்ப் பார்த்துச் சந்தேகந்தெளிந்து மறுபடியும் செல்லவே சக்கிரவர்த்தி ஓர் வேடிக்கை செய்யக் கருதித் தம் கையில் வைத்திருந்த குழலை ஊதினார். அதன் அரவத்தைக் கேட்ட யானைகள் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு ஒரே ஓட்டம் பிடிக்கவே எங்கு பார்த்தாலும் செந்தூள் பறந்து செக்கச் செவேலென்று செவ்வானம் போல் தோன்றிற்று. அவ்யானைகள் ஓடுங்கால் வழியில் எதிர்ப்பட்ட மரங்களின் இளங்கொம்புகளை முறித்துக்கீழே போட்டுக்கொண்டும் மரங்களை வேர்ப்பிடுங்கலாய்ப்பிடுங்கி யெறிந்துகொண்டும் அக்காட்டைச் சின்னாபின்னமாக்கிக்கொண்டு சென்றன. அங்கு இருந்த வனவிலங்குகள் நாலா பக்கங்களிலும் தத்தம் உயிர்தப்பி ஓடி ஒளிந்துக்கொள்ளத் தொடங்கின. இச்சமயம் அவ் யானைகளின் ஓட்டத்தைக் கண்ணுற்ற ஜனங்கள் இதென்ன ஆச்சரியம்! இவ்வோட்டம் மனோ வேகத்திலும் வேகமாய்த்தோற்றுகிறதே என்று பிரமித்தார்கள். இதனைப் படிப்பவர்களிற் சிலர் யானை தண்ணீரில் நீந்துவதும் மலையேறி ஓடுவதும் சாத்தியமாவென்று சந்தேகிப்பார்கள். அவைகளின் பெருத்த தேகம் நீச்சுக்கு மிகப் பொருத்தமானதே. அதன் பருமன் ஓட்டத்துக்குப் பொருத்தமல்லாதது போல் தோற்றினும் காடுகளில் அவைகள் அலட்சியமாய் ஓடுவது இயல்பே. அக்காட்சி கண்ணுறாதவர்களுக்கே அது ஓர் அதிசயமாகத் தோற்றும். இவ்வற்புதக் காட்சியைக் கண்ணுற்றுப் பேரானந்தமடைந்து எல்லோரும் டில்லிமாநகர் வந்து சேர்ந்தார்கள்.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

பரிகஸிக்கும் பறவை.

பாடும் பறவைகள் எல்லாவற்றினும் சிறந்தது பரிகஸிக்கும்பக்ஷியே. இதனை விசேஷமாக ஐக்கியமாகாணங்கள் முதல் பிரேஜில்வரை எங்கும் காணலாம்.

இப்பறவையின் நீளம் ஏறக்குறைய 9-அங்குலம். சரீரத்தின் மேற்பாகம் கருமை கலந்த தவிட்டு நிறத்தோடும் கீழ்ப்பாகம் சிறிது [illegible] கலந்த வெண்ணிறத்தோடும் கூடியிருக்கும். அதற்கு வாலும் சிறகும கறுப்பு.

தன் காதில் விழும் எவ்வித சப்தத்தையும் உள்ளபடியே சிறிதும் ஏற்றத் தாழ்வின்றி, அதிநுட்பமாய் அமைக்கப்பெற்றுள்ள போனகிராப் வாத்தியப் பெட்டிபோல் மீண்டுந்தொனிக்கும் காரணம்பற்றி இதற்குப் "பரிகஸிக்கும் பறவை" (Making Bird) என்ற பெயர் வாய்த்தது. பல்வேறு பறவைகள் ஒரே காலத்தில் சேர்ந்து பாடுவது போல இது பல்வேறு குரல்களுடன் ஏககாலத்தில் பாடும். இப்பறவையைப் பற்றியே கேட்டிராதவரும் பார்த்திராதவரும், வகைக்கு ஒரு பறவையாகச் சேர்ந்து ஏககாலத்தில் பாடுகின்றன என்று நினைப்பரேயன்றி, ஒரே பறவைதான் இவ்வளவு குரல்களுடனும் ஏககாலத்தில் பாடுகின்றதென எண்ணவே எண்ணார். ஆதலின் அமெரிக்க இந்தியர் இதனை "நானூறு நாப்புள்" என்பர்.

ஆனால் இதன் கண்டத்தொனியோ அசல் பாடகனின் இனிய கீதத்தினும் அதிக இனிமையோடு கூடியதாயிருக்கும். ஏனைய பக்ஷிகள்யாவும் தத்தம் உறைவிடம் சென்று நிசப்தமாயிருக்கும் நடுராத்திரியே இதன் சுயகீதத்தைக்கேட்டு பிரமானந்தம் கொள்ளத்தக்க சமயமாம். அவ்வமயம் தொடங்கி வெள்ளிமுளைக்கும் வரை விடாது பாடிக்கொண்டேயிருக்கும். பனிநிறைந்த காலை வேளைகளில் சோலைப் பறவைகள் யாவும் சேர்ந்து பாடுங்காலை இதன் கம்பீரத் தொனியே யாவற்றிற்கும் மேலாய்க்கிளம்பி சுரோத்திரானந்தம் விளைவிக்கும். பாட ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஏனைப்பறவைகள் யாவும் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கும்.

உண்மையிலேயே இஃதோர் அதி அற்புதமான விகடகவியே. விகடர்க்குள்ளதுபோல் இதற்கும் குறும்பதிகம். திண்டாட விட்டு வேடிக்கைபார்த்து ஆநந்திப்பதில் இதற்கு மெத்தப்பிரியம். அநுபவம் பெரிதுமுடைய வேட்டைக்காரரைக்கூட இது ஏமாந்தலையச்செய்யும். இது எந்தப்பக்ஷி மாதிரியும் கூவவும் பாடவும் கூடுமாதலின் அவர்கள் தேடிவரும் பக்ஷிகள் சமீபத்தில் இல்லாதிருக்கும் பொழுதே அவைமாதிரி

இது கூவும் அல்லது பாடும். இத்தொனியைச் செவியுற்ற வேட்டைக்காரர், இது பரிகஸிக்கும் பக்ஷியின் சேஷ்டை யென்றறியாது மயங்கித் தாம் நாடி வந்த பக்ஷியே இங்குளதென நிச்சயித்து எங்கும் அதற்காகத் தேடியும் காணாது சோர்வடைவர். பார்க்கப்போனால் இது இருக்கும் இடத்திற்கும் இவர்கள் நாடிவந்த பக்ஷி இருக்கும் இடத்திற்கும் உள்ளதூரம் மைல்கணக்காயிருக்கும்.

மனிதர் ஏமாறுவதில் அதிசயம் என்னஇருக்கிறது? பறவை இனங்கூட ஏமாந்து போகின்றனவே! எங்ஙனமெனில், பக்ஷிகளின் பரமசத்துருவாகிய வல்லூறு அல்லது இராஜாளிபோல இது இருந்தாற்போலிருந்து கீச்சென்று உரத்துக்கூவும். இச்சப்தத்தைக் கேட்பது தான் தாமதம். பறவையினம் முழுதும் அஞ்சி நடுநடுங்கித் தத்தம் கூடு நுழைகின்றன. மற்றொரு சமயம், இது பறவைகள் தத்தம் பேட்டை அழைப்பதுபோல் கூவும். தக்ஷணமே ஒவ்வொரு பக்ஷியும் அதனதன் துணையைச் சேரும். அதன் விகடத்திற்கு அளவென்பதில்லை. நிற்க.

இது வீட்டில் வளர்க்கப்படும்பொழுதுகூடத் தன் குதூகுலத்தையும் சுபாவத்தையும் விடுகிறதில்லை. அது வாயைத் திறந்துவிடுமாயின் ஆகாய முழுதும் இனிய கீதத்தினாலேயே நிரம்பும். அப்பொழுது யாவரும் மெய்மறந்து அதனருகிலேயே ஸ்தம்பித்து நிற்கவேண்டி யிருக்குமேயன்றி வேறு எக்கருமமும்புரிய மனம்செல்லாது. இங்கும் இது தன் சேஷ்டையை விடுகிறதில்லை. உதாரணமாக: நாயைத் தன் எஜமானன் அழைப்பது போல சிட்டியடித்துக்கூப்பிடும். உடனே நாய் திடுக்கிட்டு விழித்து வாலைக் குழைத்துக்கொண்டு எஜமானன் முன்போடி அவன் இடும் கட்டளையை எதிர்பார்த்தவண்ணமாக நிற்கும். இருந்தாற்போலிருந்து ஆபத்தால் அஞ்சிய கோழிக்குஞ்சுபோல் யாவரும் பரிதாபப்படும்படி அலறும். உடனே தாய்ப்பறவையானது, பருந்து தான் தனது குஞ்சுகளை அடித்துக்கொண்டு போக எத்தனிக்கிறதென்று நினைத்துத் தீங்குற்ற (தாகத்தான் கருதிய) தன் குஞ்சுகளைப் பாதுகாக்க அலறிப்புடைத்துக்கொண்டு ஓடும். நாய் போற்குலைத்துப் பூனையைநடுங்கி ஒளியச்செய்யும். பூனைபோற்கத்தி நாயை, பூனையைத்தேடி அலையவிடுக்கும். இம்மட்டோ? தன் எஜமானன் கற்றுக் கொடுக்கும் சுரம் எவ்வளவு நீளமாயிருந்தாலும் அதனை அதி சுலபமாக எள்ளளவும் வித்தியாசமின்றி யாவரும் வியக்க மீண்டும் கூறிவிடும்.

சிறந்த பாடகனும் விகடனுமாயிருப்பதோடுகூட நமது பறவை தன் மட்டில் தான் அசகாயசூரனென்றே சொல்லவேண்டும். பறவைகளின் பரமசத்துருவாகிய கருநாகத்திற்கு இதன் குஞ்சுகளை விழுங்கி முட்டைகளைக்குடிக்க மிகப்பிரியம். இது இப்பறவைக்கூடிருக்கும் இடத்தைக் கண்டு

கொண்டவுடன் எவ்விதத்திலேனும் அதிசம்பிரமமாகத் தன் வயிற்றை நிரப்பிக்கொள்ள வேண்டுமென்ற முழுத்தீர்மானத்தோடும் கூட்டண்டை செல்லுமாம். ஆதலின் கருநாகத்தைக்கண்டாலிதற்கு ஆகவேயாகாது.

ஆண்பறவை, பெடு உட்கார்ந்திருக்கும் கூட்டண்டை நின்று காவல் காத்துக்கொண்டிருக்கும்பொழுது மரத்தினடியில் உதிர்ந்துகிடக்கும் சருகுகளிலேனும் இலைகளிலேனும் சலசலவென்று இருந்தாற்போலிருந்து சப்தம் கேட்கும். கேட்டதோ இல்லையோ கண்களிரண்டு பளீரிடும். தக்ஷணமே கார்த்தியோடு கூடிய நீண்ட உடற்ஜந்து ஒன்று கொஞ்சக்கொஞ்சமாய் மரத்தின்மேல் ஏற ஆரம்பிக்கும். இதுதான் கருநாகம்! தனது ஜன்ம சத்துருவைக் கண்டமாத்திரத்திலேயே நமது விகடனுக்கு அளவுக்குமிஞ்சி கோபம் ஜனித்து அம்பினும் அதி தீவிரமாக ஒரே பாய்ச்சலாய் அதன்பேரில் பாய்ந்து வெகு உக்கிரமாக அதன் தலையைப்பார்த்தே அடிக்கும். இப்படிச் செய்யும்பொழுது நமது பறவையானது பாம்பின் விஷப்பற்கள் தன்மேல் படாதபடி சர்வஜாக்கிரதையாய்த் தற்காத்துக் கொள்ளும். மேலும் பாம்பு சுலபமாய்க் காயமடையக் கூடியபாகம் தலையே என்று அது தன தியற்கை யறிவால் அறியும். அடிபொறுக்கமாட்டாமல் சிறிது நேரத்திற்கெல்லாம் கரும்பாம்பே சளைத்துப்போகும். ஆனால் நமது வீரனோ முன்னிலும் இருமடங்கு வலியுடனும் தீவிரத்துடனும் பாம்பை அடி அடி யென்றடிக்கும். உடனே பாம்பிற்கு எப்படியாவது உயிர்தப்பினால் போதும் என்றாய்விடும். தக்ஷணமே அது அங்கிருந்து விரைவாக நழுவி ஓடிச் சமீபத்தில் உள்ள புதருக்குள் மறைய ஆரம்பிக்கும். ஆனால் நமது தீரனோ சிறிதும் மனந்தளராது அதனைத் தொடர்ந்து சென்று சண்டித்தனமாய்ச் சண்டையிடும். பாம்பே முடிவில் அபஜயம் அடையும். அது குற்றுயிராய்க் கிடக்கும் சமயத்தில் அதனை இறுகப் பற்றி ஆகாயத்தி லுயரத்தூக்கிச் சென்று தொப்பென்று கீழேபோடும். உயிர் பிரியுமட்டும் அதைக் கொத்ியாவது செட்டையா லடித்தாவது தீர்க்கும்.

பாம்பு செத்ததன்பின் பார்க்கவேண்டும் நமது வீரப்புள்ளினை! மரத்தின் அதிஉயரமான கொப்பிலேறி உட்கார்ந்து கொண்டு பாம்பின் தோல்வியையும் தனது வெற்றியையும் நினைத்து நினைத்துப் பரவசங்கொண்டு ஆனந்தவெள்ளம் ஆறாய்ப்பெருக அதி சுத்த கெம்பீர தொனியுடன் வெகு நேரம் இடைவிடாது பாடித்தீர்க்கும். ஈச்சுர சிருஷ்டியின் அற்புதத்தை யாவரே யறியவல்லவர்?

A. M. H. School மதுரை. } எம். கோபாலகிருஷ்ணையர். உபாத்தியாயர்.

பிழைதிருத்தம்:—Making Bird என்பதை Mocking Bird எனத் திருத்திக் கொள்க.

உருத்திராக்ஷப்பூனைகள் ஊர்ப்புலிகள்.

தமிழ்வரைப்பினுள் சிவனடியார்களைப் போல வேஷம் போட்டுப் பிறர் பொருள் கவர்ந்து வஞ்சித்து வயிறு வளர்ப்பார் பலருளர். அன்னோருண்மையை யறிந்த ஜனங்கள் அவரைக் காணும்போதும் அவரைப்பற்றி பேசும்போதும் "உருத்திராக்ஷப்பூனை" என்று சொல்லுகிறதை நாம் பலமுறை கேள்வியுற்று வருகின்றனம். நாமும் அவ்வாறே சொல்கின்றனம். எதன் பொருட்டு இவ்வாறு கூறுகிறோம் என்று சற்று விசாரஞ்செய்வாம்.

பூனையானது வேல்போன்ற கூரிய நகங்களையுடையது. ஆனால் அந்தக்கொடிய நகங்களை வெளிப்படுத்தாமல் தன்னுடலுக்குள்ளே மறைத்துக் கொண்டிருந்து தனக்கு ஆகாரமாகிய எலி, அணில், பறவை முதலியவற்றைக் கண்டால் அவையறியாவாறு மிகவும் மெல்லெனச்சென்று திடீரெனப்பாய்ந்து நகங்களை நீட்டிப் பிடித்துக் கொன்று வாயிற்போட்டுக் கொள்ளும். அன்றியும் அது தன்னை வளர்க்கும் யஜமான் வீட்டுள்ள பால், தயிர், நெய் முதலியவற்றை யாவருமறியாவாறு சென்று தின்றும் குடித்தும் யஜமானத்துரோகம் செய்வதில் கைதேர்ந்தது. தான் ஒன்றுஞ் செய்யாததுபோலப் பாசாங்கு செய்வதில் மிக வல்லது. திருக்கோவிலில் வளர்கிற பூனைகள் கடவுளுக்கு வைத்திருக்கிற நைவேத்தியத்தையும் பயமின்றியுண்ணும். இக்குணங்களால், "இந்தப்பூனையும் இந்தப்பாலைக்குடிக்குமா?" "கோவிற்பூனை தேவர்க்கஞ்சாது" என்பனவாகப் பழமொழிகள் பல வழங்குதலும் பிரசித்தமேயோம்.

இதுகாறும் பூனையைப்பற்றிச்சிறிது தெரிந்தோம். இனி யுத்திராக்ஷப்பூனையைப்பற்றிச்சிறிதாராய்வாம். நெஞ்சகத்தில் வஞ்சகம்பூண்டு பஞ்சபாதகத்துக்கும் அஞ்சலில்லாது தஞ் செயல்குணங்களைக்கொஞ்சமும் வெளியிடாது மெய்யெலாநீறு பூசி வேணிகள் முடித்துக்கட்டி அக்கமணிகள் தொக்கவடம்

புனைந்து அரஹர சிவசிவ எனக் காக்கைபோற்கதறிககோவி
லைச்சுற்றிக்கும்பிட்டு விழுந்துவில்வக்குடலையைக்கையிற்பிடித்து
வெள்ளுடைமுழங்கால் கொள்ளுமட்டுடுத்தி வீதியிற்போம்
போது மெல்லனநடந்து தேவாரமாதிய திருமுறைப்பாக்களை
நாவாரவோதி நகரெலாந்திரிந்து, ஏமாந்தபணக்காரன் எங்கே
வருகிறான் பெரியகுடும்பத்துப்பேதைபமங்கலி வருவதெக்
கோவில் வழியில் என்றும், எவ்வெவரிடத்தில் எவ்வெப்பொ
ருளை எவ்வெவ்வகையால் எவ்வெக்காலத்தில் கொள்ளையடிப்
போமென்று முள்ளங்கொண்டு தெரிந்துளார் மனமும் திபங்க
மயக்குவர்.

யாரேனும் ஒரு செல்வவந்தரைத்தாம் வசப்படுத்தலா
மெனக்குறிப்பாலறிந்துகொண்டு ஆலயத்திலே அவர்வரவை
யெதிர்பார்த்துக்காத்திருந்துகண்டு முன்னரேதாம் பூண்டுள்ள
ருத்திராக்ஷவிபூதிகளாலும் சிவநாமதோத்திரங்களாலும் தாம்
மெய்யடிமைபூண்டவரென அவர்நினைக்கும் வண்ணங்காட்டிச்
சிறிதே வார்த்தையாடத் தொடங்குவர். சற்றேசெவிகொடுத்
தால்போதும். உடனே மழமழவென்று தமது கருத்துநிறை
வேறுங்காலம் வந்ததாகக்கருதிக்களித்து ஐயா இது பொய்
யுலகம் இதிற்றோற்றும் பொருள்களெல்லாம் அநித்தியம்.
ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற பேருஞ் சத
மல்லப் பெண்டீர் சதமல்ல யாக்கை சதமல்ல இவையெல்லாம்
கனாக்காட்சியும் கானல் நீரும் போலப் போய்த் தோற்றங்களே
யாகும். எத்தனை காலமிருப்பினும் பின்னர் இறப்பதே உறுதி.
அவரவரியற்றும் புண்ணியமொன்றுமே துணையாவது. பக்தி
யில்லையேல் முத்தியில்லை. ஈசுரப்பத்தியே யென்றும் சிறந்
தது. அதனினும் சிறந்தது அடியார் பத்தியே. சிவனடியார்
கட்குக் கொடுக்கிற பொருள் ஒன்று கோடியாகப் பெருகும்.
என்று பலவாறாகத் தொடங்கி ஓடும் பொன்னும் கருத்தி
லொன்றாகக் கண்டவர் போலவும் உறவும் பகையும் ஒரு தன்
மைத்தாகக் கொண்டவர் போலவும் வயிற்றுப்பிள்ளை நழுவும்
படியும், கல்லுங்கரைய, இரும்பும் இளக, உருக்கும் உருக
வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போலப் பேசுவர். எப்

படியாவது தம் சொல் கேட்டவர் தமக்கு வேண்டும் பொருளை
யுடனே கொடுக்கும்படி செய்து கொள்வர். தினமும் உழக்கு
விபூதி பூசுவர். பேச்சுக்குப் பேச்சு அரஹரா சிவ சிவா என்
பர். கழுத்து, கை, முதலியவற்றில் அக்கமணியைச் சுமை
சுமையாக அணிவர். சொட்டைத்தலையில் முளைத்த கட்டை
மயிரிலும் ஒரு சிறு ருத்திராக்ஷத்தைக் கட்டித் தொங்கவிட்டுக்
கொள்வர். ஆள் கண்டு தேவார மோதுவர். ஆள் கண்டு
உடையவர் பூசை செய்வர். பசுமடம் கட்டுகின்றேன், நந்தன
வனம் நாட்டுகிறேன். குருபூசை மடம் புதுக்குகிறேன்.
குளம் வெட்டுகிறேன். ஆலயம் அமைக்கிறேன். எனப்பல
வாறு வெளிக்குக்கூறிப் பிறர்பொருளீட்டிப்பெண்டு பிள்ளை
களையும் தமதுயிரினும் சிறந்த காமக் கிழத்திகளையும் காப்பார்
கள். பகலில் ஆலய பூசாகாலங்களிலும் இரவில் அர்த்தசாமம்
வரையும் திருக் கோவிலிலிருந்து புஷ்பப் பணிவிடையாதிய
வற்றைச்செய்து பிறரைமயக்குவர். அர்த்தசாமத்துக்கு மேல்
ரூபவதியான தாசி வீடுகளிலும் விதவா வீடுகளிலுமே இந்த
மகா மூர்த்திகளைக்காணலாம். இக் கொடியர் சந்யாசிகளென
வும் நைட்டிகப் பிரமசாரிகளெனவும் கூறிக்கொள்வர். அம்
மம்ம! இவரன்றோ பசுத்தோல்போர்த்தப் புலிகள், ஆதலின் இவர்
களை ஊர்ப்புலியென்பதற்கு யாது தடை? இப்புலிகள் வஞ்ச
கத்தையறிய நெடு நாட் செல்லும். ஆனால் இக் கொடும்புலி
களால் ஏமாற்றப்படுவோர் பெரும்பாலும் நாட்டுக்கோட்டை
நகரத்தாரும், சிற்சில கைம்பெண்களுமே யாவர். இந்த
நகரத்தார்கள் பொருளீட்டும் வகையில் அதி புத்திசாலிகளாயி
னும் வாய்ப்பேச்சும் வேடமுங்கண்டு எளிதில் மயங்கிப் பொரு
ளைக் கொடுத்துவிட்டுப் பின்பு உண்மையை யறிந்து ஏமாந்ததை
வெளிவிடாது அடக்கிக் கொள்கின்றனர். இந்நாட்டுக்கோட்
டையார்கள் தாமாகச்செய்கின்ற தருமங்கள் அனைத்தும் நன்கு
நடை பெறுகின்றமைக்கு நாம் அவர்களை மெச்சிப் புகழ்வோ
மாயினும், இப்பிரபுக்கள் ருத்திராக்ஷப் பூனைகளைக் கண்டு மய
ங்கி எளிதில் மோசம் போகின்றமை பற்றியும், உண்மையடியார்
களை யறிந்து போற்றும் ஆற்றலில்லாராயது பற்றியும் சிறிது
குறை கூறவும் வேண்டியதாயிற்று.

வேஷங்கண்டு மயங்குவது அறிவிற்கு ஒருசிறிதும் பொருந்தாது. "வேடநெறிநில்லார் வேடம்பூண்டென்பயன்" என்பது மெய்ம்மொழியன்றோ? அந்தோ! இந்த ஆஷாடபூதிகள் வேடத்தாலும் பேச்சாலும் நாட்டுக்கோட்டைப் பேதைப்பெண்களிடம் பொருளைக்கவர்வதை நாம்நேரில் பலமுறைகண்டுளோம். இத்தப்போலிவேஷதாரிகளால் உண்மையடியார்கட்கும் இழுக்கேவருகின்றது. சீவன்முத்திபுரமாகிய இத்திருவாலவாய்த் திருக்கோவிலிலும் இத்தகைய கோயிற்பூனைகள் இருப்பது பரிதபிக்கத்தக்கதே. இப்பூனைகள் சதா சிவாசாரியர்களை நிந்திப்பதும், சமயாசாரியர்களைப் பழிப்பதும், தம்மினுமிக்கார் எவருமில்லையென்று பிறரையெல்லாம் குறைசொல்வதும் ஆகிய கொடுஞ்சொற்களையே ஆலயத்தில் பேசுகின்றனர். ஆனல் நெற்றியில் திருநீறும், கழுத்தில் உருத்திராக்கமும், கையில் வில்வக்குடலையும் விடுகிறதில்லை. "ஆத்மஸ்துத்தியம், பொருளாசை, பரநிந்தை இம்மூன்றுமில்லாத எனக்கும் ஒருபணம் அந்தக்குடிகாரப்பயலுக்கும் ஒருபணமா" என்று கூறுகின்ற மகாபுருஷோத்தமர் இவர்களே. இவர்களைப்பற்றி யிங்கு இத்தனைதூரம் யாம் கூறவந்ததெல்லாம் இவர்கள் திருந்தும் பொருட்டன்று. இவரைத் திருத்தல் யாராலுமாகாதகாரியம். நாயின்வாலைக்குணக்கெடுத்தலியலுமா? இக்கொடும்பாவிகளின் உண்மையையறியாது மயங்கியிருக்கும் ஏனையர் இவரது வஞ்சகச்செயலை நெஞ்சகங்கொண்டு ஆராய்ந்தறிந்து இவர்க்கிடந்தராது விலகவேண்டுமென்பதே எமது அபிப்பிராயம். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்றது பழமொழியாகும். பாம்புக்கு வார்த்தபால் விஷமாகுமேயன்றிப் பிறிதில்லை. அதுபோல இந்தமோசவேஷ தோஷமூர்த்திகட்குதவும் பொருளும் கேடுபயப்பதன்றி யணுத்துணையும் நன்மை பயவாது. மனந்தூய்தாகாதபோது உடற்றூய்மையும் பிறவும யாதுபயன்செயும்? இந்த ஊர்ப்புலிகளையும் அவர் செய்கைகளையும் நினைக்குந்தோறும் மனம் நடுங்குகின்றது. இக்கடம்பவனத்தில் இந்தப்புலிகள் உலவித்திரிவதால் நம்மவர்களே மோசம் போகாதிருங்கள்.

K. R. M. மதுரை.

தர்மி லோபி சம்வாதம்.

(187-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவபெருமானனவர் நாரதமகாமுனிவரிடம் திருவாய்மலர்ந்தருளியவாறே ஓர் விருத்தப் பிராமண வடிவங்கொண்டு காசிமாநகர்க்குச்சென்று நல்ல புண்ணியகாலமாகிய துலாஸ்நாநகாலத்தில் மேற்கண்ட தனபாலன் கங்கைக்குச்சென்ற விப்ரோத்தமரெல்லாரும் ஸ்நானம் செய்து ஜபதபமுடித்துக்கொண்டு தத்தம் மனைகட்கு மீண்டேகும் வரை காத்திருந்து கங்கைக்கு நீராடச்சென்றது தெரிந்து (எம்பெருமானுகிய பூசுரவடிவங்கொண்டோர்) அவனுக்கு முன்பாகப்போய் மங்களமுண்டாகுக வென்றாசீர்வதித்து நிற்க, நீர் யாரையா பார்ப்பாரில்லாத சமயத்தில் நீராடவரின் காசு செலவாகாதென்று யாவரும் போனபின்பு இவண்வர, நீரிப்போது யமனைப்போல்வந்துதோன்றினீரென்ன, விப்பிரர், தாங்கள் ஸ்நானஞ்செய்யவந்ததால் சங்கல்பம் சொல்லிவைக்கவந்தனனென, நல்லது அப்படியே ஆகட்டும் ஜலஸ்பரிசத்துக்குச்சென்றுவருகிறேன் இவ்விடத்திலேயே யிருமென்று கரையேறி ஒரேஓட்டமாயோடி மற்றோர்கட்டத்தில் நின்றான். சுவாமி அஃதுணர்ந்து அங்கும்போய்ச்சேர்ந்தார். அப்போது, ஏன்காணும், நான் அங்கிருந்து ஓர்போக்கைச்சொல்லி ஓடிவந்ததினாலேயே நீர் அர்த்தஞ்செய்து கொள்ளக்கூடாதா? எனக்கு சங்கல்பமந்திரம்தெரியும், நீர்சொல்லவேண்டுவதில்லை போமென, மறையவராகிய சிவபெருமான் வேதியர்வாக்கால் சொல்லக்கேட்டுச் சொல்வதேமுறையென, நல்லது அப்படியே ஆகட்டும், என்னிடம்ஓர்காசும் அபேட்சிக்கக்கூடாதென்று தனிகன்கூற, அய்யர், சங்கல்பம் சொல்லிவைத்தவர்கட்கு ஏதேனும்சக்திக்குத்தக்கபடிகொடுப்பது தான் சாஸ்திரநியாயமென, அப்படியானால் நான் ஒருகாசுக்குமேல்தரேன் சம்மதமாவென, அந்தணர் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டதின் பேரில் ஸ்நானஞ்செய்துமுடித்து ஒருபைசா தானஞ்செய்திருக்கிறேனென, சுவாமி, அவன்வீட்டுக்கு மீண்டுசெல்லும்போது பின்தொடர்ந்துபோக, ஏன்காணும், பார்ப்பானுக்கு வாய்ப்போக்காதே யென்பதுபோல நான் சொன்னதேபோதுமென்று பின்தொடருகிறீரோவென்றவனை நோக்கி ஸ்வாமி, நீர் இப்போதே காசு கொடுக்கவேண்டியதில்லையாயினும் நான் வீட்டு அடையாளமேனும் பார்த்துக்கொண்டாலல்லவோ மற்றொருநாள்வர அனுகூலமாயிருக்குமென்ன, இதுதான் எனது வீடென்று வீதிவாசற்படியண்டையிலேயே உள்ளேவராமல் நின்றுகொண்டான். சுவாமி சிறிதுதூரம்சென்று மறைந்துபோய் மறுநாள்செல்ல, இப்போது எல்லாம் பவுனாகவும் ரூபாவாகவுமிருப்பதால் அடுத்தசந்தைநாளில்வந்தால் அவைகளிற்

சிறிது மாற்றியுமக்குச் சொன்னதைத்தருகிறேனென்று ஒவ்வொருசந்தைக்கும் மேற்கண்டவிதமாகவே சொல்லி ஆறுமாசங்கடத்தினான். ஏழாவது மாசம்முதற் சந்தைதினத்தில் அவன் தன்குணத்திற்கிசைந்தவளான தன் மனைவியையழைத்து அடீ அந்தச்சண்டாளப்பார்ப்பான் இப்போதுவந்து விடுவான் ஆகையால் நான் குளிர்காய்ச்சல்வந்ததுபோல் அபிநயித்துப்படுத்துக்கொண்டிருக்கிறேன் நீ என்பக்கத்தி லுட்கார்ந்துகொண்டிருந்து அவன் வந்தவுடன் அடாசண்டாளா நீ ஓர் காசுக்காக வரத்தலைப்பட்டதுமுதல் அவருக்கு அன்னபானாதிகள் செல்லாமல் தேகம் மெலிந்து குளிர்காய்ச்சல் வந்துகொண்டிருக்கிறதுந்தவிர இப்போது கைகாலிழுந்துக்கொண்டிருப்பதால் இனிப்பிழைப்பாரோவென்ற சந்தேகமேலிட்டிருக்கின்றது, நீ தொலைந்தால் ஒருக்கால் பிழைக்கக்கூடுமென்றெண்ணுகிறேனென்று சொல்வாயென ஆஞ்ஞாபித்தவண்ணம் புருஷன் சமீபத்திலேயே யிருந்துகொண்டிருந்து அந்தணராகிய கடவுள்வந்தவுடன் அவள்தனது பர்த்தாமொழிந்தவாறே யியம்பவே, ஸ்வாமியானவர், அம்மணி ஒரு காசுக்காக நான் படும் கஷ்டம் சொல்ல வொண்ணாது. கடவுள் கிருபையாலே நானவரிடமிருந்து ஓர் காசு வாங்கும் பிராப்தமிருக்குமாயின் அவர் எவ்விதத்திலும் பிழைத்துக்கொள்வாரென்று விடைகூறிக் காசு என்று உருப்போட்டுக்கொண்டே யிருந்தார். இன்று இவன் தொலையமாட்டானென்று நிச்சயம்பண்ணி மூச்சை யிழுத்துப் பிடித்துக்கொண்டு செத்தவன்போ லபிநயித்தனன். அப்போது அவன் மனைவி தலைதலையா யடித்துக்கொண்டு எனக்கு இந்தக்கதியாய்விட்டதே யென்று புலம்பவே சுற்றத்தாரும் மற்றையரும் கூடிப்பாடையில் வைத்து உருத்திர பூமிக்குக் கொண்டுபோய்க் காஷ்டங்களடுக்கி அவைகட் கிடையிலிருத்தி அவன் மனைவியைக்கொண்டு கொள்ளிவைக்கச் செய்து அவளை இழுத்துக்கொண்டு வீட்டுக்குச்செல்ல, சுவாமிமட்டும் அவ்விடம் விட்டு நகராமல் காத்துக்கொண்டு எனக்கு நல்லகாலமிருந்தால் இவர் பிழைத்துக்கொள்வாரென்று காசு காசு என்றதை மறவாம லுருப்போட்டுக்கொண்டேயிருக்க, ஷை தனபாலன், நாற்புறமும் தீமூண்டு உடம்பைப் பற்றும்வரை சகித்துக்கொண்டிருந்து சாம்பலாகும் வரையிலிவன் தொலையவே மாட்டானென்று நிச்சயித்துக் கட்டைகளைத் தள்ளிக்கொண்டு கீழே விழுந்து எழுந்திருந்து உம்மைப்போல் விடாக்கண்டனை யானிதுகாறும் பார்த்ததில்லையெனவும், என் ஜாதகப்பலன்படி ஒருகாசும் கொடுக்க மனந்துணியவில்லையென்செய்வேன் மன்னிக்கவேண்டும், இனி யென்னைக் காசு விஷயமாய் எதிர் பார்ப்பதிற் பயனில்லை யெனவும், சொல்லிக் கீழே விழுந்து சுவாமியின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான். சுவாமியின் திருவடிக்கமலங்களை ஸ்பரிசித்த விசேஷத்தால் ஞானம்பிறந்து சிவபெருமானை

யெனத்துணிந்து சுவாமி! பரமலோபியாகிய எனக்குஉனதுபாததெரிசனம் கிடைத்த நியாயமென்னவென, பூர்வ ஜன்மத்தில் எனது ஆலயத்திருப்பணி செய்தோரில் ஒருவனுக்கு ஓர்கல் எடுத்துக்கொடுத்தபுண்ணியவசத்தால் இப்போது எனது தரிசனம் உனக்குக் கிடைத்தது அதனால் இனி உனக்கு உலோபகுணம் நீங்கி மெய்யடியார், கற்றோர், ஏழைகள் முதலாயினோர்க்கு உன்னிடமிருக்கும் பொருளையுதவி நற்கீர்த்தியடைந்து வம்சத்தை விளக்க ஓர் புத்திரனையும் பெற்றுச் சிலகாலத்திற்குப் பின் எனது பதநிழல் அடையக் கடவாயெனக் கருணைசெய்து மறைந்தருளினார். நீர் அந்தத் தனபாலனைப்போல் அவதாரம் செய்திருக்கிறீர் போலும். நல்லது இருக்கட்டும். குதர் வேஷியர் என உருப்போடுகின்றீர். அவர்களா லுண்டாகும் விபரீதங்களை விவரமா யெடுத்துரைக்கின்றேன். ஞாபகத்துடன் கேட்பீராக.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,

4—6—04. திருச்செங்கோடு } சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்,

சைவசித்தாந்தம்.

(முன்தொடர்ச்சி)

நாலு வருணத்தாருக்குங் குருத்துவமுண்டு. ஆனால் அவர்களுக்குள்ளே பிராமணன், பிராமணன் முதலாகிய நாலு வருணத்தவர் அநுலோமர் முதலிய அறுவர் ஆகிய இப்பதின்மருக்குங் குருவாகலாம். க்ஷத்திரியன், க்ஷத்திரியன் முதலான ஒன்பது பேருக்குங் குருவாகலாம். வைசியன், வைசியன் முதலான எட்டுப்பேருக்குங் குருவாகலாம். சூத்திரன், சூத்திரனுக்கு மாத்திரம் குருவாவான். ஆச்சிரம முறையிலும், சந்நியாசி, சந்நியாசிமுதல் நாலாச்சிரமிகளுக்குங் குரு. வானப்பிரஸ்தன், வானப்பிரஸ்தன்முதல் மூன்றாச்சிரமிகளுக்குங் குரு. கிரகஸ்தன், கிரகஸ்தன் பிரமசாரி இருவருக்குங் குரு. பிரமசாரி, பிரமசாரிக்கே குருவாவான் ஆனால் பிரமசாரி நைஷ்டிகனாயிருந்தால் சன்னியாசி தவிர மற்ற மூன்று ஆச்சிரமிகளுக்குங் குருவாகலாம். சொல்லிய முறைப்படி குரு அகப்படாவிடில் க்ஷத்திரியன் பிராமணனுக்கும், வைசியன் க்ஷத்திரியனுக்குங் குருவாகக்கூடும். ஆனால் சூத்திரன், சூத்திரனுக்கே குருவாவான். ஒருபோதுந் தனக்கு மேலான வருணத்திற்குக் குருவாகமாட்டான். இனி சந்நியாசிகள், தபசுவி, விவிதிஷு, வித்துவான், என மூன்றுவகைப்படுவர்.

தனிமையாக வமர்ந்து ஞானபூசையும் இரந்துண்டலுஞ் செய்து இடையறாது நிட்டை கூடுவோர் தபசுவியெனவும், அறம்பொருள் இன்பம் வீடு பேறு என்பவற்றை மாணாக்கர்கட்கு உணர்த்தலோடு மற்றையகிருத்தியங்களையுமுடையவர் விவிதிஷுஎனவும், அறநூல்முதலியவற்றிற்கு வியாக்கியானம் பண்ணுதலோடு மற்றையகிருத்தியங்களையும் உடையவர் வித்துவான்எனவுங்கொள்க.

நான்காம்வருணத்து வீரத்தருக்குக் குருத்துவம் இல்லையென்றும், கிரகஸ்தருக்கே குருத்துவம் உண்டென்றும் சிலர் கூறுவாராயினர். அவர் காமிகாகம சுலோகமொழிபெயர்ப்பாகச் சைவசமயநெறிநூலுடையார், "சூத்திரனுந்தேசிகனாவான் மரணாந்தந்துறவி, சாத்திரத்தின் மூன்று முணர்ந்தால்" என்று கூறிய திருக்குறளும், நான்காம்வருணத்திலே துறவறத்தினராய திருநாவுக்கரசுநாயனார் சைவசமய பரமாசாரியராகவும், மெய்கண்டதேவர் திருக்கைலாயசந்தான பரமகுரவராகவும் எழுந்தருளியிருந்தமையும் நான்காம்வருணத்து விரத்தருக்கே விசேடகுருத்துவம் உண்டென்பதற்குச் சான்றாதலைச் சித்தசபாதானத்தோடு உணர்ந்து தெளிவாராக. நான்காம்வருணத்துக் கிரகஸ்தருக்கும் குருத்துவம் உண்டென்பது ஆசாரணைமுதலியவற்றால் கொள்ளற்பாற்று. இன்னும் இதன் விரிவெல்லாம் ஆசிரியர் சிவஞானயோகிகள் செய்தருளிய சிவஞானபோத திராவிட மகாபாடியத்திற்காண்க. ஈண்டுரைப்பிற்பெருகும்.

இந்தப்பாகுபாடெல்லாம் கிரியைக்கன்றி ஞானத்திற்கில்லையென்றறிக. இப்படியே ஆச்சிரமமுறையிலும் வானப்பிரஸ்தன், சந்நியாசிக்கும், கிரகஸ்தன், வானப்பிரஸ்தசன்னியாசி இருவருக்கும், பிரமசாரி, கிரகஸ்த வானப்பிரஸ்தசந்நியாசி மூவருக்கும் குருவாகக்கூடும். நாலுவருணத்திலும் நன்னடை வயது குணம் வடிவுமுதலான நற்குணமுள்ளவனாய் குற்றமில்லாதவனாய் இருக்குமவனே குருவாவான். பின்னும் இப்படிப்பட்டகுருவானவன் பசுத்துவசம் பந்தமுள்ளவனல்லன். வேதாகமாதிகளில் சிரவண மனன நிதித்தியாசனமுதலானவற்றின் பரிபாகானுகுணமாகவுண்டான சாக்ஷாத்காரத்தால் சம்பூரணமாகக்கிடைத்த சிவபாவமுள்ளவனேயாவான். பரம்பொருளே ஆசாரியமூர்த்தியை யதிஷ்டித்து நாலுவிதமான சத்திநிபாதத்திற்குத்தக்கபடி சகலர்களையும் அனுக்கிரகஞ் செய்கின்றார். கும்பாதிகளிற்போல குருவினிடத்திலும் சிவன் சாந்நித்தியமாகவந்து அனுக்கிரகஞ்செய்கின்றமையால் ஆசாரியன் சிவனென்பது உபசாரமல்ல, சாக்ஷாத் சிவனேயென்றறியவேண்டும். இப்படிப்பட்ட குருவினிடத்தினின்றும் ஆகமங்களில் சொல்லியவிலக்கணமுள்ள அதிகாரியானவன் முதலில் சமயதீக்ஷைபெறவேண்டும். தீக்ஷையின் பொதுவில'

கணமாவது ஆகமத்திற்சொல்லியநித்தியகன்மாதிகளில்அதிகாரம்? அல்லது ஆகமசிரவணத்தில் அதிகாரம் இவ்விரண்டிலொன்றைச்சாதிக்கவல்ல சிவசத்திவியாபாரமாகும். அதுவும் கிரியாசத்திவியாபாரமென்றறிக. அவற்றுள் சமயதீக்ஷை விசேடதீக்ஷை இரண்டும் சிவாலயத்திருப்பணி சிவபூசைமுதலானவை நித்தியகன்மமுதலானவை இவற்றில் அதிகாரத்தையும் ஆகமசிரவணத்தில் அதிகாரத்தையுங்கொடுக்கும். நிருவாணதீக்ஷை ஆகமசிரவணம், மனனமுதலானவற்றில் அதிகாரத்தைக்கொடுக்கும்.

வேதமோதுதற்கண்ணும் வைதிக ஆசாரத்தின்கண்ணும் உபநயனப்பேறுடையார்க்கன்றி யதிகாரமின்மைபோலச் சைவாகமமோதுதற்கண்ணுஞ் சைவாசாரத்தின்கண்ணுஞ் சிவதீக்ஷைப்பேறுடையார்க்கன்றி யதிகாரமில்லையெனக்கொள்க.

அஞ்ஞானத்தைநீக்கி ஞானத்தைத்தருவது தீக்ஷை. தீ—ஞானம் க்ஷா—பாசத்தைக்குறைப்பது. சிவாகமத்திற்கூறியதீக்ஷையின் உயர்ச்சி, வாயவ்வியசங்கிதையிலே, சைவநூலிற்கூறப்பட்டதும் பாசமூன்றையுந்தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத்தவிர வேறாயதொரு ஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மாந்தருக்கு மேன்மையன்று. ஆதலால் தீக்ஷையினாற்றான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும் மற்றைக்கருமங்களினாலும் மோக்ஷம் இல்லை. அத்துவசுத்தியையின்றி முத்தியைவிரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர்போல்வர். தோணியின்றிக் கடலைக்கடக்க விரும்பினவர்போல்வர், என்று கூறுமாற்றாலும் விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்தும், விஷ்ணுமுதலிய பசுக்களைப் பசுபதியாகிய சிவபிரானோடு சமமெனக்கொள்வோராகியபுல்லறிவாளர் தீக்ஷையை இகழுங் கூற்றுத்தூரம் போய்த் துச்சமாய்விடும்.

சங்கராசாரியர் இயற்றிய பிரபஞ்சசாரத்தில் பஞ்சாக்ஷர ஜபவிதானப் பிரகரணத்தில் சிவாகமோக்த சிவசமஸ்காரரூப சடத்துவசோதனமென்னும் நிருவாணதீக்ஷையைச் செய்துகொண்டவர்களே பஞ்சாக்ஷரஜபத்துக்கும் சிவபூசைக்கும் அதிகாரிகள், என்றும் இந்தத்தீக்ஷை ஞானவதி, கிரியாவதி என இரண்டுபேதம் என்றும் தேசகாலாதிகாரசம்பத்துக்களுக்கு ஏற்ப இந்த அனுட்டானஞ்செய்துகொள்ளல்வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றன.

சூதசங்கிதையிலே யஜ்ஞவைபவகாண்டத்தில் முப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் சடத்துவசோதனாரூபமான கிரியாவதிதீக்ஷை விசேடித்துக் கூறப்பட்டிருக்கின்றது. சூதசங்கிதைக்கு வியாக்கியாதாவும் சதுர்வேத

பாஷ்யகர்த்தாவுமாகிய வித்தியாரண்ணியர் என்று பிரசித்திபெற்ற மாதவாசாரியர் சூதசங்கிதை முப்பத்தைந்தாவது அத்தியாய வியாக்கியானத்தில் சங்கராசாரியர் பிரபஞ்சசாரத்திற் சொல்லியபடி தீக்ஷைசெய்துகொள்ள வேண்டுமென்று வியாக்கியானஞ் செய்திருக்கிறார். ஆதலால் வைதிகப்பிராமணர்களுக்குத் தீக்ஷையில்லையென்று கூறுவது ஒரு சிறிதும்பொருந்தாது. வைதிகநிஷ்டருக்குங்கூடப் பாசவிமோசநஞ் செய்யத்தக்க தீக்ஷை உண்டு. கேநோபநிஷத்திலும், தாபநீயோபநிஷத்திலும் ஏனைய வுபநிடதங்களிலும் ஹௌத்திரி என்ற கிரியாவதிக்கு இதரமானஞானவதி தீக்ஷை கூறப்பட்டிருக்கின்றது. அந்த ஞாநவதி தீக்ஷா விஷயங்கள் எல்லாம் வேதங்களுக்குஞ் சம்மதமே. ஆகையால் வைதிகர்களாலும் தீக்ஷை செய்துகொள்ளத் தக்கதே என்பது காண்க.

அத்தீக்ஷை, சாதார தீக்ஷை, நிராதார தீக்ஷையென இரண்டு வகைப்படும். அவற்றுள் சாதாரதீக்ஷை மும்மலங்களுமுடைய சகல வர்க்கத்திற்கு நால்வகைச் சத்திநிபாத முறையில் வைத்து அறிதுணர்த்த வேண்டுதலின் இவ்வுலகின்கண் அவ்வுயிர்களுக்கே குருமூர்த்தியை அதிட்டித்து நின்று செய்து மலத்தை நீக்குவன். சாதாரம் ஆதாரத்தோடு கூடியது.

நிராதாரதீக்ஷை சகல வர்க்கம்போல குருவடிவின் மறைந்து நின்று படர்க்கையான் உணர்த்தப்பட்டு அறிதுணர வேண்டாத விஞ்ஞான கலர் பிரளயாகலர் என்னும் இரு திறத்தார்களுக்கும் முறையே உண்ணின்றும் முன்னின்றுஞ் செய்து மலத்தை நீக்குவன். நிராதாரம் ஆதாரம் வேண்டாது செய்வது.

அவ் வுயிர்க்கண்ணதாகிய மலபரிபாகம் பலவகைப்படுதலின் அதற்கேற்ப ஆசிரியன் அம்மலத்தைக் கெடுக்கும்படி செய்யும் சாதார தீக்ஷையும் பலவகைப்படும், அவையாவன:—நயனமும் பரிசமும் வாக்கும் பாவனையும் நூல்களும் யோகமும் ஔத்திரியும் சத்திசாம்பவ முதலியனவுமாகப் பலவகைப்படும். அவைகளுள் நயனதீக்கை முதலிய ஆறும், சுதந்திரமாகச் செய்யப்படுவனவும், அவுத்திரிக்கு அங்கமாய்ச் செய்யப்படுவனவுமென்று இருவகைப்படும். அவற்றுள் முன்னையவை ஔத்திரிக்கு உரியரல்லாதாருக்குச் செய்யப்படுவனவெனக்கொள்க. ஹூதசஹிதம் ஹௌத்திரி ஹூதம் ஓமம். நயனதீக்கையாவது, மீனானது சினையைப் பார்த்த மாத்திரத்திலே யதனைப் பேதித்துத் தன்னைப்போலாக்குமாறுபோல ஆசாரியன் உண்மைப்பொருளில் சித்தத்தை வைத்து திவ்விய நயனத்தினாலே பார்த்து அவனிடத்தில் கட்டுப்பட்ட பந்தங்களை நீக்குதலாம்.

பரிசதீக்கையாவது:—வாரணமானது தன் முட்டையைப் பரிசித்துத் தன் வண்ணமாக்குமாறு போல ஆசாரியன் தனது வலது கையில்

சிவ அத்தங் கற்பித்துச் சோதி ரூபமாகத் தியானம்பண்ணி மாணவகன் தலை தொடங்கி சர்வாங்கமும் பரிசித்து மலத்தை நீக்கித் தன் வண்ணமாக்குதலாம்.

மானததீக்கையாவது:—ஆமையானது தன் முட்டையை நினைந்து தன் வண்ணமாக்குமாறுபோல ஆசாரியன் தனது இரேசக வாயுவினாலே புறப்பட்டுச் சீடனுடைய பூரகவாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்து சிஷ்ய சைதந்நியத்தை வாங்கித் துவாதசாந்த மளவாகக் கொண்டுபோய்த் தம்முடைய இருதயத்தில் சிவ சைதந்நியத்துடன் கலந்து உப்பும் அப்பும் ஏகரசமானதுபோலப் பாவித்துச் சிஷ்ய சைதந்நியத்தைச் சிஷ்ய தேகத்தில் பிரதிஷ்டை பண்ணுவது.

வாசகதீக்கையாவது:—வருணாச்சிரம குணமாகப் பஞ்சாக்கரத்தை உபதேசம் பண்ணுவது.

சாத்திரதீக்கையாவது:—முடிவற்ற சாஸ்திரார்த்தங்களை யெல்லாஞ் சங்கிரகித்துப் பதிபசுபாசத்தி னுடைய இலக்கணங்களையுஞ் சிவ-சீவர்களுடைய ஐக்கியத்தையும் சத்சம்பிரதாயமாகப் போதிப்பது.

யோக தீக்கையாவது:—ஆசாரியன் நாடிசந்தான் மார்க்கத்தினாலே மாணாக்கனுடைய இருதய கமலத்தினுலே பிரவேசித்து அவ்விருதய கமலத்தினடுவே விந்துரூபமான ஆன்மாவைச் சுழுமுனை நாடிவழியாகக் கொண்டுசென்று சிவனிடத்திலே யோசிப்பித்து நிறுத்துகையாம்.

இனி ஔத்திரி தீக்கையாவது:—ஞானவதி கிரியாவதி யென்று இரண்டு வகைப்படும். அவற்றுள் ஞானவதியாவது குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவமுதலிய அனைத்தும் மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்வதாம். இன்னும் ஞானவதி சத்திசாம்பவி என்று இரண்டு வகைப்படும், சத்தி-யோகதீக்கை. சாம்பவி-ஞானதீக்கை. சத்திபாவது புறம்பேபோற்குண்ட மண்டலாதி மனச்சிறப்புச் சங்கற்பத்தாற் குறித்துப்பண்ணுவது. சாம்பவி மனுதீக்ஷசிற்சத்தியின் சிறப்புப்பார்வையாற் பாசம் நீங்கப்பார்த்துப் பண்ணுவது.

இங்ஙனம்

சுப்பிரமணிய பிள்ளை,

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

இன்னிசை இருநூறு.

[தொடர்ச்சி]

8-வது அதிகாரம். துறவு

1. மகவு மனைபொன் *களைகண்மாய் வொன்றால்
பகைமிடி சோம்பு ‡பருவரல் ஆசை
வெகுளியான் ஆமெனின் மேற்கடை போகா
துகளறவாய்ந் தெய்தல் துறவு.

* பற்றுக்கோடு. ‡ துன்பம்.

2. வஞ்சத் துறவால் மனிச்சர் மயங்குற
நெஞ்சில் துறவார் 0 படிற்றொழுக்கில் நின்றவர்
நஞ்சிற் கொடியர்பின் வீழ்ந்தெழார் நைந்துளம்
அஞ்சக் கொடிய அளறு.

0 பொய்யொழுக்கம்.

3. புறத்துமனஞ் செல்லாமே வேட்டுவன்பாற் புக்க
திறத்தாற் புழுவும் அதன்வடிவாம் தேரின்
அறக்கடலாம அண்ணல் அடிசேர்ந்தால் அன்னோன்
இறப்பிலுரு எய்தல் இயல்பு.

4. பாலை கடந்தினிய பூஞ்சோலை பற்றற்கு
மேலாம் சிவிகைமிசைச் செல்வான் விரும்புமோ
கோலும் குடைசெருப்பும் மெய்யுணர்ந்தார் கொள்ளாரோ
மேலாய யோகும் விழைந்து.

சிவிகையிற்செல்வார் குடைமுதலிய விரும்பாமைபோல்
மெய்யுணர்ந்தார் சரியைகிரியை யோகங்களை விரும்பார்.

5. ஒருதலை யேனும் உணவினுயிர் நிற்றல்
வருவாய்க்குத் தக்க வயிறுகொளல் இன்றே
பொருபசிக்கு நேர்வ புசிப்பினிதாம அன்றிப்
பெருவாழ்வு வேண்டல் பிழை.

6. எண்ணின் இரத்தம் தசையே இருகொங்கை
புண்ணென்றே அல்குல் புழுக்கும்பி சேறுநிறை
கண்ணென் குழியஃதே துன்புறுதீச் சூழ்நரகு
பெண்ணாசை சாலப் பிழை.

7. காவாமை யாற்பலநோய் காப்பினும்நோய் பற்பலவே
யாவானும் செய்வதுமநோய் செய்யாமை யானும்நோய்
சாவாமை நோய்சாவும் நோய்காண் தவிர்கவே
ஆவா உடற்கண் அவா.

8. ஆசைப்பேய்க் கோட்பட்டான் அண்டம் அளவில
பேசப் பெறினும் பயனென்கொல் பிழையே
ஆசையிலாற் கொன்றுனும் இல்லெனினும் அல்லலில்
ஈசன் அவனே * எனல். * என்க.

9. இல்லார் பொருள்காடல் வையத் தியற்கையே
எல்லாம் உடையார் விரும்பார்மன் எப்பொருளும்
நில்லாமை உள்ளி நிராசைப் பொருள்பெறின
இல்லாப் பொருளியாதும் இல்.

10. இச்சை அறுத்துயர் மெய்யுணர் வெய்தினோர்
எச்சமயத்தில் இருப்பினும் நீங்கினும்
பிச்சை புகினும் பெருமுயல் கொள்ளினும்
உச்சிமேற் கொள்ளும் உலகு.

துறவு முற்றிற்று.

9-வது அதிகாரம். வெகுளாமை.

1. சிறுமைபிறர் சொல்லில் பொறாது சினத்தல்
அறிவன் றஃதுண்மை யாயின் மகிழ்க
பிறிதாயின் நிந்தை அவர்க்கே தமக்கென்
பொறையே அறிஞர்க்குப் பூண்.

2. நூலறியா மாக்கள் நுணங்கறி வின்மையால்
சால இழித்தாங் கொறுப்பினும் தாம்பொறுக்க
மேலோர் சிறியோர் வினைமதியார் கொல்வாரியார்
காலனை ஈமிதித்தக் கால்.

3. கேடு பிறரால் கெழீஇயினும் தாம்சினவார்
கோடா மனத்தவர் கூர்ந்துணரின் எப்பயனும்
பீடுறும் ஊழான் அலதில் பிறர்கருவி
நாடின் அம்பை நோதல் நகை.

4. வல்லோற் சினந்து சக்கன் னொந்தான் வலிகொண்டே
அல்லல் விளைத்தும அழிந்தான் சுயோதனன்பின்
செல்லா இடத்துச் சினந்தீது செலவிடத்தும்
இல்லதனில் தீய பிற.

5. நட்டாரால் கேடு வரலுறுள நாடாமே
ஒட்டார் எனச்சினந் தாறவர்க் கெண்ணற்க
வெட்டார் நெறிபிழைத்து வீழினும்கால் நாக்கடிக்கப்
பட்டாலும் தட்டார்தம் பல்.

6. ஆசான் நகையில் உயிர்கள் அரியநூல்
ஈசன் பசுப்பெண்டிர் சேய்நண்பர் இன்னவரை
ஏசினர்க் காணிற் பொறைதீ தினிதொறுத்தல்
காசில் வழியிருந்தக் கால்.

7 இல்லாள்சேய் சீடர் இணக்கம் உடையவர்
நல்ல நெறிபிழைப்பிற் செல்லின் நவைநெறிக்கண்
சொல்லும் பொறைதீ தினிதே துயர்மிகப்
பல்கால் இடித்தொறுக்கும் பண்பு.

8. மெய்யுணர் வுற்றுயர் வித்தகரைப் பித்தரென
வையம் இகழினும் நெஞ்சத்து மாசறுதல்
எய்துநாள் என்றுகொலாம இப்பித்தர்க் கென்றவர்
செய்வாருள் கொள்ளார் சினம்.

9. அங்கி தனைக்கொதிப்பச் செய்யினும் அந்நீரம்
பொங்காது சில்கணத்தே தண்ணெனல் பூணுமால்
புங்கவர்பால் சீற்றம் பொருந்தத்தீ யார்செயினும்
தங்காது செய்யார் தவறு.

10. தம்மை இகழவுடல் தாங்களவும் நோவுறுத்தல்
வெம்மை மனக்கு விளைத்தலிவை கீழ்செயில்
சும்மா இருப்ப பெரியார் துயர்மிக்கால்
அம்மா பொறையும் அரிது.

வெகுளாமை முற்றிற்று.

[தொடரும்.]

அ. சண்முகம்பிள்ளை.

மேனாட்டுக் கலைஞானம்.

[176-ம் பக்கத் தொடர்ச்சி.]

23. ஒரே சீரில் ஒரே காத்திரமுள்ள பலவிதப் பொருள்களின் நிறைகள் வித்தியாசமுள்ளன. பலவிதப் பொருள்களின் திண்மைகள் வேறுபடுகின்றன.

இந்த முக்கியமான விஷயத்தை இன்னும் விரிவாய் விவரிக்க வேண்டியதவசியம். ஒரு "பைண்ட்" அளவுள்ள நீர் ஒன்றேகால் 'பவுண்ட்' நிறை நிறுக்கின்றது என்று நாம் முன் கண்டோம். அதாவது இவ்வளவு இடமானது அந்த நிறையுள்ள நீரின் காத்திரம் அல்லது பருப்பம் அல்லது பருமையென்பதாம். ஆனால் சாதாரணமான ஒரு "பவுண்ட்" படிக்கல்லும் கால் "பவுண்ட்" படிக்கல்லும் எடுத்து ஒரு "பைண்ட்" அளவுள்ள பாத்திரத்திற்குள் போட்டால், இப்படிக் கல்கள் அந்தப் பாத்திரத்தைப் பூரணமாய் நிறைக்காமல் அப்பாத்திரத்தில் சொற்ப பாகமான இடத்தை மாத்திரம் மேவுகின்றன. ஆகையால் ஒன்றேகால் பவுண்ட் நிறையுள்ள ஈயம் அல்லது இரும்பு அல்லது பித்தளையின் காத்திரம் அதே நிறையுள்ள நீரின் காத்திரத்தைப் பார்க்கிலும் மிகச் சிறிது என்பது தெரிகின்றது. இதின் அருத்தம் என்னவெனில் உலோகங்கள் நீரைப் பார்க்கிலும் திண்மையானவை அல்லது தடிப்பானவை யென்பதே. அதாவது நீரின் காத்திரம் எவ்வளவோ அவ்வளவே காத்திரமுள்ள உலோகமானது அதிக தத்துவக் குவியல் உள்ளது. அல்லது அதிக திண்மைக் கவர்ச்சியுள்ளது. மேலும் இதே விஷயத்தை இனியொரு விதமாகச் சொல்லுவோம். ஆரம்பத்தில் டம்ப்ளர் எடுத்துக் கொண்டோமல்லவா. அந்த டம்ப்ளரில் அரை பாகம் நீரை விடு. நீர் மட்டத்திற்குச் சரியாய் ஒரு அடையாளம் டம்ப்ளரின் பக்கத்தில் வை. அப்பால் இதை ஒரு தட்டத்தில் வை. மற்றத் தட்டத்தில் படிக்கல் வைத்து சரியாய் இடை கட்டு. அப்பால் டம

ப்ளரில் உள்ள நீரைச் சிந்திவிடு. டம்ப்ளர் நன்றாய் நீரில்லாமல் உலர்ந்த பிறகு முன் குறியிட்ட வரை பொடி மணல் டம்ப்ளரில் செலுத்தி நிரப்பு. இந்த மணலின் காத்திரமும் முன் விட்டிருந்த நீரின் காத்திரமும் சரியே. ஆனால் முன் நீரைச்சரி கட்டின படிக்கல்கள் மணலைச் சரிகட்டமாட்டா. நீ இன்னும் அதிகமாக படிக்கல்கள் அந்தத் தட்டில் வைக்க வேண்டும். ஆகையால் காத்திரத்திற்குக் காத்திரம் மணல் நீரைப் பார்க்கிலும் கனம் அல்லது பளுவுள்ளது. இப்போது மணலைக் கொட்டி விடு. முன்போல் மரத்தூள் டம்ப்ளரில் போடு. நீருக்கு வேண்டியிருந்த படிக்கல்களைப் பார்க்கிலும் குறைந்த படிக்கல்கள் மரத்தூளைச் சரிகட்டுகின்றனவென்று காண்பாய். ஆகையால் காத்திரத்திற்குக் காத்திரம் நீரைப்பார்க்கிலும் மரத்தூள் இலகுவானது அல்லது இலேசானது. இவ்விதமாகவே சாராயம், நெய், எண்ணெய், இவைகளை வைத்துச்சோதனைசெய். இவைகள் நீரைப்பார்க்கிலும் இலகுவானவையென்று காண்பாய். பாகு, பாதரசம் நீரைப்பார்க்கிலும் கனமுள்ளவையென்பதும் தெரியும்.

24. கனம், இலகு அல்லது இலேசு என்பதின் அருத்தம். குறிகனம்.

கனம், இலகு என்னும் வார்த்தைகளை நாம் சற்று அஜாக்கிரதையாய்ப் பிரயோகித்து வருவது வழக்கமாயிருக்கிறது. சுளுவாய்த் தூக்கக்கூடிய பொருள்களை இலகுவானவையென்றும் தூக்குவதற்குக் கஷ்டமாயிருக்கும் பொருள்களை கனமானவையென்று நாம் சொல்லுகின்றோம். காற்றினால் வாரித் தூற்றப்படும் மணல் இலகுவானது என்றும் ஒரு மரத்துண்டைப் பார்த்து அது கனமுள்ளது என்றும் நாம் சொல்லுகின்றோம். ஆனாலும் இப்பொழுது தான் காத்திரத்திற்குக் காத்திரம் மணல் மரத்தைப் பார்க்கிலும் கனமுள்ளது என்று சோதனையினால் கண்டோம். இந்த இரண்டு அருத்தத்தில் இவ்வார்த்தைகளை உபயோகப் படுத்துவதினால் உண்டாகும் கலவரத்தை மாற்றும் பொருட்டு எப்பொருளானாலும் சரி

அப்பொருளின் நிறைக்கும் அதே காத்திரமுள்ள நீரைக்குறித்த சீதோஷ்ண நிலைமையிலும் அமுக்கத்திலும் எடுத்துக்கொண்டு அந்த நீரின் நிறைக்குமுள்ள பிரமாணம் அல்லது தாரத்தை அந்தப்பொருளின் குறிகனம் என்று சொல்லுவார்கள். ஆங்கில பாஷையில் குறிகனத்தை ஸ்பெஸிவிக் கிராவிடி (Specific gravity) என்பார்கள். நீரை எப்பொழுதும் 1 என்று வைத்துக்கொண்டு நீரின் காத்திரம் எவ்வளவோ அவ்வளவு காத்திரமுள்ள வேறு பொருளின் நிறை அந்நீரின் நிறைக்கு இரண்டு மடங்கானால் அப்பொருளின் குறிகனம் 2 என்றும் மூன்று மடங்கதிகமானால் 3 என்றும் நான்கு மடங்கதிகமானால் 4 என்றும்; பத்தரை மடங்கதிகமானால் $10\frac{1}{2}$ அல்லது 10-5 என்றும் சொல்லுவார்கள். ஆகையால் எப்பொருளின் குறிகனமும் அப்பொருளின் திண்மைக்கும் அதே சீரில் உள்ள நீரின் திண்மைக்கும் உள்ள தாரத்தை குறிக்கின்றது. மரத்தூள், எண்ணெய், சாராயம் இவைகள் நீரைப் பார்க்கினும் அதிகப்பட்ட குறிகனத்தையும், பாகுமணல், பாதரசம் இவைகள் நீரைப் பார்க்கினும் அதிகப்பட்ட குறிகனத்தையும் உடைத்தாயிருக்கின்றன. இந்த அருத்தத்தில் முன் சொன்ன மூன்று பொருள்களும் இலகுவானவை பின்சொன்ன மூன்று பொருள்களும் கனமானவை.

25. நீரைப் பார்க்கினும் அதிகமான குறிகனமுள்ள பொருள்கள் நீரில் அமிழ்கின்றன. குறைந்த குறிகனமுள்ளவை மிதக்கின்றன.

இதோ இரண்டு நீருள்ள டம்ப்ளர்களிருக்கின்றன. ஒன்றில் கொஞ்சம் அரப்பொடியாவது மணலாவது போடு மற்றொன்றில் மரத்தூள் கொஞ்சம் போடு. என்ன நிகழ்கின்றது பார். மணலும் அரப்பொடியும் அமிழ்ந்து டம்ப்ளரின் அடியில் போய்ப் படிகின்றன. மரத்தூளோ மேலேயே மிதக்கின்றது. நமக்கிஷ்டமானபடி கலக்கினாலும் அரப்பொடியும் மணலும் கீழேயே போகின்றன, மரத்தூளோ கலக்கும்பொழுது அடியிற் போனாலும் ஓரே பிடியாய் முரண்டிக்கொண்டு மேலே கிளம்பிவிடுகின்றது. ஆகையால் நீரைப் பார்க்கிலும் இலகுவானவை மிதக்கின்றன கனமானவை (காத்திரத்

திற்குக் காத்திரம் என்பது ஞாபகத்தில் எப்பொழுதும் வைக்கவேண்டும்) அமிழ்கின்றன. இப்படியே நீரில் கொஞ்சம் எண்ணெய் விட்டால் எண்ணெய் மிதக்கின்றது. வித்தியாசம் தெரிவதற்காக சாராயத்திற்குக் கொஞ்சம் வர்ணம் கொடுத்து அதை நீரில் ஜாக்கிரதையாய் விட்டால் அதுவும் மிதக்கின்றது. பாகும் பாதரசமும் அரப்பொடி செய்தமாதிரி அடியில் அமிழ்கின்றன.

இரும்பு நீரைப்பார்க்கிலும் கனமானதினால் அரப்பொடி நீரில் அமிழ்ந்து போகக் கண்டோம். தகரப்பெட்டிகள் ஜனங்கள் செய்யும் தகரம் என்னும் வெள்ளீயம் மேற்பூச்சாகப் பூசப்பட்ட மெல்லிய இருப்புத்தகடாம். இதோ ஒரு தகரத் துண்டு இருக்கின்றது. அதை நீரில்போட்டால் என்னவாகும்? காத்திரத்திற்குக் காத்திரம் அது நீரைப்பார்க்கிலும் கனமானது ஆகையால் அது நீ காண்கிறபடி நீரில் அமிழும்.

ஆனால் இதோ தகரத்தகட்டினால் செய்யப்பட்ட தகரப் பெட்டி ஒன்று இதோ இருக்கிறது. அதை நாம் நீரில் போட்டால் அது அடியில் அமிழாமல் கார்க்கினால் செய்யப்பட்டிருப்பதுபோல் நீரின்மேல் மிதக்கின்றது பார். இதோ ஒரு மலைவு வந்துவிட்டது. இப்பொழுது இரும்பு நீரைப் பார்க்கிலும் கனமுள்ளது என்று நாம் நிச்சயமாயிருந்தோம். இங்கே ஆச்சரியமாய் இரும்புப்பெட்டி நீரில் மிதக்கின்றது! இது பொதுவிதிக்கு விலக்கா? இல்லை; ஏனெனில் நாம் முன் சொன்னதென்னவெனில் ஒரு பொருளானது காத்திரத்திற்குக் காத்திரம் நீரைப்பார்க்கிலும் இலகுவாயிருந்தால் அது நீரில் மிதக்கும் என்பதே. இப்பொழுது இந்தத் தகரப்பெட்டியை நிறுக்கலாம். இதை நிறுத்தபிறகு பின்னால் இதே காத்திரமுள்ள நீர் என்ன நிறை யிருக்கின்றது என்று கண்டுபிடிக்க முயல்வோம். இதை மிகவும் சுளுவாய்ச் செய்யலாம்; ஏனெனில் இந்தப் பெட்டியின் நாலு பக்கத்துச் சுவர்போன்ற தகரத் தகடுகள் மிகவும் மெல்லியவை ஆகையால் பெட்டியின் உள் ஏறக்குறைய பெட்டி எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதே.

ஆகையால் பெட்டியில் நீரை நிரப்பி அந்த நீரை நிறுத்தால் பெட்டியின் காத்திரமுள்ள நீரின் நிறை எவ்வளவு என்று சற்று ஏறக்குறைய நாம் காணலாம். நாம் இப்படிச் செய்தால் பெட்டியை நிரப்பும் நீரின் நிறையானது பெட்டியின் நிறையைப் பார்க்கிலும் மிகவும் அதிகமாயிருக்கின்றது என்று காண்போம். ஆகையால் காத்திரத்திற்குக் காத்திரம் இந்தத் தகரப் பெட்டியானது இரும்பினால் செய்யப்பட்டதாயிருந்தபோதிலும் நீரைப்பார்க்கிலும் இலேசாயிருக்கின்றது ஆகையினால்தான் அது மிதக்கின்றது.

(தொடரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

நுண்பூதவுடலின் தத்துவமானது மிகவும் இணக்கமுள்ளது. திண்பூதவுடலின் உருவத்தைமாற்றுவது மிகவும் கடினம். வெகுகாலம் பிரயாசைப்பட்டால்தான் சற்று மாறும். நுண்பூதஉடலோ அப்படியல்ல. அது வெகுசுளுவில் உருவம்மாறும். மனோவிச்சையின்பிரகாரமெல்லாம் அது பேதிக்கும்.

பரமியகொலுக்களில் தோன்றும் புதுமையான காக்ஷிகளில் நுண்பூத உடல் அதிகமாய்த்தொழில்செய்கின்றது. தெளிநோக்குள்ளவர்களுக்கு இது நன்றாய்விளங்கும். அவர்களுடைய சகாயத்தால் நாமும் தெளிவடையலாம். மீடியம் என்று சொல்லும் உபகரணியின் இடதுபக்கத்திலிருந்து அந்தஉபகரணியின் நுண்பூதவுடல் பிதுங்கி வெளிவருவதைத் தெளிநோக்கர்கள் காணக்கூடும். பரமியகொலுவுக்குவந்து சேர்ந்திருக்கும் ஜனங்கள் இறந்துபோன தங்கள் பந்துக்களையாவது சிநேகிதர்களையாவது பார்க்கவேண்டுமென்று எண்ணினதும் அவர்கள்மனதில் தாங்கள் பார்க்கவேண்டுமென்று எண்ணின மனிதர்களின் உருவம் வந்து தங்குகின்றது. அப்பால் அவர்களின் மனவிச்சையின் வேகமானது உபகரணியின் நுண்பூதவுடலை

அவர்கள் எண்ணின மனிதனுடைய உருவம்போல் மாறுகின்றது. உபகரணி ஆழ்ந்த அவசத்தில் அழுந்தவும் அவனுடைய நுண்பூதவுடல் ஜீவகளையும் பலமும் பெற்று ஊனக்கண்களுக்கு ஜனங்கள் பார்க்கவேண்டுமென்று எண்ணின பந்துக்களின் உருவமாகத்தோற்றுகின்றது. அப்பொழுது ஜனங்கள் தங்களுடையபந்துக்களின் உயிரே பரலோகத்தினின்றும் தங்களுடைய திருப்திக்காக வந்திருக்கிறதென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக ஒருவன் தன் இறந்துபோன தகப்பனைப் பார்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்டதும் அவன் மனதில் அவன் தகப்பனுடைய உருவம் நிற்கின்றது. அவன் இச்சையின்சக்தியானது உபகரணியின் நுண்பூதவுடலைத்தாக்கி அவன்மனதிலுள்ள உருவம்போல் வளைகின்றது. உபகரணியின் திண்பூதவுடலானது சுரணைகுறைந்து பிணம்போலாக அவன் நுண்பூதவுடல் பலமும் ஜீவகளையும் பெற்று ஊனக்கண்களுக்கு அம்மனிதனுடைய தகப்பனைப்போல் காண்கின்றது. இப்படியே அவ்விடத்திலுள்ள பலரும் தாங்கள் யார் யாரைப்பார்க்கவேண்டுமென்று எண்ணுகிறார்களோ அந்தந்த உருவம் உபகரணியின் நுண்பூதவுடல் எடுத்துக்காண்பிக்கின்றது. அவ்விடத்தில்தோன்றும் உருவத்தை பரமியர்கள் "விக்கிரகித்த உயிர்" "உருவெடுத்த உயிர்" என்று சொல்லுகின்றார்கள். தங்களுடைய இறந்துபோன பந்துக்களின் அருவமான உயிரே உருவமாகிப்பரலோகத்தினின்றும் வந்திருக்கின்றதென்று நம்பி இப்படிப்பெயர் அவிடத்தில் தோன்றும் தோற்றங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது நமது இந்தியாதேசத்தில் பலவிடங்களில் சஞ்சரித்து பொதுநன்மைக்காக உழைத்தவரும் உவாக்ட் மெயிஸ்டர் (Countess Wachtmeister) என்னும் பெருமாட்டியானவள் பிறவித்தெளிநோக்கி. இந்த அம்மணி மேற்குதேசங்களில் நடக்கும் பரமியகொலுக்கள் பலவற்றைப் பார்த்திருக்கின்றனள். கொலுவுக்குவந்த ஜனங்கள் ஒவ்வொருவரும் தாங்கள் யாரைப்பார்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார்களோ அந்தந்தஉருவமாய் அவர்கள் எண்ணத்தின்படி ஒரே "உயிர்" உருவங்காட்டினதாகவும் தன்னுடையகண்களுக்கு இப்படிப் பல உருவங்களையுங்காட்டினது உபகரணியின ஒரு நுண்பூத உடலேயன்றி வேறொன்றுமல்லவாக நன்றாய்விளங்கினதாகவும் இந்தப்பெருமாட்டி சொல்லுகின்றனள். அமெரிக்காதேசத்தில் "எட்டி" (Eddy) என்னும் பெயர் பூண்ட ஒரு குடும்பம் இருந்தது. இக்குடும்பத்தில் பரமியகாக்ஷிகள் தோன்றிக்கொண்டிருந்தன. இக்குடும்பத்திலுள்ளவர்கள் உபகரணிகளாயிருந்தார்கள். இந்தமனையில் உண்டாகிக்கொண்டிருந்த அதிசயமானகாக்ஷித்தொகுதிகளை ஆராய்ந்துபார்க்கும்பொருட்டு ஹெலெநாம்பாள் சென்றிருந்தனள். இந்தப்புண்ணியநாயகியானவள் அவ்விடத்தில் கூடியிருந்த ஜனங்களுக்குத்தெரியாது தனக்குமாத்திரம்தெரிந்த மனிதர்களின் உருவங்களைப்போல் தன் உள்ளவலியினால் அங்கிருந்த உபகரணியினின்றும் பிதுங்கி வெளிவந்த நுண்பூதவுடலை மாற்றினதாகவும், இப்படித்தோன்றின உருவங்களின் குறிகளை அங்கிருந்த மற்றஜனங்கள் பார்த்ததாகவும் ஒருகாலத்தில் இப்பொழுது சரஸ்வதி அம்சம் என்று எல்லோரும் சொல்லும் அன்னி பெஸண்டு அம்மைக்குச் சொல்லினள்.

பரமியகொலுக்களில் மேஜை, குரிச்சி முதலிய தன்னிச்சையாய் அசையக்கூடாத பொருள்கள் ஒருவருந்தொடாமலிருக்கவும் அசைந்து ஓடும்படியான செயல்கள் நிகழ்கின்றன. மற்ற விடங்களிலும் இப்படிப்பட்ட செயல்கள் சிலகாலங்களில் உண்டாகின்றன. இச்செயல்கள் எல்லாம் நுண்பூதச்சாயலின் செயலினால் உண்டாகின்றன. இப்படிப்பட்ட காக்ஷிகளை வேண்டும்பொழுது இச்சைமாத்திரத்தில் தோற்றும்படி செய்ய நாம் கற்றுக்கொள்ளக்கூடும். அவைகள் மிகவும் அற்பமான சித்திகள். நுண்பூதக்கையை மாத்திரம் நீட்டித் தொழில்செய்தல் திண்பூதக்கையை நீட்டித் தொழில்செய்வதைப் பார்க்கிலும் விசேஷ பெருமையுமல்ல அதிசயமுமல்ல. இலக்கில்லாமல் பொருள்களைக் கவிழ்த்தல் வீசுதல் சந்தடிசெய்தல் முதலிய இப்படிப்பட்ட தோற்றங்கள் சிலரிடத்தில் அவர்களுக்குத்தெரியாமலே நிகழ்கின்றன. இவர்களுக்குத் தங்கள் நுண்பூதவுடலின்மேல் பிடிப்பில்லை. அதாவது நுண்பூதவுடலைத் தங்கள் வசத்தில் அடக்கி ஆளும் சக்தி அவர்களுக்கில்லை. ஆகையால் அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் அவர்கள் நுண்பூதவுடல் நடக்கத்தெரியாத குழந்தையானது நடக்க ஆரம்பிக்கும்பொழுது தன்தேகம் தன் சுவாதீனத்திற்கு வராமல் தத்தித்தடுமாறி விழுகின்றதைப்போல் தடுமாறி ஆடிப்பிழைசெய்கின்றது. திண்பூதவுடலைப்போலவே நுண்பூதவுடலும் அதன் பல உறுப்புகளுக்குரிய பரந்த உணர்ச்சிமாத்திரம் உடைத்தாயிருக்கின்றது. மனோசக்தி அதற்கில்லை. மேலும் திண்பூதவுடலினின்றும் அது பிரிந்தபொழுது மனோசக்தி விளையாடுவதற்கு உபகரணமாயாவது அது சுறுக்காய் உதவுவதில்லை.

இச்சங்கதி வேறொரு சாரமான விஷயத்தில் நமது புத்தியைச்செலுத்துகின்றது. ஸ்தூல கருவிகளாகிய மெய்வாய் கண் மூக்குச்செவி யென்னும் திண்பூதவுடலின் பொறிகட்கும் விஷயங்களையறிதல் என்னும் ஞானேந்திரிய உணர்வுகளுக்கும் மத்தியிலுள்ள பாலம் என்று சொல்லத்தக்க நான்காவது கூறாகிய காமவுடலில் ஐம்புலன்களின் சக்கரங்களிருக்கின்றன. பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களும் சதா அசைந்துகொண்டேயிருக்கின்றன. மொத்தமாய் அசைதல் அதாவது ஒரு இடம்விட்டு வேறு இடம் பெயர்தலாகிய அசைதலைப்பற்றி இவ்விடத்தில் சொல்லவில்லை.

அவைகள் தங்களுக்குள்ளேயே அசைகின்றன. இந்த அசைவுக்கு ஸ்புரணம் என்று பெயர். ஸ்புரிக்காத பொருளே கிடையாது. வாஸ்தவத்தில் பிரபஞ்ச முழுவதும் ஸ்புரணமயமே. பகிர்பிரபஞ்சம் என்று சொல்லும் ஸ்தூலபிரபஞ்சத்தி லிருந்து வரும் ஸ்புரணங்கள் திண்பூதவுடலின் அணுக்களைத்தாக்கி நமது பொறிகளின் கண்ணறைகளை ஸ்புரிக்கும்படி செய்கின்றன. எப்படியெனில் வீணை, யாழ், கின்னரம், சாரங்கி முதலிய நரம்பு இசைக் கருவிகளின் நரம்புகளில் விரல்களை ஓட்டினாலும் அல்லது வில்லை வைத்து இழுத்தாலும் அந்த நரம்புகள் படபடவென்று துடிக்கின்றன அதனால் நாதம் உண்டாகின்றது. இந்தத் துடிப்புக்கு ஸ்புரணம் என்று பெயர். நரம்புகளும் கருவிகளில் உள்ள மரங்களும் ஸ்புரிக்கின்றன. இந்த இசைக்கருவிகளை ஒரு பித்தளை முதலிய உலோகங்களினால் செய்த தவலை முதலிய பாத்திரங்களருகில் வைத்து சத்திக்கும்படி செய்தால் அக்கருவிகளின் ஸ்புரணம் அடுத்திருக்கும் வாயுவைத் தாக்கி அப்பால் பாத்திரத்தைத் தாக்கிப் பாத்திரத்தின் அணுக்களை ஸ்புரிக்கச்செய்து பாத்திரம் சத்திக்க நாம் கண்டிருக்கிறோம். இதைப்போல பகிர்பிரபஞ்சத்தின் ஸ்புரணங்கள் பொறிகளின் கண்ணறைகளை ஸ்புரிக்கும்படி செய்கின்றன. அப்பால் இக்கண்ணறைகளின் ஸ்புரணங்கள் நுண்பூதவுடலின் நுண்ணிய தத்துவ அணுக்களைத்தாக்கித் திண்பூதவுடலின் பொறிகளுக்குச் சரியொத்த நுண்பூதவுடலின் இந்திரியங்களின் நுண்ணிய பூததத்துவத்தை ஸ்புரிக்கும்படி செய்கின்றன. அப்பால் நுண்பூதவுடலின் இந்திரியங்களினின்றும் ஸ்புரணங்கள் ஐம்புலச் சக்கரங்களுக்கு நிலயமாகியதும், அடுத்து நாம் கற்கப்போகும் நான்காவது கூறுகியதுமான காமவுடலுக்குச் செல்லுகின்றன. அப்பால் இங்கிருந்து காமவுடலின் தத்துவத்தைப் பார்க்கிலும் வெகு நுண்மையான தத்துவத்தாலாகிய சுத்தாசுத்த மனோதலத்தில் ஸ்புரணங்கள் பாவுகின்றன. அப்பால் இந்த ஸ்புரணங்கள் சுத்தாசுத்த மனோதலத்தினின்றும் திருப்பியடிக்கப்பட்டுக் கீழிறங்கித் திண்பூதவுடலின் மூளையினுடைய திண்பூத அணுக்களில் வந்து சேர்ந்து நமக்கு உணர்ச்சி அல்லது அறிவு அல்லது ஞானம் உண்டாக்குகின்றது அதாவது விஷயஞானம் அல்லது பகிருலகமிருக்கின்றது என்னும் ஞானம் உண்டாகின்றது. இந்தஞானத்திற்கு "மூளையறிவு" 'மூளைஞானம்' 'மூளைப்பிரஞ்ஞை' என்றும் சொல்லுவார்கள். இதை ஒருதிருஷ்டாந்தம் எடுத்துக்காட்டி விளக்குவாம். எதிரில் ஒருமாமரமிருக்கப்பார்த்தால் மாமரம் ஒன்று நிற்கிறது என்று நம்மறிவில் விளங்குகின்றது.

மாமரம் உள்ளது என்னும் ஞானம் உண்டாவதற்கு முன் நடக்குஞ் செயல்கள் என்ன? எங்கும் ஒளிவீசுவதால் ஒளியின் ஸ்புரணத்தினால் மாமரமும் ஒளியின் ஸ்புரணத்தையொத்து ஸ்புரிக்கின்றது. மரத்தின் ஸ்புர

அதைச்சுற்றிலுமுள்ள ஆகாயத்தின்வழியாய்ச் சென்று நமது திண்பூதவுடலின் பொறியாகிய கண்ணில்தாக்கிக் கண்ணின் கண்ணறைகளை ஸ்புரிக்கும்படி செய்கின்றது அப்பால் இந்தஸ்புரணம் நுண்பூதவுடலின் கண்பொறியில் பதிந்து அதன்தத்துவத்தை ஸ்புரிக்கும்படி செய்கின்றது. அப்பால் அந்தஸ்புரணம் காமவுடலில் நிலைத்திருக்கும் கண்ணுக்கு ஒத்த புலச்சக்கரத்தில் சென்று பதிந்து அதைஸ்புரிக்கச்செய்கின்றது. அப்பால் இந்தஸ்புரணம்சுத்தாசுத்தமனோதலத்திற்சென்றுபாவி அவ்விடத்தினின்றும் பிரதிபலித்துத் திரும்பிப் படிப்படியாய் இறங்கிவந்து நமது திண்பூதவுடலில் உள்ளமூளையின் அணுக்களைப்போய்ச் சேர்கின்றது. இவ்வணுக்களின் ஸ்புரணத்தினால் மாமரம் உள்ளது என்று நாமறிகிறோம். இவ்விதஞானந் தான் சாதாரணமாய் மனிதர்க்குளது. இந்தஞானத்திற்கு "மூளைஞானம்" அல்லது "மூளை அறிவு" அல்லது "மூளைப்பிரக்ஞை" என்று பெயர். நமக்கு அனுபவத்தில் உள்ளபிரக்ஞையின் கிரமமானதொழிலுக்கு இப்படி ஒன்றன்பின்ஒன்றாய் இசைந்து நமக்குத்தெரியாமல் நடக்கும் பல உடல்களின் ஸ்புரணச்செயல்களின் வரிசை அவசியமானது. தூக்கத்திலும் மூர்ச்சை, அவசம் முதலிய நிலைகளிலும் இவைகள் இயல்பாகவே உண்டாயினுஞ்சரி, அல்லது வருவித்துக்கொண்டதாயினுஞ் சரி, இவ்வரிசைகளில் முன்னிரண்டும் கடைசியும் சாதாரணமாய்நீங்கி நிற்கவும் ஸ்புரணங்கள் அல்லது பதிவுகள் காமதலத்தில் உற்பத்தியாகி அத்தலத்திற்கே திரும்பிவிடுகின்றனவாகையால் அவைகள் மூளை ஞாபகத்தில் குறி அல்லது தழும்பு உண்டாக்குவதில்லை. ஆனால் பிறவி ஆத்மவித்தகர்களும் கற்றுப் பழகிக்கொண்ட ஆத்மவித்தகர்களும் தங்களுடைய சக்திகளை நடத்த அவசநிலைக்குப்போகவேண்டிய அவசியமில்லாத தெளிநோக்கர்களாகையால் அவர்கள் ஸ்தூல உலகத்தின்பிடியை விடாமலே ஸ்தூலத்தினின்றும் காமதலத்திற்கு தங்கள்பிரக்ஞையைக் கொண்டுபோய் காமதலத்தில் உண்டாகிய அனுபவஞானங்களை ஸ்தூலவுலகத்தில் உபயோகமாகும்படி மூளைஞாபகத்தில் பதிவு செய்துக்கொள்ளக் கூடியவர்களாயிருக்கிறார்கள். அதாவது அவர்கள் ஜாக்கிரா அவஸ்தையிலிருந்துகொண்டே சொற்பன அவஸ்தையின் காரியங்களைக் கண்டு அனுபவித்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகிறார்கள்.

நுண்பூதவுடலின் மரணமென்பது, திண்பூதவுடலின் மரணம் என்றால் என்ன அருத்தமோ அதுவே. அதாவது அந்தவுடலின் கட்டுப்பாடு குலைந்து அதன் அணுக்கள் சிதறிப்போவது தான் அதன் மரணம். தேகத்தை மொத்தமாய் ஜீவித்திருக்கும்படி செய்யும் உயிருக்கு வாகனம் அல்லது உபாதி என்னப்படும் நுண்பூதவுடலானது மரணசமயம் வரும்பொழுது தேகத்தினின்றும் பிதுங்கி வெளிவந்து முன் சொல்லிய மெல்லிய சாலிழையினால் திண்பூதவுடலுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு இறக்கப்

போகிற மனிதன்மேல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. தெளிநோக்கர்களுக்கு இப்படி ஊசலாடிக்கொண்டு நிற்கும் நுண்பூதவுடல் வெண்மைகலந்த ஊதா நிற வெளிச்சம் போலும் அல்லது உருவம் போலும் காணும். இந்த மெல்லிய நூலிழை அறும்பொழுது கடைசி மூச்சு துடித்து வெளியே ஓடிவிடுகின்றது. அப்பொழுது அருகிலுள்ளவர்கள் "தீர்ந்துபோச்சுது" "உயிர்போய்விட்டது" "செத்துப்போனான்" என்று பேசுகிறார்கள்.

நுண்பூதவுடல் ஸ்தூலதத்துவத்தைச் சார்ந்ததாகையால் சவத்தின் அருகாமையிலேயே யிருக்கும். சில ஜனங்கள் ஒரு மனிதன் சாகும்பொழுதும் பின்னால் செத்தவிடத்திலும் அம்மனிதனைப்போன்ற உருவத்தைக் கண்டு "பேய்" "பிசாசு" "உயிர்" என்று சொல்லுவதெல்லாம் இந்த நுண்பூதவுடலையே. திண்பூதவுடல் கலைந்து மண்ணாக இவ்வுடலும் மெதுவாக அத்துடன் கலைந்துவருகின்றது. இதின் சேடங்களைத்தான் அதிக ஸ்மரணையுள்ள சிலர் சவம் புதைத்திருக்கும் குழிக்கு நேராக மேலே வெண்மைகலந்த ஊதா நிறமான வெளிச்சமாக ஊசாலாடிக் கொண்டிருக்க இடுகாடுகளில் காண்கிறார்கள். மனிதனுடைய ஸ்தூலபோர்வையைப் புதைக்கிறதைப் பார்க்கிலும் சுட்டுவிடுவது மிகவும் நலம் என்பதற்கு இது ஒரு காரணம். புதைப்பதினால் தேகம் மெதுவாய் படிப்படியாய் அழுகி மண்ணாய் அதன் அணுக்கள் அந்தந்த பூதங்களில் போய்ச் சேருகின்றன. இதற்கு வெகு காலமாகிறது. அக்கினியோ சில நாழிகைக்குள் தேகத்தைக்கலைத்து அதன் அணுக்களை அவைகளின் தலத்திற் சேரும்படிசெய்து புது உருவங்கள் கட்டுவதற்கு அவ்வணுக்கள் தயாராயிருக்கச்செய்கின்றது.

இந்த நுண்பூதவுடல்தான் பிராணமய கோசம். இது சூத்திர ஜாதி. அதாவது, இந்த வுடல் நன்றாய் உருவாகியும் மற்ற வுடல்கள் தொழில் செய்யும்படி நன்றாய் உருவாகாதவன் சூத்திரன். எம்மனிதனது பிரஞ்ஞை இத்தேகத்தில் தொழில்செய்து அறிவை யுண்டுபண்ணிக்கொண்டும் மற்ற தேகங்களில் போயிருந்தாலும் அறிவில்லாமலு மிருக்கிறதோ அம்மனிதன் சூத்திரன். அதாவது எம்மனிதனுக்கு ஜாக்கிராவஸ்தையில் மாத்திரம் ஞானம் அல்லது அறிவு இருந்து மற்ற அவஸ்தைகளில் அஞ்ஞானம் இருக்கின்றதோ அவன் சூத்திரன்.

திண்பூதவுடலும் நுண்பூதவுடலும் சேர்ந்தது ஸ்தூலதேகம். இனி மூன்றாவது கூறிய பிராணனைப் படிக்கப்புகுவாம்.

[இன்னும் வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

புத்தகக் குறிப்பு.

வியவசாய தீபிகை. இப்பெயர்வாய்ந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையொன்று 1904௵ எப்ரல்௴ முதல் சைதாப்பேட்டையினின்றும் மகா-ா-ா-ஸ்ரீ யன். வானமாமலைப்பிள்ளையவர்களால் வெளியிடப்பெறுகின்றது. இதன் முதற்புத்தகத்தைப்பார்த்தோம். இது தன்பெயர்க்கேற்ப உழவுதொழிலாளிகட்கு வேண்டிய பல முக்கிய விஷயங்களை நன்றாகவிளக்குகின்றது. தக்க கல்விமான்கள் பலர் இதில் விஷயங்களெழுதுகின்றார்கள். இதில் எழுதப்பட்டுள்ள எல்லாவிஷயங்களும் யாவரும் சிரமமின்றி எளிதில் பொருளறியத்தக்கவண்ணம் இனிய நடைகொண்டுள்ளன. டிம்மி நான்குபாரம் 32 பக்கங்கொண்டு நல்லதளமான கடிதத்தில் அச்சிட்டு அழகாக அமைக்கப்பெற்ற இப்பத்திரிக்கைக்கு வருஷசந்தா ஒன்றரைரூபாதான். பத்திரிகையின் நிலையைநோக்கின் இதன்சந்தா மிகச்சொற்பமேயாகும். இப்பத்திரிகையால் நம் நாட்டு வியவசாயமாக்களும் பிறரும் பற்பலபெருநன்மைகளை யடைவார்களென்று நாம் உறுதியாகநினைக்கிறோம். நம்நாட்டார் பலரும் பொருள்நேயமிட்டு இத்தீபவொளி அபிவிர்த்தியாகும் வண்ணம் முன் வருவார்களெனவும் கருதுகின்றோம்.

திருவிளையாடற் புராணம் மூலமும், சென்னை வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ தி. க. சுப்பராயசெட்டியாரவர்களியற்றிய வுரையும், நல்லபதிப்பு. 3 புத்தகங்களாகக்கட்டுப்பட்டது. விலை ரூபா 12—0—0.

திருவிளையாடற்புராணம் மதுரைக்காண்டத்துக்குமட்டும் மதுரைவாசியாயிருந்தவித்வான் மகா-ா-ா-ஸ்ரீ இராமசாமிப்பிள்ளையென்னும் ஞானசம்பந்தப்பிள்ளையவர்களியற்றிய உரைப்புஸ்தகம் 1-க்குவிலைரூபா 1—8—0 தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புஸ்தகங்களும் இன்னும் வேண்டிய எல்லாப்புஸ்தகங்களும் மதுரை புதுமண்டபம் புஸ்தகக் கடை இ. ராம. குருசாமிக்கோனாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

வட அமெரிக்காவில் மெக்ஸிகோவில் இரும்புக்குன்று ஒன்றுளது. அதன் விஸ்திரணம் 4 மைல். உயரம் 640 அடி.

*   *   *   *   *

நிக்கல் வெள்ளிநாணயமும் இனி இந்தியாவில் ஏராளமாய் வழங்கப்படுமாம். இந்நாணயங்கள் இப்பொழுது கல்கத்தா தங்கச்சாலையில் அச்சாகி வருகின்றன.

*   *   *   *   *

சாகுந்தருணத்தில் இருக்கும் ஜனங்களை ஒரு முறை போய் பார்த்துவர பிரான்சிய துரைத்தனத்தார் தம் தேசத்து கைதிகளுக்கு அநுமதி கொடுத்திருக்கிறார்கள்.

*   *   *   *   *

நமது வைஸிராய் கர்ஸன் பிரபுவின் மாமனாரும் அமெரிக்கா கோடீசுவரர்களுள் ஒருவருமாகிய மிஸ்டர் லெய்டர் துரையவர்கள் தேகவியோகமானதறிந்து விசனிக்கிறோம்.

*   *   *   *   *

அஸிக்கல்லில் இருந்து மங்களூர் வரை இருப்புப்பாதை போட மதிராஸ்ரயில்வே கம்பேனியாருக்கு இந்திய ராஜாங்கக் காரியதரிசியவர்களால் 129 லக்ஷரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறதாம்.

*   *   *   *   *

இனி மூன்றாவது வகுப்பிற்குக் கீழே புஸ்தகத்தின் மூலமாகவாவது வாய்மொழிப் பாடமாகவாவது மாணவர்களுக்கு ஆங்கிலமே கற்றுத்தரக் கூடாதென்று துரைத்தனத்தார் கண்டிப்பாய் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

*   *   *   *   *

ஜெர்மனியில் ஒரு தெரு பூராவாக ரப்பரால் தளம்போட்டுப் பரீக்ஷை செய்து பார்த்ததில், அது கால்நடைப்பிரயாணிகளுக்கும் வண்டிகளுக்கும் அதிக சுகமும் நன்மையும் பயக்கத்தக்கதாயிருக்கின்றதென்று காணப்பட்டதாம்.

சின்னாட்களுக்கு முன் தமக்குக் கையிற்பட்ட துப்பாக்கிக் காயத்தினாலுண்டான வேதனையை நன்குணர்ந்து ஆப்கானிஸ்தானத்து அமீராகிய ஹாபிபுல்லாகான் என்பவர் குற்றவாளிகளின் [illegible]யைத் தறிக்கும் குரூர வழக்கத்தை நிறுத்தியே விட்டார்.

*   *   *   *   *

இங்கிலீஷ்க்காரருக்குச் சொந்தமான பிஜி (Fiji) என்னும் தீவில் வசிப்பவர்கள் நாம் செலுத்துவதுபோல் துரைத்தனத்தாருக்கு வரியைப் பணமாகவே செலுத்துவதில்லை. பெரும்பான்மை தேங்காய்களும் சிறுபான்மை தானியவகையராவுமே நாணயங்களுக்குப்பதிலாகக் கொடுத்து வருகின்றனர்.

*   *   *   *   *

ரங்கூன் ஜெனரல் ஆசுபத்திரி வைத்தியர் காப்டன் ராஸ்ட் என்னும் கனவான் குஷ்டரோகக் கொடுநோய் தீர்க்க ஒரு வகை கண்டு பிடித்திருக்கின்றனரென்றும், சென்ற 7 மாத காலத்திற்குள் 29 பேர்களுக்கு அவரால் பூராவாகவும் குஷ்டரோக நிவர்த்தி என்றும் பத்திரிகைகள் பலவாறு புகழ்கின்றன.

*   *   *   *   *

ஸ்காட்லாண்ட் தேசத்தில் இன்வர்னஸ் ஜில்லாவில் கார்னிக் என்னும் ஊரில் இருக்கும் பாடசாலையே உலகத்திலுள்ள பாடசாலைகளில் மிகச் சிறியதாம். அதில் ஒரு குடியானவன் பிள்ளைகளான நாலே நாலு சிறுவர் தாம் வாசிக்கின்றனர். இப்பாடசாலைக்கும் சர்ட்டிபிகேட் பெற்ற ஓர் உபாத்தியாயர் நியமிக்கப்பட்டிருக்கின்றாராம்.

*   *   *   *   *

இவ்வுலகத்திலுள்ள புத்தகங்கள் யாவற்றிலும் விலையுயர்ந்தது பாரசீக தேசத்திலுள்ள இஸ்வஹானில் இருக்கும் மகமதிய வேத புத்தகமாகிய கோரானே. இதன் நீளம் 9½ அங்குலம். அகலம் 4½ அங்குலம். இதன் மதிப்புக்கிரயம் 25,000 பவுனும். இதன் அட்டை அரைக்கால் அங்குல கனதியுள்ள தங்கத்தகடாம். அதில் பூராவும் விலை உயர்ந்த கற்கள் இழைக்கப்பட்டுள்ளனவாம்.

பிரேஜிலில் ஓர் வகை விநோத விருக்ஷம் உளது. அதன் உயரம் 6 அல்லது 7 அடி இருக்கும். மிகவும் இருண்ட அமாவாசை ராத்திரியில் கூட இதன் இருப்பிடம் ஒருமைல் தூரத்திற்கும் அப்பாலிருந்து பார்த்தால் தெரிந்து கொள்ளக்கூடிய அவ்வளவு வெளிச்சத்தோடு கூடியதாக இருக்கின்றது. அதனடியில் உட்கார்ந்து புத்தகங்களை விளக்கின் உதவி யில்லாமல் சிறிதும் சிரமமே யின்றி வாசிக்கலாமாம்.

* * * * *

மதுரை பாம்பன் இருப்புப்பாதை ஏற்பட்டதன்பின்னர் மண்டபத்திலிருந்து பாம்பனுக்கு நீராவிப்படகு செல்வது யாவர்க்கும் தெரியும். இப்பொழுது இராமேசுவரப்பிரயாணிகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தேவருவதால், அன்னோரின் சௌகரியத்தையும் கம்பெனியாரின்லாபத்தையும் கருதி இராமேசுவரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலும் ஓர் நீராவிப்படகு ஓடும்படி ஏற்பாடாயிருக்கிறது.

* * * * *

ஒரு நிமிஷத்திற்கு, ருஷிய சக்கரவர்த்திக்கு 16 பவுன் 4 ஷில்லிங்கும், ஆஸ்திரியா சக்கரவர்த்திக்கு 7 பவுன் 1 ஷில்லிங்கும், இட்டலியரசருக்கு 4 பவுன் 7 ஷில்லிங்கும் ஜர்மன் சக்கிரவர்த்திக்கு 3 பவுன் 10 ஷில்லிங்கும் நமது எட்வர்ட் சக்கரவர்த்திக்கு 3 பவுன் 1 ஷில்லிங்கும், ஸ்பெயின் அரசருக்கு 2 பவுன் 17 ஷில்லிங்கும், பிரான்ஸ் பிரஜாதிபதிக்கு 7 ஷில்லிங்கும், அமெரிக்கப் பிரஜாதிபதிக்கு 1 ஷில்லிங் 6 பென்சும் சம்பளமாம்.

* * * * *

மெய்யடியார்களுள் ஒருவர் மதுரை ஸ்ரீமீனாம்பிகைகோவிலில் தீபமேற்ற நெய்கொடுத்திருக்க, அங்ஙனம் செய்யாது, அதனை வீட்டிற்கெடுத்துக்கொண்டுபோன ஷை கோவில்பட்டர் ஒருவர்பேரில் திருட்டுக்குற்றம்சுமத்தப்பட்டு விசாரணையும் நடந்துவருகிறது. பட்டரோ இச்செய்கை திருட்டாகாதென்று சாதிக்கின்றனராம். இக்கேசின்முடிவு சின்னாட்களில்தெரியும். கேசு எப்படிமுடிந்தாலும் இது, "கோவில்சொத்துகுலநாசம்." என்பதை மறந்து, சுயப்பிரயோஜனம்கருதி, அடியார்கள் ஈவனவற்றை அடித்துக்கொண்டுபோகும் சில அயோக்கிய பட்டர்களுக்குச்சிறந்த எச்சரிக்கையேயாகும்.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவும் தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு ... ரூ. 35
2. மகா-ா-ா-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு. ... ... ரூ. 25
3. மகா-ா-ா-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ... ரூ. 10
4. மகா-ா-ா-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமிந்தார் தேவிகோட்டை வரவு... ரூ. 25

இவர்கள் 1903 வருஷத்திலும் 25 ரூ. நன் கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்திலும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

5. மகா-ா-ா-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதம்பை. சிலோன் வரவு ... ரூ. 25

பத்திராதிபர்.

வைத்தியம்.

(187-ம் பக்கத் தொடர்ச்சி)

கபாட சூரணம்.

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய்த்தோல், மாங்கொட்டைப் பருப்பு, கிராம்பு, ஓமம், சாதிக்காய், அதிவிடயம், இந்துப்பு, மாம்பட்டை, நெல்லிவற்றல், கருஞ்சீரகம், நற்சீரகம், பெருங்காயம் அத்திப்பிஞ்சு, மாதுளம்பிஞ்சு, இலவம் பிஞ்சு, வில்வப் பிஞ்சு, கோரைக்கிழங்கு, புளியங்கொட்டைமேற்றோல், ஆடுதின்னாப்பாளைவேர் இவை சமம். இவைகளை ஒன்றிரண்டாய் நறுக்கி அரசம்பட்டையை யிடித்த மொத்தையின் நடுவில் வைத்துமூடி மண் துணி சுற்றிச் சரக்கு வேகும் வரையும் நெருப்பினுளிட்டுத் திருப்பித்திருப்பி வேகவைத்து ஆறவிட்டுப் பிரித்தெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திர காயஞ்செய்து சூரணத்தில் 44 ல் ஒரு பங்கு அபின் பொடியைக் கலந்து வைத்துக்கொண்டு உபயோகிக்க.

7 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இச்சூரணம் ஏற்றது. இந்த வயதிற் குறைந்தவர்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் அபினியை மாத்திரம் நீக்கிச் செய்த சூரணம் தக்கதாகும்.

பிரசவித்த ஸ்திரீகளுக்குக் காணுகிற வயிற்றுப்போக்கொழிந்த எல்லா வயிற்றுப்போக்குகளுக்கும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—வெருகடியளவு சூரணத்தை, பச்சையரிசிக் கழுநீரைக் காய்ச்சி வடித்த ஒரு சிறங்கை வெந்நீருளிட்டுக் கலக்கிச் சாப்பிட வேண்டியது. மும்முரமான போக்காயிருந்தால் 3-மணிக்கொருதடவையும் சாதாரணமான போக்காயின், 6-மணிக்கொருதடவையுஞ் சாப்பிடவேண்டும் வயது, வியாதியின் மாதிரிபோல், அளவைக் குறைத்துக்கொள்ளலாம்.

இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்புகளுக்காயின் வாழைப்பூ விதழைப் பிட்டவித்துப்பிழிந்த ரசத்தில் வெருகடியளவு சூரணத்தைக்கலந்து சாப்பிடலாம்.

சீரணமகாது சிலருக்கு அடிக்கடி மலமிறங்குதலுக்கு அரிசிக் கழுநீரில் ஓமத்தையிட்டுக் கஷாயஞ் செய்து வடித்த அரைச்சிறங்கை கஷாயத்தில் அரை வெருகடியளவு சூரணத்தைக் கலந்து காலை மாலை சாப்பிடவேண்டும்.

இவ்வநுபானங்களன்றி, வெந்நீர், தயிர்க்கட்டி, எருமைமோரில் சுக்கிட்டு வேகவைத்து வடித்த சலம், பசுமோரில் கிராம்பைக் கிழிக்கட்டி வேகவைத்து வடித்த சலம், வெள்ளாட்டுப்பாலில் படிக்காரத் தூளையிட்டுக் காய்ச்சி வடித்தசலம், மாதுளங்காயைத் தட்டிப் பிழிந்த ரச முதலியவைகளும் எற்றதாகும். அநுபானந் தயாரிக்க முடியாவிடத்துத்தனிச் சூரணத்தையே சாப்பிட்டாலுங்குணமடையலாம்.

தீரும் வியாதிகள்:—பலவித வயிற்றுப்போக்குகள், இரத்தக் கடுப்பு, சீதக்கடுப்பு, கிராணி, அபானத்திற் குத்தல், கை காலோய்வு, இடுப்புவலி, அன்னஞ் செல்லாமை, வயிற்று மந்தம், வாய்வு, குடற்புரட்டல், வயிற்றுவலி முதலியவைகள் குணமாகும்.

பத்தியம்:—வாழைப்பூவிதழ், வாழையிளம் பிஞ்சு சுண்டைவற்றல் இவற்றையும் சீரணிக்கும் ஆகாரங்களையும் புசிக்கலாம். சர்க்கரை, பால் காபி, மாமிசம், விரைவிற் சீரணிக்காத ஆகார முதலியவைகளை விலக்கவேண்டியது.

வெருகடியென்பது—மூன்று விரலாற் கிள்ளியெடுக்கும் அளவு.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை.

30-7-04

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 3-AUG 1904 MADRAS

உ

குமரன் துணை

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904ளு ஜூலைமீ { புத்தகம் 7

பஞ்சவிஞ்சதி விக்கிரகம்.

அவ்வப்பொழுதே சிவபிரானால் ஆன்மாக்களை இரட்சித்தற்பொருட்டுக் கொள்ளப்பட்டதாய், மாகேசுர பேதங்களாயுள்ள சந்திரசேகரமூர்த்திமுதலிய மூர்த்தங்கள் பஞ்சவிஞ்சதி விக்கிரகங்களாம். பஞ்சவிஞ்சதி - இருபத்தைந்து. விக்[illegible] - மூர்த்தம்.

அவை, இலிங்கோற்பவமூர்த்தி, சுகாசனமூர்த்[illegible] சகர், அர்த்தநாரீசுவரர், சோமாஸ்கந்தர், சக்கரப்பிரதா[illegible], ஸ்ரீமூர்த்தி, அர்த்தாங்கவிட்டுணு, தக்கிணாமூர்த்தி, பிச்[illegible] மூர்த்தி, கங்காளமூர்த்தி, காமசங்காரமூர்த்தி, காலசங்[illegible] மூர்த்தி, சலந்தரசங்காரமூர்த்தி, திரிபுரசங்காரமூர்த்தி, சரபமூர்த்தி, நீலகண்டமூர்த்தி, திரிபாதமூர்த்தி, ஏகபாதமூர்த்தி, பைரவமூர்த்தி, விருஷபாரூடமூர்த்தி, சந்திரசேகரமூர்த்தி, நடராஜமூர்த்தி, கங்காதரமூர்த்தி, திரிமூர்த்தி மூர்த்தி என்னும் இருபத்தைந்துமாம்.

இலிங்கோற்பவ மூர்த்தி - இலிங்கத்திலுற்பவித்த மூர்த்தி. இம்மூர்த்தம் ஆன்மவர்க்கமெல்லாம் உற்பத்தியடையும்படி கொள்ளப்பட்டது.

சுகாசனமூர்த்தி - சுகமாகிய ஆசனத்தினையுடைய மூர்த்தி. இம்மூர்த்தம் ஆன்மாக்களெல்லாம் வேறுபாடின்றி இல்லற விருப்பம் எய்தும் பொருட்டுக்கொள்ளப்பட்டது.

உமாசகமூர்த்தி - உமையம்மையோடு சமேதமாயுள்ள மூர்த்தி. இம்மூர்த்தம் ஆன்மாக்களெல்லாம் வாழ்க்கைத்துணை நலம் எய்தி வாழும்பொருட்டுக்கொள்ளப்பட்டது.

கலியாணசுந்தர மூர்த்தி - விவாகச்சிறப்புடைய மூர்த்தி. இம்மூர்த்தம் யாவரும் களத்திரசகிதராய் வாழும்பொருட்டுக் கொள்ளப்பட்டது.

அர்த்தநாரீசுவரமூர்த்தி - பாதிபெண்வடிவாயுள்ளமூர்த்தி. இம்மூர்த்தம் யாவரும் மோகமடையும்படி கொள்ளப்பட்டது.

சோமாஸ்கந்த மூர்த்தி - உமையோடும் முருகபிரானோடுங் கூடியமூர்த்தி. இம்மூர்த்தம் யாவரும் மக்கட்பேறடையும்படி கொள்ளப்பட்டது.

சக்கரப்பிரதமூர்த்தி - விட்டுணுவுக்குச் சக்கரங்கொடுத்த மூர்த்தி. இம்மூர்த்தம் யாவர்க்கும் போகங்கொடுக்கும்படி கொள்ளப்பட்டது.

அர்த்தாங்கவிட்டுணுமூர்த்தி - பாதித்திருமேனியிலே விட்டுணுவையுடையமூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் இருவினையொப்பு வருமாறு கொள்ளப்பட்டது.

தக்கிணாமூர்த்தி - தெற்குநோக்கியமூர்த்தி. இம்மூர்த்தம் யாவரும் தத்துவோபதேசம் பெற்று முத்தியடையுமாறுகொள்ளப்பட்டது.

பிச்சாடனமூர்த்தி - பிச்சைக்குச் சென்றமூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் சுகதுக்கங்களை ஒடுக்கும்படி கொள்ளப்பட்டது.

கங்காளமூர்த்தி - கங்காளந்தரித்த மூர்த்தி. கங்காளம் - முழுவெலும்பு. இம்மூர்த்தம் பக்குவான்மாக்களுக்கு வைராக்கியங்கொடுக்குமாறு கொள்ளப்பட்டது.

காமசங்காரமூர்த்தி - மன்மதனைச்சங்கரித்தமூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் காமவிச்சையை நீக்கும்படிகொள்ளப்பட்டது.

காலசங்கார மூர்த்தி - இயமனைச்சங்கரித்தமூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் இயமவேதனை நீக்கும்பொருட்டுக்கொள்ளப்பட்டது.

சலந்தரசங்காரமூர்த்தி - சலந்தரனைச் சங்கரித்தமூர்த்தி. இம்மூர்த்தம் யோகிகளுடைய கோபம் நீங்குமாறு கொள்ளப்பட்டது.

திரிபுரசங்காரமூர்த்தி - முப்புரங்களையும் அழித்தமூர்த்தி. இம்மூர்த்தம் முக்குணங்களையும் அடக்குதற்குக் கொள்ளப்பட்டது.

சரபமூர்த்தி - நரசிங்கத்தின்வலியடக்குமாறு எண்காற்பறவைவடிவங்கொண்டமூர்த்தி. இம்மூர்த்தம் பக்குவான்மாக்களுக்கு மாயை, கருமம் என்னும் இருமலங்களையும் நீக்குமாறு கொள்ளப்பட்டது.

நீலகண்டமூர்த்தி - நஞ்சுண்டு கண்டத்திலடக்கிய மூர்த்தி. இம்மூர்த்தம் ஆணவமலம் நீங்கும்படிகொள்ளப்பட்டது.

திரிபாதமூர்த்தி - மூன்றுபாதமுடையமூர்த்தி. இம்மூர்த்திக்கு நான்கு கொம்பும் இரண்டுகெழுத்தும் ஏழு கைகளுமுள. இம்மூர்த்தம் யாவருக்கும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றுங் கொடுத்தற்குக் கொள்ளப்பட்டது.

ஏகபாதமூர்த்தி - ஒருபாதமுடையமூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் ஞானங்கொடுத்தற்குக்கொள்ளப்பட்டது.

பைரவமூர்த்தி - இம்மூர்த்தம் சர்வசங்கபரித்தியாகம் யாவருக்கும் உண்டாதற்பொருட்டுக் கொள்ளப்பட்டது.

இடபாரூடமூர்த்தி - இடபத்திலேறியமூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் கிருபைசெய்தற் பொருட்டுக் கொள்ளப்பட்டது.

சந்திரசேகரமூர்த்தி - சந்திரனைத்தரித்த முடியுடைய மூர்த்தி. இம்மூர்த்தம் யாவர்க்கும் பிறப்பிறப்பு நீங்குமாறு கொள்ளப்பட்டது.

நடராஜமூர்த்தி - நடனத்திற்குத் தலைமைபூண்ட மூர்த்தி. இம்மூர்த்தம் யாவருக்கும் பேரானந்தம் கொடுத்தற்காகக் கொள்ளப்பட்டது.

கங்காதரமூர்த்தி - கங்கையைத்தரித்தமூர்த்தி. இம்மூர்த்தம் யாவரையும் பேரின்பத்திலே அழுத்தும்பொருட்டுக் கொள்ளப்பட்டது.

திரிமூர்த்திமூர்த்தி - திரிமூர்த்தி வடிவங்கொண்ட மூர்த்தி. இம்மூர்த்தம். ஆன்மாக்கள் சாக்கிரம் முதலிய மூன்றவத்தாரூபங்களை அடைதற்குக் காரணமாகக்கொள்ளப்பட்டது.

இங்கேசொல்லப்பட்ட மூர்த்தங்களுள்ளேசிலமூர்த்தங்கள் சிவரகசியம் முதலியநூல்களிலே வேறாகக் காணப்படுகின்றன.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

யாழ்ப்பாணம், சுன்னாகம்.

சிவசரித்திர உபந்நியாசம்.

சுத்தசிவ சன்மார்க்க சுகுண சீலர்களாகிய அன்பர்களே !

திருவாரூரென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அறுபத்து மூவர் மடாலயத்தில் இம்மதி 6உ சௌமியவாரத்தன்று சுவாதி நக்ஷத்திரத்திலே ஸ்ரீவன்றொண்டப் பெருந்தகையாரது குருபூஜை மகோற்சவம் மிகச்சிறப்புடன் நடந்தது.

அன்றிரவில் சிதம்பரஸ்தலத்தில் உற்பவித்தவர்களும் திருச்சிற்றம்பலத்திற் றிருநிருத்தம் புரிந்தருளும் ஸ்ரீநடராஜப் பெருமானது குஞ்சித பாதமலரின் கண்ணிடையறா அன்பினையுடையவர்களுமாகிய சிவ கதாப்பிரசங்காத்நாகரம் ஸ்ரீமத் அய்

யாக்கண்ணு ஓதுவா மூர்த்தியவர்கள் தம்பிரான்றோழரான சுந்தரமூர்த்திசுவாமிகளது திவ்வியசரித்திரத்தை அன்பர்களது செவிக்கோரமுதமாகவும் அவ்வமுதத்தைப் பருகினமாத்திரத்தில், அப்பெருமான்மீது இடையறாப் பத்தியை விளைவிக்கும் ஆற்றலும் நவரசங்களும் அமையப்பெற்றுள்ளதாயும் பக்கவாத்தியங்களோடு மிக்க இனிமையாய்ப்பிரசங்கித்தார்கள். இதைக் கேட்டு மகிழ்ந்து அன்பர்கள் இத்தகைய மேம்பாடுடைய உபந்நியாசத்தை அடுத்தடுத்துங் கேட்டு மகிழவேண்டுமென்னும் விருப்பத்தோடு ஸ்ரீவீதிவிடங்கத் தியாகராஜவள்ளலார் தம் சந்நிதானத்தில் ஸ்ரீசோமயாஜிமாறநாயனார் திவ்விய சரித்திரத்தை பிரசங்கிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அதனை ஓதுவா மூர்த்திகள் சிரமேற்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட காருண்ய பிரபாவத்தை நினைத்து நினைத்து அன்பு மேலீட்டினால் வலியவந்த பாக்கியமென அங்கீகரித்து அவர்களது வேண்டுகோளுக்கிசைந்தனர்.

8உ யாகிய சுக்கிரவாரத்தன்று இராஜநாராயண மண்டபத்தில் ஸ்ரீசோமயாஜிமாற நாயனார் சரித்திரத்தை ஆரம்பித்து ஸ்ரீசோமயாஜிமாறரது பக்தியின் பெருக்கத்தையும சுந்தரமூர்த்தி சுவாமிகள்பால் தியாகேசப் பெருமானை தான் செய்யும் யாகத்தில் நேரே யெழுந்தருளி அவிர்ப்பாகம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்ட விநயத்தையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளது வேண்டுகோளுக்கிரங்கி ஸ்ரீ தியாகராசப்பெருமான் நீசராகவும் அம்பிகை நீசஸ்திரீயாகவும் திருக்கோலங்கொண்டு அன்பரால் கொடுத்த அவிர்ப்பாகத்தைப் பெற்று அனுக்கிரகித்த தன்மையையும் மிக்க விநயமாயும் இன்றியமையாப் பிரபல வாக்கியப் பிரமாணங்களோடும் அதி மாதுரியமாகப் பக்திரசந் ததும்பக் கேட்டவர்களனைவரும் சித்திரப்பிரதமை போல் அசைவற்றுச் சிவானந்த வாரிதியிற் றிளைக்குமாறு, பிரசங்கித்தனர். அங்கு நிறைந்திருந்த, அளவில்லாத அன்பர்களும் ஓதுவாமூர்த்திகளை வியந்து, ஓதாதாரில்லை பிரசங்கமுடிவில். ஸ்ரீதியாகராஜப்பெருமானது மகா சந்நி

தானத்தில் எளிதிற்பெறுதற்கரிதாகிய திருவருட்பிரசாத தியாகப்பரிவட்டம் சூட்டப்பெற்று தியாகேச சமானர்களாகிய ஆதி சைவமூர்த்திகளால் ஆசீர்வதிக்கப்பெற்றார்கள்.

நாயன்மார் திவ்ய சரித்திர சிரவணஞ்செய்ய விரும்பும் சிவனடியார்கள் இந்த ஓதுவாமூர்த்திகளால் மிக மகிழ்வார்களென்பது நிச்சயம். சுபம்.

சாமிஐயாதேசிகர்.

தர்மி லோபி சம்வாதம்.

[முன் தொடர்ச்சி]

1. "காதல் கவறுடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல்மறுத்தலிவைகண்டாய்—போதில்
சினையாமைவைகுந் திருநாடா செம்மை
வினையாமைபூண்டார்நெறி."

அதாவது, தாமரைமுதலியபூவில் கருவுற்ற ஆமைகள் வசிக்கும் சிறந்த நாட்டையுடையவனே! (பெண்களின்மேல்) மோகம், சூதாடுதல், மதுபானஞ், செய்தல், பொய்சொல்லுதல், (பிறர்) கொடுப்பதைத்தடுத்தல், ஆகிய இவ்வகைக்காரியங்கள் தருமத்தைச்சிந்தியாமையை அடைந்தவரது ஒழுக்கமாம். இதனைக்காண்பாயாக.

2. "அறத்தைவேர்கல்லும் அருநரகில்சேர்க்கும்
திறத்தையேகொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோதஞ்செய்யும் பொய்ச்சூதைமிக்கோர்கள்
தீண்டுவரோஎன்றார்தெரிந்து."

அதாவது, (சூதாவது) தருமத்தைவேருடன் பெயர்க்கும், அருமையான நரகத்தில் சேரச்செய்யும், வலிமையையே பிரதானமாகக்கொண்டு இரக்கத்தைநாசஞ்செய்யும்,கோபத்தையேகொண்டு பகையைஉண்டாக்கும்,(இப்படிப்பட்ட) பொய்நிறைந்த சூதைமேலானவர் அறிந்து தொடுவார்களோ (ஒருக்காலும்தொடவேமாட்டார்கள்) என்று சொன்னார்கள்(மந்திரிகள்)

2. "உருவழிக்கும்உண்மை உயர்வழிக்கும்வண்மைத்
திருவழிக்கும்மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோடன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோதக்கோர் புரிந்து."

அதாவது, ரூபத்தைக்கெடுக்கும், சத்தியத்தின் மேன்மையைக்கெடுக்கும், ஈகைச்செல்வத்தைக்கெடுக்கும், கௌரவத்தைக்கெடுக்கும், சினேகிக்கும் ஒருவருடனே பிரியத்தைக்கெடுக்கும், (சூதால்வருங்கேடு) ஒன்றேயன்று (இப்படிப்பட்ட பலவகைக்கேடுகளுண்டாகும், ஆதலால்)யோக்கியர் சூதைவிரும்பி ஆடுவார்களோ (ஆடவேமாட்டார்கள்)

4. "ஆயம்பிடித்தாரும் அல்லற்பொதுமகளிர்
நேயம்பிடித்தாரும் நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்லர் என்றுரைப்பதன்றே
வடித்தாரின் நூலோர் வழக்கு."

அதாவது, பாச்சிகையைக் கொண்டவர்களும துன்பந்தரும் வேசிகளுடைய சினேகத்தைக்கொண்டவர்களும் மனதில் வஞ்சனையைக் கொண்டவர்களைக்காட்டிலும் வேறாகமாட்டார்கள் என்று நன்மையையே கைக்கொண்ட முனிவர்களின் இனிமையான சாஸ்திரங்களைக் கற்றவர்களது விவகாரம் சொல்லுகிறதல்லவா ? எனச்சூதாடத்துணிந்த நளச்சக்கரவர்த்திக்கு மந்திரிகள் உரைத்தவற்றைக் கேளாமல் சூதாடியதால் அவர் தம்மிராச்சியத்தையிழந்து பட்டபாடு கேட்டிருக்கின்றீரோ இல்லையோ? "சூதும்வாதும் வேதனை செய்யும்" என்று ஔவையார் (கொன்றைவேந்தன்) என்னும் நூலில் கூறியிருக்கின்றனர். அதையும் கேட்டிலீர்போலும். சூதின் தன்மைதான் கூறினனே. இனி வேசியருறவின்தன்மையும் சொல்லுகிறேன் கேளும். அவர்களின் உறவு சிலாக்கியமென எண்ணாதிருப்பீராக. அவர்கள் கபடத்தை வாயால் சொல்லவொண்ணாது. புகழேந்திப்புலவர் தாமியற்றிய நளவெண்பாவில் இருளைச் சிறப்பித்தவிடத்து வேசியர் இதயத்தை உபமானமாக்கிக் கூறினர். அதாவது, "அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றாய்க், கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளம், புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள், இதயமே போன்ற திரா", என்பது, அதாவது, இராத்திரியானது, வாரி அள்ளிக்கொள்ளும்படியாகி முழுதும் சேர்ந்து ஒன்றாகக்கூடி நெருப்பினொளியினாலும் பிரிக்கக்கூடாத நிறைந்த இருளுள்ளதாய் (அனைவோருடைய) மனம் நன்றாய்ப்பதியும்படி காட்டிவைத்த வேசிகளுடைய மனதை ஒத்திருந்தது, என்பதாம். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரும் தாமியற்றிய இராமாயணத்தில் பந்துகளைச் சிறப்பித்தவிடத்து வேசியருள்ளத்தையும் பளிங்கையும் உபமானமாகக் கூறினர். அதாவது, "மெய்வருபோக மொக்கவுடனுண்டு விலையுங் கொள்ளும், பையர வல்குலார்த முள்ளமும் பளிங்கும்போல, மையரி நெடுங்க ணேக்கம் படுதலுங் கருகிவந்து, கைபுகிற் சிவந்துகாட்டுங் கந்துகம் பலவுங்கண்டார்," அதாவது, வேசிகள் தங்களிடம் சுகமனுபவிக்கக் கருதிவரும் நாயகர்களிடம் சமமான இன்பத்தை அனுபவித்ததை யோசி

யாமல் அவ்வின்பத்திற்காக விலையும் பெற்றுக்கொண்டு நாயகர் ஒருவரா மான லாபச்சயமும் ஒருவித நஷ்டத்தையும் அடைந்ததைப்போலாகாமல் தான் இருவித லாபத்தையும் அடைந்த நன்றியை நினையாது. அந்நாயகரிடம் "உடலிரண்டும் உயிரொன்றுமாக நமக்கேற்பட்டிருக்கிறது, உம்மைப் பிரிந்தால் என் உயிர் உடனே நீங்கிவிடும்" என்று வெளிக்குக் கபடமாகப் பேசுவார்கள், உள்ளத்திலோ நாயகரது சொத்து முழுவதும பிடுங்கிக் கொள்ளும் வகைதேட நினைப்பார்கள். ஆகையால் வேசியர் உள்ளம் கபடமேயொழிய உண்மையன்று. கண்ணாடியோ, எவ்வெப்பொருளைச் சார்ந்தாலும் அவ்வப்பொருளையுட்கொள்வதன்றி முன்கொண்டபொருளை முற்றும் விலக்கும். இவ்விரண்டும் ஒப்ப, உத்தமஜாதிப் பெண்கள் பந்துவீசி விளையாடிக் கொண்டிருக்கையில் நீலோத்பலத்துக்குச்சமமான நேத்திரப் பார்வைபடும்பொழுது கருமையாகவும், செந்தாமரைபோன்ற கையில் பிடிக்கும்பொழுது சிவப்பாகவும் அப்பந்துகள் காட்டியதை இராமரும் இளைய பெருமாளும் கண்டன ரென்பதாம். இச்செய்யுளுக்குக் கல்வி யாராய்ச்சியில் மிக்கோர் இன்னும் விரித்துப் பொருள் கூறுவர் என்று தெளிவீராக. அன்றியும், சிங்காரரச மஞ்சரியிலும் "பணங்கவர்ந்து சுகந்தருந்தபடி பலர்க்குங்காட்டி முறைபற்றுநீதி, தணந்திருந்த பொது மடந்தைதானே சாமானியை யாஞ்சாற்றுங்காலே" அதாவது, (நாயகரிடம்) பணத்தைப்பிடுங்கிக் கொண்டு அப்பணத்திற்குத் தக்கவாறு சுகத்தைக்காட்டி முறையும் பற்றும் நீதியும் ஒழிந்திருப்பவளே பொது மடந்தை யென்னும் சாமான்ய நாயகியாம். நாயகிகளில், ஸ்வீயா, பரகீயா, சாமான்யா, என மூன்று பிரிவுகளுண்டு. விதிப்படி கல்யாணம் செய்துகொண்ட நாயகனை வஞ்சியாது கீழ்ப்படிந்து தெய்வமாகப் பாவித்து நடக்கும் பதிவிரதையே ஸ்வீய நாயகியாம். விதிப்படி கல்யாணம் செய்துகொண்ட நாயகனை வஞ்சித்துப் பரபுருஷரிடம் சோரத்தனமாக நேசிப்பவளே பரகீயா நாயகியாம். மேற்கண்டவாறு நடப்பவளே சாமான்ய நாயகியாம். இவ்விவரங்களெல்லாம் சிங்காரரசமஞ்சரியில் கூறப்பட்டிருக்கின்றன. அந்நாயகிகளின் பல பேதங்களையெடுத்து விரிக்கின் பெருகும். ஆகையால் இம்மட்டும் நிறுத்தி மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுகிறேன் ளும் அவ்வேசியர் உம்மிடத்துப் பொருளைப் பறிக்கும் வரை சரீரந்தான் நம்மிருவர்க்கும் வேறு, உயிரொன்றே யென்று அபிநயிப்பர்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,

திருச்செங்கோடு } சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்.

பத்திரிகாபிமானிகட்கு விஞ்ஞாபனம்.

21—5——04ல் வெளிவந்த சர்வஜன மித்திரன் 15-வது இலக்கப்பத்திரிகையில் "ஆலயங்கள்" என்று மகுடமிட்டு "சென்னை நகர் சிங்கக்குட்டி" என்பவர் வரைந்த வற்றைக்கண்டனம்.

சர்வஜனமித்திரன் 6-வது இலக்கத்தில் கனம் ஆவுடையப்பமுதலியாரவர்கள் "ஆலயங்கள்" என்ற தலைப்பின்கீழ்ப் பொறித்துள்ளவற்றில் ஆலயம் அமைத்தற்குக் காரணம் "மனத்தடிப்பும் பணக்கொழுப்பும்" எனவும் கோயிலில்லா வூரில் குடி இருக்கவேண்டா மென்பார் "குளறிவழிபவர்கள்" எனவும் இன்னும் பல நிந்தைமொழிகளும் காணப்பட்டனவாதலின் இவ்வாறு கூறுதல் பிறதூஷணமாகாதா என்று 8-வது இலக்கப் பத்திரிகையில் பத்திராதிபரவர்கட்கு விஞ்ஞாபனம் என்ற தலைப்பின்கீழ் பத்திராதிபரவர்களை வினவினேம். ஆலயத்தைப் பற்றி இவ்வாறுரைத்தல் இந்து மதாபிமானிகளாயுள்ளா ரெவரும் பார்த்தால் மனம் கலங்கத்தக்கது என்றும் எழுதி உள்ளேம். அதே பத்திரிகையில் இவைகட்கு உத்தரம் புகலவந்த பத்திராதிபரவர்கள் "மததூஷணை அன்று" எனவும் மிஸ்டர் ஆவுடையப்ப முதலியார் புறமதஸ்தரல்லரெனவும்' கூறினார்கள். இதன்மேல் 14-வது இலக்கப் பத்திரிகையில் யாம் எழுதிய ஆலயம் அமைத்தல் அடாச்செய்கையாமா என்னும் தலைப்பின் கீழ் "பிறதூஷண மாகாதா" என்று யாம் வினவியதற்கு "மததூஷணை அன்று' என்று கூறிச்சென்ற தென்னையோ என உரைத்து "இந்துக்களாவார் யாவரும் பார்த்தால் மனங்கலங்கத்தக்கது" என யாம் கூறியதனால் மததூஷணையெனக்கொண்டுள்ளேமென்று கருதி இவ்வாறு விடையளித்தார்கள்போலும். யாம் கொண்டகருத்து இது ....என்று விளக்கினேம்.

இவ்வாறாக "சிங்கக்குட்டி" என ஒருவர்போந்து எம்மைச் சண்டைக்கிழுக்கத்தொடங்கினர். இவர் தமது இயற்பெயரையொளித்து வந்தது எதனாலேயோ? சாஸ்திரசம்பந்தமான இத்தகைய வியவகாரங்களில் தலையிடுகின்றவர்கள் தம்மையின்னவரென்று பலரும் நன்குதெரிந்துகொள்ளுமாறு சிறிதும் அச்சமின்றித் தமது பெயர்முதலியவற்றை வெளியிட்டுவருதலே யழகாகும். அங்ஙனமன்றித் தம்பெயர்முதலியவற்றை வெளியிடாமல் வேற்றுப்பெயர்புனைந்து வருதல் சிறப்பின்றே. இனியேனும் ஒளியாது வெளியாவர் எனக்கருதியே இங்கு இவ்வாறு கூறினேமென்க.

"இந்துமதாபிமானிகளாயுள்ளாரெவரும் பார்த்தால் மனங் கலங்கத்தக்கது" என்று யாம் முதலில் வரைந்த வாக்கியத்துள் குறிப்பு வினவொன்று இருப்பதாகவும், அவ்வினா மததூஷணையாகாதா? என்பதாகவும், "பிறதூஷணமாகாதா" என்று யாம் கூறியது வெளிப்படை வினவாகவும் கொண்டு இவற்றிற்கு முறையே விடையிறுக்கவந்த பத்திராதிபரவர்கள் குறிப்பு வினவிற்கு வெளிப்படை விடையும், வெளிப்படை வினவிற்குக் குறிப்பு விடையும் தந்திருக்கின்றனரெனவும், "இந்து மதாபியானிகளாயுள்ளாரெவரும்" என்று முதலில் எழுதிவிட்டு இப்போது "இந்துக்களாவார் யாவரும்" என்று சமயத்துக் கேற்ப யாம் திரித்துக் கூறல் எமக்கழகில்லை யெனவும் சிங்கக்குட்டியார் கூறினர். பிறதூஷணமென்பதற்குப் பொருள் "புறமதஸ்தரால் அவ்விந்து மதத்தைத் தவேஷித்து எழுதப்படுவது" எனவும், விரித்தனர்.

ஆலயம் அமைப்பவரை மனத்தடிப்பும் பணக்கொழுப்பும் உடையாரெனவும், கோயிலைச் சிறப்பித்துக் கூறுவோரைக் குளறி வழிபவர் எனவும் கூறியது "பிறதூஷணமாகாதா" என்றேம். இங்கு பிறதூஷணம் என்பது அந்நியநிந்தை யென்னும் பொருளை அங்கை நெல்லிபோற் காட்டியதாகும். இன்னவரை யிவ்வாறு கூறுதல் இதுவாகாதா என்று நன்கு பரிஷ்கரித்திருப்பதை யுணராமல் பிறதூஷணை யென்றற்குப் புறமதஸ்தர் கூறும் நிந்தையெனப் பொருள்கூறுவது உலகம் ஒப்பத்தக்கதா? இங்ஙனம் சமயத்துக்கேற்றவாறு புரட்டுவது நிறைமொழி மாந்தர் அவைக்களத்தே நிற்குமா?

"இந்து மதாபிமானிகளாயுள்ளரெவரும் பார்த்தால் மனங்கலங்கத்தக்கது" என்ற வாக்கியத்துள் சிங்கக்குட்டி கூறியாங்கு "மததூஷணையாகாதா" என்ற பொருள் பெறப்படுமோ? இந்த வாக்கியத்துள் இவர் கூறிய பொருள் பெறப்படுமென்று கல்வி வல்லோர் எவரேனும் ஒப்புவரா?

"தான் திருடி அயல் வீடு நம்பாள்" என்றாற் போன்று, சமயத்துக்குத் தக்கவாறு ஒன்றை மற்றொன்றாகத் திரித்துக் கூறியே மாற்றுதல் வல்ல சிங்கக்குட்டியார் தம்மிடத்துள்ள திரித்துக் கூறுதலாகிய தோஷத்தை எம்மீது சூட்டவந்தது விந்தை! விந்தை!!

என்னை? யாம் முதலில் இந்து மதாபிமானிகளாயுள்ளாரெவரும் எனவும், பின்னர் "இந்துக்களாவார் யாவரும்" எனவும் கூறியது "திரித்துரைத்தல்" என்று சிங்கக்குட்டியார் வரைந்தனர்.

இந்து மதாபிமானிகள், எனினும் இந்துக்கள் எனினும் பொருளொன்றே. ஓர் விஷயத்தைப்பற்றி விரித்து எழுதத் தொடங்குமிடத்து முதலில் விரிவாக எழுதியதொன்றைப் பின்னர் எடுத்துக்கூறவேண்டி வரின் பொருள் பேதப்படாமல் சுருக்கிக் கூறுதல் நூலோர் வழக்கு. இந்து மதாபிமானிகளென முதற்கண் விரித்துரைத்தற்கும் இந்துக்கள் என்று பின்னர்ச் சுருக்கிக் கூறியதற்கும் காரணங்கூறுதும்.

புத்திரர்கட்குரிய கடமைகளைக் கொள்ளாதார் புத்திரராகார். உறவினர்க்குரிய கடமைகளைக் கொள்ளாதார் உறவினராகார். மனிதர்கட்குரிய முக்கிய அறிவு கொள்ளாதார் மனிதராகார். என்பது முன்னோர் கொள்கை, "பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர். உற்றோரெல்லாம் உறவினரல்லர்" "பயனில் சொற்பாராட்டுவானை மகனெனல் மக்கட்பதடியெனல்" என்பவற்றால் இப்பெற்றி நன்கு துணியப்படும். ஆதலின் இந்து மதத்தில் பிறந்து இந்து மதத்தில் வளர்ந்துவரும் சிலர் தெய்வமில்லையென்று கூறும் நாஸ்திகக் கொள்கையை யுடையவராகி எதீஸ்டு என்று சொல்லிக்கொண்டு திரிகின்றனர். இந்த நாஸ்திக மூர்த்திகளே சமயம் வந்துழி நாம் இந்து என்கின்றனர். இவ்வாறு குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பு போன்றுள்ளாரை விலக்கித்தள்ளுதற்கே முதலில் இந்து மதாபிமானிகள் என்றேம். இந்து மதத்தில் அபிமானமில்லாமல் இந்து என்று சொல்லளவில் நிற்பவர் இந்து அல்லர். என்பது விளக்கப்பட்டது. ஆகவே பின்னர் யாம் இந்துக்கள் யாவரும் என்றதற்கு இந்து மதாபிமானிகள் யாவரும் என்பதுவே பொருளென்றல் பனைமரத்தாணிபோற் பெறப்பட்டது. இவற்றை யுய்த்துணர்ந்தறியும் ஆற்றலில்லாத சிங்கக்குட்டியார் எம்மீது தோஷாரோபணம் செய்யப்போந்தமை பெரிதும் வியப்பேயாம்.

ஆலயம் என்றற்கு ஆ+லயம் எனப்பிரித்து யாம் கூறிய பொருள் பொருத்தமுடைத் தன்றெனக் கூறுவான் றொடங்கிய சிங்கக்குட்டியார் தமது சாமர்த்தியம் வெளிப்படுமாறு பரிகசிப்புச்செய்து பரிதபிப்பாராயினர். யாம் கூறியதொரு பொருளை மறுக்க வந்தனராயின் முறைப்படி மறுத்துத் தாங்கொண்ட பொருளை விரிக்கவேண்டும். அங்ஙனம் விரித்திலர். இவ்வாறு செல்லுதல் வியவகாரப் பொருத்தமன்றாம். ஆலயம் என்பது வடசொற்றொடர்மொழி. ஆ, உபசர்க்கம். லயம், லயித்திடுதல். இந்த உபசர்க்கத்துக்குப்பலபொருளுண்டு. இங்கு ஆ என்றற்கு எல்லாம் என்கிற முற்றுப்பொருளாம். ஆகவே யெல்லாம் லயித்தற்குரியதானம் என்பது பொருள். பாசமோ தனியே லயித்தலில்லை. பதியோ லயிக்கப்

படுபொருள். எஞ்சிநின்ற பசுக்கள் அளவிலவாதலின் அவைகளே யெ யித்தற்குரியனவாம். இதை முன்னரே விரித்துளே மாதலின் இவ்வளவில் நிறுத்துகின்றேம்.

ஆ... முதலியார் கூறியது பிரதிட்டா ஆலயத்தையே யெனவும், அத ற்கு மட்டில் விடைகூற வேண்டுமென்றி அண்டாலயம், பிண்டாலயம் முத லியவற்றைப் பற்றி "யாம் கூறவந்தது மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம்" என்னும் இதையடுத்துச் சிங்கக்குட்டி யென்ற தமது பெயர்க் கேற்பத் தடபுடலாக, வேண்டாதன பலகூறிக் கர்ச்சித்தனர்.

பிரதிட்டா ஆலயத்தைப்பற்றிப்பேச இடம் வந்தபோது "ஆலயம்" என்பது இத்தன்மையது, இத்தனை வகையது, இன்ன ஆலயம் இன்னவர்க் குரியது எனத் தொடங்கி விரித்து விளக்கி யறிவுறுத்தலே தக்கதாம். மற்றொன்று விரித்தல் இன்னதென்று அறியாது சிங்கக்குட்டியார் கூறி னர். ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லுங்கால் அதனோடொருவாற்றா னுந் தொடர்பில்லாத வேறொன்றைப் பற்றிப்பேசுதலே மற்றொன்று விரித் தலாவது. ஆலயத்தைப்பற்றிக் கூறுமிடத்து அதன் வகையை விளக்கிச் செல்லுதல் இன்றியமையாததென்றே கொள்ளப்படும்.

"சொல்மாத்திரையிலேயேயன்றிப் பொருள்மாத்திரையிலில்லாமலும் உபதேசத்திலேயேயன்றி யனுஷ்டானத்திலில்லாமலும் ஏட்டுச் சுரைக்கா யாயிருக்கிற பலவற்றை யெடுத்து விரிக்கும் மிஸ்டர் முத்தையபிள்ளை யெழுதியவற்றிற் காணப்படும் யுக்தியனுபவங்கட்கொவ்வாத ஒவ்வொன் றையும் இங்கெடுத்துக்கண்டிக்க எமக்கிது நேரமுமன்று..." எனக்கூறிச் சென்றார் சிங்கக்குட்டியார். யாம் எழுதியவற்றில் இவர் கூறி யாங்கு கண்டிக்கத்தக்கவை இன்னின்னவை யென நன்கு விளக்காது இவ் வாறு பொதுப்படப் பிழையிருப்பதாகக் காட்டி மயக்குவது அறிவு டையோர் கடனன்றாம். இத்தகைய போலி மயக்கத்தால் யாம் ஒரு போதும் அஞ்சுவமல்லேம். வெற்றுரையாடி வீண்போது போக்கலிற் பழியன்றிப் புகழின்றே.

இந்த சந்தேகி வினாக்கட்கு யாம் விடைதரவேண்டுமெனவும் கூறி னர். யாம் விடைதருவதும் தராது தள்ளுவதும் எமதெண்ணப்படி நிக ழத்தகுமன்றி இச்சிங்கக்குட்டியார்க்காக யாம் விடையிறுக்கும் கடப்பா டுற்றிலம் என்பதை யறிவாராக.

இச்சிங்கக்குட்டியார் தாம் எடுத்த வியவகாரத்தில் எத்துணை நீள நினைந்து எழுதினாலும் அவற்றிற்கு விடைகொடுக்கப் பிற்படேம். இவர்

கூறும் போலியுரையாகிய நிந்தை மொழிகட்கு ஒருபோதும் விடைதரு வான்றொடங்கேம். அத்தகைய மொழிகளை அணுத்துணையும் பொருட் படுத்தேம். இவர் வரைந்தவற்றுள் "பிள்ளையார் குட்டுக் குட்டும்போதே கண்ணிற் குட்டிக்கொண்டாற் போல" என்பன வாதியவசைப் போலி மொழிகள் மற்றவரால் மதித்துக் கொள்ளற்பாலவல்ல. "நெய்யுண் பூங்குழல் மடவரால் நின்னொடு வாது-செய்யும் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து வையும் பூசலுக் கெதிரலேன்..." என்பதே ஆன்றோர் கொள்கையும். ஆதலின் யாவராயினும் எடுத்த வியவகாரத்தைத் தடை விடைகளாற் செவ்விது விளக்குதலே மாண்பாம். இடையிடையே பரிக சித்தலாதிய கூறுதல் பயனில செய்கையேயாம். இம்முறையைக் கடந்து வெற்றுரையாடுவோர் வீண் வாதத்துக்கு விடை கிடைக்கமாட்டாது என்பதையறிந்து கொள்வாராக.

பொ. மு. முத்தையபிள்ளை,
உப அக்கிராசனாதிபதி சைவசித்தாந்த சபை,
மேலூர், ஆத்துக்குடி.

* நற்பவளம்.

மனிதன் தனது மகத்தான புத்தி வல்லமையினால் பிரகிருதியை அநே கவிதத்தில் ஜெயித்தவனா யிருக்கின்றான். ஸ்தாவர ஜங்கமப் பொருள்கள் யாவும் அவனது மனோரதத்திற்கும் அத்தியாவசியகத்திற்கும் ஏற்றவண் ணம் உபயோகப்படுமாறு ஆக்கப்பட்டிருக்கின்றன. அதி உன்னதமா யுள்ள பனி நிரம்பிய பர்வதங்களிலும், ஆரவாரித்துப்பாயும் அருவிகளினும், பார்ப்பதற்கமைதியும் அச்சமும் விளைவிக்கும் கம்பீரத் தோற்றத்தோடு கூடிய மாநதிகளினும், விரிபனி நிரம்பிய துருவச்சக்கரத்தினும் கூட தானெடுத்த காரியத்தை முடிக்கும் மனவுறுதியும் காரியசித்தியும் பெற்ற மனிதனது காலடிபட்டே இருக்கிறது. தனது வாசஸ்தானத்திற்காவ னவும் உண்டி, உடை அணிகலம் முதலியவும் தெரிந்தெடுக்கும் காரணத் தினாலேயே இவ்வுலக சிருஷ்டியில் யாவற்றினும் மேம்பட்டு இப்பிரபஞ் சத்திற்கே ஓர் முடிசூடா மன்னனாகின்றான்.

* இது மதுரை சுதேச கல்லூரி உபாத்தியாயர் மிஸ்டர் N. S. ஜம்புநாதை யர் B. A. L. T. செய்த பிரசங்க விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது.

இவன் முதல் முதல் தேடிக்கொள்வது தான் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்களே. இதன் பின்னர் இவன் மனமானது அலங்காராதிகளிற் செல்லுகிற அளவு உண்மையாய் உபயோகப்படக் கூடிய விஷயங்களிற் சாதாரணமாகச் செல்வதில்லை. எருத்துவாற் குருவி (Birds of paradaise) மயில் முதலிய சிங்காரத்தோகை வாய்ந்த பறவைகளும் நீண்ட பிடரி மயிரும் கம்பீரத்தோற்றமும் உள்ள சிங்கமாதி மிருகங்களும் தத்தம் இயற்கையோடு விளங்குகின்றன. ஆனால் மனிதனோ இயற்கையழகுடன் செயற்கையழகும் விரும்புகின்றான். ஆதலால் சராசரப் பொருள்களினின்றும் அலங்கார வஸ்துக்கள் எவ்வளவு பெறக்கூடுமோ அவ்வளவு லோகங்களாகவும் அவற்றினும் விலையேறப்பெற்ற ரத்நங்களாகவும் கொள்ளுகின்றான். நவரத்தினங்களில் ஒன்றாக நமது முன்னோரால் மதிக்கப்பட்டுள்ள ஓர் வஸ்துவானது பார்வைக்குக் கல் போலவும் எளிதில் ஒடித்து நறுக்கி மெதுவிடக் கூடியதாயும் செந்நிறத்ததாயும் இருக்கிறதல்லவா? இவ்வரிய வியாபாரச்சரக்கு தான் யாது? இதுதான் மாலையாகக் கோக்கப்பட்டு நமது தாய்மார்களாலும் மனைவி மக்களாலும் சகோதரிகளாலும் தம் கழுத்திலணியப்பெற்ற நற்பவளம். ஏழை, பணக்காரி, கிழவி, குமரி என்ற வித்தியாசமேயின்றி யாவராலும் ஆவலுடன் அணியப்படும் இவ்வரிய வஸ்துவைப்பற்றித்தான் நாம் இப்பொழுது சிறிது சொல்லப்போகிறோம்.

பவளம் என்பது யாது? இது நவரத்னங்களில் ஒன்றாயினும் வச்சிரம், பதுமராகம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம் என்ற இவ்வேழினையும் போல் கனிகளில் இருந்து எடுக்கப்படும் கல்லாகாது. முத்துச்சிப்பி யென்று சொல்லப்படும் ஓர் (ஜலசர) த்தினின்றும் முத்து உண்டாவது போல் அரிய விலையுயர்ந்த பவளமும் ஒரு வகைப் பூச்சியினின்றே உண்டாகிறது. இது "பவளக்கொடிமாலை" படித்து அதிற் சொல்லிய வற்றுள் நம்பிக்கை கொண்டிருக்கும் பாமர ஜனங்களுக்குப் பெரிதும் ஆச்சரியம் விளைவிக்கக்கூடியதே. ஏனெனில், அதில், அல்லியரசாணியின் குமாரன் புலந்திரனைத் திருப்திப்படுத்தப் பவழத்தேர்ஒன்றிற்காக வேண்டியபவழம் சம்பாதிக்கக் கிருஷ்ணார்ச்சுனர் இருவரும் "வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம், சிங்கமுறங்குவனம், சிறுபுலிகள்தூங்கும்வனம் ஆளியுறங்குவனம் அன்னைப்புள்தூங்குவனம், கருநாரைக்கிரைதேடும் கதலிவனங்கடந்து பவளம் விளைகின்ற பாங்கானகாடதனைப் பார்த்தார்இருவருமப் பவளக்காடுள் நுழைந்தார் கொம்பும் கயிறுகளும் கலந்தகொழுந்துகளும் ஓடிப்படர்கிறதும் உயர்ந்த கொம்பாகிறதும் தாவிப்படர்கிறதும் சன்னல் பின்னலாகிறதும்

பவழம் மின்னுவதும் பார்த்துத்திகைத்துநின்றார்" என்றும், அப்பொழுது அக்காட்டிலுள்ள

"ஆனைத் தலையரியும் ஆங்காரக் கதண்டுகளும்
சிங்கத் தலைபிளக்கும் செங்குளவி வண்டினமும்
குதிரைத் தலையறுக்கும் குளவிகளும் தாம்சேர்ந்து
மார்பளவாய் முகமளவாய் வெளிப்பட் டோடி" வந்து

அர்ச்சுனனைக் கொல்லப் பார்த்தனவென்றும் ஆனால், அவை அவனது மச்சரேகையைக் கண்டஞ்சி கொல்லாது விட்டனவென்றும், இங்ஙனம் இவர்கள் சாகாதிருத்தலைக் கண்ணுற்ற அவ்வனத்து வேடுவர் சிலர் ஆச்சரியமெய்தி அன்னோரை நோக்கி "கதண்டுகள் கொட்டாதோ காவலரே உங்களையும், பவளம்வெட்ட வந்தவரைப் பரலோகம் அனுப்பிவிடும், கதண்டுகொட்டிச் செத்தவர்கள் கணக்கு 'மிதங்களில்லை" என்று கூறியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை மெய்யென நம்புவோர்க்குப் பவழம் யென்பது காட்டில் உண்டாகும் ஓர் வஸ்துவென்றும் அதனை வெட்டிக்கொண்டு வரப்போனால் யானை குதிரை சிங்கம் முதலிய வலிமிகுந்த பிராணிகளையும் கொட்டிக்கொல்லும் செங்குளவி கருங்குளவி முதலியவற்றால் சாவு நேரிடக்கூடுமென்றும், ஆனால் மனிதர் இப்பொழுது யாதோ ஓர் சூழ்ச்சியால் அக்குளவிகட்குத் தப்பிப் பவளம் வெட்டிக்கொண்டு வருகின்றனரென்றும் தானே மனதில்படும். உண்மை யாதெனில், நாம் வசிக்கும் சமுத்திரத்தின் அலைகள் தம்மீது தாக்காதபடி தற்காத்துக் கொள்ளுமாறு பலகோடி சிறு பூச்சிகள் அவ்வாழ்கடலில் உண்டாக்கும் ஓர்வகைக் கடினபதார்த்தமே பவளம். இவ்விலையேறப்பெற்ற அரிய வஸ்துவை உண்டாக்கும் பிராணியைப் பற்றி சிறிது கூறுவாம்.

பவளப்பூச்சி.

இது பார்ப்பவர்கண்ணுக்கு ஒருசெடிபோலத்தோன்றும். அதனிடம் வேர்கள், தண்டு, அத்தண்டினின்றும் பிரிந்த பல கிளைகள் அக்கிளைகளில் உள்ள அரும்புகள், மலர்கள், பூவிதழ்கள் முதலிய இருப்பன போற்றோன்றும், ஆயினும் சிறிது நுட்பமாய் ஆராய்ந்தோர்க்கு கருங்காலிபோல் உறுதியாய் ஆழ்ந்த சமுத்திரத்தில் ஊன்றிக்கிடக்கும் இது ஓர் பிராணியே என்பது நன்கு விளங்கும். இஃதோர் பிராணியாயிருப்பின் இடம் பெயர்ந்து செல்லவேண்டுமே. இதோ இடம் பெயர்ந்து செல்லாது ஆழப்பதிந்து நின்ற நிலையிலேயே நிற்கிறதே. பின்னை இதனைப் பிராணியென்று எவ்வாறு கூறலாம்?" எனப் பலருக்கு ஐயமுண்டாகலாம். நிலைபெயர்ந்து செல்வன வெல்லாம் பிராணியும் செல்லாதன செடிகளும், ஆகா.

அங்ஙனம் நிதானித்து விடுவது பிசகு. ஏனெனில், செடிகளா யிருந்தும் Diatoms போல்வன நிலைபெயர்ந்தே செல்லுகின்றன. பிராணிகளா யிருந்தும் நமது பவளம் போல்வனசில நிலைபெயர்ந்தே செல்லாது ஒரேஇடத்தில் ஊன்றிப் பதிந்து கிடக்கின்றன. சாதாரணமாக நாம் காணும் யாதானும் ஒன்று பிராணியா அல்லது செடியா என்று அது உட்கொள்ளும் உணவை நோக்கியே தீர்மானிக்கவேண்டும். இதுவும் ஓர் பொது விதியேயாகும். ஏனெனில் இவ்விதிக்கு விலக்காகப் பூச்சியைத் தின்றும் வளரும் செடிகளும் உள. சிறக இப்பூச்சியின் நிறம் நாம் வெகுவாய் விலைமதிக்கும் பவளத்தின் நிறமே. முன் "அரும்பு" "மலர்" என்று நாம் குறிப்பிட்டுள்ளவைதாம் ஓர் குழுவில் ஒருங்கு சேர்ந்து வசிக்கும் பூச்சித் திரள்கள். இவை அநேகமாய் நிறமில்லாதன. "இதழ்கள்" என்று நாம் குறிப்பிட்டவை தென்னை மட்டையில் ஓலைகள் உள்ளனபோல் ஜோடி ஜோடியாய் சரீரத்தினின்றும் வெளிக்கிளம்பிய மயிர்கள்கொண்ட அங்குரங்கள் (processes) வாய்க்கப்பெற்றன. சிறக இப்பூச்சிகள்யாவும் நேராகவேனும் சுற்றுவழியாகவேனும் ஓர் தாய்ப் பூச்சயினின்றும் தோன்றியவை. அரும்புபோல்வன யாவும் சுருங்கி ஒடுங்கிய பூச்சிகளே. இவை யிங்ஙனம் சுருங்கக் காரணம் யாது. ஏதோ ஒன்றன் தொந்தரவு பொறாமலே. அதற்கு நம்மிலும் கூச்சம் அதிகம். அதன் சரீரவாசி அப்படித்தானிருக்கிறது சிறிது நேரத்திற்கெல்லாம் அரும்புபோற் றோன்றிய யாவும் எவ்வெட்டிதழ்களுடனும் விரிந்து முழு அழகுடனும் ஜொலிக்கக் காணலாம். இவ் விதழ்களெட்டும் அப்பூச்சியின் கரங்களே. இவற்றி னுதவியாற்றான் அப்பூச்சி தனக்குக் கிடைக்கும் ஆகாரத்தைப்பற்றி யீர்த்து அதன் மையத்திலிருக்கும் ஓர் துவாரத்திற்குட் செலுத்தும். இம்மையத் துவாரமே யதன் வாய். இப்பூச்சியின் கரங்களிடத்து அதற்குவேண்டிய அடுபடைகளும் தடுபடைகளும் அமைக்கப்பட்டுள. இப்படைகளை அது வெகு சாதுரியத்துடனும் உபயோகிக்கும். இவற்றுள் ஒன்றாகிய " நூல் அறை " யைப் பற்றி சில கூறுவம்.

இவ்வறைகள் அப்பூச்சியின் புறத்தோலில் உள. அறை ஒவ்வொன்றிலும் நச்சு நூற் சுருள் ஒன்றுளது. யாதேனும் தம்மேற் பட்டமாத்திரத்தில் கூச்சமடையக் கூடிய உரோமங்கள் இப்பூச்சியின்கண் உள. இவை இன்ன காலத்தில் பூச்சியானது தன் படைகளை உபயோகப்படுத்தவேண்டும் என்றறிவிக்கும். எவ்வாறெனில், இதனை இம்சிக்கவரும் ஜந்துக்கள் உட்கார்ந்த மாத்திரத்திலேயே தொட்டாற் சுருங்கியாகிய உரோமம் சிலிர்க்க ஆரம்பிக்கும். தக்ஷணமே மின்னலினும் அதி தீவிரமாய் நாம் முன்பு கூறிய நூலறையினின்றும் நச்சு நூற்சுருள் கண்ணிபோல் வெளிக்கிளம்பி

...ரங்கிறதும்

தன்னை இம்சிக்கவந்த ஜந்துவின் சரீரத்தில் ஆழத்தைப்பதுமன்றி வேதனை தரக்கூடிய ஓர் வஸ்துவையும் உட்புகுத்திவிடும். உடனே வேதனைதாங்காமல் இதனினும் வலிகுறைந்த பூச்சிகள் மாண்டுபோம். வலிமிகுந்த ஜந்துக்கள் சாகாவிடினும் இனி ஒருகாலும் அண்டாது ஓடிப்போம். இவ்விஷயமானது திமிங்கலம் முதலிய கடற் பிராணிகளை மனிதர் தந்திரமாய் எறி ஈட்டி முதலிய சூழ்ச்சிகளால் கொல்வதை ஞாபகப்படுத்தக் கூடியதாயிருக்கிறது.

உணவும் பழக்கவழக்கங்களும்.

இனி அதன் உணவைப்பற்றியும் பழக்கவழக்கங்களைப் பற்றியும் சில கூறுவம். * இப்பூச்சியின் கரங்கள் எப்பொழுதும் ஆடி அசைந்த வண்ணமாகவே இருக்கின்றன. இவ்வசைவு மையத் துவாரமாகிய அதன் வாயை நோக்கியேதான். இவ்வாய் ஒரு சிறு பிளவு போன்றிருக்கும். அதினின்றும் ஓர் சிறு ஆகாரக்குழாய் ஆரம்பித்து இரைப்பை போய்ச் சேரும். இப்பூச்சி உட்கொள்ளும் உணவு ஆகாரக் குழாய் வழியாய் ஜவ்வு போலும் மெல்லிய தோலினாலாகிய இரைப்பை போய்ச்சேர்ந்து அங்கிருந்து உதரக்குழிபோய்ச் சேருகிறது. ஜீரணிப்பிக்கும் இக்குழியின் மேற்புறம் தோலினாலாகிய பல தடுப்புகளால் பெரிதாக்கப்பட்டிருக்கிறது. குடம் மட்டும எடுபட்ட வண்டிச்சக்கரத்தின் வட்டைக்கால்கள் எவ்விதம் ஒன்றையொன்று தொடாமலிருக்குமோ அவ்விதமே இத் தடுப்புகளும் ஒன்றையொன்று சந்தியாது மையத்தினின்றும் சற்று விலகியே இருக்கின்றன. இவை ஆகாரக்குழாயோடும் மேலே இருக்கும் இரைப்பையோடும் பொருத்தப்பட்டு அவ்வுதரக் குழியின் கீழ்பாகத்தில் ஒன்றோடொன்று சிறிதும் சம்பந்தப்படாமல் தொங்கிக்கொண்டிருக்கின்றன. இக் குழியிற்றான் ஜீரணம் நடந்தேறுகிறது. இக்குழியைச் சுற்றிலும் நிரை நிரையாய்ப் பல சிற்றறைகளுள. இவ்வறைகள் அங்குரங்கள் வாய்ந்தவை. இவ்வங்குரங்களால் ஆகாரத் திவலைகள் கிரகிக்கப்படுகின்றன. (இவை, மூக்கின்றி மணங்கவர்ந்து, காலின்றி நடத்தல் செய்து நோக்கின்றிக்கண்டு நனி நுவல்வதாய நாக்கின்றி அறு சுவையும் அருந்துகின்ற சிற்றுயிர்க்கிருமியாகிய அமீபா (Amœba) அல்லது வெண்குருதியணு (White corpuscle) வைப்பற்றி நினைப்பூட்டாமற் போகா.) இச்சிற்றறைகள் மரணவாயில்களே. ஏனெனில், இவ்வறையினுட்புகும் சிற்றுயிர்க் கிருமியாவும் மடியும், அல்லது ஸ்மரணை யழியும். இவ்வறைக்குள் சிற்றுயிர்கள் வருவதெங்ஙனம்? ஆகாரக் குழாயில் நிரைநிரையாய் அமைக்கப்பட்டுள்ள சிற்றறைகளைச் சார்ந்த பல்லாயிரம் நுண்ணிய மயிர்கள் இடைவிடாது அசைந்துகொண்டே யிருப்பதால் தண்ணீர்

ஜீரணக்குழியிலும் வழிந்தோடும். அங்ஙனம் வழிந்தோடும் தண்ணீரோடு சேர்ந்து இச்சிற்றுயிர்கள் உட்புகும். இப்பூச்சியின் வாய் சரிவர அடைக்கப்படாமல் கோணலாய் இரண்டு தனிவாயில்கள் கொண்டதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. நாம் முற்கூறியுள்ள மயிர்த்திரள்களிற் சில இவ்விருவாயில்களின் ஒன்றன் வழியாய்த் தண்ணீரை உட்புகுத்தும். அப்பொழுது இத்தண்ணீர் ஜீரணக் குழிக்குள் புகும். வேறு சில மயிர்த்திரள்கள் இத்தண்ணீரை மற்றொரு வாயில் வழியாய் வெளிக்கிளப்பும். இங்ஙனம் இரத்தோட்டத்திற்கு உள்ளே போகிற வழியும் வெளியே போகிற வழியும் ஏற்பட்டுள்ளது போல் இந் நீரோட்டத்திற்கும் இரண்டு வாயில்கள் ஏற்பட்டுள்ளன. நமக்குப் பிராணவாயு ஆகாரத் திவலைகள் முதலியவற்றின் சேர்க்கையால் ஜீவாக்கினியை உண்டாக்கி, கழிவு பதார்த்தங்களை விலக்கி அழிந்துபோகுஞ் சிற்றறைகளை மீண்டும் கட்ட உதவுகின்ற இரத்த ஓட்டம் போன்றுள்ளது இதற்கு இந் நீரோட்டம். இப்பூச்சியினிடத்து கழிவு பதார்த்தங்களையும் மலத்தையும் புறம் போக்கப் பிரத்தியேக வழி கிடையாது. இதுவே இவ்வினத்தில் காணப்படும் விசேஷமாம். [இச்சமயத்தில் நாம் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது. அநேகர் வௌவாலானது ஆகாரம் உட்கொள்ளும் வாயிலாகவே மலம் முதலிய புறம்போக்குகிறதென எண்ணியிருக்கின்றனர். "இவன் வாயாலே தின்று வாயாலேயே கக்கும் வௌவால்" என்று அசுத்தமான ஒருவனை மற்றொருவன் இழித்துப் பேசுவதைப் பன்முறை கேட்டிருக்கிறோம். இன்னோர் கொண்டது தப்பபிப்பிராயம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் பிராணி சாஸ்திரங்களிலும் சரீரக சாஸ்திரத்திலும் பெரிதுந் தேர்ச்சி யடைந்தவர்கள் ஆகாரம் உட்செல்லவும் கழிவு பதார்த்தங்கள் வெளிவரவும் வௌவாலிடத்து வெவ்வேறு வழிகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள்.]

[இன்னும் வரும்.]

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்கிராசனாதிபதி,
மாணவர் செந்தமிழ்ச் சங்கம், மதுரை.
&
Asst. Master, A. M. H. School, Madura.

மேனாட்டுக் கலாஞானம்.

[229-ம் பக்கத் தொடர்ச்சி.]

இப்பொழுது மிகவும் சாதாரணமாய் வழங்கும் இரும்புக்கப்பல்களைப் பற்றி நீங்கள் எல்லோரும் கேட்டிருக்கலாம். கனமான இரும்புத் தகடுகளை ஆணிகளால் இறுக்கி இணைத்துச் செய்யப்பட்டு பல்லாயிரம் மணங்கு நிறையுள்ளதான இரும்புக்கப்பல்கள் முழுகிப்போகாமல் எப்படி நீரில் மிதக்கின்றனவென்று நீங்கள் எல்லோரும் அதிசயித்திருக்கலாம். ஆனால் இக்கப்பல்கள் எல்லாம் நாம் முன்பார்த்த தகரப் பெட்டிகளில் மிகப் பெருத்ததரமானவைகளே யன்றிவேறல்ல. ஒவ்வொரு கப்பலும் அதன் காத்திரமுள்ள நீரின் நிறையைப் பார்க்கிலும் குறைந்த நிறையுள்ளதானதால் அவைகள் மிதக்கின்றன.

தன்னைப் பார்க்கிலும் இலகுவான பொருள்களை மேல்தூக்கித் தாங்கிக்கொள்ளும் குணமும், அணுக்கள் அல்லது திவலைகள் சுலபமாய் நெகிழ்ந்து நகரக்கூடிய குணமும் நீர் பொருந்தி யிருப்பதினால் தான் சமுத்திரங்களும் நதிகளும் வாய்க்கால்களும் மனிதர்களுக்குப் பெரும்பாதைகளா யிருக்கின்றன.

ஏனெனில் எவ்வளவு கனமான பொருளாயினுஞ்சரி அப்பொருள் இருக்கும் பெட்டியானது போதுமானபடி பெரிதாயிருந்து அப்பெட்டியும் அப்பெட்டியிலுள்ள பொருள்களுஞ் சேர்ந்து அப்பெட்டியின் காத்திரத்திற்குச் சரியான காத்திரமுள்ள நீரின் நிறைக்குக் குறைந்த நிறையா யிருக்குமாயின் அப்பொருளை அப்பெட்டியில் வைத்து நீரில் மிதக்கும்படி செய்யலாம். அப்பால் எவ்வளவு கனமான பொருளையும் இவ்வுபாயத்தால் மிதக்கும்படி செய்தபின் நீரின் திவலைகள் மிகவும் இலகுவாய் நகரக்கூடியவைகளானதால் காற்றின் விசை

யாவது துடிப்புகளின் விசையாவது அப்பொருளை ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு நழுவும்படி செய்கின்றது.

26· நீரில் மிதக்கும் பொருள் எப்பொழுதும் அதன் நிறையுள்ள நீரின் காத்திரத்திற்குச் சமமாய் நீர்மட்டத்திற்குக் கீழ் அமிழ்ந்திருக்கும். அதாவது வேறுவிதமாய்ச் சொல்வோமாகில் அப்பொருள் தன் நிறையவ்வளவு நீரைப் பெயர்த்துவிடும்.

நீரில் மிதக்கும் பொருள் எப்பொருளாயினும் நீரில் கொஞ்சபாகம் அமிழ்ந்தி யிருக்குமே யல்லாது நீர் மட்டத்திற்குமேல் அப்பொருளின் அடியிருப்பதில்லை. சில பொருள்கள் அரைக்கால் பாகம் நீர்மட்டத்திற்குக் கீழ் அமிழ்ந்து முக்காலேயரைக்கால்பாகம் நீர்மட்டத்திற்குமேலும், சில கால் பாகம் நீருக்குள் அமிழ்ந்து முக்கால்பாகம் நீருக்குமேலும், சில அரைபாகம நீருக்குள்ளும் அரைபாகம் நீருக்கு மேலும் இப்படிப் பலவிதமாக மிதக்கின்றன. இதற்கு விதியென்னவென்று சோதிக்கவேண்டும். அதற்காக ஒருபாத்திரம் எடுத்துக் கொள். இப்பாத்திரத்தைச் சமமான பூமியிலாவது மேஜையின் மேலாவதுவை. அதில் நிறைய நீரை விடு. இப்பாத்திரத்தில் நீர் விளிம்புவரை நிறைந்திருக்க வேண்டும். மேல் ஒரு துளிநீராவது விட்டால் அந்தத்துளி வழிந்து வந்துவிடவேண்டும். அவ்வளவு பூரணமாய் நீர் இருக்கவேண்டும். அப்பால் நிதானமாய் மிதக்கும் பொருள் ஒன்றை நீர்மேல் வை. இப்பொருளின் கொஞ்சபாகம் நீருக்குள் செல்லும். அதனால் நீர் வழிந்து விழும். அப்படி வழிந்து விழும் நீரின் காத்திரம் நீருக்குள்ளிருக்கும் அப்பொருளின் காத்திரத்திற்கு ஒத்திருக்கும். வழிந்து விழும் நீரைச்சாக்கிரதையாய்ச் சேகரித்துத் தராசில் நிறுத்தால் அதன் நிறையும் நீரில் மிதக்கும் அப்பொருள் முழுவதின் நிறையும் ஒத்திருக்கும். அதாவது அப்பொருள் காத்திரத்தில் தான் நீருக்குள் எவ்வளவு சென்றிருக்கின்றதோ அவ்வளவு காத்திரமுள்ள நீரையும் நிறையில் தன்னுடைய பூரண நிறை எவ்வளவோ அவ்வளவு நிறையுள்ள நீரையும் பெயர்த்து விடுகின்றது.

ஒருகன அங்குலம் காத்திரமுள்ள நீர் 252½ கோதுமை இடையுள்ளது. ஒரு முதிர்ந்தகோதுமையின் நிறையை இங்கிலீஷில் கிரெய்ன் (grain) என்பார்கள். நாம முன் சொலலிய தகரப்பெட்டியானது சதுர உருவமும் 100 கன அங்குலம் காத்திரமும் உள்ளதாகப் பாவிக்கலாம். இப்பெட்டியின் காத்திரத்திற்குச் சமதியுள்ள நீர் அதாவது 100 கன அங்குல நீர் 25[illegible]0 கோதுமை நிறையுள்ளதாகும்.

தகரப்பெட்டியின்நிறை 8,416 கோதுமை நிறையானால் அப்பெட்டியின் காத்திரத்தில் கிட்டமுட்ட மூன்றில் ஒருபாகம் நீரின்கீழ் அமிழ்ந்திருக்கும். அப்பெட்டி 12625 கோதுமை நிறையுள்ளதானால் அரைப்பாகம் நீரின்கீழிருக்கும்: 16832 கோதுமை நிறையானால் மூன்றில் இரண்டுபாகம் நீரின்கீழிருக்கும். மிதக்கும்பொழுது அப்பெட்டியின்பக்கத்தில் நீர்மட்டத்திற்குச்சரியாய் ஒரு குறிவைத்தால் நீர்மட்டத்திற்குக்கீழ் எவ்வளவுபாகம் அப்பெட்டி அமிழ்ந்திருக்கிறது என்று நிச்சயிக்கலாம். அப்படி நிச்சயித்தது 30 கன அங்குலமானால் அப்பெட்டியின் நிறையானது $30 \times 252\frac{1}{2} = 7515$ கோதுமை நிறையாகும். இவ்விதமாக நீரில் மிதக்கும் எப்பொருளின் நிறையையும் அது நீருக்குள் எவ்வளவுகாத்திரம் சென்றிருக்கின்றது என்று தெரிந்த ஒரு எண்ணிக்கையைக்கொண்டே நிச்சயித்து விடலாம். ஆகையால் மிதக்கும்பொருளின் நீருக்குள் அமிழ்ந்திருக்கும் பாகமானது அப்பொருள் பெயர்த்துவிடும் நீரின் இடத்தை எடுத்துக்கொள்கின்றதென்றும் அவ்வளவுநீரைக் குறிக்கின்றது என்றும் சொல்லலாம். மிதக்கும்பெட்டிமேல் கைவைத்துக் கீழே அழுத்தினால் அது கீழே இறங்கும்பொழுது எதிர்த்தடை அல்லது எதிர்த்தாக்கவுணர்ச்சியுண்டாகின்றது எல்லோருக்கும் தெரிந்ததே. கையை யெடுத்துவிட்டால் பெட்டி மறுபடியும் உடனே மேலே எழும்புகின்றது. ஆகையால் நீரானது பெட்டியின் அடிப்பாகத்தை மேல்தாக்கம் கொடுத்து தாக்குகின்றது என்று விளங்குகின்றது. மேலும் நீர் அப்பெட்டியின்

ஒருரூபாயெடையும் 175 கோதுமை நிறையும் சமம்.

பக்கங்களையும் நெருக்குகின்றது ஏனெனில் பெட்டியின் பக்கங்கள் வெகு இலேசான தகடுகளாயிருந்தால் அவைகள் உள் ஒடுங்குகின்றன. ஒரு மெல்லிய பளிங்குக் காசிகுப்பி அல்லது புட்டியின் வாய்க்கு அழுத்தமாய் கார்க்கு (cork) என்று சொல்லும் குச்சு வைத்தடைத்து ஆழமான நீருக்குள் புட்டியைப் போகும்படி தாழ்த்தினால் கார்க்கு புட்டிக்குள் போய்விடும் அல்லது புட்டி நொறுங்கிப்போகும்.

27. நீர் எல்லாதிக்குகளிலும் நெருக்குகின்றது அல்லது தாக்குகின்றது.

மேற்சொல்லிய பிரகாரம் நீர் அதற்குள் அமிழ்ந்திருக்கும் பொருள்களின்மேல் எல்லாப்பக்கங்களிலும் தாக்குகின்றது.

ஒரு நீண்டகுழல் மரத்தினாலானதாவது உலோகத்தினாலானதாவது எடு. அதை உச்சமாய் நிற்கவை. அடிப்பக்கம் ஒரு கார்க்கு வைத்து மிகவும் அழுத்தமாயில்லாமல் மூடு. அப்பால் மேல்ப்பக்கம் துவாரத்தில் நீர்விடு. கார்க்குக்குமேல் முதலில் ஜலம் நின்று அந்த ஜலத்தின்பாரமானது கார்க்கின் மேல்தாக்கம் செய்யும். கார்க்குவைத்து அடித்துவாரத்தை மூடினதற்குப்பதிலாக உள்ளங்கையினால் அந்த துவாரத்தை மூடிக்கொண்டு குழாயில் மேலிருந்து ஜலம்விட்டால் அந்தக்குழாயில் உள்ளங்கைக்குமேல் நிற்கும் ஜலத்தின்கீழ்நோக்கியதாக்கத்தை கொஞ்சம் பிரயாசத்துடன் தாங்கிக்கொள்ளவேண்டும். குழல் வெகு நீண்டதாயிருந்து ஜலம் அதில் அதிகமாய்ச்சேர்ந்து வரவரக் கை தாங்கமுடியாமல் தள்ளுபட்டாவது அல்லது கார்க்கானது விசையுடன் வெளியே பெயர்க்கப்பட்டாவது குழலில் விட்ட ஜலம் தரையில் ஒழுகிப்போகும்வரை இந்த கீழ்நோக்கிய தாக்கம் அதிகரித்துக்கொண்டுவரும். இவ்விடத்தில் தாக்கமானது குழலில் நின்ற நீரின் இடையே. இந்தநீர்நிறையுள்ள ஈயக்கோல் ஒன்றை குழலிற்குள் நீருக்குப்பதிலாகச்செலுத்தினாலும் கார்க்கை ஜலத்திற்கு ஒப்பத்தள்ளிவிடும்.

நாம் எடுத்துக்கொண்ட குழல் சதுரமானதாயும் சதுரத்தின் உள்பக்கங்கள் எல்லாம் ஒரு அங்குலநீளமாயும் இருந்தால்

இந்தக்குழலில் ஒரு அங்குல உயரம் சரியாக ஒருகன அங்குல ஜலம் கொள்ளும். ஒருகன அங்குலநீர் $252\frac{1}{2}$ கோதுமை நிறையானபடியால் சற்றேறக்குறைய $27\frac{1}{2}$ அங்குலம் உயரத்திற்குக் குழலில் நீர் நின்றால் அந்நீரின் நிறை 40 ரூபாயெடையுள்ள ஒரு இருத்தல் அல்லது பவுண்ட் ஆகும் 15 இருத்தல் நிறையுள்ள நீர் அக்குழலில் 33 அடிக்குமேலும் 34 அடிக்குக்கீழும் நிற்கும். இவ்விரண்டுநிறைகளும் அதாவது ஒரு இருத்தலும் 15 இருத்தலும் முறையே ஒருசதுர அங்குலப்பரப்பின்மேல் ஒன்று $27\frac{1}{2}$ அங்குலஉயரமும் மற்றது ஏறக்குறைய 34 அடி உயரமும் உள்ள இரண்டு நீர்ஸ்தம்பங்களின் தாக்கம் அல்லது அமுக்கம் அல்லது அழுத்தத்தை அளவிட்டுச்சொல்லுகின்றன.

(தொடரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

III. பிராணன், உயிர்.

சகல ஜகத்துக்களும், சகல உலகங்களும், சகல மனிதர்களும், சகல மிருகங்களும், சகல தாவரங்களும், சகல தாதுக்களும், சகல அணுக்களும், சுருக்கமாய் உள்ள பொருள்கள் யாவும் உயிர் என்று சொல்லப்பட்ட ஒரு பெரிய கடலில் முழுகிப் படிந்து இருக்கின்றன. இவ்வுயிர் எங்கும் நிறைந்திருக்கின்றது. அது இல்லாத இடமே கிடையாது. அது நித்தியம், அனந்தம், கூட்டவும் குறைக்கவும் கூடாதது. பிரபஞ்சம் என்னப்படுவது எல்லாம் உயிர் பிரத்தியட்சமானது, உயிர் வெளிப்படையானது, உயிர் தோற்றம் அடைந்தது, உயிர் உருபிகரித்தது, உயிர் பலவிதவிகாரங்களடைந்தது, உயிர் பல விகற்பங்களடைந்தது இதைத்தவிர வேறல்ல. சகலமும் உயிரே. ஒரு உயிரே பலவிகாரங்களடைந்து பல தோற்றங்களாகின்றது.

ஒவ்வொரு உருப்பமைந்த உருவமும் அது அணுவைப்போன்று சிறிதாயினுஞ் சரியே அல்லது அண்டத்தைப்போன்று பெரிதாயினுஞ் சரியே எங்கும் நிறைந்த இந்த உயிர்க்கடலிலிருந்து தனக்கெனக் கொஞ்சம் எடுத்து உரித்தாக்கிக்கொண்டு அதைத் தன் சொந்த உயிராக வகித்துக் கொண்டிருப்பதாக நாம் மனதில் பாவிக்கலாம். உதாரணமாக ஒரு ஸ்பஞ்ஜ் (sponge) என்று சாதாரணமாய் வழங்கும் கடற்காளான் அல்லது கடற்பாசியை எடுத்துக்கொள்வோம். இது நீரை உறிஞ்சி அடக்கிக் கொள்ளும் குணமுள்ளதென்பது யாவரும் அறிந்ததே. இது கடலுக்குள்ளிருக்கும்பொழுது இதற்குள்ளும் புறம்பும் நீர் நிறைந்திருக்கும். இதன் துவாரங்களிலெல்லாம் நீர் நிறைந்தும் அவைகளில் நீர் ஓடிப்பரந்து சென்று சுழன்று கொண்டும் இருக்கும். நீரானது கடலே. கடற்பாசியாகிய உருவத்திற்குள் மாத்திரம் சென்று அதை உள்ளும் புறம்பும் நனைத்துக்கொண்டிருக்கிற கடலின் பாகத்தையும் அந்தக் கடற்பாசிக்கு வெளியே பரவியிருக்கும் கடலையும் பற்றித் தனித்தனியே நாம் பேசவேண்டியிருக்கும்பொழுது நாம் நமது மனதில் இவ்விரண்டு நீரையும் பிரித்து வித்தியாசப்படுத்தி தெளிவு உண்டாகும் பொருட்டு கடற்பாசி உள்ளும் புறம்பும் நிறைந்து நனைத்துக்கொண்டிருக்கும் கடலின் பாகத்திற்கு வேறு பெயர் கொடுத்துப் பேசுவோமல்லவா அதுபோல் ஒவ்வொரு உருப்பமைந்த உருவமும் இந்தக் கடற்பாசி போல் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் உயிர்க்கடலில் முழுகியிருந்துகொண்டும் தன்னுடைய சொந்த உயிராக இவ்வுயிர்க்கடலில் கொஞ்சம் பாகத்தைத் தனக்குள்ளே வைத்துக்கொண்டிருக்கின்றது. இப்படிப் பிரபஞ்சத்திலுள்ள சகல ஜீவகோடிகளிலும் ஒவ்வொன்றும் இவ்வுயிர்க் கடலிலிருந்து தனக்கென உரிமைப்படுத்திக்கொண்ட உயிரைப் பிராணன் என்றும், வாசியென்றும், சுவாசமென்றும் மூச்சு என்றும் ஆவியென்றும், சீவன் என்றும் ஞானசாஸ்திரப்பரிபாஷையில் வேறுபடுத்திச்சொல்லுவார்கள். அதாவது சகலமும் உயிரானாலும், அன்னமயபிராணமயகோசங்கள் என்னும் திண்பூதவுடல் நுண்பூதவுடல்களில் நின்றுவிளையாடும் உயிருக்குப் பிராணன் என்றுசொல்வதுவழக்கம்.

கிறிஸ்துமதநூலாகிய பைபிலில் கடவுள் முதலில் ஆதாம் என்னும் புருஷனுடைய உருவத்தை மண்ணினால் உண்டுபண்ணி அப்பால் அந்த உருவத்தின் நாசியில் "உயிர்ச்சுவாசத்தை" ஊதினார் உடனே அவன் உயிருள்ள மனிதனானான் என்று சொல்லியிருக்கிறது. இந்த உயிர்ச்சுவாசம் என்பது பிராணன்மாத்திரம் அல்ல, ஆனால் அதுபிராணனும் பின்னால்சொல் போகும் நான்காவது கூறும் ஒன்று கூடினது. இவ்விரண்டும் ஒன்று சேர்ந்து "சீவ அணு" அல்லது "சீவப்பொறி" யாகிறது. இந்தச் சீவ

அணு மனிதனுக்கும் மிருகங்களுக்கும் புழு பூச்சிகளுக்கும் பொதுவாயிருப்பது. ஆனால் நாம் இவ்விடத்தில் தனிப் பிராணனைப்பற்றி மாத்திரம் பேசுவது தான் கருமம். பசு பக்ஷி மனிதர்களாகிய எல்லாச் சீவர்களுடைய ஸ்தூல சரீரங்களை உயிர்ப்பித்துக்கொண்டிருக்கும் சீவ சக்தியே இந்தப் பிராணன். இந்தப் பிராணனுக்கு வாகனம் அல்லது உபாதி நுண்பூத வுடலாம். நுண்பூதவுடல் பிராணனுக்கும் திண்பூதவுடலுக்கும் மத்தியில் ஒரு பாலம்போலிருந்து இரண்டுக்கும் சம்பந்தம் பண்ணுவிக்கின்றது. பிராண சக்தியானது நுண்பூதவுடலின் வழியாய்த் திண்பூத வுடலைச் சார்ந்து திண்பூத அணுக்கள் என்று சொல்லப்படும் நுண்ணிய புழுக்களைத் திண்பூத வுடற்கட்டின் கண்ணறைகளைக் கட்டும்படி இயலச் செய்கின்றது. கண்ணறைகளையும் நுண் புழுக்களையும் இணக்கி ஒன்று சேர்ந்து ஒரு உருவமாயிருக்கும்படி பிரேரிக்குஞ் சக்தியானது இந்தப் பிராண சக்தியே.

பிராணன் என்பதை வேறொரு விதமாய்ச் சொல்லித் தெளிவுண்டாக்கலாம். அதாவது:—நமது பிரமாண்டத்திற்குச் சூரியன் உயிர்க்களஞ்சியம். இந்தச் சூரியன் உயிர் என்னும் மழையை சதா ஓய்வில்லாமல் தாரை தாரையாய் இந்த அண்டத்தில் வருஷித்துக்கொண்டேயிருக்கிறான். அவன் பொழியும் உயிர்ச் சக்திதான் இவ்வுலகத்தில் மின்சாரம் என்றும், காந்தியென்றும், சீவாகாரம் என்றும் பல சக்திகளாகத் தோன்றுகின்றது. இந்த உயிர்ச்சக்திப் பிரவாகம் பரிபூரணமாய் எங்கும் நிறைந்திருக்கின்றது. இந்தப் பிரவாகத்தில் தான் சகல உலகங்களும்* பொருள்களும் பிராணிகளும் அமிழ்ந்திருக்கின்றன. சகல தாதுமூல ஜீவப்பொருள்களின் நுண்பூதச் சாயைகள் இந்த உயிர்ப்பெருக்கினின்றும் கொஞ்சம் எடுத்து தங்கள் தங்கள் ஜீவியத்திற்குச் சூரியன் பொதுவாய் வருஷிக்கும் உயிர்ச் சக்தி எப்படி எப்படி மாறவேண்டுமோ அப்படி அப்படி மாற்றுகின்றன. நுண்பூதச்சாயைகள் உயிர்க்கடலினின்றும் உறிஞ்சி, உறிஞ்சின பாகத்தைத் தங்களுக்கு வேண்டியபடி திரித்து உரித்தாக்கி அந்த அவைகளின் திண்பூதப் பகுதிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கின்றன. இப்படி நுண்பூதச்சாயைகள் உறிஞ்சி மாற்றிக்கொண்ட பாகத்திற்குப் பிராணன் என்று பெயர். பிராணன் அக்கினிமயம். இந்தப்பிராணன் தான் திண்பூதவுடலின் கண்ணறைகளைக்கட்டும் நுண் புழுக்களையும் கண்ணறைகளையும் ஒன்று சேர்ந்து ஒரு உருவாக இருக்கும்படி செய்கின்றது. அதாவது பிராணனுக்கு இசைக்கும் சக்தி, இணக்கும் சக்தி, கூட்டும் சக்தி அல்லது உருவாக்கும் சக்தியுள்ளது. இனி நான்காவது கூறுக்குச் செல்வாம்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

இன்னிசை இருநூறு.

[முன் தொடர்ச்சி]

10-ம் அதிகாரம். இன்னாசெய்யாமை.

1. எல்லா உயிரும் இறைவனுடல் ஆதலிற்றும்
அல்லல் பிறசெய்யில் துன்புறலின் ஆயுங்கால்
கொல்லாமை ஒன்றே தலையாய நல்லறன்மற்
றெல்லாம் அதன்பின் எழும்.

2. புரவலர் வீரர் †புரைதபு நீதி
மரபிற் பிறஉயிர் மாய்ப்ப வரினும்
கரையகல் அன்பு கசிந்துரு காரேல்
வெருவுறு பாவம் விடா.

† புரைதபு—குற்றமற்ற

3. தூய விடுத்தாயுள் தேய்த்துத் துயர்தரூஉம்
தீய புலாலுண்ணில் நல்லறிவும் தேயுமால்
‡ சீயத்தின் வாழ்நாள் சிலவாம்தம் தீனியல்பால்
காயம்நெடி துய்க்கும் ¶ கரி.

§ சீயம்—சிங்கம். ¶ கரி—யானை.

4. வாழ்நாள் உடனறிவு தேய்வொன்றோ மற்றுப்பின்
ஊழிற் கொலைவினையும் நெஞ்சின் உவக்குமால்
சூழிற்றான் கொல்லாவூன் துய்ப்பினும் தீதுடல்
வீழில் நரகுறுதல் மெய்.

5. எண்ணிலநோய் ஒன்றானும் ஏகும் ஒருநோய்க்கே
உண்ணப்பல் கோடியுளவே மருந்தந்நோய்
மண்ணின் வினைதீர் வழியொன்றுண் ணாமலும்போம்
உண்ணற்க நோயுறினும் ஊன்.

6. தின்றன எல்லாம்பின் தின்னுவ அன்பின்றிக்
கொன்றன கொல்ப குறைப்ப குறைத்தன
ஒன்றும் பிழையாதென் றன்னியுயிர்க் கூறுசெயார்
என்றும் பிறத்தல் இலர்.

7. ஆற்றலிலா தாரென் றயல்கெடுப்பச் சூழற்க
கூற்றுவன் உண்மை குறிக்கொளல் வேண்டுமால்
நேற்றிருந்தார் இன்றழியக் கண்டும் நினைவிலார்
சாற்றினும் கேளார் தமித்து.

8. ஏதிலார் குற்றங்கள் நாடல் இயல்பன்றால்
தீதிலார் யாவருளர் தேரின் அரியரே
நோதக்க எவ்வுயிர்க்கும் செய்யாமே நுண்ணறிவோர்
மேதக்க செய்ப விழைந்து.

9. தீயரை ஏனோர் சினந்து சிதைக்குங்கால்
தூயர் தடாஅர் துகளுறும் என்றஞ்சித்
தீயரல் லாரிடர் தீர்ப்பரே தம்முயிர்
சாயினும் அஞ்சாது தாம்.

10. கொல்லக் கருதிலியான் என்னதெனல் கொல்கமன்
வெல்லக் கருதிற் புலமைந்தும் வெல்கநலம்
புல்லக் கருதிற் பரனன்பே புல்லுகசீர்
சொல்லக் கருதிற் சொலல்.

இன்னா செய்யாமை முற்றிற்று.

11-ம் அதிகாரம். பொதுவியல்.

1. திருவான் அறிவும் அறிவால் திருவும்
$வரவில் அவையூழ் வகையான் வருவ
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

$ வரவில்—வருதலில்லை.

2. ஈரத் திரியின் இருந்தகளி நெய்த்திரியில்
சாரும் தழலொப்ப நாற்பொருள் சாருமால்
கூரியர் மந்தருழைச் செல்வம் குறுகுமே
யார்மட்டும் வேசை என.

3. வானெறி வித்துநிலன் ஊற்றுங்கு முன்னுயிர்க்குத்
தானியற்றும் எவ்வினையும் தற்சாரும் சிற்சில
பானெறி யாற்பயன் பன்னாட் கழிப்பியும்
ஈனும் பனைவித் தென.

4. காலம் பிழைத்தக்கால் பாலும்நோய் காட்டிவிடும்
நூலோர் உணர்ந்தியின் நஞ்சமும் நோய்விட்டும்
சீலரால் துன்பமும் தீயரான் இன்பமுமாம்
காலம் கருதல் கடன்.

5. பனையடியில் பாலுணினும் கள்ளென்ப யாக
வினையிடத்தில் கள்ளுணினும் மேலென்ப செய்யும்
வினைநல்ல வேனும் உலகம் வெறுக்கும்
நினைக இடத்தின் நிலை.

6. தலைமேல் அரதனமே தாங்கினும் வாயின்
நிலைகடுவாற் பாம்பஞ்சி நீங்குப யாரும்
கலைபலதேர் நுண்ணறிவ னேனும் கடுஞ்சொல்
சொலுமாயிற் கொள்ளார் தொடர்பு.

7. கரவினும் மிக்க கடிவினை இல்லை
இரவினும் மிக்க இளிவரல் இல்லை
* புரவினும் மிக்க அறனில்லை புல்வர்ப்
பரவினுமில் மிக்க பழி.

* புரவு—காத்தல்.

8. வண்மை தவங்கல்வி வீரமிவை மற்றின்ன
ஒண்மை உடையன ஒன்றுற் புகழியாக்கை
நண்ணும் அவரன்றே பொன்று நலம்பெற்றார்
மண்ணுவார் மற்றை யவர்.

9. பொன்னே எனினும் புகும்இட னறிகழல்
மன்னர் முடிபோல் மதிப்புறல் இல்லையால்
என்ன பெருமை இருப்பினும் சிற்றினம்
மன்னிற் கெடுமே மதிப்பு

10. சிப்பி முளரிசுரம் ஆறு திரைவீழ்நீர்
ஒட்பத் தானமஃ தொப்பழிவுண் ணீருவராம்
அப்படியே மாந்தர் அறிவும் இனத்தியல்பால்
பற்பல மாறு படும்.

11-ம் அதிகாரம் பொதுவியல் முற்றிற்று.

[இன்னும் வரும்]

ஆ. சண்முகம்பிள்ளை.

சைவசித்தாந்தம்.

[தொடர்ச்சி]

கிரியாவதியாவது ஆகுதிமுதலியவனைத்தும் புறம்பே நிகழும்படி செய்வதாம். இங்ஙனம் இருவகைப்பட்ட ஔத்திரிதீக்கைதான் இன்னும் நிர்ப்பீசம் சபீசமென இரண்டுவகைப்படும். அவ்விரண்டனுள் நிர்ப்பீசதீக்கையாவது மலபரிபாகமுடையவராயும் தீக்கைப்பின் ஒருதலையான் வழுவின்றிச்செய்யக்கடவனவாய சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றல் அறிவிலராகிய பாலர் அறிவினர்முதலியோர் மாதர் நோயர் முதலாயினார்க்கு ஆசாரியன் அதனையுணர்ந்து ஏனைக்கன்மங்களோடுகூட சமயாசாரங்களையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து நித்திய கன்மமாத்திரையின் என்றவாறு அனுட்டிக்கும் அதிகாரமுடையவராகச்செய்வதாம். இந்த நிர்ப்பீசமானது சமயதீக்கை விசேடதீக்கை நிருவாணதீக்கையென மூன்றுவகைப்படும். நிருவாணம், சத்தியோநிருவாணம் அசத்தியோநிருவாணமெனவும் இரண்டுவகைப்படும். சத்தியோநிருவாணதீக்கைபெற்றோர் தீக்ஷைபெற்றபொழுதே சரீரம் நீங்கி முத்தியைப்பெறுவர். அசத்தியோநிருவாணதீக்கைபெற்றோர் தீக்கையிற் சஞ்சிதமும் ஆகாமியமும் சோதித்துச் சரீரம் நிற்பதற்கு ஏதுவாய்ப் புசிக்கப்படும் பிராரத்தகன்மம் சோதிக்கப்படாமையால் ஆயுள்முடிவில் சரீரம்நீங்கி முத்தியையடைவர். சாதகதீக்கைபெற்றுச் சிவபத்தி சிவபூசைசெய்துகொண்டு பின்பு வித்தியேசுரர்முதலியோர் பதங்களை விரும்பினவர் அந்தப்பதங்களைப்பெறுவர். அப்பதங்களில் இருப்பவர்க்குள் பற்றற்றவர் அப்பொழுதே முத்தியையடைவர். அல்லாதார் மகாசங்காரகாலத்து முத்தியைப்பெறுவர். சமயதீக்கைபெற்றோர் உருத்திரபதமடைவர். விசேடதீக்கைபெற்றோர், மகேசுரபதம் அடைவர். ஈண்டு உருத்திரபதம் என்றது குணதத்துவமத்தகத்தில் இருக்கும் உருத்திரர்பதமேயாம். ஈசுரபதம் என்றது பிரகிருதிக்குமேல் மிச்சிரத்துவாவில் மூன்றினதத்துவமான அராகதத்துவபதமேயாம். ஈசுவரனால் அதிட்டிக்கப்படுவதாகலான் அந்தத்தத்துவத்தை அடைவதே ஈசுரபதத்தை அடைவது என்று சொல்லப்படும். நைமித்திகத்துவம் காமியத்துவம் அதிகாரம் கொடாமை இந்த நிர்ப்பீசம் நிரதிகாரதீக்கையெனப்படும். இனிச்சபீசதீக்கையாவது மலபரிபாகத்தோடுகூட கற்றறிந்து ஒழுக்கவழியில்வழுவாதுநிற்கும் ஆற்றன்மிக்குடைய உத்தமத்திறுத்தமராயினார்க்கு ஆசாரியன் அஃதறிந்து சமயாசார கன்மமாத்திரம் நிறுத்தி ஏனையவற்றைச் சுத்திசெய்தொழித்து நித்திய நைமித்திககாமியமாகிய மூன்றினும் பேரதிகாரமுடையராகச் செய்வதாம். இத்தீக்கைப்பேறுடையார் சாதகரும் ஆசாரியருமென்றிருதிறப்படுவர். இது

சாதிகாரதீக்கையெனவும் பெயர் பெறும். இன்னும் இந்தசபீசதீக்கை உலோகதருமிணி சிவதருமிணியென்று இரண்டுவகைப்படும். ஆசாரியன் மாணாக்கனுக்குப் பாவகன்மத்தைமாத்திரம் சோதித்துப் புண்ணியத்தைச் சோதியாமல் வைத்துச் சிகாச்சேதமுமின்றிப் பதப்பிராப்தியாகிய புவனங்களில் யோசனைசெய்யுந்தீக்கை உலோகதருமிணியெனப்படும். மோக்ஷகாமியாகிய மாணாக்கனுக்கு ஆசாரியன் புண்ணியபாவமாகியவிரண்டினையும் நானாவிதமாகிய சஞ்சிதகன்மங்களையும் சுத்திசெய்து விதிவழிச்செய்யப்பட்டுச்சிகாமந்திரத்தால் ஏழுபிரகாரம் அபிமந்திரிக்கப்பட்டதுமாய் ஞானசத்திருபமுமாயிருக்கிற கத்திரிகையைக்கொண்டு பிரமரந்திரத்துக்கு மேலே பன்னிரண்டு அங்குலமுடைய சிகையில் சத்தி, வியாபினி, சமனை, யுன்மனையெனக்கூறிய சத்திகள் நாலுக்குமேல் சிவம் வியாபித்து நிற்கையால் அடியில் எட்டங்குலம்விட்டு ஆன்மாக்களுக்கு மூலபாசமாய் அவர்கள் ஞானக்கிரியைகளைத் திரோதானஞ்செய்யுந் திரோதானசத்திரூபமாயிருக்கிற மேல் நாலங்குலமுடைய சிகையை யத்திரத்தால் சேதிக்குமது சிவதருமிணியெனப்படும். இவ்வாறு முதல்வன் குருமூர்த்தியை அதிட்டித்துநின்று மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலைகளென்று அறுவகைப்படும் வழுவில்லாத அத்துவாக்கள் முறையே ஒன்றின் ஒன்று அடங்க, கலைதிரோதானசத்தியினும், திரோதானசத்தி சிவத்தினும் அடங்குமாறு உணர்ந்து அவ்வாறு அடக்கி ஞானவதி, கிரியாவதியென்னும் இரண்டனுள் ஒருதீக்கையானே அறுவகையத்துவாக்களையும் சோதிக்குமுகத்தாற் பிறவிக்கேதுவாகிய மலத்தைக்கெடுத்து எங்கணும் வியாபகமாகிய சிவம்பிரகாசித்தற்கேதுவாகிய ஞானத்தைக்கொடுத்துப் பிறவியை ஒழிப்பன். சமயம் விசேடம் நிருவாணம் அபிடேகமென்னும் பேதங்களெல்லாம் நிர்ப்பீசம் சபீசமென்னும் இரண்டனுள் அடங்கும்.

தீக்கை செய்துகொண்ட பின்பு ஆசாரத்தில் வழுவினால் புத்தி பூர்வமாகச்செய்த பாவம் பிராயச்சித்தத்தினாலும், மந்திர திரவியங்களின் உபாயங்களினாலும் பவித்திரத்தினாலும் சுத்தியாம். அபுத்தி பூர்வமாக வழுவினால் அந்தியேட்டிக்கிரியையாற் சுத்தியாம்.

தீக்கை செய்துகொண்டபின்பு ஆவசியகமாக அனுட்டிக்கப்படுங் கன்மங்களாவன:—இயமம், நியமம், சிவாலயத்திருப்பணி, திரிபுண்டரம், உருத்திராக்க தாரணம், சந்தியா வந்தனம், சிவலிங்கபூசை, அக்கினிகாரியங்கள், குருவசன பரிபாலனம், இயன்றமட்டும் மகேசுரபூசை முதலாயினவுமாம். அனுட்டிக்கலாகாத கன்மங்களாவன, நிர்மாலியம்புசித்தல், சிவநிந்தை, சிவனடியார்நிந்தை, சிவசாத்திரநிந்தை, தேவத்திரவியங்களை உபயோகஞ்செய்தல், உயிர்க்கொலைமுதலாயினவுமாம்.

திரிபுண்டரம், உருத்திராக்கதாரணம் முதலானவை எல்லோரும் நித்தியகன்மம்போல நித்தியமாக அனுட்டிக்கவேண்டும். செய்யாவிடில் பாதகஉண்டு என்று கூறப்பட்டிருக்கின்றது. காந்தத்தில் திரிபுண்டரம்,உத்தூளனம் முதலானவற்றிலும் அதின்பிரமாணத்தைக் கேட்பதிலும் எவர்களுக்கு ஆசைஉண்டாகவில்லையோ அதர்கள்மகாபாவிகள் என்றுகூறப்படுகின்றது.

வாசிஷ்டலைங்கத்தில் பஸ்மத்துவேஷம் எவர்களுக்குமனத்தில் இருக்கின்றதோ அவர்களின் சாதிசங்கரசாதியாகும். முகத்தில் பஸ்மத்தைக் கண்டமாத்திரத்தில் எவர்களுக்குக்கோபமுண்டாகிறதோ அவர்களின்பிறப்பு சங்கரமாயிருக்குமென்று அறிவுடையோர்அனுமித்து அறியவேண்டும். எவர்களுக்கு, சுருதிசொன்ன பஸ்மத்தில் சிரத்தையுண்டாகவில்லையோ அவர்களுக்குக் கர்ப்பாதானமுதலிய சமஸ்காரமில்லையென்பது நிச்சயம் என்று கூறப்பட்டிருக்கின்றது. பராசர உபபுராணத்தில் திரிபுண்டரத்திலும் பஸ்மாவகுண்டனத்திலும் பத்தியில்லாத பிராமணர் முத்தியைக் கொடுக்கின்ற வைதிகமார்க்கத்திற்கு உட்படாதவர் என்றுகூறப்பட்டிருக்கின்றமையால் அவர்கள்அவற்றைக்கைவிடுவன சாப பலமென்று கேள்வியாகின்றது. பின்னும் அந்தப்புராணத்திலேயே வேதம் சிவாகமம் சிவன் திரிபுண்டரம் உத்தூளனம் வித்தைஇவற்றின் பெருமையில் சிரத்தை புண்ணியவான்களுக்குத்தான் உண்டாகும். அநேகசென்மந் தொடங்கி சிரௌதஸ்மார்த்தக் கருமங்களைஅனுட்டித்து வருகின்றவர்களுக்கு வேதோத்தமமார்க்கத்தால் திரிபுண்டரஞானம் உண்டாகின்றது என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. பின்னும் பிராமணன் நித்தியம் நெற்றியில் குறுக்காக பஸ்மத்தாலே திரிபுண்டரமும் உத்தூளனமும் தரிக்கவேண்டுமென்றும் வேதசித்தமான பஸ்மத்தால் திரிபுண்டரத்தையும் இலிங்கார்ச்சனையையும் மோகத்தாற்கூட ஒருபோதும் விடக்கூடாது என்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்காந்தத்தில் திரிபுண்டரத்தைப்பத்தியினாலே தரிக்கவேண்டும் மனத்தாலும்கடக்கக்கூடாது என்றும் பிராமணன்உருத்திராக்ஷத்தைத்தரியாமல் யாதொருவைதிககருமத்தை மோகத்தாற் செய்வானாகில் நரகத்தில்விழுவான் இது நிச்சயம். என்று விதித்திருக்கின்றது. பிரஹந்நாரதீயத்தில் அநேகபிறவியானபின்பு மகாதேவர் அனுக்கிரகத்தினாலே சுபாவத்தில் உத்திராக்ஷதாரணசிரத்தை உண்டாகின்றது என்றும், கழுத்தில் சிரசில் உபவீதத்தில் காதுகளில் கைகளில் மிகுந்தபக்தியோடு எப்பொழுதும் உருத்திராக்கத்தைத்தரிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியேவாயுவீயத்திலும் பத்தியில்லாமல் உருத்திராக்கத்தைத்தரிக்கக்கூடாது எப்பொழுதும் பத்தியோடுந் தரிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இந்தச்சமயிதருமமானது அந்தச்சென்மத்தில் விசேடநிருவாணதீக்கை கிடைக்காவிடில் சாலோக்கிய பலத்தைக்கொடுத்து இரண்டுசென்மம் அல்லது ஒன்று நீங்கினவுடன் முத்தியைக்கொடுக்கும். சிவதருமோத்திரத்தில் சிவயோகிகளிடத்தில் எப்பொழுதும் பத்தியுள்ளவர்கள் மகாபோகங்களை அநுபவித்து முடிவில் சிவயோகத்தையுமடைவர்கள். ஆதலால் போகத்தையும்யோகத்தையும் விரும்பினவர்கள் சிவயோகிகளுக்கு இடம் அன்னம் பானம் படுக்கை வஸ்திரம் ஆசனம் முதலானவைகொடுத்து பூசிக்கவேண்டும் என்றும் எவனொருவன் சிவயோகிகளிடத்தில் பத்திசெய்கின்றானோ அவன் இரண்டாவது மூன்றாவது சரீரத்தில் யோகத்தையடைவான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தச்சமயிதருமங்கள் புத்திரனுக்கும் சாதகனுக்கும் சாதாரணமேயாகும். ஆகிலும் அவர்களுக்கு அசாதாரணமான வேறொருதரும மிருப்பதால் இதுசமயிதரும மென்னப்படும். இப்படிசமயிதருமங்களை அனுட்டித்தவன் விசேடதீக்கையிலதிகாரம் கிடைத்தபொழுது அந்தத்தீக்கை செய்துகொண்டு சிவபூசைசெய்தல் ஆகமமோதுதல் முதலான புத்திரதருமங்களை அனுட்டிக்கவேண்டும். இப்படியே ஆகமவசனம் பிரமாணமிருக்கின்றது. சிவபூசைசெய்யுமிடத்து மானதபூசை விசேடமாகும். அது செய்யச்சத்தியில்லாதவன் வெளிப்பூசைசெய்யவேண்டும் வருணாச்சிரமதருமங்களையும் அனுட்டிக்கவேண்டும். அவைதத்துவஞானத்திற்குச்சாதகமாகும். அப்படியேகாந்தத்தில் வருணாச்சிரம ஆசாரத்தினாலேயே முத்தி. வேறுவிதத்தில் இல்லையென்று கூறப்பட்டிருக்கின்றது. அப்படியே வேறிடத்திலும் சனகர் முதலானவரெல்லாம் கர்மத்தாலே சித்தியடைந்தார்கள் என்றுகூறப்பட்டிருக்கின்றது. இதனால் கன்மங்களேமோக்ஷத்துக்குக்காரணமாகும் ஞானம்வேண்டுவதில்லை யென்னில் கன்மத்தால் மோக்ஷம் என்பதற்குத்தாற்பரியம் ஞானத்தை உதிப்பித்து அது வழியாக மோக்ஷத்தைக்கொடுக்குமென்பது. ஞானதிலகத்தில் தானம் தவம் யாகம் ஓமம் நியமம் தருமம் தீர்த்தம் இவற்றால் பரமபதம் கிடைக்கமாட்டாது. அநேக பாவங்களினாலும் அநேகபுண்ணியங்களினாலும் சகலபிராணிகளும் பூச்சிக்கூண்டு கட்டுவதுபோலத் தன்னைக்கட்டிக் கொள்ளுகின்றார்கள் ஆதலால் கன்மங்கள் மோக்ஷவேது வல்லவென்றும், அதற்கு மாறாகப் பந்தவேதுக்களென்றும் கூறப்பட்டிருக்கின்றது. பின்னும் மலமானது சிவானந்தானுபவத்திற்கு மறைப்பாகலால் அது நீங்காமல் மோக்ஷமுண்டாகமாட்டாது.

[இன்னும் வரும்.]

சுப்பிரமணிய பிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

தனிமை யிரக்கம்.

குயிலனாய்! நின்னொடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்துபின்,
இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப்படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால்
பாவியேன் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?
† கலங்கரை விளக்கொரு காவதம் * கோடியா
மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
¶ முடம்படு தினங்காள்! முன்னர்யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
|| வளியெனப் பறந்தநீர் மற்றியான் எனது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே
மயலையிற் றென்றெவர் வகுப்பரங் கவட்கே.

முற்றும்.

இங்ஙனம் எட்டயபுரம்,
ஸி. சுப்பிரமணியபாரதி.

† கப்பல்கட்கு வெளிச்சங்காட்டுங் கடற்கரை விளக்கு. இதனை Light-house என்பர்.

* கோடியாக. ¶ காலக்கழிவின் அருமையைக் குறிப்பித்தது. || காற்று.

வாதவூரடிகள் மகோற்சவ வைபவம்.

மதுரைஜில்லா சின்னமனூரில் வசிக்கும் ஸ்ரீமான் கு. அண்ணாமலைப் பிள்ளையவர்கள் சுபகிருது வருடத்தில் ஸ்ரீவாதவூரடிகளுக்கு ஒரு ஆலயம் கட்டுவித்து அதில் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளைப் பிரதிட்டை செய்து கும்பாபிடேகஞ் செய்வித்தார்கள். அதுமுதல் சுவாமிகட்கு நித்திய பூசை மட்டுமே சிறப்புடன் நடந்துவந்தது.

இவ்வருடம் ஆனிமீ நைமித்திக பூசையாகிய பத்துநாள் உற்சவமும் மிகச்சிறப்புடன் செய்வித்தனர்.

ஸ்ரீமந் மாணிக்கவாசகமூர்த்திகள் அறிவாற் சிவனே யென்பது திண்ணம். ஸ்ரீமத் நடராஜப்பெருமான் அவர் வாக்கிற் கலந்து திருவாசகம் திருக்கோவையார் செய்வித்ததேயன்றி அருமைத்திருக்கரத்தால் ஏட்டிலும் வரைந்தருளினர். அதுவொன்றோ திருப்பெருந்துறையில் பூரூரவச் சக்கரவர்த்தி அத்தலமகிமையை யுணர்ந்து அதில் பரமசிவனுக்குத் திருவிழா நடத்த நினைந்து அதற்குரிய முயற்சி புரிந்துவருங்காலையில் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் அச்சக்கரவர்த்திபாற் றோன்றி "அரசனே; நமக்கு இத்தலத்தில் திருவிழா நடத்தக்கூடாது, மாணிக்கவாசகனுக்கே நடத்தக்கடவாய், நமக்குரிய இடபவாகன முதலிய யாவற்றையும் அவனுக்கே அமைக்கக்கடவாய், நம்மை மூலவராகவும் அவனை உற்சவமூர்த்தியாகவும் கொண்டு திருவிழாவை அவனுக்கே நடத்தக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வண்ணமே சக்கரவர்த்தியும் நடத்தினர். அன்று முதல் இன்று வரை எல்லா உற்சவமும் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளுக்கே நடந்து வருகின்றன. அதுபோலவே இச்சின்னமனூரிலும் வைகாசிமீ 28வ துஜாரோகணம் செய்து ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள் ஒவ்வொரு நாளினும் காலைமாலைகளில் ஒவ்வொருவிதஅவதார லீலைகளோடு வீதிகொண்டருளினர். பூர்வாங்கம் உத்தராங்கம் என்கிற 32 கிரியைகளும் குறைவின்றி நடந்தன. அவ்வுற்சவ தரிசனத்துக்காக யாமும் திருஞான சம்பந்த சுவாமிகளாதீனத்து ஸ்ரீமத் மாணிக்கவாசகசுவாமிகள் முதலிய முனிவர்களோடு சென்று தரிசித்துப் பேரானந்தக்கடலில் மூழ்கினேம். பற்பல இடங்களிலிருந்து சிவனடியாராகிய திருக்கூட்டங்கள் வந்திருந்தன. உற்சவ தரிசனத்தின் பொருட்டே மேஜிஸ்திரேட்டு முதலான அதிகாரிகளும் வந்திருந்தனர். பற்பல இடங்களிலிருந்து வந்த வித்வான்கள் உற்சவச்சிறப்பைக்கண்டு வியந்து பற்பல பாடல்கள் இயற்றியரங்கேற்றினர்.

அந்நகரவாசிகள் யாவரும் மிகவும் பத்தி சிரத்தையோடு நடத்தினர்கள். அவர்கள் சகலபாக்கியமும் பெற்று வாழ்ந்திருக்க கடவர் என்று சிவபிரான் திருவருளைப்பிரார்த்திக்கின்றேன்.

அப்போது ஸ்தலம் தமிழ்ப்பண்டிதர்
திருமலைவேலுக்கவிராய ரியற்றிய கவிகள்.

சொன்மதுரத் தமிழுணர்ந்தவெங்களண்ணா மலையெனும்பேர்த்தூயன்போ
நன்மணிவா சகனிரத மேறிவருஞ் சிறப்பதனை நயந்து காண்பான் [ற்ற
றென்மலையே நினன் கும்பன் வெண்மலையே நினன்பரமன் றேவ ரெல்லாம்
பொன்மலையே நினவொன்று லதன்சிறப்பை யுரைக்கவல்லார் புவியில் யாரே.

பேரேறு மரிவைகநகர்த் திருவீதியழகேறப் பிறங்கு வானிற்
காரேற வதிர்முழவாற் றேவர்காஞ் செவியேறக் கண்டோர்க் கின்பச்
சீரேறத் தொண்டர்கரஞ் சிரமேற நவமணியாற் றிகழுஞ் செம்பொற்
றேரேறி னன்கருணைச் செழுமணிவா சகனெனும்பேர்ச் செம்மன் மாதோ.

துங்க விரத முனிவரருஞ் சுரரும் புகழ்ந்து துதிபுரியச்
செங்க விரத ரம்பெறுவஞ் சியர்நித் தனஞ்செய் திடப்புலவ
ரங்க விரத முறப்பகா வரிசைத் திருமா நகர்த்தெருவிற்
றங்க விரதப் பவனிவந்தான் றவஞ்சேர் மணிவா சகப்பரனே. (௩)

இவைபோல்வன இன்னும் பல வுள.

சுப்பிரமணிய பிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

கல்வெட்டுச் சாசனம்.

இது மதுரைஜில்லா கீழக்கூடலூர் கிராமம் அழகர் கோவிலுக்குப்பின்புறத்தில் உள்ளது.

"சகாத்தம் ௲௬௱௬௰க-க்குமேல் செல்லா
நின்ற கொல்லம் ௲௪௱௪௰-க்கு (க்) கீல
க௵ ஆவணிமீ ௨௰உ ஞாயிற்று
4. க்கிழமையும் பூர்வபக்கத்துத் துவா

தசியும் உத்திராட நட்சத்திரமும்
சுபயோக சுபகரணமும் பெற்
ற நாளில் நயினார் குலசேகரப்
8. பெருமாள் கூடலூரில் நான்
கெல்லைக் குள்பட்ட நிலத்தில்
முடிக்குவய லதிர்த்தி யாவது வ
ரட்டாத்துக்கு மேற்கு ரங்கால் ரே
12. வு சுருளியாற்றுக்குப் போ (கி) ற கிழமேல் பா
தைக்கு வடக்கு கம்பத்துக்குப் போ (கி) ற வாய்
க்காலுக்கு (க்) கிழக்கு முடிக்கு வயல் எல்
லைக் கல்லுக்கும் ஷெ கிளக்
16. கோடிய வாய்க்காலுக்கும்
தெற்கு இன்னான்கு அதிர்த்தி
க்குள்பட்ட நிலத்தில் நெடு
மாக்கலப் பணிக்கற்கு விட்ட
20. நிலம் உ௰ள த்துக்கு வயல் சமி
கூ ம் போக நீக்கி யுண்டா
ன நிலத்தில் மங்கலாதே
வி யம்மன் பூசைக்கு விட்ட நி
24. லம் ௰௫ ள. அழகர் கோ
விலுக்கு விட்ட நிலம் கூ௰ ள.
வன்மீக நாத சுவாமிக்கு வி
ட்ட நிலம் ௰ ள. பெரியாற்று
28. சாத்தாவின் பூசைக்கு வி"

இதற்கு மேல் அச்சிலையிலில்லை :

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

உலகமுழுமையும் 5000 பாஷைகளும் 250000 கிளைப்பாஷைகளும் பேசப்பட்டு வருகின்றனவாம்.

*   *   *   *   *

ருஷியா டென்மார்க்கு நார்வே என்னுமிடங்களில் குடியால் வெகுஜனங்களுக்கு மரணம் நேருகிறதாம்.

உலகத்திலுள்ள கிணறுகளிலெல்லாம் ஆழமானது பர்லின் நகரத்திற்கருகாண்மையிலிருக்கிற ஸ்பெனரஸ் பர்க்கிலுள்ள கிணறேயாம். அதன் ஆழம் 9194 அடியாம்.

*   *   *   *   *

டச்சுக்காரருக்குச் சொந்தமான ஜாவாவென்னும் தீவில் உள்ள ஓர் வகைச்சிலம்பியின் நூல் வெகுகெட்டியாயிருக்கின்றதாம். அதனைக்கத்தி கொண்டறுத்தால் அறுக்கலாமேயன்றி கையாலறுப்பதரிதாம்.

*   *   *   *   *

அமேரிகாவில் சிக்காகோவில் வாசிக்கும் சிறுவர்களினின்றும் தாங்கள் குருவிமுதலிய பக்ஷிகளின் கூட்டைக் கோலால் கலைப்பதில்லை யென்றும் அனாவசியமாய் எவ்வுயிர்க்கும் இடரிழைப்பதில்லையென்றும் உறுதிமொழி வாங்கப்படுகின்றதாம்.

*   *   *   *   *

திரான்ஸ்வாலின் பிரஜாதிபதியாக இருந்த மிஸ்டர் குரூஜர் காலஞ் சென்றுவிட்டனர். இவரதுபிரேதத்தை திரான்ஸ்வாலின் தலைநகராகிய பிரிடோரியாவில் அடக்கஞ்செய்ய பிரிட்டிஷார் அநுமதிகொடுத்திருப்பதுமன்றி பிரேத அடக்கத்திற்கு ராணுவமரியாதையும் செய்யப்போகிறார்கள்.

*   *   *   *   *

ஆஸ்திரேலியாவில் விஷவியாபாரத்திற்காகவே ஓர் வர்த்தகசாலை ஏற்பட்டிருக்கிறது. அதில் அதிநுட்பஅளவுக்குக்கூட ஒரு பெருந்தொகைகொடுக்கிறார்களாம். ஒருபவுன் நிறையுள்ளவிஷம் £ 5000 பவுனும். விஷம் சேகரித்தனுப்புவோர் நீண்டஅநுபவசாலிகளாய் இருந்தாலொழிய நச்சுப்பாம்பினின்றும் தப்பமுடியாதன்றோ.

*   *   *   *   *

ஐரோப்பாவில் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் யுத்தத்தினால் மடிந்தவர் தொகையைக்காட்டிலும் சென்ற 30 வருஷங்களுக்குள் குடிவெறியினால் மரித்தவர்களின் தொகையேமிகுதி. ஏனெனில் 100வருஷத்திலும்யுத்தத்தில் மாண்டவர்கள் 30 லக்ஷம்பேர்தான் ஆனால் 30 வருஷங்களுக்குள் குடியால் மாண்டவர்களோ 75 லக்ஷம்.

*   *   *   *   *

பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் என்னுமிடத்தில் இருந்து அனுப்பப்படும் ஓர் காகிதம் ஜர்மனியின் தலைநகரான பர்லின்நகரத்திற்கு 35 நிமிஷங்களுள் போய்ச்சேருகிறதாம் பர்லினுக்கும் பாரிஸுக்கும் உள்ள தூரம் 700 மைல் இக்காகிதம் வாயுவேகத்தினால் இவ்விரண்டு நகரங்களையும் சேர்க்கிற ஓர் குழாயின் வழியாக அனுப்பப்படுகிறதாம்.

சீனாவில் ஸாங்காங் என்னுமிடத்திற் கருகில் கட்டப்பட்டுள்ள சிங்கப்பாலம் (Lion Bridge) தான் இவ்வுலகத்திலுள்ள பாலங்களில் அதிகநீளமுள்ளதாம். அதன் நீளம் $5\frac{1}{4}$ மைலாம். அதற்குக் கருங்கல்லினால் கட்டப்பட்ட பெருங்கணவாய்கள் 30) உண்டு. இப்பாலம் மஞ்சக்கடலில் ஓர் வளைகுடாவின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவிய தொகையும்.

1.	ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு	ரூ 35
2.	மகா-௱-௱-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு.	ரூ 25
3.	மகா-௱-௱-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு	ரூ 10
* 4.	மகா-௱-௱-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமீந்தார் தேவிகோட்டை வரவு...	ரூ 25

* இவர்கள் 1903 வருஷத்திலும் 25ரூ நன் கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

5.	மகா-௱-௱-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதும்பை. சிலோன் வரவு ...	ரூ 25
6.	மகா-௱-௱-ஸ்ரீ பி. எஸ். பரமசிவக்கவுண்டரவர்கள், உஞ்சனைவகையரா மிட்டா ஜமீந்தார், போக்கம்பாளையம் வரவு	ரூ 50
7.	மகா-௱-௱-ஸ்ரீ அ. பாப்புரெட்டியாரவார்கள், தோளூர் மிட்டாஜமீந்தார், கீரம்பூர், வரவு	ரூ 35
8.	மகா-௱-௱-ஸ்ரீ தண்டி வேலக்கவுண்டரவர்கள், விட்டம்பாளையம் மிட்டாஜமீந்தார் வரவு	ரூ 25
9.	மகா-௱-௱-ஸ்ரீ பூ. லட்சுமணக்கவுண்டரவர்கள், காளிப்பட்டி வரவு	ரூ 20
10.	மகா-௱-௱-ஸ்ரீ குழந்தைவேலுக்கவுண்டரவர்கள், கோனூர் மிட்டாஜமீந்தார் வரவு	ரூ 10
11.	மகா-௱-௱-ஸ்ரீ எஸ். சுப்பராயக்கவுண்டரவர்கள் மிட்டாஜமீந்தார் காட்டுப்பாளையம்	ரூ 10
12.	ம-௱-௱-ஸ்ரீ முத்துவெங்கடாசலரெட்டியாரவர்கள், மருர்ப்பட்டி மிட்டாஜமீந்தார் வரவு	ரூ 10

பத்திராதிபர்.

வைத்தியம்.

[தொடர்ச்சி]

குடல் வாதத்திற்கு.

முதியார் கூந்தல், இந்துப்பு, ஊர்முருங்கைவேர், பேய்ப்புடல், வகைக்குப்பலம் (இ) 2-படி தண்ணீரிற் போட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து இளஞ்சூட்டுகையில் ஒரு சேரங்கை வீதம் 2-வேளையுஞ் சாப்பிடக் குணமாகும். வாயுப்பதார்த்தங்களை விலக்கிப்புசிப்பதே பத்தியம்.

சிரங்கிற்குச் சூரணம்

நிலாவாரை சமூலத்தை நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து அச்சூரணத்தைப் பசுப்பால் வார்த்துப் பிசைந்து அடைதட்டி பசுப்பாலுஞ் சலமுஞ் சமனாய்க்கலந்து ஒரு பாத்திரத்தில் விட்டு அதின் வாயில் ஒரு மெல்லிய வஸ்திரத்தை மூடிக்கட்டி அவ்வஸ்திரத்தின்மேல் அடையை வைத்து மேற்சட்டி யொன்று கவிழ்த்து அடுப்பேற்றி அடை வேகு மட்டுமெரித்தெடுத்துதிர்த்து வெயிலிலுலர்த்தி யிடித்து மறுபடியும் வஸ்திரகாயஞ் செய்து சமன் சீனி கூட்டி வைத்துக்கொள்ளவேண்டியது.

அளவு:—பெரியவர்கள் ஒரு வெருகடியளவு சூரணமும் சிறியவர்கள் அதிற் பாதியுஞ் சாப்பிட்டு வரவேண்டியது. காலை மாலை யிரண்டு வேளையுஞ்சாப்பிடலாம்.

உபயோகம்:— சிறிதும் பெரிதுமான சிரங்குகளுக்கும் படர்தாமரைக்கும் உபயோகித்து குணங்காணலாம். கிரந்தி, கரப்பான், சொறி யிவைகளும் நெடுநாட் சாப்பிட்டால் குணமாகும். கர்ப்பஸ்திரீகளுக்கும், 2 வயதிற்குறைந்த குழந்தைகட்கும் மூலரோகிகட்கும் இதைக் கொடுக்கக்கூடாது. இதற்குச் சிறுகிருமிகளைக் கொல்லுஞ் சக்தியுண்டு.

இதனை உட்கொள்ளு மருந்தாகவைத்துக்கொண்டுமேற் பூச்சுக்கு மிளகரணைத்தழையை யிடித்தது மாங்காயளவைக் காற்படி தேங்கா யெண்ணெயிற் கலந்து அடுப்பேற்றிக் கமலாக்கினியா யெரித்துத் தழை சிவந்த பதத்தில் எண்ணெயை வடித்துக் கற்கத்தை அம்மியிலிட்டு நன்றாயரைத்து எண்ணெயிற் கலந்து வைத்துக்கொண்டு காலையிற் பூசினால் மாலையிலும் மாலையிற் பூசினாற் காலையிலும் இலுப்பைப் பிண்ணாக்காலாவது சோப்பினாலாவது தேய்த்து வெந்நீரிற் குளிக்கவேண்டியது. இவ்வெண்ணெயைப் பூசும்போதெல்லாங் கலக்கியே பூசவேண்டும். இவ்விரண்டு வகைச் சிகிச்சையால் எவ்வகைப் பட்ட சிரங்குகளும் ஆறிவிடும். ஆறும் வரையுங் கிரந்திப் பதார்த்தங்களை விலக்க வேண்டியது.

கஸ்தூரி மெழுகு.

கஸ்தூரி, புனுகு, கோரோசனை, சவ்வாது வகைக்கு விராகனெடை 1 சுக்கு, பெருங்காயம், லவங்கம், மிளகு, வசம்பு, ஓமம், வகைக்கு விராகனெடை 2, கடுக்காய், வாய்விளங்கம், சூரத்துநிலாவாரையிலை வகைக்கு விராகனெடை 3 இவற்றில் முதல் 4 சரக்கொழிந்த மற்றைச்சரக்குகளைப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு, திரிகடுகுக் கஷாயத்தா லொருநாளும் பிரப்பங்கிழங்குக் கஷாயத்தா லொருநாளும் கைவிடாதரைத்துக் கல்வத்தோடே நிழலிலுலரவைத்துப் பொடித்து நல்ல தேன் விட்டரைத்து மெழுகு பக்குவத்தி லெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

அளவு:— பெரியவர்கட்கு ஒரு வேளைக்குக் குன்றிமணியளவும், சிறியவர்கட்கு அதிற்பாதியுங் கொடுக்கலாம்.

உபயோகம்:—நெஞ்சடைப்பு, மூர்ச்சை, அபஸ்மாரம், மூச்சுமுட்டல், இளைப்பு, ஏங்கல், கஷ்டசுவாசம், நெஞ்சிற் குத்தல் முதலிய பயங்கர ரோகங்கட்கெல்லாங் கொடுக்கலாம். சாப்பிட்ட சிறிது நேரத்தில் ஆச்சரியப்படும்படி குணங்காட்டக்கூடிய சிரேட்ட குணமமையப் பெற்ற பிரயோகம்.

தமரகவாயு வென்னுங்காலனுக்குக் காலன் இம்மெழுகுதான். இவ்வியாதி கொண்டோர் படும் பாட்டை மலடியும் பார்த்துச் சகியாள். இன்னொரு தடவை நாமுஞ் சுவாசம் விடுவோமா விட்டாற் பிழைப்போமே யென்றெண்ணி யேங்கும்படி சுவாசத்தைப் பந்தப்படுத்திச் சுற்று முற்றும் பார்த்து திகைக்கச்செய்யும். நெஞ்சின்வலப்புறத்தில் ஓர் மின்னல் தோன்றி யிடப்புறத்தில் அடிக்கடி பாய்ந்து குத்தி வெளிப்பட முயல்வதுபோலிருக்கும். நெஞ்சிலடைத்தபோது குறுவியர்வையுண்டாய் மறதிதோன்றும். இவ்வளவு கஷ்டமானசமயத்தில் ரோகிக்கு மென்றுவிழுங்குந் திடமிருந்தால் ஒருவேளையமெழுகை வெற்றிலையொன்றின் புறத்தே சுண்ணாம்பு தடவுவதுபோற் றடவி மடித்துக் கொடுக்கவும். திடமற்றிருந்தால் கொஞ்சந் தேனிற் கலந்து கொடுக்கவும். கொடுத்தவுடன் ஒருஅவுன்ஸ் பிராந்தியில் ஒன்றரை யவுன்ஸ் தண்ணீர் விட்டுக் கலக்கிக் கொடுத்து விடவும். 10 நிமிஷத்திற்குள் மேற்கண்ட உபாதிகளெல்லாம் நீங்கிக் குணப்படுவான். பின்னரும் அந்தவாயு ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கும். சிலருக்கு மருந்துண்டு குணப்பட்ட அரை நாழிகையில் மறுபடியுங் காணுவதுண்டு. இப்படிப்பட்டவர்களுக்குக் காலை மாலை மெழுகும் பிராந்தியும் நோய்கண்ட மற்ற வேளைகளில் வெறும் பிராந்தியையுங் கொடுத்துவந்தால் இரண்டோர் நாளிற் குணமாய் விடும்.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு, பொள்ளாச்சி தாலூகா.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
5 - SEP 1904
MADRAS

உ
குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904ஞு ஆகஸ்டுமீ { புத்தகம் 8

வித்தை III.

[123-ம் பக்கத் தொடர்ச்சி]

தற்காலம் நம் நாடெங்கும் பரவிவரும் ஆங்கிலபாஷையின் அருமையையும் அதனால் நமக்குண்டான நன்மைகளையும் முன்னொரு சஞ்சிகையில் நாம் எடுத்துக்காட்டினோம். அப்பாஷையால் நம் நாட்டுக்கு விளைந்த சிற்சில கேடுகளையும் நாம் இச்சமயங்கூறுவோம். ஆங்கிலபாஷைப்பயிற்சியால் நம் நாட்டு மதாசாரங்கள் சீர் குலைந்தன. நம் நல்லவழக்க பழக்கங்களிற்சில அடியோடே தொலையத்தலைப்பட்டன. நம் செட்டுங் கட்டுமான வாழ்க்கை டாம்பீகத்தில் வந்து முடிந்தன. தொன்றுதொட்டுத் தலைமுறை தலைமுறையாய் மேலானவையென மதித்துவந்த நம் நாட்டுத் தர்மவழிகளை நாம் கைவிட்டுத் தினேதினே மாறிவரும் அந்நிய நாட்டின் தர்மங்களையே அநுசரிக்கலானோம். கர்மத்தில் நமக்குக் காற்பங்குஞ் சிரத்தையில்லாமற்போயிற்று. குடியென்ற கொள்ளைக்காரன் நம் நாட்டிற்புகுந்து நம்குடியை அடியோடே தொலைக்கத்தொடங்கினன். குடும்ப ஒற்றுமை கூட்டோடே ஒழிந்துபோயிற்று. ஒடுக்க வணக்கம், மட்டுமரியாதை என்பன ஒடுங்கி வருகின்றன. சென்ற ஐம்பது ஆண்டுகளாய் உண்டாகிவரும் இக்கேடுகளை நீக்கவேண்டுமானால் நம் வித்தியாபிவிருத்திவிஷயத்தில் அடிப்படைமுதல் நாம் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துவரல்வேண்டும். தற்காலம் நம் நாட்டின் கல்வியின்நிலைமை திருப்திகரமாயில்லை. இச்சீர்கேட்டை

நம் காருண்ய கவர்ன்மெண்டாரும் நன்குணர்ந்து சீர்திருத்தஞ் செய்ய ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். அவர்கள்வழியே நாமும் நீர்வழித் தெப்பமாயிருந்துவருவோமானாலும் அது கவர்ன்மெண்டார் கடமையேயொழிய நம்கடமையில்லையென்று விட்டிருந்தோமானாலும் நல்மாகாது நாமும் அதனை நம் முக்கிய கடமை யெனக்கருதி ஊக்கத்துடன் உழைக்க வேண்டுவது இன்றியமையாதது. நம் வித்யாபிவிருத்திக்கு அஸ்திவாரமாயிருக்கும் பிரதம பாடசாலைகளைப்பற்றி நாம் சிறிது ஆராய்வோம். அரியென்ற அக்ஷரம் அறியுமுன் நம் மக்கட்கு ஆங்கிலம் கற்பிக்கவேண்டுமென்ற அவா நம் பெற்றோர்களுக்கு இருப்பது யாவரும் அறிந்தவிஷயம். தம் மக்கள் மழலைச் சொல்கேட்டு ஆனந்திக்கும் பெற்றோர்கள் அம்மக்கள் ஆரம்பத்திலேயே தஸ் புஸ் என்று ஆங்கில சப்தங்களைக்கூற அவற்றை அமிர்தவருஷமென அபிமானித்துக்கேட்டு அகமகிழ்ந்து ஆனந்தபரவசமாவதை அநுதினம்பார்க்கிறோம். நம் நெடுங்கணக்கு அறிவதன்முன்னர் நம் மக்கள் ஏ, பி, ஸி சொல்லுவதும் இயற்கையாகவே ஆகிவிட்டது. இதனால் சுயபாஷாஞானத்துக்குப் பெருந்தடையுண்டாவதுமன்றி சிற்சில கேடுகளுமுண்டாகின்றன. அன்னியநாட்டார் வழக்கத்தை அநுசரித்தே நாமும நம் மக்கட்கு ஆங்கிலங்கற்பிக்குங்கால் அன்னியநாட்டுச் சரக்குகளாகிய ஏ. பி. ஸி. பிஸ்கோத்துக்களையும், பெப்பர் மிண்டுமுதலிய உண்டிகளையும் உதவிப்பழக்குகிறோம். சுயபாஷையெழுத்துக்களைக் கற்பிக்க அவ்விதத்தின்பண்டங்கள் நம் நாட்டில் ஏற்படாததால் குழந்தைகளுக்கு நம் சுயபாஷையில் வெறுப்பும் அந்நியபாஷையில் விருப்புமுண்டாகின்றது. "முதற்கோணல் முற்றுங்கோணல்" "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிகளின்படி இவ்வெறுப்பு உடம்போடொட்டிப்போய் பாஷைகளை வெறுப்பதுடன் அயல்நாட்டுப் பண்டங்களுக்கும் நடையுடைபாவனைக்கும் நாம் அதிக ஆசை கொள்ளுகிறோம். இதனையுணர்ந்தே நம் காருண்ய இந்தியா கவர்ன்மெண்டாரும் முதல் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குச் சுயபாஷையைத் தவிர்த்து அந்நிய பாஷையையே கற்பிக்கக்

கூடாதென்று சட்டம் ஏற்படுத்தியிருக்கின்றனர். இது நம்நாட்டுக்குக்கிடைத்த பெரும்பாக்கியமே. பிரதமபாடசாலைகளில் ஆங்கிலப்பூண்டே இருக்கக்கூடாதென்பது நம் கருத்து. நான்கு வருஷகாலமாவது சுயபாஷையில் நல்ல பயிற்சி நம் மக்கட்கேற்பட்டாலொழிய நம் பிள்ளைகளின் அறிவு நன்கு அபிவிருத்தியாகாதென்பது நம் துணிபு. இந்நான்கு வருஷகாலத்தில் நம்பிள்ளைகள் சுயபாஷையைச் சுலபமாய் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வார்களென்பது திண்ணம். அப்பொழுதுதான், விஷயங்கள் மனத்தின்கண் நன்கு பிடிபடும். இவ்வழக்கம் பம்பாய் இராஜதானியில் இருந்துவருவதைக்கேட்க ஆனந்திக்கிறோம். நான்குவருஷங்களுக்குப்பின்னர் அன்னியபாஷையைச் சிறிது கற்பிக்கின் அதனைப்பிள்ளைகள் மிகச்சுலபமாகவும் சீக்கிரமாகவும் கற்றுக்கொள்வதன்றி பிழையறவும் கற்க இடம் வாய்க்கும். சில ஆண்டுகளுக்குமுன் இம்மாதிரி வழக்கமே நம் நாட்டிலும்நடைபெற்றுவந்தது அதனால் ஆங்கிலங்கற்பவர்சீக்கிரத்தில்நற்பயனையடைந்தார்கள். நடுவில் அடிப்படையிலேயே ஆங்கிலம் வந்து தலைப்படவே பிள்ளைகள் மூளைகள் சிதறிச் சிற்குலைந்து வாய்த்தவிடும் அடுப்பும் நெருப்பும் போனவன் போல இருபாஷைகளிலும் நல்லஞானம் இல்லாமற் கெட்டுப்போக இடமுண்டாயிற்று. நம் தெருத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இருந்த நல்ல வழக்கங்களெல்லாம் பாழ்த்துப்போயின. நம் மக்கள் வைகறைத்துயிலெழுந்து பள்ளிக்குச் சென்று இன்குரலுடன் பகவத் ஸ்தோத்திரம் பாடு நாள் இனிஎந்நாளோ? சூரிய உதயத்துக்குமுன் தந்த சுத்தி செய்தல் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்தல் முதலிய காலைக் கடன்களைச் சரிவரச் செய்யும நாள் எந்நாளோ? 'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்', என்ற முதுமொழியைக் கைக்கொண்டு முதல் முதல் எண்சுவடியைக் கண்பார்க்கக் கைஎழுத வாய்பாடச் செவிகேட்க மண

வில் எழுதி மனத்தின்கண் பதியச்செய்யும் நாள் எந்நாளோ அறிகிலேன். இவ்வழக்கங்களால் பிள்ளைகள் சுறுசுறுப்பு பரிசுத்தம் நல்லொழுக்கம் தெய்வபக்தி முதலிய அருமை நற்குணங்களை இளம்பருவத்திலேயே இனிதடைந்து திடகாத்திர சரீரமுள்ளவர்களாயிருந்து வந்ததுமன்றி தீவிர புத்தியுள்ளவர்களாயுமிருந்து வந்தனர். தற்காலப் பிள்ளைகளைப் போல் உதித்து நான்கு நாழிகை வரை படுக்கையிற் கிடந்து புரளுகிறதும் வழக்கத்தை முற்காலப்பிள்ளைகள் அறியார்கள். படுக்கைவிட்டு எழுந்தவுடன் பல் தேயாமலும் முகங் கழுவாமலும் காபி குடித்து உண்டி உட்கொள்ளும்படியான வழக்கத்தையும் அறியார்கள். எக்கணக்கையும் தீவிரமாய் மனக்கணக்காய் பார்ப்பதைவிட்டு சிறு கணக்குகளுக்கும் கற்பலகை தேடி விழிப்பார்கள். "ஐந்திலே விளையாதது ஐம்பதிலே விளையுமா"? நமக்கு அநுதினமும் பயன் படுகிற வருஷாதி நூல் விஷயங்களெல்லாம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நன்கு கற்பிக்கப்பட்டு வந்தன. அறுபது வருஷங்களைச் சரிவர எண்ணவும் இருபத்தேழு நக்ஷத்திரங்களின் பெயர்களைச் சரிவரச் சொல்லவும் பிரதம பாடசாலை உபாத்தியாயர்களுக்கே தெரியுமோவென்று சந்தேகமே. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" என்ற சூத்திரப்படிப் பழைய வழக்கங்களை தடியடியடித்துத் துரத்தாமல் அவற்றின் குணபாகங்களை எடுத்துக்கொண்டும் புதுமையென்றதால் மட்டும் மதிகெட்டு மயங்கிப் போகாமல் குறைகுணங்களை நன்கு ஆராய்ந்து உசிதமானவைகளைத் தழுவியும் நடத்தலே நம் நாட்டுக்கு நலமாகும்.

[இன்னும் வரும்]

பத்திராதிபர்.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

அஞ்ஞானமாகியமலம் ஞானமன்றி நீங்கமாட்டாது. ஞானத்தால் அந்த அஞ்ஞானமாகிய மலம் நீங்குமல்லது கன்மத்தால் நீங்காது. ஞானத்தைப் பெற்றால் உடனே சிவசாயுச்சியத்தையடைவான் என்று சிவதருமோத்திரத்தில் ஞானமாத்திரத்தினாலேயே நீங்குமென்று கூறப்பட்டிருக்கின்றது. பின்னும் ஞானமில்லாவிடில் சஞ்சிதகருமங்கள் அழியமாட்டாது. போகத்தால் அழியுமென்னில் மறுபடி கன்மம் நீங்காமலுண்டாகும். கன்மஞ் செய்யும்போது பாபமுந் தொடர்ச்சியாகத் தொடரும். ஆகையால் கேவலம் கன்மத்தால் மோக்ஷமுண்டாகமாட்டாது. ஆனால் கன்மமும் ஞானமும் சேர்ந்து மோக்ஷ ஏதுவாகட்டும் அதனால் தோஷம் சிறிதுமில்லை இரண்டுஞ் சரியாகவே பிரதானம் என்னும் விஷயத்தில் கன்மமில்லாத ஞானமும் ஞானமில்லாத கன்மமும் பிரதானமல்ல. ஆகையால் ஞானம் கன்மம் இரண்டினாலும் மோக்ஷம் சித்திக்கும். பின்னும் அன்னமும் மதுவும் ஒன்றாகச் சேர்வதுபோல கன்மமும் ஞானமும் சேர்ந்து சமுசார ரோகத்திற்கு மருந்தாகும் என்று இது முதலாகச்சொல்லிய வசனங்களால் ஞானகன்மங்கள் இரண்டும் மோக்ஷசாதனங்களாகுமென்னில், உத்தரம்-ஞானாமிர்தத்தால் திருப்தியடைந்து பத்தியால் பரவசமான அந்த மகாத்மாவுக்கு கன்மஞ்செய்ய வேண்டியதில்லை என்று சிவதருமோத்திரத்திலும் பரமாத்மாவில் நிலையாக நின்றபோது குறியும் ஆச்சிரமும் ஆசாரமும் வேண்டியதில்லையென்று சர்வஞ்ஞானோத்திரத்திலும், தியானமும் தவமும் பூசையும் ஓமமும் சாதனமும் அக்கினிகாரிய முதலானவையும் நியமமும் க்ஷேத்திர பீட சேவையும் அர்ச்சனையும் பிதிருகாரியமும் தீர்த்தயாத்திரையும் விரதங்களும் அவனுக்கில்லை என்று தேவிகாலோத்திரத்திலும் ஞானிக்குக்கன்மம்நிஷேதிக்கப்பட்டது.

ஞானமே பிரதானம் கன்மமே பிரதானம் என்னும் வசனங்களுக்குத் தாற்பரியம், கன்மம் ஞானத்தை உதிப்பித்து அதுவழியாக மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பதாம். கன்மம் ஞானஹேதுவென்பதற்கு வேதானுவசனத்தாலும் யஞ்ஞத்தாலும் உபவாசத்தாலும் வஸ்துவையறிய விரும்புமவன் வித்துவான் யோகி மற்றவனல்ல என்னும் காந்தபுராண வசனம் பிரமாணமாகும். இன்னும் கன்மங்கள் தாமே சிவசாயுச்சியமாகிய பலத்திற்குக் காரணமாகமாட்டா ஆனால் ஞானத்தின் வழியே உபகாரியாகும் என்று சுருதியிற் கூறியிருக்கின்றது. இதுவே கன்மம் ஞானசாதனமென்பதற்கு பிரமாணம். அப்படியே யாகாதிகன்மங்களும் ஞானோற்பத்திக்கே நிமித்த

மாகும். இப்படியே காசி மரண முதலானவையும் ஞானத்தி னந்நாளேர் மோக்ஷ சாதனமாகும். மலம் ஞானத்தால் மாத்திரம் நீங்குமாதல.. பரிதன்றி முத்தியுண்டாகமாட்டாது. ஆகையால் காந்தத்தில் புண்ணியரூபப் காசிப்பட்டினம் எப்பொழுதும் எனக்குப் பிரியமாயிருக்கின்றது அதில் பிராண வியோகமாகும் பிராணிகளுக்குத் தையினாலே மோக்ஷ மடையும் பொருட்டுத் தாரகப்பிரமஞானத்தையுபதேசிக்கிறேனென்று விஷ்ணுவைப் பார்த்துச் சிவபிரான் சொன்னதாக வசனமிருக்கின்றது. இதனால் கன்மம் ஞானசாதனமென்று பிரதிபாதிக்கப்பட்டது. ஆகையால் ஞானத்தை விரும்புமவன் வேதத்திலும் ஆகமத்திலும் சொல்லிய கன்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். வேதாகமங்களின் விதித்தகன்மங்கள்மாத்திரம் ஞானசாதனங்களல்ல அவற்றில் விதிக்கப்படாமலும் நிஷேதிக்கப்பட்டு மிருந்தபோதிலும் சிவாராதன ரூபங்களாகச் செய்யப்படுமாகில் அது ஞானோற்பத்திக்குக்காரணமாகும். அப்படியே காந்தத்தில் உலகத்தில் எந்தக்கன்மங்கள் விதிக்கப்படாமலும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் சிவனுக்கு மேலான பூசையென்று நினைக்கு ஞானமானது பெரிய யாகமாகும். எந்தக்கன்மங்கள் சுருதியின் மிருதியில் விலக்கப்பட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் சிவாராதனமாகுமென்னுமிந்த ஞானம் பெரியயாகமாகும். ஈசுவரார்த்தமென்னும் புத்தியால் பாபகன்மங்களைச் செய்த போதினும் புண்ணியமேயாகும் சந்தேகமேயில்லை. வைதிகதாந்திரிக மார்க்கத்தை விட்டு தனது புத்தியாற்செய்த போதினும் அதுவும் யாகந்தான் என்று கூறப்பட்டிருக்கின்றது. இப்படிச்சொல்லிய தருமமெல்லாம் பிரபன்ன தருமமாகும். பிரபன்னனல்லாதவன் வருணாச்சிரம தருமங்களையே அனுட்டிக்க வேண்டும். இப்படித்தருமங்களை யனுஷ்டிக்கும்போதே தெய்வவசத்தால் நிருவாண தீக்ஷை நேரிடுமாகில் அப்பொழுது சாமீபபலத்தை யனுபவித்து அடுத்த பிறவியில் பரமுத்தியையடைவான். ஆனால் எப்பொழுது தீவிரம் தீவிரதரமாகிய சத்திநிபாதங்களிலொன்றுண்டாகி நிருவாண தீக்ஷையைப்பெறுகின்றானோ அப்போதே அந்தத் தீக்ஷையால் சஞ்சிதகன்மம் நீங்குகையால் தத்துவஞானத்திற்குப் பிரதிபந்தகமானபாபம் நீங்குகையால் தத்துவஞானம் உண்டாகும்பொருட்டு சிரவணாதிகள் செய்யவேண்டும். இந்த சுத்த சைவதந்திரத்தை யொருவருக்குங் கொடுக்கவுங்கூடாது. தீக்ஷைபெற்ற சிவபத்தனாகிய விவேகிக்குச் சிரவணஞ்செய்து வைக்கவேண்டும். மற்றவருக்கு சொல்வது தகாது. தீக்ஷிதனுக்கே சொல்லவேண்டும். இப்படியாக ஆகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் ஆகமமோதினவனுக்குச் சொல்லின் பொருள் தெரிந்தமாத்திரத்தில் அர்த்தஞானமுண்டாகலாம். ஆகிலுந் தாற்பரியந்தெரியாவிடில் மேற்பார்வையால் முன்பின்விரோதந்தோன்றி சந்தேக முதலானவையால் கலங்கவேண்டியதாகும் கலக்கமில்லாமலறியும்

பொருட்டுத்தாற்பரிய ஞானரூபமான சிரவணஞ்செய்யவேண்டியதே. எதுவரையில் அவனுக்குச் சிவஞானம் உறுதியாகிறதோ அதுவரையில் விசேடமாக சிரவணாதிகள் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிச்சிரவணத்தாலுண்டாகும் ஞானம் பேதஞானமல்ல நான் ஆத்மா சிவன் பரமாத்மா என்றுகருதப்பட்ட பேதபாவனைசெய்கின்றவன் சிவத்தன்மையடையமாட்டான் என்று பேதஞானத்தை நிஷேதித்து சிவனே நானென்று எப்போதும் அத்துவித பாவனை செய்யவேண்டுமென்று சருவஞானோத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

குருவினிடத்திருந்து நிருவாண தீக்ஷையை முன்னிட்டு உண்டாகுமிந்தச்சிரவணமானது சகலர்களுக்கே. விஞ்ஞானகலர் பிரளயாகலர்களுக்குச் சிவனுடைய அனுக்கிரக மாத்திரத்தால் தீக்ஷையும் அத்துவிதஞானமுமுண்டாகும். இப்படிச்சிரவணமானபின்பு யுக்திகளினால் அதினுடைய அர்த்தத்தைச்சிந்திப்பதாகிய மனனமும் அயோக்கியதை நீங்கிச்சிரவணம் நிலைக்கும் பொருட்டுச்செய்யவேண்டும். பின்பு கேட்ட பொருளைத்தியானஞ்செய்வதாகிய நிதித்தியாசனமும் வேண்டும். இது விபரீத பாவனை நீங்கும் பொருட்டும் சித்தவொருமை வரும்பொருட்டும் செய்யவேண்டும்.

அநாதியான ஜன்மந்தோறும் தொடர்ந்து வந்த விபரீத பாவனை ஒருமுறை செய்யுஞ் சிரவணத்தால் நீங்கமாட்டாது. தியானவாசனையினாலே தான் நீங்கும். விபரீதபாவனையிருக்கும்பொழுது சாக்ஷாத்காரமுண்டாக மாட்டாது. அப்படியே சித்தவொருமையின்றிச் சூக்குமவஸ்து சாக்ஷாத்காரமுண்டாகமாட்டாது. மயிர் முதலான வற்றின் காட்சியில் அப்படியே காண்கையால். ஆகையால் விபரீதபாவனை நீங்கும் பொருட்டும் சித்தவொருமை வரும் பொருட்டும் நிதித்தியாசனஞ் செய்யவேண்டும். சூரிய கிரண சந்நிதானத்தில் சூரியகாந்தத்துள்ளிருக்குமக்கினி பிரகாசிப்பது போல ஆசாரியர் சன்னிதானத்தில் தனது ஆன்மஞானம் பிரகாசிக்கும். இதுதான் சாக்ஷாத்காரவுதைய மென்பர். இதுதான் மோக்ஷமாகிய பலத்திற்குச் சாதனமாகும்.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

படிற்றொழுக்கம்.

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

அந்தணர் முதலிய நால்வகை வருணத்தாரும் தங்கள் தங்கள் வருணாச்சிரமங்களுககேற்ப அறநூல்களிலே விதித்தன செய்தலும், விலக்கியன செய்யாமையுமே ஒழுக்கமெனப்படும். இவ்வொழுக்கம் உயர்குலப்பிறப்பினும், கல்வியினும், உயிரினும் சிறப்புடையதென்பர். தாழ்ந்த குலப்பிறப்பு கல்லாமை, உயிரிழத்தல் இவற்றால் வருங்கேட்டினும் பெரிது ஒழுக்க வீனத்தால் வருங்கேடேயாம். ஒருவனுக்கு இகபரநன்மையை எளிதல் தரவல்லது ஒழுக்கம்போற் பிறிதில்லை. இவற்றை,

" ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று " சூத்திரனும் ஒழுக்கம் உறின்மறையோன் ஒப்பான் சூத்திரன் ஒப்பான் மறையோன் ஒழுக்கம் குன்றின் " " ஓகலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" " ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் " என்பவற்றாலறிக.

இவ்வாறன்றிப் பிறரை வஞ்சித்துப் பொருள் பறிக்கக்கருதித் தம்மிடத்தில்லாத ஒழுக்கங்களையுடையார் போன்று விபூதி ருத்திராக்ஷாதிகளால் பொய்வேடங் காட்டி ஒழுகுவார் பலர். இவரொழுக்கமே படிற்றொழுக்கமெனப்படும். படிறு—வஞ்சகம், பொய், களவு, என்னும் பொருளது.

கலியின் கொடுமையால் விதித்தவாறொழுகும் நல்லொழுக்கத்தினர் மிகச்சிலரும், படிற்றொழுக்கம் பூண்ட பாதக சிகாமணிகள் பலருமாக இக்காலத்தில் ஆங்காங்குக் காணப்படுகின்றனர். வஞ்சித் தொழுகும் இந்த ஆஷாடபூதிகள் மலிந்து திரிவதால் உண்மையான ஒழுக்கமுடைய உத்தமர்களை யறிந்துகொள்ளுதலும் கஷ்டமாகின்றது. இங்கே வள்ளிநாச்சியார் கூற்றாகிய ஓர் கவியை நோக்கலவசியம்.

" ஆய்தவடி விற்கொரு மூன்றுடைய அண்ணல்
தூயதவ வேடமொடு தோற்றுதிநீ வாழி
நேயமலி மெய்யடியர் நேர்ந்தழியும் வின்போல்
மாயமென என்னுமொரு வான்பழியும் வைத்தாய்" என்பதேயாம்

மனத்தைப்பண்படுத்தாமல் பொருளாசையும், அந்நிய நிந்தையும், தற்புகழ்ச்சியும் கொண்டு இவை வெளிக்குத்தோன்றாவாறு திருநீறு, அக்கமணி வில்வப்பணி முதலியவற்றால் மறைத்து உத்தமப்பிரபுக்களை வஞ்சித்து வயிறு வளர்த்துத் திரிவது எவ்வளவு தகாத காரியம். இவ்வாறொழுகுவா

மனம் ஒருபடித்தும் வாக்கு மற்றொருபடித்துமாகலிற் பொய்யராகவும், பிறரை வஞ்சித்துப் பொருள் கவர்தலாற் கள்வராகவும் வஞ்சகராகவும் இருக்கின்றனர். கள்வரோ ஒருவரும் அறியாவாறு இரவில் கவர்வர். இவரோ அவ்வாறன்றி உடையவர் விழித்திருக்கும்போதே கவர்கின்றனராதலின் பகற் கொள்ளைக்காரரென்றால் இழுக்காது.

மானிட ஜன்மம் பெறுதல் மிகவும் அரிது. அதனினும் அரிது செல்வராகுதல். அதனினும் மிக அரிது அப்பொருளைத்தானஞ் செய்யத்தலைப்படுவாராதல். இக்காலத்திலோ புண்ணியம் புரியும் கண்ணியவான்கள் மிகச்சிலரேயாவர். பூர்வபுண்ணியப்பேற்றால் பெருஞ்செல்வத்திற் பிறந்து உத்தமச்சிவபத்தியிற் பெரிதுத்தமராகி வாழ்கின்றவர்களை வஞ்சித்து வெளிவேடங்காட்டி மயக்கிப்பொருள் பறிப்பார்க்கு எரிவாய்நரகு சித்திப்பது திண்ணமன்றோ?

இந்த வேஷதாரிகட்குத் தருகின்றதான பலனைச்சொல்லப்புகின் மனம் நடுங்கும். என்னை படிற்றொழுக்கத்தினர்க்குதவும் கொடைப்பலன் யாதெனில் கடல் நடுத்தீவுகளில் மக்களுடம்பும் விலங்கின் முகமுங்கொண்டு பிறந்து உதிர்ந்த கனி முதலியன புசித்து நெடுங்காலம் வாழ்தலாம். இதனை " அடங்கலர்க் கீந்த தான பலத்தினால் அலறு முந்நீர்த்தடங்கல் நடுவுட்டீவு பலவுள அவற்றுட் டோன்றி உடம்பொடு முகங்களொவ்வார் ஊழ்கனி மாந்தி வாழ்வர்" .... என்பதனால் அறியலாம். இக்கொடுமைக்கு அஞ்சியன்றோ " பாத்திரம் அறிந்து பிச்சையிடு " என்றார் பெரியர்.

சுவர்க்க முதலிய பேறு பெற விரும்பித்தானம் கொடுத்தார்க்கும் ஊனம் கொடுக்கும்படி படிற்றொழுக்கத்தவர் பூண்ட வேடமும், அவர் புரியும் பொய்ப்பூசையும் பெரிதும் தீங்கு பயப்பனவேயன்றிச் சிறிதும் நலஞ் செய்யாவாம், விதி விலக்கனைத்தும் அறிந்தார் போன்று வாய்ப்பகட்டுப் பண்ணும் இவரது அன்பிலாப் போலிப்பூசையை அன்புருவாகிய கடவுள் எங்ஙனம் விரும்புவர். இதனாலன்றோ

" ஆசறும் மனத்தெழும் அன்பை அன்றியே
பூசனை உவக்கிலன் புராரி சென்னிமேல்
வீசுறு திரையினும் மிக்க தோசொலாய்
ஊசல்கொள் மனமுடை ஒருவன் ஆட்டுநீர் "

என்றார் பிறரும், ஆகவே இவ்வேஷதாரிகள் தாமும் கெட்டுப் பிறரையும் கெடுக்கும் மகா சண்டாளர்களே யாவர். இப்பாப ரூபிகள் இக்காலத்து மிகுந்துள்ளாரேனும் முற்காலத்தும் இல்லாமற் போகவில்லை. இத்தீயவரைப் பற்றி நமது நற்றமிழ் நூல்கள் கூறுமாறிவை.

" ஓங்குபெரு ஞானியர்போற்போற் பேசுவார்
அவருண்மை வேடம் போலப்
பாங்குபெற உடற்புனைவார் சற்கருமம்
புரிவார்தம் பக்கம் ஏகி
நீங்குகவென் றொழிப்பார் இந்நிலைமேலாம்
பிரமத்தின் நிலையே யென்பார்
ஈங்கிவர்கள் தாங்கெடுவ தன்றிமற்றோ
ரையுங்கெடுக்கும் எண்ணம் பூண்டார் "

" மிக்கஅறி வுடையாரைப் போன்றுமுடற்
பற்றனைத்தும் விடுத்தார் போன்றும்
தக்கவழுக்கிடத்தினுயர் திணைவினை யஃறிணைவினையாச்
சமையச் சொற்றும்
தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப்பெயரா
இடவுரைத்துஞ் சூழ்வ தெல்லாம்
பக்குவமில் மடவோரை மயக்கியவர்
கைப்பொருளைப் பறித்தற் கன்றோ "

" இரவெலாம் காமக் கணிகையர் முயக்கில்
இன்ப முற்றியற் பகலெல்லாம்
குரவராய் அணிவெண்ணீறுருத் திராக்கம்
கோலமார்ச் சாலமாம் குழைவும்
பரவு பாவனையும் தேவதார்ச்சனையும்
பண்ணல்போன் றுருப்பல பரப்பி
விரவுமா மணிதொட்டாட்டலும் பார்க்கில்
மிகக்கொடி திவர்வஞ்ச வேடம் "

" நிறைந்திடக் குடத்தில் மலமுறப் புறத்தில்
நீர்கொடு கழுவினால் நிகர்ப்ப
அறைந்துடைத் தன்புந் துடைத்ததம் முளத்தின்
அருமல மிருக்கத்தண் புனலாற்
புறந்துடைத் தங்க முழுதும்வெண் ணீற்றைப்
பூசணிக் காயெனப் பொதிந்து
பறந்துபற் பலர்கைப் பொருள்கொளச் சைவப்
பழங்கள்போன் றவரிவர் பலரால் "

இவைபோல்வன பல வுள.

அகத்தே மலம் நிரப்பப்பெற்ற குடத்தின் புறத்தை தண்ணீராற் கழுவி அலங்கரித்தாற் போன்று, மனத்தில் வஞ்சனையை நிறைத்துக்கொண்டு

புறத்தில் விபூதி ருத்திராக்ஷமும் வில்வப்பணியும் காட்டித்திரிவதாலும், " யான் போனேன் அவன் வந்தான் " என்பதற்கு " இது போயிற்று அது வந்தது " என்று உயர்திணையை அஃறிணையாக்கிக் கூறுவதாலும் என்ன பயன்? மனிதரை வஞ்சித்தல் கூடுமாயினும் எங்கும் நிறைந்த கடவுளை வஞ்சித்தல் முடியுமோ? வஞ்சித்த எங்குமுளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி அகங்குலைவதன்றோ அறிவாவது?

கடந்த சூன்மீ விவேகபாநுவில் ஒருநண்பர் கூறிய ஊர்ப்புலிகளான உத்திராக்ஷப்பூனைகளே இப்படிற்றொழுக்க மூர்த்திகளாம். இந்த ஊர்ப்புலிகள் வேங்கிடவரைமுதல் குமரித்துறைவரை பலவிடத்தும் திரிகின்றன. இம் மதுரையம் பதியிலும் இல்லாமற்போகவில்லை. செங்கோல்பிடித்த மன்னரிற்சிறந்து திரைகடலோடியும் திரவியந்தேடிப்பிரபலம் படைத்து வருகிற நமது நாட்டுக்கோட்டை நகரத்தாராகிய சீமான்கள் சிவபத்தியும் அடியார்பத்தியும் சிவசாதனவழிபாடும் பெரிதும் உடையாரென்பது உலகறிந்ததொன்றே. இந்தப்பிரபுக்கள் தலையிடாவிடில் இது வரை எத்தனையோ தேவாலயங்கள் இருந்த இடந்தெரியாமற் போயிருக்கும். இவர்கள்செய்த சிவாலய கும்பாபிஷேகங்களையும், அன்னசத்திரங்களையும், வேதபாடசாலைகளையும், திருநந்தனவனங்களையும், பசுமடங்களையும் இவை போல்வன பல தருமங்களையும் அறியாதாரில்லையென்றே சொல்லலாம். இன்னும் மேலு மேலும் செய்துகொண்டே வருகின்றனர். இப்புண்ணிய விசேடத்தாலே தான் இவர்கள்செல்வம் நாளுக்குநாள் வளர்ந்து பெருகுவதாயிற்றென்னலாம். காலஞ்சென்ற பிரபுசிகாமணியான ஸ்ரீமத் பாஸ்கரசேதுபதி மகாராஜா அவர்கள் திருவாடானைக் கும்பாவிஷேக காலத்தில் செய்த திவ்யப் பிரசங்கத்தில் இவர்களைப் பற்றி பின்வருமாறு கூறினார்கள். " தற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களே மன்னவர்களாக விளங்குகின்றார்கள். செல்வத்தாலும் புண்ணியகருமங்களாலும் இவர்கள் வேந்தர்களைப்போல் விளங்குகின்றார்கள். இதற்கு முக்கியமான உதாரணங்களுளகித்தறியத்தக்கன. மன்னவர்க்குரிமையாகிய நாடு, கோட்டை, நகர் என்பன இவர்க்கே யுள்ளன. ஆதலிற்றான் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்று பேர் பெற்றனர்...... " என்பனவாம். இவ்வாறாக நமது தமிழ் நாட்டு வேந்தர் திலகமாகிய சேதுபதி பூபாலரவர்களே பல்லாயிரக்கணக்கான ஜன சமூகத்திடை நின்று பிரசங்கித்தார்களாயின் ஈண்டு யாம்

விரித்துக் கூறவும் வேண்டுமோ. இவர்களிற் பலர்க்கு முக்கியப்பிரதான நகரம் இம்மதுரையாதலின் சிவசாதனமே மெய்ப்பொருளெனக்கொண்ட இப்பிரபுக்களிற் சிலரை வஞ்சித்து வயாற்றக்கருதியே மேற்கூறிய ஆஷாடபூதிகள் திருக்கோவிலைச் சுற்றித் திரிகின்றன. இப்புலியின் வஞ்சகத்தை யறிதல் கொஞ்சத்தில் இயலாது.

கொடுப்போர்க்கும் கொள்வோர்க்கும் கேடு பயப்பதாகிய கொடையை நீக்கவேண்டியது அறிவாளிகளின் கடமையேயாம். ஆதலின் நம்மவர்களே! வேடத்தால் மயங்காதீர்கள். "வேடநெறிநில்லார் வேடம் பூண்டென் பயன்" "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பனவாதிய முதுமொழிகளைச் சிந்தித்து உண்மை கண்டு செய்வன செய்து திருவருள் சேர்மின்.

முருகவேள்.

ஹெலெநாம்பாள்.

[தொடர்ச்சி]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

எகிப்துதேசத்தில் மூன்றுமாதம் வரை யிருந்தாள். அப்பொழுது அவள் கொஞ்சம் மந்தண * வித்தைகளை கற்க ஆரம்பித்தனள். ஆனால் அவள் இங்கு கற்ற வித்தையானது பின்னால் தான் தெரிந்துக்கொண்ட ஞானத்தைப்பார்க்கிலும் வேறுபாடானதும் மிகவும் தாழ்ந்ததுமானது. அக்காலத்தில் எகிப்து தேசத்தின் முக்கிய பட்டணமாகிய கேயிரோநகரத்தில் ஒரு வயதுமுதிர்ந்த காப்ட் ஜாதி மனிதனிருந்தான். அவன் வெகுதூரம் பிரசித்திபெற்றவன். மிகுந்த சம்பத்தும் செல்வாக்குமுள்ளவன். மந்திரவாதி யென்று எங்கும் புகழ்பெற்றவன். அவனைப்பற்றி ஜனங்கள் சொல்லுங்கதைகளைக் கேட்போருக்கு அவைகள் ஆச்சரியமும் திகிலும் மயிர்க்கூச்சும் உண்டுபண்ணும். ஹெலெநாம்பாள் இவனைச்சார்ந்து இவனிடத்தில் சில கற்றுக்கொண்டாள். அவன் போதனையைக் கிரகிப்பதில் மிகுந்த உற்சாகம் காட்டினள். ஆதலால் அவன் இவள் மேல் பக்ஷம்வைதது இவளுக்குப் போதிப்பதில் மிகவும் சந்தோஷமுள்ளவனாக விருந்ததாகத் தோன்றுகின்றது. மூன்று மாதம் அவ்விடமிருந்து அப்பால் உலகமுழுவதும் சஞ்சரித்து பத்துவருஷங் கழித்து அவள் மீண்டும் தன் பந்துக்களைப் போய் பார்த்தனள். அவள் உலகமுழுவதுஞ் சஞ்சரித்துவந்த பொழுது அவள் பெரியவமிசத்தைச் சேர்ந்தவளானபடியால் தன் தேசத்தவர்கள் பலரைப் பலவிடங்களில் சந்தித்தனள். இப்படி சந்தித்தவர்களுடன் கூடச்சேர்ந்தும் போவாள். அப்படி ஒருவரும் கிடைக்காதபோது தனியாகவுஞ் சஞ்சரிப்பாள். அமெரிக்கா தேசத்தில் நவீனஆர்லியன்ஸில் காப்பிலியர்களில் ஒரு வித வகுப்பினர்களாகிய வூடு ஜாதியார்கள் அப்பியசிக்கும் மாந்திரிய வித்தைகளைப் பார்க்க மிகவும் ஆவல்கொண்டனள். இவர்கள் வித்தைகள் ஞானவழியைச் சேர்ந்தவையல்ல. ஞானவழியை யனுசரிப்பவன் இவ்வித்தைகளைச் சற்றும் மதிக்கான். ஆனால் ஹெலெநாம்பாள் ஞானவழியில் போதுமானதூரம் இன்னும் சென்றவளல்ல வாதலால் அப்பொழுது அவளுக்கு மந்தணவித்தைகளில் வெறுத்துத் தள்ளவேண்டிய அஞ்சன வித்தையையும் அனுசரிக்கவேண்டிய சுவேத வித்தையாகிய ஞானவழியையும் பிரித்து அறிய வல்லமை போதாமையாயிருந்தது. இரகசியமானது எதுவானாலும் அவளுக்கு ஆசையைக் கொடுத்து அவளுடைய மனதைக் கவர்ந்துகொள்ளும். இக்காரணத்தினால் அவள் அந்த வூடு ஜனங்களுடன் நெருங்கிச் சிநேகஞ்செய்து ஆத்துமாவுக்கு ஹானியை விளைவித்து அருநரகிற்கூட்டும் அவர்களுடைய வித்தைகளிற்போய் மூழ்கியிருப்பாள். ஆனால் குழந்தைப் பருவத்தில் அவளுக்குத்தோன்றாத் துணையாயிருந்து அவளைக் காத்துக்கொண்டுவந்த அவளுடைய குருமூர்த்தியானவர் இப்பொழுது அவளுக்குப் பிரத்தியக்ஷமாய்த்தோன்றி இவள் அஞ்சன மந்தண வித்தைகளில் வல்ல வூடுகளின் சாவகாசத்தை விட்டு நீங்கும்படி செய்தனர். இது

* மந்தணம் - இரகசியம் மறைவானது.

வளை அவள் இவளை சொப்பனமாகக் கண்டுவந்தாள். இப்பொழுதுதான் அவர் ஸ்தூலதேகத்துடன் உயிருடன் உலகில் வசிக்கும் மஹா புருஷன் என்று கண்டனள். அமெரிக்காதேசத்தில் இப்படி ஒருவருஷம் சஞ்சரித்தனள். இக்காலத்தில் தான் தனக்குச் சொப்பனத்தில் தரிசனங்கொடுத்துக் கொண்டு வந்த குருமூர்த்தியின் வாசஸ்தலமாகிய இந்தியா தேசத்தைப் போய் பார்க்கவேண்டுமென்றும் அந்ததேசத்தில் தான் உயர்ந்த ஞானத்தையடையலாமென்றும் கருதினள். ஆகையால் தன்னைப் போலவே ஞானமடைய அவாவுள்ளவனும் தன்னை இரண்டுவருஷங்களுக்குமுன் ஜெர்மனி தேசத்தில சந்தித்தவனுமாகிய ஒரு இங்கிலீஷ்காரனுக்கு இருவரும் சேர்ந்து இந்தியா தேசத்திற்குப் போகலாம் என்று வரும்படி கடிதம் எழுதினள். அவன் உடனே வந்து அமெரிக்காவில் இவளைச்சேர்ந்தனன். பின்னால் இந்தியாதேசத்தில் உள்ள ஞானாசாரியர்களில் ஒருவருடைய சிஷனாகிய ஒரு ஹிந்துவும் அவர்களைச்சேர்ந்தனன். இம்மூவரும் சேர்ந்து 1852 வருஷம் முடிவில் சிலோன் மார்க்கமாக பம்பாய் வந்திறங்கினார்கள்.

ஆனால் சீக்கிரத்தில் இம்மூவரும் பிரிந்துவிட்டார்கள். ஏனெனில் அவர்கள் கருத்து வேறாயிருந்தன. ஹெலெநாம்பாள் நேபாளதேசம் சென்று அப்பால் ஹிமாசலத்தைக் கடந்து திபேத்துக்குப்போக முயன்றனள். ஆனால் அவள் அங்கு போகவில்லை. அப்பால் மறுபடியும் அமெரிக்கா வுக்குப் போய் அவ்விடத்தில் இரண்டு வருஷமிருந்தனள். மறுபடியும் இந்தியாவுக்கு வந்தாள். இப்பொழுது திபேத்துக்குப்போனாள். அங்கே கொஞ்சகாலமிருந்து மறுபடியும் இந்தியா வுக்கு வந்தாள். அப்பால் நானாராவு கலகம் ஆரம்பிக்கிறதற்குச் சற்று முந்தி அவளுடைய சற்குருமூர்த்தியானவர் இந்தியாவை விட்டுப்போகும்படி ஆஞ்ஞாபித்தனர். உடனே சென்னைநகர் சென்று அவ்விடமிருந்து கப்பலேறி ஜாவா தேசமார்க்கமாய் ஐரோப்பா போய் 1858 வருஷம் சேர்ந்தாள்.

ஐரோப்பா ருஷியா வில் ஸ்காவ் என்னும் பட்டணத்தில் ஹெலெநாம்பாளுடைய தங்கை யிருந்தனள். அவள் புருஷன் கூடப்பிறந்த சகோதரிக்குக் கலியாணம் நடந்து கொண்டிருந்தது. கலியாணத்திற்கு ஹெலெநாம்பாள் தகப்பனும் வந்திருந்தார். ஒரு இரவு கலியாணமாப்பிள்ளையும் பெண்ணும் மற்ற விருந்தினர்களும் போஜனஞ் செய்துக் கொண்டிருக்கும்பொழுது தடதடவென்று கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. அவ்விடத்தில் வேலையாட்கள்பலரிருந்தும் ஹெலெநாம்பாளுடைய தங்கை தள்ளக்கூடாத ஒருவித உற்சாகம் தன்னை யறியாமல் அவளைத் தள்ளவும் உடனே குதித்தெழுந்து அவ்விடத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஆச்சரியப்படும்படி தானே வேகமாய் ஓடி கதவைத் திறந்தனள். வெகுகாலமாய்க் காணாமற்போன ஹெலெநாம்பாளைக் கண்டனள். கட்டிக்கொண்டனள். தழுவி முத்தமிட்டனள். உள்ளே கூட்டிவந்தனள். இவள் அப்புறம் தனக்குக் கதவைத்தட்டின சத்தம் கேட்டவுடனே தன் தமக்கை வந்துவிட்டாள் என்று தனக்கு ஏதோ பெரு உணர்ச்சி உண்டானதாகவும் அதனாற்றான் தான் தன்னையறியாமலே ஓடிக்கதவைத்திறந்ததாகவும் சொல்லினள்.

ஹெலெநாம்பாள் வந்தமுதற்கொண்டு அந்த வீட்டிலுள்ளவர்கள் அந்த வீட்டில் நூதனமான காக்ஷிகள் நிகழ்வதைக் கண்டார்கள். இவள் சென்றவிடமெல்லாம் மிகவும் ஆச்சரியமும அந்தரங்கமும் பொருந்தின விதமாய் குசு குசுப்பேச்சு சத்தங்களும் மேஜை கதவு சுவர் முதலியவைகளில் தட்டும் சத்தங்களும் எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருந்தன. மேஜை, குரிச்சி, கடிகாரம், நிலைக்கண்ணாடி, சோபா முதலிய வீட்டின் சாமான்களும் தன்னைப் போலவே அசையவும் ஆடவுமாயிருந்தன. அவள் தங்கை இவ்வதிசயங்கள் என்னவென்று ஓயாமற் கேட்டு வந்ததில் கடைசியாக அவள் தன்னால்தான் உண்டாவதென்றும் தான் வேண்டுமானால் அவைகளைக் கூட்டவும் குறைக்கவும் இல்லாமற் செய்யவும் கூடுமென்றும் சொல்லி உடனே சொன்னவிடத்திலேயே பரிக்ஷையுங் காண்பித்தனள். அப்பட்டணச்

சனங்கள் அமெரிக்கா ஐரோப்பாக்களில் பல விடங்களில் பரமியக்காக்ஷிகள் அக்காலத்தில் ஆரம்பித்து நடந்து வருவதைக் கேட்டிருந்தார்கள். ஆகையால் ஹெலெநாம்பாள் உபகரணி (மீடியம்) என்று நம்பினார்கள். ஆனால் யாராகினும் இவள் உபகரணியென்று சொன்னால் உடனே தான் அல்லவென்றும் பரமியக்காக்ஷிகள் வேறென்றும் தன்னால் நிகழும் காக்ஷிகள் வேறென்றும் உறுதிகூறுவாள். அவளால் நிகழ்ந்தவையெல்லாம் இராஜயோக சக்தியினால் உண்டானவையென்று கூறிவந்தனள். அவள் செயல்கள் மின்னலைப்போல பட்டணம் முழுவதும் பரவின. பலர் பார்க்கவந்தார்கள். வந்தவர்கள் எல்லாம் ஊரில் பரவிய சமாசாரங்கள் வாஸ்தவமென்று திருப்தியடைந்து சென்றார்கள். மேஜை குரிச்சி, சுவர் முதலியவைகளில் விரலினால் தட்டினால் உண்டாகும் சப்தங்கள்போல் அவள் தன் மனோபலத்தினால் உண்டாக்கும் சப்தங்களில் பாஷைகள் எழுத்துகள் இவைகளின் சங்கேதங்கள் ஏற்படுத்திக் கொண்டு நாவினாற் பேசியும் மனதினால் எண்ணியும் கேள்விகள் கேட்டவர்களுக்கெல்லாம் சரியான விடைகள் தட்டுகளில் கிடைத்தன. பார்த்தவர்களில சந்தேகிகள் பலர் அவள் உடையின் பையில் ஏதோ யந்திரம் ஒன்றை மறைவாய் வைத்துக்கொண்டு தட்டுகள் உண்டாக்குகிறாள் என்றும், கைகள் வேலைசெய்து கொண்டிருக்கும்பொழுது கால்விரல்களினால் செய்கிறாள் என்றும் பல விதமாகச் சொல்லுவார்கள். இவைகளுக்கும், "எப்படிச்செய்கிறாய்? தட்டுகிறதென்ன? மனிதர்கள் மனதில் எண்ணும் எண்ணங்களையெல்லாம் எப்படி யறிகிறாய்? நான் இன்னதையெண்ணினேன் என்று சரியாய் எப்படி உனக்குத் தெரிகின்றது" என்று கேட்டவர்களுக்கும் அவளிடத்திலிருந்து புன்னகைமாத்திரம் பிறக்கும். இவைகள் எல்லாம் என்னவோ பித்தலாட்டம் புரட்டு என்று சொல்பவர்களைக் கோபியாமல் அவர்களைப் பார்த்து உரத்துச் சிரிப்பாள். கேலி பரிகாசமாயல்லாமல் இக்காக்ஷிகளின் உண்மை யின்னதென்று வாஸ்தவமாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென விருப்பத்துடன் பயபக்தியாய்க் கேட்போர்களுக்குத் தான் இருக்கும் இடத்திற்கு வெகுதூரமாய்

அவர்கள் எந்தெந்த விடங்களில் தட்டுகள் உண்டாக வேண்டுமென்று கேட்டார்களோ அவ்விடங்களிலெல்லாம், வீட்டின் முகடுகளிலும், சன்னல்களிலும் அடுத்த அறைகளிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களிலும், எவ்விதமாய் உண்டாக வேண்டுமென எண்ணினார்களோ அவ்விதமாகவும் தட்டுஞ் சத்தங்கள் உண்டாகும். சில வேளைகளில் ஐயப்பட்டவர்களுக்குப் பழி செய்வதைப் போல் கேலியாகவும் சில நடத்துவாள். ஒரு நாள் அவள் ஒரு கோடியிலும் மூக்குக்கண்ணாடி தரித்துக் கொண்டிருந்த ஒரு வித்துவான் ஒரு கோடியிலும் இருந்தார்கள். அந்த வித்துவான் மூக்குக்கண்ணாடியில் தட்டுகள்தோன்றி அவன் மூக்கினின்றும் கண்ணாடி தெறித்து விழுந்தது. அவன் பயந்து விளர்த்துப்போயினான். வேறொரு நாள் ஒரு வீம்புள்ள மாது இந்தத் தட்டுகள் உண்டாவதற்குச் சிரேஷ்டமான பொருள் என்னவென்றும், அவைகள் எவ்விடத்திலும் உண்டாகுமாவென்றும் கேட்டனள். அதற்கு ஒரு புதுமையும் கலவரமுமான விடை கிடைத்தது. அதென்னவெனில் "தங்கம்" என்னும் சொல் தட்டுகளினால் உண்டாயின. அப்பால் உடனே "தாமதமின்றி நாம் இதை ரூபிக்கிறோம்" என்று தட்டுகள் உண்டாயின. அவ்விடத்திலிருந்தவர்கள் எல்லாம் திகைத்து அருத்தம் தெரியாமல் நின்றார்கள். அந்த வீம்புக்காரியாகிய மாது திறந்தவாயுடன் புன்னகை செய்துகொண்டிருந்தாள். அடுத்த நிமிஷத்திற்கெல்லாம் அவள் முகம் விளர்த்துப்போய் அவள் இருந்தநாற்காலியினின்றும் குதித்து எழுந்து தன் கையினால் வாயைமூடிக் கொண்டு திகைப்புடன் பயந்து நடுங்கினாள். இம்மாதின் பற்கள் அசைந்து போனபடியினால் தங்கக்கம்பியினால் அவைகளைக்கட்டியிருந்தாள். அந்தத் தங்கத்தில் தட்டுகள் உண்டாய் எல்லோரும் கேட்டார்கள். அம்மாது தலை கால் தெரியாமல் அவ்வறையை விட்டு ஓடினாள். அவ்விடத்திலிருந்தவர்கள் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

(முன்தொடர்ச்சி)

IV. காமவுடல்.

மனிதனுடைய கூறுகளில் நான்காவதாகிய காமம் என்பதை விசாரிக்க இப்பொழுது வந்துவிட்டோம். காமம் என்பது ஒரு மனோ விருத்தி. இதற்குச் சாதாரண அருத்தம் விருப்பம், விழைவு, வாஞ்சை, ஆசை, ஆவல், அவா, இச்சை, இராகம், ஏடணை, ஏஷணை, பற்று, என்பனவாம். இது மனிதனைப் பகிர்முகமாய் இழுத்து வெளிப்பிரபஞ்சத்துடன் அவனைச் சம்பந்தித்து வைக்கும் சக்தியாம். ஜீவாத்துமாவை வெளியே யிழுக்கும் விசையானது காமமாம். ஜீவனை வெளி உலகத்துடன் புணர்த்தும் சக்தி இதுவே. இது ஜீவாத்துமாவை ஒரு விஷயத்துடன் பொருத்தி அதனால் இன்பம் தோன்றுமானால் அப்பொழுது உண்டாகும் மனோசலனத்துக்கு விருப்பம் என்றும் துன்பம் எழுமாயின் அந்த மனோசலனத்துக்கு வெறுப்பு என்றும் சொல்லுவார்கள். காமம் என்பது சகல வேட்கைகளையும், வெப்பங்களையும், தாபங்களையும், தாகங்களையும், விலங்கறிவு அல்லது உபஞ்ஞை, புலப்பாடு, சோரணை யென்று மேனாட்டு மனோகலைஞர்கள் சொல்லும் மனோவிருத்திகளின் பகுப்புக்களையும் அடக்கிக்கொண்டு இருக்கின்றது. பகிர்முகமாய்ச் செல்லும் சகல மனோவிருத்திகளுக்கும் காமம் முதன்மையாம். "காமன் எவனுக்கும் மூத்தவனும். அவன் கற்றிடும் வித்தைகள் மெத்தவுண்டாம்" என்பது பெரியோர் வாக்கியம். இது பிறப்புக்குக் காரணமாம். "வேண்டா விருப்பும் வெறுப்பும் அந்த வில்லங்கத்தாலே விளையும் ஜனனம்" என்றருளினார் தாயுமான சுவாமிகள். இந்த விருப்பு வெறுப்பு என்பதுதான் காமம். இப்பால் ஸ்திரீ புருஷர்களுக்குள் உடல் பொருத்த விஷயமாய் எழும் விருப்பத்திற்கு மாத்திரம் முக்கியமாய் காமம் என்பதை உபயோகித்து வருகிறார்கள். இந்தச் சுருங்கிய அருத்தத்தில் இவ்விடத்தில் இந்தச்சொல்லை உபயோகப்படுத்தவில்லை. இந்தககாமம் என்னும் சக்தி இருந்து விளையாடும் உபாதிக்குப் பிரமஞான சங்கத்தார் காமவுடல், காமரூபம், விலங்கான்மா, ஈஷணாதேகம் என்று சொல்லுவார்கள். நமது சாஸ்திரங்களில் இதற்குச் சசியுடல், சந்திரவுடல், மதியுடல், அசுத்தமனசு, அசுத்தமனோமய கோசம் என்றுசொல்லியிருக்கின்றது. இதுசூக்ஷ்மதேகத்தின் ஒரு பாகம். மனோமயகோசம் என்பதிலும் ஒரு பகுப்பு. இத்தேகம் பசுபக்ஷி முதலிய விலங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ளது; எல்லாவுயிர்களுக்கும் உள்ளது. ஆகாரம், பயம், நித்திரை, மைதுனம் என்பவை மனிதனுக்கும் மிருகத்திற்கும் பொது. பசி, தாகம், புணர்ச்சி விருப்பம் முதலிய உயிர்த்தேவைகளும் தன்னுயிருக்கு ஆபத்து வராமல் காத்துக்கொள்ளும் உணர்ச்சி அல்லது அறிவாகிய பயமும், ஆசை, குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், போஜனம் முதலிய மனோதாபங்களும் காமத்திற்குள் அடங்குகின்றன. பூலோக வாழ்க்கையின் விருப்பம், பூலோகத்திலுள்ள பிரகிருதி சம்பந்தமான இன்பங்களை நுகரவேண்டி எழும் வேட்கை இவைகளும் காமமாம். காமம் எல்லா ஜீவர்களுக்கும் பொது. நமது சுபாவத்தில் இந்தக் காமக்கூறானது மிகவும் அசித்தானது. ஜடம் இப்பூவுலக வாழ்க்கையில் நம்மைப் பந்தப்படுத்துவது. நமக்குள்ளிருக்கும் மிருகம் இதுவாம்.

இது மனத்தின் கீழ்ப்பாகத்துடன் சேர்ந்து காமமனசு என்று பெயர் பெற்று நமது சாமானிய சிற்றறிவா யிருக்கின்றது. சகல மனிதர்களுக்கும் உள்ள சாமானிய அறிவு அதாவது மூளையறிவு என்பது காமமனசு. அதைப்பற்றிப் பின்னால் பேசுவாம். தனியாய்க்காமமானது நமக்குள்ளிருக்கும் மிருக சக்தி; ஐம்புலமயக்கங்களினால் மேன்மையாகிய பரவேட்கைகளை நம்மில் கெடுத்து நம்மை சம்சாரத்தில் கட்டுப்படுத்தி வைப்பதற்குப் பெரும்பான்மை உதவியாயிருக்கும் சக்தியானது காமமே.

முன் பிராணனைப்பற்றி பேசிவரும்பொழுது காமமானது பிராணனுடன் சேர்ந்து மூச்சு, வாசி, உயிர்ச்சுவாசம், சீவன், பிராணவாயு, என்று பல பெயர் பெற்று ஸ்தூல தேகத்தின் ஒவ்வொரு அணுவிலும் பரவிப் பிரவேசித்திருக்கும் உயிருணர்ச்சியாயிருக்கின்றது என்று கண்டோம். ஆகையால் இந்தக்காமமானது புலனுக்குஇடமாம், பஞ்சேந்திரியங்களைத்தொழிற்படுத்தும் சக்தியாம். வெளி உலகத்தை நேராய் ஸ்பரிசிக்கும் தேக கருவிகளாகிய ஸ்தூலதேகத்தின் இந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவிகள்) நுண்பூதச் சாயையிலுள்ள ஞானேந்திரியங்களுக்குச் சம்பந்தப்பட்டிருப்பதாக நாம் முந்தியே குறித்திருக்கிறோம். ஆனால் இந்த ஸ்தூல இந்திரியங்களைப் பிராணனானது இயங்குந்தன்மை அல்லது அசையும் செயல் அல்லது ஸ்புரிக்கும் சுறுசுறுப்புள்ளனவாகச்செய்யாவிடின் அவைகள் தொழில் செய்யச்சக்தியற்றனவாயிருக்கும். மெய், வாய், கண் மூக்குச் செவி யென்னும் ஸ்தூலதேகத்தின் இந்திரியங்கள் பிராணனைப் பொருந்தி யிருப்பதால்தான் ஸ்புரிக்கின்றன, ஆடுகின்றன, அசைகின்றன. காமம் என்று சொல்லும்படியான புலனுடைய மூலமானது பிராணனுள்ள ஸ்தூல இந்திரியங்களின ஸ்புரணங்களை சொரணை அல்லது உணர்ச்சியாக ஜீவாத்மாவுக்கு மாற்றிக்கொடுக்கின்றது. காமமில்லாவிட்டால் ஸ்தூல தேக இந்திரியங்களின் ஸ்புரணங்கள் அந்த ஸ்தூல தேகத்திலேயே ஸ்தூல அசைவாக

மாத்திரம் நின்றுவிடும். காமமிருந்து தான் ஸ்தூலதேக இந்திரியங்களின் அசைவுகளை சொரணைகள் அல்லது உணர்ச்சிகளாக மாற்றி ஜீவனுக்கு அறிவிக்கின்றது. சொரணை அல்லது உணர்ச்சி (Feeling) என்பது காமதலத்திலுள்ள ஜீவ அறிவுதான். ஒரு மனிதன் ஏதோ ஒரு புலனறிவிலாவது ஆசை, கோபம் முதலிய மனவதிர்ப்புகளிலாவது மூழ்கி அவைகள் வயத்தனாயிருக்கும் பொழுது பிரமஞான சங்கத்தவர்கள் அவனைக்காமதலத்திலிருக்கிறான் என்பார்கள். இதின் அருத்தம என்னவென்றால் அவனுடைய அறிவு அல்லது சைதன்னியமானது காமதலத்தில் தொழில் செய்கின்றது. அதாவது அவன் அறிவு புலன்களில தங்கி விளையாடிக்கொண்டிருக்கின்றது என்பதாம். உதாரணம். ஒரு மரமானது ஒளிக்கிரணங்களைப் பிரதி பலிக்கின்றது அதாவது சூரிய ஒளியை வாங்கி அதைத் திருப்பியடிக்கின்றது. அதனால் ஈதர் என்னும் ஆகாயத்தில் ஸ்புரணங்களை யுண்டாக்குகின்றது. இந்த மரத்தினால் பிரதிபலிக்கப்பட்டுவரும் ஈதர் ஸ்புரணங்கள் நமது கண்ணைத் தாக்கி கண் நரம்பின் கண்ணறைகளில் ஸ்புரணங்கள் உண்டாக்குகின்றன. இந்த ஸ்புரணங்கள் இப்படி ஸ்தூலமையங்களுக்கும் அப்பால் காமதலமையங்களுக்கும் ஸ்புரணங்களாய்ப் போகின்றன. ஆனால் புலனிருக்கும் ஸ்தானத்தை அவைகள் அடைந்து காமமானது நம்மை உணரும்படி செய்கிறவரையில் அந்த மரத்தின் தோற்றம் நமக்குண்டாவதில்லை.

இனி இந்தக்காமவுடலின் தத்துவம் அல்லது திரவியம் அல்லது வஸ்துவைப்பற்றி விசாரிப்போம். அதைத் தெளிவாய் அறிவதற்கு முதலில் பிரமாண்டத்தின் சப்த மகா* தலங்களைப்பற்றித் தெரிவது அவசியம். ஆகையால் அவைகளை முன் விளக்குவாம்.

எங்கும் வியாபகமாய் வாக்குமனங்களுக்கு எட்டாததாய் அழிவில்லாததாய் அழிவில்லாததாய் நித்தியமாய் ஏகமாய் உள்ள வஸ்து பரப்பிரமம் அல்லது பரமசிவம். அதினின்றும் மாயையை ஒரு போர்வையாகப்போர்த்திக்கொண்டு பிரபஞ்ச சிருஷ்டியின் நிமித்தம் ஈஸ்வரன் தோன்றுகிறார். சகலத்திற்கு மையமும் ஆதாரமுமான ஈஸ்வரன் சிருஷ்டி செய்ய உத்தேசித்து மூச்சு விடுகிறார். இந்த மூச்சுத்தான் எங்கும் நிறைந்த உயிர், சைதன்னியம். இந்த உயிர்ச் சுவாசமானது ஸ்புரணரூபம். அது அவருடைய சக்தி. இந்த ஸ்புரணரூப மூச்சானது அவர் போர்வையாகிய மாயையின்மேல் விழவும் அந்த மாயையானது மூலப்பிரகிருதியாகின்றது. இந்த மூச்சில் மூன்றுவித ஸ்புரண வேகம் இருக்கின்றது. இந்த முத்தொகுதி ஸ்புரண வேகத்துடன் மூலப்பிரகிருதியின்மேல் அந்த மூச்சு விழவும், அந்த மூலப்பிரகிருதி மூன்றுவித விகாரமடைந்து சத்துவம், ரஜஸ், தமசு, என்று முக்குணங்கள் பொருந்துகின்றது. இம்முக்குணங்

கள் அடையாவிட்டால் பிரகிருதி தோற்றங்கள் உண்டாகமாட்டாது. முக்குணம் பொருந்திய மூலப்பிரகிருதிமேல் அவருடைய மூச்சு மறுபடியும் விழுகின்றது. அந்த மூச்சு கரகரவென்று மனத்தினாலும் எண்ணாற்கரிய வெகு வேகமாய்ச் சுழலும் சக்தி அல்லது ஸ்புரணமாயிருக்கின்றது. ஆகையால் எங்குஞ் சுழற்சிமயமாயிருக்கின்றது. நதிகளில் நீர்ச்சுழிகள் நாம் காண்கின்றோமல்லவா. அந் நீர்ச் சுழிகளைப் பார்க்கும்பொழுது மையத்தில் ஒரு மயிர்முளைபோன்ற பள்ளம் காணும். இந்த மையப்பள்ளத்திற்குச் சுழி அல்லது சுழல் என்று பெயர். எங்கெங்கு கரகரவென்று வட்டமாய்ச் சுற்றும்படியான இயக்கம் இருக்கின்றதோ அவ்விடத்தில் எல்லாம் இந்த மையப்பள்ளம் அல்லது சுழி இருக்கும். ஈஸ்வரனுடைய ஸ்புரண மூச்சு அல்லது உயிர் முக்குண மூலப்பிரகிருதியின்மேல் விழவும் எங்கும் சுழல்களாகின்றன. ஒவ்வொரு உயிர்ச்சுழலைச் சுற்றியும் மூலப்பிரகிருதியின் மெல்லிய படலம் சேர்ந்து ஜவ்வுபோல் அந்தச்சுழலைச்சுற்றி மூடுகின்றது. ஒரு உயிர்ச்சுழலை யடக்கிக்கொண்டு இருக்கும் மூலப்பிரகிருதியின் படலத்திற்கு மூலஅணு அல்லது ஆரம்ப அணு வென்று பெயர்.

இவ்வணுக்கள் தனியாயும் பல சேர்ந்து ஒரு அணுவாகவும் இருக்கும். பல சேர்வதினால் மெல்லியவை தடிப்பானவை யென்ற வித்தியாசமேயொழிய அணுக்கள் எல்லாம் மூலவணுக்களே. எப்படியெனில் நமது உலகத்தில் உள்ள பொருள்களின் அணுக்கள் எல்லாம் பிருதிவி அணுக்களாயினும் பாதரசத்தின் அணு தடிப்பாயும், ஜலத்தின் அணு அதைப்பார்க்கிலும் மெல்லியதாயும், எண்ணெயின் அணு ஜல அணுவைப்பார்க்கிலும் மெல்லியதாயும், எப்படியிருக்கின்றனவோ அப்படியே மூல அணுக்கள் பலவித கனங்களிலிருக்கின்றன. பிருதிவி அணுக்களில் ஏழுநிலைகள் எப்படியுள்ளனவோ அதுபோலவே மூல அணுக்களிலும் ஏழுநிலைகளுள்ளன. இந்த மூல அணுக்கள் அண்டமெங்கும் வியாபிக்கின்றன. இவ்வணுக்கள் இருக்கும் தலத்திற்கு ஏழாவது தலம் என்று பெயர். ஆதிதலமென்றும் பெயர். இத்தலத்தின் தத்துவத்திற்கு ஆதிதத்துவம் என்று பெயர். மூல அணுவுக்கு ஆதிதத்துவ அணுவென்றும் பெயர். அப்பால் எண்ணற்கரிய கோடாகோடி மூலவணுக்களில் சில அந்த ஏழாவது மகாதலத்திலுள்ள மிகவும்தடித்த மூலவணுக்களுக்குள் சுழியுண்டாக்கி தாங்கள மையச்சுழியாயிருந்துகொண்டு தடித்த அணுக்களைத் தங்களைப்படலம்போல் மூடும்படி செய்கின்றன. தடித்த மூலவணுக்கள் மையச்சுழி மூலவணுவைச் சுரித்துச் சுழன்று மூடுகின்றன. இப்படி ஆருவதுதல அணுக்கள் உண்டாகின்றன. ஏழாவது தலத்தின் மூலவணு ஒன்று மையச்சுழியாயும் அத்தலத்தின் பல தடித்த மூலவணுக்கள் அச்சுழியை சுரித்துச் சுழன்று போர்

161974.

வையாய்ப் போர்த்து இவையெல்லாம் சேர்ந்து ஒரு ஆருவதுதல அணுவாகின்றது. இந்த ஆருவது தலத்தின் தத்துவ அணுக்களும் ஏழுநிலைகள் உள்ளன. இப்படியே ஐந்தாவதுதல அணுக்கள் உண்டாகின்றன. ஆருவது தலத்தின் தடித்த அணுக்கள் அத்தலத்தின் ஒரு அணுவை மையச்சுழியாய் வைத்துக்கொண்டு அதைச்சுற்றிச் சுரிந்துச்சுழன்று போர்வையாய்ப் போர்த்தி ஒரு அணுவானது ஐந்தாவது தலத்தின் அணுவாம். இந்த ஐந்தாவது தலத்திலும் தத்துவ அணுக்கள் ஏழுநிலைபுள்ளன. இவ்விதமாகவே நான்காவது மூன்றுவது இரண்டாவது முதலாவது தலங்களும் அத்தலங்களின் அணுக்களும் உண்டாகின்றன. ஒவ்வொரு தலத்தின் அணுக்களுக்கு உயிர் அவ்வணுக்களுக்குச் சுழியாயிருக்குமதுவாம். ஏழாவது தலத்தின் அணுவாகிய மூலவணுவுக்கு உயிர் ஈசுவரனுடைய மூச்சாம். ஆருவது தலத்தின் அணுவுக்கு உயிர் மூலவணு. ஐந்தாவது தலத்தின் அணுவுக்கு உயிர் ஆருவது தலத்தின் அணு. இப்படியே மற்றத் தலங்களின் அணுக்களின் உயிர் அந்தந்தத் தலங்களுக்கு அடுத்து மேற்பட்ட தலத்தின் அணுவாம். ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று, தலங்களின் தத்துவங்களுக்கு முறையே மகா ஆகாசம், மகா வாயு, மகா தேயு, மகா அப்பு, மகா பிருதிவி யென்று பெயர். ஏழாவது ஆருவது தலங்களும் அவைகளின் தத்துவங்களும் நமது அறிவுக்கு எட்டவேமாட்டா. சிருஷ்டியில் இப்பொழுது இவ்வுலக மனிதப்பரப்புக்கு ஈஸ்வரன் நியமித்திருக்கும் முடிவானகதிக்கு இவ்விரண்டு தலங்களும் சம்பந்தபபடவேயில்லை. கீழ் ஐந்து தலங்களில் தான் அவனுடைய சைதன்னியம் அவஸ்தைகளடைகின்றது. ஆகையால் மேலிரண்டு தலங்களையும் சாதாரணமாய் விட்டு நீக்கி மற்ற கீழ் ஐந்து தலங்களையும் அவைகளின் தத்துவங்களையும் பற்றி மாத்திரம் நமது சாஸ்திரங்கள் விவரிக்கும். ஆயினும் ஒரோ விடங்களில் அருமையாய் ஏழைப்பற்றிச் சொல்லும்.

(இன்னும் வரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

இன்னிசை இருநூறு.

[முன் தொடர்ச்சி]

2-வது பொருட்பால்

12-ம் அதிகாரம். கல்வி.

1. சின்னாட் பழகினும் தேர்ச்சி இளமைக்கண்
பன்னாட் பழகினும் மூப்பிற் பயனின்றால்
இன்னாவாத் தோன்றினும்பின் இன்பம் மிகவுறூஉம்
முன்னாடிக் கற்க முயன்று.

2. கல்லாத மாக்கள் கசடறார் செய்கருமம்
வல்லாரே யானும் வளம்பெற்றா ரானுமென்
நல்லார் மதியார் நரகிற் புகுவர்காண்
சொல்லாய்ந்து கற்க தொடர்ந்து.

3. பாற்கடல்பெற் றாலும் பயனே வயிற்றளவே
நாற்கடல் எல்லாம் சுரரும் நுவலரிதால்
யாக்கை இருக்கும் துணையும் இயலளவால்
போக்கறு நூல் கற்க புரிந்து.

4 இன்பநூல் கற்றலின் ஏற்றம் பொருள்நூலே
பின்பிவற்றின் ஏற்றம் அறநூலிப் பெற்றியினான்
முன்புறக் கற்க முறைப்படக் கல்லாக்கால்
என்பயன் ஒன்றானும் இல்.

5. கலைநிறைந்த ஒண்மதிகண் டின்புறலிற் காசில்
புலவன் சகோரப்புள் போல்வன் சிறையொன்
றிலன்திசை போய இசைபல கொண்டே
உலவா உலகும் உறும்.

6. பன்றிக் குருளை படாம்போர்த்து நிற்பினும்
வென்றிக் களிறெனை விள்ளுப யாவரே
நன்றுகல் லார்கவி பாடினும் நாவலோர்
என்றும் மதித்தல் இலர்.

7. கல்லார் எனினும்என் கற்றவரைச் சார்ந்தொழுக
வல்லார்க்கு நல்லறிவு வந்துறூஉம் கற்பனவும்
இல்லென்று வாளா இராஅ துறுதியுரை
நல்லர்பாற் கேட்க நயந்து.

8. சுற்றலிற் கேட்டல் சிறப்புடைத்தாற் கற்பானுக்
குற்ற இளமைபொருள் ஊக்கம்நோ யின்மைகுலம்
மற்றின்ன வேண்டுமால் வேண்டாநூல் வல்லார்வாய்
முற்றுறக்கேட் பார்க்கு முயன்று.

9. உலவாத நுண்பொருள் பேதைக் குரைத்தல்
மலர்மாலை வானரத்தின் கைக்கொடுத்தல மானும்
நலனுடையார் தற்சாரின் நல்காதான் அன்றே
பிலமிக்க பொனகாத்த பேய்.

10. வெற்றியுறு கோளரிப்பல் வீழ்ந்தசில கொண்டுநாய்
கொற்றப் புலிமுன் குரைப்பொக்கும் குற்றமறக்
கற்றவர்முன் முன்னூல் உரைசில கற்றூர்போல்
மற்றவர் கேட்டுரைக்கும் மாண்பு.

கல்வி முடிந்தது.

13-ம் அதிகாரம் முயற்சி.

1. ஊழான் வருமென் றுழார்க்கு விளைவுண்டே
தாழா முயற்சி உறுதிபெறத் தாம்வேண்டின்
வீழாமை வேண்டும் வெறிதே கணமேயும்
வாளா கழித்தல் மறு.

2. உடையுணவு நீக்கும் உளம்அறிவு தேய்க்கும்
நடைகளிப்பு மாய்க்கும் நலிவெல்லாம் தோய்க்கும்
திடன்மதிப்புக் கல்விகுணம் சீர்சாய்க்குஞ் சார்ந்தே
மடிதான் முயற்றில் வழி.

3. தலைவற்குங் காலம் தனக்குந்தான் கொண்ட
நிலைக்கும் வேலைக்கும் நீங்காவாள் ஆக்கும்
நலமென்றே சேவையின் நன்றுபிற எல்லாம்
உலையாது காக்கும் உழவு.

4. உழுதல் உழுவித்தல் ஒல்லா இடத்தும்
தொழுதூண் அறிஞர்க்குத் துன்பேகற் பித்தல்
பழுதில் வணிகம் முதலபிற பற்றி
வழுவாது நிற்றல் வழக்கு.

5. தின்னக் கரும்பு தெறுவார் காம்அறுப்புண்
டின்னற் படலு முளவினையின் இன்புற
எண்ணித் தொடங்கின் இடருமுள அஞ்சாமே
திண்ணத்தாற் பின்னும் செயல்.

6. கடைபோகா வாயினலம் காட்டா எனினும்
இடரில செய்க இருநீர்க் கிணறு
இடறுறத் தாண்டிற் சிறிதிழுக்கு மேனும்
இடரெய்தல் தப்பாமை யின்.

7. தானுற்று நின்ற வினைதான் தகவருவாய்
ஈனு தெனினும் இனியபிற எய்தளவும்
ஆறுமை வேண்டும் அவாவான் விடினுய்நீர்
மீனுடி வாயூன் விடல்.

8. வைகறை யாமம் துயிலெழுந்து நீர்மாந்திப்
பைய நடந்தொழிப்ப பற்றற நீக்கித்தான்
செய்வினையூண் ஒக்கும் திறன்தெரிந்து கொள்ளுமேல்
உய்யும் நெடுநாள் உடல்.

9. நெடுந்துயில்பே ருண்டி ஒழித்துண்ட நீங்கப்
படுந்துணையும் உண்ணூர் மருந்தெனினும் பண்பான்
விடுந்தகைய மூன்றினொன்று மிக்குவிடார் காலை
ஒடுங்கார்நோய் ஒன்றும் உறூர்.

10. உண்ணல் உறங்கல் ஒழிபும் உடலொப்பப்
பண்ணிநூல் ஆய்வும் அளவிற் பயில்கமன்
அண்ணல் களிறனையா ரானும் அவைபிறழின்
எண்ணில் பிணியுற் றிடும்.

முயற்சி முடிந்தது.

(தொடரும்.)

அ. சண்முகம்பிள்ளை.

நற்பவளம்.

[முன் தொடர்ச்சி]

பூச்சிகளின் கூட்டுறவு.

இங்ஙனம் உட்கொள்ளப்பட்ட ஆகாரம் என்னவாகிறது? அது ஜீரணமாகி தேகத்தோடு தேகமாய்ச்சேருகிறது. இவ்வுணவின்சாரம் புறத்தோலின்கண் உள்ள சிற்றறைகளுக்கும் தேவையானமட்டும் போய்ச்சேருகிறது. நிற்க. ஒரே தண்டில் இருக்கும் வெவ்வேறுபூச்சிகளுக்குள் வெகு அந்நியோந்நியம் ஏற்பட்டிருக்கிறது. ஒன்று உணவு கொள்ளுமாயின் மற்றவற்றிற்குப் பசியெடுக்காது. இதற்குக்காரணமென்னவெனில், இப்பூச்சிகள் யாவற்றிற்கும் ஒருவகை சதைப்பற்றின்மூலமாய்ப் பரஸ்பர சம்பந்தம் ஏற்பட்டுளது. நம்முள் பலர் பட்டினியால்வருந்த சிலர் விலாப்புடைக்கத்தின்று கொழுப்பதுபோலில்லாமல் ஏற்றத்தாழ்வின்றி யாவும் சமமாக அநுபவிக்கும் இக்கூட்டுறவு வெகுவாய்சிந்திக்கத்தக்கதே. இப்பிராணிகளைப்பற்றிய படிப்பைச் சிலாக்கியமாய் மதிக்க இவ்வொன்றே போதுமானதாய் இருக்கின்றது. அசூயை அல்லது அயல்வாழப்பொறாமை என்னயம்பாராட்டல் முதலிய துர்க்குணங்களைப்போக்கி "நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை" என்னும்முதுமொழியைக்கடைப்பிடித்து யாவரும்ஒழுக வேண்டும்என்பது இதன்முக்கியமான படிப்பினைகளில் ஒன்றன்றோ? நிற்க.

இதன் சரீரம் 2 தோற்படைகளால் அமைக்கப்பட்டு ரப்பர்க்குழாய் போன்றுள்ளது. சமுத்திரம் கொந்தளிப்புள்ள அலைகளையும் உடுமீன் நத்தை முதலிய ஜலசரங்களையும் கொண்டிருப்பதால் இவற்றினின்றும் தப்பிப்பிழைக்குமாறு இப்பூச்சிகள்யாதானும் ஓர்வகைப் பாதுகாப்பைத்தேடிக் கொள்ளவேண்டியது இன்றியமையாததன்றோ? எதற்கும் தலை சாயாது நிமிர்ந்து உறுதியாய் நின்று உய்யுமாறு ஒருவகைக்கடினபதார்த்தத்தைக் குழலுக்குள்ளேயே உற்பத்திசெய்து அதனை நிரப்புகிறது. இதுவே இதற்கு எலும்புபோலாவதுடன் ஓர் சிறந்த பாதுகாப்பாகவும் ஆய்விடுகிறது. ஓர் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட இவ்வெலும்பே இதன் சிறப்பிற்கும் காரணமாகிறது. எங்ஙனமெனில், இது கடினம், அழகு, நிறம் முதலிய வாய்ந்திருக்கும் காரணத்தினாலேயே மனிதர் மனத்தைப் பெரிதுங் கவர்கின்றது. ஆனதுபற்றி மனிதர் இதன் பரமசத்துருக்களாகின்றனர். ஜலசரங்களைச்சிறிதும் அணுகவொட்டாது செய்யும் இப்பூச்சி மனிதனைத் துரத்த எவ்வகைச்சூழ்ச்சியும் கண்டுபிடிக்கவில்லையே! ஒருவேளை மனிதனும் தன்னை வருத்தும் பிராணிகளுள் ஒன்று என்ற பிரக்ஞையே இதற்கில்லை போலும். மனிதனோ எங்குசென்றாலும் தனது சேஷ்டையையும் பிறருக்கிடர் இழைப்பதையும் விடுவதில்லை.

பிராணிகளின் ரூபவிகாரம் நிறமாற்றம் முதலியவற்றால் பக்ஷி மிருகங்கள் வெகுவாய் ஏமாறினும் மதிநுக்கியும் வலிமிகுத்தவனுமான மனிதன் ஏமாறுவதரிது. எமக்கு 5 வருடங்களுக்குமேலாகத்தென்னிந்தியாவிலுள்ள சிலந்திப்பூச்சிகளைப்பற்றிய அநுபவம் பெரிதும் உண்டு. அவ்வநுபவத்தைக்கொண்டு அநேகஜந்துக்களை ஏமாற்றிப்பிடித்து வயிறு வளர்த்தும் தந்திரமாய உறைவிடம் அமைத்துக் கொண்டு தம்மிலும் வலிமிகுத்த அநேக ஜந்துக்களுக்குத் தப்பிப்பிழைத்தும்வருகின்ற சிலந்திப்பூச்சியின் உபாயங்கள் மனிதரிடம் சிறிதும் பலிப்பதில்லையென்று சொல்லத்துணிவோம். எதிலும் தலையிட்டுக்கொண்டு இடர் இழைத்துவரும் மனிதனினின்றும் இப்பூச்சிகள் நிறம், உருமுதலிய மாறித்தப்ப எவ்வளவோகாலஞ்செல்லும்.

விவாகமுறை

பவளம் உயிர்வாழும் விதமும் அது வளரும் விதமும் கூறினம். இனி அது நிர்மூலமாகாமல் பல்கும் விதத்தைப்பற்றிப் பகருவாம். சந்ததிடருவண்ணம் பிராணிகளும் செடிகளும் பிரதியுற்பத்தி செய்யவேண்டியதவசியம். ஆண்பெண்சம்பந்தத்தினால் மாத்திரமன்றி வேறுவிதத்திலும் பிரதியுற்பாதனம் நடந்தேறக்காண்கிறோம். உதாரணமாக: ஒருமரத்தின கிளைகளைவெட்டி யூன்றுவதாலும் கொடிகளையறுத்துப் பதிகம் இடுவதினாலும் புதிய மரஞ்செடிகள் அவற்றினின்றும் தோன்றிப் பல்குகின்றன. இவ்விருவகையானும் பவளப்பூச்சியானது பிரதியுற்பத்தி செய்யும். இப்பொழுது நாம் ஒரு தாய்ப்பூச்சியை யெடுத்துக்கொள்வோம். அது வளரும்பொழுதே வாழையடியில் வாழை உண்டாவதுபோல் வேறுபூச்சிகள் இதினின்றும் தோன்றும். அல்லது தாய்ப்பூச்சியானது இரண்டாக நீளவெடித்து ஒவ்வொருபாகமும் அதனதன் கரங்களுடன் ஓர் தனிப்பூச்சியாகும். இவ்விதமாய் பலபூச்சித்திரள்கள் உண்டாகின்றன. நாம் இப்பொழுது கூறிய இவ்விருவகையினும் ஆண்பெண்சம்பந்தமேகிடையாது. மனிதரால் இவ்விருவகையானும் பிரதி உற்பத்தி செய்யமுடியாது. மனிதவர்க்கத்தில் ஆண்பெண் அறியப்படுவதுபோல இப்பூச்சிகளிற்கண்டறிய முடியாது. பின்னைப்பவளம் சம்பந்தப்பட்டமட்டில்

ஆண்பெண்சம்பந்தப் பிரதியுற்பாதனம்.

என்றால் என்னை? இப்பவளப்பூச்சியானது ஜீரணக்குழியில் உள்ள பல்வகைத்தாய சிற்றறைகளினின்றும் சுக்கிலத்தையும் இக்குழியில் உள்ள (நாம் முற்கூறிய) தடுப்புகளினின்றும் சுரோணிதத்தையும் உற்பத்திசெய்கின்றது. சந்ததிவிருத்திக்கான இவ்விரண்டும் ஒரே பூச்சியினிடமிருந்தே உண்டாகின்றன. சுக்கில சுரோணிதசம்பந்தமே பிரதி உற்பத்திக்குக் காரணம், எனினும் ஒரே தாய்ப்பூச்சியினிடத்துத்தோன்றிய பிராணிகளிடத்

துள்ள சுக்கில சுரோணிதங்கள் சம்பந்கப்படுவதேயில்லை. ஆனால் ஒரு தாய்ப்பூச்சியினிடத்துத்தோன்றிய பிராணிகளின் சுக்கிலசுரோணிதங்கள் வெகு தூரத்திலிருக்கும் வேறொரு தாய்ப்பூச்சியினிடத்து தோன்றிய சுரோணித சுக்கிலங்களுடனும் முறையே சம்பந்தமாகின்றன. ஆண் பூவிற்கும் பெண்பூவிற்கும் தேனருந்தவரும் வண்டினால் சம்பந்தமேற் படுவதுபோல் ஒரு தாய்வயிற்றுதித்த பூச்சிகளுக்கும் வேறொன்றனிடத்துத் தோன்றிய பூச்சிகளுக்கும் கடல்நீர் மூலமாக சம்பந்தம் ஏற்படுகின்றது. இதனால் ஒரே குடும்பத்திற் றோன்றிய ஸ்திரீ புருஷர்களுடைய பரஸ்பர சம்பந்தம் இயற்கைக்கு விரோதமானது என்பது இனிது விளங்கும். இவ்விஷயத்தையே தர்மசாஸ்திரம் விதித்த அதி புத்திமானாகிய மநு அதிகமாய் வற்புறுத்திச் சொல்லியிருப்பதுடன் அவ்வித விவாகத்தால் ஜீவாதாரம் பலம்முதலிய குன்றி இறுதியில் சந்ததியற்று நாசமாகவேண்டிவரும் என்று கண்டிப்பாய் எச்சரித்திருக்கிறார். ஆனால் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாக்கி இந்துக்களாகிய நாம் இக்கட்டளையை மீறி நடந்துவருகிறோம். அங்ஙனமீறி நடத்தலால் வரும் பலனையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டும் அநுபவித்துமிருக்கிறோம். இப்பவளப்பூச்சியைப்பற்றி அறிந்தபின்னரேனும் நம்மவர்கள் தங்கள் குலம் நசித்து க்ஷீணித்து நிர்மூலமாகாவண்ணம் வெவ்வேறுகுடும்பங்களில் பெண்ணெடுப்பார்களாக. நிற்க.

ஒரு பூச்சியின் சுக்கிலத்தோடு மற்றொன்றின் சுரோணிதம் போய்ச் சேருவதால் ஆதியற்பமான முட்டையொன்று தோன்றி சின்னாட்களில், தன்னிஷ்டப்படி நீந்தக்கூடிய ஓர் மயிர்க்கிருமியாகிறது. அதன் மயிர்களே அதற்குக் கைகள்போல் உபயோகப்படுகிறது. இவற்றின் உதவிகொண்டே இது இடம்பெயர்ந்து சென்று அதி தூரத்திலுள்ள முன்னிலும் சிறந்த ஓர் வாசஸ்தானத்தை நாடிச் செல்கின்றது, இது பல மாறுதல்களை அடையும். வாய் ஜீரணக்குழி முதலிய வுண்டான வுடன் இப் புதுவிடத்தில் உள்ள பாறையில் தாய்ப் பூச்சி போலவே உறுதியாய்ப் பொருந்தி தன் முறைக்கு ஒரு புதுக்குடும்பம் உண்டாக்குகிறது. இதினின்றும் பல பூச்சிகள் நாம் முற்கூறியபடி உற்பத்தியாகி இதினின்றும் வேறுபட்ட சௌகரியமான இடங்களில் போய்ப் பதிந்துகொண்டு தங்கள் முறைக்குக் குடும்பங்களுண்டாக்கும். இவ்விதம் அவை யெங்கும் பரவிப் பல்குகின்றன. பூச்சிகள் யாவும் தாய்ப்பூச்சி யிருக்குமிடத்தில் இல்லாமல் ஏன் வெவ்வேறு இடங்களிற் குடியேறுகின்றன? நெருக்கடியாய் ஒரே இடத்தில் பலகூடி அவதிப்பட்டு அவியாதிருக்கவே. சாணியிலே பிறந்து சாணியிலே வளர்ந்து சாணியிலேயே நசிக்கும் சாணிப் புழுப்போல் ஜனநெருக்கம் மிகுந்த ஜனன பூமியில் சுகங்கெட்டுச் சீரழிபவர்களுக்கு இது ஓர் சிறந்த புத்திபுகட்டக் கூடியதாயிருக்கிறது. நாமிப்

படிச்சொல்வது நம்மவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி வேற்றிடங்களில் குடிபுகவேண்டுமென்ற கருத்துக் கொண்டல்ல. ஏனெனில் அங்ஙனம் செய்வது முடியாதகாரியம். எப்படியெனில், முதலாவது ஜாதிக்கட்டுப்பாடு என்ற ஒரு பெருந்தொல்லை தொன்றுதொட்டுளது. இதினின்றும் தப்பி வெளியேறினாலும் அந்நிய தேசங்களில் கறுப்பு மனிதர் காலடி எடுத்துவைக்க முடியாதபடி அடாத முறைகேடான பல நிபந்தனைகள் வெள்ளையர்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் நம்மவர்கள் இந்தியாவிலேயே ஜன அடர்த்தி இல்லாத பாகங்களில் போய் சுகமாக வாழவேண்டுமென்பதே நமது துணிபு. நிற்க.

ஜனன பூமிக்கும் நூதன வசதிஸ்தானத்திற்கும் உள்ள பரஸ்பர உறவு, நோக்கம், அவா, ராஜரீக சம்பந்தம் முதலிய மனோகரமாயும் படிப்போர்க்கு அறிவு புகட்டுவதாயும் இருக்கக்கூடும். ஆனால் வெகுதொலையில் வெவ்வேறிடங்களில் உள்ள இவ்வற்பப் பூச்சிகளுக்கும் அவா, ராஜரீகக் கட்டுப்பாடு முதலியன இருக்குமா என்று சிலர் நினைக்கக்கூடும் அப்படி நினைப்பது பிசகு. ஏனெனில், நமக்கு அவை தெரிய வராவிட்டால் இல்லையென்று நாமெப்படித் துணிந்து சொல்லலாம்? சாஸ்திர பண்டிதராகிய ஹக்ஸ்லி சொல்லுகிறபடி நாமும் பவளப்பூச்சி ஜன்மம் எடுப்போமேல் அப்பொழுதுதான் அவற்றைப் பற்றிய யாவும் நனகு புலப்படும் போலும். ஆதலின் நமக்குள்ள சக்திகள் சிற்றுயிர்கட்கண்ணும் உண்டென்றாவது இல்லையென்றாவது கண்டிப்பாய்ச் சொல்ல நமக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. அச்சக்திகள் அவ்வவற்றிற் கேற்றவண்ணம் அமைந்திருக்கக் கூடும். ஆனால் அவைகளைப்பற்றி இன்னும் நாமெவ்வளவோ அறிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

பவள வியாபாரம்.

இதுகாறும் அரியவிலை உயர்ந்த பவளத்தை உண்டுபண்ணும் பூச்சியைப்பற்றிப்பேசினோம். இனி பவளத்தையேபற்றி சில பகருவாம். இஃதோர் அரியவியாபாரச்சரக்கு. பவளப்பாறைகள் இந்து மகாசமுத்திரத்திலும் பசிபிக்மகாசமுத்திரத்திலும் வளருகின்றன. இப்பாறைகளிற் சில 500 மைலுக்கு அதிகமான நீளத்தோடு இருக்கும். அகலம் ஏறக்குறைய 50 மைல். ஆயிரம் மைலுக்கதிக நீளமுள்ள பாறைகளும் உள.

பவளம் பலநிறத்தது. வெள்ளையாயும் கறுப்பாயும் இருப்பவை நற்பவளமாகா. செந்நிறத்ததல்லாதன பெருஞ்சுண்ணாம்புக் களஞ்சியங்களேயாகும். நாகபட்டணம் முதலிய விடங்களில் பெரும்படகுகள் சுண்ணாம்பின் பொருட்டே இப்பவளப் பாறைகளை ஏற்றிக்கொண்டு வருவதைக் காணலாம். சிவப்புப்பாறைகள் விசேஷமாய் மத்தியதரைக் கடலில் உள்ளன. இது ஓர் அரிய வியாபாரச் சரக்காதலின், மத்தியதரைக்

கடலைச் சுற்றிலுமுள்ள பல துறைமுகங்களிலும் எண்ணிறந்த ஜனங்கள் இது சம்பந்தமாய் அதிக ஊக்கத்துடன் வேலை செய்துகொண்டு வருகின்றனர். தூற்றுக்குடி முத்துச்சலாபம் போலவே தியூனிஸ் அல்ஜீரியா மொராக்கோ முதலியவிடங்களிலும், நேபிள்ஸ்க் கருசாண்மையிலும் சார்டினியா, கார்ஸிகா முதலிய தீவுகளின் கரையோரங்களிலும் மனிதர் தத்தம் படகுகள் நூதனச் சூழ்ச்சிகள் முதலியவற்றுடன் முழுகி சதா வேலை செய்துகொண்டிருக்கக் காணலாம். பவளம்பெற மனிதர் சமுத்திரத்தில் ஆழமுழுகி அப்பூச்சிகளைப் பற்றியெடுப்பர். இங்ஙனம் குளிகாரர் வெளியில் கொண்டுவரும் பவளமெல்லாம் அழுகிப்பதனழிய விடப்படுகின்றன. இப்படிச் செய்வதால் மிருதுவான பாகமெல்லாம் போய் பசையற்ற எலும்பே மிச்சப்படும். இவ்வெலும்பின் நிறம் ஆரம்பத்தில் மனத்தைக் கவரக்கூடிய அவ்வளவு அழகுடன் இராது. அது அழகுற வேண்டுமானால் ரோம் ஜினோவா, நேப்பிள்ஸ் முதலிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் செதுக்கப்பட்டு மெருகிடப்படவேண்டும். அப்பொழுதுதான் அதற்கு ஒரு காந்தியும் பளபளப்பும் ஏற்படும். பின்னர் அது இத்தொழிற்சாலைகளிலேயே மணிமணியாய் நறுக்கப்பட்டு உலகத்துள்ள வெவ்வேறு ஊர்களுக்கும் அனுப்பப்படுகிறது. முன்பு பவளச் சலாபத்திற்காக ஐரோப்பிய ஜாதியார் பலருக்குள் பிரமாதப் போட்டி இருந்து கொண்டிருந்தது. ஆனலிப்பொழுதோ இத்தாலியாராலேயே இத்தொழில் பெரும்பாலும் கையாளப்பட்டு வருகிறது.

உபயோகம்.

தொன்றுதொட்டு நாளைவரை இந்தியர்களாகிய நாம் நற்பவளத்தைக் காந்தியாகவும் களங்கமற்ற நல்வர்ணமாகவும் இருக்கும் விலையேறப்பெற்ற ரத்தினங்களில் ஒன்றாகமதித்து வருகிறோம். (2) தங்கள்சிரோகவசத்திற்கும் யுத்தாயுதங்களுக்கும் சிறந்தஅணிகளாக இதனை எகிப்தியரும் பிராஞ்சியரும் உபயோகப்படுத்தி வந்தனரென்றும் தெரியவருகிறது. (3)இற்றைக்கும் இந்தியாவில் நாம் மதிப்பதுபோல் அதனை ஓர் சிறந்தவைத்தியச் சரக்காக உரோமர் எண்ணிவந்தனர். (4) நம்மவர்கள் இதனைப்பஸ்மமாக்கி அப்பஸ்மத்தை இருமல், கக்குவான், மிடற்றழற்சி முதலிய பலநோய்களைப் போக்கச்சிறந்த கைகண்ட ஔஷதமாய் உபயோகிக்கின்றனர். யாமே எமது சொந்தக்கையால் இப்பஸ்மம் தயாரித்து அதன் பிரயோஜனத்தை நேரில் கண்டறிந்தோம். (5) தற்காலத்திலும் இத்தாலியர் இப்பவளத்துண்டத்தை மலடுநீக்கவும் கண்திருஷ்டிபோக்கவும் கூடிய ஓர் சிறந்த ரக்ஷையாகக் கருதுகின்றனர். ஏதோ ஓர் சிறந்ததன்மை இருக்கின்றதெனக்கருதி பவளம்மாத்திரமல்லாமல் முத்தையும் நாமணிந்துவருகிறோம். (6) இந்தியாவிலும் அநேகரால் பவளம் ஓர் ரக்ஷையாகக்கருதப்படுவதுடன் ஓர் சிறந்த அணிகலனாயும் இருப்பதால் யாவரும் இதனை ஆவலுடன் அணிவர்.

விஷயச்சுருக்கம்.

1. நற்பவளம் ஓர் செடியினின்று உண்டாவதல்லவென்றும் அது ஆழ்கடலில் வசிக்கும் பலகோடி சிறு பூச்சிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் தமக்குள்ளேயே உண்டாகும் ஓர் கடின பதார்த்தமென்றும் அக்கடின பதார்த்தமே அவற்றிற்கு எலும்புகள் போலாகின்றனவென்றும் அறிந்து கொண்டோம்.

2. இதனை உற்பத்தி செய்யும் பூச்சியின் சரீரம் இரண்டு தோலடுக்குகளால் ஆக்கப்பட்டிருக்கின்றதென்றும், அவற்றுள் புறத்தோல் கூச்சத்தை விளைவிக்கக்கூடியதென்றும், உள்தோல் வாய், ஆகாரக்குழாய், இரைக்குடல் உதரக்குழி முதலிய கொண்டதென்றும், அதற்கு ஜீரணிப்பிக்கும் சக்தி பெரிதும் வாய்த்துள்ளதென்றும் அறிந்தோம்.

3. உதரக்குழியில் ஜீரணிப்பு, சுவாசம், ரக்த ஓட்டம், பிரதியுற்பாதனம் முதலிய நடந்தேறுகின்றனவென்றும் தெரியலானோம்.

4. இப்பூச்சியானது தனது இரையைப்பற்றிக்கொள்ள அதற்கு அடுபடையும் தன்னை இம்ஸிக்க வரும் பிராணிகளை அணுகவொட்டாதடித்துத் துரத்தத் தடுபடைகளும் கொண்டுள்ளதென்றும் கண்டோம்.

5. தவிரவும் ஒன்று உட்கொள்ளும் இரையே மற்றவைகட்கும் சமமாகப் போய்ச்சேருவகையும், இவை யாவும் ஒத்து ஏற்றத்தாழ்வின்றி மனிதரும் அடையாத கூட்டுறவைப் பெற்று வாழ்வதையும் அறியலானோம்.

6. இது பிரதியுற்பத்தி செய்யும் இருவகையும் நமக்குத்தெரியும். ஒரு வகையால் சந்ததி விருத்தியாவதும் மற்றொன்றினால் நூதன வாசஸ்தலங்கள் ஏற்படுவதும் தெரியவந்தன.

7. ஒரே குடும்பத்திற்றோன்றிய ஸ்திரீ புருஷர்களின் பரஸ்பர சம்பந்தம் உதவாதென்றும் அப்படிச்செய்வதால் இறுதியில் குலம் நசிக்கும் என்றும் குழந்தைகள் பிறந்தவுடனேயே தம் குடும்பத்தில் இன்னார்க்கென்று பொட்டுக்கட்டிப்போடும் புண்ணியவான்களறிவார்களாக.

8. கடைசியாக பவளத்தின் உபயோகமும் அது இருக்குமிடமும் அது வியாபாரமாகும் ஸ்தலங்களும் அறிந்தோம்.

9. இதனால் நாம் அற்பப்பிராணிகளைப்பற்றியும் அறிவதினால் எவ்வளவு பயனடையலாகும் என்பதூஉம் புலப்படும். இனியேனும் இத்தகைய சிறு பூச்சிகளைக்கேவலமாய் நினைத்து விடாமல் அவற்றுள் நமக்குப் புலப்படா விஷயங்களைப்பற்றி ஆய்ந்தறிந்து பார்த்துத் தெளிவோமாக.

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்கிராசனாதிபதி, மாணவர் செந்தமிழ்ச் சங்கம், மதுரை.

சோதனைக் கிருஷித் தொழில்.

நம் இந்துநாடு தொன்றுதொட்டு வேளாண்மைத்தொழிலை மிகவும் உயர்வாக நினைக்கப்பட்ட நாடு என்பது உலகம அறிந்த விஷயம். "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்றும் "உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்றும் "தொழுதூண் சுவையின் உழுதூணினிது" என்றும் "பூமிதிருத்தியுண்" என்றும் பெரியோர் கூறியிருப்பதால் அதன் மாண்பு விளங்கும். தற்காலம் நூற்றுக்கு எழுபதுபேர் வரை நம் நாட்டில் விவசாயஜீவனம் செய்பவர்களென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இத்தனை ஜனங்கள் அத்தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டிருப்பதால் நம் காருண்ய கவரன்மெண்டாரும் இதன் அபிவிருத்தி விஷயமாய்ப் படாத பாடெல்லாம் பட்டு வருகிறார்கள். குடிகளுக்குப் பாசன விஷயமாகவும் சாகுபடிக்கு இன்றியமையாத மற்றைய சௌகரியங்கள் தீர்மானிக்கும்படி ஓராலோசனை சபை ஏற்படுத்தி அவர்களது தீர்மானங்களும் கவரன்மெண்டாரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் இப்பெருத்த விஷயத்தில் குடிகளுக்கு இன்னும் போதுமான சௌகரியங்கள் ஏற்படவில்லை. இம்முக்கியமான அபிவிருத்தி விஷயத்தில் கவரன்மெண்டாருக்குப் பல விஷயங்களை ஆராய்ந்தறிந்து எடுத்துச் சொல்வதோடு நாமும் மிகவும் உழைக்கவேண்டும். கிருஷி விஷயமாய் அந்நிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தங்களை நம்மவரும் நன்கு கவனித்து அம்முறைகளை நம் நாட்டாருக்குள் அதிகமாய்ப் பரவச்செய்ய வேண்டியது இன்றியமையாதது. இவ்விஷயமாய் நம் மதுரை ஜில்லாபோர்டார் எடுத்துக்கொண்ட நன்முயற்சி யாவராலும் பாராட்டத் தக்கது.

சென்றவருஷம் ஆகஸ்டுமாதம் 22உ அப்போர்டார் தற்கால சாஸ்திர முறைகளை அநுசரித்துச் சில பரிசோதனைகள் செய்யக்கருதி சிற்சில ஏற்பாடுகள் செய்து முடித்தனர். அம்முயற்சிகளை நிறைவேற்றுவதாக வடகரைஜமீன்தார் மகா-ா-ஸ்ரீ வி. இராமபத்திரநாயுடுகாரு அவர்களும் மானாமதுரை மிஷனரி ரெவரண்ட் ஹேறால்டான் அவர்களும் ஷை போர்டாரிடம் வாக்களித்தனர். சகல சுகுணங்களும் கல்வியும் பொருந்திய ஷை ஜமீன்தாரவர்கள் மிக்க ஊக்கமுடையவராய்ச் சைதாப்பேட்டை விவசாய கல்லூரி பட்டதாரியாகிய மகா-ா-ா-ஸ்ரீ ஜி. காமாக்ஷிராவு அவர்களது பேருதவியைப் பெற்று உடனே அம்முயற்சியை இனிது தொடங்கினர். ராவுஜி அவர்களும் உத்தமபாளையம் மிராசுதார்களிலொருவர். ஏழு மாத காலங்கள் அவர்களிருவரும் செய்த முயற்சிகளைப்பற்றியும் அவற்றின் பயன்களைப்பற்றியும் இருவரும் ஜில்லா போர்டுக்கு எழுதிய ரிபோர்டின் அச்சுப்பிரதி ஒன்று நமக்கு அனுப்பியதற்காக ஜமீந்தாரவர்களுக்கு மிக்க வந்தனம் அளிக்கின்றோம். தமக்கும் பிறருக்கும் யாதொரு சுகமின்றி புத்தியையும் பொருளையும் காலத்தையும் வீணே செலவழித்துக்கொண்டு வரும் நம் நாட்டுப் பல ஜமீந்தார்களையும் பிரபுக்களையும் போலன்றி பொதுஜன க்ஷேமத்தையே கடைப்பிடியாகக் கொண்டொழுகுபவரில் ஒருவர் நம் ஜமீன்தார். தம்சொந்த நிலங்களில் 11 ஏக்ர் 82 செண்டுகளை ஜன க்ஷேமார்த்தத்துக்கு அநுகூலமாயிருக்கும் இந்நன்முயற்சிக்கென்று ஒதுக்கிவிட்டனர். சாஸ்திர முறையாய் கிருஷி செய்வதில் மகா நிபுணரான காமாக்ஷி ராவு அவர்களும் பழைய முறை ஒருங்கே ஒழித்துவிடாமல் அவைகளைத் தழுவியும் புதுமுறைகளில் தேசகால வர்த்தமானங்களுக்கேற்றவைகளைக்கொண்டும் செய்த முயற்சிகள் மிகவும் பயன்பெற்றனவாக ரிபோர்ட்டில் கண்டிருப்பது எவர்க்கும் பரமானந்தத்தை விளைவிக்கக்கூடியது. நாமே நேரில் அவர்கள் செய்திருக்கும் கரும்பு சாகுபடியைக் கண்ணாரக் கண்டுகளித்தோம். நான்குவித பாகங்களின் நான்குவித எருவிட்டுச் சாகுபடி செய்திருந்தது வெகு நேர்த்தியாயிருந்தது. கரும்பின் பருமனையும் உயரத்தையும் கண்ணுற்றவர்களுக்கு வியப்பும் ஆனந்தமும் உண்டாகாமலிரா. குடியானவர்கள் சாதாரணமாய்ச் சாகுபடி செய்வதைவிடப் பன்மடங்கு மேன்மையாகவே இருந்தது. செல

வும் அதிகம் ஆகவில்லை. "நிலத்திற் கனியென்ப நெல்லுங்கரும்பும்" என்ற வண்ணம் நெல சாகுபடியும் செய்யப்பட்டிருந்தது. அது கரும்பைப்போல் சிறப்பாயிராவிடினும் சிலாக்கியமாகவேயிருந்தது. அக்கம் பக்கம் கிராமங்களிலிருந்து பல குடியானவர்கள் இவற்றைக் கண்ணுற்று மூக்கில் விரல் வைத்தார்கள். வடகரை சென்று இம்முயற்சிகளை நேரிலேயே பார்த்தானந்தித்தவர்களாகிய கலெக்டர் துரையவர்களும், டிப்டி கலெக்டர்களும், ஜில்லா என்ஜினியரும், முனிசீபுகளும், முனிசிபல் கௌன்சிலர்களும் நற்சாக்ஷிப்பத்திரம் பகர்ந்திருக்கின்றனர். அவற்றையும் ரிபோர்டில் சேர்த்து அச்சிட்டிருப்பது உசிதமானதே. காமாக்ஷி ராவு அவர்களது ரிபோர்டில் நூதன சாகுபடிக்குரிய பல அரிய விஷயங்கள் தெளிவாய் காட்டப்பட்டிருக்கின்றன. ஜமீந்தாரவர்கள் தம் ரிபோர்ட்டு 11-வது பாராவில் பல துன்பங்களுக்கிடமான ஜல்லிக்கட்டை நிறுத்தவும் மாட்டுக்காக்ஷி சந்தை ஏற்படுத்தவும் சாற்றியிருக்கிற யோசனை மிகவும் வியக்கற்பாலது. கவரன்மெண்டார் அது விஷயமாய்த் தீரக்காலோசனை செய்து அந்நன்மையைக் கூடிய சீக்கிரம் பெறச் செய்வார்களாக. நம் நாட்டு மற்றை ஜமீன்தார்களும் மகா-ள-ள-ஸ்ரீ இராமபத்திர நாயுடுகாரு அவர்களை இவ்விஷயத்தில் வழிகாட்டியாகமதித்துப் பின்பற்றி விவசாய அபிவிருத்தி செய்வார்களானால் நாட்டுக்கு நன்மையுண்டு. 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' ஜமீன்தார் அவர்களும் ராயர் அவர்களும் நீடூழி வாழ்வார்களாக.

பத்திராதிபர்.

காலஞ்சென்ற
டாக்டர் ஜான் மர்டாக்.

இவ்வரிய கல்விமான் நாளது மீ 10உ புதன்கிழமை சென்னையில் பரலோகஞ்சேர்ந்த துக்ககரமான சங்கதியை யறிந்த ஒவ்வொரு இந்தியனும் விசனப்படாமலிரான். இவருக்குப் பிராயம் 85. சீதள ஜுரத்தால் சின்னாள் பீடிக்கப்பட்டு அதற்கே இரையானார். இம்மகான் சற்றேனும் கர்வமில்லாதவர். இவர் நம் நாட்டுக் கல்வி விஷயத்தில் பாடுபட்டுழைத்ததற்கு

நாம் எவ்வித நன்றி பாராட்டினும் ஈடாகாது என்பது திண்ணம். இம்மகானை நாம் நேரில் கண்டிருக்கிறோம். இவரது கம்பீர பார்வையும் சாந்த குணமும் அடக்கமும் எவர் மனத்தையும் கவருமென்பதிற் சிறிதுமையமில்லை. "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்றதைப் பற்றுக்கோடாகக்கொண்டு ஒழுகி வந்தவர். மனோவாக்கு காயம் என்ற திரிகரண சுத்தி யுடையவர். புத்தி விசாலத்துக்குத் தக்க வாக்குவல்லபம் இல்லாதவராயினும் எவ்விஷயங்களையும் தெளிவானநன்னடையில் எழுதக்கூடியவர்கள் இவரைப்போல் அகப்படுவது அரிது. கிறிஸ்துவமதத்திலேயே பரம பக்தியுடையவராயினும் பொதுவான நன்மைகளைப்பற்றியே பல புத்தகங்கள் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றனர். நம் நாட்டுக்கல்வி யபிவிருத்தி விஷயத்தில் இவரைப்போல் உழைத்தவர் சிலரேயாவர். வலக்கை செய்ததை இடக்கையறியாவண்ணம் பல அரியவிஷயங்களை யாதொரு டாம்பீகமுமின்றி முடித்திருக்கின்றனர். பெருங்கூட்டங்களில் இவர் வருகிறதில்லை. ஆதலால் இவரைப் பார்த்துமிரார். இரகசியமாய்ப் பல நன்மைகளைப் புரிந்த பரமோபகாரியாகிய இவரது உத்தம குணத்தை நாம் என்றென்றும் வியக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பிரமசரிய ஆச்சிரமத்தையனுஷ்டித்துப் பல தேசங்களிலும் சென்று கல்வி முறைகளையறிந்து வந்து நம் நாட்டுக்கு மாரியாகப் பொழிந்தனர். இவர் பிறந்தது ஸ்காட்லாண்ட் ஆயினும் இவர் தம் ஆயுள்காலமெல்லாம் வசித்ததுமுழைத்ததும் நம் நாடே. இவரது நற்குண நற்செய்கைகளைப்பாராட்டி நம் இந்திய கவரன்மெண்டார் வெள்ளிப்பதக்கமும் பொற்பதக்கமும் அளித்து கௌரவப்படுத்தினர். இவரது கல்வியறிவும், பரோபகார குணமும், நிகர்வமும், பொறையும், தூய்மையும், ஊக்கமும். உழைப்பும் பகவத் பக்தியும் எவரும் பாராட்டிப் பின்பற்றத்தக்கவை. இவரது பேரும் புகழும் எந்நாட்டிலும் பரவியிருக்கின்றது. சாகுங்காலத்திலும் "ஒரு தேசாபிமானி தன் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமை' என்று ஒரு பிரபந்தம் எழுதிக்கொண்டிருந்தனராம். இம்மகானை யிழந்தது நம் நாட்டுக்கு ஓர் பெரும் கஷ்டமே.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

நம் கர்ஸன் பிரபு அடுத்த அக்டோபர்மீ கடைசியில் நம் இராஜப் பிரதிநிதியாய் வருவார்.

* * * * *

சிவகாசிக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட வெள்ளையத்தேவன் இறந்து போய் விட்டதாக வதந்தி.

மெக்ஸிகோவில் ஒரு பாம்பின் நீளம் 37-அடி இருந்ததாம். இதைப் போன்ற பெரியபாம்பு இதுவரை எவரும் கண்டதில்லையாம்.

* * * * *

செம்பு நாணயங்களுக்குப் பிரதி பித்தளை நாணயங்களும் நிக்கல் நாணயமும் ஏற்படப் போகிறதாம். அவை கனக்குறைவானதால் சௌகரியமாகவே இருக்குமாம்.

* * * * *

தஞ்சாவூர் மிருதங்கம் நாராயணசாமிராவு சென்றமீ 26உ பரமபத மடைந்தாரெனக் கேள்வியுற்று விசனிக்கிறோம். இவரைப்போன்ற நிபுணர் அகப்படுவது கஷ்டம்.

* * * * *

தஞ்சாவூர் ஜில்லா போர்ட்டார் வேதாரணியத்திலிருந்து திருப்பந்துறை வரை ரயில்போடத் தீர்மானித்திருக்கிறார்களாம். நீடாமங்கலத்திலிருந்து பாதை தொடங்குமாம்.

* * * * *

ஐந்துரூபாய் நோட்டுகள் இதுகாறும் அந்தந்த இலாகாவில் மாத்திரம் செல்லாகி வந்தது. இப்பொழுது இந்தியா முழுவதும் செல்லும்படியான ஏற்பாடு செய்ததைப்பற்றிச் சந்தோஷிக்கிறோம்.

* * * * *

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயிலில் நெய்திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பட்டர் புனர்விசாரணையில் விடுதலையடைந்தார் என்பதை கேட்க எவரும் சந்தோஷிப்பார்களென்று எண்ணுகிறோம்.

* * * * *

ருஷியா ஜப்பானிய யுத்தம் இன்னும் மும்முரமாய் நடந்துவருகின்றது. ஜப்பானியரே பெரும்பாலும் வெற்றியடைந்து வருகிறார்கள். சத்துரு விஷயத்தில் இவரது யுத்த தர்மங்கள் வியக்கற்பாலது.

* * * * *

நாஸிக் நகரத்துக்குச்சமீபமாய் கோதாவரிநதியில் ஒரு ராக்ஷஸரூப மகப்பட்டதாம். அதன் நீளம் 37½ அடி அகலம் 15 அடி பற்கள் உரல் போன்ற உருவமுடையனவாம். இதை கல்கத்தாவுக்கு அனுப்பியிருக்கிறார்களாம்.

* * * * *

சென்னை இராஜதானியில் 1898வரு ஆகஸ்டுமீ முதல் 1904வரு ஜூலைமீ 23உவரை பிளேகினால் இறந்தவர்களின் தொகை 42,453. மொத்தம் கண்டதொகை 53,918. பல்லாரியில் மட்டும் 19,432 பேர்கள் இதற்காளானார்கள்.

* * * * *

ரேவரெண்ட் கெல்லெட் அவர்கள் கிறிஸ்தியன் காலேஜ் போதகாசிரியர்களிலொருவரும் திராவிடவர்த்தமானி பத்திரிகையை மிக்க ஊக்கத்துடன் நடத்திவந்தவருமாகிய இக்கனவான் சென்ற ஜூன்மீ 29உ இங்கிலாந்தில் காடிங்காம் என்னும் ஊரில் பரலோகஞ்சென்றனர் என்பதைக் கேட்கவே நமக்குண்டாகும் விசனத்திற்கு அளவில்லை. இவர் நம் சென்னை வித்தியாவிஷயத்தில் மிக்க ஊக்கத்துடன் உழைத்துவந்தவர்களில் ஒருவர். இவரது அகாலமரணம் நம் சென்னைக்கு ஒரு பெருநஷ்டமே. சென்னை உபாத்தியாயசங்கத்தார் தங்கள் புத்தகசாலையை இவர் பெயரிட்டு அழைப்பதாகத் தீர்மானித்திருப்பது உசிதமே. நம்பாநுவுக்கு மாற்றுப்பத்திரம் அனுப்பிப் பேருபகாரம் புரிந்தனர்.

பத்திரிகை வரவு.

1. **பரதரிசனம்:**—இப்பெயர்கொண்ட தமிழ்ப் பத்திரிகையொன்று ஒவ்வொரு ஆங்கிலமாசம் முதல்தேதியில் வெளிப்படுவதாகத் தோன்றி சென்ற ஜூலைமீ ஆகஸ்டுமாசங்களில் வரப்பெற்றோம். இது தத்துவ விசாரணையைப்பற்றி நன்கு விளக்கிச்செல்கின்றது. இதனை நடத்துவோர் சென்னை பிளாக்டவுண் பரதரிசன சங்கத்தாரே. இப்பத்திரம் பெற்றுக் கொள்ள விருப்பமுடையவர்கள் யாவரும் இலவசமாகவே பெற்றுக் கொள்ளலாம். சங்கத்தார்க்குத் தெளிவாகத் தமது விலாசமெழுதிக் கேட்டுக்கொண்டால் போதும். நம் நாட்டில் இதுவரை யாரும் இவ்வாறு இனாமாகப்பத்திரிகைநடத்த முன்வரவில்லை. இந்தப்பரதரிசனம் நீடுவாழ்ந் திருவருள்மல்குக.

2. **புலால்மறுத்தல்:**—மாமிச போசனத்தால்வரும் தீமைகளையும் அஃதில்லாமையால்வரும் நன்மைகளையும் சுருதி யுக்தியநுபவங்களிலாக எடுத்து நன்கு விளக்கும் ஒரு தனிப்பத்திரம் இது. கற்றோரும் மற்றோரும் பொருளறிந்து வியந்துபாராட்டும்படி இனியதமிழ்நடையில் தெளிவாக எழுதப்பெற்றது. நம்விவேகபாநு அளவில் 9 பக்கங்கொண்டது. இதனை யெழுதி உலகுக்குபகரித்தவர் கொழும்பு செக்கடித்தெரு 89 நீ. ஸ்ரீமாந். மு. வயித்தியேசுவரன் அவர்களே. தற்காலத்து நம் நாட்டில் மதுபானமும் மாமிசபக்ஷணமும் பெருகிவருவதால் இப்படியான துண்டுபத்திரிகைகள் ஆங்காங்குதோன்றிப் பலர்க்கும் அறிவு புகட்டுவது மிகவும் அவசியமே. இத்துண்டுபத்திரம் படிப்பவர்க்கு மனமகிழ்ச்சி தருவது திண்ணம். இதனை ஆக்கியோர்பால் தமிழ்மக்கள் யாவரும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையவர்களே.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவிய தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு ரூ. 35
2. மகா-௱-௱-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு. ... ... ரூ. 25
3. மகா-௱-௱-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ... ரூ. 10
*4. மகா-௱-௱-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமீந்தார் தேவிகோட்டை வரவு... ரூ. 25

* இவர்கள் 1903 வருஷத்திலும் 25ரூ நன்கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம வந்தனமளிக்கின்றோம்.

5. மகா-௱-௱-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதும்பை சிலோன் வரவு ... ரூ. 25
6. மகா-௱-௱-ஸ்ரீ பி. எஸ். பரமசிவக்கவுண்டரவர்கள், உஞ்சனைவகையரா மிட்டா ஜமீந்தார், போக்கம்பாளையம் வரவு ... ... ரூ. 50
7. மகா-௱-௱-ஸ்ரீ அ. பாப்புரெட்டியாரவார்கள், தோளூர் மிட்டாஜமீந்தார், இரம்பூர், வரவு ... ... ரூ. 35
8. மகா-௱-௱-ஸ்ரீ தண்டி வேலக்கவுண்டரவர்கள், விட்டம்பாளையம் மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ. 25
9. மகா-௱-௱-ஸ்ரீ பூ. லட்சுமணக்கவுண்டரவர்கள், காளிப்பட்டி வரவு ... ... ரூ. 20
10. மகா-௱-௱-ஸ்ரீ குழந்தைவேலுக்கவுண்டரவர்கள், கோனூர் மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ. 10
11. மகா-௱-௱-ஸ்ரீ எஸ். சுப்பராயக்கவுண்டரவர்கள் மிட்டாஜமீந்தார் காட்டுப்பாளையம் ... ... ரூ. 10
12. ம-௱-௱-ஸ்ரீ முத்தவெங்கடாசலரெட்டியாரவர்கள், மரூர்ப்பட்டி மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ. 10
13. மகா-௱-௱-ஸ்ரீ சாவடி நாராயணசாமிபிள்ளையவர்கள் யூனியன்சேர்மேன் உடையம். வரவு ... ... ரூ. 10

பத்திராதிபர்.

வைத்தியம்.

[முன் தொடர்ச்சி]

சுவாசகாசரோகிகள் இம்மெழுகால் வியாதியைப்பற்றறத் தொலைத்துக்கொள்ளாவிட்டாலும் உபாதிகண்டபோதெல்லாம் உபயோகித்து வருவார்களாயின் ஆயுள்வரை அவ்வியாதியில்லாதவர்கள் போலவே சுகமாய் வாழ்வார்கள். பலநாள் இவ்வியாதிக்கு இம்மெழுகைச்சாப்பிட்டு வந்தோர்க்கு மறுபடியும் தோன்றாமற் குணமாய்விடுவதுமுண்டு.

அபஸ்மாரரோகிகள் காலை மாலை அரை மண்டலஞ் சாப்பிட்டு மருந்தை நிறுத்தி 20-நாள்கழித்துப் பின்னும் அரைமண்டலஞ் சாப்பிட்டாற் குணமாய்விடும்.

சுரமுதலியரோகங்களிற் கபமுண்டானால் கர்ப்பூரவல்லியிலையை வாட்டிப்பிழிந்த ரசத்திலாவது முலைப்பால் தேன் இஞ்சிச்சுரசம் முதலியவற்றிலாவது ஒன்றிரண்டுவேளை கொடுக்கக்குணமாகும்.

உஷ்ணவயிற்றுவலி, பக்கங்களை யிழுத்துப்பிடித்தலுக்கு வெற்றிலை ரசத்திலும் மந்தவயிற்றுவலி உப்பலுக்கு ஓமக்கஷாயத்திலும் ஒருவேளை கொடுக்கக் குணமாகும்.

குழந்தைகட்குக் காணும் மாந்தம், வலிப்பு, வீச்சு, இளைப்பு, சளி, சன்னி முதலியரோகங்கட்கு ஒரு அரிசியிடை மெழுகை முலைப்பாலிற் கரைத்துப் புகட்டவேண்டியது. குணமாகும் வரையுங் காலை மாலை புகட்டித் தாயை பத்தியத்தில் வைத்துவிடவும். எத்துணைச் சிறுகுழந்தையாயிருப்பினும் அளவைக் குறைத்துக் கொடுப்பதில் பயமேது. விஷமில்லாத வீரியமுள்ள நல்ல மருந்து.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து வாய்வு, கபம், சுவாச சம்பந்தப்பட்ட எல்லாப் பிணிகட்கும் ஏற்ற அநுபானங்களிற் கொடுத்தால் தவறாது குணங் காணலாம்.

பத்தியம்:—பழவர்க்கம், மோர், தயிர், புளி, குளிர்ச்சியுள்ள பதார்த்தம் இவைகளையும் வாயுவையுண்டாக்கும் பதார்த்தங்களிற் சொற்பத்தையும் சேர்க்கலாகாது.

இலகுவிரேசநி.

புதிய சிவப்பு ரோஜாமலரின் பச்சையிதழ் பலம்-10, சீனிச்சர்க்கரை பலம்-30. ரோஜாவிதழ்களைக் கல்லுரலிலிடித்துச் சர்க்கரை சேர்த்து மிஸ்ரமித்து வைத்துக்கொள்ளவும்.

மலக்கட்டுடையவர்கள் காலை மாலை புன்னைக்காயளவு சாப்பிட்டுவந்தால் தாராளமாயிறங்கும். பேதியானால் அடுத்த நேரமே மருந்தைக் குறைந்த அளவில் எடுத்துக்கொள்ளவேண்டும். நாடோறும் பேதியாகும்படி எந்த மருந்தையும் புசிக்கலாகாது. புசித்தால் உஷ்ணித்துத் தேகங்கெடும்.

2-ஆழாக்குக் காய்ச்சிய பசுப்பாலில் கழற்சிக்காயளவு மருந்தைக் கரைத்து நாடோறுஞ் சாப்பிட்டு வருபவர்களுக்குச் சீரண சக்தியம் தேகபலமும், காந்தியும், ஆரோக்கியமும் உண்டாகும். உஷ்ணம் நீங்கும். அதிக தித்திப்பு வேண்டியிருந்தாற் சர்க்கரை தேவையான அளவுஞ் சேர்த்துப் புசிக்கலாம். பத்தியமில்லை.

வீக்கத்திற்குப் பூச்சு.

முழங்கை, முழந்தாளின் கிழுறுப்புகளிலுண்டாகும் நீர்கொண்ட வீக்கங்களுக்கு, பழுத்த எருக்கிலையை வாட்டிப்பிழிந்த ரசத்தால் காவிக்கல்லை யரைத்துப் பூசிவரவேண்டியது. இது அவ்விடங்களிலுள்ள நீரையகற்றி இரத்த ஓட்டத்தைச் சரிப்படுத்தி 2, 3 நாளில் வீக்கத்தை வற்றச்செய்யும். வீக்கத்தில் எரிவிருந்தாலும் சிவப்பு நிறந்தோன்றினாலும் இதைப் போடலாகாது. எவ்வளவு நமைச்சலிருந்தாலும் போடலாம். சாற்றை அப்போதைக்கப்போது புதிதாய்ச் சேகரித்துக்கொள்ள வேண்டியது. உள்ளங்காலிலும் நகங்களிலும் படாமற் பூசவேண்டியது.

இருமல்.

மனிதரைப் பீடிக்கின்ற கொடிய ரோகங்களுள் இது முதன்மையானது. இது ஒன்றிரண்டு வகையாயின்றி 96-பிரிவினையுடைத்தாய்த் தான் குடிகொண்ட தேகத்தை விரைவிற் பழுதாக்காது நெடுங்காலத் தொந்தரைக்குள்ளாக்கி வருத்துந் துட்டசுபாவமுடையது. இத்தொண்ணூற்றாறு பிரிவினுள் காசரோகங்களும் க்ஷயரோகங்களும் ஒழிய மற்றைய இருமல் ரோகங்கள் மரணத்தை யுண்டாக்கும் வலியில வாயினும் தொந்தரை செய்வதிற் றலைமைபூண்டன வென்பதிற் சந்தேகமில்லை. சர்வேசுரன் நமக்குப் பின்னுண்டாகும் பயங்கரமான ஆபத்தை முன்னர் தெரிவிப்பதற்காகவேதான் இருமல் என்னும் ரோகத்தைச் சிருஷ்டித்தார்போலும்.

(இன்னும் வரும்)

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சிதாலூகா.

உ
குமரன்துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 | 1904௵ செப்டம்பர்௴ | புத்தகம் 9

வித்தை IV.

[முன் தொடர்ச்சி]

முன் சஞ்சிகையில் பிரதம சிக்ஷை இவ்வாறு இருந்தால் நலமெனக்கூறினோம். அது கிராமங்களில் ஒரு விதமும் நாகரீகமுள்ள நகரங்களில் ஒரு விதமும் இருத்தலே பொருத்தமாகும். கிராமங்களில் வசிக்குங் குடிகளில் அநேகர் உழுதுண்டு வாழ்பவர். அவர் மக்கட்குக் கல்வி விவசாய சம்பந்தமாகவே இருத்தல் வேண்டும். நகரங்களில் வசிப்போர் முக்கியமாய்க் கைத்தொழிலாளிகளும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தருமே. ஆகையால் அவர்களுடைய மக்களது கல்வி அவை சம்பந்தமாகவே இருத்தல் நலம். நம் நாட்டின் க்ஷேமம் கிராமங்களின் க்ஷேமத்தைச் சார்ந்திருப்பதால் நம் கிராமங்களின் கல்வியைப்பற்றி நன்கு கவனித்தல் நம் முதற்கடமை. நம் நாட்டில் முற்காலத்தில் கல்விமாண்பெல்லாம் கிராமங்களிலே விளங்கி வந்தன. நம் அரிய பெரிய நூல்கள் கிராமங்களிலே உற்பத்தியாயின. கல்விமான்களெல்லாம் கிராமங்களிலேயே வசித்து வந்தனர். தேக சௌக்கியத்துக்கும் ஸ்நானபானத்துக்கும் ஏகாந்தமாயிருந்து கல்வியபிவிருத்தி செய்வதற்கும் ஆசாரசீலத்துக்கும் தக்க இடம் கிராமமே என்பதை உணர்ந்து அதிலேயே காலத்தைக் கழித்து வந்தனர் நம்மறிவுடையோர். அதனால் நம் கல்விமான்களெல்லோரும் கிராம வாசிகளாகவே இருந்தனர். ஏடுகள் ஏராளமாயிருந்து வந்ததும்

நம் கிராமங்களே. ஜீவகாருண்யம், சத்தியம், தயை, சாந்தி, பக்தி முதலிய சுகுணங்கள் பலவும் நன்கு விளங்கி வந்ததும் நம் கிராமங்களே. தற்காலம் அவை முற்றிலும் மாறி வருகின்றன. நம் நாட்டின் க்ஷேமத்தை நாம் கருதுவோமானால் நம் கிராமங்களின் கல்வியைப் பற்றி மிகக்கவலை எடுத்துக்கொள்ள வேண்டுவது நம் கடமை. நம் இந்தியா கவர்ன்மெண்டாரும் இது விஷயத்தில் தீர்க்காலோசனை செய்து கிராம பாடசாலைகளில் கற்பிக்கவேண்டிய கல்வி முறைகளைப் பற்றிப் பேசியிருக்கின்றனர். கிராமப்பிள்ளைகளுக்கு எண்ணுமெழுத்தும் கற்பிப்பதுடன் கிருஷி விஷயமும் நில அளவும் கிராமக் கணக்குகளும் கற்பிப்பது முக்கியம் என்பது இந்தியாகவர்ன்மெண்டாரின் கருத்து. கிராமப்பாடசாலைகளிற் கற்பிக்கவேண்டிய விஷயங்கள் இன்னும் சிலவுண்டு. சுகாதாரவிஷயங்களில் கிராமங்கள்மிகச்சீர் கெட்டிருப்பதால் அவைகளைக்கற்பிக்கவேண்டுவது இன்றியமையாதது. கிரயசாசனம், ஒத்தி, ஈடு, கடன்முதலிய தஸ்தவேஜுகளையும் குத்தகைச் சீட்டு, வாரச்சீட்டு, பகுதிச்சீட்டு முதலிய சீட்டுகளையும் எழுதத்தெரிவது கிராமவாசிகளுக்கு இன்றியமையாதது. கிராமபாங்கிகளின் ஏற்பாட்டை நன்கறிந்து அவைகளை ஏற்படுத்தலும் கிராம க்ஷேமத்துக்கு முக்கிய சாதனமாகும். ஆகையால் அவைகளின் வழிகளையும் கற்பித்தல் நலமாகும். கிராமங்களில் பாடசாலைக்கு வசதியான இடங்கள் அகப்படுவதுமன்றி வேண்டிய மட்டும் கிடைக்கின்றபடியால் பள்ளிக்கூடத்தைச் சுற்றித் தோட்டங்களிருப்பது அவசியம். கிருஷிசாஸ்திரம் தற்காலம் போதிக்கப்பட்டு வருவதுபோல் புத்தக ரூபமாகமட்டுமின்றி அநுபவ மூலமாகவும் கற்பிக்கப்படும் வண்ணம் அத்தோட்டங்களைப் பள்ளிப்பிள்ளைகளே சாகுபடி செய்யவேண்டும். தேகாப்பியாச விஷயமாய்க் கிராமப் பாடசாலைகளில் புதுமாதிரியான கவாத்து முதலியவைகளைப் பயிற்றல் சிறிதும் பொருத்தமாகாது. கிளித்தட்டு, பந்து முதலிய கிராம வாசிகளுக்குப் பிரியமான பழைய விளையாடல்களை ஆடச்செய்வதே மேன்மை. செலவு குறைவும் சௌகரியமுமான பழைய வழக்கங்களை அநுசரித்து நட-

த்தலே பெரும்பயனைப் பயக்கும். கிராம பாடசாலைகளில் வழங்கும் புத்தகங்களும் முக்கியமாய்க் கிருஷி சம்பந்தமாகவே இருத்தல் வேண்டும். கிருஷிக் கின்றியமையாத மாடுகளை வியாதியினின்றும் பேணும்பொருட்டு சொற்பம் மாட்டு வைத்தியமும் தெரிவது நலம். சில முக்கிய மூலிகைகளின் குணங்களை யறிதல் அதற்குப் பெருஞ்சாதனமாகும். இவை போன்ற விஷயங்களைக் கற்பித்தாலன்றி கிராமத்தாரின் கல்வி பயன்படாது. இவ்வாறு செய்யாமல் பட்டணங்களுக்குப் பொருத்தமான விஷயங்களை கிராமங்களில் கொண்டு திணித்துக் கல்வி புகட்டுவது பலனைத் தரமாட்டாது. கிராமங்களை வரவர நமமக்கள் வெறுப்பதற்கும் பட்டணங்களை விரும்புவதற்கும் இவ்வாறான கல்வியே முக்கியகாரணம்.

கிராமங்களின் குடிகளுக்குச் சௌகரியமான வண்ணம் இரவில் கல்வி கற்பிக்கும்படியான சாதனங்கள் ஏற்படவேண்டும். பகற் பொழுதெல்லாம் வயல்களில் வேலைசெய்யும் குடியானவர்களுக்கு இரவே கல்விகற்கத் தகுந்தகாலம். ஒரு மணி அல்லது இரண்டுமணி சாவகாசம் இக்குடியானவர்கள் கல்வி கற்றுவந்தால் போதுமானது. இவ்வாறு கல்விகற்பவர்களுக்கு யாதொரு நிர்ப்பந்தமு மிருத்தல் கூடாது. பரீக்ஷைகள் வைத்து அவற்றில் தேறினவர்களுக்கு கிராண்டு பண ரூபமாகக் கொடுப்பதற்குப் பிரதி கன்று காலி, ஏர், இறைசால் முதலிய சாகுபடிக்குரிய கருவிகளைக் கொடுக்கும் பக்ஷத்தில் கிராம வாசிகளில் ஒருவரும தற்குறிக் கையொப்பம் செய்ய இடமிராது. ரிவினியூ உத்தியோகஸ்தர்களே கிராம கல்வியை யபிவிருத்தி செய்யத்தக்கவராவார்கள். வித்தியா இலாகாதார் எத்துணை முயற்சி செய்யினும் ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் உதவியின்றி கிராம கல்வி க்ஷேமமடையமுடியாது. கிராமங்களில் கல்வியறிவு அபிவிருத்தியாகும்

பக்ஷத்தில் சுகம் பேணுமுறைகளைக் குடிகள் நன்கு கவனிப்பார்கள். அதனால் வியாதி குறையும். சாவும் மட்டுப்படும். சண்டை சச்சரவுகளும் அடிதடிகளும் திருட்டு முதலியவைகளும் தொலைந்து, கிராமங்கள் க்ஷேமமடைய இடமுண்டு. விலங்கனைய மக்களெல்லாம் மானுடத்தன்மை பெற்று கல்வியாலறிவும் அறிவால் ஒழுக்கமும் பெற்று இன்புற்று வாழ்வார்கள் என்பதற்கு ஐயமில்லை. ':அறிவுடையார் எல்லாமுடையரன்றோ."

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

மன ஏகாக்கிரம்.

ஏகாக்கிரம் என்றால் குறிப்பிட்ட பொருளிலோ விஷயத்திலோ மனம் ஒருவழிப்பட்டு நிற்றல் எனப்பொருள்படும். மனிதனிடத்து இருவித சக்திகள் காணப்படுகின்றனவென்றும் அவற்றுள் ஒன்று மெய் வாய் கண் மூக்குச் செவி ஆகிய ஐந்து ஞானேந்திரியங்கள் வாயிலாகப் புறஉலகத்து உள்ள விஷயங்களை மனத்தினால் கிரகிக்கப்படும் சக்தி யென்றும் மற்றொன்று வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் ஆகிய ஐந்து கர்மேந்திரியங்கள்மூலமாக அக உலகத்துள்ளவிஷயங்களை மனத்தினால் தோற்றுவிக்கும் சக்தி யென்றும் நம் "பானு" வில் முன்பொருகால் "சத்தியம்" என்னும் மகுடம் புனைந்த விஷயத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம்.' அத்தகைய இருவித சக்திகளையும் உடையது மனமென்றாகவே அதன் ஒருவழிப்பட்டு நிற்றலின் ஆவசியகமும் அதனால் உண்டாம் பிரயோஜனத்தின் அளவற்ற தன்மையும் எவர்க்கும் எளிதில் தோன்றற்பாலவே. ஆயினும் இவ்விஷயம் மனிதரின் நோக்கம், தொழில், ஜாதி, மதம் முதலிய பல்வகை வேறுபாட்டானும் மாறுபட்டு ஒழிந்து நில்லாது பொதுப்பட யாவர்க்கும் ஆவசியகமான தொன்றாய் எல

லாரையும் தழுவி நிற்றலின் சற்று விளக்கிக் கூறுவாம். மனிதன் மனத்தோடு கூடியிருக்கும் அவஸ்தைகளாகாநின்ற ஜாக்கிரம் சுவப்நம் என்று சொல்லப்படும் இரண்டு நிலைகளிலும் அறிதல் செய்தல ஆகிற இரண்டு தொழில்களைத்தவிர வேறே யாதொன்றும் செய்வானல்லன். இவ்விரண்டு தொழில்களையும் எதார்த்தத்தில் செய்வது மனத்தையன்றி வேறொன்றுமாகக் காண்போமல்லோம். இவ்விரண்டும் வெளியுலகத்தையும் அது சம்பந்தமான விஷயங்களையும் பற்றியாதலினாலும் மனம் என்பது அதிக சூக்ஷ்மமாயுள்ள தாதலானும் இவ்விரு தொழில்களையும் அதததற்கேற்றதும் தன்னிலும் ஸ்தூல மாயதுமான கருவிகள் மூலமாகச் செய்து முடிக்கின்றது. அறிதல் தொழிலை ஞானேந்திரியங்கள் மூலமாகவும் செய்தல் அல்லது தோற்றுவித்தல் தொழிலைக் கர்மேந்திரியங்கள் மூலமாகவும் நிறைவேறச் செய்கின்றது. ஆகவே மனிதனால் செய்யப்படுவனவற்றை யெல்லாம் அடக்கி நிற்கும் இவ்விரு தொழில்களுக்கும் மனமே கர்த்தாவாகுங்கால் அவ்வப்போது செய்யப்படுவதில் மாத்திரம் அது ஒருவழிப்பட்டு நிற்கவில்லையாயின் செய்யப்படுவது திருந்த அல்லது செவ்வையாகச் செய்யப்பட்டதாதல் யாங்ஙனம்? எதுவும் செய்யவேண்டும் விதத்தில் செய்து முடித்தற்கு மனத்தின் ஏகாக்கிரம் ஆவசியகமாதலின் எவ்விஷயத்திலேனும் ஒருவனது திறமை அல்லது சக்தியின் குறைவை நாம் பார்க்குங்கால் அது அவனது மன ஏகாக்கிரத்தின் குறையென்று வெளியாகின்றதல்லவா?

எவ்விஷயத்திலேனும் மனிதன் தேர்ச்சியடைய விரும்பினால் அவ்விஷயத்தில மனத்தை ஏகாக்கிரப்படுத்தப் படுதத அவன் தேர்ந்து தேர்ந்து வருகிறான். சிலர்க்கு எந்தவிஷயத்திலும் மனத்தை ஏகாக்கிரப்படுத்தல் என்பது அசாத்தியமாக இருக்கும். வேறு சிலர்க்கு அவரவர்க்குப்பிரியமான விஷயம் அல்லது விஷயங்கள் ஒழிந்த ஏனையவற்றுள் ஏகாக்கிரப்படுத்தல் அசாத்தியமாகவிருக்கும். ஆனால் இவரெல்லாம் ஏகாக்கிர சக்தியுடையவரல்லர். பின்னையோ யாவனொருவன் எவ்விஷயத்

திலும் ஆவசியகம்போலே தன்மனத்தை ஒருவழிப்படுத்தி நிற்கச் செய்யும் ஆற்றல் உடையானெவனோ அவனே ஏகாக்கிரசக்தியுடையான் என்று சொல்லப்படத்தக்கவன் செய்யப்படத்தக்கவையெல்லாம் செய்துமுடிப்பவன் அவனே. அறியப்படத்தக்கவையெல்லாம் அறிந்துகொள்பவன் அவனே. ஆதலின் அத்தகைய மேலானசக்தியை அடையவிரும்புவர்யாரும் நாம்பின்னால் கூறுபவற்றை மிகவும் சிரத்தையோடு வாசித்து அப்பியாசித்து அதில் தேர்ச்சியடைவா என்ற முழுநம்பிக்கையோடு அதைப் பற்றி எழுதப்புகுந்தோம்.

ஹிந்துகளுடைய யோகசாஸ்திரங்களில் கூறப்படும் அப்பியாசங்கள் யாவும் மனத்தின் ஏகாக்கிரத்தின் பொருட்டேயாம். ஹிந்து யோகிகள் முன்னடைந்திருந்ததாகவும் தற்காலத்தில் அங்கும் இங்கும் சிற்சிலர் அற்பசொற்பமாகவும் அமேரிக்கா முதலான இடங்களில் பலர் மேஸ்மரிசம் அல்லது மனோதத்துவ சாஸ்திரம் பயிற்சியால் அடைந்திருக்கிறவுமான சித்திகள்யாவும் இம்மன ஏகாகிரத்தினின்றும் விளைந்தவையேயாம் என்பதனை அவ்விஷயம் அறிந்தார் யாரும் மறுக்கார் என்பது திண்ணம். ஆனால் யோகசாஸ்திரங்களில் கூறப்படும் அப்பியாசங்கள் யாவும மதசம்பந்தத்தால் விரவப்பட்டிருத்தலானும் அம்மதத்தைத் தழுவாது அவைகளைத் தழுவுதல் அம்மதஸ்தர் ஒழிந்த ஏனைய மதஸ்தருக்கு அருவருப்பாக இருக்குமாதலானும் பயன் கொடுப்பதில் அவற்றினும சற்றும் குறைவில்லாதனவும் அமேரிக்காவில் மனோதத்துவ சாஸ்திரங்கள் பயிற்றுவிக்கும் கலாசாலைகளில் படிப்பிக்கப்படுவன வாயுமுள்ள முறைகளை அவாவுள்ளார்யாரும் அப்பியாசிக்குமாறு இதனடியில வரைகின்றாம்.

[இன்னும் வரும்]

வள்ளிநாயகம்.

சைவசித்தாந்தம்.

(முன்தொடர்ச்சி)

சங்கை.

ஆன்மாவை மூடிக்கொண்டிருக்கு மலமிருக்கும்போது அபிவியத்தியெப்படி யுண்டாகும். மல நீங்கினபின்பு அபிவியத்தி யுண்டாகுமென்று சொல்லுவதுந்தகாது. ஆகையால் அபிவியத்தி மநிவர்த்தி இவ்விரண்டிற்கும் அன்னியோன்னியாசிரய தோஷ நீங்கும்பொருட்டு மலம் தீக்ஷையால் நீங்குமென்று கொள்ளவேண்டும். இது யுக்தந்தானே?

மலம் திரவியமானபடியால் காச முதலான குற்றம் வயித்திய வியாபாரத்தால் நீங்குவது போல சிவ வியாபாரத்தால் மல நீங்கவேண்டுமென்பது பொருந்ாது. ஞானத்தாலே அந்த அஞ்ஞான நீங்குமல்லாது கன்மத்தால் நீங்காது. அப்பிரகாச மலம் ஞானப்பிரகாசத்தாலே நீங்கவேண்டும். அப்பிரகாசமான இருள் பிரகாசமான சூரிய கிரணத்தினாலே நீங்கக் காண்கின்றோம். அதுபோல மலம் திரவியமாகையால் கிரியையாற்றான் நீங்க வேண்டுமென்றும் ஞானத்தால் நீங்காதென்றும் அனுமிக்கவுங் கூடாது. ஆகமத்தில் ஞானமொன்றுமே முத்தி. மற்றக்கிரியை அதற்குச் சாதனமென்று கூறியிருக்கின்றபடியால். அப்படியானால் தீக்ஷையே மலத்தை விடுவித்து முத்தியைக் கொடுக்குமென்னும் வசனத்திற்கு என்ன சமாதானமென்னில் அதற்குத் தாற்பரியம்:— தீக்ஷை ஒருவன் அவசியம் செய்து கொள்ள வேண்டுமென்பது கருத்து. அது ஞானத்தை நீக்க வந்ததன்று. ஆதலால் விரோதமில்லை. இங்ஙனமாகலின் அவுத்திரியாதிகளைத் தீக்ஷையென்றது பிரத்தியக்ஷாதிகளைப் பிரமாணமென்றதுபோலக் கவுணமன்றி முக்கியமன்று. முக்கியமாகச் சிவ தீக்ஷையென்று சொல்லப்படுவது சிவசத்தி சங்கற்ப விசேடமொன்றேயன்றிப் பிறிதில்லை. இதுவே சர்வாகம சம்மதமென்பது ஆகம வசனங்களானும் நிரதிகரண தீக்ஷையால் இதர வியாபாரமொன்று மில்லாமையானும் பிரசித்தமென்றுணர்க. சாதிகரணத்திற் சொல்லப்படும் பேதங்களெல்லாம் அந்தச் சிவசத்தி சங்கற்ப விசேடத்திற்கு வியஞ்சகங்களாகலின் உபகார தீக்ஷைகளேயாமென்க. அந்தச் சிவசத்தி சங்கற்ப விசேடமாவதுஞ் சிவனது கிரியாசத்தி வியாபார விசேடம். அந்தக் கிரியை ஞானத்தில் அடங்கி ஞானத்துக்கு அங்கமாகுமென்க. இன்னும் கிரியா வியாபாரமின்றியுங் கருடபாவனஞான மாத்திரத்தினால் விஷத்திரவிய நிவிர்த்தி பிரத்தியக்ஷமாகக் காணப்படுதலின்

விஷமொரு திரவியமென்பதுஞ் சர்வசம்மதமாதலின் நேத்திரப்படலத்திரவியம் படலநீக்குமுபாயஞானத்துணையுடைய வைத்தியசத்திர கன்மத்தால் நீங்குதல்போல மலத்திரவியமும் சிவதீக்ஷாகுறிச் சிற்கன்மத்தால் நீங்குமென்று நேத்திரபடலதிருஷ்டாந்தமொன்றே கொண்டு ஸ்தாபிக்கும் முயற்சி தூரம்போய்விட்டது. இதுவேயுமன்றி மலத்திரவியத்திற்குப் படலாதி திருஷ்டாந்தங்களை யபேக்ஷித்து முக்கியதிருஷ்டாந்தம் அந்தகாரம். அது தீபாதிபிரகாசமாத்திரத்தால் நிவிர்த்தியாவதன்றிக் கிரியாவியாபாரமாயிரங் கூடினும் நிவிர்த்தியாவதில்லை. கிரியாவியாபாரமெல்லாம் தீபாதியுற்பத்திநிமித்தமாகலின் தாட்டாந்தத்தினு மிங்ஙனங்கண்டுகொள்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இந்த உண்மைஞானம் பத்துவகைப்படும். அவையாவன, தத்துவரூபம், தத்துவதெரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், என்பனவாம். இவைகளின் இலக்கணங்களாவன, பிருதிவிமுதல் நாதமீறாகிய தத்துவங்கள் அனைத்தையும் "பிருதிவியுரத்துத்தரிக்கு மென்றல் முதற் சிவதத்துவம் ஞானமாயிருக்கும் என்றல் ஈறாக விவைகளின் தொழில்களை வெவ்வேறாகப் பகுத்துக் காண்கையே தத்துவரூபம்.

அத்தத்துவங்களுக்கு ஆன்மா கூடிநின்றவிடத்துத் தொழிலுண்டாவதேயன்றி ஆன்மா கூடி நில்லாவிடத்துத் தொழிலின்றி நிற்கையாலும் அவை யொன்றை யொன்றறியமாட்டாமையாலும் அவைகளனைத்தையுஞ் சடமென்று காண்கையே தத்துவதெரிசனம்.

அங்ஙனஞ் சடமென்றுகண்ட தத்துவங்களனைத்தையு நித்தியமன்றென்றும் அவைகள் ஆன்மாவையறியமாட்டாமையாலும் ஆன்மா அவைகளையறிந்துகொண்டு நிற்கையாலும் அவைகள் ஆன்மாவைவிட வேறு என்று கண்டு நீங்கிநிற்பதே தத்துவசுத்தியாம். இவை தசகாரியத்துள் தத்துவரூபதரிசனசுத்தியெனவும் இத்தத்துவசுத்தியிற் பிரகிருதித்துவம் இருபத்துநான்கும் கலாதி தத்துவம் ஏழுமாகிய முப்பத்தொன்று நீங்கவே அம்முப்பத்தொன்றுமாய் நின்ற மாயாமலம் நீங்கும். அது நீங்கவே வெட்டுவாளொழிந்தோனுக்கு அவ்வெட்டுவாளால் விளைகின்ற வெட்டுதற்றொழிலற்றாற்போல அம்மாயாமலத்தோடு அம்மாயாமலத்தால் விளைகின்ற கன்மமலமும் நீங்கும். அது நீங்கவே ஓர் தொழிலினைச் செலுத்துவிப்போனுக்கு அத்தொழின்முடிவில் அத்தொழிலினைச்செலுத்தும் பணியற்றாற்போல அம்முப்பத்தொருகருவிகட்குந் தானே முதன்மையாய்நின்று அவைகளைப் பிரேரிக்கின்ற சிவதத்துவங்கள் ஐந்துமாய்நின்ற மாயைமலமும் தனது பிரேரகத்தொழிலற்று நீங்கும். இங்ஙனம் தத்துவசுத்தியோடு மாயையுங் கன்மமும் மாமாயையுமாகிய மூன்றுமலமும் நீங்கினவெனவுங்கண்டுகொள்க.

முன்னின்ற தத்துவங்களையும் பின்னின்ற பேரிருளாகிய ஆணவத்தினையும் ஆச்சாரியன் அருளாற் கண்டுகழன்று அவைகளனைத்தினுக்கு மேலாகிய வறிவனாய்நிற்கின்றவன் நானே யென்று கருதல் ஆன்மரூபம். இனி அவ்வாணவமாவதியாது அதனை ஆசாரியரால் கழன்று நிற்றல் எங்ஙனமெனில் ஆசாரியரானவர் தத்துவங்களை விடுவிக்க விட்டுநின்ற சீடனை நோக்கி நீ இப்போது தத்துவங்களைக் கழன்றுநிற்கின்றாயே இனிமேலாகிலும் உன்னுருவமாவதியாது அதனைக்கூறுவாயாக என்று வினவ அப்போதுந்தன்னுருவத்தைத்தானுன்னியுன்னிப் பார்த் தொன்றுந் தோன்றாமற் பேரந்தகாரமாயிருக்கையாற் சுவாமி அடியேனுக்கு ஒன்றுந்தோன்றவில்லை, பேரந்தகாரமாயிருக்கின்றதே யென்று விண்ணப்பஞ்செய்ய இதுதான், தான், ஒன்றாயிருந்து அனேக சத்தியையுடைத்தாய் நெல்லிற்கு உமியும் செம்பிற்கு களிம்பும்போன்று உன்னையுந் தன்னையுங் காட்டாமல் அநாதி தொடுத்து முத்திபரியந்தமுமறைத்து உன்னைச் செனனமரணங்களிற் கறங்குபோற் சுழற்றித் துயர்செய்கின்ற ஆணவமாவதென்று திருவுளம்பற்ற, சுவாமி இவ்வாணவத்தின்றுயரம் அடியேன் பொறுக்கமாட்டேன் இனிமேலாகிலுமென் றிகைப்பு நீங்கத்தக்கதாக இரங்கி யிவ்வாணவத்தைக் கழற்றவேண்டுமென்றிரந்து நிற்ப, அப்போது இவ்வாணவத்தைக் கழற்றவேண்டுமென்று இவனுள்ளுதித்த வெண்ணமே ஊன நாடகமியற்றித் திருவருண்ஞான நாடகம் நவிற்றுதற்கு ஆரம்பித்த அவதரமாகையால் இங்கு இவன் திரோதானமல நீங்கியதென்று திருவுளஞ்செய்து பின்னருமிவ் வாணவத்தைக் கழற்றினாலன்றி யிவன் றிகைப்பு நீங்கித் தன்னுருவத்தைத் தான் காணமாட்டானென்று அவ்வாணவத்தைக் கழற்றுதற்கு ஆரம்பித்து நீ யுன்னுருவத்தை யுன்னி யுன்னிப் பார்த்து ஒன்றுந்தோன்றாமற் பேரந்தகாரமா யிருக்கின்றதென்று கூறினையே அப்பேரந்தகாரத்தைப் பகுத்துக்கண்ட நீயறிவனாய்நின்று காண்டியோ என்று அவனுக்கு அவ்வாணவங்கழன்று அறிவுவிளங்குதற்கு ஏதுவாக மெல்லவுபாயமா வினவ அதற்குச்சுவாமீ அறியாதவனாய்நின்றாற் குருட்டுக்கண் இருட்டினைப்பகுத்தறியமாட்டாதே அதுபோல அப்பேரந்தகாரத்தை அடியேனும் பகுத்துக்காணமாட்டேனே அங்ஙனம் அப்பேரந்தகாரத்தைப் பகுத்துக் காண்டலால் அறிவனாய் நின்றே கண்டேனென்று விண்ணப்பஞ் செய்ய இங்ஙனம் அறிவனாய் நின்றபடியே நின்று அப்பேரந்தகாரமாகிய வாணவத்தைப் பாரென்றருளிச் செய்ய பின்னுந்தான் அப்படியே அறிவுருவாய்நின்று அப்பேரந்தகாரமாகிய ஆணவத்தைப்பார்க்க அப்போது ஒளியின் முன் இருள் தோற்றப்படாதது போலவும், மிகு ஜலத்திற் பூமிதோற்றப்படாதது போலவும், மிகுந்த தழலிற் சலந்தோற்றப்படாதது போலவும், அவ்வறிவுருவத்தின் முன்னர்ப் பேரந்தகாரமாகிய ஆண

வந்தோற்றப்படாமையாற் சுவாமீ இப்போது அப்பேரந்தகாரமாய வாணவத்தைக் காணேன் என்று அதிசயித்து விண்ணப்பஞ்செய்யும் இதுவே அவ்வாணவமகன்ற நிலை. இங்ஙனமே யறிவுருவாய் நின்று உன் திகைப்பு நீங்கி அவ்வாணவத்தைக் கழன்று நில்லென்று அநுக்கிரகஞ்செய்ய அறிவுருவாய் நின்று ஆணவத்தைக் கழன்று நிற்பனெனவறிக.

பஞ்சமலமு நீங்காத விடத்து அருளைபபெறுதல் அரிதாமாகையால் இவ்வாணவ நீக்கத்தோடு திரோதான மலமும் இவ்வாணவ மலமுமாகிய விரண்டுமலமு முற்கூறிய தத்துவ நீக்கத்தோடு மாயையுங் கன்மமு மாமாயையுமாகிய மூன்று மலமுமாக வைந்து மலமு நீங்கின, எனவுஞ் சகல கேவலங்களை நீங்காதவிடத்து சுத்தத்தினைப்பொருந்திச் சிவத்தினையடையக் கூடாதாகையான் முற்கூறிய தத்துவசுத்தியோடு சகலாவத்தையும் ஈண்டுக் கூறிய வாணவக்கழற்சியோடு கேவலாவத்தையு நீங்கியதெனவுங் கண்டு கொள்க.

ஆசாரியன் உனக்கு மேல் திருவருள் என்ற ஒரு பொருள் உள்ளது என்று திருவாய்மலர்ந்தருள அதற்குமேல் திருவருட்பிரகாசத்திற் பிரிவறக் கலந்து நின்று அப்பிரகாசத்தின் வலிமையைக்கொண்டு யாவையினும் வியாபித்து அறிகின்றவன் நானே ஆகையால் நானே தலைவனென வெண்ணி நிற்றல் ஆன்மதரிசனம்.

திருவருளி லசைவின்றிச் செயலற்று அடங்கி நிற்றலே ஆன்ம சுத்தி.

கண்ணுக்கு ஓர் ஒளி கலந்துநின்று உணர்த்தினாலன்றித் தானாய்க் காணமாட்டாததுபோல நமக்குமோர் திருவருள் கலந்து நின்று உணர்த்தினாலன்றி நாமா யுணரமாட்டோமே யென்று அகமுகமாய் நின்றுன்னிப் பொறுத்துப்பார்த்து அறியுமிடத்துத் தன்னநுபவத்திலே அத்திருவருட் சொரூபம் பிரகாசமாய் நீருக்குள் தட்பம்போல் தன்னுட் பிரிவறவுயிர்க்குயிராய் விளங்கித்தோன்றுகையால் அங்ஙனம் உயிர்க்குயிராய் அவ்வருளைக்காண்டலே சிவரூபம்.

தான் அவ்வருளை உயிர்க்குயிராய்க் காண்டல்போல எவ்விடத்திலும் விளங்கக்காண்டலே சிவதரிசனம் அகண்டாகாரபரிபூரணமாய் உயிர்க்குயிராய் நிற்கின்ற திருவருளில் ஆதித்தனைக் கலந்த விழியினைப்போல இரண்டறக்கலந்து ஒன்றிநிற்றலே சிவயோகம்.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

தர்மி லோபி சம்வாதம்.

[முன் தொடர்ச்சி]

அவர்கள் யோக்யா யோக்யதையைக் கவனிக்கத் தக்கவர்களென்று நினையாதீர். தங்கள் நலத்தை விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லாமல் அதற்கு ஆனவர் ஆகாதவர் என்னும் வரைவில்லாதவர்களாதலின் அவர்கட்கு வரைவின் மகளிரென்னும் நாமமேற்பட்டது. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் "அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார், இன்சொ லிழுக்குத் தரும்," அதாவது, ஒருவனை அன்பினால் விரும்பாமல் பொருள்பற்றி விரும்பும் மகளிர் அப்பொருள் கைக்கு வரும் வரையில் தாங்கள் அன்பினால் விரும்பினவராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின்னால் துன்பத்தைத் தரும், எனவும், "பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர், நயன்றூக்கி நள்ளா விடல்," அதாவது ஒருவனுக்கு உள்ள பொருள் இவ்வளவென்று அளந்தறிந்து அஃது தங்கள் கைக்கு வரும் வரைக்கும் தமது குணவிசேஷங்களைச் சொல்லும் குணமில்லாத மகளிரது ஒழுக்கங்களை ஆராய்ந்தறிந்து அவர்களைப் பொருந்தாமல் விட்டுவிடுக, எனவும், "வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப், பூரியர்க ளாழு மளறு" அதாவது, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று நினையாமல் விலை கொடுப்பவர் யாவரையும் தழுவும் மகளிரது மெல்லிய தோள்கள் அக்குற்றத்தையறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்தும் நரகமாம், எனவும், மற்றும் சில விவரங்கள் கண்டு கூறியிருக்கின்றனர். அன்றியும், நாலடியாரில், "விளக்கொளியும் வேசையர் நட்புமிரண்டும், துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும், நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்பும், கையற்ற கண்ணே யறும்," அதாவது, விளக்கினது பிரகாசமும் பொதுமகளிரது அன்பும் ஆகிய இரண்டையும் சஞ்சலமில்லாமல் யோசித்தால் வேறு வகைப்பட்டன அல்ல, விளக்கினது பிரகாசமும் நெய் வற்றியதக்ஷணமே நீங்கிவிடும், அவ்வேசையர் நட்பும் கைப்பொருள் நீங்கியதக்ஷணமே நீங்கிவிடும், எனவும், விளக்கப்பட்டிருக்கின்றது. நூல் வழியானும் நமது அனுபோக வழியானும் உற்று நோக்கில் வேசையர் நட்பு ஆபத்தை விளைவிக்கக் கூடியதே. கற்றுணர்ந்த விவேகிகளும் வேசையர் நட்புக் கொள்கின்றனரே யென்று நீர் ஒருக்கால் யோசிக்கவுங்கூடும். அப்படி அவர்கள் நேசிப்பராயின் பின்வரும் ஆபத்தின் காரணமாக மதிமயங்கி யழுந்துவாரென நினைப்பீராக. திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலத்தில் "பையரா அணி

ந்தவேணிப் பகவனே அனையதங்கள், ஐயனும் வியாழப்புத்தேள் ஆயிடையடைந்தானாகச், செய்யதாள் வழிபாடின்றித் தேவர்கோ னிருந்தானந்தோ, தையலார் மயலில்பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ," அதாவது, படத்தையுடைய சர்ப்பத்தைத் தரித்த ஜடாபாரத்தையுடைய சிவபெருமானுக் கிணையாகச் சொல்லப்பட்ட தேவகுருவாகிய வியாழபகவான் தேவேந்திர சபைக்குச் சென்றகாலையில் ரம்பை முதலானவர்கள் செய்யும் நடனத்தில் மயங்கிக்கிடந்த தேவராஜன் வந்தனை வழிபாடில்லாமலிருந்தனன். அய்யோ! பெண்களின் மையல்கொண்டவர்களுக்குப் புத்தியுண்டாகுமோ என்று சொல்லப்பட்டிருக்கிறது. அனேகர் விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் வீழ்வதற்கொப்பாக வேசிகளின் துர்க்குணங்கள் முழுவதும் தெரிந்துகொண்டே அவர்கள் ஸ்மரணையே வேதபாராயணமென்று நினைந்து மதிமயங்கி அவர்களின் மாயவலைக்குட் சிக்கி வியாதியாலும் வறுமையாலும் வருந்துவர். நீர் தீர்க்காலோசனை செய்து பார்த்தால் நான் சொல்லியயாவு முண்மையென விளங்கும்.

உலோபி:— சூதின் கெடுதி உரைத்தீர். அது இருக்கட்டும். பொதுமகளிரைச் சேரக்கூடாதென்றும் அவர்களாலனேக துன்பங்களுண்டாமென்றும் சொல்லுகிறீரே. நல்லது, காமநோயும் பசிநோயும் மற்றையர்க் கேற்பட்டது போலவே அவர்கட்கு மேற்பட்டதன்றோ? அப்படியிருக்க, நீர் சொல்லிவந்த நியாயங்களை யோசித்து அவர்களை ஒருவரும் நெருங்காவிடின், அந்நோய்களை அவர்கள் நீக்கிக்கொள்ளும் விதமெப்படி? சொல்லும் பார்ப்போம்.

தர்மி:— பேஷ் நல்லகேள்வி கேட்டீர்! கள் சாராயம் குத்தகையெடுத்தவர் நஷ்டமடைவாராதலால் எல்லாரும் கள் குடிக்கத்தான்வேண்டுமென்றும் சொல்லுவீர்போலும். எந்தக்காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் நன்மை தீமைகளைப்பகுத்தறிந்து நன்மை விளையத்தக்க சற்கருமத்தைச் செய்து தீமைவிளையத்தக்க கெட்டகருமங்களை விலக்கவேண்டியதுதான் நமது கடமை. இங்ஙனம் பகுத்தறியாமல் மதிகெட்டு வேசியரிடிபட்டுப் பொருள் யாவுமவர் கையிலிட்டுத் துன்பத்திற் காளாகாமலிருப்பதுதான் நன்மை. ஆனால் மேற்சொன்ன குறள் நாலடியார்முதலிய நூல்களிற் கூறப்பட்டிருக்கிறபடி வஞ்சகமுதலிய துர்க்குணங்களால் அவர்கள் யாவரையும் மயக்கக்கூடியவர்களாதலின் அவர்களிடம் எப்படிப்பட்டவரும் ஜாக்கிறதையாக இருக்கவொண்ணாது. விஸ்வாமித்திரரும் தேவதாசியாகிய மேனகையின் ஜாலத்தினால் மதிமயங்கி அவளைக்கூடிக்குலாவித் தவமகிமையிழந்துவிட்டனரென்றால் நம்போலியர் விஷயம் சொல்வானேன். ஆகிலும், அவர்களை மிகவும் நெருங்காமலிருந்தால் மாயைக்குள்ளாகமாட்டோம்

சிலர், வேசியர் மாயவலைக்குள்ளாகித் தமது லாபநஷ்டங்களை கவனியாமலும் புருஷரைப்பார்க்கிலும் பெண்கள் எண்மடங்கதிகமான காமம் உடையவர்களாதலால் நம்மனைவியாரைக்காமவிகாரத்திலழுந்தச் செய்வது மகா தோஷமென்று நினைத்துப் *பக்ஷத்திற்கொருமுறையேனும் பக்ஷத்துடன் கூடியிருக்கலாமென்று நினையாமலும் தாங்கள் சுகப்படுவதையே பெரிதாகவெண்ணி "தன்மனையாளைத்தனிமனையிருத்திப் பிறர்மனைக்கேகும் பேதையும்பதரே" என ஆகின்றனர். அந்தோ! கொடுமை!! கொடுமை!! வேசையரின் மாயாபாசத்தாற் கட்டுண்ட எத்தனையோ தனவான்கள் கடைசியாகத்தரித்திரத்திலழுந்தி வருந்துவதை நீர் பிரத்தியட்சமாகக்காணலாம். இத்தகைய வஞ்சகம் பொருந்திய வேசிகளையும் சூதரையும் நெருங்காமல் கூடியவரையில் ஜாக்கிரதையாயிருக்கச் செய்வது அறிவே. அவ்வறிவு விர்த்தியடையச்செய்வது கல்வியே. அக்கல்வி விர்த்தியடையச் செய்வது கற்றோரை வழிபட்டொழுகுவதே. கல்வியறிவே யெவ்வாற்றானும் பிரதானமாம். அஃதே யின்றியமையாத ஆஸ்தியாம். (குறள்) "அறிவுடையா ரெல்லாமுடையர் அறிவிலார், என்னுடைய ரேனு மிலர்," அதாவது, செல்வங்களெல்லாம் அறிவாற் படைக்கவுங் காக்கவும் படுதலின், அறிவுடையார் பிறிதொன்று மில்லாதாராயினும் எல்லாமுடையராவர், செல்வமனைத்தும் முன்னே அமைந்துகிடப்பினும் அழியாமற் காத்தற்கும் விதிவசத்தால் ஒருக்கா லழியுமிடத்துண்டாக்கவும் கருவியுடையரல்லாமையால் அவ்வறிவில்லாதவர் எல்லாமுடையராயினும் ஒன்றுமிலரே யாவர், என்பதாம். அப்படிப்பட்ட மாக்ஷிமைதங்கிய அறிவின் விர்த்திக்கேதுவாகிய கல்வியைக் கற்கவேண்டுமானால் (நீதிநெறிவிளக்கம்) "எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந், துய்த்துணர் வில்லெனி லில்லாகும்—உய்த்துணர்ந்தும், சொல்வன்மை யின்றெனின் என்னா மஃதுண்டேல், பொன்மலர் நாற்ற முடைத்து," அதாவது, கல்வி யெவ்வளவு கற்கவேண்டுமானாலும் நன்றாய்க் கற்றுத்தேறிய மெய்யாசிரியனை யடுத்துக் கீழ்ப்படிந்து கற்காவிடின் அக்கல்வி பயன்படாதாம், அம்முறையாகவே கற்றும் பிறர்க்குப் போதிக்கும் சக்தியில்லையெனின் அதுவும் பயனற்றதாம்; அவ்வித வல்லமையு மிருந்தால் பொன்னாலமைக்கப்பட்ட பூவானது மணங்கொண்டதை யொத்திருக்கும் என்றவாறு, நல்லாசிரியனை யடுத்துக் கற்கவேண்டும். நல்லாசிரியனிலக்கணமாவது, (நன்னூல்) "குலனருள்தெய்வங் கொள்கை மேன்மை, கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை, நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும், உலகிய லறிவோ டுயர்குண மினையவு, அமைபவன் நூலுரை ஆசிரியன்னே," அதாவது, உயர்குடிப் பிறப்பும், ஜீவகாருணியமும், கடவுள் வழிபாடும், இவற்றாலுண்டான மேம்பாடும், பல நூல்களிலே பழகிய தேர்ச்சியும், (கல்விப்பொருளை

மாணாக்கர் எளிதிலுணரும்படி) தொடுத்துச் சொல்லுகின்ற போதனா சக்தியும், சீலத்தையும், மலையையும், துலாக்கோலையும் பூவையும் ஒத்த குணங்களும், உலக நடையை அறிகின்ற அறிவும் இவைபோன்ற பிற வுயர்ந்த குணங்களும் பொருந்தியிருக்கப் பெற்றவன் நூலைக் கற்பிக்கும் ஆசிரியனாவான் என்பது. இந்த நியாயங்களெல்லாம் தெரிந்து நீர் கல்வி கற்காததால் வாய்க்கு வந்ததெல்லாம் பிதற்றுகின்றீர்.

(இன்னும் வரும்)

திருச்செங்கோடு } சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்.

---

*மானிடர் எழுபருவம்.

நானிலம் யாவுமோர் நாடக சாலையே
ஆண்பெண் அனைவரும் அதில்நடிப் பவர்தாம்
மறைவுந் தோற்றமும மற்றவர்க் குண்டு.
ஆயுள் நாளில் ஏயபல் வேடம
எடுத்தவர் புவியில் நடிப்பவ ராவர்
ஒவ்வொரு வருக்கும் எவ்வேழ் பருவமாம்
கக்கிக் கதறக் கைப்புறத் தேந்திச்
செவிலித் தாய்வளர் சவலைப் பருவமே
பருவங் களில்முதல் பருவம தாகும்.
தூண்டா நிற்ப வேண்டா வெறுப்பொடு
புத்தகப் பையுடன் நத்தைபோ லூர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதில் கல்விக் கழகம்
மெள்ளச் செல்லும் பள்ளிப் பிள்ளை.—பின்,
காதலித் திருக்கும் காரிகை தன்னின்
புருவம தன்னைப் புழுங்கிய மனத்தொடு

* இது ஷேக்ஸ்பியர் மகாகவி இயற்றிய "As you like it" என்னும் நாடகத்தில் 2-வது அங்கம் 7-வது காட்சியினின்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

தண்பா மாலை சாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெடுயிர்ப் பெய்தும்
காதல னாகும் காளை.—அதன்பின்,
அதிசயச் சபதமும் அடர்புலித் தாடியும்
பேரழி யாவகை பேணுநல் லூக்கமும்
எதற்கும் சண்டைக் கிழுக்கும் படியாய்ச்
சடுதியிற் கோபம் ஜனிப்பதுங் கொண்டு
நீர்மேற் குமிழிபோல் நிலையிலாப் புகழ்பெறப்
பீரங்கி வாயிற் சிரங்கம் போக்கவும்
சித்தமா யிருக்கும் யுத்தவீ ரன்.—பின்,
செழிப்புறு சேவற் கொழுப்பின லாகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
நிர்த்தா க்ஷண்ய நேத்திர மிரண்டும்
வழங்குங் காலத் தொழுங்கின் படியே
நறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல்லுப தேசமும் நாடறி வழக்கும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதி பதி.—அதன் பின்னர்,
கச்சற்றேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்த நோக்கு கண்ணாடியும்
* இருகவுட் டோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாலியத்தினிது பதிரப் படுத்திய
மேற் சோடிரண்டும் மிகப் பெரிதாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு யாதமும்
ஆணவப் பெருங்குர லனைத்தும் இழந்து
குழவியின் குறுகிய குரலினைப் போன்று
கீச்சென ஒலிக்கும் பேச்சையும் கொண்டு

* இருகவுள் தோல்—இரண்டு கன்னத்திலும் உள்ளதோல்.

◦தேசெலாங்குன்றிய மாசுலாங்குரூபியே
ஆறும் பருவம் ஆம்.—அதன் பின்னர்,
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து
§மறுவலும் சேயென மதித்தனர் வெய்துவோன்.
அடிக்கடி மாறு மிவ்வுற்புதசரிதை
முடியுமிக் காட்சி யொடு முடிந் திடுமே.

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.

பஞ்சாக்கரம்.

ஆன்மாக்கள் முத்தியடைதற்கு வேதாகமங்களில் விதிக்கப்பட்டுள்ள சாதனங்கள் பல. அவற்றுள் பஞ்சாக்கர தியானமும் ஒன்றாதலின் அதன் பொருளை ஒரு சிறிது எண்டெடுத்து விளக்குவாம்.

பஞ்சாக்கரமாவது:—நிற்குமுறை ஓதுமுறை யென இரண்டாம். அவற்றுள் கேவலம், சகலம், சுத்தம் என நிற்குமுறை மூன்றாகவும், தூலம், சூக்குமம், காரணம் என ஓதுமுறை மூன்றாகவும் கூறுப. முன்னர் நிற்கு முறையை விசாரிப்பாம். ஐந்து நாசரகிதமான பொருள், ஐந்தினது நாசரகிதமான பொருள், ஐந்துக்கு மேலான நாசரகிதமான பொருள் என நிற்குமுறை மூன்றாம். அவை வருமாறு:— சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம் ஐந்து நாசரகிதமான பொருள். இவற்றுள் அருளைச் சிவத்துடனும், திரோதத்தை மலத்துடனும் சேர்த்து பதி, பசு, பாசமெனவும்வழங்குவதுண்டு இதுபற்றியே

சிவனருளா விதிரோத மலமைந்து
மவனெழுத்தஞ் சினடைவாம்.

என உண்மைவிளக்கத்தினும்,

அஞ்செழுத்தினி லொருபுடை யரும்பதி அமரும்
வஞ்சமுற்றுள வொருபுடை பாசமாய் வதியும்
துஞ்சலின்றியே யொருபுடை பசுவெனத் துலங்கும்
அஞ்செழுத்தினில் மும்முத லறிந்தவர் பிறவார்.

என வள்ளலார் சாத்திரத்தினும் கூறியவாறுகாண்க.

இனி சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து கிருத்தியத்தை நடாத்தும் பிரமன், விட்டுணு, ருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐந்து மூர்த்திகள் ஐந்தினது நாசரகிதமான பொருள். இவ்வைந்து மூர்த்திக்கும் மேலான ஒப்புயர்வற்ற சுத்த சிவமே ஐந்துக்கு மேலான நாசரகிதமான பொருள். பிரம விட்டுணுவாதி மூர்த்திகளை நாசரகிதமான பொருளென்று சொல்லலாமோவெனின் சொல்லலாகாது. என்னை? உலகத்தில் அதிகாரப்பட்டங்களைப் பெறுவார்கள் அவ்வதிகாரப்பேரானே அழைக்கப்பெற்று அதினின்றும் நீங்கியபோது அப்பட்டம் அவர்க்கில்லாததாக, அதை வகிக்கும் ஏனையோர்க்கு வழங்குதலின் அதிகாரம் ஒரு நிலைத்தென்பதூஉம், அதைப்பெறுவார்க்கெல்லாம் அப்பேர் உரிமை என்பதூஉம் கண்கூடாய் விளங்குவதன்றோ. அங்ஙனமே பிரம விட்டுணுவாதி மூர்த்திகளையும் சிருஷ்டியாதி அதிகாரங்களையும் வகுத்துக் கொள்க. மேற்கூறிய நிற்குமுறை மூன்றனுள் அநாதி கேவலத்தில் பதி, பசு, பாச மூன்றும் செயலற்றிருத்தலைக்குறிப்பிப்பதாகிய ஐந்து நாச ரகிதமான பொருள், ஆன்மாவுக்குக் கேவலாவத்தை. அங்ஙனமிருந்த ஆன்மா மலத்துடன் கூடி விளையாட ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்குங் கிருபைக் கடலாகிய சிவ பெருமான் சத்தியோடு கூடிப் பஞ்சகிருத்திய

◦தேசு எலாம் குன்றிய—அழகெல்லாம்போன
§மறுவலும்—மறுபடியும்.

விளையாட்டுச் செய்து அழுக்கை அழுக்கால் நீக்குவது போல மல நீக்கத்திற்காகத் தனுகரணாதிகளைக் கொடுத்ததைக் குறிப்பிப்பதாய ஐந்தினது நாசரகிதமான பொருள் ஆன்மாவுக்குச் சகலாவத்தை. இங்ஙனம் கருவிகரணாதிகளைப் பெற்று அவற்றோடு கூடி யான் எனதென மயங்கி நிற்குங்காலை முற்செய் தவத்தால் இதுகாறும் உண்ணின்றுணர்த்திய பரம்பொருளே முன்னின்றுணர்த்தக் குருவடிவா யெழுந்தருளி, "அவையெல்லாம் நீயல்ல. உன்னுடையவைகளுமல்ல, சிவத்தோடு பிரிவற்றுள்ள ஆன்மாவே நீ. அங்ஙனம் நின்ற நீ என்றும் சிவத்துக்கடிமை தனுகரணாதிகளெல்லாம் சிவத்துக்கு உடைமை" யெனத் திரோத மலங்களைப் பிரிதது ஆன்மாவை சிவத்துளடக்கும் ஞானோபதேசத்தைச் செய்ய அதனால் இந்திரியத்தின் வேறுவான் கண்டு முதல்வனது சீபாதத்தை யணைதலைக் குறிப்பிப்பதாய ஐந்துக்கு மேலான நாசரகிதமான பொருள் ஆன்மாவுக்குச் சுத்தாவத்தை. இவையே பஞ்சாக்கரத்தின் நிற்கு முறையாமென்க சத்து, சித்து, ஆனந்த நாம ரூபமும் அது. நிற்கு முறை முடிந்தது.

இனி ஓது முறையை விளக்குதும். பஞ்சாக்கரமாவது ஐந்தெழுத்துக்களாம். இவை தூலம், சூக்குமம், காரணம் (அதி சூக்குமம்) என முத்திறப்படும். இவற்றோடு மஹா காரணம் நிசானுபூதி சேர்ந்து ஐந்தென்றும் கூறுப. இவ்விரண்டும் காரணத்துளடங்கு மாதலின் முற்கூறிய மூன்றை மட்டும் விசாரிப்பாம். தூலமாவது, நமசிவய என்னும் எழுத்துக்கள். இவை வணங்குகின்றேன் சிவனை நான் என்னும் பொருளைத் தரும். ஆன்மா அறிவுடைப் பொருளா யிருப்பினும்; கருவிகளோடு கூடிய வழி ஒன்றையும் அறிய இயலாது கிடக்கும் கேவலத்தையும் குறிக்கும். திரோதம் மலம் சிவம் அருள் ஆன்மா என்னும் பொருள்களையும் முறையே தரும்.

இனி சூக்கும பஞ்சாக்கரமாவது சிவயநம என்னும் ஐந்தெழுத்துக்களாம் இவை சிவனை நான் வணங்குகின்றேன் என்னும் பொருளைத்தரும். ஆன்மா கருவிகளோடு கூடிய சகலத்தையும் உணர்த்தும் சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்னும் பொருள்களையும் முறையே தரும்.

இனி காரண (முத்தி) பஞ்சாக்கரமாவது:—மலதிரோத அட்சரங்கள் நீங்க சிவ அருள் அட்சரங்கள் முன்னும் பின்னும் ஆன்ம அட்சரம் மத்தியிலும் பொருந்த விளங்கும் ஐந்தெழுத்துக்களாம். இவை சிவமே நான் நானே சிவம் என்னும் பொருளைத்தரும். ஆன்மா கருவிகளை யெல்லாம் தான் அன்றென நியதி செய்து அவற்றின் வேறுவான் காணவே தமது முதல்வனது சீபாதத்தை யணைந்துள்ள சுத்தாவத்தையையும் குறிப்பிக்கும். சிவம் அருள் ஆன்மா சிவம் அருள் என்னும் பொருள்களையும் முறையேதரும். இதை சிவம், அருள், ஆன்மா அருள் சிவமாகவும் கூறுப. அவரெல்லாம் அவ்வாறு உச்சரிப்பின் பிராணவாயு பூரகத்தையுறது ரேசகமாதலையும், பூரகமில்வழி கும்பகம கூடாதென்பதையும், வகாரமாகிய வருளினாலே யகாரமாகிய உயிர் அவ்வகாரத்திற்குஞ் சிவமாகிய சிகாரத்திற்கும் நடுப்பட்டு நிற்பது முறைமை என்னும் திருவருட்பயன் பொருளுண்மையையும் உற்று நோக்கிலர். இவற்றுள் தூலபஞ்சாக்கரம் கேவலாவத்தையில் நின்று வணங்குதலைக் குறிப்பிப்பதாலும் அவ்வணக்கத்திற்குப் பலனாக கேவலத்தினின்றும் விடுத்துச் சகலத்திற் செலுத்துமாதலாலும் போக சாதனமாம். சூக்கும பஞ்சாக்கரம் சகலத்தினின்று வணங்குதலைக் குறிப்பிப்பதாலும் அவ்வணக்கத்திற்குப் பலனாக சகலத்தினின்றும் விடுவித்து சுத்தத்திற் பிரவேசிக்கப் பண்ணுமாதலாலும் முத்திக்கு முதற் சாதன

மாம். காரண பஞ்சாக்கரம் சுத்தத்தினின்று வணங்குதலைக் குறிப்பிப்பதாலும் முத்தியில் நிலைக்கப்பண்ணு மாதலானும் முத்திக்கு முக்கிய் சாதனமாம் இது பற்றியே..............."நம் முதலா வோதிலரு ணாடாது நாடுமருள், சிம்முதலா வோதுநீ சென்று" என உண்மை விளக்கத்தினும்

ஆசினவா நாப்ப ணடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு. என திருவருட்பயனிலும்

கூறியவாறு காண்க.

ஆதலின் போகத்தை விரும்புவோர் சமய குரவரால் தூலபஞ்சாக்கரத்தையும், முத்தியை விரும்புஞ் சாதகர் ஞான குரவரால் முன்னர் சூக்கும பஞ்சாக்கரத்தையும் பின்னர் காரணபஞ்சாக்கரத்தையும் உபதேசிக்கப் பெற்றுச் செபிக்கவேண்டும். செபிக்கவே திருவருளால் நிற்கு முறையின் அநுபவம் பிரத்தியக்ஷமாகும். ஆயினும் தேகமுள்வழிப் பயிற்சி வசத்தால் விருப்பு, வெறுப்பு, ஏகதேசக்காட்சி, விபரீத உணர்வு தோன்றிப் புறத்துச் செல்லும் அறிவை மடக்கி, அகத்தில் ஒருகுறியில் நிறுத்தி நிட்டை கூடுதற்கு முத்தி பஞ்சாக்கரத்தை விதிப்படி ஓதவேண்டும். இது சீவன்முத்தி. இன்னிலை முதிர்ச்சி பரமுத்தியைத் தரும். இன்னும் இதன் விரிவெல்லாம் சிவஞானபோத முதலிய நூல்களினும் ஞானசாரியரிடத்தும் கண்டும் கேட்டும் தெளிக. சுபம்.

இங்ஙனம்,
பொ. மு. முத்தையபிள்ளை,
உபஅக்கிராசனாதிபதி,
சைவசித்தாந்தசபை,
தூத்துக்குடி.

மனிதனது எழுகூறு.

(முன்தொடர்ச்சி)

இந்த சப்தமகாதலங்களுக்கும் சப்தமகாமண்டலங்கள் என்றும் பெயர். இத்தலங்களின் பூதங்கள் அல்லது தத்துவங்களுக்கு மகா பூதங்கள் என்று பெயர். தலங்கள் என்று சொல்லினும் அவைகள் வேறுவேறு இடங்கள் அல்ல. அவைகள் எங்கும் கலந்திருக்கின்றன. முதலாவது மகாதலமாகிய பிருதிவி மகாதலத்தில் மற்ற மேலாறு தலங்களும் உள்ளும் புறமும் ஊடுருவிப் பாய்ந்திருக்கின்றன. ஒவ்வொரு மகாதலத்திலும் அணுக்கள் உண்டாகும் விதத்தை கவனித்துச் சிந்தித்தால் இது தெளிவாய் விளங்கும்.

நாம் வசிக்கும் பூலோகத்திலுள்ள பொருள்கள் ஏழு நிலைகளாயிருக்கின்றனவென்றும் ஒருநிலைப் பொருளை வேறு நிலைக்குக் கொண்டுவரலாமென்றும் எல்லா நிலைகளுக்கும் அதிக தடிப்பாகிய பிருதிவி நிலைப் பொருளை அப்பு, தேயு, முதலிய மேல்நிலைகளுக்குக் கொண்டுபோகலாம் என்றும் எந்நிலையிலிருக்கினும் நமது பூலோகப் பொருள்கள் எல்லாம் பிருதிவி மகாதலப் பொருள்களே என்றும் முன் சொல்லினேமல்லவா? இப்பொழுது பிருதிவி மகாதலத்தின் ஏழாவது நிலை அல்லது ஆதி நிலை அணுவைப்பிரித்தால் அது இந்த பிருதிவி மகாதல அணுத்தன்மை நீங்கி அடுத்த மேல்தலமாகிய இரண்டாவது தலம் அல்லது அப்பு மகாதல அணுக்களாய் உடைந்துபோகும். அவ்வணுக்களைப் பார்க்க ஊனக் கண்களால் முடியாது.

ஒவ்வொரு மகாதலத்திலும் பல உலகங்கள் உள. இவ்வுலகங்களைத் தான் சப்த லோகங்கள் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பிருதிவி மகாதலத்திலுள்ள லோகத்திற்குப் பூலோக மென்றும், பூ வென்றும் பார் என்றும் பெயர். இதுதான் நாம் வசிக்கும் லோகம். நாம் விழித்துக்கொண்டிருக்கும் பொழுது அதாவது ஜாக்கிரதாவஸ்தையிலிருக்கும்பொழுது இவ்வுலகத்தில் அதாவது இந்தத் தலத்தில் அல்லது மண்டலத்தில் நமது சைதன்னியம் தொழில் செய்துகொண்டிருக்கிறது. இரண்டாவது மகாதலத்தின் லோகத்திற்குப் புவர் லோகமென்றும் மூன்றாவது மகாதலத்திற்குச் சுவர் என்றும் பெயர். இவை இரண்டிலும் முறையே சொற்பனம், சுழுத்தி அவஸ்தைகளில் நமது அறிவு செல்லுகின்றது. சாதாரணமாய் மனிதர்களுக்கு இம்மூன்றுலகங்களில் தான் சஞ்சாரமுண்டு. மற்ற லோகங்களுக்குச் சிவயோகிகளும் சிவஞானிகளுந்தான் செல்வார்கள்.

அடியிற்கண்ட பீடாகாரம் இம்மகா தலங்களைப்பற்றி பலவிவரங்களைக்காட்டும்.

மகாதலங்கள்.	லோகங்கள்.	எதிர்முனைகள் அல்லது கீழ்முனைகள்.	மகா பூதங்கள்.	இவைகளில் தொழில் செய்யும் ஈஸ்வர மூர்த்திகள் அல்லது தேவதைகள்.	அவஸ்தைகள்.
7	சத்திய லோகம்	அதலம்	ஆதி	நாதம்-சிவம்	மகாபர துரியா தீதம்
6	மகாலோகம்	விதலம்	அநுபாதகம்	விந்து-சக்தி	பர துரியாதீதம்
5	தபலோகம்	சுதலம்	ஆகாசம்	சதா சிவன்	துரியாதீதம்
4	சனலோகம்	தராதலம்	வாயு	மகேஸ்வரன்	துரியம்
3	சுவர்லோகம்	இரசா தலம்	தேயு	ருத்திரன்	சுழுத்தி
2	புவர்லோகம்	மகா தலம்	அப்பு	விஷ்ணு	சொற்பனம்
1	பூலோகம்	பாதாளம்	பிருதிவி	பிரமா	ஜாக்கிரம்

வேறு பெயர்கள்.	தொழில் செய்யும் மனிதனுடைய கூறுகள்.	கோசங்கள்.	ஸ்தூல சூக்ஷ்ம காரணங்கள்.
மகாபரநிர்வாணம்			
பரநிர்வாணம்			
நிர்வாணம்	ஆத்துமா அல்லது பரம்	ஆத்துமா	ஆத்துமா
புத்தி அல்லது அறிவு	அறிவு அல்லது பரயாத்துமா	ஆனந்தமய கோசம்	மகாகாரணம்
மனம்	மனசு அல்லது ஜீவாத்துமா	விஞ்ஞானமய கோசம்	காரணம்
காமம்	காமவுடல் அல்லது விலங்கான்மா	மனோமய கோசம்	சூக்ஷ்மம்
ஸ்தூலம்	பிராணன நுண்பூதவுடல் திண்பூதவுடல்	பிராணமய கோசம் அன்னமயகோசம்	ஸ்தூலம்

காமவுடலானது இரண்டாவது தல தத்துவ அணுக்கள் அல்லது அப்பு பூதத்தால் கட்டப்பட்டது. இந்தப் பூதத்தினால் உண்டாகிய கோரமானது "நான்" என்னும் ஜீவாத்துமா புலன்களின் வாயிலாக விஷய அநுபவம் பெறுகிறதற்கு ஏதுவாயிருக்கின்றது. இரண்டாவது தல தத்துவத்தின் சிறப்புக் குணம் இது. காமவுடல் ஸ்தூல தேகத்தைப் பார்க்கிலும் பிரகாசமுள்ளது. ஆகையால் மேனாட்டுப் பெரியோர்கள் இத்தேகத்துக்கு ஆஸ்ட்ரல் (Astral) தேகம் என்று பெயர் கொடுத்தார்கள். "ஆஸ்ட்ரல்" என்றால் நக்ஷத்திரமயமான அல்லது மினொளியான வென்று அருத்தம். ஆகையால் காமவுடலுக்கு மினொளி தேகம் என்றும் சொல்லுவதுண்டு. காமதேகமானது ஸ்தூல தேகத்தைப் பார்க்கினும் பெரிதானது. அது ஸ்தூல தேகத்திற்குள் பரவி வெளியே அதை எப்பக்கத்திலும் சுற்றிப் பரவிக்கொண்டிருக்கின்றது. பக்குவமடையாமல் மிருகங்களை யொத்து ஆகாரம் பயம் நித்திரை மைதுனம் என்னும் உடல் வாழ்க்கைச் செயல்கள் மாத்திரம் பெரும்பான்மை பொருந்தி மனம் புத்தி முதலிய சூக்ஷ்மக் கருவிகள் நன்றாய் விகசிதமடையாமல் இருக்கும் வேடுவர்களைப் போன்ற அபக்குவிகளுக்குக் காமவுடல் தீர்ந்த உருவம்

பெருமல் மேகங்களைப்போலும் புகையைப்போலும் மொத்தாகாரமாயிருக்கின்றது. அறிவு அல்லது சைதன்னியமிருந்து விளையாடுவதற்குத் தனியாய்ச் சுயம்பான வாகனமாயுதவுதற்குக் கூடாதது, ஸ்தூலதேகத்திற்குப் புறம்பே சுமார் ஒரு அடி அளவு பரவியிருக்கின்றது; ஆழ்ந்த நித்திரையில் அது ஸ்தூல தேகத்தினின்றும் பிரிந்து விலகி அதைவிட்டுத்தூரம் செல்லாமல் அருகிலேயே யிருக்கின்றது; அதற்குள்ளிருக்கும் மனதும் ஸ்தூலதேகம் எவ்வளவு தூக்கத்தில் அயர்ந்து இருக்கின்றதோ அவ்வளவு அயர்ந்திருக்கின்றது; ஆனால் இக்காமவுடலின் இயல்புக்கு இனமான புவர்லோக சக்திகளால் இக்காமவுடல் தாக்கப்படக்கூடியது; காமக்குரோதிகள் சம்பந்தமாகிய சொற்பனங்களுக்கு இடமானது. மனம் புத்தி முதலிய சூக்ஷ்மகருவிகள் விகசிதமடைந்த நடுத்தரமான பக்குவமனிதனுக்குக் காமவுடல் மிகவுந் தெளிவாய் வரையறுக்கக்கூடிய உருவமமைந்து நித்திரையில் ஸ்தூலதேகத்தைவிட்டு நீங்கியிருக்கும்பொழுது அந்தமனிதனைப்போலவே தெளிவாயிருக்கின்றது; நித்திரையில் ஸ்தூலதேகத்தின் கவர்ச்சியினால் வெகுதூரம்போகாமல் இழுக்கப்பட்டிராமல் புவர்லோகத்தில் பலவிடங்களில் புவர்லோகபூதங்களின் வேகத்தினால் இங்குமங்கும் அடித்துத்தள்ளப்பட்டுத் திரிகின்றது. ஆனால் அதைச்சூழ்ந்து இருக்கும் பொருள்கள் விஷயங்கள் முதலியவைகளின் பிரஞ்ஞைகிடையாது. சிப்பியைப்போல மனதைச்சூழ்ந்துமூடி, மனம் அந்தச்சிப்பிக்குள் தூங்காமல் சுறுசுறுப்பாய்த் தொழில் செய்துகொண்டிருந்தாலும் காமவுடலாகிய சிப்பியை அறிவின் சுயம்பான வாகனமாய் உபயோகப் படுத்தக்கூடிய திராணி அம்மனத்திற்கில்லை. * பரிணமவிகசிதத்தால் உன்னதபக்குவமடைந்த மனிதனிடத்தில் மாத்திரந்தான் காமவுடல் பூரண உருவமைந்து உயிர்க்கின்றது. மேலும் ஸ்தூல தேகமானது இப்பூவுலகத்தில் அறிவு நின்று விளையாடித் தொழில் செய்வதற்கு எவ்வளவு வாகனமாயிருக்கின்றதோ அவ்வளவு பூரணமாய் புவர் லோகத்தில் இப்படிப் பக்குவமடைந்த மனிதனுடைய காமவுடல் அறிவுக்கு வாகனமாயிருக்கின்றது.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

---

* சிருஷ்டிமார்க்கத்தைப்பற்றிப் பல அபிப்பிராயங்களுள. அவைகளில் ஒன்றுவது பிரபஞ்சம் ஒன்றுமில்லாதசூனியத்தினின்றும் தோன்றினதல்ல ஆனால் ஆலம்வித்தில் பூரணமாகியவிருக்ஷம் எப்படி சூக்ஷமமாயடங்கியிருந்து பக்குவகாலத்தில் இலை யரும்பு பூ காய் பழம் முதலியவைகள் விரிகின்றனவோ அதுபோல் மாயையில் இப்பொழுது தோன்றி யிருப்பனவும் இதற்குமுன்தோன்றினவும் இனிமேல் தோன்றப்போவனவுமாகிய சகல பிரபஞ்சமும் சூக்ஷமமாய் மறைந்துகிடந்து பக்குவகாலத்தில் கிரமமாய்ப் பலவிதப்பொருள்களும் மலர்கின்றனவென்று சொல்வது. இந்த அபிப்பிராயத்திற்கு பரிணாம விகசிதவாதம் அல்லது பரிணாம வாதம் என்று பெயர். உலகம் மாயையினின்றும் பரிணமித்தது என்று சொல்லுவார்கள். மனிதனுக்கும் மனம் புத்தி முதலியவைகளிருந்தபோதிலும் ஆதியில் அவன் மிருகத்தையொத்திருந்து நாளாவட்டத்தில் அவனது பலசக்திகளும் பையப்பைய விகசிக்கின்றன. மனிதப்பரிணாமவிகசிதம் என்று அவனுடைய வளர்ச்சியைச் சொல்லுவார்கள். பரிணம விகசிப்பின் பலதரங்களினால் பக்குவங்களும் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்று பலவாயிருக்கின்றன.

மேனாட்டுக் கலைஞானம்.

முற்கூறு.

[முன் தொடர்ச்சி]

கருவங்கம் என்று சொல்லப்பட்ட காரீயத்தின் குழிகனம் 11·45. அதாவது சற்றுக்குறைய பதினொன்றரை. இதின் அருத்தம் என்னவென்றால் இந்த உலோகமானது நீரைப்பார்க்கிலும் சுமார் பதினொன்றரைப்பங்கு அதிகம் கனமுள்ளதுஎன்பதாம். ஆகையால் ஒரு கருவங்கபாளத்தையெடுத்து அதை நான்கு பக்கங்களும் ஒருஅங்குல நீளமிருக்கும்படி சதுரித்து அதில் முன் சொன்ன குழலில் நிற்கும் நீர்ஸ்தம்பத்தின் உயரத்தில் பதினொன்றில் ஒன்று (1/11) என்னும் அளவுக்குச் சற்று குறைந்த அளவான உயரம் துண்டித்துக் கொண்டு அந்தத்துண்டைக் குழலில் நீருக்குப்பதிலாகச் செலுத்தி நிற்கவிட்டால் இந்தக்கருவங்கப் பாளத்தின் துண்டு குழலின் அடியில் நீர் எவ்வளவு தாக்கம் செய்ததோ அவ்வளவே தாக்கத்தைச் செய்துகொண்டிருக்கும்.

ஆனால் கருவங்கத்திற்கும் நீருக்கும் ஒரு வித்தியாசம் காணலாம். இவ்வித்தியாசம் நீருக்குள்ள சலிலத்துவத்தை

பொறுத்ததாயிருக்கின்றது. கருவங்கமானது குழலின் அடியில் மாத்திரம் தாக்கம் செய்யும் பக்கங்களில் செய்வதில்லை. ஆனால் நீரோ எல்லாப் பக்கங்களிலும் தாக்கம் செய்கின்றது. குழலின் அடிக்குச் சற்று மேல் அதன் பக்கத்தில் ஒரு சிறு துவாரம் செய்து அந்தத் துவாரத்தை ஒரு கார்க்கினால் அடைத்து வைத்தால் அந்தக் குழலுக்குள் சென்ற கருவங்கபாளமானது கார்க்கின்மேல் தாக்கஞ் செய்வதில்லை. இந்தப்பாளமானது எவ்வளவு உயரமிருந்தபோதிலும் கார்க்குச் சற்றும் தாக்கம் பெறாது. ஆனால் நீர் ஸ்தம்பமானது போதுமான உயரம் குழலிலிருந்தால் அடியில் கார்க்கு இருந்தபோது அதை எவ்வளவு விசையாய் வெளியே தள்ளிற்றோ அவ்வளவு விசையாகவே குழலின் பக்கத்திலிருக்கும் கார்க்கையும் வெளியே தள்ளும். ஆகையால் கீழ் நோக்கமாகச் செய்தல் போலவே பக்கங்களிலும் நீர்த்தாக்கம்செய்கின்றது என்பது விளங்குகின்றது.

ஒரு கண்ணாடிக் குழலை ப எழுத்தைப்போல் வளைத்து அதில் ஒரு கரத்தில் நீர் விட்டால், குழலின் வளைவு எவ்விதமிருந்தபோதிலும் அல்லது அதின் இருகரங்களின் பருமனும் வட்டமும் எவ்வகையாயினும், அக்குழலின் இருகரங்களிலும் நீர் எப்பொழுதும் ஒரே மட்டத்தில் நிற்கும். புஷ்பச்செடிகள் முதலியவைகளுக்கு மெதுவாய் நீர் விட ஏற்பட்ட நீர்த்தூவி அல்லது நீர்ப்பாய்ச்சி என்னும் கருவியில் உள்ள நீர் எப்பொழுதும் பீலியிலும் பாண்டத்திலும் ஒரே சமநிலையில் நிற்கின்றது யாவரும் கண்டதே.

இது இப்படித்தானிருக்கவேண்டும். ஏனெனில் ப எழுத்துப்போன்ற குழல் அல்லது நீர்ப்பாய்ச்சிபோன்ற கருவியின் ஒரு பகுதியிலிருந்து வெளியே ஓடப்பார்க்கும் நீரின் விசையானது நீர் வெளியே புறப்பட்டுப்போகக்கூடிய கண்ணுக்குமேல் நீர்ப்பரப்பின் * நேருச்ச உயரத்தைப் பொறுத்து இருக்கின்

* நேருச்ச உயரம் அல்லது உச்சஉயரம் என்பது நீரின் மேல்பரப்பிலிருந்து பூமிமட்டத்திற்குச் செங்குத்தாய் வரையப்படும் ஒரு கோட்டின வழியாய்

றது. ஆகையால இந்த உச்ச உயரத்திற்குச் சரியான உயரமுள்ள எந்த நீர் ஸ்தம்பமும் அந்த விசையைச் சமப்படுத்த வேண்டும்.

இரு முனையும் அடைபடாமல் திறந்திருக்கும் ஒரு கண்ணாடிக்குழலை நீருள்ள ஒரு அண்டாவில் வைப்பதினாலேயே "ஒரு நீர்ஸ்தம்பமானது அதனுடன் தொடுப்புள்ள வேறொரு நீர்ஸ்தம்பத்தின் மட்டத்திலேயே எப்பொழுதுமிருக்கும். ஏறவும் குறையவுஞ்செய்யாது" என்னும்உண்மையை மிகவும்இலேசாகக்காணலாம். குழலை எப்படிவளைத்தாலும் சாய்த்தாலும் அதன் கீழ்முனை விசாலமாயினும் நெருக்கமாயினும அக்குழலுக்குள்ளிருக்கும் நீர்ஸ்தம்பம் வெளியே அண்டாவிலிருக்கும் நீரின்மட்டத்திற்குச் சரியாயிருக்கும். இவ்விடத்தில் குழலின் கடினமாகிய கண்ணாடிச்சுவர் குழலுக்குள்ளிருக்கும் நீர்ஸ்தம்பத்திற்கும் அண்டாவிலுள்ள நீருக்கும் குழலின் அடிமுனை வழியைத்தவிர மற்றஎல்லாப்பக்கங்களிலும் சம்பந்தத் தொடர்பு இல்லாமல் தடுத்துவிடுகின்றது என்பது பரிஷ்காரமாய்த் தெரிந்த விஷயம்.

செல்வம் நிறைந்த நகரங்களில் ஒவ்வொரு வீட்டுக்கும் குழாய்களின் வழியாய் வெகுதூரத்திலிருந்து சுத்தஜலம் கொண்டுவரப்படுகின்றது. இந்தக்குழாய்களில் திருகு குச்சுக்கள் இருக்கின்றன. இவைகளைத்திருப்புவதினால் நீரை வெளியே வரவும் அடைக்கவும்செய்யலாம். உயர்ந்த மேல்மச்சுக்களிலும் இக்குழாய்களின் வழியாய் நீர் கொண்டுபோயிருப்பார்கள். அவ்விடங்களிலும் குச்சுக்களைத்திருப்பி நீர் எடுத்துக்கொள்ளக்கூடும் இவ்வீட்டுக்குழாய்கள் சிறியவை. இவைகள் வீதியில் இருக்

அளக்கும் உயரமாம். ஒருநூலையெடுத்து அதின் ஒரு நுனியில் ஒரு ஈயக்குண்டைக்கட்டி மற்றநுனியை விரலினால் பிடித்து நூலைத்தொங்கவிட்டால் அந்தநூல் நிற்கும்நிலையின் பாதைக்குச் செங்குத்துக்கோடு அல்லது நேர்கோடு என்று பெயர். ஈயக்குண்டுகட்டித்தொங்கும் நூலுக்குத் தூக்கு நூல் என்றுபெயர். நாம்விரல்களினால் பிடித்திருக்கும் நுனியை நீர்ப்பரப்பின் மட்டத்திற்கு நேராகவைத்துத் தூக்குநூலைத் தொங்கவிட்டால் அந்தநூலின் பாதையானது உச்ச உயரமாகும்.

கும் ஒரு பெரிய குழாயுடன் சம்பந்தப்பட்டிருக்கும். இக்குழாய்க்கு தலைக்குழாய் அல்லது தலை யென்றும் இங்கிலீஷில் மெய்ன் (Main) என்றும் பெயர். இதினின்றும் புறப்படும் சிறிய வீட்டுக் குழாய் பல விதமான திருகல்களுடன் வீட்டுக்குள் வந்து வீட்டின் முகட்டில் வைத்திருக்கும் தொட்டியில் நீரை நிறைத்து அத்தொட்டியினின்றும் பல சிறு குழாய்களின் வழியாய் வீட்டின் எல்லாப்பக்கங்களிலும் நீர் செல்லுகின்றது. தலைக்குழாயைப்பிடித்து அது எங்கு சம்பந்தப்பட்டிருக்கிறதென்று தொடர்ந்து போனால் அது வெகு தூரம் பூமிக்குள் பல விதமாய் உயரவும் தாழவும் போய் கடைசியாய் நீரியந்திரம் இருக்கும் இடத்தைச் சாரும். இவ்விடத்தில் ஒரு மிகப்பெரிய தொட்டி அல்லது தடாகத்துடன் இந்தத்தலைக்குழாய் சம்பந்தப்பட்டிருக்கும். இந்தத்தொட்டி அல்லது தடாகம் நகரத்தில் வீட்டு முகடுகளில் வைத்திருக்கும் சிறு தொட்டிகளின் உயரத்தைப்பார்க்கிலும் உயரமாயிருக்கும். ஆகையால் தடாகமும் தலைக்குழாயும் வீட்டுச் சிறு குழாய்களும் சேர்ந்து ஒரு பெரிய ப எழுத்துப் போன்ற குழாயாயிருக்கின்றன. ஆகையால் வீட்டுக் குழாயின் நீர் தடாகத்தில் உள்ள நீரின் உயரத்திற்கு மேலெழப்பார்க்கின்றது. ஆனதால் வீடுகளின் மேல் மச்சுக்களிலும் நீர் தாராளமாய் வருகின்றது.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

[தொடர்ச்சி]

கொஞ்சகாலத்தில் ஜனங்களில் பெரும்பான்மையோர் இந்த அற்புதங்களையெல்லாங்கண்டு சாதாரண மனிதர்களுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தியிருப்பதாக நம்பினார்கள். ஹெலெ

நாம்பாள் காட்டின காக்ஷிகளை யெல்லாம் ஏழுபகுப்புக்களாகப் பிரிக்கலாம்.

1. மனத்தில் எண்ணிக்கொண்ட வினாக்களுக்கு நேராகவும் தெளிவாகவும் எழுத்துமூலமாகவும் வாக்குமூலமாகவும் விடையளித்தல்.

2. பலவிதவியாதிகளுக்கும் அவிழ்தங்கள் சொல்வதும் அவ்வியாதிகள் நீங்குவதும.

3. வேறுயாருக்குந்தெரியாத இரகசியங்களை வெளியிடுதல். முக்கியமாய் நிந்தை பேசி ஐயப்பட்டவர்களுக்கு அவர்களுக்குமாத்திரம் தெரிந்த மற்றவர்களுக்குத்தெரியாத இரகசியங்களைத் தட்டுகள் வெளிப்படுத்தின.

4. மனிதர்களுடைய கனத்தையும் மற்றப்பொருள்களின் கனத்தையும் இஷ்டம்போல் மாற்றுதல்.

5. ஹெலெநாம்பாள் கேள்வியினாலும் பார்வையினாலும் தெரிந்திராத மனிதர்களிடத்திலிருந்து கேள்விகள் கேட்டுவரும் கடிதங்களுக்குக் கடிதங்களைப்பாராமலேயே விடை யெழுதி விடையிருக்கும் கடிதங்கள் யாரும் எதிர்பாராத அந்தரங்கமான இடங்களில் போயிருந்து கிடைப்பது. உதாரணமாக லியண்டைன் என்னும் நாமந்தரித்த ஒரு பெண் தான் விவாகம் செய்துகொள்ள எண்ணியிருந்த வாலிபன் சென்ற இடமும் அவன் என்னவாயினான் என்றும் தெரியாதவளாய் அவன் பெயரை வேண்டுமென்றே சொல்லாமல் ஒளித்து அவன் சரிதம் தெரியவேண்டி எழுதிக் கேட்டாள். அதற்குப் பதில்கடிதம் அவளுக்குத் தெரியாத கையெழுத்தில் எழுதி அந்த வாலிபன் பெயரையும் கண்டு அவளுடைய பூட்டியிருந்த பெட்டிக்குள் பூட்டி வைத்திருந்த வேறு சிறு பெட்டிக்குள் கிடைத்தது.

6. திடீரென அவ்விடத்திலேயே கிடைக்காத பொருள்கள் வரல்.

7. ஹெலெநாம்பாள் கட்டளையிட்டபோதெல்லாம் ஆலயத்தில் வாத்திய முழங்கல்.

ஜனங்கள் எல்லோருக்கும் அவளுடைய சக்தியைப்பற்றி திருப்தியாயும் அவளுடைய மிக நெருங்கிய பந்துக்கள் நம்பாமலிருந்தார்கள். பந்துக்களில் கடைசியாக லீபனைட் என நாமந்தரித்த அவள் சகோதரனும் அவள் தகப்பனும் நம்பாமலிருந்தார்கள். ஒருநாள் ஒரு அற்புதக் காக்ஷியினால் அவள் சகோதரனுடைய சந்தேகம் நிவர்த்தியாயிற்று.

ஒரு நாள் ஹெலெநாம்பாள் தங்கியிருந்த அவள் தங்கை வீட்டில் அநேக ஜனங்கள் வந்திருந்தார்கள். அவள் சகோதரனும் அவ்விடத்திலிருந்தான். அவன் வெகு பலசாலி. லத்தீன் பாஷையும் ஜெர்மன் பாஷையும் ஐயமறக்கற்றவன். தர்க்கசாஸ்திரத்தில் நிபுணன். ஆனால் நிரீசுவரவாதி. எதையும் ஆராய்ந்தறியாமல் நம்பாதவன். இவன் தனது சகோதரி ஹேலேநாம்பாள் இருந்த குரிச்சியின்பின் அதைத்தொட்டு நின்றுகொண்டு அவள் அவ்விடத்திலிருந்த ஜனங்களுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவள் பேசிக்கொண்டுவரும்பொழுது வெகு இலேசானபொருள்களைத் தூக்கக்கூடாதபடி மலைபோற்கனமாகவும் மிகவும் கனமுள்ளபொருள்களை இறகுபோல் இலேசாகவும்செய்யக்கூடிய மனிதர்கள் இருக்கின்றார்கள் என்று கூறினள்.

“உன்னாலும் இது முடியுமென்று பொருள்படுமாறு சொல்லுகிறதாகத் தோன்றுகிறதே” என்று குத்திரமாய் அவள்சகோதரன் சொன்னான். “நானும் ஒவ்வொரு காலங்களில் அப்படிச் செய்திருக்கிறேன்” என்று ஹெலெநாம்பாள் கூறினள். அப்பொழுது உடனே அவ்விடத்திலிருந்தவர்களெல்லாரும் அப்படிச் செய்துகாட்ட வேண்டினார்கள். அவ்விடத்தில் சதுரங்கப் பலகை ஒன்று இருந்தது. அது வெகு இலேசானது. அதைத் தூக்கக் கூடாதபடி கனமாய்ச் செய்வதாகச் சொல்லி அதை யாராவது முதலில் போய் இப்பொ

ழுது தூக்கிப் பாருங்கள் என்றாள். “நீ அந்தப் பலகையைத் தொடாமலே செய்யப்போகிறதாகவா அருத்தம” என்று அக்கூட்டத்தில் ஒருவன் கேட்டான். “அதை நான் ஏன் தொடவேண்டும” என்று அமைதியுடன் புன்முறுவல்கொண்டு ஹெலெநாம்பாள் சொல்லினள். இப்படிச் சொன்னவுடனே அவ்விடத்திலிருந்தவர்களில் ஒரு வாலிபன் எழுந்துபோய் அந்தச் சதுரங்கப் பலகையை இறகு என்று சொல்லும்படி அவ்வளவு இலகுவாய்த் தூக்கினான். “சரி மறுபடியும் அதை கீழே வைத்துவிட்டு நீ சற்று விலகிநில்” என்று ஹெலெநாம்பாள் சொன்னாள். அவன் அப்படியே செய்தான். எல்லோரும் அப்பால் ஹெலெநாம்பாள் என்ன செய்வாளோவென்று ஆத்திரமாய்க் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவள் ஒன்றும் செய்யாமல் அந்த சதுரங்கப் பலகையின்மீது தனது கண்களை நாட்டிச் சற்று நேரம் பார்த்து அப்பால் முன் தூக்கிப்பார்த்த வாலிபனை நோக்கி அதை இப்பொழுது தூக்கும்படி சாடைகாட்டினள். அவன் முழு தைரியத்துடன் குதித்தோடித் தூக்கினான். அதை அசைக்கவே முடியவில்லை! அப்பால் இரண்டு கைகளினாலும் சேர்த்து வாரித் தூக்கிப்பார்த்தான். அப்பொழுதும் அசையவில்லை. அப்பால் அவன் மண்டிபோட்டு உட்கார்ந்துகொண்டு தன்னுடைய பல முழுவதையும் செலுத்தி அவனுடைய திரண்டு உருண்ட இரண்டு புஜங்களையும் கொடுத்துத் தூக்கினான். அப்பொழுதும் அது அசையவில்லை. அது தரையில் முறுக்காணி போட்டு முறுக்கி வைத்ததுபோலிருந்தது. அவன் உடம்பும் முகமும் சிவந்துபோயின. அப்பொழுதும் அது அசையவில்லை. கடைசியாக அந்த வாலிபன் மிகவும் கலவரமடைந்து அந்த இடத்தைவிட்டு நீங்கிப் பின்னால் ஒதுங்கி நின்றான். அங்கே யிருந்தவர்கள் எல்லாம் கைகொட்டி ஆரவாரித்தார்கள். அந்த வாலிபன் தன்னிரண்டு கைகளையும் கட்டிக்கொண்டு “இது ஒரு நல்ல வேடிக்கைதான்!” என்றான். அப்பொழுது ஹெலெநாம்பாள் குரிச்சியின் பின்னால் அதைத் தொட்டுச் சாய்ந்து நின்றுகொண்டிருந்த தன் சகோத

ரன் லீயனைட் அந்தச்சதுரங்கப் பலகையைத் தூக்கமுயன்ற வாலிபன் ஹெலெநாம்பாளுக்கு உள்ளாளாயிருந்துகொண்டு எல்லோரையும் கபடம் செய்கிறானென்று ஐயமடைந்து "ஆமாம் வெகு நல்ல வேடிக்கைதான்" என்று அநுநாதம் செய்து தன் சகோதரியைப் பார்த்து "நானும் பார்க்கலாமா?" வென்று கேட்டான். "நீயும் தூக்கிப் பார் என் கண்ணே" என்றனள். அதன்மேல் லீயனைட் புன் சிரிப்புடன் அப்பலகையிடஞ் சென்று அந்த இறகுபோன்ற பலகையை தன் மலைபோன்ற புஜத்தினால் பிடித்துத்தூக்கினான். உடனே அவன் புன்சிரிப்புமாறி பேச்சற்று ஆச்சரியவிளக்கம் அவன் முகத்தில் தோன்றிற்று. பின்னால் சொற்பம் நகர்ந்துவந்து தனக்குநன்றாய்த்தெரிந்த அந்தச்சிறிய சதுரங்கப்பலகையை நாலுபக்கமும் கூர்ந்துபார்த்து ஓங்கிஒருஉதை உதைத்தான். அப்பொழுதும் அது அணுவளவுங்கூட அசையவில்லை. அப்பால் தன்மார்புடன் சேர்த்து அந்தச்சதுரங்கப்பலகையின் மூன்று கால்களையும் பிடித்து அதை ஆட்டிப் பார்த்தான். அது சற்றும் நகரவில்லை. அவனுடைய புஜங்களின் மூட்டுக்கள் விட்டு விலகிப்போகும்போலிருந்தது. அப்பொழுது முகத்தைச் சுளித்துக்கொண்டு "என்ன ஆச்சரியம்!" என்று சொன்னான். கடைசியாக ஹெலெநாம்பாள் தன்சகோதரனைப் பார்த்து இப்பொழுது அதைத் தூக்கு என்றாள். அவன் மறுபடியும் அதன் கிட்டப்போய்த் தூக்கவும் இறகைப்போல் இலகுவாய் வந்துவிட்டது.

அப்பால் ஒரு நாள் ஹெலெநாம்பாளுடைய இரண்டு பழைய சிநேகிதர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் புதிதாய்த் தோன்றிய பரமியத்தில் பற்றுள்ளவர்கள். ஹெலெநாம்பாளுடைய சித்த விளையாட்டுக்களில் சிலவற்றைப்பார்த்துப் பிரமித்து ஹெலெநாம்பாளுடைய சக்தியை இன்னதென்று அளவிட்டறியக் கூடாதவர்களாயிருந்தார்கள்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஜகத்ஜோதி.

[முன் தொடர்ச்சி]

சக்கரவர்த்தி வேட்டையாடித் தம் பரிவாரங்களுடன் டில்லிக்குத் திரும்பி வந்ததும் ஷியர் ஆப்கனை எவ்விதத்தில் தொலைக்கலாமென்று யோசனை பண்ணினார். வங்காள கவர்னருக்கெழுதி இரகசியமாய்ச் சில கொலைபாதகர்களை வருவித்து அவர்களிடம் தம் எண்ணத்தைத் தெரிவித்தார். எள் என்று சொல்லுமுன் எண்ணெய் எனச் சொல்லக்கூடிய அவர்கள் அதற்கிசைந்து நகரெங்குந் திரிந்து ஷியர் ஆப்கனைக் கொல்ல வகை தேடினர். ஷியர்ஆப்கானோ முன்னிலும் பலபங்கு பேரும் புகழும் படைத்தவன். ஆகையால் யாதொரு கவலையுமின்றி சுவேச்சையாய் எங்கும் போய் வந்து கொண்டிருந்தான். ஜனங்கள் மிகவும் கொண்டாடி வந்தமையால் அப்பாதகர்கள் அவனை யாதொன்றும் செய்ய முடியவில்லை. சில நாள் முயன்று பார்த்தும் தங்களால் முடியவில்லையென்று சக்கரவர்த்தியினிடம் தெரிவித்து விட்டனர். அதே கவலைகொண்ட சலீம் வேறு உபாயந்தேடினான். யானைப்பாகனைக் கூப்பிட்டு தம் எண்ணத்தைத் தெரிவித்து யானையால் கொல்ல ஏற்பாடு செய்தார். அப்பாகனும் இராஜ சம்மானத்தையே மேலாகக் கருதிச் சம்மதித்தான். நெடுநாள் முயன்றும் பலிக்கவில்லை. கடைசியில் ஒரு நாள் ஒரு நெருக்கமான சந்தின் வழியாய் தன் பெரிய கொம்புள்ள யானையை நடத்திச்செல்கையில் எதிரில் ஒரு பல்லக்கு வந்தது. சில அடையாளங்களால் அது ஷியர் ஆப்கனுடைய பல்லக்கு என்று தெரிய வந்தது. உடனே அக்கொடிய பாகன் மிகவும் சந்தோஷமடைந்து இன்று நாம் கருதிய காரியம் கைகூடுவதிற் சிறிதும் ஐயமில்லை. சக்கரவர்த்தியின் சம்மானம் நிச்சயம் கிடைக்கும் என மனப்பால் குடித்துக்கொண்டு யானைக்குச் சிறிது கோபம் பிறக்கும் வண்ணம் அங்குசத்தைக்கொண்டு பலமாய் மண்டையில் இரண்டொரு முறை குத்தி யானையை வேகமாய்ச் செலு

த்தவே அக்கரியும் மூர்க்காவேசங்கொண்டு தனக்கெதிர்ப்பட்ட வஸ்துக்களைத் தவிடுபொடியாக்கும் விதம் ஓடிற்று. பல்லக்கிலிருந்த ஷியர் ஆப்கன் யானையை நிறுத்தச்சொல்லிப் பாகனைப் பார்த்துப்பலமுறைகூவியும் செவிடன் காதிற்சங்கூதினது போலாயிற்று. பல்லக்குபோகிகள் யானைவரும்வேகத்தைப் பார்த்துத் தம்முயிருக்கே பெரும்அபாயம் நேரிடுமென்று நினைத்து அச்சிவிகையை நடுச்சந்தில் வைத்து விட்டு நாலாதிக்கிலும் ஓடிஒளிந்து கொண்டனர். ஷியர் ஆப்கன் இவ்வாச்சரியங்களையெல்லாம் கண்ணுற்று மனோதைரியங்கொண்டு உடனே உடைவாளை உருவிக்கொண்டு குபீரென்று பல்லக்கைவிட்டுக் குதித்துச் சிங்கம்போல் ஆர்ப்பரித்து நின்றான். யானையைப்பாகன்சமீபத்தில் கொணரவே ஷியர் ஆப்கன் பாகனை எச்சரித்து யானையை மெல்ல ஒதுக்கி நடத்தும்படியாக உரத்துக்கூவினான். பாகன் அதுவே தக்கசமயமென்று நினைத்தவன் ஆகையால் என்னசொல்லியும் கேட்கவில்லை. முன்னிலும் அதிக மூர்க்கமுண்டாகும் வண்ணம் யானையை ஷியர் ஆப்கன்மேல் பாய ஏவினான். ஷியர்ஆப்கன் அஞ்சாததீரனாகையால் உடைவாளைக் கொண்டு ஒருவீச்சு விசவே அவ்வீச்சு யானைமேல் தாக்கி அதன் பெருந்துதிக்கையை கீழே விழச்செய்தது. உடனே இரத்தம் ஆறாய்ப்பெருகத்தொடங்கிற்று. உதிரப்பெருக்கால் யானைசோர்ந்து வீறிட்டுக்கொண்டு மலை சாய்ந்தாற்போல் அவ்வொடுக்கமான சந்தில் பொத்தென்று விழுந்தது. பாகன் குபீரெனக்கீழேகுதித்து ஓட்டம் பிடித்தான். ஷியர் ஆப்கன் உடனே அவனைப்பிடித்திருப்பான். அச்சமயம்ஆங்குக் கூடியிருந்த ஜனங்களைநோக்கி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் பாகன்உயிர் தப்பான். ஷியர்ஆப்கன் மகாகம்பீரகுணமுள்ளவன். பரமதயாளு. ஆகையால் அப்பாகனிடம்கருணைகூர்ந்து ஓடிப்போய் பிழைக்கட்டும் என்று விட்டு விட்டான். இவற்றையெல்லாம் அரண்மனையின் சாளரவழியாய்க் கண்ணுற்ற சக்கரவர்த்தி துக்கசாகரத்தில் மூழ்கி நடுக்கங் கொண்டனர்.

[இன்னும் வரும்]

எஸ். சாமிநாதையர்.

புத்தகக் குறிப்பு.

பதிற்றுப்பத்து.

இப்பழைய நூல் சங்கச் செய்யுள்களாகிய எட்டுத் தொகைகளில் நான்காவது. சங்கப்புலவர்களாகிய கபிலர், பரணர் முதலிய பதின்மர்களால் பத்துச் சேரர்கள்மீது பாடப்பட்டது. இப்புலவர்களில் 6ம் பத்துப் பாடியது ஒரு மாதுசிரோமணி. புறத்திணைத் துறைகளுக்கு இலக்கியமாக அமைந்துள்ளது. பப்பத்து அகவற்பாக்கள் உள்ள பத்துப் பகுதிகளால் தொகுக்கப் பட்டமையின் இந்நூல் பதிற்றுப்பத்தென்று பெயர்பெற்றது. இந்நூலால் சில சேரநாட்டு அரசர்களின் வரலாறுகளும் அவர்கள் புலவர்களை ஆதரித்துவந்த அன்பும் அருமையும் தமிழ்நாட்டின் பழைய வழக்கங்களும் வேறு அரிய விஷயங்களும் தெரியவருகின்றன. சில அரும்பதங்களும் இந்நூல் மூலமாக விளங்குகின்றன.

முதற்பத்தும் பத்தாம்பத்தும் காணப் படவில்லை. இவைகளில் 4 செய்யுள்கள் தொல்காப்பியப் பொருளதிகார உரையால் அறியப்படுகின்றன.

இதுகாறும் ஏட்டிற் பொதிந்து கிடந்த இவ்வரிய நூலை உத்தமதானபுரம் மகாவித்துவான் வே. சாமிநாதையர் அவர்கள் அரிய பெரிய முயற்சியுடன் நன்கு ஆராய்ந்து அச்சியற்றி வெளிப்படுத்தியதற்காக நம் தமிழ் நாட்டார் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஐயர் அவர்களது அரியநூலாராய்ச்சியும் தளரா முயற்சியும் என்றும் வியக்கற்பாலன. இந்நூல் பழைய உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. உரையாசிரியர் இன்னாரென்றும் இக்காலத்தவரென்றும் விளங்கவில்லை யானாலும் இந்நூல் 76-ம் பாட்டின் உரையிற்காணும் சின்னூல் (நேமிநாதம்) என்ற தொடரால் நேமிநாதம் என்ற இலக்கண நூலுக்கு இவ்வுரை பிற்பட்டது என விளங்குகின்றது. மேற்கூறிய விஷயங்களும் இன்னும் பல அரிய விஷயங்களும் ஐயர் அவர்களது முகவுரையில் பரக்கக்

காணலாம். எட்டுப் பக்கங்களடங்கிய பாரம் 25 கொண்ட இந்நூலின் விலை ரூ. 1—8—0. இவ்வரிய நூலைத் தமிழபிமானிகள் அனைவரும் வாங்கி வாசித்து நம் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தாம் செய்யவேண்டிய கடமையைச்செய்வார்களாக.

சந்நியாசிகீதம்.

இப்பெயர் கொண்ட 8-பக்கங்களடங்கிய இச்சிறு நூலை மகா-ள-ள-ஸ்ரீ எம். கோபாலகிருஷ்ணையரவர்கள் நம் பார்வைக்கு அனுப்பியதற்காக அவருக்கு வந்தனமளிக்கின்றோம். இது மகான் ஸ்வாமி விவேகானந்தர் ஆங்கிலத்திற் செய்த கீதத்தின் மொழி பெயர்ப்பு. இதனை வாசிப்பவர் எவரும் இச்சிறு நூலை மொழி பெயர்ப்பாக நினையார். எளிய தமிழ் நடையில் அகவல் ரூபமாக எழுதியிருப்பது உசிதமே. நூலாசிரியர் கருத்து முற்றிலும் தழுவப்பட்டே எழுதியிருப்பது பாராட்டத் தக்கது. இவ்வித முயற்சியில் இவருக்கு மென்மேலும் ஊக்கமுண்டாகும் வண்ணம் ஈசன் அருள்புரிவாராக.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

இந்தியா இருப்புப் பாதைகளின் வருமானம் இந்த வருஷத்தில் முன் வருஷத்தினும் 19-லக்ஷ ரூபா அதிக லாபம் கிடைத்திருக்கிறதாம்.

* * * * *

சென்னை இராஜதானியில் புரொவின்ஷியல் ஸிவில் ஸெர்விசுக்காக ஒருவரைத் தெரிந்தெடுக்க ஒரு பரீக்ஷை அடுத்த டிசம்பர் மாதம் சென்னையில் நடக்கும்.

* * * * *

வங்காளத்தைச் சேர்ந்த மாங்கிர் நாட்டில் பெரிய வெள்ளமுண்டாகிப் பல மனுஷர்களுக்கும் கன்று காலிகளுக்கும் சேதமுண்டான சமாசாரந் தெரிந்து மிகவும் விசனிக்கின்றோம்.

* * * * *

ஆற்காடு கஸ்பாவில் சென்ற இரண்டுவாரங்களாய் நெருப்புக்கற்கள் வீடுகள்தோறும் சரமாரியாய் வந்து விழுகின்றனவாம். இதற்குக்காரணங்கள் தெரியவில்லை. அவ்வூர் ஜனங்கள் திகிலடைந்து தவிக்கிறார்களாம்.

* * * * *

ஜப்பானியர் இன்னும் இரண்டு கோட்டைகளைப் பிடித்துவிட்டார்களென்றும் ரயில்பாதைக்குப் பக்கத்தில் அபாயம் உண்டாக்கக் கூடியஸ்தானத்தில் இருக்கிறார்களென்றும் வடபக்கத்திலிருந்து பட்டணத்தில் பிரவேசிக்க எதிர்பார்க்கிறார்களென்றும் சீபுவிலிருந்து ராய்டர் தெரிவிக்கிறார்.

கோதாவரிநதியில் கட்டப்பட்டிருக்கிற ரயில்பாலத்துக்கு ஹாவ்லக் பாலம் என்று பெயர். இந்தியாதேசத்திலுள்ள பாலங்களில் இஃதே இரண்டாவது பெரியபாலம். இது சற்றேறக்குறைய இரண்டு மைல் நீளமுள்ளது. பெரியகண்கள் 56 உண்டு. இதைவிடப்பெரியது ஸோன் நதியின்மேல் டேரி என்னுமிடத்தில் கட்டப்பட்ட பாலம்.

* * * * *

திரிசிரபுரம் சப்மாஜிஸ்திரேட்டு போலீஸ் ஸ்டேஷன் ஆபீஸரை தூராகிருதமாய்ப் பேசினதற்காக அவ்வூர் கலெக்டர் மிஸ்டர் ஸ்பென்ஸர் அம் மாஜிஸ்திரேட்டை ஒரு மன்னிப்புப் பத்திரம் போலீஸாரிடம் வாசிக்கச் செய்தனரென்பதை யாவரும் அறிவார்கள். இம் மரியாதையைத் தாழ்வை சென்னை கவர்ன்மெண்டார் சிறிதும் அங்கீகாரம் செய்யாமல் வெறுப்புக் காட்டி ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதனால் கலெக்டர் துரையை சப்கலெக்டர் வேலைக்கு மாற்றினதுந் தவிர மூன்று மாதங்களுக்கு மேல் வேலைக்கு மாற்றுகிறதில்லையென்றும் கலெக்டர் துரையை இவ்வாறு செய்யச்சொன்ன போலீஸ் ஸூபிரண்டண்டை ஒரு கிரேட் குறைத்ததுமன்றி இனி 6-மாத காலத்துக்கு மேல் வேலை கொடுப்பதில்லையென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள். மாஜிஸ்திரேட்டார் அவ்வேலைக்கு லாயக்கில்லையென்றும் அதனால் அவரை வேறு குமாஸ்தா வேலைக்கு மாற்றும்படிக்கும் சொல்லியிருக்கிறார்கள். மேல் அதிகாரியின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த இவரை இவ்வாறு தண்டிப்பது நியாயமாகுமா?

* * * * *

ஒருவிவாகம்:—சென்ற ஆகஸ்டுமீ 29உ இம்மதுரையில் ஒரு விவாகம் நடந்தது. மாப்பிள்ளை ஊமையாம். பெண் ருதுவாகாத பாலியையாம். உருவம் குணம் முதலியவற்றால் ஒத்ததன்மையரான வரன் வதூக்கள் விவாகமாயினும் பாலியவிவாகம் கெடுதிவிளைக்கும் என்றும், நம் நாட்டார் இதனை முற்றும் ஒழித்துவிடவேண்டுமென்றும் தமிழ்ப்பத்திரிகைகள் பலவாறு முறையிட்டு வருகின்றன. வந்துமென்ன! இவ்வாறு ஊமை மாப்பிள்ளைக்கு அதிபால்யப்பெண்ணை விவாகம் செய்துகொடுக்கப் பெற்றோர் கருத்து இணங்கிய காரணம் தெரியவில்லை. இப்பெண் தன் வாழ்நாள்களை மனத்திருப்தியுடன் கழித்து நாயகனோடு மனவொற்றுமை பாராட்டி இல்வாழ்க்கையை நடத்தினால் நலமே. அல்லாதவரையில் இதனால் நேருந்தீங்குகளை அளவிடல் அசாத்தியமாகும். தற்காலத்தில் விவாகம் என்பது இன்னதென்று அறியாமல் ஆடுமாடுகள் கொள்ளல் கொடுத்தல் போலப் பலர் நடாத்துகின்றனர். பின்னிட்டு விளையும் தீங்குகளைக் கருதுவதில்லை விவாகமுறையைப்பற்றிப் பின்னொருமுறை விரிப்பாம்.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவிய தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு ... ரூ 35
2. மகா-ள-ள-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு. ... ... ரூ 25
3. மகா-ள-ள-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ... ரூ 10
4. * மகா-ள-ள-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாலவிஜமீந்தார் தேவிகோட்டை வரவு ... ரூ 25

* இவர்கள் 1.03 ஷூத்திலும் 25ரூ நன்கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

5. மகா-ள-ள-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதும்பை. சிலோன் வரவு ... ரூ 25
6. மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். பரமசிவக்கவுண்டரவர்கள், உஞ்சனைவகையரா மிட்டா ஜமீந்தார், போக்கம்பாளையம் வரவு ... ... ரூ 50
7. மகா-ள-ள-ஸ்ரீ அ. பாப்புரெட்டியாரவார்கள், தோளூர் மிட்டாஜமீந்தார், கிரம்பூர், வரவு ... ... ரூ 35
8. மகா-ள-ள-ஸ்ரீ தண்டி வேலக்கவுண்டரவர்கள், விட்டம்பாளையம் மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ 25
9. மகா-ள-ள-ஸ்ரீ பூ. லட்சுமணக்கவுண்டரவர்கள், காளிப்பட்டி வரவு ... ... ரூ 20
10. மகா-ள-ள-ஸ்ரீ குழந்தைவேலுக்கவுண்டரவர்கள், கோனூர் மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ 10
11. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சுப்பராயக்கவுண்டரவர்கள் மிட்டாஜமீந்தார் காட்டுப்பாளையம் ... ... ரூ 10
12. ம-ள-ள-ஸ்ரீ முத்துவெங்கடாசலரெட்டியாரவர்கள், மரூர்ப்பட்டி மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ 10
13. மகா-ள-ள-ஸ்ரீ சாவடி நாராயணசாமிபிள்ளையவர்கள் யூனியன்சேர்மென் கடையம். வரவு ... ... ரூ 10

பத்திராதிபர்.

வைத்தியம்.

(முன்தொடர்ச்சி)

வீரவாகுதேவரும், அநுமனும் தூதாக முதலிற்போனபோதே சிறிது கஷ்டத்தையுண்டாக்கிப் பின்னர்த் தம்மினும் ஆற்றன்மிக்க முருகப்பிரான், ஸ்ரீராகவன் முதலிய எண்ணிலடங்காதோரையுடன் கொண்டு புகுந்து பெரும்போர்செய்து தாமுமுடனின்று முறையே சூரபன்மன் இராவணனாகிய இருவீரர்களையும் இவர்குலத்துதித்தோரனைவரையுமொருங்கழித்தாற்போல இவ்விருமலும் முதலிற் றன்றோன்றிச் சிறிது கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டிருந்து பின்னர் சுரம், காமாலை, ரத்தபித்தம், பாண்டு, சுவாசம், வாதம், பித்தம், வாந்தி, அரோசிகம், சோபை, அதிசாரம், பீநச முதலாகிய வலியுள்ள ரோகங்களெண்ணில்லாதனவற்றைக் கொண்டுவந்து புகுத்தித் தானுமுடனின்று மானிடர்தேகமென்னுங் கோட்டையைத் தகர்த்து ஆன்மாவென்னுந் தலைவனை யழிக்க வந்த மஹா கொடிய ரோகம். இதனை ஆரம்பத்திலேயே களைந்துவிட முயற்சித்தல் அறிவாளிகள் கடன். அநேகர் இருமல்கண்டு நெடுங்காலம்வரையும் இன்றுநின்றுவிடும் நாளைநின்றுவிடுமென்றே முயற்சியில்லாதிருந்து பின்னர் மருந்துண்ணத்தொடங்கி ஒவ்வொருமருந்தையும் 3 வேளையிற்றள்ளித்தள்ளிப் பற்பல மருந்துகளைச் செய்யவேண்டியிருத்தலாற் பணச்செலவும் அபரிமிதமாகித் கடைசியிற் "கூட்டோடு போயிற்று குளிர்சுரம்" என்று வாளா கெடுகின்றனர். இப்பாதகரோகம் ஆரம்பித்தவுடன் அடியிற்கண்ட கிருதத்தைச் செய்து சாப்பிட்டால் அவஸ்தையின்றி விரைவிற் சுகப்படுவதுமின்றிக் காசக்ஷயமாக மாறக்கூடிய மிகக்கொடிய தொந்தரையினின்றுந் தப்பித்துக்கொள்ளலாம். இது தேகவிகற்பத்திற் கேற்றவாறு பலபேதமாய்த்தோன்றும். சிலருக்குப் பழக்கமில்லாத சலத்தை ஸ்நானபானத்திற்குபயோகித்த இரண்டொருதினத்திற் றோன்றி 4, 6-நாள்வரை தொடர்ந்து நின்று நீங்கும். சிலருக்கு மப்புமந்தாரமுண்டானகாலம் குளிர்ந்த காற்றிலுலாவினசமயம் பனிக்காலம் தண்ணீரில் ஸ்நானம் பண்ணினவேளை தப்பாது இந்த ரோகங்கண்டேதீரும். இப்படியே இந்த ரோகந் தோன்றலுக்கோரெல்லையில்லை. எழுதவடங்கா விதத்தையுடையது. இதற்கேற்பட்ட ஔஷதங்களுமப்படியே. இச்சமயம் இம்மட்டோடு நிறுத்தி ஆவசியகமுண்டானபோது விரிப்பல்.

இஞ்சிக்கிருதம்.

தோற்றோல் போக்கிச் சுழுவின இஞ்சி பலம் 8 இதைக்கனிபே இடித்து வைக்க. அதுவேவேர்ச்சூரணம் கண்டங்கத்திரிவேர்ச்சூரணம் தனித்தனி பலம் ½ (இ) ஏலம், சடாமஞ்சில், சிறுதேக்கு, திப்பிலிமூலம், சிற்றரத்தை, தான்றிக்காய், கிராம்பு, மிளகு வகைக்குப் பலம் 1. இவற்றை யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தையும் முன் இடித்துவைத்திருக்கிற இஞ்சியையும், பசுநெய் படி 1-ல் போட்டுக் கலந்து காய்ச்சுகையில் நெய்யோடு கலந்து மேற்கிளம்புங் கந்குகள் நெய்யினடியிலிறங்கும் பதத்தி லிறக்கி முதிராத பக்குவத்தில் சாமதியாது வடித்து இதில் புளிப்பு கைதல் முதலிய கெடுதலில்லாத தெய்வதிராக்ஷைப்பழம் கம்பு கோல்களை ஆய்ந்தெடுத்தது பலம் 5 சீனிக்கற்கண்டு பலம் 8 இவ்விரண்டையும் இடித்துக் கலந்து வைத்துக்கொண்டு தினம் 2 வேளை ஒன்றேகால் விராகனெடை வீதஞ் சாப்பிட்டு வரல்வேண்டும்.

தீரும் வியாதிகள்:—க்ஷயம், சுவாசம், பொருமல் கைகாலோய்வு, பித்தம், வாந்திமுதலியனவாம்.

குறிப்பு—இவ்வியாதிகளுக்கன்றி இருமலையுண்டாக்குகிற எல்லாப்பிணிகளுக்கும் உபயோகிக்கலாம். சாதாரண இருமல்ரோகங்களுக்கு இதுவே ஔஷதமும் பயங்கரமான துஷ்ட இருமல் ரோகங்களுக்குக்கையாளுகிற பஸ்பசெந்தூரங்களுக்குத் திவ்ய அநுபானமுமாகும்.

சுவாசக்குழாய்களில் காணும் அழலையையும் தொண்டையின்கீழுள்ள பெருங்குழாயின் இடையிடையேயுள்ள சிறுபள்ளங்களில் பசைத்தன்மையாய்ச்சேர்ந்து அடிக்கடி இருமலையுண்டாக்குங் கபத்தையும் நீக்கி ஆரோக்கியத்தைக்கொடுக்குங் குணமமையப்பெற்றது. சிறுவர் பெரியவரென்னும் பேதமின்றி யாவருமெடுத்துக்கொள்ளலாம். உஷ்ணித்துண்டாகும் சளியையும் நீக்கும்.

பத்தியம்:—பழவர்க்கங்கள், இரவிற்றயிர்சேர்த்துண்ணல், பொதுவாய்ச் சீதளவஸ்துக்கள் மாதர் முயக்கமாதிய கூடாதன.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சிதாலூகா.

உ
குமரன் துணை.

OFFICE REGISTERED 3 - NOV 1904 MADRAS

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904௵ அக்டோபர்மீ { புத்தகம் 10

வித்தை—V.

[முன் தொடர்ச்சி]

கிராம பாடசாலைகளில் விவசாயம் கற்பித்தல் இன்றியமையாத தென்றும் பாடசாலைகளைச் சுற்றித் தோட்டங்களிருந்து அவற்றில் மாணக்கர் வேலைசெய்தல் நலமென்றுங் கூறினோம். கிராமாந்தரங்களில் உபயோகமாகும் புத்தகங்கள் கிருஷி சம்பந்தமாகவே இருத்தல் வேண்டும். அமெரிக்கா முதலிய அந்நியநாட்டுச் சாகுபடியைப் பற்றியும் சிற்சில பாடங்களிருத்தல் நலமேயாகும். நம் நாட்டில் நூற்றுக்கு எழுபது பேர்வரை கிருஷித்தொழில் செய்பவர். கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கும் வரும்படிகளில் முக்கியபாகம் நிலவரியே. ஆகையால் குடித்தனக்காரர் கொடுக்கும் வரிகளை அவர்கள் க்ஷேமத்துக்கே பெரும்பான்மை செலவழித்தல் கவர்ன்மெண்டாரின் கடமை. ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளில் குடிகள் கல்விக்கென்று கோடிக்கணக்காகச் செலவு செய்கிறார்கள். அவ்வளவு செலவுசெய்யமுடியாவிடினும் தற்காலம் செலவு செய்வதினும் அதிக தொகை செலவிட்டாலொழிய குடிகளுக்குத் தகுந்த கல்வி பயிற்றல் முடியாது. கல்வி யபிவிருத்தி யில்லாவிடில் குடிகள் அந்தகாரத்திலழுந்தி ஞானசூனிய முள்ளவர்களாய்த் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வகையறியாமல் ஆபத்துக் காலத்தில் அவஸ்தைப்பட்டு அநியாயமாய் ஆபி

ரக்கணக்காய் மடிந்து போவார்கள். பஞ்ச காலத்துக்குப் போற்றி வைக்கிற நிதியைப் படிப்பு விஷயத்திற் செலவு செய்தால் பெருநன்மை உண்டாகும். அஞ்ஞானம் என்ற இருள் குடிகொண்டிருக்கும் வரை குடிகளின் சங்கடங்கள் தீர இடமில்லை. தொத்து வியாதிகள் நம் நாட்டில் ஸ்திரமாய் குடிகொள்ளு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அறிவு ஒன்று ஏற்பட்டால் போதும். அதனைக்கொண்டு எல்லாம் சுலபமாகிவிடும். இதனாலன்றோ "அறிவுடையார் எல்லாமுடையர் அறிவிலார் என்னுடைய ரேனுமிலர்" என்றார் நம் தெய்வப்புலவரும். கிராமங்களில் அறிவு பரவும் பக்ஷத்தில் நம் நாடெங்கும் பரவியதாகவாகும். தற்காலம் கவரன்மெண்டார் தேக சௌக்கியத்துக் கென்று செலவிடும் தொகை ஏராளமாய் மீதமாகும். ஆகையால் அறிவைப் பரவச்செய்து அந்தகாரத்தை ஊரைவிட்டு ஓட்டுதலே நம் நாட்டின் நன்மையைக் கருதும் ஒவ்வொரு புத்திமானுடைய முதற் கடமையாம். இதனைப் பூர்வ அரசர்கள் நம் நாட்டில் முக்கிய கடமையாகக் கொண்டிருந்தன ரென்பது திண்ணம். கலகம் முதலியவற்றால் கவரன்மெண்டாருக்குப் பலவிதத்தில் கவலையையும் துன்பத்தையும் உண்டாக்குபவர் கல்லாத மூடஜனங்களே ஒழிய கற்றவராகார். கற்றவர்களாலே அச்சமயம் கவரன்மெண்டாருக்குப் பேருதவி கிடைக்கின்றது. ஆகையால் குடித்தனக் காரர்களுக்குத் தக்கபடி கல்வி புகட்டல் வேண்டும்.

ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்குச் செல்லுங்கால் அக் கிராம பாடசாலைகளைப்பற்றிக் கவனிக்கும் வண்ணம் அவர்களுக்குக் கவரன்மெண்டார் தக்கபடி கட்டளையிடல் பேருபகாரமாகவிருக்கும். மேற்பார்வை சரிவர இல்லாமலே கிராம பாடசாலைகள் கெட்டுப்போகின்றன. கிராம வாசிகள் பாடசாலைகளைக் கண்ணுங் கருத்துமாய்ப்போற்றும் வண்ணம் அதிகாரிகள் அப்போதைக்கப்போது அவர்களைத் தூண்டுதல் செய்தல் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனையோ

தர்மங்கள் நடக்கின்றன. அந்தத் தர்மங்களில் வித்தியாபரிபாலனத்தை முதற்கடமையாக நினைத்தல் கிராமத்தாரின் க்ஷேமத்துக்கு அநுகூலமாகும். நம் பள்ளிக்கூடங்களில் முற்காலத்தில் மதசம்பந்தமான பாடங்கள் ஏற்பட்டிருந்தன. இன்னும் சில தெருத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் அவ்வழக்கமிருந்து வருகின்றது. இது விஷயமாய்க் கிராமத்தார் தாமே கவலை எடுத்துக்கொள்ளல் வேண்டுமே யொழிய வித்தியா இலாகாதார் யாதொன்றும் செய்ய இயலாது. நாமும் நம் கடமையைச் சரிவரச்செய்து கவரண்மெண்டாரையும் அவர்களது கடமையைச் சரிவரச் செய்யச் சொல்லி தூண்டிவருவோமானால் பெருநன்மை யுண்டாகும். தற்காலம் பிரதம பாடசாலைகளில் நடந்து வரும் ஐந்து வருஷப்பயிற்சியை நான்கு வருஷங்களில் வெகு சுலபமாய் நடத்தலாம். புத்திசாலியான உபாத்தியாயராகவிருக்கும் பக்ஷத்தில் மூன்று வருஷங்களிலேயே முடிக்கலாம். முற்காலத்தில் தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் மூன்று வருஷங்களுக்குமேல் வாசிப்பது அருமை. அதற்குள் எண்ணுமெழுத்தும் நன்றாகத் தெரியவரும். இக்காலத்தும் அவ்வாறே செய்வது சுலபம். உபாத்தியாயர் தக்கவராயிருந்தாலொழிய முடியாதென்பது திண்ணம். ஆகையால் கிராமத்தார் தக்க உபாத்தியாயர்களைத் தேடிப்பிடித்து ஏற்படுத்துவதுமன்றி அவர்களுக்குத் தக்கபடி உதவியும் செய்தல் வேண்டும். உபாத்தியாயரும் கிராம வித்தியாவிஷயத்தில் தக்க ஊக்கத்துடன் உழைத்துவரல் வேண்டும். இதனினும் புண்ணியமான செய்கை வேறு ஒன்றுமில்லை. எல்லாவற்றிலும் மேம்பட்டதான இக்காரியத்தை நாம் அசட்டைசெய்வது சிறிதும் தகாது. இவ்விஷயத்தில் நம் நாட்டார் ஊக்கத்துடன் உழைத்து வந்தாலன்றி தேசாபிமானமும் மதாபிமானமும் பாஷாபிமானமும் உடையவராகார்கள்.

தெருத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இக்காலத்துச் சிறிதும்பயன்படாத சில விஷயங்களை அநாவசியமாய் உபாத்தியாயர்புகட்டிவருகின்றனர். உதாரணமாக முந்திரி, அரைக்காணி, காணிமுதலியவாய்பாடுகள் ஒருமனிதனது வாழ்நாளில் இனி ஒரு

காலும் உபயோகப்படப்போகிறதில்லை. அப்படியிருந்தும் இன்னும் அவைகளைப் பல பள்ளிக்கூடங்களில் சொல்லிவைக்கிறார்கள். இவ்வாறான அனாவசியங்களை நீக்கல்வேண்டும். மிக்க உபயோகமான பெருகுழி சிறுகுழி வாய்பாடுகளை அநேகங் கிராமங்களில் முற்றிலும் ஒழித்துவிட்டனர். அவைகள் கிராம பாடசாலைகளிலன்றி நகரபாடசாலைகளிலும் கட்டாயமாய்க் கற்பிக்கப்படல் வேண்டும். நீதிசதகங்கள் முற்காலத்தில் போதிக்கப்பட்டுவந்தன. அவற்றை மறுபடியும் நம் கிராம உபாத்தியாயர்கள் கற்பித்தல் நலம். ஒருபையன் மேற் படிப்புக்குப் போகாமல் நின்றுவிடும்பக்ஷத்தில் அந்நீதிகள் அவனுக்கு ஆயுள்காலம்வரை உபயோகமாகும். இவை நிற்க.

கவர்ன்மெண்டார் மேற்பார்வைபார்ப்பதற்குப்போதுமான உத்தியோகஸ்தர்களை (சூபர்வைசர்களை) நியமனஞ் செய்தல்வேண்டும். அதிகமாய் சப்அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களை நியமனஞ்செய்தால் பிரதமபாடசாலைகள் அபிவிர்த்தியாகிவிடும் என்று தற்காலம் கவர்ன்மெண்டார் நினைத்திருப்பது அவ்வளவுசரியாகத்தோற்றவில்லை. ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டருடைய இலாகாவில் 30 கிராமங்கள்தான் உண்டு. அதுமாதிரி ஒவ்வொரு சூபர்வைசருக்கும் 30 கிராமங்களுக்குமேல் கொடுத்தால் வித்தியாபிவிருத்தியாதல் கஷ்டம். சூபர்வைசர்கள் கிராம நடவடிக்கைகளில் நன்குபழகியவர்களாயிருத்தல் வேண்டும். தமிழே தெரியாத எப். ஏ பீஏக்களை நியமனம் செய்து கிரமங்களில் பழகச்சொன்னால் அவர்கள் ஆங்கிலப் பயிற்சி ஆங்கு யாதுபயன்படும். இருபது கிராமங்களுக்கு மத்தியில் ஒரு உபாத்தியாயர் சங்கமிருத்தல்வேண்டும். பக்ஷம் ஒருமுறை கிராமத்து உபாத்தியாயர்களை ஒன்றுகூட்டித்தெரிந்தவர்களைக்கொண்டு தக்க உபந்நியாசம் செய்யச்சொல்வதுமன்றி மாதிரிப்பாடங்களும் போதனை செய்யச்சொல்லல் நலம். கிராம பாடசாலைகளின் பரிபாலனத்தை மேற்பூண்டிருப்பவராகிய லோகலபண்டுபோர்டார் இந்நுணுக்கமான விஷயங்களை நன்கு கவனித்து வித்தியாபிவிருத்தியைத் தேடக்கடமைப்பட்டிருக்கி

றார்கள். ஒருதாலுக்காவுக்கு ஒரு மாஜிக்லாண்டெர்ன் (வினோதக்காக்ஷிக்கண்ணாடி) ஆவது இருந்தால் கிராமங்களுக்குச்செல்லுங்கால் சூபர்வைசர்கள் அதன்மூலமாய் பற்பல வினோதக்காக்ஷிகளைப் பிள்ளைகளுக்கும் ஜனங்களுக்கும் காட்டிவருவார்களானால் கிராமத்தார் மனம் விசாலித்து கிராமங்களின் அறிவு அபிவிருத்தியாகும். ஒரு திவலை அழுக்குத்தண்ணீரை பூதக்கண்ணாடியில் வைத்துக்காண்பித்து அதிலிருக்கும் பூச்சி புழுக்களைப்பார்க்கச்செய்து அம்மாதிரி அழுக்கு சலத்திலுள்ள புழுக்களில் கிராமத்தார் நாடோறும் இத்தனைகோடி சாப்பிட இடமுண்டாகின்றதென்றும் அவற்றினாலேயே தொத்துவியாதிகள் உண்டாகின்றனவென்றும், ஆகையால் ஜலத்தைத்தக்கவண்ணம் சுத்தஞ்செய்தே சாப்பிடுதல் அவர்கள் கடமையென்றும் தெளிவாய்க்காட்டும் பக்ஷத்தில் கிராமத்தார் அழுக்குத் தண்ணீர் குடிப்பதைச் சுலபமாய் நிறுத்துவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறு கிராமத்தாருக்கு எத்தனையோ விதத்தில் அளவற்ற நன்றி செய்யலாம். கிராமத்தாரின் அறிவை அதிக செலவின்றி விருத்தி செய்தால் எல்லோருக்கும் சுகமுண்டு. ஆகையால் இம்முக்கியமான விஷயத்தில் குடிகளும் கவரன்மெண்டாரும் ஜில்லா போர்டார்களும் ஊக்கமுடன் ஒத்துழைத்து கூடிய சீக்கிரம் நம் நாட்டுக்கு க்ஷேமத்தை உண்டாக்க வேண்டுவது இன்றியமையாதது. "மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி" என்பது பழமொழியாகையால் மன்னவர்களே வழிகாட்டிகளாக இருந்து பணச்செலவைப்பொருட்டாக எண்ணாமல் அநாவசியமான செலவுகளை நீக்கிக் குடிகளின் சர்வசுகங்களுக்கும் காரணமாக இருக்கின்ற இவ்வரிய விஷயத்தில் கவலை செலுத்தித தேசத்தை முன்னுக்குக்கொண்டு வரக்கூடிய வழி தேடுவார்களென்று நம்புகிறோம். "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை" என்று பெரியோர் கூறியதை நாம் ஒரு நாளும் மறக்கவொண்ணாது.

[இன்னும் வரும்.]

பத்திராதிபர்.

மன ஏகாக்கிரம்.

(முன்தொடர்ச்சி)

அகவுலகத்தாயினும்சரி, புறவுலகத்தாயினும்சரி, அறிதலாயினும்சரி, செய்தலாயினும்சரி, மனம் சம்பந்தப்படாத சரீரவேலையோ, சரீரம் சம்பந்தப்படாத மனோவேலையோ இல்லையென்பது யாவரும் அறியத்தக்கதொன்று. மனத்துக்கும் சரீரத்துக்கும் உள்ள சம்பந்தம் ஊசியென்னும் பூச்சிக்கும் அது சதா சுமந்துதிரியும் கூட்டுக்கும் உள்ள சம்பந்தம்போலும் ஆம் எனக்கூறலாம். அதாவது சரீரமானது மனத்தை விட்டுவேருக அல்லாததொன்ருகவும், மனத்தின் வளர்ச்சிக்கும் புறவுலகத்துள்ள சீதோஷ்ண ஸ்திதிமுதலியவற்றின் ஒற்றுமைக்கும் ஒற்றுமையின்மைக்கும் தக்கபடி புஷ்டியும் ஆரோக்கியமும், அழகுவாய்ந்ததோற்றமும் உடையதாகவும் தன்னைத்தாக்குவன யாவும் மனத்தையும் மனத்தைத்தாக்குவனயாவும் தன்னையும் பாதிக்கத்தக்கவிதத்தில் மனத்தோடு அத்தனை அன்னியோன்னிய சம்பந்தம் உடையதாகவும் இருக்கின்றதென்பதே. சுருங்கக்கூறின் மனமும சரீரமும் ஒரே பொருளின் இரண்டு அற்றங்கள் என்று சொல்லத்தக்கனவாயிருக்கின்றன.

மனம் இருவகைப்படுமென்று மனோதத்துவசாஸ்திரிகள் கூறுவர். அவையாவன:—வெளிப்பட்டதொன்று; வெளிப்படாதது, மற்ருென்று. வெளிப்படாதவொன்றுதான் சரீரத்தைப்போஷித்தல் முதலிய சகல காரியங்களையும் வகித்து அதனையாளுவது. இந்த வெளிப்படாதமனம் தான் அணுமுதல் மனிதன்வரையுள்ள சகலதோற்றங்களிலும் மற்றும் சூனியம் முழுவதும் வியாபித்து சர்வவியாபகமாக நிறைந்து நின்று அவ்வத்தோற்றங்கள் தோன்றுவதற்கும் இருப்பதற்கும் அழிந்து மற்ருென்ருக மாறுவதற்கும் காரணப்பொருளாகியும சகல தோற்றங்களுக்கும் உயிராகியும் இருப்பது. கடவுள், இயற்கை,

பிரமம், சிவம் என்று பற்பல நாமங்களால் கூறப்படும் பொருளும் இஃதேயாம். இஃது வெளிப்பட்டமனத்துக்கு அப்பாற்பட்டதென்று நாம் கூருமலே தெரியவரும். அங்ஙனம் ஒரு மனம் உண்டென்பதுக்குச் சாக்ஷியம் யாதென்று வினவின், கூறுதும். மனுஷியஜாதியுள் 'நான்' 'நான்' என்று விவகரிக்கப்படும் சப்தத்திற்குப்பொருள் மேற்கூறிய இருவகை மனமும் சரீரமும் ஆயினும் அனேகர் சரீரமே மாத்திரமாகவும், சிலர் வெளிப்பட்டமனமும் சரீரமாகவும் கொள்ளுகின்றனர். இவ் வெளிப்படாதமனம் அல்லது கடவுளை வெளிப்பட்டமனம் சரீரம் ஆகிய இவ்விரண்டோடும் கூடியிருக்கப்பார்த்தார் மிகவும் சிலரே. ஆகலின் அச்சந்தேகம் நிவர்த்தித்தல் ஆவசியகம்தான் என்று விசாரிக்கிருேம். வெளிப்பட்ட மனம் என்பது இன்னதென்று எல்லாரும் அறிவார்களென்று நம்புகிருேம். ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை இயக்குவிப்பது அஃதே. மேஜையின் மேலிருக்கும் ஒரு புஸ்தகத்தைக் கையில் எடுக்கவேண்டுமென்று நினைத்தவுடன் கையானது அந்தப் புஸ்தகத்தை எடுக்கின்றது. மனத்தில் நினைத்தவுடன் கை யெடுக்கின்றதே! எங்ஙனம் எடுக்கின்றது? என்று விசாரித்தால் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் சக்தியானது நரம்பைத்தாக்கவும் நரம்பு சதையைத்தாக்கவும் சதை புஸ்தகத்தை எடுப்பதற்கு வேண்டிய மாதிரியில் நீளவும் குறுகவும் செய்வதால் எடுதல் சாத்தியமாகிறது என்று அறிகிருேம். இவ்வளவு வேலைகளும் க்ஷணப்பொழுதில் செய்து முடிக்கப்படுகின்றன. இவ்வளவும் இவைபோல்வனவும் வெளிப்பட்ட மனதின் வேலைகளாகும். இது நிற்க. நமக்குப் பசியுண்டாகிறது. நமக்குப்பசியுண்டாதல் நமது வெளிப்பட்ட மனதறிந்தல்ல. பசியுண்டானபிறகே அது அறிகின்றது. பசியென்பது சரீரத்தில் "பிருதிவி" அம்சம் குறையாக விருக்கின்றது. அது 'இப்போதே வேண்டும்' என்று சொல்வதாகும். எதற்குச் சொல்வதாகும்? வெளிப்பட்ட மனதுக்கு. எது சொல்கின்றது? வெளிப்படாத மனம் அல்லது கடவுள். இன்னும் [illegible]வையுட்கொண்ட பின்னர் சரீரத்திலுள்ள கருவிகள் மூலமாகச் சரீரத்துக்குப் பொருந்தத்

தக்க அணுக்களைப்பிரித்தெடுத்து ஜீரணப்படுத்தி இரத்தமாகத் தக்கவையை அவ்விதமாகவும் மற்றும் சரீரத்தின் பற்பலபாகத்துக்கு உபயோகப்படத்தக்கவைகளை அவ்விதமாகவும் செய்தும் உபயோகமில்லாதனவற்றை மலம், மூத்திரம், வேர்வை, புறச்சுவாசம் ஆகிய மார்க்கங்களால் வெளியே தள்ளியும் அங்ஙனம் வெளியே தள்ளுவதற்கு சாதாரணமான வழியில் இயலாதபொழுது சரீரத்திலுள்ள கருவிகளுக்குச் சாதாரணமாகவுள்ள வேலைகளைத் தற்காலத்துக்கு நிறுத்திவைத்து இந்த முக்கியமான வேலையில் சகல சரீர சக்திகளையும புகுவித்து அவைகளை எந்த விதத்தாலாவது வெளியே தள்ளியும் (இதைத்தான் சாதாரணமாக ரோகமென்று கூறுவது. சரீரத்துக்குப் பொருத்தமில்லாத அந்நிய அணுக்களை வெளியேதள்ளவோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலேனும் சரீரத்தில் ஏதாவது ஒரு பாகத்துக்கோ சக்திக்கோ கூடுதல் குறைவு நேரிட்டால் அதை ஒழுங்குபண்ணவோ செய்வதற்காக பதிவு வேலைகளாகிற உண்ணல் உறங்கல் முதலியன நிறுத்தி வைக்கப்பட்டு சரீரமும் உள் நடக்கும் வேலைகளும் சாதாரண நிலைக்கு மாறுபட்டுத் தோன்றுவதே வியாதியென்பதாம்) வருவதும் வெளிப்படாத மனதேயாம். பாஷாணத்தை எடுத்துக் கற்கண்டு என்று சொல்லி நம்மை நம்புகிற ஒரு மனுஷியனிடத்தில் கொடுத்தால் அவன் சாப்பிட்டு விடுகிறான். அவனுக்கு எவ்வளவு தூரம் நம்மிடத்தில் நம்பிக்கையிருந்தாலும் ருசிபேதத்தால் ஒரு வேளை அவன் அதை யுட்கொள்ளாதிருக்கக் கூடும். ஆனால் நாம் அதை கற்கண்டு என்று சொல்லியே மதுரம் கலந்த எந்தப்பான சாதனத்தோடேனும் கலந்து கொடுத்தால் அவன் நம்பி யுட்கொள்ளுவதில் யாதொரு தடையும் இராது. அவன் எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் 'அவன்' என்று சொல்லப்படுகிற அந்த வெளிப்பட்டமனதுக்கு அது, பாஷாணம். அதாவது சரீரத்துக்குப்பொருந்தாத அணுக்களின் கூட்டம், என்று தெரிகிறதில்லை. ஆயினும் உட்கொண்டு சற்று நேரத்துக்கெல்லாம் வாந்திசெய்கிறான். ஏன் வாந்திசெய்கிறான்? இவனுடையபுத்திக்கோ அது சரீரத்துக்கு ஒய்வாத

அணுக்களொன்று புலப்படவில்லையே! இதனால் வேறே ஒரு பெரிய அறிவு உள்ளே இருக்கிறதென்று ஏற்படுகிறதல்லவா? அதுதான் வெளிப்படாத மனது. அந்த மனம் பாஷாணம் உள்ளே போனவுடன் "ஹ! ஹா!! என்ன முட்டாள் தனம்" என்று திடுக்கிட்டு உடனே அதை வெளியேதள்ள எத்தனிக்கிறது. அவ்வணுக்களை யெல்லாம் வெளியேதள்ளுவதற்குப் போதுமான சக்தியிருந்தால் அதைக்கொண்டு வெளிப்படாத மனமானது அவைகளை வெளியேதள்ளிவிடுகிறது. இல்லாவிட்டால் அது இயலாதென்றும், இனி இந்தசரீரம் உபயோகப்படாதென்றும், சிருஷ்டித்தொழில் தன்னிடத்திருப்பதால் வேறே புதிதொன்று தயார்செய்து கொள்ளலாமென்றும் கருதித்தொழிலை நிறுத்திவிடுகின்றது. அதை நாம் மரணமென்கிறோம். இவ்விதமாக நம் வெளிப்பட்டமனத்துக்கப்பால் நம்மிடத்திலேயே காணப்படும் இந்த வெளிப்படாதமனமே சர்வவியாபகமாக இருக்கின்றதென்பதை உணரமுயல்வோம். அணுக்களுள்ளும், ஒவ்வொன்றும் வேறு அணுக்களைக்கண்டால் ஓடிப்போய்ச்சேரவும் விலகியோடவும் செய்கின்றது. இன்னதோடுசேரவேண்டும், இன்னதோடுசேரக்கூடாது என்று எங்ஙனம் அவ்வணுக்களுக்குத்தெரியும்? இஃது வெளிப்படா மனத்தின் செய்கையன்றோ? இதுபோலவே விருக்ஷாதிகள் முதலியவைகளைக்கவனித்துப்பார்த்தாலும் அறியத்தக்கதே. ஜடதத்துவ சாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி எலும்புகளும் சுண்ணாம்பும் ஒரேவிதமான அணுக்களின்கூட்டங்களாக இருக்கின்றன. அவற்றுள் ஒன்றில் அடங்கியிருக்கும் அணுக்களுக்கும் மற்றொன்றில் அடங்கியிருக்கும் அணுக்களுக்கும் யாதொரு பேதமும் அவர்களுடைய (புத்திகூடிய) வெளிப்பட்டமனத்துக்கு இதுவரை புலப்பட்டதாகக்காணப்படவில்லை. ஆயினும் சிறு செடி கொடிகளுக்கு அவ்விரண்டையும் உரமாகவைத்தால் அவைகள் எலும்புகளை மாத்திரம் சாப்பிட்டுவிட்டு சுண்ணாம்புக் கல்லைப்போட்டுவிடுகின்றன. எலும்புகள்தான் தங்களுக்கு ஒத்தவை யென்றும் மற்றது உதவாதென்றும் அவைகளெங்ஙனம் அறிகின்றன? வெளிப்படாமனத்தின் செய்கையன்றோ?

இதுவும். மனிதரிடத்தில் மனச்சாக்ஷியென்று கூறுவதற்கேதுவாக இருப்பதுதான் எது? இவ்விதமாக ஒவ்வொரு தோற்றத்தினிடத்தும் அது வியாபித்திருக்கின்றதென்பது இம்மாதிரியாகப்பரிசோதித்தால் அறியத்தக்கதே. ஆகையால் நம்மிடத்திலும் அங்ஙனம் ஒரு பொருள் உண்டென்பதில் ஐயமேயில்லை. எவ்வளவுதூரம் அதன் ஆக்ஞைகளைக்கடவாமல் நாம் நடப்போமோ அவ்வளவுதூரம் நாம் ஆரோக்கியமாகவும் சுகமாகவும் ஜீவிக்கலாம். 'ஏகாக்கிரம்' என்பது இம்மனத்தைசம்பந்தித்ததன்றாகவினும் இதனைப்பற்றிய இவ்வறிவே மேல் எழுதப்படும் விஷயத்தைக் கிரகிக்கப்போதியதாதலாலும் விரிவஞ்சியும்இதனை இம்மட்டோடு நிறுத்துவாம்.

வள்ளிநாயகம்.

தோப்புப் பாதுகாப்பு.

"மரம் வைத்தவர்கள் மோக்ஷமடைவார்கள்." "எட்டி மரமானாலும் பச்சை மரத்தை வெட்டாதே" என்னும் பழமொழிகளால் மரம் நடுவது முக்கியமென்று நம்மவர்களுக்குத் தெரிந்து அனுசரணையில் இருக்கிறது. பழம் தரும் மரங்கள் அங்கங்கே தோப்புகளாக இருக்கின்றன. நடும் சமயத்தில் சிறு கண்கள் பிழைக்கவேண்டுமென்று குழிகளை வெட்டி காயவைப்பதும், குழியில்மூடும் மண்ணுடன் எருவைக்கலப்பதும் அப்போதைக்கப்போது ஜலம் விட்டு வருவதும், சூரிய வெப்பத்தினால் கன்றுகள் துவண்டு போகின்றனவென்று நிழல் செய்வதுமாகிய இக்காரியங்கள் நடந்தேறி வருகின்றன. மண்ணில் செடி பிடிப்புக்கொண்டு தழைத்த பின்பு, செடி தானாக விழும் மழைக்குப் பிழைத்துக் காய்த்துக் கனிகளைத்தரவேண்டுமென்று யாதொரு கவலையும் அநேகர் எடுத்துக்கொள்வதில்லை. இதனால் மரங்கள் சில வருஷங்கள் காய்த்துப் பிறகு தலைமாறிப் போகின்றன. மரம் வெயில் காலத்தில் ஆகாரம் குறைந்தும் மழை பெய்த பின்பு ஆகாரம் அதிகம் கிடைத்தும் நமது நாட்டுக்கு ஆடு மாடுகள் பிழைக்கிற வண்ணம் உயிர் வாழ்கின்றது. வாழ்நாள் காலம் கிரமமாய்த் தீனி தின்று வரும் ஆடு மாடுகள் நோய் நொடிகளுக்கு உள்ளாகாதபடி க்ஷேமமாய் இருப்பது போல் மரங்களும் க்ஷேமமாயிருக்கும்.

தோப்புகளுக்கும் சோலைகளுக்கும் எப்போதும் நீர்கட்டி, எருவிட்டு பாதுகாப்பது சாத்தியமாகாத விஷயமாதலால் கூடிய வரையில் அம்மரங்களைக் காப்பாற்றும் வழியை இங்கே சுருக்கமாகக் கவனிப்போம்.

மரங்கள் வேர் நுனியால் ஆகாரம் உட்கொள்வது தெரிந்த விஷயம். இவ்வாகாரம் தகுந்த ஸ்திதியில் இருப்பதற்குக் காற்று அதனுடன் கலப்பது இன்றியமையாதது. ஆனதுபற்றிச் சில இடங்களில் வருஷா வருஷம் அடிக்கடி தோப்புகளின் மத்தியில் உழுது வருகிறார்கள். இவ்வுழவினால் மண்ணில் ஆகாயம் கலந்து பிராணவாயு தாதுவர்க்கங்களோடு ஐக்கியப்படக்காரணமாகிறது. இதுவுமல்லாமல் உழவினால் மண் ஈரம்காக்கிறதென்பது அனேகருக்குத் தெரியாது. உழுத நிலத்தில் நூற்றுக்கு 7 பாகம் ஈரம் இருக்கிறது. தரிசு நிலத்தில் அதே காலத்தில் நாலே அரைக்கால் பாகம் ஈரம் இருப்பதாக பரீக்ஷை செய்தவர்கள் தெரிவிக்கிறார்கள். இவ்வீரத்தை மணல் நிலம் கிரகிக்காமல் விடுகிறது. களிமண் நிலம் நிலைப்பித்து வைப்பதினால் சிலாக்கியமாக எங்கும் மதிக்கப்படுகிறது. பின்னும் மண்ணை உழுது போட்டால் மேல் மண்ணில் ஏராளமாயிருந்து செடிகளின் ஆகாரத்தைப் பக்குவப் படுத்தும்படியான சிற்றுயிர் மடிகின்றதென்று தெரியவருகிறது. இதனால் உழவு நடப்பிக்காமல் விடுவது யுக்தமாயில்லை. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை உள்ளவன் எவ்வாறு மீசையை ஒதுக்கிக்கொண்டு சாப்பிடுகிறானோ அவ்வாறே ஏதாவது ஒரு சாதனத்தை அனுசரித்து உழவினால் உண்டாகும் பிரயோஜனத்தைக் கைக்கொள்ளுவதுடன் ஆகாரத்தைப் பக்குவப்படுத்தும் படியான சிற்றுயிர்களையும் காப்பாற்ற வேண்டும். உழவினால் கிளறப்பட்ட நிலம் வெயில் கொடுமைக்கு உள்ளாகாமல் தழையினால் மூடுவது யுக்தம். இது சாத்தியமா என்று அநேகர் நகைப்பார்கள்.

தோப்பில் உதிரும் இலைகளை காற்றில் பறக்கவிடாதபடி பாதுகாப்பாற்றுவதுடன் தோட்டத்தில் விளையும் புல் பூண்டுமுதலியவைகள் அங்கேயே மடியும்படி அவைகளை அடுப்புக்கென்று எடுத்துப்போகாமல் தோட்டத்தில் நிலைப்பிக்கவேண்டியது.

இவ்வாறு மாமூலாய் நடப்பித்து வந்தால் உதிரும் பழுப்பு புல் பூண்டு முதலியன மட்கி மண்ணின் நிறத்தை மாற்றுவதுடன் ஈரம் காத்து கொழுமையையும் உண்டாக்கும் இதனால். மண்ணில் இந்திரியவஸ்து அதிகம் உண்டாகி முன் சொன்ன சிற்றுயிர் பிரபலப்பட மார்க்கமாகும். இந்திரியவஸ்து குறைவுபட்டிருப்பதினாலேயே நம்மூர் மண் கொழுமையில்லாமலிருக்கிறது. ஒவ்வொருநிலத்திலும் இந்திரியவஸ்து இல்லையானால் மண் உறுதிப்பட்டு வேர் செல்வதற்குத் தகுந்ததாயில்லாமலிருக்கிறது.

ஆகையால் இந்திரியவஸ்துவை அதிகப்படுத்தும் மார்க்கங்களைத் தோப்புகளில் நடத்துவது அவசியம். மழைவருமுன் நிலத்தை உழுது கொள், காராமணி, மொச்சை முதலியவைகளில் எது அம்மண்ணில் வளர்ந்து தழையைக்கொடுக்குமோ அதை விதைத்து மழைகாலம் சென்றபின்பு அந்நிலத்தை மறுபடியும் உழுது செத்தைமுதலியன மண்ணில்படிந்தும் மண்ணை மறைத்தும் இருப்பது தோட்டங்களின் க்ஷேமத்தை உண்டாக்கும் பசுந்தாட்பயிரை விளைவிப்பது மழைகாலத்தில் மண்ணில் அதிகமாயிருக்கும் ஈரத்தைக்கிரகிக்கிறது. மழைசென்றபின்பு உழுவது ஈரத்தை ஆவியாய்ப்போகவிடாமல் காக்கிறது. செத்தைமுதலியன மண்ணில் இருப்பது கடல்பஞ்சு ஈரத்தை கிரகித்துவைப்பதுபோல் மண் ஈரம் நிலைப்பிக்கச்செய்கிறது. செத்தை, தழைமுதலியன மண்ணை மறைத்து வைப்பது மண் வெயிலுக்குட்படாது, ஆகாரத்தைப்பக்குவப்படுத்தும். சிற்றுயிர்களை பலுக்கச்செய்கிறது.

ஆகையால் தென்னை, மா, கிச்சிலிமுதலிய தோட்டங்களை வெயிலடிபடாமல் மேற்கூறிய உபாயங்களால் தப்பித்துவைப்பது மண்ணில் ஈரத்தை நிலைப்பித்து வெயில்காலம் உதவும்படிசெய்வதுடன் செடிக்குவேண்டிய ஆகாரமும் விருத்தியாகும். தோட்டங்களின் மண்ணைக் கிளறுவதற்கு ஐரோப்பிய இரும்புக்கலப்பையும் மண்வெட்டியும் நல்லதல்லவென்று ஐரோப்பியர் தெரிவிக்கிறார்கள். அவர்கள் நாட்டில் ஈரம் அதிகமிருப்பதால் இக்கருவிகளை உபயோகித்தால் ஜல்லி அறுவடையாகும் என்று ஆக்ஷேபிக்கிறார்கள். மழை குறைந்து பெய்து வெயில் அதிகமாய்க்காயும் இந்நாட்டில் கூடியவரையில் வேரை மண்ணுக்குள் செல்லும்படி செய்வதே யுக்தம். ஆகையால் எந்தசாதனங்களிலும் மண்ணைப் புழுதி செய்வதுடன் இந்திரியவஸ்துவையும் அதில் ஏராளமாய்ச் சேர்க்க முயலவேண்டும்.

ஜி. ராஜகோபாலநாயுடு.

* தேனும் தேனீயும்.

I தேன் எனப் படுவது யாது?

பல்வகைப் பூக்களினின்றும் தேன் ஈக்கள் அல்லது தேன் வண்டுகளால் சேகரிக்கப்படும் இனிமையான பதார்த்தமே தேன் எனப்படும். இத்தேன் சர்க்கரை, ஜலம், மெழுகு, பூச்சத்து, பூந்தாது, (மகரந்தப் பொடி), சாயப் பொருள்கள், நிரசவஸ்துக்கள் முதலியன சேர்ந்து ஆகிறது.

* இது மதுரை அமெரிகன் மிஷன் ஹைஸ்கூல் "பாலதிராவிடஸங்க"த்தார் வேண்டுகோளின்படி அச்சங்கத்தில் உபந்யாசிக்கப்பட்டது.

II தேன் உண்டாகும் விதம்.

பூக்களில் உள்ள இனியசாரத்தை தேனீக்கள் நக்கிக் குடித்து இரைப்பையில் சேர்க்க அச்சாரமே தேனாக மாறும். பசுமாடு முதலில் வயிறு நிரம்ப மேய்ந்து பின்பு ஓரிடம் சென்றிருந்து உட்கொண்ட இரையை மீண்டும் கக்குவது போல், தேனீக்களும் வயிறு நிரம்பியவுடன் தமது உறைவிடம் நோக்கிச் சென்று இரைப்பையினின்றும் தேனை வெளிப்படுத்தி அதில் (உறைவிடத்தில்) உள்ள அறைகளில் வைக்கும். இவை இங்ஙனம் மீண்டும் மீண்டும் சென்று திரும்பி அறைகள் யாவையும் நிரப்பும்.

III தேன் கூடு.

நாம் முற்கூறிய அறைகள் அடங்கிய தேனீயின் உறைவிடமே "தேன் கூடு" எனப்படும். இக் கூடு ஒன்றை எடுத்துப் பரிசோதிப்போமானால் அது அநேக துவாரங்கள் வாய்ந்திருக்கக் காண்போம். இத் துவாரங்களுக்குத்தான் "அறைகள்" என்று பெயர். இவ்வறைகள் ஆகாராதிகள் வைப்பிடமாகவும் ஈக்களின் துயிலிடமாகவும் பக்குவமடையாச் சிற்றீக்களின் உறைவிடமாகவும் உபயோகப்படுகின்றன. இவற்றுள் தேன் முதலிய வைக்கப்படும் அறைகள் முட்டைகள், ஈக்கள் இருக்கும் அறைகளினும் அதிக ஆழமுள்ளனவாக இருக்கும். ஆகார அறையின் ஆழம் சுமார் 2 அங்குலம் இருக்குமாம். அறைகள் யாவும் மெழுகினாலானவை. இவற்றைப்பற்றிய ஏனைய விஷயங்கள் பின்னடி அறிவிக்கப்படும். நிற்க.

IV மெழுகு பெறும் விதம்.

தேனீக்கு மெழுகு ஏது? பூக்கள்தோறும் ஈக்கள் உட்கார்ந்து உட்கார்ந்து கொஞ்சங்கொஞ்சமாய் அவற்றினின்றும் மெழுகு எடுத்துச்சேர்க்கின்றன என்றுசிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இன்னோர் கொண்டது தப்பபிப்பிராயமே. ஏனெனில், மெழுகை ஈக்கள் பூக்களினின்றே பெறுவதில்லை. பின்னை, சிலந்திப்பூச்சிகள் தம் சரீரத்தினின்றும் நூலை வெளிப்படுத்துவதுபோல் தேனீக்களும் மெழுகைத் தம் உடம்பினின்றே உற்பத்தி செய்கின்றன. மெழுகை உற்பத்திசெய்ய ஈக்கள் சிறிதும் சிரமப்படவேண்டியதில்லை. ஏனெனில், அவை ஒருவேலையும் செய்யாமல் இருந்த இடத்தில் இருந்து இளைப்பாறும்சமயத்தில்தான் மெழுகு உற்பத்தியாகுமேயன்றி வேலைசெய்யும்பொழுது உண்டாகாது.

சிலசமயங்களில் யாதானும் ஓர் கட்டிடத்தையாவது மரக்கிளையையாவது பற்றிக்கொண்டு பூத்தொடுத்த ஆரம்போல் சில ஈக்கள் தொங்க, அவற்றின் நடுவில், சர்க்கஸில் ஒருவர் காலை ஒருவர் பிடித்துப் பலர்தொங்கு

வதுபோல், வேறுசில ஈக்கள் சரம் சரமாய்த் தொங்கிக்கொண்டிருக்கவும் இவற்றின்மேல் வேறுசில மொய்த்துக்கொண்டிருக்கவும், சிலர் கண்டிருக்கலாம். இங்ஙனம் இவைகள் சுமார் 24 மணிநேரம் மொய்த்தவண்ணமாகவே தொங்கிக்கொண்டிருக்குமாம். இவைகள் எதற்காக இப்படித் தொங்குகின்றன என்று நினைக்கின்றீர்கள்? மெழுகு பெறவே. இப்படி மொய்த்திருப்பதுதான் அவைகள் இளைப்பாறிக்கொண்டிருத்தற்கு அடையாளமாம். நமக்குள் பலர் நெருங்கி உட்காருவதனால் புழுக்கம் மிகுந்து வியர்வை வெளிக்கிளம்பவில்லையா? அவ்வணமே இவை இங்ஙனம் நெருங்கி மொய்ப்பதால் சூடு உண்டாகி இவற்றின் சரீரத்தைக் கவிந்துள்ள செதிள்களின் அடியிலிருந்து அடையடையாய்ப் பாளம்பாளமாய் மெழுகு வெளிக்கிளம்பும். இங்ஙனம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் மெழுகை ஏனைய ஈக்களிற் சில உடனுக்குடனேயே எடுத்துச்சேர்த்துத்திரட்டும்.

V. அறைகளின் அமைப்பு.

தமக்குப் போதுமான மெழுகு சேகரிக்கப்பட்டவுடன் இவ்வீத்திரளினின்றும் ஓர் ஈ கிளம்பி, ஏனைய ஈக்களைத்தனது தலையால் சுமார் ஒரு அங்குலம் விலக்கி, காலி இடத்தின் மத்தியில் உட்கார்ந்து தனது சரீரத்திலுள்ள மெழுகறையினின்றும் சில பாளங்களை ஒவ்வொன்றாய் எடுத்து, அவற்றை இடுக்கிபோன்றுள்ள தனது கால்களாற் பற்றி, நாவைக்கரணையாக உபயோகப் படுத்தும். பின்னர் இம்மெழுகடைகளைச் சீர்ப்படுத்தித் தனது உமிழ் நீரால் நனைத்து தான் உட்கார்ந்திருந்த இடத்தில் உறுதியாய் ஒட்டி அங்கிருந்து கிளம்பி ஏனைய ஈக்களோடு ஈயாய்ப் போய் உட்காரும். இந்த ஈ இப்பொழுது அஸ்திபாரம் போட்டுவிட்டுப்போய் இருக்கிறது. உண்மையிலே தேனீக்களும் மனிதரைப்போலவே அஸ்திபாரகல் ஊன்றிய பின்னர்தான் மேல் வேலை தொடங்குமாம். இதன் பிறகு வேறு சில ஈக்கள் அவ் வஸ்திபாரத்தின் பேரில் சுவர் எழுப்பி ஓர் சிற்றறை கட்டும். இவ்வறையைச் சுற்றிலும் அடுத்தடுத்துப்பல அறைகள் எழுப்பப்படும். இவ்வறைகள் நிரை நிரையாய் பெரும்பாலும் அறுகோணவடிவமுள்ளனவாகவே இருக்கும். தாம் அறுகாற் ஜெந்துக்களாகையால் தாம் இருக்கும் அறைகளை இவை அறுகோண வடிவமாய் அமைக்கின்றன போலும். இங்ஙனம் இவை அறுகோணமாயமைப்பது தடுப்புச் சுவர்கள் ஏற்ற வித்தியாசமின்றிப் பொருந்தவும் அனாவசியமாய் மெழுகு அதிகமாகச் செலவழியாமல் இருக்கவுமேயென்றாலும் தவறாகமாட்டாது. நிற்க.

ஒரு அறைக்கும் மற்றொரு அறைக்கும் உள்ள மெழுகுத் தடுப்புச்சுவரின் கனதி $\frac{1}{8}$ அங்குலம் இருக்கும் ஒவ்வொரு அறையிலும் இருவகைச்சிறு

அறைகள் உண்டு. இங்ஙனம் இவ்வீக்கள் அறைகள் கட்டக்கட்ட வேறுசில ஈக்கள் கட்டப்பட்ட அறைகளைக் கரடுமுரடு இன்றிச் சமன்படுத்தும். மற்றும் சில ஈக்கள், தம் கை, கால், வாய், சரீரம்முதலியவற்றைக்கொண்டு வெகுநேரம்வேலைசெய்து உள்ளே புகுந்தும் வெளியேவந்தும் அறைகளைச் சீர்படுத்தி மெருகு கொடுத்தாற்போன்று பளபளப்பாக்கும். பின்னும் சில ஈக்கள், இவ்வறைகளில் தப்பித்தவறி இருக்கும் இடுக்குகளும் நன்றாய் அடைபடுமாறு, முன்னரே தாம் தூங்கில் மொக்கிலிருந்து எடுத்துச் சேகரித்து வைத்திருக்கும் பிசுபிசுப்புடன் கூடியிருக்கும் குங்குலியத்தைப் பூசும். இன்னும் சில ஈக்கள் வீடுகட்டி முடிக்கும்வேலையில் அமர்ந்துள்ள ஈக்களுக்கு ஆகாரந்தேடிக் கொண்டுவந்து கொடுக்கும். ஏனெனில், இவ்வீக்கள் வீடுகட்டுவதைவிட்டு இரைதேடப்புறப்பட்டால் காலதாமதமாகுமென்றேபோலும். இங்ஙனம் கட்டப்பட்ட அறைகளில் தான் ஈயானது தேனை நிரப்பி அது ஒரு சிறிதும் வழிந்தோடா வண்ணம் ஒவ்வொரு அறையையும் மெழுகுத்துண்டுகளால் அடைக்கும்.

சுமார் 14 அங்குலம் நீளமும் 7 அங்குலம் அகலமும் உள்ள ஓர் தேன்கூடு சிற்றீக்களால் 24 மணிநேரத்திற்குள் கட்டிமுடிக்கப்படுமேயானால் இவ்வீக்களின் சுறுசுறுப்பையும் விடாமுயற்சியையும் புத்திக்கூர்மையையும் திறமையையும் என்னென்று எடுத்துரைப்போம்!

இவ்வறைகள் யாவும் அநேகமாய் உருவத்தில் ஒத்திருப்பினும் அளவில் ஒத்திரா. அவை பெரிதும் சிறிதுமாய்த் தான் இருக்கும். அறைகள் யாவற்றினும் அடியில் தொங்குவதும் குவிந்த வடிவுள்ளதுமான அறையே பெரிது. இப்பெரிய அறைக்கு "ராஜமாளிகை" என்று பெயர். இத்தகைய "ராஜமாளிகைகள்" சில கூடுகளில் ஐந்து அல்லது ஆறும் இருக்கும்.

VI. மூவகை ஈக்கள்.

அறைகள் யாவும் அளவில் ஒரே மாதிரியாய் இல்லாமல் ஏன் ஒரு அறை மட்டும் எல்லாவற்றினும் மிகப் பெரிசாயும், வேறு சில அறைகள் மிகச்சிறிதாயும் மற்றுஞ்சில அறைகள் இச்சிறு அறைகளினும் சற்றுப் பெரிதாயும் இருக்கின்றன? மூவகைப்பட்ட ஈக்களுக்கும் காரணம் தேன் கூண்டிலுள்ள ஈக்களிற் சிலவற்றைப் பரிசோதித் தறிவோமேல் நன்கு புலப்படும்.

இராணி ஈ.

முதலாவது, நாம் அதிமிகப் பெரிய அறையாகிய "ராஜமாளிகை" யைப் பரிசோதித்தறிவோம். இவ்வரச மாளிகை சுற்றளவில் மூன்று சிற்றீக்களின் அறைக்குச் சரியாக இருக்கும், தவிரவும்

அது ஏனைய அறைகள்போல் அறுகோண வடிவமாய் இராமல் உருளை போன்று இருக்கும். இவ்வறையில் இருக்கும் ஈயானது ஏனைய எல்லா ஈக்களைக் காட்டிலும் பெரிதாயும் நீண்ட வயிறுடையதாகவும் இருக்கிறதெனத் தெரியவரும். இது தனது தேகத்தை முற்றிலும் மூடப்போதாத குட்டைச் சிறகுகளையுடையதா யிருக்கும். இதற்கு வளைந்த கொடுக்கு உண்டு. அது கொண்டு இது படுகொட்டுக் கொட்டும். இதனை உற்று நோக்கின், இஃதோர் பெண் ஈ என்பது தெற்றெனப்புலப்படும். அறைக்குள் இருக்கும் 60,000 ஈக்களிலும் இது ஒன்று தான் முட்டையிடக்கூடியது. 'இதன் வேலை ஆயிரக் கணக்கான முட்டைகளை இட்டுக்கொண்டு சுகமாய்க் காலம் கழிப்பதும் ஈக்கள் பல்கிய காலத்து அவற்றை வேற்றிடங்களுக்கு இட்டுச் சென்று புதுச்குடும்பம் ஸ்தாபித்து விருத்தி செய்வதுமே. உண்மையிலேயே இதற்கு ஒரு சிரமமும் இல்லை. ஏனெனில், அதற்குப் படுக்கை இருக்கை முதலிய அமைப்பதோ, உணவு ஊட்டுவதோ, தேன் உண்டுவிப்பதோ, சகலமும் சிற்றீக்களின் வேலையாய்ப் போய்விடுகிறது. சிற்றீக்களுக்கு இதனிடத்தில் பயபக்தி விசுவாசம் அதிகம். இப் பெண் ஈக்கு, "இராஜாத்தி" அல்லது இராணி ஈ என்று பேர். இது முட்டையினின்றும் வெளிக் கிளம்பும்பொழுது ஏனைய ஈக்களைப் போலவே அற்ப அவலக்ஷணமுள்ள ஓர் சிறு வெண் புழுவாகத்தான் இருக்கும். இதற்கு எதற்குமில்லா மேன்மை கிடைக்கப்போகிறதென்று அதன் அறையைப் பார்த்தே அறிந்துகொள்ளலாமன்றோ? இது கொழுத்துப் பரிபக்குவ மடையுங்கால் இதற்கு எவ்வளவு பெரிய இடம் வேண்டியிருக்குமோ அவ்வளவு பெரிய இடத்தை முன்னுக்கு முன்னாலேயே உணர்ந்து அமைக்கும் சிற்றீக்களின் புத்தி என்ன புத்தி! இம்மட்டோ? இவ்வீ கூடிய சீக்கிரத்தில் கொழுத்துப் பெருத்து பரிபக்குவ மடைந்து சந்ததி விருத்தி செய்யுமாறு பூச்சத்துக்களினின்றும் ஓர்வகைப் பாகை உண்டாக்கி இச்சிற்றீக்கள் இதற்கு ஊட்டுமாமே! நிற்க.

இவ்வளவு மகத்துவத்துடனும் வளர்ந்து முதிரும் இந்த இராணி ஈ சீதோஷ்ண நிலைமைக்கேற்ப முட்டையிட்டுத் தள்ளும். இது முட்டையிட முட்டையிட இது இருக்கும் இடத்திற்கப்பாலுள்ள அறைகளில் வைக்கப்படும். பின்னர் இவை குஞ்சு பொரிக்கப்படும்பொழுது தாய் போலவே சிறகு முளையாச்சிறு வெண்புழுக்களாய், பட்டுப் பூச்சி நூற்பது போல் பட்டை நூற்று அதனைத்தமக்கு ஓர் போர்வையாக்கிக் கொள்ளும். ஏனெனில், அவைகளும் உயிர்ப் பிராணிகளேயன்றோ? அவைகட்கு மட்டும் குளிராதா? இப்புழுக்கள் சிறகு பெற்றுத்தாமிருக்கும் கூடு கொள்ளும் மட்டும் வளரும்வரை சிற்றீக்களாலேயே பூந்தாது, தேன் முதலிய கொடுக்கப்பட்டு சம்ரக்ஷிக்கப்பெற்று வருகின்றன. நிற்க.

இதுகாறும் இராணி ஈயின் சுக ஜீவனத்தைப்பற்றிக் கூறி வந்த நாம் இப்பொழுது அதன் அந்தியகாலத்தைப் பற்றிச்சில கூறுவோம். அதற்கு நாம் முற்கூறிய சீரும் சிறப்பும் பூஜ்யதையும் அது சந்ததி அபிவிருத்தி செய்துகொண்டு இருக்கும் வரையிற்றான். வயதாய் விட்டால் பக்குவந் தவறி அதனால் முட்டையிட முடியாதல்லவா? அப்பொழுது சிற்றீக்கள் பெரும் ராஜத்துரோகிகளாகித் தம் இராணியை, ஈவிரக்கமின்றிக் கொட்டியேனும், அரச மாளிகையினின்றும் குளிரில் துரத்தியேனும், அல்லது மூச்சடைத்துச் சாகும்படி காற்று ஒரு சிறிதும் புக வழியில்லாதபடி மெழுகினால் அதன் அறையை நன்றாய் அடைத்தேனும் கொன்றுவிடும்.

முற்கூறிய விதத்தைத் தவிர பிறவிதங்களிலும் இராணி ஈக்கு அகால மரணம் சம்பவிப்பதுண்டு. எங்ஙனமெனில், இவ்வீயானது ஆண் ஈக்கள் முட்டை அதிகமாய் இட்டாலும், ஈக்கள் பல்கிய காலத்து அதிகப்பட்ட ஈக்களை வேற்றிடத்திற்கிட்டுச் செல்லாமல் இருந்தாலும் சிற்றீக்களுக்கு வெகு கோபம் ஜனித்து நாம் முற்கூறிய வகையில் யாதானும் ஓர் விதமாய் அதன் உயிரைப்போக்கி விடும். இது அகாலமரணத்திற்குள்ளாகாது கருதி வளர்க்கப்பெறின் மூன்று அல்லது நாலு வருஷம் உயிரோடிருக்குமாம். இராணி ஈ மட்டும் இல்லாவிடில் கூட்டில் ஈக்களே இரா. இவ்விஷயம் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்கிராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.

ஹெலெநாம்பாள்.

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

[தொடர்ச்சி]

அவள் தகப்பனிடத்தில் அவள் சக்தியைப்பற்றிச்சொல்ல அவர் நம்பாமல் சிரித்தார். பிரத்தியக்ஷமாய்ச் சித்து விளையாட்டுகள் நடந்து வரவும் அவள் தகப்பன் அவைகளைப்பாராமலிருப்பதும் நம்பாமலிருப்பதும் கவனியாமலிருப்பதும் அவர்

களுக்கு மிக ஆச்சரியத்தை ஊட்டிற்று. அவள் காட்டும்
அற்புதங்கள் நடந்துகொண்டிருக்கும் பொழுதே அவைகளை
அவ்விடத்திலுள்ள சகலரும் கவனமாய்ப்பார்த்து ஆனந்தித்
துக்கொண்டிருக்கவும் அவள் தகப்பன் திரும்பிக்கூடப் பாரா
மல் தானே சீட்டைத் திருப்பிப் போட்டுக்கொண்டே காலங்
கழித்துக்கொண்டிருந்தார். இவ்விரண்டு சிநேகிதர்களும் அவ
ருடைய செய்கைக்கு அவரைக் கடிந்தார்கள். அதற்கு அவர்
அதெல்லாம் பயித்தியம் என்றும் அவர்கள் சொல்லுகிறபடி
அற்புதங்களை முடியாதென்றும் உலகத்தில் சகலமும் ஒரு
விதியை யனுசரித்து நடந்துவருகின்றன வென்றும் ஒழுங்கை
மீறி ஒன்றும் நடவாதென்றும் அப்படியிருக்க அவர்கள் சொல்
லுகிறபடி உலக வழக்கத்திற்கு மாறாக விநோதங்கள் நடக்கக்
கூடும் என்பது புத்தி மயக்க மென்றும் அவர்களும் மற்ற ஜன
ங்களும் சொல்வதை நம்பித் தன் மகளிடத்தில் கொஞ்சகால
மாயினும் தாமதித்திருந்து பார்த்தலால் வீண்காலம் கழிப்பது
அறிவு முதிர்ந்த பெரியோர்களுக்கு அழகல்லவென்றும் கூறி
னர். இப்படிச் சொல்வதைக்கேட்டு அச் சிநேகிதர்கள் கொஞ்
சமும் கிலேசமடையாதவர்களாய் ஹெலெநாம்பாள் தகப்பனை
நோக்கிப்பழைய சிநேகிதத்தைப்பாராட்டியாவது சற்றுநேரம்
தங்கள் கூடவிருந்து அவள் சித்திகளைக் கவனித்துப் பார்த்து
அப்பால் தன் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டும் என்றும்
பாராமலே ஒரு விஷயத்தைப் பற்றி முடிவு சொல்வது தகா
தென்றும் அதிக காலம் செலவழிக்க வேண்டியதில்லை யென்
றும் அடுத்த அறையிற் போய் ஒருவருக்கும் தெரியாமல் யாதா
யினும ஒரு வார்த்தையை எழுதிக்கொண்டு வந்து தட்டு சங்
கேத மூலியமாய் ஹெலெநாம்பாள் சக்தியைப் பரீக்ஷித்து
விடலாம் என்றும் சொல்லி கேட்டுக்கொண்டார்கள். அதற்கு
அவள் தகப்பனாகிய கர்னல் ஹான் இது சரியாய் வரப்போகிற
தில்லை அதன்மேல் அவர்களைக்கேலி பண்ணிச் சிரிக்கலாம் என்று
எண்ணங்கொண்டு உடன்பட்டனர். சீட்டை விட்டு நீங்கி அடு
த்த அறைக்குப் போய் ஒரு காகிதத்தில் ஒரு வார்த்தையை
யெழுதித் தன் உடுப்பின் ஜோபிக்குள் போட்டுக்கொண்டு திரு

ம்பி வந்து பேசாமல் உட்கார்ந்து தன் வெளுத்த கிருதா மீசைக்
குள் பின்னால் வருந் தோல்வியை யுத்தேசித்துப் புன் சிரிப்பு
சிரித்துக்கொண்டு சீட்டைத் திருப்பிப் போட்டுக்கொண்டிருந்
தார். அப்பொழுது அச்சிநேகிதர்கள் இருவர்களில் ஒருவர்
அவரைப் பார்த்து "நீ எழுதிவைத்திருக்கும் வார்த்தையைச்
சரியாய்ச் சொல்லிவிட்டால் நீ என்ன சொல்வாய் அப்பொழுதா
வது நீ நம்பமாட்டாயா?" வென்றார். அதற்கவர் "அந்த
வார்த்தையைச் சரியாய்ச் சொல்லிவிட்டால் நான் என்ன சொல்
வேனோ அதை நான் இப்பொழுது சொல்லமாட்டேன். ஆனால்
நான் ஒன்று இப்பொழுது நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். அதா
வது நீங்கள் எல்லாம் பிதற்றிக்கொண்டிருக்கும் பரமிய விநோ
தங்களையும் பரமியக் கொள்கையையும் நம்பும்படி நீங்கள்
என்னைச் செய்துவிட்டால் அந்தக்காலமுதல் நான் பேய் பிசாசு
கள் முதலிய உண்டு என்றும் பழைய பாட்டிக்கதைகள் எல்லாம்
நிஜமென்றும் நான் நம்பத்தயாராயிருப்பேன் அதன்மேல் நீங்
கள் என்னைப் பயித்தியர்களை வைத்திருக்கும் வைத்தியசாலை
க்கு அனுப்பச் சித்தமாயிருக்கலாம்" என்று நாஸ்திகமாய்ப்
பேசினர். இப்படிச் சொல்லிவிட்டுச் சீட்டைத்திருப்பிப்போட்
டுக்கொண்டிருந்தார். இவர் நிரீஸ்வர சித்தாந்தத்தையனுசரித்
தவர். புலக்காக்ஷிகளைத்தவிர வேறொன்றையும் நம்புகிறவரல்
லர். இதற்குப்பின் தட்டுகள் உண்டாயின. ஹெலெநாம்பாளு
டைய தங்கை ஒவ்வொரு எழுத்தாய்ச் சொல்லிக்கொண்டு வந்
தாள். இரு சிநேகிதர்களில் ஒருவராகிய வயோதிக ஜெனரல்
எழுத்தை ஒன்றன்பின் ஒன்றாய் எழுதிக்கொண்டு வந்தார். தட்
டுகள் நின்றதும் எழுத்துகளைக் கூட்டிப் பார்க்க அது பாஷை
யிலில்லாத இலக்ஷணக்கேடான வார்த்தையாகவும் ஒரு பொரு
ளுக்கும் சம்பந்தப்படாததாகவும் எப்பொருளின் பெயரல்லாத
ததாகவு முடிந்தது. எல்லோரும் ஏதோ தப்பிதமாய் போய்
விட்டது போலும சந்தேகமுள்ளவர் பரீக்ஷை செய்யப்போன
தில் இப்படி முடிந்ததே அவர் சிரிப்புக்கு இலக்கானோமே
யென்று மயங்கினார்கள். அப்பால் அவர்கள் இவ்வளவுதானோ
இன்னும் உண்டோவென்று மனதில் எண்ணவும் "அவ்வளவு

தான், அவ்வளவுதான் அவ்வளவுதான்" என்று மூன்று தரம் தட்டுகள் உண்டாயின. கர்னல் ஹான் இடத்தில் சொல்லலாமா வேண்டாமா வென்று குழம்பிக்கொண்டு குசு குசுவென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருப்பதை கர்னல் ஹான் பார்த்து "சரி. ஏதாவது பதில் கிடைத்ததா? அது வெகு ஆழமும் நீளமுமுள்ளதாயிருக்கவேண்டும்" என்று சொல்லி எழுந்து புன்முறுவலோடு தன் இளைய குமாரத்தியருகில் வந்து நின்றனர். இளைய குமாரத்தி எழுந்து கொஞ்சம் கலவரத்துடன் "ஒரு வார்த்தை தான் கிடைத்தது" என்றாள். "அதென்ன?" வென்று தகப்பன் கேட்டார். "ஸேயிட்சிக்" என்றாள். உடனே அவர் முகம்மாறி விளர்த்து உடம்பெல்லாம நடுங்கிக்கொண்டு தன் மூக்குக் கண்ணாடியை நேராய் மூக்கில் தள்ளிக்கொண்டு "ஏதோ காட்டு பார்ப்போம்" என்று காயிதத்தை வாங்கினார். வாய் குழறிக்கொண்டும் உடம்பு நடுங்கிக்கொண்டும் அதில் எழுதியிருந்த வார்த்தையை "ஸேயிட்சிக்" என்று படித்தார். "ஆம். ஸேயிட்சிக் தான். என்ன விநோதம் என்ன ஆச்சரியம்" என்றார். அப்பால் தன் ஜோபிக்குள்ளிருந்த காகிதத்தை யெடுத்து ஒன்றும் பேசாமல் அங்கிருந்தவர்களிடத்தில் கொடுத்தார். அது முதல் தன் மூத்த மகளிடத்தில் நம்பிக்கை வைத்தார். பின்னால் அவள் மூலமாய் அநேக இரகசியமான சமாசாரங்களைத் தெரிந்துகொண்டார். வெகு காலங்கடந்து போனதினால் மறைந்து தெரியாமலிருந்த தன் முன்னோர்களின் சரித்திரங்களையும் சொத்துகளையும் பற்றி அறிந்தார்.

பின் ஒரு நாள் கர்னல் ஹான் மனைக்கு அந்தஜில்லா போலீஸ்சூபரிண்டெண்டு (Police Superintendent) ஆகிய காப்டென் ஓ (Captain O) வென்பவர் வந்தார். இவர் இந்தக் குடும்பத்தை வெகுகால மறிந்தவர். பழைய நேசர். ஆகையால் கர்னல் ஹான் முதலானவர்கள் சும்மா சிநேக வாஞ்சையால் தங்களைப் பார்க்க வந்ததாக எண்ணியிருந்தார்கள். ஆனால்வாஸ்தவத்தில் ஒரு கொலை கேசு விஷயமாய் விசாரிக்க அவ்வூருக்கு வந்தவர் பழைய சிநேகிதர்களைப் பார்க்கலாம் என்று இவர்கள் வீட்டுக்கு வந்தார். கொலை நடந்த சமாசாரமா

வது கொலையைப் பற்றியாவது இவர்களுக்கு ஒன்றும் தெரியாது. கொலையாளிகள் இன்னார் என்று இந்த சூபரிண்டெண்டு விசாரித்த அளவில் தெரியவில்லை. அவ்விடத்தில் வேறு யாருக்கும் தெரியாது. இவர் இரவு கர்னல் ஹான் மனையில் தங்கியிருந்து மறுநாள் கிராமாதிகாரிகளைத் தருவித்து விசாரித்த போதுதான் இவ் வீட்டாருக்கு கொலை ஒன்று நடந்திருக்கும் சங்கதி தெரியவந்தது. அவ்விடத்தில் விசாரிததிலும் ஒரு ஏதுவும் கிடைக்கவில்லை. அப்பால் போஜனத்தின்போது எல்லோரும் உருண்டை மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் பொழுது மற்ற சம்பாஷணையுடன் "ஏன் நீர் என் மகளுடைய அதிசய தேவதைகளின் உதவியால் கொலைஞர்களுடைய பெயர் ஊர் முதலிய விருத்தாந்தங்களைத் தெரிந்துகொள்ள முயலக்கூடாது?" என்று கர்னல் ஹான் போலீஸ் சூபரிண்டெண்டைக் கேட்டார். அதற்குக் காப்டென்ஓ அவ்வித சக்திகளில் நம்பிக்கை யில்லாதவராய்ச் சிரித்து 'நான் எல்லாந் தெரிந்த தேவதைகளைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். ஆனால் கொம்புங் குளம்பும் வாய்ந்த பெரிய மனுஷர்களாகிய இந்த தேவதைகளால் இந்த வேலை முடியாது. அவர்கள் தங்கள் இனத்தைக் காட்டிக் கொடார்கள்" என்று முட்டாள் சிரிப்புச் சிரித்துக்கொண்டு சொன்னார். தன்னுடைய சக்திகளையும் தேவர்களையும் பற்றி இப்படிச்சொன்ன சுடுசொல்லினால் ஹெலெநாம்பாள் நிறம்மாறி தான் பேசுவது இன்னதென்று தெரியாத அந்த மதிகெட்டபேல்தியின் கர்வத்தை அடக்கவெண்ணங்கொண்டவளாய் அந்தசூபரிண்டெண்டைக்கடுஞ்சினத்துடன் நோக்கி "நான்தேவதைகளால் சகலமும் முடியும் என்று ருசுப்படுத்தினாலோ?' வென்றாள். அப்பொழுது என்உத்தியோகத்தை உனக்கே இராசிநாமா கொடுத்து விடுவேன்அம்மணி அல்லது போலீசு அந்தரங்க டிபார்டுமெண்டில் (Police Secret Department) உனக்குத்தலைமை உத்தியோகங்கொடுக்கும்படி பலமாய் இராஜாங்கத்தாருக்குச் சிபார்சுசெய்வேன் என்று அந்த சூபரிண்டெண்டு சிரித்துக்கொண்டேசொல்லினர். அதற்கவள் "இதோ, இங்கேயார்,

காப்டனே, இந்த அசங்கியமானகாரியத்தில் தலைபோட்டுக்கொண்டுகுற்றம் துலக்க ஏற்படுத்தப் பட்டவர்களாகிய உங்களைப்போன்ற உத்தியோகஸ்தர்களுக்கு உதவிசெய்ய இஷ்டமில்லையாயினும் நீர் என்னைக்கோபம்மூட்டி அதை கூவுதலால் நான் அந்தத்தேவதைகளைத்தட்டும்படிச்செய்கிறேன், என் தகப்பனார் எழுத்துகளைச்சொல்லட்டும் நீர் எழுதிக்கொள்ளும். நானும் இங்கிருக்கிறதில்லை, பாரும்" என்று சொல்லி அவ்வறையை விட்டுநீங்கி வெளியேவந்து ஒரு புத்தகத்தை எடுத்துப்படித்துக்கொண்டிருந்தாள். தட்டுகள் உண்டாயின. கர்னல்சங்கேதப்படி எழுத்துகளைச்சொல்லிக்கொண்டுவந்தார். சூபரிண்டெண்டு எழுதிக்கொண்டுவந்தார். முடிந்தவுடன்படிக்க அந்த் சூபரிண்டெண்டின் புத்தியையும் சாமார்த்தியத்தையும் இகழ்ந்துபேசி அப்பால் கொலைஞன் பெயரையும் ஊரையும் சொல்லி அவன் இந்த சூபரிண்டெண்டு ஒரு ஊரில் இந்தக்கேசைப்பற்றி விசாரிக்கப்போயிருந்தவர் அங்கேமதியீனமாய் ஏதோ ஒருவனிடத்தில் பிதற்றிக்கொண்டிருக்கும்பொழுது அவ்விடத்திலிருந்த கொலைஞன் விடிவதற்குமுந்தி அடுத்தஜில்லாவுக்கு ஓடிவிட்டதாகவும் அவன் தற்காலம் ஓரேஸ்கினோ என்னும் கிராமத்தில் ஆண்ட்ரூ (andrew) என்னும் குடியானவனுடைய தட்டுப்போரில் மறைந்திருப்பதாயும் கண்டிருந்தது. தான் இருந்து பிதற்றின இடம் காலம் முதலானது சரியாயிருந்தபடியால் சூபரிண்டெண்டுக்குத் திகைப்புண்டாய்விட்டது. அதன்மேல் தட்டுகள் உண்டான மேஜைமேற்குனிந்துபார்த்துக்கொண்டு சந்தேகக்குறிப்புடன் "நீ யாராயிருந்தாலும் கொலைஞனுடைய பெயர் உனக்கு எப்படித்தெரியும்படிநேரிட்டது? அவனை இடங்கொடுத்து மறைத்துவைத்திருக்கும் மனிதனையும் எப்படி உனக்குத் தெரியும். இந்த ஆண்ட்ரூ என்பவன் யார்? அவனை எனக்குத் தெரியாதே." என்று சூபரிண்டெண்டு சொன்னார். அதற்கு இப்படிதட்டுகள் உண்டாயின, "உனக்கு உன் மூக்குக்குச் சற்று அப்பால் தெரியவும் பார்க்கவும் முடியாதுபோனாலும், உனக்கு இப்பொழுது சங்கதிசொல்லும்நாங்கள் தெரிய இச்சித்ததெல்லாம் தெரிவோம். எங்களுக்குத் தெரிய வழியும் உண்டு.

கொலைஞனாகிய சமாய்லோ இவனாவ் இப்பொழுது இராஜாவிலிருக்கும் இராணுவவீரன். அவன் குடியின்போதையினால் கொலையுண்டவனுடன் சச்சரவுசெய்து சண்டையில் கொலையுண்டவன் உயிரிழந்தான். கொல்லவேண்டுமென்று முன்யோசித்துக்கொன்றவனல்ல. கொலை அகஸ்மாத்து குற்றமல்ல." இதைக்கேட்டவுடன் சூபரிண்டெண்டு முப்பது மயிலுக்கப்பாலுள்ள அந்த ஊருக்கு வெகுவேகமாப்பயித்தியம் கொண்டவனைப்போல் தலைகால்தெரியாமல் சவாரிசெய்துபோய்க் கொலைஞனை தட்டுகள் சொன்னபடி கண்டுபிடித்தான். இச்செய்தி பின்னால் ஒரு சங்கடத்தை உண்டுபண்ணிற்று. கொலைக்கு உளவாயில்லாமல் கொலைஞன் மறைந்திருந்த இடமும் அவனுக்கு இடம் கொடுத்தவனையும் யாருக்காவது அதுவும் ஒரு பெண்பிள்ளைக்கு எப்படி தெரியும் என்று போலீசு மேலதிகாரிகள் சந்தேகிக்கலாயினார்கள். அதன்மேல் கர்னல்ஹறான் வெகு சிரமப்பட்டு தன் குமாரத்திக்குத் தேவதைகளுடைய உதவியிருக்கின்றதென்றும் அதனால் அந்த சமாசாரம் வெளியாயிற்றென்றும் பலருக்கும் சொல்லவேண்டிவந்தது. இதற்கப்பால் ஹெலெநாம்பாளுடைய சக்தியை எல்லோரும் நம்பத்தலைப்பட்டார்கள். ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட சங்கதிகள் உளவென்றும் ஜனங்கள் மதிக்க ஆரம்பித்தார்கள்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

மனிதனுடைய கூறுகளை யெல்லாம் இரண்டாகப்பிரித்து ஒன்றைத் தாழ்ந்த பாகம், இழிந்தபாகம், அசுத்தபாகம், கீழ்ப்பாகம், என்றும் மற்றொன்றை உயர்ந்தபாகம், சிறந்தபாகம், சுத்தபாகம், மேலானபாகம் என்றும் சொல்லுவது ஒரு முறையாம். இவ்விரண்டு பாகங்களின் விவரம் மேற்செல்லச் செல்ல நன்றாய் விளங்கும். அன்னமய கோசமாகிய இன்

பூதவுடலும், பிராணமய கோசமாகிய நுண்பூதவுடலும், புலனுடம்பாகிய காமவுடலும் அசுத்தபாகத்தைச் சேர்ந்தவை.

மரணத்திற்கு அப்புறம் மனிதனுடைய சிறந்தபாகமானது காமதேகத்தில் கொஞ்சகாலம் தங்கி வசிக்கின்றது. இந்தக் காலத்தின் அளவு அந்தச் சிறந்த பாகத்தின் கூறுகள் மந்தமோ நயமோவென்பதைப் பொறுத்து இருக்கின்றது. மந்தமாயின் அதிக காலமும் நயமாயின் குறைந்த காலமுமாம். மனிதனானவன் அதைவிட்டு நீங்கிப் போனபின்னும் அது ஒரு வெறுங்கூடு போல் கொஞ்ச காலம் நிற்கின்றது. நீங்கின மனிதன் தாழ்ந்த பருவமுடையவனாயிருந்து அவன் பூலோகத்தில் வாழ்ந்திருந்தபோது அவனுக்கிருந்த மனோ சக்தியைக் காம சுபாவத்தில் பாய்ச்சிப் பதித்திருந்தால் அந்த மனோசக்தியால் கொஞ்சம் இந்தக் கூட்டினுடன் கொழுவிக்கலந்து நின்றுவிடுகின்றது. அப்பொழுது அந்த கூட்டுக்கு மிகவுந்தாழ்ந்த தன்மையான உணர்ச்சி அல்லது அறிவும், மிருகங்களுக்கிருப்பதைப் போன்ற புத்தியற்ற முரட்டு உபாயமும் இருக்கின்றது ஆனால் அதற்கு மனச் சாக்ஷி அல்லது பகுத்தறிவு என்பது கிடையாது. இது முற்ற மோசமுள்ள வஸ்து. சுகவாசத்திற்கு யோக்கியதையற்றது. இதைப் பிரேதம் என்றும், பேய் என்றும், பிசாசு என்றும் பலவாறாகச் சொல்லுவார்கள். இங்கிலீஷில் 'ஸ்பூக்' (Spook) என்பார்கள். தேகசுபாவத்துக்குரிய சிற்றின்ப இச்சைகளும் போகங்களும் வளர்ந்தோங்கி எரியும் இடங்களுக்கே அது பற்றலுள்ளதாய் அவ்விடங்களிலேயே அது அதி உல்லாசமாய் உலாவித் திரிந்துகொண்டிருக்கும். அதற்கும் சிற்றின்ப ஆசைகள் பலமாயிருந்து அவைகளையடக்கியாளாமல் அவைகளுக்கு மேலும் மேலும் இடங்கொடுத்துக்கொண்டுவரும் மனிதர்களுக்கும் அதிக கவர்ச்சியுண்டு. ஆகையால் அது அவ்விதமனிதர்களின் வழிகளையே நோக்கிச் சென்று அவர்களை உறவாக்கிக்கொள்ளுகின்றது. மிகவும் அருவருக்கத்தக்க இந்தப்பிரேதங்களைத் தாழ்ந்த பரிபக்குவமுள்ள மீடியங்கள் என்று வழங்கும் உபகரணிகள் தவறாமல் இரும்பைக் காந்தம் வலிக்குமா போல் தங்களிடத்திற்கு வலித்துப் பற்றுகிறார்கள். இந்தப் பிரேதங்கள் தான் தாழ்ந்த பக்குவமுள்ள மீடியங்கள் நடத்தும் பரமியகொலுக்களில் சாதாரணமாய் தேகத்தைவிட்டு நீங்கின ஜீவர்களைப்போல் நடிக்கின்றன. இது மாத்திரமல்ல. இவ்விதப் பரமியகொலுக்களில் பார்க்கவந்திருக்கிறவர்களில் தனக்கொத்த தாழ்ந்தபக்குவ மாகாரமுள்ள மனிதனாவது பெண்ணாவது இருந்தால் அந்த மனிதன் அல்லது பெண்ணிடம் இந்தப் பிரேதமானது வலித்து இழுக்கப்பெற்று அது அவனை அல்லது அவளைப் பிடித்துக்கொண்டு அப்பால் உயிருடன் இருக்கும் அந்த மனிதன் அல்லது பெண்ணினுடைய காம தேகத்திற்கும் இறந்துபோயிருக்கும் மனிதனுடைய காமதேகத்திற்கும் சம்பந்த ஓட்டங்கள் உண்டாக்கி அதனால் மிகுந்த துன்பத்திற் கிடமான காரியசித்திகள் உண்டுபண்ணலாம்.

இறந்துபோகும் மனிதனிடத்து தேகவியற்கையான சிற்றின்ப இச்சாபோகசுபாவமானது மிகுந்து வலிமைபெற்றிருந்தால் அவன் காமவுடலானது கூடாக அதிககாலம் நிற்கும். இப்படிக்கன்றி இந்தச் சுபாவமானது அவனிடத்து மிகவு மெலிந்திருந்து வலிமை பெறாமலிருக்குமாயின் அந்தக் காமதேகம் வெறும் கூடாக வெகு சொற்ப காலந்தான் தரித்திருக்கும். அவன் உயிருடனிருக்கும்பொழுது சிற்றின்ப இச்சைகளிலும் போகங்களிலும் மிக அழுந்தி அவைகளை ஒரு ஒழுங்கில் வைக்காமல் தலைவிரிகோலமாய் அவைகள் தன்னை விழுங்கிப்போடும்படி அறிவான்ம சம்பந்தக் கூறுகளைப்புறக்கணித்து அவைகளை வளரவொட்டாமல் அடக்கிவிட்டிருப்பானேயாகில், பிராண ஓட்டங்கள் காமமுகமாய் பதைத்து வேரூன்றி ஸ்தாபிதமாய்விட்டபடியால், அவனுடைய ஸ்தூலதேகம் நழுவி விழுந்து இறந்தபின் வெகுகாலம்வரை அவன் காமவுடல் வெறுங்கூடாகத் தரித்து நின்றுகொண்டிருக்கும். மேலும் அவன் சுபாவமே மரணமடையாமல், தற்கொலையாலாவது அல்லது வேறு அகஸ்மாத்தான செயல்களினாலாவது அவனது வாழ்நாள் திடீரெனக்குறுகிவிடுமாயின் அதாவது அவன் அகாலமரணமடைவானாயின், காமத்திற்கும் பிராணனுக்கும் உள்ள சம்பந்தம் இலகுவில் அறாது. அதனால் அவன் காமவுடலானது மிகவும் பலமாய் உயிர்ப்படைகின்றது. ஆனால் இப்படியல்லாமல் உலகில் உயிருடன் வாழ்ந்திருந்தபோது ஆசையைவென்று அதை அடக்கி ஆண்டும் அதிலுள்ள அசுத்தமலங்களைப் போக்கி அதைப் புனிதமாக்கி அப்பால் அதை மனிதனுடைய உன்னத சுபாவமாகிய பரலோக நாட்ட சாதனங்களுக்குத் துணையாயிருக்கும்படி பயிற்றியிருந்தால் அப்பொழுது காமவுடல் சிதையாமல் உயிர்த்திருக்கும்படி செய்யும் தன்மை எங்குமில்லாமற் போகின்றது; ஆகையால் அந்தவுடலானது வெகு சீக்கிரம் சிதைந்துகரைந்துபோகின்றது.

நான்காவது கூறிய காமவுடலைத் தொடர்ந்து அதனால் பின்னால் மிகவும் பயங்கரமான பலன்களை விளைவிக்கக் கூடிய இன்னொரு விதியுளது ஆனால் ஐந்தாவது கூற்றை விசாரித்து முடிக்கும் வரை அவ்விதியைப்பற்றி பேசினால் விளங்கக்கொடாது.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

இன்னிசை இருநூறு.

[முன் தொடர்ச்சி]

14-வது அதிகாரம். பொருளாட்சி.

1. பொருளான் அறமுறும் இன்பம் புணரும்
தெருள்வருநூல் கற்பினது முட்டின்றிச் செல்லும்
அரிதுமுறும் ஒன்னார்த் தெறலும் அரசும்
உரனும் அதனால் உறும்.

2. எல்லாம் உடையான் *இயக்கனைநட் டா†னெழுவர்ப்
பல்லக்கா ளாக்கினான் பல்கலைதேர் வேந்தனும
இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

* இயக்கன்—குபேரன். † எழுவர்—சத்தரிஷிகள்.

3. ‡மெல்லிலை *காயோ டுறுமெனினும் வெண்சுண்ணம்
இல்லாயிற் றோன்றாது செம்மை இறப்பவே
கல்வி குணனோடு மிறினுங் கவினாதே
செல்வமில் லாயிற் சிறந்து.

‡ மெல்லிலை—வெற்றிலை. * காய்—பாக்கு.

4. இடம்பொருள் ஏவல் எழுச்சிக் கயலார்
உடனிணை ஆதற் *குடற்றற் குவத்தற்
கடர்பல தீநெறிக் §காய்வின்று பொன்னைக்
கடன்கோடல் துன்பக் களன்.

* உடற்றல்—சமர்செய்தல். § ஆய்வின்று—ஆராயாமல்

5. இன்றி அமையாக் கருமம் இடர்ப்படில்
குன்றும் அளவு குறித்துப்பல் காலனோக்கி
என்று தரலொல்லும் யாதனின் என்றாய்ந்து
சென்றுகடன் கோடல் செயல்.

6. கடங்கொண்டு பின்னைக் கொடாது கழிப்பின்
இடங்கொண்டு நிற்கும் இகழ்ச்சி அதாஅன்று
மடங்கொள் விலங்கா உழைப்பர்பின் வந்தே
தொடங்கற்க இத்தீத் தொழில்.

7. நீர்வழி தேற்றம் இலையேற் சிறிதானும்
யார்வயி னுங்கடன் கோடல் அறிவன்றால்
தேர்வழி ஈவார்பாற் சென்றிரப்பு நன்று *கரும்
பார்வழித் துன்பப் படார்.

* கரும்பார்—நரகம்.

8. மறம்புகுத்தா ஆற்றாற் பொருளீட்டி மற்றும்
இறந்து படாமைப் புரக்கவிவை செய்தும
அறம்பொருள் இன்பப் பொருட்டளியான் ஆயின்
பிறந்தும் பயனெய்தாப் பேய்.

9. மடைத்தலை ஏரி வருவாயின் மிக்க
கொடுத்தலைச் செய்யிற் கொடாதுபின் வற்றும்
அடுத்தள வாராய்ந் தளித்துண்ணல் அன்றே
வடித்தநூல் தேர்ந்தார் வழக்கு.

10. பெருந்துயர மாற்றிப்பொன் ஈட்டினும் பின்னை
அருந்தவர்ப் பேணான் அறஞ்செய்யான் ஆயின்
மருந்தரிதாற் பெற்றும் வயிற்றுட்பெய் யாது
பரிந்தளற்றுட் பெய்த பதர்.

மருந்து—அமுதம். அரிது—அரியவழி.

பொருளாட்சி முற்றும்.

15-வது அதிகாரம். செருக்கின்மை.

1. தன்னினும் மிக்க தவம்புகழ் கல்விமதி
பொன்னடல் இன்பம் குணனெறி பொற்புளார்
தன்முற் பலருளராத் தான்கண்டும் என்மன்னோ
கொன்னே செருக்குக் கொளல்.

2. யாது செயலும் அறிவும் தமக்குளவென்
றோத வுளவேல் உறக்கத் தொழிவதென்
ஆதியிறை கூத்தாட்டும் உண்ணின் றறிவார்க்குத்
தீதன்றோ யானென் செருக்கு.

3\. அறிவுடையம் யாமென் றகஞ்செருக்க ஒன்றும்
அறியாத பான்மை அறிவுயிர்க் குண்டோ
பிறவுஞான் றின்மையிற் பின்னறிவ் வெல்லாம்
இறையான் அறிவ தெனல்.

ஞான்று—காலம்.

4\. அண்டம் இணைற்றின் அளவென் றகிற்றோரை
கண்டிரை ஒக்குமாற் கல்லார் நெறிப்படப்
பண்டைநூல் எல்லாம் பயன்றெரிந்தாம் என்னவே
கொண்டு களியுறூஉம் கூற்று.

5\. கன்று பிறந்தவுடன் தாய்முலைப்பால் காட்டாமே
சென்றருந்தி யாங்குச் சிலர்தாமே காணினுமென்
* தொன்றுபயில் வானவை தோன்றவிற் காட்டாமே
ஒன்றுமில தாமே உணர்வு.

* முற்பிறப்புக்களில் தொன்று தொட்டுவந்த பயிற்சி வயத்தான் இப்பிறப்பிற் பிறர் காட்டாமற் றோன்று வனவும் சில உண்டு என்பதாம.

6\. துக்கவெயில் காய்பிறவிக் கான்கடப்பத் தூநெறிப்
புக்கார்க் குறிற்பொன் ○ புயல்நிழல்போ லாம்பயன்
அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

○ மேக நிழல் வேனில் நண்பகற் பாலையில் நடப்பார்க் குப் பயன்படுதல் போல செல்வம் பிறவிக் கான்கடப்ப முயல்வார்க்குப் பயன்படும் என்பதாம்.

7\. இளையம் வலியம் எனக்களித்து நல்ல
வுளவாகத் தீயசெயல் ஓஓ கொடிதே
பளகில் பருவநீர்ப் பாய்ச்சின்றிப் பைங்கூழ்
விளைவறத்தீ மூட்டி விடல்.

8\. இறையென முத்தொழிலும் செய்யினும் என்கொல்
குறையும் அறிவு செருக்கொன்று கொள்ளின்
உறுமே இடும்பை உயலில்லை என்றும்
அறிவுடையான் கொள்வான் அலன்.

9\. தெருளாதார்ப் பற்றும் செருக்கெனும் பேயால்
குருடாம் புறக்கண்ணும் நல்லசெவிக் கொள்ளா
§ மருளும் மதிதிறப்பில் வாய்திறக்கு மேனும்
பருவந்து சோர்வு படும்.

§ மதி மருளும் வாய்திறப்பு இல் திறக்குமேனும்...... எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

10\. தேவருந்தீப் போற்றுப நீற்பிற் றிரியளவின்
யாவரும் நீர்மெய் தவிப்ப அகமபற்றின்
மேவாரும் போற்றுப தாமடங்கின் மிக்குழி
யாவரும் செய்ப இடர்.

செருக்கின்மை முற்றிற்று.

(தொடரும்.)

அ. சண்முகம்பிள்ளை.

---

* கலிவெண்பா.

எம்மொழியின் மூவ ரியற்றினர் நான்மறையைச்
செம்மையுட னாழ்வார்க ளேகியர்தம்—மிம்மையறச்
சாற்றினர் நன்பொருளைத் தண்ணருளோ டெம்மொழியிற்
போற்றுதிரு வள்ளுவனார் பூவுலகின்—மாற்றுறையொன்
றில்லாக் கனகமென வேற்றிமகி ழுங்குறளைச்
சொல்லா லியம்பினர்காண் டொல்முறையின்—பல்லழகும்
சேருமணி மேகலை சிலப்பதிகா ரம்முதலாம்
சீரியநூ லெம்மொழியிற் செப்பியுள—பார்புகழும்

---

* மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் மூன்றாம் வருஷோற்சவத்தில் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தவரும் அச்சங்கத்தின் வைஸ்பிரஸிடெண்டுமான மகா-ா-ா-ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியய்யரவர்கள் அச்சமயம் தமிழின் பெருமையைப் பற்றிச் சொல்லியது. ப-ர்.

சங்கம் புகன்று தழைத்தது முன் னெம்மொழியில்
நங்கையொரு பாகனுமே நக்கீரன்—சங்கையறப்
பேசியது மெம்மொழியிற் பின்னு மிராமாயணத்தை
மாசகலக் கம்பன் வழுத்தியதும்—நேசமொடு
வில்லிபுத் தூரார் விளங்குமுயர் பாரதத்தைச்
சொல்லியதும் நீதிமுறை தோன்றவெனப்—பல்லுருவாய்
ஔவை மொழிந்தங் கருளியதும நாலடியார்
இவ்வுலகோ ருய்ய விசைத்துளதும்—எவ்வுரையில்
நாடும் புகழேந்தி நாவலரொட் டக்கூத்தர்
பாடியது மெம்மொழியிற் பைம்பொதிகை—கூடுமுயர்
மாமுனிக்குக் கந்தன் வழுத்தியதும் பின்முனிவர்
காமருந்தீ ராகுந்தொல் காப்பியத்தை—நேமமுறச்
சாற்றியது மெம்மொழியிற் றன்னிகரில் லாப்பெருமை
பேற்றுப் பலநூ லிசைந்தவுயர்—மாற்றமெது
தென்னுடு வாழச் சிறந்தமொழி யெம்மொழிக்கும்
முன்னும் தமிழும் மொழியன்றோ—கன்னலொடு
தேனும் சுவைமலியும் தெள்ளமுதும் பாலுநிறை
பானமென மேலோர் பருகிமகிழ்—வானியல்பு
பெற்றமொழி யாம்நாளும் பேசிங் குலவியதி
வுற்றதமி ழன்றோயிவ் வுனுடலைப்—பெற்றவர்கள்
ஒக்கப் பிறந்தா ருறவினர்பெண் டீர்மக்கள்
பக்கம் புகன்றுசுகம் பாராட்டி—மிக்க
வுதவும் தமிழே யுரையா துனைக்
கிதமென் றுரைவே றியம்பிக்—கதிபழியா
தந்தணர்க ளன்மாரி லாயிடினு மாங்கதற்குப்
பிந்திய வோர்சாதி பிறந்திடினும்—பந்தமதா
லெப்பிறப்பு வாய்ந்திடினும் மெத்தகைமை பூண்டிடினும்
செப்புவதும் நூலாய்ந்து தேறுவதும்—மெய்ப்பொருளைச்
சிந்தித்துக் கூறுவதும் செந்தமிழே யாயதுவென்
புந்திக்குப் போதம் புகட்டுமுறை—தந்திடென
அந்தநாட் சங்கத் தரும்புலவர் நாயகமாய்
வந்தமர்ந்த மெஞ்ஞான மாமணியைத்—திம்திமென
அன்றாடு காண்மாறி யாடியமெய் யன்பினையான்
மன்றாடிக் கேட்பென் வரம்.

பி. எஸ். சுப்பிரமணியய்யர்.

சைவசித்தாந்தம்.

(முன்தொடர்ச்சி)

அகண்டாகார பரிபூரணமாயோங்கி நிற்கின்ற பேரின்பமாகிய பரமசிவத்தினிடத்து ஞாதிரு ஞானஞேயமென்னுந் திரிபுடியுமடங்க ஆகித்தனைக் கலந்தகண்ணும், அப்பினைச்கலந்த உப்பும், நீரினைப்பொருந்திய நிழலும் நெருப்பினைப்பொருந்திய அயமும், இந்தனத்தொன்றிய அங்கியும் எரியினிற்குறுகிய சலமும், வானினைப்பொருந்திய வளியும், மலரினைப்பொருந்திய மணமும், தினகரற்கூடிய வுடுவும், தேனிற்செறிந்த இரதமும், போலவும், தாடலைபோலவும், காறலைபோலவும் ஒன்றுபட்டொத்து, அப்பேரின்பமாகியபரமசிவமேயாய் நீயென்பது ஓரணுவளவுந்தோன்றமல் ஆறானது கடலினிடத்தடங்கி யதீதப்பட்டு நிற்கின்ற தன்மைபோலவும் உப்பானது அப்பினிடத்து அடங்கி யதீதப்பட்டு நிற்கின்றதன்மைபோலவும் நீயும் அப்பேரின்பமாகிய பரமசிவத்தடங்கி யதீதப்பட்டுப் பேரின்பாதீதமாய் வாழ்ந்துகொண்டிருத்தலே சிவபோகம். இத்தசகாரியம் பத்தும் சுத்தாவத்தையைந்தனுள் அடங்குமுறைமை எப்படியென்னில் நின்மலசாக்கிரத்தில் தத்துவரூபம் தத்துவதெரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆகியநான்கும் அடங்கும். நின்மலசொப்பனத்தில் ஆன்மதெரிசனம் சிவரூபம் ஆகிய இரண்டும் அடங்கும். நின்மலசுழுத்தியில் அருள் செய்யும் பஞ்ச கிருத்தியத்தை யான் செய்வேன் என்று கருதுதன்மாத்திரமே யன்றி அத்தசகாரியத்துள் ஒருகாரியமும் அடங்காது. நின்மலதுரியத்தில் ஆன்மசுத்தி சிவதெரிசனம் சிவயோகம் ஆகியமூன்றுகாரியமும் அடங்கும். நின்மலதுரியாதீதத்தில் சிவபோகம் அடங்கும். இப்படிப்பட்ட சிவஞானத்தைப் பெற்றவன் சீவமுத்தனெனப்படுவான்.

இப்படிப்பட்ட சிவஞானத்தைப் பெற்றவனுக்கு நன்மை தீமைகளாகிய இருவினைகளுமில்லை. வினைகளைச் செய்தானாயினும் ஒரு பலத்தை நாடுவது மில்லை. சமயாசாரங்களை அனுட்டிக்க வேண்டுவது மில்லை. தவங்கள் பண்ணவேண்டுவதுமில்லை. விரதானுட்டானங்களும் ஆச்சிரம தருமங்களும் அனுட்டிக்க வேண்டுவதுமில்லை. சித்த சலனமுமில்லை. சமயத்துக்கேற்ற வேடங்கள் தரிக்க வேண்டுவதுமில்லை. தியான பாவனை செய்ய வேண்டுவதுமில்லை. விடயங்களை விடுதல் பற்றுதல் வேண்டுமென்ற நியமமுமில்லை. அந்தக்கரணங்களை அடக்க வேண்டுவதுமில்லை. தாமத இராசத குணங்களை அடக்கிச் சத்துவகுணச் செய்கைகளைச் செய்யவேண்டுமென்ற நியமமுமில்லை. ஒரு குறியின்கண்ணே நிற்க வேண்டுவதும் இல்லை. குலாசாரத்தில் ஒழுக வேண்டுமென்ற நியமமும் இல்லை.

அவர்கள், பாலர் உன்மத்தர் பிசாசர் குணங்களைப் பொருந்தி பரமானந்த மேலீட்டால் பாடல் ஆடலக ளாகிய தொழில்களைச் செய்திடினுஞ் செய்வர். இப்படிப்பட்ட சிவஞானிகையில் ஒருவன் எள்ளளவு தானத்தைச்செய்தாலும் அது நிலமும் மலையும்போல மிக்கோங்குதலால், மேலான போகங்களையெல்லாம் அனுபவிக்கும்படி செய்து சிவஞானத்தை உதிப்பித்து வீட்டினை யெய்துவிக்கும். இதற்கு உதாரணம்:—

"சிவஞானச் செயலுடையோர் கையிற்றா னந்
  தில மளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை யெடுத்துப்
  பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
  சரியை கிரியாயோகந் தன்னினுஞ் சாராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
  நாதனடிக் கமலயுக ளணுகுவிக்குந் தானே",

என அருணந்தி சிவாச்சாரியர் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கானும் உணர்க. பசுவியல்பு முடிந்தது. இனி இருளாகிய ஆணவமலத்தின் இயல்பு கூறுதும்.

ஆணவமலம்.

இனி ஆணவமலத்தினிலக்கணமாவது:—நித்தமாய், வியாபகமாய் ஞானத்தைமறைப்பதாய், திரவியமாய், அறியாமைக்குணத்ததாய், செம்பிற்களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதிபந்தமாய், சடமுமாய்ப்பலவுமாயின் அழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல் பெறப்படாமையின் ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப்பாகுபாட்டிற்கேதுவாய், உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைத்து நின்று தத்தங்காலவெல்லையினீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய் உயிர்கள் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய், வியாபகவுயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய், பசுவினது தன்மையால் பசுத்துவமென்றும், மரணத்தைக்கொடுப்பதால் மிருத்தியுவென்றும், அறிவை மயக்குவதால் மூர்ச்சையென்றும், அழுக்காயிருத்தலால் மலமென்றும், இருளாயிருத்தலால் அஞ்சனமென்றும், ஞானத்தைத் தடுத்தலால் அவித்தையென்றும், ஆன்மாவைச்சுற்றியிருப்பதால் ஆவிருதியென்றும் கூறுகின்ற பலகாரண நாமங்களையுடையதாய், கேவலத்தில் ஆவாரகசத்தியான ஆன்மாக்களின் ஞானக்கிரியைகளை மறைத்துநின்று சகலத்தில் அதோநியாமிகாசத்தியாலே போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மையை நிகழ்த்தியென்றும் அஞ்ஞானத்தையேகாண்பிக்குமென்க.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

புத்தகக்குறிப்பு.

தமிழ்ச்சொல்லகராதி:—முதலாம் பாகம். இது அகரத்தை முதனிலையெழுத்தாகக்கொண்ட 7967 சொற்களுக்குப் பொருள் விளக்குவது. இதற்குமுன் சிலரால் வெளியிடப்பட்டுள்ள அகராதிச்சொற்களினும் 3127 சொற்கள் அதிகமாக சேர்க்கப்பட்டுளது. ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் கூறுமிடத்து இப்பொருள் இன்ன நூலிற் கூறப்பெற்றதென நன்கு விளக்கப்பெற்றது. இவ்வாறு உதாரணமாகக் காட்டப்பட்ட நூற்களின் தொகை 344. தமிழ்ச்சொற் பொருளாராய்வார்க்கு இன்றியமையாப் பெருந்துணையாவது இதுவேயாம். இன்றுவரை யாம் அறிந்த மட்டில் ஒரு சொற்குப்பொருள் தேடி அகராதியைப்பார்த்துப் பொருள் காண்பினும் அதனையே ஆதாரமாகக்கொள்ளாமல் அச்சொல் அப்பொருட்டாதற்கு வேறு மேற்கோள் யாண்டுளதென்று வருந்தித்தேடி வாடுவதே தமிழ்மக்கள் கதியாயிருந்தது. இப்பெருந்துயரத்தை முற்றக்களைந்தது இச் சிறந்த நூலேயாம். இதுபோன்று மற்றைப் பாகங்களும் வெளிவருமாயின் தமிழ் மாதுக்கு வேறு அணிகலன் மிகையாம். இப்புத்தகத்தைப் பெற்றவுடன் யாம் பெற்ற மகிழ்ச்சியை யென்னென்பேம். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழ் மக்களும் விருப்பத்துடன் தேடி வாங்கற்பாலது இதுவே. இங்ஙனம் பெரிதும் அருமை வாய்ந்த இதனையியற்றி வெளியிட்ட பரமோபகாரியும், சிறந்த வித்துவரத்தினமும், இலங்கை அரசின் நீதிபதியும் ஆகிய யாழ்ப்பாணத்து வல்வையம்பதி ஸ்ரீமாந் கு. கதிரைவேற்பிள்ளையவர்களது முயற்சித் திறம் மிகவும் பாராட்டற்பாலது. இம்முயற்சியானே பெற்றதும் என்றும் அழியாததுமாகிய புகழுடம்பை வகித்துப் பூதவுடம்பை விடுத்துச்சென்ற இவர் பிரிவாற்றாமையால் வருந்தாத புலவரு முளரோ? இப்புத்தகத்தை எமது பார்வைக்கு அனுப்பியவரும் இந்நூலாசிரியரின் நற்றவப்புதல்வரும் ஆகிய கொழும்பு அப்புக்காத்து ஸ்ரீமாந் கு. பாலசிங்கம் அவர்கட்கும், யாழ்ப்பாணம் கச்சேரிப்பிரதான முதலியாரும் அருங்கலைவிநோதரும், ஈச்சுர நிச்சய நூலாசிரியரும் ஆகிய ஸ்ரீமாந் ச. சபாரத்நம்பிள்ளையவர்கட்கும் இடையறா நன்றி கூறுகின்றேம். ஸ்ரீமாந் கு. பாலசிங்கமவர்கள் இவ்வகராதியின் மற்றப்பாகங்களையும் விரைவில் வெளியிட்டு உலகுக்கு உபகரிப்பான் மிகவும் பிரார்த்திக்கின்றனம்.

சிவாலய தரிசனவிதி மூலம்:—இது சில வருஷங்கட்கு முன் மதுரையில் வசித்தவரும் ஞானசம்பந்தப்பிள்ளை யென்னும் தீக்ஷா நாமமுடையவரும் வித்துவ சிகாமணியுமாகிய இராமநாதபுரம் ஸ்ரீமத் இராமசுவாமிப்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. சொன்னயம் பொருணயமு

விறையவுற்றது. சைவசமயிகட்குப் பேருபகாரமாகும்படி இதனையச்சிட்டுபகரித்தவர் ஸ்ரீரங்கம் மகா-௱-௱-ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களே. இப்பிள்ளையவர்கள் தற்போது ஆதீனகர்த்தர் பலருள்ளும் கல்வியறிவொழுக்கங்களால் மிகச்சிறந்து மேன்மையுற்று விளங்கும் சூரியனார்கோவில் மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகளிடத்து அருளுபதேசம் பெற்று மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனவித்துவானாக இருந்து நமது பாநுவில் சைவசித்தாந்தம் முதலிய சிறந்த பல விஷயங்களை வெளியிட்டுவரும் ஸ்ரீமத் சுப்பிரமணியபிள்ளையவர்களின் மாணாக்கரே. இந்நூல் 150-செய்யுட்களையுடையது. இத்துடன் துறைசை முத்தம்பலவாண தேசிக சுவாமிகளருளிச்செய்த தசகாரியம் 56 பாடல்களும், பேரூர் வேலப்பதேசிக சுவாமிகளருளிச்செய்த பஞ்சாக்கரப் பஃறொடைக் கலிவெண்பாவும் சேர்க்கப்பெற்றுள்ளன. இதன்விலை அணா இரண்டுதான். மதுரைப் புதுமண்டபம் புஸ்தகக்கடை இ. ராம. குருசாமிக் கோனாரிடத்தும் ஷை ஷை ஷை எஸ். முத்தையபிள்ளையிடத்தும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

பறக்கும் இயந்திரம் ஒன்று நூதனமாக ஒரு ருஷியர் கண்டுபிடித்திருக்கிறாராம்.

* * * * *

இந்தியாவில் சுமார் 302-நிலக்கரி சுரங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் 86,000-ஜனங்கள் வேலை செய்கிறார்களாம்.

* * * * *

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் இன்னும் யுத்தம் தீர்ந்தபாடில்லை. இருதிறத்தாருக்கும் சேதம் அதிகம். என்று இது நிற்குமோ?

* * * * *

டாக்டர் பந்தார்கர் அவர்களுக்கு பம்பாய் சர்வகலாசாலையார் L. L. D. பட்டம் அளித்தார்களென்பதை அறியச் சந்தோஷிக்கின்றோம்.

* * * * *

ஒவ்வொரு வருஷத்திலும் நாணய சாலைகளில் 80-லட்சம் செம்பு நாணயங்கள் செய்யப்படுகின்றனவாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

* * * * *

ஆஸ்திரேலியாவில் ஒருவரிடம் லக்ஷம் பவுன் பெறும்படியான முத்து இருக்கின்றதாம். தென்னாட்டுச் சிலுவை (Southern Cross) என்பது அதன் பெயர்.

ஸ்விட்ஜர்லந்து தேசத்தில் ஒரு கடிகார வர்த்தகர் ஒரு சிறு போனகிறாப் இயந்திரம் உள்ளே வைக்கப்பெற்ற ஒரு பேசும் கைக்கடிகாரம் கண்டுபிடித்திருக்கிறார்.

* * * * *

நம் லார்ட் கர்ஸன் அவர்களது மனைவியார் அபாய வியாதிக்குள்ளாகி அதன் கொடுமைக்குத் தப்பிப் பிழைத்தது எவர்க்கும் பரமசந்தோஷத்தை யுண்டாக்கும்.

* * * * *

அமெரிக்காவில் பத்திரிகா சிருபராகிய மிஸ்டர் ஷல்க் என்ற ஒருவருக்கு இரு கைகளுமில்லை. அவர் தன் பல்லினாலே எழுதப் பழகியிருக்கிறார். அதனாலேயே சித்திரப்படங்களும் எழுதுகிறார்.

* * * * *

கெட்டியான ரசத்தினால் (Mercury) ஒரு சோப்பை செய்யப்பட்டிருக்கிறதாம். இதில் தண்ணீர் முதலிய திரவ வஸ்துக்கள் விட்டால் ஒழுகுகிற தில்லையாம். ரசம் விட்டால் மட்டும் ஒழுகுகிறதாம்.

* * * * *

இந்துமகா சமுத்திரத்திலுள்ள சீசேல்ஸ் என்னும் தீவிலிருந்து 800-வயதுள்ள ஒரு ஆமை பாரிஸ் நகரத்துச் சாமானாக செண்ட் லூயியின் பொருட்காக்ஷி சந்தைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதன் விறை 9701-பவுண்டு இருக்கிறதாம்.

* * * * *

பிலெடேல்பியா என்னும் அமெரிக்கா நகரத்தில் கிளிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் வைத்து இருக்கிறார்கள். அதற்குத் தலைமை ஒரு மாது. போனகிராப் என்னும் பேசும் இயந்திரத்தினால் அந்தப் பக்ஷிகளுக்குப் பேசும்படி சொல்லிக் கொடுக்கிறார்களாம்.

* * * * *

தென் ஆஸ்திரேலியாவில் ஹாக்கர் என்னுமிடத்தில் செப்டம்பர்மீ 21ௗ 11¼-மணிக்கு ஒரு கடும் பூகம்பம் உண்டாயிற்று. இடியையொத்த சப்தங்களும் பேரிரைச்சலும் உண்டாகி பலருக்கு நடுக்கத்தை யுண்டுபண்ணிற்று. 20, 30 விநாடி பூமியதிர்ந்ததாம்,

* * * * *

தண்ணீரில் ஜீரண சக்திக்கு ஆதாரமாகிய சில கிருமிகள் இருக்கின்றனவென்பதும் நாம் அதைக் கொதிக்க வைப்பதால் அந்நல்ல கிருமிகள் இறந்துபோய் ஜீரண சக்தி குறைய இடமுண்டென்பதும், ஆகை

யால் வெந்நீரைக் குடிப்பது அவ்வளவு உசிதமில்லை என்பதும் சாரின் முதலிய பிரன்சு பண்டிதர்களின் கொள்கை.

அநுதாபம்.

பாளையங்கோட்டை ஸ்ரீமாந் சண்முகம்பிள்ளையவர்கள் சமீபத்தில் காலம் சென்றதாகக்கேட்டு மிகவும்வருந்துகிறோம். இவர் நம் விவேகபாநு ஆரம்பகாலத்தில் மிக்கஊக்கத்துடன் அன்புபாராட்டி பொருளுதவியும் விஷயதானமும் செய்துவந்தவர். ஸ்ரீமத் வள்ளிநாயகஸ்வாமிகட்கு மனங்கலந்த உழுவலன்புள்ளார். நற்குண நற்செயல்களெல்லாம் பெரிதும் வாய்ந்தவர். ஈகையின் அருமை பெருமை முற்றத்தேர்ந்தவர். தமிழ் வல்லுனர். பரதுக்க துக்கியாகி யாவர் மாட்டும் இரக்கங்கொண்டுகனியும் உள்ளத்தவர். பாநு முதல் வால்யூத்தில் "சடபரதர் சரித்திரமும், நான் குடியிருக்கும்வீடு" என்பதும் இவரால் எழுதப்பட்ட விஷயங்களே. இத்தகையார்பிரிவு பாநு அபிமானிகளெல்லாரும் கவலைகொள்ளத்தக்கதாகும். இவர் பிரிவாற்றாமை பற்றி நண்பர்சிகாமணியாகிய வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கூறிய 3 வெண்பாக்கள் இவை.

1. என்னுயிருக் கின்னுயிரா யென்னுடனென் றுங்கலந்திங்
கென்னுடலை யின்னுயிரா யீங்கியக்கி—மன்னி
யிருந்தநண்ப சண்முகநீ யீங்கென்னை நீங்க
வருந்துயரெங் ஙன்புகல்வன் மற்று.

2. தானேதா னாகின்ற சாமிவள்ளி நாயகத்தைத்
தானேதா னென்ன றணவுஞ் சண்முகனே—மானோர்
விழிமயக்கெய் தாதநினை வீய்ந்தெங்ஙன் கொண்டான்
விழியிலவன் மெய்யே விளம்பு.

3. சாதுக்கடங்குதற்குத் தன்னகத்தை யீந்தவர்தங்
காதுக்கெக் காலமுமே கைக்காத—வேத
வுணவுதவு நண்பநின துத்தமமா வோங்குங்
குணமதையுங் கொள்ளுவனோ கூற்று.

இதனால் யாங்கொண்ட அநுதாபத்தை இவர் தவப்புதல்வராகி கொல்லம் ரயில்வே இஞ்சினீர் ஆபீஸ் கிளார்க்குவேலையிலிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ எஸ். துரைமுனியப்பபிள்ளையவர்கட்கும், பிறர்க்கும் வெளியிடுகின்றோம்.

வில்லியம் டிக்பிஸி, ஐ. இ. ஸி. ஐ. இ.

இம்மகான் இங்கிலாந்தில் மரணமடைந்தாரெனக் கேட்டு மிகத் துக்கிக்கின்றோம். இவர் நம் இந்தியாவின் க்ஷேமத்தின் பொருட்டுப் பல்லாண்டாக உழைத்தவர். "இந்தியாவின் ஏழைமைத்தனம்" என்ற ஓர் அரிய பெரிய புத்தகம் எழுதியிருக்கின்றனர். அதனைப்படிப்பவர் இவரது புத்தி நுட்பத்தையும் மனோ விசாலத்தையும் கலியா முயற்சியையும் புகழாமலிரார். பஞ்சகாலத்தில் நம் நாட்டாருக்காக இம்மகான் தம் தேகத்தைத் தேகமென்று பாராது வருந்தி யுழைத்தவர். இராஜ தந்திரக் கணக்குகளில் இவருக்கிருந்த நுண்ணிய அறிவு எவரும் வியக்கற்பாலது. இம்மகானை யிழந்தது நம் நாட்டுக்கு பெருந் துர்ப்பாக்கியமே. இவரே இந்தியா என்ற பத்திரிகையை ஒழுங்காய் நடத்திவந்தவர். ஆதியில் பம்பாய் டைம்ஸ் நடத்தியவரும் இவரே. இவர் சாகுங்கால் இவரது பிராயம் 55. இவருக்குத் தக்க ஞாபகச் சின்னம் ஏற்படுத்தல் நம் நாட்டாரின் கடமை. இவர் நமக்குச் செய்த நன்மையை நாம் என்றும் மறக்கொணாது.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவிய தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தஸ்வாமிகள் திருவானைக்கா வரவு ... ரூ. 35
2. மகா-ள-ள-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையாங்குடி வரவு. ... ... ரூ. 25
3. மகா-ள-ள-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ... ரூ. 10
* 4. மகா-ள-ள-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமீந்தார் தேவிகோட்டை வரவு... ரூ. 25

* இவர்கள் 1903 வருஷத்திலும் 25ரூ. நன்கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

5. மகா-ா-ா-ஸ்ரீ ராம. மு. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதும்பை. சிமலான் வரவு ... ரூ. 25

6. மகா-ா-ா-ஸ்ரீ பி. எஸ். பரமசிவக்கவுண்டரவர்கள், உஞ்சனைவகையரா மிட்டா ஜமீந்தார், பொக்கம்பாளையம் வரவு ... ... ரூ. 50

7. மகா-ா-ா-ஸ்ரீ அ. பாப்புரெட்டியாரவர்கள், தோளூர் மிட்டாஜமீந்தார், கீரம்பூர், வரவு ... ... ரூ. 35

8. மகா-ா-ா-ஸ்ரீ தண்டி வேலக்கவுண்டரவர்கள், விட்டம்பாளையம் மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ. 25

9. மகா-ா-ா-ஸ்ரீ பூ. லட்சுமணக்கவுண்டரவர்கள், காளிப்பட்டி வரவு ... ... ரூ. 20

10. மகா-ா-ா-ஸ்ரீ குழந்தைவேலுக்கவுண்டரவர்கள், கோனூர் மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ. 10

11. மகா-ா-ா-ஸ்ரீ எஸ். சுப்பராயக்கவுண்டரவர்கள் மிட்டாஜமீந்தார் காட்டுப்பாளையம் ... ... ரூ. 10

12. ம-ா-ா-ஸ்ரீ முத்துவெங்கடாசலரெட்டியாரவர்கள், மரூர்ப்பட்டி மிட்டாஜமீந்தார் வரவு ... ... ரூ. 10

13. மகா-ா-ா-ஸ்ரீ சாவடி நாராயணசாமிபிள்ளையவர்கள் பூனியன்சேர்மேன் சடையம். வரவு ... ... ரூ. 10

14. மகா-ா-ா-ஸ்ரீ கனகசபை பிள்ளையவர்கள், 20 கிர். இராமசாமிதெரு, பிளாக்டவுண், சென்னை. வரவு ... ரூ. 10

15. மகா-ா-ா-ஸ்ரீ எம். கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள், 48 நாட்டுபிள்ளையார் கோவில் தெரு, சென்னை. வரவு ... ... ரூ. 10

16. மகா-ா-ா-ஸ்ரீ கயிலாசக்கவுண்டரவர்கள், மிட்டா ஜமீந்தார், புதுப்பாளையம். வரவு ... ... ரூ. 25

17. மகா-ா-ா-ஸ்ரீ ஜி. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், மிட்டா ஜமீந்தார், இளம்பள்ளி. வரவு ... ரூ. 20

18. மகா-ா-ா-ஸ்ரீ கே. ஆறுமுகக்கவுண்டரவர்கள், பாரூர் மணியம், பாரூர். வரவு ... ... ரூ. 10

19. மகா-ா-ா-ஸ்ரீ பிரசன்னவெங்கட்டராமரெட்டியார் அவர்கள், மிட்டாஜமீந்தார், பில்லூர் எருமைப்பட்டி. வரவு ... ... ரூ. 20

பத்திராதிபர்.

வைத்தியம்.

[முன் தொடர்ச்சி]

கொங்கணாமிர்தம்.

கொட்டைப்பாசிக்கிழங்கு, நெரிஞ்சின்முள், தண்ணீர்விட்டான் கிழங்கு வகைக்குப் பலம் 3, சுக்கு பலம் 8, தான்றிக்காய் பலம் 16, சுத்தித்த கொடிவேலிவேர்ப்பட்டை பலம் 15, சிலப்பனைக்கிழங்கு, நன்னாரிவேர், நீலிவேர், சீந்தில்வேர், (இதின் மேற்றோலை நீக்கிச்சேர்க்க) அதிமதுரம்இவ் வகைக்குப்பலம் 25, செப்புநெரிஞ்சின்முள் பலம் 32, காரெள்ளுபலம் 32 இவற்றைத் தனித்தனியே சூரணித்து சிறத்துக் கொள்ளுக.

சூரணங்களை யொன்றுபடக் கலந்து சிறுக்கற்கண்டு பலம் 60, பசுநெய் பலம் 32, தேன் பலம் 22 இவற்றையுஞ் சேர்த்து ஓர் பழைய நெய்க் குடத்திலிட்டுக் குடத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து புதிதாய்ப் போட்ட நெற்குழியுள் வைத்து மூடிவிடவும். 24 நாள் இந்த நெற்குழியிலிருக்க விட்டுப் பின்னர் குடத்தை யெடுத்து விநாயகர் திருமுன் வைத்துப் பூசை செய்து வாய்க்கிட்டிருக்குஞ் சில்லை மண்ணுதிராது சாக்கிரதையா யெடுத் தெறிந்துவிட்டு மருந்தை நன்றாய்க் கலரும்படி கிளறி நெய் பழகிய பாண்டங்களிலாவது சாடிப்பாத்திரங்களிலாவது நிரப்பி வைத்துக் கொள்ளவேண்டியது. இதனைச் சேர சோழ பாண்டியர் பொருட்டுக் கொங்கணர் கையாண்ட பிரயோகமெனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

உட்கொள்ளும் அளவு முதலியன:—ஒவ்வொரு நாளும் சூரியோதய வேளையில் கிழக்கு நோக்கி யிருந்துகொண்டு மருந்தில் 2½ (உ௨) விராகனெடை யெடுத்துச் சுவாசம் மேலேறும்போது வாயிலிட்டுச் சாப்பிடவும். காலை நேரமாத்திரஞ் சாப்பிட்டு வரல்வேண்டும். வியாதியின் மாதிரி தேக சுபாவம்போல் கால், அரை, முக்கால், ஒரு மண்டலம் என்னுங் கணக்கான நாட்கள் வரை சாப்பிடலாம். மிகப்பயங்கரமான ரோகங்கட்கு ரோக நிவர்த்தியாகும் வரை உட்கொள்ளலாம்.

தீரும் வியாதிகள்:—வாதம் 80, பிரமியம் 28, பெருநோய் குட்டம் 18, கிரந்திரோகங்கள், உதரரோகங்கள், சந்திக சிலேஷ்ம ரோக முதலிய எண்ணில்லாதனவாம்.

வாதபித்த சிலேஷ்மங்களின் தனிரோகங்களிலாவது தொந்தரோகங்களிலாவது கஷ்டப்பட்டு அறமெலிந்து இனியேது என்று சொல்லக்கூடும் பச்குவிசளும் இம்மருந்தால் பழையதேகத்தைப் பெறலாம்.

பாலியும் பாலர் ஸ்திரீய இருபாலர்க்கும், 7-வயது நிரம்பும்வரையுங் காணுகிற இழுப்பு, வீக்கு, சன்னி முதலிய பிணிகளுக்கு இதனை உபயோகிக்கலாகாது. 7-வயதுக்குமேற்பட்ட எவர்களுக்கும் அச்சமின்றிக் கொடுக்கலாம்.

இளமைதொடங்கிச் சிலர்க்கு ஒருவகையான பயங்கர ரோகமேற்பட்டு மரணாந்தந்தொடர்ந்து நிற்பதுண்டு. எத்தனையோவகையான ஔஷதப்பிரயோகத்தாலுங் குணங்காணாது வைத்தியருஞ் சலிப்பர். அந்த ரோகம் ஒருவியாதியுமில்லாத சுகதேகியிடத்தில் ஒவ்வொருமாதிரியாய் நிலைத்திருக்கப்பார்க்கிறோம். அவ்வியாதி காணும் வகை:—அந்தரோகி விரைந்தோடும் ஆற்றோரம்போய் நீரோட்டத்தின்மேல் தன் பார்வையைச் செலுத்திக்கொண்டு நிற்கும்போது அவனையறியாது திடீரென்று கீழே தள்ளி வலிப்புண்டாக்கி முகத்தை விகாரமாய்த்திருப்பி வாயிலும் மூக்கிலும் வெண்ணுரைவழியச்செய்து பயங்கரமான சப்தத்தோடு சுவாசத்தைத்தடைசெய்து கண்டோர் பேய்க்கோட்பட்டானோவென்று ஐயமும் பயமுங் கொள்ளச்செய்து துன்புறுத்தும். இவ்வியாதியின் இத்தனையுபாதிகளும் சிலருக்குத் தோன்றிய அரைநாழிகையிலும், கால்நாழிகையிலும், அரைக்கால் நாழிகையிலுங் குணப்பட்டும், சிலருக்கு வலிப்பு விரைவில் நின்றுவிட்டாலும் சோபம் 1, 2 நாள்வரையுந் தொடர்ந்துநின்று குணமாவதுமுண்டு. மற்றுஞ்சிலர்க்கு உயரமானமலை, விருக்ஷங்கள், மெத்தைவீடுகள், இரதமுதலியவற்றைச் சற்றுநேரம்வரை உற்றுநோக்கின போதும், ஆழமானகுழி, கிணறுமுதலியவற்றைப் பார்த்தபோதும் உண்டாகும். இது காணும்வகையும் உபாதியும் பல பேதப்பட்டிருந்தாலும் இம்மருந்தை ஒருமண்டலம் சாப்பிட்டால் பின்னர் ஆயுள்வரை ஓர்போதும் இவ்வியாதி காணாது. தேகம் வச்சிரகாயமாகும்.

பத்தியம்:—தைலஸ்நானத்தன்று 2 வேளைமருந்தையும் நிறுத்திவிட வேண்டியது. சுண்டக்காய், மணத்தக்காளிக்காய், முள்ளிக்காய், பாகற்காய் இவைகளின் வற்றல் எலுமிச்சம்பழம் நெல்லிக்காய், இலந்தைப்பழம், புளிமுதலிய கைப்பு புளிப்பு வஸ்துக்களைநீக்கி மற்றைய காய்கறிகளைச் சேர்த்துப் புசிக்கலாம். பசுநெய் தயிர், மோர், பால் அதிகமாய்ச் சேர்க்க வேண்டியது.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை,
சித்தவைத்தியர், ரெட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சிதாலுகா.

ஸ்ரீ
குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 3 } 1904ஹு நவம்பர்மீ } புஸ்தகம் 11

வித்தை—VI.

[முன் தொடர்ச்சி]

பிரதம பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டிய விஷயங்களைப் பற்றியும் அவைகளைப்பற்றி நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய கருத்தைப்பற்றியும் நாம் எழுதி வந்தோம். அது விஷயமாய் இன்னுமொன்றுமட்டுமே சொல்லி நிறுத்துவோம். அஃதாவது, தற்காலத்தில் எங்கும் சாஸ்திரப் பயிற்சி அதிகரித்துக்கொண்டு வருகின்றது. நம் தர்க்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்களைப்பற்றி யான் ஒன்றும் சொல்ல வரவில்லை. மேனாட்டுக்கலைஞ்ஞானத்தையே நாம் இங்கு சுட்டிக்காட்டுவது. அவ்விஷயங்களில் நாம் நம் கருத்தைச் செலுத்தவேண்டுவது முக்கியம். கிராம பாடசாலைகளில் அவற்றைப் போதிப்பதற்குத் தக்க உபாத்தியாயர்கள் கிடையார்கள். நகரங்களில் உள்ள பாடசாலைகளில் இதன் போதனை ஆரம்பமாகலாம். அநேகம் உயர்தரக்கலாசாலைகளை அடுத்துப் பிரதம பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. போதுமான சாதனங்களும் அவ்விஷயத்தை நன்கு கற்பிப்பதற்கு ஆங்குச் சுலபமாய்க்கிடைக்கும். தக்க ஆசிரியர்களும் கிடைப்பார்கள். அவர்கள் மூலமாக முக்கிய கொள்கைகளை சுலபமாய்ப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தின் மூலமாக விளக்கிக் காட்டச்செய்யலாம். அதனால் நம் சிறுவருக்கு அறிவு விருத்தியடைய இடமுண்டு. கூர்ந்து பார்க்கும் வழக்கமும் விஷயங்களைக் கவனித்துச்சரியானபடி சொல்லும்படியான வழக்கமும் ஏற்படும். தப்பும் தவறு

மாய் நினைத்தபடி யெல்லாம் பிதற்றமாட்டார்கள். பார்த்த விஷயங்களை நன்றாய் வர்ணிக்கும்படியான சக்தியும் நன்கு அமையும். நம் நாட்டில் கைத்தொழில் விருத்தியடைந்து நம் தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் இவ்விஷயங்களைப்பற்றிப் பட்டணங்களிலுள்ள பிரதம பாடசாலைகளில் போதிக்க வேண்டுவது முக்கியம். ஜீவ சிருஷ்டிகளிலுள்ள பொருள்களைப் பற்றியும் நம்மைச் சுற்றி யிருக்கிற பொருள்களைப்பற்றியும் நம்மக்கள் தம் சிறு பருவத்திலேயே அறியவேண்டிய விஷயங்கள் பல வுள. புத்தியின் யோசனை சக்தியை அபிவிருத்தி செய்து விஷயங்களை உள்ளபடியே கூட்டியும் குறைக்காமலும் சொல்வதற்கு இப்பாடமே முக்கியம். இந்நல்ல பயிற்சியை ஆதி முதற்கொண்டே பின்பற்றி வரவேண்டும. இஃது அநேக காரியங்களுககுப் பயன்படும். இதற்குச் சாதகமாக ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு சிறு பொருட் காட்சி சாலை ஏற்பட்டால் நலம்.

இதுகாறும் நாம் ஆண்மக்களுடைய கல்வியைப்பற்றியே பேசிவந்தோம். இனி நம பெண்மக்களின் கல்வியைப்பற்றியும் சில விஷயஙகள் கூறுவோம் பெண்மக்களுக்குப்படிப்பு வேண்டுமா வேண்டாமா என்ற விஷயத்தைப்பற்றி நாம் யோசிக்க வேண்டுவது அநாவசியம். இக்காலத்தில் எவரும் அதைமுக்கியமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் எவ்விதமான கல்வி அவர்களுக்குவேண்டும்? ஆண்மக்களுக்கிருப்பது போலவே இருத்தல்வேண்டுமா அல்லது வேறு விதமாயிருத்தல் வேண்டுமா என்ற விஷயங்களைப்பற்றிச் சீர் தூக்கிப்பார்போம். தற்காலம் இரண்டும் ஒன்றாகவே இருந்துவருகின்றது. சிற்சில பாகத்தில்மட்டும் வேற்றுமைப்பட்டுமிருக்கிறதே யொழிய எவ்வாறு இருத்தல் வேண்டுமோ அவ்வாறு இல்லை யென்பது நம் துணிபு. அவர்களுக்கென்று தனிப்பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் கற்பிக்கப்படுப பாடபுஸ்தகங்கள் மற்றைப்பாடசாலைகளில் கற்பிக்கப்படும் வைகளே. முதல் முதல் நம்தேசத்தார் இவ்விஷயத்திலுள்ள குறைவையே நிவிர்த்திசெய்ய முயலவேண்டும. பாடபுஸ்தகங்

களில் பெண்களுக்குவேண்டிய விஷயங்களைப்பற்றி எழுத வேண்டும். உத்தமஸ்திரீகளுடைய சரித்திரமும் குடும்ப காரியங்களை நடத்தவேண்டிய முறைகளும் குழந்தைகளைப் போற்றி வளர்க்கவேண்டிய விஷயங்களும் அவைகளில் நாம் எழுதவேண்டும். சுகாதாரவிஷயங்களைப் பெண்மக்களுக்குத்தகுந்தபடி எடுத்துக்காட்டல்வேண்டும். "குடித்தனமோ துரைத்தனமோ" என்ற வண்ணம் குடும்பப்பரிபாலனத்தைப் பற்றிப் பல பாடங்கள் இருத்தல் வேண்டும. பதார்த்தங்களின் குணங்களையும் அவற்றைப்பக்குவப்படுத்தவேண்டிய முறைகளையும பற்றிய பாகசாஸ்திர விஷயங்களும் ஆங்காங்குப்பாடபுஸ்தகங்களிருத்தல் இன்றியமையாதது. பெரியவகுப்புகளில் இவ்விஷயஙகளைப்பற்றிய பெரும் புத்தகங்களே பாடமாக இருத்தல் நலம். கணக்கு விஷயத்தில் நாடோறும் உபயோகப்படுத்தக்கூடியவிஷயங்களை மட்டுமே கற்பித்தால் போதுமானது. மனக்கணக்கே அதிகமாய்க் கற்பித்தல நலம். படமெழுதலும் சங்கீதமும் பெண்களுக்கு இன்றியமையாத விஷயங்கள்.

நம்குடும்பங்களில் எக்காலத்தும் கல்விப்பயிற்சி இருந்தே வந்தது. சிலர் நினைக்கிறவண்ணம நம்பெண்கள் முழுமூடர்களாய் அடுப்பங்கரையின் வேலைக்காரர்களாகவே இருப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று நினைப்பது முற்றிலும் அநீதி. நம் பெண்கள் இக்காலம் செய்கிறவண்ணம் பாடசாலைகளுக்குச் சென்று எழுதப்படிக்கக்கற்றுவரவில்லையே ஒழிய புத்தி அபிவிருத்திவிஷயத்தில் முற்காலப்பெண்கள் இக்காலப்பெண்களினும் சிறிதும் குறைந்தவராகார். ஸ்ரீமத் இராமாயண பாரத பாகவதவிஷயங்களைக்கேட்டுக் கேட்டுப் பலவிதமான அறிவை அடைந்தார்கள் முக்காலப்பெண்கள். திரிகை திரிக்கும்பொழுதும் சாவித்திரிசரித்திரம் இராமாயணப்பாட்டுமுதலிய உத்தம சரித்திரங்களைப்பாடிக்கொண்டு திரிப்பார்கள். சாணிதெளித்து வீட்டைமெழுகுங்காலத்தும் ஸ்நானஞ்செய்து திரும்புங்காலும் பகவத் ஸ்தோத்திரத்தை அவர்கள் நா துதித்துக்கொண்டிருக்குமே. அவர்கள் "பின்தூங்கி முன்னெழும்பேதைகளா"யிருந்து நம் மக்கட்குத்தம்நடையிலேயே பற்பல அரிய விஷ

யங்களைப்போதித்து வந்தனர். இக்காலப்பெண்களைப்போல் சூரியன்உதித்து நாலுநாழிகைக்குப்பிறகு எழுந்திருந்து ஆசாரமின்றிச் சகல கிருககிருத்தியங்களைச் செய்துகொண்டு கடின வேலை யாதொன்றும் செய்யமுடியாமல் வேலைக்காரருடைய உதவிகளையே சிறுவிஷயத்துக்கும் தேடிக்கொண்டு அவர்கள் திரியார்கள். அவர்கள் பரிசுத்தமும் காம்பீரகுணமும் பக்திவிசுவாசமும் விருந்தோம்பும் உத்தமகுணமும் இக்காலப்பெண்களுக்கு நூற்றில் ஒருபங்கு உண்டோ என்பது நமக்குச்சந்தேகமே. குடும்ப சமயலுக்கே இக்காலப்பெண்களுக்குப் பரிசாரகர்களுடைய உதவிவேண்டியிருக்கிறது. முற்காலத்துப்பெண்கள் பகவத் ஆராதனைமுதலிய பெரியவிசேஷங்களுக்கும் பரிசாரகர்களுடைய உதவியைத்தேடார்கள். முற்காலத்துப்பெண்களால் குடும்பத்தின்செலவு செட்டுங்கட்டுமாய் நடத்திவரப்பட்டு குடும்பங்களில் சந்தோஷமும் சுகமும் ஜொலித்துக்கொண்டுவந்தன. தற்காலமோ டாம்பீகம் மேற்பட்டு ஸ்திரீகளே குடும்பத்தின் அபாரசெலவுகளுக்கும் கலகங்களுக்கும் காரணமாயிருக்கின்றனர். தலைவலியென்றாலும் வைத்தியன் வண்டிபோட்டுவந்தாலொழியத்தீராது. அக்காலத்தில் வைத்தியர் நம்வீட்டுக்குள் வருவது ஏதாவது அபாயமான வியாதிக்கே. முற்காலத்துப்பெண்கள் நடையுடைபாவனைகளிலும் ஆடைவிஷயங்களிலும் மிதமாயிருந்துவந்தார்கள். இப்பொழுதோ தலைகீழாய்விட்டது. முற்காலவழக்கங்களையேகொண்டாடும் வழக்கம் நம்மிடமிருப்பதாக இதனைவாசிப்போர் சிறிதும் ஐயங்கொள்ளல்வேண்டாம். நாம் சொல்லுகிறதெல்லாம் முற்காலத்து நல்வழக்கங்களை நாம் கைவிடாது அநுசரித்துத் தற்கால சீர்திருத்தங்களையும் கைக்கொள்வோமாக என்பதே நாகரீகம். நாகரீகம் என்று அந்நியர் துர்வழக்கங்களையும் பழக்கங்களையும் நம் குடும்பத்துட் கொணர்ந்து விட்டுக்கொண்டு தொன்றுதொட்டு நம் தேசத்தார் காணியாட்சியாய் அநுபவித்துவரும் குடும்பசுகங்களை வீணில் இழவாதபடி காப்பாற்றவேண்டுமென்பதே நம்கோரிக்கை. அவ்விஷயங்களாகவே நம் பாடபுஸ்தகங்களிருத்தல்வேண்டும்.

[இன்னும் வரும்.]

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

[முன் தொடர்ச்சி]

ஷியர் ஆப்கன் யானையின் ஆபத்தினின்றும் தப்பியதைச் சிலீம் சாளரவாயில் வழியாய்க் கண்ணுற்றுத் துக்கசாகரத்தில் மூழ்கிக் கவலைகொண்டதாகக் கூறினோம். ஷியர் ஆப்கான் அன்றே அவரைப் போய்ப் பார்த்தனன். அச்சமயம் சிலீம் அவனது அபார தைரியத்தையும் வலிமையையும் புகழ்ந்து பேசி நல்வரவு கூறி வாழ்த்தினர். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து ஷியர் ஆப்கன் உத்தரவு பெற்றுப்போனான். சிலீமோ துன்பக்கடலில் மூழ்கினவராய் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகத் தவித்தார். ஒன்றும் செய்யத் தோற்றவில்லை. ஆனால் அவர் மனம் மேன்மேலும் ஆக்கிரங்கொள்ளத் தொடங்கிற்று. இஃது இவ்வாறு நிற்க.

ஷியர் ஆப்கன் மறுபடியும் வங்காளம் போய்ச்சேர்ந்தான். வங்காள கவர்னர் தன் எஜமானது நோக்கத்தை நன்கு அறிந்து அவரை எவ்விதத்திலும் சந்தோஷப்படுத்த எண்ணங்கொண்டு ஷியர் ஆப்கனைக் கொல்ல வகை தேடினான். அதற்காக அவன் நாற்பது தக்க வீரர்களைத் தெரிந்து அவர்களுக்குத் தக்க வெகுமதியளிப்பதாக வாக்குக்கொடுத்து ஷியர் ஆப்கனது உயிரை வாங்கி வரும் வண்ணம் கட்டளையிட்டான். அக்கொடியவர்களும் அத்தீத் தொழிலுக்குடன்பட்டு வெளிப் புறப்பட்டனர்.

நம் ஷியர் ஆப்கனது பேரும் புகழும் எங்கும் வியாபித்திருந்தபடியாலும் அவன் தன் வலிமையையே மேலான காப்பென்று நினைத்து வந்தமையாலும் யாதொரு மெய் காவலும் அவன் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. நிஷ்களமான அவன் மனம் யாதொரு தீங்கும் நேரிடுமென்று எண்ணவில்லை. ஒரு நாள் அவன் தன் வீட்டில் தங்கி யிருந்தான். அஃது ஒரு அழகான தோட்டத்தின் மத்தியில் இனிதமர்ந்திருந்தது. அவ்வீட்டைச் சுற்றிப் பூஞ்செடிகளும் கொடிகளும் நன்கு பாதுகாக்கப்பட்டு அதனை அலங்கரித்தன. அதன் உட்புறமெல்லாம் ஷியர் ஆப்கனது மனம் போலவே நிர்மலமாயிருந்தன. அதன் அடையாத வாயில்கள் நல்லோர்

வரவை எதிர் பார்த்து நின்றன. அவ்வீட்டுக்கு ஒரே ஒரு காவலாளன் இருந்தனன். அவனும் கிழவன். ஒரு நாள் இரவு ஷியர் ஆப்கன் தன் படுக்கையறையில் தனித்து நிர்ப்பயமாய் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது நடு நிசி. பேயும் உறங்கும்படியான காலம். ஆந்தையும் கிளை கூட்டலை யொழித்து நித்திரை செய்தது. லோக முழுதும் சூனியமாய்ப் போனது போல் எங்கும் நிசப்தமாயிருந்தது. இருட்டானது மைபோல் எங்கும் வியாபித்திருந்தது. கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளில் நாற்பது கொடியர்களும் அவ்வீட்டை நோக்கி வந்தார்கள். வீடு விரியத் திறந்திருந்தது. யாதொரு தடையுமின்றி வாசற்படி நுழைந்தார்கள். அதற்குச் சமீபத்தில் ஒரு தொண்டு கிழவன் நரைத்த தாடியும் தொங்கின புருவமும் சுருங்கிய கன்னச் சதையும் குழிந்த கண்ணும் புடைத்தெழுந்த நரம்பும் ஆக இவைகளுடன் பெருங் குறட்டைவிட்டுக்கெண்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவனைச்சிறிதும் லட்சியம்செய்யாமல் வீட்டுக்குள் புகுந்தார்கள். எங்கும் தீபங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவற்றின் உதவிகொண்டு அங்கும் இங்கும் சுற்றிப்பார்த்தார்கள். ஷியர் ஆப்கன் படுத்து உறங்கிக்கொண்டிருந்த அறைக்கு வந்துசேர்ந்தனர். அதன்கண்ணுள்ள தீபம மற்றெல்லாவற்றினும் மேலான பிரகாசத்தோடு விளங்கிற்று. ஷியர் ஆப்கனும் மலையைநிகர்த்த தன்புஜங்களின்மீது தன் தலையைவைத்துக்கொண்டு அண்ணாந்தமுகத்துடன் சம்பிரமாய்த்தூங்கிக்கொண்டிருந்தான். அவன் முகத்தின் தேஜஸ் விளக்கொளிபடவே பின்னும் பிரகாசமாய் விளங்கிற்று. நாற்பது கொடியர்களிற் சிலர்மட்டும் அவனைச்சமீபித்து உற்றுப்பார்த்தார்கள். ஷியர்ஆப்கன் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தங்கள் காரியத்துக்கெல்லாம் அனுகூலமாயிருக்கின்றன என்று மெல்லப்பேசிக்கொண்டு ஷியர்ஆப்கனை வேலைமுடிக்க ஆரம்பித்தனர். முடித்துமிருப்பார்கள், தெய்வாதீனமாய் அவனைக்கிட்டிச்சென்றவர்களில் ஒருவன் மனம்மட்டும் இரக்கங்கொண்டு தன்னையறியாது “அடே! பாதகர்களா!! ஒருமனிதனைக்கொல்ல நாற்பதுபேர் ஏற்பட்டும் தூங்கும்பொழுதாகொல்லுகிறது? மிண்டனுக்கு இரண்டாள் என்பார்கள், நாம் நாற்பதுபேர்களிருக்கிறோம். அவன் எழுந்துவந்தால் என்னசெய்ய முடியும்” என்று கூவவே அவ்வரவத்தைக்கேட்டு ஷியர்ஆப்கன் திடுக்கிட்டெழுந்து மோசத்தையறிந்து உடனே தன்பக்கலிலிருந்த வாளை வலக்கையிலெடுத்துக்கொண்டு தான் படுத்துத்தூங்கின மெத்தையைத் தன் இடக்

கையில் இழுத்துக்கொண்டு அவ்வறையின் மூலையைச்சார்ந்தான். ஒரு பக்கம் தவிர்த்து மற்றைப்பக்கங்களில் சுவரின் ஆதாரங்கொண்டு இவர்களுக்கு ஈடுகொடுக்க எண்ணியே இவ்வாறு அவன்செய்தது. வேறு ஆயுதமில்லாதபடியால் மெத்தையைக் கேடயம்போல் உபயோகிக்கக்கருதி இடக்கையிற்பிடித்திழுத்துச்சென்றனன். உடனே அக்கொடியர்கள் அவனைத் தொடர்ந்துசென்று தாம்வைத்திருந்த பிச்சுவாவால் குத்த ஆரம்பித்தனர். ஷியர்ஆப்கனோ மகாதீரன். கத்திவீச்சில் அற்புதமான சாமார்த்தியமுடையவன். ஆகையால் ஒவ்வொருவீச்சிலும் ஒரு மனிதனை வீசிக் கீழ்வீழ்த்தினன். ஒவ்வொருமனிதனும் விழ விழ மற்றையோருக்கு ஆக்கிரம்பிறந்து கோபாவேசத்துடன் கிட்டிச்சென்றார்கள். அவன் இவர்களை இலட்சியம் செய்யவில்லை. வாழைத்தண்டை நறுக்கி எறிகிறவிதம் தன்னையணுகியவர்களை ஒரே வீச்சில் வீழ்த்திக்கொண்டிருந்தான். அக்கொடியவர்கள் வருங்காலத்தில் கத்தி கொணராமல் பிச்சுவா மாத்திரம் கொணர்ந்திருந்தார்கள். ஆகையால் அவனைக்கிட்டி யாதொன்றும் செய்ய முடியவில்லை. அவனும் இஃது ஓர் துர்ப்பாக்கியமான காலந்தான் என்று நினைத்துக் கடைசி வரை தைரிய இலக்ஷ்மியைக் கைவிடாது மிக்க ஊக்கத்துடன் எதிர்த்து நின்றான். பலர் தன் காலடியில் வெட்டுண்டு கிடப்பதைப் பார்க்கப் பார்க்க அவன் மனம் பதைத்தது. தூரத்தில் நின்ற சிலர் இனி நம் கதியும் இவ்விதமே ஆகும். ஆகையால் ஓடி உயிர் தப்புவதே மேன்மையென்று ஒரே ஓட்டம் பிடித்தார்கள். வாயிலில் படுத்திருந்த காவலாளி திடுக்கிட்டெழுந்து தன் பக்கலிலிருந்த கத்தியால் இரண்டொருவரைக் காயப்படுத்தி வீழ்த்தினான். தன் மனச் சாக்ஷியாலேவப்பட்டு பெருங் கூச்சலிட்ட மனிதன் மட்டும் இவ்வாச்சரியங்களையெல்லாம் கண்ணுற்றுப் பிரமித்து நின்றான். ஷியர் ஆப்கன் அவனை நன்கு தெரிந்து அவனிடம் வந்து “தோழா! உன்னாலேயே இன்று என்னுயிர் தப்பியது. எல்லாவற்றிற்கும் அல்லா இருக்கிறார். உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்” என்று அவனைக் கட்டியணைத்து அவன் கையை முத்தமிட்டான். பிறகு அவன் வாய்மொழியாய்ச் சகல சமாசாரங்களையுமறிந்து அவனுக்குத் தகுந்த உபசாரம் செய்து அனுப்பினான். “துரியோதனன் கூட்டத்திலும் ஒரு விகர்னன் உண்டு” என்ற உலக வசனம் பொய்க்குமா? இப்பெரும் அபாயத்தினின்று அவன் அன்றிரவு தப்பினது பகவானுடைய அபார கருணையாலேயே. அவன் அதை

உணர்ந்து அவரைத் துதிக்கவெண்ணி கைகால் முதலியவைகளை நன்னீரால் கழுவித் துடைத்துக்கொண்டு தன் மேல்த்துண்டைத் தரையில் விரித்து மேற்கு முகமாய் மண்டியிட்டுப் பலமுறை தொழுது பகவானது அற்புத கருணையைப் பற்றி நெஞ்சார நினைந்து நாவாரத் துதித்தான். அவன் அவ்வாறு செய்யுங்கால் அவன் மனம் தன்னைக் கொன்ற கொடியர்களிடத்து மிக்க இரக்கம் பாராட்டியது. அவர்களைக் காப்பாற்றும் வண்ணம் பகவானிடம் பல முறை முறையிட்டுக் கொண்டான். ஆ! ஆ! அவன் மனத்தின் தூய்மையை என்னென்பேன்.

"சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்."

என்ற பெரியோர் மொழி உண்மை நன்கு விளங்கிற்று.

[இன்னும் வரும்]

எஸ். சாமிநாதையர்.

சைவசித்தாந்தம்.

(முன்தொடர்ச்சி)

இனி மலமென்று ஒருபொருள் கூறுதல் கூடாது. மாயாகாரியமே மறைத்தற்றொழிலைச் செய்யுமெனின் அற்றன்று? உயிர்களுக்கு இச்சாஞானக்கிரியைகளை விளக்குவதாகிய மாயைக்கும், உயிரோடு ஒற்றித்து நின்று அவைகளை மறைப்பதாகிய மலத்திற்கும், தம்முள் வேற்றுமை பெரிதாகலால் அஃதறியாது மாயையே மலமென்பார்மதம் போலியாயவாறு காண்க. இந்தமூலமலத்தின்காரியம் மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என எழுவகைப்படும். இவை முறையே மயக்கத்திற்கேதுவாதலும், மதித்தற்கேதுவாதலும், ஆசைமிகுதிக்கேதுவாதலும் நோவுதற்கேதுவாதலும், தபித்தற்கேதுவாதலும், வாடுதற்கேதுவாதலும், நானாவிதவேதுவாதலுமாம். ஆணவமல நீங்குதலாவது இந்த ஏழின் வசமாகாதிருக்கை.

மேற்கூறிய மெய்ஞ்ஞானத்தைப்பெற்றவழியும், அதனால் சிவம் பிரகாசித்தவழியும், அதனாற் சீவன்முத்தராயவழியும் முறையே தேற்றாமரத்துண்டாகிய வித்தினாற் றேற்றப்பட்ட நீரின் மருவிய கலங்கலும், மிக்க அக்கினிப்பிரகாசத்திற்கு முன்னர் இருளும், மருந்தினாற்றடைபட்ட நஞ்சும்போல சகசமாகிய ஆணவமலங்கெடாது, தனது சத்திகெட்டு, வாதனைமாத்திரையாய், அவ்வுடம்புள்ள அளவுநின்று, மற்றொருபிறவிக்கேதுவாதலின்றி அதனோடுகழிந்தொழியுமென்க. இன்னும் ஆணவமலம் அநாதிநித்தியமாதலால் நாசமடைவது இன்று. நாசமுறுமாயின் அவ்வான்மாவும் அழியுமெனப்பட்டு நித்தியமென்றற்கு இழுக்காய் முடியுமெனின் அற்றன்று. இரதகுளிகைபரிசித்தமாத்திரையே செம்போடு சகசமாய் நின்றகளிம்பு நீங்கும். நீங்கவே செம்புவேறுநிற்றல் கண்டாமாகலின் அதுபோல அரன்றிருவடியாகிய மெஞ்ஞானஞ்சார்ந்தமாத்திரையே உயிரோடு சகசமாய்நின்ற ஆணவமலம் நசிக்கும். நசித்தவழி உயிர் வேறாய் நிற்றல் முத்தியென்றற்கு இழுக்கின்மையான் முத்திநிலையினுஞ் சகசமல நீங்குமாறில்லையென்னும் பாடாண வாதசைவர் மதம்அடாது. மெஞ்ஞானஞ்சேர்ந்தமாத்திரையே மலநீங்கப் பெறுமதுவே முத்தியாதல் அமையும். அதன்மேலும் அரன்றிருவடியைக்கலத்தல் வேண்டாவென்று பேதவாத சைவர் கூறுவரெனின் அற்றன்று. ஆதித்தனொளிமேவியவழியும் ஆதித்தனோடு கண்ணொளிகலந்தாலன்றி இருள் பற்றறக்கழியாது. அதுபோல மெஞ்ஞானஞ்சேரினும் சிவம் பிரகாசித்துத் திருவடியை உயிர் பொருந்தினாலன்றி ஆணவமலம் பற்றறக்கழியாதென்க. ஆதலால் அவர் மதமும் அடாதென்க.

ஆணவமலத்தினிலக்கணம் முற்றியது.

கன்மம்.

கன்ம மலமானது:—அநாதியாயும், நித்தியமாயும், சரீர முதலானவையோடு ஆன்மாக்கள் சேருகைக் கேதுவாயும், நாநா பிரகாரமாயும் மனிதருக்குப் பலவிதங்களான போகங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாயும், பிறப் பிறப்போடு கூடியிருந்த போதிலும் மலத்தைப்போல சுபாவ சித்தமானதாயும், புருடன்றோறுந் தனித்தனி யேற்பட்டதாயும், சூக்குமமாயிருப்பதால் இந்திரியங்களால் காணப்படாததாயும், மனம் வாக்குக் காயமென்னும் மூன்றானீட்டப் படுவதாயும், தநுகரண புவனாதி காரியங்களையுண்டாக்கிக் கொடுப்பதாயும், புசிக்கத் தக்கதாயும், சங்கார காலத்தில் மாயையில் பரிபாகத்தை யடைவதாயும், பிருதிவி தத்துவமுதல் கலாதத்துவ பரியந்தம் உள்ள ஆன்மாக்களுக்கு சுக துக்காதி போகத்தைக் கொடுப்பதாயும், தூல கன்மமாய் ஆகாமியமெனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்

கோடாக மாயையிற் கிடந்து சாதி ஆயுப்போகமென்னும் மூன்றற்கு மேதுவாய் முறையே சனகந் தாரகம் போக்கியம் என்று மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவ மென்னும் பரியாயப் பெயர்பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்று முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தம் எனப் பெயர் பெறுவதாயும், உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய் முறையே நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளினடங்கி அசுத்தம் மிச்சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்கக் கூடியதாயும் விளங்குமென்க.

இன்னும் இந்தக் கன்மமலம் செய்த கிரியை நசிக்க சூக்கும ரூபமாக உண்டாகையினாலே அதிருஷ்டமென்றும், அசுத்த மாயா போகத்துக்கு ஏதுவாகையால் மலமென்றும், பெயராய் நிற்கும். இதன் குணங்களாவன:-இருத்தலும், கிடத்தலும், புண்ணிய பாவங்களைச் செய்தலும், ஒவ்வொரு பற்றுக்களாய் நின்ற தொந்தங்களை விடுதலும், யாவரையு நிந்தித்தலே தொழிலாகப் பொருந்தி யிருத்தலும், உடல்மாறிப் பிறந்து இகழ்ந்தாருடன் பொருந்துதலும் ஆகிய ஆறுமாம். இனி சஞ்சிதமாவது சனனங்கடோறுந் தொடர்ந்து ஆறத்துவாக்களில் கட்டுப்பட்டுக் கிடக்கும் இருவினைகளாம். பிராரத்தமாவது அந்தச் சஞ்சிதத்தில் பரிபாகப்பட்டு அதற்கேற்ற தனுகரண புவனபோகங்களை யுண்டாக்கிப் பொசிப்பதாம். ஆகாமியமாவது பிராரத்தத்துக்கு இசைய எடுத்த தேகத்தில் அதன் பலத்தைப் புசிக்கையில் விருப்பு வெறுப்புக்களாலுண்டான கன்ம பலத்தைக் கூட்டுஞ் சிவபிரானை யிகழ்ந்த அபராதத்தால் வரும் புண்ணிய பாவங்களாம். முற்கூறிய பிராரத்தம் இச்சை, அநிச்சை, பரேச்சை என மூன்று வகைப்படும். இவற்றுள் இச்சையாவது இராசாவின் மனைவி முதலியோரைத் தீண்டலால் வருஞ் சுக துக்கம். அநிச்சையாவது இடி முதலியவற்றால் வருஞ் சுகதுக்கம். பரேச்சையாவது ஒருவர் ஒரு காரியஞ் செய்ய அதனால் அவனுக்கு ஆக்கினை அபராதமென்று இராசகரங்கூற அதற்கு ஒருவன் வினை முதலியவற்றால் வருஞ் சுக துக்கம். இவைகளேயன்றி பிராரத்தம் இன்னும் திருட்ட மென்றும், அதிருட்டமென்றும், திருட்டா திருட்டமென்றும் மூன்று வகைப்படும். இவற்றுள் திருட்டமாவது ஔடதம் மந்திரம் முதலியவைகளால் இம்மையிலேயே செய்த கன்மம் இம்மையிலேயே பலிப்பதாம். அதிருட்டமாவது இம்மையிலே செய்த புண்ணியபாவங்களால் மறுமையில் சுவர்க்க நரகங்களை அநுபவித்தலாம். திருட்டா திருட்டமாவது இம்மையிலே அசுவமேதயாகஞ் செய்தவன் இம்மையிற்றானே சுகத்தையடைந்து சுவர்க்கத்தையடைவதாம் இம்மையில் பாவங்களைச் செய்தவன் இராசாவினாலே தண்டிக்கப்படுவா

னாகில் அவனுக்கு நரகவாதனை யில்லை. அது எவ்வாறென்னில் ஆதியிலே கடவுள் பூமியின்கண் தான் அருளிச்செய்த வேதாகமங்களிற் கூறிய விதிகளுக்குத் தவறி நடந்தவர்களுக்கு மூன்று வகையாகப் பிராயச்சித்தங் கற்பித்தார். வருணாச்சிரமதருமத்தில் நடக்கின்றவர்களுக்கு அபுத்தி பூருவமாக பாவம் நிகழ்ந்தால் பிராயச்சித்தாதி அனுட்டானங்களினால் சுத்தி. துரான்மாக்களாயிருக்கின்ற பேர்கள் செய்த பாவங்களுக்கு இராச தண்டத்தினாலே சுத்தி. இராசாவினாலே தண்டிக்கப்படாத பாவத்திற்கு யமதண்டத்தினாலே சுத்தி. இனி ஆதி தைவிகமாவது கர்ப்பம், மரணம் நரை, திரை, அஞ்ஞானம், நரகம், சென்மம் இவைகளால் வருந்துக்கம். ஆத்தியான்மிகமாவது சரீரமென்றும், மானசமென்றும் இரண்டு வகைப்படும். இவற்றுள் சரீரமாவது குன்மம், வாதம், சூலை முதலிய நோய்களாலும், மானுடராலும், மிருகங்களினாலும், பிசாசங்களினாலும், விலங்கினாலும், பட்சிகளினாலும், சோரராலும், அரசராலும் வருந்துக்கம். மானசமாவது, சோகம், அசூயை. அவமானம், மாச்சரியம் இவைகளாலுண்டான துக்கம். ஆதிபௌதிகமாவது, குளிர், உஷ்ணம், காற்று, மழை, மின்னல், இடி, இவை முதலியவைகளால் வருந்துக்கம்.

இனி உலகவினையாவது, கூவல் தண்ணீர்ப்பந்தலாதி அமைத்தல். வைதிகவினையாவது, வேள்வியாதி செய்தலாம். அத்தியான்மீகவினை, சிவபூசையாதி செய்தலாம். அதிமார்க்கவினை, யோகமுதலியன செய்தலாம். மாந்திரவினை, மந்திரோச்சாரம் ஞானநூல் ஓதலாதிசெய்தலாம். இவைகளுள் உலகவினையும், வைதிகவினையும், நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை ஆகிய இரண்டில் அடங்கி அசுத்தபோகங்களையும், அதிமார்க்கவினை வித்தியாகலையில் அடங்கி சுத்தாசுத்தபோகங்களையும், அதிமார்க்கம் மாந்திரம் ஆகிய இரண்டும் சாந்திகலை சாந்தியதீதகலையிலடங்கி சுத்தபோகங்களையும் பயப்பிக்குமென்க.

இன்னும் வினை பசுநல்வினை சிவநல்வினையென விரண்டாம். பசுநல்வினை, யுலகவினையும், வேதவினையுமென வேறிரண்டாம். சிவநல்வினை பொதுவுஞ் சிறப்புமெனவேறிரண்டாம். உலகவினையாவது முற்கூறிய தண்ணீர்ப்பந்தர் அன்னசாலைமுதலியன வமைத்தலாம். வேதவினை, கட்புலனாகாத அரியயனிந்திரன் முதலியதேவர்களை வழிபடுதலும், கட்புலனான பசு பார்ப்பார் தாய்தந்தைமுதலாயினாரை வழிபடுதலுமாம். அற்றாயினும் வேள்விமுதலிய வைதிக வினைகள் தண்ணீர்ப்பந்தர்முதலிய உலகவினை போலன்றிச் சிவனைநோக்கி அவிப்பாகங்கொடுத்தலும் வழிபடுதலு முடைமையின் அவை சிவபுண்ணியமா மென்றற்கு இழுக்கென்னையெனின், ஆண்டுச்சிவபிரானுக்கு அவிப்பாகங்கொடுத்தலும் வழிபடுதலும் பகுக்க

ளாகிய ஏனைக்கடவுளரோடொப்பவைத்துச் செய்தலேயன்றிப் பொதுநீக்கிப் பசுபதியென்னுங் கருத்தாற் செய்தலின்மையின் அவையெல்லாஞ்செய்வோர் கருத்துவகையாற் பசுநல்வினையேயாம். சிவநல்வினையாகாவென்க. இனிவேள்விமுதலிய வைதிக வினைக்கண் சிவபுண்ணியமும் புத்திபூர்வமாய் நிகழ்தலின் அது புத்திபூர்வமாய் இனிச்செய்யக்கடவனவாகிய சிவபுண்ணியங்கட்கேதுவாதன்மாத்திரையிற் பயன்படுதலுடைத்தென்க. வேள்விமுதலியவுஞ் சிவபிரானைநோக்கிப் பொதுநீக்கிச்செய்யின், அஃது ஏனைய போலப் பசுபுண்ணியமாதலின்றிப் பொதுச்சிவபுண்ணியமாமெனக்கொள்க. இஃது உலகவினைக்கண்ணுமொக்கும். இவ்வைதிகவினையான பொதுச்சிவபுண்ணியஞ் சிவாகமநல்வினையான பொதுச்சிவபுண்ணியம்போலச் சிறப்புச்சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிப் பயன்படுதலுடைத்தென்க. பொதுச்சிவநல்வினையாவது சிவதீக்கையென்னுமங்கமுடையராயவ்வாறு செய்வது. இவற்றினியல்புகளெல்லாம் பசுவிலக்கணத்தில் விரிவாய் கூறப்பட்டுள்ளன. ஆண்டுக்காண்க.

இக்கன்மமலம் பலவிதமாய்க்காணப்படுதல் எங்ஙனமெனில் தேவர்கள் மனிதர்கள் விலங்கு பக்ஷி முதலாக ஆன்மாக்களுக்கு சரீரங்கள் வேறுபட்டிருக்கின்றன. இந்திரியங்களும்; யானைகளுக்கு நாக்கு உண்முகமாயிருக்கின்றது. பாம்புகளுக்குக்கண்களே காதுகளாயிருக்கின்றன. கோட்டான்களுக்குக்கண்கள் பகலில் குருடாயிருக்கின்றன; பூனைகளுக்குக்கண்கள் இரவில் அதிகப்பிரகாசமாயிருக்கின்றன அவைபோலவே இன்னும்பலவிதமாக உயிர்களுக்கு இந்திரியங்கள்காணப்படுகின்றன. உணவுகளோவெனின் சாதகப்பக்ஷிக்கு மேகத்தினின்றும்விழும் ஜலத்திவலையாம். சில புறுக்களுக்குக்கல்லே உணவாகக்காணப்படுகின்றன. அன்னம் வண்டு முதலானவற்றிற்கு பூந்தாது தேன் முதலானவைகளாம். மாடுமுதலான மிருகங்களுக்கு புல்முதலானவைகளாம். தேவர்களுக்கு அமிர்தமுதலானவை. மனிதர்களுக்கு நெல்முதலானவை. இப்படிப்பலவிதங்களாகக்காணப்படுகின்றன.

போகங்களுக்கு உற்பத்தி ஸ்தாநங்களும் சுவர்க்கம் பூமி முதலாகப் பலவிதமாகக் காணப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் சருமமே காரணமென்க. தநுகரணபுவனங்களுக்குப் பிறப்பிறப்புக் காணப்படுதல்பற்றி அதற்கேதுவாங் கன்மமலத்திற்கும் பிறப்பிறப்புக்கூறப்பட்டது. அது பற்றிக் கன்மம் அநாதியென்பதற்கு இழுக்கில்லையென்க.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

தேனும் தேனீயும்.

[முன் தொடர்ச்சி]

சிற்றீக்கள்.

இனி, நாம், இராஜமாளிகையை விட்டுவிட்டு சிறிய அறைகளைப் பரிசோதிக்கப் புகுவாம். இச் சிற்றறைகளில் சிற்றீக்கள் காண்போம். இவை ஒவ்வொன்றும் அரை அங்குல நீளமும் ஆறில் ஒருபங்கு அங்குலமுமாய் இருக்கும். இவை அறுகூறுடைய அடிவயிறும் பன்னிரு கணுக்கள் கொண்ட இரண்டு தும்பிகளும் வாய்க்கப்பெற்றன. இவற்றின் தும்பிகள் ஏனைய ஈக்களின் தும்பிகளினும் மிக நீண்டவையாயிருக்கும். இவ்வீக்களுக்குத்தான் மெழுகறையும் மகரந்தத்தூள் சேர்க்கும் பையும் உண்டு. இப்பைகள் இவற்றின் கால்களில் அமைந்துள. இவற்றிற்குச் சிறிதும் வளையாத நீண்ட கொடுக்குகள் உண்டு. இவற்றின் கொட்டு இராணியீயின் கொட்டினும் அதிக வேதனை தரக்கூடியதாய் இருக்கும். இத்துணை இலக்கணமும் வாய்ந்த இச்சிற்றீக்களுக்கு வினையாளர் (Workers) அல்லது வேலைக்காரர் என்று பெயர். இவைகளுக்கு இப்பெயர் இடப்பட்டது வெகு சரியே. எங்ஙனமெனில் அறைகள் கட்டுவதும் ஆகார முதலிய தேடிக்கொண்டு வருவதும், ஆகாரம் இருக்கும் இடங்களைப் புதிது புதிதாய்க் கண்டு பிடிப்பதும், சத்துருக்களைக் கொட்டித் துரத்திக் கூட்டைப் பாதுகாப்பதும், இராணி ஈக்குச் சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்து அதனையும் அதன் முட்டைகளையும் போற்றி வளர்ப்பதும், மாரிகாலத்திற்கு வேண்டிய ஆகாராதிகளை வேனிற்காலத்திலேயே சேகரித்து வைத்துக்கொள்வதும், ஏனைய கருமங்களும் இவற்றைப் பொருத்த வேலைகளே. இவ்வீக்களே கூட்டில் மிகுதியாய்க் காணப்படுவன. இவை ஆணோ பெண்ணோ என்று சாதாரணமாய்ப் பகுத்தறிய முடியாது. ஆயினும், சமீபத்தில், இவையாவும் பெண்ணீக்களே என்றும், ஆனால் இவை பக்குவமடையாதிருக்குமாறு வேண்டுமென்றே முட்டைகளாய் இருக்கும்பொழுதே பெண் தன்மை போக்கப்பட்டு, சிற்றறைகளில் அடைக்கப்பட்டு வேலையாட்களாக்கப்படுகின்றன வென்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவை ஒருவருடத்திற்கதிகம் உயிரோடு இரா. இவற்றைப்பற்றிய ஏனைய விஷயங்கள் ஆங்காங்கு கூறப்படும்.

ஆண் ஈக்கள்.

இனிச் இச்சிற்றீக்களை விட்டு இவை இருக்கும் அறையினும் சற்றுப் பெரிதாய் உள்ள அறைகளைப் பார்ப்போம். அவ்வறைகள் பெரிதாய் இருந்

தால் அவற்றில் உள்ள ஈக்களும் பெரிதாய் இருக்கும் என்று சொல்லாமலே தெரியவரும். இவை 13 கணுக்கொண்ட இரு தும்பிகளுடையன. இவற்றிற்குக் கொடுக்கில்லை. ஆதலின் இவை கொட்டவே கொட்டா. இவைகள் கதியும் மந்த கதியே. பறந்து செல்லும் பொழுது இவை தாம் தாம் உங்காரம் செய்துகொண்டு போவன. இவை உச்சந்தலைக்கு அப்புறமும் இப்புறமும் புடைத்துப் பறந்த கண்களையுடையன. பார்த்த மாத்திரத்திலேயே இவை ஆண் ஈக்கள் என்பது விளங்கும். இவைகட்குச் "சோம்பர்" (Drones) என்று பெயர். ஏனெனில், இவ்வீக்களில் எதுவும் தேனும் சேர்க்காது; வீடும் கட்டாது. மெழுகும் உற்பத்தி செய்யாது. ஒரு வேலையுமின்றி அகப்பட்ட பூக்களில் வாயை வைத்து மது அருந்தி வயிற்றை நிரப்பிச் சுகமாய்த் தன் இருப்பிடம் போய்க் காலங்கழிக்கும். ஆண் ஈயின் வேலையெல்லாம் சந்ததி உற்பத்தி செய்வது தான். இது மெத்த பாக்கிய சாலி என்று எவரும் இதனிடத்திற் பொறாமை கொள்ளவேண்டாம். ஏனெனில், அந்தோ! இது பெண் ஈயோடு சம்பந்தப்பட்ட மாத்திரத்தில் தனது ஜீவாதார பாகத்தையும் ஆதலால் உயிரையும் இழக்கவேண்டி வருகிறது. தவிரவும், ஆண் ஈக்கள் கொண்டாட்டம் எல்லாம் குளிர் காலம் வருமட்டே. மாரிகாலம் தலை காட்டியதோ இல்லையோ, இவை பாடு திண்டாட்டம் தான். ஏனெனில், முதலில் அதற்குக் குளிரில் வெளிக்கிளம்ப மனம் வராது. மனம் வந்த போதிலும் தேன் கிடைக்காது. காரணம் யாதெனில் தேன் உற்பத்திக்கு உஷ்ண காலமே ஏற்றது. தவிரவும் மாரிகாலத்தில் பூக்கள் இருப்பது அரிது. ஆதலின் இவை பசியினிமித்தம் பெரிதும் வருந்தும். "சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்" என்ற முதுமொழி பொய்க்குமா?. இவை சிற்றீக்கள் சேர்த்து வைத்திருக்கும் தேனையாவது உண்டு கொழுந்து விட்டெரியும் பசித்தழல் அவிக்கத் தேனண்டை செல்லும். ஆனால் சிற்றீக்களோ நிர்த்தாக்ஷண்யமாய் சிறிதும் இரக்கமின்றி முன்னுக்கு முன்னையே மாரிகாலத்திற்கும் வேண்டிய தேனை வேனிற்காலத்திலேயே சேர்த்துவைக்கச் சிறிதும் பிரயாசைப்படாது சுத்த சோம்பேறிகளாய்த் திரிந்து காலங் கழித்த ஆண் ஈக்களைப் பங்கொட்டுக் கொட்டிக் கொல்லும்.

இவ்விஷயம் அறியும் நாமும் நமக்குப் பிற்காலத்தில் வேண்டியதை இப்பொழுது முதற்கொண்டே சோம்பேறித்தனத்தை ஒழித்துச் சுறுசுறுப்புடன் சிற்றீக்கள் போல் சேடி வைத்துக் கொள்ளாவிடின் அந்திய காலத்தில் ஆண் ஈக்களைப்போல் பட்டினியால் வருந்தவேணும் உயிரிழக்கவேணும் நேரிடும் என்பதை உய்த்துணர்வோமாக.

VII. ஈக்களின் அபிவிருத்தியும் இடப்பெயர்ச்சியும்.

இதுகாறும் மூவகை ஈக்களைப் பற்றியும் சில கூறிவந்தோம். இனி, இவற்றின் அபிவிருத்தியையும் அதனால் நேரும் இடப் பெயர்ச்சியையும் பற்றிச் சிறிது கூறுவாம்.

இராணி ஈ சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி முட்டையிடும் என்று முன்பு சொல்லியிருக்கிறோமல்லவா? அது ஒரே நாளில் 300 முதல் 2000 வரை முட்டை இடக்கூடும். (ஆனால் இது பிரதிதினமும் இவ்விமூக்காடு முட்டையிடும் என்று நினைத்துவிடக்கூடாது.) இங்ஙனம் ஈக்கள் அதிகமாய்ப் பல்குவதால் முன் இருந்த இடம் எப்படிப் போதும்? ஆதலின் இவை வேற்றிடம் நாடிச் செல்வது அத்தியாவசியம் அன்றோ?

இவை சாதாரணமாய் பல்கிப் பெருகுவது, மே மாதத்திலேயே. இருந்தாற்போலிருந்து நிசப்தமாயிருக்கும் நல்ல நிசி. வேளையில் ஓர் நாள் உங்காரப் பேரிரைச்சல் ஒன்று உண்டாகும். இவ்விரைச்சலே அதன் அபிவிருத்திக்கு அறிகுறி. இவ்வுங்காரம் இரண்டு அல்லது மூன்று தினங்கள் இருந்துகொண்டிருக்கும். மூன்று நாள் மதியத்தில் இவைகளிற் பல வேற்றிடம் செல்ல ஆரம்பிக்கும். இவ் வீக்களை இராணி ஈ தான் வேற்றிடத்திற்கு இட்டுச்செல்லும். இராணி ஈ தம்மை நடத்திச் செல்லாவிடில் இவை முன்னிருந்த கூட்டைவிட்டு நகரா. இராணி ஈ யானது சிறிது தூரம் அவற்றுடன் சென்று பின்னர் திரும்பித் தன் பழைய இடம் வரினும் கூடச்சென்ற ஈக்களும் இதனைத் தொடர்ந்தே தாமும் பழைய கூட்டிற்கு வந்துவிடும். அப்பொழுது சிற்றீக்கள் கோபங்கொண்டு பொது நன்மை கருதி இருப்பிடம் விட்டுச்செல்ல மனமிலா இராணியைக் கண்ணோட்டமின்றி கொட்டிக் கொல்ல ஆரம்பிக்கும். ஆதலின் இராணி ஈயானது தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளவும் கூடச் செல்லும் ஈக்கள் திரும்பாதிருக்கவும் வேண்டி தான் பழைய கூட்டுக்குத் திரும்பாமல் இவற்றைப் பிறிதொரு இடத்திற் கிட்டுச் சென்று முன்போல இவைகளைக் கொண்டு ஒரு கூடு கட்டுவித்து ஆகாராதி சேர்ப்பித்து அவைகளை அதில் இருத்தித் தானும் வாழும்.

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.
&
Asst. Master A. M. High School, Madura.

தர்மி லோபி சம்வாதம்.

[முன் தொடர்ச்சி]

உலோபி—என் காணும், நானும் எனது தந்தையும் முற்பிறப்பிற் செய்த தர்மமுதலிய நன்மையாலே கடவுள் கருணை கூர்ந்து இப்பிறப்பிலும் எங்களை ஐஸ்வரியத்திற்குள்ளாக்கினரென்றீரே. அது என்ன நியாயங்காணும். நீராகச்சொல்லுகிறீரா அல்லது சாஸ்திர வாயிலாகநிரூபிக்கிறீரா? சொல்லும் பார்ப்போம்.

தர்மி—சாஸ்திர வாயிலாகவே நிரூபிக்கின்றேன்.

(நாலடியார்) "இம்மி யரிசித் துணையானும் வைகலும், நும்மி லியைவ கொடுத்துண்மின்—உம்மைக், கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத், தடாஅ அடுப்பி னவர்." அதாவது, சிறிதளவான அரிசியை யாயினும் உங்களுக் கிசைந்தவற்றைத் தினந்தோறும் (யாசகருக்குக்) கொடுத்து உண்ணுங்கள், ஆழமான கடல் சூழ்ந்த உலகத்தில் சமைக்காத அடுப்பையுடையவர் (சோற்றுப் பிச்சைக்கு வருகின்றவர்) முற்பிறப்பில் (யாசகருக்குக் கொடாத லோபிகளென்று சொல்லப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறது. அப்படித் தருமம் செய்வதிலும் தரித்திரருக்குக் கொடுப்பதே முறை. எப்படியெனில், (குறள்) "வறியார்க்கொன் றீவதே யீகை மற்றெல்லாம், குறியெதிர்ப் பைநீர துடைத்து" அதாவது ஒரு பொருளுமில்லாதவர்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுத்தலே பிறர்க்குக் கொடுத்தலாகும். அது நீங்கிய எல்லாக் கொடையும் குறிக்கப்பட்ட பின் வரும் பயனோடு கூடிய தன்மையை உடையதாம், என்பது. (நன்னெறி) "கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித், தம்மா லியலுதவி தாஞ்செய்வர்", அதாவது, பெரியோர் பின் வரும்பயனை விரும்பாமல் சரீரப் பிரயாசப்பட்டுத் தம்மால் கூடிய உதவிகளைச் செய்வரென்பதாம். (நாலடியார்) "ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா, தாற்றாதார்க் கீவதா மாண்கடன்—ஆற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல், பொலிகட னென்னும் பெயர்த்து," அதாவது, வளப்ப மிகுந்த கடலின் குளிர்ச்சியான கரையையுடைய அரசனே! யாசகனேந்திய கையை மறுக்காமல் எதையாகிலும் (இன்று னின்று னென்று) வரையேற்படுத்தாமல் பிரதிப் பிரயோஜனம் செய்யமாட்டாத தரித்திரருக்கு முறையால் கொடுப்பது ஆண்மக்களுடைய கடமையாம், எதிருபகாரம் செய்ய வல்லவருக்குக் கொடுப்பது விசேஷமான கடனென்கிற பெயரையுடையதாம் என்றவாறு.

உலோபி—நளச்சக்கரவர்த்தி சூதினால் தன் இராச்சியத்தை யிழந்ததாய்ச் சொன்னீரே. அரிச்சந்திரன் சூதாடினவனல்லனெனவும், தன்னிராச்சியத்தை யிழந்து மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தானெனவும் கேள்வியுற்றிருக்கின்றேன். அவன் என்காணும் துன்பத்திற்குள்ளாயினன்.

தர்மி—நீர் கேள்வியுற்றதைச்சரிவரக் கேட்டிலீர்போலும். அவன் தவசிரேஷ்டராகிய விஸ்வாமித்ரமஹாரிஷியி னபிப்பிராயப்படி பொய்சொல்லாதகாரணத்தால் தனது இராச்சியத்தையும் மனைவியையும் புத்திரனையுமிழந்ததுமல்லாமல் பறையனுக்கும் அடிமையாகி அனேகதுன்பங்களையனுபவித்தானேயொழிய வேறேயெவ்விதமான கெட்டகாரியமும் செய்யவில்லை. இது திண்ணம்.

லோபி—விஸ்வாமித்திரருடைய அபிப்பிராயம்போல் பொய்சொல்லாவிடின் துன்பமுண்டாகுமென்று தெரிந்திருந்தும் ஒரு பொய்யாவது சொல்லாமல் ஏன் கஷ்டத்தையனுபவிக்கவேண்டும்.

தர்மி—எவ்விதமான கஷ்டமனுபவித்தாலும் பொய்யைகனவிலும் நினையாமல் மெய்பேசவேண்டும். அந்தப்படி நூல்களனேகமாய் முறையிடுகின்றன.

உலோபி—அதைச் சொல்லும் பார்ப்போம்.

தர்மி—(குறள்) "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்", அதாவது, ஒருவன் தன் நெஞ்சினாலே அறியப்படுவ தொன்றைப் பிறர் அறிந்தில ரென்று தைரியங்கொண்டு பொய்சொல்லா திருக்கக் கடவன். பொய்சொல்வானாயின், (அதனை யறிந்த தனது நெஞ்சே அப்பாவத்திற்குச் சாக்ஷியாய் நின்று) தன்னை அதன் பிரயோஜனமாகிய துன்பத்தை அனுபவிக்கச் செய்யுமென்பதாம். "மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை", அதாவது ஒருவன் தன் மனத்தோடு பொருந்த மெய்யைச் சொல்வானாயின் அவன் தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்புடையன் என்பதாம். "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று", அதாவது, ஒருவன் பொய் பேசாமையையே யிடைவிடா

மல் கொள்ள வல்லவனாயின் மற்றத் தர்மங்களைச் செய்யாமலிருந்தாலும் நன்மையே யென்பது துணிபாம் என்றவாறு. பொய்யானது பெரும்பாலும் காமத்தாலும் பொருளாலுமே யேற்படுவது. அவ்வனுபோகம் உமக்கே தெரிந்த விஷயமாதலின் விஸ்தரிக்காமல் விட்டனன். அவ்வரிச்சந்திரன் பொய்சொல்லத் துணியாமலிருந்தது மாத்திரமன்று. விஸ்வாமித்திரர் சிருஷ்டியால் வந்த அன்னிய ஸ்திரீகளை அவரிஷ்டப்படி யிச்சியாமலிருந்ததனாலும் துன்பத்தை யனுபவித்தனன்.

[இன்னும் வரும்]

சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்,
திருச்செங்கோடு.

இன்னிசை இருநூறு.

[முன் தொடர்ச்சி]

16-ம் அதிகாரம். நட்பு.

1. நடையாற் றலையாயார் நட்பைமற வாமே
கடையாயார் மாட்டுண்மை காட்டாமே மற்றை
யிடையாயார் மாட்டுமிகை காணி னிடித்த
லுடையாரே தீமை யுறார்.

2. நாடி நலந்தீங் கவற்று ணலமிக்கார்க்
கூடுக கூடிற்பிற் குற்றங் கருதற்க
நாடுங்காற் றோன்று நவைபலபிற் காணினுடன்
வீடாது மெல்ல விடல்.

3. சான்றவர் கேண்மை தலைப்படி னஞ்ஞான்றே
யான்ற பெருமை யளிக்கு முயிர்த்துணையாம்
வான்றரினுந் தீயார்தங் கேண்மை மதியற்க
தோன்றும்பி னெண்ணி றுயர்.

4. பெரியார்தங் கேண்மை பெருந்துணையா மீண்டு
மரிதே மறுமையினு மஃதொப்ப தொன்றில்
பெரியார் தொடர்கை விடலிற் பெருங்கே
டெரிபோற் பகையானு மில்.

5. ஆத்திக ரெம்மத மாயினுந் தோமிலை
நாத்திகர் நட்பைக் கனவினு நாடற்க
தீத்தொழி லின்றவர் தெள்ளிய ராயினும்
ஈத்து விடுமா லிடர்.

6. வெவ்வாய் நிரயத்து வீழ்த்துமாற் கீழோர்நண்
பெவ்வகை யானும் *விடல்பகையு மெய்தற்க
செவ்வியோர் தம்பகை தீரும்பிற் றீராவே
யெவ்வகையுந் தீயா ரிகல்.

* விடுக

7. வறியரைச் செல்வர் மதித்துறவு கொள்ள
லுறினு மறிவுடையார் பேதையரை யொன்றார்
அறிதுமவர் சேர்க்கையெனி னம்புயநீர் சேரப்
பெறுமுறவு போலாம் 0பிற.

0 அசைநிலை.

8. அணுத்துணை வித்து மறன்மண்ணைச் சாரிற்
பணைத்த பெருமரமா மம்மரந்தீப் பற்றி
னணுத்துணையு மில்லா தறிஞர் கயவர்
கணத்துறவு மத்தகைய காண்.

9. நீரிற் பதர்மிதப்ப நெல்லமிழ லொக்குமாற்
கூரியன் மந்த னரியநூல் கொள்ளுமுறை
மாரி யெனத்தரினு மந்தனைவிட் டென்றொடுத்துங்
கூரியனைச் சார்ந்து கொளல்.

10. வளிமுதலா மூன்றொத்து வாழினுடல் வாழும்
விளியு மவையிகலின் வேந்துமுயிர் வாழும்
உளமொத் துழையருற நான்கு*பதை யானும்
தெளியானேன் மாய்வே தெளிவு.

* உபதை—சோதனை 4 அறவுபதை, பொருளுபதை, இன்பவுபதை.

நட்பு முற்றிற்று.

17-ம் அதிகாரம். பகை.

1. ஆகா தனசெயினும் யார்மாட்டும் தீதுபகை
சோகாப்பத் துன்னார்ச் செறினுஞ் சுகமிலையால்
ஏகா கவலையினி யென்னுறுங்கொ லென்றஞ்சும்
போகா கரவுசினம் பொய்.

2. பகைத்தார்க்குங் கேடு புயப்பன சூழல்
தகைத்தன் றெனினுந்தற் சேர்ந்தாருந் தானு
மிகைக்குட் படாது விடலெண்ணிச் செய்யின்
வகுத்தா ரறமாக வைத்து.

3. மிக்கோர் நடுவரெனின் வெல்லற் குபாயமுன்மூன்
றெத்திறத்துந் தண்ட மிகக்கபகை கீழாயிற்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

4. உளத்தாற் பகைத்தாரை யோராது நட்டல்
வளத்தோ டுயிர்போக்கு மந்தோ வயவர்க்
களப்பில் புறப்பகை யாற்றுபரென் னஃதே
விளக்கின்கண் விட்டில் விழல்.

5. களிமயில் கோம்பியைக் கண்டஞ்சு மன்றே
எளியர் வலியரை யெற்றலு முண்டே
விளியுங் கொடும்புலியாற் கற்றுவும் வென்றி
யொளியில் கொடியார்க்கு முண்டு.

6. கொல்லும் பயன்குறித்துக் கோடரி யெம்மரனுங்
கொல்லாதா லஃதுயிற் காம்பெனக் கூடாரை
நல்ல குறித்தட னன்றெனினு நாடியவர்
புல்லியக்காற் காக்க புரிந்து.

7. கன்னியை நோன்பினைக் காப்பக் கருதியே
மன்னு *மிராமனும் வீடுமனு மாறுற்றார்
தந்நல முன்னிப் பிறர்போலுறுப வோ
பன்னிற் பெரியார் பகை.

* பரசுராமன்.

8. தீதே பெயர்சொலினுஞ் சீச்சீ யெரியளற்றுக்
கேது முகடிக் கிருக்கைபிற தீவினைக்குத்
தாதுபே ராசை தொலையாத் துயர்ப்புணரி
பேதைக்குழாம் பேணுஞ் சூது.

9. பெருகும்வாத் தோல்வியினும் பின்னைத் தமக்கென்
றொருபொழுது நெஞ்சு முறுமையி னென்றுந்
திருவுடையூண் கல்வியொளி யெட்டனையுஞ் சேரார்
பருவரலே சூதின் பயன்.

10. உணர்வொழியுங் கண்முதல வுண்ணிற் பொருள்போங்
குணம்போங் கொலைகளவு காமநிலை கொள்ளும
பணவரவிற் றுயுமஞ்சு நீங்கா பழியு
முணன்மிகிற் சாதலு முண்டு.

பகை முற்றிற்று.

18-ம் அதிகாரம். மேலோரியல்பு.

1. முத்திக்குபாயமுணர் மூதறிஞர் மந்திரமுஞ்
சித்திக்கு வேண்டுஞ் செயலும் பிறவுமெண்ணார்
பத்திநெறி யேநேரும் பற்றறப் பொருட்டலகோ
டொத்து நடப்ப வுவந்து.

2. அடுத்தார்ப் புரப்ப வவரடித் தாழ்ந்தும்
வடித்த நூலாய்ந்தார் மதியார்தம் மேன்மை
நடித்துநீத் தானென நண்ணிய பார்த்தன்
அடித்தாழ்ந்தான் கண்ட ரரி.

3. நீதித்தலைநின்ற நீர்மையர் யார்மாட்டும்
தீதே பயப்பினுஞ் சொல்லார் திறம்புரை
சாதேவன் றன்முன் றலைதுணிப்ப நன்னுளாய்க்
தோதினன் றெவ்வ ருழை.

4. தாய்தந்தை யாசான்சொற் றக்கார் மறுஅரென்று
மாயி னருமறையின் மிக்க லவையன்றோ
தூய வியாத விராமன் றுணிந்துவிர
வீயுமவன் சான்றோ மெனல.

5. என்சொலினுந் தாய்முதலோர் செய்த லியல்பெனினும்
புன்சொ லெனநிரய முய்ப்ப புரியாரே
நன்னனீன் றோர்சொற் கடந்தான் பலிகொன்றான்
முன்னங் குரவன் மொழி.

6. மூத்தவுள வாயின் முறையாற்பிற் றோன்றுமயில்
சீர்த்த கலாபம் விரியாவாந் தேருங்காற்
கூர்த்த வறிவோரு மூத்தார்முற் கொள்ளாரே
நீர்த்த தலைமை நிலை.

7. அறனதிப் பாற்புல் லருங்கானத் தன்றி
நிறைகுள மாதியுள் வேலி நிலத்துட்
சிறுமுய லுண்ணுதாற் சீரியரு மன்னர்
பிறர் தேட்டான் வாழ்வு பிழை.

8. அன்பா னினிதா வறத்துறையை யார்மாட்டு
மென்பா டுறினு மியம்புப நீதியாற்
றன்பழுதுசொற்சொலினுஞ்சொல்லாரே யெஞ்ஞான்று
மென்பயனு மிலலாத சொல்.

9. அறமீவோர் பிறர்பழி யாண்டு மிசையார்
உறுதி யுறவருளா னுன்னி னவர்முற்
செறலொடு சொல்லினுஞ் சொல்பவே யன்றிக்
குற்றபுறன் கூறார் குறித்து.

10. கூகை பகற்கட் குருடெனின் யார்குற்ற
மீகையரில் லென்னின் இரப்பார்தங் குற்றமே
சோகம் பெரியாரைச் சார்ந்துந் தொடர்ந்தகலா
லாகுமே குற்ற மவர்க்கு.

மேலோரியல்பு முற்றிற்று.

(தொடரும்.)

அ. சண்முகம்பிள்ளை.

மன ஏகாக்கிரம்.

[முன் தொடர்ச்சி]

நாம் மேற்கூறியவண்ணம் மனமானது ஆவசியகம்போல நினைத்தபொருளிலோ விஷயத்திலோ ஒருவழிப்பட்டு நிற்றற்கு, அதாவது மனம் ஏகாக்கிரப்படுவதற்கு, இரண்டுசங்கதிகள் இன்றியமையாதன வாயிருக்கின்றன. அவையாவையெனின், தன்னிடத்தில்சக்தி வேண்டுவதொன்று; அதனைப்பிரயோகித்தல் மற்றொன்று. இவ்விரண்டு ஆவசியகங்களையும் பூர்த்தி செய்துகொள்வதற்குள்ள உபாயங்களாகும் அப்பியாசங்களைப் பழக முயலுவதற்கு முன், அவைகளால் சித்திபெறுவதில் மிக்க சம்பந்தமுடையவையும் மனோசக்தியின் பூர்ணவளர்ச்சிக்கும் சரியான பிரயோகத்துக்கும் ஆஸ்பதமானவையும் ஆகாநின்ற சில விஷயங்களை அறிந்து, மனதிற் றிடம்பெறச்செய்ய வேண்டுவது முக்கியமென்று தோன்றுவதால் அவைகளைப் பற்றிச் சிறிது பிரஸ்தாபிப்பாம்.

மேற்கூறியதுபோல, சரீரமும் மனமும் ஒரேபொருளாக இருத்தலின் அவையிரண்டும் ஆரோக்கியநிலையில் இல்லாதவரை வேண்டியவாறு அறிதல் செய்தல் ஆகிய இரண்டும் அசாத்தியமாகின்றன. அதாவது எத்தொழிலிலும் மனம் ஏகாக்கிரப்படுதல் என்றல் ஒவ்வாது. ஆனதுபற்றி அவையிரண்டையும் எதாநிலையில் வைத்துக்கொள்வதற்கு எவரும் முயல வேண்டுவது ஆவசியகமாகின்றது. இவ் ஆவசியகத்தைப் பூர்த்திசெய்ய எழுந்த நூல்களே சரீரதத்துவ சாஸ்திரம், மனோதத்துவ சாஸ்திரம், ஜடதத்துவ சாஸ்திரம், வானசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், ஞானசாஸ்திரம், ஆகிய நூல்களாகும். ஆயினும் இவற்றுள் வைத்திய சாஸ்திரம் அல்லது ஞானசாஸ்திரம் ஒன்றிலேயே ஏனைய யாவும் அடங்கற்பாலன. எதனாலெனின், வைத்திய சாஸ்திரத்தினுடையவும் ஞானசாஸ்திரத்தினுடையவும் உத்தேசம் மனிதனுடைய சரீரம் மனம் ஆகிய இரண்டையும் ஆரோக்கிய ஸ்திதியில் வைப்பதையன்றி வேறொன்றாயிருத்தல் யுக்திக்கும் பொருத்தமில்லாததாலென்க. ஆனால் சாதாரணமாய் நடைபெறும் வைத்திய சாஸ்திரங்கள் சரீரத்தைப்பற்றி மாத்திரமே பேசுகின்றன; அதுபோலவே பல ஞானசாஸ்திரங்கள் மனத்தைப்பற்றி மாத்திரம் பேசுகின்றன. அங்ஙனமுள்ள சாஸ்திரங்களுள்ளும் அதது பேசும் விஷயங்களில் முடிவான உண்மைகளாக அங்கீகரிக்கத் தக்கவிதத்தில் எழுதப்பட்டிருப்பவைகள் மிகவும் சிலவே. உலகத்திலுள்ள எந்த சாஸ்திரத்தையும் பரீக்ஷிப்போமானால் முற்றுப்பெற்றதாகக் கூறத்தக்கதொன்றைக் காண்டல் துர்லபமாகும். எவ்விஷயத்திலும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள உண்மைகளிலும் அதிநுட்பமான உண்மைகள் எத்தனையோ கண்டுபிடிக்கப்படவேண்டியவையாயிருக்கின்றன என்பதை நுட்பபுத்தியுடையார் மறுக்கார் என்பது திண்ணம். ஆயினும் இக்காரணத்தினால் இதுவரை வெளிவந்துள்ள உண்மைகளை ஒவ்வொரு மனிதனும் அறியக் கடமைப்பட்டிருக்கிறான் என்பதில்லையென்று சொல்லல் பொருந்தாது. ஆகையால் இவற்றின் நுட்பங்களை யறியவிரும்புவார் யாரும் மேற்குறித்த சாஸ்

திரங்களிற் பயில்தல் ஆவசியகமாகும். அவற்றில் நுட்ப ஆராய்ச்சி செய்தல் அசாத்தியமாக இருப்பினும், அவற்றிற் கூறப்படும் பொது விஷயங்களையேனும் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் ஆவசியகமே. இது நிற்க, மனமும் சரீரமும் ஆரோக்கிய நிலையில் வைத்துக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் அறிய வேண்டிய விஷயங்களை இதில் எழுதுவது அசாத்தியமாயினும், எவரும் கிரகிக்கக்கூடியவையும், மிகவும் ஆவசியகமானவுமான சில விஷயங்களை எத்தனையும் சுருக்கியேனும் கூறியிருத்தல் உசிதமன்றென நினைக்கிறோம். ஆகையால் பின் வரையப்படும் அவற்றை யாவரும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுகிறோம்.

ஸ்தூல உலகத்தில் மனிதனிடத்துக் காணப்படும் சக்திகள் யாவும் அவனது ஸ்தூல சக்திகளேயாகும். அச்சக்திகள் தோன்றுவதற்கு வாயிலாயிருப்பது ஸ்தூல சரீரமே. ஆகையால் ஸ்தூல சரீரம் இல்லாதவரை மனிதன் ஸ்தூல உலகத்தில் வியவகரித்தல் ஒவ்வாது. சப்தமானது ஆகாயம் முழுவதும் வியாபித்திருப்பினும் வீணை முதலிய கருவிகளின் வேறுபாட்டாலும் பிரயோக சக்தியின் பேதத்தாலும் தோற்றத்தில் அதன்சக்திகூடியும் குறைந்தும் அதனால் காதுக்கு இனிமையாயும் கோரமாயும் இருத்தல்போல சரீர வேறுபாட்டுக்குத் தக்கபடியும் சக்தியின் கூடுதல் குறைவுக்குத்தக்கபடியும் ஒவ்வொரு மனிதனிடத்தும் தோன்றும் சக்திகள் கூடியும் குறைந்தும் வசீகரமாயும் அருவருப்பாயும் காணப்படுகின்றன. சரீரமோ ஆகாரம், பானம், காற்று இவைகளின் போஷணையால் நிலைபெறுவது. ஆகையால் இவற்றைப்பற்றி சிறிது அறியவேண்டுவது இன்றியமையாததே. ஆதியில் மனிதன் அநாகரீகமாயிருந்தகாலத்து இயற்கை இவ்விஷயங்களில் எவ்வாறு தூண்டுமோ அவ்வாறே நடந்துவந்தான். ஆதலால் அப்பொழுது ரோகமற்றவனாய் திடகாத்திரமுடையவனாய் வாழ்ந்தான். தற்பொழுதோ நாகரீகம்புகுந்து மனிதன் இயற்கையின் கட்டளைகளை மீறிநடந்து அதைச் சீர்திருத்த ஆரம்பிக்கவும் கணக்கில்லாத ரோகங்கள் கிளம்பி துன்பத்துட்படுத்துகின்றன. இயற்

கைக்கொத்து ஒழுகலே எவ்வாற்றானும் இன்பம் பயப்பதென அறிந்து போதிக்கும் வைத்தியர் சிலர் இக்காலத்தும் இல்லையென்பதில்லை. உணவாதி விஷயங்களில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது இயற்கையின் கட்டளையே. நாகரீகப்பழக்கத்தால் இயற்கை மாறுபட்டிருப்பார் புதிய பழக்கங்களை நிறுத்துமாறு நிறுத்தி தம் இயற்கைக்குச் சுவாதந்தரியம் கொடுத்துப்பின்னால் அதன் கட்டளைகளின்படி ஒழுகுதலே கடனாகும். ஆகாரத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுவது தன் மனத்திற்கொத்ததேயாகும். தன் மனத்திற்கொவ்வாத எதுவும் இன்பம் பயத்தலின்று. ஆகாரங்களின் பேதத்தைச் சுருக்கிக்கூறின் சத்துள்ளவைகளென்றும் அதாவது சதை உண்டாவதற்கேதுவாயிருப்பனவென்றும், சக்திகொடுப்பனவென்றும் இரண்டு பிரிவினுள் அடங்கும். இவற்றுள் ஒவ்வொன்றினுள்ளும் அததன் அம்சம் கூடியும் குறைந்தும் காணும். இவ்விருவகை ஆகாரமும் மனிதனுக்கு ஆவசியகமே. ஆயினும் அவனவனுக்கு வேண்டுவது யாது? என்பது எந்த வைத்தியனைப் பார்க்கிலும் அவனவனே நன்றாக அறிவன். ஆனால் சாதாரணமாக ஜனங்களுக்கு அபிப்பிராயம் அவ்விஷயம் வைத்தியனுக்குத்தான் நன்றாகப் புலப்படுமென்பதே. பொதுஜனங்கள் இவ்விஷயங்களைப்பற்றிச் சிறிதும் அறிவு சம்பாதியாதிருத்தலே அதற்குக் காரணமாகும். சாதாரண வைத்தியர்களுக்கும் இவ்வுண்மை புலப்படாதிருத்தலே ஜனங்களின் அறியாமையை அதிகப்படுத்துவதாக இருக்கின்றது. தேர்ந்த வைத்தியர்கள் இதை யறியாதிரார். இதைச் சம்பந்தித்த ஓர் விஷயம் அமெரிக்காவில் நடந்திருப்பதை இதில் எழுதாமலிருக்க மனம் வரவில்லை. அதாவது.

[இன்னும் வரும்]

வள்ளிநாயகம்.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

இந்தக்காமவுடல் வைசியஜாதி. அதாவது இவ்வுடல் புகையைப்போலும் மேகத்தைப்போலும் மொத்தாகாரமாயில்லாமல் ஜீவன் அதைத் தனக்குக்கருவியாகவைத்து உபயோகப்படுத்தும்படி உருவமைந்து எம்மனிதனிடத்தில் இருக்கின்றதோ அம்மனிதன் வைசியன். வைசியன் என்பவன் இத்தேகத்தில் தொழில் செய்பவன். சைதன்னியம் இத்தேகத்தில் தொழில்செய்வதினால் உண்டாகும் ஸ்புரணங்களின் உணர்ச்சி எவனது பிரஞ்ஞை அல்லது அறிவில் விளங்குகின்றதோ அவன்வைசியன். திரிபுரதகனக் கதையில் இரும்புக்கோட்டையென்பது எப்படி நுண்பூதவுடலாகிய பிராணமயகோசத்தைக் குறிக்கின்றதோ அதுபோல் வெள்ளிக்கோட்டை அல்லது புரம் என்பது இக்காமவுடலைக் குறிக்கின்றது.

இதுவரை மனிதனது கூறுகளில் முதல் நான்கு கூறுகளைப் படித்தோம். இவைகளைக் கீழ் நான்கு கூறுகள் என்றும் மொத்தமாய்ச் சேர்த்து ஒன்றாய்ப் பாவித்துச் சதுஷ்கம் அல்லது சதுட்கம் என்றும் சொல்லுவார்கள். இந்தச் சதுட்கம் அநித்தியமானது. மனிதனைத் தொடர்ந்து செல்லாமல் பின்தங்கி யழிந்து போகக்கூடியது. மேலும் அது மனிதனுடைய ஈன சுபாவத்தைச் சேர்ந்தது. அவனைத்தொடர்ந்து நிற்கும் மிருகம் இதுவே. இதைத் தனிமையாய் நோக்கும்பொழுது தாழ்ந்தபிராணியாகிய மிருகமேயாம். இது எல்லாச் சீவராசிகளின் பொதுச் சுபாவம் பொருந்தியது. இது மனிதனாவதற்கு இதற்குள் மனம் பிரவேசிக்க வேண்டும். மனமானது மேனின்றிறங்கி இதைப் பரிசித்துத் தாக்கும்வரை இது சுத்த மிருகமேயாம். மனம் வந்தபிறகுதான் மனிதன் என்று சொல்லும்படியான யோக்கியதை பெறுகின்றது. மனம் அதற்குள் பிரவேசியாமலும் அதைத்தாக்காமலும் அது ஜீவித்திருக்கக்கூடும். அப்பொழுது அதற்கும் தாழ்ந்த பிராணிகளாகிய மிருகங்களுக்கும் அணுவளவேனும் வித்தியாசமே கிடையாது. மனம் அதில் பிரவேசித்த ஆரம்பத்தில் அதற்கும் மனத்துக்கும் உள்ள சம்பந்தம் மிகவும் சொற்பமாயிருக்குமாகையால்

மனித சுபாவமும் வெகு அற்பமாய்த்தான் விளங்கும். மனம் அதைத் தாக்கும் சம்பந்தம் நீளா வட்டத்தில் பிறவிகள் தோறும் வளர்ந்து வளர்ந்து நாகரீகமுள்ள மனிதனாகின்றான். சென்றகற்பங்களில் மெதுவாகப் படிப்படியாய் ஒவ்வொரு கூறாக மனிதனது மாளிகை அவன் சதுஷ்கமான பிராணியாய் நிற்கும்வரை கட்டப்பட்டு வந்ததென்றும், இந்தச்சதுஷ்க மனிதனைப் பரம் தாக்கி ஸ்பரிசியாமல் அவனைப் பிரேரித்து மாத்திரம் அவன் மேல் ஊஞ்சலாடினதுபோல் கவிந்திருக்க அவன் பரந்துடன் பிரஞ்ஞையோடு கூடித்தன் வாழ்வின் முடிவான பயனாகிய மேல் நிலைகளைத் தான் அடையும்படி செய்யக்கூடிய அந்த மனத்தின் வரவு பார்த்து அவன் காத்துக்கொண்டிருந்தானெனவும் ஞானகலை போதிக்கின்றது. இப்படி அநேக கற்பங்களாகப் படிப்படியாய் மெதுவாய்ப்பரிணாம விகசிதமடைந்த பூர்த்தியான சதுஷ்கத்தின் கூறுகள் இப்பொழுது ஒவ்வொரு மனிதனிடத்திலும் வெகு துரிதமாய்ப் பரிணாமவிகசித மடைந்து விடுகின்றது. மனம் சதுஷ்கத்தில் பிரவேசிக்கிறதற்கு முன் சதுஷ்கத்தின் நான்கு கூறுகளும் ஒன்றின்பின் ஒன்றாய் ஒவ்வொரு கூறின் பரிணாமவிகசிதத்திற்கு அநேக கற்பங்களாகப் பரிணாமவிகசித மடைந்தன. மனம் பிரவேசித்த பிறகு இந்நான்கு கூறுகள் பொருந்திய சதுஷ்கம் வெகு துரிதத்தில் பரிணாம பக்குவம் பொருந்தி விடுகின்றது. கருத்தரித்துச் சொற்பகாலத்திற்கெல்லாம் சதுஷ்கம் எவ்வளவு பரிணாம வளர்ச்சி அடையவேண்டுமோ அவ்வளவு பூரணம் அடைந்து விடுகின்றது. மற்றக் கூறுகள் மாத்திரந்தான் வித்தில் மரம் சூக்ஷமமாய் மறைந்திருப்பது போல் மனிதனிடத்தில் சூக்ஷமமாய் மறைந்திருக்கின்றன. இவைகள்தான் இனி வெளிப்படத்தோற்ற வேண்டும். மனம் வந்து புகாமல் மேற்போகிறதற்கு வழியின்றி நின்ற இடம்வரைச் சதுஷ்கமானது பரிணாமவிகசிதமடைந்து வந்த வகையைப் பற்றி இவ்வுலகம் உய்யும் பொருட்டு ஹெலெநாம்பாள் (பிளவாட்ஸ்கி) என்று நாமந்தரித்து இக்காலத்தில் தோன்றிய ஞானசிகாமணி யெழுதிப் பரவ விடுத்த இரகசிய சித்தாந்தம் என்னும் நூலுக்கு ஆதாரமான புராதன சுலோகங்களில் வெகு சாதுரியமாய் அடியில் வருமாறு சொல்லியிருக்கின்றது.

"பரம் உருவம் வேண்டிற்று; பிதுர்க்கள் கொடுத்தார்கள். பரம் [illegible]தின் பூதவுடல் வேண்டிற்று; பிருதிவி வனைந்தது. பரம் பிராணன் வேண்டிற்று; சூரிய பிதுர்க்கள் அதை அதன் உருவத்தில் ஊதினார்கள். பரம் நுண்பூதச் சாயை வேண்டிற்று; தியானிகள் "எங்களுக்குச் சொந்தமாயுள்ளதை நாங்கள் அதற்குக் கொடுத்தோம்" என்றார்கள். பரம் காமவாகனம் வேண்டிற்று; "இதோ இருக்கின்றது" என்றனன் வருண தேவன். ஆனால் ஜகத்தைத் தழுவப் பரம் ஒரு மனம் வேண்டுகின்றது. பிதுர்க்கள் "அதைக்கொடுக்க எங்களால் கூடாது" என்றார்கள். பிருதிவி "எனக்கு அது எப்போதும் கிடையாது" என்றது. "என்னுடையதை அதற்கு நான் கொடுத்தால் உருவம் எரிந்து பஸ்மமாய் விடும்" என்று மகா அக்கினி தேவன் கூறினன். ....மனிதன் பகுத்தறிவற்ற வெறும் பூதமாய் நின்றான்."

பகுத்தறிவு இன்றித் தனியாய் நிற்கும் காரிய மனிதனாகிய சதுஷ்கம், மேற்கூறியபடி ஞானசூனியமான வெறும் பூதமேயாம். சதுஷ்கம் மாத்திரம் தனிமையாய் மனிதன் அல்லது அறிவன் அன்று. அறிவனாயிருக்குந் தன்மையினாலேயே தான் மனிதன் உண்மையில் மனிதனாகின்றான். மனிதன் என்றாலும் அறிவன் என்றாலும் ஒன்றே. பகுத்தறிவு அல்லது மனம் இல்லாதபோது சதுஷ்கம் மனிதவடிவானதே யல்லது உண்மையில் மனிதன் அன்று.

இவ்விடத்தில் மாணவனானவன் சாவகாசமாய்த் தங்கி நின்று இதுவரை சென்றமட்டும் மனிதனுடைய கட்டைப்பற்றிச் சிந்தனை செய்யக் கடவன். இந்தச் சதுஷ்கமானது மனிதனுடைய அநித்தியபாகம். இதற்கு ஞான சாஸ்திரத்தில் காரிய மனிதன் என்றும், காரியாகங்காரம் என்றும், சும்மா அகங்காரம் என்றும், ஆணவம் என்றும், சதுஷ்க மனிதன் என்றும் இங்கிலீஷில் பெர்ஸனாலிடி (Personality) என்றும் பலவாறாகப் பலவிடங்களில் பெயர் வரும். இதற்கு ஒருவித "நான்" என்னும் உணர்ச்சி யுண்டு. மனிதனுடைய பந்தத்தைப் பூரணமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமாயினும் மேற்சென்று பெரிய நூல்களை வாசித்து அவைகளிலுள்ள சிக்குக்களை யறுத்து விளக்கமாய் அறிந்துகொள்ள வேண்டுமாயினும் இந்த ஆணவத்தைத் தெளிவாயும் திட்டமாயும் அனுபவசித்தமாய் அறியவேண்டிய அவசியம். இந்தக் காரிய அகங்காரம் அல்லது ஆணவம் மனிதனாவதற்குச் சூரியனுடைய கதிர்களால் உலகம் எப்படி

விளக்கப்படுகின்றதோ அதுபோல் அந்த ஆணவமும் மனத்தினுடைய கிரணங்களின் கீழ் இனி வந்து அம்மனத்தினால் அது பிரகாசிக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனாலும் மனத்தின் கிரணங்கள் இல்லாமலே அந்தக் காரியமனிதனானது அன்னமயகோசம், பிராணமயகோசம் பிராணன் காமவுடல் என்னும் மிருகஜீவன் இவைகள் கூடிய ஒரு திட்டமான தனிப் பிராணியேயாம். அதற்கு ஆசா பாசங்கள் உண்டு; ஆனால் விவேகம் கிடையாது; அதற்குக் காமக்குரோதாதிகள் உண்டு; ஆனால் மதி கிடையாது; அதற்குப் பயமாதிகள் உண்டு; யூகம் கிடையாது; அதற்கு விருப்பங்கள் உண்டு; ஆனால் பகுத்தறியும் உளம் கிடையாது. ஸ்பரிசமாத்திரத்தினாலே தன்னை மனிதனாக வேதிக்கக்கூடிய மனம், அறிவு, பகுத்தறிவு என்று சொல்லும் தன்னுடைய சக்கரவர்த்தியின் வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றது. அறிவின் ஸ்பரிசம்பட்ட பிறகு தான் காரியமனிதன் மனிதனாகின்றான். நமது சாஸ்திரங்களில் அறிவு என்று சாதாரணமாய் வழங்கி வருவதற்கே தியசாபிகல் நூல்களில் மனம் என்று சொல்லப்படுகின்றது.

அடுத்து ஐந்தாவது கூறாகிய மனத்துக்குச் செல்வோம்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

[முன் தொடர்ச்சி]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கோளல்."

ஒருநாள் சாயங்காலம் வெகுதூரத்திலிருந்து அனேகசினேகிதர்கள் தங்கள் குடும்பங்களுடன் ஹெலேநாம்பாளுடைய விநோதச்செய்கைகளைத் தாங்கள் நேரில் கண்டு கேட்டுக்களிக்க வேண்டுமென்றே ஒரு பெரியவிருந்துக்கழைப்பு வந்ததை முன்

வைத்து வந்துகூடினார்கள். ஆனால் அவர்கள் வந்துகூடினபோது ஒரு அற்புதத்தோற்றமும் நடக்கவில்லை. அவர்கள் சிலதினங்களாகக்காத்திருந்தார்கள். ஆயினும் அவர்களிருந்தவரை ஒன்றும் நடக்கவில்லை. வீட்டிலுள்ளவர்கள் ஹெலேநாம்பாளைவேண்டியும் தான் தன்னாலியன்றமட்டிலும் பிரயத்தனஞ்செய்துக்கொண்டிருப்பதாகவே கூறிவந்தனள். பலதினங்கள் சென்றும் வந்தவர்கள் நேரில் கண்டுகேட்டுத்திருப்தியடையும்படி ஒரு பலனையும் அவள் காண்பிக்கவில்லை. வந்தவர்கள் எல்லோரும் மிகவும் அதிருப்தியாய்த் தாங்கள் கேள்விப்பட்டது பொய்யாயிருக்கும் என்று சந்தேக மனநிலைமையுடன் திரும்பிச் செல்லப்புறப்பட்டுவிட்டார்கள். ஆனால் அவர்கள் வெளிவாயில்கடந்ததும் அவர்கள் சகடங்களில் பூட்டிய குதிரைகள் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் ஓசை கலகலவென்று கேட்டுக்கொண்டிருக்கவும் வீட்டில் பழையபடி ஒவ்வொரு சாமானும் உயிர்பெற்றபடி ஆடவும் ஓடவும் குதிக்கவும் எழும்பவும் விழவும் சத்திக்கவும் ஆரம்பித்துவிட்டது. மேஜை நாற்காலிமுதலிய சாமான்களின் ஒவ்வொரு பாகமும் உயிர் அடைந்து பேசும் சக்திபெற்றிருப்பதுபோல் நடந்தது. வீட்டிலிருந்த ஜனங்களாகிய ஹெலேநாம்பாள் சகோதரியும் தகப்பனும் மற்றவர்களும் அராபிக்கதையில் சொல்லும் மாந்திரிக அரண்மனைக்குள் இந்திரமகேந்திரஜாலங்கள் மத்தியிலிருப்பவர்களைப்போல் அன்றிரவை பெரும்பான்மையும் கழித்தார்கள். வெளிஜனங்கள் அற்புதம் அற்புதம் என்று சொல்லி விநோதங்கள் பார்க்கவேண்டும் என்னும் அடங்கா அவாவைத்து வருதலைக்கண்டுத்தனக்கு வெறுப்பும் அசங்கியமும் உண்டாவதாகச் சொல்லினள். அன்று ஒரு இரவு இதற்குமுன் பலநாட்களில் ஒன்று இரண்டாய் நடந்தவிநோதக்காக்ஷிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே இரவில் எல்லாம் நடந்ததுபோல எண்ணிறந்த தோற்றங்கள் உண்டாயின. ஹெலேநாம்பாள் சகோதரியாகிய ஜேலிஹாவ்ஸ்கி சொல்லுகிறதாவது. "ஒருமுறை சாப்பாட்டு வீட்டில் நாங்கள் இராப்போசனத்திற்கு உட்கார்ந்தபோது அடுத்தஅறையில் நாங்கள் இவ்விடத்திலிருந்தே அவ்வறையின்

பெருங்கதவுகள் திறந்து இருந்ததனால் உள்ளேநன்றாய்ப்பார்க்கும்படி பூட்டிவைத்திருந்த "பியானோ" (Piano) வாத்தியப்பெட்டிக்குள்ளிருந்து வாத்தியம் வாசிக்கும் சத்தம் மிகவும் பலமாய்ப்புறப்பட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. அப்பால் ஹெலேனாம்பாளின் முதல் ஆஞ்ஞையிலும் பார்வையிலும் ஆகாயமார்க்கமாய் அவளுடைய புகையிலைப்பையும், தீப்பெட்டியும் கைக்குட்டையும், அவள் இன்னும் எதுகேட்டாளோ அவைகளும் மற்றவர்கள் எதுவேண்டுமென்றார்களோ அவைகளும் வேகமாய்ப்பாய்ந்துவந்தன. பிறகு நாங்கள் எல்லாரும் போஜனமுடித்துவந்துஉட்கார்ந்துக்கொணடிருக்கும்பொழுது நெய்த்தீபங்கள் மெழுகுத்திரித்தீபங்கள் எல்லாம் அவ்வறைக்குள் ஒரு பெரும் புயல் காற்று அடித்துச் சுழன்றால் எப்படி அவைகள் ஆமோ அப்படி திடீரென அணைந்துபோயின. அப்பால் தீக்குச்சை உடனே உரைத்து வெளிச்சமுண்டாக்கவும் சோபாக்களும் (Sofas) நாற்காலிகளும்; மேஜைகளும், பீரோக்களும் பெரும்பீடங்களுமாகிய மிகுபாரமான தட்டுமுட்டுக்கள் எல்லாம் ஏதோ அதிரிசியக்கைகளால் சத்தமில்லாமல் தலைகீழாகத் தள்ளப்பட்ட மாதிரி தலைகீழாக நிற்கவும் அவைகளின்மேல் இருந்த கண்ணாடிகளும் பீங்கான்களும் அவைகளில் இழைத்திருந்த நுட்பமான சித்திரவேலைகளும் அற்பமேனும் உடையாமலும் இருக்கவும் கண்டோம்.

இவ் வற்புதநிகழ்ச்சிக்கப்புறம் சிதறித்திக்குமுக்காடிப்போயிருந்த எங்கள்புத்தியை ஒரு நிலைக்குக்கொண்டுவந்து மூச்சுவிடுகிறதற்கு முன் பியானோவில் யாரோ கெட்டியாயும் சுகமாயும் அர்த்தமாகும்படியான ஒரு கீதம் வாசிக்கக்கேட்டோம். நான் உள்ளஜனங்கள் எல்லாரும் சரியாக இவ்விடத்திலேயே இருக்கிறார்களாவென்று எண்ணிப் பார்த்துக்கொண்டேன். எல்லோரும் மெழுகுவர்த்தியைப் பொருத்திக்கொண்டு அந்த அறைக்குள் வாத்தியப்பெட்டிக் கிட்ட ஓடிப்பார்க்க அந்தப்பெட்டி பூட்டியிருந்தது. அதை மூடிப் பூட்டிருக்கும் பாரமான மேல் மூடிக்குள்ளிருந்து இன்னும் வாத்தியக்கம்பிகளின் அசைவின் கடைசி சப்தம் காதில் தொனித்துக்

கொண்டிருந்தது. அப்பால் இரவு வெகுநேரம் ஆயும் அதைப்பாராமல் நாங்கள் எல்லோரும் பெரிய போஜன மேஜை (Dining table) யைச் சுற்றி "ஸெயான்ஸ்" (Seance) என்னும் கொலுவுக்காக உட்கார்ந்தோம். குடும்பத்தார் ஒரே காலத்தில் சுற்றி உட்கார்ந்து சாப்பிட ஏற்பட்ட இந்தப் பெரிய பளுவான மேஜையானது வெகு பலமாய் அதிர்ந்து, அப்பால் நகர்ந்து அந்த அறையில் எப்பக்கமும் துரிதமாய்ச் சுற்றிச் சுழன்று ஒரு மனிதனுயரத்திற்கு மேலெழும்பி ஆகாயத்தில் ஆதரவில்லாமல் நின்றது. சுருங்கச் சொல்லின் வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற எண்ண மாத்திரம் வைத்துக்கொண்டு மனத்தில் நம்பிக்கையில்லாமல் வன்மமும் விரோதக் கொள்கையும் பொருந்தி வரும் அன்னியர்கள் இல்லாமல் ஹெலேனாம்பாளுக்கு மிகவும் நெருங்கியவர்களும் பிரியமானவர்களுமாகிய நாங்கள் மாத்திரம் இருக்கும்பொழுது என்னென்ன விசித்திரத் தோற்றங்கள் தவறாமல் உண்டாய்க்கொண்டிருந்தனவோ அக்காட்சிகள் எல்லாம் இந்த இரவு உண்டாயின."

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

புத்தகக்குறிப்பு.

வெனிஸ் வர்த்தகன்:— இஃது ஆங்கில காளிதாசரென்று, புகழப்படாநின்ற ஷேக்ஸ்பியர் மகாகவியியற்றிய ஓர் அற்புத நாடகம். இதனைத்தமிழில் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். வி. கள்ளப்பிரான்பிள்ளையவர்கள் பி. ஏ மொழிபெயர்த்து அச்சியற்றிய பிரதியொன்று நம்பார்வைக்கு அனுப்பியதற்காக அவர்களுக்கு வந்தனமளிக்கின்றோம். இதனை முன்னமேயே சிலர் மொழிபெயர்த்திருக்கின்றனராயினும் இம்மொழிபெயர்ப்புச் சிறப்புற்றது. ஏனெனில் ஆங்கிலத்திலுள்ளவிதமே செய்யுளைச்செய்யுளாகவும் வசன நடையை வசன நடையாகவும் முழுமையும் மொழிபெயர்த்திருப்பது இஃது ஒன்றே. இதன்நடை நாடகத்தின் கௌரவத்துக்குத்தக்க

கம்பீரமுள்ளதாகவும் யாவரும் எளிதிலறியத்தக்கவண்ணம் சுலபமாகவும் இருப்பதுமன்றி முதனூலுக்கு முற்றிலும் ஒத்துமிருக்கின்றது. பற்பல இடங்களில் முதனூலோடு ஒப்பிட்டுப்பார்த்தோம். அணுவளவும் பிசகாமல் ஆசிரியர் கருத்து முற்றிலும் அழகாய் அமைக்கப்பட்டிருப்பதை நோக்குங்கால் பிள்ளையவர்களின் கூரிய மதியும் ஆங்கிலம் தமிழ் என்ற இருபாஷைகளிலும் அவர்களுக்கு இருக்கும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் நன்கு புலப்படுகின்றன. நூலாசிரியராகிய மகா கவி சங்கீதத்தைக் குறித்துக்கூறிய பிரசித்த வரிகளின் மொழிபெயர்ப்பை இதற்குச் சான்றாக எடுத்துக்கூறுவோம். அது வருமாறு:—

"சங்கீத ஞானஞ் சற்றுமில் லானும்
இன்னிய விசையா லிளகிடா தவனும்
இராஜ துரோகம் சற்பனை பறியிவை
தமக்குத்தகுதி யானவன் றானே."

இவ்வருமுயற்சியில் பிள்ளையவர்கள் பின்னும் ஊக்கத்துடன் உழைத்து லோகோபகாரமாக இம்மகா கவியின் ஏனைய நாடகங்களையும் இவ்வாறே மொழி பெயர்த்தரவும் வண்ணம் அவர்களுக்கு ஈசன் பூரண கிருபை புரிவாராக. சுமார் 200 பக்கங்கொண்ட இப்புத்தகம் சென்னை தாம்ஸன் கம்பெனியாரால் அழகாய் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 1.

பன்னிரு திருமுறைகள்:—சைவசமயாசாரிய சுவாமிகள் மூவருளிச்செய்த தமிழ்வேதமாகிய தேவாரம் ஏழு திருமுறைகளும் ஸ்தலமுறையாக ராயல் பாரத்தில் நல்ல கடிதத்தில் பெரிய எழுத்தில் பல வர்ணங்களால் அமைக்கப்பட்ட அழகிய படங்களுடன் முதற் புஸ்தகமாகவும், ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகளருளிச்செய்த திருவாசகம், திருக்கோவையாரும், (8) திருமாளிகைத்தேவர் முதலியோரருளிச்செய்த திருவிசைப்பா திருப்பல்லாண்டும், (9) திருமூலநாயனாரருளிச்செய்த திருமந்திரமும், (10) திருவாலவாயுடையார் காரைக்காலம்மையார் முதலானோரருளிச்செய்த பதினொராந் திருமுறையும் ஆக நான்கு திருமுறைகளும் மேற்கூறியவாறே படங்களுடன் நல்ல கடிதத்தில் பெரிய எழுத்தில் இரண்டாம் புத்தகமாகவும், சேக்கிழார் சுவாமிகளருளிச்செய்த பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் மூன்றும் புத்தகமாகவும் (இஃது ஒவ்வொரு நாயன்மார் சரித்திரமும் வசன ரூபத்தாலும் எழுதிச் சேர்க்கப்பட்டது.) ஒரே அளவில் மிகவும் நேர்த்தியாகப் பார்ப்போர் மனத்தைக் கவரத்தக்கவாறு வெளியிடப்பட்டுள்ளன. மேற்குறித்த நூல்களைப் பற்றி யாதல், நூலாசிரியர்களைப்பற்றி யாதல், நூல்கள் நுதலும் பொருள்களைப்பற்றி யாதல் யாம் கூறவேண்டுவதில்லை. சிறிது கூறப்

புகினும் இப்பத்திரிகை யிடம் பற்றாது. இம் மூன்று புத்தகங்களும் இதுவரை பலரால் அச்சிடப்பட்டவைகளே யாயினும் மற்றெதுவும் இவ்வளவு சிறப்பாக அமைக்கப்பட வில்லையென்றே சொல்லலாம். சரித்திரங்கள் அட்டவணைகள் வேறு பலவகைக் குறிப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனையர் பதிப்பித்த இந்நூல்களைப் பார்க்குமிடத்துத் தோன்றும் ஐயப்பாடுகள் பலவும் இப்புத்தகங்களில் நீக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுச் சைவசமயிகள் யாவரும் தினந்தோறும் நியமமாகப் பூஜித்து போற்றத்தக்க நூல்கள் இவைகளே. இவ்வாறாக இவற்றை அச்சிட்டவராகிய ஸ்ரீமான் திருமயிலை செந்தில்வேலுமுதலியாரவர்கட்கு சைவர்கள் யாவரும் நன்றி கூறும் கடப்பாடுடையரே. இவர் செல்வத்தாலும் கல்வியாலும் நற்குணநற்செயல்களாலும் மிகச் சிறந்தவர். விடாமுயற்சியும் ஊக்கமும் பெரிதுற்றவர். இப்புத்தகங்களை எமக்கனுப்பித் தந்தமைக்காக யாம் வந்தனமளிக்கின்றோம். இம்மூன்று புத்தகங்களும் சேர்த்து வாங்குவோர்க்கு விலை ரூ 10. (பத்து ரூபா) தனித்தனி பெறுவோர்க்கு முதற் புத்தகம் (தேவாரம்) விலை ரூ 5. இரண்டாம் புத்தகம் (திருவாசகம் திருக்கோவையார் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருமந்திரம் பதினோராந்திருமுறை) விலை ரூ 3—8—0. மூன்றாம் புத்தகம் (பெரிய புராணம்) விலை ரூ 3. புத்தகவிலைக்கு விலை அதிக சொற்பமென்பது திண்ணம். இவற்றை சென்னை வை. புஷ்பரதசெட்டியார் கலாரத்ந அச்சுக்கூடத்திலும் சென்னை தங்கசாலைத்தெரு 217 நிர். வீட்டிலுள்ள ஷை செந்தில்வேல் முதலியாரவர்களிடத்தும் விலைக்குப்பெறலாம்.

குசேலோபாக்கியானம்:—சொன்னயம் பொருணயம் கற்பனை யலங்கார முதலிய பலவகையாலும் மிகச் சிறந்த இந்நூலைத் தமிழர் நன்கறிவர். இன்றியமையா இடங்களில் முக்கிய குறிப்புரையுடன் அச்சிட்டவர் சென்னை பச்சையப்பன் காலேஜ் உதவித் தமிழ்ப் பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ க. வ. திருவேங்கடநாயுடவர்களே. குறிப்புரை மிக நன்றாயெழுதப்பட்டுள்ளது. முன்பதிப்பித்த புத்தகத்தினும் பெரிது. சுத்தப்பிரதி விலை அணா-6 தான். தமிழ் நாட்டார் யாவரும் வாங்கிப் படிக்கத் தக்கது. பதிப்பாசிரியரிடத்தும் சென்னை வை. புஷ்பரதசெட்டியாரது கலாரத்நாகர அச்சுக்கூடத்திலும் கிடைக்கும்.

சோணசைலமாலையுரை:—இது தமிழ்ப்புலவர் யாவரும் வியந்து போற்றும் மதுரவாக்கியாகிய துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்தது. பத்திச்சுவைமலிந்தது. இந்த சுவாமிகள் வாக்கைப்பற்றி யாம் அதிகம் எழுதவேண்டுவதில்லை. இந்நூலுக்கும் ஷை சுவாமிகளருளிச்செய்த சிவநாம மகிமைக்கும் மேற்குறித்த மகா-ள-ள-ஸ்ரீ

க. வ. திருவேங்கடநாயுடவர்கள் சிறந்த வுரை யெழுதி அச்சிட்டிருக்கிறார்கள். இதுவும் சுத்தப்பிரதியே. ஆப்பயிண்டு விலை அணா-5. காலிக்கோ பயிண்டு 0—6—6. மேற்குறித்த இரண்டிடத்தும் பெறக் கூடியதே சைவசமயிகட்குப் பெருமகிழ்வுதரத்தக்கது.

விஜயகேசரி:—இது திகழும் ஐப்பசிமீ முதல் சிதம்பரத்தில் தோன்றிப் பக்ஷத்துக்கொருமுறை வெளிப்படும் சமாசாரத் தமிழ்ப்பத்திரிகை. நமது பார்வைக்கு வந்த இம் முதற் பத்திரத்தைக் கண்டு களிப்புற்றோம். பலதேய வர்த்தமானங்களும் பிறவிஷயங்களும் கற்போர்க்கு மகிழ்வூட்டுமாறு நன்கு எழுதப்பட்டுள்ளன. பத்திராதிபர் மகா-ள-ள-ஸ்ரீ சி. நாகலிங்கம்பிள்ளையவர்கள். நம் நாட்டில் இங்ஙனம் பத்திரிகைகள் தோன்றி வருவது பெரிதும் அநுகூலமே. தமிழர்கள் இதனை வாங்கி ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். யாவரும் சிரமமின்றி வாங்கவேண்டி வருஷத்துக்கு ரூபா ஒன்றரையே இதற்குச் சந்தாவாக ஏற்படுத்தியிருப்பதால் பத்திராதிபரின் உபகாரத் தன்மை பாராட்டற்பாலதே. இதற்கு நீடிய ஆயுசு தந்தருளும்படி ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

பத்திராதிபர்.

சமாசாரக் கோத்து.

இதுவரை ஐரோப்பியாகண்டத்தில் சத்துருவசத்துக்குட்படாத நகரங்கள் லண்டனும் ஸெண்ட்பீடர்ஸ்பர்குமே.

* * * * *

நம் கர்ஸன் பிரபு சமீபத்தில் திரும்பி வந்தவுடன் அவரிடம் வேலையை ஒப்பிவித்து நம் ஆம்டில் பிரபு சென்னை வந்து சேருவார்கள்.

* * * * *

ஆப்பிரிக்காவிலுள்ள ஆல்ஜீரியாவிலிருந்து முதல்தரமான கார்க் வருகிறது. அத்தேசத்தின காடுகளில் 25-இலக்ஷம் ஏகர்களில் இச்சரக்கு உண்டாகிறதாம்.

* * * * *

எழுபதுவருஷத்துக்கொருமுறை ஒரு நடுத்தரமனுஷனுக்கு தாடி 25 அடிநீளமும் தலைமயிர் 50 அடிநீளமும் நகம் 23 அடிநீளமும் வளருமென்று ஒருவர் விநோதவிதமாகக்கணக்கிட்டிருக்கிறார்.

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் நடக்கிற யுத்தம் நாளுக்கு நாள் மும்முரமாகிக்கொண்டு வருகிறது. ஜப்பானியர்களின் ஊக்கம் மிகவும் வியக்கற்பாலது. போர்ட் ஆர்தர் இன்னும் பிடிபடவில்லை.

* * * * *

பெருந்தனிகரான நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் தப்பு தஸ்தவேஜு பண்ணினதாக ரங்கூன் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டு நாளது மீ 24உ விசாரணை நடக்கப்போகிறது. நம் நார்ட்டன் துரையவர்கள் அவருக்கு வக்கீலாகப்போயிருக்கிறார்.

* * * * *

போவர்களுக்குத்தலைவராகிய க்ருகர் என்பவர் இறந்து உலாந்துதேசத்தில் உள்ள ராட்டர்டாமில் புதையுண்டிருக்கார். இப்பொழுது அவர்பிரேதத்தை ஆப்பிரிக்காவுக்குக்கொண்டுபோக ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். சீக்கிரம் அதனைக்கொண்டுபோகும் மரக்கலம் பிரயாணம் புறப்படும். செத்தும் என்ன அபிமானம் பாருங்கள்!

* * * * *

மைசூர்கவர்ன்மெண்டார் ஆயுர்வேதமுறைப்படி சிலவைத்தியர்களைப் பழக்கிவருகிறார்கள் என்பதைக்கேட்கச் சந்தோஷப்படுகிறோம். மைசூர் பட்டணத்தில் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு முனிசிபாலிடியிலிருந்து நன்கொடை கொடுத்து வருகிறார்கள்! இந் நல்மாதிரி பிரிடிஷ் இலாகாவில் ஏற்பட்டால் மிக்க நலமாயிருக்கும். ஏனைச் சுதேச ராஜாங்கங்களிலாவது சுலபமாய் ஏற்படலாம்.

* * * * *

சென்ற அக்டோபர்மீ 23உ தஞ்சை தமிழ்ச்சங்கத்தார் மூன்றும் வருஷமகோற்சவம் கொண்டாடினார்கள். அச்சமயம் மகா-ள-ள ஸ்ரீ குப்புசாமி இராஜு அவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தை வகித்தார்கள். மிஷன் காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதரும் தஞ்சை சூபர்வைஸர் அவர்களும் உபந்நியாசம் எழுதிவாசித்தார்கள். எல்லாம் விமரிசையாய் நடந்தேறியது. இச்சபை நீடூழிவாழும் வண்ணம் பகவான் கிருபை புரிவாராக.

* * * * *

வங்காளத்தில் மட்டும் ஒரு பிராயத்துக்குட்பட்ட கைம்பெண்கள் 48,844 இருக்கிறார்களாம். ஐயோ! பாவம், இவர்கள் கதி என்ன? 7 பிராயத்துக்குமுன் எந்த ஸ்மிருதியும் கல்யாணம் செய்யும்படி கட்டாயப்படுத்தவில்லையே. ஆசார சீர்திருத்தக்காரர்கள் இப்பாலிய விவாகத்தைத் தடுத்

தாலே பெரியகாரியஞ் செய்ததாக எண்ணப்படுவார்கள். அப்படியின்றிச் சர்வஜன சம்மதமில்லாத வழியில் தலையிட்டுக்கொண்டு வீண் முயற்சி செய்து வருகிறார்கள். 7-பிராயங்களுக்கு முன் தங்கள் கன்னிகைகளுக்குக் கல்யாணம் செய்கிற பெற்றோர்களைக் கவரண்மெண்டார் தண்டித்தாலும் உசிதமாயிருக்கும். 12 பிராயத்துக்குள் தம் பெண்களுக்குச் சாந்தி கல்யாணம் பண்ணுவிக்கிற பெற்றோர்களுக்குக் கவரன்மெண்டார் தண்டனை விதித்திருக்கிறார்களே. அதுபோல் இதற்கும் தண்டனை ஏற்படுத்தினாலொழிய இக்கொடிய வழக்கம் நம் நாட்டைவிட்டுத் தொலையாது. பங்காளத்திலும் இராஜபுதானத்திலும் இத்துர் வழக்கம் வேரூன்றியிருக்கிறது. இராஜ புதானத்தில் இதனை நீக்க ஆசார சீர்திருத்த சபையார் வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வங்காளத்துக்கு என்று நற்காலம் உண்டாகுமோ?

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள் பெயராதியவும் அவருதவிய தொகையும்.

1. ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் திருவானைக்கா வரவு ... ரூ 35
2. மகா-ள-ள-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டு இளையான்குடி வரவு. ... ரூ 25
3. மகா-ள-ள-ஸ்ரீ ரங்கசாமி முதலியாரவர்கள் மிராசுதார், கோட்டூர் வரவு ... ரூ 10

* 4. மகா-ள-ள-ஸ்ரீ வீர. லெ. சித. இராமநாதன்செட்டியார் அவர்கள் பாவாலிஜமீந்தார் தேவிகோட்டை வரவு ... ரூ 25

* 5. மகா-ள-ள-ஸ்ரீ பழ. சி. சண்முகம்செட்டியாரவர்கள், முறையூர், சப்டிவிஷன் ஜமீந்தார். ... ரூ 25

* இவர்கள் 1903 வருஷத்திலும் 25 ரூ நன்கொடை கொடுத்தவர்கள் இவ்வருஷத்தும் அவ்வாறே மனமுவந்து கொடுத்தமைக்கு நாம் வந்தனமளிக்கின்றோம்.

* இவ்விரு கனவான்களும், வருஷந்தோறும் இவ்வாறே 25 ரூ கொடுத்துவருவதாக வாக்களித்தமைக்குத் தமிழ் நாட்டார் நன்றி கூறும் கடப்பாடுடையரே.

6. மகா-ள-ள-ஸ்ரீ ராம. மு. விலைதீர்த்தான் செட்டியாரவர்கள் மாதம்பை. சிலோன் வரவு ... ரூ 25
7. மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். பரமசிவக்கவுண்டரவர்கள், உஞ்சனைவகையறா மிட்டா ஜமீந்தார், போக்கம்பாளையம் வரவு ... ரூ 50
8. மகா-ள-ள-ஸ்ரீ அ. பாப்புரெட்டியாரவர்கள், தோளூர் மிட்டாஜமீந்தார், கீரம்பூர், வரவு ... ரூ 35
9. மகா-ள-ள-ஸ்ரீ தண்டி வேலைக்கவுண்டரவர்கள், விட்டம்பாளையம் மிட்டாஜமீந்தார் வரவு ... ரூ 25
10. மகா-ள-ள-ஸ்ரீ பூ. லட்சுமணக்கவுண்டரவர்கள், காளிப்பட்டி வரவு ... ரூ 20
11. மகா-ள-ள-ஸ்ரீ குழந்தைவேலுக்கவுண்டரவர்கள், கோனூர் மிட்டாஜமீந்தார் வரவு ... ரூ 10
12. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சுப்பராயக்கவுண்டரவர்கள் மிட்டாஜமீந்தார் காட்டுப்பாளையம் ... ரூ 10
13. ம-ள-ள-ஸ்ரீ முத்துவெங்கடாசலரெட்டியாரவர்கள், மரூர்ப்பட்டி மிட்டாஜமீந்தார் வரவு ... ரூ 10
14. மகா-ள-ள-ஸ்ரீ சாவடி நாராயணசாமிபிள்ளையவர்கள் யூனியன் சேர்மேன் சடையம். வரவு ... ரூ 10
15. மகா-ள-ள-ஸ்ரீ கனகசபை பிள்ளையவர்கள், 20 நெ. இராமசாமிதெரு, பிளாக்டவுண், சென்னை. வரவு ... ரூ 10
16. மகா-ள-ள-ஸ்ரீ எம். கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள், 48 காட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, சென்னை. வரவு ... ரூ 10
17. மகா-ள-ள-ஸ்ரீ கயிலாசக்கவுண்டரவர்கள், மிட்டா ஜமீந்தார், புதுப்பாளையம். வரவு ... ரூ 25
18. மகா-ள-ள-ஸ்ரீ ஜி. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், மிட்டா ஜமீந்தார், இளம்பள்ளி. வரவு ... ரூ 20
19. மகா-ள-ள-ஸ்ரீ கே. ஆறுமுகக்கவுண்டரவர்கள், பாகூர் மணியம், பாகூர். வரவு ... ரூ 10
20. மகா-ள-ள-ஸ்ரீ பிரசன்னவெங்கட்டராமரெட்டியார் அவர்கள், மிட்டாஜமீந்தார், பில்லூர் எருமைப்பட்டி. வரவு ... ரூ 20

பத்திராதிபர்.

வைத்தியம்.

(முன்தொடர்ச்சி)

அத்திப்பழம்.

சிலருக்குப் பித்தம் அதிகரித்து விட்டு விட்டுத் தலை சுழன்று சிறு மயக்கங்கொண்டு ஒரு வகையான சங்கட முடையவர்களாய் ஒளி நீங்கிய முகத்தோடு இரத்த வாந்தி காணுவதுண்டு. இதனை இரத்தபித்தமென்பர். இரத்தவமனம் அடிக்கடி ஒருவனுக்குண்டாயின் தேகம் விரைவிற் கெடலடையும். இதற்குச் சாதாரணமாய் நம் நாட்டில் பார்க்கிற அத்திப் பழங்களைப் பூச்சியில்லாமலாராய்ந்தெடுத்துவந்து வேளைக்கு 12 பழம் வீதம் நல்ல தேன் சேர்த்துப் பிசைந்து சாப்பிட்டு வரவும். 3, 6, 10 நாளில் அதிபயங்கரமான இரத்தவாந்தியுங் குணமாய் விடும். முதல் முதல் காணும் வாந்திக்கு ஒரு வேளை கொடுத்தாலே நின்று விடும்.

வைத்தியர்க்கு வேண்டும்போது அத்திப்பழம் அகப்படாதாகையால் பழுத்திருக்குங் காலம் பார்த்து மிருதியான பழங்களைச் சேகரித்துலர்த்தி வைத்துக்கொண்டு உபயோகிக்கவேண்டியது. உலர்ந்த பழங்களையுபயோகிப்பதில் முதல் நாளிரவே ஒரு நாளிற்குக் கொடுக்கும் 24 பழத்தைத் தேனிலூரவைத்து மறுநாட் காலை மாலைகளிற் கொடுக்கவும். இவ்வாறு ஊறியதேனில் மறு நாளும் பழங்களை யூறப்போடவேண்டியிருப்பின் தேனை நுரையடங்கக் காய்ச்சிப் பின்னர் பழங்களை யூற வைக்க வேண்டியது.

காமாலைக்கு.

பிரதி தினம் காலை மாலைகளிற் கையாந்தரைக் கொழுந்தாய்ப் பறித்து கொஞ்சம் மிளகும் கூட்டி நன்றாய் மென்று தின்று வரவும். 12 நாள் சாப்பிட்டால் வியாதி குணமாய் விடும். பத்தியம் வெள்ளாட்டுப் பாலில் சாதஞ் சாப்பிடவும். பசும்பாலுமாம், புளி, உப்பு முதலியவை கூடாது. வேண்டுமாயின் வறுத்த உப்புக்கூட்டிப் புசிக்க.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை,
இர்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சிதாலுகா.

உ
குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் ௬ } 1904௵ டிசம்பர்௴ { புத்தகம் 12

வித்தை—VII.

[முன் தொடர்ச்சி]

பெண்களின் கல்வி நம்தேசவழக்கத்துக்கும் நடையுடைபாவனைக்கும் ஒத்திருத்தல்வேண்டுமென்றும் குடும்பப்பிரயோசனத்துக்குவேண்டிய விஷயங்கள் அடங்கியிருத்தல் வேண்டுமென்றும் அன்னியதேசத்து வழக்கங்களைக் கூடியமட்டும் நம்முள் புகவிடாதபடி கண்ணுங்கருத்துமாயிருத்தல் வேண்டுமென்றும் கூறினோம். நம்பெண்களுக்குத் தமிழ் கற்பிப்பதோடு பலர் ஆங்கிலமும் கற்பித்துவருகிறார்கள். பிரதமபாடசாலைகளில் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதால் காலம் வீணாவதைத்தவிர்த்து யாதொருபயனும் உண்டாவதில்லை. தமிழையே நன்கு எழுத வாசிக்கத்தெரியாதபருவத்தில் ஆங்கிலத்தையும் கற்பிப்பதுவீண். ஆண்மக்களைப்போல் நம் பெண்மக்கள்பள்ளிக்கூடங்களில் அதிககாலம் படிப்பதில்லை யாதலால் பிரதமபாடசாலைகளில் பெண்களுக்கு ஆங்கிலமேகற்பித்தல்கூடாது. பாடசாலையில் பெண்கள் கல்விகற்கும் சொற்பகாலத்துக்குள் இன்றியமையாத விஷயங்களைக் கற்பித்தல் பயன் தருமேயொழிய வாழ்நாளில் அதிகப்பயன்படாத விஷயங்களை அரைகுறையாய்க்கற்பித்தல் யாதுபயன்படும். எண்ணல், எழுதல், வாசித்தல் ஆக இம்மூன்றினோடு பெண்கள் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. அவை சிறுவகுப்புகளில் பாட

புஸ்தகங்களிலே இருத்தல் நலம். பெரியவகுப்புகளில் தனித்தனிப்புத்தகரூபங்களாகவே இருந்து கற்பிக்கப்படல்வேண்டும். அவை சௌக்கியநூல், இல்லாண்மை, பாகசாஸ்திரம், குழந்தைவைத்தியம், குடும்பவைத்தியம், பிரசவசாஸ்திரம், பக்திசாஸ்திரம்முதலியன. தையலும், படமெழுதலும், பாட்டும், எவ்வகுப்புப்பெண்களுக்கும் இன்றியமையாதன. இவைகளைச்சரிவரப்போதிப்பதைவிட்டு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதில் காலத்தை வீணாகப்பெண் பாடசாலைகளில் செலவழித்தல் தேசக்ஷேமத்துக்கு விரோதமாகும். இதனால் ஆங்கிலமே கற்பிக்கக்கூடாதென்பது நம்கருத்தன்று. உயர்ந்த அந்தஸ்துள்ள செல்வவான்கள் அக்கல்வி தம் பெண்களுக்கு வேண்டுமென்று நினைத்தால் வீடுகளில் தக்க உபாத்தியாயர்களை வைத்துப் போதிப்பிக்கலாம். உயர்குலப் பெண்கள் ஆங்கிலம் கற்பதற்கு முன் நம் மதத்துக்கும், ஆசாரத்துக்கும் மிக்க பயனைத் தரக்கூடிய சம்ஸ்கிருதத்தைக் கற்றல்நலம். கேரள தேசத்தில் பெண்கள் சம்ஸ்கிருதம் கற்று வருவதே அத்தேசத்து அறிவுக்கு முக்கிய காரணம். நம் தேசக்ஷேமத்தையும் நம் குடும்ப யோக க்ஷேமங்களையும் சீர்தூக்கிப் பார்த்துத் தக்கபடி நம் பெண்களுக்கு நாம் கல்விபயிற்றவேண்டுமேயொழிய ஆங்கிலேயர் பிரீதிக்கும் நன்குமதிப்புக்கும் பொருந்தும் வண்ணம் நம் நடையுடை பாவனைகளை மாற்றல் ஒண்ணாது. பெரிய வகுப்புகளுக்குத் தக்க சுதேச பெண் பாடசாலைகள் ஏற்பட்டு நம் மதாசாரத்துக்கும் மதத்துக்கும் யாதொரு குறைவு வாராதவண்ணம் கற்பிக்கக் கூடிய போதகாசிரியர்களும் அவற்றின் கண் அமைந்து அவை நடைபெறுமானால் நம் செல்வவான்களின் பெண்கள் ஆங்கிலமும் சமஸ்கிருதமும் பாடசாலைகளிற் கற்றுக்கொள்ளலாம். அதுவரை அக்கல்வி வீட்டுப் படிப்பாகவே இருத்தல் நலம். பெண்கள் வாசிக்கத்தக்க புத்தகங்கள் இன்னும் நம் தமிழ்நாட்டில் பல ஏற்படவில்லை. அக்குறைவை நாம் நிவிர்த்திசெய்தல் நம் முதற்கடமையாயிருக்கும். அவர்களுக்கென்று ஏற்படுகிற புத்தகங்கள் எளிய நடையில் அழகாய் எழுதப்

படுவதுடன் நன்றாகவும் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். நம் பரதகண்டம் இவ்விஷயத்தில் இன்னும் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. பெண்களாலே நம் தேசத்தில் மதமும் ஆசாரங்களும் நிலை நிற்கின்றன. பல ஆசார ஈனர்கள் தங்கள் ஸ்திரீகளின் நிமித்தமே ஆசாரங்களைச் சிறிது அனுசரித்து வருவதை எவர்தான் அறியார். அவர்கள் செல்வாக்கு மேலிடாவிடின் நம் ஆசாரங்கள் பல அடியோடே தொலைந்து போயிருக்கும். சில பெருங் குடிகாரர்களும் விசேஷ தினங்களில் தங்கள் மனைவி மக்களுக்காக ஆசாரங்களை அனுசரித்து வருவது நாம் கண்கூடாக் கண்ட விஷயம். ஆகையால் நம் பெண்கள் அறிவை விருத்தி பண்ணுவதில் நாம் பின் வாங்கி நிற்பது சரியன்று. நம் ஸ்திரீகளாலேயே நம் தேசம் பல விஷயங்களில் முன்னுக்கு வரவேண்டியிருப்பதால் அவர்களை அசட்டை செய்தல் சிறிதும் நியாயமாகாது. ஐரோப்பிய ஸ்திரீகளைப் போல் புருஷர்களுடைய சபையில் சென்று அவர்களுடன் யாதொரு வித்தியாசமின்றி உறவாடிக் குதூகுலமாயிருத்தலே பெண் கல்வியின் பயன் என்றும் நாகரீகம் என்றும் சில பட்டதாரிகள் நினைப்பது நம்தேசத்துப் பெண்கல்விக்குப்பிரதிகூலமே ஒழிய அநுகூலமாகாது. பெண்கள் தாமேசபைகூடிக் குதூகுலித்து நம் தேசவழக்கங்களின்படி நடந்துகொண்டால்மட்டுமே நம் பெண்கல்வி யபிவிருத்தியடையும். அந்நியநாட்டு ஆசாரங்களையும் முறைகளையும் யாதொரு யோசனையு மின்றிக் குருட்டுத்தனமாய் அநுசரித்தல் சிறிதும் பயன்படாது. இவ்விஷயத்தில் நாம் நேரே நினைந்து காரியங்களைச்செய்தல் நல்லபயனைத்தருமே ஒழிய உற்சாகத்தால் அவசரப்பட்டுப் பெரியகாரியங்களைக் கெடுத்துவிடுதல் கூடாது. அநாவசியமாய்ப் பணத்தைச்செலவிடலும் தேசக்ஷேமத்துக்குக் குறைவே. பெண்களின் உயர்தரக் கல்வியைப் பற்றி அடுத்தமுறை யெழுதுவோம்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

போஸ்டல் ஸேவிங்ஸ்பாங்கி.

நம் காருண்ய ஆங்கில அரசாட்சியில் நமக்குக்கிடைத்திருக்கும் எண்ணிறந்த நன்மைகளில் தபாலாபீஸால் நாம் அடைந்துவரும் நன்மைக்கிணையாக எதனையுங்கூறமுடியாது. வளர்பிறைபோல அவ்விலாகா விருத்தியாவதும் விருத்தியடைய அடைய ஜனங்களது சௌகரியமும் விருத்தியடைவதும் நாம் நன்கு அறிந்தவிஷயம். "குடியோம்பிக்கொள்ளுமா கொள்வோர்க்குக்காண்டுமே மாநிதியம் வெள்ளத்தின்மேலும்பல' என்ற நம் கவிக்கூற்று இவ்விலாக்காவிஷயத்தில் மிகவும் உண்மையாயிருக்கின்றது. ஸேவிங்ஸ்பாங்கிவிஷயமாய் ஜனங்களுக்குச் செய்திருக்கும் நன்மைகள் பின்வருமாறு.—

போஸ்டாபீஸ் நோட்டீஸ்.

போஸ்டாபீசு மூலமாக பணங்கட்டி கவர்ன்மெண்டு பத்திரம் வாங்குவதற்கு ஏற்பட்டுள்ள விதிகள் பிரகாரம் போஸ்டாபீசு சேவிங்ஸ்பாங்கி (Post Office Savings Bank) யில் பணம் கட்டுபவராகிலும் அல்லது வேறுயாராகிலும், ஒருவருஷத்தில், ரூ 100-க்காவது அல்லது ரூ 1000-க்கு அதிகப்படாமல் எத்தனை நூறு ரூபாய்க்காவது, கவர்ன்மெண்டு பத்திரம் வாங்கலாம். போஸ்டாபீசுமூலமாய் வாங்கப்படக்கூடிய மேற்படி பத்திரத்தின் மொத்தத்தொகையானது ஏககாலத்தில் ரூபாய் 3000-க்கு மேற்படக்கூடாது.

2. 1904௵ ஆகஸ்டு௴ 1௳ முதற்கொண்டு இவ்விதிகளால் உண்டாகிற கட்டுப்பாடுகளைக் குறைப்பதற்கும், பணம் கட்டி கவர்ன்மெண்டு பத்திரங்கள் வாங்க முன்னையைவிட அதிகசௌகரியங்களைத்தந்து அவைகளால் ஜனங்களுக்கு அதிக அநுகூலப்படும்பொருட்டு மேற்படிவிதிகளைச் சீர்திருத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. புதியவிதிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற முக்கியமாறுபாடுகளாவன:—

(1) போஸ்டாபீசுமூலமாய்க் கவர்ன்மெண்டு பத்திரம் வாங்குவதற்கு, விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற அளவுகளுக்கு மேற்படாமல், ரூ 10-க்கு குறையாமல் முழுரூபாய்களாகக் கட்டலாம்.

(2) போஸ்டாபீசு மூலமாக வாங்கப்பட்டுள்ள கவர்ன்மெண்டு பத்திரங்களை வாங்கினதற்காவது, விற்பதற்காவது, பாதுகாப்புக்காவது, பாதுகாப்பினின்றும் கொடுப்பதற்காவது, யாதொருகட்டணமும், கமிஷன் அல்லது எவ்வித தரகும் வசூல்செய்யப்படமாட்டாது.

(3) கம்ட்ரோலர் ஜெனரலின் (OomptrollerGeneral) பாதுகாப்பில் இருக்கும்வரைக்கும் இப்போர்ப்பட்டப் பத்திரங்களுக்கு ஏற்படும் வட்டியின் நிமித்தம் யாதொருவரியும் வசூல் செய்யப்படமாட்டாது.

(4) போஸ்டாபீஸ்மூலமாய் வாங்கக்கூடிய பத்திரத்தின் மொத்தத்தொகை பெரியவனாய் (adult) இருந்தால் ரூ. 5000-வரைக்கும், சின்னவனாய் (minor) இருந்தால் ரூ. 4000-வரைக்கும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது.

3. புது விதிகளைப்பற்றி இன்னும்வேண்டிய விவரங்களை அவ்வவ்விடத்திலுள்ள போஸ்டாபீசுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

ஏ. றூ. பான்ஷா,
சிம்லா, இந்தியாபோஸ்டாபீஸின்,
1904௵ மே௴ 30௳. டைரெக்டர் ஜெனரல்.

பத்திராதிபர்.

* மண்ணுண்ணல்.

இவ்விஷயம் ஆரம்பத்தில் நம்மவரில் பலர்க்கு ஆச்சரியத்தை விளைக்கும். மனிதர் சாதாரணமாக தானியங்களையும், பழங்களையும், காய்கறி இலைகளையும் தின்பதைத்தான் தினமுங்காண்கின்றும். தமது புராணேதிகாசங்களில் முனிவர்கள் காட்டில் வசிப்பதால் சிலகாலம் வரையில் காய் கறி பழங்களையும், மரப்பட்டைகளையும், உலர்ந்த இலைகளையும் புசித்து வந்ததாகவும், இப்படிக் கொஞ்ச நாள் கழித்தபின் வாயு

* From the Madras Mail.

பக்ஷணம் பண்ணி வந்ததாகவும் படித்திருக்கிறோம். எவ்வளவு கடும்பசியிலும் மனிதர் மண்ணைப்புசித்ததாகக் கதைகளிலாவது வேறெங்காவது நாம் கேட்டதேயில்லை. சருகுகளையும், மரப்பட்டைகளையும் தின்றார்களென்பதே நம்மவர் பலர்க்குச் சந்தேகங் கொள்கையாயின் மண் தின்னலாம் என்பது சந்தேகிக்கக்கூடிய விஷயம் என்பதில் தடையென்னை ஆகலின் இந்த அபூர்வ விஷயத்தைப்பற்றிச் சில புதிய விஷயங்களையறிவதில் யாவர்க்கும் விருப்பம் அதிகரிக்குமென்றே துணியலாம்.

மண்ணுண்ணல் என்றால்; மண்ணுக்கு நாம் உட்கொள்ளும் உணவுகளுக்கமைந்துள்ள குணங்கள் அமைந்துள்ளனவா? இதையுண்பதால் பசி நீங்குமா? இதைச் சீரணிப்பிக்குங் கருவிகள் மனிதர்களிடத்துண்டா என்பன போன்ற கேள்விகள் சகசமாக நம்மனத்தின்கண் உண்டாகின்றன.

சென்னைப் பலபொருட்காட்சி சாலைக்கு சென்ற ௵த்தில் சேர்க்கப்பட்ட பொருள்களுள் பிட்டுமண் (உண்ணும் மண்) மாதிரியும் ஒன்று. மைசூரில் ஒரு தோட்டத்திலிருந்து இம்மண் கொண்டுவரப்பட்டது. இம்மண்ணை அங்கே வேலைசெய்யும் கூலியாட்கள் தின்கிறார்களாம். இம்மண் விசேஷமாதுரியமுள்ளதென்றும், ஆனால் இதையுட்கொண்டவர்களில் பல ஸ்திரிகள் தேகத்தில் வீக்கங்கண்டு இறக்க நேர்ந்ததென்றும் தெரிகிறது. மண்ணுண்ணும் வழக்கம் முதலில் இரகசியமாய் அநுஷ்டிக்கப்படுகிறதாம் அநுஷ்டித்தால் அதைத் தடுத்தல் கஷ்ட சாத்தியமாம். மண்ணுண்ணல் மைசூருக்கு மாத்திரம் உரித்தென்றும், நூதனமானதென்றும் கூற இடமில்லை. இவ்வுலகில் பல பாகங்களில் நாம் கவனிக்க முடியாத பண்டைக்காலத்திலிருந்தே யுண்டானதென்று வெளியாகிறது. பலபாகங்களில் இன்னும் இவ்வழக்கம் உண்டு.

மண்ணுண்ணலில் கூட சில ஜாதியார் மண்ணை மட்டும் தனியேயுட்கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் சாதாரண உணவுகளுடன் கலந்துட்கொள்கிறார்கள். இந்தியாவில் சில பாகங்களில் எவ்விடத்து மண்ணாயினும் அதை யுட்கொள்ளும் வழக்கம் சிலரிடத்திலிருக்கிறதாம்.

1877-ம் ௵ பஞ்ச காலத்தில் மைசூரில் ஒரு பிச்சைக்காரன் பாழ்ஞ்சுவரருகே யிருந்துகொண்டு அச்சுவரிலிருக்கிற மண்ணைப் பிட்டு மாவுபோல் வாயில் போட்டுக்கொண்டிருந்ததை தாம் கண்கூடாகக் கண்டதாகவும், அவனிருந்த இடத்துக்கு மிகச் சமீபத்திலேயே சமைத்த உணவு ஏழைகட்கு வழங்கிக்கொண்டிருக்கையில் அவன் மண்ணைப் புசிக்க அவசியம் இன்னதென்பது தமக்குப்புலப்படவில்லை என்றும் ஒருவர் கூறுகிறார்.

ரோமர்கள் சியா (Zea) என்னும் தானியத்துடன் நேபிள்ஸ் அருகிலிருக்கும் ப்யூடியோலை (Puteoli) மலையிலகப்படும் சீமைச் சுண்ணாம்பை (Chalk) கலந்து சமைத்துண்பதுண்டென்று பிளினி (Pliny) என்றவர் கூறியுள்ளார். இவ்வுணவு அவர்களின் உணவு வகைகளிலொன்றாம். சிங்காலிபத் தீவு குடிகளில் உயர்ந்த வகுப்பினர்கள் கூட ஒரு காலத்தில் 6000 ௵ காலம் மண்ணைப்புசித்து வாழ்ந்து வந்தார்களென்று அவர்கள் புராணத்தால் தெரிகிறது. இராசபுதனத்தில் பஞ்சகாலத்தில் ஜெய்ப்பூர் எல்லையிலிருக்கும் பிகனிர்மார்வாரில் அகப்படும் மிருதுவான கல்லைத் தூளாக்கி மரப்பட்டைகளோடு சேர்த்துச் சமைத்து உண்டு வருவதுண்டாம். இக்கல்லைப் பொடியாக்கல் மிக எளிதாம். அதில் எண்ணெய்ப்பசையும், தேகத்தைப் போஷிக்கும் சத்தும் உண்டென்பதும் ¾ பங்கு சாதாரண தானியமாவுடன் ¼ பங்கு கற்பொடியைக் கலந்து சமைத்துண்பதால் உண்பவர்க்கு ஜீரணம் தடைபடுகிறதில்லை யென்பதும் ஒரு ஆங்கில வைத்திய நிபுணரின் அபிப்பிராயம். மேலும் இது மிதமிஞ்சியுட்கொள்ளப்பட்டால் தேகமெலிவையும் குடல் சம்பந்தமான வியாதியையும் பசியின்மைக்குறிகளையும் உண்டாக்குகிறதாம். ஜப்பான்ய பூர்வகுடிகளான காட்டு ஐனுஸ் (Ainas) ஜாதியார் ஒரு விதமான மண்ணை ஒரு செடியின் இலைகளுடன் கலந்தும் அதையே கூழாகக்காய்ச்சியும் உட்கொள்ளும் வழக்கம் இருக்கிறதாம். யச்சோவின் (Yesso) வடக்கில் டிஸ்டோனே (Tistanai) பள்ளத்தாக்கில் இம்மண் அகப்படுமாம். இம்மண் இராஜபுதனத்துக் கல்லைப்போல பசியாற்றப் புசிக்கப்படாமல் அதிலிருக்கும் நல்லசத்துக்காகப் புஜிக்கப்படுகிறதாம். ஐனர்கள் இந்த மண் வெகு சாதாரணமண். இது உணவுப்பொருள்களுள் ஒன்றாயிருப்பதற்கும் அதையுண்பதில் சிலரிடத்துக் காணப்படும் ஆர்வத்திற்கும் காரணம் இன்னதென்றும் அறியக்கூடாமலிருக்கிறது. மேலும் உலகில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பல இடங்களில் பலவகையினரிடத்து இவ்வழக்கம் காணப்படுதலால் எவ்வாறு முதலில் அவ்விடங்களில் உண்டாயிற்றென்பதும் அறியக்கூடவில்லை.

நம் சென்னைராஜதானியில் கூட இவ்வழக்கம் உண்டென்று கூறலாம். சிறுகுழந்தைகள் சில சாம்பலையும் மண்ணையும் வாயிலெடுத்துப்போட்டுக்கொள்கின்றன. சில ஸ்திரீகள் சுவரில் பூசியிருக்கும் பழையசுண்ணாம்பையும், பழையசுவரிலிருந்து உதிரும் மண்ணையும், பழைய செங்கற்பொடிகளையும், சிப்பிகளையும், செம்மண்ணையும் தின்பதுண்டு. நான் சில கர்ப்பஸ்திரீகள் சாம்பலையும், செம்மண்ணையும் தின்பதை பார்த்திருக்கிறேன். நூதனமாக எனக்குத்தோன்றும் ஒரு விஷயத்தை இங்குகூறல் அவசியம் என்று கருதுகிறேன். கோயமுத்தூருக்கு 4-மைல் மேற்கில் பேரூர் என்ற

சிறந்த சிவஸ்தலமிருக்கிறது. இது மேலச்சிதம்பரம் என்றும் அழைக்கப்படும். இந்தக்கிராமத்தில் ஒருவிதமண் இருக்கிறது. அதை பிரம்மகுண்டமண் என்றுகருதிப் பலர் திருநீறுபோல் மேலே பூசிக்கொள்கிறார்கள். இந்த மண்ணை ஒருஸ்திரீ சதாகாலமும் தின்றுகொண்டிருக்கிறாள். அவள் வாயை வெறுவாயாக நான் கண்டதேயில்லை. அம்மண்ணைக்கொண்டுவந்து பானையில் நிரப்பிவைத்திருக்கிறாள். அவள் அதைத்தனியாகவே யுபயோகிக்கிறாள். அது இல்லாமலிருந்தால் பொடிபோடும் சிலர் பொடியில்லாவிடில் எவ்வளவு கஷ்டப்படுவார்களோ அவ்வளவு கஷ்டப்படுகிறாள். இம்மண்ணைப் பற்றி விசேஷமாக எழுத எனக்கிப்பொழுது அவகாசமில்லை. யாராவது இதைப் பரீக்ஷித்து எழுதினால் அவர்கட்கு நன்றி கூறுவேன். இம்மண்ணும் மேற்கூறிய பிட்டுமண் வகையில் ஒன்றாயிருக்கலாமென்று நம்புகிறேன்.

ஸ்வீடன் (Sweeden) வடபாகத்திலிருந்து ஒருவித மண்ணை வண்டி வண்டியாகக் கொண்டுவந்து ரொட்டி செய்து உண்கிறார்களாம். † இந்த இருவகை மண்களிலும் முக்கியமாய்க் கண்ணுக்குத் தெரியாத நுட்பமான சிறு புழுக்களின் மேலோடுகள்தான் இருக்கின்றனவென்றும் அதில் சத்தொன்றும் இருக்க முடியாதென்றும் கூறுகிறார்கள்.

அமெரிக்காவில் ஒரினக்கோ நதி (Orinoco) கரைத்துறைகளில் வசிக்கும் ஜாதியார் அட்டோமேக்ஸ் (Ottomaques) ஒருவிதமான மண்ணை உட்கொள்ளுகிறார்களாம். இவர்களுக்கு மண்ணுண்ணும் வழக்கம் முதலில் வந்தது பஞ்சக் கொடுமையால் போலும். இந்தமண் பிரேஜிலிலும் (Brazil) உண்டு. வடசமுத்திரத் தருகில் வாழும் ஒரு இந்திய ஜாதியாரிடத்து இவ்வழக்க மிருப்பதாக காப்டன் ப்ரேங்களின் (Gahtain-franklin) என்ற யாத்திரி யொருவர் கூறியுள்ளார். அவர் அந்த மண் பால் வாசனையுடன் கூடியிருக்கிறதே யன்றி அதற்கு அரோசிகமாகவாவது துர்க்கந்தமுடைத்தாவது வாசனை யொன்றும் இல்லை யென்கிறார். சில வருஷங்களுக்கு முன் பூமி அதிர்ச்சியினால் பாழாய்ப்போன மார்டினிக்கல் (Mardiniquel) சிவப்பு மஞ்சள் நிறமுள்ள மண்கட்டிகள் பணியாரங்கள் போல் செங்கல் செங்கலாக அறுக்கப்பட்டு கடைகளில் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டனவாம். ஆனால் தற்காலத்தில் அம்மண்ணை உபயோகித்தலில்லை. இத்தீவில் மிகுதியாக மதுரமான பலவகைப் பழங்களும் வேறு உணவுப் பொருள்களு மிருக்கையில் அத்தீவிலுள்ளவர்கள்

† பின்லண்டிலும் (Finland) இது மாதிரியான மண் இதே மாதிரி ரொட்டி செய்து உபயோகபபட்டு வருகிறதாம்.

ஒரு காலத்தில் மண்ணுண்டு வந்தார்களென்று கருத இடமில்லாதிருக்கிறது. அதுவும் விநோதமே.

மண்ணுண்ணலானது ஜாவாவிலிருந்ததுபோல வேறெங்காவது அவ்வளவு அபரிமிதமாயிருந்ததோ என்பதுசந்தேகம். நமக்குத்தெரிந்தவரையில் மண்ணுண்ணலில் ஜாவாவே முதன்மையானது. ஜாவா மண்ணைப்பாகுபடுத்திச் சோதித்துப்பார்த்ததில் அதில் அழிவுபட்டுப் போனமரங்களுடையவும் பிராணிகளுடையவுமான சத்துக்களிருப்பதாகத் தெரியவருகிறது. கினி (Guinea) நீக்ரோவரிடத்துப் பண்டைக்காலந் தொட்டே இவ்வழக்கமுண்டாம். அவர்கள் கப்பலேற்றப்பட்டு மேற்கு இந்திய தீவுகளின் (The West Iudies) தோட்டங்களில் கூலி வேலை செய்யக் கொண்டுவரப்பட்ட காலத்தில் அத்தீவுமண்ணையும் தின்றார்களாம். இம்மண் அவர்கட்கு மயக்கத்தை யுண்டாக்கியதால் கூலி கொடுக்கும் தலைவர்கள் அவர்களிடத்திலிருந்து இவவழக்கத்தை நீக்க மிகவும் பிரயாசை யெடுக்க நேரிட்டதாம். வைனாட்டுக் கூலிகள் மண்ணைப் புசித்துத் தங்களை மாய்த்துக்கொள்வதால் தற்கொலைப் பெரும்பாவத்துக்கு ஆளாகின்றார்கள்.

எம். விஸ்வேஸ்வரன்.

மன ஏகாக்கிரம்.

(முன்தொடர்ச்சி)

ஒருவனுக்குக் கடும் சுரம் உண்டாயிற்று. அநேக டாக்டர்கள்கூடி மருந்து கொடுத்தார்கள். நாளுக்கு நாள் சுரம் அதிகப்படவே எல்லாரும் போய்விட்டார்கள். கடைசியாக ஒரு டாக்டர்வந்து வேண்டிய ஔடதங்கள் கொடுத்தும்யாதொரு குணமும் காணப்படவில்லை. முடிவில் டாக்டர் வியாதியஸ்தன் மறுநாள் நிச்சயமாக இறந்துபோவானென் றிருந்தபொழுது, ரோகியானவன் டாக்டரைப் பார்த்து "ஐயா, எனக்குப் பன்றிக் கறியும், அவரைக்காயும் வேண்டும்போ லிருக்கின்றன. அவைகளை நான் சாப்பிடலாமா"? என்று கேட்டான். அதற்கு டாக்டர் "இவன் என்ன இப்படிக் கேட்கி

றான். நாம் இன்று கொடுத்த மருந்தில் ஒருவேளை குணம் வாராதாவென்று இருக்கிறோமே" என்று மனத்தில் நினைத்துக் கொண்டு, ரோகியைப் பார்த்து "என்னடா! பைத்தியக்காரனாக இருக்கிறாய். சுரம் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. உனக்குப் பன்றிக்கறி தின்ன வேண்டுமோ?" என்று கோபத்துடன் சொல்லிவிட்டு வீட்டிலுள்ள மற்றவர்களிடத்திலும் அவன் கேட்டாலும் கொடுக்கப்படாதென்று ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விட்டார். டாக்டர் போன பிறகு வியாதியஸ்தன் எவ்வளவோ கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டும் வீட்டிலுள்ளார் யாரும் 'கொடுக்கமாட்டோ'மென்று மறுதலித்துவிட்டதும் தவிர கீழ் வீட்டிலிருந்த பன்றிக்கறியையும் அவரைக்காய்களையும் மேல்மெத்தையிற் கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டார்கள். ரோகியோ இராத்திரியில் எல்லாரும் உறங்கின பிறகு, பன்றிக்கறியிலும் அவரைக்காயிலும் உள்ள அவாவினால் எழுந்து நடக்கும் சக்தி வந்தவனாய், கீழ் நிலையெங்கும் அவற்றைத்தேடிக் காணாமல், மேல் மெத்தையிலேறி அங்கிருந்த பன்றிக்கறி அவரைக்காய் முழுவதையும் தீர்த்துவிட்டு, கீழேயிறங்கி வந்து தன் படுக்கையிற் போய் சற்று நேரத்துக்கெல்லாம் நல்ல நித்திரை வந்தவனாய் உறங்கினவன் மறுநாள் தான் டாக்டர் வந்ததும் துயில் நீங்கினான். அவர் ரோகியின் முகத்தைச் சற்று உற்று நோக்கிவிட்டு நாடியைப் பரிசோதித்தார். நாடியைப் பரிசோதித்ததும் சுரம் முற்றிலும் விடவில்லையென்றறிந்தாலும் முக்கால் பங்கு குணம் கண்டிருப்பதையும் பதினைந்து நாள் வரை உறக்கமில்லாதிருந்தவன் அன்று உறங்கிக்கிடந்திருந்ததையும் நினைத்து ஆச்சரியப்பட்டவராய், வீட்டிலுள்ளாரைப் பார்த்து "என்ன? இவருக்கு நேற்று நான் போனபிறகு ஏதாவது மருந்து கொடுத்தீர்களா? என்ன சங்கதி? திடீரென்று வியாதி அரைவாசி குணத்துக்கு வந்திருக்கிறதே. இன்று இவர் இறந்து போவார் என்றல்லவோ நான் எண்ணியிருந்தேன்." என்று சொல்ல அவர்களெல்லோரும் திகைத்து டாக்டரைப் பார்த்து "நாங்கள் ஒரு மருந்தும் கொடுக்கவில்லையே" என்றார்கள். உடனே

டாக்டர் ரோகியைப் பார்த்து "என்னய்யா? என்ன நடந்தது? நீர் என்ன செய்தீர்" என்று கேட்டார். அதற்கு வியாதியஸ்தன் "ஐயா நான் ஒன்றும் செய்யவில்லை. எனக்குப் பன்றிக்கறியிலும் அவரைக்காயிலும் இருந்த பிரியத்தினால் தாங்கள் சொன்னதையும் கவனியாமல் மேல் வீட்டிலிருந்ததைத் திருடித்தின்று விட்டேன். தின்றுவிட்டு வந்து படுத்ததும் நன்றாக நித்திரை செய்தேன். வேறொன்றும் அறியேன். ஆனால் இப்போது எனக்கு சுரம் போய்விட்டது போலவே அவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறது" என்று சொன்னான். அது கேட்ட டாக்டர் மிகவும் ஆச்சரியமடைந்து மேலும் அவைகளையே ஆகாரத்தோடு சேர்த்தால் போதுமானது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

சில நாள் சென்ற பிறகு வேறொருவனுக்கும் அதேமாதிரி சுரம் வந்து கஷ்டப்படுங்கால் இதே டாக்டர் சிகிச்சை செய்யப் போகும்படி நேரிட்டது. அந்த மாதிரி சுரம் முன் பன்றிக்கறியாலும் அவரைக்காயாலும் நிவர்த்தியாயிருப்பதை நல்ல ஞாபகத்தில் வைத்திருந்த டாக்டர் "ஓ! ஹோ! இந்த சுரம் தானா? இது நிமிஷம் போய் விடும். மருந்து வேண்டுவதில்லை. பன்றிக்கறியும் அவரைக்காயும் கொடுங்கள் போதுமானது" என்று சொன்னார். அதைக் கேட்ட ரோகி டாக்டரைப்பார்த்து "ஐயா, எனக்கு அவைகள் இரண்டும் பிடிக்கிறதே யில்லையே. அவைகளை நினைக்கும் போதே எனக்கு வாந்தி வருகிறதே" என்று சொன்னான். அதற்கு டாக்டர் "நீர் அவ்விதம் சொல்லக்கூடாது. அவைகளை மருந்தென்று எண்ணிக்கொள்ளும்" என்று சொல்லிவிட்டு வீட்டிலுள்ள மற்றவர்களிடம் எவ்விதமும் அவ்விரண்டு ஆகாரங்களையும் கொடுத்துவிடவேண்டும். நான் சாயங்காலம் வருவேன் என்று சொல்லிப் போனார். இவ்விதமாக இரண்டு தினம் அவைகளைக் கொடுக்கவே மூன்றாம் நாள் டாக்டர் வந்து பார்க்குமுன் உயிர் துறந்தனன்.

இதினின்றும் நாம் கிரகிப்பதுயாதெனில் சரீரத்துக்குப் பொருந்துவனவும் பொருந்தாதனவும் அவ்வச் சரீரத்தின்

இயற்கைக்கே நன்கு விளங்கத்தக்கது. முதல் ரோகியின் சரீர அணுக்களில் பன்றியினுடையவும் அவரையினுடையவும் அம்ச அணுக்களின் குறைவே ரோகமாக இருந்திருக்கின்றது. ஆகையால் அவ்வணுக்கள் சென்றவுடன் சரீரம் எதாநிலையையடைந்தது. இரண்டாவது ரோகிக்கு அங்ஙனமன்று. அவன் இயற்கை அவற்றைவேண்டவில்லை. ஆனால் டாக்டருடைய புத்திசாலித்தனம் அவனுடையமரணத்துக்கு ஏதுவாகயிருந்தது. அங்ஙனமாயின் இயற்கையின் தேவையை எங்ஙனம் அறிதல்? எனின், அது சற்றுப்பிரயாசையானகாரியமென்றே கூறலாம். ஆயினும் முன்தின்றுள்ள பதார்த்தங்களில் உள்ள ஆசையினாலோ, கண்ணினால் பார்த்தபொழுதோ காதினால் கேட்டபொழுதோ மூக்கினால் முகர்ந்தபொழுதோ நாக்கினால் ருசித்தபொழுதோ மெய்யினால் பரிசித்தபொழுதோ உண்டாகும் ஆசையினாலோ எழாததாய் மனத்தினின்றும் தானே எழுவதாயுள்ள பசி, தாகம்முதலியவைகளை இயற்கையின் கட்டளையாலுண்டாவனவெனக்கூறலாம். பசி, தாகம் இல்லாமலிருக்கும்பொழுதும் மற்றொருவன் வேண்டுகோளுக்காக சாப்பிடவும், பானம் செய்யவும் செய்கிறான். இவ்விதமெல்லாம் இயற்கையை மீறுவதால்தான் ரோகத்துக்குள்ளாகவேண்டியிருக்கின்றது. ரோகத்துக்கு மருந்துசொல்லப்புகுந்த திருவள்ளுவரும்

"அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

என்றார், அதனாலே ஒவ்வொருவரும் தத்தமக்குரிய உணவு தெரிந்தெடுத்தலும் அதனையுட்கொள்ளவேண்டிய சமயம் உணர்தலும் வைத்தியரோடு கேட்டல்லவென்பதும் தன் இயற்கையறிவோடு கலந்து தான் இருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றனவன்றோ? இனி ஆகாரத்தின் அளவைப்பற்றி விசாரித்தால் அதுவும் சரீரபேதத்தால் மாறுபடுவதாயிருக்கின்றது. அவ்விஷயத்திலும் தத்தம் சுபாவத்தோடு கலந்துகொள்வதே உசிதம்.

[இன்னும் வரும்]

வள்ளிநாயகம்.

செந்துருக்கை

இந்தச்செடி பல்லாரியிலும் திருநெல்வேலியிலும் ஏராளமாக விளைவிக்கப்படுகிறது. இதில் முள் அதிகம் உண்டு; ஆனதுபற்றி இது பல்லாரியில் மற்றப்பயிருக்கு வேலிபோலுதவுகிறது. மேல்வாயில் பல் அமைக்கப்பட்ட கழுதை குதிரை தவிர மற்ற மிருகங்கள் இதை மேய்வதில்லை. சில இடங்களில் முள்ளற்ற வகை ஒன்றிருப்பதாகவும் தெரிகின்றது. இவ்விரண்டிடங்களிலும் இச்செடியில் கிடைக்கும் விதையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். பல்லாரியில் இந்த எண்ணெய் பலகாரங்கள் செய்ய உதவுகின்றது. திருநெல்வேலியில் இது விளக்குக்கு மட்டும் உதவுகிறதாம். பல்லாரியில் கிடைக்கும் எண்ணெய் நெய்போலிருக்க, திருநெல்வேலியில் கிடைப்பது அழுக்கடைந்திருப்பதற்குக் காரணமென்னவெனில் பல்லாரியில் இவ் விதையின்மேலுள்ள உமியை யந்திரக் கல்லினால் பிரித்துப் பருப்பைத் தனியாகச் செக்கிலிட்டு ஆட்டுகிறார்கள். திருநெல்வேலியிலோ இவ்வாறு உமியைப் பிரிக்கச் சாதனமில்லையாதலால் உமியுடனே செக்கில் ஆட்டுகிறார்கள். ஆனதால் இந்த எண்ணெய் அழுக்கடைந்திருக்கிறது. திருநெல்வேலியார் இந்த யந்திரக் கல்லைப் பார்த்து இவ்வாறு உமியைப் பிரிக்கிறதைக் கற்றுக்கொண்டு அவர்கள் ஜில்லாவில் விருத்தியடைவது அவசியமான காரியம். இது சாதாரணமாய்க் கரிசலில் அக்டோபர்மீ விதைக்கப்படும். திரிசிரபுரம், மதுரை ஜில்லாக் கரிசல் நிலங்களிலும் இது பயிராகும். தஞ்சாவூர்ச் சில்லாவிலும் பரீக்ஷை பார்க்கலாம். தஞ்சையில் வளர்ந்து பூத்தால் அதிகலாபமுண்டு. ஏனெனில் இங்கு பட்டுச் சாயவேலை அதிகம் நடக்கிறது. இதன் புஷ்பம் சாயத்துக்கு வெகு நாணயமானது. இதற்குக் குசும்பா என்று பெயர்.

இது வங்காளத்தில் அதிகமாவுண்டு. கான்பூர், பஞ்சாப், குஜராத், ஸிண்டு, பர்மா முதலிய இடங்களில் வளர்ந்து சாயத்துக்கே விசேஷமாயுதவுகின்றது. நீலச்சாயம்போல் ஐரோப்பியர் தாரிலிருந்து செய்யும் பலவகைச்சாயங்களில் இந்தச்சாயத்தைப்போல் அவர்கள் செய்யமுடியவில்லை. இது லாங்காஷைரில் (Lancashire) அதிகமாயுபயோகமாகிறது. சாயம் ஏற்றுவதற்கு சீனா, ஜப்பான், சிங்கப்பூர் தீவுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிறத்தில் லக்ஷ்மீகரம் உண்டென்று வங்காளத்தார்கள் சுபகாரியங்களுக்குக் கோடித்துணிகளை இச்சாயத்தில்தான் தோய்ப்பார்கள். ஆகையால் உள்ளூரிலேயே இதற்கு அதிகமதிப்பு இருக்கிறது. இச்சாயம் கிடைக்காத தமிழ்நாட்டில் சுபகாரியங்கட்குக் கோடித்துணிகளை மஞ்சளில் நனைக்கும் வழக்கம் வந்திருக்கலாம்.

இது பிப்பிரவரி மார்ச்சுமாதங்களில் புஷ்பிக்கும். இரண்டு மூன்றுநாளுக்கொருதரம் மஞ்சளுஞ்சிவப்புமாயுள்ள பூவிதழ்களைக் கையாலெடுத்துச்சேர்ப்பார்கள். விடியற்காலமே பூவிதழ்களைச்சேர்த்து நிழலில் உலர்த்துவார்கள். சாயங்காலத்தில் இவ்விதழ்களைப் பட்டும்படாதபடி உலக்கையால் குற்றி வடையாகச்செய்து உலர்வதற்குச்சுத்தமான நார்க்கட்டிலின்மேல் பரப்புவார்கள். நன்றாய் உலர்ந்தபின்பு சாக்குகளில் சேர்ப்பார்கள்.

இந்தப்பூவிதழ்கள் பஞ்சாப்பில் ஏக்ரா ஒன்றுக்கு 32 ராத்தலும், அம்பாலாவில் 78 ராத்தலும், வங்காளத்தில் 80 ராத்தலும், குஜராத்தில் 113 ராத்தலும், பரோடாவில் 150 ராத்தலும் கிடைப்பதாகவும், ரூபாவுக்கு ஏழு எட்டுராத்தல் உலர்ந்தபூவிதழும் குஜராத்தில் செய்வதுபோல் வடையானால் ரூபாவுக்கு இரண்டு இரண்டரை ராத்தலும் விற்பதாகவும் தெரியவருகிறது.

இவ்விதழைச்சாயத்துக்கு உபயோகிப்பவர்கள் ஒரு துணியில்போட்டு அதன்மேல் ஜலம்விட்டுக்கழுவ எதற்கும் உதவாத ஒருவிதமஞ்சள் சாயம் வெளியேறும். அதுபோனபின்பு மிகுந்த இதழுடன் உழைமண்ணையாவது அச்செடியைச் சுட்ட சாம்பலையாவது கலந்து ஜலம்விட ரக்தச்சாயம் வருகிறது. இந்தச்சாயம் பட்டு, கம்பளம், நூல்முதலியவைகளைத் துவைப்பதற்கு உதவுகிறது. படிக்காரம்முதலிய பலவிதவஸ்துக்களோடு கலந்த ரோஜாச்சாயம் மற்றுமுற்ற ஆகாயவர்ணங்கள் முதலியன உண்டாகின்றன.

இவர்கள் இப்பூவிதழ்களைப்பொறுக்கிக் கொண்டபின்பு காயில் விதையுண்டாகிறது. ஆகையால் இவர்கள் எண்ணெயிலும் சாயத்திலும் இருவிதலாபம் அடைகிறார்கள்.

பல்லாரியில் சாயம் எடுப்பதே தெரியாது. திருநெல்வேலியிலே தெளிவான எண்ணெயெடுக்கத்தெரியாது. விதை ஊறுகாயிற்சேர்ப்பதற்கும் உப்புக் கடலையில் கலப்பதற்கும் உதவுகிறது. இங்கிலாந்தில் இவ்விதைக்கு (Parrot seed) பாரடஸீட என்றுபெயர். இதில் நூற்றுக்கு இருபத்தைந்துமுப்பதுபாகம் தைலமிருக்கிறது. பல்லாரியில் இதன் பிண்ணாக்கு மாட்டுக்கு உதவுகிறது. பொதட்டூரில் உறையுங்குணமுடைய இந்த எண்ணெயை நெய்யுடன் கலந்து சென்னைக்கு அனுப்புகிறார்கள்.

இந்தப்பயிரில் இலாபம் இருக்கிறதென்பது மேற்கூறியவற்றால் வெளிப்படுகின்றது. சாத்தியமான இடங்களில் இதைவிளைவிப்பது அவசியம். இதுவரையிலும் இது பனிகாலத்தில் கரிசல்காடுகளில் புன்செய்ப்பயிராக விளைந்துவருகின்றது. வங்காளம், பஞ்சாப், பர்மாநாடுகளிலும் இது வளர்கிறதென்று தெரிகிறபடியால் தென்னாட்டுப்பெண்ணை, காவிரி, வைகை, தாமிரபரணி ஆற்றுப்பாய்ச்சல் நிலங்களிலும் பரீக்ஷைசெய்து பார்த்து லாபங்கிடைக்குமானால் விஸ்தாரமாகப்பயிரிடுவது உத்தமம். "மெய்வருந்தக்கூலிதரும்' என்னும் உண்மையை மனத்தில்வைத்து இப்படிப்பட்ட விஷயங்களைச்செய்து பார்த்துப் பிழைக்கக்காலம்வந்திருப்பதும் அனுகூலமேயாகும். இல்லையானால் நாம் நசித்துப்போகவேண்டிவரும். ஏனெனில் மா, பால், வெண்ணெய், பிஸ்கொத், மிட்டாய் முதலியவைகள் ஐரோப்பியநாட்டிலிருந்து வருவதுடன நமக்குவேண்டிய எவ்விதவஸ்துக்களையும் அவர்கள் செய்தனுப்பக்காத்திருக்கிறார்கள். அவ்வாறு நாம் அடைவது நல்லதுதானென்று சிலர் நினைக்கலாம். நம்மிடத்தில்பணம் இருக்குமானால் அவர்கள் நமக்கு உழைப்பது ஒருபொருட்டாகாது. நாம் ஏழைகளாதலால் ஒவ்வொருதொழிலும் அவர்கள் கையிலேற நாம் தினே தினே க்ஷீணிக்கவேண்டி வருமேயொழிய விருத்தியடைய மார்க்கமில்லாமற்போய்விடும். இது சத்தியம் என்பதை நம்நாட்டார் மனங்கொண்டு உய்ய வகைதேடுவார்களாக.

ஜி. ராஜகோபாலநாயுடு.

இன்னிசை இருநூறு.

[முன் தொடர்ச்சி]

19-ம் அதிகாரம் கீழோரியல்பு.

1. இரவு விளக்கங் குருடேந்திச் செல்லின்
வருவோர் வழிவிலங்கு மாறுணர்தி யற்றே
பெரியார் அவைப்புக்குப் பேதைநா ணாமை
தெரியத்தன் றீவாய் திறப்பு.

2. வெள்ளென்பு பெற்றநாய் துண்ட விடக்குறின்
கொள்ளும் கனிகனி கோடியும் வேண்டுமோ
உள்ளதுடன் இம்மி மிகினும் உறுபகீழ்
வெள்ளத் தனைய வியப்பு.

3. வேந்தொடு பொற்சிவிகை மேவி யறுசுவையூண்
மாந்தினும் பல்வீ மறக்குமோ நாய் கீழும்
வேந்தன் எனத்திரு மேவினும் * வெஃகுமே
போர்துபரி தானப் பொருள்.

* விரும்பும்.

4. களைப்பினும் பல்காற் கனல்சுட விட்டில்
விளக்கத்துப் பின்னும் விழுந்துயிர் மாயும்
அளப்பில் துயரத் தழுந்தினுங்கீழ் பின்னுங்
களித்துவிழுங் காமக் கனல்.

5. அருத்துகினும் பாலை அராக்கடு அன்றிக்
குருத்தின் மணிகொடா கொன்றுகொளார் ஆயின்
வருத்திற் பயன்படுங்கீழ் நன்றியற்றின் மாய்க்கும்
கருத்துடையார் நாடல் கடன்.

6. ஒற்றுயிரைச் சாரின் உருத்திரியும் மாத்திரைபோம்
பற்றிய வன்மை முதல படாமன்றே
கற்றூர் அவைச்சாரிற் காட்டும் பலவுருக்கீழ்
பற்றுவிடா வுள்ளதும்போம் பண்பு.

7. இடுகாட்டை நன்கா டெனவிசைத்தும் மச்சொல்
இடுகாடே தன்பொருள் என்றுணர்த்தும் சான்றோர்
வடுவுரையாம் என்றுதம்போல் மாண்பினரொன்றூஉம்
கெடுவுடைமை காட்டிவிடுங் கீழ்.

8. முல்லை குறிஞ்சி முறையிற் றிரிந்துபெயல்
இல்லாமை யாற்பாலை என்னப் படிவமுறும்
வல்லார் செயலும் மனமும் புகழறம்
புல்லர்வேற் புன்மை புகும்.

9. கற்பன கல்லாக் கயவர் கருமங்கள்
நிற்பன அல்ல நினைந்தன செய்வரால்
அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவர்உண்டேல் உண்டாம் சிறிது.

10. வளித்துணை பெற்றக்கால் வன்னிசுடும் அக்கால்
ஒளித்தக்கால் தானும் ஒளியும் கயமை
இளைத்த பொழுதும் ஒளியாதே எல்லாம்
கொளுத்தலின் யாமஞ்சும் கூற்று.

கீழோரியல்பு முற்றிற்று.

20-ம் அதிகாரம் மேல்கீழியல்பு.

1. தலையாயார் ஏனையோர்ச் சாரினும் தங்கள்
நிலையிற் பிரியாரந் நீரவே கீழும்
தலையாயார்ச் சாரிற் றலையாய்க்கீழ் சாரின்
நலமில்கீழ் ஆமே நடு.

2. சீரியர் செம்மை திறம்பார் மிடியினும்
பூரியர் செல்வம் பொருந்தினும் என்பயன்
சீரிற் சிறந்து மிடியிற் சிதையுமே
பாரின் இடையாயார் பண்பு.

3. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்பமேல்
இன்னாவே செய்யும இனியசெய் தார்க்குங்கீழ்
இன்னாத செய்தாக் கிகலாய் இனியசெயும்
இன்னாத செய்யார்க் கிடை.

4. கரும்பொடு கூட்டினும் வேம்பினிமை காட்டா
இரும்புடன் ஒன்றினும் ஏமமியல் குன்றா
கரும்பாம்நீர் வேம்பாம் அவற்றிற் கலப்பின்
விரும்பிடைமேல் கீழுமன்ன வே.

5. தென்றலினும் நுண்பஞ்சு சேட்சென் றலைவுபடும்
என்றும் பெயரா பெருங்காற் றெனினுமலை
ஒன்றிற் சிறுபடரும் ஆற்று றுடையுங்கீழ்
வென்றிடுமேத் துன்பினையு மேல்.

6. காய்த்த விளைநெற் கதிரிறைஞ்சல் காண்டுமால்
கோத்த பதர்கொள் குலைநிமிர்வே கொள்ளுமுல
கேத்தும் அறிஞர்க் கியல்பு பணிவுடைமை
வாய்த்தலிலை பேதை வயின்.

7. இரவியிருள் சீக்கும் புயல்மறைக்கு மேனும்
பெரியார் மிடியினும் பிழை துடைப்ப
திருவுற்ற போழ்துங்காம் உண்ணலுங்கீழ் செய்யா
இருமணிபாம் பெய்தினும் எள்.

8. நன்றொரு கோடி செயினுமவை நாடாமே
ஒன்றுநவை நாடி ஊறு புரிவகீழ்
கொன்றன்ன தீங்குபல செய்யினுங் கொள்ளாமே
நன்றுன்னல் சான்றோர் நடை.

9. உவ்வொடு குற்றுகரம் ஒக்கும் உருவெனினும்
தவ்வென்னும் தன்மைசார் வல்லாறு தாங்காட்டும்
செவ்வியர் போல்வர் சிறியரும் * வல்லாறே
வெவ்வேறு காட்டி விடும்.

* வன்செய்கை.

10. நகையீகை இன்சொலே நாண்செம்மை வாய்மை
பகையுமிக றாமை பணிவொழுக்கம் என்று
இகவாத நார்என ஈரைந்தும் மேல்கொள்
வகைநில்லா கீழோர் வயின்.

மேல் கீழியல்பு முற்றிற்று.

இன்னிசை இருநூறு முடிந்தது.

வேலுமயிலுந்துணை.

அ. சண்முகம்பிள்ளை.

தேனும் தேனீயும்.

[முன் தொடர்ச்சி]

VIII. அரசுமாற்றம்.

"இராணி ஈ இல்லாவிட்டால் கூட்டில் ஈக்கள் இரா" என்று கூறப்பட்டதே. இப்பொழுது இராணி ஈ தன் பிரஜைகளில் பலவற்றுடன் வேற்றிடம் போய்விட்டதே. இனிப் பழைய கூடு காலியாய்த்தானே இருக்கும்?" எனச் சிலர் ஐயமுறலாம். பின் சொல்லப்படும் விஷயங்களால் இச்சந்தேகம் நிவிர்த்தியாகும். தேன் கூட்டில் "அரச மாளிகைகள்" ஆறு இருக்கும் என முன்பு நாம் கூறியது ஞாபகத்தில் இருக்கிறதா? இவ்வரசமாளிகைகள் எதற்காக என்று நினைக்கிறீர்கள்? கப்பல்களில் ஆபத்துகாலத்தில் உதவுமாறு சில ஜீவரக்ஷ ஓடங்கள் (Life boats) எக்காலத்திலும் தயாராய் வைத்திருப்பது போல் வேற்றிடங்களுக்குப் புதுக்குடும்பம் ஸ்தாபிக்கப் போகவேண்டி வருவதனாலோ, அங்ஙனம் போகாமையால் கொட்டிக்கொல்லப் படுவதனாலோ, அல்லது ஆயுள் முடிந்து இறத்தலினாலோ, இராணி ஈ இன்றிக் கூடு காலியாகவிருக்கும் என்று முன்னுக்கு முன்னாலேயே உணர்ந்துகொண்ட சிற்றீக்கள், பின்னால் நேரிடக்கூடிய விபத்தைத் தடுக்குமாறு ஆறு பெண் ஈ முட்டைகளை எடுத்து, பெரும்பெரும் மெழுகறைகளுள் அடைத்து பாகு முதலிய கொடுத்துப் போஷித்துக் கொழுக்க வைத்திருக்கும்.

இராணி ஈ யானது தனது பரிவாரத்துடனும் பிரஜைகளுடனும் புறப்பட்டுப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் பருவம் முதிர்ந்து பக்குவம் அடைந்த இவ் வீக்களில் ஒன்று ஏனைய ஈக்களின் ஆரவாரத்தால் நிகழ்ந்தன யாவும் உணர்ந்து இராஜ மாளிகையினின்றும் இராணியாக விரும்பி வெளிக்கிளம்பும். உடனே சிற்றீக்கள் யாவும் ஆனந்தம் மேலிட்டு இரைந்து அரச வாழ்த்துக்கூறல் போல் உங்கரிக்கும். இதற்கு எளிதில் பட்டம் கிடைத்துவிடுமென எண்ணவேண்டாம். ஏனெனில் இஃதொப்ப ராஜமாளிகைகளில் வளர்ந்த ஏனைய ஈக்களில் ஒன்றற்கு அது பட்டம் பெறுவது பொருமையா யிருக்கும். தவிரவும், தான் அக்கௌரவமும் பட்டமும் பெறவேண்டுமென்று அது விரும்பும். ஆதலின் இது அதனை முற்றும் ஒழித்துவிட எண்ணி ஒரே பாய்ச்சலாய்த் தன் எதிரியின் பேரில் பாயும். அப்பொழுது அவ்விரண்டிற்கும் நடக்கும் போரை கம்பர் வில்லிபோன்ற கவிராயர்கள் அல்லவோ இருந்து வர்ணிக்க வேண்டும்.

"தத்தியும் தோளும் தோளும் தாக்கியும் சென்னிகொண்டு
மொத்தியும் பற்பல் சாரி முடுக்கியும் வயிரக்கையாற்
குத்தியும் காலும் காலும் கோத்தும்மற் கூறுதோன்ற
ஒத்தியும் பாறைஎன்ன *உரனுடன் உரங்கள்சேர்த்தும்"

வெகு நேரம் சண்டை செய்யும்.

செய்த சண்டையால் இவ்விரண்டும் களைத்துத் திகில் அடைந்து பின்னிட ஆரம்பிக்கும். இச் சமயத்தில் இதுகாறும் உங்கரித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிற்றீக்கள் சும்மா இராமல் ஓர் பேர் இரைச்சல் எழுப்பும். தக்ஷணமே சில சிற்றீக்கள் கூட்டத்தினின்றும் வெளிக்கிளம்பி தப்பி யோடும் பெண்ணீக்கள் மேல் பாய்ந்து அவை பின்னிடுவதை நிறுத்த ஆரம்பிக்கும். உடனே இவ்விரண்டிற்கும் என்றுமில்லாக் கோபம் ஜனித்துவிடும். ஆனால் இவை தம் கோபத்தைச் சிற்றீக்கள் பேரில் செலுத்துவதற்குப் பதிலாக ஒன்று மற்றொன்றையே பரஸ்பரம் எதிர்த்துத் தாக்கும். முடிவில், இவ்விரண்டினுள் அதிபலசாலியாய் உள்ளது மற்றதன் சிறகினைப்பற்றிக் கவ்விப்பிடுங்கிப் பாதுகாப்பு எதுவுமின்றி இருக்கும் அதன் சரீரத்தில் அதி உக்கிரத்துடன் கொட்டும். இக் கொட்டினால் எதிரி மரண வேதனைப்பட்டு மாண்டுபோம்.

பின்னர் ஜயங்கொண்ட இவ்வீயானது எஞ்சியராஜமாளிகைகள் நான்கினிலும் புகுந்து யோசனையற்று மெய்மறந்து நித்திரைசெய்து கொண்டிருக்கும் பக்குவமடையாக்குஞ்சு ஈக்களையெல்லாம் ஒவ்வொன்றாய்க் கொட்டிக்கொன்று அவற்றின் அறைகளையும் சின்னாபின்னமாக்கிவிடும். இது இப்படி அடுதொழில் புரிவது, இவை எப்போதேனும் தனக்கு எதிரிகளாய் வரக்கூடுமென்ற அசூயையினாலும் அச்சத்தினாலுமே. இதன் குரூரச்செய்கை சிற்றீக்களுக்கு மனவருத்தம் உண்டுபண்ணும் என்று நினைக்கிறீர்களோ? சிற்றீக்களுக்கு இதனால் சந்தோஷமேபிறக்கும். இதன் வீரத்தனத்திற்குத்தாம் மெச்சியதாக ஓர்வகைச் சந்தோஷ பேரிரைச்சலால் அறிவிக்கும். பின்னர் இது ஈக்களால் அரசியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ராஜ்யபாரம் வகிக்கும். பழைய இராணிக்கு எவ்வளவுமரியாதை நடந்ததோ அவ்வளவு மரியாதை இதற்கும் நடக்கும். இதன் கடமையும் வாழ்வும் பழைய இராணியைப்போலவேதான். நிற்க. இப்பொழுது ஒரு இராணி கிடைத்துவிட்டதால் கூடு காலியாகக்காரணமில்லையே. ஆதலால் இராணி ஈ இல்லாவிடில் கூடுகாலிதான் என்று கொள்ளவேண்டுமேயன்றி இன்ன இராணி ஈ இல்லாவிடில் காலியாய்விடும் என்று நினைத்துவிடக்கூடாது.

* உரன்—மார்பு.

IX. சிற்றீக்களால் இராணி ஈ சிருஷ்டிக்கப்படுதல்.

இராஜமாளிகைகள் பல கட்டி எவ்வளவு சிரத்தையுடன் பாதுகாக்கப்பட்டுவரினும் சிலசமயங்களில் ஒரு இராணிகூட இல்லாமற்போகுங்காலம்வரினும் வரும். அப்பொழுது ஈக்கள் என்னசெய்யும்? தங்களில் ஒன்றற்குப் பட்டங்கட்டி அரசுகொடுக்கும் என்று நினைக்கிறீர்களோ? இல்லை இல்லை. ஏனெனில் அரசியின் அதிமுக்கியவேலை முட்டையிடுதல் அன்றோ? சிற்றீக்களோ பெண்தன்மைபோக்கப்பட்டவை ஆதலால் அவை அவ்வேலைக்கு உரித்தானவையல்லவே. பின்னை என்னதான் இவை செய்கின்றனவெனில், தாமாகவே புதிதாய் ஓர் இராணி ஈயை சிருஷ்டிக்கத் தொடங்குகின்றன. இவை எப்படி சிருஷ்டிக்கின்றனவென்றுபார்ப்போம்.

இவை செத்த இராணிக்காக ஒப்பாரிவைத்தழுது துக்கம் காத்து ஓய்ந்தபின்னர், தங்கள் அதிவிசித்திரக்கூட்டின் அறைகளை ஒவ்வொன்றாய் அழித்துக்கலைத்து ஒரு பெண்புழுவைத் தேடிக்கண்டுபிடிக்கமுயலும். இவை இங்ஙனம் செய்வதால் மெய்மறந்து நித்திரைசெய்துகொண்டிருக்கும் புழுக்களிற் சில நசுங்கிச் சாகத்தான் வேண்டிவரும். ஆயினும் புழுக்கூட்டில் அதிகமரணசம்பவம் இராது. ஐந்து அல்லது ஆறுபுழு அழிந்தால் அதிகம். ஏனெனில் சீக்கிரத்தில் இவை நாடும் பெண்புழு ஒன்று தட்டுப்பட்டுவிடும். உடனே காலதாமதஞ்செய்யாது சிற்றீக்களிற் சில அதனைச்சுற்றிலும் உள்ள சிற்றறைகளைப்பிடுங்கி யெறிந்து அதனை ஓர் விசாலித்த ராஜமாளிகையாக்கும். இவ்விராஜமாளிகையில் அது 10 நாள் இருக்கும். இப்பத்துநாளும் அதற்குக்கொடுக்கும் பாகுமுதலிய ராஜஉணவினால் அது பருத்துக்கொழுத்துப் பரிபக்குவம் அடைந்து இராணி ஈயாகி அரசு செலுத்த ஆரம்பித்துவிடும். சிற்றீக்கள் வழக்கம்போல் இவ்விராணியிடத்தில் முறைபிசகாது நடந்துகொள்ளும்.

X அரசியில்லாக் கூட்டிற்கு ஓர் அரசி அளித்தல்.

சில சமயங்களில் சிற்றீக்கள் தம் சொந்த முயற்சியினாலாவது அரசமாளிகையினின்றாவது ஒரு இராணி ஈ கூடப் பெறக்கூடாமற் போகவேண்டி வரும். எங்ஙனமெனில்; நாம் முற்கூறியபடி குறித்த சில தினங்களுக்குள் பக்குவம் அடையக்கூடிய பெண் புழுக்கள் எக்காலத்தும் தயாராய் இருந்து கொண்டிருக்கும் என்பது என்ன நிச்சயம்? அன்றியும், மனிதரால் தேன் கொள்ளப்படும் பொழுது கூட்டில் உள்ள ஈக்கள் பலவிதத்திலும் நாசமுறக்கூடுமே. அங்ஙனம் நாசமுறுவனவற்றுள் இராணி ஈயும் இராஜமாளிகை வாசிகளும் பெண் புழுக்களும் அடங்கு மன்றோ? அப்பொழுது உயிர்க்கஞ்சி ஓடித்தப்பிய ஈக்களின் கதி என்ன?

இவ்விருவகை சம்பவங்களும் நிகழும் காலங்களில் அவை இன்னும் யாதானும் ஓர் கூட்டை நோக்கிச் சென்று அக்கூட்டில் உள்ள ஈக்களுடன் சேர்ந்து வாழ்ந்து காலம் கழிக்கும் என்று எண்ணுகிறீர்களோ? இல்லை. இல்லை. அங்ஙனம் செய்வது சிறிதும் முடியாத காரியம். ஏனெனில் ஒரு கூட்டில் உள்ள ஈக்கள் அதே கூட்டிலுள்ள பிற ஈக்களோடு தான் எவ்வித வித்தியாசமுமின்றி ஒத்து வாழுமே யன்றி அந்நிய கூட்டு ஈக்களைக் கிட்ட வரவொட்டா. அவை வந்து சோந்த மாத்திரத்திலேயே கொட்டுண்டு சாகவேண்டியதுதான். ஆதலின் உயிர்க்கஞ்சி ஓடும் ஈக்கள் என்ன செய்யும்? ஏற்கனவே தேன் கொள்ளப்பட்டதும் காலியாய்க் கிடப்பதுமான ஓர் கூடு சமீபத்தில் தென்பட்டால் அதனுள் போய் அடையும், அல்லது புதுக்கூடுகள் கட்டும் என்று வைத்துக்கொள்வோம். ஆயினுமென்ன? அக்கூட்டில் அவை தங்கமுடியுமோ? ஏனெனில் அதில் மட்டும் இராணி ஈ ஏது? ஆதலின் அவை அங்கிருந்து கிளம்பி வேற்றிடம் தானே செல்ல வேண்டிவரும்.

ஆனால், தேனீ வளர்ப்போர் ஓர் வகைச் சூழ்ச்சியால் அவை தாம் முன்னிருநத கூட்டை விட்டு ஓடாமல் அதிலேயே இருந்து வாழும்படி செய்வர். தேனீ வளர்ப்போர் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே அநேகருக்கு வியப்பும் நகைப்பும் உண்டாகலாம். "தேனீக்களையும் வேணுமெனக்கொண்டு வளர்ப்பவரும் உளரா? அப்படி உளரெனினும் அவற்றை வெகு சிரமப்பட்டாவது கூட்டிற்குள் இருத்தவேண்டுமென்ற அக்கறை ஏன்?" என அநேகர்எண்ணலாம். உண்மையிலேயே ஈக்களை சர்வ ஜாக்கிரதையுடனும் மேற்றிசையோர் போற்றி வளர்த்து வருகின்றனர். அங்ஙனம் அவர்கள் வளர்ப்பது, அவை கிளி, நாய், பூனை முதலிய பிராணிகள்போல் கொஞ்சி விளையாடக்கூடியவை என்பது பற்றி அன்று; பின்னை அவற்றை வளர்த்துப் பல்குவித்துப் பல கூடுகள் உண்டாக்கித்தாமும் மிக்கதேன் பெற்று வியாபாரம் செய்து பெரும் லாபம் அடையக் கருதியே. இவை தம் கூட்டை விட்டு ஓடிப்போய் விடுமாயின், இவர்கள் தேன் பெறுவது எங்ஙனம்? ஆதலின் இவர்கள் தொழில் வீண்தொழிலாகாதோ?

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.
&
Asst. Master A. M. High School, Madura.

அட்டமிப் பிரதக்ஷிண வைபவம்.

முன்னொரு காலத்தில் திருப்பரங்குன்றத்துக்கு நிருதிதிக்கிலிருக்கிற திருமங்கல நகரத்தில் ஆத்திரேய கோத்திரத்துப் பிராமண னொருவனிருந்தான். அவன் வேதநூல் வல்லானே யாயினும் எப்பொழுதும் பரஹிம்ஸை முதலிய பெரும் பாதகமெல்லாந் தனதாகக் கொண்டிருந்தனன். ஆனதால் கொடும்பாவி என்று கூறப்பட்டிருந்தனன். இவ்வாறு இவனிருக்கையில் அவ்வூரில் மற்றொரு வேதியன் கத்தரித் தோட்டம் வளர்த்து அக்காய்களை எல்லாம் கொடும்பாவி தவிர மற்றப் பிராமணர்க்குத் தினமும் கொடுத்து வந்தான். அதனையுண்டு வேதியர் பலரும் மகிழ்ந்து வாழ்ந்தனர். ஒரு நாள் திருக்கோவிலில் சிவ தரிசனைக்கு வந்த கத்தரித்தோட்ட வேதியனைக் கண்ட கொடும்பாவி காரணமின்றிப் பலவாறு நிந்தித்தான். அது பொறாத பிராமணன் பாண்டிய ராஜனிடம் முறையிட்ட அளவில் அரசன் விசாரணை செய்யுங்கால் கொடும்பாவி கூறுவான். கத்தரிக்காய் மாம்ஸத்தை யொப்பது. அதை யுண்பவன் சண்டாளனே அவன் கோவிலுக்குள் வந்தமையால் சம்புரோக்ஷணம் செய்யவேண்டும். ஆனதுபற்றியே யான் நிந்தித்துதைத்தேன் என்றான். அரசன் முதலாயினோர் வியந்தனர். அவ்வேளை அகஸ்திய மகா முநிவர் போந்தனர். சபையோர் யாவரும் எழுந்து துதித்து ஆசனமிட்டு இருப்பித்திருந்தனர் நிகழ்ந்தவை யனைத்துங்கேட்ட முனிவர் பிரான் மொழிந்தருளுகின்றார்.

பஞ்சமேட்டிராசுரனுடைய மைத்துனன் பேரன் வார்த்தாகன் என்பவன் தூயனாகிச் சிவசாதனம் பூண்டு சிவபூசை செய்துகொண்டிருந்தான். ஒருநாள் சிவலிங்க பெருமானுக்கு கவயசிருங்கத்தினாலே ஸ்ரீ ருத்திர மந்திரங்களை யுச்சரித்து அபிஷேகம் செய்யுங்கால் விஷ்ணு மூர்த்தி வந்தனர். வரலும் அவர்க்கு வந்தனை வழிபாடு செய்யாமல் மரம்போலிருந்தமையால் விஷ்ணு மூர்த்தி கோபித்து வார்த்தாகனே நீ கற்ப முடிவு வரையில் செடியாகக் கடவை என்றும் அதன் காயும் உணவுக்குரிய தாகாதுபோகக் கடவதென்றும் சபித்தேகினர்.

சாபமேற்ற வார்த்தாகன் சாபத்தை நீக்கியருளுமாறு சிவபிரானைப் பிரார்த்தித்தான். உடனே சிவபெருமான் காக்ஷிதந்து நீ நம்மை மெய்யன்புடன் பூசித்தமையால் இச் சாபத்துக்கு அஞ்சற்க உனது நாம சம்பந்தமான வார்த்தாக சாகக் கறியானது வேதியர் முதலிய யாவரும் புசித்தற்குரியதும் சுகத்தைப்புரிவதும் ஆகுக. விஷ்ணுவுக்கும் விஷ்ணு பக்தர்

க்கும் உதவாதுபோக. நாம் உனது கதியால் மகிழ்வம். பரான்னம் புசித்த தோஷம் உனது கதியால் நீங்கும். உனது சாகம் முள்ளோடிருப்பில் பிதுர் சிரார்த்தங்கட்கு உரித்தாகுக. நமது பூசையை யுனது கதியின்றிச் செய்தால் அது விஷ்ணு பூசையாமன்றி நமது பூஜையாகாது. என்று திருவாய்மலர்ந்தருளினார்.

ஆதலின் வழுதுணங்காய் கொள்ளத்தக்கதே யென்று கூறிவிட்டு ஸ்ரீ காசிக்கேகினார். உடனேபாண்டியன் கொடும்பாவியை மரணபரியந்தம் சிறையிலிருத்திவிட்டு வேதியனுக்கு வேண்டுவதந்து அரசு செலுத்திவந்தான். கொடும்பாவி சிறைக்களத்தில் வருந்திமாண்டான். இயமதூதர் கொடும்பாவியைக்கொண்டுபோய் நரகத்திலிட்டனர். இயமராஜன் ஆஞ்ஞைப்படி நரகமுற்றகொடும்பாவி சிலகாலம் நரகிலிருந்து திருவாலவாய்க்ஷேத்திரத்தில் மரணமுற்றமையால் நரகத்தை நீங்கி மதுரையின் அக்கினிதிக்கிலே சிந்தாமணிநகரில் தாமந்தஇடையன்குலத்தில் தள்ளுபட்ட ஓரிடையனுக்குப் பிள்ளையாகப் பிறந்து வேதியரைநிந்தித்தல், மதுவுண்டல், புலால்விற்றல் ஆதியபாவச்செயல்களை மேற்கொண்டு நாத்திகனாயிருந்தான். பரமகருணாநிதியாகிய சொக்கலிங்கப்பெருமான் இக்கொடும்பாவிக்கு முத்திகொடுக்கத்திருவுளங்கொண்டு மீனாக்ஷிதேவியைநோக்கி இக்கொடும்பாவி மகாபாதகனேயாயினும் பசுக்களைமேய்த்து வந்தபுண்ணியத்தால் முத்திக்குரியவனாகின்றான். நீ ஒரு பசுவுருவெடுத்து அவன் வயலிற்பயிரைமேய்வதுபோற்காட்டினால் அவன் துரத்தவருவான், நீ ஓட்டம்பிடித்தால் அவனும் ஓடி உனது வாலைப்பற்றிவருவான், நீ மதுரையம்பதிக் கோட்டைவீதிமுதல் ஐந்துவீதியையும் வலமாகச்சுற்றியோடி ஆடிவீதியில் நமது சந்நிதியிலிருக்கிற இடபத்தின் பின்புறம் தள்ளிவிட்டுப் பசுவுருமறைத்து நமதருகேயடைக என்று கட்டளையிட்டருளினார். தேவி அங்ஙனம் செய்ய விழுந்தகொடும்பாவி ஸ்தூலதேகத்தைவிட்டுச் சூக்குமதேகத்தோடு விமானமேறித் தேவர்கள்போற்றச்சென்றான். சோமசுந்தரக்கடவுள் இடபாரூடராய்த் தோன்றி ஏ கோபாலா நீ எப்பொழுதும் நம்முடன் கயிலாசத்திலிருக்கக்கடவாயென்றருளி உனக்கு முத்திகொடுத்ததினமாகிய மார்கழிமீ கிருஷ்ணபக்ஷ அஷ்டமிதிதியிலே யாவராயினும் பொற்றாமரைத்தடம்படிந்து சூரியோதயகாலத்தில் கிழக்குமுகமாவிருந்து செபஞ்செய்து மனசினாலே எம்மைத்தியானஞ்செய்து காயத்தாலே தைவீதி, மாசிவீதி, ஆவணிவீதி, சித்திரைவீதி, ஆடிவீதி, முதற்பிரகாரம், இரண்டாம்பிரகாரம் இவற்றை முறையேவலஞ்செய்து சித்திவிநாயகர், முருகர், மீனாக்ஷி, சொக்கலிங்கதரிசனைசெய்து வலம்வந்து பள்ளியறைக் காமேஸ்வரியம்மையையும் மனசினாலே தியானஞ்செய்து சுவாமிசந்நிதிக்குப்போய் துவஜஸ்தம்பத்துக்கு ஈசானதிக்கிலிருக்கிற நடராஜதரிசனைசெய்து வெள்ளியம்பலத்தையும் வணங்கி மற்றமூர்த்தி

களையும் முறையேதொழுது வெளிவந்து வடதிக்கைநோக்கியிருந்து பதினொருதரம் ஸ்ரீ ருத்திரமந்திரஜபஞ் செய்து பஞ்சாக்ஷரஜபமுஞ் செய்து தத்தம் கிருகமடைந்து இயன்றவரை நெய், தேன் முதலியவற்றோடு பிராமணபோஜனஞ்செய்வித்துச் சேஷத்தைப்புசித்து ஆசீர்வாதம்பெறக்கடவர்.

ஆகையால் புத்திமுத்திகளை யடைய விரும்புவோர் வருஷந்தோறும் இங்ஙனஞ் செய்யக்கடவர். மார்கழிமீ அபரபக்ஷ அட்டமி திதியில் எவ்விடத்திருப்பினும் அவ்விடத்துள்ள சிவாலயத்திலே மீனாக்ஷி சுந்தரேஸ்வரரைத் தியானித்து எழுவீதி வலம் வரவேண்டும். எழுவீதியின்றேல் இருக்கிறவீதியில் எழுதரம் வலம் வரவேண்டும். சிவாலய மில்லாவிடில் வில்வ விருக்ஷத்தை எழுதரம் வலம் வரவேண்டும். வலம் வரும்போது எறும்புக் குழிகட்கு அரிசியிடல்வேண்டும். அவ்வரிசியிடுபவன் இலக்ஷப் பிராமண போசனஞ் செய்வித்த பலனை யடைவான். இவ்வாறு அட்டமிப் பிரதக்ஷணம் செய்வதால் ஒரு அடிக்கு ஒரு அசுவமேதயாக பலனுண்டாகும். இவ்வாறு செய்பவர் யாவராயினும் முத்திபெறுதல் நிச்சயம். எழுவீதி வலஞ்செய்ய முடியாதவர் ஆடிவீதியையே எழு முறை வலஞ்செய்தால் முழுப்பலனை யடைவர். ஸ்ரீருத்திர பாராயணம் ஒரு முறை செய்யினும் பதினொருமுறை செய்த பலனுண்டு. பஞ்சாக்ஷரம் நூற்றெட்டுரு ஜபித்தால் ஆயிரத்தெட்டுரு ஜபித்த பலனுண்டு. சிவபத்தியுடைய வேதியர் பதினொருவர்க்காவது சைவசந்யாசி யொருவர்க்காவது அன்புடன் அன்னமிட்டால் பெரும்பயனுண்டு. இவ்வாறு சுந்தரேஸ்வரர் மீனாக்ஷி தேவியார்க்கு அருளிச்செய்து தேவியாரோடு அந்தர்த்தானமாயினார்.

இதன் பெருமை கந்தபுராணத்திலே பிரம சங்கிதையிலே முப்பத்துநான்காம் அத்தியாயத்திலே குரு கீதையிலே விரிவாய்க் கூறப்பட்டுளது.

அன்று நடக்கும் லீலையின் விபரம்.

காலை 5-மணிக்கு மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்கள் இடபாரூடராய் ஆலயத்தினின்று புறப்பட்டுப் பெரிய கடை வீதிக்குச்சென்று அவண் செவந்திப்பூவினால் நிருமாணம் செய்யப்பட்ட இரதத்தில் ஆரோகணித்து தைவீதியாகிய கோட்டைவீதிப் பிரதக்ஷணம் வருதல். பின்பு கோவில் மீனாக்ஷி நாயக்கர் மண்டபத்தில் எழுந்தருளியிருந்து பூஜை யேற்றுக் கொடும்பாவிக்கு முத்தி கொடுத்தருளுதல். இது மிகவும் அற்புதக் காட்சி. அன்பர்கள் யாவரும் தரிசித்துத் திருவருட் பேறு பெறுவராக. சுபம்.

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

ஓஷதி சாஸ்திரம்.

(84-ம்பக்கத்தொடர்ச்சி)

இந்த உண்மையை உணர்ந்து நம் முன்னோர்கள் விரதாதிகள் உபவாஸங்கள் தீர்த்தயாத்திரைகள் முதலானவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளை நடத்தும் காலத்தில் உணவு விஷயத்தில் அநேக வரமபுகள் விதித்திருக்கின்றமையால் மற்றையக்காலத்தைப்போல அதிக போஜனம் கொள்வதற்கு சௌகரியப்படமாட்டாது. இக்கருத்தையே ஔவையாரும "உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்ற வசனத்தில அமைத்திருக்கிறாரென்று சொல்லலாம். இங்கு 'அழகு' என்பதற்கு மேம்பாடு அல்லது சம்பத்து என்பது பொருள். இவ்விதம் சொன்னதினால் விரதாதிகள் முதலியன அநுஷ்டிப்பதின் பயனை ஈசுவரப்பிரசாதம் லபிக்கவில்லை என்றாவது அதன் காரியமாகப்புத்திர உற்பத்தி உண்டாகவில்லை என்றாவது சொல்லவந்தேனல்லேன். ஒரு காரியத்துக்குப் பலகாரணங்களிருக்கின்றன. ஆகையால் மேற்கண்டபடி ஸ்தூல திரவியங்களின் அமைப்பின் தர்ம ரீதியான ஒரு காரணமும் இருக்கலாமென்று தெரிவிக்கலானேன். அனேகமாய் ஏழைகள்வீட்ருக் ஆண்பிள்ளைகள் அதிகமாய்ப் பிறக்கின்றன. கிராமங்க கடக ஸ்திரீகளுக்கு அதிக வேலையிருப்பதால் ஆண்குழந்தைகளும், பட்டணங்களில் ஸ்திரீகளுக்கு வேலைகுறைவாக இருப்பதால் ஸ்திரீ பிரஜைகள் கிராமத்திலும் அதிகமாகவும் பிறக்கின்றனவென்பது ஜனகணிதத்தால் தெரியவருகின்றது. இதுநிற்க.

ஆண்பெண்சத்துக்கள் வெவ்வேறு புஷ்பங்களிலும் அல்லது வெவ்வேறு தனித்தனியான செடிகளிலும் இருத்தலினால் என்னபலன் உண்டாகிறதென்றும் அதனால் நாம் கற்கவேண்டிய கற்பனை இன்னதென்றும் இனி விவரித்துப்பேசுவோம். சுக்கில சோணிதங்கள் ஒரே புஷ்பத்தின்கண் அமைந்து அவை ஐக்கியம் நேரிடும்படியான சௌகரியங்கள் இருக்கும்பக்ஷத்தி

அவைகளின் வித்துக்கள் அவ்வளவுவீரியம் உடையவைகளாக இருக்கமாட்டா என்று சாஸ்திரபண்டிதராகிய டார்வின் என்பவர் சொல்லியிருக்கிறார். ஈசுவரசிருஷ்டியில் ஒரேபுஷ்பத்தில் சுக்கில சோணிதங்கள் இருப்பதிலும் அவைகள் சேராமலிருக்கும்படியாக எத்தனையோ தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சுக்கிலசத்து பக்குவமாகும் சமயத்தில் சோணித சத்து அபக்குவமாயிருந்து இரண்டுக்கும் சம்ஸர்க்கமில்லாமல் போகிறது. அப்போது பக்குவமாயிருக்கின்ற பூந்தாதுகள் றாலும் வண்டுகளின் உதவியாலும் பக்குவமாயிருக்கும் ணித சத்து அமைந்த புஷ்பங்களில் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கப்படுகின்றன. ஒரு செடியிலிருக்கின்ற சுக்கில சத்துருபமான பூந்தாதுகள் மற்றொரு செடியிலிருக்கின்ற சோணித சத்துடன் சம்ஸர்க்கம் நேரிட்டு அதனால் பலிக்கும் வித்துக்கள் உறுதியாகவும் அழுத்தமாகவும் இருக்கின்றன என் மேற்படி பண்டிதர் பல உதாரணங்களைக்கொண்டு ஸ்தாபித் இருக்கின்றார். பூரணமாய்ப் புஷ்பித்திருக்கும் நெல் முதலிய னியப்பயிர்களுள்ள வயல்களைப்பார்ப்போமாகில் விசித்திரம் சித்திரமான எத்தனையோவண்டுகள் பூச்சிகள் அங்கும் இங்கும் ாவிக்கொண்டு பூந்தாதுகளைப்பலவிடத்தில் பரிமாறிக்கொ அலைகிறதைப்பார்க்கலாம். வண்டுகள் முதலானவைகள் மழையினாலாவது அல்லது அவைகளைக் கொன்று தின் பெரியபக்ஷிகளின்முன் எதிர்ப்பட்டாலாவது குறைய நேரி ம். அதனால் நிலத்தின் வரும்படியும் குறையும். இதுநிற்க. ஒரே கிராமத்தில் பல விதமான நெல் தானியங்கள் பயிரிடப்பட்டு அவை புஷ்பிக்கிற காலங்கள் ஏகதேசம் ஒரே சமமாக இருக்கும்படி விதைக்கிற காலம்முறைப்படுத்தப்பட்ட ஒரு வர்க்கப் பூந்தாதுகளிலிருந்து சுக்கில சத்து மற்றைய வர்க்க சோணித சத்துடன் சேர வீரியமான வித்துக்கள் உண்டாகின்றன. ஒரே விதமான நெல்லை ஒரு கிராமத்தில் று யாதொரு வித நெல்லையும் சாகுபடி செய்யாமல் நெடு லம் சாகுபடி செய்து வருவோமானால் பொலியும் கண் காணாது. விளைந்த நெல்லும் வீரியமுள்ளதாயிராது.

புஷ்பங்களின் ஆகிருதிகள்.

சிறிதும் பெரிதுமாய்ப் பலவர்க்கப் பூக்களிருக்கின்றன. அவைகளில் கண்ணுக்குப் புலப்படும் புலப்படாத சிறுபுஷ்பங்களுமுண்டு. 6 அடி சுற்றளவுள்ள புஷ்பங்களும் 8 அடி நீண்ட புஷ்பங்களுமுண்டு. புஷ்பங்களின் மடல்கள் (Caroll. portion) மூன்று இதழ் முதற்கொண்டு ஆயிரம் இதழ்களுள்ள புஷ்பங்கள் ஈறாக ஒரே புஷ்பத்தின் எண்கள் குறைந்தும் கூடியும் இருக்கின்றன. செடிகளுக்கு உரம் முதலியவை அதிகமாகப் போட சுக்கில சோணித சத்துக்கள் குறைந்து மட களும் இதழ்களும் அதிகமாக உண்டாகின்றன. அநேக செ களில் இதழ், மடல், சோணித காரணங்கள், சுக்கில காரணங்க இவைகளின் எண்ணிக்கைகள் சொற்பமேனும் மாறாமல் ஒ மாதிரியாயிருக்கின்றன.

ஒவ்வொரு செடியின் பல அவயவங்களும் காரணங்களும் ஒரே ஒரு இலையின் பரிணாமங்கள் என்று ஜர்மானிய தேசத்திய மகாஞானியான கோயதே (Goethe) தம்முடைய புத்திநுட்பத்தால் ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கின்றார். இதனை விவரி போம்.

முதல் முதல் உண்டாகின்ற முளையும் அதிலிருக்கின்ற இலைகளும் நுட்பமான ஒரு இலையின் பரிணாமமே. அச்செடியின் தண்டும் கிளைகளும் பெரு இலைகளும் பின் உண்டாகும். மடல்களும் புஷ்ப இதழ்களும் சுக்கில காரணங்களும், சோணித காரணங்களும் அவ்வாறே பரிணாமங்களாம். வது ஒன்று மாறி மற்றொன்றாக அமைகின்றது. உதாரணமாக வாழை கீழ்க்கன்றாக இருக்கும் காலத்தில் இலைக்கும் மட்டைக்கும் வித்தியாசம் ஏற்பட்டுக் கடைசியாக இலையே குறுகிப்பின் வாழைப்பூவின் மடலாக மாறுகின்றது. வெண்டாமரை செந்தாமரைப் புஷ்பங்களின் இதழ்கள் உள் நோக்கிச் சிறு சிறு இதழ்களாக அமைந்து கடைசியில் இதழ்களின் தலைப்பாகத்தில் பூந்தாதுள்ள வெள்ளை முத்துப்போன்ற அம்சங்களாகக் காணப்படுகின்றன. இவைகளை உற்றுப் பார்த்தால் இதழ்களே அவ்வண்ணமாகி யிருப்பது நன்றாய் தெரியவரும்.

[இன்னும் வரும்]

ப. நாராயணையர்.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

நமது படிப்பில் இப்பொழுது நாம் வெகு சிக்குமுக்கான பாகத்திற்கு வந்துவிட்டோம். ஆகையால் மனிதனில் ஐந்தாவதுகூறு மற்றக்கூறுகளுடன் எவ்விதமான சம்பந்தம் பொருந்தியிருக்கின்றது என்பதைப்பற்றி விரிவாயன்றி வெறும் மூலமாகத் தானும் அறிய மாணவகனிடத்து அதி நுட்பமான புத்தியும் கூர்மையான கவனமும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

மனசு என்னும் பதம் அறிகிறது, நினைக்கிறது, எண்ணுகிறது, சிந்திக்கிறது, உன்னுகிறது என்று பொருள்கொண்ட சம்ஸ்கிருத வினைச்சொலாகிய மன் என்னும் வார்த்தையினின்றும் பிறந்தது. மனது, மனம், எ பதும் அஃதே. நமக்குள் அறிகின்ற புருஷன் இந்த மன , மனி னுக்கு மனிதன் அல்லது மனுஷன் என்று பெயர்வந்தது அவன் ப த்தறியும் புருஷனான (மனசான) படியினாற்றான், இந்த மனசுக்கு இங்கி ஷில் "மைண்ட்" (Mind) என்றுசொல்லுவார்கள். இதுவும் சம்ஸ்கிரு மன் என்பதிலிருந்து பிறந்ததே. நமது சாஸ்திரங்கள் அறியும் புரு னாகிய மனசை, ஞாதுரு, ஞாதா, அறிவன், சேதனன், என்றும் சொல்லு பிரமஞான சங்கத்தைச் சார்ந்த நூல்களில் அறியும் புருஷன், சேதனன், அறிவன் முதலாகிய பதங்களை மனசு என்பதைப்பார்க்கிலும் அதிகமா வும் சாதாரணமாகவும் உபயோகித்துவருவார்கள். இவ்வார்த்தைகள் நினைக்கும் புருஷன் ஒருவனுளன் என்னும் ஞாபகத்தை நமக்கு மூட்டிக்கொண்டிருப்பதாலும் மனசு என்னும்சொல் அப்படி மூட்டாததாலும் அச்சங்கத்தார் அவ்வார்த்தைகளையே அதிகமாய் உபயோகிப்பார்கள். இந்த மனசு அல்லது ஞாதுரு நித்தியன், அழியாதவன். இதுதான் உண்மையான "நான்" இந்த "நான்" திரும்பித்திரும்பி ஜனனங்கள்தோறும் அநித்தியமாகிய ஆணவப் போர்வைகளைப் போர்த்திக்கொண்டுவந்தும் தான்மாத்திரம் எப்பொழுதும் நித்தியமாயிருக்கின்றது.

மௌனவாக்கு என்னும் நூலில் தீக்ஷை பெறுவதற்குப் பக்குவனான சீஷனுக்குச் சொல்லும் போதனையில் இந்த மனசைப் பற்றி இவ்விதம் சொல்லியிருக்கின்றது. "நீ எப்பொழுதும் நித்தியமாயிருக்கும் சத்தானபடியால் உற்சாகமாயிரு. உன்னுடைய சாயைகள் (ஆணவங்கள் - தேகங்கள்) கொஞ்சகாலம் ஜீவித்திருந்து மறைந்து போகின்றன; உனக்குள்

ப்பொழுதும் அழியாமல் நித்தியமானதும் அது போதஸ்வ ரூபமேயான நல் உனக்குள் அறிகிறதும் ஆகிய வஸ்து தோன்றி மறையும் பொருளன்று; அதுதான் செல்காலங்களி லிருந்ததும் இப்பொழுது இருக்கிற இனி வருங்காலத்து இருக்கப்போகிறதுமான மனிதன். இந்த மனிதர்க்கு காலமுடிவே கிடையாது." பே. பிளவாட்ஸ்கி ஹெலேநாம்மாள் இதைப்பற்றி மனதில் தெளிவுபடும்படியாக அவள் அன்பால் அருளிச்செய்த ஞானத்திறவுகோல் என்னும் கிரந்தத்தில் நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்றனள். அவள் திருவாய்மலர்ந்தருளுவ தாவது: "ஒரு அசரீரியான ஆவிபோன்ற பரவொளியை அல்லது சைதன்னியத்தை மனத்தில் கூடியமட்டும் முயன்று பாவித்துக்கொள்; அதாவது முக்கிய சாராம்ஸத்தில் தெய்வத் தன்மையுள்ளவும் ஆயினும் பரிபூரணம் என்னும் பரப்போருளுடன் ஒன்றாக இருப்பதற்குப் போதுமான *புனிதமின்றியும் இப்பேறு பெறுவதற்காகத் தனது சுபாவத்தை மாற்றி அந்த ஐக்கிய சித்தியான லக்ஷியத்தைக் கடைசியாக அடைவதற்கு வேண்டிய மல நீக்கம் செய்தேனும் புனிதமாக வேண்டியும் இருக்கிற விண்ணுலக வாசியாகிய ஒரு தேவகணப் பிறவியை, அதற்கு நாம் எப்பெயர் வைத்து அழைத்தாலும் சரி, மனத்தில் பாவித்துக்கொள். இந்தத் தெய்வம் அல்லது சைதன்னியமானது பூரணத்துடன் ஒன்றாகும் ஐக்கிய சித்தியை நானாவித விகற்பங்களமைந்த பிரபஞ்சத்தினிடத்துள்ள ஒவ்வொரு போகபோக்கியத்தினிடத்திற்குள்ளும் இகத்திலும் பரத்திலும் நுழைந்து அநுபவித்து வந்துதான் அடையக் கூடும். ஆகையால் அது கீழ்ப் பிறவிகளிற் சென்று அவ்வித அனுபவங்களை யெல்லாம் அனுபவித்து உணர்வு பெற்று வாழ்வு என்னும் ஏணியின் படிகளில் ஒவ்வொன்றின் மேலும் கால் வைத்து மேலுக்குமேல் ஏறிப்போய் அப்பால் மனிதப் பிறவிக்குவந்து அந்தப் பிறவிகளில ஒவ்வொரு அநுபவத்தையும் அநுபவித்துச் செல்லவேண்டி யிருக்கிறது. சாராம்ஸத்தில் அது அறிவாம் ஆகையால் அது ப்ன்மையாய் மானசபுத்திரர், சர்வமனசின் குமாரர்கள் என்று சொல்லப்படும். தனித்தனியாய் அகங்கரித்த இந்த அறிவைத்தான் பிரமஞான சங்கத்தாராகிய நாங்கள் சத்தாகிய மானுஷிய நான் அதாவது தசை எலும்புகள் சேர்ந்த கூடாகிய காராக்கிருகத்தி லடைபட்டிருக்கும் அறியும் பொருள் என்று சொல்லுகின்றோம். உண்மையில் இது ஒரு பர வஸ்துவே, §பிரகிருதிப் பொருளல்ல. இவ்வித வஸதுக்களதான் மனித சாதி அல்லது மன்பதை என்று

* புனிதம்—சுத்தம் - தூய்மை.

§ அதாவது இ...சியப் பிரபஞ்சத்தில் பிரகிருதிப் பொருளாக நாம் ...க்கும் பிரகிருதி வஸ்துவல்ல வென்பது பொருள்.

சொல்லப்பட்ட மாமிச ஜட பதார்த்தமாகிய பொறிக்கு உணர்ச்சி கொடுத்துக்கொண்டு மனஸா அல்லது மனசுகள் என்னும் பெயர்கள் பூண்டு வந்து வந்து பிறக்கும் 'நான்' கள் அல்லது 'அஹம்' கள்" என்ப.

சென்ற கற்பங்களில் மனிதன் பரிணமவிகசித மடைந்து வந்த முறையை நாம் பின்னோக்கிச்சென்று கருதிப் பார்ப்பதினால் ஒருக்கால் இக்கருத்தை இன்னு மிகத்தெளிவாய் விளக்கிக் காட்டலாம். சதுஷ்கமான படிப்படியாய்க் கட்டி முடிந்தபொழுது அது ஒரு குடியில்லாத அழகிய மாளிகையாய் அதற்குள் இனி வந்து வசிக்க இருக்கும் ஒருவனை எதிர்பார்த்துக்கொண்டு வெறும் வீடாய் நின்றிருந்தது. மானஸ புத்திரரான அல்லது மனோ குமாரர்கள் என்னும் சொல் வெகு காலங்களுக்கு முன் மானுஷிபரிணமமடைந்து மேற்சென்று இப்பொழுது மகாபராக்கிரமமுள்ள அக்கினி குமாரர்கள் என்றிருப்பவர்களைத் தொடங்கிப் படிப்படியாய்க் கீழிறங்கி இப்பொழுது நடந்துவரும் நமது கற்பத்திற்கு அடுத்து முந்திய கற்பத்தில் "நான்" என்றது அகங்கரிக்கும் காரண தே... பெற்று மனிதப்பிறவியின் முடிவான பயனைச் சித்தி பெற்றுக்கொள்ள வேண்டி இப்பூவுலகத்தில் வந்து பிறக்கத்தயாராயிருந்த சீவர்கள்வரை வகைத்தரமுள்ள அறிவர்களைக்கவித்துச்சேர்த்து அடக்கிக்கொண்டிருக்கிறது. சில * மானுஷியாதீத அறிவர்கள் நமது ‖ குழவி மன்பதைக்கு அறிவூட்டி நல்வழிகாட்டுவதற்காக ஆரம்பத்தில் இக்குழவி மானிடர்களுடைய போதகாசிரியர்களாகவும், ஞானகுருமூர்த்திகளாகவும், அவதரித்து பல நாட்களின் நாகரீகங்களை ஸ்தாபித்து நிலைநாட்டின ஆதீனர்களாகவும், தெய்வத்தன்மைபொருந்திய அரசர்களாகவும் ஆனார்கள். முன்சொல்லிய ...களில் முந்தியே கொஞ்சம் மனோகரணங்களைப் பரிணமித்துக்கொண்ட பெருந்தொகையானவர்கள் மனதற்ற மனிதர்களாகிய மானுஷ்ய சமூகத்தில் வந்து குடிபுகுந்தார்கள். அக்காலத்தில் இப்பிருதிவிலோகத்தில் பரிணமித்து உண்டாகிய மானுஷிய சரீரங்களுக்குள் குடிபுகுந்த ...குட்பட்ட மானசபுத்திரர்கள் இவர்களே. இந்த மானசபுத்திரர்கள் ...தோறும் வந்துவந்துபிறந்து நமக்குள் "நான்" "நான்" என்று ...

* மனிதர்களாயிருந்து சீவன் முத்தி விதேக முத்தியடைந்து சுபாவத்தை முற்றிலும் அதிக்கிரமித்துப் போய் தேவர்களான மானுஷியாதீத அறிவர்கள்.

‖ இவ்வுலகாரம்பத்தில் தோன்றியமனிதர்கள் காளாவட்டத்தில் அனுபவங்களை ஆர்ச்சித்து அறிவு பெறவேண்டியவர்களானபடியால் ...பொழுது அவர்கள் சிசுக்களே. ஆகையால் குழவி மன்பதை என்...யிற்று.

க்கும் புருஷர்கள், நமக்குள் மனசு, எப்பொழுதும் மாறாத நிலையிற்கும்
தான் மனிதனில் ஐந்தாவதுகூறு. மன்பதையில் மற்றவர்கள் இந்த மான
சபுத்திரர்களைப் பார்க்கிலும் உயர்ந்த மானசபுத்திரர்களிட மிருந்து மனத்
தின் முதலணு அல்லது சிறுபொறியை ஒவ்வொருகாலங்களில் அடுத்தடுத்
துப்பெற்றார்கள். இம்மனசின்பொறி அல்லது கதிர் அம்மனிதர்களுக்குள்
முன்னமே வித்தில் மரம் சூக்ஷமமாயிருப்பதுபோல் மறைந்திருந்த மன
தின்மூலம் அல்லது கருவைவிரிந்து வளரும்படி தூண்டி எழுப்பிற்று.
இவ்விதமாக கால அளவில் அப்பொழுது அவ்விடத்தில் மனிதஜீவன் பிற
ப்பெற்றது. இப்பொழுது நாம் உலகத்தில் ஜனங்களுக்குள் மனோ சக்தி
யிலும் அறிவிலும் அளவிறந்த வித்தியாசங்கள் காண்கின்றோமல்லவா,
இவ்வித்தியாசங்களுக்குக்காரணம் எல்லாம் அவர்களுக்குள் நித்தியமாய்,
எங்கும் வியாபகமாய்ப் பொதுவாயிருக்கும் ஈசுவரனை தன்னியமானது
மானுஷியஜீவனாகச் சிறப்புவிகாரமெய்தின ஆரம்பம் அதாவது, "நான்"
"நான்" என்று தனித்தனியாய் அகங்கரித்துக்கொண்டிருக்க தருந்தவா
வு ஆரம்பமானகாலங்களின் வித்தியாசங்களினாற்றான. அதாவது ஒவ்
வொருவர்களிடத்தும் 'அஹம்' 'நான்' என்பது பிறந்தவயதின் வித்தியா
த்தினாற்றான் இப்பொழுது உலகத்திலுள்ள ஜனங்களின் அறிவுகள தாழ்
ந்தும் உயர்ந்தும் பலதரங்களாக இருக்கின்றன. வனாந்தரங்களில் வசித்
துக்கொண்டிருக்கும் வேடர்கள்முதல் மிகு உன்னத நாகரீகமடைந்த கலை
ஞர்கள்வரை அறிவு விளங்கும் படிகள் எத்தனையென்று கணக்கிடமுடி
யாது, இவ்வித்தியாசங்களெல்லாம் அவர்களிடத்து மனம் பரிணமிக்க ஆரம்
பமான முன்பின் என்னுங்காலவித்தியாசங்களினாற்றானல்லதுவேறன்று.

இந்த ஐந்தாவது கூறுக்குப் பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருப்பதினு
ம் ஒரோர் இடங்களில் ஒவ்வொரு பெயர் உபயோகமாய் வருவதினாலும்
சா சாஸ்திரங்களை வாசிக்க ஆரம்பிப்பவர்களுக்கு வெகு கலவரமுண்
டாகும் கலவரம் அதிகப்படவும் காரணமாயிருக்கின்றது. மானஸபுத்
திரர் என்பதை வரலாற்று நாமம் அல்லது புராணிகநாமம் என்று
சொல்லலாம். பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளின் பரிணாம விகசிதத்தின்
குறிப்பான நிலையில் அல்லது தறுவாயில் முன்னமே "நான்" என்று
அகங்கரித்த ஜீவர்களாகிய ஒருவகுப்பு சதுஷ்கமன்பதையில்
வசித்ததை இப்பெயர் நமக்கு நினைப்பூட்டிக்காட்டுகின்றது; மனசு
என்னும் பெயரானது ஆராயும்சுபாவம், அறியும் சுபாவம், நினைக்கும் சுபா
வம், அக்கூறுக்குள்ளது என்பதை விளக்கிக்காட்டும் சாதாரணப்பெயர்,
...வு, அறிவன், அறிஞன், ஞானி, திருக், சேதனன், ஞாதா, ஞாதுரு என்
பெயர்களும் அதற்குண்டு, இவைகளெல்லாம் அதன் தொழிலால்வந்த
பெயர்களாம். அஹம். நான். நானேதான், தான்யான், அஹங்காரன்,

அஹங்காரி, என்னும் பெயர்கள் அது நித்தியமானது, அழியாதது, இறக்கின்றதன்று, தானல்லாத எல்லாவற்றினின்றும் பிரிந்து தன்னைத்தனிப்படுத்திக்கொள்ளும் கூறு என்பதைக் குறிக்கின்றன. பிரத்தியகாத்துமாவென்பது எங்கும் வியாபியாய் எல்லாவற்றிற்கும் பொதுவாயிருக்கும் ஆத்துமாவானது தனித்தனியாய்ப் பிரிந்து வெவ்வேறு உபாதி பெற்றிருப்பதைக் குறிக்கின்றது; விஷயி என்பது விஷயங்களை அறிபவன் என்பதை விளக்குகின்றது; தேகி என்பது தேகத்துள் வசித்துக்கொண்டு தேகத்திற்கு விளக்கம் கொடுப்பவன் என்பதைத் தெரிவிக்கின்றது. இதற்கு இன்னம் அநேக பெயர்கள் வரும். ஜீவன் ஜீவாத்துமா க்ஷேத்திரஞ்ஞன், கூடஸ்தன், புருடன், புருஷன், தற்புருஷன், தன்னறிவு, தற்போதம் என்பனவும் ஒவ்வோர் இடங்களில் சந்திக்கலாம். ஆத்துமா வென்றும் சில இடங்களில் வரும். அப்பொழுது ஏழாவது கூறாகிய ஆத்துமாவுடன் கலவரப்பட்டு மடங்கலாகாது. முன்பின் சந்தர்ப்பங்களை யோசித்துப் பொருள் நிச்சயிக்கவேண்டும்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

மேனாட்டுக் கலைஞானம்.

முற்கூறு.

[முன் தொடர்ச்சி]

28. ஓடு நீரினாலியக்கமாற்றம். ஓடுநீரின் விசை.

ஒரு மரத்தொட்டி யெடுத்துக்கொள். அத்தொட்டியின் அடிப்பாகத்திற்கிட்ட திறக்கவும் மூடவுமாகிய குச்சுள்ள ஒரு குழல் நேர்பார்த்திருக்கும்படி வை. * அக்குழலின் கண்டப்பரப்பு ஒரு சதுர அங்குலமாயிருக்கட்டும். இத்தொட்டியில் குழல் வைத்திருக்கும் பாகத்திற்கு மேல் 100 அங்குல உயரத்திற்கு நீர்விடு. குச்சைத்திருகி நீர் வெளியே போகாமல் மூடிவிட்டால் தொட்டியிலுள்ள நீர் குச்சின் கண்டப்பரப்பின்மீது தாக்கம் செய்யும். ஏனெனில் குழலின் கண்டப்பரப்பு ஒரு சதுர அங்குலமான

* குழலின் கண்டப்பரப்பு என்பது அக்குழலை மத்தியிலாவது வேறு எங்காவது துண்டித்தால் உள்ள ஓட்டையின் விஸ்தீரணம். அந்த ஓட்டைக்குள் நெருக்கிச்செல்லக் கூடிய பலகைத்துண்டின் விஸ்தீரணம் அந்தப் பரப்பைக்குறிக்கும்.

படியால் அக்குழலையடைக்கும் குச்சின்பரப்பும் ஒரு சதுர அங்குலமாகத் தானிருக்கும். ஆகையால் குச்சின்மேல் நீர்செய்யும் தாக்கமானது 25250 கிரெய்ன் அல்லது கோதுமை நிறை அதாவது மூன்றரை பவுண்டுக்குக் கொஞ்சம் கூடவிருக்கும். அந்தத் தொட்டியின் அடிப்பாகத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்தின் மீதும் இவ்வளவே தாக்கமிருக்கின்றது.

இப்பொழுது குச்சைத்திருகிக் குழலைத்திறந்துவிட்டால் குச்சின் உட்புறமிருந்து குச்சைத்தாக்கும் நீரை எதிர்கொண்டுதாக்கித் தாங்கிக்கொள்ள வெளிப்புறம் ஒன்றுமில்லாதபடியால் உட்பக்கம் உண்டாகும் தாக்கம் நீரை இயங்கச்செய்கின்றது ஆகையால் நீரானது தாரையாக வெளியேபுறப்படுகின்றது. முதலில் இத்தத்தாரையானது விசையாய் வெகுதூரம் பாய்ந்து செல்லுகின்றது. அதாவது 100 அங்குல உயரமான நீர்ஸ்தம்பத்தின் கனமானது ஒருசக்தியாய்க் குச்சையடுத்திருக்கும் நீரின்மேல் தொழில்செய்து இயக்கத்திற்குக்காரணமாயிருக்கின்றது. ஆகையால் இந்தநீர் அந்தச் சக்திக்குத்தகுந்தாற்போல் தள்ளப்பட்டு வெளியில் நீண்டகம்பியைப்போல் விசையாய்ப்போய்விழுகின்றது. இப்பொழுது ஒரு பந்தை நூலில்கட்டி தொங்கவிட்டு அந்தப்பந்தை வெளியில் நீண்டு ஓடும் நீர்க்கம்பிக்கு நேர் தொங்கவிட்டால் நீரின்விசையானது பந்துக்குத்தாக்கிப் பந்தும் நீர்க்கம்பிபோகும் திசையைநோக்கிச் செல்லும். ஓடும் நீரானது பந்தைப்போல் இயக்கம்கொடுத்தால் இயங்குதற்குத்தடையின்றியும் ஆனால் அசைதலில்லாமலிருக்கும்வஸ்துவுக்குத் தன்னுடைய இயக்கத்தைமாற்றும் சக்தி அதற்குள்ள விசையினாற்றான் உண்டாகியிருக்கின்றது. நீர்க்கம்பி எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாயிருந்து எவ்வளவுக்கெவ்வளவு வேகமாய்ப்போகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சாஸ்தியாய் பந்துக்கு இயக்கம் கொடுக்கும் அல்லது அவ்வளவுக்கவ்வளவு அதிக கனமான பந்தைத்தள்ளும். மேலும் குச்சுக்கருகாமையில் நீர்க்கம்பியானது நேர் நீண்டு போகின்றது. அப்பால் வெகுசீக்கிரம் அது கீழ்வளைய ஆரம்பித்து அரிதத்தில் வில்வடிவாகக்குனிப்புசெய்துகொண்டு பூமியில்வந்து விழுந்துவிடுகின்றது. ஒருகல்லை நேராகவீசினால் கொஞ்சந்தூரம் அதுநேராகப்போய் அப்பால் வில்வளைவாக வளைந்துவந்து பூமியில் எனனகாரணத்தினால் விழுகின்றதோ அதே காரணத்தினாற்றான் இந்தநீர்க்கம்பியும் நேர்போய் அப்பால் வளைந்து விழுகின்றது.

இதற்கு இரண்டு காரணங்களுள. முதலாவது, நீர் குச்சைவிட்டதும் அது ஆதாரமற்ற கனமுள்ளதா யிருப்பதொன்று ஆகையால் அது பூமியில் வந்து விழ ஆரம்பிக்கின்றது. இரண்டாவது, நீரின் விசையானது எங்கும் சுற்றிப் பரவியிருக்கும் வாயுவு அல்லது காற்றுக்குள் அது புகுந்து

செல்வதினால் அக்காற்றின் தடை அல்லது எதிர்த்தாக்கத்தினால் தடைபட்டுக்குறைந்துகொண்டே வருவது ஒன்று. நம்மைச்சூழ்ந்திருக்கும் காற்றானது மிகவும் மெல்லியதும் இலேசானதும் வழிவிடும்படியாக அசைவுள்ளதுமானபடியால் அதைப்பற்றி நாம் சாதாரணமாய்க் கவனியாவிட்டாலும் அது தடை அல்லது எதிர்த்தாக்கம் கொடுக்கின்ற பொருள் என்பதை வெகு சுலுவில் மெய்ப்பிக்கலாம். உதாரணமாக விசிறிகள் எடுத்து வீசும்பொழுது காற்றின் தாக்கத்தை அனுபவத்தில் காணலாம். நீரானது இந்தத்தடையை செயித்துக்கொண்டு போகவேண்டி யிருப்பதால் அதன்விசை அதற்குத் தகுந்தாற்போல் குறைந்துவிடுகின்றது.

நீர் குச்சைவிட்டு வெளியே புறப்படும்பொழுது காற்றும் திண்மைக்கவர்ச்சியும் சுத்தமாய் நீங்கியிருக்கும்படி செய்யக்கூடுமாயின் நீரின்விசையானது குறையாமலேயிருந்து நீண்டு எப்பொழுதும் கம்பியாகஓடிக்கொண்டேயிருக்கும்.

மேலும் நீர் வெளியே ஓடிக்கொண்டிருக்கும்பொழுது ஒவ்வொரு நிமிஷமும் நீர்க்கம்பியின் நீளமும் வேகமும் குறைந்துகொண்டும் அதன் வில்வளைவு சிறுத்துக்கொண்டும் வந்து பூமியில் வெகுசீக்கிரமாக வந்து விழுவதைக்காணலாம். கடைசியாக தொட்டியில் நீர் அடிக்கு இறங்கி அதில் ஏறக்குறைய நீர் இல்லாமல்போகும்பொழுது குச்சுவழியாய் வெளியேவரும் நீர்க்கம்பி செங்குத்தாய்க் கீழேவிழுகின்றது. இதற்குக்காரணம் குச்சுக்கருகிலுள்ள நீரைத்தாக்கும் தொட்டியிலுள்ள நீர்ஸ்தம்பத்தின் உயரம் குறையக்குறைய அதற்குத்தாக்கங்குறைந்து விசையும் குறைந்துபோகின்றது. ஆகையால் கடைசியில் நீர்ஸ்தம்பம் குச்சுமட்டத்திற்கு வந்தபோது விசை இல்லையென்று சொல்லும்படி ஆய்விடுகின்றது ஆகையால் நீர் நேராகப்பாய்ந்து செல்லாமல் செங்குத்தாகக் கீழேகம்பியாக குச்சின் வழியிலிருந்து விழுகின்றது. [இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

[முன் தொடர்ச்சி]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

1859ம் வருஷ ஆரம்பத்தில் ஹெலேநாம்பாள் தன்சகோதரிகளுடன் துகதேவோ என்னும் ஊரில் தன் தங்கையாகிய ஜெலிஹாவ்ஸ்கியின்

விடுதியில் போய்வசிக்கச் சென்றனள். அங்கிருக்கும்பொழுது அவளுக்குப் பயங்கரமாகிய ஒருநோய்கண்டது. சில வருஷங்களுக்கு முன் அவள் ஆசியா கண்டத்தில் தனியாய்யாத்திரை செய்துகொண்டு வரும்பொழுது எப்படியோ இவளுக்கு ஒரு வஞ்ஞதமானகாயம் உண்டாயது. அது எப்படி யாரால் உண்டாயது, என்று ஒருவரும் அவளிடத்திலிருந்து கிரகிக்கக் கூடவில்லை. இந்த ஆழமான காயமானது இடைக்கிடையே விரிந்து திறந்துவிடும். அப்பொழுது அவள் வெகு கடினமான வாதையடைந்து பதைத்துத் துடிப்பாள். சாதாரணமாய் இந்த உபாதி மூன்று நான்கு நாள் வரை யிருக்கும். அப்பால் அந்தக்காயம் எவ்வளவு துரிதமாய்த் திடீரென விரிந்து திறந்து உண்டாயதோ அவ்வளவு துரிதமாய்த் திடீரென ஆறிவிடும். அப்பால் அந்தக்காயத்தின் குறி சிறிதும் தோன்றுது. முதலில் அவள் குடும்பத்தாருக்கு இந்தக்காயத்தின் விஞ்ஞத குணம் தெரியாது ஆகையால் இப்பொழுது அவளுக்கு உண்டான கஷ்டத்தைக்கண்டு அவள் குடும்பத்தார்கள் திகிலும் ஆருமையும் அடைந்தவர்களாய் அடுத்த பட்டணத்திற்கு ஆளனுப்பி வைத்தியன் ஒருவனைத் தருவித்தார்கள். ஆனல் அந்த வைத்தியனல் ஒரு பிரயோசனமு முண்டாகவில்லை. அவனுக்கு இரண வைத்தியம் தெரியாததினுல் அவன் பிரயோசனப்படவில்லையென்று சொல்லவரவில்லை. அவன் வெகு கெட்டிக்காரன். அவன் அங்கு கண்ட ஒரு விஞ்ஞதக்காக்ஷியினல் பயங்கொண்டு சிகிச்சை செய்வதற்கு சக்தியற்றவனயினன். அவனுக்கு முன் பிரஞ்ஞை கொஞ்சமுமில்லாமல் கிடக்கும் நோயாளியின் காயத்தைப் பரிசோதித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் திடீரென தன் கைக்கும் அது தொட்டுக்கொண்டிருக்கும் காயத்திற்கும் இடையே ஒரு பெரிய கறுத்த கை தோன்றிற்று. அகன்று வாய்திறந்துகொண்டிருக்கும் காயம் இருதயத்தையடுத்திருந்தது. அந்த ஆச்சரியமான கையானது ஹெலேநாப்பாள் சழுத்திலிருந்து இடைவரை தடவிக்கொடுத்துக்கொண்டிருந்தது. முன்னமே திகிலடைந்திருக்கும் வைத்தியனுடைய திகைப்பை அதிகப்படுத்துவதற்கு அந்த அறையில் திடீரென மேலும் கீழும் எப்பக்கமும் கலவரப்படுத்தும்படியான சத்தங்கள் புறப்பட்டன. ஆகையால் அந்த வைத்தியன் பிரஞ்ஞையற்றுக்கிடக்கும் நோயாளியின் பக்கலில் தனியாய்த் தன்னைவிட்டு மற்றவர்கள் போகாமலிருக்கும்படி எல்லோரையும் அவன் இரந்து கேட்டுக்கொண்டான்.

1860-ம் வருஷத்தில் ஹெலேநாப்பாளும் அவள் சகோதரி ஜெலிஹூவ்ஸ்கியும் சேர்ந்து வெகுகாலமாய்ப் பார்க்காமலிருந்த தங்கள் பாட்டன் பாட்டிகளைப் பார்க்க காக்கஸஸ் என்னும் நாட்டுக்குச் சென்றார்கள். வழியில் தீஹன் என்னும் ஒரு பெரியவருடைய சமாதி இருக்கும் யாத்திரைமாகிய ஸாடான்ஸ்க் என்னும் ஸ்தலத்தில் தங்கினர்கள். அன்று

புத்தகக்குறிப்பு.

நீழ்—இப்பெயர்புனைந்த ஒரு வாசகநூல் சென்னை மகா வகேசவராய முதலியார் எம். ஏ. அவர்களால் எழுதி வெறது. இந்நூலை அவர்கள் நம்பார்வைக்கு அனுப்பியதற்கு க்கவந்தனமளிக்கின்றோம். சில்வகைஎழுத்தில் பல்வகைப் ன்ற நம் நூலியர் தமிழின் உற்பத்தியைப்பற்றியும் அது டைந்து வந்த முறைமையைப்பற்றியும் பின்னும் தமிழ்ப் மான பல அருமைகளைப்பற்றியும் நீளநினைந்து எழுதியிருப் தமிழ்நாட்டார் மிக்க நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கி தமிழ்மாணக்கருக் குபயோகமாகும்வண்ணம் தமிழ் இலக்கிய ஒன்று இந்நூலுக்கு அநுபந்தமாகச்சேர்த்து அச்சிட்டிருப்பது ரமே. பலநூலாசிரியருடைய சரித்திரமும் சுருக்கமாகவும் அழ எழுதப்பட்டு படிப்போர் மனத்தைக்கவரத்தக்கதாக இருக்கின் ருமையான காலநிர்ணயங்களை ஆங்காங்கு எழுதியிருப்பது இந்நூலாருடைய பேரறிவைப்புலப்படுத்துகின்றது. 128 பக்கங்களையுடைய நூலின் விலை 8 அணு. இஃது ஒவ்வொருதமிழ்மாணக்கர் கையிலுத்தல் இன்றியமையாததே. இவ்வித ஆராச்சிநூல் பல நம்தமிழுக்குப் உபகாரஞ் செய்யுமென்பதற் கையமில்லை.

ஒராபின்ஸன் குருஸோ—இதுவும் ம-ா-ா-ஸ்ரீ தி. செல்வகேசவராய லியார் எம். ஏ. அவர்கள் ஆங்கிலத்தினின்று தமிழில் மொழிபெயர்த்தது த்துக்காலத்தில் தளராது முயற்சி செய்தால் சுகப்படலாமென்றது. நூலால் நன்கு விளங்கும். படித்தற்கு மிக இனிமை வாய்ந்தது. அருஞ்சொல்லுரையுடன் நல்ல எழுத்தில் அழகாக அமைக்கப்பெற்றுளது. இதன் விலை அணு 4.

நவநீதசாரம்:—வேதாந்தசாஸ்திரக் கருத்துக்களை வினவிடையாக யாவர்க்கும் பொருள் விளக்கும் ஒருவசனநூல். வேதாந்தசாஸ்திரங்களி லுள்ள நுண்பொருள்கள் பல இந்நூலில் சுலபமாகவிளங்குகின்றன. ஆங்காங்கு ஆன்றோர் யாடிய செய்யுள் மேற்கோள்கள் உண்டு. சுத்தப்பிரதி விலை அணு 8. சென்னை ரிப்பன்பிரஸில் விலைக்குப்பெறலாம். இதனை நமக்கனுப்பிய சென்னை ஜூலை சிவப்பிரகாச புத்தகசாலையின் சொந்தக்காரரா மஹா-ா-ா-ஸ்ரீ டி. எஸ். சுப்பையாபிள்ளையவர்கட்கு நன்றிகூறுகின்

பத்திராதிபர்.

...கரசேதுபதி மகாராஜா அவர்களாலும் நன்கு மதி... எத்தனையோ பெரும் பிரபுக்கள் இவர்க்கு நற்சா... ள்ளார்கள். யாத்திரைக்காரர்க்குதவியாகவே இடமும் ...ளர்களும் வைத்துக்கொண்டிருக்கின்றார்.

*　　*　　*　　*　　*

மதுரைஜில்லா மகாஜனசபை.

...பெயர்வாய்ந்த ஒரு மகாசபை இம்மதுரைமாநகரின்கண்ணே ...டிருப்பது இஜ்ஜில்லாவாசிகளின் அதிர்ஷ்டமே. இதன் ...ளாவன:—

1. இந்தஜில்லாஜனங்களின் குறைகளையும், அபீஷ்டங்களை... மெண்டார் அவர்களுக்கும், அவர்களது உத்தியோகஸ்தர்களுக்கு... படிதெரிவித்துத் தக்கபரிகாரங்களைத்தேடல்.

2. விவசாயம், கைத்தொழில் முயற்சி முதலியன ச... ஜனங்களுக்கு அறிவூட்டி ஜனங்களின் நன்மையை அபிவிருத்திசெ...

3. காங்கிரெஸ்முதலிய மகாசபைகளின் நோக்கங்களை ஜன... ...ள் பரவச்செய்து அறிவுறுத்தல்முதலியன.

இச்சபை 25 மெம்பர்கள் அடங்கிய ஒரு கமிட்டியால் நடத்தப்பெ... ...தன் காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ ப. நாராயணஐயர் அவர்கள். இ... ...ளது உத்தமகுணங்களை அறியாதார் இந்நாட்டில் எவருமில்லையாகைய... ...வரது செய்தொழில் ஊக்கத்தைப்பற்றியும், சக்தியத்தைப்பற்றியு... பொதுஜனக்ஷேமவிஷயமாய் இவர் பாடு பட்டுவருகிற விஷயத்தைப்பற்... யும் நாம் யாதொன்றும் தெரிவிக்க வேண்டியதில்லை. இவர்களைப்... லொத்த ஜனரஞ்சிதர் காரியதரிசியாய் ஏற்பட்டிருக்கும்பொழுது ... சபை தினே தினே அபிவிருத்தி யடையுமென்பதிற்சிறிதும் ஐயமில்... "உறுதி பயப்பக்கடைபோகாவேனும், இறுவரைகாறுமுயல்வு' என... நீதியை இச்சபையார் கைக்கொண்டு சபையின் காரியங்களை ஒழுங்காய் நடத்தி வருவார்களானால் இஜ்ஜில்லாவாசிகள் பெருநன்மை யடைவார் களென்பது திண்ணம். இச்சபையார் செய்துவரும் அரிய பெரிய நன் முயற்சிகளை அவ்வப்போது இப்பத்திரிகைவாயிலாக வெளியிடச்சித்தமா யிருக்கிறோம். 21 பிராயத்துக்குக் குறைவில்லாத சாமான்ய அந்தஸ் துள்ள எந்த ஆண்மக்களும் வருஷத்துக்கு ஒரு ரூபா சந்தாக்கொடுத்து இச்சபையைச்சேரலாம். குறைந்தபக்ஷம் 6 மாதங்களாவது இஜ்ஜில்லாவில் வசித்தவர்களாயிருத்தல் வேண்டும் மற்றையவிபரங்களை காரியதரிசி... களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். இச்சபையார ... ...ரும்பேறுஅடைவதாக.